பாரதியின்
படைப்புலகம்



தொகுப்பு ஆசிரியர்கள்

முனைவர் நா. முத்துமணி
முனைவர் ச. சந்திரகலா
நெல்லை அன்புடன் ஆனந்தி
வெண்ணிலா காமராஜ்
முனைவர் சி. தீபா

தமிழால் இணைவோம் பதிப்பகம்
(25 ஆண்டு கால வரலாறு)

பாரதியின் படைப்புலகம்

(ஆய்வுக் கட்டுரைகள்)

தொகுப்பாசிரியர்கள்

முனைவர் நா. முத்துமணி
முனைவர் ச. சந்திரகலா
கவிஞர் நெல்லை அன்புடன் ஆனந்தி
கவிஞர் வெண்ணிலா காமராஜ்
முனைவர் சி. தீபா

தமிழால் இணைவோம் பதிப்பகம்
(25ஆண்டு கால வரலாறு)

நூல் குறிப்பு

நூல் பெயர்: பாரதியின் படைப்புலகம் (ஆய்வுக் கட்டுரைகள்)

ஆசிரியர்: தொகுப்பாசிரியர்கள்

உரிமை:பதிப்பகத்திற்கு

மொழி: தமிழ்

நூலின் அளவு : A4

பதிப்பு:செப்டம்பர் 2025

பக்கங்கள்: 430

அட்டைவடிவமைப்பு: ஐஸ்வர்யா மூகாம்பிகை, MBA

பதிப்பகம்:

தமிழால் இணைவோம் பதிப்பகம்
2,கோவிந்தசாமி தெரு
எம். ஜி. ஆர். நகர், சிட்லபாக்கம்
சென்னை 600064
தொடர்பு எண்:9442477645

அச்சிட்டோர்:

விலை:ரூ. 1000/-

Book Title	Bharathiyin padaipulagam
ISBN Number	978-93-343-9768-0
Name of Publisher	Thamilal Inaivom
Language	Tamil
Country of Publication	INDIA

பதிப்பாசிரியர் குழு

மதிப்புறு முனைவர் அ. சுப்ரமணியன்

முனைவர் ர. சந்திரமோகன்
முனைவர் ப. பத்மநாபன்
முனைவர் சரசுவதி அய்யப்பன்
உதவிப் பேராசிரியர் சேது மாதவன்
முனைவர் வீ. கோபால்
முனைவர் கு. திலகவதி
மதிப்புறு முனைவர் மு.அழகுராஜ் முத்துஞானம்

உள்ளடக்கம்

கருத்தரங்கக் களத்தில் நின்று



சத்யநாராயணராஜ் பாலகுரு
நிறுவனர் / தலைவர்
தமிழால் இணைவோம் உலகத் தமிழ்ப்பேரியக்கம்

உலகத் தமிழர்களைத் தமிழால் ஒன்றிணைக்கும் உயர்வான எண்ணத்துடன் துவக்கப்பட்ட உலகத் தமிழ்ப் பேரியக்கம் இணையவழியில் இதுவரை எட்டாயிரம் நிகழ்வுகளைத் தாண்டி வெற்றிநடையோடு மகிழ்வோடு, தன் பயணத்தைத் தொடர்ந்து கொண்டிருக்கின்றது. நாளும் தமிழ் வளர்க்கும் நோக்குடன் நாள்தோறும் இணையவழியில் தமிழ் ஆர்வலர்கள் பேராசிரியர்கள், மாணவர்கள் என அத்துனை பேரையும் தமிழின்பால் ஈர்த்து அவர்கள் கற்ற தமிழ் இலக்கியங்களை உரையாட வைத்து நிகழ்வுகளை நடத்திக் கானொலிகளாக வெளியிட்டு மக்கள் மனங்களில் தமிழ் உணர்வூட்டிக் கொண்டிருக்கின்றது.

பள்ளி, கல்லூரிகளில் பயிலும் மாணவர்களின் தமிழ் அறிவு, பொது அறிவை வளர்க்கப் பல நேரடி நிகழ்வுகளை நடத்திக் கொண்டிருக்கின்றது.அதன் ஒரு பகுதியாகக் கல்லூரிகளில் தமிழில் ஆய்வை மேம்படுத்தும் வகையில் பேராசிரியர்களும், ஆய்வு மாணவர்களும், தமிழ் ஆர்வலர்களும் பங்கேற்கும் வகையில் நேரடி நிகழ்வுகளாகப் பன்னாட்டுக் கருத்தரங்கங்களைக் கல்லூரிகளின் ஒத்துழைப்போடு நடத்தித் தமிழுக்குச் செழுமையூட்டிக் கொண்டிருக்கின்றது.

மதுரை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியுடன் இணைந்து முதல் முதலாக 04.03.2023 அன்று வெகு சிறப்பாகப் பன்னாட்டுக் கருத்தரங்கத்தை நடத்தி ஆய்வு மலரை வெளியிட்டது. இரண்டாவது பன்னாட்டுக் கருத்தரங்கத்தைக் **குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி**யுடன் இணைந்து 6.10.2023 அன்று மிகப் பெருமை கொள்ளும் வகையில் நடத்தி ஆய்வு மலரை வெளிக் கொணர்ந்தது. மூன்றாவது பன்னாட்டுக் கருத்தரங்கத்தை 14.2.2025 அன்று **கோவிலூர் காரைக்குடியில் ஸ்ரீ நாச்சியப்பா கலை அறிவியல் கல்லூரி**யுடன் இணைந்து மிகச் சிறப்பாக நடத்தி ஆய்வு மலரை ஆய்வாளர்களின் கரங்களில் தவழவிட்டது.

இப்போது கொங்குச் சீமையில், கோவையில் அமைந்துள்ள **பி.பி.ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி**யுடன் இணைந்து பைந்தமிழ்த் தேர்ப் பாகன் பாரதியின் நினைவு நாளில் 11.9.2025 அன்று **பாரதியின் படைப்புலகம்** என்ற தலைப்பில் நான்காவது பன்னாட்டுக் கருத்தரங்கத்தை நடத்திக் கொண்டிருக்கிறோம். ஆறு மாதங்களுக்கு ஒரு பன்னாட்டுக் கருத்தரங்கத்தைக் கல்லூரிகளுடன் இணைந்து நடத்துவது கருத்தரங்க வரலாற்றில் மிகப்பெரிய சாதனை. தமிழால் இணைவோம் உலகத் தமிழ்ப் பேரியக்கம் மிகச் சிறப்பாகப் பன்னாட்டுக் கருத்தரங்கங்களை நடத்திக் கொண்டிருக்கிறது. இதுவரை நடத்திய கருத்தரங்கத்திற்கெல்லாம் இல்லாத மற்றொரு சிறப்பை இக்கருத்தரங்கம் பெற்றுள்ளது. பன்னாட்டுக் கருத்தரங்கம் என்பதை மெய்ப்பிக்கின்ற வகையில்

அமெரிக்கா, ஓமன், கனடா, சிங்கப்பூர் என்று உலகின் பல நாடுகளில் இருந்தும் ஆய்வுக் கட்டுரைகள் வந்து குவிந்த வண்ணம் உள்ளன.

இக்கட்டுரைகள் மகாகவியின் மகுடத்தை அலங்கரித்துக் கொண்டிருப்பதைக் காண முடிகிறது. யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் எனத் தாய்மொழிக்குப் புகழாரம் சூட்டிய புதுக்கவிதை நாயகனின் புகழ் தமிழர் வாழும் பூமிப்பந்து முழுவதும் நிறைந்திருக்கின்ற உண்மையை இக்கட்டுரைகள் நமக்கு உணர்த்துகின்றன. இக்கருத்தரங்கத்தின் வாயிலாக நூற்றுக்கும் மேற்பட்டவர்களைப் பாரதியின் நூல்களைப் படிக்க வைத்துப் பாரதியைப் பற்றிய பல் நோக்குச் சிந்தனைகளை வெளிப்படுத்த வைத்திருக்கின்றோம். பாரதியின் படைப்புகளை வெளிப்படுத்தும் வகையில் மிகச் சிறப்பான ஆய்வு மலரையும் வெளிக் கொணர்ந்திருக்கின்றோம். ஏற்கனவே கவி வேந்தன் பாரதியைப் பாரெல்லாம் பரப்ப பாரதி ஒரு லட்சம் என்ற இணைய வழி நிகழ்வுகளை நடத்தி உலகம் முழுவதும் உள்ள ஒரு லட்சம் தமிழர்களைப் பாரதியின் புகழ் பாட வைத்த இயக்கம் தமிழால் இணைவோம் உலகத் தமிழ்ப் பேரியக்கம்.

இப்பன்னாட்டுக் கருத்தரங்கை நடத்தக் கல்லூரியில் இடம் தந்து பல வசதிகளையும் செய்து கொடுத்த கல்லூரியின் கல்விக் குழுமத் தலைவர் மருத்துவர் எல். பி. தங்கவேலு அய்யா அவர்களுக்கும், கல்லூரி முதல்வர் முனைவர் நா. முத்துமணி அவர்களுக்கும், கட்டுரைகளைப் பெற்று மெய்ப்புப் பார்த்த தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ச. சந்திரகலா அவர்களுக்கும்,கட்டுரைகள் வழங்கிய தமிழ்த் துறைப் பேராசிரியர்கள், பிற துறைப் பேராசிரியர்கள் அனைத்துத் துறை மாணவர்களுக்கும் தமிழால் இணைவோம் மனமுவந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

கருத்தரங்கம் சீரோடும் சிறப்போடும் நடத்த உடனிருந்து உதவும் துணைத் தலைவர் மதிப்புறு முனைவர் மீனா திருப்பதி அவர்களுக்கும், கருத்தரங்கத்தை முன்நின்று வழிநடத்தும் கருத்தரங்கக் குழுத் தலைவர் மதிப்புறு முனைவர் அ. சுப்ரமணியன் அய்யா அவர்களுக்கும், அவரோடு இணைந்து கருத்தரங்கத்திற்கான அத்தனை முயற்சிகளையும் எடுத்து கட்டுரைகளைப் பிழை பார்த்துக் கொடுத்த வாழும் வரலாறு முனைவர் வீ. கோபால் அய்யா அவர்களுக்கும், கருத்தரங்க அறிவிப்பு வெளியான நாள் முதலாகப் பம்பரமாய்ச் சுழன்று கட்டுரைகளைப் பெற்றுத் தந்து பிழை திருத்தம் பார்த்து உதவிய வாழும் வரலாறு முதல்வர் முனைவர் ர.சந்திரமோகன் அய்யா, கலைமாமணி பத்மநாபன் அய்யா, பன்னாட்டுக் கருத்தரங்கம் சிறக்க வெளி நாடுகளில் இருந்து கட்டுரைகள் பெற்று, திருத்தம் செய்து நூலாக்கப் பணியிலும் ஈடுபட்ட பன்னாட்டு இயக்குநர் கவிஞர் நெல்லை அன்புடன் ஆனந்தி, கூட்டு மாவட்ட ஆளுநர்கள் கவிஞர் வெண்ணிலா காமராஜ், முனைவர் சி. தீபா, முத்துஞானம் ஆகியோருக்கும், முனைவர் கு.திலகவதி, மாவட்ட ஆளுநர் முனைவர் சரசுவதி அய்யப்பன், மு.அழகுராஜ் அய்யா அவர்களுக்கும், கட்டுரை பெற்றுத்தர துணை நின்ற மாவட்ட ஆளுநர் சண்முகப் பிரியா, துணை நிலை ஆளுநர் பேராசிரியர் சேதுமாதவன் ஆகியோருக்கும் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

கருத்தரங்க நூலைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த............... அவர்களுக்கும் நன்றி.

வாழ்த்துரை



மீனா திருப்பதி
துணைத் தலைவர்
தமிழால் இணைவோம் உலகத் தமிழ்ப் பேரியக்கம்

தமிழக அரசால் மகாகவி நாளாக நினைவு கூறப்படும் நாள் பாரதியார் இயற்கை எய்திய செப்டம்பர் 11. அந்த நாளிலே தமிழால் இணைவோம் உலக தமிழ்ப் பேரியக்கம் மற்றும் பி பி ஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி இணைந்து "பாரதியாரின் படைப்புலகம்" என்ற தலைப்பில் மாபெரும் கருத்தரங்க நிகழ்வுக்காக கட்டுரைகள் பெறப்பட்டு நூலாக வெளியிடப்பட்டுள்ளது.

பாரதியைப் பற்றி செய்திகள் அனைவரும் அறிந்ததே என்றாலும் அந்த மாபெரும் கவிஞருக்கு அவருடைய படைப்புகளாலேயே நினைவு கூறுவது நாம் ஒவ்வொருவருடைய கடமை ஆகும். சமுதாயம் சார்ந்த சீர்திருத்தச் சிந்தனையில் உயர்ந்து நின்றவர். நாட்டு விடுதலைக்கு அவருடைய பாடல் ஊட்ட சத்தாகவும் ஊக்கம மருந்தாகவும் வலு சேர்த்தது. பெண்கள் சமுதாயத்தைப் போற்றி ஆற்றிய பணிகளால் நாடட்டையே குழுங்கிடச் செய்வர்.

மரபுக் கவிதைகளாக, செய்யுள் இலக்கணம் தாங்கிய படைப்புகளாக, வாசிப்பதற்கும் நேசிப்பதற்கும் அவ்வளவு எளியது அல்ல என்ற காலகட்டத்திற்கும் எளிமையான வாசிப்பை தேடிய காலத்திற்கும் இடையே பலமாக அமைந்தவர் மகாகவி பாரதியார். படித்தவரோடு பாமரனும் பசுந்தமிழின் சுவையை நேசிக்க செய்தவர். இன்று பலர், கவிஞர்கள் என்ற அடைமொழிக்குள் அடங்க முடிகிறது என்றால் அது பாரதியின் படைப்புலக முன்னத்தி ஏரே காரணம்.

பாரதியின் பாடல் வரிகள் எளிமை மிக்கவை என்றாலும் வரிகள் அனைத்தும் வீரியம் மிக்கவை. ஒரு பாட்டுக்கு ஒரு தலைப்பு என்பதை விட ஒவ்வொரு வரியில் உள்ள ஒவ்வொரு சொற்களும் ஒவ்வொரு தலைப்பு என்னும் அளவிற்கு சூடேற்றும், தீ பற்ற வைக்கும் அடர்த்தி மிக்கவை.

எழுத்தாளர் என்றாலே தாடியுடன் மீசையும், தோல் பையுடன் வறுமையும் என்று வரையறுக்கப்பட்ட நேரம். அதில் பாரதியின் வாழ்க்கையும் தப்பவில்லை. ஆனாலும் தேச விடுதலைக்கு உரம் ஏறிய நெஞ்சமும் உறுதி கொண்ட மனமும் அவரிடம் பஞ்சமே இல்லை.

அப்படிப்பட்ட மகாகவிக்கு கருத்தரங்கம் வாயிலாக புகழ் வணக்கம் செலுத்திட மாணவர்களுக்கு ஊக்கம் கொடுத்திட தமிழால் இணைவோம் அமைப்போடு இணைந்து செயல்பட முன் வந்த கல்லூரிக்கு மிகுந்த நன்றியினையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

தமிழால் இணைவோம் நிர்வாகிகள் தொடர்ந்து மாணவச் செல்வங்களை ஊக்குவிக்கும் பெரும் எண்ணத்தோடு மதுரை, குற்றாலம், காரைக்குடி தற்பொழுது கோவை என்று வெற்றிகரமாக செயல்பட்டு வருகிறார்கள்.

கருத்தரங்கம் என்று ஒற்றைச் சொல்லில் கடந்து விட முடியாத பணி. இதிலே இடம்பெற்றுள்ள ஒவ்வொரு கட்டுரையாளரும் எவ்வளவு நூல்களை வாசித்திருப்பார்கள். பாரதியைப் பற்றி மேலும் செய்திகளை தெரிந்து கொள்ள வழி வகை செய்திருக்கும். எவ்வளவு ஆய்வு மாணவர்களுக்கு கூடுதல் வழிகாட்டுதலாக இருந்திருக்கும்.

அப்படிப்பட்ட கருத்தரங்கிற்கும் நூல் உருவாக்கத்திற்கும் நேரம் காலம் பாராது உழைத்த கல்லூரி முதல்வர் முனைவர்.நா.முத்துமணி அவர்கள், தமிழ்த்துறைத் தலைவரும் தமிழால் இணைவோம் சங்கத் தலைவருமான சந்திரகலா அவர்கள், தலைவர், தாளாளர், துணைத் தலைவர் மற்றும் பேராசிரியர்கள் உட்பட அனைவரும் பாராட்டுதலுக்கு உரியவர்கள்.

மாணவர்களுக்குப் பயனுள்ள இத்தகைய நிகழ்வு பாரதியின் பெருமையை மேலும் மேலும் "பெறுக இவ்வையகம்" என்பதற்கு இணங்க

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும்
தெளிந்த நல்லறிவு வேண்டும்"

எனும் பாரதியின் கூற்றுக்கு எடுத்துக்காட்டாகத் திகழும் தமிழால் இணைவோம் நிறுவனர் / தலைவர் கவின் கலை வேந்தர் சத்யநாராயணராஜ் பாலகுரு அவர்கள், தலைமைச் செயலாளரும் கருத்தரங்கம் மற்றும் நூலாக்கப் பணிகளுக்கு தலைமை ஏற்று திறம்பட செயலாற்றிக் கொண்டிருக்கும் மதிப்புறு முனைவர் சுப்ரமணியம் அய்யா அவர்களுக்கும் அன்பு நிறை வாழ்த்துகள்.

கட்டுரைகள் பெற்றுத் தருவதில் இருந்து கட்டுரைகளைக் கட்டமைப்பு செய்தல் வரை தன்னுடைய மேலான பங்களிப்பை நல்கிய தமிழால் இணைவோம் பன்னாட்டு இயக்குனர், கூட்டு மாவட்ட ஆளுநர்கள், மாவட்ட ஆளுநர்கள் அனைவருக்கும் வாழ்த்துகள். கருத்தரங்க ஒருங்கிணைப்புப் பணிகளைச் சிறப்பாகச் செய்து வரும் தங்க மங்கைகள் வெண்ணிலா காமராஜ் அவர்கள், அன்புடன் ஆனந்தி அவர்கள், சி. தீபா அவர்கள் மற்றும் தமிழால் இணைவோம் நிர்வாகிகள் அனைவருக்கும் இனிய வாழ்த்துகள்.

தொடர்வோம் தோழமையோடு-வாழ்வில்
படர்வோம் தமிழ்ப் பற்றுதலோடு.

வாழ்த்துரை



மருத்துவர் L.P.தங்கவேலு,
பிபிஜி கல்விக் குழுமத் தலைவர்,கோவை

மொழிப்பற்றையும் நாட்டுப்பற்றையும் தம் இரு கண்கள் எனப் போற்றி தேசத்தொண்டே தெய்வத்தொண்டென வாழ்ந்த கவிஞர் பாரதியின் படைப்புகளைப் பறைசாற்றுகிறது இந்நூல்.பாரதியார் பற்றியும் அவரது படைப்புகள் பற்றியும் அறிந்து கொள்வதற்கு சிறந்ததொரு தூண்டுகோலாய் ஆய்வாளர்கள் தங்கள் கட்டுரைகளை வழங்கியுள்ளார்கள்..

பார் போற்றும் கவிஞரது படைப்புகளைப் பார்வையாளர்களுக்கு விருந்தாக வழங்கிய உலகத் தமிழ்ப் பேரியக்கம், தமிழால் இணைவோம் அமைப்பிற்கும், பிபிஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி தமிழ்த்துறைக்கும் உள்ளம் கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வாழ்த்துரை



முனைவர் நா. முத்துமணி
முதல்வர்
பிபிஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை

மக்களை ஒன்றிணைக்கும் கருவியாகத் திகழ்வது மொழியாகும். மொழியானது இன்று நேற்று தோன்றியது அல்ல. பழங்காலம் தொட்டுப் பண்பட்ட மொழியாகச் செழுமை பெற்றுள்ளது. ஏராளமான இலக்கியங்கள் மக்களுக்கு நற்சிந்தனைகளை வழங்கும் வகையில் படைக்கப்பட்டுள்ளன. அவ்வரிசையில் பாரதியார் குறிப்பிடத்தக்க இடத்தினைப் பெற்றுள்ளார். இவரது படைப்பை வாசிப்பதே ஆனந்த அனுபவமாகும்.

இத்தன்மை வாய்ந்த பாரதியாரின் படைப்புகளைத் திறனாய்வு செய்து முடிவுகளை வழங்கியுள்ள ஆய்வாளர்களின் பங்கானது குறிப்பிடத்தக்கது. இவ்வரிய பணிகளைச் சிறப்புடன் செய்து முடித்துள்ள உலகத் தமிழ்ப்பேரியக்கம் தமிழால் இணைவோம் அமைப்பிற்கும், எமது கல்லூரித் தமிழ்த் துறைக்கும் மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. பெண்ணுலகின் தீர்க்கமான குரல் பாரதி



தங்கமங்கை மீனா திருப்பதி

தமிழால் இணைவோம் துணைத்தலைவர்

முகப்புரை

பாரதியின் படைப்பு உலகம் மிக விரிந்து பரந்த தளம். ஒரு வழிப் பாதையாக அல்லாமல், பல்வேறுபட்ட பெரும் பாதைகள். அன்றைய சமகால அரசியலாக விடுதலை வேட்கையை மக்களிடையே உத்வேகம் அளிக்கக் கூடிய படைப்புகள், பெண்ணடிமை தீர வழிவகை செய்யும் படைப்புகள், சாதி மத வேறுபாடுகளைக் கண்டு மனம் வெந்து நொந்து சொல்லம்பு விடுக்கக்கூடியவை என்று பல வகையான படைப்புகளாகப் பாரதியின் எழுத்துக்களில் உணரலாம். கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் "பாட்டுக்கு ஒரு புலவன் பாரதியடா" என்று பாடியிருப்பார். ஏனென்றால் படித்தவர், பாமரர் எல்லோரும் பாடக் கூடிய வகையிலே புதுக் கவிதை வித்தையைக் கையாண்டவர். பாரதியின் கவிதைகள் எல்லாம் புலமையோடு எளிமையாகவும் புதுமையாகவும் இருந்ததினால் வெள்ளித்திரைகளில் பள்ளிப் பாடங்களில் என்று என்றும் நீங்கா இடம் பிடித்துள்ளதை நாம் அறியலாம். அன்றைய அவருடைய எழுத்துக்களும் பேச்சுக்களும் இளைஞர்கள் மாணவர்கள் என்றில்லாமல் பெண்கள் மத்தியில் பெரும் எழுச்சியை விதைத்துச் சென்றது.

பாரதியின் காலம்

பாரதியின் காலம் பெண்கள் பற்றிய பிற்போக்குத்தனம் ஊறி பொதித்து இருந்த காலகட்டம் . பாரதியாரும் அன்றைய காலகட்டத்தில் பெரும்பாலான ஆண்கள் எப்படி இருந்தார்களோ அப்படித்தான் பெண்களைப் பற்றிய கண்ணோட்டத்தில் இருந்திருக்கிறார். அதற்கு முந்தைய காலங்களில் பெண்கள் நினைத்ததை, ஆசைப்பட்டதை எழுதியுள்ளார்கள் பேசி இருக்கிறார்கள், பாடியிருக்கிறார்கள். அது அரசியல் சார்ந்தும் மக்கள் சார்ந்தும் ஏன் காதல் சார்ந்ததும் இருந்திருக்கிறது. ஏனென்றால் 70 ஆண்டுகளுக்கு முன்பு வரை காதல் என்ற சொல்லைக் கூட ரகசியமாகக் தான் வெளிப்படுத்த முடியும். இரண்டு பேர் பேசிக்கொள்ளும் போதுகூட அவர்கள் இருவருக்கும் ஒரு இதுவாமே, அதான் என்னமோ காதலாம் என்று ரகசியமாகப் பேசிக்கொள்ளும் வழக்கம்தான் இருந்தது. பெண்கள் தன் எண்ணங்களை வெளிப்படையாகப் பகிர்ந்து கொள்ள முடியாது நேரம்.

மணி விளக்குகள்

சங்க காலத்திற்கும் 100 ஆண்டுகளுக்கும் முந்தைய இடைவெளி தான் பெண்களுக்கு இருண்ட காலகட்டம் என்று கூறலாம். அந்த இருண்ட கால கட்டத்தில் நிறைவு பகுதியில்தான் முண்டாசுக் கவிஞனின் பெண்ணுலகப் பார்வை தூண்டப்படுகிறது. தூண்டிய மணி விளக்குகள் முதலில் சகோதரி நிவேதிதாவும் அடுத்தது அன்னிபெசன்ட் அம்மையார் அவர்களும் அடங்குவார்கள். விவேகானந்தர் அவர்களின் ஆன்மிக வழி தொண்டராக இருந்து இந்தியா வந்தவர். தேசிய காங்கிரஸ் மாநாடு நடக்கிறது. அப்பொழுது அந்த மாநாட்டில் கலந்து கொள்ள வந்த பாரதியார் சகோதரி நிவேதிதையைச் சந்திக்கிறார். சந்திப்பு சகிதம் முடிந்த பின் உங்கள் மனைவி எங்கே? அவர்கள் வரவில்லையா? என்று கேட்கிறார். அதற்குப் பாரதியார் அவங்க இதற்கெல்லாம் வரமாட்டார்கள், அவர்களுக்கு அரசியல் பற்றி என்ன தெரியும் என்று பதிலளிக்கிறார். நிவேதிதா அவர்களுக்கு இந்தப் பதில் புதுமையாக இருக்கவே என்ன இப்படி

சொல்கிறீர்கள் உங்கள் மனைவிக்குச் சுதந்திரம் இல்லை என்றால் எப்படி இந்த நாட்டை அடிமைத்தனத்திலிருந்து மீட்கப் போகிறீர்கள் என்று கேட்டிருக்கிறார். அந்த வினா அவருடைய எழுதுகோலுக்கு ஒரு புது உரத்தையும் தன் பெண்ணுலகச் சிந்தனையில் புதுமையையும் வளர்த்திருக்கிறது. பெண்களைப் புதுமைப் பெண்களாக மாற்றிட எழுந்த சிந்தனையிலே, "வீட்டுக்குள்ளே பெண்ணே பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்" என்று தன்னையும் சேர்த்து எழுதி பெண் விடுதலை முன்னேற்றத்திற்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர். அன்னிபெசன்ட் அம்மையார் அவர்களோடு ஆரம்ப காலகட்டத்தில் பிடிப்பு இல்லாமல் இருந்து பின் அவருடைய சுதந்திரம் மற்றும் பெண் சமுதாய முற்போக்குச் சிந்தனை செயல்பாடுகளில் இணைந்து போராட்டங்கள் மற்றும் கோம்ரூல்ஸ் எழுது தளத்தில் கட்டுரைகள், கவிதைகள் என்று பயணித்துள்ளார். பாரதியார் அன்றைய சுதந்திர வேட்கை கொழுந்து விட்டு எரிந்த வேளையிலும் பெண்ணுரிமை பற்றிய சிந்தனையை தன் வாழ்நாளில் ஒரு அங்கமாகவே வைத்திருந்தார்.

செம்மை மாதர்

"பெண்கள் அறிவை வளர்த்தால் வையகம் பேதமையற்றிடும் காணீர்" என்றார். ஒரு புராதன நாடாக மாறி இருந்த இந்த நாட்டிலே பெண்கள் கல்வி அறிவு இன்றி, பேதமை நிரம்பப் பெற்ற பெண்களைக் கொண்ட நாடாகவே அறியப்பட்டது. பெண்களுக்கு அறம் போற்றும் குணம் இயற்கையாக உண்டு. அதனால் அறிவும் அறமும் பெண்களின் மேன்மைக்கு அவசியம் என்று பெண் கல்வியை வலியுறுத்திக் கவிதைகள் கட்டுரைகளை எழுதி பெண் சமுதாயத்தை விழிப்படையச் செய்து இருக்கிறார் . அந்த எழுத்துக்களில் அழுத்தமான சொற்களைக் கையாண்டும் இருக்கிறார். நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும் ஞானச் செருக்குமே பெண்ணின் இப்போதைய தேவை என்று பெண்களுக்கு அவர்கள் நிலையிலிருந்து விடுபட அறிவுரை ஊட்டியவர். நிலம் பார்த்து நடக்க வேண்டும் என்று அறிவுறுத்தி வளர்க்கப்பட்ட பெண்கள் உலகை நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையோடு நடை போட வைத்த பெருமை மகாகவி பாரதிக்கு உண்டு.

கலியழித்து முன்னேறு

பலர் நிறைந்த அவையில் பெண்கள் சிரிப்பது பேசுவது பெரிய குற்றமாக் கருதப்பட்டது. நான்கு பெண்கள் அவ்வாறு சாலையில் சென்றால் கூட கலியுகமடா என்று குரல் எழுப்பவர் அதிகம். மிக் கொடுமையாகவும் கடுமையாகவும் நடத்தப்பட்ட பெண்களுக்கு சிந்தனையைத் தூண்ட வேண்டும் என்று, பாஞ்சாலியின் சிரிப்பே பாரதப் போருக்கு வித்து என்று கூறுவது உண்டு." பொம்பளை சிரிச்சா போச்சு, புகையிலை விரிச்சாப் போச்சு" என்ற பழமொழிகளுக்கும் பஞ்சமில்லை. கலிகாலம் என்று பெண் உலக உணர்வுகளை அடைக்கி வைத்துள்ளவர்களைப் பார்த்து" கலி அழிப்பது பெண்கள் அறமடா" என்று ஆண் சமூகத்திற்கு எச்சரிக்கை மணி அடித்து ஆனந்தக் கூத்தாடியவர்.

உரிமையைக் கொண்டாடு

உடன்கட்டை ஏறுதல் (ஏற்றுதல்) வழக்கம் நடைமுறையில் இருக்கையில் நாட்டு சுதந்திரம் எங்கள் உரிமை என்று கொழுந்து விட்டு எரிந்த நேரத்திலே பெண்ணுரிமை என்ற முழுக்கத்தை இடி என இறக்கியவர். மறுமணம் செய்து கொள்ள வேண்டும் என்பதைத் தனது சந்திரிகையின் கதையிலே விசாலாட்சி என்ற பெண் கதாபாத்திரத்திற்கு மறுமணம் என்ற பதத்தைக் கொடுத்தவர். அந்தக் கதாபாத்திரத்தில் அவர் கணவர் இறக்கும் தருவாயில் தன் மனைவியைப் பார்த்துச் "சென்னை பட்டினம் சென்று அங்கு கைம்பெண் விவாகம் உதவி மையத்திற்குச் சென்று அவர்கள் வழியே ஒரு நல்ல மாப்பிள்ளையைத் தேடி வாழ்க்கைப்படு" என்று வசனமாக எழுதி இருப்பார். கூடவே

இந்த மூடப்பழக்கங்களை " நீசத் தனமான சுயநல சாத்திரத்தைக் கிழித்து கறி அடுப்பிலே போடு" என்று இந்த பத்தாம் பசலி சமூகத்தை அச்சம் கொள்ளச் செய்தவர் பாரதி.

இயக்கும் சக்தி

பொதுவாக பெண்களிடம் கொடுக்கும் வேலை சரியாக முடிக்கப்படும் என்று எண்ணம் பல முதலாளித்துவத்திலும் அரசியல் துறையிலும் தனியார் துறைகளிலும் இயங்கி வரும் சொற்றொடர். சிந்தனை, அறிவு, ஆற்றல், உழைப்பு எல்லாவற்றிற்கும் மேலாகச் சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் பெண்களிடம் பரவலாகியே இருப்பது உண்மை. அதைத்தான் பாரதி "சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் உங்கள் உடலை இயக்கும் சக்தி" என்று அன்றே சொன்னார். இன்றைக்கெல்லாம் திருமணமான பின்னும் குழந்தைகள் பிறந்த பின்னும் பல பெண்கள் இனி அவ்வளவுதான் குடும்பத் தலைவி பொறுப்பு வந்துவிட்டது என்று இல்லாமல் சமூக செயல்பாடுகளிலும், தன் அறிவை திறமையை மேம்படுத்திக் கொள்வதிலும் ஈடுபடும் பெண்களுக்கு உந்து சக்தியாக முந்தி நிற்பவரங மகாகவி. அச்சம் மடம் நாணம் பயிற்பு இவை யாவும் பெண்களுக்கான மரபு ரீதியிலான பண்புகளாக வகுத்திருந்த காலகட்டத்தில் நாணமும் அச்சமும் நாய்கட்கு வேண்டும் என்று மடைமாற்றியவர் .

மரபுக்கு முடிவு

ஈந்து புறந்தருதல் என் தலைக் கடனே, சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே என்று தன் கடனாக ஒரு பெண்பார் புலவராகப் பொன்முடியார் பாடியுள்ளார். அந்த மரபை உடைத்து "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்" என்று பாடுங்கள் பெண்மக்களே எனப் பாடி ஊக்கம் கொடுக்கிறார். அரசர்கள் தொடுத்த போராக இருந்தாலும் சுதந்திரப் போராக இருந்தாலும் பெண்கள் பெருமளவில் ஈடுபாடோ அல்லது அதில் பங்கு கொண்டதோ மிகச் சிலரே எனலாம். இன்றையதினம் பகல்காம் பயங்கரவாதத் தாக்குதலாகிய ஆப்பரேசன் சிந்தூர் நடவடிக்கையில் இரண்டு பெண் அதிகாரிகள் விங் கமாண்டோ வியோமிகா சிங், கர்னல் சோபியா குரோசி இவர்களின் செயற்பாடுகள் சமூகத்திலே பெண்களின் பங்கு எவ்வளவு வளர்சிதை மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்பதைக் கண்கூடாக காணலாம்.

முடிவுரை

பெண் சுதந்திரத்திற்காகப் புத்தகங்கள் கதைகள் கட்டுரைகள் என்று எழுதி மட்டும் செல்லாமல் தனது குடும்பத்திலும் அதை செயல்படுத்தித் தனது கொள்கையிலேயே உறுதியாக நின்றவர். அதனால் தனது சமுதாயத்தில் பல ஏச்சுக்களை ஏற்றுக்கொண்டவர். அவர் இறந்த நிகழ்வுக்கு வந்தவர்களை விரல் விட்டு எண்ணி விடலாம் என்ற அளவிற்கு அவர் சமுதாயத்திலேயே எதிர்ப்புகளைச் சம்பாதித்துக் கொண்டவர். அதிலிருந்து நாம் தெரிந்து கொள்ளலாம் பெண் முன்னேற்றத்திற்காகவும் ஜாதி சமுதாய சீர்திருத்தத்திற்காகவும் பாரதியார் எந்த அளவிற்குத் துணிச்சலோடு பேசியிருப்பார் என்பதை. ஆகவே பெண்ணின விடியலின் தீர்க்கமான குரல் பாரதி என்று கும்மி அடிப்போம்.

2. பாரதியின் அறச் சீற்றம்



மதிப்புறு முனைவர் அ. சுப்ரமணியன்
தலைமைச் செயலாளர்
தமிழால் இணைவோம் உலகத் தமிழ்ப் பேரியக்கம்
மதுரை

முன்னுரை

மனிதன் எந்த நிலையிலும் சினம் கொள்ளக் கூடாது என்றார் வள்ளுவர்.

"தன்னைத்தான் காக்கின் சினம் காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்" (குறள்305)

ஆத்தி சூடி தந்த ஔவையோ "ஆறுவது சினம்" என்றார். ஆனால் பாரதியார் புதிய ஆத்தி சூடியில் சீறுவோர்க்குச் சீறு, ரௌத்திரம் பழகு என்கிறார். இதற்கான காரணம் என்ன?பாரதி ஏன் இப்படிச் சொன்னார்?. அவர் வாழ்ந்த காலத்தில் சமூகத்தில் இருந்த ஏற்றத் தாழ்வுகள், வலியோர் எளியோருக்குச் செய்த கொடுமைகள் கண்டு, மனம் பொறுக்காமல் கூறிய சொற்கள். பாரதி சமூகக் கொடுமைகளைக் கடுமையாகச் சாடினார். சீற்றம் கொண்டார். அது நியாயமான அறச்சீற்றம். மகாகவிஞன் என அழைக்கப்படும் பாரதி பாடல்களை மட்டும் எழுதவில்லை. கட்டுரைகளை எழுதினார். கதைகளை எழுதினார். பாடல், கட்டுரை, கதைகளின் வாயிலாக எத்தகைய சீற்றம் கொண்டார். தான் கொண்ட அறச் சீற்றத்தின் காரணமாக இச் சமூகத்தில் எத்தகைய மாற்றம் கண்டார் என்பதை ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கம்.

கட்டுரைகளில் பாரதியின் அறச் சீற்றம்

பாரதி, இந்தியா, விஜயா, சக்கரவர்த்தினி, தர்மம், கர்மயோகி, சூரியோதயம் போன்ற இதழ்களை நடத்தினார். அவர் நடத்திய எல்லா இதழ்களிலும் சமூக சீர்திருத்தம், நாட்டு விடுதலை, பெண்விடுதலையை முன்நிறுத்தினார். அதிலும் சக்ரவர்த்தினியில் சமூகம், பெண்விடுதலை சார்ந்து அதிகம் எழுதினார். **"காரிருள் அகத்தில் நல்ல.."** எற்று பத்திரிகையின் பெரும் ஆற்றலைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் எழுதினார். சமூகத்தில் மிகப் பெரிய மாற்றத்தை இதழ்களின் வாயிலாகக் கொண்டுவர முடியும் என்பதை பாரதி நம்பினார். எழுது கோல் தெய்வம், இந்த எழுத்தும் தெய்வம் என்று பத்திரிகைப் பணிமீது மிகுந்த மரியாதை கொண்டிருந்தார். ருதுவான பிறகு பெண்ணுடைய இஷ்டப்படி கலியாணம் செய்யவேண்டும். புருசன் கொடுமையைச் சகிக்க முடியாமல் இருந்தால், ஸ்திரி சட்டப்படி அவனை த்யாஜ்யம் (விவாகரத்து) செய்து விடச் சட்டமும் இடம் கொடுக்க வேண்டும். ஊர்க்காரரும் தூஷணை செய்யக் கூடாது என்று அன்றையக் கால கட்டத்தில் பாரதி சமூகத்தின் மீது சீற்றம் கொண்டு எழுதினார். "பெண் அவள் விருப்பப்படி சஞ்சரிக்கலாம். தனி இடங்களில் ஸ்திரிகளைக் கண்டால் மரியாதை செய்து வணங்க வேண்டும். அப்படி எந்தப் புருஷன் மரியாதை செய்யவில்லை என்று தோன்றுகின்றதோ, அவனைக் கிரஹஸ்தர்கள் நெருங்கக் கூடாது. அவன் கூட ஒருவனும் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளாமல் இருந்து விட வேண்டும்". பெண் என்ற தலைப்பில் பாரதி இப்படி எழுதினார்.

பதிவிரதை என்ற தலைப்பில், "அட பரம மூடர்களா ஆண் பிள்ளைகள் தவறினால் ஸ்திரி எப்படிப் பதிவிரதைகளாக இருக்க முடியும்" என்று துணிவோடு சீறுகின்றான். ஒரு பெண் ஆண் இல்லாமல் விலை மாதர் ஆகிவிடுவாளா? அதற்குக் காரணம் ஆண்தானே! என்று கேட்கிறார். பெண் விடுதலை கட்டுரைகள் மூலமாகப் பெண்களிடையே விழிப்புணர்வைக் கொண்டு வந்தவன் பாரதி. பெண் விடுதலை என்றும், பெண்விடுதலைக்காகத் தமிழ்ப் பெண்கள் செய்யத்தக்கது யாது தமிழ்நாட்டு மாதருக்கு என்றும் கட்டுரைகளையும் எழுதியுள்ளார். அக் கட்டுரைகள் அனைத்திலும் புரட்சிகரமான கருத்துக்களைப் பதிவு செய்திருக்கிறார். இவைகளில் பாரதியின் சீற்றம் நன்கு வெளிப்பட்டுள்ளது தெரிகின்றது.

பாரதியின் பாடல்களில் அறச்சீற்றம்

ஓடிவிளையாடு பாப்பா ஓய்ந்திருக்கலாகாது பாப்பா

என்று பாப்பாவிற்கு அறிவுரையாகப் பாடி வந்த பாரதி அக் குழந்தைக்குக் கொடுமை வருகின்ற போது தனது சீற்றத்தைக் காட்டுகிறார்.

பாதகம் செய்பவரைக் கண்டால் பயங் கொள்ளலாகாது பாப்பா

எனறு தனது சீற்றத்தைக் காட்டுகிறார்.

புதுமைப் பெண் என்ற தலைப்பில், பெண்மையைக் குறிக்கின்ற போது ஒரு பெண் என்றால் அவளுக்கு அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு வேண்டும் என்று இலக்கணத்தை வைத்தார்கள். இதைத் தொல்காப்பியரும் தொல்காப்பியத்தில் குறிப்பிட்டுள்ளார். பெண்மையின் நளினம் கருதி கூறப்பட்டது. ஆனால் பின்னால் வந்தவர்கள் இதைக் கூறியே பெண்களை அடிமைப் படுத்தத் துவங்கினார்கள். இதைத்தான் பாரதி சீற்றத்தோடு எதிர்க்கிறார்.

"நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் "

என்று பெண்களுக்கான குணத்தை நிர்ணயம் செய்கிறார். மேலும்,

நிமிர்ந்த நன்னடை நேர் கொண்ட பார்வையும்

இதிலே எங்கே பாரதியின் சீற்றம் தெரிகிறது என்று பார்க்கும் போது, பெண்களை அறியாமையில் மூழ்க வைத்து அவல வாழ்க்கை வாழ்வதைக் கண்டு சீற்றம் கொள்கிறார். "அறியாமையை ஊதித்தள்ளி உமிழ்ந்துவிடு பெண்ணே" என்று சீறுகிறார்.பெண்ணியத்திற்காக ஓங்கிக் குரல் கொடுத்தவர் பாரதி. அன்றைய காலம் எல்லா நிலைகளிலும் பெண்களைத் தள்ளியே வைத்திருந்தது. தள்ளி மட்டுமல்ல தாழ்த்தி அடிமை நிலையில் வைத்திருந்தது. அதனால் பாரதி தான் எழுதுகின்ற பாடல்களில் எல்லாம் பெண்களைச் சமுதாயத்தின் உயர் நிலைக்குக் கொண்டு வர வேண்டும் என ஊக்கம் தரும் வகையில் எழுதினார். பாஞ்சாலி சபதம் என்று மகாபாரக் கதையைச் சுருக்கமாகக் கவிதை நடையில் வடித்தார். அதிலே கூடப் பாஞ்சாலியைத் தர்மன் சூதாக வைத்துத் தோற்றபோது, பாஞ்சாலி அவை நடுவில் வந்து துணிவாகத் தன் நிலையை எடுத்து வைக்கிறாள். தன் கணவனை நோக்கியே கேள்விக் கணைகளை வீசுகிறாள்.

"நாயகர் தாந்தம்மைத் தோற்ற பின்- என்னை"

என் கணவர் தாயத்தில் அவரைப் பணயம் வைத்துத் தோற்ற பின்னர், என்னைப் பணயம் வைக்க அவருக்கு என்ன உரிமையுண்டு. நான் இப்போது அவர் மனைவியல்ல, துருபதனின் மகள் என்று துணிவாகக் கூறுகிறாள். அவரே தோற்று அடிமைத் தொண்டுக்கு ஆளாகிவிட்ட பின்பு நான் எப்படி அவருக்கு மனைவியாவேன் என்று துணிவாகக் கேட்பதாகப் பாரதி எழுதிப் பெண்களிடையே எழுச்சியை ஊட்டுகிறார். அது மட்டுமல்ல தன் அண்ணன் தருமனை நோக்கி வீமன் கேட்பதாகச் சொல்லியவற்றைப் பார்ப்போம். நாட்டையெல்லாம் தொலைத்து விட்டாய். எங்களையும் பணயம் வைத்துத் தோற்று அடிமையாக்கி விட்டாய்.

"துருபதன் மகளைத்- திட்டத்
துய்ந ஹுடற் பிறப்பை.."

என்று வீமன் பொங்கி எழுகிறான். இங்கே பாடல் அப்படியிருந்தாலும் பொங்குவது வீமனல்ல. பாரதி சினந்தெழுகிறார், பெண்ணுக்கு நேர்ந்த கொடுமை கண்டு. இதைப் படிப்போர் எழுச்சி பெறட்டும். தவறு செய்யும் கணவர்களைப் பெண்கள் கேள்வி கேட்கட்டும் என்ற எண்ணம் மேலோங்கப் பாரதி எழுதிய அடிகளாகவே நான் காண்கிறேன். இங்கே பாரதியின் அறச் சீற்றம் காண்கிறேன். நாடு அடிமைப் பட்டிருக்கிறது. விடுதலை பெறவேண்டும் எனத் துடித்தெழுகிறார் பாரதி. தான் மட்டும் துடித்தால் போதாது அடிமைப்பட்டுக் கிடக்கும் மக்களைத் தட்டி எழுப்ப வேண்டும் என்று எண்ணுகிறார். இதிலே நம் நாட்டு மக்கள் மட்டுமல்ல உலக மக்கள் அனைவரையும் பொதுவில் வைத்துப் பார்க்கிறார் பாரதி. யாரும் யாருக்கும் அடிமையில்லை என்பதே அவர் கொள்கை. அதனால்தான் கொடுங்கோலன் ஜார் மன்னனிடமிருந்து ரஷ்ய மக்கள் போராடிப் பெற்ற சுதந்திரத்தை, நீக்கிய அடிமைத் தனத்தை, இங்கிருந்து கொண்டாடுகிறார் பாரதி.

காளி பராசக்தி உருசியநாட்
டினிற்கடைக்கண் வைத்தாள், அங்கே

என மகிழ்கிறார். இங்கே வாழ வழியின்றி வேற்று நாடுகளுக்குப் பிழைப்பைத் தேடிப் போய் கூலிகளாய் அடிமைகளாய் வாழ்ந்த அன்னையரை எண்ணிக் கண்ணீர் வடித்து சபதம் செய்கிறார் பாரதி.

வேற்று நாடுகளில் அவர் துரத்துண்டும்

இந்திய விடுதலைக்காக எழுச்சிப் பாடல்கள் பல புனைந்து துணிவின்றி இருந்தோரைத் துணிவு கொள்ள வைத்தவர் பாரதி. அது மட்டுமல்ல நாடு விடுதலை பெறும் முன்பாகவே விடுதலை பெற்றுவிட்டது போலவும், அடிமைப் பட்டிருந்த நாட்டில் யாரெல்லாம் அடிமை நிலையில் வைக்கப் பட்டிருந்தார்களோ, அவர்களுக்கெல்லாம் பாரதியே விடுதலை கொடுக்கிறார் தன் பாட்டின் வழியாக. ஆனால் பாரதி சொன்னதைக் கேட்டு அடக்கி வைத்திருந்தவர்கள் விடுதலை கொடுத்தார்களா என்றால் இல்லை. அடக்கப் பட்டவர்கள் அவர் பாடலைப் படித்துத் தங்கள் விடுதலைக்கு அறிவுப்பூர்வமான ஆயுதமாக எடுத்துக் கொண்டார்கள். ஒவ்வொருவருக்கும் அவர்களின் தாய் மொழி முக்கியம். மொழி இருந்தால்தான் அது பேசுகின்ற இடத்துக்காரன் என்ற அடையாளம் இருக்கும். எத்தனையோ மொழிகளைப் படித்தவர் பாரதி. ஆனாலும் என் தாய் மொழிக்கீடில்லை எம்மொழியும் என்கிறார்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்

இனிதாவது எங்கும் காணோம் என்றார்.

அவருக்கு எதிரிலே நின்று தமிழ் இனி மெல்லச் சாகும் என்று ஒருவர் பேச, பொங்கி எழுகிறார் பாரதி.

மெல்லத் தமிழினிச் சாகும்-அந்த

என்று சொன்ன மாத்திரத்தில் உடனே பொங்கி எழுந்து சீறுகிறான்.

என்றந்தப் பேதை உரைத்தான் ஆ

என ஆனையிடுகிறார்.

எங்கள் தமிழ் மொழி எங்கள் தமிழ் மொழி

என்று ஓங்கிக் குரல் கொடுத்தவர் பாரதி.

சமுதாய ஏற்றத் தாழ்வு நீக்கக் கொண்ட சீற்றம்

ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை ஜாதியில்

மனிதனுக்கு மனிதன் எப்படி அடிமையாக முடியும். யாரும் யாருக்கும் அடிமை இல்லை என்று நெஞ்சு நிமிர்த்திக் கூறுகின்றான். இது தான் பாரதி கொண்ட அறச் சீற்றம். சிலர் வயிறு புடைக்கத் தின்ன, பலர் பசியால் வாடுவது என்ன நியாயம் என்று கேட்கிறார். அங்கே வீர முழக்கமிடுகிறார் பாரதி. தனியொருவனுக்கு உணவில்லையெனில் ஜெகத்தினை அழித்திடுவோம் என்கிறார், வள்ளுவர் கூற்றுக்கு நிகராக. **இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின்பரந்து** என்றார் வள்ளுவர்.

கதைகளில் பாரதியின் அறச் சீற்றம்

பாரதி தன்னுடைய கதைகளில் மனித உணர்வுகள், வாழ்க்கைச் சிக்கல்கள், பெண்ணிய விடுதலை இப்படிச் சமூகம் சார்ந்த பார்வையை ஊடாட விட்டவர். சமூக மாற்றத்திற்கு வித்திட்டவர். சந்திரிகையின் கதையில் அன்றைய விதவைகளுக்குச் சமூகம் விதித்த கட்டுப்பாடுகளை மீறி மொட்டையடித்து மூலையில் உட்கார வைக்கும் பழக்கத்தைச் சாடி, விசாலாட்சிக்கு மறுமணம் செய்வதாகக் கதையைக் கொண்டு சென்று புரட்சி செய்தவர் பாரதி.

முடிவுரை

பாரதி வாழ்ந்த காலத்தில் சமூகத்தில் பெண்கள் அடிமை நிலையிலிருந்தார்கள். தங்கள் வாழ்க்கைத் துணையைக் கூடத் தேர்ந்தெடுப்பதில் அவள் அனுமதிக்கப்படவில்லை. பெண்களைப் படிக்க வைக்க மறுத்தார்கள். பெண் என்பவள் கணவனுக்கு அடிமையாகப் பிள்ளை பெற்றுக் கொடுக்கும் இயந்திரமாக மட்டுமே பார்க்கப் பட்டாள். மனிதர்களிடையே சாதி ஏற்றத்தாழ்வு, பொருளாதார ஏற்றத்தாழ்வு இருந்தது. சமூக மாற்றத்திற்காகக் குரல் கொடுத்தவர் பாரதி. அவர் கொடுத்த குரல் அவரின் நியாயமான சீற்றம் சமூகத்தில் பலருக்கும் முன்னேற்றத்தைக் கொடுத்தது. பாரதியின் சீற்றம் அறச் சீற்றமாகவே இருந்தது. இன்றைய நிலையில் பெண்கள் பல துறைகளிலும் கால் வைத்து முன்னேறியிருக்கிறார்கள் என்றால் அதற்கு வித்திட்டவன் பாரதி என்பது இக் கட்டுரை வழியாகப் புலப்படுகிறது.

3. பாரதி பாடல்களில் காந்தியின் மேன்மைகள்



முதுமுனைவர் ரெ. சந்திரமோகன்

மேனாள் முதல்வர், ஸ்ரீசேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை.
முதல்வர், நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி, கோவிலூர்.
துணைவேந்தர், உலகத்தமிழால் இணைவோம் இணையப் பல்கலைக்கழகம்

முன்னுரை

தமிழகம், தமிழுக்கு உயர்வளிக்கும் தலைவனை எண்ணித் தவம் கிடந்தது. அப்போது வந்துதித்தான் பாரதி என்ற செந்தமிழ்த் தேனீ, சிந்துக்குத் தந்தை, குவிக்கும் கவிதைக் குயில், நீடு துயில் நீக்கப் பாடிவந்த நிலா, காடு கமழும் கற்பூரச் சொற்கோ என்பார் பாரதிதாசன். பாரதியால் தமிழ் தகுதி பெற்றது, தமிழால் பாரதி தகுதி பெற்றான் என்றார் கண்ணதாசன். பாரதி மறைந்து நுற்றாண்டுகள் கடந்தாலும் தினமணிப் பத்திரிகை பாரதியின் மறைவுக்குப் பின் பதிமூன்று நாட்களில் துவங்கப்பெற்ற போது அதன் தலையங்கத்தில் "சுதந்திரச் சூரியனைக் காண விரும்பிய தெய்வீகப் பித்தரான சுப்பிரமணிய பாரதியாரின் வருடாந்திர தினத்தன்று அவருடைய சுதந்திரத் தாகத்தையும், சமத்துவக் கொள்கைகளையும் தமிழ்நாட்டில் பரப்பும் நோக்கத்துடனேயே "தினமணி" நாளிதழ் துவங்கப்பட்டதாக ஆசிரியர் வைத்தியநாதன் குறிப்பிடுகிறார். பாரதி, சகோதரி நிவேதிதாவைச் சந்தித்ததிலிருந்து பெண் விடுதலையின் தேவையை உணர்ந்து தனது குருவாக நினைத்துப் புரட்சிகரமான பாடல்களைத் தந்தார். தனது தீவிர சிந்தனைகளில் வீரம் வெளிப்பட்டு சாதி ஒழித்திடல், தமிழ் வளர்த்தல், நல்ல பாட்டுணர்ச்சி பரப்பல், அறம் வளர்த்தல் போன்ற விளைநிலங்களைக் கண்டுணர்ந்தார். சியுமீன் என்ற சீனத்துப் புலமைத் திருமகளின் பாட்டினைத் தமிழில் மொழி பெயர்த்தார். புதிய சிந்தனைகளைத் தமிழ் மண்ணில் விதைத்தார்.

ஆனால் காந்தியைத் தமிழக மக்களுக்குப் பலர் அறிமுகம் செய்திருந்தாலும், பாரதியார்தான், அவர் காட்டும் வழிதான் நல்வழி என்று அதிகமாய்ச் சுட்டிக் காட்டினார் என்பார் நம் அவ்வை நடராசன். காந்தியைப் பற்றிய பாரதியின் பாடல்களை நாம் அவசியம் ஆராய்தல் வேண்டும். காந்தி என்ற ஒரு தனிமனிதனின் பேராற்றல் எவ்வாறு உணர்ச்சிக் கனலான பாரதியை வசீகரித்தது என்பது அவரது பாடல்களின் மூலம் தேடுவது என்பது காந்தியின் தலைமைப் பண்பைப் பற்றியும் அவரது உளவியல் பாங்கையும், அதன் தனித்தன்மையையும் விளங்கும் வாய்ப்பாய் அமையும். உலகில் பிறந்த தலைவர்களில் முதல் நிலையில் இடம் பிடிக்கும் காந்தியின் தோற்றம் எவ்வாறு மலையினும் மாணப்பெரிது என்பதையும் படம் பிடிக்கும் வாய்ப்பாக அமையும்.

காந்தியின் நெறி

காந்தி அரிச்சந்திர மாகதை, சரவணன் கதைகளால் ஈர்க்கப்பட்டிருந்தார் என்பதை அவரது இளமைக்கால வரலாறு கூறுகிறது. அவர் சராசரி ஆத்மாவாய் இருந்து குழந்தைப் பருவத்தில் புதிது புதிதாய் தவறுகள் செய்து தன்னைத்தானே திருத்திக் கொண்டவர். தாய் தந்தையின் மன்னிப்பு அவரது மாற்றத்திற்குப் பெரிதும் உதவியது. ஆனால் உலகம் முழுதும் கண்ணுக்குக் கண், அதர்மத்திற்கு அதர்மம், துப்பாக்கிக்குத் துப்பாக்கி என்ற நிலையில் தலைவர்கள் உருவாகினர். பிரஞ்சுப் புரட்சி, ருஷ்யப் புரட்சி என்பவை கோலோட்சி மறுமலர்ச்சிக்கு வித்திட்ட காலம். காந்தியின் பாதை மாற்றத்தினை சிந்தனையில் விதைத்தது. அநியாயத்தை அநியாயத்தின் மூலம் எதிர்ப்பது முறையில்லை. அதர்மத்தைத் தர்மத்தால் ஒழிப்போம் என்ற அறச்சிந்தனையைக் காந்தி கையிலெடுத்துப் புதிய பாதை வகுத்தார். பாரதி அதனை ஆய்ந்து காந்திய வழியில்

சென்றால் பாரதம் உய்வு பெறும் என்று நம்பினார். "வாழ்க நீ எம்மான்!" என்று புகழ்ந்தார். பாரதியின் கவிதைகள் நாட்டுப்பற்றைத் தூண்டுவது மட்டும் இல்லை அந்தப் பற்றை அறிவுப்பூர்வமாக வெளியிடுமாறும் பாடல் யாத்தார்.

"வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழ்
வாழிய பாரத மணித்திரு நாடு,
வந்தே மாதரம்"

என்று மொழிப்பற்று, மொழியின் மேன்மை, ஒருமித்த பாரதம் என்று பாரதத்தின் பன்னோக்குப் பார்வையைச் சிறப்பிக்கும் விதமாக அமைந்திருக்கும். அடிப்படை மாற்றம் என்ற எண்ணத்தை மாற்றிச் சிறிது சிறிதான மாற்றம், பின்னர் அறிவு விசாலமாகித் தீர்வு தரும் என்ற காந்தியின் சத்தியம் நோக்கிய பயணம், அகிம்சையின் பாதையில் அமைய வேண்டும் என்பதைத் திருக்குறள் போல் பாரதி ஒரு சிறுகதை வடிவில் எழுதியது விளக்கும். நெல்லை விரைவு ரயில் காலதாமதமாகப் புறப்பட்டு வந்ததைச் சரிசெய்ய ஆட்களை மாற்ற, அவர்கள் ஆட்களை ஏற்றாமலே ரயிலைக் கிளப்பி எங்கும் நிற்காமல் குறித்த நேரத்திற்கு முன்பே சென்னைக்கு வந்ததாம். இன்றைய அரசியல் சூழல் அவ்வாறுதான். கோடிக்கணக்கான பணம் செலவு ஆயினும் மக்களுக்குப் பலன் இல்லை. பாரதி காந்தியை நேரடியாகச் சந்திக்காமல் இருந்த போதே தென்னாப்பிரிக்காவில் காந்தியின் போராட்டங்களைப் பற்றிச் சிறப்பாக எழுதியுள்ளார். காந்தியின் சத்தியாகிரகம், அகிம்சை வழிகள் பாரதியாரைத் தீவிரவாதி நிலையிலிருந்து மாற்றியது எனவும் கருதலாம். பாரதியும் காந்தியும் என்ற மணிகண்டன் என்பவர் எழுதிய நூல் பல முக்கியச் செய்திகளைத் தருகிறது. அவர் பாரதி கவிதைகளில், பாரதி கட்டுரைகளில் காந்தி என்ற இரு பிரிவுகளிலும், பின்னர் காந்தி - பாரதி சந்திப்பு என்ற நிலையில் மூன்றாம் பிரிவையும் தந்துள்ளார். 1908 முதல் பாரதி காந்தியைப் பற்றி எழுதியுள்ளார்.

பாரதியின் சுதேச கீதங்கள் தொகுப்புக்குப் பர்மா அரசு தடை விதித்ததைக் காந்தி கண்டித்துள்ளார். சமீபத்தில் மணிகண்டன் அவர்கள் 1921-ல் சுதேச மித்திரனில் "ஒரு கோடி ரூபாய்" எனும் தலைப்பில் கட்டுரை எழுதியது காந்தியின் விடுதலை முயற்சிக்கு வழங்கக் கேட்ட தொகை தான் என்று மகாத்மாவின் இயக்கத்தில் மகாகவி என்ற கட்டுரையில் தினமணியில் எழுதியுள்ளார். திலகரின் சீடர் பாரதி, காந்தியின் சீடராக மெல்ல மெல்ல மாறியதற்குக் காரணம், காந்தியின் செயல்பாடுகள் அவருக்கு விடுதலை நம்பிக்கையை விதைத்ததனால் தான் என்று கருத இடமிருக்கின்றது. தனது சொற்பொழிவில் திருவண்ணாமலையில் பாரதி இவ்வாறு பேசினாராம். "இராஜீய குணத்தில் இனி ஒப்புமை இல்லை என்று சொல்லும்படியான மகாத்மா காந்தி இந்தியாவில் உற்பத்தியாகி இருக்கிறார்".

பாரதியின் இறுதிக்காலம்

தனது இறுதிக்காலத்தில் பாரதி காந்தியாரின் இயக்கத்தில் நேரடிப் பங்கேற்பு என்பது அவரது தீவிரவாதத் தன்மையிலிருந்து காந்தியால் ஆட்கொள்ளப்பட்ட புதிய பரிமாணம் எனக் கருத இடமுள்ளது. காந்தியைப் பாராட்டும் கவிதைகளில் காந்தி பஞ்சகம் என்ற ஐந்து பாடல்களில் இடம்பெற்றது தான் "வாழ்க நீ எம்மான்" என்ற பாடல்.

"வாழ்க நீ எம்மான் இந்த வையத்து நாட்டிலெல்லாம்.."
"இன்ன மெய்ஞ்ஞானத் துணிவினை மற்றாங்கு.."

என்று புகழ்ந்து உணர்ந்து பாடுகிறார்.

காந்தியும் பாரதியை நேசித்தார்

1919-ல் நேரில் காந்தியும் பாரதியும் சந்திக்கும் முன்பே இருவரும் ஒருவரை ஒருவர் அறிந்துள்ளனர். பாரதியின் முயற்சிகளைத் தென் ஆப்பிரிக்காவில் இருக்கும்

போதே காந்தி அறிந்துள்ளார். பாரதியின் மறைவுக்குப் பின் காந்தி "யங் இந்தியாவில்" பாரதியின் கவிதைகளை, புகைப்படத்தைப் பிரசுரித்துள்ளார். நவஜீவன் இதழ்களில் பாரதியைப் பற்றி எழுதியுள்ளார். புதிய புதிய தரவுகள் இன்றும் காந்தி - பாரதி உறவினைப் பற்றி வந்து கொண்டே உள்ளது. பாரதி காந்தியின் மீது கொண்ட நம்பிக்கையின் வெளிப்பாடுதான் அவரது,

"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே!"
"ஜெய பேரிகை கொட்டடா...!"
"பாருக்குள்ளே நல்ல நாடு"
"வெள்ளிப்பனி மலையில் மீதுலவுவோம்!"

என்ற பாடல்களுக்கு அச்சாணி என்று தெரிகிறது.

பாரதி கைப்பட காந்தியின் பெயரை எழுதி வாழ்த்தியது போல காந்தியும், "பாரதி ஞாபகார்த்தப் பிரயதனங்களுக்கு என் ஆசீர்வாதம்" என்று எழுதி மோ.க.காந்தி என்று கையெழுத்துடன் வாழ்த்தியுள்ளார். பாரதியின் பாடல் பறிமுதல் - காந்தியின் கண்டனம் என்ற தலைப்பில் 19.12.28 நவசக்தி இதழில் பிரசுரமாகியுள்ளது. "பாரதியைப் பாதுகாக்க வேண்டும்" என்று ராஜாஜியிடம் காந்தி சொன்னதாகச் செய்தி உண்டு. பாரதி காந்தி சந்தித்த இடம், ஆண்டு பற்றிய ஆய்வு இன்றும் நீடிக்கின்றது.

முடிவுரை

பாரதி சுதந்திரப் பயிர் என்ற கவிதையில்,

"நெஞ்சத்தே பொய்யின்றி
நேர்ந்ததெல்லாம் நீ தருவாய்" என்று பாடுகிறார்.

சுதந்திர தாகம் என்ற கவிதையில்,

"என்று தணியும் இந்த சுதந்திர தாகம்"

என்று பாடி அன்றொரு பாரதம் ஆக்கவந்தோனே என்று காந்தியைக் கூறுவதை காணமுடிகிறது.

"தண்ணீர் விட்டா வளர்த்தோம் சர்வேசா இப்பயிரைக்
கண்ணீரால் காத்தோம்"

என்ற பாடலிலே ஓராயிரம் வருடம் ஓய்ந்து கிடந்தபின் வாராது போல வந்த மாமணியே தோற்போமா என்பதும்,

"எந்தாய் நீ தந்த இயற்பொருளையெலாமிழந்து
நொந்தார்க்கு நீயின்றி நோவதிப்பார் யாருளரோ"

என்ற வரிகளெல்லாம் காந்தியின் மேல் வைத்த நம்பிக்கைதான் காரணம் என்றால் மிகையாகாது. அதனால்தான் பாரதி காந்தியை "முடிவில்லாத கீர்த்தி பெற்றாய் புவிக்குள்ளே முதன்மை பெற்றாய்" என்று பாடுகிறார். பாரதியை ஈர்த்த அகிம்சையும் சத்தியாகிரகமும் தான் இதுவரை வாழ்ந்த தலைவர்கள் வரிசையில் முதன்மையான தலைவராகக் காந்தியை உலகம் கருதுகிறது என்றால் மிகையாகாது.

பார்வை நூல்கள்

1. பாரதியார் கவிதைகள்
2. பாரதியார் நூற்றாண்டு விழாமலர் - தினமணி
3. பாரதியும் காந்தியும் - புதுப்புது தரவுகள்
4. மணிகண்டன், பாரதியும் காந்தியும் தொகுப்பும் பகுப்பும்

4. பாரதியும் இளவேனிலும்



முதுமுனைவர் ரெ. சந்திரமோகன்
முதல்வர், நாச்சியப்ப சுவாமிகள் கலை அறிவியல் கல்லூரி, கோவிலூர்,
உலகத் தமிழால் இணைவோம் இணையப் பல்கலைக்கழகத் துணைவேந்தர்.
மேனாள் முதல்வர், ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி, தேவகோட்டை.

முன்னுரை

பாரதி என்ற மானுடன் ஒரு யதார்த்த சாமானியன் என்று காட்டிக் கொள்கிறான். பாரதி தனது படைப்புகளில் சாமானிய மானுடன் என்பதைவிட அவன் ஒரு யுகக்கவி என்பதையே உலகம் விரும்புகிறது. சங்கநூல்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, தேவாரம், திருவாசகம் புலவர்களைக் கூட ஈர்த்திருக்கின்றது என்பதை இளவேனில் பற்றிய பாடல்கள் அடையாளம் காட்டுகின்றன. சங்க காலம் மட்டுமின்றி தொன்றுதொட்டு இயற்கையை நோக்குவதில் தமிழ்ப் படைப்பாளர்கள் சிறந்தவர்களாக உள்ளனர். அவர்கள் இலக்கிய ஆளுமையால் இயற்கை புதுப்பொலிவு பெறுகின்றது. ஐங்குறுநூற்றில் இளவேனில் பற்றிக் குறிப்பிடும்போது "இளவேனில் காலம் வந்துவிட்டது, அவர் வருவாரா?" என்று ஏங்கும் பெண்ணைப் பற்றிய உளவியலைப் படம் பிடித்துக் காட்டுகின்றது. சங்க இலக்கியங்கள் குறிப்பாக பத்துப்பாட்டில் ஒன்றான நெடுநல்வாடை, கலித்தொகை, குறுந்தொகை போன்ற இலக்கியங்கள் இன்றைய திரைத்துறை வரை ஈர்த்துள்ளது. அப்பர் பாடுவதில், "மாசில் வீணையும் மாலை மதியமும், வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்" என்பதில் செங்கல் சூளை கூட பொய்கையாய் இளவேனில் காலம் போல் இனிமையாக உள்ளது. எனவே காதல் நினைவுகள் தரும் இளவேனில் பாரதியாரை என்ன செய்துள்ளது என்று தேட ஆசை வந்தது. அது உன் கண்ணில் நீர் வடிந்தால் என் நெஞ்சில் உதிரம் கொட்டுதடி,.... என்றும் வார்த்தை தவறிவிட்டாய் கண்ணம்மா, தீர்த்தக்கரையினிலே தெற்கு மூலையில் செண்பகத் தோட்டத்திலே...... என்று பாடிய பாரதி கூறும் இளவேனில் பற்றிய செய்தியை அவர் படைப்பின் வழி இக்கட்டுரை விளக்குகிறது.

அதிகம் இல்லை

பாரதியார் இளவேனில் காலத்தைப் பற்றி அதிகமாக எழுதவில்லை. அவரது பாடல்களில் "டென்னிசனின் இசை, பைரனின் ஆவேசம், கீட்ஸின் எளிமை இருந்தது" என்பர். ஆனால் நேரடியாக இளவேனில் குறிப்புகளைச் சொல்லாமல் வசந்த காலத்தின் மகிழ்ச்சி வெள்ளம், புத்துணர்ச்சி ஊட்டும் குறிப்புகள் கொண்ட பாடல்களைத் தந்துள்ளார் என்று அறிஞர்கள் கருதுகிறார்கள்.

இயற்கைப்பாடல்கள்

இயற்கையின் அழகைப் பாடும் நேரத்தில் பாரதி பல்லாற்றானும் காலத்தைக் காட்டுகிறான். சித்திரை மாதத்தில் இளவேனில் துவங்குகின்றது. தென்கிழக்குச் சீமைகளில் சித்திரை மாதம் வருடப்பிறப்பினைக் கொண்டாடுகிறார்கள். தமிழ்நாட்டில் இந்திரவிழா, வசந்தவிழா கொண்டாடும் காலம் இதுவாகும். அவர்கள் சமைக்கும் சமையலில் மாங்காய்ப்பச்சடி, வேப்பம்பூ பச்சடி, ரசம் வைப்பர். அக்காலத்தில் வேப்பம்பூ பூத்திருக்கும். மாங்காயை இலை மூடியிருக்கும் நிலையினைக் காணமுடிகிறது.பாரதி இன்று புதிதாய்ப் பிறந்தோம் என்ற நம்பிக்கை தரும் காலமாக அவ்வசந்தகால முன்அறிவிப்பினை இளவேனில் செய்கிறது என்றும், செழிப்பின் வரவேற்பாக அமையும் காலம் என்பதை,

"சென்றதினி மீளாது மூடரே!"

என்ற பாரதியின் கவிதை வரிகள் சுட்டும். இதனைப் போன்று வள்ளுவரும்,

"நெருநல் உளன் ஒருவன் இன்றில்லை எனும்
பெருமை உடைத்து இவ்வுலகு".

என்கிறார். நிலையாமை என்ற கருத்தினை நாம் நிகழ்காலத்தில் எடுத்துக் கொள்ளும் போது பழையன கழிதலும், புதியன புகுதலும் செய்து நம்பிக்கை பெறல் வேண்டும்.

வருங்காலத்தை நினைத்து நிகழ்காலத்தைத் தொலைக்கும் செய்தியை எடுத்துக் கொள்ளாதீர் என்று நிலையாமையை எவ்வாறு கைக்கொள்ள வேண்டும் என்ற உத்தியை மானுடத்திற்கான செய்தியாகப் பாடுகிறான் என்பதை உணர முடிகிறது.

பாரதியும் அறிவியலும்

நவீன யுகக் கவியான பாரதி பல நுட்பமான அறிவியல் செய்திகளையும் அதன் அவசியத்தை,

"சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்"

என்று கவிதையில் பாடினான். அந்நிலையில் ஜகதீச சந்திரபோஸ் செடி கொடிகளுக்கும் உயிர் உண்டு என்பதைச் செய்முறைப் பயிற்சி வாயிலாக நிரூபித்தார். இந்நிகழ்வைப் பாரதி "உயிரின் ஒலி" என்ற கட்டுரையில் எழுதினார்.

"செடியின் நாடியுணர்ச்சிக்கும் மனித ஜாதி"

என்று எழுதுகிறார். இளவேனில் காலத்தில் உயிர் பொருள்கள் அனைத்தும் சேதி தெரிவிக்கின்றன. "அது மகிழ்வான தருணம் மிக அருகில்", "அவன் வருவானா! என்ற கலக்கமும், நிச்சயம் வந்தால் என்ன நடக்கும்" என்ற நம்பிக்கையை, கண்ணம்மா - என் காதலியில், **"தீர்த்தக் கரையினிலே- தெற்கு மூலையில் செண்பகத் தோட்டத்திலே.."** என்று பாரதி அவன் வருவானா என்று இளவேனில் நங்கை காத்திருப்பதைப் போல் அவள் வருவாளா என்று புதுமையாய் ஏங்குகின்றார்.

அந்திப்பொழுது, வேனிற்காலம் இப்படித்தான் இருக்கும். அதை பாரதி, **"தென்னை மரக்கிளை மீதில் - ஆங்கோர்"** என்று இயற்கை வர்ணனையாகக் காட்டுகிறார். மேலும்,

"காதலினாலுயிர் தோன்றும் - இங்கு"

என்பது பாரதியின் கவிதைகளில் இயற்கை வருணனைகளில் பச்சைப் பயிர், தளிர்கள், இளம் இலைகள் போன்ற சொற்களோடு பெண்ணின் மனதைக் கூறுவதாக உள்ளதை அறியமுடிகிறது. குயில்பாட்டில், **"கானப் பறவை கலகலெனும் ஓசையிலும்"** என்ற வரிகளின் மூலம் இயற்கையில் அத்தனை உயிர்களின் இசையையும் உணர்ந்திருக்கிறார் என்பது தெளிவாகிறது. "ஆற்று நீரோசையொலி" இளவேனில் சீராய் தெளிவான நீராய்ச் செல்லும். சிறுமணல் கூட தரையில் சென்று படியும், ஆனால் என் தலைவன் மட்டும் இளவேனில் வரவில்லையே என்று ஏங்கும் தலைவியாக மட்டும் இல்லாமல், வசந்தகாலத்தில் நீரின் ஒலி ஒரு நம்பிக்கை ஒலி. வசந்தகாலத்தை அறிவிக்கும் ஒலி என்று சுட்டுவதைக் காண முடிகிறது.

பொருந்தாக்காதல்

பாரதி பிள்ளைக்காதல் என்ற கவிதையில் இளம் பெண்ணைக் காதலிப்பதைப் பற்றியது. மேகத்தைக் காதலிக்கும் நிலவு, பனியைக் காதலிக்கும் மலர், வேப்பம்பழத்தின் பால், காட்சியைப் பார்க்க முடியாத விழி, பொய் சொல்லிவிட்ட நிலையினை பெருந்திணை காதலாகக் கூறுவதை, **"மொய்க்கும் மேகத்தின் வாடிய மாமதி"** என்று கூறுவதைக் காண முடிகிறது.

கவிதைக் காதலி என்ற கவிதையில்

கூதிர்காலத்தில் எப்படியிருந்தோம். இப்பொழுது இளவேனிலில் எப்போது தலைவன் வருவான் என்ற நிலையில், **"எண்ணிலா இன்பத்து இருங்கடல் திளைத்தோம்"** என்று பாடுவார்.

முடிவுரை

பாரதியும் இளவேனிலும் என்ற சிந்தனையைத் தேடும் போது சாதாரண மானுடனின் உளப்பாங்கைப் பாரதி பெற்றவனாய் இருந்த காலமது. இளவேனிற் காலம் அவனையும் பாதித்துள்ளது. ஆயினும் அவன் யுகக்கவியாய், புரட்சிக்கவியாய்ப் புறப்பட்டாலும் இன்பம் என்று இயற்கை தருகின்ற இளவேனில் வசந்தகாலங்கள் அவனுள் காதலைக் கிளறியுள்ளன.

"காதல் காதல் காதல்
காதல் போயின் சாதல் சாதல் சாதல்"

என்று பாட வைத்துள்ளன. தமிழ்க்காதலன், கவிதையின் காதலன், கண்ணம்மாவின் காதலன், செல்லம்மாவின் காதலன், புரட்சியின் காதலன், விடுதலைக் காதலன், யுகக்காதலனாய் மாறிய போதும் சங்ககால இளவேனிற் தடங்கள் இதமாய் எடுத்துப் பாரதி பாடியுள்ளான் என்பதைக் காணமுடிகிறது.

5. புதுச்சேரியில் - இந்தியாஇதழ் -ஒருபார்வை



கலைமாமணி முனைவர் ப.பத்மநாபன்

துணைஇயக்குநர்(பணிநிறைவு) செய்தித் துறை,புதுச்சேரி அரசு

மகாகவி பாரதி ஒரு கவிஞராக விடுதலைப் போராட்ட வீரராக விளங்கியதோடு மட்டுமல்லாது ஓர் இதழியலாளராகவும் விளங்கினார். விடுதலை வேட்கை விழிப்புணர்வுக்கு இதழ்கள்வழி வரும் கருத்துக்கள் உதவும் என நம்பினார். புதிய கருத்துக்களை இதழ்களின் வாயிலாகத் தமிழக மக்களுக்குத் தெரிவிக்க விரும்பினார். எனவே தமிழகத்தில் இதழ்களைத் தொடங்கும் முயற்சியில் மகாகவி ஈடுபட்டார். அவ்வாறு அவர் ஆசிரியராக இருந்து நடத்திய இதழ்களில் இந்தியா இதழ் முதன்மையான இதழாகும். இவ்விதழ் புதுச்சேரியிலிருந்து வெளிவந்த சூழல் குறித்தும் புதுச்சேரியிலிருந்து வெளிவந்த இதழில் இடம்பெற்ற செய்திகள் குறித்தும் இக்கட்டுரை ஆய்வுசெய்கிறது.

இந்தியா இதழின் தொடக்கம்

பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றியமையால் புகழ்பெற்ற இந்தியா இதழ் 1906 ஆம் ஆண்டு மே மாதம் ஒன்பதாம் நாளன்று சென்னையில் தொடங்கப்பட்டு வார இதழாக சனிக்கிழமை தோறும் வெளிவந்தது (முதல் இதழ் புதன்கிழமை தொடங்கப்பட்டு பின் சனிதோறும் வார இதழாக வெளிவந்தது). சென்னையில் அழகிய சிங்கர் என்பவர் நடத்திவந்த பிரதிவாதி என்னும் வைணவ வேதாந்த இதழில் எழுதிக்கொண்டிருந்த மண்டயம் திருமலாச்சாரியார் இந்தியா இதழைத் தொடங்கினார். அவர் இதழைப் பாரதியின் பொருட்டே தொடங்கியதாக பாரதியுடன் சுதேசமித்திரன் இதழில் துணையாசிரியராக இருந்தவரும், தேசியத்தலைவர்கள் பலருடைய வரலாற்றை எழுதியவருமான எம்.எஸ்.சுப்பிரமணிய ஐயர் எழுதி 1955-ல் வெளிவந்த 'சுப்பிரமணிய பாரதியார்'" என்ற நூலில் குறிப்பிடுகிறார். இதழின் உரிமையாளரான திருமலாச்சாரியார் பதிப்பாசிரியராகவும் பணியாற்றினார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த துளசிங்கப் பெருமாள் , எம்.பி.திருமலாச்சாரியார் ஆகியோர் இதழ் தொடங்கிய நாட்களில் இதழின் பணிகளில் திருமலாச்சாரியாருக்கு உதவினர்.பாரதியார் 1906 ஆம்ஆண்டு மே மாதம் எட்டாம் நாள் இந்தியா இதழின் ஆசிரியரானார். இதழின் முதற்பக்கத்திலேயே எள்ளல் படம்(கேலிச் சித்திரம்- cartoon) வெளிவந்தது. தென்னிந்தியாவில் எள்ளல் படத்தை முதலில் வெளியிட்ட இதழ் என்ற பெருமையை இந்தியாவே பெற்றது.

பாரதியார் புதுச்சேரிக்கு வந்த சூழல்

பாரதியார் 'இந்தியா' இதழில் வாரந்தோறும் நாட்டு நடப்பைக் காட்டும் படங்கள், பாடல்கள், கட்டுரைகள், கருத்துப் படங்கள் (cartoons), தலையங்கங்கள் (editorial) முதலானவற்றை வெளியிட்டார்; அவற்றின் வாயிலாக மக்களுக்கு விழிப்புணர்வை ஊட்டினார். சுருங்கக் கூறின், பாரதியார் 'இந்தியா' இதழையே விடுதலைப் போரட்டத்திற்கான போர்வாளாகக் கொண்டு ஆங்கிலேய அரசுடன் மோதினார். இதன் விளைவாக, 'இந்தியா'வை அடக்கி ஒடுக்கும் நோக்கோடு ஆங்கிலேய அரசு கொடியதோர் அச்சுச் சட்டத்தை (Press Act) 1908 ஆம் ஆண்டில் பிறப்பித்தது; 'இந்தியா' இதழை வெளியிடுவதற்குக் காரணமானவர்களைக் கைது செய்யும்படி ஆணையிட்டது. எனவே, இந்தச் சூழ்நிலையில் எந்த நேரமும் பாரதியார் கைதுசெய்யப்படலாம் என்பதை அவரது நெருங்கிய நண்பர்கள் உணர்ந்தனர்; சென்னையில் இருந்து 'பிடிவாரண்'டில் அகப்பட்டுக் கொள்வதை விடப் புதுச்சேரி சென்று அங்கிருந்து கொண்டே நாட்டுக்குத் தொண்டு புரியலாம் என்று அவர்கள் பாரதியாரிடம் வற்புறுத்திக் கூறி அவரைப் புதுச்சேரி செல்லத் தூண்டினர்.அதுவரை சென்னையில் நடைபெற்ற இந்தியா இதழ் 1908 ஆண்டு செப்படம்பர்

மாதம் ஐந்தாம் நாளோடு நிறுத்தப்பட்டது. அதன் பின்னர் 1908 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பாரதியார் தொடர் வண்டியில் புதுவை வந்தடைந்தார்.

இந்தியா-புதுச்சேரிக்கு மாற்றம்

செப்டம்பர் 1906-ல் பாரதியார் இந்தியா இதழில் பணியாற்ற வந்தார். பாரதி இந்தியா இதழின் பொறுப்பை ஏற்றதும் இதழில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. குறிப்பாக அதன் தலையங்கம் எழுதுவதில் தனி நடை உருவாகியது. இதனை இந்தியாவின் பிற்கால இதழ்களான அமிர்தகுண போதினி (நவம்பர் 1928), விவேகபாநு, ரங்கூன் சுதேச பரிபாலினி, இந்து சாதனம், சுதேசமித்திரன் போன்ற இதழ்கள் பாராட்டியதன் மூலம் நாம் அறிய முடிகிறது. இந்தியா இதழில் இந்திய சுதந்திரம் பற்றிய சிந்தனைகளும், ஆங்கிலேய அரசுக்கு எதிரான கட்டுரைகளும் செய்திகளும் வெளிவந்தன.. இதனால் இந்தியா இதழின் உரிமையாளராக இருந்த மண்டையம் திருமலாச்சாரியாருக்கும், ஆசிரியராகப் பதிவு செய்யப்பட்டிருந்த எம்.சீனிவாச அய்யங்காருக்கும் அரசாங்கம் கைது ஆணை(வாரண்ட்) பிறப்பித்தது. அரசின் நடவடிக்கையால் இந்தியா இதழ் 1908-ம் ஆண்டு செப்டம்பர் இறுதி வாரத்தில் இருந்து சென்னையில் வெளிவருவதை நிறுத்திக்கொண்டது.

பாரதியாரும், இதழ் உரிமையாளர் மண்டயம் திருமலாச்சாரியரும் புதுச்சேரி வந்தடைந்தனர். புதுச்சேரியில் பிரெஞ்சிந்தியாவில் பிறந்த ஒருவரே அச்சகம் நிறுவ முடியும் என்பதால் திருமலாச்சாரியாரின் நண்பரான வில்லியனூர் எஸ். லட்சுமி நாராயண ஐயர் பெயரில் அச்சகம் நிறுவப்பட்டது.. அச்சகம் அம்பலத்தாடையர் தெருவில் உள்ள 71-ம் எண் கட்டிடத்தில் நிறுவப்பட்டது. 1908 அக்தோபர் பத்தாம்நாள் முதல் இந்தியா(பாண்டிச்சேரி) இன்றைய புதுச்சேரியிலிருந்து வெளிவரத் தொடங்கியது. மண்டயம் சீனிவாசாச்சாரியார் இந்தியா இதழைப் பொறுப்பேற்று நடத்தினார்.சரஸ்வதி அச்சகம் என்ற பெயரில் இந்தியா இதழுக்கு ஓர் அச்சகம் அமைக்கப்பட்டது. புதுச்சேரியில் தொடங்கப்பட்ட இந்தியா இதழ் முகப்பில் 'ஸ்வதந்திரம், ஸமத்துவம், ஸகோதரத்துவம்' என்ற வசனத்தைத் தாங்கி வெளிவந்தது.புதுச்சேரியில் இருந்து வெளிவந்த இந்தியா இதழ் பிரிட்டிஷ் இந்தியாவிற்குள் வர பிரிட்டிஷ் அரசாங்கம் தடை விதித்தது. இந்தியா (பாண்டிசேரி) என்று வெளிவந்த இதழ் பலவிதப் பொருளியல், அரசியல் நெருக்கடிகள் காரணமாக மார்ச் 12, 1910 அன்று வெளிவருவது நின்றது.

சென்னையில் அலுவலத்தில் சோதனை-வழக்கு

சென்னையில் இருந்து வெளிவந்த இந்தியா இதழில் பிப்ரவரி 29, 1908 முதல் ஜூன் 27, 1908 வரை வெளிவந்த இருபது கட்டுரைகள் அரசுக்கு எதிரான குற்றத்திற்குரியவை எனத் தொகுக்கப்பட்டன. அதிலிருந்து மகாபாரதக்கதைகள், எத்தனையோ கொள்ளைகளில் இதுவும் ஒரு கொள்ளை, ஏன் காலத்தை வீணாக்க வேண்டும் என்னும் மூன்று கட்டுரைகளை எடுத்து அவற்றை வெளியிட்டதற்காக இதழாசிரியர்கள் மீது வழக்கு தொடரப்பட்டது. ஆகஸ்ட் 21, 1908 அன்றும் அதற்கு மறுநாளும் 'இந்தியா' இதழ் அலுவலகம் சோதனையிடப்பட்டது. வழக்கு முடிந்து தீர்ப்பான போது ஆசிரியராகப் பதிவு செய்யப்பட்டிருந்த எம். சீனிவாச அய்யங்காருக்கு ஐந்து வருட சிறைத் தண்டனை கிடைத்தது

இதழ் தலைப்பு விவரங்கள்

இதழ் தலைப்பின் கீழ் ஸ்வதந்திரம், ஸமத்துவம், ஸகோதரத்துவம் என்ற வசனம் இடம்பெற்றது. இது பிரெஞ்ச் புரட்சியின் கொள்கை முழக்கம்ஆகும்., (Liberty, Equality, Fraternity). வசனத்திற்கு இடமும் வலமும் பதிவு எண்ணும் கீழே இதழின் எண்ணும் 'சனிக்கிழமை தோறும் வெளியாகும்' என்றும் இருக்கும்.

சித்திரம் (கருத்துப்படம்) கேலிச்சித்திரம்

இந்தியா இதழில் செய்திகள், கட்டுரைகள், தலையங்கம் போக வாரந்தோறும் முதல் பக்கத்தில் அரசியல் எள்ளல்படம் (கேலிச்சித்திரம்-Cartoon) ஒன்று வெளியிடப்பட்டது. கேலிச் சித்திரங்களை அரசியல் பிரசாரத்திற்குப் பயன்படுத்திய முதல் இதழ் 'இந்தியா'ஆகும். இதழ்த் தலைப்பின் கீழே கேலிச் சித்திரம் ஒன்றும் அதனை விளக்கும் சித்திரவிளக்கம் ஒன்றும் இடம்பெற்றிருக்கும். சித்திரம் விளக்கம் (கேலிச்சித்திரத்தின் அரசியல் பின்னணி) இரண்டாம் பக்கத்தின் முதல் பத்தியில் இடம்பெற்றிருக்கும். இந்தியா இதழில் வெளிவந்த

கேலிச் சித்திரங்களைத் தொகுத்து ஆ.இரா. வேங்கடா சலபதி பாரதியின் கருத்துப்படங்கள் என்னும் நூலை வெளியிட்டுள்ளார்.

தலையங்கம்

இந்தியா இதழின் மூன்றாவது பக்கத்தில் தான் தலையங்கம் தொடங்கும். "இந்தியா சௌமிய புரட்டாசி 31 உ" என்ற வாசகத்தின் கீழ்த் தலையங்கம் இடம்பெறும்.

கவிதைகள்

இந்தியா இதழில் இரண்டு வகையான கவிதைகள் இடம்பெறும். வாழ்த்துக் கவிதை (ஆசிரியப்பாவில் அமைந்தது)ஏசல் கவிதை (கும்மிப்பாட்டு வகையில் அமைந்தது). பாரதியாரின் புகழ்பெற்ற தமிழ் வாழ்த்துக் கவிதையான- வாழிய- செந்தமிழ் இந்தியா இதழில்தான் வெளிவந்தது. இந்தியா இதழின் இரண்டாம் வருடத் தொடக்கத்தை ஒட்டி 'புதுவருஷம் என்ற தலைப்பில் எழுதப்பட்டது. ஏசல் கவிதைக்கு உதாரணமாக சென்னை உயர்நீதிமன்றத்தின் நீதிபதியாக வி.கிருஷ்ணசாமி ஐயர் நியமனம் பெற்ற போது அவரைக் கிண்டல் செய்ய எழுதிய கவிதையைச் சொல்லலாம். கவிதையின் கீழே 'சேலம் 12-10-06 ஒரு மிதவாதி' என்ற குறிப்புடன் வெளியிடப்பட்டது.

உரையாடல்

இந்தியா இதழில் உரையாடல் உத்தி முறையில் சில செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. -பிரிட்டிஷும் பிரான்ஸும்- பகுதியில் இருப்பது இவ்வகைச் செய்திகளுக்கு சிறந்த எடுத்துக்காட்டுகள் ஆகும்.

கடிதம் (நிருபம்)

கடிதப்பகுதி அரசியல் கட்டுரைகளின் கடித வடிவமாக இருக்கும். (எ.கா: 'இந்துக்களின் வீரம் ஒரு நிருபம்' என்னும் தலைப்பில் தொடராகக் கடிதங்கள் வெளிவந்தன) குறிப்பாக அதன் ஆசிரியராக இருந்த பாரதியார் தன் அரசியல் கருத்துகளை வெளியிட இந்தியா இதழை ஊடகமாகப் பயன்படுத்தினார். இந்தியா இதழை சென்னையில் நடத்த ஆளுநர் தடைவிதித்த போது அவ்விதழ் மீண்டும் புதுச்சேரியில் வெளிவரத் தொடங்கியது. இதன் காரணமாக சென்னை ஆளுநர் புதுச்சேரி ஆளுநருக்கு இதழைத் தடை செய்யும்படி 1908-ம் ஆண்டு நவம்பர், டிசம்பர் மாதங்களில் தொடர்ந்து கடிதங்கள் எழுதினார். அப்போதைக்குப் பிரெஞ்சு ஆளுநர் தன் கடிதத்தில் தங்கள் நாட்டு அச்சுத்துறை உரிமையை இந்தியா இதழ் மீறாததால் அதனை தடைசெய்ய இயலாது என பதில் எழுதினார். இதனை ஜனவரி 2, 1909 அன்று வெளிவந்த இந்தியா இதழில் காட்சிப்படமும், இரு ஆளுநர்களின் உரையாடலை விவரிக்கும் 'ஓர் சம்பாஷணை' என்ற கட்டுரையும் வெளிவந்தது. ஆனால் தொடர்ந்து சென்னை ஆளுநர் கொடுத்த நெருக்கடியால் புதுச்சேரியிலும் பிரெஞ்சு ஆளுநர் புதுச்சேரியிலிருந்து இந்தியா இதழ் வெளிவருவதை விரும்பவில்லை. அதன் காரணமாகப் பாரதியாரைப் பிரெஞ்சு அரசு வேவு பார்க்கத் தொடங்கியது.

கட்டுரைகள்

இந்தியா இதழ் அரசியல் தொடர்பான செய்திகளுக்கு முன்னுரிமை தந்த இதழ் என்பதால் அரசியல் கட்டுரைகள் பல இந்தியா இதழில் வெளிவந்தன.

இந்தியா இதழின் முடிவு-விவாதங்கள்

இந்தியா இதழ் நின்ற காலம் குறித்து பலவித கருத்துகள் உள்ளன. மார்ச் 12, 1910 அன்று இதழ் நின்றதாக அறியப்பட்டாலும் அதன்பின்னும் ரகசியமாக செப்டம்பர் 1910 வரை வெளிவந்ததாக பா. இறையரசன் (1995) குறிப்பிடுகிறார். இதுவரை கிடைத்துள்ள 'இந்தியா'வின் கடைசி இதழ் மார்ச் 12, 1910 தான் என்பதால் பெ.தூரன், ரா.அ. பத்மநாபன், பிரேமாநந்த குமார், எஸ். இராமகிருஷ்ணன் ஆகியோர் கருதுகின்றனர். ஆனால் ஆங்கில அரசின் ரகசிய ஆவணங்கள் ஓரிரண்டு இதழ்கள் வெளி வந்ததாகத் தெரிவிக்கின்றன.1910-ம் ஆண்டு மார்ச், ஏப்ரல் மாதங்களில் மூன்று முறை பாண்டிசேரி இந்தியா இதழுக்கு ஜாமின் வழங்க எஸ். லட்சுமி நாராயண ஐயர் சென்னை ஆளுநருக்கு கடிதம் எழுதினார். ஏப்ரல் மாத இறுதியில் தடைசெய்ததை மாற்றியமைக்க முடியாது என்ற கடிதம் சென்னை ஆளுநரிடமிருந்து பதிலாக வந்தது. அக்கடிதத்திற்கு பின் லட்சுமி

நாராயண ஐயர் இதழின் எந்த பகுதிகள் அரசாங்கத்திற்கு எதிராக இருக்கிறது எனக் கேட்டு நீண்ட கடிதம் எழுதினார். அதற்கு பதில் வராததால் ஏப்ரல் கடைசியோடு இதழ் நின்றுவிட்டது என மே 17, 1910 அன்று எழுதிய ஆங்கில அரசின் ரகசிய குறிப்புகள் மூலம் அறியமுடிகிறது.

வரலாற்று இடம்

தென்னிந்தியாவில் விடுதலை இயக்கம் தீவிரமாக 'இந்தியா' இதழ் இன்றியமையாத காரணியாக உருவானது. சுதந்திர வேட்கையையும், ஆங்கில அரசுக்கு எதிரான எதிர்ப்பையும் தீவிரமாக கொண்டு வந்த முதல் தென்னிந்திய இதழ் 'இந்தியா' என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

நிறைவாக

இந்தியா இதழ் பிரெஞ்சியர் ஆட்சியை உயர்வாகவே எடை போட்டது. அதனால்தான் இதழ் தலைப்பின் கீழ் ஸ்வத்ந்திரம், ஸமத்துவம், ஸகோதரத்துவம் என்ற வரிகள் இடம்பெற்றன. இது பிரெஞ்சு புரட்சியின் கொள்கை முழக்கம், (Liberty, Equality, Fraternity). ஆகும். இந்தியமக்கள் பிரிட்டிஷ் ஆட்சியில் அடிமைகளாக வாழும் குடிகள் (Subjects) ஆனால் பிரெஞ்சியர் ஆண்ட பிரெஞ்சிந்தியாவில் பிரெஞ்சிந்திய மக்கள் பிரெஞ்சு குடிமக்கள்(Citizens) என்றும் அழைக்கப் பட்டதை அவர் சுட்டிக் காட்டுகிறார். இக்கூற்று உண்மையில்லை என்பதைப் பிரெஞ்சியர் ஆட்சியில் ஏற்பட்ட பின்வரும் நிகழச்சிகள் எடுத்துக்காட்டுகின்றன. 1.பிரெஞ்சிந்திய ஆளுநராக இருந்த துய்ப்ளெக்சு காலத்தில் புதுச்சேரியில் ஏற்பட்ட மதமாற்றக் கொடுமைகள் 2. பிரெஞ்சிந்திய நீதிபதி (பிரெஞ்சு காரர்) பிரெஞ்சிந்தியரான வழக்குரைஞர் பொன்னுத்தம்பிப் பிள்ளை நீதிமன்றத்திற்குள் காலணி அணிந்து செல்ல அனுமதி மறுத்தது.3. பிரெஞ்சிந்திய ஆட்சியில் நிலவிய இரட்டை வாக்காளர் பட்டியல் முறை 4.புதுச்சேரியில் பிரெஞ்சியர் வாழ்ந்த கடற்கரையை ஒட்டிய பகுதி வெள்ளையர் பகுதியாக (White city) அறிவிக்கப்பட்டமை. அங்கே பிரெஞ்சிந்திய மக்கள் செல்ல அனுமதி மறுப்பு. பிரெஞ்சிந்தியர் வாழும்பகுதி கறுப்பர் பகுதி(Black city) என்று அறிவிக்கப்பட்டமை. நிறப்பாகுபாட்டை பிரெஞ்சியர் ஆட்சி மேற்கொண்டதற்கான சான்றுகள் இவை. 5.பாரதியார் வருவதற்கு முன்பே புதுச்சேரி மற்றும் காரைக்காலிலிருந்து வெளிவந்த சுஜன ரஞ்சினி காரைக்கால் ஆகிய இதழ்கள் பிரெஞ்சியர் ஆட்சியில் நடந்த கொடுமைகளைச் சுட்டிக்காட்டிக் கடுமையாகச் சாடியமை.

இவையெல்லாம் பாரதியார் புதுச்சேரியில் இருந்த பத்தாண்டுகளில் அவரது கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டதா இல்லையா என அறிய இயலவில்லை. தான்தஞ்சம் அடைந்த பிரெஞ்சிந்தியாவின் ஆட்சியைக் குறை கூறக் கூடாது என பாரதியார் கருதினாரா? என்றும் தெரியவில்லை. -ஆயிரம் உண்டிங்கு சாதி எனில் அந்நியர் வந்து புகலென்ன நீதி - எனப் பாடிய பாரதியார் எப்படி இந்தியாவின் இந்த ஐந்து பகுதிகளும் (புதுச்சேரி, காரைக்கால் .மாகி, ஏனாம் மற்றும் சந்திர நாகூர்) அந்நியர் ஆட்சியில் இருந்ததை ஏற்றுக்கொண்டார் எனத் தெரியவில்லை.- என்னதான் தங்கக் கூண்டில் அடைத்துக் கிளிக்குப் பாலும் பழமும் கொடுத்தாலும் அது சுதந்தரமாக வெளியே பறந்து திரியத் தான் விரும்புமேயன்றி கூட்டில் அடைபட விரும்பாது - எனக் கூறிய காரைமெயில் என்ற பிரெஞ்சிந்திய விடுதலைப்போராட்டத்தில் வெளிவந்த இதழின் கருத்து ஈண்டு நினைவுகூரத் தக்கது. புதுச்சேரியில் இதழியல் வளர்ச்சிக்கு நன்கு வித்திட்டவர் பாரதியாரே ஆவார். தான் தஞ்சம் புகுந்த புதுச்சேரியில் கி.பி 1908 ஆம் ஆண்டிலிருந்து பாரதியாரால் நடத்தப்பட்ட இந்தியா, விஜயா சூர்யோதயம்,கர்மயோகி,மற்றும் ஞானரதம் ஆகிய ஐந்து இதழ்களும் 1910 ஆம் ஆண்டு இறுதிக்குள் பல்வேறு காரணங்களால் நின்று போய்விட்டன. பாரதியாரே புதுச்சேரியின் இதழியல் முன்னோடி ஆவார் என்பதில் ஐயமில்லை.

துணைநின்ற -இதழ்கள் நூல்கள்

1. பாரதியாரின் -இந்தியா இதழ்கள்-
2. ப.பத்மநாபன், பிரெஞ்சிந்தியவிடுதலைப்போராட்டத்தில் இதழ்களின் பங்கு(2004)
3. புதுச்சேரி மாநில இதழியல் வளர்ச்சி (2008)

6. பத்திரிகைத் தொழிலில் பாரதியார்



முனைவர் வீ. கோபால்
இணைப் பேராசிரியர் (ஓய்வு)
தமிழ் உயராய்வு மையம்,
யாதவர் கல்லூரி, மதுரை

இந்தியத் திருநாடு அந்நியரிடம் அடிமைப்பட்டிருந்த காலத்தில், பத்திரிகைகள் வாயிலாகவே செயல்பட்டு, நாட்டு விடுதலைக்கு மக்கள் உத்வேகம் பெற்றனர். அந்தக் காலத்தில் தகவல் தொடர்பு சாதனங்கள் நம் நாட்டில் அதிக அளவில் இல்லை. அதனால், பத்திரிகைகள் பல, இந்திய மக்களுக்கு உதவிக்கரம் நீட்டின. அந்நியர் ஆட்சிக்கு எதிராகப் பல பத்திரிகைகள் எழுதினாலும், பாரதியார் போல பத்திரிகைகளில் நேரடியாகக் குறிப்பிட்டு எழுதவில்லை. அப்படி எழுதியதினால், அன்றிருந்த அரசு பாரதியாரிடம் அதிக அளவில் சீற்றம் கொண்டது. தமிழ்நாட்டில் (சென்னை இராஜதானி) "இந்தியா" பத்திரிகைக்கு வெள்ளையராட்சிப் பல்வேறு இன்னல்களைத் தேடித் தந்தன.

பாரதியார் எண்ணம் போல், வீறுகொண்டு எழுந்த பத்திரிகையாளர்கள் சுப்பிரமணிய சிவா, வ.வே.சு. ஐயர், திரு. வி. கல்யாண சுந்தரனார் என்று பட்டியல் நீளும். தன் பத்திரிகைகளில் 'கார்டூன்' (கேலிச் சித்திரங்கள்) படம் போட்டு, சொல்ல வேண்டிய செய்திகளை மக்களுக்கு எளிதில் உணர்த்தியவர் பாரதியார். அவர், 'சக்கரவர்த்தினி', 'இந்தியா', 'விஜயா', 'கர்மயோகி', 'பாலபாரதா' ஆகிய பத்திரிகைகளை நடத்தினார். முதன் முதலில் சுதேசமித்திரன் பத்திரிகையில் துணையாசிரியராகப் பணியாற்றினார். இப்பணியிலிருந்து பத்திரிகைத் தொழிலில் பாரதியார் ஈடுபட்டு வந்தார்.

பாரதியாரின் தொடக்க காலம்

எட்டயபுரம் அரண்மனையில் அவர், மன்னருக்கு அன்றாடம் வரும் பத்திரிகைகளைப் படித்துச் சொல்ல வேண்டும். சில நல்ல நூல்களைப் படித்துக் காட்டி, விளக்கம் சொல்வதே அவரது வேலையாக இருந்தது. பின்னர் மதுரை சென்று அங்குள்ள சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் சுமார் மூன்று மாதம் தமிழ்ப் பண்டிதராக வேலை செய்தார். இந்தத் தமிழாசிரியர் வேலையிலும் பாரதியார் மனம் நிலையாக ஈடுபடவில்லை.

இந்த நிலையில், சென்னை சுதேசமித்திரன் பத்திரிகையில் ஓர் உதவி ஆசிரியர் பணி கிடைத்தது. 1904ஆம் ஆண்டு நவம்பர் மாதம் சென்னையில் இப்பதவியை ஏற்றுக் கொண்டார் பாரதியார்." (வெ. சாமிநாத சர்மா, நான் கண்ட நால்வர், பக். 260 - 261). 1904ஆம் ஆண்டு நவம்பர் மாதம், சென்னை அரண்மனைக்காரத் தெருவில் இருந்த சுதேசமித்திரன் அலுவலகத்தில் துணை ஆசிரியர் குழுவில் ஒருவராகப் பாரதியார் சேர்ந்தார். அவ்வேளையில், இந்திய தேசியச் சிந்தனைப் போக்கு வீறுகொண்டு எழுந்திருந்தது.

1904 இல் ஆங்கிலேயர்கள் நிகழ்த்தி வங்கப் பிரிவினை, தமிழ்நாட்டில் தேசிய இயக்கம் சூடுபிடிக்கத் தூண்டுதலாயிற்று. அரசியல் துறையில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் அதனுடைய வெளிப்பாடாக அமைந்தார். சுதேசமித்திரனில் துணையாசிரியராகச் சேர்ந்த பாரதி, அவ்விதழுக்கு ஆங்கிலத்தில் வந்த செய்திகளை மொழிபெயர்த்து வழங்கினார். அதற்குரிய தலைப்பு, துணைத் தலைப்பு எழுதுவதையும் தொழிலாகக் கொண்டிருந்தார். (வீ. கோபால், தமிழ் இதழியல் வரலாறு 1921 – 1940, பிஎச்.டி., ஆய்வேடு (2001), ப.44).

பாரதியார் பத்திரிகை உலகில், இவ்வாறு தொடங்கி பெரிய அளவில் தன்னை நிலைநிறுத்திக் கொண்டார் எனலாம். பொதுமக்களுக்கும் தொடர்புப்பாலமாகச் செயல்பட்டன. தமிழ்ப்பத்திரிகை உலகில் பல பெரியவர்கள் செயல்பட்டிருக்கிறார்கள். பாரதியார் எழுத்துலகில் நுழைந்தபோது, எமக்குத் தொழில் கவிதை என்றார். பின்னர் 'இந்தியா' பத்திரிகைக்கு விண்ணப்பம் செய்யும் பொழுது தொழில் என்ற களத்தில் இதழாளர் என்று குறிப்பிட்டுள்ளார்.

பத்திரிகைத் தொழிலில் பாரதியார்

சுதேசமித்திரன் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயரே அவரைப் பத்திரிகை உலகிற்கு அறிமுகப்படுத்தி வைத்தார். பாரதியாரின் பத்திரிகை உலகம் தொடக்க காலத்தில் சுதேசமித்திரனில் தொடங்கியது என்றாலும், அதற்கு முன்னரே திருநெல்வேலி 'சர்வஜன மித்திரன்' மதுரை 'விவேக பானு' ஆகிய பத்திரிகைகளிலும் எழுதியுள்ளார். தமிழ்ப் பத்திரிகை உலகம் சரியானபடி வளர்ச்சியடையாத காலத்தில் பாரதியார் அவ்வுலகில் புகுந்தார். தான் சம்பந்தப்பட்ட பத்திரிகைகள் தோறும் பற்பல புதுமைகளைப் புகுத்தி வெற்றி கண்டார். புதிய உத்திகளையும் கையாண்டு பத்திரிகை வளர்ச்சிக்கு வித்திட்டார். "வாளைக் காட்டிலும் எழுதுகோலுக்கே கூர்மை அதிகம்" என்பதை நிரூபித்துக் காட்டிய பெருமை பத்திரிகையாளர் பாரதிக்கு உண்டு. (பா. மனோகர், "பாரதியார்", ச.வே. சுப்பிரமணியன், ச. மெய்யப்பன் (பதி. கள்), தமிழ்ப் பெருங்கவிஞர் (தொகுதி – 2), பக். 126-127).

சக்ரவர்த்தினியில் பாரதியார்

பெண்கள் முன்னேற்றம் குறித்த சிந்தனை பாரதி காலத்தில் பெரிய அளவில் இல்லை. ஆனால், பெண்கள் நலம் கருதி, ஸ்ரீ சக்ரவர்த்தினி என்ற பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பையும் ஏற்றார். சுதேசமித்திரனில் பணிக்குச் சேர்ந்து ஒன்பது மாதங்களே ஆன நிலையில், பெண்கள் முன்னேற்றத்திற்கென 1905ஆம் ஆண்டு ஆகஸ்டில் தோன்றிய சக்ரவர்த்தினி என்ற மாத இதழின் ஆசிரியர் பொறுப்பையும் பாரதி ஏற்றார். ஒரே நேரத்தில் இரண்டு பத்திரிகையில் பணியாற்றிய பெருமை அந்நாளைய தமிழ்ப் பத்திரிகை உலகில் பாரதிக்கு வாய்த்தது. (பாரதியின் பத்திரிகை உலகம், ப.11) இந்த இதழின் முகப்பில்,

"பெண்மை யறிவுயரப் பீடோங்கும் பெண்மைதா
னொண்மை புறுவோங்கும் முலகு" (சென்னை 1906ஆம் வருஷம் ஆகஸ்டு மாதம்) என்று எழுதப் பெற்றிருக்கிறது.

பெண்கள் வாழ்வில் ஒளிமயமான எதிர்காலம் அமையவேண்டும் என்று பாரதி விரும்பினார். அதனால், "சுதந்திரங்கள் என்ற வார்த்தையைக் கேட்டவுடனே நமது தேசத்தில் அனேக மனிதர்களுக்கு மனம் பதறத் தொடங்குகின்றது. ஸ்திரிகளுக்குச் சுதந்திரம் கொடுப்பதென்றால் உடனே அவர்களை ஐரோப்பிய ஸ்திரீகளைப் போலாக்கி விடுவதேயாகுமென்று நினைத்து இவர்கள் அச்சமடைகின்றார்கள்... நான் திடீரென்று ஸ்வதர்மங்களையும், ஸ்வய ஆசாரங்களையும் புரட்டியெறிந்து விட்டு மனிதர்களெல்லாம் தடுமாறித் தடம்புரண்டு நிற்க வேண்டுமென்று சிறிதேனும் விரும்பவில்லை. மாதர்களுக்காயினும், வேறு யாருக்காயினும் சுதந்திரங்கள் வேறொருவர் கொடுக்க முடியுமென்ற நம்பிக்கையே எனக்குக் கிடையாது.

அவரவர்கள் தத்தம் உரிமைகளைத் தானே முயற்சி புரிந்து அடைந்து கொள்ள வேண்டுமே அல்லாமல் மற்றொருவர் கொடுத்ததொன்றும் நிலைத்திருக்க மாட்டாது. ஆதலால் நான் இங்கே இந்தியாவிலே இப்போது ஆசாரத் திருத்தக்காரர்களென்றும் ஆசாரத்திற்கு விரோதிகளென்றும் தம்மைச் சொல்லிக் கொள்ளும் இரண்டு பகுதியாருடனும் சண்டையிட்டுக் கொள்ளாமல் மனிதர்களின் உண்மை நிலையையும் அவர்களுக்கு இயற்கையாக உள்ள உரிமைகளையும் பற்றி மட்டிலும் குறிப்பிடுகின்றேன்.

(சக்ரவர்த்தினி இதழ் தலையங்கப் பகுதி, ஆகஸ்டு 1906 இதழ்) 11.03.98 அன்று திருவல்லிக்கணி பகுதியிலிருந்த பாரதியார் நினைவில்லத்தில் கட்டுரையாளர் எடுத்த நகல். தமிழ்நாட்டு மாதர்களின் அபிவிருத்தியே நோக்கமாக வெளியிடப்படும் மாதாந்திரப் பத்திரிகை என்று இதழ் முகப்புப் பகுதியில் குறிப்பிடப் பெற்றுள்ளது.

இதழாளராகவே வாழ்க்கையைத் தொடங்கிய பாரதி, 06.06.1907இல் சக்கரவர்த்தினிக்கும் 31.05.1907 இல் 'இந்தியா' இதழுக்கு அரசாங்கத்திடம் பதிவு செய்து கொண்ட மனுவில் 'ஆசிரியர்' – 'தொழில்' என்ற பத்தியில் 'சி. சுப்பிரமணியபாரதி' – இதழாளர் (Journalist) என்றே குறிப்பிட்டுள்ளார். (அ.மா. சாமி, இந்திய விடுதலைப்போர் – செந்தமிழ் தந்த சீர், ப. 223) இக்குறிப்பிலிருந்து, பாரதியாருக்கு இதழ் தான் தொழில் என்று உணரமுடிகின்றது. அத்தொழிலே அவரை வெளியுலகுக்கு அடையாளம் காட்டியது என்றும் சொல்லலாம்.

பாரதியின் – 'இந்தியா'

இந்தியா இதழை 1907 ஏப்ரலில் பாரதி தொடங்கி அதன் ஆசிரியராக இருந்தார் என்று பலரும் குறிப்பிடுகின்றனர். இதற்கு, 1907ஆம் வருஷம் ஏப்ரல் மாதத்தில் 'இந்தியா' பத்திரிகை வெளிவர ஆரம்பித்தது என்று செல்லம்மா பாரதி முதலில் எழுதியது காரணமாயிருக்க வேண்டும். அந்நாளில் 'இந்தியா' மிகவும் ஆவலுடன் படிக்கப் பெற்றது… இது 1906ஆம் ஆண்டில் நடந்தது என்று வ. ராமசாமி (வ.ரா.) கூறுவார். 1906 ஏப்ரலில் இந்தியா இதழ் வெளிவந்தது என்று சுத்தானந்த பாரதியாரும் சீனி விசுவநாதனும் கூறுவர். 1906ஆம் ஆண்டில் இந்தியா வெளிவந்ததும், பாரதி ஆசிரியராக இருந்தார் என்பதும் உறுதியாகின்றன. 4.5.1906இல் தான் இந்தியா இதழின் முதல் இதழ் வெளிவந்தது. (பா. இறையரசன், இதழாளர் பாரதியார், பக். 13-14)

அந்தக் காலத்தில் பாரதியார் தீவிர தேசபக்தராயிருந்தார். ''இந்தியா'' என்ற தமிழ் வாரப் பத்திரிகையைத் தொடங்கி அதற்கு ஆசிரியராய் அமர்ந்தார். (மேலது, ப. 14). 'இந்தியா' பத்திரிகையை அனைவரும் விரும்பி படித்தனர். காரணம் அன்றைய அரசை எதிர்த்து எழுதுவதில் வல்லவராகத் திகழ்ந்தார் பாரதியார். அதனால் அன்றைய அரசின் பல்வேறு அடக்குமுறைக்கு ஆளானார் பாரதியார். கவிஞர் பாரதியார், 1906ஆம் ஆண்டு இந்தியா என்னும் பத்திரிகையை நடத்தினார்.(சோமதல, தமிழ் இதழ்கள், ப. iii), இந்தியா பத்திரிகையை யார், யாரெல்லாம் படித்திருக்கிறார்கள் என்று இக்குறிப்பிலிருந்து உணர முடிகின்றது. இதுவரையில் கிடைத்துள்ள 'இந்தியாவின் கடைசி இதழ் 12.3.1910 நாளிட்டது. ஆகையால் 12.3.1910 உடன் அவ்விதழ் நின்று போயிற்று என்பதாகப் பெ. தூரன், ரா.அ. பத்மநாபன், பிரேமா நந்தகுமார், எஸ்..இராமகிருஷ்ணன் ஆகியோர் தெரிவிக்கின்றனர். அதனால், வேறு சில இதழ்களைத் தொடங்கி சிறிது காலம் நடத்தலானார் பாரதியார்.

பாரதியின் பிற பத்திரிகைகள்

இந்தியா பத்திரிகை நின்றவுடன், புதுச்சேரியிலிருந்து விஜயா, கர்மயோகி, சூர்யோதயம், பாலபாரதி போன்ற பத்திரிகைகளில் எழுதி வந்தார். விஜயா பத்திரிகையிலிருந்து கிடைத்திருக்கும் கட்டுரைகள் ஒரு சிலவே ஆயினும், அவற்றில் பாரதியின் விடுதலை வேட்கை அனல் வீசுகிறது. ஒரே சமயத்தில், விஜயா, இந்தியா, கர்மயோகி, சூர்யோதயம் முதலிய பத்திரிகைகளில் எப்படித்தான் இவ்வளவு எழுச்சியுடன் கட்டுரைகள் வரைந்தாரோ? ''புதுச்சேரிக்கு வந்ததும் நான் சுயேச்சையான பத்திரிகையாளனாக, எந்த ஒரு பத்திரிகையிலும் பதவி வகிக்காமல் என் பெயரில் எழுதிய விஷயங்களுக்குப் பணம் பெற்று வாழலானேன்'' என்று பாரதியார் எழுதியிருந்தாலும், நடைமுறையில் நான்கு இதழ்களுக்கு அவர் தலைமையோ, முக்கிய பொறுப்போ ஏற்றிருந்தார் என்று ஏ.ஆர். வெங்கடாசலபதி குறிப்பிடுகிறார்.

முடிவாகச் சில

பாரதியார் இருபதாம் நூற்றாண்டில் இணையற்ற கவிஞராக அறியப்பெற்றார். கவிதைகளின் வாயிலாக வாழ்ந்தாலும், பத்திரிகைகளில் ஈடுபட்டிருந்த காரணத்தால் உலகமெங்கும் பேசப்படுகின்றார். ''சுதேச மித்திரன்'', 'இந்தியா' பத்திரிகையைத் தமிழ்நாடு புதுச்சேரியில் தொடர்ந்து நடத்தியதால் முழுமையாகப் பாரதியார் பத்திரிகையாளராகவே திகழ்கின்றார்.. நாட்டு மக்களுக்குச் செய்தியைச் சொல்வதிலும் கருத்துப்படங்கள் வாயிலாக நடப்பு நிகழ்வுகளைப் புலப்படுத்துவதிலும் முன்நின்றார் பாரதியார். அன்றைய அரசுக்கு எதிராகப் பத்திரிகைகளில் தனக்குத் தோன்றிய கருத்துக்களை எழுதியதனால், அரசின் அடக்குமுறைக்கு ஆட்பட்ட போதிலும், யாருடனும் பத்திரிகைத் தொழில் சமரசம் செய்து கொண்டதாக அறிய முடியவில்லை.

7. பாரதியும் புதுவையும்



மு. அழகுராஜ்
மாவட்ட ஆளுநர், காரைக்குடி

முன்னுரை

பாரதியின் வாழ்வில் முக்கியமான இடங்கள் மூன்று. அவர் பிறந்து வளர்ந்து, பதினைந்து வயதுவரை வாழ்ந்த எட்டையபுரம் முதலாவது. பத்திரிகைத் தொழிலுக்கு வந்து புகழ்பெற்றது சென்னையில் இது இரண்டாவது. சென்னையைவிட்டு வெளியேற அவசியமான போது புகலிடம் தந்த ஊர் புதுவை. நினைவு தெரிந்த பின் பாரதி மிக அதிக காலம் வாழ்ந்த ஊரும் புதுவைதான். வாழ்க்கையில் இணையற்ற சோதனைகளைச் சந்தித்ததும் அதே புதுவையில்தான்.

நோக்கம்

புதுவையில் பாரதியின் வாழ்க்கையையும் அவரது பெருமைகளையும் ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

புதுவையில் பாரதி

பாரதியாரின் புதுவை வாசம் 1908இல் ஏறத்தாழ ஜூலை மாதம் முதலாக, 1918இல் நவம்பர் மாதம் வரை நீடித்தது. 1908இல் புதுவை சென்றபோது பாரதியாருக்கு இருந்த பெயரும் புகழும் பெரிதினும் பெரிது.

புதுவையில் முக்கியத் திருப்பம்

1904 முதல் தமிழ்ப் பத்திரிகைத் துறையில் சிறந்த ஒரு பத்திரிகையாளர் என்ற பெயர் இருந்தது. 1906 முதல் "இந்தியா" என்ற அரசியல் வாரப் பத்திரிகையின் ஆசிரியர் என்ற முறையில் அவருடைய புகழ் இணையற்றதாக இருந்தது. ஒரு பத்திரிகையாசிரியருக்கு இருக்க வேண்டிய அத்தனை சிறப்புகளும் அவருக்கு இருந்தன. சிறந்த எழுத்தாளர், சிறந்த அரசியல் ஞானி, தூங்குபவர்களையும் தட்டியெழுப்பக் கூடிய நடைகொண்ட தலையங்கம் வரைபவர். சிந்தனையைத் தூண்டும் அரசியல் கேலிச் சித்திரங்களைக் கற்பனை செய்யும் ஆசிரியர். இலக்கியம் முதல் கைத்தொழில் விவசாயம் வரை சகல துறைகளிலும் சுவையான செய்திகள் வருவதற்கு வகை செய்யும் பத்திராதிபர். அப்பழுக்கற்ற தேச பக்தியைத் தாமும் கொண்டு பிறரும் தேசபக்தர்கள் ஆகச் செய்யும் தலைமைச் சக்தி கொண்ட நேர்மையாளர். இவ்வாறு பாரதிக்கு இருந்த புகழ் பலதரப்பட்டது.

பாரதி முழு மனிதர்

சொல்லிலும் செயலிலும் சிந்தனையிலும் வாழ்விலும் வேறுபாடு இல்லாத முழு மனிதர் அவர். அவர் ஒரு வீரா வேசக்கவி. அவரது சொல்லுக்கு இருந்த ஆற்றல் அவரது வாழ்க்கையில் தோன்றியதுதான்.

பாரதி புதுவை போகுமுன்பே தாம் அகில இந்தியத் தலைவர்களுடன் இணையாக மதிக்கத்தக்கவர் என்பதைக் காட்டியிருந்தார். 1907இல் சூரத் காங்கிரசில் திலகர், கட்சிப் பத்திரிகை ஆசிரியர்களுடன் தனி ஆலோசனை நடத்தியபோது அதில் பாரதிக்கு மதிப்பான இடமிருந்தது. திலகர், லஜபதிராய், விபின சந்திரபாலர், அரவிந்தர் முதலிய தலைவர்களுடன் கூடி ஆலோசிக்கும் வாய்ப்பைச் சூரத்தில் நடந்த புதுகட்சிப் பத்திரிகாசிரியர்கள் மாநாடு அவருக்குத் தந்தது. 'பால பாரதா' என்ற ஆங்கில மாத

இதழின் ஆசிரியர் என்ற முறையிலும் பாரதியாரின் புகழ் பாரதம் நெடுகப் பரவியிருந்தது. “பால பாரதா”வில் விவேகானந்தரின் சிஷ்யையும் பாரதியின் குருவுமான நிவேதிகா தேவியைக் கூட எழுத முடிந்ததை அறிய முடிகிறது.

புதுவையில் பாரதியின் புகழ்

ஆங்கிலேயர் 'இந்தியா' பத்திரிகை அச்சு இயந்திரத்தை தடை செய்த பொழுது பாரதி விழ்ந்துவிடவில்லை. 'நான் வீழ்வேன் என்று நினைத்தாயோ என்ற அடிகளுக்கு இணங்க பீனிக்ஸ் பறவையாக மூன்று பாடல்களைப் படைத்தார். பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு, கண்ணன் பாட்டு, பாரமாதாவே பாஞ்சாலியாகத் தோற்றமளிக்கும் புதுகையில் 'பாஞ்சாலி சபதம்' என்ற காவியம் உருவாகியது. 'குயில்பாட்டு' என்ற கற்பனைக் கதை, காதல், சோகம், நகைச்சுவை எல்லாம் கலந்து மனத்தைக் கொள்ளை கொள்ளும் நடையில் தோன்றுகிறது. கண்ணனைக் குழந்தையாகவும் காதலனாகவும் பாடிப் பழகிய மரபை மீறி, கண்ணனைக் காதலி பாட்டில் அரசனாக வருகிறான். சற்குருவாக வருகிறான். சீடனாக வருகிறான், வேலைக்காரனாக வருகிறான், காதலனாக வருகிறான், காதலியாக வருகிறான்.

பாரதியும் பகவத்கீதையும்

பாரதி பன்மொழிப் புலவர். கீதையைப் பற்றிய பற்பல குறிப்புகள் அவருடைய கவிதைகளிலும், உரைநடைகளிலும் காணப்படுவதோடு அதனைத் தமிழில் எளிய நடையில் மொழியாக்கவும் செய்துள்ளதை அறிய முடிகிறது.

பாரதி போற்றிய இலக்கிய ஆளுமைகள்

தமிழ்க் கவிஞர்களில் சங்ககாலக் கவிஞர்களைக் குறித்த எக்குறிப்பும் அவரது எழுத்தில் காணமுடியவில்லை. அவ்விலக்கியங்களில் அவருக்கு ஈடுபாடோ பயிற்சியோ இருந்தது என்பதற்கு எச்சான்றும் காணமுடியவில்லை. 'செந்தமிழ்' இதழாசிரியர் இராகவையங்கார் புறநானூற்றுப் பாடல்களையொட்டி எழுதிய வீரத்தாய்மார்கள் என்னும் கட்டுரையைப் புகழ்ந்து பாராட்டியுள்ள குறிப்பு மட்டுமே உள்ளது.

பாரதியும் கவிதையும்

'பாட்டுத்திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும்' என்று பாடுகிறார். இறைமைக்கான தம்முடைய அனுபவத்தைப் பாடலில் வைத்து வாசகருக்கும் அதனைக் கடத்தி, இறைமைக்குள் ஆட்படுத்துகிறார் என்பதுதான் சிறப்பு.

'காக்கைச் சிறகினிலே நந்தலாலா - நின்றன்
கரியநிறம் தோன்றுவதையே நந்தலாலா

எளிமையான அடிகள், எளிதில் புரியக்கூடிய சொற்கள், இறைமை என்பது எளிய அனுபவம் என்பதை உணர்த்தும் அற்புதம் இது எல்லாமே கண்ணன். எல்லாமே கடவுள் என்கிறார். கண்ணன்மீது ஆழ்பக்தி கொண்டு கண்ணன் பாட்டு பாடியவர்.

பாரதியும் பத்திரிகை துறையும்

1903ஆம் ஆண்டு சுதேசமித்தரன் துணை ஆசிரியராகவும் 1905இல் சக்ரவர்த்தினி இதழ் ஆசிரியராகவும் 1906இல் 'இந்தியா' என்ற நாளேடு பத்திரிகை தடைபட்ட பொழுது ஓய்ந்துவிடாமல் மீண்டும் கவிதைகள் எழுது கவனம் செலுத்தினார். பின்னர் மீண்டும் சுதேசமித்திரனில் தமது எழுத்துக்கள் மீண்டும் வெளிவரத் தொடங்கியது. பாரதிக்கு மட்டற்ற மகிழ்ச்சியை உண்டாக்கியது. சென்னையில் பாரதியாருடைய புகழ் மீண்டும் குறிப்பிடத்தக்கதாயிற்று.

பாரதியார் பன்மொழிப் புலவர்

பாரதியார் சுமார் ஏழுக்கும் மேற்பட்ட மொழிகளை அறிந்தவர். தமிழ்பற்று, தமிழ்நாடு, தமிழ்ப்புலவர்கள் மேல் பாரதியார் அளவுகடந்த மதிப்பும் மரியாதையும்

கொண்டவர். 'யாமறிந்த புலவரிலே..கம்பனைப் போல்…" என்கிறார். ஔவையார் பாடல்களை நன்கு கற்றவர். எதை இழந்தாலும் ஔவையார் இயற்றிய தமிழ்மொழி பாடல்களை இழக்க நேரிட இயலாது. போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

பாரதியும் குவளைக் கண்ணனும்

யாரையும் தெரியாத நிலையில் புதுச்சேரி சென்ற பாரதிக்கு அங்கு அறிமுகமானவர் குவளைக்கண்ணன். சிறுவயது முதல் புதுவையில் வாழ்ந்து வந்த குவளைக் கண்ணன் பாரதியின் பரம ரசிகனாகவும் காவலனாகவும் ஆனார். பாரதியின் மீது உள்ள பக்தியால் புதுவையில் பலர் பாரதியைக் குவளையின் மூலமாகத்தான் அறிந்து கொண்டார்கள். பாரதியின் புகழைப் பாண்டிச்சேரி என்கிற புதுச்சேரியில் பரப்பியவர் குவளை. உத்திரமேரூர் அருகே உள்ள குவளை என்னும் கிராமத்தில் பிறந்தவர் குவளைக் கண்ணன். பாண்டிச்சேரியிலும் பின்பு திருவல்லிக்கேணியிலும் பாரதியுடனேயே காலத்தைக் கழித்தவர். சென்னை வந்த பாரதியைத் திருவல்லிக்கேணிக்கு அழைத்து வந்தவர் குவளை. பாரதியைத் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி கோயில் யானை துதிக்கயால் தூக்கிக் காலடியில் போட்டுக் கொண்டபோது தனது உயிரைக்கூட பொருட்படுத்தாது கோயில் மடப்பள்ளியிலிருந்து ஓடிவந்து யானையின் கால்களுக்கு இடையே இருந்த பாரதியை மீட்ட பாரதி பக்தன் குவளை.

பாரதியும் குள்ளச்சாமியும்

பாரதியார் புதுச்சேரியில் வாழ்ந்தபோது அவருக்கு ஞானகுருவாக விளங்கியவர் குள்ளச்சாமி. கறுப்புநிறமும் உருண்டை முகவும் கொண்ட அவர், நாலரை அடி உயரே உள்ளவராக இருந்தார். அவரிடமிருந்து திருநூறு வாங்கிப் பூசிக்காண்டால் நோய் அணுகாது என்பது பலருடைய கருத்து நம்பிக்கையுமாக இருந்தன. பாரதி பார்வையிலே குள்ளச்சாமி மகாஞானி, எல்லா உயிர்கள் மீது இரக்கம் கொண்ட பல பெண்கள் இவரைத் தெருவில் கண்டவுடன் வணங்குவார்கள். குழந்தைகள் இவரைக் கண்டால் விருப்பத்துடன் ஓடி வருவார்கள்.

புதுவையில் பாரதி சந்தித்த ஆளுமைகள்

புதுச்சேரியில் வாழ்ந்த காலத்தில் பாரதியார் பல ஆளுமைகளுடன் தொடர்பு கொண்டிருந்தார். அவர்களில் சிலர் அரவிந்தர், கோவிந்தசாமி, யாழ்ப்பாணத்து சுவாமியார், குள்ளச்சாமியார் மற்றும் பாரதிதாசன். மேலும் வ.உ.சி., வ.வே.சு. ஐயர் போன்றவர்களும் பாரதியை புதுவையில் வந்து தொடர்பு கொண்டனர்.

நிறைவுரை

பாரதிக்கு தன் வாழ்வில் திருப்புமுனையாக அமைத்தது புதுச்சேரி. பத்திரிகை துறை தடைபட்டபொழுது கவிதையால் உலகக் கவிஞர் என்ற புகழ் பெற்றதும் புதுச்சேரிதான். புதுச்சேரியில் பாரதியின் பெயர் பாரதி பூங்கா, பாரதிதெரு, பாரதி பள்ளி, பாரதி கல்லூரி என்று பலவகைச் சிறப்புகள் பெற்றன. பாரதி பேரலை போன்ற இலக்கியப் பேரவை பாரதியின் புகழை புதுச்சேரியில் இப்பொழுதும் பறைசாற்றி வருகின்றது.

துணைநின்ற நூல்கள்

1. பாரதியார் கவிதைகள்
2. சுதேசமித்திரன் இதழ்கள்
3. பாரதியின் நினைவு நூற்றாண்டு மலர்
4. புதுச்சேரியில் பாரதி நூல்

8. பாரதி கண்ட காதல்



கவிஞர் நெல்லை அன்புடன் ஆனந்தி
பன்னாட்டு இயக்குனர், அமெரிக்கா
தமிழால் இணைவோம் உலகத்தமிழ்ப் பேரியக்கம்

ஆய்வுச்சுருக்கம்

காதல் ஒரு மெல்லிய உணர்வு. இருப்பினை உணரச் செய்யும் மெல்லிய கனவு. தனக்காகவே தன்னை ஏற்றுக் கொள்ளும் துணையின் மீது வரக்கூடிய நேசம். இன்ப துன்பங்களில் நமக்கெனத் துணை நிற்கும். உற்ற உறவின் பாசம் அது. எத்தனையோ கவிஞர்கள் காதலை எழுதி இருந்தாலும் நெஞ்சம் எங்கும் நீவி விடும் பாரதியின் காதல் நாம் என்றென்றும் போற்றிப் புகழும் தனித்துவமே ஆகும். கண்ணம்மாவைப் பாடாத கவிஞன் இல்லை, பேசாத மேடைகளும் இல்லை. நம் ஒவ்வொருவரின் நெஞ்சுக் கூட்டில் துடித்துக் கொண்டிருக்கும் மென்மையான காதலை பாரதி கையாண்ட விதத்தைத் தான் இக் கட்டுரையில் ஆய்வுக்கு உட்படுத்தி இருக்கிறேன்.

காத்திருந்த காதல்

பொதுவாகக் காதலிப்பவர்கள் ஒருவருக்காக ஒருவர் காத்திருக்கும் பொழுது ஒரு கணம் கூட ஒரு யுகமாகப் போகும் என்பார்கள். அருகில் இருக்கும் போது ஒரு யுகமும் ஒரு நொடியாகக் கரைந்து விடும் என்பார்கள். இந்தக் காத்திருத்தல் உணர்வை, இயக்கத்தின் எழிலை திரைப்படப் பாடல்களில் பலரும் கையாண்டு இருக்கிறார்கள்.

காத்திருந்து காத்திருந்து காலங்கள் போகுதடி
பூத்திருந்து பூத்திருந்து பூவிழி நோகுதடி
(படம்: வைதேகி காத்திருந்தாள்)

என்ற பாடலில் உனக்காகக் காத்திருந்த என் விழிகள் எல்லாம் நோகுதடி, எப்போது நீ வருவாய்.. என் நெஞ்சை நான் உரைக்க.. என்பது போல தன் காதலிக்காகக் காத்திருக்கக் கூடிய காதலனின் மனக்குமுறலை இப்பாடலில் வடித்திருப்பார் பாடலாசிரியர்.

ஒரு கணம் ஒரு யுகமாக ஏன் போக வேண்டுமோ
தினம் தினம் உனை எதிர்பார்த்து மனம் ஏங்க வேண்டுமோ
(படம்: நாடோடித் தென்றல்)

இந்தப் பாடலில்.. உனைப் பிரிந்து வாடும் ஒவ்வொரு கணமும் நீ வருவாய் என்று உனக்காகவே காத்திருக்கிறேன். உன் வரவை எதிர்பார்த்திருக்கிறேன். உனக்காகத் துடிக்கும் என் நெஞ்சத்திடம் நான் என்ன சொல்வேன்? என் நெஞ்சும் என் பேச்சைக் கேட்பதில்லை. அது உன்னிடமே ஓடிவருகிறது என்று சொல்லக்கூடிய அற்புதமான வரிகள்.

நேற்றுவரை நேரம் போகவில்லையே
உனதருகே நேரம் போதவில்லையே.. (படம்: மதராசப்பட்டினம்)

உன்னருகில் இருக்கும் தருணம் நேரம் போவதே தெரியவில்லை, நீயில்லா நேரங்கள் யுகமாய் நெடிது நீள்கிறது என்பதைச் சொல்லும் வரிகள். இப்படிக் காத்திருக்கும் வேளையில் ஒரு மாலைப்பொழுதில் வானையும் கடலையும் நோக்கி அமர்ந்திருக்கும் பாரதி, கடலை வானம் முத்தமிட்டுத் தழுவும் காட்சியைக் கண்டு ரசிக்கும் வேளையில், தன்னை மறந்த நிலையில் இருக்கும் போது அங்கே பின்னாலிருந்து வந்து அவர் கண்

மறைத்த காதலியையும் பற்றி எழுதுகிறார். கண் மறைத்த காதலையும், சிரித்த சிரிப்பொலியையும், தழுவியபடியே என்ன செய்தி என்று கேட்ட அழகையும் உரைக்கிறார்.

நெரித்த திரைகடலில் என்ன கண்டிட்டாய்?
நீல விசும்பினிடை என்ன கண்டிட்டாய்?
- கண்ணம்மா என் காதலி; (பின்னே வந்து நின்று கண் மறைத்தல்)

திரைகடலில் உன் முகத்தைப் பார்த்தேனடி.. நுரைக்கும் சின்னக் குமிழிகளில் உன் முகத்தைத் தான் பார்த்தேன் என்று சொல்கிறார். நான் பிரித்துப் பிரித்து ரசித்தது வேறொன்றுமில்லை உன் முகமே என்ற சொல்லவும்.. அங்கே காதலிக்கு இதை விட வேறு என்ன வேண்டும்?

யாரினும் காதலம் என்றேனா ஊடினாள்
யாரினும் யாரினும் என்று (குறள்: 1314)

உன்னைவிட யார் என்னைக் காதலிப்பார் என்று கேட்டதற்கு.. என்னிலும் வேறு யார் இருக்கிறார்? யார் யார் என்று என்னைக் குடைந்து எடுத்துவிட்டாள் என்று எழுதியிருப்பார் வள்ளுவர். இயற்கையை ரசித்தாலும் என்னை விட்டுவிட்டு வேறு எதை ரசித்துக் கொண்டிருக்கிறாய் என்று செல்லமாகப் பெண்கள் ஊடுவது உண்டு. சிலப்பதிகாரத்தில் பாண்டிய மன்னன் அவையில் அருகில் இருந்த தேவியை விடுத்து நடனமாடிய மங்கையைப் பார்த்ததால், அரசியவள் கோபம் கொண்டு எழுந்து போய் விட்டாள் என்று நாம் அறிவோம். சராசரிப் பெண்களில் இருந்து, நாடாளும் அரசி வரைக்கும் தன் தலைவன் தன்னைத் தவிர வேறொருவரைக் கண்டால் அவர்களால் அதைத் தாங்க முடிவதில்லை. தன் காதலியை நாண வைப்பதில் அத்தனை நுணுக்கங்களையும் பாரதி தன் பாடலில் கையாண்டிருக்கிறார். ஐயப்பாடு சிறிதுமின்றி எல்லாவற்றிலும் உன்னைத் தானடி கண்டேன் என்று சொல்லி விட்டால் அங்கே ஊடுவதற்கு என்ன இருக்கிறது? காதலிப்போருக்குக் கையேடாக பாரதியின் பாடல்கள் அமைந்துள்ளது என்றால் மிகையாகாது.

அழகை ஆராதித்தல்

பொதுவாகப் பெண்களுக்குப் புதிதாக ஒரு உடையோ, அலங்காரமோ அல்லது நகையோ அணிந்திருந்தால் யாரேனும் ஒருவராவது அதைக் கண்டுபிடித்துப் பாராட்டி விட்டால் அவர்களுக்கு அன்றையப் பொழுது மகிழ்ச்சிகரமாகச் செல்லும். குறிப்பாக ஒரு புத்தாடை அணிந்து கொண்டு கணவருக்கு முன்னும் பின்னும் நடந்து கொண்டிருக்க, அது எதையும் கவனிக்காமல் கணவர் இருந்து விட்டால் அவ்வளவு தான். இங்கே பாரதி, தன்னுடைய கண்ணம்மாவைப் பார்த்துப் பார்த்து ரசிக்கிறான். வரிகளின் வழி நமக்குள் நாடி நாடி நுழைகிறார். அவள் கண்களைச் சூரியன் சந்திரனுக்கு ஒப்பாகக் கூறுகிறான். வடிவான கரிய விழிகளை வானக் கருமைக்கு உவமை ஆக்குகிறான். அவள் அணிந்துள்ள பட்டுப்புடவையில் பதித்த கற்கள் அனைத்தும் வானத்து நட்சத்திரங்களாக அவன் கண்களுக்குத் தெரிகிறது. முத்துப் பற்கள் தெரிய அவள் புன்னகைக்கும் பொழுது அதில் பூஞ்சோலை மலர்களின் ஒளியைக் காண்கிறார். கரையைத் தொட்டு விளையாடும் நீலக் கடலலையே அவள் நெஞ்சின் அலைகள் என்கிறான். இனி அவளின் குரலுக்குக் குயிலோசையை துணைக்கு அழைக்கிறார். இத்தனை பெருமையைக் கொண்ட உன்னிடம் அல்லவா நான் காதல் கொண்டேன் என்று உருகுகிறார். திருமணமாகும் வரை என்னால் பொறுத்திருக்க முடியாது இப்போதே உன்னைத் தழுவி முத்தம் ஒன்று தருகிறேன் என்று அவளை அழைக்கின்றான்.

நோக்கினாள் நோக்கெதிர் நோக்குதல் தாக்கணங்கு
தானைக்கொண் டன்ன துடைத்து. (குறள்: 1082)

பண்டறியேன் கூற்றென் பதனை இனியறிந்தேன்
பெண்டகையால் பேரமர்க் கட்டு.(குறள்: 1083)

இவளின் போர் தொடுக்கும் பார்வையைத் தாக்கும் எமன் என்று அறிந்தேன் என்று வள்ளுவம் சொல்கிறது. அதிகபட்சமாக ஒரு பெண் எதிர்பார்ப்பது தலைவன் தன்னிடம் உள்ள மாற்றங்களைக் கண்டு பிடித்து அவர் சொல்லக் கூடிய வாய்மொழிச் சொற்களே. அவன் தரக்கூடிய சிறுசிறு பாராட்டுகளில் உள்ளம் குளிர்கிறது. தலைவனைத் தவிர

அவளுக்கு வேறு யாராலும் அந்த உணர்வைக் கொடுக்க முடியாது. கண்ணம்மாவை, கண்களுக்குள் வைத்துப் போற்றிப் பாதுகாத்த பாரதியை இன்றும் நாம் கொண்டாடுகிறோம். நாணத்தில் கதவடைத்துக் காதலனைக் கண்டதும் வெட்கப்படும் அவளிடம்..

கன்னி வயதிலுனைக் கண்டதில்லையோ? - கன்னங்
கன்றிச் சிவக்கமுத்த மிட்ட தில்லையோ!
கண்ணம்மா என் காதலி; (நாணிக் கண் புதைத்தல்)

கன்னிப் பருவத்தில் நாம் கண்டதில்லையா? உன்னை நான் முத்தமிட வில்லையா? நமக்குள் என்னடி வெட்கம்? நாம் இருவரும் ஒருவர் தானே? இது உனக்குத் தெரியாதா? நான் என்ன வேற்று ஆளா? இரண்டு கண்களில் ஒன்றையொன்று கண்டு பயப்படுமா? இப்படிக் காதலியிடம் என்னிடம் உனக்கென்ன தயக்கம் என்று கேட்பதனை எத்தனை நளினமாக எடுத்தாண்டிருக்கிறார்.

நாணமோ இன்னும் நாணமோ
ஜாடை நாடகம் என்ன
(படம்: ஆயிரத்தில் ஒருவன்)

வார்த்தை தவறிவிட்டாய்

காதலர்கள் ஒருவரை ஒருவர் சந்திப்பதாகத் திட்டமிட்டு விட்டுச் சொன்ன நேரத்தில் சொன்ன இடத்திற்கு வரத் தவறிவிட்டால் காத்திருந்தவரின் மனம் எப்படி நோகும் என்பதை பொருத்தமாக வடித்திருக்கிறார் நம் மகாகவி.

வார்த்தை தவறிவிட்டாய் - அடி கண்ணம்மா!
மார்பு துடிக்கு தடீ!
பார்த்த விடத்திலெல்லாம் - உன்னைப்போலவே
பாவை தெரியு தடீ!
\- கண்ணம்மா என் காதலி; (குறிப்பிடம் தவறியது)

தீர்த்தக்கரையினிலே செண்பகத் தோட்டத்திலே என்னைப் பார்க்க வருவதாய் சொன்னாயே, வாராமல் இருந்து விட்டாய் உன் வார்த்தை தவறிவிட்டாயே கண்ணம்மா. என் நெஞ்சமெல்லாம் துடிக்குதடி.. பார்க்கும் இடமெங்கும் உன்னைப் போலவே தெரிகிறதடி என்று புலம்புகிறார். இந்த உணர்வினை..

வருவாய் என நான் தனிமையில் இருந்தேன் (படம்: எங்கிருந்தாலும் வாழ்க)

பார்த்துப் பார்த்துக் கண்கள் பூத்திருப்பேன்
நீ வருவாயென (படம்: நீ வருவாய் என) போன்ற திரைப்பாடல்களில் காணலாம்.

காதலி வராமல் போய்விட்டால், உடம்பெல்லாம் சுடுகிறது, தலை சுற்றுகிறது போன்ற நிலை. வானமும் நிலவும் தழுவுகிற காட்சியைப் பார்.. நான் மட்டும் ஏன் நீ வராமல் நீ இல்லாமல் பிரிவு என்ற நரகத்தில் துன்பப்படவேண்டும் என்கிறார். உன்னோடு கூடி முயங்கிடத் நான் தவம் செய்திருக்கவில்லையடி என்று புலம்புகிறார். உனக்கோ கட்டுக்காவல், உன்னை விட்டுப் பிரிந்து தவிப்பில் நான் கிடக்கிறேன் என்று பாடுகிறார். உன்னுடன் களித்திருக்க நான் தவம் எதுவும் செய்யவில்லையே என்று புலம்புகிறார்.

காதலின் பூரணத்துவம்

கண் பார்க்கும் காட்சி எல்லாம் தன் துணையாகவே தெரிவது காதலின் உச்சம்.பார்க்கும் ஒவ்வொன்றிலும் எனக்கு நீதான் தெரிகிறாய் என்று பக்குவமாகப் படைத்திருக்கும் பாடல் ஒன்றைப் பார்ப்போம். நீ எனக்கு இப்படி.. நான் உனக்கு அப்படி என்று சொற்களைக் கோர்த்து நம்மைச் சொக்க வைக்கிற இந்தப் பாடலைப் பாடாத பாடகர்கள் இல்லை, மேடைகள் இல்லை, தாளம் போடாத கைகள் இல்லை, ரசித்து அனுபவிக்காத ரசிகர்கள் இல்லை எனலாம்.

பாயு மொளி நீ யெனக்குப் பார்க்கும் விழி நானுனக்கு;
தோயும் மது நீ யெனக்குத் தும்பியடி நானுனக்கு;

வாயுரைக்க வருகுதில்லை; வாழிநின்றன் மேன்மை யெல்லாம்;
தூயசுடர் வானொளியே! சூறையமுதே! கண்ணம்மா!

- கண்ணம்மா என் காதலி; (யோகம்)

காதலியை அவளின் பரிசுத்தமான காதலை, குற்றம் குறை இல்லாத தூயசுடர் வானொளியே என்று அழைக்கிறார். கண்ணம்மாவைக் காதலிக்கிறான்.. வான் மழையாய் அவள் அன்பைப் பொழிய வண்ணமயிலாய் இங்கே நடமாடுகிறார். குறையில்லாத அவளின் நல்ல அழகையும், ஐம்புலனுக்கும் சுவையாய் ஆவதையும் ரசித்துப் பாடுகிறான். தனக்கு எல்லாமாக இருக்கும் காதலியை வேதம் எனப் பார்க்கிறான். தன் கண்ணம்மாவை நல்ல உயிரே என்று அழைக்கிறான். கண்ணம்மாவிடம் சரணாகதி அடைகிறான். இறைவனிடம் சரணாகதி அடைவது ஒரு விதம். இந்த உலகத்தில் உள்ள பற்றுகளை, பாசத்தை அறுத்துவிட்டு, மாயைகளில் இருந்து விலகி அவன் திருவடிகளே சரணம் என்று இறையை அடைவது ஒரு சரணாகதித் தத்துவம்.

அன்பில் தோய்ந்தவளை
ஆதாரமாய் இருப்பவளை
இன்பம் தருபவளை
ஈடில்லாப் பேரழகை
உறவின் முகவரியை
ஊற்றாம் அறிவை
எழிலரசியை
ஏற்றம் தரும் காரிகையை
இயங்கவைக்கும் பேரழகை
ஐயமற்ற அன்பை
ஒப்பில்லா ஒளியை
ஓங்கி நிற்கும் பெருமிதத்தை
கண்ணம்மாவை.... தன் காதலியைச் சரணடைகிறார்.

"நின்னைச் சரணடைந்தேன்- கண்ணம்மா
நின்னைச் சரணடைந்தேன்!
பொன்னை உயர்வைப் புகழை விரும்பிடும்
என்னைக் கவலைகள் தின்னத் தகாதென்று"

இந்த உலகத்தில் ஒவ்வொருவருக்கும் ஏதோ ஒன்று முக்கியமாக இருக்கும். சிலருக்குப் பெண்ணின் மேல் விருப்பம் இருக்கும். சிலருக்கு புகழின் மேல் விருப்பம் இருக்கும். இப்படிப்பட்ட எந்தக் கவலையும் என்னைத் தின்று விடக்கூடாது என்று நான் உன்னையே சரணடைந்தேன் என்கிறான்.சோம்பித் திரியாமல், அச்சம் ஏதும் கொள்ளாமல், நெஞ்சில் உரத்தோடு நான் நிற்க நின்னைச் சரணடைந்தேன் என்கிறான். எனக்காக என்று ஏதேதோ செய்து தவித்து வாழ்ந்திடாமல், உனக்காக வாழ்ந்த நிறைவு பெறவே விரும்புகிறேன். தேவையற்ற துன்பம் வேண்டாம். உற்சாகம் இல்லாத சோர்வு வேண்டாம், தோற்றுப் போகவேண்டாம். அன்பு நெறியில் மட்டுமே நான் சென்றிட உன்னையே சரணடைகிறேன். நல்லது கெட்டது அறியாத என்னை நல்லது மட்டுமே நாடிட வைத்து தீயதை எல்லாம் என்னிடமிருந்து போக்கி அருள்வாயாக என்று தன் கண்ணம்மாவை காவல் தெய்வமாக எண்ணி மாலை சூட்டி வணங்குகிறார்.

முடிவுரை

பாரதியின் படைப்புலகில் தமிழின் சிறப்பு, தமிழரின் வீரம், பெண்ணியச் சிந்தனைகள், நாட்டுப்பற்று, சமூக விழிப்புணர்வு, பெண்மையைப் போற்றுதல் உள்ளிட்ட பல்வேறு புதையல்கள் கொட்டிக் கிடக்கின்றன. அதில் காதல் எனும் சிறு பகுதியை எடுத்து இக்கட்டுரை வழி கண்டோம். காதல் இருக்கும் வரை கண்ணம்மாவும் இருப்பாள். கண்ணம்மாவைக் காவல் தெய்வமாக கட்டுரை வழிக் கண்டேன்.

துணை நூற்பட்டியல்

1. மகாகவி பாரதியார் கவிதைகள், ஸ்ரீ செண்பகா பதிப்பகம்
2. திருக்குறள், வானதி பதிப்பகம்

9. சுதேசமித்திரனும் புதுவைப் புயலும்



முனைவர். சி.தீபா

இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
பிஎஸ்ஜிஆர் கிருஷ்ணம்மாள் மகளிர் கல்லூரி
பீளமேடு, கோவை

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் சுதேசமித்திரனின் பங்கு சிறப்பானது. அனுபவமிக்க சிறந்த படைப்பாளர்களை அறிமுகம் செய்த இதழ் சுதேசமித்திரன் ஆகும். இந்த இதழக்கு ஜி. சுப்பிரமணிய ஐயர் ஆசிரியராகப் பொறுப்பேற்றிருந்தார். பாரதியார் இதன் துணை ஆசிரியராகப் பணியாற்றினார். 1882-ல் வார இதழாகத் தொடங்கி 1899-ல் நாளிதழாக மாறியது. தி இந்துவின் சகோதரிப் பத்திரிகையாக இவ்விதழ் நிறுவப்பட்டது. நூறு ஆண்டுகளுக்கு முன் புதுவையைப் பெரும் புயல் ஒன்று உயிர்ச் சேதத்தோடு சூறையாடியது. அக்காட்சிகளை, பாரதியார் ஒரு கவிஞராக, செய்தியாளராக, சமூக நலனில் அக்கறை கொண்டவராகச் சுதேசமித்திரன் இதழில் அவரே பதிவு செய்துள்ள நிலையை இக்கட்டுரையின் துணைகொண்டு காணலாம்.

சுதேசமித்திரன்

அனுபவம் மிக்க சிறந்த படைப்பாளர்களான க.நா. சுப்ரமணியம், மு வரதராசனார் மற்றும் பலரது எழுத்துகளைச் சுதேசமித்திரன் தாங்கி வந்துள்ளது. அதன் பின்னர் தனது சொந்தப் பத்திரிகையான இந்தியாவைத் தொடங்கப் புறப்பட்டார். விடுதலை இயக்க உணர்வு வெளிப்படுத்தும் இதழ்கள் தமிழில் இல்லை என்பதால் அதற்காகவே ஜி. சுப்பிரமணிய ஐயர் இவ்விதழைத் தொடங்கினார். இந்தியாவில் வெளியிடப்பட்ட இரண்டாவது வட்டார மொழிச் செய்தித்தாள் சுதேசமித்திரன் ஆகும். இந்தியாவில் மட்டுமல்லாமல் பர்மா,இலங்கை மற்றும் மொரீசியசிலும் கணிசமான தமிழ் மக்கள் இருந்த இடங்களில் இவ்விதழ் வாசகர்கள் இருந்துள்ளனர். 1893-ல் வாரம் இருமுறை இதழாக வெளிவந்த இதழ், 1897-ல் வாரம் மூன்று முறையானது. 1899-ல் மக்களிடையே அரசியல் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் இதழாக வளர்ந்தது. கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி அவர்களும் சுதேசமித்திரனைப் போற்றுகின்றார். தமிழ்த் தென்றல் திரு. வி. க, அவர்களும் சுதேசமித்திரன் பத்திரிகை உலகின் தந்தை' என்று பாராட்டுகின்றார்.

சுதேசமித்திரனில் புயல்

புதுச்சேரியில் 22.11.1916-ல் நடந்த பெரும் புயல் குறித்துச் சுதேசமித்திரனில் செய்தி அனுப்பினார் பாரதியார். தகவல் தொடர்பு இல்லாத காலம் அது. "நள வருஷம் கார்த்திகை மாதம் 8ஆம் தேதி புதன்கிழமை புதுச்சேரியில் யுகப் பிரளயம் போல இருந்தது. நெடும் பொழுதாக, புதன்கிழமை மாலை தொடங்கிய மழையும் காற்றும் கடுமையாகத்தான் இருந்தன. இடைவிடாத மழை; இடைவிடாத காற்று ஊழிக்காற்று; படீல் படீல் படீல்.. இப்படித்தான் அச்செய்தி தொடங்குகின்றது. மரங்கள் சாய்கின்றன; காந்த விளக்குக் கம்பி அறுந்து போகிறது; ஊதைக்காற்று வீசுகிறது; வெளியே என்ன நடக்கிறது என்று சாளரத்தைத் திறந்தால் மழைநீர் சரேலென்று என்று வெள்ளமாக வீட்டுக்குள் பாய்கிறது. கார்த்திகை மாதம் ஒன்பதாம் தேதி வியாழக்கிழமை பொழுது விடிந்தது. புயல் காற்று நின்றது. புதுச்சேரிப் பட்டணத்தை நேற்றுப் பார்த்த கண்ணுக்கு இன்று அடையாளம் தெரிய இடமில்லை.

தெருவெல்லாம் ஒடிந்த மரங்கள். தென்னையும் பூவரசு மரமும் வீதிகளில் அதிகம். நூற்றில் எண்பது மரங்கள் முறிந்து விட்டன; ஓடுகளும் மாடங்களின் கூரைகளும் சேதப்படாத வீடு ஒன்று கூட நான் பார்க்கவில்லை. சில கூரைகள் நெடுந்தூரம் தள்ளி விழுந்துவிட்டன. தபால் வரவில்லை. தந்திக் கம்பங்களும் காந்த விளக்குக் கம்பிகளும் அறுந்து போய்விட்டன;

ஈஸ்வரன் கோயில் சிகரம் விழுந்து விட்டது, ஏழைக் குடிசைகள் அழிந்து விட்டன; உயிர்ச் சேதமும் நிகழ்ந்திருக்கின்றது. இவ்வாறு பாரதியார் கண்களிலும் உள்ளத்திலும் முந்தின நாள் இரவு வீசிய புயல் காற்றுப் பதிந்துள்ளது. நடைபெற்ற சேதங்கள் அவரை உலுக்கிய நிலையை அவரது சொற்களில் காண முடிகின்றது. இதனை அனைவரும் அறிய வேண்டும், பாதிப்படைந்த மக்களைப் பாதுகாக்க வேண்டும், நிவாரணம் வழங்க வேண்டும் என்கின்ற இரக்க உணர்வோடு சுதேசமித்திரனில் பதிவு செய்துள்ளார். (28.11.1916), (30.11.1916) ஆகிய நாட்களில் இந்தப் புதுச்சேரிப் புயல் சுதேசமித்திரனில் வெளியிடப்பட்டுள்ளது.

பாரதி லீலையில் செய்திக் கட்டுரை

"வீட்டுக் குலதெய்வம் வீரம்மை காக்குமடா" என்று இயற்கைச் சீற்றத்தில் இருந்து வீட்டுக் குல தெய்வமே நம்மைக் காக்க வேண்டும் என்று, இயற்கையை வெல்ல எவராலும் இயலாது என்பதை 'புயல்' என்னும் கட்டுரை வழியாகப் பாரதி லீலை என்கின்ற நூலில், தானே பதிவு செய்துள்ளார் பாரதியார். புதுச்சேரியில் ஈஸ்வரன் கோவில் தெருவில் ஒரு வீட்டில் குடியிருந்தார் பாரதியார். அதன் பிறகு அதே தெருவிலுள்ள இன்னொரு வீட்டிற்கு ஜாகை மாற்றினார். புது வீட்டுக்குக் குடிபோன மறுநாள் பிரமாதமான புயல் அடித்தது. இரவு நேரம் அதாவது நள வருஷம், கார்த்திகை மாதம், எட்டாம் நாள் இரவு கோரமான புயல் காற்று அடித்து, ஜன்னல் கண்ணாடியை உடைத்து விட்டது. ஜன்னலின் கீழே பாரதியாரின் குழந்தைகள் படுத்திருக்கின்றனர். உடைந்த ஜன்னல் வழியாகத் தூற்றலும் காற்றும் சீறியடிக்கின்றன. அப்பொழுது பாரதியாரின் பத்தினியாகிய செல்லம்மாள் அவரை எழுப்பி விஷயத்தைத் தெரிவித்தார். இந்த சூழலில் தான் பாரதியார்,

மனைவி: "காற்றடிக்குது கடல் குமுறுது
கண்ணை விழிப்பாய் நாயகனே"
கணவன்: "வானம் சினந்தது, வையம் நடுங்குது
வாழி பராசக்தி காத்திடவே"

என்று பாடுகிறார். மறுநாள் காலையில் எழுந்து வீட்டு வாசலுக்குச் சென்றார்.நேற்று வரை அவர் குடியிருந்த வீடு, அன்றிரவு அடித்த புயலிலே வீழ்ந்துவிட்டது. உடனே பாரதியார்,

"நேற்று இருந்தோம் அந்த வீட்டினிலே இந்த
நேரம் இருந்தால் என் படுவோம்?"

என்று தெய்வத்தின் வலிமையைச் சிந்தித்து இப்பாடலை அவர் பாடியுள்ளார். பொழுது விடிந்தது. கதிரவன் வருகையை நேற்று இரவு புயலால் நிகழ்ந்த சேதத்தைப் பார்ப்பதற்காக எட்டிப் பார்த்தாயோ? என்று கேட்கிறார். ஊருக்கு வெளியே ஒரு சிறு தென்னந்தோப்பு. அத்தோப்பின் நடுவிலே ஒரு பள்ளம். பாரதியார் தன் மனைவி மக்களுடன் அந்தத் தோப்பிற்குச் செல்வார். சாதம் பிசைந்து எடுத்துக்கொண்டு அவர் மனைவியும் குழந்தைகளும் பின்செல்வர். எழுதுதல், நீராடுதல், உணவு உண்ணுதல் இளைப்பாறுதல், மீண்டும் எழுதுதல், பின்னர் வீடு திரும்புதல் என்று அந்தத் தோப்போடு உறவாடிக் கொண்டிருந்தார் பாரதி. இந்தத் தோப்பில் தான் அவர் குயில்பாட்டும் பாடினார். புயல் அடித்த மறுநாள் காலை, பாரதியார் தமது தோப்பினைப் பார்க்கச் சென்றார். அங்கு பக்கத்துத் தோப்புகளில் ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் முறிந்து கிடந்தன. ஆனால் பாரதியாரின் தோப்பில் ஒரு மரங்கள் கூட முறியவில்லை. அதைக் கண்ட உடனே பாரதிக்கு ஆனந்தம் பொங்கியது. கடவுளின் கருணையை வியந்து,' பிழைத்தத் தென்னந்தோப்பு ' என்ற தலைப்பில் ஒரு பாட்டைப் பாடினார்.

புதுவையில் அலங்கோலம்

முத்தியால்பேட்டை, பாக்கமுடையான் பேட்டையில் கிராமத்தின் பெரும் பகுதி அழிந்து போய்விட்டன. பல வாலிபர்கள் அன்னதானம் செய்து வருகிறார்கள். புயல் காற்றுத் தேவரை வணங்குகிறோம். அவர்கள் உலகத்தில் சாந்தி ஏற்படுத்தட்டும் என்று வேண்டுகிறார். நேற்று இரவு அடித்தது புயல் காற்று இல்லை. அது தேவர்களின் களியாட்டம். கடல் பாலத்தில் போட்டிருந்த ஆசனப் பலகைகளைக் காற்றுக் கொண்டு போய்விட்டது. இந்த ஊரில் ராஜாத் தோட்டம் என்று ஒன்று இருந்தது. அந்தத் தோட்டத்தில் மரங்கள் எல்லாம் கையாலே ஒடிக்கப்பட்ட கரும்பைப் போலே ஒடிந்திருக்கின்றன. என்கின்ற செய்தி விஜயபாரத இதழில் வெளி வந்துள்ளது (டிசம்பர் 29, 2017). அலங்கோலமாய்க் காட்சியளிக்கும் நகரின்

தெருவெல்லாம் பாரதி. நகரின் அருகில் அமைந்த சிற்றூரில் எல்லாம் பாரதி. தான் கண்ட காட்சிகளைப் பற்றி, மக்கள் அடைந்த இன்னல்கள் பற்றிச் சுதேசமித்திரனில் எழுதித் தள்ளுகிறார். அவர் கவிஞரும், தேசபக்தரும் மட்டும் அல்ல. தன்னலம் கருதாத மக்களின் தொண்டன் என்று மக்கள் பேசிக் கொண்டனர். அப்புயலின் கடுமையைப் 'புதுச்சேரியில் புயல் காற்று' என்னும் தலைப்பில் பாரதி சுதேசமித்திரன் கட்டுரைகளாக எழுதினார். 27.11.1916, 28.11.1916, மற்றும் 30.11 1916 ஆகிய மூன்று இதழ்களில் அவை தொடர்ந்து வெளிவந்தன. புயலை ஒட்டிப் புயல் காற்று, பிழைத்த தென்னந்தோப்பு ஆகிய கவிதைகளையும் எழுதினார் பாரதி.

தன்னலம் கருதாத பாரதி

சுதேசமித்திரனில் வெளிவந்த இந்தப் புதுவைப் புயல் செய்தியாகவும் அமைந்தது. செய்திக் கட்டுரையாகவும் அமைந்தது. அதே நேரத்தில் பாரதியின் உள்ளக் குறிப்பினையும் எடுத்து உணர்த்தியது. நள வருஷப் புயல் எனக் குறிப்பிடப்படும் பெரும்புயல் நூறு ஆண்டுகளுக்கு முன் புதுவையைச் சூறையாடியது. புதுவையில் அப்போது வசித்த பாரதி கவிஞராக, செய்தியாளராக, நிவாரணப் பணிகளை முன்னெடுத்த களப்பணியாளராகப் புயலையும். புயலின் விளைவுகளையும் எதிர்கொண்டார். பத்திரிகை உணர்வு, என்பது அவருடைய கவிதை உணர்வுக்குச் சமமாகக் கொலுவீற்றிருந்தது. அவரது பத்திரிகைத் துறைப் பணி, சுதேசமித்திரனில் தொடங்கி சுதேசமித்திரனில் நிறைவு பெற்றது.

முடிவுரை

தன்னலம் கருதாத மக்கள் நலனை கருத்தில் கொண்டு அக்கறை காட்டிய பாரதியார், இதழியல் துறையில் கோழைத்தனமான பத்திரிகைகளையும் அவர்கள் செய்த தவறுகளையும் எதிர்த்தவர். முறையான கட்டமைப்பில் மக்களின் சமூகத்தை அலசியவர். அக்கறை காட்டியவர். மக்களின் தேவைகளைப் புரிந்து பத்திரிகை நடத்தியவர். இதழால் பாரதி தகுதி பெற்றதும், பாரதியால் இதழ் தகுதி பெற்றதும் அவரது இதழியல் பணிக்குப் பெருமை சேர்த்தது.

துணை நூல்கள்

- பாரதி லீலை, நவசக்தி உதவி ஆசிரியர்- சக்திதாசன், சுப்பிரமணியன் (1.7.38)
- விஜயபாரதம்- தேசிய வார இதழ் டிசம்பர், 27 .2017, ஆசிரியர். தஞ்சை வெ. கோபாலன்

10. சுப்பிரமணிய பாரதியின் உந்து சக்தி



முனைவர்.க.சரசுவதி அய்யப்பன்
இணைப் பேரா.(ஓய்வு)
பாத்திமாக் கல்லூரி, மதுரை – 18.

தனிமனிதன் ஏன் ஒன்றைச் செய்கிறான் என்பதை விளக்கும் “உளவியல் சக்தியே” உந்துதல். அது மனிதச் செயல்களுக்குப் பின்னால் உள்ள “உந்து சக்தி” ஆகும். உந்துதல் என்ற உணர்ச்சி அவனது இலக்குகளை நோக்கி நெருங்க வைக்கிறது. அதற்கேற்ப அவனைச் செயல்பட வைக்கிறது. இதில் மனித நடத்தையைச் செயல்படுத்தும் உயிரியல், உணர்ச்சி, சமூக அறிவாற்றல் யாவும் அடங்கியுள்ளன. தனிமனித ஆளுமைப் பண்புக்கு ஏற்ப, குறிக்கோள் தகுதிக்கு ஏற்ப, “உந்துதல் திறம்” வெளிப்படும்.

உந்துதலை, உளவியலார் வெளிப்புற உந்துதல், உள்ளார்ந்த உந்துதல் என முக்கிய இரண்டு வகைகளாகப் பகுக்கின்றனர்உந்துதலின் முக்கிய கூறுகளாகச், செயல்படுத்துதல், தடைகளைத் தவிர்த்த விடாமுயற்சி. தீவிரத்தகுதிடைய வீரியம் போன்ற மூன்றனைக் குறிப்பிடுவர்.

உந்துதலை மேம்படுத்த உதவும் குறிப்புகளாக மனவுறுதி, தன்னம்பிக்கை மேம்பாடு, கடந்த காலச் சாதனைகளை நினைவூட்டல் போன்ற மூன்று தன்மைகள் அமைகின்றன.

மனஅழுத்தம், பதட்டம் போன்ற மனச்சூழலில் அடிப்படை மனித இயக்கங்களை ஊக்குவிக்கும் உள்ளார்ந்த நடத்தை வடிவங்களை உளவியலாளர்கள் (வில்லியம் ஜேம்ஸ், சிக்மண்ட் பிராய்ட், வில்லியம் மெக்டகல் போன்றோர்) விளக்கியுள்ளனர். அவற்றை சுப்பிரமணியன் (எ) பாரதியின் பாலபருவ உள்ளுணர்வுகளோடு அலசுவதே நோக்கம்.

செந்தமிழ் வேலி என்று போற்றப்படும் திருநெல்வேலியில் 1882-ஆம் ஆண்டு, நவம்பர் மாதத்தில் தந்தை சின்னச்சாமி ஐயருக்கும் தாயார் இலக்குமி அம்மாளுக்கும் பிறந்த மழலை. அதன் தந்தையும் கவி; தாயும் கவி; சுற்றமும் கவி; கவியே... மழலையின் சூழல். அதனால் கவியே மழலையின் ‘உள்ளார்ந்த உந்துதல் சக்தி’ ஆகி விடுகிறது.

ஏழு வயதில் மழலையின் நாவில் கவி ஊற்று; பதினோரு வயதில் ஊரார் மெச்சக் கவி புனைவு;

“பிள்ளைப் பிராயத்திலே – அவள்
பெண்மையைக் கண்டு மயங்கி விட்டேன் – அங்கு
பள்ளிப் படிப்பினிலே மதி பற்றவில்லை”

என்றபடியாய் பள்ளிப்படிப்பை மறுத்து, கவிபுனையும் ‘உள்ளார்ந்த உந்துதல்’ அவருள்ளே ,மேலோங்கி இருந்தது.

நமது நாட்டு இயற்கை வள ஆதாரங்களைச் சுரண்டி வாணிகம் செய்யும் நோக்குடைய ஆங்கிலேயரின் சூழ்ச்சிக்கு ஆளான தந்தை சின்னச்சாமி அய்யரின் துயரமும் இழப்பும் வளர்ந்து வரும் மழலைக் கவிக்கு “வெளிப்புற உந்துதலாய்” அமைகிறது. இதனை

“ஈங்கு இதற்கிடை எந்தை பொருந்துயர்
எய்தி நின்றனன், தீய வறுமையான்;
ஓங்கி நின்ற பெருஞ்செல்வம் யாவையும்
ஊணர் செய்த சதியில் இழந்தனன்”

அன்னாரது, சுயசரிதைப் பாடல் – 39, விளக்குகின்றது.

மழலைக்கவி வாழ்ந்த நாளில் – எட்டையபுரத்தில் தாய்மொழி தமிழுக்குச் செல்வாக்கு இல்லை. அந்நியர் ஆட்சியே, நிலவி இருந்தது. இத்தகு சமூக முரண்பாடும்; தனது குடும்ப நிதி நலிவும், தொடர முடியாத கல்விச் சூழலும் பாரதியைத் தாக்கும் வேளையில், செயல்படுதல்,

தடைகளைத் தவிர்க்கும் விடாமுயற்சி, தீவிரத் தகுதி உடைய வீரியம் சார்ந்த உந்து சக்திக்கு 'கவிதையே' ஊற்றுக் கண்ணாக உதவியது.

1897-இல் பாரதியின் திருமணம். 1898-இல் பாரதியின் தந்தை இறப்பு.இளவயது மணம்; தந்தை இழப்பு என்பதான வாழ்வியல் இருட்டுப் புறச்சூழல் உந்துதலில்... அதனை மேம்படுத்தும் துணைக் கருவிகளாய் மனவுறுதி, தன்னம்பிக்கை, சாதனை நினைவூட்டல் ஆகியன 'கவிதை எழுத்தாக்க உந்து சக்தியாய்' சுப்பிரமணிய பாரதிக்குள் ஊற்றெடுத்தது... ஊற்றெடுத்த உணர்வுகளின் வடிகாலாய்.. எட்டயபுர மன்னனுக்கு அகவற்பா வடிவில் பாரதி எழுதிய விண்ணப்பம் அமைகிறது. அதுவே, ஆதாரம் ஆகிறது.

"இன்னமுதினும் அவை எய்வுறீஇ அமைந்த
செந்தமிழ்த் திருமொழி சிறிதும் ஆதரிப்பவர்
இன்மையின், இந்நாள் இனிது கற்பவர்க்கு
நன்மை பயவாது நயந்திட, மற்றைப்
புன்மொழி யாவும் பொலிவுற லாயின;"

தாய்மொழியை ஆதரிக்காதவர் தாய் மண்ணில் பெருகியதும் தாய்மொழியைக் கற்றவர்களுக்கு நன்மை இல்லாததுமான சமூக இருட்டு பாரதியைச் சிந்திக்க வைத்தது. அவற்றை மாற்றுவதும் ஒளியேற்றுவதும் பாலகனின் சமூகக் கடமையாக நிலைபெற அவனது உள்ளார்ந்த ஊக்க சக்தியே பெருங்காரணி.

".....உலகினைப் பற்பல வகையினர் புலைஞர் மாண்பினோடு ஆளலின்
ஆதலின், ஐய, நின் அருளே அருங்கதியென்ன
உய்ய இவண் வந்துற்ற என் தந்தையார், "

என்பதான அடிகள், ஆங்கில ஆட்சியாளர்களின் ஆதிக்கப் போக்கும் தன் தந்தையின் பொருளாதார நலிவு சார்ந்த இருண்மைப் போக்குமான போராட்ட வெளியின் எதிர்ப்பு சக்தியே பாலகனின் விடாமுயற்சி உந்து சக்தி ஆனது.

"என்னை யான் செய்குவது?
இந்தமிழ் கற்பேனா?
பின்னை ஒருவரும் பேணார் ஆதலின்
கன்ன, யான் இம்மொழி கற்கத் துணிந்தனன்; எனினும்,
கைப்பொருள் அற்றான் கற்பது எவ்வகை?
பொருளால் அன்றிக் கல்வியும் வரவில;
கல்வியால் அன்றிப் பொருளும் வரவில;
முதற்கண் கல்வியே பயிறல் முறைமையாம்
அதற்குப் பொருள் இலை; ஆதலின் அடியேன்
வருந்தியே நின்பால் வந்தடைந்தேன்"

என்பதாக, எட்டையபுர மன்னனை நாடி வந்ததைச் சுட்டும் அடிகள், கல்வி பயிலத் துடிக்கும் பாரதியாம் இளம் மாணவ மன எழுச்சியை வெளிப்படுத்துகின்றன. அவை இயல்பான மன எழுச்சிக்கும் வறுமைக்குமான முரண்பாட்டில் எழுந்த தனிமனித அவலத்தைப் பேசுகின்றன. அவையே தாய்மொழியை நேசிப்பது; வறுமையை மாற்றுவது ஆகியவற்றின் உந்து சக்தியாகவும் மன்னரை நாடி வந்தடைந்த பாலகனின் செயலாகவும் பரிணமித்தது.

"பெரும்திரு உடையை, நின் பேரருள் உடைமையான்
மாந்தர் புரத்தல் வேந்தர் தம் திருவருட்கு
இலக்கியம் ஆதலின் எளியனேற்கு இந்நாள்
அரும்பொருள் உதவி நீ அனைத்தும் அருள்வையால்..."

என்றமைந்த கோரிக்கை... எட்டயபுர மன்னனின் பேரருளை நினைவூட்டுவதாய் –அவன் மக்களுக்குச் செய்யும் கடமையைச் சுட்டுவதாய் – மன்னர்களின் வாழ்வியல் தகுதியைச் சொல்வதான உட்பொருள் எனலாம். ஆளுவோரின் மன இருளைச் சொல்லும், இக்கருத்து பாலகனின் தன்னம்பிக்கை மேம்பாடாக உயர்ந்து – 'பாரதி' என்ற புனைபெயர் தந்த சாதனையின் விளைவாக வெளிவருகிறது.

"என்னை, இச்சிறுவன் இயம்புவது? என்னாது

மன்னா! நின் அருளால் அடியனை வாழ்வித்து
உன்னருளாளே உய்ந்தோன் எனப் பிறர்
என்னைச் சாற்றலால் இரும்புகழினை எற்கு
ஈந்தருளிதி நீ இனிது வாழ்கவே"

சிறுவனாகிய என்னைப் பழிப்பதை மறந்து, என்னை வாழ்வித்து மன்னனாகிய உனது நிலையான புகழுக்கு வழிகாட்டும் இக்கோரிக்கையில் அவன் அமைத்த பாலகனின் 'வாழ்த்து' அவனது விடாமுயற்சி உந்து சக்தி வெளிப்படுத்திய வீரியத் தன்மையைக் காட்டுகிறது. தான் பிறந்து வளர்ந்த இருபது ஆண்டுகளுக்குள் அவனது படைப்பாக்க வீரியமான 'கவிதை' பின்னாளில் பத்திரிகைப் பணியாக (1904க்கு மேல்) விரிவடைகிறது. தெரிவித்தல், மகிழ்வித்தல், அறிவுறுத்தல் போன்ற இதழிய பண்புகள் பாரதியின் உள்ளார்ந்த உந்து சக்தியில் மேலோங்குவதற்கு சுதேசமித்ரன், இந்தியா, சக்கரவர்த்தினி போன்ற பத்திரிகைகள் உதவி செய்தன.

"ஒரு நாட்டின் சீரும் சிறப்பும் அந்நாட்டு மாந்தர்களைப் பொறுத்தே பெரும்பாலும் இருத்தலின் தேச நலத்தைக் கருதும் நன்மக்களெல்லாம் அதினுங் கவலை செலுத்தற்குரியர்" என்று செந்தமிழ் பத்திரிகையில் சக்கரவர்த்தினியைப் பற்றி அமைந்த மதிப்புரை, பாரதியின் பத்திரிகைப் பணிக்கான உந்து சக்தியைக் குறிப்பிடுகிறது.

'சக்கரவர்த்தினி' பத்திரிகையின் தலையங்கப் பகுதியில் – பாரதி இயற்றியதாகக் கருதப்படும்

"பெண்மை அறிவுயரப் பீடோங்கும் பெண்மைதான்
ஒண்மையுற வோங்கும் உலகு" என்ற ஈரடிக் குறட்பா
அவரது ஆக்க சக்தி வெளிப்பாட்டுக்கு ஆதாரமாகிறது.

" ஆணெல்லாம் கற்பை விட்டுத் தவறு செய்தால்
அப்போது பெண்மையும் கற்பழிந்திடாதோ?
நாணற்ற வார்த்தையன்றோ? வீட்டைச் சுட்டால்
நலமான கூரையுந்தான் எரிந்திடாதோ? "

என்று 'பாரதி அறுபத்தாறு' பகுதியில் எழுதுவதற்கு அவனது 'ஆக்க சக்தியே' ஆணிவேர். சக்கரவர்த்தினியில் எழுதி வந்த "துளஸீ பாயி சரித்திரம்" என்ற நெடுங்கதை...

'ராஜாராம் மோகஹன ராயர்' என்ற தலைப்பில் அமைந்த கட்டுரைகள் யாவும் பாரதியின் சமூக விழிப்புணர்வு எழுச்சிக்கான உந்து சக்தியே"ஆறிலொரு பங்கு" என்ற நீண்ட சிறுகதை தனி புத்தக வடிவில் 1910 ஆம் ஆண்டில் வெளிவரச் செய்த முயற்சி...

"இந்நூலை பாரத நாட்டில் உழவுத் தொழில் புரிந்து நமக்கெல்லாம் உணவு கொடுத்து ரஷிசிப்பவர்களாகிய பள்ளர், பறையர் முதலிய பரிசுத்தத் தன்மை வாய்ந்த வைசிய சகோதரர்களுக்கு சமர்ப்பணம் செய்கிறேன்."என்ற சமூகக் கடமையாய் அன்னாரின் தீவிரத் தகுதியுடைய வீரியமான உந்து சக்தி தன்மைக்கு, எடுத்துக்காட்டு எனலாம்.

சுப்பிரமணிய பாரதியின் பால பருவ கசப்பான அனுபவங்களும் சொல்ல முடியாத நிதி நெருக்கடிகளும் அவருள்ளே வீரியத்தை வளர்த்தன. அதுவே தேசப்பக்திக்கான 'விதை'யாகி... எழுச்சிப் பெற்று, அன்னாரது படைப்பாக்க வடிவங்களாய் பரிணமித்து வளர்ந்ததை உளவியலாளர் நோக்கில் அறிகிறோம்.

11. சக்தி மைந்தன்



கா.முத்து ஞானம்
கூட்டு மாவட்ட ஆளுநர்
தமிழால் இணைவோம், சென்னை

முன்னுரை

அனைத்து உயிர்களிடமும் அன்பு பாராட்டியவன், வாழ்ந்து காட்டியவன், வாக்கின் மூலம் அதாவது தன் எழுத்துக்களின் மூலம் மனித சமுதாயத்திற்கும் அதை உணர்த்தியவன். வையகம் வாழ்ந்திடவே, தன் மூச்செல்லாம் தமிழுக்கும், கவிக்கும் கொடுத்தவன். அன்பு, சமத்துவம், வீரம், விடுதலை, பக்தி இவை அனைத்தையும், அவன் படைப்புகளில் காண்கிறோம். மகாகவி பாரதி யாரில் இதைக் கண்டான்? அன்னை பராசக்தியிடம். "பின்பு நின்னை அல்லால் காளி பிறிது நானும் உண்டோ" என்ற அடியின் மூலம் அன்னையிடம் அவர் கொண்ட அன்பை, பாரதியின் தொடக்கமும் எல்லாமும் அவளே என்பதையும் நாம் உணரலாம்.

கருணையின் உச்சம்

பக்திப் பாடல்களில், 31 பாடல்கள் பாரதி, சக்திப் பாடல்களாகப் பாடி இருக்கிறார். சிவசக்தி என்று தொடங்கும் முதல் பாடல், காணி நிலம் வேண்டும், நல்லதோர் வீணை, மஹாசக்திக்கு விண்ணப்பம், பராசக்தி, மஹாசக்தி வெண்பா சக்திக்கு ஆத்ம சமர்ப்பணம், பேதை நெஞ்சே, காளிப் பாட்டு என்று அன்னையின் புகழும், அவளின் வியாபகத் தன்மையும், அவளைத் தன்னுள் உணர்ந்து, பாரதி உலகைப் பார்த்த பார்வையும், உலகத் தாயிடம், சேயாக அவன் வேண்டியவை, மெய்ஞ்ஞானம் உணர்ந்தமை அனைத்தையும் நாம் தெரிந்து கொள்ளலாம்.

'சிவசக்தி' என்ற தலைப்புப் பெற்ற முதல் சக்திப்பாடலின், 7வது மற்றும் 8வது பாடலில் , 'பாரதியின் நேர்மையையும், மேன்மையையும் சொல்லும் - 'நின்னருள் வேண்டுகின்றோம் – எங்கள் நீதியுந் தர்மமும் நிலைப்பதற்கே; அவன் அன்பையும் கருணையையும் பறைசாற்றும் – 'அன்னநல் லணிவயல்கள் – எங்கள் ஆடுகள் மாடுகள் குதிரைகளும், இன்னவை காத்திடவே – அன்னை இணைமலர்த் திருவடி துணை புகுந்தோம்; என்ற அடிகள் மிளிர்கின்றன.

தனக்கென்று வாழவும் இல்லை, தன்னை முன்னிறுத்திப் பாடவும் இல்லை. சக்தியைப் போற்றினான், துதித்தான், தம் மக்களுக்காக என்பதை 'நாட்டு மக்கள் பிணியும் வறுமையும் நையப் பாடென்றொரு தெய்வங் கூறுமே. கூட்டி மானுடச் சாதியை ஒன்றெனக் கொண்டு வையம் முழுதும் பயனுறப் பாட்டிலே அறங் காட்டெனு மோர் தெய்வம்` என்ற `பராசக்தி` பாடல் இயம்புகிறது, நமக்குத் தெளிவாக.

செறிவும் தெளிவுமே சக்தி மைந்தன்

சிந்தையிலும் வாக்கிலும் அவன் தெளிவை செறிவை `யோக சக்தி` பாடல் அடிகள் மூலம் நாம் அறியலாம். 'நின்னைச் சிலவரங்கள் கேட்பேன் – அவை நேரே இன்றெனக்குத் தருவாய்`. என்னவெல்லாம் கேட்டான் பாரதி- மதி தன்னை மிகத் தெளிவு செய்தல், புதிய உயிராக்குதல், உடல் உறுதி கொடுத்தல். என்னவெல்லாம் அடைவேன் என்றான் பாரதி –

சோறு தின்று, உறங்கி, எழுந்து, கதை பேசி விழாமல் உன்னைச் சரண் புகுவேன், எண்ணமெல்லாம் வெற்றி கொள்வேன், பாடும் திறம் அடைவேன், இன்பம் பெறுவேன், கல்வி, வீரம், வெற்றி, ஆண்மை பெறுவேன், பொய்மை, இருளெல்லாம் எனைவிட்டகன்று இனி வையத் தலைமை எனக்கருள்வாய் அன்னை வாழி! நின்ன தருள் வாழி!

தன்னம்பிக்கையும் சரணடைதலும்

இந்தப் பிரபஞ்சம் முழுதும் வியாபித்திருக்கும் அன்னை பராசக்தியின் பக்தன், மாமனிதன் பாரதி. ஒரு தத்துவத்தைக் கடைபிடிப்பது என்பது பெருமை இல்லை. அது பெரிய பொறுப்பு. உலகைக் காக்கும் அன்னையின் தாசனாகிய பாரதி, அவளுடைய தன்மையை உள்வாங்கி பிரதிபலிப்பவராக இருக்க வேண்டும் அல்லாது பிறிது இருப்பாரானால் அவருக்கும், அன்னைக்கும் அது பொருந்துமோ!! சக்தியின் பெருங்கருணையும், பாரதியின் மனித நேயமும் கீழ்க்காணும் கவி அடிகள் பறைசாற்றுகின்றன.

“மண்ணிலார்க்குந் துயறின்றிச் செய்வேன்
வறுமை என்பதை மண்மிசை மாய்ப்பேன்
தானம் வேள்வி தவங்கல்வி யாவும்
தரணி மீதில் நிலைபெறச் செய்வேன்
மானம் வீரியம் ஆண்மை நன்னேர்மை
வண்மை யாவும் வழங்குறச் செய்வேன்
ஞானமோங்கி வளர்ந்திடச் செய்வேன்
நான் விரும்பிய காளி தருவாள்”

வையத்தைக் காக்கும் பொறுப்பை அவன் எடுத்துக் கொண்டான், செயல்களின் மூலமாக முக்கண்ணியைச் சரணடைந்தான்.

முடிவுரை

சாக்தத்தின் தத்துவார்த்தத்தைப் பாரதியின் 'யாதுமாகி நின்றாய் காளி' பாடலில் உணரலாம். புரட்சிக் கவிஞன்' தீது நன்மை எல்லாம் காளி தெய்வ லீலை அன்றோ' என்று பாடுவது, பாரதியின் தனித்தன்மை. பராசக்தியின் ஆளுமையைத் தமிழின் உவமை, உவமான, உருவகங்களால் எழுத்தோவியமாகக் கொடுத்திருக்கிறான் பாரதி இந்தப் பாடலில்-

“காலமாம் வனத்திலண்டக் கோலமா மரத்தின் மீது
காளிசக்தி என்ற பெயர் கொண்டு - ரீங்
காரமிட்டு லவுமொரு வண்டு..”

தமிழ் அன்னையின் தவப்புதல்வன், சக்திமைந்தன்
பாரதியை என்றும் வணங்குவோம், போற்றுவோம்.

12. நிலையான வளர்ச்சி அடைவதற்கு பாரதி கூறும் வழிமுறைகள்

(Bharathi's ways to achieve the Sustainable Development Goals)



முனைவர் ச. சந்திரகலா
தமிழ்துறைத்தலைவர்
பிபிஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சரவணம்பட்டி, கோயம்புத்தூர் -641035

ஆய்வுச்சுருக்கம்

நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்டு, நிலையான வளர்ச்சிக்கான உலகளாவிய இலக்குகளாக ஊக்குவிக்கப்படுகின்றன. அவை 2015 ஆம் ஆண்டின் இறுதியில் காலாவதியான மில்லினியம் மேம்பாட்டு இலக்குகளை மாற்றியமைத்தன. நிலையான வளர்ச்சி இலக்குகள் 2015 முதல் 2030 வரை இயங்குகின்றன. அந்த இலக்குகளுக்கு 17 இலக்குகளும் 169 குறிப்பிட்ட இலக்குகளும் உள்ளன.இந்த நிலையான இலகுகுகளை அடைவதற்கான வழிமுறைகளை அன்றே பாரதி தன்பாடல்களில் எடுத்தியம்பியுள்ளார் .பாரதியின் வழியைப் பின்பற்றினால் இயற்கை வளங்களும்,சமூகமும்,நாடும் முன்னேறும் என்பதை வலியுறுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச் சொற்கள்

உலகளாவிய இலக்குகள், இயற்கை வளம், சமூக முன்னேற்றம், நாட்டின் வளம், பாலின சமத்துவம், தரமான கல்வி

முன்னுரை

சமூக அக்கறையோடு படைப்புகளைப் படைத்தவர் பாரதியார். அவர் அன்பு,அக்கறை ஜாதி ஒழிப்பு என படைப்புகளில் மட்டுமல்லாது வாழ்ந்தும் காட்டியவர் . அவரை பிற கவிஞர்களோடு ஒப்பிட்டுக் கூற இயலாது, பாரதிக்கு நிகர் பாரதியே.இந்திய நாடு வளமிகுந்த நாடு.அந்த வளத்தை அனுபவிக்கும் நோக்கில் அந்நியர்கள் உள்ளே புகுந்தார்கள்.அதற்கு முக்கிய காரணம் சமூகத்தில் ஏற்பட்ட ஏற்றத்தாழ்வுகளும்,உட்பூசல்களும் ஆகும்.இந்த ஏற்றத்தாழ்வுகளை களைந்து,நாட்டின் விடுதலையை மையக்கருவாகக் கொண்டதே பாரதியின் படைப்புகள்.நிலையான வளர்ச்சி இலக்குகள் (SDGs) ஐக்கிய நாடுகள் சபையால் உருவாக்கப்பட்டு, நிலையான வளர்ச்சிக்கான உலகளாவிய இலக்குகளாக 2015 ஆம் ஆண்டில்தான் ஊக்குவிக்கப்படுகின்றன. ஆனால் பாரதியின் பெரும்பாலான படைப்புகள் நிலையான வளர்ச்சிக்கான இலக்குகள் ஆகும். இவற்றை ஆராய்தாக இக்கட்டுரை அமைகிறது.

நிலையான வளர்ச்சி இலக்குகள்

1. வறுமை இல்லாத நிலை 2.பசி ஒழிப்பு 3.ஆரோக்கியம் மற்றும் நல வாழ்வு 4. அனைவருக்கும் தரமான கல்வி5.பாலின சமத்துவம் 6.சுத்தமான நீர் மற்றும் சுகாதாரம் 7. மலிவு மற்றும் சுத்தமான எரிசக்தி 8.நல்ல வேலை மற்றும் பொருளாதார வளர்ச்சி 9. தொழில் புதுமை மற்றும் உள்கட்டமைப்பு 10.சமமின்மையை குறைத்தல் (ஒற்றுமை வளர்த்தல்) 11. நிலையான நகரங்கள் மற்றும்சமூகங்கள்12. பொறுப்பான நுகர்வு மற்றும் உற்பத்தி 13. பருவநிலை மற்றும் நடவடிக்கை 14. கடல்சார் வளங்களை பாதுகாத்தல் 15.

நிலவ வளங்களை பாதுகாத்தல் 16. அமைதி மற்றும் நீதிக்கான வலுவான நிறுவனங்கள் 17. இலக்குகளை அடைவதற்கான கூட்டமைப்புகள்.

நிலையான வளர்ச்சியின் முக்கிய தத்துவம்

எதிர்கால சந்ததியினரின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் திறனை பாதிக்காமல், தற்போதைய தலைமுறையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகும். இது சுற்றுச்சூழல், பொருளாதாரம் மற்றும் சமூக மேம்பாடு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த வளர்ச்சியை உள்ளடக்கியது.

நிலையான வளர்ச்சியின் முக்கிய அம்சங்கள்

சுற்றுச்சூழல் பாதுகாப்பு,இயற்கை வளங்களை பாதுகாத்தல், மாசுபாடு மற்றும் இயற்கை சீரழிவைக் கட்டுப்படுத்துதல். சமூக நீதி:அனைத்து மக்களுக்கும் சமமான வாய்ப்புகள் மற்றும் வளங்களை வழங்குதல், வறுமை மற்றும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்.

பொருளாதார மேம்பாடு: நிலையான பொருளாதார வளர்ச்சியை அடைதல், இது வேலைவாய்ப்பு, வருமானம் மற்றும் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்துகிறது.

நீண்ட கால பார்வை: குறுகிய கால லாபத்திற்காக இயற்கை வளங்களைச் சுரண்டுவதைத் தவிர்த்து, எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக செயல்படுதல்.

சமூக பங்கேற்பு: நிலையான வளர்ச்சியை அடைவதில் அனைத்து பங்குதாரர்களையும் ஈடுபடுத்துதல், அரசாங்கம், தனியார் துறை மற்றும் பொதுமக்கள் அனைவரும் இதில் பங்கேற்க வேண்டும். நிலையான வளர்ச்சியை அடைவதற்கு, சுற்றுச்சூழல் பாதுகாப்பு, சமூக நீதி மற்றும் பொருளாதார மேம்பாடு ஆகிய மூன்று தூண்களையும் சமநிலையில் பேண வேண்டும்.

ஒற்றுமை வலிமையாம்: நமது நாட்டில் பல சாதிகள், பல மொழிகள், பல மதங்கள், பல இனங்கள் ஆகிய வற்றால் வேறுபட்ட மக்கள் வாழ்கிறார்கள். இத்தகைய வேற்றுமையில் ஒற்றுமை காண்பது நமது நாட்டின் -உயர்ந்த பண்பாடாக அமைந்துள்ளது.

பாரதி தனது பல்வேறு பாடல்களிலும் இந்த ஒற்றுமையை வலியுறுத்தியுள்ளார்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு நம்மில்" -என்றும், பாரதியார், பாரதியார் கவிதைகள் ப.19

"முப்பது கோடியும் வாழ்வோம் வீழில் " - பாரதியார், பாரதியார் கவிதைகள் ப.20 என்றும், நாட்டுமக்களின் முழுமையான ஒற்றுமையை பாரதி வலியுறுத்திக் கூறியுள்ளார்.

"முப்பது கோடி முகமுடையாள்" - பாரதியார், பாரதியார் கவிதைகள் ப.29

என்று அன்றைய பாரதத்தின் மக்கள் தொகையான முப்பது கோடியைக் குறிப்பிட்டு, முகம் முப்பது கோடி என்று உயிர் ஒன்று என்றும், செப்பு மொழி பதினெட்டு ஆயினும் சிந்தனை ஒன்று என்றும், நாட்டின் ஒற்றுமையை வலியுறுத்தி பாரதி பாடியுள்ளார்.

"எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓரினம் எல்லாரும் இந்திய மக்கள்"
பாரதியார்,பாரதியார் கவிதைகள்

ப.45

என்றும், பாரதி மேலும் நாட்டின், நாட்டு மக்களின் ஒற்றுமையை எடுத்துக் கூறுகிறார்.

"ஒற்றுமை வழி யொன்றே வழியென்பது
ஓர்ந்திட்டோம் நன்கு தேர்ந்திட்டோம்" பாரதியார், பாரதியார் கவிதைகள் ப.224

இவ்வாறு பல்வேறு துறைகளில் நாட்டு மக்களின், ஒற்றுமையை வலியுறுத்தி பாரதி ஒற்றுமையே வலிமையாம் என்று புதிய ஆத்திசூடியிலும் எடுத்துக் காட்டுகிறார்.

பாலின சமுத்துவம்

பெண்களை உயர்வு செய்ய வேண்டியதற்கு பாரதி எப்போதுமே முதலிடம் கொடுத்துள்ளார். அச்சம், நாணம், மடம், பயிர்ப்பு என்னும் பழைய கருத்துக்களை எல்லாம் தூக்கி வீசியெறிந்து குப்பையில் போட்டு விட்டு "அச்சமும் நாணமும் நாய்களுக்கு வேண்டுமாம், கற்பு நிலையென்றால் இருசாராருக்கும் பொதுவாக்குவோம்" என்று உறுதியாக முதலில் பேசியவன் பாரதியேயாகும். இன்றைய பெண்ணுரிமை இயக்கத்திற்குப் பாரதி முன்னோடியாவார். பெண் என்றால் தாய், தமக்கை, தங்கை, மனைவி, மகள், மருமகள், பேத்தி எனவே சமுதாயத்தின் சரிபாதி, இதை பாரதி மிக வலுவாக வலியுறுத்திப் பாடியுள்ளார். இன்று பாரத நாட்டின் பல பகுதிகளிலும் பெண்கள் அடிமையிலும் அடிமைகளாக இருக்கிறார்கள். அதில் சில மாற்றங்கள் அண்மைக் காலத்தில் ஏற்பட்டிருந்த போதிலும் இன்னும் மாற்றங்கள் ஏற்பட வேண்டும். பெண்கள் நிலையை உயர்த்த வேண்டும். பெண்கள் படிக்க வேண்டும். எல்லாத் துறைகளிலும் பெண்கள் ஈடுபட வேண்டும், ஆண்களுக்கு நிகராக அனைத்துப் பணிகளிலும் பெண்கள் உயர வேண்டும். ஆண்களும் பெண்களும் சமமாக நின்று நாடு முன்னேறப் பாடுபட வேண்டும். இது பாரதியின் கருத்தாகும்.

"மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்"

பாரதியார்,பாரதியார் கவிதைகள் ப.63

என்று விடுதலைப்பாட்டில் பெண்களின் விடுதலையைப் பற்றி பாடியுள்ளார்.

தனது பக்திப் பாடல்களில் சக்தியை அதிகமாகப் போற்றிப் பாடுகிறார். சக்தி, பராசக்தி, வள்ளி தேசமுத்துமாரி, கலைமகள், திருமகள், கண்ணம்மா என்றும் பாடுகிறார். பாஞ்சாலி சபதத்தைக் காவியமாகவே பாடி பெண்ணை உயர்த்துகிறார்.

"பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான் புவி பேணி வளர்த்திடும் ஈசன்.."

பாரதியார்,பாரதியார் கவிதைகள் ப.230

என்று பாரதி முரசுப்பாட்டில் கூறுகிறார்.மனிதனுக்கு இரண்டு கண்கள் இருப்பதைப் போல சமுதாயத்தின் இரு கண்கள் ஆண்களும் பெண்களுமாகும். இதில் ஒன்றைக் குத்தி எடுத்து காட்சிப் பொருளாக வைக்கலாமா என்று பாரதி கேட்கிறார். பெண்களுடைய அறிவை வளர்த்தால் உலகில் பேதமை போகும் என்பது உண்மை. எனவே பெண்கள் நிலையை உயர்த்த வேண்டும்.

புதுமைப் பெண், பெண்விடுதலை, பெண்மை என்னும் தலைப்புகளில் பாரதி அருமையான கவிதைகளைத் தந்துள்ளார். அதில் பாரதி பெண்கள் விடுதலை பற்றியும், புதுமைப் பெண்ணின் உயர்வான கருத்துக்களையும் கொள்கைகளையும் வகுத்துக் கொடுத்துள்ளார்.

விடுதலையென் பீர் கருணை வெள்ள மென்பீர், (பாரதி அறுபத்தாறு ப-45)

பெண்களே குழந்தைகளைப் பெற்று வளர்க்கிறார்கள். பெண்கள் அறிவிலும் வீரத்திலும் குணத்திலும் சிறந்தவர்களாக இருந்தால் அவர்களுடைய குழந்தைகளும் அறிவிலும் வீரத்திலும் சிறந்து விளங்குவார்கள் என்கிறார்.

பொருளாதார வளர்ச்சி

நாட்டின் மொத்த உற்பத்திச் செல்வத்தை வீட்டின் மொத்த வருமானத்தை தனிநபர் வருமானத்தைப் பெருக்கி நாட்டு வளத்தைப் பெருக்குவதாகும்.நாட்டின் இயற்கை வளங்களைப் பயன்படுத்தி முதல் நிலை உற்பத்தியை அதாவது ஆதார உற்பத்தியைப் பெருக்கி மனித உழைப்பின் மூலம் மறு உற்பத்தியைப் பெருக்கி நாட்டின் மொத்த செல்வத்தையும் வருமானத்தையும் அதிகப்படுத்த வேண்டும். இதன் மூலம் மக்களுக்குத் தேவையான உபயோகப் பண்டங்களும் அதிகமாகக் கிடைக்கும். அதுவே ஒரு நாட்டின் வளத்தைக் குறிப்பதாகும்.

உழவுக்கும்தொழிலுக்கும்வந்தனைசெய்வோம்-வீணில்
(சுதந்திரப்பள்ளு - சரணம் 4)
மண்ணெடுத்துக் குடங்கள் செய்வீரே
(பாரதியார் தொழில் ,பா2)

நிலம். காடு. மலை, சுரங்கம், கடல் ஆகியவற்றிலிருந்து மனித முயற்சி மூலம் மனித உழைப்பின் மூலம் தேவையான ஏராளமான பொருள்கள் கிடைக்கின்றன. நிலத்தில் சாகுபடி செய்வதன் மூலம் சமுதாயத்திற்குத் தேவையான உணவுப் பொருட்கள் தொழில்களுக்குத் தேவையான மூலப்பொருட்களான பருத்தி, சணல், கரும்பு, நிலக்கடலை, தேங்காய் முதலிய பொருட்களும் காய்கறி, கனி, மலர் முதலிய உபயோகப் பொருட்களும் கிடைக்கின்றன. இதை நிலத்திலிருந்து கிடைக்கும் முதல் நிலை உற்பத்திப் பொருட்செல்வம் என்று கூறுகிறோம்.

கடல்சார் வளங்கலை பாதுகாத்தல்

கடலிலிருந்து மீன், உப்பு முதலியவை கிடைக்கின்றன. உப்பளங்களிலிருந்து ஜிப்சம் உப்பிலிருந்து பலவகை வேதியியல் பொருட்கள் அவைகள் மூலம் பிளாஸ்டிக் செயற்கை நூல் மற்றும் பல உபயோகப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன.இவ்வாறு முதல் நிலை உற்பத்தி மறு உற்பத்தி மூலம் சமுதாயத்திற்குத் தேவையான ஏராளமான பொருட்களை உற்பத்தி செய்கிறோம். அந்த உற்பத்தி மனிதனுடைய உடல் உழைப்பு அறிவு உழைப்பின் மூலம் நிறைவேற்றப்படுகிறது. இவைகளே நாட்டின் மொத்தச் செல்வமாகும். அவைகரின் பண மதிப்பில் நாட்டின் மொத்த செல்வத்தையும் கணக்கிடலாம். இத்தகைய உற்பத்திப் பெருக்கத்தின் மூலம் நாட்செல்வம் வீட்டின் செல்வமம்.

முடிவுரை :

நவீனத் தமிழ் கவிதைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் மகாகவி பாரதி.தமிழ்,தமிழர் நலன்,இந்திய விடுதலை,பெண் விடுதலை,சாதி மறுப்பு,எனப் பலப் பொருண்மைகளில் இவரது படைப்புகள் அமைகின்றன.மேலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு,இயற்கை வளங்களை பாதுகாத்தல், மாசுபாடு மற்றும் இயற்கை சீரழிவைக் கட்டுப்படுத்துதல். சமூக நீதி,அனைத்து மக்களுக்கும் சமமான வாய்ப்புகள் மற்றும் வளங்களை வழங்குதல், வறுமை மற்றும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைத்தல்,பாலின சமத்துவம் முதலான நிலையான இலக்குகளை அடைவதற்கான அம்சங்களாக பாரதி படைப்புகள் திகழ்கின்றன.

துணை செய்த நூல்கள்

1.பாரதியார் கவிதைகள்,கானல் வெளியீடு,சென்னை. 2.விக்கிபீடியா - தமிழ்

3.https://ta.wikisource.org/wiki 4.https://www.tamilyu.org/ 5.https://sustainabledevelopment.un.org

13. பாட்டுக்கொரு புலவன் பாரதி



சி.கனகலெட்சுமி
பட்டதாரி ஆசிரியர், ஊ.ஒ.ந.நி.பள்ளி போடிபாளையம்
பொள்ளாச்சி வடக்கு கோயம்புத்தூர்

முன்னுரை

'வீரன் ஞானத்தின் தந்தை எங்கள் நற்கவி. வானென உயர்ந்த பாடல் வாழிய பல நாள் நிற்றே' என்று நம் தேசியக் கவியை வாயார வாழ்த்துகிறார் கவிஞர் கண்ணதாசன். எட்டயபுரத்தில் பிறந்து, உலகில் வாழும் உள்ளங்களில் எல்லாம் நீக்கமற நிறைந்திருக்கும் தமிழ்க் கவி. விடுதலை வேட்கையைத் தம் எழுத்துக்களில் பதித்து நாட்டு விடுதலைக்கு வித்திட்டவர். பாரதி தான் சந்தித்த துயரங்களையும் போராட்டங்களையும் எதிர்ப்புக்களையும் தன் நெஞ்சுரத்தால் வென்றார். மகாகவியின் அமுதப் படைப்புகளில் இருந்து அவரின் தனித்துவம், சமத்துவம், நாட்டுப்பற்று, இறை உணர்வு, தீர்க்கதரிசனம் போன்றவற்றை இந்த ஆய்வுக் கட்டுரையில் காண்போம்.

தனித்துவம்

படிப்பவர்களையும் கேட்பவர்களையும் தன் கவிதைகளால் கட்டிப்போட்டு தன் வசப்படுத்தும் மாமனிதர். பாரதியார் தனித்துவம் மிக்கவர். சொல்லாலும் செயலாலும் பிறருக்கு உதாரணமாக வாழ்ந்து காட்டியவர்.

*தேடிச் சோறு நிதம் தின்று - பல சின்னஞ் சிறு கதைகள் பேசி
மனம்வாடி துன்பம் மிக உழன்று - பிறர் வாட பல செயல்கள் செய்து
பக்தி பாடல்கள் யோக சித்தி (வரங் கேட்டல்) (பா. க. பக். 143)

இந்த உலகில் ஏதோ பிறந்தோம் வாழ்ந்தோம் என்று வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் சாதாரண மனிதன் என்று தன்னை அவர் எண்ணிக் கொள்ளவில்லை. செயற்கரிய செயலால், தனித்துவத்தால், இயலாதது இல்லை என்ற துணிவால் தான் மரணித்தும் சாகா வரம் பெற்றுச் சரித்திரத்தில் நிலைத்து நிற்கிறார் பாரதியார்.

மாமருந்து

காயம் பட்ட இதயங்களுக்கும் கலங்கி நிற்கும் உள்ளங்களுக்கும் அருமருந்தாய் பாரதியின் வரிகள் நம்மைப் பக்குவப்படுத்துகின்றன நிகழ்காலத்தில் நம்மை மகிழ்ச்சியுடன் வைத்துக் கொண்டு வாழ்ந்தால் தீமை நம்மை நிச்சயம் நெருங்காது என்று இழப்புகளைச் சந்திக்கும் மனித மனங்களைப் பண்படுத்தியவர் பாரதியார்.

சென்றதினி மீளாது, மூடரே! நீர் ....
தீமையெல்லாம் அழிந்துபோம் திரும்பி வாரா
(ஞானப் பாடல்கள்- சென்றது மீளாது (பா. க. பக். 211)

தெய்வீகம்

தமிழ்க் கவிதையின் உன்னத படைப்பு கண்ணன் பாட்டு. உலகில் காணும் அனைத்து உன்னதப் பொருள்களிலும் பரப்பிரம்மத்தைக் காணும் ஞானம் பெற்ற பண்பாளர். அவர்

உள்ளத்தில் உண்மை ஒளி கொண்டவராக விளங்கியவர். அதனால் தான் பார்க்கும் பொருளில் கேட்கும் மொழியில் தொடு உணர்வில் கேட்கும் இசையில் நெருப்பின் ஒளியில் இறைஅருளை உணர்ந்த பேறு பெற்ற ஞானி பாரதியார். “காக்கைச் சிறகினிலே நந்தலாலா-நின்றன் கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா…நின்னை தீண்டும் இன்பம் தோன்றுதடா நந்தலாலா” (பக்தி பாடல்கள் . நந்தலாலா (பா. க. பக். 159)

தீர்க்கதரிசி

எதிர்காலத்தில் நிகழ இருப்பதை நிகழ்காலத்திலேயே அறிந்து கொள்ளும் தமது தீர்க்க தரிசன சிந்தனையால் பல இலட்சியக் கனவுகளைக் கண்டவர். அக் கனவுகள் எல்லாம் தற்பொழுது நனவாகி நிறைவேறி வருகின்றன. “ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமொன்று” சோர்ந்து போயிருக்கும் உள்ளங்களை எல்லாம் ஆனந்தக் கூத்தாடச் செய்தவர் பாரதியார். இந்த நாடு அன்னியரிடமிருந்து விடுதலை பெறுவது உறுதி என்பதை விடுதலை பெறுவதற்கு முன்பே நிகழ்காலத்தில் எதிர்காலத்தைக் கணித்த விதம் வியப்பிற்குரியது. மேலும் உலக அரங்கில் வெற்றிக்கொடி நாட்டி வரும் இந்தியாவின் அண்மைக்கால விண்வெளி ஆய்வில் (2023 ஜூலை 14) சந்திராயன்-3 நிலவின் தென் துருவத்தில் தரையிறங்கி சாதனை படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது.

வானை அளப்போம் கடல் மீனை அளப்போம்.
சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்
(தேசிய கீதங்கள் பாரத தேசம் (பா. க. பக். 25)

என்று தொலைநோக்குப் பார்வையில் அன்றே பாரதி எடுத்துரைத்த அறிவுத்திறம் நம்மை மெய்சிலிர்க்க வைக்கிறது.

வாழும் வழி

உலகில் பிறந்த அத்தனை ஜீவராசிகளிடமும் உள்ளன்பு கொண்டு தெய்வத்தை உண்மை என்று அறிந்து உயர்வு கொள்ள வேண்டும் என்பதைப் பாப்பா பாட்டில் பிஞ்சு மனங்களிலும் வாழும் வகையினை விதைத்து விருட்சமாக்கியவர் பாரதியார்.

உயிர்களிடத்தில் அன்பு வேணும்;
தெய்வம் உண்மை என்று தானறிதல் வேணும்;
(பல்வகைப் பாடல்கள்-2. பாப்பா பாட்டு.பா.க. பக்.222)

காற்று

அகில உலக உயிரினங்களின் உடல் இயக்கம் பிராண வாயுவின் உன்னத உறவால் இயங்கும் என்பதைச் சிறப்பித்துக் காட்டுகிறார் பாரதியார். கயிற்றிலிருந்து வெடித்து வெளிப்பட்டு என் முன்னே நின்ற காற்று தேவனின் மகிமையை என்ன வென்பேன் என்கிறார். காற்று தேவன் வாழ்க மலைக்காற்று நல்லது…உயிரை வலிமையுடன் நிறுத்துவோம் உள்ளத்தை உறுதி செய்வோம். (வசன கவிதை காற்று (பா.க. பக். 475). இங்ஙனம் செய்தால் காற்று நமக்குத் தோழனாகி விடுவான் என்று காற்றின் பெருமையை உணரச் செய்கிறார் பாரதியார்.

சுயமரியாதை

பெண்களை அறியாமையிலிருந்தும் மூடநம்பிக்கைகளிலிருந்தும் விடுவித்து சுயமரியாதையுடன் வாழச் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தியதில் முன்னோடியாகத் திகழ்கிறார். பாரதியார் எழுதிய மிளகாய் பழ சாமியார் சிறுகதையில் ஒரு பெண் திருக்கார்த்திகை அன்று மிளகாய் பழத்தை அரைத்து உடலில் பூசிக்கொண்டு தன்னை

வணங்கச் செய்கிறாள். போலி சாமியார்களிடம் இருந்து தற்காத்துக் கொண்டு பகுத்தறிவுடன் ஆராய்ந்து செயல்பட அறிவுறுத்துகிறார் பாரதியார்.

நாட்டுப்பற்று

தாய் நாட்டையும் மொழியையும் தமது இரு கண்களாகக் கொண்டவர் பாரதியார் என்பதால் "பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு" பாரத பூமி பழம் பெறும் பூமி நீரதன் புதல்வர் இந்நினைவகற்றாதீர் என்று தாய் நாட்டின் பெருமைக்கு ஈடு இணை வேறு இல்லை என்று நம்மைப் பெருமிதம் கொள்ளச் செய்கிறார்.

பெண் விடுதலை

பெண் விடுதலை பற்றி தொடர்ந்து பேசி வந்ததோடு அதனைத் தன் வாழ்விலும் கடைப்பிடித்தார் பாரதியார். பெண் விடுதலைக்குத் தமிழ்ப் பெண்கள் செய்யத் தக்கது யாது என்ற கட்டுரையை எழுதி அதனைப் பெண்கள் கூட்டத்தில் தன் மகளைக் கொண்டே படிக்க வைத்துப் பெண்ணினத்துக்குப் பெருமை சேர்த்தார். பெண்கள் தமது விருப்பம், திறமைக்கேற்ப எந்தத் தொழிலிலும் ஈடுபடலாம் என்பதைத் தெளிவாக எடுத்துரைத்தார். விதவை மறுமணத்தை ஆதரித்துத் தனது சந்திரிகையின் கதை மூலம் அதனை வலியுறுத்தினார். பெண்களை அடிமை நிலையில் இருந்து கல்வி மூலம் மீட்டு விழிப்புணர்வு ஏற்படுத்தி ஆண்களுக்கு இணையான மதிப்பினைப் பெற்றுத்தந்த பெருமையில் மகாகவி பாரதியாரின் பெயரும் பெண்ணினத்தின் முன்னேற்றப் பாதையின் பொன்னேடுகளில் நீடித்து நிற்கின்றது.

முடிவுரை

'எண்ணிய முடிதல் வேண்டும் நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும் தெளிந்த நல்லறிவு வேண்டும்'
(பக்தி பாடல்கள் பா.க. பக்.124)

உயர்வான சிந்தனை கொண்ட உன்னதக் குறிக்கோள் உடைய அவரது படைப்புகள் ஒவ்வொரு தலைமுறைக்கும் ஒரு படிப்பினையைப் பறைசாற்றிக் கொண்டே இருக்கும் என்பது நிச்சயம். தமிழ் இலக்கிய வானில் ஒளிரும் விண்மீனாய் நம்முடன் என்றும் வாழ்ந்து கொண்டிருப்பார். தமிழ் மொழிக்கு உயிரும் ஒளியும் நிறைந்த அழியாத கவிதைகள் பல புனைந்து பெருமை கொண்ட மகாகவி பாரதியாரைப் போற்றிடுவோம்! வாழ்த்தி வணங்கிடுவோம்!

துணை நூல் பட்டியல்

1. பாரதியார், பாரதியார் கவிதைகள் பூம்புகார் பதிப்பகம் பிப்ரவரி 2021
2. கண்ணதாசன் வாழ்த்துரை -பாரதியார் கவிதைகள் வானதி பதிப்பகம் ஜனவரி 2000
3. திருவள்ளுவர்,திருக்குறள் (236) குமரன் பதிப்பகம் டிசம்பர் 2000

14. பாரதியின் கவிதைகளில் பெண்ணியம்



முனைவர் A.ஹேமாமாலினி
முதல்வர், டாக்டர் உமையாள் ராமநாதன் மகளிர் கல்லூரி,
காரைக்குடி.

முன்னுரை

மகாகவி பாரதியார், ஏனைய கவிஞர்களுள் பெண்ணியத்தைத் தனது கவிதைகளில் எடுத்துரைத்த வரலாற்று நாயகன். அவர் கற்பனை செய்த புதுமைப் பெண் என்பவள் ஒரு சிறந்த சமூக மாற்றத்தின் கனவுப் படிமம். அவள் வஞ்சகங்களை ஏற்கமாட்டாள், தன் உரிமையை நிமிர்ந்து எடுத்துக்கொள்ளத் துணிபவளாக இருப்பாள். அறிவிலும், பணிகளிலும் , சிந்தனையிலும், தன்மானத்திலும் ஆணுக்குத் துணையாக அல்ல, சமமாக நிற்பவளாகப் பாரதியார் புதுமைப் பெண்களை வர்ணிக்கிறார். இந்தப் புதுமைப் பெண், மரபை மறுக்காதவளாகவும், அகங்காரம் கொள்ளாதவளாகவும் , ஆனால் தன்னம்பிக்கையுடன் பேசும், நடக்கும், செயல்படும் ஒரு பெண்ணாகவும் சித்தரிக்கப்படுகிறாள் இக்கட்டுரையில் நாம் பாரதியாரின் கவிதைகளில் வலியுறுத்தப்படும் திண்ணியத்தையும் பாரதியின் அறிவுறுத்தல்களையும் அறிய முடிகிறது.

பெண்மை வாழ்க

"பன்னிப் பலவுரைகள் சொல்லுவதென்னேது ?
துகில் பறித்தவன் கை பறிக்கப் பயம் கொள்வனோ?"

எனப் பாரதியார் பெருங்குரல் எடுத்துச் சமுதாயத்தில் ஒரு பெண் நல்ல முறையில் வாழ வேண்டும் எனில் எதிர்த்து நிற்கும் துணிவு தன்னம்பிக்கை முயற்சி ஊக்கம் வைராக்கியம் போன்ற லட்சியங்களை ஒருங்கிணைப்பவர்களாகப் பெண் திகழ வேண்டும் என்று பதினெட்டாம் நூற்றாண்டுகளிலே ஓங்கி உரைத்துள்ளார். பெண்மை வாழ்க என்று அழைத்துப் பெண்களுக்குப் பெருமை சேர்க்கும் பாரதி "பெண்ணை வாழ்கவென்று கூத்திடுவோமடா பெண்ணை வெல்க என்று கூத்திடுவோமடா" என்று சமுதாயத்திற்கு எடுத்துக் கூறும் விதமாக இந்த வைர வரிகளைப் பெண்மை என்ற கவிதைப் பக்கத்தில் தருகிறார். கவிதை தொடக்கமே பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா என்கிறார்.

"பெண் அறத்தனை ஆண்மக்கள் வீரம் தான்
பேணுமாயின் பிறப்புறு தாழ்வில்லை"

என்று பெண் விடுதலை பற்றிப் பேசும்போது அடிமை வாழ்வு வாழ்ந்த பெண்களின் அவல நிலை எண்ணி வருந்துகிறார்.

பாரதியின் பார்வையில் பெண்மை

"பாயும் ஒளி நீ எனக்குப் பார்க்கும் விழி நான் உனக்கு
தோயும் அது நீ எனக்குத் தும்பியடி நான் உனக்கு.."

என்று அன்போடு உரிமையோடு குறையற்ற ஒரு தூய சுடர் வான் ஒளியாக ஆகப் பெண்மையைக் கருதுகிறார். "தன்செயல் எண்ணித்தவிப்பது தீர்ந்திங்கு நின் செயல் செய்து நிறைவு பெறும் வனம் துன்பமில்லை சோர்வில்லை தோற்பில்லை அன்பு நெறியில் அறங்கள் வளர்த்திட" பெண் என்பவள் அடிமை வாழ்வு வாழ்ந்த அவல நிலையாய் எண்ணி வருந்தாமல் மேன்மை கொண்ட செயல் கொண்டு நிறைவுற்ற படிப்பறிவும் சமுதாய உயர்வும் துணிவடைமையும் ஒருங்கே கொண்ட ஒரு பெண்ணிற்கு இனி துன்பமில்லை: சோர்வில்லை: தோற்பதும் இல்லை என்று பெண்ணிற்கு

உற்சாகமூட்டினார். அதேசமயம் பெண் என்பவள் அன்பும் அறங்களும் கொண்ட நாட்டுக்கு நல்லது செய்யும் எண்ணம் கொண்டவளாக இருக்க வேண்டும் என்பதை.

"கோலமிட்டு விளக்கினை ஏற்றி
கூடி நின்று பராசக்தி முன்னே ஓலமிட்டு.."

வீட்டின் வாயிலில் கோலமிட்டு விளக்கேற்றுவதில் மட்டும் பெண்மைக்குச் சிறப்பு இல்லை. தன் தைரியம், வீரம் மற்றும் தன்னம்பிக்கையால் தன் அகக் கோலத்தை அலங்கரித்து இச்சமுதாயம் முழுவதும் தன் ஆற்றல்மிகு செயல்பாடுகளைப் போற்றிப் பாராட்டிப் புகழும் வகையில் ஒரு பெண்ணின் வாழ்க்கைத் திறன் அமைந்திட வேண்டும் என்று பெண்மையைப் போற்றி வாழ்த்துகிறார் பாரதியார். இதே கருத்தினை இன்னொரு பாடலில் "வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும் வேண்டி வந்தோம் என்று கும்மியடி. சாதம் படைக்கவும் செய்திடுவோம் தெய்வ சாதி படைக்கவும் செய்திடுவோம்" என்ற வரிகளில் பெண்கள் இந்த உலகத்திற்கு அறிவையும், நீதியையும், அர்த்தமுள்ள வாழ்க்கை முறையையும் உருவாக்குவதற்காக வந்தவர்கள். வேதம் என்பது அறிவின் உச்சம். நீதிகள் என்பது சமத்துவத்தின் அடிப்படை; பெண்கள் சமூகக் கட்டமைப்பை அறிவால் வழிநடத்தும் சக்திகள் என்று பாரதியார் வலியுறுத்துகிறார்.

"ஆணும் பெண்ணும் நிகராகக் கொள்வதால் அறிவில் ஓங்கி இவ்வையகம் தழைக்குமாம் புகு நல்லறத்தோடு இங்குப் பெண்ணுருவம் பூத்து நிற்பது தாய் சிவ சக்தியாம்" என்ற வரிகளில் ஆணினமும் பெண்ணினமும் சரிநிகர் சமானம் என நம் சமுதாயம் தழைத்தால் அறிவு , செல்வம் என அனைத்து வழிகளிலும் மனித குலம் முன்னேறி நிற்கும் என்று முழங்குகினான் பாரதி. "ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணும் நற்குடி பெண்ணின் குணங்கள் "என்று பாரதியார் நம் சமுதாயப் பெண்கள் நல்லறம், வீரம் ,சுய சுதந்திரம், தன்னம்பிக்கை ஆகிய நற்குணங்களைப் பேணுவதால் இச்சமுதாயம் மேலும் தழைத்தோங்கும் என்று உறுதியிட்டுக் கூறுகிறார்.

பாரதி கண்ட புதுமைப் பெண்

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்.. "

இங்கு நிமிர்ந்த நடை என்பது நேர்கொண்ட பார்வை என்பது தன்னம்பிக்கையுடன் அடிமைத்தனமோ, கட்டுப்பாடோ இல்லாத மனநிலையைக் காட்டுகிறது. பெண்ணின் தன்னாட்சி, நேர்மையின் பாதை, சமூக, மத, குடும்ப மரபுகள், சாதி, பண்பாடு என அனைத்தையும் கடந்து துணிவுடன் வாழும் பெண்ணினது வாழ்க்கை நெறி, நீதி, பொறுப்பு, அறம் என்பவற்றைக் குறிக்கும். பாசமோ, பொறுமையோ, சாந்தமோ, சகிப்புத்தன்மையோ பெண்ணின் அடையாளங்களாக மட்டுமே பேசப்படும் சூழலில், அஞ்சாத நெறி என்பதைக் கவிஞர் முன்னிறுத்துகிறார். பாரதியார் திமிர் என்கிற சொல்லை சாதாரணமாக இல்லாமல், ஒரு வீரபாவமாகப் பயன்படுத்துகிறார். ஞானச் செருக்கு என்பது பெண்ணின் அறிவுக்கான உரிமை, அவளுக்கு அசைக்க முடியாத திமிராகவே இருக்க வேண்டும் என்பதைக் கூறுகிறார். பாரதியார் "பெண் என்பவள் பிறப்பிலேயே செம்மையாக உள்ளவள்" என்பதை வலியுறுத்துகிறார்.பெண்ணின் பின்னடைவுக்குக் காரணம் அவளுடைய திறமையின்மையன்று. அது சமூக அமைப்பால் கட்டாயப்படுத்தப்படும் இருட்டு நிலை என்பதை உணர்த்துகிறார். உண்மையான பெண்ணறம் என்பது அவளைத் தன்னுடைய முழுத் திறமையோடு வாழ விடுவதாக இருக்க என்பது புலனாகிறது.

"புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும்
பொய்ம்மை கொண்ட கலிக்குப் புதிதன்றிச்.."

பாரதி கையெழுத்தில் பெண்கள் படிக்க வேண்டிய செந்தழல் தெறிக்கும் வரிகள் இது. ஒரு பெண்ணின் சக்தி அவளுடைய மன உறுதியில் உள்ளது. பெண்களின் சக்தியை உணர்ந்து, அவர்களைச் சக மனிதர்களாகக் கருதி, அவர்களுக்குச் சம உரிமைகளை

வழங்கினால் மட்டுமே சமூகம் செழிக்கும். பெண்கள் உரிய மரியாதையுடன் நடத்தப்படுவர்.

பெண் விடுதலை

பெண் விடுதலை பற்றிப்பேசும் போது அடிமை வாழ்வு வாழ்ந்த பெண்களின் அவல நிலையை எண்ணி வருந்துகிறார். படிப்பறிவு இல்லாத நிலை திருமண வாழ்வின் அவலநிலை சமுதாய உரிமை ஆகியவற்றைப் பற்றியும் கூறியிருக்கிறார். கல்வி கற்க முடியாத நிலையையும் விருப்பமில்லா திருமண வாழ்வையும் நினைத்துக் குமுறும் முண்டாசு கவிஞர்,

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று
எண்ணி இருந்தவர் மாய்ந்துவிட்டார்

என்பது, பெண் தன்னை விடப் படிப்பில் சிறந்தவளாக ஆளுமைமிக்கப் பெண்ணாக இருப்பதைக் கண்டு குமுறும் ஆண்களுக்காகவே எழுதப்பட்ட வரியாக அமைந்துள்ளது. மேலும் திருமணத்தில் பெண்களின் ஒப்புதலைக் கேட்க வேண்டும் என்பதனைச் சுட்டிக்காட்டும் கவிஞர்,

நல்ல விலைகொடுத்து நாயை விற்பார் அந்த
நாயிடம் யோசனை கேட்பதுண்டோ?

என்கிறார். பெற்றோர்கள் பெண்களுக்குத் திருமணம் செய்து வைத்துவிட்டால் கடமை முடிந்துவிடுகிறது என்று வரன்களை நன்கு விசாரிக்காமல் திருமணம் செய்து வைத்துவிட்டு மீளாத்துன்பத்தில் மாட்டிக்கொள்கின்றனர். ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டு கிடக்கும் பெண்களுக்கு விடுதலை பெற்றுத்தரப் பாடுபட்டவர் இந்தியாவில் ஏராளம், இல்லாளின் மாண்பைப் போற்றிவந்த வள்ளுவர் 'பெண்ணிற் பெருந்தக யாவுள?' எனக் கேட்பதிலிருந்து பெண்ணின் பெருமையை அறிந்து கொள்ளமுடிகிறது.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்தவந்தோம்

என்றே சமஉரிமைச் சிந்தனையைக் கூறுகிறார். எல்லாத்துறைகளிலும் சரிபாதியாக உயர்ந்து நிற்கின்ற பெண்களின் பெருமையை அன்றே **பாரதி** கோடிட்டுக் காட்டிச் சென்றுள்ளார். தகுதியும் திறமையும் கொண்ட தமிழ்நாட்டுப் பெண்கள் வெளியுலகை அறிந்தும் தம் பிள்ளைகளை நற்பண்புள்ளவர்களாக ஆளாக்கிச் சமுதாயத்தில் நற்பண்புள்ள குடிமகனாக வளர்க்கவேண்டிய பொறுப்பும் பெண்களிடம் மிகப்பெரும் பங்காக உள்ளது. அப்பெண்கள் ஞானத்தில் சிறந்து நாட்டிற்கும், சமுதாயத்திற்கும் **நற்பெயர்** தரக்கூடியவர்களாகத் திகழமுடியும் என்பதில் ஐயமில்லை .

முடிவுரை

பாரதியார் கண்ட புதுமைப் பெண் என்பது ஒரு சாதாரணப் பெண் அல்ல. அவள் சமுதாயச் சீர்திருத்தத்தின் ஆதிக்க நாயகி. அவள் கல்வியிலும், தொழிலிலும், அறிவிலும், தன்னிறைவை அடைந்தவளாக, அதிகாரம், ஆணாதிக்கம், பழைய மரபுகள் ஆகியவற்றை நேரடியாக எதிர்க்கும் சீர்திருத்த சக்தியாக மாறுகிறாள். இன்றைய பெண்ணும் பாரதியார் கண்ட புதுமைப் பெண்ணைப் போல, தன்னிலை உணர்ந்து, சுயமுயற்சியுடன், பசுமைச் சமுதாயத்தின் கட்டிடக்கலைஞராகச் செயல்பட வேண்டியது அவசியமாகிறது. பாரதியார் எழுதியது கவிதை மட்டுமல்ல. அது புதுமைப் பெண்களுக்கு எழுச்சிக் குரல்!

15. அறிவின் வலிமையே வலிமை

முனைவர் பா. தனவந்தினி, முதல்வர்

பிரின்ஸ் ஸ்ரீ பாலாஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, பொன்மார்

முன்னுரை

நானிலம் போற்றும் நாவலன், பாட்டுக்கொரு தலைவன். விடுதலைக்கு வித்திட்ட வித்தகன், பெண்மை வாழ்க வெல்க எனக் கூத்திட்டவன், காக்கையும் குருவியும் எங்கள் ஜாதி என்று மார் தட்டியவன், கற்பு என்பது ஆணுக்கும் பெண்ணுக்கும் சமம் என முழங்கியவன், சக்திதாசன், பாரதி. அவன் கவிதைகள் மட்டுமல்ல கட்டுரைகளும் போர்வாள்! நோய் தீர்க்கும் மருந்து! அவை, அவன் அறிவின் வெளிப்பாடு; ஆசைகளின் புறப்பாடு. அவன் கட்டுரைகளைப் படிப்போர் அறிவு தெளிவுறும். ஞானம் பிறக்கும்.வீரம் சுரக்கும். அக்கட்டுரைகளுள் அவன் விரும்பிய பெண் விடுதலை குறித்து விளக்குகிறது இக்கட்டுரை.

பாரதி கட்டுரைகளில் மாதர்

சுவை புதிதாய் கவி இயற்றிய பாரதி, சொல் புதிதாய் அவற்றை விளக்கி உரைக்க அவை கட்டுரைகள் ஆகின. குறளுக்கு நாலடியார் போல பாரதியின் கவிதைகளுக்கு கட்டுரைகள் அமைந்துள்ளன. தத்துவம், மாதர், கலைகள், சமூகம் என நான்கு தலைப்பில் கட்டுரைகள் இயற்றப்பட்டுள்ளன. மாதர் எனும் தலைப்பில் உள்ள பதினேழு கட்டுரைகளில் எட்டு கட்டுரைகள் தமிழ்நாட்டுப் பெண் விடுதலை குறித்து நேரடியாகப் பேசுகிறது. மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் எனும் அவனுடைய கவிதை வரிகளின் விரிவாக அமைந்துள்ளன அக்கட்டுரைகள்.

மடமையான அடிமை நிலை

இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு அடிமை எனும் சொல் புதிதன்று. கை கால்களை சங்கிலியால் கட்டி புற இயக்கங்களைக் கட்டுப்படுத்துவது மட்டும் அடிமை நிலை அன்று. நம் எண்ணங்களும் செயல்களும் பிறரால் கட்டுப்படுத்தப்படுமானால் அது அடிமை நிலை எனும் புரிதல் அனைவருக்கும் இன்று உண்டு. மது, போதை, கைப்பேசி, சமூக வலைதளங்கள் என நம்மை அடிமைப் படுத்தப் பல கூறுகள் உண்டு. இவையாவும் தனி மனித அடிமை நிலையைக் குறிக்கும். ஆனால் பாரதி பேசும் அடிமை நிலை தனி மனித அடிமை நிலை அன்று, ஒரு இனத்தின் அடிமை நிலை. ஒரே நாட்டில், ஒரே ஊரில், ஒரே சமுதாயத்தில், ஒரே குடும்பத்தில், ஒரே வீட்டில், ஒரே தாயின் வயிற்றில் ஒன்றாகப் பிறந்தாலும் 'பெண்' எனும் காரணத்தால் ஒரு உயிர் அடிமைப்பட்டுக் கிடந்தது.

> **"நத்தைப் போலே ஆணும் பெண்ணும் கூடப் பிறக்கிறோம். உடன் பிறந்தான் ஆண்டான், உடன் பிறந்தவள் அடிமை, சுத்த பாமர ஜனங்கள்"** .(ப.122)

என்று பெண்ணின் அடிமை நிலையை எளிமையாக ஆனால் அழுத்தமாகக் கூறுகின்றார். "ஆறிலும் சாவு; நூறிலும் சாவு; ஆணுக்கு மாத்திரமில்லை, பெண்ணுக்கும் அப்படியே. ஆதலால், உயிருள்ள வரை சுமுகமாக வாழ்தல் மனுஷ்ய ஜீவனுடைய கடமை."(ப.136) என்று சுதந்திரமாக வாழ்தலைக் கடமை எனக் கூறி அதை உரிமையுடன் பெறுவதற்கான வழி வகைகளையும் எடுத்துரைக்கின்றார்.

ஆண்கள் செய்யத்தக்கன

பெண்கள் பொருள் அல்ல, உணர்வற்ற ஜடங்கள் அல்ல. அவர்களுக்கு உயிர் உண்டு, உணர்வுண்டு, தனித்த சிந்தனை உண்டு. சாதாரண ஆண்களை போன்றோர் தான்.

புறத் தோற்றம் மாறினாலும் ஆத்மா ஒன்று தான் என்பதை ஆண்கள் உணரவேண்டும். அன்பு செலுத்தினால் தான் அன்பைப் பெற முடியும். அச்சத்தினால் அன்பைப் பெற முடியாது என்பதை அழுத்தமாகப் பதிவு செய்கிறார். பெண்ணை அன்பு செய்ய வேண்டும், பக்தி செய்ய வேண்டும் என்பதோடு அவளைத் தனிமையில் இருக்கும் போதும் மதிக்க வேண்டும் என்னும் கருத்தையும் பதிக்கின்றார்.

> பெண் அவளிஷ்டப்படி சஞ்சரிக்கலாம். தனி இடங்களில் ஸ்திரிகளைக் கண்டால் மரியாதை செய்து வணங்க வேண்டும். அப்படி எந்த புருஷன் மரியாதை செய்யவில்லை என்று தோன்றுகிறதோ, அவனை கிரகஸ்தர்கள் நெருங்கள் கூடாது. அவன் கூட ஒருவனும் பேச்சு வார்த்தை வைத்துக் கொள்ளாமல் இருந்து விட வேண்டும்.(ப.121)

என்பது பாரதியின் கருத்து. அவன் அன்று கூறியதை இன்றும் முழுமையாகப் பின்பற்றாத ஒரு சமுதாயம் தான் நிலவி வருகிறது என்பது வேதனைக்குரியதாகும். சுதந்திரம் என்பது ஒருவர் கொடுத்துப் பெறுவது அன்று. அதை தாமே முயன்று பெற வேண்டும். அதற்குப் பெண்கள் செய்ய வேண்டியவற்றையும் அவர் எடுத்துரைக்கின்றார்.

பெண்கள் செய்யத்தக்கன

பாரதப் போரில் அர்ஜுனன் நிலையில் தான் பெண்கள் உள்ளனர். அவர்கள் எதிர்க்க வேண்டியவர்கள் தந்தை, சகோதரன், கணவன், மகன் என தன் உறவுகளைத்தான். அவர்கள் வீழ வேண்டும் என்று எண்ணக் கூடாது. அவர்களை ஆயுதம் கொண்டு எதிர்க்கக் கூடாது. சாத்விக எதிர்ப்பைக் காட்ட வேண்டும் என்கிறார். "கீழ்ப்படிய மாட்டோம்" என்பதை வெளிப்படையாகக் கூற வேண்டும். நல்ல புத்தியுடன் அதை ஏற்றுக் கொள்ளும் வரை பொறுத்துக்கொள்ள வேண்டும், என்கிறார். தங்கள் சாத்விக எதிர்ப்பை எப்படி வெளிப்படுத்த வேண்டும் என்பதையும் தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

தன்புருஷனிடத்தே சொல்ல வேண்டியது யாதெனில், 'நான் எல்லா வகையிலும் உனக்கு சமானமாக வாழ்வதில் உனக்கு சம்மதமுண்டானால் உன்னுடனிருப்பேன். இல்லாவிட்டால் இன்றிரவு சமையல் செய்ய மாட்டேன். உனக்குச் சோறு போட மாட்டேன். சமத்துவம் இல்லாவிட்டால் உன்னுடன் வாழ மாட்டேன்' என்பதும் கண்டிப்பாகச் சொல்லி விடவேண்டும். அங்ஙனம் சொல்கிற தீர்மானமான வார்த்தையை, இந்திரிய சுகங்களை இச்சித்தாவது, நகை துணி முதலிய டம்பங்களை விரும்பியாவது, அசாச்வத்மான உயிர் வாழ்க்கையை பெரிதாகக் கருத்தியாவது மாற்றாக கூடாது. (ப. 139). அதைக்காட்டிலும் தெளிவானதொரு அறிவுரையை அக்கால கட்டத்தில் யாராலும் வழங்கியிருக்க முடியாது. இவ்வாறு ஒரு பெண் பேசவேண்டுமேயானால் அவளுக்கு மிகுந்த மனத் துணிவும் தன்னம்பிக்கையும் வேண்டும் அதைக் கொடுக்கக் கூடியது கல்வி தான் என்பதில் பாரதிக்கு மாற்றுக் கருத்து ஏற்படவில்லை.

கல்வியின் வலிமை

பெண்கள் துணிவுடன் விடுதலையாகச் செயல்பட கல்வி தான் ஆகச் சிறந்த வழி என்பதை பாரதி உணர்ந்தான், உணர்த்தினான். ஔவை, அன்னி பெசன்ட் அம்மையார் ஆகியோரை எடுத்துக்காட்டாகக் கூறி அறிவால் உயர்ந்தவர்களை உலகம் எப்போதும் போற்றும் என்று உரைக்கிறான். விவேகானந்தர் அயல்நாடு சென்று வந்த பிறகு தான் அவருக்கு நம் நாட்டில் மரியாதை கூடிற்று என்பதை எடுத்துக்கூறி, பெண்களையும் அயல் நாடு சென்று வாருங்கள் என ஊக்குவிக்கின்றான்.

முடிவுரை

அறிவால் மட்டும் தான் இவ்வுலகை வெல்ல முடியும். அறிவு பெற்றால் மட்டும் தான் ஆண் உலகம் பெண்களை மதிக்கும், சமமாக நடத்தும். அத்தகைய நிலையை அளிக்கக் கூடியது கல்வி மட்டும் தான். அக்கல்வியைப் பெறாமல் ஆண் குலத்திற்கு அடிமையாக வாழ்வதைக் காட்டிலும் மடிவது மேல் எனத் தன் கட்டுரைகளில் எடுத்துரைக்கின்றான் பாரதி. அறிவின் வலிமையே வலிமை, அதை நல்குவது கல்வியே என்பதைத் தன் கட்டுரை வழி நிறுவுகின்றான் பாரதி.

16. மகாகவி பாரதியாரின் சமூகப் புரட்சி



இரா. ஜெமிமா தென்றல்,

உதவிபேராசிரியர் ,தமிழ்த்துறை

டாக்டர். உமையாள் ராமநாதன் மகளிர் கல்லூரி, காரைக்குடி.

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் புகழ்பெற்ற கவிஞராகத் தோன்றியவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் . இவர் சாதி, மத, இன, மொழி வரம்புகளுக்கு அப்பாற்பட்ட பரந்த ஒரு சமுதாயச் சிந்தனையைத் தமது கவிதைகள் வழியாக வெளிப்படுத்தியுள்ளார். இவர் காலத்தமிழ்ச் சமூகத்தில் மறுமலர்ச்சிக்கான விடியல் கீற்று எழத் தொடங்கிய காலத்தில் தேசியகவிபாரதி தமிழ்க் கவிதையை எளிமையப்படுததினார். சமுதாய நோக்கம், எளிமையான சொல், எளிமையான நடை, எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம், அனைவரும் விரும்பும் மெட்டு இவ்வாறு இருந்தது பாரதியின் கவிதை. அவ்வகையில் புரட்சிகரமான கருத்துக்களை ஆராய்ந்து விளக்குவதாகக் இக்கட்டுரை அமைந்துள்ளது.

தேசியப்புரட்சி

1905-இல் ஆட்சித்தலைவர் கர்சன் பிரிவு வங்க மாநிலத்தை மத நோக்கோடு பிரித்தபோது எழுந்த எதிர்ப்புக்குரலில் பாரதியார் கவிதையும் சேர்ந்து ஒலித்தது. **'வங்கமே வாழிய'** என்ற அந்தக் கவிதை தான் பாரதியாரின் பாரத சமுதாயம் நல்லிணக்கம் பற்றி எழுந்த முதல் கவிதையாகும். புதியதோர் சமுதாயம் எப்படி அமைய வேண்டும் என்பதை பாரதியின் கவிதை மூலம் அறிய முடிகிறது. இதனை **'முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழுமைக்கும் பொது உடைமை - ஒப்பில்லாத சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை'** என்ற கவிதை மூலம் அறிய முடிகின்றது. சமுதாய முன்னேற்றத்திற்கான நல்லிணக்கக்கோட்பாடுகளைத் தம் கவிதையின் வழி வெளிப்படுத்தியுள்ளார். மனிதர் உணவை மனிதர் பறிக்காத மனிதர் நோக மனிதர் பார்க்காத சமுதாயமாகும். ஓர்குலம், ஓர் இனம் எனச் சாதி ஒழிந்த சமத்துவம் மலந்த சமுதாயமாகவும், மணம்பரப்ப எண்ணி எழுதிய கவிதைகளே நதி நீர் இணைப்பு, கனிமவளக்குவிப்பு, அறிவியல் வளர்ப்பு, தொழில் வளப்பெருக்காக அமையும் ஒரு நெடிய கனவுக் கவிதைகளாகும். இவை ஒன்றுபட்ட மனிதமாவதற்கு வலுவூட்ட எழுந்த வலுவுரமாகும்.

சமுதாயச்சீர்திருத்தம்

சட்டம், சமூகம் முதலியவற்றில் நடைமுறையில் நிலவும் சீர்கேடுகளை அல்லது ஒழுங்கற்ற முறையை மாற்றுவதற்கான நடவடிக்கையே சமுதாயச் சீர்திருத்தமாகும். சமுதாயத்தின் அடிப்படையான குடும்ப வாழ்க்கையில் திருமணம் என்பது முக்கியமான ஒன்றாகும். ஓர் ஆணும் பெண்ணும் வளர்ந்து உடலாலும் உள்ளத்தாலும் முழுநிலை பெற்றபின்னர் காதல் கனிந்து திருமணம் செய்து கொள்ளுதலே இயல்பான திருமணமாகும். இத்திருமணத்தில் குழந்தைத்திருமணம், வரதட்சனைத்திருமணம், பொருந்தாத்திருமணம் போன்ற பழக்கவழக்கங்கள் மிகுந்து சமுதாயத்தைச்சீர் குலைத்தன. இவற்றைக் கண்டு வருந்திய பாரதி **'வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக்கொடுக்கும் வழக்கத்தை தள்ளி மிதித்திடுவோம்'** என்று (பெண் விடுதலைக்கும்பி - 5) எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது. பெண்ணியக் கோட்பாடுகள் உருக்கொள்வதற்கு முன்பே, பாரதியார் பெண் விடுதலை, பெண்ணுரிமைச் சிந்தனைகளுக்கு வித்திட்டிருப்பதை அவர் படைப்புகளில் காணமுடிகிறது. பெண்ணடிமை,

குழந்தைத்திருமணம், மூடநம்பிக்கை, தீண்டாமை இவ்வாறாக நலிந்து கிடந்த சமூகத்தை நெறிப்படுத்த வந்தவையே தேசியகவி பாரதியின் கவிதைப் படைப்புகளாகும்.

பெண்ணடிமைத்தனம்

பெண்கொடுமை உச்சத்தில் இருந்த காலம் பெண்ணென்பவள் மற்றவர்கள் எதிரில் கணவரிடம் சமமாக நிற்பதோ கணவன் நிற்க மனைவி நாற்காலியில் உட்காருவதோ குற்றச்செயல். அதையெல்லாம் சமூகம் ஏற்றுக்கொள்ளாத காலம் அப்படிப்பட்ட காலத்தில் தான் விடுதலைக்கவி பெண்விடுதலைக்கான பாடல்களை எழுதினார். பெண் விடுதலை என்பது பெண்கள் அறியாமையிலிருந்து முதலில் விடுதலை பெற வேண்டும். அறியாமை இருளை அகற்றுவது கல்வி அதுவே பெண்களுக்குப் பாதுகாப்புத்தரும். அதனால் பெறும் வேலை பெண் விடுதலைத்திறவுகோல் என்பதைத் தமது கவிதைகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். **"பட்டங்கள் ஆழ்வதும் சட்டங்கள் செய்வதும்"** என்ற கவிதையின் மூலம் பெண்களுக்கான விடுதலை விழிப்புணர்வை வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது.

குழந்தை மணம்

குழந்தைகளுக்குச் சிறுவயதிலேயே திருமணம் செய்து வைக்கும் பழக்கத்தைப் பாரதியார் கடுமையாக எதிர்ப்பதை, **'பாலருந்தும் மதலையர் தம்மையே பாதகக் கொடும் பாதகப்பாதகர்"** (பாரதியின் சுயசரிதை மணம் - 34) என்ற கவிதை மூலம் குழந்தைத்திருமணம் கொலைசெய்வதைவிடக் கொடுமையானது எனக் கண்டிக்கிறார்.

மூடப்பழக்கவழக்கம்

பாரதியார் சுவர்க்கம் நரகம் போன்ற மூடநம்பிக்கைகளில் மக்கள் முழ்கிக்கிடப்பதைக் கண்டு வருந்துகிறார். சுவர்க்கம், நரகம் இரண்டும் நாமே ஏற்படுத்திக் கொள்ளக்கூடியன என்றும் அவை வேறெங்கும் இல்லை. நம் உள்ளத்தில் தான் உள்ளன என்றும் கூறுகின்றார்.

"கவலைப்படுதலே கருநரகு, அம்மா
கவலை அற்றிருந்தலே முத்தி" (வி.நா.நா.ம. மாலை - 36)

எனக் கவலைப்படுவது தான் நரகம், கவலையற்று மகிழ்ச்சியுடன் இருப்பதுதான் சுவர்க்கம் என அறியாமையை அகற்றி வெளிப்படுத்தியிருப்பதை அறிய முடிகிறது.

மூடநம்பிக்கை ஒழிப்பு

சமுதாயத்தில் சில பழக்க வழக்கங்கள் ஏன் செய்கிறோம் என்ற சிந்தனை இல்லாமலே காலம் காலமாக மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. இத்தகைய **"கண்மூடிப்பழக்கமெல்லாம் மண்மூடிப் போகட்டும்"** என்றார் வள்ளல் இராமலிங்க அடிகளார். இவரைப் போன்றே பாரதியாரும் தம் கவிதைவழிச் சாடுகிறார். அச்சத்தின் அடிப்படையில் ஏற்படும் பிசாசு, மந்திரம், தந்திரம் இவற்றைப்பற்றிய மூடநம்பிக்கை ஒழிய வேண்டும் என்பதை,

"நெஞ்சு பொறுக்கு தில்லையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால் ".

என்ற கவிதையின் மூலம் உணர்த்தியுள்ளார். மேலும் தொடர்ச்சியாக வந்த சில பழக்க வழக்கங்களையும், பொய்மைச் சாத்திரங்கள் கூறும் தவறான செய்திகளையும் சுயசிந்தனை இல்லாமல் கண்மூடித்தனமாக நம்புவதும் செய்வதும் தவறு எனச் சுட்டிகாட்டுவதோடு புதுமைகளைச் சிந்தித்துச் சீர்தூக்கிப்பார்த்து நமக்கு ஏற்றதெனில் ஏற்றுக்கொள்ள வேண்டும் என அவர் எடுத்துரைக்கிறார். மேலும் அவர் பாடிய புதிய

ஆத்திசூடியில் **'பேய்களுக்கு அஞ்சேல்'** என்கிறார். மற்றொரு வரியில் **'சோதிடந்தனை இகழ்'** என அவர் கூறுவதன் வழி அறியமுடிகிறது.

மனிதநேயம்

மனிதப் பண்பின் முக்கியத்துவத்தை உணர்த்த எழுந்த வரிகள்தாம்

"பக்கத்திருப்பவர் துன்பம் - தன்னைப்" (உயர்பெற்ற தமிழர் பாட்டு - 16)

மற்றவர் துன்பம் கண்டு வருந்துவதும். இன்பம் கண்டு மகிழ்வதும் மனிதப்பண்பாகும். இவை அனைத்தும் அன்பின் அடிப்படையில் நடப்பவை. யார் ஒருவன் தன் அருகில் இருப்பவன் துன்பத்தைக் காணப்பொறுக்காது வருந்துகிறானோ, அவனே பண்புடையவன் ஆவான் என்பது அவர் கருத்து தன்னைச் சார்ந்தவர்கள், தன்னாட்டினர், தன் ஊரினர், இவர்களுக்கு உண்மையை எடுத்துக் கூறுவதும் அவர்களுக்கு இன்பந்தரும் செயல்களைச் செய்வதுமே நல்ல தவமாகும் எனத் தவத்துக்கு மனித நேய அடியப்படையில் புதுவிளக்கம் தருவதைக் காணமுடிகிறது.

சமூக மறுமலர்ச்சி

சமூக முன்னேற்றத்திற்கு அடிப்படையானது மனிதநேயப் பண்பாகும். இதனைப்பாரதி கவிதை மூலம் அறிவுருத்தியுள்ளார். **"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு - நம்மில் "** என்ற கவித்தையின் வழி மானுடச் சமூகம் மனித நேயப்பண்பினால் ஒன்றுபட்டு ஒற்றுமையாக வாழ வேண்டுமென உணத்தியுள்ளார். உலகில் பிறந்த ஒவ்வொரு குழந்தைகளுக்கும் குழந்தைப் பருவம் முதலே வீர உணர்வையும் விழிப்புணர்வையும் ஊட்ட பாரதி.

"பாதகஞ் செய்பவரைக் கண்டால் - நாம்
பயங்கொள்ளலாகாது பாப்பா! "

என்ற கவிதையின் மூலம் எடுத்துரைத்திருப்பதை அறிய முடிகின்றது. சிறு பெண் பிள்ளைகளுக்குத் துணிவைக் கற்றுக்கொடுத்தார் பாரதியார் அவர்கள்.

முடிவுரை

மகாகவி பாரதியார் அவர்கள் இவ்வுலக மானுட சமூகத்தில் காணப்படும் சாதி, மத, மொழி இன வேறுபாடுகளைக் களைத்தெறிவதற்கான கருத்துக்களை தமது கவிதையின் வழி வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகிறது. மேலும் ஆணாதிக்கப் போக்கினால் பெண்கள் கண்டுணர்ந்த பாரதி பெண்கள் விழிப்புணர்வு அடைவதற்கும் விடுதலை பெறுவதற்கும் ஆணுக்கு நிகர் பெண் சமவுரிமை பெறுவதற்கும் பாரதி கருத்துரைத்திருப்பதைக் காண முடிகிறது. மேலும் சமூகத்தில் நிகழும் சீர்கேடுகளான குழந்தைத் திருமணம், பொருந்தாத் திருமணம், ஏற்றத் தாழ்வுகள், மூடப் பழக்க வழக்கங்கள் போன்றவற்றை நெறிபடுத்துவதற்குப் பல கருத்துக்களை எடுத்துரைத்துள்ளார் பாரதி. இவ்வாறு பாரதியின் சமூக சீர்திருத்தக் கருத்துக்களை ஆராய்ந்து அறிய முடிகிறது.

பார்வை நூல்கள்

1. பத்மதேவன் (ப.ஆ) - பாரதியார் கவிதைகள்
2. ஸ்ரீசிவ சண்முகநாதன் (ப.ஆ) - திருவருட்பா

17. பாரதியாரின் படைப்புலகம் - படைத்தல், காத்தல், அழித்தல்



பார்த்திபன் ரவிகுமார்
ஹூஸ்டன், டெக்ஸாஸ்

சிறுவயதில் மும்மூர்த்திகள் இடம்பெறும் திரைப்பட காட்சியை பார்த்தவர்களுக்கு இந்த மூன்று வார்த்தைகள் நன்கு தெரியும்.
படைத்தல் என்பதை முதன்மையாக சொல்லும் வழக்கம் உள்ளது. விவிலியம் தன் முதல் அத்தியாயங்களில் படைத்தல் பற்றிய விவரங்கள் கூறும். சமயம் காட்டும் படைத்தல் எனும் தொழில் இறை குணமாக காட்டப்பட்டாலும் நம் உள்ளங்களை சமைத்து, வாழும் வாழ்க்கையில் நல்லனவற்றை படைத்துக் காட்டும் படைப்பாளிகள் ஏராளம்.

இரயில் வண்டியின் மிகவும் எதிர்பார்க்கப்படும் சாளர இருக்கை அருகில் அமர்ந்துக்கொண்டு எல்லாவற்றையும் காற்றோடு உள்வாங்கி கொண்டிருக்கும் பொழுது ஏதோ ஒரு சுவர் மீது இலாவகமாக தூரிகையின் நுனியில் ஜாலம் செய்துக்கொண்டிருக்கும் ஓவிய படைப்பாளனை பார்க்கும் பொழுது எங்கிருந்தோ நம் மனத்தில் புன்னகை விரியும்.

மக்கள் மனத்தை பண்படுத்தும் பண்பாளர்களாக நல்ல படைப்பாளர்கள் வலம் வரும்பொழுது, இறைமைக்கே உரித்தான உயரிய குணத்துக்கீடாக படைப்பாளன் போக்கு இருக்கலாமா? இறை அம்மையை வணங்கிய கவிஞர்களுக்கு மத்தியில் நாட்டு மக்களையும், நானிலத்தையும் கவிதையால் பாலித்திட வேண்டும், ஆதலால் எனக்கு காவலுற வேண்டும் என்று கேட்ட கவிஞன் - பாரதி.

பாரதியாரின் படைப்புலகம் எப்படி இருக்கும்? அவர் வரிகளில் நோக்குவோம்.

"காணி நிலம் வேண்டும்-பராசக்தி
காணி நிலம் வேண்டும்;-அங்கு"

படைப்பாளி என்பவன் யாருமே சிந்திக்க முடியாததை சிந்திப்பவர் மட்டுமல்ல. யாருமே கவனிக்காத ஒன்றை கவனிக்க வைப்பவரும் கூட. ஆங்கிலம் பயில் பள்ளியுள் போகுநர் யாதெல்லாம் இழக்க நேரிடும் என்பதை இந்திய மண்ணின் பெருமைகளை நிரல்படுத்தும் விதமாக எச்சரிக்கை கவிதை புனைகிறார் பாரதியார்.

"கணிதம் பன்னிரண் டாண்டு பயில்வர்,பின்
கார்கொள் வானிலோர் மீனிலை தேர்ந்திலார்;"

முன்னை பழமைக்கும், பின்னை புதுமைக்கும் பாலமாக விளங்குபவன் இறைவன் என்னும் படைப்பாளி என்று சமய இலக்கியம் கூறும். தமிழ் நல்லுலகம் வணங்கும் பாட்டின் இறைவன் பாரதியின் படைப்புலகத்தில் பின்னை புதுமை மிக நன்றாகவே

விரிந்திருக்கிறது. "மீம்ஸ்" என்று படம் சொல்லும் கதையாக நொடிப்பொழுதில், விரல் தடவிய நொடியில், படங்கள் மாறி மாறி தோன்றி கண்களுக்கு விருந்தளிக்கின்றன. இவற்றையெல்லாம் அன்றே பாரதி, தான் நடத்தி வந்த பத்தரிக்கையில் விகடச்சித்திரம் என்று படைத்துக் காட்டினான்.



தமிழ் மேடை ஏறும் ஒவ்வொரு சிறு குழந்தையும் பாரதியை தொடாமல் இருக்க முடியாது. படைப்பது என்பது இல்லாத ஒன்றை உருவாக்குவது மட்டும் அல்ல. இருக்கும் ஒன்றை உறுதிப்படுத்துவதும் தான். 'உணவு படைப்பது' என்ற சொல்லாடலை சான்றாக கூறலாம். அவ்வண்ணமே சிறார்கள் அனைவரும் உரத்த குரலில், ஒரு சேர பாட நாம் கேட்டிருப்போம்.

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே.
உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதினும்,
அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே."

பயம் என்பது தற்காலிகமாக இருப்பது. அச்சம் என்பது நீண்ட காலமாக இருப்பது. எடுத்துக்காட்டாக, தேர்வை நினைத்து ஒரு சிலருக்கு வருவது பயம். சிறுவயதிலிருந்தே இருளை பார்த்தால் ஒரு சிலருக்கு வருவது அச்சம்.

அச்சமில்லை என்பதை சந்தத்திலும் பீடு நடை போட வைத்த பாரதியின் படைப்புலகத்தை மேலும் காண ஆவல் விரிகிறது என்றால் மிகையாகாது.

பிள்ளை பிராயத்திலிருந்தே பாரதியின் படைப்புலகம் அவனை கணிதம் போன்ற படிப்புகளில் பெரிதாக நாட்டம் கொள்ள விடாமல் சொற்களின் அடுக்குகளின் மீதே மிகுந்த பற்று கொள்ள வைத்தது. பாரதியின் தந்தை கணக்கு என்ன ஆச்சு? என்று கேட்டால், 'கணக்கு, பிணக்கு, மணக்கு' என்று பித்து பிடித்தவர் போல் கேட்ட சொல்லின் ஒரே ஓசை உடைய வேறு சொற்களை அடுக்கத்தொடங்கி விடுவாராம்.

பாரதியின் படைப்புலகம் அன்றைய கால மக்கள் விரும்புவதை படைத்ததை விட எது மக்களுக்கு தேவை என்றறிந்து ஒரு தாயின் கருணை போல் படைக்கப்பட்டது. பாரதியின் மனைவி சங்கடப்படும் போதெல்லாம் தன் படைப்புலக அறிவைக்கொண்டே அந்த சூழ்நிலையை கடந்து வருவார்.

இறைவன் ஆறு நாள் படைத்தது ஏழாம் நாள் ஓய்வெடுத்தார் என்று ஒரு சமய நூல் கூறும். அந்த இறைவன் போல் அல்லாமல் பொழுதும் படைத்தவன் பாரதி. குயில் பாட்டு படைத்த காலத்தில் பாட்டு வந்த மயக்கத்திலே பாண்டிச்சேரி தோப்பில் மயங்கியே விடுவார் என்று வரலாறு கூறுகிறது.

குயில் பாட்டு என்பது பாரதியின் படைப்புலக உச்சம் எனலாம். ஒரு குயிலிடம் காதல் கொள்வது போல ஒரு கற்பனை உலகத்தில் நம்மை அழைத்து சென்று நிறைய கருத்துகளை சிந்திக்க வைத்து விடுவார். ஒரு சான்றாக,

“மானுடராம் பேய்கள் வயிற்றுக்குச் சோறிடவும்
கூனர்தமை ஊர்களிலே கொண்டு விடுவதற்கும்
தெய்வமென நீருதவி செய்தபின்னர், மேனிவிடாய்
எய்தி யிருக்கு மிடையினிலே, பாவியேன்
வந்துமது காதில் மதுரவிசை பாடுவேன்
வந்து முதுகில் ஒதுங்கிப் படுத்திருப்பேன்”

குயில் மாடிடம் பேசுவது போல் உள்ள பேச்சில் எவ்வளவு ஆழ்ந்த பொருள் வைத்து பாடியுள்ளார்!

பாரதி விரும்பியதை, நாம் அவன் படைப்புலகத்தில், அவன் எழுத்துகள் புடை சூழ சிறிது வாழ்ந்து பார்த்தால் தான் தெரியும், அது எவ்வளவு வித்தியாசமானது என்று. இன்றைய உலகம் தீமையால் அழிவதில்லை. தீமையான ரசனை கொண்டிருப்பதால் தான் அழிகிறது. நம் ரசனையை மாற்றுவதில் இன்றைய மூன்றாம் தர படைப்பாளிகள் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

பாரதியின் ஒரு சொல்லையோ, தொடரையோ எடுத்துக்கொண்டு ஆழ சிந்திப்போமானால் நம் ரசனை எப்படி மாற வேண்டும் என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

இவற்றையெல்லாம் முடிவில்லாமல் வழங்கி வரும் பாரதியின் படைப்புலகம் வாழிய வாழியவே.

18. பாரதியின் பார்வையில் பாவையார்

ராஜேஸ்வரி S

ஆசிரியை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி, விராலியூர்,
கோவை மாவட்டம்

அறிமுகம்

சுப்ரமணிய பாரதியார், "மக்கள் கவிஞர்" என்று அழைக்கப்படும் இவர், இந்தியாவின் விடுதலைப் போராட்டத்தில் மட்டுமல்ல, சமூகச் சீர்திருத்தப் போராட்டத்திலும் அடையாளம் பதித்தவர். அவரின் வாழ்நாள் வெறும் 39 ஆண்டுகள் என்றாலும், அந்தக் குறுகிய காலத்தில் அவர் எழுதிய கவிதைகள், கட்டுரைகள், உரைகள்–இவை அனைத்தும் ஒரு புதிய சமூகக் கனவை உருவாக்கின. அந்தக் கனவின் மையத்தில் ஒன்று–பெண்களின் உரிமைகள். பாரதியார் வாழ்ந்த காலம், பெண்கள் பெரும்பாலும் வீட்டுக்குள் மட்டுமே இருந்த காலம். கல்வி, சொத்து, அரசியல் பங்கேற்பு போன்ற உரிமைகள் பெண்களுக்கு மறுக்கப்பட்டிருந்தன. அந்தச் சமூகச் சூழலில், அவர் ஒரு மிகப் பெரிய வாக்கியத்தைச் சொன்னார்–"பெண் மனிதர்". இந்த நான்கு எழுத்துச் சொற்கள் (பெண் + மனிதர்), பெண்களின் வாழ்க்கை பற்றி நூற்றாண்டுகளாக நிலைத்து வந்த தவறான கருத்துக்களை உடைத்து விழ்த்தின.

அவரது பெண்ணுரிமைச் சிந்தனை, வெறும் "பெண்களைப் புகழ்வது" அல்ல; அவர்களை **சமத்துவத்தின் பாதையில் நடத்துவது** தான். பெண்கள் கல்வி பெற வேண்டும், தங்கள் வாழ்வாதாரத்தைத் தாங்களே சம்பாதிக்க வேண்டும், அரசியல் மற்றும் சமூக வாழ்வில் பங்கேற்க வேண்டும்–இவை அனைத்தும் அவர் வலியுறுத்திய அடிப்படை உரிமைகள். இன்றும் நாம் பேசும் பல பெண்கள் உரிமை பிரச்சினைகள்–உதாரணமாக சம வேலைக்குச் சம ஊதியம், பெண்களுக்குப் பாதுகாப்பான வேலை சூழல், திருமண விருப்ப சுதந்திரம்–இவை அனைத்தும் பாரதியார் நூற்றாண்டுக்கு முன்பே எழுதிய கருத்துகளிலேயே உள்ளன. அவரது எழுத்து முறை கவிதை இசையுடனும், புரட்சிகர குரலுடனும் இருந்ததால், அவரது வார்த்தைகள் பொதுமக்களின் மனதில் ஆழமாகப் பதிந்தன. பெண்களைப் பற்றிய அவரது சிந்தனைகள், இன்று பாலின சமத்துவம் பற்றிய உலகளாவிய உரையாடல்களுடன் கூட இணைந்துபோகின்றன. அதனால், பாரதியாரின் பெண்ணுரிமைச் சிந்தனையைப் படிப்பது, வெறும் இலக்கியப் பயணம் அல்ல–அது சமூகத்தின் மனநிலையை மாற்றிய ஒரு புரட்சியின் கதை.

பாரதியாரின் காலச் சூழல்

சமூக நிலைமை:

19ஆம் நூற்றாண்டின் இறுதி மற்றும் 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்திய சமூகம் ஆழமான மரபுவழிக் கட்டுப்பாடுகளுக்குள் சிக்கித் தவித்தது. குறிப்பாக பெண்களின் வாழ்க்கை, வீட்டின் சுவர்களுக்குள் மட்டுமே கட்டுப்படுத்தப்பட்டிருந்தது. அந்தக் காலத்தில், பெண்களின் பங்கு குடும்பப் பராமரிப்பு மற்றும் கணவன்/குழந்தைகள் சேவையில் மட்டுமே வரையறுக்கப்பட்டிருந்தது. சமூகத்தில் பெண்களுக்குத் தனித்த குரலும் முடிவெடுக்கும் அதிகாரமும் இல்லை.

பாரதியாரின் எதிர்ப்பு

இந்தச் சூழலில், பாரதியார் பெண்களின் வாழ்க்கையை அடிமைத் தனத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என உறுதியானார். அவரது பார்வையில், பெண் என்பது ஒரு மனிதர்–அவளுக்கு ஆணுக்கு இணையான அனைத்து உரிமைகளும் இருக்க வேண்டும். இந்தக் கருத்தை அவர் வெறும் உரையாடல்களிலும் உரைகளிலும் மட்டும் அல்லாமல், தனது கவிதைகளிலும் கட்டுரைகளிலும் வலியுறுத்தினார். "நம் நாட்டை ஆளும் உரிமை, பெண்களுக்கும் உண்டு" – பாரதியார். அவர் கல்வியையும், பொருளாதார சுதந்திரத்தையும், திருமணச் சுதந்திரத்தையும் பெண்களின் அடிப்படை மனித உரிமைகளாகக் கருதி எழுதினார். பெண்களின் வாழ்க்கையை அடிமைத்தனத்தின் கட்டிலிலிருந்து எழுப்பி,

சுயமரியாதை மற்றும் சுதந்திரத்தின் உச்சிக்குக் கொண்டு செல்ல வேண்டும் என்பதே அவரது இலக்கியமும் வாழ்க்கையும் நோக்கமாக இருந்தது.

பெண்ணுரிமை தொடர்பான பாரதியாரின் அடிப்படைக் கருத்துகள்

கல்வி உரிமை

பாரதியார் பெண்களுக்குக் கல்வி என்பது வெறும் ஒரு வசதி அல்ல, **அடிப்படை மனித உரிமை** என்று வலியுறுத்தினார். அவரது பார்வையில், கல்வி என்பது அறிவை மட்டுமே தருவதல்ல; அது சுதந்திரம், தன்னம்பிக்கை, சமூக முன்னேற்றம் ஆகியவற்றிற்கான திறவுகோல்.

அந்தக் காலத்தில், "பெண் கல்வி தேவையில்லை, அது அவர்களை சமூகக் கட்டுப்பாட்டுக்கு எதிராக ஆக்கும்" என்ற மரபுவழி நம்பிக்கை பரவலாக இருந்தது. பெண்களுக்கு கல்வி வழங்குவது குடும்பத்திற்கு அவமானம் என்று கருதப்பட்ட சூழலில், பாரதியார் திறம்பட எதிர்ப்பு தெரிவித்தார். அவரது கவிதைகளிலும் கட்டுரைகளிலும்,

"பெண் கல்வி பெற்றால், சமூகமே கல்வி பெறும்"

என்ற கருத்து தொடர்ந்து இடம்பெற்றது. பாரதியார் கல்வியை **பெண்களின் முழுமையான வளர்ச்சிக்கான பாதை** என்று கருதினார். அவர் சுட்டிக்காட்டியது:

- கல்வி பெற்ற பெண் தன் உரிமைகளை அறிந்து, அவற்றை வலியுறுத்த முடியும்.
- அறிவுள்ள தாய், அறிவார்ந்த தலைமுறையை உருவாக்குவாள்.
- கல்வி பெண்ணை பொருளாதார ரீதியாகவும், சமூக ரீதியாகவும் வலுப்படுத்தும்.

இது வெறும் இலக்கியக் கோஷமல்ல; பெண்களுக்கான பள்ளிகள், கல்வி திட்டங்கள், சிறுவர் மற்றும் சிறுமிகளுக்கான சம கல்வி வாய்ப்புகள் ஆகியவற்றின் அவசியத்தை அவர் தொடர்ந்து வலியுறுத்தினார்.

பொருளாதார சுதந்திரம்

பாரதியார், பெண்ணின் உண்மையான சுதந்திரம் **பொருளாதார சுதந்திரம்** இல்லாமல் சாத்தியமில்லை என்று வலியுறுத்தினார். அக்காலத்தில் பெரும்பாலான பெண்கள் பொருளாதார ரீதியாக ஆண்களைச் சார்ந்திருந்தனர். இதனால், அவர்களின் முடிவுகள், விருப்பங்கள், வாழ்க்கைத் திட்டங்கள் அனைத்தும் ஆண்களின் கட்டுப்பாட்டுக்குள் சிக்கிக் கொண்டிருந்தது.

பாரதியார் கருதியது:

- பெண் தன் உழைப்பால் தன் வாழ்வாதாரத்தை ஈட்ட வேண்டும்.
- வேலை வாய்ப்பு பெண்ணை மரியாதை மற்றும் சுயமரியாதையுடன் வாழ வைக்கும்.
- சம்பாதிக்கும் பெண், குடும்பத்திலும் சமூகத்திலும் சமமாக மதிக்கப்படுவாள்.

அவர் இதை வெறும் பொருளாதாரக் கருத்தாக மட்டுமே அல்லாமல், **சமூக மாற்றத்தின் அடிப்படை** எனக் கண்டார். பெண் வேலைக்குச் செல்வது, சமுதாயத்தில் பாலின சமத்துவத்தின் வெளிப்பாடாகும் என்று அவர் நம்பினார்.

திருமணச் சுதந்திரம்

பாரதியார் திருமணத்தை ஒரு **சுதந்திரமான தேர்வு** ஆகவே கருதினார்; கட்டாயம் அல்ல. அந்தக் காலத்தில், பெண்களுக்குத் திருமணத் தீர்மானம் செய்யும் உரிமை கிடையாது. பெற்றோர், குடும்பம், சமூகம்–all dictated when, to whom, and under what conditions a girl should marry.

பாரதியார் வலியுறுத்தியது

- பெண் விருப்பமின்றி திருமணம் செய்யக் கூடாது.
- திருமணம் என்பது இருவரின் மனப்பூர்வமான இணக்கம் அடிப்படையில் நடக்க வேண்டும்.
- விதவைகளுக்கான மறுமணத்தை அனுமதிக்க வேண்டும்.

அக்காலத்தில், விதவைகளின் மறுமணத்தை ஆதரிப்பது மிகப் பெரிய சமூகச் சவாலாக இருந்தது. பாரதியார், விதவை என்பது சமூகத்தில் தண்டிக்கப்பட வேண்டியவரல்ல; அவர்களும் சந்தோஷமான வாழ்க்கையை வாழ உரிமை பெற்றவர்கள் என்ற கருத்தை வலியுறுத்தினார்.

அரசியல் மற்றும் சமூக பங்கேற்பு

பாரதியார், பெண்கள் அரசியல் மற்றும் சமூக தளங்களில் **சம உரிமையுடன் பங்கேற்க** வேண்டும் என்று வலியுறுத்தினார். அவரது பார்வையில், பெண்கள் வெறும் குடும்பப் பொறுப்பாளர்கள் அல்ல; அவர்கள் நாட்டின் சட்டங்கள், கொள்கைகள், சமூக முன்னேற்றம் ஆகியவற்றிலும் முக்கிய பங்கு வகிக்க வேண்டும்.

- பெண்களுக்கு வாக்குரிமை இருக்க வேண்டும்.
- அரசியல் முடிவெடுப்புகளில் பெண்கள் பங்கேற்க வேண்டும்.
- சமூகப் போராட்டங்களில் பெண்கள் முன்னணியில் நிற்க வேண்டும்.

அவர் நினைத்தது, அரசியல் தளத்தில் பெண்களின் பங்கேற்பு, **ஆண்களுக்கு இணையான மதிப்பையும் அதிகாரத்தையும்** அவர்களுக்கு வழங்கும். இது சமூகத்தின் மனப்போக்கை அடிப்படையாக மாற்றும்.

இலக்கியப் பங்களிப்பு

கவிதைகளின் வழியாகப் பெண்மையின் விடுதலை

பாரதியாரின் கவிதைகள் வெறும் கலைப் படைப்புகள் மட்டுமல்ல–அவை அக்காலத்தில் நிலவிய சமூக கட்டமைப்புக்கு எதிராக எழுந்த ஒரு புரட்சிக் குரல். 19ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் பெண்கள் பெரும்பாலும் “மனைவி”, “தாய்” என்ற ஒரே அடையாளத்திற்குள் அடங்கியிருந்தனர். சமூக இலக்கியமும் பெண்களை பெரும்பாலும் அன்பின் சின்னமாக மட்டுமே சித்தரித்தது; அவர்களின் சுயநினைவு, அறிவு, அரசியல் பங்கு பற்றி பேசுவதில்லை.

ஆனால் பாரதியார், பெண்களை சமூக முன்னேற்றத்தின் வீராங்கனைகள் எனச் சித்தரித்தார். அவர் பெண்களின் வலிமையை பூமியின் அடிப்படை சக்தியுடன் ஒப்பிட்டார். அவருடைய கவிதைகளில் பெண்ணின் தன்மைகள்:

- **சுதந்திரம்** - பெண் தனது வாழ்வைப் பற்றி சுயமாக முடிவெடுக்க வேண்டும். அவருடைய விருப்பம், சிந்தனை, கனவுகள் ஆண்களுக்குச் சம மதிப்பு பெற வேண்டும்.
- **சம உரிமை** - கல்வி, வேலை, அரசியல், சொத்து உரிமை போன்ற அனைத்திலும் பெண்கள் சம பங்கைப் பெற வேண்டும் என்பதே அவரது நிலைப்பாடு.
- **மன உறுதி** - மூடநம்பிக்கை, பழமைவாதம், அடக்குமுறை ஆகியவற்றுக்கு எதிராக போராடும் மனவலிமையை அவர் பெண்களுக்கு ஊட்ட விரும்பினார்.

உதாரணமாக, அவர் எழுதிய **"பெண் என்பவள் தெய்வம்; அவள் இல்லையெனில் உலகமே சிதைந்து போகும்"** என்ற வரிகள், பெண்களின் மதிப்பை உயர்த்தும் வகையில் இருந்தாலும், அது வெறும் புகழ்ச்சிக் குரல் அல்ல–அது அரசியல் மற்றும் சமூக ரீதியாக **பெண்ணின் பங்கு அவசியம்** என்ற வலியுறுத்தல்.

இந்தக் கவிதைகள் பெண்களிடம் **தன்னம்பிக்கை**, **சுயமரியாதை**, **சம உரிமைக்கான விழிப்புணர்வு** ஆகியவற்றை வளர்த்தன.

கட்டுரைகள் மற்றும் உரைகளின் தாக்கம்

பாரதியாரின் கட்டுரைகள் மற்றும் உரைகள், அக்கால சமூகத்தில் நேரடி சவாலாக இருந்தன. அந்தக் காலத்தில் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளைத் திறந்த வெளியில் பேசுவதும், குறிப்பாக ஆண்களின் ஆதிக்கத்துக்கு எதிராக கருத்து சொல்லுவதும், பெரிய சமூக எதிர்ப்பை சந்திக்கும் விஷயம். ஆனால் பாரதியார், இந்த ஆபத்துகளைப் பொருட்படுத்தாமல், பத்திரிகைகள், சஞ்சிகைகள் மற்றும் பொதுக்கூட்டங்கள் மூலம் தன்னுடைய கருத்துகளை வெளிப்படுத்தினார். அவர்:

- பெண்களுக்கு கல்வி ஒரு உரிமை மட்டுமல்ல, கடமையும் என்பதை விளக்கினார். கல்வி இல்லாமல் பெண் சமூக முன்னேற்றத்தில் பங்கேற்க முடியாது என்பதை வலியுறுத்தினார்.
- சிறுவர் திருமணம் பெண்களின் உடல் நலனையும் மனநிலையையும் கெடுக்கும் என்பதையும், அது அவர்களின் கல்வி மற்றும் சுய முன்னேற்றத்தை முற்றிலும் தடைசெய்யும் என்பதையும் கண்டனம் செய்தார்.
- விதவைத்தனம் என்பது மனிதாபிமானமற்ற பழக்கம்; விதவைகள் மறுமணம் செய்யக்கூடாது என்ற விதி அநியாயமானது என்றும், அவர்களுக்கு மறுமணம் செய்யும் உரிமை வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

மேலும், தனது உரைகளில் அவர் பெண்களை அரசியல் மற்றும் சமூக இயக்கங்களில் நேரடியாக பங்கேற்க அழைத்தார். அவர் சொற்பொழிவுகள் பெண்களில் சுயநினைவு எழுப்பின. பெண்கள் தங்களை "இரண்டாம் நிலை குடிமக்கள்" என்று அல்லாமல், சம உரிமையுள்ள குடிமக்கள் என்று உணர ஆரம்பித்தனர். பாரதியாரின் எழுத்துக்கள் மற்றும் பேச்சுகள், அக்காலத்தில் பெண்களை மெல்லமெல்ல சமூக மாற்றத்தின் மையப்புள்ளிகளாக மாற்ற உதவின.

சமூக பழக்கவழக்கங்களுக்கு சவால்

பாரதியார் சிறுவர் திருமணம், விதவைத்தனம், பெண்களுக்கு அரசியல் தடை போன்ற பழக்கவழக்கங்களைத் திறம்பட எதிர்த்தார். அந்த காலத்து பழமைவாதிகள், இவ்வாறான கருத்துக்களை "அழிவை உண்டாக்கும் சிந்தனைகள்" என்று கூறி எதிர்த்தாலும், பாரதியார் தனது எழுத்துக்களில் அந்த எதிர்ப்புகளை துணிச்சலுடன் மறுத்தார். இது சமூகத்தில் மெதுவாக பழக்கவழக்க மாற்றத்தைத் தொடங்கியது.

கல்வி மற்றும் அரசியல் பங்கேற்பு

பாரதியார், பெண்கள் படிக்கவும், அரசியல் கூட்டங்களில் பங்கேற்கவும் வேண்டும் என்று வலியுறுத்தியதால், அந்தக் காலத்தில் சில முன்னேற்றமான குடும்பங்கள் தங்கள் மகள்களை பள்ளிகளுக்கு அனுப்பத் தொடங்கின. மேலும், சுதந்திரப் போராட்டக் கூட்டங்களில் பெண்கள் பங்கேற்பது வழக்கமான ஒன்றாக மாறியது. இதில் பாரதியாரின் எழுத்துக்களும் சொற்பொழிவுகளும் மிகப் பெரிய உந்துதலாக இருந்தன.

பொதுமக்களின் மனநிலை மாற்றம்

பாரதியாரின் கருத்துகள் முதலில் சிறிய வட்டாரத்திலேயே தாக்கத்தை ஏற்படுத்தினாலும், பின்னர் அது பொது சமூக சிந்தனைகளில் பரவத் தொடங்கியது. இது, இந்திய சுதந்திர இயக்கத்தின் போது, பெண்களின் பங்கு முக்கியமானது என்ற கருத்தை வலுப்படுத்தியது. சமூகத்தில் பெண்கள் நேரடி தலைமைப் பொறுப்புகளை ஏற்கும் மனநிலை உருவானது. இதனால், பாரதியாரின் சிந்தனைகள் ஒரு இலக்கியப் புரட்சியாகத் தொடங்கி, ஒரு சமூகப் புரட்சியாக வளர்ந்தது. அவர் பெண்களை சமூகத்தில் சமநிலையில் நிறுத்திய முதல் முன்னோடிகளில் ஒருவராகத் திகழ்ந்தார். பாரதியாரின் பெண்கள் குறித்த சிந்தனைகள், அக்காலத்து பல சிந்தனையாளர்களுடன் ஒப்பிடுகையில், மிகவும் முன்னேற்றமானதும் முழுமையானதும் ஆகும். அவர் பெண்களை வெறும் கருணைக்குரியவர்கள் அல்லது குடும்பத்தின் நிழல்கள் என அல்லாது, சமூகத்தின் சம உரிமையுடைய தலைவர்கள் எனக் கண்டார். இதுவே அவரை அந்தக் காலத்து சீர்திருத்தவாதிகளிடையே தனித்துவமாக்கியது.

முடிவுரை

சுப்பிரமணிய பாரதியார், பெண்களின் உரிமை குறித்து எழுதியும் பேசியும், ஒரு காலத்தை விட நூற்றாண்டுகள் முன்னோக்கி சிந்தித்தவர். அக்காலத்தில் பெண்களின் வாழ்க்கை வீட்டிற்குள் மட்டுமே கட்டுப்பட்டு இருந்தபோதிலும், அவர் அவர்களைச் சமூக முன்னேற்றத்தின் மையமாகப் பார்த்தார். அவரது சிந்தனைகள் வெறும் இலக்கியப் பார்வையோ அரசியல் கருத்தோ அல்ல; மனித உரிமைச் சாசனத்தின் அடிப்படை கோட்பாடுகளுடன் ஒத்துப்போகும் ஒரு வாழ்வியல் தத்துவம் ஆகும்.

துணை நூல் பட்டியல்

- பாரதியார் கவிதைகளில் பெண்மையின் வெளிப்பாடு - டாக்டர் சு. ஜெயந்தி
- இலக்கியத்தில் பெண்கள் - எம். திலகவதி
- பாரதியாரும் பெண்சாதி விடுதலை - ஆ. சந்திரசேகரன்
- சுப்பிரமணிய பாரதியாரின் சமூக சீர்திருத்தக் கருத்துகள் - டாக்டர் பி. சண்முகம்
- தமிழ் இலக்கியத்தில் சமூகச் சீர்திருத்தம் - பேராசிரியர் இரா. குமாரசாமி
- பாலின சமத்துவம் - தமிழ் சமூகக் கோட்பாடு - ஜெயமாலா ராமசாமி

19. இயற்கை கவிஞன் பாரதி



திருமதி. வெ. சுகன்யா

பட்டதாரி ஆசிரியை (ஆங்கிலம்)
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
போளுவாம்பட்டி. தொண்டாமுத்தூர்

முன்னுரை

"தமிழகம் தமிழுக்குத் தகும் உயர்வளிக்கும்
தலைவனை எண்ணித் தவம் கிடக்கையில்
இலகு பாரதி புலவன் தோன்றினான்"

என்ற பாரதிதாசனின் வரிகளுக்கு ஏற்ப தோன்றியவர் மகாகவி பாரதியார். தமிழகத்தில் நாட்டுடைமையாக்கப்பட்ட முதல் கவிதைகள் பாரதியாருடையது. பாரதியைப் பார்த்து வியக்காத மனிதனோ, அவர் பெயரை உச்சரிக்காத கவிஞனோ, அவர் கவிதைகளைப் படித்து உத்வேகம் அடையாத இளம் தலைமுறையோ தமிழகத்தில் இருக்க முடியாது. இந்த சமுதாயம் மதிக்கும்படியான ஒரு நேர்மையான வாழ்க்கையை வாழ பாரதியின் கவிதைகள் நம் அனைவருக்கும் வழிகாட்டியாக அமையும். இன்றைய காலத்தில் இயற்கை பெரும் அழிவுக்கு உள்ளாகி வருகிறது இந்நிலையில் பாரதியார் காட்டிய இயற்கை மீதான சிந்தனைகள் நம்மைச் சுயமாகச் சிந்தித்து அதற்கான பதில்களைத் தேட வைக்கிறது. நாம் இயற்கையை அழிக்காமல் அதோடு இணைந்து வாழ்பவர்களாக மாற வேண்டும் என்பதை அவரது கவிதைகள் கூறுகின்றன." இயற்கை வேதம்

"வாசிக்கிறது அதை மனதாலே படித்திடுவோம் ".
'திங்களைப் போற்றுதும், ஞாயிறு போற்றுதும்,
மாமழை போற்றுதும்' (இளங்கோவடிகள்)

என்று வாழ்வில் தம்மோடு பயணிக்கும் இயற்கையின் தேவையும் பெருமையும் உணர்ந்து போற்றிப் புகழ்ந்தவர்கள் நம் முன்னோர்கள்.அவ்வகையில் 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பாரதியார் இயற்கையைக் குழந்தையைப் போல் வியந்து பாடுகின்ற வேத மரபினைத் தன் கொள்கையாகப் பின்பற்றினார் என்பதனை அவருடைய வசனக் கவிதைகளிலும் கதைகள் மற்றும் கட்டுரைகளிலும் காணலாம்."இயற்கை கவிஞன் பாரதி" என்ற என்னுடைய ஆய்வின் தலைப்பானது பாரதியார் தன்னுடைய படைப்புகளில் இயற்கையை எவ்வாறெல்லாம் ஆராதித்துள்ளார்.அதனை இந்த ஆய்வுக் கட்டுரை வழிக் காணலாம். ஐம்பூதங்கள்:

"மண்டிணிந்த நிலனும்
நிலனேந்திய விசும்பும் "

என்ற புறநானூற்றுப் பாடல் வரிகள், மண் அணிந்த நிலம், நிலம் ஏந்தியிருக்கும் ஆகாயம், ஆகாயத்தின் வழி வரும் காற்று, காற்றில் கலந்து வரும் தீ, தீயின் முரணிய நீர் ஆகிய பஞ்சபூதங்கள் கலந்தது உலகம் என்று குறிப்பிடுகிறது. அவ்வழிச் சென்று ஐம்பூதங்களையும் இனிமை மிக்கவைகளாகத் தன்னுடைய படைப்புகளில் பாரதி கொண்டாடி மகிழ்ந்துள்ளார்.

"இவ்வுலகம் இனியது இதிலுள்ள வான் இனிமை
யுடைத்து; ∴ காற்றும் இனிது..." (வசன கவிதை, ப.423)

இப்படி மண்ணிலுள்ள எல்லாவற்றையும் இனிமையுடையன எனக்கூறும் பாரதியார் அத்தகைய சிறப்புப் பெற்ற இவ்வுலகத்திற்கே தான் உணவாக வேண்டுமென்கிறார்.

"தெய்வங்களே! ∴ எம்மை உண்பீர், எனக்கு உணவாவீர்
உலகத்தை உண்பீர், உலகத்துக்கு உணவாவீர்!"

இவ்வரிகளில் உலகத்தை உண்பீர் என்றது,அதன் வளங்களை அழித்து, மலைகளைத் தகர்த்து ஏற்றுமதி செய்து உண்ணச் சொல்லவில்லை. ஐம்புலன்களால் உண்டு, இயற்கையோடு

இணைந்த அந்த உலகத்துக்கே உணவாகி அதனுடன் கலந்துபோய்விடுங்கள் என நமக்கும் வழி கூறுகிறார்.அதற்கு மேலாக அவற்றை அமுதமாக எண்ணி அள்ளிப் பருகுங்கள் என்பதை,

"காடு, மலை, அருவி, ஆறு,
கடல், நிலம், நீர், காற்று, "

என்ற பாடலில் அழுத்தமாகக் குறிப்பிட்டு இங்கே, சுற்றுப்புறத்தைப் பேணுகின்ற காடு முதல் கடல் ஈறாக உள்ளனவற்றை அமுதங்களாகவும் அங்கு வசிக்கும் உயிர்களைதெய்வங்களாகவும் காணும் கவிஞர் நம்மையும் அவர் வழியில் சிந்திக்கத் தூண்டும் வகையில் தனது பாடல் வரிகளை அமைத்துள்ளார்.

இயற்கை காதலன்

'கவிதை எழுதுபவன் கவியன்று,கவிதையே வாழ்க்கையாக உடையோன் வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன்,அவனே கவி"

அத்தகைய கவிஞர் பாரதியார் இயற்கையின் மீது ஆழ்ந்த அன்பும் ஈடுபாடும் கொண்டவர். அவர் இயற்கையை அழகாக வர்ணித்து பல கவிதைகளை எழுதியுள்ளார், அதனால் அவர் இயற்கையின் காதலன் என்று போற்றப்படுகிறார். இலக்கணச்சட்டங்களைத் தகர்த்தெறிந்த பாரதி புதுக்கவிதை எனப் புகழப்படும் பாமரரும் கேட்டுணரும் வசன கவிதையை தமிழுக்குத் தந்தார். இவர் தனது கவிதைகளில் புதுமையான யோசனைகளையும் நுட்பங்களையும் வெளிப்படுத்தினார். பாரதியார் இயற்கையை வெறும் காட்சியாய்க் காணாமல், அதில் நிறைந்திருக்கும் அழகையும், அதன் மூலம் கிடைக்கும் இன்பத்தையும் அனுபவித்தவர். அவரது கவிதைகளில் இயற்கை எழுச்சியுடனும், சுறுசுறுப்புடனும், உயிர்ப்புடனும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.இயற்கையிடம் ஈடுபாடு காட்டாதவர்களெல்லாம், தங்களைக் கவிஞர்கள் என்று சொல்லிக்கொள்வதை விரும்பாத பாரதி நாட்டில் வானம் பார்த்தறியாத குருடர்கள் எல்லோரும் கவிகளென்று சொல்லி வெளிவருகிறார்கள்' (பாரதியும் கீட்சும், ப.27) என்று வருத்தமடைகிறார். "இயற்கையை ரசிக்கும் கீட்சின் ரசனையினையும் அழகை ஆராதித்து மகிழும் அவரது பூரிப்பிணையும் பாரதியின் 'குயில்பாட்டு' காலை வணக்கமும், 'பாஞ்சாலி சபத' மாலை வருணனையும் 'காட்சிகள்' கவிதைகளும் நமக்கு நினைவூட்டுகின்றன என்று கவிஞர் பாலா, பாரதியின் இயற்கையின்மீதான காதல் கீட்சின் அழகிய கவிதைகளுக்கு ஒப்பானது எனத் தனது" பாரதியும் கீட்சும் "நூலில் குறிப்பிட்டுள்ளார்.வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம் என நதிநீர் இணைப்பிற்கு முன்பே கனவு கண்டவர்.

இயற்கையும் கவிதையும்

" நிலாவையும் வானத்து மீனையும்
காற்றையும் நேர்பட வைத்தாங்கே "

எந்த ஒரு கவிஞனும் இயற்கையோடு இணைந்து பயணிக்காவிட்டால் சிறப்பான கவிதைகளை இயற்ற முடியாது. அந்த அளவிற்கு இயற்கை கவிஞனுக்குக் கவிதைகளை அள்ளித் தருகிறது.அவ்வகையில் "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற பாடலில் உழைப்பின் அவசியத்தையும் இயற்கையைச் சார்ந்து வாழும் மனிதர்களின் கடமையையும் வலியுறுத்தியுள்ளார். பாரதியார் தன் வாழ்வை இயற்கையுடன் இணைத்துக் கொண்டார். அவர் தன் கண்ணில் கண்டயாவற்றையும் இயற்கையின் வழியாகவே கண்ணுற்றார். ஆகையால் அவர் பாடாத இயற்கை பொருட்களே இல்லை எனலாம். இயற்கையோடு இணைந்து வாழக்கற்றுக்கொண்டு வாழ்ந்தும் காட்டிய அவர் இயற்றிய காணி நிலம் வேண்டும் என்ற பாடலில்,

"கேணி அருகினிலே தென்னை
மர கீற்று-மிளநீரும் "

என்று தன் ஆசையைக் கவிதை வரிகளில் மிக அழகாக வெளிப்படுத்தி உள்ளார்.மேலும் "காக்கை குருவி எங்கள் ஜாதி நீள் கடலும் மழையும் எங்கள் கூட்டம்" போன்ற பல பாடல்களைப் பாடி அவரின் இயற்கை மீதான ஈடுபாட்டினை வெளிப்படுத்தியுள்ளார்.இயற்கை அழகு நிறைந்த அவர் பாடல்களில் "பச்சை தமனியனின் பந்தல் சுடரொளியில்" என் தொடங்கும் பாடலில் பசுமைநிலம் பனிமூட்டம் பறவைகளின் குரல் என் அனைத்தும் இயற்கையின் அழகு எனத் தன் கவிதை மொழியில்

புனைந்துள்ளார்.இயற்கையைஆழமாக நேசித்த பாரதிக்கு இயற்கை கற்பனை வளத்தையும் கவிதை வரிகளையும் அள்ளித்தந்தது. எனவே பாரதியின் இயற்கையுடையனான பயணம் பிரித்து வைத்தால் பொருள் தராத இரட்டை கிளவி போல இணைந்த பயணமாகவே அமைந்திருந்தது.

முடிவுரை

பாரதியார் இயற்கையின் தாக்கத்தைத் தனது எழுத்துக்களில் மட்டுமல்லாது, தனது வாழ்க்கையிலும் பிரதிபலித்தார். அவர் இயற்கை எழில் சூழ்ந்த இடங்களில் அமர்ந்து சிந்திப்பதையும், எழுதுவதையும் வழக்கமாகக் கொண்டிருந்தார். அவரது பாடல்களில் காணப்படும் உற்சாகமும், எழுச்சியும் இயற்கையின் ஆற்றலை பிரதிபலிப்பதாக உள்ளது. குறிப்பாக, "புதிய ஆத்திசூடி"யில் "இயற்கையை வணங்கு" என்று கூறுவதன் மூலம், இயற்கையை வழிபடும் பண்பை வலியுறுத்தியுள்ளார். மனிதனுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை உணர்ந்திருந்தார். அவரது கவிதைகளில், மனிதன் இயற்கையின் ஒரு அங்கம் என்றும், இயற்கையை நேசிப்பதன் மூலம் மனிதன் தன்னைத்தானே நேசிக்க முடியும் என்றும் கூறியுள்ளார். "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்ற பாடலில், உழைப்பின் அவசியத்தையும், இயற்கையை சார்ந்து வாழும் மனிதனின் கடமையையும் வலியுறுத்தியுள்ளார். மனிதனுக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை உணர்ந்திருந்தார். அவரது கவிதைகளில், மனிதன் இயற்கையின் ஒரு அங்கம் என்றும், இயற்கையை நேசிப்பதன் மூலம் மனிதன் தன்னைத்தானே நேசிக்க முடியும் என்றும் கூறியுள்ளார் இயற்கை வளங்களைப் பொறுத்தே நமது வாழ்வாதாரம் அமைகிறது. எனவே அவற்றைப் பாதுகாப்பதின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்படுவோம்.

மேற்கோள் நூல்கள்

- பாரதியார் கவிதைகள் சுப்ரமணிய பாரதியார் -திருமகள் நிலையம்(ஏப்ரல் 2015)
- சிலப்பதிகாரம் இளங்கோவடிகள் -பொ.திருகூடசுந்தரம் அண்ணாமலை பல்கலைக்கழகம் (1967)
- புறநானூறு- தொகுப்பு நூல் உ.வே.சாமிநாதர் (1894)
- பாலா -பாரதியும் கீட்சும், அன்னம் சிவகங்கை முதற்பதிப்பு (டிசம்பர்1982)
- பாரதிதாசன் பாடல்கள் கனகசுப்புரத்தினம் பாவை பப்ளிகேஷன் (மே 2000).

20. மகாகவியின் கண்ணன் பாட்டு



கவிஞர். சுப்புலட்சுமி ஸ்ரீ

தமிழ் பட்டதாரி ஆசிரியர்
ஏசியன் கிறிஸ்டியன் உயர்நிலைப்பள்ளி
ஜீமங்கலம் ஓசூர்

முன்னுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் முடிசூடாக் கவி மன்னனாகத் திகழ்ந்து தனக்கெனத் தனித்துவமான இடத்தைப் பெற்றவர் மகாகவி சுப்பிரமணிய பாரதி. இவரின் எழுச்சிமிக்க மனவோடைகள் விடுதலை வேட்கை, சமூக சீர்த்திருத்தம், பெண்விடுதலை, இயற்கை போன்ற பல்வேறு சிந்தனைகளில் கவியாகவும் காவியமாகவும் சிறந்து விளங்கினாலும் ஆன்மீகத்தையும் பக்தியையும் வெளிப்படுத்தும் பாடல்களும் மிகச் சிறந்த இடத்தைப் பெற்றுள்ளன. இடைக்காலத் தமிழ் வரலாற்றில் சைவமும் வைணவமும் போட்டிப்போட்டு பாடல்கள் இயற்றி சமய இலக்கியங்களை வளர்த்தது மட்டுமல்லாமல் தமிழ் இலக்கியத்தையும் வளர்த்துள்ளது. அதில் ஆழ்வார்கள் திருமாலை பல்வேறு பாவனைகளில் பாடி மகிழ்ந்து பாசுரங்களை இயற்றியுள்ளனர். ஆனால், பாரதியாரின் கண்ணன் பாட்டோ தமிழ் இலக்கியத்தில் ஓர் அற்புதமான படைப்பு. இதன் மூலம் பாரதியார், பக்தி இலக்கியத்திற்குப் புதுமையான நறுமணம் சேர்த்துள்ளார். இக்கட்டுரையில், பாரதியாரின் கண்ணன் பாட்டு பற்றிய கலை, சிந்தனை, மொழி, பாணி, இலக்கியப் பங்களிப்பு ஆகிய அம்சங்களை விரிவாக ஆராய்ந்து, அவர் தமிழுக்கு வழங்கிய பக்திக் கவிதைப் புதுமையின் ஆழத்தை வெளிப்படுத்துவதே நோக்கமாகும்.

ஆழ்வார்களும் பாரதியும்

ஆழ்வார்களுக்கும் பாரதியாருக்கும் ஒரே மாதிரியான ஆன்ம நாதம் இருந்ததென்றே கூறலாம். ஆழ்வார்கள் குறிப்பாக நம்மாழ்வார், பெரியாழ்வார், ஆண்டாள் போன்றோர் கண்ணனை ஒரு தெய்வமாகவும் சில சமயம் ஒரு குழந்தையாகவும் காதலானாகவும் பாடியுள்ளனர்.இவர்களிடம் கண்ணன் முழுமையான பரமாத்மா, கருணையுள்ள இரட்சகர், மங்களமிகு காதலன் என மூவகை வடிவங்களில் தோன்றுகிறார். பாரதியாரோ கண்ணனை ஒரு மகிழ்ச்சியூட்டும் சிறு தோழனாகவும், இனிமையான விளையாட்டு நண்பனாகவும் பார்த்தார். “கண்ணன் பாட்டில்” கண்ணன் களவு ஆடும் குழந்தை, புல்லாங்குழல் ஊதும் வல்லமை வாய்ந்த யுவதன், பரமாத்மா ஆகிய மூன்று நிலைகளிலும் வருகிறார். பாரதி கண்ணனைப் பற்றிப் பாடும்போது பக்தி, அழகு, விளையாட்டு, மனித நேசம் அனைத்தையும் இணைத்தார். கண்ணன் பாரதியின் பாடல்களில் தெய்வமாக இருப்பதோடு, மனிதன் போல அணுக்கம் கொண்ட நண்பனாகவும் இருக்கிறார். ஆகமொத்தத்தில் இருவரும் கண்ணனை உள்ளம் கொள்ளை கொள்ளும் அழகனாகவும், மகிழ்ச்சி தரும் தெய்வமாகவும் பாடுகின்றனர். அன்பும், பாசமும், விளையாட்டுத்தனமும் ஒரே நேரத்தில் வெளிப்படுகிறது. கண்ணனைப் பாடும் போது மெய்யான பக்தியும், பாசமும், தனிப்பட்ட அனுபவமும் கலந்திருக்கும்.

பாரதியும் கண்ணனும்

கண்ணன் பாட்டு என்னும் கவிதைத் தொகுப்பில், பாரதியார் 23 பாடல்களைப் பாடியுள்ளார். தனது கவிஞனின் உள்ளத்தையும், பக்தனின் பரவசத்தையும் ஒருங்கிணைத்துக், கண்ணன் எனும் இறைமகனைப் பற்றிய பேரன்பை ஓவியமாக வரைகிறார். கண்ணனை ஒரு கருணையான இறைவனாக மட்டுமல்ல, தோழனாக, தம்பியாக, குழந்தையாக,தாயாக, தந்தையாக, சீடனாக, சேவகனாக, விளயாட்டுப் பிள்ளையாக, காந்தனாக, காதலியாக, காதலனாக, ஆண்டானாக, குலதெய்வமாகவும் கற்பனை செய்து, மனிதனின் இயல்பான பாசத்தைத் தெய்வீக நிலைக்கு உயர்த்துகிறார். இதன் மூலம், பக்தி கவிதைக்கு உயிரூட்டும் சுவையும், வாசகரின் மனதை நெகிழ வைக்கும் அழகும் உருவாகிறது. சிரிப்பு, சினம்,

விளையாட்டு, தத்துவம் போன்ற பல்வேறு உணர்வுகளால் நிறைந்த கண்ணன் உருவம், பாரதியாரின் வரிகளில் உயிர்பெறுகிறது.

பாரதியின் தனித்தன்மை

கடவுளைப் பாடுவதில் இரண்டு வகை பாவனைகள் உண்டு. ஒன்று உலகியல் பாவனை, மற்றொன்று இறைவியல் பாவனை. பாரதியின் பாடல் நோக்கோ உலகியலை சுட்டுவதாகவே உள்ளது. நாயன்மார்கள் ஆழ்வார்கள் போன்று பாரதி பக்தி மார்கமாக மட்டுமே வாழ்ந்தவர் இல்லை. ஏனெனில், கண்ணன் பாட்டு பாரம்பரிய பக்தி இலக்கியங்களில் காணப்படும் பாவனைக்கு முற்றிலும் மாறுபட்டது என்றே சொல்லலாம். இங்கு பதி என்பது வெறும் வழிபாட்டுக்கு அல்ல, இது அன்பின் பரவசம் என்பதை நன்கு உணரலாம். கவிஞர் கண்ணனைத் தாயாகவும் தந்தையாகவும் தோழனாகவும் குழந்தையாகவும் சித்தரிப்பதால் அன்பின் உயரிய நிலைகளை உணரமுடிகிறது. கடவுளைக் கோயிலிலிருந்து விட்டுக்கே கொண்டு வந்து உறவோடு உறவாக வைத்து நோக்கும் சிறப்பையும் பாரதியின் பரந்த நோக்கையும் அறியமுடிகிறது. எல்லாத் தலைப்புகளிலும் ஒவ்வொரு பாட்டு விதமாக எழுதிய பாரதி காதலன் என்னும் தலைப்பில் 5 பாடல்களையும் காதலி என்னும் தலைப்பில் 6 பாடல்களையும் எழுதியிருப்பதை இங்கு கண்டுணரலாம். இதன் மூலம் ஆன்மீகத்தின் வழி அன்பையும் இணைத்துப் பாடியிருப்பது பக்தி இலக்கியங்களிலே தனித்தன்மையுடையதாக பாரதியின் கண்ணன் பாட்டு இருப்பதை அறியலாம்.

கண்ணன் பாட்டு உருவாக்கப் பின்னனி

பாரதியாரின் சிறுவயது, அவரின் படைப்புலகில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர் தனது பாட்டியின் வாயிலாகக் கண்ணனைப் பற்றிய புராணக்கதைகள், கிருஷ்ணரின் லீலைகள், நாட்டுப்புறக் கதைகள் போன்றவற்றைக் கேட்டறிந்தார். அதன் விளைவாக அவரின் மனதில் அழகான பாசப்பிணைப்பினை உருவாக்கியிருந்தது. அதனால் தான் அவரது கவிதைகளில் கண்ணன் வெறும் காதாப்பாத்திரமாக மட்டுமல்லாமல் உயிரோட்டமான, பாசமிக்க, நெருக்கமான பாத்திரமாக சித்தரிக்கப்படுகிறார். பாரதியார் 1910–1912 காலக்கட்டத்தில் புதுச்சேரியில் இருந்தபோது, கண்ணன் பாட்டு பாடல்கள் உருவாகின.

கண்ணம்மா என் தாயாக

உலகிலேயே வெல்ல முடியாத உறவுப்பாசம் எதுவென்றால் அது தாய்ப்பாசம் தான். பாரதியார், கண்ணம்மாவை தன் தாயாகவும் தன் சகல உறவாகவும் புனைந்துள்ளார். தாயின் உருவமாகவும் பாசத்தின் வடிவமாகவும் வர்ணிக்கிறார். இது அன்பும் பாசமும் தெய்விகமும் கொண்ட உணர்வைக் கிளரும் பாடல் என்றால் மிகையாது. " உண்ண உண்ணத் தெவிட்டாதே - அம்மை", கவிஞர், கண்ணம்மாவை தன் தாயாக பாவிக்கையில் அம்மா..என் உயிராகிய முலையில் உண்ண உண்ணத் தெவிட்டாத இன்பம் உள்ளது என்கிறார். ஒரு குழந்தைக்கு முதல் உணவு தாயின் முலையிலிருந்துதான் கிடைக்கிறது. அதனால் தான் என் உயிரே தாயின் முலை போன்றது என்கிறார். பசியால் அழும் குழந்தைக்கு தாய்ப்பால் எவ்வளவு முக்கியமோ, தாய்ப்பாசத்தின் வலிமை எத்தகையதோ அதுபோல கண்ணன் பாரதிக்கு என்பதை இப்பாடல் வரியின் வலிமை உணர்த்திவிடுகிறது.

கண்ணம்மா என் மகளாக

பாரதியின் அற்புதமான கற்பனை உருவமே கண்ணம்மா. கண்ணம்மாவை சிறுமியாகப் பாவித்துத் தன் மகள் என்ற கண்ணோட்டத்தில் காணும் இன்பம் அலாதியானது. ஒரு குழந்தையின் தூய்மை, அழகு, குறும்பு, நற்குணம் போன்றவற்றை மென்மையான பாசமொழியில் எழுதியுள்ளார். இது வெறும் தாலாட்டு அல்ல. தந்தை மகளின் பாசத்தை ஆழமாகப் பாடிய காவியம். " · சின்னஞ் சிறு கிளியே கண்ணம்மா..செல்வக் களஞ்சியமே! இப்பாடல் கண்ணன் பாட்டில் மிகவும் அழகான அனைவரையும் ஈர்க்கும் பாடல் என்றால் அது மிகையாகாது. இந்தப் பாடலில் அவர் தனது கண்ணம்மா என்ற பெயரில் உள்ள தனது மகளுக்காகப் பாடியுள்ளார் என்றாலும் கண்ணனையும் பாடப்பட்டதாகப் பார்க்கப்படுகிறது. இதன்மூலம் குழந்தைகள் நம் வாழ்நாள் முழுவதும் நமது வாழ்க்கையை

வளமாக்குவதாகவே உணரவைக்கிறது. இதனால்தான் செல்வக்களஞ்சியம் என்று பாடினாரோ?

கண்ணன் என் தோழன்

இந்தப் பாடலில் பாரதியார் கண்ணனைத் தன் தோழனாகப் பாவித்து, அவனது இயல்பையும் அவனது உறவையும் விவரிக்கிறார். கண்ணன் ஒரு நண்பனாக, வழிகாட்டியாக, தன்னை உற்சாகப்படுத்துபவனாக தன் துன்பங்களைப் போக்குபவனாக சித்தரிக்கிறார். "ஊனை வருத்திடு நோய்வரும் போதினில், உற்ற மருந்துசொல் வான்" பாரதியாரைப் போலவே நம்மாழ்வாரும் கண்ணனை தன் நண்பனாக பாவித்துப் பாடியுள்ளார். "கண்ணன் கழலிணை நண்ணும் மனமுடையீர்" என்ற நம்மாழ்வாரின் பாடல் அடிகள் மூலம் கண்ணனை நண்பனாக ஏற்றுக்கொள்ளும் உணர்வை வெளிப்படுத்தியிருப்பதை இங்கு ஈண்டு காணலாம்.

கண்ணம்மா என் காதலி

பாரதி, கண்ணம்மாவை தன் உயிரின் காதலாக வர்ணிக்கிறார். "என் காதலே" – இங்கே காதல் என்பது வெறும் காதல் உணர்ச்சி அல்ல; அது அன்பும், நட்பும், தெய்வீக பாசமும் கலந்து காணப்படும் ஒரு பரிசுத்தமான உணர்வு. அவர் கண்ணம்மாவைப் பார்த்தவுடன் மனதில் ஏற்படும் மகிழ்ச்சி, ஆனந்தம், உயிருக்கு உயிர் என்ற உணர்வை பாடலில் வெளிப்படுத்துகிறார். " நீயெனது இன்னுயிர் கண்ணம்மா! எந்த.." இப்பாடல் வழி பாரதியார் அன்பின் பரவசத்தை மகிழ்ச்சியாகக் காட்டுகிறார். இதில் சொற்கள் மிக எளிமையாக இருந்தாலும் அதன் உணர்வு மிக ஆழமாக இருப்பதைக் காணலாம். மேலும் காதல், இயற்கை, அழகு, இறைவன் எனப் பல அர்த்தங்களில் எடுத்துக் கொள்ளலாம்.

கண்ணன் என் சேவகன்

இந்தப் பாடலில் பாரதியார், பகவான் கண்ணனைத் தன்னுடைய சேவகர் போலக் கற்பனை செய்து, அவனது பக்தி உணர்வையும், தெய்வத்தை அடையும் நெருக்கத்தையும் வெளிப்படுத்துகிறார். கண்ணன் தம் வாழ்க்கையின் ஒவ்வொரு தேவைக்கும் துணைபுரிந்து, பாதுகாத்து, மகிழ்ச்சியையும் ஆறுதலையும் அளிப்பவன் என்று பாரதியார் நம்புகிறார். "நண்பனாய், மந்திரியாய், நல்ல சிரியனுமாய், பண்பிலே தெய்வமாய்ப் பார்வையிலே சேவகனாய், எங்கிருந்தோ வந்தான், இடைச்சாதியென்று சொன்னான்" இப்பாடல் மூலம், இறைவன், ஒருவனைப் பாதுகாக்கும் பணியில் எவ்வாறு எப்போதும் உடனிருக்கிறான் என்பதைச் சொல்லுகிறார். மேலும் இப்படி ஒரு நண்பனைப் பெற என்ன தவம் செய்துவிட்டேன் என்று ஆனந்தமாய் ஆலாதிக்கும்போது ஒரு சிறந்த சேவகன் தன் செயல்களில் எத்தகைய உயர்ந்த பண்புடையவனாய் இருக்க வேண்டும் என்பதையும் வெளிப்படுத்தியுள்ளார். கண்ணன் சேவகன் என்கிற சொல்லாடல், பக்தனின் மனத்தில் இறைவன் அடிமையாகவே நின்று சேவை செய்கிறான் என்ற அளவிற்கு அன்பு-பக்தி உறவு வலிமையாக இருக்க வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

கண்ணம்மா ஒரு குழந்தையாக

கண்ணனை பல்வேறு கோணங்களில் வைத்துப் பாடிய பாரதி கண்ணனைக் குழந்தையாகப் பாவித்து பாடிய அழகில் பிள்ளைத் தமிழ் இலக்கியத்தின் பத்துப் பருவப் பாடல்களையும் பின் தள்ளி விட்டதென்றே கூறலாம். "சின்னஞ் சிறு கிளியே-கண்ணம்மா! செல்வக் களஞ்சியமே!" பாடலில் பாரதியின் குழந்தை உள்ளம் எவ்வளவு கவி உள்ளமாக ஓடுகிறதே..! குழந்தைகளின் உலகமே தனிப்பரவச உலகம். அதில் கள்ளமில்லா மகிழ்ச்சி வெள்ளம் கரைபுரண்டோடும். நம் பாரதிக்குச் சொல்லவா வேண்டும்? அதைக் கவிக்கொஞ்சலில் அள்ளித் தழுவிக்கொண்டதோடு நம் மனதையும் கொள்ளை கொண்டுவிட்டாரே! கண்ணனை அவர் தன் குழந்தைப் பருவ நட்பாகவும், விளையாட்டுத் தோழனாகவும், ஆனந்தத்தின் உருவாகவும் கற்பனை செய்தார். இந்தப் பாடல்கள் பக்தி, காதல், இயற்கை, விளையாட்டு ஆகிய உணர்வுகளைக் கலந்து, எளிய தமிழில் குழந்தைத்தனத்தின் சுவையோடு எழுதப்பட்டவை.

அவற்றின் மூலம், பாரதியார் தெய்வத்தை மகிழ்ச்சியுடனும் நெருக்கத்துடனும் அணுகும் புதிய பாணியை உருவாக்கினார்.

முடிவுரை

பகவான் கிருஷ்ணரின் தெய்வீகத் தோற்றம், அவர் மீது கவிஞருக்கிருந்த பாசம், பக்தி, பரமார்த்த சிந்தனை ஆகியவற்றை வெளிப்படுத்துகிறது. "கண்ணன் பாட்டு"வில் பாரதி, கிருஷ்ணரை ஒரு களியாட்டக் குழந்தையாகவும், ஓர் அற்புதமான யோகியாகவும், அனைத்துலக சக்தியாகவும் வர்ணிக்கிறார். பாரதியாரின் "கண்ணன் பாட்டு" தொகுப்பு, ஒரு தாயின் அன்பு, பக்தியின் பரவசம், குழந்தையின் சிரிப்பு, கிருஷ்ணனின் தெய்வீக குணங்கள் எனப் பல பரிமாணங்களை ஒருங்கே கொண்ட கவிதைச் செல்வமாகும். இதில் கிருஷ்ணனை ஒரு தெய்வமாக மட்டுமல்லாது, பாசமிகு குழந்தையாக, விளையாட்டுத் தோழனாக, உலகின் அழகிய காட்சிகளின் உயிராக பாரதியார் பாடுகிறார். இதனால் "கண்ணன் பாட்டு" என்பது வெறும் பக்திப் பாடல்கள் அல்ல; அது மனிதனின் உள்ளத்தில் இருக்கும் பாசத்தையும், அன்பையும், ஆனந்தத்தையும் எழுப்பும் ஓர் அழியாத காவியம் ஆகும். பாரதியின் பார்வையில், கண்ணன் ஒரு புராணக் கதாபாத்திரம் மட்டுமல்ல; வாழ்வின் அனைத்து நிலைகளிலும் துணை நிற்கும் சக்தி. அவர் இயற்றிய ஒவ்வொரு வரியும், பக்திக்கும் பாவனைக்கும் இடையே ஒரு பாலமாக விளங்க இதன் வழி பாரதி, இறைபாசத்தை மனித உறவுகளின் வழியே வெளிப்படுத்துகிறார்.

மேற்கோள் நூல்கள்

- பாரதியார் கவிதைகள், சுப்பிரமணிய பாரதியார்,தொகுப்பு-சிங்கம்புணரி சந்திரகாந்தன்
- கவிராஜன் கதை, வைரமுத்து
- ஆழ்வார்களும் பாரதியும், அ. சீனிவாசன்
- பன்னிரு ஆழ்வார்கள் கதைகள், அரு.ராமநாதன்

21. பாரதியாரின் புதிய ஆத்திசூடி



ஜெயலட்சுமி மணிகண்டன்
மேனாள் தலைவர் ஹைதராபாத் தமிழால் இணைவோம் சங்கம்

முன்னுரை

பாரதியாரின் புதிய ஆத்திசூடி என்பது தமிழ் இலக்கியத்தின் மரபான ஆத்திசூடியை (அவ்வையார் இயற்றிய) மையமாகக் கொண்டு புதிய யுகத்திற்கு ஏற்ப சமுதாய நலன், சமத்துவம், சிந்தனை, விடுதலை, பண்பாடு ஆகியவற்றை வலியுறுத்தும் ஆக்கமாகும். இது அகர முதலாகத் தொடங்கும் முறையில் எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு வரியும் ஒரு முக்கியமான சமூகக் கருத்தைச் சுருக்கமாகக் கூறும் படைப்பாகும். உதாரணமாக:

அ - அகர முதலே அனைத்தும் நன்று!
நல்லதின் ஆதாரம் அகரம் போல எல்லாமே நன்மைக்காகவே இருக்க வேண்டும் என்று அர்த்தமாகிறது.

இ - இந்நாட்டில் இனம் ஒன்றே!
சாதி மதம் மொழி இன வேதங்கள் இல்லாமல் ஒற்றுமை வேண்டும் என்பதாகும்.

உ - உண்மையே உயிர் நெறி!
வாழ்க்கையில் உண்மையை வழிகாட்டியாகக் கொள்ள வேண்டும்.

எ - எதற்கும் ஏற்புடையர்!
புதிய சிந்தனை, அறிவியல், மாற்றங்களுக்கு தயாராக இருத்தல் வேண்டும்.

ஓ - ஓரிருவர் அல்ல உலகோடு இணை!
உலகளாவிய சிந்தனை தனிமை அல்ல ஒற்றுமையாகும்.

ந - நம் நாடே பரமோன் நாடு!
தாய்நாட்டின் பெருமை இதுவே உலகில் சிறந்தது என்ற எண்ணம் வேண்டும்.

புதிய ஆத்திசூடியின் கருப்பொருள்

- சமத்துவம், சாதி, மத, இன, பேதங்களை எதிர்த்து - "இனமொன்று" என்ற எண்ணம்.
- உண்மை மற்றும் நேர்மையே உண்மை வாழ்வுக்கு அடிப்படை.
- தேசியம் தாய்நாட்டின் பெருமை, விடுதலை, முன்னேற்றம்.
- அறிவுப் பயணம் சிந்தனை, அறிவியல், புத்திசாலித்தனம்.
- பெண்கள் உரிமை
பெண்களுக்கு சம உரிமை - பெண் சிந்தனை.

புதிய ஆத்திசூடியின் முக்கியத்துவம்

சிறுவர்களுக்கான கல்விச் சூழலில் தேசிய உணர்வையும் சமூக விழிப்புணர்வையும் வளர்க்கும் வகையில் அமைந்துள்ளது. பாரம்பரிய ஆத்திசூடியை மாறாக, இது சுதந்திரச் சிந்தனை, பகுத்தறிவு, சமுதாய நீதி ஆகியவற்றை முன்னிலைப்படுத்துகிறது. பாரதியாரின் புதினங்கள் தமிழில் சமூக நலம் பெண்கள் முன்னேற்றம் விடுதலைச் சிந்தனை, தேசியப் பெருமை, சமத்துவ மற்றும் கடவுள் பக்தி போன்ற முக்கியமான கருத்துக்களை உள்ளடக்குகின்றன. அவரது புதினங்கள் தனித்துவமான தமிழ் சொல்லாட்சி உடன் பரந்தமான கருத்துக்களை எளிமையாகவும் உருக்கமாகவும் எடுத்துரைக்கின்றன.

பாரதியாரின் புதினங்களின் முக்கியமான கருத்துறை

1.தேசிய விழிப்புணர்வு:
இந்திய விடுதலைப் போராட்டத்தில் மக்களைத் தூண்டும் வகையில் எழுதியுள்ளார். தாய்நாடு பற்றிய பெருமை காதல் மரியாதை என ஆழ்ந்த உணர்வுகள்.

2. **பெண்கள் முன்னேற்றம் மற்றும் சமத்துவம்**:

புதுமைப்பெண் என்ற கருத்தை முன்வைத்துப் பெண்கள் கல்வி, சுயமரியாதை, உரிமைகள் பற்றிப் பேசினார். பெண்களைச் சமுதாயத்தில் சமன்பாகமாகக் கருதியவர்.

3. **சமூக நீதி மற்றும் சாதி விலக்கு எதிர்ப்பு**:

சாதி, மதம், இனம், பேதங்கள் இல்லாத சமுதாயத்தை அவர் நோக்கமாகக் கொண்டார். ஒவ்வொரு மனிதனும் சமமானவன் என்பதை வலியுறுத்தினார்.

4. **தன்னம்பிக்கை மற்றும் விடுதலைச் சிந்தனை**:

"நமக்குப் பயமேன்" போன்ற வரிகளில் அவரின் தன் தன்னம்பிக்கை புலப்படும்.அடிமைத்தனத்தை எதிர்த்து மனமுடைந்த மக்களை எழுப்பும் பாணியாகவும் கையாண்டார்.

5. **கடவுள் மற்றும் ஆன்மிகச் சிந்தனை**: அவரது சில புதினங்களில் ஆன்மிக உணர்வும், பக்தியும் ததும்பி விடுகின்றன. ஆனால் அவர் பகுத்தறிவுடன் ஆன்மிகத்தையும் விமர்சிக்கத் தெரிந்தவர்.

6. **இயற்கை மற்றும் அழகு உணர்வு** :

மலர்கள், பறவைகள், இயற்கையின் செழிப்பு போன்றவை அவரது கவிதைகளில் விரிவாகக் காணப்படும். உதாரணமாக; "சிந்தனை செய்துவிட்டு செயல் தொடங்கு", "செயலில் முன்னேற முன்னேற்பாடு சிந்தனை அவசியம் என்ற வாதம். " யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்". தமிழ் மொழிக்கான பெருமையும் அதன் தனித்துவமே இங்கு பேசப்படுகிறது.

பாரதியாரின் புதினங்கள்

தமிழில் சமூக நலம், பெண்கள், முன்னேற்றம், விடுதலை, சிந்தனை, தேசியப் பெருமை, சமத்துவம் மற்றும் கடவுள் பக்தி போன்ற முக்கியமான கருத்துக்களை உள்ளடக்கி அமைந்தவையாகும். அவரது புதினங்கள் தனித்துவமான தமிழ்ச் சொல்லாட்சியுடன் பரந்தமான கருத்துக்களை எளிமையாகவும் உருக்கமாகவும் எடுத்துரைக்கின்றன. பாரதியாரின் புதினங்கள் தமிழ் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தியவை அவை தனி மனித உரிமைகள் சமத்துவம் தேசிய உணர்வுகள் பெண்ணுரிமை தன்னம்பிக்கை பக்தி all these interwoven with poetic beauty and revolutionary spirit.

முடிவுரை

புதிய ஆத்திசூடி என்பது பாரதியாரின் யுகத்தோற்ற நவீன சிந்தனையை குழந்தைகளுக்கும், மக்களுக்கும் எளிய வடிவில் புகட்டும் நாவிநோயக் கவிதையாகும். இது அவரது சமூக சீர்திருத்தக் கோட்பாடுகளின் ஒரு துளியேயாகும்.

22. பாரதியும் இதழியலும்



திருமதி மா. ஜெயந்தி
எம்.,ஏ.,பி.எட்
பட்டதாரி ஆசிரியர்,
அரசு மேல்நிலைப்பள்ளி, சூலூர்,
கோவை

முன்னுரை

மகாகவி சுப்ரமணிய பாரதியார் ஒரு புகழ்பெற்ற தமிழ்க கவிஞர் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர் ஆவார். அவர் தமிழ் இலக்கியத்திலும் இந்திய சுதந்திரப் போராட்டத்திலும் ஒரு முக்கிய பங்களிப்பாளராக இருந்தார். அவரது கவிதைகள், கட்டுரைகள், பாடல்கள் மற்றும் இதழ்கள் மூலம் அவர் மக்களின் மனதில் தேச பக்தி மற்றும் சமூக சீர்திருத்த உணர்வுகளை ஊட்டினார். கல்வி என்பது பள்ளியில் அல்லது கல்லூரியில் மட்டும் பெறப்படுவதன்று அன்றாடம் வெளிவரும் இதழ்களிலும் நடைமுறை அறிவைப் பெறுவதுடன் அதற்கு ஏற்ப வாழவும் முனைக்கின்றனர். இவ்விதழ்களின் ஆசிரியர் சமூகத்திற்குத் தேவையான பாடங்களை முன்வைக்கின்றனர். சிறந்த பத்திரிகையாளர் நல்ல ஆசான் என்பதில் ஐயமில்லை பாரதியும் இதற்கு விதிவிலக்கன்று செம்மொழியாகத் திகழும் நம் மொழி புதிய நடையும் புதிய உடையும் புதிய பொருளும் கொண்டு எழுச்சியுடன் திகழக் காரணமாக அமைந்த **தமிழ் சிற்பி பாரதியின் மற்றொரு பரிணாமம் "இதழியல் பணி".**

பாரதியின் பணி

பாரதி கவிஞர் மட்டுமல்ல சிறந்த பேச்சாளர், பாடகர், கட்டுரையாளர், கதை ஆசிரியர், மொழிபெயர்ப்பாளர், அரசியல் அறிஞர், ஆன்மீகவாதி இவை அனைத்திற்கும் மேலாக **மிகச்சிறந்த இதழாளர்** என்பதை நாம் மறுக்க முடியாது. மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் **தமிழாசிரியராகப்** பணியில் சேர்ந்தார் அங்கிருந்து வெளியே அவர் **"சுதேசமித்திரன் இதழில்" உதவி ஆசிரியராகப்** பொறுப்பேற்று பாரதியின் உலகளாவிய பார்வை கூர்மைப்பட இதழியல் பணியே தூண்டுகோலாக இருந்திருக்க வேண்டும். இதழியல் துறைக்கு பாரதி வந்தது சாதாரண நிகழ்வாக இருக்கலாம். ஆனால் அதில் அசாதாரணமானவற்றை நிகழ்த்திக் காட்டினார்.**சுதேசமித்திரன்,சக்கரவர்த்தினி, இந்தியா, பாலபாரதி அல்லது யங் இந்தியா, விஜயா, சூர்யோதயம், கர்மயோகி** ஆகிய பல இதழ்களில் ஆசிரியராகவும் துணை ஆசிரியராகவும் பங்காற்றிய அவரை நாம் இதழாளராக கொண்டாடத் தவறி விட்டோம்.

உலகளாவிய பார்வை

பாரதி யானை மிதித்து சாகவில்லை, வறுமை மிதித்து செத்தார் என எங்கேயோ படித்த நினைவு. இத்தனை வாழ்க்கை போராட்டத்திலும் உலகப் பார்வை கொண்டவராக பாரதி இருந்ததை நினைத்தால் வியப்பாக இருக்கிறது. படைப்பாளர்களும் சிந்தனையாளர்களும் கொண்டாடப்பட வேண்டும்.

'தான்' என்ற ஒன்றை ஒழித்தவர்

தன் பெயரையும் தன்னையும் முன்னிலைப்படுத்திக் கொள்ள விரும்பும் மனிதர்களுக்கிடையில் **'தான்'** என்ற ஒன்றை ஒழித்தவர் பாரதி. ஆங்கிலேயர்களின் கெடுபிடிகள் விடுதலை வேட்கையூட்டும் கருத்துக்கள் மக்களை சென்றடைந்தால் போதும் என்று எண்ணி இளசை சுப்பிரமணியன், சாவித்திரி, சி.சு.பாரதி, வேலாந்தி நித்திய தீரர், உத்தம தேச விமானி, செல்லிதாசன், காளிதாசன், சக்திதாசன், ரிஷி குமாரன், காசி, சரஸ்வதி பிஞ்சுக் காளிதாசன் செல்லம்மா கிருஷ்ணன் என பல புனைப் பெயர்களில் எழுதியுள்ளார்.

கருத்துடன் காட்சி

கருத்துடன் காட்சி, நேரம் இடம்பெறுவது பாரதி அன்று தன் இதழ்களில் வெளியிட்டுள்ளார். தமிழ் இதழியல் துறையில் முதல் முதலாக கருத்துப் படங்களையும் கேலிச் சித்திரங்களையும் அறிமுகப்படுத்தியவர் பாரதி தானே!, தமிழில் **"சித்ராவளி"** என்ற பெயரில் கருத்துப் படங்களை மட்டுமே கொண்ட இதழ் ஒன்றையும் நடத்த விரும்பினார். இந்தியா, விஜயா ஆகிய இரு இதழ்களிலும் கருத்துப் படங்களை வெளியிட்டுள்ளார்.

விடுதலை உணர்வு

இந்தியா என்ற இதழை சிவப்பு வண்ணத்தாளில் வெளியிட்டார். **சிவப்பு வண்ணம் புரட்சியையும், விடுதலையையும் குறிப்பது** என்பதால் அடிமைத் தளையில் இருந்து இந்தியாவை விடுவிக்க வேண்டும் என்ற எண்ணம் பாரதியின் இந்தியா இதழின் வண்ணத்திலும் வெளியிட்டது. இந்தக் காலகட்டத்தின் பாரதியின் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் சாதனமாக இப்பத்திரிகைகள் இருந்தன.

பெண் விடுதலை

பெண் விடுதலைக்காகப் பாடுபட்ட பாரதி பெண்களுக்காக தமது **"சக்கரவர்த்தனி"** இதழில் **குறல் வெண்பா** எழுதியுள்ளார். **'பெண் அறிவுயரப் பீடோங்கும் பெண்மை தான்'** அவருடைய காலகட்டத்தில் **பெண்கள் கல்வி, தமிழ் மாது** முதலிய இதழ்கள் வெளிவந்துள்ளன. அவற்றிலிருந்து மாறுபட்டு பெண்களுக்காக ஒரு இதழை நடத்த வேண்டும் என எண்ணியமைக்கான காரணத்தை பாரதியார் இவ்வாறு சக்கரவர்த்தினி முதல் இதழில் சொல்கிறார். "அறிவின்மை என்னும் பெருங்கடலில் தத்தளிக்கும் நமது, பதினாயிரக் கணக்கான பெண்களை கரை சேர்ப்பதற்கும் சில".

பாரதியார் இதழியல் புதுமையாளர் பத்திரிகைத்துறை பகலவன்

"காரிருள் அகத்தில் நல்ல, கதிரொளி நீதான்! இந்த" என பத்திரிகையின் பேராற்றலை மக்கள் உணரும் வகையில் பாவேந்தர் பாரதிதாசன் குறிப்பிடுகிறார். சமூகத்தின் காரிருள் அகற்றும் பணியையும் சமூகத்தின் விழிப்புணர்வு ஏற்படுத்தும் பணியையும் செய்யும் பத்திரிக்கைத் துறையில் பாரதியார் பகலவனாக விளங்கினார் என்பதை அவருடைய குறிப்பிடத்தக்க இதழ்கள் மூலம் அறியலாம்.

இந்தியா

இந்தியா பாரதியாரை ஆசிரியராகக் கொண்டு 1906ஆம் ஆண்டு மே 9 ஆம் நாள் தொடங்கப்பட்ட இதழாகும். ஆனால் இதன் ஆசிரியராக இதழில் அச்சிடப்பட்டவர். எம். சீனிவாச அய்யங்கார் ஆவார். இதன் உரிமையாளர்கள் திலகரின் தீவிர தேசியத்தைப் பின்பற்றிய மண்டையம் குடும்பத்தாராவர். இந்தியா வார இதழாக சென்னையிலும் புதுச்சேரியிலும் வெளிவந்தது. 1908, செப்டம்பர் 5 வரை சென்னையில் வெளிவந்த இவ்விதழ் அரசாங்க அடக்குமுறை காரணமாக புதுச்சேரிக்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கு முதல் இதழ் 1908, அக்டோபர் 10 ஆம் நாள் வெளியிடப்பட்டது. இதன் கடைசி இதழ் 1910, மார்ச்சு 12 ஆம் நாள் வெளிவந்தது

சுதேசமித்திரன்

சுப்பிரமணிய பாரதியார், சுதேசமித்திரன் இதழில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். இந்த இதழ், தமிழில் வெளிவந்த முதல் நாளிதழ் ஆகும், இது 1882-ல் வார இதழாகத் தொடங்கப்பட்டு 1899-ல் நாளிதழாக வெளிவந்தது. பாரதியார் தீவிர அரசியலில் ஈடுபாடு கொண்டதால், சுதேசமித்திரனில் தம் கருத்துக்களைச் சுதந்திரமாக வெளியிட இயலாததால், இந்தியா என்ற இதழைத் தொடங்கினார், பாரதியார் சுதேசமித்திரனில் பணியாற்றிக்

கொண்டிருந்தபோது 1905- ல் ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்ட சக்கரவர்த்தினி எனும் பத்திரிக்கையின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார்.

சக்கரவர்த்தினி

பாரதியாருக்கு முன்பு அமிர்தவசனி, மகாராணி, சுகுணகுணபோதினி, மாதர் மித்திரி, பெண்மதிபோதினி, மாதர் மனோரஞ்சினி போன்ற பெண்களுக்கான இதழ்கள் வெளிவந்தன. அவருடைய காலகட்டத்தில் பெண்கல்வி, தமிழ்மாது முதலிய இதழ்கள் வந்துள்ளன. அவற்றில் இருந்து மாறுபட்டு பெண்களுக்காக ஓர் இதழை நடத்தவேண்டும் என எண்ணியமைக்கான காரணத்தை பாரதியார் இவ்வாறு சக்ரவர்த்தினி முதல் இதழில் சொல்கிறார். "அறிவின்மை என்னும் பெருங்கடலில் தத்தளிக்கும் நமது பதினாயிரக் கணக்கான பெண்களைக் கரைசேர்ப்பதற்கும் சில பெருங்கப்பல்கள் இருந்தபோதிலும், யாம் கொண்டுவரும் சிற்றோடம் அவசியமில்லை என்று யாவரே கூறுவார்? (பாரதியார், சக்ரவர்த்தினி, 1905 ஆகஸ்டு). அக்கால இதழ்களில் பெண்களுக்கு மரபான ஒழுக்கநெறிகளை உபதேசிப்பது, நோன்புகள் மற்றும் மதச்செய்திகளைச் சொல்வது போன்றவையே நிறைந்திருக்கும். தேசியச் செய்திகளுக்கும், பெண்கல்வி பெண்விடுதலை போன்றவற்றுக்கும் இடமளிக்கும் ஓர் இதழைத் தொடங்குவதே பாரதியின் நோக்கம். பாரதியார் சக்ரவர்த்தினியில் எழுதிய கட்டுரைகள் சீனி விசுவநாதனாலும், பிற பாரதி ஆய்வாளர்களாலும் வெவ்வேறு வகைகளில் தொகுக்கப்பட்டு நூலாக வெளிவந்துள்ளன.

முடிவுரை

இதழியல் இன்றியமையாத நோக்கங்களான தெரிவித்தல், மகிழ்வித்தல், அறிவுறுத்தல், விலையாக்கல் ஆகியவற்றை நிறைவேற்றும் வகையில் பத்திரிகைகளை நடத்தி இதழியல் துறையில் முத்திரை பதித்தவர் பாரதியார். அறிஞர் நம் இதழ் ஓடை ஆழநீர் தன்னை கொண்டு செரிதரும் மக்களை எண்ணி செழித்திட ஊற்றி ஊற்றி குறுகிய செயல்கள்தீர்த்துன குவலையம் ஓங்கச் செய்வாய் நறுமண இதழியப் பெண்ணே உன் நலம். **காணார் ஞாலம் காணார்** என்ற வரிகளை உள்வாங்கி உணர்வுபூர்வமாக இதழியல் துறையில் புரட்சி செய்தவர் பாரதியே. "**முண்டாசு கட்டுரையான் முழுநிலவு பொட்டுடையான் பதினெட்டுமொழியுடையான் பார்ப்புகளும் பாட்டுடையான் புகழை நாளும் பரப்புவோமாக**". எந்த நெருக்கடியான காலகட்டத்திலும் பாரதிதன் இதழியல் பணியை கைவிடவில்லை.**பாரதியார் இறக்கும் பொழுதும் இதழராகவே இறந்தார்** என பாரதியைப் பற்றி நண்பர்கள் கூறியுள்ளனர்.

மேற்கோள் நூல்கள்

1.இதழியல் புதுமையாளர் பாரதி,இந்து தமிழிசை,செப் 11,2021.
2.இணைய வழி தரவுகள்
https://share.google/W6A3WoAQhsu0EHqHB

23. பாரதியாரும் நகைச்சுவையும்

அந்தமான் கிருஷ்ணமூர்த்தி

பொறியாளர், எழுத்தாளர், சென்னை

முன்னுரை

முண்டாசுக் கவிஞர், புரட்சிக் கருத்துகளை விதைத்தவர், ஒளிபடைத்த கண்ணினை வரவேற்றவர் என்ற கண்ணோட்டத்தில் மட்டுமே பலரும் பாரதியினைப் பார்த்திருக்கிறார்கள். ஆனால் பாரதியின் பின்புலத்தில் அவன் நெஞ்சினில் இருந்த மெல்லிய நகைச்சுவை உணர்வு பலராலும் அறியப்படாத ஒன்று. இன்றைய கட்டுரையில் அதனை விரிவாகப் பார்ப்போம். மகாகவி சுப்பிரமணிய பாரதி என்பது உள்ளத்தைக் குலைக்கும் வீரமுரசு, காதலின் கனவாட்டம், சிந்தனைத் தீக்குச்சி—இவையெல்லாம் ஒரே உடலில் எவ்வாறு இடம் பெறும் என்பதற்குப் பதிலாக நிற்கும் பெயர். அவரின் கவிதைகளில் உற்சாகம், கோபம், கருணை மட்டுமல்ல; கேலிச் சிரிப்பும், துள்ளலும், நகைச்சுவைத் துளிகளும் ஓடிப் போகின்றன. "கண்ணன் பாட்டு", "குயில் பாட்டு" போன்ற காவியச் சிற்பங்களில் சிறுசிறு கிண்டல்களும் களித்த நயமுள்ள நகைச்சுவையும் நுழைந்திருக்கின்றன; அன்னையிடம் சிடுசிடுப்பாகச் சொல்வதாய் (கண்ணன் பாட்டு) வரும் சிரிப்பூட்டும் நாட்குறிப்பு தருணங்களும், இயற்கையோடு 'அடங்காத காதல்' எனக் கிண்டல் விளைவிக்கும் குயில் கதையிலும் (குயில் பாட்டு) அற்புதமான வசீகரமும் உண்டு.

பாரதி பாடல்களில் நகைச்சுவை: குட்டிக் கண்ணணின் கிண்டலும் களிப்பும்

கண்ணன் பாட்டில் தொடர்ந்து பல இடங்களில் கண்ணனைக் 'தோழன்', 'குரு', 'குழந்தை', 'சேவகன்' முதலிய பல பாங்குகளாகப் புனைந்து விளையாடுகிறது பாரதியின் துள்ளல் மனது. இதில் தெரியவரும் நகைச்சுவை கலந்த இரு பகுதியினைக் காணலாம். 1. அம்மா மகன் சிடுசிடுப்பின் மூலம் கண்ணன் ஊர்வலம், குறும்புகள், சிறு வயது தில்லுமுல்லு ஆகியவை எல்லாமும் இலக்கியம்தனை நகைச்சுவையாகச் சொல்லி அவை நகைச்சுவை இலக்கியமாய் மிளிர்கின்றன. தந்திரமும், மனம்கவரும் பச்சைத் திமிறலும், நான் தோற்றேனென்று சொல்கிற போதிலும் நீ தான் வென்றாய் போன்று மனதை மயக்கும் விளையாட்டு மொழிகளை நாம் படிக்கும் போதே சிறார்கள் போல் மாறி குதூகலமாய்ப் புன்னகை பூத்திட வைக்கும். 2. நகைச்சுவையுடன் த்த்துவார்த்த வார்த்தை உதிர்க்கும் இரண்டாம் வகை. சில பாடல்களில் கண்ணன் தாயிடம் "உலக வேலை அனைத்தையும் ஆசை, தாபம் நீக்கி செய்" என்று 'பழுத்த ஞான' மொழி சொன்னாலும், அதற்குள்ளே துள்ளலின் மெல்லிய கிண்டல் கலந்திருக்கும். இது பிள்ளை வாயால் பெரியவர்க்கும் சொல்லும் பரிதாபமான நகைச்சுவை.

சிரிப்பூட்டும் வினவல்கள்

"குயில் பாட்டு" ஒரு கற்பனைக் காவியம். கவிஞன் கேட்கும் குயிலின் 'காதல் காதல்' என்று துள்ளும் பாடலுக்குள் பல இடங்களில் சிரிப்புத் தோரணங்கள் அமைத்துச் செய்திருப்பார் பாரதி. குயில் ஒருநாள் குரங்கோடு மாய்த்துப் பேச, மறுநாள் காளையோடு காதல் உரையாட, கவிஞன் பொறாமையில் வாள் உருவது போன்ற காட்சிக் கிண்டல்கள்—இதெல்லாம் கற்பனையின் வேடிக்கையான சம்பவமாய் தருவது நகைச்சுவையான காட்சியாய் நம்மால் இன்னும் இரசிக்க முடிகின்றது. அப்படிச் சொல்லிய போதிலும் குயில், குரங்கு, காளை, மனிதன் ஆகிய நான்கு நிலைகளில் காதலைப் பரப்பும் உற்று நோக்கம் தன் கவிதையினைப் படிக்கும் வாசகரைச் சிரிக்கவைத்து சிந்திக்க வைப்பதைத் தவிர வேறு எதுவாக இருக்க இயலும். 'காதல் வழிதான் கரடுமுரடானது' என்று குயில் நையாண்டி பாடுவது போலத் தோன்றும் இடங்கள் புன்னகையினை வரவழைக்கும் தத்துவம்.

சிநேக நகைச்சுவை

பாரதி குழந்தைகளுக்கென்று எழுதிய வழிகாட்டுப் பாடல்களில் (எ.கா., குழந்தை உலகம் சார்ந்த பல பாடல்கள்)—"ஓடி விளையாடு பாப்பா" போன்ற நெகிழும் உபதேச வரிகளில் 'அதிர்ச்சி அற்று பட்டிமெல்லிதல்'—அதாவது கடிந்துரைப்பதில்லை; சிரிக்கவைத்தே சீர் செய்வது—என்பது அவரின் பாணி.

அரசியல் நையாண்டி

கவிதைகளோடு பாரதி கார்ட்டுன்களும், சாடைநடை கட்டுரைகளும் செய்தார். இந்திய கல்சர் தளத்தின் 'பாரதி கார்ட்டுன்கள்' விவரக்குறிப்புகள், அவரது சித்திரங்களில் தேசிய உணர்ச்சியுடன் கூடியச் சாடை உண்டு என்பதைத் தெரவிக்கின்றன. அதேபோல், "இந்தியா " வார இதழில் அவர் எழுதிய கட்டுரைகளில் சட்டையர் நடை எனப்படும் கேலியும் இருந்ததைப் பழைய தொகுப்புகள் பதிவு செய்கின்றன. இவை அரசியல் நையாண்டி எனப் பார்க்கப்படும்.

பாரதி எழுதிய உரைநடை / சிறுகதைகளில் நகைச்சுவை

பாரதி 18 குறுநாவல்கள்/கதைகள் எழுதியதாக ஆய்வுக் குறிப்புகள் உள்ளன; "காந்தாமணி" போன்ற கதைகளில் கதாபாத்திரங்கள் திடீரென்று "Never mind" போன்ற ஆங்கிலத் துளிகளை உதிர்த்துப் பேசும் இப்போதைய நவநாகரீக இரகம் சிரிப்பை வரவழைக்கும். வரும் காலத்தினை அன்றே கணித்துச் சொன்னது போன்ற நகைச்சுவை அது. சிரிப்பை வரவழைக்கு பல சீர்சிருத்தப் பார்வையும் பாரதியின் எழுத்துகளில் காண முடியும். ஜோதிடம், பகட்டுக் காட்டும் புரட்டு ஒழுக்கம் மீது சாடல் இவையெல்லாம் அவ்வகை நகைச்சுவை எனலாம்.

நினைவுகளில் வந்த பாரதி

பாரதியின் உடனிருப்பவர்களில் அவர்களின் நினைவுகள் வாயிலாகச் சில நகைச்சுவைக் காட்சிகள் நமக்குக் கிட்டியுள்ளன. அவரின் பேத்தி டாக்டர் எஸ். விஜயா பாரதி தொகுத்துப் பராமரிக்கும் இணைய வலைதளத்தில் (குடும்பவழிக் குறிப்புகள், செல்லம்மா/செல்லம்மா குறித்த தொடர்கள்) வெளிவந்த சுவடிகளில் ஒரு சிறு நகைச்சுவைச் சம்பவம் சொல்லப்பட்டுள்ளது. பாண்டிச்சேரியில், பாரதி "சக்தி சக்தி சக்தி என்று சொல்லு" என்ற பாடலைப் பாட, அருகில் இருந்த சிறுவன் அதையே "கத்தி கத்தி கத்தி" என்று தவறாக உச்சரித்து உரக்கப் பாடினானாம். இதைக் கேள்விப்பட்ட போதெல்லாம் செல்லம்மா "மகாகவியின் உண்மைப் பாத்திரத்தை, தமிழர்களுக்கு எப்படிச் சொல்லப் போகிறோம்?" என்று வருத்தப்பட்டதாகப் பதிவு உள்ளது. இந்தச் சம்பவம் சிரிப்பூட்டலாகவும், பக்கத்தில் இளம் தலைமுறையிடமுள்ள தவறான புரிதலின் மூலம் நம்மை நகைச்சுவைப் பக்கமாய் நகர்த்துகின்றன. செல்லம்மா பற்றிய பல நினைவுக் குறிப்புகள், அவரின் அசாதாரண இசைச்சம்பவம் போன்றவைகள் இத்தளத்தில் விரிவாக உள்ளன. அவற்றின் தொடரமைப்பும், அக்கால வீட்டு வாழ்க்கைச் சுட்டுப் புகைப்படங்களும், பாரதியின் நாள் தோறும் உரையாடல்களில் இருந்த கேலிச் சிரிப்பையும் வண்ணமயப்படுத்துகின்றன. மேலும், பாரதியின் பண்புக் களமான சிரிக்க வைத்தபடி சொல்லும் களிப்பும் அவரை இணைத்த எழுத்தாளர்களின் குறிப்புகளிலும், வரலாற்றுக் கட்டுரைகளிலும் வெளிப்படும்.

முடிவுரை

பாரதியின் நகைச்சுவை வெறும் பொழுதுபோக்கு அல்ல. மனச்சுதந்திரத்திற்கான ஒரு நடைமுறை. குழந்தை எழுப்பும் சிரிப்பு, காதலைத் தத்துவமாக்கும் சிரிப்பு, அரசியலை நெஞ்சோடு சொல்லும் சிரிப்பு இவற்றின் சங்கமமே அவரது படைப்புகளில் நம் முன் நிற்கிறது. அவரைப்பற்றிப் பிறர் சொன்ன சின்னச் சின்ன சிரிப்பு நினைவுகள் கூட 'மகாகவி'யின் மனிதநேயம், சிடுசிடுப்பு, ரசனை என்பதை நமக்கு உணர்த்துகின்றன.

24. பாரதியும் பெண் விடுதலையும்

முனைவர். க. பிரீதா

மொழித் துறைத் தலைவர்
செவாலியர் டி தாமஸ் எலிசபெத் மகளிர் கல்லூரி
பெரம்பூர், சென்னை

முன்னுரை:

கவிதைகள் ஒரு மொழியின் நிரந்தர வசந்தங்களாகத் திகழ்கின்றன. அந்த வசந்தத்தை உருவாக்கும் காலப்புருடர்களாகக் கவிஞர்கள் விளங்குகிகிறார்கள். **மகாகவி பாரதி** தமிழ் மொழிக்கு வசந்தத்தை வழங்கியதோடு மட்டுமல்லாமல் என்றைக்கும் **மனித** சமுதாயத்தைத் தழைக்கச் செய்யும் **யுக** கவிஞனாகவும் ஒளிர்கின்றான். அவன் **தோன்றிய** காலத்தில் இந்திய நாடு வெள்ளையரிடம் அடிமைப்பட்டுக் கிடந்தது. சுதந்திர **வேட்கை** பாரதியை **தேசிய** கவிஞனாக்கியது. **தெய்வ** பக்தியையும் மொழிப் பற்றையும் பற்றிப் **பாடிய பாரதி** பெண் விடுதலைக்காகவும் பெரிய குரலெடுத்துப் பாடினார். ஆண்கள் பெண்களை அடிமைப்படுத்தி மூலையில் முடங்கச் செய்த மூடத்தனத்தை வேரோடு கிள்ளியெறிய வேண்டுமெனப் பாடல் இசைத்தார். பெண்கள் ஆண்களுக்கு நிகராக எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்க வேண்டும் என்பது அவர்தம் உயர்ந்த இலட்சியமாக இலங்கியது. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை **பெண்ணுரிமை** குறித்து அவர் பாடிய எழுச்சிப் பாடல்களின் தாக்கம் தமிழ்ச் சமுதாயம் முழுவதையும் பாதித்தது. அதுவே தமிழகத்தில் ஆட்சிப் பொறுப்புக்கு வந்த அரசுகளின் பெண்கள் குறித்த முற்போக்குச் சட்டங்கள் நிறைவேற்றுதலுக்கு அடிப்படைக் காரணமாய் அமைந்தது என்றால் அது மிகையாகாது. பாட்டுக்கொரு புலவர் பாரதி, பெண்ணுரிமை குறித்துப் பேசிய கருத்துக்களை வகைப்படுத்தி ஆய்வதற்கும் அவற்றால் சமுதாயத்தில் ஏற்பட்ட மாற்றங்களைப் பற்றி உரைப்பதற்கும் இக்கட்டுரை முனைகின்றது.

ஆணும் பெண்ணும் நிகர்

நீடுதுயில் நீக்கப் பாடி வந்த நிலாவாம் பாரதி 1906ஆம் ஆண்டுக் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸ் மாநாட்டிற்குச் சென்றார். அங்குச் சகோதரி நிவேதிதாவைச் சந்தித்தார். தமிழகத்திலிருந்து வந்திருக்கும் கவிஞன் என்று அந்த அம்மையாரிடம் தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அப்போது சகோதரி **நிவேதிதா** பாரதியை நோக்கி, 'உங்கள் மனைவியை அழைத்து வரவில்லையா?' என்று வினவினார். 'என் மனைவி செல்லம்மாள் படிப்பறிவு இல்லாதவள். இங்கு நடக்கும் நிகழ்வுகள் அவளுக்கு ஒன்றும் தெரியாது. அதனால் தான் அழைத்து வரவில்லை' என்று **பாரதி** சொன்னார். உடனே நிவேதித்தா 'உங்களைப் போன்ற கவிஞர்களே பெண்களை ஒதுக்கி வைத்து விட்டால் பிற ஆண்களைப் பற்றிச் சொல்ல வேண்டுமா? என்ன, பெண்களுக்குச் சம வாய்ப்பு வழங்குவது உங்கள் கடமை' எனக் கூறினார், அது முதற்கொண்டு சகோதரி நிவேதிதாவைத் தன் குருவாக மதித்துப் பெண்ணுரிமைக்காகப் பாடத் தொடங்கினார். நிவேதிதாவைப் பற்றி அவர் **பாடிய** கவிதையில்,

"அடியேன் நெஞ்சில்
இருளுக்கு ஞாயிறாய்"

என அவரைக் குருவாக வைத்துப் பாடுவது நோக்கத்தக்கது. மக்கள் தொகையில் சரி பாதியாக இருக்கும் மகளிர் சமவாய்ப்பின்றிக் கல்வியறிவின்றி மடமையில் **ஆழ்ந்து** கிடந்தால் ஒட்டுமொத்தச் சமுதாயம் முன்னேறுவது என்பது முடியாது என்பதை **உணர்ந்து** பைந்தமிழ்ச் **சாரதி** பாரதி 'பெண் விடுதலை வேண்டும்' எனப் பாடுகின்றார்.

'ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்குமாம்

பூனு நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப்
பேருந்து நிற்பது தாய்சிவ சக்தியாம்'

என்று புதுமைப்பெண் எனும் தலைப்பில் வரும் கவிதையில் பெண்மை தெய்வம் பேசுவதாகப் பாடல் இசைக்கின்றார்.

பராசக்தி பெண் உருவம் கொண்டு வந்து சமுதாயத்தின் மடமையைச் சுட்டெரிப்பதாகப் **பாரதி** பாடியது புதுமைப்பெண்களின் தோற்றத்திற்கு அன்று அவர் **தூவிய** புரட்சி விதைகளாகும். புதுமை பெண்களுக்கான பண்பின் இலக்கணத்தை **மகாகவி** பாரதி வரையறுத்துப் பேசுவது இங்கு நோக்கத்தக்கது.

'நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்
நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்
செம்மை **மாதர் திறம்புவ** தில்லையாகும்.'

எனப்பாடி மாண்பு கொண்ட மகளிரின் தோற்றப் பொலிவைப்படம் பிடித்துக் காட்டுகின்றார். பாரதி **வாழ்ந்த** காலத்தில் பெண்களுக்குக் கல்வி வழங்கும் வழக்கமே சமுதாயத்தில் அற்றுப் போயிருந்தது. அந்த அவலத்தையும் போக்கும் விதத்தில் பாரதி வீறு கொண்டு பாடினார். பெண் அடிமைத்தனம் மண்டியிருந்த அந்நாளில் பெண்கள் கூடினின்று எல்லாத் தடைகளையும் உடைத்து எறிந்ததாகப் பாடும் விடுதலைக் கும்மியை அவர் இசைத்தார், பின்வரும் நாளில் அவையனைத்தும் ஈடேறி மகளிர் புத்துலகத்தைப் படைப்பர் என்னும் தீர்க்கதரிசனம் பாரதியிடம் திகழ்ந்தது.

'ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்'

என அறிவுச்சுடரேந்தி அரிவையரை ஆனந்தக் கும்மி அடித்திட வைக்கின்றார். படிப்பின்றிப் பாவையர் இருந்த அக்காலத்திலேயே அவர்கள் படித்து முன்னேறி விந்தைகள் பல புரிவதாகப் **பாடிய பெருமை** பாரதிக்கு உண்டு.

'சாத்திரங்கள் **பலபல** கற்பராம்
சவுரி யங்கள் **பலபல** செய்வராம்'

அவர் **பாடிய** பாடல் வரிகள் தெய்வ வரங்களாக மாறி இன்று நிதர்சனமாகத் திகழ்வதை நம்மால் காண முடிகின்றது. இன்றைய சமுதாயத்தில் பெண்கள் ஆண்களுக்கு நிகராகக் **கல்வி** கற்கின்றனர். உயர்கல்வியும் பெறுகின்றனர். தேர்ச்சி விகிதத்தில் ஆண்களைக் காட்டிலும் அதிகமாகச் சாதிக்கின்றனர். தமிழகத்தில் 40 **விழுக்காடு** பெண்கள் பணிவாய்ப்புப் பெறுகின்றனர். குடிமைப்பணியில் ஈடுபடுவதிலும் பெண்களின் **தொகை** குறிப்பிடத்தக்க அளவில் உள்ளது. 'முந்நீர் வழக்கம் மகடூஉ வோடில்லை' என்னும் பண்டைய இலக்கண விதி உடைபட்டு **உயர்கல்வி** பெறும் பெண்கள் வெளிநாடுகளுக்கு வேலைக்குச் செல்லும் நிலை உருவாகிவிட்டது.

குழந்தைத் திருமணம்

அந்நாளில் குழந்தைப் பருவத்துச் சிறார்களுக்குத் திருமணம் செய்து வைக்கும் சமுதாய வழக்கம் இருந்து வந்தது. திருமணத்தை அக்குழந்தைகள் விளையாட்டைப் போல எண்ணி மகிழ்ந்தனர். சிறுமியை **மணந்த** சிறுவன் சிற்றிளம் பருவத்திலேயே அகால மரணம் அடைந்து விட்டால் இறுதிவரை **அச்சிறுமி** கைம்பெண்ணாகவே காலம் கழிக்கும் அவலநிலை இருந்தது. 1910ஆம் ஆண்டில் கூடப் பெண்ணின் திருமண வயது 12 என அரசு விதித்திருந்தது. அந்த **நிலை** படிப்படியாக மாறிப் பெண்களின் திருமண வயது 18 ஆக உயர்ந்துள்ளது. பாரதியின் சொந்த வாழ்க்கையும் குழந்தைத் திருமணமாகத்தான் அமைந்தது. திருமணம் ஆகும்போது பாரதியின் வயது 12 ஆக இருந்தது.

செல்லம்மாளுக்கு எட்டு வயது பின்னாளில் **பாரதி** சுயசரிதை எழுதிய போது அவருக்கு நடந்த **குழந்தை** திருமணத்தையும் நாட்டில் பரவலாக இருந்த அந்த மூட வழக்கத்தையும் சாடிப் பாடி இருக்கின்றார். நாடு ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்தது. அந்த நிலையில் மக்கள் குழந்தைத் திருமணம் நடத்தும் மூட வழக்கத்தை விடாமல் பிடித்துக் கொண்டு இருப்பார்களேயானால் இன்னும் ஓராயிரம் ஆண்டுகள் வரையில் அடிமைகளாகவேயிருந்து சாகட்டும் என்று **பாரதி** சாபமிட்டுப் பாடுகின்றார்.

'பால ருந்து **மதலையர்** தம்மையே
பாத கக் கொடும் பாதகப் பாதகர்'

மகாகவி பாரதியின் நெஞ்சக் கொதிப்பு அடங்கும் வகையில் இன்றைய சுதந்திரத் திருநாட்டில் அரசு நிர்ணயத்துள்ள திருமண வயதை எட்டுவதற்கு முன்பாக நடக்கும் திருமணத்தைச் சட்டம் தன் கைகளை நீட்டித் தடுப்பதைக் காண முடிகின்றது.

நாடாளும் பெண்கள் :

பெண்கள் இன்று அனைத்துத்துறைகளிலும் முன்னேறி வருகின்றனர். அரசியலும் இப்போது அவர்களுக்கு அத்துபடியாகி வருகின்றது. மத்தியிலும் மாநிலத்திலும் மகளிர் அமைச்சர்களாக விளங்கி வருகின்றனர். அன்னை **இந்திரா** காந்தி இந்திய நாட்டின் தலைமை அமைச்சராக விளங்கியதை நாம் அறிவோம். மாநில முதலமைச்சர்களாகப் பெண்மணிகள் பலர் விளங்கினர். இன்றும் விளங்குகின்றனர். தமிழகத்தில் உள்ளாட்சிப் பொறுப்புகளில் மகளிர் 50% பொறுப்பில் **அமர** சட்டம் செய்யப்பட்டு நடைமுறையில் உள்ளது. இவற்றுக்கெல்லாம் அடிப்படைக் காரணமாகப் பாரதியின் கவிதைகள் விளங்குகின்றன என்றால் அது மிகையாகாது.

'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்'

என்னும் பாடல் ஒலிக்காத பட்டிதொட்டிகளே இல்லை எனக் கூறலாம். இன்றைய மகளிர் சமுதாயத்தின் பல துறை வளர்ச்சிக்கு வழி வகுத்தவர் பாரதி. காடு மணக்க வந்த கற்பூரப் பெட்டகமாம் பாரதியின் நினைவைப் போற்றிப் **புகழஞ்சலி** செய்வது பெண் குலத்தின் தலையாயக் கடமையாகும்.

முடிவுரை:

'காதலொருவனைக் கைப்பிடித்தே - அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து'

என்னும் பாரதியின் வாக்கிற்கிணங்க மகளிர் சமுதாயம் நாகரிகம், பண்பாடு, கல்வி, கலை முதலிய அனைத்துத் துறைகளிலும் மேம்பட்டு ஆண்களோடு **சரிநிகர்** சமானமாக வாழ்வது அந்த மானுடம் தழைக்க வந்த மகாகவிக்குச் செலுத்தக்கூடிய நன்றி கடப்பாடு ஆகும்.

25. மகாகவி பாரதி ஒரு பார்வை

சி. இரவிச்சந்திரன்

முதுகலைத் தமிழாசிரியர்
கிக்கானி மேல்நிலைப்பள்ளி
ஆர்.எஸ்.புரம், கோவை

இருபதாம் நூற்றாண்டின் விடிவெள்ளியான பாரதி நம் தமிழுக்கும் தமிழ்நாட்டுக்கும் செய்த தொண்டுகள் அளப்பரியன. ஏதோ மனிதன் பிறந்தான், வளர்ந்தான் என்று இல்லாமல், இருந்தான், செய்தான், செத்தான் என்று தமிழுக்குப் புகழை ஈட்டிச் சென்றவன் தான் நம் பாரதி. பாரதியினுடைய தணியாத தமிழ்க்காதல் தேசப்பக்தியாகக் கனிந்து, சுதந்திர வேட்கை சமதர்மப் பற்றாக வளர்ந்து, அரசியல் சுயேட்சையோடு, ஆன்ம விடுதலையும் எய்தி, நிறைவு பெற்ற மனிதன், நீதியும் நேர்மையும் நிலவும் சமுதாயத்தைச் சமைத்து, தாய்நாட்டோடு மட்டுமல்ல, தரணி முழுவதும், மனித இனத்துடன் ஒருமைப்பட்டு, உலக மக்களோடு மட்டுமல்ல, உயிரினங்கள் அனைத்துடனும் உறவு கொண்டு, அறத்தால் ஆட்சி செய்து, மக்கட் பண்பால் மாண்பு பெற்று, புதியதோர் உலகு படைக்க, தம் பாட்டால் பாதை வகுத்து, தமிழ்நாட்டில் புரட்சிக்கு இலக்கிய வித்திட்டவர் பாரதியார் என்றால் அது மிகையாகாது. ஒரு கவிஞனின் சிறப்பை அவன் வாழ்ந்த காலத்தைக் கொண்டே நிர்ணயிக்க வேண்டும். பாரதி வாழ்ந்த காலம் தமிழுக்கு மிகவும் மோசமான காலம். தமிழ் படித்தவனுக்கு மரியாதை இல்லாத காலம்.

அவர் மட்டும் வங்காளத்தில் பிறந்திருந்தால் நோபல் பரிசு ரவீந்திரநாத் தாகூருடன் பாரதிக்கும் கிடைத்திருக்கும். சோவியத் ரஷ்யாவில் லெனின், ஷெல்லி, மார்க்ஸிம், கார்க்கி ஆகியோருக்கு என்ன மரியாதையோ அந்த மரியாதையை நாம் பாரதிக்குத் தந்தாக வேண்டும். பாரதியின் வாழ்க்கை வரலாற்றைச் சொல்ல வேண்டுமானால் அவர் மூன்று காரணத்திற்காக வாழ்ந்திருக்கிறார் என்பது தெரிய வருகிறது.

1. நாட்டு விடுதலை
2. பெண் விடுதலை
3. சாதி விடுதலை

பாரதியார் நம் பாரத நாட்டைப் பற்றிப் பாடும் போது பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு என்று அவர் பாட்டில் பாரதம் என்பதற்கே இலக்கணம் வகுத்துப் பண்டை நாட்களின் பெருமையைப் படம் பிடித்துக் காட்டுகிறார். ஞானத்திலே, பரமோனத்திலே, உயர்மானத்திலே, அன்னதானத்திலே உயர்ந்த நாடு என்று அடுக்கடுக்காய்ப் புகழ்வித்துப் பாடும் பாடலில் சொல்லடுக்கும் உணர்ச்சி மிடுக்கும் துள்ளி வருகின்றன. அப்பாடலின் பாணியிலேயே கூற முயன்றால் **அக்கவிதை** கானத்திலே, கனிந்த ஞானத்திலே, மொழி ஆக்கத்திலே, உணர்ச்சி ஊக்கத்திலே, கவிதை ஊற்றினிலே, கருத்தின் ஏற்றினிலே, சொல் வன்மையிலே, சிந்தனைத் திண்மையிலே, சரித்திர உண்மையிலே, வேகத்திலே, **விடுதலை** தாகத்திலே பாடுகிறார் எனலாம்.

தேசிய ஒருமைப்பாட்டைப் பற்றிக் கூறும் பொழுது,

“முப்பது கோடி முகமுடையாள் உயிர்
மொய்ம்புற வொன்றுடையாள்- இவள்
செப்புமொழி பதினெட்டுடையாள் - எனிற்
சிந்தனை ஒன்றுடையாள்.”

என்று மொழி மாநில பாகுபாடுகளுக்கு மேம்பட்டு நின்ற நாட்டின் ஒருமையையும் உறுதியையும் போற்றின அவர் பாடல்கள்

"சிந்து நதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்து தோணிகளோட்டி
விளையாடி வருவோம்"

என்று ஒரு இன்பக் கனவு காண்கிறார்.

"ஆயுதம் செய்வோம் நல்லகாகிதம் செய்வோம்
ஆலைகள் வைப்போம் கல்விச்சாலைகள் வைப்போம்"

என்று தொழில் வளத்தைப் பற்றிக் கூறுகிறார். காலத்தைக் கடந்து நிற்பது கவிஞனின் கண் பார்வை ஞாலத்தைத் தழுவி நிறைவு தழும்புவது அவன் நெஞ்சம்

"சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்
சேதுவை மேடுறுத்தி - வீதி சமைப்போம்."

என்று அவர் கண்ட கனவு ஐம்பதாண்டுகளுக்குப் பின் நனவாகும் நிலை நன்றே உருவாக்கி உள்ளது.

பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும், பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என்று, பாரதி பாடிய அரை நூற்றாண்டுக்குப்பின்னும், வீட்டின் சாவிக் கொத்தைப் பெண்ணிடம் விரும்பிக் கொடுக்கத் தயங்கிய நிலை தவிடு பொடியாகி, நாட்டின் சாவிக் கொத்தையே ஒரு நல்ல பெண்மணியிடம் ஒப்படைத்து உவகைக் கொண்டு உயர்வு கொண்டு ஒளி வீசி நிற்கும் நிலை உருவாக்கி உள்ளது. இந்த நிலையைப் பார்க்கின்ற பொழுது, காலத்தை வென்ற கவியின் காட்சியா? கவிக்குக் காலம் காணிக்கை செலுத்தும் மாட்சியா, என்று வியப்பாகிறது.

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்
வைய வாழ்வுதனில் எந்த
வகையினும் நமக்குள்ளே
தாதர் என்ற நிலைமை மாறி
ஆண்களோடு பெண்களும்
சரிநிகர் சமானமாக
வாழ்வோம் இந்த நாட்டிலே"

என்று பெண்களை இழிவு படுத்துவோரைக் கடிந்துரைக்கின்றார்.

பாரதியினுடைய கவிதைகளை ஒருகணம் புரட்டிப் பார்க்கின்ற பொழுது அவர் இந்திய சுதந்திரத்திற்காக மட்டும் கவி எழுதவில்லை உலகச் சுதந்திரத்திற்கும் அவரது கவிதைகள் உதவி இருக்கின்றன. தென்னாப்பிரிக்கா பாலஸ்தீனம் போன்ற நாடுகளின் சுதந்திரங்களைக் கூறலாம். தம்முடைய கவித்திறத்தால் நாட்டுக்கும் நாட்டு பெரு மக்களுக்கும் பெருமையைத் தேடித்தந்த அந்த உலக மகாகவியை நினைத்துப் போற்றுவோமாக.

26. பாரதியின் கண்ணன்

நா. கருணாம்பிகா

உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை,
யுனைடெட் கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோவை.

"பாருக்குள்ளே நல்ல நாடு நம் பாரத நாடு" என்று பாரத நாட்டின் பெருமையினைப் பாரெங்கும் கொண்டு சேர்த்த சான்றோர்களில் முதன்மையானவராய், மீசைக் கவியாய், முண்டாசு கவியாய்த் திகழ்பவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். பாரதியாரின் பன்முகங்களில் ஒன்றாய், அவரை இப்புவியில் தனிப்பிறவியாய், உயர் உள்ளமாய், ஆன்ம தேடுதலில் நிறைவுற்ற உயர் ஆன்மாவாய் தரிசிப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். 'பாரதியின் கண்ணன்' எத்தகையவன் என்பதை இக்கட்டுரையில் காண்போம்.

பக்தி மார்க்கம்:

"அரிது அரிது மானிடராய் பிறத்தல் அரிது" எனும் ஔவையின் மொழிக்கிணங்க அரிதாய்ப் பெற்ற மானிடப் பிறவியின் நோக்கமே பிறவாப் பெருநிலை பெறுவதே ஆகும். இறைவனின் திருவடிகளில் இரண்டறக் கலந்து முக்தி பெறுவதே ஒவ்வொரு ஆன்மாவின் இறுதிநிலை. அவ்வகையில் இறைவனிடம் ஆழ்ந்த அன்பையும், பக்தியையும் செலுத்தி இறைவனை அடையும் மூன்று முக்கிய மார்க்கங்களிலே ஒன்று பக்தி மார்க்கம். இறைவனை அடையும் எளிய மார்க்கமாய் இறைவனுக்கே பிடித்த மார்க்கமாய்த் திகழ்வது பக்தி மார்க்கம்.

பக்தனும் இறைவனும்

பாரதத்தின் எண்ணிலாச் சிறப்புகளில் இன்றளவும், எண்ணிலா அயல் நாட்டவர் நம் நாட்டை நாடி வரச் செய்யும் உன்னதங்களில் ஒன்றே ஆன்மப் பயணம். உலகத்தார் 'விஞ்ஞானம்' எனும் பெயரில் புறத்தே ஆராய, பாரத நாட்டின் அருளாளர்கள் மெய்ஞானமாய் அகத்திலே ஆராய்ந்தார்கள். ஜீவான்மாவிற்கும், பரமான்மாவிற்கும் இடையேயான உறவினை அறிந்து அவ்வுறவிலே இறைவனைக் கண்டு இரண்டறக் கலந்தார்கள். இறைவன் குறித்த இந்த ஞானத்தேடுதலில், பல நெறிகளில் ஒன்றான பக்தி மார்க்கத்திலே இறைவனோடு பல்வேறு வகைகளில் உறவு கொண்டு உறவாடினார்கள், ஆடிப், பாடி மகிழ்ந்தார்கள், பக்தியிலே கரைந்தார்கள், இறையுணர்விலே கலந்தார்கள். ஒவ்வொரு இறையடியார்களும் ஏதேனும் ஒரு உறவு முறை கொண்டு இறைவனை வழிபட்டிருப்பார்கள். பெரியாழ்வார் இறைவனைக் குழந்தையாக, ஆண்டாள் தன் காதலனாகவும், சுந்தரர் தன் தோழனாகவும், காரைக்கால் அம்மையார் தன் தந்தையாகவும் உறவு கொண்டு பக்தி செய்தார்கள். இவ்வடியார்கள் கூட்டத்தின் வரிசையில் வந்த பாரதியாரோ மாறுப்பட்டவராய், தனிப்பிறவியாய் இறைவனோடு எல்லா வகையான உறவும் கொண்டு, வாழ்ந்தவர் நம் பாரதியார்.

பாரதியாரும் கண்ணனும்

உலகில் என்றெல்லாம் தர்மம் தாழ்ந்து அதர்மம் ஓங்குகிறதோ அன்றெல்லாம் அதர்மத்தை அழித்துத் தர்மத்தை நிலைநாட்ட நான் அவதாரம் எடுப்பேன் என்று காக்கும் இறைவனாம் திருமாலால் எடுக்கப்பட்ட அவதாரங்களில் எல்லோருக்கும் பிடித்த அவதாரம் சுட்டிக் கண்ணன். அக்கண்ணனின் லீலைகளில் தன்னைக் கரைத்துக் கொண்ட ஞானி பாரதியார். அடியார்கள் இறைவனிடம் ஏதேனும் ஒரு உறவுமுறையில் பக்தி கொள்ள, பாரதியாரோ தோழனாய், தாய்தந்தையாய், அரசனாய், சற்குருவாய், விளையாட்டுப் பிள்ளையாய், காதலனாய், காதலியாய், குலதெய்வமாய்க் கொண்டு பக்தி செய்கிறார். இவற்றைவிட யாரும் சிந்தித்திராத உறவாக இப்பிரபஞ்சத்தையே படைத்துக் காத்து அழிக்கும் பரம்பொருளைத் தன்னுடைய சேவகனாய், தனது சீடனாய்க் கொண்டு

பக்தி செய்தவர் மகாகவி பாரதியார்.

பாரதியின் சீடன்

பக்தியும் ஞானமும் ஒன்றிணைந்து மனிதர்தம் ஆன்மநிலையை மேம்படுத்தும் பாடல்களே பாரதியாரின் கண்ணன் பாடல்கள்.

"யானே யாகி என்னலாற் பிறவாய்
யானும் அவையுமாய் இரண்டினும் வேறாய்
யாதோ பொருளாம் மாயக் கண்ணன்"
(கண்ணன் -என் சீடன்" (1-3).

தன்னுடைய சீடனை அறிமுகப்படுத்தும் போதே பரமான்மா, ஜீவான்மாவும் ஒன்றாய், இரண்டும் வேறு வேறாய், இரண்டற கலந்தும், தனித்தும் பக்தி கொள்ளும் சித்தாந்த வேதாந்தத் தத்துவங்களை மிக எளிமையாய் எடுத்துரைக்கின்றார்.

"என்னடை பழகலால் என்மொழி கேட்டலால்
மேம்பாடு எய்த வேண்டினோன் போலவும்
....
சீடனா வந்தெனச் சேர்ந்தனன் தெய்வமே!
(கண்ணன் என் சீடன் (6-11)

இவ்வுலகையே என்னால் மாற்ற இயலும் எனும் ஆன்மாவின் அகந்தையினை அழித்துச் சீடனாய் வருகிறார் கண்ணன். பாரதியாரிடம் ஆசான் சொல் கேட்டு நடக்கும் சீடனாய் அல்லாது.

"கதையிலே கணவன் சொல்லினுக் கெல்லாம்
எதிர்செயும் மனைவிபோல், இவனும்நான் காட்டும்
நெறியினுக் கெல்லாம் நேரெதிர் நெறியே
நடப்பா னாயினன்..(கண்ணன் என் சீடன்; (34-37)

பாரதியாராகிய ஆசானின் சொல்லுக்கெல்லாம் எதிராய்ச் செய்யும் சீடனாய் பாரதியாரைப் பலவகையில் தொல்லைப்படுத்துகிறான் பாரதியின் சீடனான கண்ணன். சீடனின் செயல்களைக் கண்டுஊரெல்லாம் கண்ணனை,

முத்தனாக் கிடநான் முயன்றதோர் இளைஞன்
பித்தனென்று உலகினர் பேசிய பேச்சென்
நெஞ்சினை அறுத்தது.....
(கண்ணன் என் சீடன்; (52-54)

பித்தன் என்று ஊரார் பழி தூற்றுவதைக் கண்டு பொறுக்க இயலாத பாரதியார் தன் சீடனை

"அகந்தையும் மமதையும் ஆயிரம் புண்ணுற
யான்கடுஞ் சினமுற்று எவ்வகை யானும்
கண்ணனை நேருறக் கண்டே தீர்ப்பேன்"
(கண்ணன் என் சீடன் -71-73)

என்று தன் சீடனை நல்வழிப்படுத்துவேன் என அகந்தையோடு சாம, தான, பேத, தண்டம் எனப் பலவகைளில் முயற்சிக்கும் பாரதியாரின் முயற்சிகள் யாவும் தோற்றிட

"தேவர் காத்திடுக! நின்தனைச் செம்மை
செய்திடக் கருதி ஏதேதோ செய்தேன்
தோற்றுவிட்டேனடா...' (கண்ணன் என் சீடன் 131-133)

என்று அகந்தை அழிந்து தன் சீடனிடம் சரணடைகிறார் பாரதியார்.

என்னால் மாற்ற இயலும், நான் என் சீடனை மாற்றிவிடுவேன் என்று "நான்" என்கின்ற அகந்தையோடு இருக்கின்ற வரை இறைவனின் அருளைப் பெற முடியாது என்பதை

உணர்கிறார்.தோற்றுவிட்டேன் என்று சொன்னவுடன் பாரதியின் சீடனான கண்ணன், என்னால் இனி துன்பம் இல்லை என்று கூறி மறைந்துவிடப் பாரதியின் உள்ளத்தில் ஒளி உண்டாகி மெய்ஞானம் உணர்வாகிறது.

“மகனே, ஒன்றை யாக்குதல் மாற்றுதல்
அழித்திடல் எல்லாம் நின்செயலன்று காண்
தோற்றேன் எனநீ உரைத்திடும் பொழுதிலே
வென்றாய்; உலகினில் வேண்டிய தொழிலெலாம்
ஆசையுந் தாபமும் அகற்றியே புரிந்து
வாழ்கநீ என்றான். வாழ்க மற்றவனே
(கண்ணன் என் சீடன் (145-150)

இவ்வுலகில் யாவும் இறைவன் செயலே அன்றி வேறெதுவும் இல்லை. அவன் அன்றி அணுவும் அசையாது, எல்லாம் அவன் செயல் என்னும் மாபெரும் உண்மையினை உணராது வெற்றிக்கும், புகழுக்கும் தானே காரணம் என்று இருமாப்புக் கொள்ளும் ஆணவக்காரர்களின் அகந்தையை அழிக்கும் உண்மையினை, ஞானத்தினைப் பாரதியாரின் சீடனான கண்ணன் உணர்த்துகிறான்.

“எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அதுநன்றாகவே நடக்கிறது..”

இதுவே உலக நியதியும் எனது படைப்பின் சாரம்சமாகும் எனும் பகவான் கிருஷ்ணரின் கீதா உபதேசம் இங்கு ஒப்பு நோக்கத் தக்கது.கண்ணனை சேவகனாய் பெற்ற பாரதியார்,

“இங்கிவனை யான்பெறவே என்னதவஞ் செய்துவிட்டேன்.
கண்ணன் எதைகத்தே கால்வைத்த நாள்முதலாய்
எண்ணம் விசாரம் எதுவுமவன் பொறுப்பாய்”
(கண்ணன் என் சேவகன் 56-58)

அகத்தில் இருக்கும் இறைவனை உணர்ந்து கொண்டு அவ்விறைவனிடம் யாவற்றையும் ஒப்படைத்து சரணடைந்தால் எல்லாம் அவன் செயலாய் வாழ்வு சிறக்கும் முக்தி கிடைக்கும் என்பதை உணர்ந்து உணர்விக்கிறார். பாரதியார், “கண்ணன் பாட்டு” எனும் ஞானவிளக்கின் வழி இறைவனோடு உறவு கொள்ளும் பக்தியையும், வாழ்க்கையில் அகந்தையால் ஏற்படும் துயரங்களையும், இறைவனிடம் சரணடைதலின் மேன்மையினையும், அவனின்ஓர் அணுவும் அசையாது,எல்லாம் அவனுள்ளே என்கின்ற ஞானத்தையும் உணர்த்தியுள்ளார். பக்தியோடு ஞானத்தையும் முத்தியையும் நல்கும் ஞானவிளக்கே கண்ணன் பாட்டு. கண்ணன் பாட்டு வழி பாரதியின் கண்ணனை தரிசிப்போம், பக்தியோடு ஞானம் பெறுவோம்.

27. பாரதியார் கவிதைகளில் சமூகப் பற்று

முனைவர் v. ஹரிதாஸ்

இணைப் பேராசிரியர், தமிழ்த்துறை
பிபிஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சரவணம்பட்டி, கோயம்புத்தூர்

முன்னுரை

மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகள் சமூக மாற்றத்திற்கு உரிய உந்துசக்தியாக அமைந்தன. சமூக அநீதிகளுக்கு எதிராகவும், சமத்துவத்தைப் பரப்பவும், பெண்களின் உரிமைகளை வலியுறுத்தவும், சுதந்திரம் மற்றும் உழைக்கும் மக்களின் உயர்வைப் பேசவும் அவர் எழுதிய கவிதைகள் இன்று வரையும் மிகவும் பொருத்தமானவையாக உள்ளன.

சமத்துவ நெறி

பாரதியார் பிறவியால் உண்டான சாதி, மத வேறுபாடுகளைத் தாழ்வாகக் காணவில்லை. "சாதிகள் இனம் தவிர்ந்தெழிலார் தேசம்" என்ற வரிகள் அவரின் சமத்துவக் கொள்கையை வெளிக்காட்டுகின்றன. தாழ்த்தப்பட்ட மக்களை எழுச்சி பெறச் செய்யும் வகையில் அவரது கவிதைகள் அமைந்திருந்தன.

பெண்மையின் மேன்மை

பாரதியார் பெண்களைப் பின்தங்கியவர்களாக அல்லாது, ஆண்களுக்குச் சமமாகக், கல்வியில், சிந்தனையில், உரிமைகளில் முன்னேற்றம் காண வேண்டியவர்களாகவே எண்ணினார். "புதுமைப் பெண்கள் வருக! உலகம் பயந்திடும்!" எனும் கவிதையில், பெண்களை ஒளிரும் ஒளியாக உயர்த்திக் கூறுகிறார்.

பெண்கள் கல்வி

பெண் கல்விக்கு பாரதியார் மிகவும் முக்கியத்துவம் கொடுத்தவர். இதனை அவர் தனது கவிதைகளில் வலியுறுத்தியுள்ளார்:

"பெண்கள் விடுதலை பெற்று,
கல்வி கொண்டு வளர வேண்டும்.
அவளும் ஒரே மனிதி!"

பெண்ணும் புரட்சி செய்யலாம்

பாரதியார் பெண்களை வீரத் தைரியசாலிகள் என்று கருதினார். அவர்கள் சமுதாய மாற்றத்துக்கு முன்மாதிரியாக இருக்க முடியும் என அவர் நம்பினார்:

"பாவையர் சபையைத் திறந்து,
பாரதம் பெண்ணை வளர்த்திடவேண்டும்!"

பாரதியார் பெண்கள் கல்விக்கு பெருமை சேர்த்தவர். அவரது பாடல்களில்:

பெண்கள் விடுதலையும், கல்வியும் பெற வேண்டும்,

"சத்தியம் போல் நிலைத்து நின்ற கல்வி வேண்டும்"

கல்வி என்பது ஒரு சக்தி; அறிவை வளர்க்கும் கருவி.

பொதுவாகப் பாரதியார் கல்வியை

- சமூக சீர்திருத்தத்திற்கு
- பெண்கள் சுதந்திரத்திற்கு
- ஜாதி மறுப்பு மற்றும் சமத்துவத்திற்காக
- அறிவு வளர்ச்சி மற்றும் நாட்டு முன்னேற்றத்திற்கு

ஒரு அடித்தளமாகக் கருதினார்.

பாரதியார் கவிதைகளில் பெண்கள்

பாரதியார் தனது கவிதைகளில் பெண்கள் விடுதலை, கல்வி, உரிமை, திறமை மற்றும் சமதர்மம் குறித்துப் பல கவிதைகள் எழுதியுள்ளார். அவர் பெண்கள் குறித்து எழுதிய கவிதைகள், பெண்கள் மீது அவரது உயர்ந்த பார்வையை வெளிப்படுத்துகின்றன.

புதுமைப் பெண் என்பது பாரதியாரின் புகழ்பெற்ற கவிதை. இதில் ஒரு நவீனப் பெண்ணின் தன்னம்பிக்கை, அறிவு, துணிச்சல் ஆகியவை எடுத்துக்காட்டப்படுகின்றன:

"சட்டமின்றி யாரும் சுதந்திரராவதில்லை,
சாதிக்க மறுத்தால் சமுதாயம் ஓங்காது!"
"நம்மை யாரும் அடிமையாக்கிவைக்க முடியாது,
நாம் சுயமாக நிற்பது நமது கடமை!"

கண்ணன் என் தோழன் (பெண் பார்வையில்)

பாரதியார் சில நேரங்களில் பெண் குரலில் எழுதினார். அதில் கண்ணனுடன் உரையாடும் காதல் கவிதைகள் மூலம் பெண்களின் உள்ளார்ந்த உணர்வுகளையும் வெளிப்படுத்தியுள்ளார்.

"கண்ணன் என் தோழன், என் வாழ்வின் நேசம்!"

பாரதியார் கூறும் பெண்களின் சமத்துவம்
"நம்மை விட்டு அவர்களால் நாடு ஓங்காது!"
"பெண்ணென்ன சாத்தியமா?
அவளும் அறிவால் பெரும் சாதனையாள்!"

பாரதியார் பெண்களை கண்ணியத்துடன் பார்வையிட்ட முதல் தமிழ்க் கவிஞர்களில் ஒருவர். அவர் எழுதிய கவிதைகள் இன்று பெண்கள் உரிமை, சமத்துவம், கல்வி மற்றும் சுதந்திரம் குறித்து பேசும் அடித்தளமாக இருக்கின்றன.

பாரதியார் கவிதைகளில் காதல்

பாரதியார் தமிழ் இலக்கியத்தில் காதல் பற்றிய கவிதைகளை மிக அழகாகவும் ஆழமாகவும் எழுதினார். அவரது காதல் கவிதைகள் பெரும்பாலும்:

- பாசமிகுந்த காதல்
- ஆன்மீகத் தேடலுடன் கூடிய காதல்
- பெண்கள் சமத்துவத்தை வலியுறுத்தும் காதல்
- இயற்கையின் அழகுடன் கலந்த காதல்

என்ற சில சிறப்புகளைக் கொண்டவை.

பாரதியார் காதல் கவிதைகளில் சில

கண்ணன் என் நண்பன் என்றால்
காமத் துயர் என்னிலிருக்கும்!

தண்ணீர் புரை கண்ணீரோடும்
தங்கம் கலந்த உவந்தனையோடும்...

இதில் பாரதி, தேவதையான கண்ணனைத் தனது நண்பனாகக் கருதி, அவருடன் உள்ள ஆனந்தத்தை காதல் உணர்வோடு விவரிக்கிறார்.

சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா
செந்தாமரைக் கண்ணே கண்ணம்மா!
என்னை நீ சந்தித்த நாளிலிருந்து
எதுவும் இனியதாயிற்றே!

இது ஒரு காதலன் தனது காதலியைப் பார்த்த பிறகு வாழ்க்கையின் ஒவ்வொரு தருணமும் இனிமையாக மாறியதைப் பற்றிப் பேசும் பாடல்.

கண்ணன் என் காதலன்; நானும் அவன் காதலி
பண்ணிய நாவினில் பாடும் இனிசை
பவளக் கண்ணியினால் பசுமை தரும் காட்சியில்...

இது கண்ணன் மீது கொண்ட காதலைக் கவிதையாக எழுதியிருக்கிறார் பாரதி.

நீ தடாகம் என்றால்
நான் அதில் விழும் நிலா
நீ மலர்ந்த பூவாக இருந்தால்
நான் அதை சூடும் தேன்...

காதலை இயற்கை உருவகங்களில் காட்டும் பாணி பாரதியின் சிறப்புமிக்க தன்மை.பாரதியார் காதலை வெறும் ஆணுக்கும் பெண்ணும் இடையே நிகழும் ஒரு உணர்வாக மட்டுமல்லாமல்,

- ஆன்மிகம்
- தாய்மை
- இன சமத்துவம்
- பிறவி கடந்த காதல்
-

எல்லாவற்றிலும் பரவலாகக் காண்கிறார்.

பாரதியார் கவிதைகளில் தமிழ் மொழி

பாரதியார், அல்லது சுப்பிரமணிய பாரதியார், தமிழ் இலக்கியத்தின் மிக முக்கியமான கவிஞர்களில் ஒருவராகும். அவர் எழுதிய கவிதைகள் சமூக நீதி, பெண்கள் விடுதலை, தேசபக்தி, அறிவுப் புரட்சி, மற்றும் மனிதவுரிமைகள் போன்ற பல துறைகளைக் கொண்டவை. கீழே பாரதியாரின் சில பிரபலமான தமிழ்க் கவிதைகள் மற்றும் அவற்றின் சிறு விளக்கங்கள்:

அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லை இச்சகத்திலே!

இந்தக் கவிதை தைரியத்தைக் குறித்து. பயம் என்பது மனித வளர்ச்சிக்குத் தடையாக இருக்கக்கூடாது என்பதை வலியுறுத்துகிறது.

சத்தியம் பலிக்கும் சத்தியமே வாழும்

சத்தியம் என்ற நெறிமுறையின் மேன்மையைப் புகழும் கவிதை. உண்மை, நீதிமுறை என்பவை எல்லாக் காலங்களிலும் நிலைத்திருக்கக் கூடியவை என்பதைக் கூறுகிறது.

பூவையேன் பிள்ளையார் கோவில் புகுந்தாள்

இது ஒரு மகளிர் விடுதலையைப் பற்றி பேசும் கவிதை. பெண்களும் சமுதாயத்தில் மதிக்கப்படவேண்டும் என்பதைக் கூறுகிறது.

தேன் காண்டல் போன்றது பாரத நாடு
சிந்தை வளர்க்கும் செல்வம் கிடைக்கும்

இந்தப் பாடல் பாரத தேசத்தின் சிறப்பைப் புகழ்கிறது. அறிவு, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவை இங்கு மிகுந்து வழிந்தோடும் எனக் கூறுகிறது.

நான் புத்தன் கண்டேன் – கண்ணாலே கண்டேன்

புத்தரின் பரிவும், அக்கறையும், உணர்வும் சமூகத்திற்கு அவசியம் என்பதை உணர்த்தும் ஒரு ஆழமான கவிதை.

தேசியப் பற்று மற்றும் சுதந்திரப் போராட்டம்

பாரதியார் கவிதைகள் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பெரும்பாண்மையான மக்களை ஊக்குவிக்க பயன்பட்டன. "வந்தே மாதரம்", "என்ன ஒத்த கெழு நெஞ்சம்", "சுதந்திரம் வேண்டுமடி!" போன்ற பாடல்கள் மக்கள் மனதில் நாட்டுப்பற்றை வளர்த்தன.

பாரதியார் கவிதைகளில் பாரதியின் தேசப்பற்று

மகாகவி பாரதி என்றாலே நம் மனதில் முதலில் வருவது – தேசப்பற்று, மகிழ்ச்சி, விடுதலை, விரம், காதல், கல்வி, பெண்களின் உரிமை போன்ற உயர்ந்த கருதுகோள்கள். அவரது கவிதைகளும் கட்டுரைகளும் இந்தியர்களின் மனதில் தீவிரமான தேசபக்தியையும் தனிமனித விடுதலையையும் ஏற்படுத்துகின்றன. பாரதியார் ஒரு உண்மையான தேசபக்தர். அவர் வாழ்ந்த காலம் இந்திய விடுதலைப் போராட்டத்தின் சூடான காலம். அவருடைய எழுத்துக்களிலும் பேச்சுகளிலும் பாரத நாட்டின் விடுதலையையே முழு மூச்சாகக் கொண்டு தீவிர விடுதலை உணர்வுகள் தெரிக்கக் கவிதையெழுதியவர். "எண்ணிய முடிதல் வேண்டும் – இனிய பிறவியும் வேண்டாம்" என அவர் கூறியதுதான் அவரது மனதின் தீவிரத்தை காட்டுகிறது. பாரதியின் தேசப்பற்றிற்கு ஒரே இலக்கு – இந்திய விடுதலை. இதற்காகவே அவர் ஆங்கிலேயரின் கட்டுப்பாட்டிற்கு எதிராக எழுந்தார். பதிப்புத்துறையிலும் பத்திரிகைகளிலும் எழுதி, இந்தியர்களின் மனதில் விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.

தேசபக்திக் கவிதைகள்

பாரதியின் பல கவிதைகள் தேசப்பற்றை முன்னிறுத்துகின்றன. அவருடைய "ஜய ஜய பாரத. தேச", "வந்தே மாதரம், "இந்தியாவென்று சொல்லடா" போன்ற பாடல்கள் இன்று கூட மக்களின் இருதயங்களில் நாட்டுப்பற்றை ஏற்படுத்துகின்றன. அவர் எழுதிய "பாரத தேசம் என்று சொல்லடி பாப்பா" இவை போன்ற வரிகள் சிறுவர்களுக்கும் பெரியவர்களுக்கும் பெரும் உற்சாகத்தை அளிக்கின்றன.

முடிவுரை

சுப்ரமணியம் என்கிற மகாகவி பாரதியார் மகத்தான சிந்தனைகளை மனித மனங்களிலே மலரச் செய்த மாபெரும் சக்தியாக இன்றளவும் அமைந்திருக்கின்றார். அவரது பார்வையில் பாரத நாடும், நாட்டின் எதிர்கால நிலையும் மிக அழகாக அவரது கவிதைகளில் வெளிப்படுகின்றன. சமூக முன்னேற்றம், நாட்டுப்பற்று, தேசிய ஒருமைப்பாடு என பலதுறைகளில் புரட்சி செய்த பாரதியார் குறிப்பாகப் பெண்கள் அனைத்துத் துறைகளிலும் சாதிக்க வேண்டும் என்று விரும்பி பாரதியார் பல எழுச்சிமிக்க கவிதைகளைப் படைத்தவர். அவரது கருத்தாக்கங்கள் இன்றளவிலும் ஏதோ ஒரு வகையில் சமூகத்தில் உலாவிக்கொண்டிருப்பதைபா பார்க்கும்போது பாரதி பற்றவைத்த நெருப்பு இன்றளவும் உலகம் முழுவதும் பரவி விரிந்திருப்பது தமிழுக்குச் சிறப்பு.

28. மகாகவி பாரதியாரின் இலக்கியப் பார்வை



சு.கோபாலகிருஷ்ணன், M.A., M.ED., M.PHIL.,
முதுகலைத் தமிழாசிரியர், அரசினர் மேல்நிலைப் பள்ளி,
கருவாக்குறிச்சி

ஆய்வுச் சுருக்கம்

செம்மொழியான தமிழ்மொழி இலக்கியங்கள் உலகப் பொதுமைப் பண்பு, கவர்ச்சி மிகு சிறப்பியல்புகள், புத்தாக்கம், புதுமைப் பொலிவு, காலத்தை வென்று நிற்றல் போன்ற பண்புகளைப் பெற்று விளங்குகின்றன. அதனால் தான் **'வாழும் இலக்கியங்கள்'** என்று போற்றிப் புகழப்படுகின்றன. வாழும் தமிழ் இலக்கியத்தின் மீது மகாகவி பாரதியார் கொண்டிருந்த பேரார்வமும், ஈடுபாடும் அவரது படைப்புகளில் தமிழ்ப் புலவர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ள அழகியலை இக்கட்டுரையில் காண்போம்.

முன்னுரை

இலக்கியத் திறனாய்வின் பகுதிகளே இலக்கியப் பார்வை, இலக்கிய நோக்கு போன்றவையாகும். இலக்கியத்தின் போக்கும், உத்தியும் எந்தெந்த வகைத் திறங்களில் அமைந்துள்ளன என்பதும் அவற்றால் விளையும் செயல்பாடுகள், பயன்பாடுகள் யாவை என்பதையும் நுண்மையாக ஆய்வதே இலக்கியத் திறனாய்வாகும். மகாகவி பாரதியாரிடம் இலக்கியத் திறனாய்வு செறிந்திருந்தது. பாரதியார் வாழ்ந்த காலத்தில் தமிழ் இலக்கியங்கள் சில மட்டுமே அச்சில் வந்தன. இந்நிலையிலும் கிடைத்த நூல்களை ஆர்வமுடன் படித்தார். திருக்குறள், கம்பராமாயணம், ஆண்டாள் பாடல்கள், திருநாவுக்கரசரின் தேவாரம், பட்டினத்தார் பாடல்கள், தாயுமானவர் பாடல்கள், ஔவையார் பாடல்கள் மற்றும் பிற அறநூல்கள் முதலியவற்றை மேற்கோளாகத் தமது படைப்புகளில் காட்டுவது அவரது இயல்பாகும். எளிய பதங்கள், எளிய நடை, பாமரரும் அறியும் வகையில் தமது படைப்புகளைப் படைத்துள்ளார்.

இலக்கியத்தின் வல்லமை

வாழ்வினைச் செம்மை செய்யும் வல்லமை பெற்றது இலக்கியம். தமிழ் இலக்கியம் என்பது அக வாழ்வு, புற வாழ்வு என்னும் வாழ்வியல் சட்டகத்தைக் கொண்ட வளமான பெட்டகமாகும். ஒரு பெரும் சமுதாயமான தமிழ்ச் சமுதாயத்திற்கு இறவா வாழ்வளித்து வருவன தமிழ் இலக்கியங்களாகும். அவற்றினும் சிலப்பதிகாரம், திருக்குறள், கம்பராமாயணம் என்னும் மூன்று செம்மாந்த இலக்கியங்களின் துணையால் தமிழர் வாழ்வு செழிக்க வேண்டும் என்ற மகாகவியின் உறுதிப்பாடு அவர்தம் படைப்புகளில் பளிச்சிடுகிறது.

'தமிழ்நாட்டில் நாகரீகம் மிகப் புராதனமானது. ஒரு தேசத்தின் நாகரீகம் அல்லது அறிவு முதிர்ச்சி இன்ன தன்மையுடையதென்று கண்டுபிடிக்க வேண்டுமாயின் அதைக் கண்ணாடிபோல் விளக்கிக் காட்டுவது அந்த நாட்டில் வழங்கும் பாசையிலுள்ள இலக்கியம், அதாவது காவியம் முதலிய நூல்களாகும்'. - சி.சுப்பிரமணியபாரதி.

(பாரதி நூல்கள்-கட்டுரைகள் ப.எ:227)

தமிழ் இலக்கியப் பேழையின் திறவுகோல்

தமிழ் இலக்கியப்பேழைக்கு மகாகவி பாரதியார் ஒரு திறவுகோல் என்று கூறினால் மிகையாகாது. ஒரு கவிஞனின் இலக்கியப் படைப்பின் நுண்மையை மற்றொரு கவிஞனால் தான் தெளிவாகப் படம் பிடித்துக் காட்ட இயலும். பாரதியாரின் தமிழ்ப்பற்றும், இலக்கியப் பேரார்வமும் அவருடைய படைப்புகளின் வாயிலாக அறியமுடிகிறது.

யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்

இம்மூன்று புலவர்களுக்கும் அருந்தமிழர்களுக்கும் உள்ள தொடர்பை ஆராய்ந்து அறிந்தே இவ்வாறு பாடியுள்ளார்.

ஓர் இலக்கியத்தின் முழுப் பயனையும் பெற வேண்டுமானால் அதனை முதலில் வாயாரப் பேசி, அடுத்து செவி குளிரக் கேட்டு பின் கண்குளிரக் கண்டு பயின்று சுவைக்க வேண்டும். இப் பெரும் புலவர்களின் இலக்கியப் பேழைகளை உணராமல் இருப்பதை **'ஊமையராய்ச் செவிடர்களாய்க் குருடர்களாய் வாழ்கின்றோம்'** என்று கூறியுள்ளார். இம்மூன்று புலவர்களது நூல்களைப் பயின்று நலமுடனும் வளமுடனும் தமிழர் வாழ வேண்டும் என்னும் தனது ஆர்வத்தினைத் தமிழர்க்கு உணர்த்த எண்ணி, **'ஒரு சொற் கேளீர்'** என வேண்டி நலம் பெற கீழ்க்காணுமாறு வழி சொல்கிறார்.

சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்

நம்நாட்டு மக்களின் தன்னுணர்வற்ற போக்கையும், குறிக்கோளற்ற கோணலையும் பல துறைகளிலும் கண்டதோடு காப்பியம் கற்போர் தம் நுனிப்புல் மேயும் முறையை தன் வரலாற்றுப் பாடலில் கீழ்க்காணுமாறு தமது கவலையைக் குறிப்பிட்டுள்ளார்.

அணிசெய் காவியம் ஆயிரம் கற்கினும்

மகாகவி பாரதியாரின் இலக்கிய நோக்கு என்பது மேற்கோள் நோக்கு அன்று. உட்கோள் நோக்காகும்.

மகாகவியின் உள்ளம் கவர்ந்த கவிஞர்கள்

இந்தியப் பெருநாட்டில் இடம் பிடித்த வெள்ளையர் ஆட்சி நம் நாட்டின் பெருமைகளை நம் நாட்டவரே அறியவும் கைக்கொள்ளவும் இயலாமல் தடைசெய்தது. இதனை ஆராய்ந்து அறிந்த மகாகவிபாரதியார் வெள்ளையர் ஆளுமையில் அமைந்த கல்வி முறையை ஆராய்ந்தார். அவர்கள் தங்கள் தாய்மொழியாகிய ஆங்கிலத்திற்கு அளித்திருந்த ஏற்றத்தை நோக்கினார். நம் நாட்டின் பெருமைகளும், நற்குறிக்கோள்களும், நேரிய வழிகாட்டிகளும் அவற்றைப் படைத்த சான்றோர்களும் கல்வித்துறையினின்று ஒதுக்கப்பட்டிருப்பதையும் நோக்கினார். இது பாரதியாரின் உள்ளத்தை ஊசி முனையாய் குத்தியது. நம் நாட்டின் ஏற்றத்திற்கு நல்லடிப்படை அமைத்தவர்களையெல்லாம் பட்டியலிடத் துவங்கினார். அப்பட்டியலில் தமிழகத்தில் தலையாய இலக்கியங்களைப் படைத்துத் தன்னுள்ளம் கவர்ந்த மூவரையும் குறிப்பிட்டுள்ளார்.

'கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்'

என்று தொடங்கி, இடையே காளிதாசன், பாணினி, சங்கரன் ஆகியோரைச் சுட்டிக்காட்டி,

'சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும்'
'தெய்வ வள்ளுவன் வான்மறை செய்ததும்'

என்று தொடர்ந்து **'அன்ன யாவும் அறிந்திலர் பாரதத் தாங்கிலம் பயில் பள்ளியுள் போகுநர்'** என்று முடிவு கூற எண்ணியவர் உள்ளம் எரிகிறார். 'இவையாவும் அறியாது பேடி கல்வி பயின்று உழல் பித்தர்கள்' என்று மக்களைச் சாடிவிட்டு,

'என்ன கூறிமற் றெங்ஙன் உணர்த்துவேன்;
இங்கி வர்க்கென துள்ளம் எரிவதே'

என்று தமது கருத்துகளை மகாகவிபாரதியார் தமது வரலாற்றைக் கூறும் **'சுயசரிதை'**ப் பகுதியில் வெளிப்படுத்தியுள்ளதைக் காணும் போது தமிழரது வாழ்வைத் தமது வாழ்வோடு இணைத்துப் பார்த்துள்ளதைப் புலப்படுத்துகிறது. கம்பரை மானிடராகவும், திருவள்ளுவரைத் தெய்வமாகவும், இளங்கோவடிகளைப் புலவராகவும் மகாகவி கண்டு உணர்த்தியுள்ளார்.

மனிதத் தன்மையை மேம்படுத்தும் கம்பராமாயணம்

கம்பராமாயணத்தில் தெய்வம் மனிதப்பிறவி எடுத்து அம்மனிதப் பிறவியின் மேம்பட்ட தன்மைகளுக்குக் குறியாக விளங்கும் அடிப்படையாகக் கொண்டது என்றும், எல்லையற்ற இறையைக் கம்பர் தாம் எடுத்துக்கொண்ட கதையின் வாயிலாகத் தம் திறமையைக் குழைத்துச் சில குறிகளால் தெளிவாக்கி விட் முயல்கிறார் என்றும் பாரதியார் கீழ்க்காணுமாறு பாடியுள்ளார்.

எல்லையொன் றின்மை எனும்பொரு ளதனை
(பாரதியின் இலக்கியப்பார்வை ப.18)

கம்பர் மனித இனத்தின் செம்மைப்பாட்டை விளக்கும் குறிக்கோளில் அமைத்துள்ளதின் வாயிலாக இராமாயணத்தைப் படிப்பவர்கள் மனிதத்தன்மையை உணர்வார்கள் என்ற முழு நம்பிக்கை வைத்தார் மகாகவி பாரதியார் அவர்கள். செந்தமிழ் நாட்டைப் புகழ்ந்து பாடிப் பூரிக்கும்போது கீழ்க்காணுமாறு பாடியுள்ளார்.

கல்வியிற் சிறந்த தமிழ்நாடு - புகழ்

கம்பரது இலக்கியத்தை வாயாரப் பாடி, பேசிக் களிக்காதவரை ஊமையர் என்று பாரதியார் கருதுகிறார்.

மனித வாழ்வை நெறிப்படுத்தும் திருக்குறள்:

திருவள்ளுவர் தந்துள்ள கருத்துகள் செந்தமிழ் நாட்டிற்கு மட்டுமன்றி உலகம் அனைத்திற்கும் பொருந்துவனவாகும். மக்கள் வாழ்வை நெறிப்படுத்தும் கருத்துகளை உறுதியாகவும், தெளிவாகவும், ஆழமாகவும், விரிவாகவும் திருக்குறளில் எடுத்துரைத்துள்ளார் என்பதை மகாகவி பாரதியார் கீழ்க்காணும் பாடலில் பதிவிட்டுள்ளார்.

'திருக்குற ளுறுதியும் தெளிவும் பொருளின்
ஆழமும் விரிவும் அழகும்'

செந்தமிழ்நாட்டைப் புகழ்ந்து பூரித்துப் பாடும் போது வான்குறள் தந்த வள்ளுவரைத் தந்து தமிழ்நாடு வான்புகழ் கொண்டதாகக் குறித்த பொருத்தம் அனைவரையும் இன்றும் மகிழ்ந்து பாடுமாறு மகாகவி பாரதியார் கீழ்க்காணுமாறு பாடியுள்ளார்.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு

திருக்குறளை செவியாறக் கேட்டு நல்லுணர்வும், நல்லறிவும் பெற்று வாழ்வைச் செம்மை செய்ய வேண்டும்; அவ்வாறு செம்மை செய்யாதவர் செவிடர் என்று மகாகவிபாரதியார் கருதுகிறார்.

முத்தமிழின் இனிமை பேசும் சிலப்பதிகாரம்:

சிலப்பதிகாரமானது பலவகைச் செய்யுட்களும் அமைந்த தொடர்நிலைச் செய்யுளாகும். அதாவது காப்பிய இலக்கியம் இது போன்று வேறொன்றும் இல்லை. இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரச் செய்யுட்களைத் தேர்ந்த சொற்கட்டுடன், பொருட்செறிவுடன், இனிய ஓசைநயத்துடன், அணிகள் மிளிர்ந்தனவாகப் படைத்துள்ளதைப் பாரதியார் உணர்ந்து **'சிலப்பதிகாரச் செய்யுள்** என்று குறிப்பிட்டுள்ளார். இளங்கோவடிகளின் இசைப் புலமையையும், இசை உணர்வையும் கண்டு உணர்ந்துள்ளார். சிலம்பில் இளங்கோவடிகள் வாய்ப்புள்ள இடங்களில் எல்லாம் கூத்தை அமைத்துள்ளார். சிலப்பதிகாரத்தில் இயற்றமிழ் உள்ளத்தைத் தொடும். இசைத்தமிழ் மனத்தை மீட்டும். நாடகத்தமிழ் நெஞ்சை அள்ளும்.

நெஞ்சை அள்ளும் சிலப்பதி காரமென்றோர் மணி
ஆரம் படைத்த தமிழ்நாடு

என்று சிலப்பதிகாரத்தைத் தமிழ்நாட்டின் மணி ஆரம் என்று பெருமைப்படுத்தியுள்ளார். முத்தமிழின் இனிமை பேசும் சிலப்பதிகாரத்தை வாய்ப்பு நேரும் போதெல்லாம் தமது படைப்புகளில் அதன் பெருமையை எடுத்துரைத்துள்ளார்.

இலக்கிய மேற்கோள்கள்:

தனது வரலாற்றைக் கூறும் **'சுயசரிதை'** (43)யில் **'பொருளி லார்க்கில்லை யிவ்வுலகு'** என்ற நம் புலவர் தமிழ்மொழி பொய்மொழி யன்றுகாண்' என்று திருக்குறள் (247) தொடரை அமைத்துள்ளார். தாயுமானவர் பாடலான 'ஆசைக்கோர் அளவில்லை' என்னும் பாடலைக் கொண்டு தமது சுயசரிதை (42)ல் கீழ்க்காணுமாறு எழுதியுள்ளார்.

ஆசைக் கோரள வில்லை விடயத்துள்
ஆய்ந்த பின்னங் கமைதி யுண்டாமென
மோசம் போகலிர் என்றடி தோதிய
மோனி தாளினை முப்பொழு தேத்துவாம்

மகாகவிபாரதியார் ஔவையாரின் மீது அளவற்ற மதிப்பு கொண்டிருந்தார். 'யாமறிந்த புலவரிலே' உள்ள மூவரில் ஔவையார் இல்லையென்றாலும், தமது கவிதையிலும், கட்டுரைகளிலும் ஔவையாரைப் போற்றியிருக்கும் உணர்வு குறிப்பிடத்தக்கதாகும். **'சுருங்கச்சொல்லி விளங்க வைத்தல்' என்பது கவிதைத் தொழிலில் மிகவும் உயர்ந்த தொழில். இதில் 'ஔவை ஒப்பற்றவள்'** என்ற **'தமிழ்நாட்டு நாகரிகம்'** என்னும் கட்டுரையின் முன்னுரையில் மகாகவிபாரதியார் தமது உள்ளம் கவர்ந்த தமிழ்மகளைப் பாராட்டி எழுதியுள்ளார். ஆத்திசூடி அவரைக் கவர்ந்ததற்குக் காரணம் அதன் சொற்சுருக்கம் ஆகும். ஔவையாரின் ஆத்திசூடியால் கவரப் பெற்ற மகாகவி அவரைத் தமது இலக்கியப் படைப்பிற்கு ஒரு வழிகாட்டியாகக் கொண்டு புதிய ஆத்திசூடியை எழுதியுள்ளார்.

ஆத்திசூடி	புதியஆத்திசூடி
நூல் பல கல்	**நூலிணை பகுத்துணர்**
இளமையில் கல்	**கற்றது ஒழுகு**
மீதூண் விரும்பேல்	**ஊண் மிக விரும்பு**
முனைமுகத்து நில்லேல்	**முனைமுகத்து நில்**

மகாகவிபாரதியார் தமது புதிய ஆத்திசூடியில் இக்காலத்திற்கு ஏற்க இயலாது என்று கருதி ஔவையின் ஆத்திசூடிக் கருத்திற்கு மாறாக சிலவற்றை எழுதியுள்ளார்.

முடிவுரை

மகாகவி பாரதியார் நாட்டின் மீது கொண்டிருந்த பற்றும், தாய்மொழியின் மீது கொண்டிருந்த ஊக்கமும் அவருடைய படைப்புகளில் பிரதிபலிக்கின்றன. அவரது கருத்துச் செறிவுள்ள பாடல்களும், கட்டுரைகளும் சிறப்பான தமிழ் இலக்கியத்தின் மேம்பட்ட பெருமையைப் பறைசாற்றுகின்றன. **'சொல்லின் உயர்வு தமிழ்ச் சொல்லே'** என்று கூறும் மகாகவிபாரதியார் தமிழ் இலக்கியச் சுவை தேவருலக இன்பத்திற்கு ஈடானது என்று கூறியுள்ளார்.

தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார்
இங்கமரர் சிறப்பு கண்டார்

துணைநூல் பட்டியல்:

1. இலக்கிய ஏந்தல்கள், டாக்டர் சி.பாலசுப்பிரமணியன், 1992, மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை
2. பாரதியின் இலக்கியப் பார்வை, கோவை இளஞ்சேரன், 2012, கலைக்குடில் வெளியீட்டகம், 6, நடுவர் கோவில் தெரு, நாகப்பட்டினம்
3. இலக்கியக்கலை, பேராசிரியர் அ.ச.ஞானசம்பந்தன், 1993 (2ஆம் பதிப்பு), மாருதி பிரஸ், 173, பீட்டர்ஸ் ரோடு, சென்னை

29. பாரதியாரின் பன்முகச் சிந்தனைகள்



ஜா. ஜாஸ்மின் ஷர்மிளா

முதுகலை ஆசிரியர்
அரசு மேல்நிலைப்பள்ளி,
குளத்துப் பாளையம், கோவை.

முன்னுரை

பாரதியின் படைப்புகள் உலகம் தழுவிய பார்வை கொண்டவை. மனிதநேய மையக்கருத்தை அடிப்படையாகக் கொண்டவை அவரின் படைப்புகள். தேசிய ஒற்றுமை, மனித உறவுகளின் மேம்பாடு, ஆண்- பெண் சமத்துவம் முதலிய அவரது கருத்துகள் பாரதியின் படைப்பாளுமையைச் சிறப்பாக வெளிப்படுத்துகின்றன. நாட்டுக்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராது இருத்தல் போன்ற பாரதியின் சமூகப்பார்வை மிக விசாலமானது. வளமான பாரதத்திற்கான பாரதியின் சிந்தனைகளும், தொலைநோக்குப் பார்வையும், மதிநுட்பமும் நமக்கு உத்வேகம் அளிப்பதாக உள்ளது. ஆளும் வர்க்கத்தினருக்கு எதிராகப் பாரதியின் கவிதைகளில் இருந்து தான் எதிர்ப்புக் குரல் உயிர்த்தெழத் துவங்கியது. மக்களின் மொழியிலேயே மக்களின் உணர்வுகளைக் கவிதையாகப் படைத்தார் பாரதி. "

மொழியுணர்வு

உலக அரங்கில் தமிழ் இனம் உயர்ந்து விளங்க வேண்டுமெனில் ஒவ்வொரு தமிழனுக்கும் மொழி உணர்வு மிகவும் இன்றியமையாதது என்பதனை உணர்ந்தவர் பாரதி. எனவே தான் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்" (பா.க.பக்.141) என்றார். "சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே அதைத் தொழுது படித்ததடி பாப்பா" (பா.க.பக்.225) என்று தமிழ் மொழியின் உயர்வினைக் கூறுகிறார். "தெள்ளுற்ற தமிழமுதின் சுவை கண்டார் இங்கமரர் சிறப்பு கண்டார்" என்றும் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" (பா.க.பக்.141) என்றும் தமிழின் சிறப்பைப் போற்றுகிறார்.

"விலங்குகளாய் உலகனைத்தும் இகழ்ச்சி சொலப் பான்மை கெட்டு"
(கி. கௌரி பாரதியாரின் தமிழ் மொழிப் பற்று) என்று வினவுகிறார்.

"இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும்"
(பா. க.பக்.141) என்றார்.

செய்யுள் நடையின் மரபை மாற்றி எளிமை நடையில் புதுக்கவிதைகளுக்கு வித்திட்டவர் பாரதி.

பாரதியின் தேசிய உணர்வு

பாரதி தாய்நாட்டின் சிறப்பை உணர்ந்தவர். இந்தியத் திருநாட்டின் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். "பாரத நாடு பழம்பெரும் நாடு நீரதன் புதல்வர் இந்நினைவ கற்றாதீர்" (பா.க.பக்.153) என்றும் "மன்னும் இமயமலை எங்கள் மலையே மாநிலம் மீது இதுபோல் பிரிதில்லையே" (பா.க.பக்.153) என்று நாட்டின் பெருமையை வியந்து போற்றுகிறார். தாய்நாட்டின் சிறப்பைப் "பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தன" என்று பாடுகிறார்.

பெண் விடுதலைச் சிந்தனைகள்

பெண் இனத்தின் விடுதலைக்கும் விடியலுக்கும் வித்திட்டவர் பாரதி. "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" (பா. க.பக்.151) என்று கூறிப் பெண் விடுதலை தான் இந்த மண்ணுக்கு எழுச்சியைக் கொண்டு வரும் என்று உணர்ந்தவர். ஞானம், நல்லறம், வீரம், சுதந்திரம் இவையாவும் நற்குடிப் பெண்ணின் குணங்கள் என்று கருதினார்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் (பா.க.பக்.151)

என்றும் பெண்கள் அறிவை வளர்த்தால் வையம் பேதமை யற்றிடும் கண்டீர் என்றும் மண்ணுக்குள்ளே சில மூடர் நல்ல மாதர் அறிவைக் கெடுத்தார் என்றும் வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் என்றும் அடுப்பூதும் பெண்களுக்கு படிப்பெதற்கு (வரதராஜன். மா, பாரதி பார்வையில்) என்று வினவிய மாந்தர்க்கு பதிலடி கொடுத்தவர்.

பெண் அறத்தினை ஆண்மக்கள் வீரம் தான் பேணுமாயின் பிற்கொரு தாழ்வில்லை (சீனி.விசுவநாதன், கால வரிசைப்படுத்தப் பட்ட பாரதி படைப்புகள்) என்று பாடிய பாரதி எழுச்சியுற்ற பெண்களுக்கு ஆண்கள் பாதுகாப்புத் தர வேண்டும் என்ற புதிய சமுதாயப் பார்வையைப் படைக்கிறார்.

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் (பா.க.பக்.213)

தமிழ் கோயில் தமிழ் அரசு தமிழ் கவிதை தமிழ் தொழில் முதலியவற்றுக்கெல்லாம் துணையாகவும் தூண் முதலாகவும் நிற்பது தமிழ் மாதர் அன்றோ (பா.க.பக்.218) என்று கூறுகிறார். பாரதி எழுதிய பெண் விடுதலை என்ற கட்டுரையில் பெண்களுக்கும் ஆண்களைப் போலவே உயர்தரக் கல்வியின் எல்லாக் கிளைகளிலும் பழக்கம் ஏற்படுத்த வேண்டும் (மகாகவி பாரதியின் பெண் விடுதலை, ப. மகேஸ்வரி) என்கிறார்.

தொழில் சார்ந்த சிந்தனைகள்

தொழில் துறை மேம்பாடுதான் பஞ்சம் மற்றும் பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை அகற்றும், மாற்று வழியாக இருக்கும் என்பதனை உணர்ந்தவர் பாரதி. "கைத்தொழில் வளர்ச்சிக்காக உழைப்போடும் உண்மையான தேசபக்தரேயாவர்" என்று குறிப்பிடுகிறார். (பா.க.பக். 156) புதிய ஆத்திச் சூடியில் "கைத்தொழில் போற்று", " கூடி தொழில் செய்" (பா.க.பக்.219) என்று பாடுகிறார். பல்வேறு தேசங்களுக்கும் சென்று சிறப்பான பண்புகளையும் தொழில்களையும் நம் நாட்டிற்குக் கொண்டு சேர்க்க வேண்டும் என்ற நோக்கத்தில்

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்- கலைச் செல்வங்கள்.." (பா.க.பக்.159)

என்று பாடுகிறார்.

சமூகச் சிந்தனை

சமூகத்தில் ஏற்றத்தாழ்வு இன்றி அனைவருக்கும் அனைத்தும் கிடைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் பாரதி.

மனிதருணவை மனிதர் பறிக்கும் வழக்க மனியுண்டோ? (பா. க.பக்.135)

என்று கேட்கிறார்.

"பட்டினி வாடையும் பஞ்சிலுடையும் பண்ணி மலைகள் என வீதி குவிப்போம்" (பா.க.பக்.116) என்று பொருளாதாரத்தில் ஏற்றம் பெற்ற புதுயுகம் படைக்க விரும்புகிறார். மெலிந்தோரை திடங்கொண்டோர் வதைத்தல் ஒழிந்திட வேண்டும் என்று கூறுகிறார்.

தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம், சாதிக் கொடுமைகள் வேண்டாம் என்று ஒப்பில்லாத சமுதாய உணர்வு கொண்டவர் பாரதி.

சாதியால் கீழோர், மேலோர் என்ற பாகுபாடு இருக்கக் கூடாது என்பதனை பாரதி "நீதி நெறியினின்று பிறர் பிறர்க்குதவும் நேர்மையர் மேலவர்; கீழவர் மற்றோர். பொய்யுலகத் தொழில் செய்தே பிறர் போற்றிட வாழ்பவர் மேலோர்" என்று விளக்குகிறார். சமூகச் சீரழிவுகளைக் கண்டு மனம் குமுறும் பாரதி "நெஞ்சு பொறுக்குதில்லை- இந்த நிலை கெட்ட மனிதனை நினைத்து விட்டால்" (பா.க.பக்.131) என்று வெதும்புகிறார். மூடப்பழக்க வழக்கங்களைத் தகர்த்தெறியத் தன் பாட்டினை ஆயுதமாக எடுத்தவர் பாரதி.

"திறமை கொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும்" (பா. க.பக்.151) என்று அறிவிலும் ஆற்றலிலும் அனைவரும் சிறந்து வாழ வேண்டும் என்று முழக்கமிட்டவர் பாரதி. தீண்டாமை மற்றும் பெண்களுக்கு எதிரான வன்முறை ஆகியவற்றுக்கு எதிராகத் தன் சொற்களைத் தொடுத்தவர்.

முடிவுரை

"ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை ஜாதியில்" (பா. க.பக்.151)

என்று மனிதர் அனைவரும் ஒரே ஜாதி என்றும் உயிர்கள் அனைத்தும் ஒரே இனம் என்று கருதியவர் பாரதி. பாரதியின் முழுமையான படைப்புகள் 23 தொகுதிகளாகத் தொகுக்கப்பட்டு அல்லயன்ஸ் பதிப்பகத்தால் வெளியிடப்பட்டுள்ளன. மக்களின் இதயத்தில் நீங்காமல் என்றும் வாழும் கவிஞர் பாரதி என்றால் அது மிகையல்ல.

துணைநூற் பட்டியல்

1. பாரதியார் கவிதைகள், உமா பதிப்பகம்
2. பாரதியாரின் தமிழ் மொழிப் பற்று , கி. கௌரி,உலகத்தமிழ் ஆராய்ச்சி நிறுவனம்
3. வரதராஜன். மா (தொகுப்பு ஆசிரியர்) பாரதி பார்வையில், அபிராமி பப்ளிகேஷன்ஸ்
4. சீனி விசுவநாதன் கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள், தொகுதி - 9, (மாடல் ஹவுஸ் லேன்)
5. களஞ்சியம்- சர்வதேச தமிழ் ஆய்விதழ் 2456- 5148, மகாகவி பாரதியின் பெண் விடுதலை ப. மகேஸ்வரி.

30. பாரதியின் கருத்துப் படங்கள் இதழியல் துறையில் புதிய பரிமாணம்



செ. கனகராஜ்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
பிபிஜி கலை மற்றும் அறிவியல் துறை,
சரவணம்பட்டி, கோயம்புத்தூர்

முன்னுரை

மகாகவி சுப்ரமணிய பாரதியார் கவிஞர், கட்டுரையாளர், பத்திரிகையாளர் மட்டுமல்லாமல், நவீன இதழியலில் புதுமைகளைப் புகுத்திய புரட்சியாளர். எழுத்துக்களால் மட்டுமல்லாமல், சித்திரங்களின் மூலமும் தனது கருத்துக்களை மக்களிடம் கொண்டு சென்றவர். அவரது 'இந்தியா' பத்திரிகையில் வெளியான கருத்துப் படங்கள் (Cartoons) தமிழ் இதழியல் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. கருத்துப் படங்களின்வழி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் சக்திவாய்ந்த ஊடகமாக நாளிதழ்களைப் பயன்படுத்தியவர்களில் பாரதியார் முக்கியமானவர்.

கருத்துப் படங்களின் முக்கியத்துவம்

அரசியல் கருத்துப் படங்கள் (Political Cartoons) சிக்கலான அரசியல் நிகழ்வுகளையும், சமூகப் பிரச்சினைகளையும் எளிய முறையில் மக்களுக்குப் புரியவைக்கும் கலை வடிவம். படிப்பறிவு, எழுத்தறிவு குறைவாக இருந்த அக்காலத்தில், படங்களின் மூலம் கருத்துக்களைப் பரப்புவது மிகவும் பயனுள்ளதாக இருந்தது. இதை நன்கு உணர்ந்த பாரதியார் ஆங்கில அரசின் ஒடுக்குமுறைகளையும், இந்திய மக்களின் அவல நிலையையும் கருத்துப் படங்களின்வழி விளக்கினார். சாதாரண மக்களுக்குப் புரியாத கடினமான அரசியல் கோட்பாடுகளையும், ஆங்கிலேயர்களின் அடக்கு முறைகளையும், தேசத் தலைவர்களின் செயல்பாடுகளையும் சித்திரங்களின் மூலமாக அனைவரிடமும் கொண்டு சேர்த்தவர். ஒரு படம் ஆயிரக்கணக்கான வார்த்தைகளுக்குச் சமம் என்பது போல, சில கோடுகளின் மூலம் எளிமையாகச் சித்தரித்தார்.

பாரதியாரின் கருத்துப் படங்கள் ஆதிக்கச் சக்திகளை, குறிப்பாக ஆங்கிலேய அரசையும், அவர்களின் இந்தியக் கூட்டாளிகளையும் பகடி செய்தன. இந்தக் கேலிச்சித்திரங்கள் மக்கள் மனதில் புரட்சிகரமான சிந்தனைகளை விதைத்தன. அவை மக்களிடம் ஆவேசத்தையும், அதே நேரத்தில் மனதைரியத்தை தூண்டும் விதமாகவும் அமைந்தன. தனது இதழ்களில் வெளியிட்ட கருத்துப் படங்களுக்குத் தானே அடிக்குறிப்பும் (caption) எழுதினார். இவை பெரும்பாலும் கிண்டல் கலந்த நகைச்சுவையாக இருக்கும். அவரது நகைச்சுவை வெறும் சிரிப்புக்காக மட்டுமல்ல, அது மக்களின் சிந்தனையைத் தூண்டும் கூர்மையான விமர்சனப் பார்வையாக இருந்தது.

'இந்தியா' இதழில் வெளியான கருத்துப் படங்கள்

பாரதியார் ஆசிரியராகப் பணியாற்றிய 'இந்தியா' (India) வார இதழ், கருத்துப் படங்களின் பயன்பாட்டில் ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தது. 1906 முதல் 1910 வரை வெளியான இந்த இதழில் பாரதியார் பல்வேறு கருத்துப் படங்களை வெளியிட்டு மாபெரும் புரட்சியை ஏற்படுத்தினார். மேடைப்பேச்சு, எழுத்து, ஒலி, ஒளிப்படங்கள் வழியாக சுதந்திர உணர்வை வளர்த்தபோது பாரதியார் தனது பங்கிற்கு இவ்வாறான கருத்துப்படங்களின் வழி சீரிய சிந்தனையை மக்களின் மனதில் விதைத்தார்.

ஆங்கிலேய ஆட்சியின் விமர்சனம்

இந்தியாவின் வளங்களைச் சுரண்டும் ஆங்கிலேய ஆட்சியாளர்களின் சுயநலத்தையும், கொடுங்கோன்மையையும் இந்தக் கருத்துப் படங்கள் நேரடியாகத் தாக்கின. இந்தியர்களின் வறுமைக்கு ஆங்கிலேயர்களே காரணம் என்பதை இம்மாதிரியான கருத்துப் படங்கள் சுட்டிக் காட்டின. ஒரு கப்பலில் ஆங்கிலேயர்கள் கோதுமை மூட்டைகளை ஏற்றிச் செல்வது போலவும் அதே இடத்தில் கரையோரத்தில் இந்திய மக்கள் பசியால் வாடுவதைாகவும் அப்படத்தினை அமைத்திருப்பார். (பாரதியின் கருத்துப்படங்கள், ப93)[1] இப்படத்தைப் பார்ப்பவர்கள் அனைவருக்குமே, ஏன் ஆங்கிலேயரை விரட்ட வேண்டும் என்ற எண்ணத்துடிப்பு தன்னெழுச்சியாக ஏற்படும் விதத்தில் அமைந்திருக்கும்.

தேசியத் தலைவர்களின் உருவங்கள்

பாரதியார் தான் போற்றிய தலைவர்களான பால கங்காதர திலகர், லாலா லஜபதி ராய், பிபின் சந்திர பால் (லால்-பால்-பால்) ஆகியோரின் உருவங்களைப் பெருமையுடன் தனது இதழில் கருத்துப் படங்களாகச் சித்தரித்தார். இதன்மூலம், தேசியத் தலைவர்களின் தியாகத்தையும், தலைமைப் பண்புகளையும், மதத்தைக் கடந்த தேசிய உணர்வையும் மக்களுக்கு எளிமையாக உணர்த்தினார்.

சமூக சீர்திருத்தக் கருத்துக்கள்

அரசியல் மட்டுமல்லாமல், சமூகத்தில் நிலவிய மூடநம்பிக்கைகள், அறியாமை, சாதியப் பாகுபாடுகள் போன்ற சமூகப் பிரச்சினைகளையும் இந்தக் கருத்துப் படங்கள் விமர்சித்தன. இவை வெறும் விமர்சனமாக மட்டுமல்லாமல் சமூக அவலங்கள், பகுத்தறிவு, சிந்தனை வளர்ச்சி என்ற எண்ணத்தூறல்களை விதைக்கும் ஓவியக் கலையாகவும் இருந்தது. வங்கப் பிரிவினை, திலகரின் சிறைவாசம் போன்ற முக்கிய அரசியல் நிகழ்வுகளைக் கருத்துப் படங்களாக வரைந்து, அவற்றின் அரசியல் பின்னணியை மக்களுக்கு விளக்கினார்.

"ஏழைகளின் பசி" - ஆட்சியாளர்களின் அலட்சியம்

ஒரு படத்தில், "ஏழைகளின் பசி" என்ற தலைப்பில், இந்திய நாட்டின் ஏழை மக்களைப் பசியோடு சித்தரித்திருப்பார். அதற்கு அருகில், ஆங்கிலேய ஆட்சியாளர்கள் எந்தக் கவலையுமின்றி விருந்து உண்பது போலவும், அவர்களின் செல்வம் பெருகிவருவது போலவும் காட்டியிருப்பார். இந்தப் படத்தில் இந்தியாவின் வளங்கள் ஆங்கிலேயர்களால் சுரண்டப்பட்டு, அதன் விளைவாக இந்திய மக்கள் வறுமையிலும், பஞ்சத்திலும் வாடிய அவலநிலையைச் சுட்டிக் காட்டியிருப்பார். இது ஆட்சியாளர்களின் அலட்சியமான போக்கை நேரடியாக விமர்சிப்பதுடன், மக்களின் உணர்வுகளைத் தூண்டும் வகையில் அமைந்திருந்தது.

"சுதந்திரப் போர் முரசு" - திலகர் சிறை

பால கங்காதர திலகர் சிறை சென்றபோது, அவரைப் பற்றி ஒரு கருத்துப் படத்தை பாரதியார் வெளியிட்டார். அதில், திலகர் சிறையில் இருந்தாலும், அவரது குரல் இந்தியா முழுவதும் ஒலிப்பது போலச் சித்தரித்திருந்தார். திலகரின் சிறைவாசம் தேசத்தின் விடுதலை உணர்வை அணைத்துவிடாது, மாறாக, அது மேலும் கொழுந்துவிட்டு எரியும் என்பதை இந்தப் படம் உணர்த்தியது. ஒரு தலைவர் உடல் ரீதியாக முடக்கப்படலாம், ஆனால் அவரது சிந்தனைகள் சுதந்திரக் கனலைத் தூண்டும் என இந்தப் படத்தின் வழி மக்களுக்கு நம்பிக்கையை பாரதியார் ஏற்படுத்தினார்.

"வங்கப் பிரிவினை" - ஆங்கிலேயர்களின் பிரித்தாளும் சூழ்ச்சி

வங்காளத்தைப் பிரித்ததன் மூலம் இந்து - முஸ்லிம் ஒற்றுமையைக் குலைக்க ஆங்கிலேயர்கள் மேற்கொண்ட சூழ்ச்சியைப் பற்றிய ஒரு கருத்துப் படத்தையும் பாரதியார் வெளியிட்டார். **"பிரித்தாளும் சூழ்ச்சி"** என்ற ஆங்கிலேயர்களின் கொள்கையை இந்தப் படம்

நேரடியாக அம்பலப்படுத்தியது. நாட்டு மக்களின் ஒற்றுமையே நாட்டின் பலம் என்பதை வலியுறுத்திய பாரதியார், இந்தப் பிரிவினையால் ஏற்படும் ஆபத்துகளை மக்களுக்கு கருத்துப்படங்களின்வழி உணர்த்தினார்.

"கடைசிப் பிச்சை" - இந்திய வறுமை

மற்றொரு கருத்துப் படத்தில், இந்தியத் தாய் ஒரு பிச்சைக்காரியைப் போலக் காட்சிப்படுத்தியிருப்பார். கையில் ஒரு பிச்சைப் பாத்திரத்துடன் அவர் நிற்பது போலவும், அதற்குள் வெறும் காற்று மட்டுமே இருப்பது போலவும் சித்தரித்திருப்பார். வளம்மிக்க இந்தியாவைப் பொருளாதார ரீதியாகச் சுரண்டி, அதன் வளங்களை எல்லாம் உறிஞ்சிவிட்டதால், கடைசியில் இந்தியத் தாய் வெறும் பிச்சைப் பாத்திரத்துடன் நிற்பதை இந்தப் படம் விளக்குகிறது. இது ஆங்கிலேய ஆட்சியின் பொருளாதாரக் கொள்கைகளை விமர்சித்தது.

பாரதியார் கருத்துப் படங்களைத் தானே வரைந்தாரா என்பது ஆய்விற்குரியதாக இருந்தாலும் தனது பத்திரிகையில் வெளியிட்ட கருத்துப் படங்களுக்கான கருத்துக்களையும், தலைப்புகளையும் வழங்கியுள்ளார் என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை. பாரதியாரின் கருத்துப் படங்களின் பெரிய வேலைப்பாடுகளோ, வண்ணக்காட்சிகளோ, கவர்ச்சி வசனங்களோ இல்லாமல் எளிய கோடுகள், தெளிவான உருவங்கள் மற்றும் வலுவான குறியீடுகளைக் கொண்டிருந்தது. இப்படங்கள் அன்றைய மக்களிடம் ஆங்கிலேயரின் உண்மை முகத்தை வெளிக்கொணரும் வகையில் அமைந்தது.

முடிவுரை

பாரதியார் இதழியலை வெறும் செய்தியைப் பரப்பும் ஊடகமாக மட்டும் பார்க்காததால், ஒரு சக்திவாய்ந்த அரசியல் மற்றும் சமூக மாற்றத்திற்கான கருவியாகத் தனது கருத்துப் படங்கள் மூலம் மாற்றினார். அவரது கருத்துப் படங்கள் தமிழ் இதழியல் வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தைத் தொடங்கின. அவரது துணிவான, கூர்மையான விமர்சனங்கள், ஆங்கிலேய அரசாங்கத்தின் கோபத்தைத் தூண்டின. இதன் விளைவாக, 'இந்தியா' பத்திரிகை தடை செய்யப்பட்டது. ஆனால், பாரதியார் தனது கருத்துப் படங்கள் மூலம் விதைத்த புரட்சிகரமான சிந்தனைகள் மக்கள் மனதில் நீங்காத இடத்தைப் பிடித்தன. இன்றும், அவரது கருத்துப் படங்கள் அவரது தொலைநோக்குச் சிந்தனைக்கும், துணிச்சலுக்கும் சான்றுகளாக விளங்குகின்றன. அந்தப் படங்கள் ஏற்படுத்திய தாக்கம் மிகப் பெரியது. தமிழ் இதழியலில் கருத்துப் படங்களுக்கு ஒரு புதிய வடிவம் கொடுத்ததன் மூலம், பாரதியாரின் எழுத்துக்களைப் போலவே, அவரது கருத்துப் படங்களும் இன்றளவிலும் நம்மைச் சிந்திக்க வைக்கின்றன.

துணை நின்ற நூல்:

1. பாரதியாரின் கருத்துப் படங்கள் "இந்தியா" 1906 - 1910. பதிப்பாசிரியர் - ஆ.இரா. வேங்கடாசலபதி, முதற்பதிப்பு 1994, நர்மதா பதிப்பகம், சென்னை.

31. இயற்கையைப் போற்றிய பாரதியார்



முனைவர் வை.வைரமணி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
டாக்டர் உமையாள் ராமநாதன் மகளிர் கல்லூரி
காரைக்குடி

முன்னுரை

கவிஞன் தன் கவிதைக்குப் பாடுபொருளாக அமைத்துக் கொள்ளும் பல்வேறு பொருள்களில் இயற்கை சிறப்பிடம் பெறுகின்றது. இயற்கையை வாழ்க்கையோடு ஒப்பிட்டுக் காட்டும் கவிதைக்கலை கவிஞர்களுக்கே உரியது. இயற்கையின் ஆற்றலை, அழகை அனுபவிக்கும் கவிஞன் அனுபவத்தைச் சொற்களால் வடிக்கிறான். பாரதி காட்டும் இயற்கையின் பல்வேறு கூறுகளைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

ஞாயிற்றின் தோற்றம்

பாஞ்சாலி சபதத்தில் மாலை நேரச் சூரியனின் தோற்றம் வர்ணிக்கப்படுகிறது. அர்ஜுனன் பாஞ்சாலியிடம் சூரியனின் அழகை எடுத்துக் கூறும் விதமாக,

"அடிவானத் தேயங்கு பரிதிக் கோளம்...1"

(ம.ரா.போ.குருசாமி,பாரதி பாடல்கள் ஆய்வு பதிப்பு ப.244)

என்னும் பாடல் அடிகள் அமைந்துள்ளது. இங்கு சூரியனின் வடிவம், ஒளி, அழகு ஆகியவை எடுத்துக்காட்டப் பெறுகின்றன. உலோகத்தை உருக்கி வார்த்துச் செய்யப்படும் சக்கரம் பத்துக்கோடி மின்னல்களால் உருக்கிச் செய்யப்பட்டது என்பது பாரதியின் புதிய சிந்தனையாகும்.

சந்திரன்

பாரதி இறைவனால் படைக்கப்பட்ட இயற்கையின் கூறுகளில் ஒன்றாகிய சந்திரனை, "சந்திரனென் றொருபொம்மை - அதில்.."2 (மேலது, ப- 345) என்று விளக்கியுள்ளார். பாரதியார், இங்கு சந்திரன், மேகக் கூட்டங்கள் யாவும் இறைவன் என்ற படைப்பாளி செய்த பொம்மைகள் என்கிறார்.

நட்சத்திரம்

பாரதி வாழ்ந்த காலத்தில் வானத்தில் தூமகேது என்ற வால் நட்சத்திரம் தோன்றியுள்ளது அவற்றையே,

"**திணையின்மீது பனைநின் றாங்கு ...**"3 (மேலது ப- 171)

என்று பாடுகின்றார். ஆகாயத்தில் நீண்டு காணப்படும் வால் நட்சத்திரத்தின் தோற்றம் தினை மீது பனை நின்ற தோற்றமாக இருக்கின்றது. இந்த நட்சத்திரத்தை வரவேற்றுப் பாடும் பாரதியின் மனம் மூடப் பழக்கத்தை மறுத்துப் புதுமையை நாடுகின்றது என்பது தெளிவாகிறது.

கடல்

பாரதியார் குயில் பாட்டில் சூரியன் எழும்பும் போது காணும் கடலின் அழகிய தோற்றத்தைப் பின்வருமாறு பாடுகின்றார். "**காலை யிளம்பரிதி வீசுங் கதிர்களிலே...**"4 (மேலது, ப- 367) அலைகளின் ஓசை பாரதிக்கு வேதத்தின் பொருளை உணர்த்துகின்ற ஓசையாகின்றது. புதுவை நகருக்கு இருக்கும் ஆன்மீகப் பெருமையை உணர்ந்த பாரதியார் அக்கருத்தைக் கடல் அலைகளின் மீது வைத்துப் பாடுகிறார் என்பதை உணர முடிகிறது.

மழை

மழை வரும் காட்சியைப் பாரதியார் பின்வரும் பாடல்களில் காட்சிப்படுத்துகின்றார்.

" **மழை பாடுகின்றது**
அது பல கோடி தந்திகளுடையதோர் இசைக்கருவி..."5. (மேலது, ப- 882)

பாரதி வானத்திலிருந்து அமுத வைரக் கோள்கள் வருகின்றன என்று மழையைக் காட்சிப்படுத்துகின்றார். பூமிப் பெண்ணின் தாகத்தைத் தணிப்பதற்காகவே அம்மழை வருகின்றது என்றும் பாரதி கூறுவது புதுமையானது.

காடு

கண்ணன் என் காதலன் என்ற தலைப்பில் பாரதி பாடும் பாடலில் 'காடு' கீழ்க்காணுமாறு காட்சிப்படுத்தப்படுகிறது. "**நெஞ்சிற் கனல்மணக்கும் பூக்கள் - எங்கும்** ..."6 (மேலது, ப- 459). எங்கும் இலைகள் சிதறிக் கிடக்கும் காட்சி கடலை நினைவூட்டுகிறது. கடல் போல் பரந்து கிடக்கும் காட்டில் காதலியைக் காணாது தவிக்கும் காதலனின் நெஞ்சைச் சுடுகின்ற தன்மையுடையதாக மாற்றம் பெறுகின்றன.

காற்று

பாரதியார் காற்றின் இயக்கத்தைக் கற்பனையாக்கி சொற்களில் வடித்துக் காட்டுகின்றார்.

"**தென்னையின் கீற்று சலசல வென்றிடச்**
செய்து வருங் காற்றே..."7 (மேலது, ப- 589)

பாரதியார் இப்பாடலில் தென்னையின் கீற்று சலசலக்கும் ஒலியிலும் சின்னப் பறவையின் மெல்லிய ஒலியிலும், வானம் கொட்டும் இடியோசையின் ஒலியிலும் தன்னை அடையாளம் காட்டிக் கொள்ளும் காற்றை அறிமுகப்படுத்துகின்றார். ஒலிகளைக் கேட்பதே காற்றின் உதவியால் தான் என்பதைக் குறிப்பாக பாரதியார் உணர்த்தி விடுகின்றார்.

இயற்கையாகிய சூரியன், நிலவு, விண்மீன், காற்று ஆகியவை அவருடைய கவிதைகளுக்கு மூலங்கள் ஆகின்றன. இவற்றைப் பாரதியின் பின்வரும் பாடல் வழி அறியலாம்,

"**நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்**
நேர்பட வைத்தாங்கே"8
(கனகசபாபதி பாரதி -பாரதிதாசன் கவிதை மதிப்பீடு - ப.194)

தொகுப்புரை

- ஞாயிற்றின் ஆற்றல், வடிவு, ஒலி, இயக்கம் ஆகியவை காளியின் ஆற்றலாகக் காட்சிப்படுத்தப் பெறுகின்றது.
- இயற்கையை விளையாட்டுப் பொருளாக்கிக் காணும் பாரதியார் சந்திரன், மேகம் ஆகியவற்றை பொம்மைகளாகவும் சித்தரித்துள்ளார்.
- விண்ணில் தோன்றும் நட்சத்திரங்களின் ஒளியும், வால் நட்சத்திரமும் வாழ்வியலோடு இணைத்துக் காட்டும் பாரதியின் புதிய சிந்தனையை தெளிவுபடுத்துகிறது.
- கடலின் அழகும், மலைகளின் அழகும், இயற்கையின் சிறப்பும் எடுத்துக்காட்டப் பெறுகின்றது.
- மலையை இசைக்கருவியாகவும் அமுதமாகவும் வெளிப்படுத்தும் திறம் புதுமையானது. மழைக்காலத்தின் கூத்தாகக் காட்டும் பாரதியின் இறை அனுபவ வெளிப்பாடும் சிறப்புப் பெறுகின்றது.
- கண்ணன் என் காதலன் என்னும் கவிதையின் வழி காதலனின் மன நிலைக்கு ஏற்றவாறு காடு என்ற மனப்படிவம் புதுமை அளிக்கிறது.
- காற்றின் இயக்கத்தை மனித உள்ளமாகவும் தீயின் ஆற்றலை பகைமையை விரட்டும் காளையாகவும் மனித உறவுகளோடு இணைத்துக் காட்டியுள்ளது பாரதியின் புதுமை.

ஆய்வுக்கு உட்பட்ட நூல்கள்:

1. ம.ரா.போ.குருசாமி, பாரதி பாடல்கள் ஆய்வு பதிப்பு (பதிப்பாசிரியர்), தமிழ் பல்கலைக்கழகம்
2.கனகசபாபதி, பாரதியின் பாரதிதாசனும் ஒப்பியல் திறனாய்வு

32. பாரதி ஒரு சகாப்தம்



பா. சுஜித்ரா M.Sc., B.ED.

பட்டதாரி ஆசிரியர் (கணிதம் தொ.ஊ.ஒ.ந. நி.பள்ள விராலியூர்

கோவை

முன்னுரை

'பாரதி ஒரு சகாப்தம்' இக்கட்டுரையின் மூலம் பாரதியின் வாழ்க்கை விடுதலை வேட்கை, சிந்தனை, நிந்தனை, சாடல், பெண்ணியம், தேசியம் தமிழ்ப் பற்று, சமூக சீர்திருத்த சிந்தனைகள், இயற்கைப் பற்று, தன்னைக் கவர்ந்த கவிகள், பன்முகச் சிந்தனைகள், படைப்புகள் பற்றி பார்க்கவிருக்கிறோம். பண்டிதர் அல்லாதவரும் தமிழைச் சுவைக்க வேண்டுமானால் புதுமை அவசியம் என்பதை நன்கு அறிந்த பாரதி தமிழ் செய்யுள் நடையில், பொருளில், வளத்தில் புதிதாய் கவிதைகள் இயற்றினார். இருபதாம் நூற்றாண்டில் உதித்த கவிஞனான பாரதியே இனி வருங்காலங்களில் கவி பாடும் கவியரசர்களுக்கு ஆசானாக இருப்பான் என்பதில் ஐயமில்லை.

ஷெல்லிதாசன்

பாரதி ஆங்கிலம், ஹிந்தி, சமஸ்கிருதம் போன்ற மொழிகளை நன்கு கற்றிருந்தார். பிற நாட்டுக் கவிஞர்களையும் அவர்களின் படைப்புகளையும் தமிழில் அறிமுகப்படுத்தினார். பைரன், கீட்ஸ், ஷெல்லி போன்ற ஆங்கிலக் கவிஞர் மீது பற்று கொண்டிருந்தார். அதிலும் பிரெஞ்சுப் புரட்சியில் பிறந்த ஷெல்லியின் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். 1908 ஜூலை (தொகுதி ஒன்று பகுதி 12) இதழில் எழுதிய துளசி பாய் சரித்திரத்தின் இறுதிப் பகுதி இடம் பெற்றுள்ளது. இதன் அடியில் 'ஷெல்லிதாஸ்' எனக் கையொப்பமிடப் பெற்றுள்ளது. ஷெல்லியின் 'ராணி மாப்' என்ற புரட்சிக் கவிதையால் பெரிதும் ஈர்க்கப்பட்டார். அவரின் புரட்சி கருத்துக்கள் பாரதியை வெகுவாகக் கவர்ந்தது.

பாரத சமுதாயம் பிறந்த கதை

ருஷ்ய புரட்சியின் தாக்கத்தில் பாரதியிடம் புதைந்த மக்களாட்சி தத்துவம் வெளிவந்தது. ஜார் மன்னனை இரணியன் போல அரசாண்ட 'கொடுங்கோலன் (பாடல் 3)ஜார் மூடன் என்றெல்லாம் 'புதிய ருஷ்யா 'என்ற பாடலில் வசைப்பாடி தீர்க்கிறான். மாகாளி பராசக்தி உருசிய நாட்டினில்

கடைக்கண் வைத்தாள் அங்கே;
ஆகா வென்று எழுந்தது பார் யுகப் புரட்சி! (புதிய ருஷ்யா பாட்டு 1)

ருஷ்யப் புரட்சியின் வெற்றியைப் பார்த்து முடித்த பின்னர் தான் பாரதியின் 'பாரத சமுதாயம்' என்ற பாடல் பிறந்தது.

செய்க பொருளை

'செய்க பொருளை!' என்று ஆணையிட்ட வள்ளுவரின் கூற்றைத் தலைப்பாகக் கொண்டு பாரதி ஒரு கட்டுரை எழுதியுள்ளார். (பாரதி புதையல் இரண்டாம் பாகம்) மேலும் தனது 'சுயசரிதையில்' பின்வருமாறு பாடியுள்ளான். 'பொருளி லார்க் கிலை இவ்வுல'கென்ற நம் புலவர் தம்மொழி பொய்ம் மொழி யன்று காண். வறுமையை நீக்கப் பொருள் செய்யத்தான் வேண்டும். ஆனால் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுகள் ஏற்பட்டிருப்பதையும் செல்வம் ஒரு பக்கம் குவிந்து இருப்பதையும் சாடுகிறான். "ஏழையென்றும் அடிமையென்றும் எவனுமில்லை ஜாதியில்" என்று முழங்கினான்

பாரதியின் புதிய இலக்கணம்

பாரதியார் தான் வறுமையில் வாடிய போதும் பிணியால் துன்புற்றபோதும் இறை நம்பிக்கையை இழக்கவில்லை .சிவசக்தியை நோக்கி பின்வருமாறு கேட்கிறான்.

நல்லதோர் வீணை செய்தே -அதை (பாட்டு 1)

என்று பாடுகிறார் ஆனால் இவ்வுலகில் மாயை என்று கூறும் கூற்றை மறுக்கிறான்.இயற்கையின் அழகில் மயங்கி தாம் எழுதியுள்ள 'பொய்யோ மெய்யோ?' என்ற பாடலில்

வானகமே, இளவெயிலே, மரச்செறிவே

என்கிறான். உழைக்கும் மக்களிடத்திலே கடவுளைக் காண்கிறார். தன் 'தொழில்' என்ற பாட்டில் இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே! யந்திரங்கள் வகுத்திடு வீரே! என்று பாடி புகழ்கிறார். மேலும் தொழில் வளர்ச்சியே நாட்டை மேம்படச் செய்யும் என்ற எண்ணத்தை தம் 'பாரத தேசம்' என்ற பாட்டில் ஆயுதம் செய்வோம் நல்ல காகிதம் செய்வோம் என்று அன்றே ஐந்தாண்டுத் திட்டத்தை வகுத்துள்ளார் .

" ஊருக் குழைத்திடல் யோகம் -நலம் " என்று புதிய இலக்கணமே வகுத்து விடுகிறார்.

பாரதியின் பெண்ணியம்

பாரதி புரட்சிப் பெண்களைப் போற்றுபவன் அவன் சக்திக்கும் காளிக்கும் தாசன் ஆனது அங்கனமே என்று தோன்றுகிறது. வீரப் பெண்மணிகள் தோன்ற வேண்டும். தமக்கு இழைக்கப்படும் அநீதியை எதிர்க்க வேண்டும் என்ற நோக்கில் தான் 'பாஞ்சாலி சபதம் 'உதித்தது போலும் . பாரதியின் 'புதுமைப் பெண்' இந்திய மண்ணில் அதற்கு முன் வேறு எவரும் உருவாக்காத படைப்பாகும். பெண் அடிமைத்தனத்தின் கோரத்தை அவன் தனது பாஞ்சாலி சபதத்தில் ஆணித்தரமாக எடுத்துரைக்கிறான். அவனது 'கரும்பு தோட்டத்திலே' அடிமைப்பட்டு வரும் இந்திய மாதரை நினைத்து கண்ணீர் வடிக்கிறார். பாரதியின் புதுமைப் பெண்ணுக்கு வித்திட்ட குருமணி அன்னை நிவேதிதா தேவி. ஒரு மாநாட்டில் கலந்து கொள்வதற்காக பாரதி அவரை சந்திக்க நேர்ந்தது. அப்பொழுது நிவேதிதா அம்மையார் தங்கள் மனைவியை அழைத்து வரவில்லையா எனக் கேட்கிறார். பெண்களை வீட்டில் பூட்டி வைப்பது மடமை என்று உதித்தது பாரதிக்கு. மேலும் மக்களின் சரி பாதி விடுதலைப் போராட்டத்தில் கலந்து கொள்ளாவிட்டால் சுதந்திரம் பெறுவது எப்படி என்று கேட்டார் அந்தப் பெண்மணி.நமது திரு நாட்டில் பெண்களுக்குப் பல உரிமைகள் மறுக்கப்படுவதை உணர்ந்தார். சமூகத்தில் செம்பாதியான பெண் மக்களின் இழிநிலையைப் போக்க எண்ணினான் .

மாதர் தம்மை இழிவு செய்யும் (விடுதலை)

அவன் சமத்துவத்தை 'சரி நிகர் சமானம்' என்ற மூன்று சொற்களால் முக்காலும் வற்புறுத்தி பாடிவடுகிறான். தற்போது பெண்களுக்கு உள்ள உரிமைகளைத் தன் மனக்கண்ணில் அன்றே கண்டு கூறி இருக்கிறான்.

முடிவுரை

சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்னும் கொள்கையை தன் கவிதைகள் மூலமும் கட்டுரைகள் மூலமும் கூறுகின்றார். நம் சொந்த மொழி வாழ்விழந்து வந்த மொழி. வாழும் போது,மனிதர் உணவை மனிதர் பறித்து மனித நேயம் குன்றும் போது உதித்தவன் பாரதி எனலாம். அவரின் பாடல்கள் புதுமை படைக்கும், வாழ்வியல் நெறிகளை மனதில் பதிய வைக்கும், மறுமலர்ச்சி ஏற்படுத்தும் என்று நன்குணர்ந்திருந்த பாரதியாரின் கவிதைகள் எளிய நடையில் அனைவருக்கும் ஏற்ற வகையில் உள்ளது என்பதை கண்டோம். இதுவே 'பாரதி ஒரு சகாப்தம்' என்பதற்கு சிறந்த சான்றாகும்.

மேற்கோள் நூல்கள்

1) பாரதியின் உரைநடை இலக்கியம் செ. ஆ. கிருட்டின மூர்த்தி
2) பாரதியார் பற்றி ம.பொ.சி பேருரை சிலம்புச் செல்வர் சிவஞானம் (பூங்கொடி பதிப்பகம்)
3) பாரதியும் ஷெல்லியும் தாகூரும் தொ. மு. சிதம்பர ரகுநாதன் (முத்து புக்ஸ்)
4) பரமசிவன் கவிதைகள் -காந்திய கவிநிலா

டாக்டர் கவிஞர் க.ப

33. பாரதி கண்ட புதுமைகள்



முனைவர் ஜெ. ராஜகுமாரி

உதவிப் பேராசிரியர், தமிழ் உயராய்வு நடுவம்

டோக் பெருமாட்டி கல்லூரி, மதுரை

முன்னுரை

பாரதியார் மிகச் சிறந்த கவிஞர் என்பதைத் தமிழுலகம் நன்கறியும். பாட்டுத் திறந்தாலே இந்த வையத்தைச் சிறந்திடச் செய்தவர். பல்வேறு இதழ்களில் பணியாற்றிய பன்முகத்திறன் உடையவர். பண்டையப் பெருமைகள் குறைந்து அடிமை இருளில் மூழ்கிய சமுதாயத்தை ஒளி பெறச் செய்தவர். அவரது மொழிப்பற்று, நாட்டுப்பற்று, சமுதாய சிந்தனைப் போற்றுதற்குரியது. பதினோறாம் வயதில் பாரதி பட்டம் பெற்றார். பல்வேறு கவிதைக் களஞ்சியங்கள் படைத்துள்ளார். அவருடைய எழுத்துகளில் நவீனத்துவ அலைகள் ஒளி வீசின. உலக இலக்கியங்களின் சாரத்தையும், இந்திய சிந்தனை மரபையும் தனக்குள் கொண்டவர். துறைதோறும் புதிய பார்வைகளை எழுச்சிப் பெறச் செய்தார். அவரின் புதுமைச் சிந்தனைகளை விரிவாகக் காண்போம்.

நோக்கம்

இருபதாம் நூற்றாண்டுத் தமிழில் புத்தெழுச்சிப் பெருஞ்சுடராகத் தோன்றியவர்களுள் மகாகவி பாரதியும் ஒருவர். அவர் கண்ட புதுமைகளைக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

பாரதி கண்ட புதுமை

புதுமையிலே நாட்டம் கொண்டவர் பாரதி. பாரதியின் காலத்தில் சராசரி மக்களும் பழமையிலே பெருமை உணர்வு கொண்டிருந்தார்கள். இந்தப் பழமை உணர்வு ஒரு போதையாகவே மாறி இருந்தது. அடிமை உணர்வும், மூடத்தனமும் மண்டிக் கிடந்தது கண்ணுக்குத் தெரிந்தது.

"கோத்தபொய் வேதங்களும் - மதக்
கொலைகளும் அரசர் தம் கூத்துக்களும் "[1]

(நாள் மலர்கள் - தொ.பரமசிவன், ப.எ– 25, ப.ஆ-நவ 2014)

என்று பழமையை மதிப்பிட்டார் பாரதி. எனவே பழமை நிராகரிப்பு என்பது பாரதியின் கவிதைப் பண்புகளில் ஒன்றாக அமைந்திருந்தது.

பாரதி கண்ட புதுக்கவிதை

பிறமொழிக் கவிதைகளைத் தமிழாக்கம் செய்வது பாரதியின் மாபெரும் புதுமையாகும். வடமொழி, வங்கமொழி, ஆங்கிலம் ஆகிய மொழிகளிலிருந்து பாரதி பல கவிதைகளைத் தமிழில் மொழி பெயர்த்தார். புதுக்கவிதை 19 ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் அமெரிக்காவில் பிறந்ததாகும். புதுக்கவிதை முன்னோடியான வால்ட்விட்மனைப் பற்றித் தமிழில் எழுதிய பாரதி, வசன கவிதை என்ற பெயரில் தமிழனுக்குப் புதுக்கவிதையில் பயிற்சி அளித்தார். ஜப்பானிய குறுங்கவிதை வடிவமான ஹைக்கூ இன்று தமிழ்க் கவிதையுலகில் செல்வாக்குப் பெற்றிருக்கிறது. ஆனால் பல்வேறு ஆண்டுகளுக்கு முன்பே பாரதி ஜப்பானியக் கவிதை வடிவம் பற்றிக் கட்டுரை எழுதியுள்ளார்.

"தீப்பட்டெரிந்து வீழுமலரின் அமைதி யெண்ணே"[2]

(தமிழில் ஹைக்கூ - நெல்லை.சு.முத்து - ப.எ– 35, ப.ஆ– 2005) என்ற ஹைக்கூ கவிதை ஒன்றையும் மொழி பெயர்த்துள்ளார்.

பாரதி கண்ட நாடு

புவியனைத்தும் போற்றிட வான்புகழ் படைத்துத் தமிழ் மொழியைப் புகழில் ஏற்றிய கவியரசர். **"வந்தே மாதரம் என்போம் எங்கள் ."**[3] (பன்முகப் பார்வையில் பாரதியின் படைப்புகள் :- விக்கிரமன் - ப.எ- 30 ப.ஆ– 114வது பிறந்தநாள் விழாவெளியீடு) என்று மரபு நெறி நின்று

பாரதநாட்டைத் தாயாக வணங்கி மகிழும் பாரதியார். பிறிதோரிடத்தில் புதுநெறியைக் கையாண்டு, செந்தமிழ் நாட்டைத் தந்தையர் நாடாக எண்ணி இன்பம் பெறுகிறார்.

"தந்தையார் நாடென்ற பேச்சினிலே – ஒரு "[4] (மேலது. ப.எ 30)

பாரதநாடு பழம்பெரும் நாடு என்று பாரத நாட்டின் பெருமையைப் பறைசாற்றியவர்.

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி"[5] (மேலது. ப.எ.31)

என்று பாரதநாட்டை நெஞ்சார வணங்கிப் போற்றும் பாரதியார், பிற்காலத்தில் பாரத மக்களின் தற்கால நிலைமையைக் குறித்து நெஞ்சு பொறுக்காமல் மிகவும் வருந்துகிறார்.

பாரதி கண்ட ஒருமைப்பாடு

இந்திய நாட்டில் பெரும் பிரிவுகளும், பிளவுகளும் இருப்பதைக் கண்டார். இந்தியா பல மொழிகளையும், மதங்களையும், பழக்கவழக்கங்களையும் கொண்ட மாபெரும் நாடு. மன்னர்கள் காலத்தில் ஒன்றுபடாத இந்தியா ஆங்கில ஆட்சிக் காலத்தில் எதிர்ப்பதற்காக ஒன்றுப்பட்டது. **"ஆயிரம் உண்டிங்கு சாதி – எனில்"[6]** (கட்டுரைக் கற்பகம் - அரு.சோமசுந்தரன் - ப.எ-12 ப.ஆ– ஜன 2009) என்ற வலிமையான ஒற்றுமையுணர்ச்சி நாடு முழுவதும் பரவி இருந்தது. இந்திய மக்கள் முப்பது கோடியாக எண்ணிக்கையில் பிரிந்திருந்தாலும், உள்ளத்தாலும், உணர்ச்சியாலும் ஒன்றுப்பட்ட நிலையினர் என்பதை உணர்ந்தனர்.

பாரதி கண்ட இதழியல்

தொடக்கக் காலத்தில் தமிழ் இதழியலில் பாரதி பல புதிய உத்திகளைக் கையாண்டுள்ளார். பல்வேறு பயிற்சிகளைப் பெற்றிருந்த பாரதி சக்ரவர்த்தினி இதழில் பெண்களைச் சீர்த்திருத்தத் தூண்டும் வகையில் கல்வி, இளமை மணஎதிர்ப்பு, கைம்பெண் மனம் போன்ற செய்திகளையும் வெளியிட்டார். "சக்ரவர்த்தினி இதழில் ஆண்டும், மாதமும் குறித்தும் வெளியிட்டுள்ளார். இந்தியா, விஜயா முதலிய இதழ்களில் தமிழ் ஆண்டு, மாதம், நாள் முதலியவற்றைக் குறித்தார். **புதுவையில் இந்தியா, விஜயா இதழ்களில் பக்க எண்ணைத் தமிழெண்களில் கொடுத்துள்ளார்"[7]** (இதழாளர் பாரதி, முனைவர் பா.இறையரசன், ப.எ . 268, ப.ஆ– ஜன 1995). பாரதி இதழின் மூலம் திறம்படப் பணியாற்றினார். புனைப்பெயரில் பல்வேறு இதழ்கள் எழுதியுள்ளார். இதழியல் துறையில் முன்னோடியாக விளங்கும் பாரதி பல புதுமைகள் புகுத்தியுள்ளார் என்பது உண்மையே.

பாரதி கண்ட தொழிற்கல்வி

தாழ்வுற்று, வறுமை மிகுந்து, விடுதலை தவறி நின்ற பாரதம் கல்வி முறையால் தான் சீர்படும் என்பதைப் பாரதி அறிந்தார். வாழ்வின் எல்லாத் துறையிலும் வளர்ச்சியும், வெற்றியும் பெறமுடியும் என எண்ணினார். தொழிற்கல்வி அவசியம் வேண்டுமென உணர்ந்தார். அவர் காலத்தில் நம் நாட்டில் ஏட்டுக் கல்வியே பயிற்றுவிக்கப்பட்டு வந்தது. **"ஏட்டுச் சுரைக்காய் கறிக்குதவாது"** என்பது பழமொழி.

முடிவுரை

பாரதியின் நூல்கள் சக்தி வாய்ந்த படைக்கலன்களாக பயன்படுவன. அவரது பாடல்களில் தனிச்சிறப்பு மிளிரும். பாரதியின் இலக்கியச் சிறப்புப் பாரதிக்கு பெருமைச் சேர்த்தது. புதிய தமிழகம் அமைக்கப்பாடுபட்டு, தமிழ்நாட்டின் உரிமைக்கும், மொழி உயர்வுக்கும், சமூக விடுதலைக்கும் அயராது உழைத்து எண்ணற்ற இலக்கியச் செல்வங்களை ஆராய்ந்து பல புதுமைகள் கண்ட பாரதி இன்றும் மக்கள் மனதில் தனித்தன்மைப் பெற்று விளங்குகிறார்.

மேற்கோள் நூல்கள்

1. நாள் மலர்கள் - தொ.பரமசிவன், ப.எ– 25, ப.ஆ-நவ 2014
2. தமிழில் ஹைக்கூ - நெல்லை.சு.முத்து, ப.எ– 35,ப.ஆ– 2005
3. பன்முகப் பார்வையில் பாரதியின் படைப்புகள் :- விக்கிரமன் - ப.எ- 30 ப.ஆ– 114வது பிறந்தநாள் விழாவெளியீடு
4. மேலது–ப.எ -30
5. மேலது–ப.எ -31
6. கட்டுரைக் கற்பகம் - அரு.சோமசுந்தரன், ப.எ-12 ப.ஆ– ஜன 2009
7. இதழாளர் பாரதி - பா.இறையரசன், ப.எ– 268,ப.ஆ– ஜன 1995
8. கட்டுரைக் கற்பகம் - அரு.சோமசுந்தரன், ப.எ– 7,ப.ஆ– ஜன 2009

34. பாரதியும் உளவியலும்

முனைவர் கி. சுதா

உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
டாக்டர் உமையாள் இராமநாதன் மகளிர் கல்லூரி, காரைக்குடி.

ஆய்வுச்சுருக்கம்

பாரதியின் கவிதைகள் உரைநடைகள் சிறுகதைகள் மொழிபெயர்ப்புகள் ஆகிய இந்த ஆய்விற்குச் சிறந்த தரவுகளாக அமைகின்றன. அவரது படைப்புகள் மனித மனதின் ஆழமான அடுக்குகளையும் சமூக உளவியலையும் ஆராயும் களஞ்சியங்களாக விளங்குகின்றன என்பதை மையமாகக் கொண்டு இந்த ஆய்வு நிகழ்த்தப் பெற்றுள்ளது. விளக்கமுறையாய்வு,உளவியல் ஆய்வு, தொகுப்பு முறை ஆய்வு, பகுப்பாய்வு ஆகிய ஆய்வு முறைகள் பின்பற்றப்பட்டுள்ளன.பாரதியின் படைப்புகளில் பொதிந்துள்ள பல வகையான உளவியல் கூறுகளை விரிவாக ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

திறவுச் சொற்கள்

மனித உணர்வுகள், சமூக உளவியல்,தத்துவம் மற்றும் ஆன்மீக உளவியல், கல்வி மற்றும் வளர்ச்சி உளவியல்

முன்னுரை

இலக்கியமும், உளவியலும் ஒன்றோடொன்று பின்னிப்பிணைந்தவையாகும். மனிதனின் அக உணர்வுகள் கலைகள் அறிவியல்களுக்கு அடிப்படை காரணியாகும். ஒரு படைப்பாளன் தனது ஆழ்மனதில் எண்ணங்களையும், உணர்வுகளையும், போராட்டங்களையும் கொண்டு இலக்கியங்களைப் படைத்தருளுகிறான். அந்தப் படைப்புகள் வாசகர்களின் மனதில் புதிய எண்ணங்களை, உணர்வுகளைத் தூண்டுகின்றன. பாரதியார் மனித மனத்தின் ஆழமான அசைவுகளையும், உணர்வுகளையும் நுட்பமாகப் புரிந்து கொண்ட தீர்க்கதரசி. அவரது படைப்புகளில் ஒவ்வொரு வரியிலும் உளவியல் சிந்தனைகள் பொதிந்துள்ளன. படைப்புகளில் வரும் கதாபாத்திரங்கள் வெறும் கற்பனை அல்ல. அவை அன்றைய சமூகத்தின் பிரதிபலிப்புகளாகவும், மனிதர்களின் அக உலகை வெளிப்படுத்தும் கண்ணாடிகளாகவும் அமைந்துள்ளன. '**பாரதியும் உளவியலும்**' என்னும் இவ்வாய்வுக் கட்டுரை அவரது மேதைமையின் புதிய பரிமாணங்களை வெளிக்கொணர்வதை நோக்கமாகக் கொண்டு அமைகிறது.

உளவியல்

- "மனித உள்ளத்தின் உணர்வே அறிவியல் கலைகளின் கருவறையாக விளங்குகிறது. ஆழ்மனத்தில் படிந்து கிடக்கும் உணர்வுகளே இவ்வுலகில் ஆக்கங்களையும், அழிவுகளையும் விளைவிக்கின்றன என்பது உளவியலாளர்களின் கருத்தாகும்" 1
- "உளவியல் அல்லது மனோத்தத்துவம் என்பது மனதின் செயல்பாடுகள் மற்றும் நடத்தைகளை அறிவியல் முறையில் ஆய்வு செய்யும் கற்கை மற்றும் பயன்பாடு ஒழுங்கு முறையாகும்". மனம் என்பதே மூளையின் ஒரு பகுதியாகும். உளவியல் என்பது மனம் மற்றும் மனித நடத்தை பற்றிய ஆய்வு. இது மனிதர்கள் எவ்வாறு சிந்திக்கிறார்கள் என்பதை ஆராய்கிறது. இதில் உணர்ச்சிகள், அறிவார்ந்தநிலை, நினைவுகள், எண்ணங்கள், கற்றல் பற்றிய ஆய்வுகள் அடங்கும்.

இலக்கியமும் உளவியலும்

இலக்கியத்தில் உளவியல் என்பது இலக்கியப் படைப்புகளை உளவியல் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆராய்ச்சி மேற்கொள்வதை உணர்த்தும். இவ்வகையான கோட்பாடு இலக்கியத்திற்கும். மனித மனத்திற்கும் இடையேயான ஆழமான தொடர்பை ஆராய்ச்சி செய்கிறது. படைப்பாளியின் உளவியல், பாத்திரங்களின் உளவியல், வாசகரின் உளவியல், சமூக உளவியல் ஆகியவற்றை இலக்கிய உளவியல் அணுகுமுறை ஆய்வு செய்கிறது. **"இலக்கியம் சார்ந்து நான்கு நிலைகளில் உளவியலைப் பிரித்து அணுகி**

ஆராயலாம்"3 என்கிறார் தமிழண்ணல்.

மனிதனின் நடத்தைகள், அவனது உள்ளத்தால் நிர்ணயிக்கப்படுகின்றது. காலசூழலுக்கு ஏற்ப தம்முடன்' வாழக்கூடிய மக்களின் பண்பாட்டிற்கு ஏற்ப மனிதனின் சிந்தனைகள் உருவாகின்றன. சிந்திக்கும் மானிடர் தான் அறிவு, விருப்பம் ஆகியவற்றிற்கு ஏற்ப தம் எண்ணங்களை வெளிப்படுத்துவான். ஆழ்மனதில் உள்ள உணர்வுகளின் வெளிப்பாடுகளே எண்ணங்களாகப் பிரதிபலிக்கின்றன. ஒரு படைப்பாளி தான் சொல்ல விளையும் கருத்தைப் பல்வேறு உத்திகளில் புலப்படுத்த விரும்புவான். இதுவே படைப்பாளியின் உளவியலாகும். கதை மாந்தர்களின் மனநிலைகள், உணர்ச்சிகள், ஆளுமைப் பண்புகள், நடத்தைகளுக்கான உளவியல் காரணங்கள் ஆகியவற்றை ஆராய்வது பாத்திரங்களின் உளவியலாகும். ஓர் இலக்கியப் படைப்பு வாசகரின் மனதில் ஏற்படுத்தும் உணர்வு, அறிவுப்பூர்வமான உளவியல் தாக்கங்களைப் பகுப்பாய்வு செய்வது வாசகர்களின் உளவியலாகும். ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் அல்லது காலகட்டத்தின் மனநிலை, மதிப்புகளை இலக்கியம் வழி ஆராய்வது சமூக உளவியலாகும்.

பாரதியின் படைப்புகள்

கவிதைகள், உரைநடைகள், சிறுகதைகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள், நாடகங்கள் என்பனவாம். தேசபக்தி, சமூகசீர்திருத்தம், பக்தி, இயற்கை, குழந்தைப் பாடல்கள் எனப் பல்வேறு கருப்பொருள்களை மையமாகக் கொண்டு படைப்புகளைத் தந்தவர் பாரதி. பாரதியாரின் படைப்புகளில் உளவியல் கூறுகள் ஆழமாகப் பதிவிடப்பட்டுள்ளன. இவர் சமூகச் சீர்திருத்த வாதியாகவும் புரட்சியாளராகவும் இருந்தமையால் மனித உணர்வுகளைத் தனது படிப்புகளில் பதிவிட்டுள்ளார்.

கவிதைகளில் உளவியல் வெளிப்பாடு

பாரதியார் கவிதைகளில் உளவியல் கருத்துக்களை ஆழமாகப் பதிவிடப்பட்டுள்ளார் மனித மனதின் எண்ணற்ற உணர்வுகளையும், போராட்டங்களையும், சமூகம் சார்ந்த உளவியல் அம்சங்களை மிக நுட்பமாகவும், ஆற்றலுடனும் எடுத்துரைத்துள்ளார். தன்னம்பிக்கை,மன உறுதி,சமூகச் சீர்திருத்தம், பக்தி மற்றும் ஆன்மீகம் **குழந்தை** தனிப்பாடல் உணர்வுகள், மனப் போராட்டங்கள் ஆகியவற்றில் உளவியல் இழையோடி உள்ளது.

"அச்சமில்லை அச்சமில்லை
அச்சமென்பதில்லையே"

இக்கவிதை வரிகள் பயத்தைப் போக்கும் உளவியல் உத்தியை எடுத்துரைக்கின்றன. மனஉறுதி துணிச்சலை ஊட்டுகின்றன. இது நேர்மறை உளவியல் என்று அழைக்கப்படுகிறது. "மாபெரும் சக்தியால் இமயம் போல் வளர்வோம் மனிதரில் தேவராவோம்". இவ்வரிகள் மேம்பட்ட நிலையை அடையும் உந்துதலை வெளிப்படுத்துகிறது. "நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே நீங்களெல்லாம் சொப்பனமந்தானோ?" இவ்வரிகள் உலகின் நிலையற்ற தன்மையை உணர்த்துகிறது. மனித மனம் தனது இருப்பைப் பற்றிய சந்தேகங்களை எதிர்கொள்ளும் உளவியல் நிலையைக் காட்டுகிறது.

"ஜாதிகள் இல்லையடி பாப்பா
குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"

இக்கவிதை சமூகத்தில் ஆழமாகப் பதிந்திருக்கும் பாகுபாட்டு மனப்பான்மைக்கு எதிராகக் குரல் கொடுக்கிறது. சிறார்களின் மனதில் சமத்துவ உணர்வை விதைக்கும் சமூகக் கற்றல் உளவியலின் ஒரு பகுதியாகும்.

"மாதர் தம்மை இழிவு
செய்யும் மடமையைக் கொளுத்துவோம்"

இக்கவிதை வரிகள் பெண்களின் **மீதான** சமூகக் கட்டுப்பாடுகள், இழிவை எதிர்த்துப் பெண் விடுதலைக்கான போராட்டத்தை வெளிப்படுத்துகிறது. இது **பாலின** சமத்துவத்திற்கான உளவியல் தேடலாகும்.

"கண்ணன் என் தோழன்
கண்ணன் என் காதலன்"

கடவுளைப் பல்வேறு உறவுகளில் பார்க்கும் இந்த அணுகுமுறை, மனித மனத்தின் அகநிலைத் தேவைகளையும், பாதுகாப்பு உணர்வையும், அன்பின் தேவையையும் நிறைவு செய்கின்றன.

"காணி நிலம் வேண்டும்

பராசக்தி காணி நிலம்வேண்டும்"

இவ்வரிகள் மனித மனதின் அடிப்படைத் தேவைகளையும், பாதுகாப்பு உணர்வையும், ஏக்கத்தையும் வெளிக்காட்டுகிறது.

"யாமறிந்த மொழிகளிலே
தமிழ்மொழி போல் இனிதாவது
எங்கும் காணோம்"

இவ் வரிகள் தாய்மொழி மீதான அடையாளப் பெருமை, **ஆழ்ந்த** பற்றுதலை வெளிப்படுத்துகிறது. இது மொழிசார் உளவியலின் ஒரு பகுதியாகும்.

"ஓடி விளையாடு பாப்பா- நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா"

இவ்வரிகளின் **வழி** குழந்தைகளின் சீரான மனோ வளர்ச்சிக்கு விளையாட்டின் அவசியத்தை உளவியல் ரீதியாக வெளிப்படுத்துகிறார்.

"சின்னஞ்சிறு கிளியே
கண்ணம்மா செல்வக்
களஞ்சியமே"

இக்கவிதை வரிகள் பெற்றோர் குழந்தை உறவின் உளவியல் பிணைப்பைப் பதிவிட்டுள்ளார். குழந்தைகள் **மீதான** பாசத்தையும், அவர்கள் விலைமதிப்பில்லாப் பெட்டகமாகப் பார்க்கும் மனநிலையை எடுத்துக்காட்டுகிறது.

"நெஞ்சு பொறுக்குதில்லையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்துவிட்டால்"

இவ்வரிகள் ஆழ்ந்த வருத்தத்தையும், கோபத்தையும் வெளிப்படுத்துகிறது. அநீதியைக் கண்டு பொங்கும் கவிஞனின் தனிப்பட்ட மன உணர்வுகள், ஏக்கங்கள் ஆகும். பாரதி கவிதைகளில் மனித மனதின் ஆழமான உணர்வுகளையும், சிந்தனைகளையும் உளவியல் கூறுகளையும் மிக நுட்பமாகப் பதிவிட்டுள்ளார். ஒவ்வொரு கவிதையிலும் ஒரு விதமான உளவியல் கண்ணோட்டம் பொதிந்துள்ளன.

பாரதியின் உரைநடைப் படைப்புகளில் உளவியல். பாரதி தனது உரைநடைப் படைப்புகளிலும்,மனித மனதின் சிக்கலான அம்சங்களையும், சமூக உளவியலையும் நுட்பமாகப் பதிவு செய்துள்ளார். அவரது உரைநடை எளிமையும் வேகமும், ஆழமும் உடையது.

ஞானரதம்

ஞானரதம் என்னும் படைப்பு ஒரு கற்பனைப் பயணமாகும். இது பாரதியாரின் ஆழ்ந்த ஆன்மீகத் தேடலையும், இருப்பு நிலை உளவியலையும் பிரதிபலிக்கிறது. கதையின் தலைவன் பல்வேறு உலகங்களுக்குப் பயணித்து உண்மையான ஞானத்தைத் தேடுகிறான். இது மனித மனதின் அகத்தேடல், அர்த்தத்திற்கான தேடல், சுய நிறைவு முதலியவற்றை எடுத்துரைக்கிறது. மனித மனதின் பல்வேறு அடுக்குகளை மெய்ஞானத்தை நோக்கிய ஆன்மாவின் பயணங்களை உளவியல் ரீதியாக ஆராய்ந்துள்ளது.

சந்திரிகையின் கதை

இது ஒரு முழுமையற்ற நாவலாக இருந்தாலும், இக்கதை பெண் கல்வி, சமத்துவம், சமூகத்தில் பெண்களின் நிலை குறித்த பாரதியின் பார்வையை வெளிப்படுத்துகிறது.

பெண்களின் அடையாளம் - சுயமரியாதை

சந்திரிகை என்னும் கதாபாத்திரம் அன்றைய சமூகக் கட்டுப்பாடுகளுக்குள் தன் தனிப்பட்ட அடையாளம், சுய சரிதை ஆகியவற்றை நிலை நிறுத்த முயற்சி செய்கிறாள். இது பெண்ணின் சுயமதிப்பு, சுயகருத்து சார்ந்த உளவியல் போராட்டத்தை எடுத்துரைக்கிறது.

சமூக மாற்றம் சார்ந்த உளவியல்

பெண் கல்வி விதவை மறுமணம் அதிகரிப்பு போன்ற சீர்திருத்த சிந்தனைகளையும், சமூகத்தின் மரபுவழிச் சிந்தனைகளை எதிர்த்துப் போராடி, மாற்றத்தை ஏற்படுத்தும் உதவிகளைக் காட்டுகிறது. தராசு சமூகப் பகுப்பாய்வு மனித இயல்பு. தராசு என்னும் விவாதக் கட்டுரைத் தொகுப்பில் சமூகப் பிரச்சினைகளையும், மனிதர்களின்

குணங்களையும் தராசால் நிறுத்திப் பார்ப்பது போல எழுதப்பட்டுள்ளது. ஒவ்வொரு மனிதரிடமும் உள்ள நல்ல, கெட்ட குண நலன்களைப் புரிந்து கொள்ள ஆளுமை உளவியல் உதவுகிறது. சமூகத்தில் நிலவும் மூடநம்பிக்கைகள், சுயநலம் போன்றவற்றை அவர் விமர்சனம் செய்யும் விதம், ஒரு சமூக உளவியலாளரின் பார்வையை ஒத்துள்ளது. மக்களின் கூட்டு நடத்தை, அதன் தாக்கங்களை விவாதிக்கிறார்.

கட்டுரைகள்

தத்துவம், அறிவியல், இலக்கியம், சமூகம், அறிவியல் போன்ற ஏராளமான கட்டுரைகளை எழுதியுள்ளார். பாரதியின் பல்வேறு கட்டுரைகள் ஒரு சமூகச் சீர்திருத்தவாதியின் உளவியலை வெளிப்படுத்துகின்றன. சாதிப் பிரிவினைகளை எதிர்த்து, அனைவரும் சமம் என்பதை வலியுறுத்தி, மக்களின் மனப்பான்மைகளை மாற்றவும், புதிய சிந்தனைகளை ஏற்றுக் கொள்ளவும் வழி வகுத்தது. இது மாற்று உளவியலின் ஒரு நிலையாகும். இந்தியா விடுதலை பெற வேண்டும் என்ற தீவிர ஆசையின் காரணமாக தேசிய உணர்வையும், சுதந்திரத்திற்காக மிகுந்த வேகத்தையும் தூண்டியது. நவதந்திர கதைகள், அடிப்படை மனித உணர்வுகளையும், அவற்றின் விளைவுகளையும் எடுத்துக்காட்டுகின்றன. இது உணர்ச்சி உளவியல், நடத்தையியல் உளவியல் ரீதியாக மனித நடத்தைகளைப் புரிந்து கொள்ள உதவுகிறது. பிற சிறுகதைகளிலும் சமூகப் பார்வை மனித மனதைப் பற்றிய புரிதல் வெளிப்படுகிறது. பாரதி வாசகர்களின் மனதில் ஒரு சமூக மனசாட்சியை உருவாக்க முயன்றார். மனிதப் போராட்டங்களை மிக அழகாகச் சித்தரித்துள்ளார். தனி நபர் உளவியல்,சமூக அழுத்தங்களின் உளவியல் ஆகியவற்றை விளக்கியுள்ளார்.

மொழிபெயர்ப்பு

பகவத்கீதை என்ற தத்துவ நூலை மொழிபெயர்த்து எல்லோருக்கும் புரியும் மொழியில் தந்ததன் வழி ஆன்மீக ஞானத்தைப் புதுமைப்படுத்த விரும்பியது அகமுகப்படுத்துதல் என்ற உளவியலின் ஒரு பகுதியாகும். கீதையின் சாரம் மனதை அமைதிப்படுத்துவது, தர்மத்தை காப்பது ஆகும். இதை மொழிப்பெயர்த்ததன் வழி வாசகர்களின் மன அமைதியையும், வாழ்க்கையின் நோக்கத்தையும் தர முயன்றுள்ளார். இதன் வழி வாசகர்களின் இருப்பு நிலை உளவியலை விளக்கியுள்ளார்.

முடிவுரை

பாரதியாரின் படைப்புகளில் உள்ள ஒவ்வொரு வரியும் ஒருவித உளவியல் சார்ந்ததாக உள்ளது. அவர் கவிஞராக மட்டுமல்லாமல் மனித மனத்தின் ஆழங்களை நன்குணர்ந்த உளவியலாளராகத் தனது படைப்புகளில் திகழ்ந்துள்ளார் என்பது தெளிவாக விளங்குகிறது.

துணைநின்ற நூல்கள்

1. பாரதியார் பாரதம் போற்றும் பாரதியார் கவிதைகள், லியோபுக் ப்ளிஷர்ஸ், முதற்பதிப்பு - 2023
2. பெ. சு. மணி பாரதியாரின் ஞானரதம் (மூலமும் ஆய்வும்) பூங்கொடிப் பதிப்பகம் சென்னை முதற்பதிப்பு - 2013
3. மகாகவி பாரதி சந்திரிகையின் கதை சந்தியா பதிப்பகம் முதற்பதிப்பு - 2021
4. பாரதியார் தராசு பாரதி புத்தக நிலையம் மதுரை பதிப்பு:1955
5. தமிழண்ணல் ஒப்பிலக்கிய அறிமுகம் பாரி நிலையம் பதினேழாம் பதிப்பு - 2019

35. பாரதி கண்ட சமூகம்

முனைவர் இரா.பிரபாவதி

தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர்
டாக்டர் உமையாள் இராமநாதன் மகளிர் கல்லூரி,காரைக்குடி

ஆய்வுச் சுருக்கம்:

பாரதியார் பாடல்களில் சமூக உணர்வு ஆழமாக வெளிப்பட்டுள்ளது. சாதியப் பாகுபாடு பெண் அடிமை மூடநம்பிக்கைகள் போன்ற அவலங்களை எடுத்துரைக்கப்பட்டுள்ளது. நாட்டுப்பற்றுச் சுதந்திரம், சமத்துவம,; சகோதரத்துவம் கருத்துக்கள் பின்பற்றப்பட்டுள்ளது சமூகச் சீர்திருத்தம் சமூகத்தில் நிலவும் தவறான நடைமுறைகள் ஒழிக்கப் பாரதி மேற்கொண்ட வழிமுறைகள் அவர் பாடலின் எடுத்தாளப்பட்டுள்ளது. பாரதியார் பால்கள் மூலம் சமூக அவலங்களை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும். விளக்கமுறையாய்வு, தொகுப்பு முறை ஆய்வு, பகுப்பாய்வு ஆகிய ஆய்வு முறைகள் இக்கட்டுரையில் அணுகுமுறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திறவுச்சொற்கள்:

சாதிமதப் பேதம், புதுமைப் பெண் உருவாக்கம், கல்வி உரிமை, அறியாமை மற்றும் வறுமை நிலை

முன்னுரை

"தனி ஒரு மனிதனுக்கு உணவில்லை எனில்
இந்த ஜகத்தினை அழித்திடுவோம்"

பாரதியாரின் பன்முகத்தன்மை பொருந்திய தமிழ்க் கவிஞர், நவீனத் தமிழ்க் கவிதைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர். பெண் முன்னேற்றம் சமூகச் சீர்திருத்தம் எனப் பல விஷயங்களுக்குப் போராடினார்.கவிதைகள் மூலம் தேசிய எண்ணங்களை அனைவர் மனதிலும் விதைத்தார்.நூறு வருடங்கள் கடந்தும், இன்றும் தமிழ் மனங்களில் கவிதைகள் மூலம் வாழ்ந்து வருகிறார்.தமிழ் மீதும் தாய்மொழி மீதும் பெரும்பற்று கொண்டவர். தமிழ்மொழியை "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" என்று போற்றிப் பாடுவதில் அவரின் தமிழ்ப்பற்று தெளிவாக வெளிப்படுத்துகிறது. தமிழகம் கடந்து அவரின் கவிதைகள் தேசிய உணர்வை விதைத்து அனைவரையும் ஒன்றுபடுத்தியதால் அவர் புகழ் தேசம் முழுவதும் பரவி அவரைத் தேசிய கவியாக உயர்த்தியது.அவ்வகையில் பாரதியார் பாடல்களில் சமூகப் பார்வையை விளக்கிக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சாதிமதப் பேதமற்ற சமூகம்:

பாரதியார், தீண்டாமைக்கு எதிராகப் பல பாடல்களை இயற்றியுள்ளார். அவர் எழுதிய பாடல்களில், சாதி வேறுபாடுகளைக் கண்டித்தும், எல்லா மனிதர்களும் சமம் என்பதை வலியுறுத்தியும் பாடல்கள் உள்ளன. குறிப்பாக, "தீண்டாதார் வாக்குடையார்" போன்ற வரிகள் மூலம் தீண்டாமைக் கொடுமையை எதிர்த்துள்ளார்.

"சாதிகள் இல்லையடி பாப்பா-குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொலல் பாவம்"
-பாப்பா பாட்டு-15

சாதி அடிப்படையில் அமைந்த தீண்டாமை என்பது மிகக்கொடிய ஒன்றாகும். தன் வீட்டில் நாய், பூனை போன்றவற்றிற்கு இடங்கொடுத்து அன்பு செலுத்துகின்ற மனிதன், மனித இனத்தில் உடன் பிறந்தோரைத் தீண்டத்தகாதவர் என விலக்கி வைப்பதும் விலகி வாழ்வதும் பண்பாடற்ற செயல் என்பது பாரதியாரின் கருத்து. தீண்டாமை என்பது

உடலோடு மட்டும் தொடர்பு உடையது அன்று. அது உள்ளத்துள்ளே உறைந்து கிடப்பது. உதட்டளவில் மட்டும் சாதியை ஒழிப்பதாகக் கூறிவிட்டு உள்ளுக்குள்ளே சாதிவெறியை வளர்ப்பதால் எந்தப் பயனும் இல்லை. குழந்தைகளின் பிஞ்சு நெஞ்சங்களில் சாதி என்ற நச்சுணர்வை விதைத்து விடுகின்றனர். அவர்கள் வளர வளர அந்தத் தீய உணர்வும் வளர்கிறது. அந்தப் பிஞ்சு நெஞ்சங்களில் சாதிகள் இல்லை என்ற உணர்வை விதைக்க வேண்டும் என்றும், சாதிஅடிப்படையில் அமைந்த தீண்டாமை என்பது மிகக் கொடிய ஒன்றாகும். சாதி என்ற பெயரில் ஏற்றத்தாழ்வுகள் பேசுவது பாவம் என்கிறார்.

"ஜாதி மதங்களைப் பார்த்து பயப்படாதே
உன் மனசாட்சிப்படி நட"

என்று பாடியதன் மூலம் சாதி மதங்களை எதிர்தார்.

புதுமைப் பெண் உருவாக்கம் -சமூகம்:

பாரதி வாழ்ந்த காலச்சூழலில் பெண்கள் மிகவும் அடிமை நிலையில் நடத்தப்பட்டனர். அவர்களுக்குக் கல்வி உரிமையும் அதிக அளவில் வழங்கப்படவில்லை. மேலும் அப்பெண்களின் வாழ்க்கை ஆணைச் சார்ந்து இயங்கும் நிலையில் இருந்தது. திருமண வாழ்க்கையில் பெண்கள் மிகவும் பின்தங்கியிருந்தனர் இந்நிலை மாறவேண்டும் என்கிறார்.

"பெண்டாட்டி தனையடிமைப்படுத்த வேண்டி
பெண்குலத்தை முழுதடிமைப்படுத்தலாமோ"

என்று தம் கவிதையில் எழுதியுள்ளார். அதேபோல ஒவ்வொரு கணவனும், தனது மனைவியை தெய்வமாகப் போற்ற வேண்டும் என்பதையும்,

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்"

இந்தியநாடு ஆங்கிலேயர்கள் பிடியில் சிக்குண்டு அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் பெண்களும் அடிமைகளாய் வாழ்ந்து வந்துள்ளனர். இந்த நிலை மாறவேண்டும் என்று விரும்பிய பாரதியார் பெண்கள் விடுதலையே நாட்டு விடுதலை, மானுட விடுதலையின் வேர் பெண்விடுதலையே என்ற கருத்தை மையமாகக் கொண்டு, அவர்கள் விடுதலை அடைந்ததாக எண்ணிப் பாடியிருப்பது அவரின் தொலைநோக்குப் பார்வைக்குச் சான்றாகும்.

"பெண்கள் அடிமை இல்லை"

பெண்களின் அடிமை நிலையைப் போக்கி, பெண்கள் ஆண்களைப் போலவே சமமானவர்கள் என்று கூறுகிறார்.

"பெண்களை அடிமையென்று சொல்வது தவறு"

பெண்களை அடிமை என்று சொல்வது தவறு என்றும், அவர்கள் ஆண்களைப் போலவே திறமையானவர்கள் மற்றும் புத்திசாலிகள் என்றார்.

"மாதர் தம்மை இழிவு செய்யும்
முடமையைக் கொளுத்துவோம்"

என்று பாடியதன் மூலம் பெண்களை இழிவுபடுத்தும் மடமையை எதிர்த்தார். பெண்களின் முன்னேற்றத்திற்காகவும்,பெண்களின் உரிமைகளுக்காவும் குரல் கொடுத்தார்

கல்வி உரிமைச் சமூகம்:

இருபது, முப்பது வருடங்களுக்கு முன்பு பெண்கள் அடிமைப்பட்டிருந்த காலத்தில் பெண்கல்வி ஏற்பட்டால், மாதர் ஒழுக்கத்தில் தவறிவிடுவார்களென்று தமிழ்நாட்டில் பலர் கூறினர் இக்காலக் கட்டத்தில்தான் விடிவெள்ளி நட்சத்திரமாய் உதித்த பாரதி, பெண்களின் மனநிலை கண்டு வெகுண்டு எழுந்து, தமிழ்நாட்டில் பெண்கல்வி அனைவருக்கும் அவசியம் என்பதை உணர்த்தினார். பெண்களை வீட்டிற்குள் அடைத்து ஒடுக்கி வைத்திருந்த காலத்தில் பாரதி புயலாய் வீசிய உரைகள்,

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்.." - பெண்கள் விடுதலைக் கும்மி-2

என்னும் பாடல் மூலம் பெண்களுக்கு விழிப்புணர்வைப்பற்றிப் பாரதி உணர்த்தினார். முழுமையான பெண்ணை உருவாக்க, கல்வியை ஒரு கருவியாகக் கண்டார் பாரதி. கல்வியின் நற்பயனைப் போற்றும் பாரதியின் சொற்கள் மிகுந்த வேகம் கொண்டவை. அன்னிய நாட்டின் கல்வி நெறியை ஒழித்துக்கட்டி, பாரதம் கண்ட பண்புக் கல்வியைத் தந்து, பெண்களை உயர்த்த பாரதி முயன்றார். நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால் அவர் நெஞ்சு பொறுக்காது. உணவு உற்பத்தியிலும் தொழில் திறமையிலும், உடல்வலிமையிலும் யோகப்பயிற்சியிலும் அன்பின் முதிர்ச்சியிலும் முழுமை கண்ட பெண்ணையே. பாரதியின் இலட்சியப் பெண்ணாகக் கண்டார்

பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான்-புவி
பேணி வளர்த்திடும் ஈசன் -முரசு-9

என்ற பாடல் வரிகள் மூலம் பெண்களின் அறிவாற்றலுக்கும், கல்விக்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுத்தார். அவரது பாடல்களில் பெண்களின் கல்வி மற்றும் முன்னேற்றத்திற்காகப் பாடுவது அவசியம் என்று வலியுறுத்தியார்.பெண்களும் ஆண்களைப் போலக் கல்வி கற்றுத் தங்கள் அறிவைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று அவர் விரும்பினார்.பெண்களின் விடுதலைக்குக் கல்வியே முதன்மையானது என்றார்.

அறியாமை நீங்கிய சமூகம்:

சமுதாயத்தில் சில பழக்க வழக்கங்கள் ஏன் செய்கிறோம் என்ற சிந்தனை இல்லாமலே காலம் காலமாக மக்களால் பின்பற்றப்பட்டு வருகின்றன. இத்தகைய **"கண்மூடிப் பழக்கமெல்லாம் மண்மூடிப் போகட்டும்" (பாழாகப் போகட்டும்)** என்றார் வள்ளல் இராமலிங்க அடிகளார். தொடர்ச்சியாக வந்த சில பழக்க வழக்கங்களையும், பொய்மைச் சாத்திரங்கள் கூறும் தவறான செய்திகளையும் (சடங்குகளையும்) சுய சிந்தனை இல்லாமல் கண்மூடித்தனமாக நம்புவதும், செய்வதும் தவறு. புதுமைகளைச் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்து நமக்கு ஏற்றதெனில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.அச்சத்தின் அடிப்படையில் ஏற்படும் பேய், மந்திரம், தந்திரம் இவற்றைப் பற்றிய நம்பிக்கை ஒழிய வேண்டும் என்று அச்சத்தில் உழன்று செய்வதறியாது திகைத்து நின்ற தம் சமகால இந்திய மக்களை எண்ணி நெஞ்சு வெதும்புகின்றார்.

நெஞ்சு பொறுக்கு தில்லையே - இந்த
நிலைகெட்ட மனிதரை நினைந்து விட்டால் -பாரத ஜனங்களின் தற்கால நிலைமை- 1

பாரதியார் தனது பாடல்கள் மூலம் மக்களிடம் இருந்த மூடநம்பிக்கைகளை எதிர்த்து பகுத்தறிவைப் பின்பற்றவும் அறிவியல் சிந்தனைகளை வளர்க்க வலியுறுத்தினார். **'நல்லதைச் செய்ய நாள் பார்க்கத் தேவை இல்லை'** என்பது பழமொழி. என்றாலும் அச்சத்தின் காரணமாக நாள் நட்சத்திரம் பார்ப்பது, சோதிடம் பார்ப்பது என்பன நம் முயற்சியைக் கெடுக்கும்.கிரகப் பலன்களைக் கணிப்பதோடு நிற்காமல்,அவைகளில் சில வகை மூட நம்பிக்கைகளுக்கு இடம் கொடுக்காமல்,அவைகளுக்குப் பரிகாரம் கண்டு சமாளிக்கும் அறிவாற்றலையும் வல்லமையையும் பெற வேண்டும் என்கிறார்

"சோதிடந் தனையிகழ்"-புதிய ஆத்திசூடியில்- 35 - என அவர் கூறுவதன் வழி அறியலாம்.

மொழிச் சிந்தனைகள்:

பாரதி காணவிரும்பிய சமுதாயத்தில் கல்விக்கென்று தனித்த இடமுண்டு. பாப்பா வயதில் இருந்தே கல்விப்பணி தொடங்குகிறது என்கிறார் அதனை

காலை எழுந்தவுடன்; படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு

என்று குழந்தை எவற்றைச் செய்ய வேண்டும், எவற்றைச் செய்யக்கூடாதென்பதைப் பட்டியலிட்டுக் காட்டுகிறார்.கல்வியினைக் குறித்த தெளிவான கருத்தியலைக்கொண்ட பாரதி ஒரு தேர்ந்த கல்வியியல் அறிஞராக, எதிர்காலத் தேவைகளைத் தொலைநோக்காக உணர்ந்து கல்வியியல் பாடத்திட்டங்களையும் செயல் நெறிகளையும் வரைந்துள்ளார். இவற்றின்வழி அவரது கல்வியியல் புலமை வெளிப்படுகிறது.

தொழில்துறைச் சிந்தனைகள்:

பாரதி காலத்தில் நிலவிய பஞ்சம்,கடுமையான வரி விதிப்பு,பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் இவற்றிற்கு மாற்றுவழியாகத் தொழில்துறை மேம்பாடு ஒன்றையே கருதுவார்.

கைத்தொழில் வளர்ச்சிக்காக உழைப்போரும்
உண்மையான தேசப்பக்தாரவார்

- பாரதி தமிழ்

கைத்தொழிலின் சிறப்பினையும் அதனை வளர்க்கும் முறைகளையும், தொழில்துறைச் சிந்தனைகளையும் வெளிப்படுத்தியிருக்கிறார்.

கைத்தொழில் போற்று -புதிய ஆத்திசூடியில 18

கூடித் தொழில் செய் -புதிய ஆத்திசூடியில 21

ஆவர் காலத்தில் பஞ்சம் மிகுந்திருந்தது எனினும் பஞ்சத்தைக் காட்டிக்கொள்ளாமல் தமழ்நாட்டின் செழிப்பை மட்டும் தம் பாடல்களில் பதிவு செய்திருக்கிறார்.

வறுமையற்ற பொதுவுடமை சமூகம்

சமூகத்தில் நிலவும் ஏற்றத் தாழ்வுகளுக்குகெல்லாம் காரணமே வலியவர்கள் எளியவர்கள் மேல் செலுத்தும் ஆளுமைதான்.துன்பத்தில் உழல்வோரைக் கண்டு எவ்வித உதவியும் செய்யாது வேடிக்கை பார்க்கும் உலகமிது.ஒருவர் உணவை மற்றொருவர் பறிப்பது நியாயம் ஆகுமா? இனியாவது இக்கொடுமை தீரவேண்டம். மனிதர்க்குள் மனித நேயம் மலர வேண்டும் என்கிறார். மனிதர் உணவை மனிதர் பறிக்கும். வழக்கம் இனியுண்டோ? எனத் தான் காண விரும்பும் வளமான பாரதச் சமுதாயம் எப்படி இருக்க வேண்டும் என வரையறுக்கிறார்.

தொகுப்புரை:

- சாதி அடிப்படையில் அமைந்த தீண்டாமை என்பது மிகக்கொடிய என்பதை அறிதல்
- மானுட விடுதலையின் வேர் பெண்விடுதலையே என்று அறியச் செய்தல்
- ஆண்களைப் போலக் கல்விகற்றுத் தங்கள் அறிவைப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்
- மூடநம்பிக்கைகளில் மக்கள் மூழ்கிக்கிடப்பதை அறியச் செய்தல்
- நாட்டின் செழிப்பு, தொழில்துறை மேம்பாடுகள் குறித்து அறியச் செய்தல்

துணை நின்ற நூல்கள்:

1. பாரதியார் கவிதைகள், திருமகள் பதிப்பகம் சென்னை

36. பாரதியார் பாடல்களில் புலப்பாட்டு நெறி

முனைவர் மா. லெட்சுமி
தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்
டாக்டர் உமையாள் இராமநாதன் மகளிர் கல்லூரி, காரைக்குடி.

ஆய்வுச்சுருக்கம்:

பாரதியார் பாடல்களில் கருத்துக்களை வெளிப்படுத்துவதில் காணப்படும் ஒரு சிறப்பான முறைப் புலப்பாட்டு நெறியாகும். இதைப் பல்வேறு உத்திகளைக் கையாண்டு தமது பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். விளக்கமுறைத் திறனாய்வு, தொகுப்புமுறை, பகுப்பாய்வுமுறைகள் பின்பற்றப்பட்டுள்ளது.

திறவுச் சொல்:

புலப்பாட்டுநெறி, உவமைகள், உருவகம், படிமங்கள், எளிமையான மொழிநடை, கருத்துச்செறிவு, பன்மொழிப்புலமை, சொல்லும்பொருளும்.

முன்னுரை:

புலப்பாட்டு நெறி என்பது ஒரு கருத்தை பிறர் அறியும் வண்ணம் எடுத்துக் கூறுவது. இந்தசொல் (Rhetoric) என்ற கிரேக்கச் சொல்லிலிருந்து புலப்பாட்டு நெறி என்கிற இலக்கணம் அறிமுகமாகிறது. படைப்பாளன் தான் சொல்ல வந்த கருத்தைப் படிப்பவரின் மனதில் உணர்ச்சியோடு கொண்டுசெல்ல பயன்படுத்தும் முறை வெளிப்பாட்டு உத்தியாகும்.

புலன்களின இன்பத்தை விட அறிவுக்கு இன்பத்தை ஊட்டும் விதத்தில் பாரதியின் படைப்புகள் அமையப்பெற்றுள்ளன. அவ்வகையில் மக்களிடத்தில் கருத்துக்களை நிலைநாட்ட வேண்டிக் கையாண்டுள்ள புலப்பாட்டு நெறிகளை குறித்து இவ்வியல் ஆராய்கிறது.

புலப்பாட்டுநெறி :

மக்களிடத்தில் கருத்துக்களை எளிமையாகப் புலப்படுத்தும் கையாளும் நெறிமுறைப் புலப்பாட்டுநெறியாகும். **"ஒருவன் தன் எண்ணத்தை மற்றவனுக்குப் புலப்படுத்த மொழி ஓர்ஊடகமாக அமைகிறது. தன்கருத்தை மற்றவர் மனம் ஏற்க கூறவும் கேட்பவன் மனதில் ஒருவிருப்பத்தை உருவாக்கவும் தாக்கத்தை ஏற்படுத்தவும் கலைஞன் பல உத்திகளைக் கையாளுகிறான் அந்த உத்திகள் சில நெறிமுறைகளுக்கு உட்படுகின்றன. இப்புலப்பாட்டுநெறி மொழியைப் போன்று பழமை வாய்ந்ததாகும்"**[1]

சொல்லும்பொருளும் :

கண்ணன்பாட்டின் சொற்கள் எளிமை உடையவை ஆனால் ஆழமான பொருள் உடையவை.

"மழை குடை பசிநேரத்து உணவு எந்தன் வாழ்வினுக்கு எங்கள் கண்ணன்" [2]

என்கிறார் பாரதியார். வழிபடுபொருளாக இல்லாமல் கண்ணனைப் பயன்படுபொருளாக மாற்றுகின்றார்.

"உண்ணும்; சோறும் பருகும் நீரும்

தின்னும் வெற்றிலையும் எங்கள்கண்ணன்"[3]

என்று நம்மாழ்வார் கூறுவதை இங்கு ஒப்பிட முடிகிறது.

உவமைகள்:

பாரதியார் பாடல்கள் உவமைகள் அவரது கவிதைகளை அழகுபடுத்தவும், கருத்துக்களைத் தெளிவாக வெளிப்படுத்தவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. இயற்கை, சமூகம் போன்றவற்றை உவமைகள் மூலம் வெளிப்படுத்தியுள்ளார். சூரியனின் தோற்றத்தை,

"கதிரவன் தோன்றுவது ஒருபெண்ணின் முகத்தைபோல்"[4]

என்று பெண்ணின் முகத்திற்கு உவமையாக எடுத்துரைக்கிறார். சமூகத்தை வர்ணிக்கும்மபோது ஜாதி, மதம், அரசியல் போன்றவற்றையும் அவர் உவமையாகக் கையாண்டுள்ளார். இதனை,

"தீண்டாதோர் என்போர் தீய இனம் இல்லை"[5]

என்ற வரியில் ஜாதி வேறுபாடுகளைக் கண்டிக்கும் போது உவமையைப் பயன்படுத்தியுள்ளார்.

உருவகம் :

உருவகம் என்பது ஒருகவிதை உத்தியாகும். இது ஒரு பொருளை மற்றொரு பொருளாக உருவகப்படுத்தி அதன் மூலம் ஒரு கருத்தைத் தெளிவாகவும் அழகாகவும் வெளிப்படுத்த உதவுகிறது. மேலும், ஆழமாக மனதில் பதியவைக்கிறது. பாஞ்சாலி சபதத்தில் துரியோதனன் ஆங்கிலேயரின் உருவாகவும், தருமன் பாரத்தை ஆட்சிசெய்த பண்டைய மன்னனாகவும், மாயச்சகுனி மாயசூதல் பொன்னையும், மணியையும், ஆட்டையும் மாட்டையும்இ நாட்டையும் கவர்ந்துகொள்வதால் வாணிகம் என்ற பெயரோடு வந்து புகுந்த ஆங்கிலேயர் நாட்டையே அடிமைப்படுத்தி நாட்டுமக்களையும் தமது வலையில் விழச்செய்வதாகவும் உருவகப்படுத்தியுள்ளார். இதனை,

"மண்டபம் நீர்கட்டியது மாநிலத்தைக் கொள்வன்றோ" [6]

என்ற அடியின் வழி வாணிகம் செய்ய வந்து மாநிலத்தையே கவர்ந்துகொண்ட ஆங்கிலேயராகச் சகுனியை உருவகப்படுத்தியுள்ளார். குயில் பாட்டில் குயிலைப் ஒருபெண்ணாகவும் சுதந்திரத்தின் அடையாளமாகவும் உருவகித்துள்ளார். இதனைக் குயில் கூவும் ஓசை என்ற குயில்பாட்டின் வரியில் குயிலின் ஓசையினைச் சுதந்திரத்தின் குரலாக உருவகித்துள்ளமை புலனாகிறது. பாரதியார் மக்கள் மனதில் கருத்துகளையும் சுதந்திர உணர்வை ஏற்படுத்தவும் உருவகங்களைக் கையாண்டிருக்கலாம்.

படிமங்கள்:

படிமங்கள் என்பது மனக்கண்ணில் ஒருகாட்சியை உருவகிக்கும் வகையில் வார்த்தைகளைப் பயன்படுத்துவதாகும்.

"ஓங்கி உலகளந்த உத்தமன் அடிபோற்றி" [7]

என்ற அடியில் விஷ்ணுவின் திருவடியைப் படிமமாகக் காட்டி நாட்டின் வளர்ச்சியைக் கூறுகின்றார்.

"கத்தும் கடல் அலைகள் துள்ளும் மான்குட்டிகள்"[8]

இவற்றை இயற்கைக் காட்சிகளாகத் தமதுபாடல்களில் படிமங்களாக எடுத்தாகாண்டுள்ளார்.

"ஆசை முகம் மறந்து போச்சே" [9]

என்ற பாடலில் ஆசை முகம் என்ற படிமம்இ மனிதனின் பேராசையையும் அது அவனை எவ்வாறு மாற்றுகிறது என்பதையும் குறிக்கிறது. புடிமங்களின் வழி அழகும், செறிவும் சேர்ப்பதுமட்டுமன்றி கருத்துக்களை எளிமையாக்கவும் மனிதர்களின் மனதில்

தாக்கம் மற்றும் விடுதலைஉணர்வை ஏற்படுத்துவதே நோக்கமாகக் கொண்டிருத்தல் வேண்டும் என்பது வெளிப்படை.

எளிமையான மொழிநடை :

பாதியார் பொதுமக்களுக்கு எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் எளிமையான இயல்பான மொழிநடையைப் பயன்படுத்தி உள்ளார்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்" [10]

பெண்கல்வியின் முக்கியத்துவம் மற்றும் ஆணுக்குப் பெணணை நிகராக வைத்துப் பாடியுள்ளார். மேலும்இ "பின்தூங்கி முன் எழுவாள்" என்ற பிற்போக்குச் சிந்தனைகளை அவர் புரட்டிப்போட்டுள்ளார். இதன்வழி பாமரமக்களுக்கும் தனது கருத்துச்சென்றடைய வேண்டும் என்ற நோக்கில் எளிமையான மொழிநடையில் பாரதியார் தம்படைப்புகளை எழுதியிருக்கக்கூடும்.

கருத்துச்செறிவு:

பாரதியார் பாடல்களில் கருத்துக்கள் செறிவுடனும் ஆழத்துடனும் வெளிப்படுகின்றன. அதுமட்டுமின்றி அவர் பாடியகருத்துக்கள் சமூகத்தில் ஒருதாக்கத்தை ஏற்படுத்தும் வகையிலும் அமைந்திருக்கும். சாதிவேறுபாடு, பெண்அடிமைத்தனம் போன்ற சமூகத்தீமைகளை எதிர்த்து அவர் குரல்கொடுத்துள்ளார்.

"சாதிகள் இல்லையடி பாப்பா
"பெண்ணடிமைத் தீர்வுமட்டும் பேசும் இந்தஞாலத்து" [11]

போன்ற வரிகள் கருத்தாழமிக்கதாகவும் சீர்திருத்தத்தை எடுத்துரைப்பதாகவும் அமைகின்றது. மேலும், நிலவியப் பெண்ணடிமைத்தனம், சமூகஏற்றத் தாழ்வுகள், மூடநம்பிக்கைகள் மற்றும் கொடுமைகளுக்கு எதிராகக்குரல் கொடுத்துள்ளமையும் தெளிவாகிறது.

பன்மொழிப்புலமை:

பாரதியார் பழமொழிகளைக் கற்றுத்தெரிந்த பன்மொழிவித்தகர். அதனால் அவரது பாடல்களைப் பிறமொழிச் சொற்களும் கருத்துக்களும் விரவி காணப்படுகின்றன. **"வந்தே மதரம்" என்றும் "ஜாதி மதங்களைப் பாரோம்"** [12] என்ற வரிகளில் பிறமொழிச் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். எல்லாரும் ஒருதாய் மக்கள் என்ற எண்ணத்தோடு தமது படைப்புகளில் பிறமொழிகளையும் ஏற்றிப் பாடியிருக்கக்கூடும்.

எதுகை,மோனை :

பாரதியார் பாடல்கள் எதுகை, மோனை போன்ற கவிதை உத்திகளால் அழகுபடுத்தப்பட்டுள்ளன. மரபுக்கவிதைகள் மட்டும் இன்றி வசனக் கவிதைகளும் எதுகை மோனைகளைப் பயன்படுத்தியுள்ளார். **"ஆனந்தம் பெருகட்டும் யாவருக்கும்"** [13] என்ற அடிகளில் மோனையைப் பயன்படுத்தியுள்ளார். **"பாயும்புலி பதுங்குவது போல"** [14] என்ற அடிகளில் எதுகைகளைப் பயன்படுத்தியுள்ளர். இவற்றின் வழி எளிதில் மனனம் செய்வதற்கும் சொல்லநினைக்கும் கருத்தினைத் தெளிவாக எடுத்துரைப்பதற்கும் பாரதியார் எதுகை மற்றும் மோனைகளைப் பயன்படுத்தி இருக்கக்கூடும்

முடிவுரை:

பாரதியார் பாடல்களில் புலப்பாட்டுநெறியை ஆராய்வதன் மூலம் அவரது கவிதைகளின் ஆழத்தையும் அவர் வெளிப்படுத்திய கருத்துக்களின் முக்கியத்துவத்துவம் போன்றவற்றை மற்றவர்கள் புரிந்துகொள்ள ஏதுவாகிறது.

துணைநூற் பட்டியல்:

நா.உமாதேவி உ.வே .சாமிநாதையர் உரைநடைநூல்கள் உணர்த்தும் புலப்பாட்டுநெறிப. 14
திருவாய்மொழி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
பாரதியார் கவிதைகள், திருமகள் நிலையம், விசா பப்ளிகேஷன்ஸ்.

37. கட்டுரைகளில் மூடப்பழக்கங்கள் மற்றும் சமூகசிந்தனைகள்

இளம்முனைவர் வ.கமலா

ஆற்காடு

முன்னுரை

மகத்தான எழுத்தாளரும் மகாகவியுமான பாரதியாருக்கு ஈடு இணையே கிடையாது எனலாம். காதல், கலாச்சாரம், தேசம், தேசியபக்தி, இந்து தர்மம், ஆன்மிகம், வரலாறு, குழந்தைப் பாடல்கள், பெண் விடுதலை என அனைத்தை பற்றியும் கவிதைகளும் உரைநடைகளும் எழுதியிருக்கிறார். பாரதியார் சமூகச் சீர்திருத்தத்துக்குப் பாடுபட்டவர் என்று நாம் எல்லோரும் ஏற்றுக் கொள்வோம். ஏனெனில் அவரது கவிதைகளிலும், கட்டுரைகளிலும் அதனைத் தொடாத பகுதிகளே இல்லை எனலாம். மேலும் ஜாதி சமத்துவம், பாலின சமத்துவம் பற்றியெல்லாம் பற்றி நிறையப் பாடல்கள் பாடியது மட்டுமல்லாமல் அவர் தம் வாழ்க்கையிலும் கடைபிடித்துக் காட்டியுள்ளார்.

தெய்வபக்தி

தெய்வங்கள், தேவியர் பற்றி மரபாகப் பாடப்பட்ட பக்திப் பாடல்களைப் பாரத மாதாவைப் புகழ்வதற்காகப் பாடிய முதல் கவிஞர் பாரதியார். “முப்பது கோடி வாய் நின்னிசை முழங்கவும்” என்று தமது பாடலில் பாரத மாதாவை ஒரே அன்னையாக விஸ்வரூபமெடுத்து வியக்கச் செய்தவர் பாரதிதாசன். பராசக்தியின் மீது அளவற்ற நம்பிக்கைக் கொண்டவர். அடுத்த வேளை உணவுக்கு என்ன செய்வது என்று செல்லம்மாள் கவலைப்பட்டுக் கொண்டிருந்த போது பாரதியார் பராசக்தியிடம் தம் கோரிக்கையைப் பட்டியலிட்டுக் கொண்டிருந்தார். “காணி நிலம் வேண்டும் - பராசக்தி” என்னும் பாடல் வரிகளில் பராசக்தியை காவலுக்கு அழைப்பதாக அமைந்திருக்கும். இக்கருத்தை ஏன் இங்கு முன்வைக்கிறோம் என்றால், அவர் நாத்திகர் அல்ல. ஆனால் மூடப்பழக்கங்களுக்கு எதிரானவர். மேலும் சாதி மதங்களைக் கடந்து தம் கருத்தினை நிலைநாட்டுபவராக இருந்தார் எனலாம்.

தியானம் பற்றிப் பாரதியார்

மனத்தை ஒருநிலைப்படுத்துவதே தியானம் ஆகும். தியானத்தின் சக்தியை எளிதாக நினைக்க வேண்டாம் என்கிறார் பாரதியார். இதற்காக அவர் கூறும் கருத்து, “நமது உள்ளத்தில் தீரத்தன்மை, அமைதி, பலம், தேஜஸ், சக்தி, அருள், பக்தி, சிரத்தை இந்த எண்ணங்களையே நிரப்ப வேண்டும்” என்கிறார். தனது உள்ளத்தில் இன்ன இன்ன எண்ணங்களைத் தான் வளரவிட வேண்டும். இன்ன இன்ன எண்ணங்களை வளரவிடக் கூடாது. அதற்கான அதிகாரம் திறமை ஒவ்வொருவருக்கும் இயற்கையிலேயே உள்ளது. பரிபூரண விருப்பத்துடன் தியானம் செய், சோர்வும் அதைரியமும் விளைவிக்கக் கூடிய எண்ணங்களுக்கு இடங்கொடாதே. ஊற்றிலிருந்து நீர் பெருகுவது போல் உனக்குள்ளிருந்து தெளிந்த அறிவும், தீரத்தன்மையும் சக்தியும் மேன்மேலும் பொங்கி வரும்.

சடங்குகள் பற்றிப் பாரதியின் பார்வை

நம்முடைய மக்களிடையே இந்த நிமிடம் வரை நடைபெறும் மூடப்பழக்கங்களுக்குக் கணக்கு வழக்கே கிடையாது என்கின்றார். எல்லா வி'யங்களுக்கும் நாள் நட்சத்திரம் பார்க்கின்றார்கள் என்பதைத் தம்முடைய கட்டுரையில் கூறுகின்றார். திருமணங்கள் மற்றும் விவசாயம் செய்வதற்கும் நல்ல நேரம் பார்ப்பதை கடுமையாகச் சாடுகின்றார். இவையெல்லாம் நேரத்தை வீணாக்குவதற்கான செயல்கள் என்கின்றார். சகுணம் பார்க்கும் விசயத்தைப் பற்றியும், இதில் நேரும் அழிவுகளையும். பொருள்

விரையத்தையும் நம் மக்கள் கவனத்தில் கொள்வதில்லை என்கின்றார். இதற்கு 'காலம் பணவிலை உடையது' என்கின்ற ஆங்கிலப் பழமொழியைக் கூறி இதைப்பற்றி நம்மவர்க்குத் தெரியாது என்கின்றார். இத்தகைய மூடநம்பிக்கைகளுக்குக் காரணம் படிப்பறிவின்மை தான். எனவே ஆங்கிலக் கல்வி கற்பிக்கின்றவரிடம் சென்றால் இவர்களுக்குத் தெளிவு பிறக்குமா என்று நினைத்து வருத்தமடைகிறார்.

மனித உரிமைகள்

மனிதருக்கும் நூல்களுக்கும் திசைகளுக்கும் எல்லைகளுக்கும் கற்பனைத் தடைகளுக்கும் தலை குனிந்து பழக்கப்பட்டமையால் எந்தத் துறையிலும் "நம்மால் ஒன்று செய்ய முடியும் என்கின்ற உண்மை தெரிந்தும், கண்ணுக்குத் தெரியாமல் போகிறது என்கின்றார். மேலும் தனக்குத்தானே நாயகனாயிருக்கும் உரிமை எல்லா மனித உரிமைகளிலும் பெரியது. இவையெல்லாம் பழமொழிகளாலும், இவருடைய சடங்குகளாலும் மறுக்கப்பட்டிருக்கிறது என்கின்றார். தெய்வத்தின் பெயர் சொல்லி மனிதனை மனிதன் கீழ்ப்படுத்தி அவமதிக்கும்படி செய்துவிட்டார்கள். அப்படிப்பட்ட தேசம் அடிமைகளை உருவாக்கும் தொழிற்சாலையாயிற்று என்று குறிப்பிடுகின்றார்.

சமயம் வேறு குருக்கள் கட்டுப்பாடு வேறு

"மதத்தை மீறி கட்டுப்பாடு சொல்லும் போது நதியை மணல் மூடுவது போல் ஆகிறது. அங்கு நீர்கெட்டுப் பாலைவனம் போல் தோன்றும். இந்த நிலையைக் கண்டு மகிழ்ச்சி அடைவோர் மிகக் கேடு கெட்டவர்கள் என்பது வெளிப்படை" என்று தமது கட்டுரையில் தெளிவுபடுத்துகின்றார். கட்டுப்பாடு என்பது நமக்கு நாமே அமைத்துக் கொள்ளும் நெருப்பு வளையம் போன்றதாகும். மதத்தின் பெயரால் மக்களை அடிமைகளாக்குவது என்பது வருந்தத்தக்கதாகும். கட்டுப்பாடுகள் தேவையா இல்லையா என்பதை மனிதன் உணர வேண்டும். **"சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்"** சில கட்டுப்பாடுகள் ஒருவரின் மனநிலையைப் பாதிப்பதாகவும் பின்பற்ற முடியாததாகவும் இக்காலத்திற்கு ஏற்றதாகவும் இருப்பதில்லை. மேலும் அதைச் சொல்லுபவரே அதனைப் பின்பற்ற முடியாமல் போகலாம். ஆனால் பாரதியார் சொல்லுவதைச் செய்து காண்பித்தார். தம் வாழ்க்கையிலும் நடைமுறைப்படுத்தினார் என்பது தான் உண்மை. "பச்சாதாபத்தாலும் ஒருவன் பாபத்தைக் கழுவலாம் என்று சமயம் சொல்லுகிறது. கிரகணத்தன்று ஒருவன் இன்ன நீரில் மூழ்கினால் தான் பாவம் தீர்வதுடன் பதினான்கு தலைமுறை பிதிர்கள் செய்த பாவமும் தீரும்" என்று கட்டுப்பாடு சொல்லுகிறது. இவ்வாறு பல எடுத்துக்காட்டுகளால், சமயம் விடுதலை போதிக்கிறது. குருக்கள் கட்டுப்பாடு அடிமை நிலையைப் புகழ்ந்து கீர்த்தனம் பாடுகிறது என்ற கருத்தினைத் தெளிவாகப் பதித்துள்ளார்.

அனைவரும் இந்துக்கள்

மனிதர்கள் அனைவரும் சமம் என்று மட்டும் சொல்லவில்லை. அனைத்து உயிர்களும் சமம் என்று சொன்னார். "வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடிய வள்ளல் ராமலிங்க அடிகள், தாயுமானவர் ஆகியொர் சொன்னது போல், பாரதியும் உயிர்கள் அனைத்தையும் சமமாகப் பார்த்தார். இந்தியாவில் ஒரே சாதிதான் உண்டு. அதுவும் இந்து சாதி மட்டுமே என்றும், இந்திய மக்கள் அனைவரும் இந்துக்கள் என்றும் பாரதி அழுத்தம் திருத்தமாக எடுத்துரைக்கின்றார். இதனை "இந்தியாவில் பிறந்த எல்லோருமே இந்துக்கள்.

பெண்ணியச் சிந்தனைகள்

தேச விடுதலையைப் பற்றி விரும்பிய பாரதி, பெண் விடுதலை அடைந்தால் மட்டுமே கிடைக்கும் என்பதை வலியுறுத்தியுள்ளார். பெண் விடுதலை வேண்டுமாயின் அவர்களுக்குக் கல்வி வேண்டும் என்பதை, **"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்"** என்று கும்மிப் பாடல் கவிதையில் குறிப்பிட்டுள்ளார். பெண் இயல்பிலேயே கொடூரமானவள், சுதந்திரத்திற்கு லாயக்கற்றவள் என்று '**மயித்ராளி** சம்ஹிதை' கூறுகிறது. பெண் ஆணுக்கு அடிமை என்று **மனுதர்ம** சாஸ்திரம் கூறுகிறது. தமிழ்நாட்டில்

தொல்காப்பியம் தொடங்கிப் **பாரதி** காலம் வரை பெண்களுக்கு இத்தகைய மதிப்பே நிலவி வந்ததாகக் கூறப்படுகிறது. **"அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த "** (தொல். 1045) என்று பெண்ணின் இயல்புகளாகத் தொல்காப்பியர் வரையறை செய்துள்ளார். மார்க்ஸிம் கார்க்கி 'தாய்' நாவலில் நாட்டில் உள்ள பெண்களிடம் விழிப்புணர்வு ஏற்பட்டால் தான் புரட்சியை நிகழ்த்த முடியும் என்ற கருத்தை மையப்படுத்தியிருந்தார். பெண்களுக்கு விடுதலை இல்லையென்றால், நாடே விடுதலை அடைய முடியாது என்று கூக்குரலிடுகின்றார் பாரதி. தமிழ்க் கல்விக்கும், தமிழ்க் கலைகளுக்கும் தொழிலுக்கும் தமிழ்ப் பெண்களே விளக்குகளாவர் என்பதில் நம்பிக்கை கொண்டவர் பாரதி.

முடிவுரை

எல்லாரும் இந்நாட்டு மன்னர்கள் என்று மாபெரும் ஜனநாயகக் கருத்தை முதலில் முன் வைத்த இந்தியக் கவிஞர் பாரதியே. அவருடைய கட்டுரைகள் மனிதர்களிடம் அக்காலத்தில் இருந்த மூட நம்பிக்கைகளை ஒழிப்பதாக அமைந்தது எனலாம். மேலும் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட ஆற்றல் உள்ளது. அதனை உணராமலே செயல்படுகின்றார்கள். தமக்கு ஒன்றும் தெரியாது என்று நினைக்கும் எண்ணமுடையோர் கூட்டை விட்டு வெளியே வந்து சிந்திக்க வேண்டும் என்கிறார். பெண்கல்வி, பெண்ணியம் பற்றி அவரைத் தவிர வேறு யாராலும் இவ்வளவிற்குச் சொல்லி இருக்க முடியுமா என்பது சந்தேகமே.

துணை நூற்பட்டியல்

1. **மகாகவி சுப்ரமணிய** பாரதியார் முதற் பதிப்பு
2. கட்டுரைகள் - **சுப்பிரமணிய** பாரதியார், முதற் பதிப்பு
3. **மகாகவி** பாரதியார் கட்டுரைகள் - 2010 பாரி நிலையம்.

38. பாரதி கண்ட பெண்மை



தமிழ்ச்செம்மல், புலவர் மாமணி

ஆறு.மெ. மெய்யாண்டவன்

உலகத் திருக்குறள் கூட்டமைப்பு, மாநிலத் துணைத் தலைவர்

பாரதி தமிழ்க்கழகத் தலைவர், காரைக்குடி

'பாரதி' ஒரு மந்திரச் சொல். 'சுப்பையா' என்று அழைக்கப்பட்ட மகாகவி பாரதி ஆவார். அடிமைப்பட்ட பாரதத்தில் பிறந்ததால் தான் இவர் 'விடுதலை, விடுதலை' என இந்திய விடுதலைக்கு வித்திட்டார். நாட்டு விடுதலை, பெண் விடுதலை இரண்டையும் மையமாகக் கொண்டு இவர் கனல் கக்கும் கவிதைகளைப் படைத்தார். அதனால் தான் பாரதியின் அன்புச் சீடர், கவிஞர் கனகசுப்புரத்தினம் 'பாரதி' பால் கொண்ட பற்றால் தம்பெயரைப் 'பாரதிதாசன்' என மாற்றிக்கொண்டார். பாரதியைப் பாராட்டும் கவிதை அடிகள், நெஞ்சை அள்ளுபவை, கவிழ்க்கும் பகையைக் கவிழ்க்கும் கவிமுரசு, அறம் பாட வந்த அறிஞன் புதிய திறம்பாட வந்த மறவன். 'காடு கமழும் கற்பூரச் சொற்கோ, செந்தமிழ்த்தேனீ, சிந்துக்குத் தந்தை' என்றெல்லாம் பாவேந்தர், 'மகாகவி' 'தேசியக்கவி' 'புரட்சிக்கவி' பாரதியைப் பலபடப் பாராட்டிப் பாடியமை எண்ணி இன்புறத்தக்கது.

இந்திய விடுதலைக்கு மட்டுமின்றிப் பெண் விடுதலைக்குக் குரல் கொடுத்தவன் பாரதி. அதனால் தான் 'பெண்கள் வாழ்கவென்று கூத்திடுவோமடா' 'பெண்மை வெல்கவென்று கூத்திடுவோமடா' எனப் பெண்மையை நெஞ்சாரப் போற்றினார். 'சக்தி தனக்கே கருவியாக்கு, சொல்லடி சிவசக்தி' எனப் பெண்மையைச் சக்தியின் வடிவமாய்க் கண்டான் பாரதி. அதனாலேயே தன்னைச் 'சக்திதாசன்' என அழைத்துக் கொண்டார். பெண்ணை மலைமகளாய், அலைமகளாய், கலைமகளாய் மொத்தத்தில் பெண்மையைத் தெய்வமாகத் தாயாகக், காதலியாக, குழந்தையாகக் கண்டு மகிழ்ந்தவர் பாரதி. 'பாரதி கண்ட பெண்மை'யை இக்கட்டுரையில் காண்போம். 'பெண்மை' என்றால் 'கட்புலனாயதோர் அமைதித்தன்மை' என்பார் பண்டைய உரையாசிரியர். 'அச்சமும் மடமும் நாணும் நிச்சமும் பெண்பாற்குரிய' என்பார் தொல்காப்பியர். 'பெண்ணாகி வந்ததொரு மாயப்பிசாசு என்பார் பட்டினத்தார். அதே பட்டினத்தார் பெண்ணைத்தாய் வடிவில் பார்க்கும் போது பாராட்டுவது ஒரு முரண். 'ஐயிரண்டு திங்களா அங்கமெல்லாம் நொந்து பெற்று, பையலென்ற போதே பரிந்தெடுத்துச் செய்ய இரு கைப்புறத்தில் ஏந்தி கனகமுலை தந்தாளை எப்பிறப்பில் காண்பேன்?' இனி இதுவும் பெண்ணை அன்னை வடிவில் கண்ட போது பாடியது. பெண்பாற் புலவர் அவ்வையாரே தையல்சொற்களேல் என்று பெண்மையைத் தாழ்த்திப் பேசுவார, 'பெண்புத்திப் பின்புத்தி, பெண்ணறிவென்பது பெரும்பேதமைத்தே' எனும் பழமொழிகளும் உண்டு.

திருமணத்திற்கு முன் தந்தையையும், திருமணத்துக்குப் பின் கணவனையும் முதுமையில் பிள்ளையையும் சார்ந்திருக்கவேண்டும் என்பது மனுநீதி. இந்நிலை மாறவேண்டும். மாற்றப்பட வேண்டும் என்று விரும்பியவர் மகாகவி பாரதி. பெண்களுக்கு ஜீவனுண்டு, மனம் உண்டு, புத்தியுண்டு, ஐந்து புலன்கள் உண்டு. அவர்கள் செத்த எந்திரங்கள் அல்லர். உயிருள்ள செடி கொடிகளைப் போலவுமல்லர் சாதாரணமாகவே ஆண் மாதிரியாகவேதான் பெண்களும், பிறவுறுப்புகளில் மாறுதல் உண்டு. ஆத்மா ஒரேமாதிரிதான் இதனை மறந்து, அவர்களைச் செக்கு மாடுகளாகப் பாவிப்போர் ஒரு திறத்தார் பஞ்சுத்தலையணைகளாகக் கருதுவோர் மற்றொரு திறத்தார். இரண்டும் பிழை- (பாரதியார் கட்டுரைகள் மாதர்) என அவர்தம் கட்டுரை ஒன்றில் குறிப்பிடுவார். மேலும் பெண்கள் தமக்கு விருப்பமானவரை விவாகம் செய்து கொள்ளலாம்.

விவாகம் செய்துகொண்ட புருஷனுக்கு ஸ்தீரி அடிமை இல்லை. 'உயிர்த்துணை, வாழ்க்கைக்கு ஊன்றுகோல்' ஜீவனிலே ஒருபகுதி என்பது பாரதி கருத்து. இச்சிந்தனை,

கொல்கத்தாவில் விவேகானந்தரின் சீடப்பெண்மணி சகோதரி நிவேதிதையைச் சந்தித்த பின் அவருக்கு ஏற்பட்டதாகும். சகோதரி நிவேதிதை உன் மனைவியை அழைத்துவரவில்லையா? எனக்கேட்டதால் ஏற்பட்ட மாற்றம் அதனால் தான் தம் கவிதைகளை நூலாக வெளியிட்டபோது சகோதரி நிவேதிதாவுக்குச் சமர்ப்பணம் என அச்சிட்டு வெளியிட்டார். ஆணையும் பெண்ணையும் சமமாகக் கருதினால், இவ்வுலகம் அறிவில் ஓங்கித்தழைக்கும் என்ற கருத்துப்பட ஆணும் பெண்ணும் நிகரெனக்கொள்வதால், அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம். பூணும் நல்லறத் தோடிங்குப் பெண்ணுருப் போந்து நிற்பது தாய் சிவசக்தியாம். நாணும், அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம் ஞான நல்லறம் வீர சுதந்திரம் பேணும் நற்குடிப் பெண்ணின் குணங்களாம் எனத் தம் பல்வகைப் பாடல்கள் பகுதியில் பாரதி முழக்கமிடுகிறார். பாரதியின் புதுமைப்பெண் மிக வேறுபட்ட புரட்சிப்பெண் ஆவாள்.

பெண்ணை வீரப் பெண்ணாக, உதய கன்னியாக, இளைய நங்கையாக, செம்மை மாதராகப் பார்க்கிறார் பாரதி. நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை, நிலத்தில் யாருக்கும் அஞ்சாதநெறிகளும், திமிர்ந்த ஞானசெருக்கும், உல்க வாழ்க்கை நுட்பங்களில் தேர்ச்சி ஓது பற்பல நூல் வகைகள் சாத்திரங்கள் கற்ற தேர்ச்சி இத்துணையும் செறிவாய்க் கொண்டவள், பாரதிகண்ட புதுமைப்பெண். பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்தவந்தோம். எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று கும்மியடி என்று முழங்கும் வீரப்பெண் அவள். காதல் ஒருவனைக் கைப்பிடித்து, அவன் காரியம் யாவினும் கைகொடுத்து மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும் மாட்சி பெறச்செய்து வாழ நினைப்பவள் பாரதி கண்ட புதுமைப்பெண். பெண்கள் விடுதலைக் கும்மிப்பாட்டில் இப்புதுமையைச் செய்கிறான் பாரதி. பாரதி படைக்கும் பாஞ்சாலி அவன் கனவுகண்ட புதுமைப்பெண் வடிவம். எனவேதான் தன்னைத் தன் கணவன் தருமன் சூதாட்டத்தில் பணயப் பொருளாக வைத்துத் தன்னைத் தோற்று அடிமையாக்கினான் எனக் கேள்விப்பட்டதும், வாளாவிராமல், அடங்கிப் போகாமல் பொங்கியெழுகிறாள். அவளை அழைத்து வரச் சொன்ன பணியாளரிடம்.

வல்ல சகுனிக்கு மாண்பிழந்த நாயகர்தாம் என்னை முன்னே கூறி இழந்தாரா? தம்மையே முன்னம் இழந்து முடித்தென்னைத் தோற்றாரா? சென்று சபையில் இச்செய்தி தெரிந்து வா! எனச் சீற்றமிகு வினாக்களைத் தொடுத்தாள், விடையிறுக்க இயலாமல் தடுமாறும் பணியாளிடம். நாயகர் தாம் தன்னைத் தோற்ற பின் என்னை நல்கும் உரிமை அவர்க்கில்லை. புலைத் தாயத்திலே விலைப்பட்டபின் என்ன சாத்திரத்தால் என்னைத் தோற்றிட்டார் ஆவர். தாயத்திலே விலைப்பட்டவர் புவி தாங்கும் துருபதன் கன்னி நான் சாயப்புலைத் தொண்டு சார்ந்திட்டால் தாரமுடைமை அவர்க்குண்டோ? (பாஞ்சாலிசபதம்) என்று தனக்கிழைக்கப்பட்ட கொடுமையை எதிர்த்துக் குரல்கொடுக்கிறாள் பாஞ்சாலி. ஒருவன் தன் தாரத்தை விற்றிடலாம் தானமென வேற்றவருக்குத் தந்திடலாம் என்ற இது முற்றும் விலங்குமுறையன்றி வேறில்லை.

செய்கை அநீதியென்று தேர்ந்து தெரிந்தாலும் சாத்திரத்தான் வைகும் நெறியும் வழக்கமும் நீ கேட்பதனால் ஆங்கவையும் நின் சார்பில் ஆகா வகையுரைத் தேன் என வீடுமன் (பீஷ்மச்சாரியார்) நெறிதவறி விடையளித்தான். உடனே பாஞ்சாலி அஞ்சாமை கொண்டவளாய், 'பேயரசு செய்தால் பிணம் தின்னும் சாத்திரங்கள், மாயம் உணராத மன்னவனைச் சூதாட வற்புறுத்திக் கேட்டதுதான் வஞ்சனையோ? நேர்மையோ? என எதிர்க்குரல் எழுப்புகிறாள். இந்நிகழ்வு கௌரவர் அவையில் துரியோதனன் முன் நிகழ்ந்தது. இவ்வாறு அநீதியை எதிர்த்துப் போராடும் வீரப்பெண்ணாகப் பாஞ்சாலியைப் படைத்துக்காட்டுகிறான் பாரதி. சூதுப் போர்ச் சருக்கத்தையும் பாஞ்சாலி சபதம் எனப் பெயரிட்டுப் பெண்கள் எழுச்சிபெறும் தூண்டுகோல் பாத்திரமாகப் பாஞ்சாலியைப் படைத்தார் பாரதி. அமெரிக்கா, ரஷ்யா, சீனா முதலான பலநாட்டில் வாழும் பெண்களுக்காகவும் குரல் கொடுக்கிறான் பாரதி.

பிஜித் தீவில் கரும்புத்தோட்டத்தில் கூலிக்குப் பணிபுரியும் உழைக்கும் பெண்களின் அவலநிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறான் பாரதி. பெண் தன் விருப்பப்படி தமிழ்நாட்டில்

இயங்கமுடியா நிலைக்கு வருந்திபின் அவர்களுக்காகக் குரல் கொடுக்கிறான். ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார். வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போ மென்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார் மாட்டையடித்து வசக்கித் தொழுவினில் மாட்டும் வழக்கத்தைக் கொண்டுவந்தே வீட்டினில் எம்மிடம் காட்ட வந்தார் அதை வெட்டிவிட்டோமென்று கும்மியடி எனப் பெண்கள் விடுதலைக் கும்மிப்பாட்டில் பெண்களின் விடுதலைக்காகப் பெண்களைக் கும்மிப்பாட்டின் வாயிலாகப் பெண்கள் விடுதலைக்குக் குரல் கொடுக்கத் தூண்டுகிறார் கவிதைகள் மூலம் பெண் விடுதலைக்கு முழங்கிய பாரதி கட்டுரை மூலம் பெண்களின் விடுதலைக்கு வாழ்வியல் உரிமைகளுக்கும் ஆற்றவேண்டிய பணிகளை எட்டுக் கட்டளைகளாகப் பட்டியலிடுகிறார்.

- பெண்கள் ருதுவாகு முன்பு திருமணம் செய்துகொடுக்கக் கூடாது.
- அவர்களுக்கு விருப்பமில்லாத ஆடவரைத் திருமணம் செய்து கொள்ளுமாறு வற்புறுத்தக் கூடாது.
- திருமணம் செய்து கொண்ட பிறகு அவள் கணவனை விட்டு நீங்க இடம் கொடுக்க வேண்டும். அதன் பொருட்டு அவளை அவமானப்படுத்தக் கூடாது.
- பிறந்த வீட்டில் முன்னோர் சொத்தில் (பிதுரார்ஜிதத்தில்) பெண் குழந்தைகளுக்குப் பங்கு உண்டு.
- திருமணம் ஆகாமல் வாழும் பெண்கள் தனியாக வணிகம் கைத்தொழில் முதலிய தொழில்கள் செய்து கௌரவமாக வாழ இடம் கொடுக்க வேண்டும்.
- பெண்களுக்கும் ஆண்களைப் போல உயர்தரக் கல்வி பெற எல்லாக் கிளைகளிலும் (துறைகளிலும்) பழக்கம் ஏற்படுத்த வேண்டும்.
- கல்வித் தகுதியுடன் அவர்கள் இருந்தால், அரசாட்சியில் எவ்வித அரசுத் தொழில் (உத்தியோகம்) பெற விரும்பினாலும் அதைச் சட்டம் தடுக்கக்கூடாது.
- தமிழ்நாட்டில் ஆண்மக்களுக்கே (ராஜ சுதந்திரம்) அரசாங்கத்து அனைத்துத் துறைகளிலும் தற்போது இல்லாமலிருக்கையில் அது பெண்களுக்கு வேண்டும் எனக் கூறுவதில் பயனில்லை, எனினும் விரைவில் தமிழருக்கு விடுதலை கிடைக்கும் போது பெண்களுக்கும் எல்லாத் துறைகளிலும் பங்கேற்கும் உரிமை வேண்டும். அன்னி பெசன்ட் அம்மையார் காங்கிரஸ் மகாசபை உறுப்பினர் அவர் பெண்மணி என்பதை மறக்கக்கூடாது. இப்படி பாரதி, பெண்களின் வாழ்வுரிமைக்கும் விடுதலைக்கும் (பாரதியார் கட்டுரைகள் மாதர்) பகுதியில் இன்னும் விரிவாகக் கூறிக்கொண்டே போகிறார். மேற்கூறிய அனைத்து உரிமைகளையும் பெறப் பெண்கள் கல்வி கற்றாக வேண்டும் என விரும்பினான் பாரதி. அதனால்தான் "பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான். புவி பேணி வளர்த்திடும் ஈசன்" என்று, பல்வகைப் பாடல்கள் பகுதியில் இக்கவிதையைப் படைத்துக் காட்டுகின்றார் பாரதி. பாரதி கண்ட பெண்ணுக்குச் சமத்துவமும் விடுதலையும் முழுமையாக வரவேண்டும் எனில் பெண், கல்வி கற்று, விழிப்புற்று, பொய்மை இகழ்ந்து, போர்த்தொழில் பழகி, வையத்தலைமை ஏற்கவேண்டும் எனப் பாரதி கனவுகண்டான். அக்கனவு ஓரளவு நனவாகியுள்ளது. இதுவே பாரதி கண்ட பெண்மை.

39. பாரதியார் படைப்புகளில் மொழிநடை

முனைவர் க.கீதா

தமிழ்த்துறை உதவிப் பேராசிரியர்
டாக்டர் உமையாள் இராமநாதன் மகளிர் கல்லூரி
காரைக்குடி

ஆய்வுச்சுருக்கம்

படைப்பாளனை எளிதில் அடையாளப்படுத்த மொழிநடையே முன்னிலை வகிக்கிறது. மொழிநடை மூலம் படைப்பாளன் சமூக விமர்சனத்தை வெளிப்படுத்த முடியும். தனித்துவமான தேர்ந்த சொற்கள் சமூகக் குறைகளை உணர்த்தும். நவீன மற்றும் பாரம்பரிய எழுத்து பாணிகளைக்காலத்திற்கு ஏற்பமொழிநடை மாற்றத்துடன் புதிய பாணிகளில் தோன்றக்கூடியதே. அவ்வகையில் பாரதியின் படைப்புகளில் உள்ள மொழிநடைக் கூறுகளை இவ்வாய்வு விளக்க க்க முயலகிறது. விளக்கமுறையாய்வு, தொகுப்புமுறை ஆய்வு, பகுப்பாய்வு ஆகிய ஆய்வு முறைகள் இக்கட்டுரையில் அணுகுமுறையாக மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முன்னுரை

சுப்பிரமணியபாரதி இதழாசிரியர், விடுதலைப் போராட்ட வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். கவிதையில் சிறந்து விளங்கியதற்காக இவருக்கு "பாரதி" என்ற பட்டம் வழங்கப்பட்டது. **நவீனத் தமிழ்**க்கவிஞர்களின் முன்னோடியாகத் திகழ்ந்த இவர், தமிழ் மொழியில் சிறந்த இலக்கியவாதிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார். இவர் "மகாகவி" (மகத்தானகவிஞர்) என்ற புனைப் பெயரைக் கொண்டு அறியப்படுகிறார். இந்திய சுதந்திரப் போராட்டத்தின்போது தேசபக்தியைத் தூண்டும் பாடல்கள் இவரது படைப்புகளில் அடங்கும். பெண் விடுதலைக்காகவும்,சாதிமறுப்பு மற்றும் குழந்தைத் திருமணத்திற்கு எதிராகவும் போராடியவர். பண்டைய பழைய நாகரிகமும் மேனாட்டு புதிய நாகரிகமும் இந்தியாவில் சங்கமித்துக் கொண்டிருந்தகாலத்தில் பிறந்தவர்தான் பாரதியார். இதனால் மேல்நாட்டு நாகரிகத்தில் காணப்பட்ட நல்ல அம்சங்களைத் தமிழ் மக்களும் ஏற்பது நல்லது என்னும் **கருத்தாடல்** பாராதியார் உள்ளத்தில் ஏற்படலாயிற்று. அதேவேளை மொழி, தமிழ் இனம், பாரதநாடு, பெண்ணுரிமை, சாதி பற்றிய ஏற்றத்தாழ்வு, முரண்பாடுகள், வறுமையின் நிலை, இவை பற்றிய கருத்துக்கள் அவரின் உள்ளத்தில் உரம் பெற்றும் இருந்தன எனலாம். இந்த நிலையில் பாரதியாரிடம் இருந்து வெளிவந்த படைப்புகளும் பன்முக நோக்குடையனவாகவே அமைந்திருந்தன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

பாரதியின் படைப்புகள்

இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமை ஆக்கப்பட்ட இலக்கியம் பாரதியாருடையதாகும். பாமரரும் கேட்டுணரும் வசனக் கவிதையைத் தமிழுக்குத் தந்தவர். இவர் கவிதைகளில் புதுமையான யோசனைகளையும் நுட்பங்களையும் வெளிப்படுத்தியள்ளார். கவிதை எழுதுபவன் கவிஞனன்று. தேசியகீதங்கள், பக்திப் பாடல்கள், ஞானப்பாடல்கள், பல்வகைப் பாடல்கள், தனிப் பாடல்கள், சுயசரிதை, கண்ணன் பாட்டு, பாஞ்சாலிசபதம், குயில்பாட்டு, வசனக் கவிதை, புதிய பாடல்கள், யாவும் பாரதியார் நமக்களித்த சொத்துக்கள் எனலாம். இவைகள் ஒவ்வொன்றுமே பாரதியாரையாரென்று அடையாளப்படுத்திநிற்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. பாரதியார் பழமையைப் போற்றினார். முன்னோர்களை மதித்தார். கம்பனை,வள்ளுவனை, இளங்கோவை, உயரிடத்தில் வைத்துப் பாடினான்; வள்ளுவன் தன்னை உலகினிக்கே தந்துவான் புகழ் கொண்ட தமிழ்நாடு என்றும் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் தந்த

இளங்கோவை போற்றுகிறார். கம்பனைப் போற்றுகிறார். ஆனால் அவர்கள் போல் பாடாமல் அவர்கள் போல் நில்லாமல் அதேவேளை அவர்களை வழிகாட்டி என எண்ணி தன்னிலையை வகுத்துக் கொண்டு காலத்துக்கு ஏற்றவாறு படைப்புக்களை அளித்திருப்பதால் பாரதியார் பெரும்புலவராய் மதிக்கப் படுகிறார்.

பாடலின் உள்ளடக்கம்

கவிதை முற்போக்கான, சீர்திருத்தவாத இலட்சியத்தை வெளிப்படுத்தியதோடு இந்திய தேசியம், காதல், குழந்தைப் பருவம், இயற்கை, தமிழ் மொழியின் மகிமை போன்ற பல்வேறு அமைப்புகளில் காண முடிகிறது. **தாய்மொழி** தமிழின் மீது அளவுகடந்த அன்புகொண்ட இவர் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்" எனத் தமிழை வியக்கிறார். விடுதலைப் **போராட்ட** காலத்தில் தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்தால் பாரதி "தேசிய கவி" எனப் போற்றப்படுகிறார்.பெண் விடுதலைக்காகவும், சாதி மறுப்பு மற்றும் குழந்தைத் திருமணத்திற்கு எதிராகவும் போராடியுள்ளார். இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமை ஆக்கப்பட்ட இலக்கியம் எனில் அது பாரதியாரின் படைப்புக்களேயாகும். படைப்புக்களில்

மொழிநடை

மொழிநடை என்பது மொழியின் அழகிய வெளிப்பாடு ஆகும். படைப்பாளன் தனது உணர்வுகளையும் கருத்துகளையும் சிறந்த முறையில் வெளிப்படுத்த மொழிநடையைப் படைப்பாளன் ஒருஉத்தியாகப் பயன்படுத்தியுள்ளான். பாடலின் மொழிநடை இசைக்கும் உணர்வுக்கும்; உயிரூட்டும் கதைகளில் மொழிநடை கதைக் கருவினையும் கதாபாத்திரங்களின் தனித்துவத்தையும் கதாநாயகர்கள் பேசும் சொற்கள் அவர்களின் குணம் மற்றும் சூழலையும் பிரதிபலிக்கும்.மொழிநடை படைப்பின் நேர்த்தி மற்றும் அழகியல் அமைப்பைக் கையாளும் கலையெனலாம். சிறந்த படைப்பு மொழிநடையால் அழகும் ஆழமும் பெறும். படைப்பின் வாசிப்புப் பரிமாணத்தை விரிவுபடுத்தவும் வாசகர்கள் படைப்பை உணர்ச்சியோடு அனுபவிக்க வழிவகுப்பதும் விரிவான சொல்லாடல்கள் மற்றும் உருவகங்கள் ஆகியவை மொழிநடையின் அடையாளமாகும். பண்பாட்டினை வெளிப்படுத்த மொழிநடை முக்கியமான கருவி எனலாம்.

கண்ணன் பாட்டில் மொழிநடை

பாரதியாரின் கண்ணன் பாட்டு, பக்திப் பாடல்களின் தொகுப்பாக மட்டும் இல்லாமல், ஒரு தத்துவார்த்தமான தேடலாகவும் உள்ளது. பாரதியார் கண்ணனை கடவுளாக மட்டும் பார்க்காமல், நண்பனாகவும், வழிகாட்டியாகவும், தன்னை வழிநடத்தும் சக்தியாகவும் காண்கிறார். இந்தப் பாடல்களில், அன்பின் பல்வேறு பரிமாணங்களையும், ஆன்மிகத்தின் ஆழமான அர்த்தங்களையும் பாரதியார் தேடுகிறார். பாரதிநடையில் கூறினால், கண்ணனைத் தோழனாக, தாயாக, தந்தையாக, காதலனாக, சேவகனாக எனப் பலவிதமான உறவுநிலைகளில் பாடியுள்ளமை அறியலாம். இதில், பாரதியின் சமூகசிந்தனைகளும், பெண்விடுதலைக்கான எண்ணங்களும் வெளிப்படுகின்றன. கண்ணன் பாட்டானது வாசிப்பது சிறந்த பயணம் எனில் அதுமிகையன்று.

"உண்மைதவறிநடப்பவர் தம்மை
உதைத்துநசுக்கிடுவான்| - அருள்"(கண்ணன் பாட்டு-8)

கண்ணன் தெய்வம் தான் அவனிடம் மானுடரைப் போல வண்ணமமும் உண்டு அருளாளனைப் போல் தண்மையுமுண்டு என்றும் பொய்யும் உண்டு மெய்யும் உண்டு.

பெண்மையைப்போல் மென்மையும் கேடு செய்வோரிடத்து தழலினைப்போல் வெம்மையும் உண்டென விளக்குகிறார்.வேண்டியதைக் கொடுப்பவனும் கண்ணன் நேர்வழியே நம்மைச் செலுத்துபவனும் கண்ணன் கொடுத்ததை மறைப்பதும் தேடையில் ஒழிவதும் அவனேயென எளிதில் இறைவனை உணரலாம் என்பதையும ;உரைத்துநிற்கிறார்.

பாப்பாபாட்டில் மொழிநடை

பாரதியின் "பாப்பா பாட்டு", பொதுவாக "ஓடி விளையாடு பாப்பா" என்று அறியப்படுகிறது. இது குழந்தைகளுக்கான ஒரு பிரபலமான பாடல். இந்தப் பாடலில், குழந்தைகளை உற்சாகப்படுத்துவதும், விளையாடுவதற்கும், நல்ல பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்வதற்கும் ஊக்கப்படுத்துவதுமே பாடலின் மையக்கருத்தாகும். **"ஓடிவிளையாடுபாப்பா"** குழந்தைகளை இணைந்து விளையாடவும், மற்றவர்களிடம் அன்பாக இருக்கவும் இந்தப் பாடல் வலியுறுத்துகிறது. பறவைகளைப் பார்த்து மகிழ்வதும், இயற்கையோடு ஒன்றிணைவதும் மற்றொரு முக்கிய அம்சமாகும். குழந்தைகள் கல்வியில் மட்டுமல்லாது, நல்லொழுக்கத்திலும் சிறந்துவிளங்க இந்தப் பாடல் ஒரு வழிகாட்டியாக உள்ளது. **"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத் தாழ்ச்சிஉயர்ச்சிசொல்லல் பாவம்"** உயர்வு தாழ்வு மேலோர் கீழோர் எனும் பாகுபாட்டை கல்வியறிவினால் கற்றுணர வேண்டும் என்றே குழந்தைக்கு அறிவுரையினைப் புகட்டுகிறார்.

குயில்பாட்டில் மொழிநடை

"குயில் பாட்டு" என்பது பாரதியாரின் புதுமையான பாணியில் எழுதப்பட்ட நீண்ட கவிதை. குயில் ஒன்று பாடுவதாக அமைக்கப்பட்டுள்ள இந்தகவிதையில்,குயிலின் காதலைப் பற்றியும்,குயிலுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள உறவை பற்றியும், இயற்கையின் அழகைப் பற்றியும் பாடியுள்ளார். குயில் பாட்டின் கதை விந்தையானது. புதுவை நகரின் மேற்கில் ஒரு மாஞ்சோலை. அங்கு வேடர் வாராத ஒரு நாளில் விந்தைக் குயிலொன்று பாடிய.

"காதல் காதல் காதல்
காதல் போயின் காதல் போயின்
சாதல் சாதல் சாதல் (குயில் பாட்டு - 1)

என்று துள்ளும் இன்பவெறியும் துயரும் கலந்த குரலில் குயில் பாடியதைக் கவிஞன் கேட்டான். குயிலே! உன் துயரம் யாது என்று அதனிடம் வினவினான். நான் மனிதர்களின் மொழியெல்லாம் அறியும் பேறுபெற்றேன்| பாட்டில் நெஞ்சைப் பறிகொடுத்தேன்| இப்போது காதலை வேண்டிக் கரைகின்றேன் என்றது அந்தப் பெண் குயில். கவிஞனுக்குக் குயிலின் மீது அடங்காக் காதல் பிறந்து விட்டது. அந்த நேரத்தில் மற்ற பறவைகளெல்லாம் சோலைக்கு வந்துவிட்டன. காதலுக்குரிய தனிமை போய்விட்ட சூழலில் குயில் கவிஞரை நான்காம் நாள் அவ்விடத்திற்கு மறவாமல் வந்து விடக்கூறி மறைந்து விடுகிறது. குயிலின் காதலில் குயில் ஒரு பெண்ணாகவும், அவளது காதலையும், காதலில் ஏற்படும் ஏமாற்றங்களையும் பற்றிப் பாடுகிறது. இயற்கையின் அழகில் இயற்கையின் எழில், சோலைகள், மலர்கள் போன்றவை விவரிக்கப்பட்டுள்ளன. மனிதஉறவு என்ற பகுதியில் குயிலுக்கும் மனிதனுக்கும் இடையேயான உறவு பற்றியும், மனிதர்களின் குணாதிசயங்களைப் பற்றியும் பேசும் நடை மென்மையும் நெழிவும் கொண்ட தெளிந்த நீரோடையின் போக்கினை ஒத்திருப்பதை உணரலாம். வேதாந்த நெறிப்படி இறைவனும் உயிரும் வேறு வேறு அல்ல. இரண்டையும் வேறு வேறாகக் காட்டுவது மாயையின் செயல். இந்த மாயையானது பக்தி, ஞான, கர்மயோகங்களால் விலகும். இதன்படி நோக்கின் குயில் நாதவடிவான இறைவனின் குறியீடு என்பது விளங்கும்.. மாயை மாடாகவும் குரங்காகவும் வந்து பொய்த் தோற்றங்களைப் படைக்கின்றது. அறிவு என்ற வாளின் வீச்சிலே பொய்த் தோற்றம் கலைகிறது.

பாஞ்சாலிசபதம்

பாரதியின் இக்காவியம் மகாபாரதக் கதையை அடிப்படையாகக் கொண்டது. ஆனால் மகாகவி இதைப் பெண்ணுரிமை மற்றும் இந்தியவிடுதலைப் போராட்டத்தின் குறியீடாக மாற்றியுள்ளார். பாஞ்சாலியின் சபதம், பாரதமாதாவின் சபதமாக உருவகப்படுத்தப்பட்டு, இந்திய விடுதலைக்கான போராட்டத்தின் பின்னணியாக விளங்குகிறது. **செருப்புக்கு தோல் வேண்டியே, – இங்குக் கொல்வரோ** பாஞ்சாலியின் அச்சம் கொண்ட மனதைப் புலப்படுத்தும் இப்பகுதியை மகாகவியோ சூதாட்டத்தின் கொடுமையையும், அதன் மூலம் ஏற்படும் விளைவுகளையும் எடுத்துரைக்கப் பயன்படுத்தியள்ளார் பாஞ்சாலிசபதம் இரண்டு பாகங்களைக் கொண்டது முதல் பாகம்: சூழ்ச்சியும் சூதாட்டமும் இதில் சூதாட்டத்தில் பாஞ்சாலி தோற்று, அவமானப் படுத்தப்படும் காட்சி விளக்கப்படுகிறது. இரண்டாம் பாகம்: சபதமும், போர்க்களமும்: விளக்கப்படுகிறது. பாரத மாதாவின் சபதமாக உருவகப்படுத்தப்பட்டு, விடுதலைக்கான போர் முழக்கமாக இந்த காப்பியம் விளங்குகிறது. **"தேவிதிரௌபதி சொல்வாள் – 'ஓம்'.."** பாஞ்சாலியின் குரல் பெண்களின் உரிமைகளைப் பற்றியும், அவர்களின் சுயமரியாதை குறித்தும் பேசுகிறது பாரத மாதாவாகப் பாஞ்சாலியை உருவகப்படுத்தி, இந்திய விடுதலைக்கான ஏக்கத்தையும், வீரத்தையும் வெளிப்படுத்தும் முற்போக்கு நடையைக் காண முடிகிறது. தமிழர்களுக்கு நாட்டுப்பற்றை ஊட்டுவதற்காகவும், விடுதலை உணர்வை வளர்ப்பதற்காகவும் இந்தக் காப்பியத்தை எழுதியுள்ளார்.

தொகுப்புரை

எளிய பதங்கள், எளியநடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம், பொதுசனங்கள் விரும்பக் கூடிய மெட்டு இவற்றினை உடைய காவியம் தருபவர் நம் தாய்மொழிக்குப் புதிய உயிர் தருவபவர் ஆகின்றார். தமிழ் மக்கள் யாவருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காப்பியத்திற்கேயுள்ள நயங்கள் குறைவு படாமல் எழுதுதல் வேண்டும். தமிழ் சாதிக்குப் புதியவாழ்வு தரவேண்டும் என்று கங்கணம் கட்டிநிற்கும் பராசக்தியே இத்தொழிலில் என்னைத் தூண்டினாள் என்று பாரதியாரே கூறுவதிலிருந்து அவரின் மகத்துவம் வையத்துள் மலர்ச்சிபெறும். பாரதியின் படைப்புகளை நோக்கும் பொழுது புரட்சிவழிப் பொதுமையை வரவேற்றமையும், வடிவத்தில் புதுக்கவிதை என்னும் இலக்கிய வகைக்கு வித்திட்டமையையும் காணமுடிகிறது உரைநடைப் படைப்புகளை நோக்கும் பொழுது தருக்கமுறை, திறனாய்வுமுறை, வருணனைமுறை, விளக்கமுறை, எடுத்துரைமுறை, சொற்பொழுவுமுறை, தத்துவமுறை, எள்ளல் முறை, என்னும் பன்னோக்கு நடையினைக் கண்டுதெளியலாம்.

துணைநின்ற நூல்

1. பாரதம் போற்றும் பாரதியார் கவிதைகள், லியோபுக் ப்ளிஷர்ஸ் முதற்பதிப்பு - 2023

40. பல்லுயிர் போற்றும் பாரதி



திருமதி தை. தேவசோணியா
உதவிப் பேராசிரியர்
தமிழ்த் துறை, டாக்டர் உமையாள் ராமநாதன் மகளிர் கல்லூரி, காரைக்குடி

முன்னுரை

பாரதியார் பல்லுயிர்களைப் போற்றிய கவிஞர். அவர் இயற்கையையும், அதில் வாழும் அனைத்து உயிரினங்களையும் நேசித்தார். அவரது கவிதைகளில் இயற்கையின் மீதான அன்பு வெளியிடுவதைக் காணலாம். மேலும், பறவைகள், விலங்குகள், செடிகொடிகள் என அனைத்து உயிர்களையும் அவர் போற்றினார். அவ்வகையில் பறவைகள், விலங்குகளைச் சமுதாயங்களோடு ஒப்பிட்டு எவ்வாறு மனிதர்கள் வாழ வேண்டும் என்பதையும் வெளிக்காட்டுவதாக அமைவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

தேசியக் கவிதைகள்

வளமையினாலும், வகைமையினாலும் செழுமை மிக்க படைப்புகளைத் தந்தவர் பாரதியார். போலிச் செய்யுட்களின் கூடாரமாக மாறிப் போயிருந்த தமிழ்க் கவிதைக்குள் 'புதுநெறி காட்டிய புலவன்' பாரதியார்.

**'சுவை புதிது, பொருள் புதிது வளம் புதிது
சொல் புதிது, சோதி மிக்க நவக்கவிதை'**

என்று தன்னம்பிக்கையோடு அறிவித்துக் கொண்ட பாரதியார் பாடுபொருளாலும், பயன்படுத்தும் சொல்லாலும் புதுமைகளைக் களம் நிறைந்த தானியம் போல் குவித்து வைத்தார்

சாதி ஒற்றுமையைக் காட்டும் பூனை

பாரதியார் விரும்புகின்ற சமுதாய அமைப்பை அவர் எழுதிய 'முரசு' என்ற பாடலில் வழியாக மனிதரில் வேற்றுமை இருக்கக் கூடாது என்ற சமுதாய அமைப்பைப் பூனையின் மூலமாக விளக்குகிறார்.

**"வெள்ளை நிறத்தொரு பூனை - எங்கள்
வீட்டில் வளருது கண்டீர்"**

(ம.ரா.போ. குருசாமி, பாரதி பாடல்கள் ஆய்வுப் பதிப்பு, பக்.486-487)

இப்பாடலில் பூனையும், அதன் குட்டிகளும், அவற்றின் நிறங்களும் எடுத்துக்காட்டப்படுகின்றன. பாரதிக்கு இங்குப் பூனையின் அழகையோ, நிறத்தையோ வர்ணிப்பது நோக்கமல்ல. அவற்றிற்கிடையே உள்ள நிறத்தின் அடிப்படையில் வேறுபாடுகள் இருந்தாலும், ஒற்றுமைச் சீர்குலைவு என்பதே இல்லை. இங்கு நாம் காண வேண்டியது பூனையை மையமாக வைத்து நாம் சமுதாயத்தில் எப்படி இருக்க வேண்டும் என்பதை எடுத்துக்கட்டுகிறார் பாரதியார்.

காக்கை வலிய பறவை

பாரதி, பறவைகளை இறைமையையும் தன் இதயத்தின் ஆழ்நிலையையும் இணைக்கும் உருவங்களாகக் கண்டதால் அவற்றோடு இந்த அளவு உறவாடுகிறார். பறவைகளது மொழியிருந்தால், அந்தப் பரந்து விரிந்த ஆனந்த உலகத்தோடு முழுமையாக ஒன்றிவிட முடியுமே என ஏங்குகிறார். 'எழு, விழி, பற எனச் சொன்ன பாரதி இந்த உலகில் ஏங்கியதெல்லாம் சிறகுகளுக்காகவே. கவிஞர்களுள் காக்கையை மிகவும் சிறப்புச் செய்தவர் பாரதியே. 'காக்கை வலிய பறவை'. அது நம்மைக் காக்கிறது. அதை நாம் கும்பிட வேண்டும் எனத் தன் விளக்கம் என்ற கட்டுரையில் குறித்துள்ளார்

காக்கையின் சிறகுகளின் நிறத்தில் நந்தலாலாவின் கருமையினைத் தரிசித்த மகாகவி 'எத்தித் திருடினாலும் அதற்கு இறக்கப்பட வேண்டும்' எனக் குறித்துள்ளார்

பறவைகளும் குழந்தைகளும்

"சின்னஞ் சிறுகுருவி போல - நீ
திரிந்து மறந்து வா பாப்பா" (மேலது, ப.104)

இப்பாடலில் வரும் சிட்டுக்குருவி பறக்கும் சுதந்திரத்தைப் பெற்றுள்ளது போல, வண்ணப் பறவைகளைக் காணும் போது பாரதிக்கு ஏற்படும் மன மகிழ்ச்சியைக் குழந்தைகளும் அனுபவிக்க வேண்டும் என்று பாரதியார் ஆவல் கொள்கிறார்.

மனத்தின் செயல்பாடும் பன்றியும்

மனத்தின் செயல்பாடாகப் பாரதியார்,

"பன்றியைப் போலிங்கு மண்ணிடைச் சேற்றிற்
படுத்துப் புரளாதே" (மேலது, பக்.588-589)

என்ற பாடலடிகள் வழி விளக்குகிறார். இப்பாடலில் மனத்தைப் பன்றியாகவும், அது சிற்றின்பங்களில் அலைந்து திரிவதைச் சேறாகவும் காட்சிப்படுத்துகின்றார். மேலும் மனமானது வெற்றி என்ற மோட்சத்தை நோக்கி விரைந்து செல்ல வேண்டும். அது முற்றத்திலோடும் குழந்தைகளின் விளையாட்டு வண்டியாக இல்லாமல், மூன்று உலகங்களையும் சுற்றி வரும் விமானத்தைப் போல ஓட வேண்டும் என்கிறார். இங்கு பன்றி, சேறு, வண்டி, விமானம் ஆகியவை மனத்தின் செயல்பாடுகளைத் தத்துவ நோக்கில் எடுத்துக் காட்டும் சொல்லோவியங்களாகப் படைக்கப்பட்டிருக்கின்றன.

மானின் செயல்

வேலன் வள்ளியைத் திருமணம் செய்யும் பொருட்டு அவள் காவல் காக்கும் தினைப் புனத்திற்குச் செல்கின்றான். அங்கு வள்ளி கிளிகளை விரட்டிய வண்ணம் இருக்கின்றாள். இக்காட்சியைப் பற்றி,

"துள்ளிக் குலாவித் திரியுஞ் சிறுவன
யானைப் போல் - தினைத்" (மேலது, ப.649)

என்று படுகின்றார். இங்கு, வள்ளி வனத்தில் துள்ளிக் குலாவித் திரியும் மானைப் போன்ற பெண் என்று உவமிக்கப்படுகின்றாள். மானின் செயல் வள்ளியின் துள்ளலுக்கு உவமையாக்கப்படுவது தினைப்புனத்தில் இருக்கும் வள்ளியின் இளமையும், அழகும், சுறுசுறுப்பும் பாரதின் கற்பனையில் மானுடன் ஒப்பிடப்படுகின்றது.

தொகுப்புரை

- இயற்கையையும் பல்வேறு உயரினங்களையும் நேசித்த கவிஞர் பாரதியார்.
- மனிதர்களில் வேற்றுமை இருக்கக் கூடாது என்பதைப் பூனையின் வாயிலாக ஒற்றுமையை வெளிக்காட்டி உள்ளார்.
- சிட்டுக்குருவி சுதந்திரமாகப் பறப்பது போல சின்னக் குழந்தைகளும் சுதந்திரமாக விளையாட வேண்டும் என்றும், மகிழ்ச்சியோடு இருக்க வேண்டும் என்றும் ஒப்பிட்டுக் காட்டுகிறார்.
- பன்றியானது சேற்றிலே விளையாடி ஒரே இடத்தில் சுற்றித் திரிவது போல் அல்லாமல், மனமானது பல்வேறு இடங்களில் விமானம் போல பறந்து திரிய வேண்டும் என்று குறிப்பிடுகிறார்.
- மான் எவ்வாறு துள்ளிக் குதித்து விளையாடுகிறதோ, அதைப்போலவே வள்ளியும் செயல்படுகிறாள் என்பதைக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார்

ஆய்வுக்குப் பயன்பட்ட நூல்கள்

1. ம. ரா. குருசாமி (பதிப்பாசிரியர்) - பாரதி பாடல்கள் ஆய்வுப் பதிப்பு
2. சிற்பி பாலசுப்பிரமணியம் - புதிய தமிழ் இலக்கிய வரலாறு தொகுதி 3
3. மீரா (தொகுப்பாசிரியர்) - பாரதியம், அகரம்

41. பாரதியாரின் ஆத்திசூடி



சீ. விஜயலட்சுமி
துணைத் தலைவர்
அனைத்திந்திய தமிழ்ச் சங்கம், கோவை

முன்னுரை

ஒளவையார் எழுதிய நீதி நூலான ஆத்திசூடியைப் போன்று நல்ல அறிவுரைகளுடன் சுப்பிரமணிய பாரதியாரால் இருபதாம் நூற்றாண்டில் எழுதப்பட்டது புதிய ஆத்திசூடி. ஆத்திசூடியைப் போன்றே இதன் அமைப்பும் உள்ளது மொத்தம் 111 அறிவுரைகள் உள்ளன.இவை எளிதில் மனப்பாடம் செய்து கொள்ளும் சிறு சிறு சொற்றொடர்களாக அமைத்துள்ளார் மகாகவி பாரதி அவர்கள். ஒளவையின் ஆத்திசூடி "அறம் செய விரும்பு "என்று தொடங்குகிறது. மகாகவி பாரதியார் தனது ஆத்திசூடியை அச்சம் தவிர் எனத் தொடங்குகிறார். அருந்தமிழ்ப் பிராட்டி என்றும் நிலைத்திருக்கக்கூடிய அறநெறியை எடுத்துக் கூறினார். ஆனால் பாரதியோ தன் காலத்திலிருந்த இந்திய மக்களின் அடிமைத்தனத்தைப் போக்குவதற்காக அஞ்சிஅஞ்சி செத்துக் கொண்டிருந்த மக்களைத் தட்டி எழுப்புவதற்காக அகரத்தில் தொடங்க வேண்டிய இடத்தில் *அச்சம் தவிர்* என்று காலத்திற்கேற்பக் கூவிய சேவலாகத் திகழ்ந்தான்.

பொருண்மை

பாரதியின் ஆத்திசூடியில் ஆத்தி மாலை சூடி இளம்பிறையினை அணிந்து மோனநிலையில் இருக்கும் சிவனும், கருநிறம் கொண்டு பாற்கடலில் தூங்கிக் கொண்டிருக்கும் திருமாலும், மகமுது நபிக்கு வேத அருள் புரிந்தவனும் இயேசுவின் தந்தை எனக் கூறப்படுபவரும் உருவகத்தாலே பல்வேறு மதத்தினரால் வெவ்வேறு பெயர்கள் சொல்லப்பட்டிருந்தாலும் இறைவனிடம் பரம்பொருள் ஒன்றே என்று கூறுகிறார். அவன் இயல்பு ஒலி வடிவம். அதனைத் தன் அறிவால் உணர்ந்தோர் தங்களின் துன்பங்களை அகற்றிக் கொள்வர். அதனால் பரம்பொருளை உணர்ந்து வாழ்த்தி அமர வாழ்வு ஏதுவோம் என்கிறார் பாரதி. இவ்வாறு பரம்பொருளை ஆத்திசூடி என்ற வரிகளோடு வாழ்த்திப் பாடியவர். அதேபோன்று தானும் பல்வேறு நீதிக் கருத்துக்களைத் தன் எளிமையான வரிகளில் புதிய ஆத்திசூடி என்ற பெயரில் நாம் எப்படி இருக்க வேண்டும் எப்படி இருக்கக் கூடாது என்பவைகளுக்கான கட்டளைகளை நமக்குக் கொடுத்துச் சென்றுள்ளார்.

அகரவரிசையில் முன்னிலைப்படுத்திக் கூறும் முறையில் அமைந்த நூல்களும் காலத்திற்கேற்ற எளிய சொற்களால் இயல்பான எளிய நடை உடையது.எளிய சிறு சிறு தொடர்களே குழந்தைகளின் தேவையைக் குறிப்பால் உணர்த்தி பிள்ளைகளின் மனத்தில் உயர்ந்த நீதிக் கருத்துக்களைப் பதிய வைக்க வேண்டும் என்று விரும்பினார். உலகத்தின் உயர்நிலைக்கு உயர்த்த வேண்டும் என்ற புரட்சிக் கருத்துக்களையும் சிந்தனைகளையும் புதிய ஆத்திச்சூடியில் வழங்கியிருக்கிறார். கல்வியும் அதனால் உண்டாகும் அறிவுமே சமுதாயத்தை உயர்த்தும் என்ற கருத்தில் அசைக்க முடியாத நம்பிக்கையுடையவர் பாரதியார்.'கற்றது ஒழுகு கல்வியதை விடேல், சரித்திரத் தேர்ச்சி கொள், நீதி நூல் பயில்' போன்றவை பல்துறை அறிவினைப் பெற்றிட வேண்டும் எனப் பாரதி கூறிய. அறிய மொழியாகும். எண்ணுவது உயர்வ குன்றென நிமிர்ந்து நில் செய்வது தெரிந்து சொல், தீயோர்க் கஞ்சேல், நன்று கருது, நினைப்பது முடியும் என்று எல்லாம் முறைத்து நாடி நரம்புகளில் முறுக்கேற்றி அடிமை இந்தியாவில் வாழ்ந்த பாரதி *புதியன விரும்பு"**என்று உலகத்தின் உயர் நிலைக்கு உயர்த்த வேண்டும் என்று புரட்சிக் கருத்துகளையும் சிந்தனைகளையும் புதிய ஆத்திசூடியில் கூறியுள்ளார் .

சுப்பிரமணிய பாரதியாரின் புதிய ஆத்திசூடி நாட்டு மக்களின் எல்லாத் துறைகளின் அச்சத்தையும் தவிர்த்து, உடலினை உறுதி செய்து கூடித்தொழில் செய்து, ஐம் பொறிகளை மாற்றிச் செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தி, சமுதாய முன்னேற்றத்திற்கு நல்லதொரு வழிகாட்டியாக இருக்கிறது. பொறுமை ஆட்சி செய்ய வேண்டும் என்று அறிவுறுத்தி சமுதாய முன்னேற்றத்திற்கு நல்லதொரு வழிகாட்டியாக இருக்கிறது. பாரதி, பாடல்களைப் பெண் விடுதலையும் பெண்மையையும் வாழ்வியலையும் சிந்தித்து எழுதிய விதம் பெண்கள் சமுதாயம் முன்னேற்றம் பெற வேண்டும் என்பது ஒரு தனிச் சிறப்பாக எடுத்துக் காட்டி உள்ளார்.

அச்சம் தவிர்

ஒவ்வொருவர் வாழ்விலும் சறுக்கல்கள் சோதனைகள் தடைகள் எல்லாம் இருக்கும். அதை எப்படி வெற்றி கொள்கிறோம் என்பதில்தான் பெண்களின் மன உறுதி அமைந்துள்ளது..எந்தத் துன்பத்திலும் நமக்கு நாமே ஆறுதல் கூறிக் கொள்ளும் தைரியம் இருக்க வேண்டும். தூற்றுவதற்கு 20 பேர் இருந்தால் போற்றுவதற்கு இருவர் மட்டுமாவது வரமாட்டார்களா? அதனால் தைரியமாகச் செயல்பட வேண்டும்.

ஆண்மை தவறேல்

பெண்மையை மதிக்கும் ஆண்களுக்கு முழு உரிமையும் சுதந்திரமும் இருக்கிறது. சில குடும்பங்களில் ஆண் தேவதைகள் இருக்கிறார்கள். எந்தச் சூழலிலும் மனைவியை விட்டுக் கொடுக்காத ஆண்களும் இருக்கிறார்கள்.

இளைத்தல் இகழ்ச்சி

உடலும் மனமும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையது. இரண்டும் எப்போதும் ஒட்டி உறவாடும். ஒன்று பாதித்தால் இன்னொன்றும் பாதிக்கும். அதைப் பாதிக்காமல் வைத்துக் கொள்வது நம்முடைய பொறுப்பு. நினைத்ததை இடம் பொருள் தெரியாமல் பேசுவது நாகரீகம் அன்று .நாள் ஒரு மாற்றம் சமுதாயத்தில் நடந்து கொண்டுதான் இருக்கறது .அதற்குத் தக்கவாறு நம்மை நாம் மாற்றிக்கொள்ள வேண்டும்.

ஈகைத்திறன்

ஈகை என்பது மனித உயிர்களுக்கு இறைவனால் கொடுக்கப்பட்ட வரம் என்று சொல்லலாம் அதிலும் பெண்களுக்கு ரத்தத்திலேயே ஈகை கலந்துள்ளது என்று தான் சொல்ல வேண்டும்.

ஈயென இரத்தல் இழிந்தன்று அதன் எதிர்
ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று.
கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று. அதனெதிர்
கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று.

என்கிறது புறநானூறு. திருவள்ளுவர் ஈகை பற்றி உதவி செய்ய முடியாத ஏழைகளுக்குக் கொடுப்பதே ஈகை ஆகும். மற்றைய கொடைகள் எல்லாம் பயனை எதிர்பார்த்துக் கொடுப்பதே ஆகும் என்கிறார்.ஈகை என்பதற்குத் தமிழில் ஈ,தா,கொடு என்ற சொற்கள் உண்டு.தா..சமமான நிலையில் உள்ளவர்கள் கேட்பது. கொடு--- உயர்வான நிலையில் உள்ளவர்கள் கேட்பது. ஈ---சமமின்றி கீழ் நிலையில் உள்ளவர்கள் கேட்பது .எனவே தான் கேட்பதற்குத் தன்னிடம் இன்றி தவிக்கும் மற்றவருக்கு உதவி செய்ய வேண்டும் என்பதே ஈகை என்று உரைத்தார். .

உடலினை உறுதி செய்

தீமை தரும் பழக்கங்களை விட்டுவிடுதல் .உடலினை உறுதி செய்து உள்ளத்தைத் தெளிவாக்கி வாழ்தலைப் பின்பற்றினால் யாவருக்கும் மகிழ்ச்சியே பெருகும் என்று கூறுகிறார்.

ஊண் மிக விரும்பு

ஒருவேளை உண்பவன் யோகி இருவேளை உண்பவன் போகி மூன்று வேளை உண்பவன் ரோகி என்ற சான்றோரின் வார்த்தைக் கேற்றபடி பாரதியார் உணவின் தேவையை நாம் எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும் என்பதையும் விளக்குகிறார். அண்டத்தில் உள்ளது எல்லாம் பிண்டத்திலும் உள்ளது என்ற சித்தர்களின் கூற்றுக்கிணங்க இந்த உடலானது பஞ்சபூதங்களை உள்ளடக்கியது. இந்த பஞ்ச பூதங்களின் சமநிலையைச் சமமாக வைத்துக் கொள்வதற்கு உதவுவது உணவாகும். இயற்கையுடன் இணைந்து வாழ்வதே உடல் நலத்திற்கு நல்லது. சரிவிகித உணவு அவசியம். வேதிக் கலப்பில்லாத உணவுப் பொருட்களே சிறந்தது என்பதையும் உணர வேண்டும். தமிழர் மருத்துவம் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும். உணவு தான் அனைத்து நோய்களுக்கு மருந்து என்கிறார்.

எண்ணுவது உயர்வு

கல்வியோடு வருங்கால சந்ததியினர் மனதில் ஒழுக்கம் நன்னெறி தார்மீக போதனைகளை நிலை நிறுத்த வேண்டும் நேர்மறை எண்ணங்களை . விதைத்தால் தூய்மையான தன்னலமற்ற மனம் உருவாகும். அது அமைதியான மகிழ்ச்சியான ஆரோக்கியமான உலகத்தை உருவாக்கும். எண்ணுவதை உயர்வாக எண்ணுவோம். அழகு நிலையங்களால் தர முடியாத அழகைக் கூட நல்ல எண்ணங்கள் தரும். உயர்வான எண்ணங்கள் தரமான வாழ்வைத் தரும். நம்மிடம் இருக்கும் தேவையற்ற பயன் தராத நியாயமற்ற சிந்தனைகளைத் துரத்துவோம். பிறரிடம் இருக்கும் நல்ல குணங்களைப் போற்றுவோம் ஏற்றுக் கொள்வோம.

ஐம்பொறி ஆட்சி கொள்

உணவு சாப்பிடுவதை நம் முன்னோர்கள் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள். காலை உணவை ஒரு ராஜா போல சாப்பிடணும். மதியம் உணவை ஒரு இளவரசன் போல சாப்பிடணும். இரவு உணவை ஒரு பிச்சைக்காரன் போல சாப்பிடணும். என்ன அருமையான வார்த்தைகள் .ஐம்புலன்களையும் நம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க வேண்டும் என்று பாரதியார் கூறுகிறார்

ஒற்றுமை வலிமையாம்

ஒருவனின் துன்பத்தை உணர்ந்த மனிதநேயம் மிக்க ஒருவன் வலிமையற்ற மனிதனோடு சேர்ந்து அவனுடைய துன்பத்தையும் போக்கி எளியவனின் வலிமையை அதிகரிக்கிறானோ அப்பொழுதுதான் ஒற்றுமை பிறக்கிறது. ஒற்றுமை தான் பலம். எதிரிகளிடமிருந்து மட்டுமல்ல நம் எண்ண ஒற்றுமை தான் நல்ல செயல் ஆகும். சிதறிய எண்ணங்களைச் சீரிய வழியில் செலுத்தி ஒற்றுமையை வலிமையாக்கி வழி தேடுவோம்.

கீழோர்க்கு அஞ்சேல்

விரிவான எண்ணமும் குணமும் உடையவர்கள் வலிமையானவராய் இருப்பினும் அவர்களிடம் அடங்கிப் போகக் கூடாது. *செய்வது துணிந்து செய்**அச்சமில்லை அச்சமில்லை* என்று கூறினார் பாரதி. அந்தத் துணிவு வேண்டும். நேர்மையான விஷயம் இருந்தால் துணிவு தானே வரும். ஒரு செயலைச் செய்யும் போது துணிந்து இதை என்னால் வெற்றிகரமாக முடிக்க முடியும் என்ற துணிவு வேண்டும. அது நாம் செய்யப் போகும் செயல் நேர்மையாக இருந்தால் மட்டுமே வரும்.

சிதையா நெஞ்சு கொள்

மனதில் உறுதி வேண்டும் என்று சொல்லும்போது அது சாதாரணச் சொல்லாகத் தெரியும். ஆனால் சிதையா நெஞ்சு கொள் என்ற சொற்றொடரில் ஆழமான புரிதல் இருக்கிறது. உறுதி இல்லாத மனம் கொண்டவர்களால் எதையும் சாதிக்க முடியாது. தடுமாறும் மனம் கொண்டவர்களின் வாழ்வு தடுமாறிவிடும் .பூமித்தாய் போல் பொறுமையாக இருக்க வேண்டும் தாக்குதல்கள் எவ்வளவு இருந்தாலும் சிதையா நெஞ்சு கொண்டால் சிறப்பு தான் .

தெய்வம் நீ என்றுணர்

கோடிக்கணக்கில் பணம் வைத்துக்கொண்டு அகத்தில் பிச்சைக்காரனாக வாழ்பவர்கள் தெய்வங்களாக வாழ முடியாது. பிழைப்பிற்கு போதிய பணம் இல்லாவிட்டாலும் மனதளவில் செல்வந்தனாக வாழ்ந்தவர் பாரதி. தெய்வங்களை வாழ்த்துகிறோம். தெய்வங்கள் இன்பம் எய்துக. அவை வாழ்க. அவை வெல்க என்று தெய்வங்களையே வாழ்த்துகிறார். யாருடைய வலியையும் யாரும் உணர்ந்து கொள்ள முடியாது அவரவர் வழிக்கு அவரவர் தான் மருந்து தேட முடியும். இங்கு மருந்து தருபவர்களை விட வலியை அதிகப்படுத்துபவர்கள் தான் அதிகம் இருக்கிறார்கள் தேவையில்லாததைக் கடந்து செல்ல வேண்டுமென்கிறார்.

பெரிதினும் பெரிது கேள்

ஒவ்வொருவரும் உயர்ந்த லட்சியங்களையும் குறிக்கோள்களையும் கொண்டு செயல்பட வேண்டும் என்பதையே பெரிதினும் பெரிது கேள் என்கிறார். தேடல் இருக்கும் வரை தான் வாழ்க்கை ரசிக்கும். அந்தத் தேடல் பெரிதாக இருக்க வேண்டும். அளவில் பெரிதாக அல்ல, உணர்வின் உயர்வில் பெரிதாக இருக்க வேண்டும்.

முடிவுரை

வாழ்க்கையில் தன்னைப் போலவே நாமம் பரந்துபட்ட உயரிய பார்வையுடன் மற்றவருக்கான நன்மை செய்வதற்கும் துடிப்பான செயல்வீரர்களாக எப்போதும் கொள்கைப் பிடிப்புடன் வாழ்வதற்குமான வழிவகைகளாகத்தான் இந்த அறிவுரையை ஆத்திசூடியாக மகாகவி நமக்குத் தந்துள்ளார். கொள்கையில்லா வாழ்வு துடுப்பில்லா படகு போன்றது. வாழ்வதற்கான குறிக்கோளோடு வாழ்பவர் ஒரு நாளும் வீழ்வதில்லை என்பதை நன்கு உணர்ந்தவர் பாரதி. அதனால் தான் அவரின் புதிய ஆத்திச்சூடியில் புறப்பட்டுள்ள ஒவ்வொரு அறிவுரையும் எப்போதும் நம்மை வழிநடத்துபவையாகவே இருக்கின்றன என்பது மிகை இல்லை.

42. பாரதியின் கனவு உலகம்



திருமதி த. நிர்மலா தேவி

எம் ஏ பி எட் (தமிழ்)அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி

தொண்டாமுத்தூர், கோவை தமிழ்நாடு

கட்டுரைச் சுருக்கம்

"பாரதியார்", "பாரதி"-யார்? தமிழ் நல்லுலகத்திற்குக் கிடைத்த வைரக்கல். பாரதியின் படைப்புகள் தனித்துவம் வாய்ந்தவை. மரபுக் கவிதைகளில் பலருக்குப் பொருள் விளங்காது இருந்த காலகட்டத்தில் "புதுக்கவிதை" வடிவை பாருக்குத் தந்தவர் பாரதியார். பாமரனும் படித்துப் பொருள் விளங்கிக் கொள்ளும் வடிவில் கவிதை மரபை மாற்றித் தந்தவர்.பாரதி என்ற மாமேதை. தன்னுடைய அசாத்திய தைரியத்தால் தனது வாழ்க்கையில் எடுத்த எல்லா சோதனைகளையும் துன்பங்களையும் கடந்து வந்தவர். இதற்கு பாரதியாரிடம் இருந்த நெஞ்சுரம் தான் அடிப்படைக் காரணம். பாரதியின் சொல்லும் செயலும் வேறு வேறு அல்ல என்பதற்கு அவரது எழுத்துக்களும் வாழ்க்கை அனுபவங்களுமே சான்றுகள் ஆகும்.

முன்னுரை

தமிழ் பேசும் மக்களின் துயர் துடைக்க உதித்த சூரியன் "பாரதியார்" என்ற கவிஞர். எட்டயபுரத்தில் பிறந்து 39 அகவைக்குள் சரித்திரத்தில் இடம் பிடித்த சரித்திர நாயகன். உலகில் பிறப்பு என்பது ஒரு வாழ்க்கை நிகழ்வு, அதில் ஒருவன் கவிஞனாகப் பிறக்கிறான் என்பது அது அறிய நிகழ்வு. இளமையிலேயே கவி பாடும் புலமை பெற்றிருந்த பாரதியார் எண்ணற்ற பாடல்களை இவ்வையகத்துக்கு வழங்கியுள்ளார். அவரின் பாடல்களை தேசிய கீதங்கள், தோத்திரப் பாடல்கள், ஞானப் பாடல்கள், பலவகைப் பாடல்கள், மற்றும் தனிப் பாடல்கள் என்ற தலைப்புகளில் பிரிக்கலாம். அப்பாடல்களில் அவர் எடுத்தியம்பிய சமுதாயக் கருத்துக்கள் ஏராளம். அவற்றுள் சமுதாயம் நன்மைக்காக ஏற்றத்தாழ்வற்ற சமுதாயத்தை இந்தியாவில் நிலைநிறுத்த அவர் எழுதிய பாடல்கள் பல உண்டு. அப் பாடல்களை என் ஆய்வுக்கு உட்படுத்தி, இவ்வாய்வின் வழி பாரதியின் கனவுலகத்தை மக்கள் முன் கொண்டு செல்வோம்.

சாதிகள் இல்லையடி பாப்பா

சமுதாயத்தில் புரையோடிக் கிடந்த சாதிக் கொடுமைகளை எண்ணி பாரதி வெதும்பினார் எனவே சிறு குழந்தைகளின் மனதில் முதலில் விதை விதைத்தால் அவ்விதை முளைத்து வேர் விட்டு வளரும் பொழுது இந்தச் சமுதாயத்தில் பல மாற்றங்கள் பிறக்கும் என எண்ணினார். எனவே “ஓடி விளையாடு பாப்பா. நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா” என தொடங்கும் பாப்பா பாடலில், "சாதிகள் இல்லையடி பாப்பா! – குலத்" ஒருவரை அவர் பிறந்த குலத்தை வைத்து நீங்கள் இப்பிரிவைச் சேர்ந்தவர்கள் எனப் பிரிக்கக் கூடாது. எல்லா உயிர்களிடத்தும் அன்பு கொண்டு வாழ்பவரே இந்தச் சமுதாயத்தில் "மேலோர்" எனக் குறிப்பிடுகிறார். நூறு ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த பாரதியார் அனைவரும் கல்வி பெற்றால் தான் இந்த சமுதாயத்தில் மாற்றம் பிறக்கும் என்று கூறினார். எனது ஆசான் பாரதி கண்ட கனவு பலித்தது. படித்தவர்கள் எண்ணிக்கை உயர்ந்து வருகிறது. மக்களிடமும் சாதிய வேறுபாடுகள் குறைந்து வருகிறது. இனி எதிர்வரும் காலங்களில் இந்தியாவில் மாபெரும் மாற்றம் நிகழும்.

தேசிய கீதங்கள் வந்தே மாதரம்

வந்தே மாதரம் எனத் தொடங்கும் தேசிய கீதம் பாடலில் அழகான கருத்துக்களை எடுத்துக் கூறியுள்ளார். "சாதி மதங்களைப் பாரோம்.- உயர்'' பாரதத் திருநாட்டில் வாழும் பாரதத் தாயின் செல்வங்களாகிய நாம் ஜாதி மதங்களைப் பார்க்கக் கூடாது என்று கூறுகிறார். பாரதியார் எல்லாச் சாதியினரும் ஒன்றே என்ற கருத்தை முன் வைக்கிறார். "ஆயிரம் உண்டிங்கு ஜாதி"என்ற வரிகள் மூலம் பாரதி வாழ்ந்த காலத்தில் இந்தியாவின் நிலைமையை நம் கண் முன்னே கொண்டு வருகிறார். எத்தனை ஜாதிகள் இந்தியாவில் இருந்தது என்பதை

நாம் அறிகிறோம். ஆனால் இன்று பலருக்குத் தெரியாது. எல்லோர் மனதிலும் மாற்றம் பிறந்திருக்கிறது. பாரதியின் கனவு பலித்திருக்கிறது ஆங்காங்கே ஜாதிப் பெயரில் சங்கங்கள் தோன்றினாலும் படித்தவர் உள்ளம் அதை தூக்கி எறியும். மாற்றம் பிறக்கும். இதையேதான் "ஓர் தாயின் வயிற்றில் பிறந்தோர்- தம்முன்" என்ற வரிகள் மூலம் நமக்குப் புரிய வைக்கிறார் பாரதியார். சாதி மதங்களினால் சண்டைகள் வந்தாலும் பிற நாட்டவர் நம்மை நெருங்க நினைக்கும் போதெல்லாம் "இந்தியர்" "என்ற ஒற்றுமை உணர்வோடு அவர்களை எதிர்க்கத் துணியும் இந்திய மக்களை எவராலும் ஜாதி, மத வேறுபாடுகளைக் கூறிப் பிரிக்க முடியாது என்பது உண்மை. இன்று எல்லாத் துறைகளிலும் அனைத்துப் பிரிவைச் சேர்ந்த மக்களும் சரிசமமாகப் பணியாற்றி வருகின்றனர். அவர்களுக்குள் எந்த வேறுபாடுகளும் காணப்படுவதில்லை. தேசிய விழாக்களையும்,பிற மதத்தினர் விழாக்களையும் பிற சமூகத்தினுடைய விழாக்களையும் தங்களுடைய குடும்ப விழாவாகக் கொண்டாடும் பழக்கம் இன்று இந்தியர்களிடையே மேலோங்கி காணப்படுகிறது.

போகின்ற பாரதம் வருகின்ற பாரதம்

பாரதியார் வாழ்ந்த காலம் இந்தியா ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்தது. அப்பொழுது பாரதியார் எழுதிய பாடல் போகின்ற பாரதம் இந்தியாவை விட்டு ஓடி விடுவது ஆங்கிலேயர் மட்டுமின்று, மக்களிடம் காணப்படும் அனைத்து ஏற்றத்தாழ்வுகளுமே என்று பாடியுள்ளார். "ஜாதி நூறு சொல்லுவாய் போ போ போ" என்ற பாடல் வரிகளில் ஜாதியைப் பற்றிப் பேசுபவரே நாட்டை விட்டு ஓடி விடுவார்கள் கையூட்டுப் பெறுபவர்களை ஓடிவிடுங்கள் என்று பாடுகிறார்.ஜாதி மதங்களை மட்டும் மையப்படுத்தி பாரதியாரின் பாடல்கள் இல்லை. சமுதாயத்தில் காணப்படும் ஏழை பணக்காரர் என்ற நிலையும் மாற வேண்டும் என்று பாரதியார் தன்னுடைய பாடல்களில் பாடியுள்ளார்.

விடுதலை

பாரதியாரின் பாடல்களில் "விடுதலை" என்ற தலைப்பில் இடம் பெற்றுள்ள பாடல்கள் ஏராளமான செய்திகளை நமக்குக் கூறுகின்றன. "ஏழை என்றும் அடிமை என்றும்" இந்தப் பாடல் வரிகள் பாரதியின் எண்ணங்களைப் பிரதிபலிக்கின்றன.

பெண் விடுதலை

பெண்களும் விடுதலை பெற்றால் தான் சமுதாயத்தில் மாற்றம் பிறக்கும் என்று பாடினார். கனவு நாயகன் பாரதி அவர்கள். எனவே பெண்கள் அடிமைத்தனத்திலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று ஏராளமான பாடல்களை அவர் இயற்றியுள்ளார். "மாதர் தம்மை இழிவு செய்யும்" பெண்கள் வாழ்விலும் ஏற்றம் பெற வேண்டும் என்ற பாரதியின் கனவு இந்தப் பாடல் வரிகள் அழகாகத் தெளிவு படுத்துகின்றன. சுதந்திரப் பள்ளு எனத் தொடங்கும் பாடலும் ஏற்றத் தாழ்வற்ற சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் பாரதியின் கனவை அழகாகப் பறைசாற்றுகின்றன.

முடிவுரை

19 ஆம் ஆண்டு நூற்றாண்டில் வாழ்ந்த மகாகவி பாரதியாரின் பாடல்களை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டால் எல்லையில்லாமல் போய்க்கொண்டே இருக்கும். ஏற்றத்தாழ்வுகளை வேரோடு பிடுங்கி தீயிட்டுக் கொளுத்தி புதிய பாரதத்தை பாரதி கண்ட கனவுலகத்தை உருவாக்க அவர்களுடன் நாமும் கைகோர்த்தால் ஏற்றத்தாழ்வுகளற்ற புதிய பாரதம் பிறக்கும்:அனைவரும் கல்வி பெற்றால் மாற்றம் பிறக்கும். புதுமை பாரதம் தழைக்கும்.புதிய பூமியில் புதிய மனிதராய் வாழும் சமுதாயத்தினர் ஒன்றுபட்டு வாழ நாம் வழிகாட்டுவோம்! வாழவைப்போம்!

மேற்கோள் நூல்கள்

1.மகாகவி பாரதியார்(2007)= உமா சம்பத்
2. புதுவையில் பாரதி(2008)= சீனு ராமச்சந்திரன்
3.புதுக்கவிதையின் பிதாமகன் பாரதி(2005)= பார்வதி வெள்ளைச்சாமி

43. பாரதியாரின் புதிய ஆத்திசூடி ஒரு பன்முகப் பார்வை



கி கல்யாண சுந்தரம்

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
அய்யன் திருவள்ளுவர் கலை அறிவியல் கல்லூரி,
செல்லப்பம்பாளையம், ஈரோடு

ஆய்வுச் சுருக்கம்

மகாகவி பாரதியாரின் புதிய ஆத்திசூடி படைப்பை ஒரு பன்முகப் பார்வையோடு அணுகி அதில் அமைந்துள்ள சிறப்புகளில் சிலவற்றை மட்டும் வெளியிட்டு இருக்கிறோம். புதிய ஆத்திசூடியின் அமைப்பு முறை, அதில் காணப்படும் குறட்பாக்களின் கருத்துக்கள், வடமொழிச் சொற்கள், எதிர்மறை வாக்கியங்கள் ஆகியவற்றை விளக்கி உள்ளோம். அத்துடன் அஞ்சாதே, இடம் கொடேல், பழகு, பயில், செய், கொள், போற்று போற்றேல், நட நடவேல், வாழ் வாழேல் ஆகியவை பற்றிய செய்திகளையும் சுருக்கமாக விளக்கி இருக்கிறோம்.

திறவுச் சொற்கள்

அமைப்பு முறை, குறள் கருத்துக்கள், வடமொழிச் சொற்கள், எதிர்மறை வாக்கியங்கள், இடம் கொடேல், அஞ்சாதே, செய், கொள், பழகு/பயில், போற்று/போற்றேல், நட/நடவேல், வாழ் வாழேல்.

முன்னுரை

பாரதியாரின் புதிய ஆத்திசூடி என்பது பிற கவிதைப் படைப்புகள் போல விரிவான அமைப்பு கொண்ட நூல் அல்ல. தமிழ் எழுத்துக்களின் வரிசைப்படி அமைந்துள்ள 110 பாடல் வரிகளை மட்டும் கொண்ட வசன கவிதை நடையிலான படைப்பாகும். இவற்றைப் பன்முகப் பார்வையோடு அணுகி இந்நூலின் அமைப்பு முறை, இதில் பாரதியார் கூறிய குறள் கருத்துக்கள், அவர் பயன்படுத்திய வடமொழிச் சொற்கள், எதிர்மறை வாக்கியங்கள் ஆகியவற்றை விளக்கியதோடு, வாழ்க்கைக்குத் தேவையான விஷயங்கள் பற்றி அவர் சொன்ன செய்திகளையும் இவ்வாய்வுக் கட்டுரையில் சுருக்கமாகக் கூறி இருக்கிறோம்.

அமைப்பு முறை:

ஒவ்வொரு நூலும் அதன் பாடல் அமைப்பு முறையினாலேயே புகழ் பெற்றிருக்கிறது எனலாம். கம்பராமாயணத்தின் காண்டங்களின் தலைப்புகள் அமைந்திருக்கும் முறையிலே அதன் முழு கதையையும் கூறிவிட முடியும். அதுபோல ஆத்திசூடி என்றாலே தமிழின் உயிர் எழுத்துக்கள் மற்றும் மெய்யெழுத்துக்களின் வரிசைப்படி பாடல் இயற்றுவதாகும். அந்த வகையில் பாரதியாரின் புதிய ஆத்திசூடி நூலில் உயிர் எழுத்துக்கள் 12ம், மெய்யெழுத்துக்களில் ங, ட, ண, ழ, ள, ற, ன் ஆகிய ஏழு எழுத்துக்களைத் தவிர்த்து மீதமுள்ள பதினொரு எழுத்துக்களில் பாடல் வரிகள் அமைந்திருக்கின்றன. பாரதியாரின் புதிய ஆத்திசூடியில் உயிர் 12, க வர்க்கம் 12, ச வர்க்கம் 12, ஞ வர்க்கம் 5, த வர்க்கம் 12, ந வர்க்கும் 11, ப வர்க்கம் 10, ம வர்க்கம் 11, ய வர்க்கம் 3, ர வர்க்கம் 8, ல வர்க்கம் 6, வ வர்க்கம் 8 எழுத்துக்கள் என மொத்தம் 110 எழுத்துக்களில் ஆரம்பிக்கும் பாடல் வரிகள் காணப்படுகின்றன.

வடமொழிச் சொற்கள்:

அன்றைய கால மக்கள் நடைமுறை வழக்கிலே வடமொழிச் சொற்களைத் தமிழில் கலந்து பேசியும் எழுதியும் வந்தனர். பாரதியார் வடமொழி கற்று அறிந்தவராதலால் இயல்பாகவே அவர் படைப்புகளில் வடமொழிச் சொற்கள் கலந்தே காணப்படுகின்றன. பாரதியாரின் புதிய ஆத்திசூடியில் ஏறத்தாழ 15 வடமொழிச் சொற்களைக் கலந்து எழுதி இருக்கிறார் எனலாம். அவை ஔடதம் (மருந்து), யௌவனம் (இளமை), ரஸம் (கலை),

ராஜஸம் (குணம்), ரீதி (முறை), ருசி (சுவை), ரூபம் (வடிவம்), ரேகை (கோடு), ரோதனம் (அழுகை), ரௌத்திரம் (கோபம்), லவம் (சில), லுத்தர் (தீயவர்), லோக (உலகம்), லௌகிகம் (உலகியல்) ஆகும்.

எதிர்மறை வாக்கியங்கள்:

சொல்ல வேண்டிய கருத்தை உடன்பாட்டு முறையில் மட்டுமல்ல, எதிர்மறை வாக்கிய அமைப்பிலும் சொல்வது கவிஞர்களின் நடையாக இருக்கிறது. ஒரு கருத்தில் அழுத்தம், அவசரம் மற்றும் கட்டாயம் கொண்டு வருவதற்காக சிலசமயம் எதிர்மறையாகக் கூறுவதுமுண்டு. அந்த வகையில் பாரதியார் தம் புதிய ஆத்திசூடியில் இருபத்தி மூன்று இடங்களில் எதிர்மறையாகக் கருத்துக்களைக் கூறியுள்ளார். அவை ஆண்மை தவறேல், கிளை பல தாங்கேல், கீழோர்க்கு அஞ்சேல், கவ்வியதை விடேல், சாவதற்கு அஞ்சேல், சுமையினுக்கு இளைத்திடேல், சேர்க்கை அழியேல், சௌரியந் தவறேல், ஞமலி போல் வாழேல், தன்மை இழவேல், தாழ்ந்து நடவேல், தீயோர்க்கு அஞ்சேல், தொன்மைக்கு அஞ்சேல், தோல்வியிற் கலங்கேல், நெற்றி சுருக்கிடேல், நோற்பது கைவிடேல், பிணத்தினைப் போற்றேல், பீழைக்கு இடம் கொடேல், பூமி இழந்திடேல், பேய்களுக்கு அஞ்சேல், மிடிமையில் அழிந்திடேல், மூப்பினுக்கு இடம் கொடேல், ரீதி தவறேல் ஆகும்.

இடம் கொடேல்:

வாழ்க்கையில் இரண்டு விஷயங்களுக்கு இடம் கொடுக்கக் கூடாது என்று பாரதியார் தம் ஆத்திசூடியில் விளக்குகிறார். 'பீழைக்கு இடம் கொடேல்' என்பதில் பீழை என்பது துன்பம் மற்றும் வறுமையைக் குறிக்கிறது. வறுமை ஏற்படும் போதோ, துன்பம் ஏற்படும் போதோ அதை எதிர்த்து நில்லுங்கள்; அதற்கு இடம் கொடுக்காதீர்கள் என்று கூறுகிறார். முதுமை என்பது எல்லோருக்கும் தவிர்க்கமுடியாத ஒன்று. உடல் முதுமை அடைந்தாலும், மனதளவில் நாம் இளமையாகவும் சுறுசுறுப்பாகவும் இயங்க வேண்டும் என்பதைத்தான் பாரதியார் 'மூப்பினுக்கு இடம் கொடேல்' என்றார்.

செய்

நாம் செய்யவேண்டிய செயல்களை நமக்குக் கட்டளை இட்டுக் கூறுவது போல சில வாக்கியங்களையும் பாரதியார் கூறி இருக்கிறார். அவை உடலினை உறுதி செய், செய்வது துணிந்து செய், ஞேயங் காத்தல் செய், தேசத்தைக் காத்தல் செய், தையலை உயர்வு செய், நாளெல்லாம் வினை செய், பாட்டினில் அன்பு செய், மொய்ம்புறத் தவஞ் செய், யௌவனம் காத்தல் செய், ரூபம் செம்மை செய், வேதம் புதுமை செய் ஆகும். இவற்றுள் ஞேயம் என்பது பாசம், நட்பு, உறவைக் குறிக்கும். நண்பர்களை இழந்து விடாதே, பாதுகாத்துக் கொள் என்பதையே பாரதியார் 'ஞேயம் காத்தல் செய்'9 என்றார். நடைமுறை வாழ்க்கைக்கு ஏற்றவாறு புதிய விதிகளை உருவாக்கு என்பதைப் பாரதியார், 'வேதம் புதுமை செய்' என்று எழுதினார்.

கொள்

எவற்றை நாம் கைக்கொள்ள வேண்டும் என்று பாரதியார் தம் ஆத்திசூடியில் நான்கு இடங்களில் கூறி இருக்கிறார். அவை ஐம்பொறி ஆட்சி கொள், சரித்திரம் தேர்ச்சி கொள், சிதையா நெஞ்சு கொள், மீளுமாறு உணர்ந்து கொள் ஆகும். எந்தத் துன்பம் வந்தாலும் அவற்றிலிருந்து மீண்டு வருவதற்கான வழிவகைகளை அறிந்து கொள் என்பதையே பாரதியார் 'மீளுமாறு உணர்ந்து கொள்' என்றார்.

பழகு/பயில்

வாழ்க்கையில் நாம் எவற்றையெல்லாம் பழக வேண்டும் என்று பாரதியார் கூறுகிறார். போர்த் தொழில் பழகு என்றும், ரௌத்திரம் பழகு என்றும் ஆத்திசூடியில் கூறப்பட்டிருக்கிறது. 'ரௌத்திரம் பழகு' என்பதில் ரௌத்திரம் என்பது வடமொழிச் சொல்லாகும். ரௌத்திரம் என்பதற்குக் கோபம் என்று பொருள். தவறான, அநீதியான செயல்களைக் கண்டு மனம் பொறுக்கமாட்டாமல் எழும் நியாயமான கோபம் ரௌத்திரமாகும். நீதிநூல் பயில், லாவகம்

பயிற்சி செய் என்றும் கூறுகிறார். எந்த ஒரு செயலையும் திறமையாக, நேர்த்தியாக, சுலபமாக, வேகமாக செய்து முடிப்பதையே 'லாவகம் பயிற்சி செய்' என்றார்.

போற்று / போற்றேல்

பாரதியார் தம் ஆத்திசூடியில் போற்றத்தக்க விஷயங்களைப் 'போற்று' என ஆறு இடங்களிலும், போற்றக்கூடாது விஷயங்களைப் 'போற்றாதே' என ஓர் இடத்திலும் கூறி உள்ளார். நியாயத்திற்காகப் போராடும் வீரர்களைச் 'சூரரைப் போற்று' என்றும், உலகிற்கு ஒளி வழங்கும் சூரியனை 'ஞாயிறு போற்று' என்றும், உயிரினும் மேலான ஒழுக்கத்திற்கும் மேலான மானத்தைப் பற்றிக் கூறுகையில் 'மானம் போற்று' என்றும், விவசாயத்திற்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதை 'மேழி போற்று' என்றும், ஞானம் பெற்ற மௌன நிலையை 'மோனம் போற்று' என்றும், தத்தமக்கே உரிய தொழிலைப் போற்றி வாழ வேண்டும் என்பதைக் 'கைத்தொழில் போற்று' என்றும் கூறினார். இறந்த உடலை ஒரு பொருட்டாகவோ, கவனித்துக் கொள்ள வேண்டிய ஒன்றாகவோ கருதக்கூடாது என்பதைப் 'பிணத்தினைப் போற்றேல்' எனவும் கூறினார்.

வாழ் / வாழேல்

அன்றையக் கால மன்னர்கள் செங்கோல் முறைப்படி வாழ்ந்தார்கள். கோல் என்பது ஒழுக்கத்திற்கான அடையாளம் ஆகும். அதனைப் பாரதியார் 'கோல் கைக்கொண்டு வாழ்' என்று கூறினார். மக்கள் எல்லா செல்வங்களையும் பெற்று வாழ வேண்டும் என்பதைத் 'திருவினை வென்று வாழ்' என்றார். ஒவ்வொருவரும் ஒருவருக்கொருவரை மதித்து வாழ வேண்டும் என்பதை 'யாரையும் மதித்து வாழ்' என்றார். எச்சில் சோற்றுக்கு அலையும் நாயாகவும், கீழ்த்தரமாக பொருட்களைத் தின்னும் நாயாகவும் வாழாதே என்பதைப் பாரதியார் 'ஞமலி போல் வாழேல்' என்றார்.

முடிவுரை

வழக்கமாகக் காணப்படும் பிற ஆத்திசூடிகள் போல் அல்லாமல், பாரதியாரின் புதிய ஆத்திசூடி இன்றும் புதுமையாக விளங்குகிறது எனலாம். இந்நூலில் திருக்குறளை மதிக்கும் பண்பு தெரிகிறது; மூடப்பழக்க வழக்கங்களை எதிர்க்கும் மனப்பான்மை இருக்கிறது; மக்களுக்கு வேண்டிய அறக்கருத்துக்கள் கூறப்பட்டிருக்கின்றன. மக்கள் செய்ய வேண்டியவை, ஏற்க வேண்டியவை, தவிர்க்க வேண்டியவை என அனைத்தும் சொல்லப்பட்டிருக்கின்றன. எனவே, எல்லா நற்பண்புகளும் கலந்த, நல்ல குறிக்கோள்கள் நிறைந்த ஒரு புதுமைப் பெட்டகமாக இந்நூல் தோன்றுகிறது என்பதை இவ்வாய்வின் மூலம் அறிகிறோம்.

துணை நின்ற நூல்

1.பாரதியார் கவிதைகள் - தொகுப்பாளர் கீர்த்தி – அருணா பப்ளிகேஷன்ஸ், சென்னை 600049 -ஆகஸ்ட் 2018.

44. பாரதியின் காலைப்பொழுது கவிதையில் விழுமியங்கள்

ம. சேதுமாதவன்

உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை (சுயநிதிப்பிரிவு)
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி (தன்னாட்சி)
கோயம்புத்தூர்

முன்னுரை

புதுக்கவிதைக்கு வித்திட்ட பாரதி தன் கவிதைகளைப் பல கோணங்களில் பாடி நம்மை மகிழ்வித்துச் சென்றிருக்கிறான். அவரின் ஒவ்வொரு கவிதைகளும் பல உணர்ச்சிகளையும் ஊக்கத்தையும் நமக்குத் தந்து கொண்டிருக்கின்றது. தன்னுடைய கவிதைகளில் விடுதலை உணர்வை அதிகம் காட்டிய பாரதி இயற்கையையும் நேசித்து இயற்கைக்காகப் பல கவிதைகளைப் பாடி சென்றிருக்கின்றான். நட்பின் புனிதத்துவத்தையும், அறத்தையும், ஒரு அரசனுக்கு உண்டான தலைமைப் பண்பையும் காலைப் பொழுது என்னும் கவிதையின் மூலம் பாரதி எடுத்துக் கூறியிருக்கின்றார். அக்காலைப் பொழுது என்ற கவிதையில் இடம்பெறும் விழுமியங்கள் பற்றி இக்கட்டுரை ஆய்கிறது.

நட்பு

நட்பில்லா வாழ்வு நரகத்திற்கு ஈடு என்ற புது மொழிக்கேற்ப ஆதிகாலம் தொட்டு இக்காலம் வரையும் நட்பில்லாதவர் இவ்வுலகில் யாரும் இல்லை. அந்த நட்பு என்பது மனிதர்களுக்கு மட்டுமல்ல. அது பறவைகளுக்கும் உரியது என்பதை,

"...காகப் பெருங்கூட்ட மஃதென்னே?"
என்று வினவக் குருவிதான் இஃதுரைக்கும்"

என்ற பாரதியின் கவிதை வரிகள் நமக்கு உணர்த்துகின்றன. கவிதையில் காக்கை, குருவி, அன்னம், கிளி போன்ற பறவைகள் உரையாடிக் கொள்வது போல் பாரதி கவிதை பாடுகின்றார். அக்கவிதையில் காக்கையின் கூட்டத்தைப் பற்றிக் காக்கை தன் நண்பர்களாகிய குருவி, அன்னம், கிளி ஆகிய பறவைகளிடம் எடுத்துரைக்கின்றது. இவ்விடத்தில் பறவைகளின் அன்பு சற்று மிகப் பெரியதாகக் காணப்படுகின்றது. தன் பறவைகள் இனத்திடம் தன்னுடைய கூட்டத்தின் பெருமையைப் பற்றிக் காக்கை எடுத்துரைப்பதால் நட்பின் பெருமை இங்கு பேசப்படுகிறது. இதற்கு ஒப்புமையாக,

புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும். (குறள்- 785).

என்ற திருக்குறள் அமைகிறது.

தலைமை

தென்னை மரத்தில் அமர்ந்து கொண்டிருந்த காக்கை தன்னுடைய கூட்டத்தைப் பார்த்து வணங்கியது. அப்போது குருவி ஒன்று அங்கு அமர்ந்திருந்தது. காக்கை தன்னுடைய கூட்டத்தை வணங்கியதற்குக் காரணம் யாது? என்று வினவ அக்காக்கையோ தன்னுடைய பதிலை உரைக்க ஆரம்பிக்கும் பொழுது அந்த இடத்தில் பச்சைக் கிளி வந்து அமர்ந்தது, அக்கூட்டம் எங்கே செல்கின்றது என்று கிளி கேட்ட வினாவிற்கு காக்கை தன்னுடைய கூட்டத்தின் சிறப்பையும் தன்னுடைய தலைவனின் சிறப்பையும் எடுத்துரைப்பதை,

"மற்றந்தக் கூட்டத்து மன்னவனைக் காணீரே?
கற்றறிந்த ஞானி கடவுளையே நேராவான்;

என்ற அடிகளின் மூலம் முண்டாசுக் கவிஞன் ஒரு மன்னனின் சிறப்பை பறவையின் வாயிலாக எடுத்துரைக்கின்றார். ஏழு நாட்களுக்கு முன்னர் தன்னுடைய காக்கை கூட்டத்தின் தலைவர் பொறுப்பினை ஏற்ற தன்னுடைய தலைவனைப் பற்றியும் அவனுடைய அறத்தின் சிறப்பு பற்றியும் காக்கை எடுத்துரைக்கின்றது. ஒரு தலைவன் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதைப் பறவையின் வாயிலாக எடுத்துரைக்கின்றார் பாரதி.

அறம்

அறம் எனப்படுவது அஃறிணைக்கும் உண்டு என்பதை பாரதி,

"போதமுள்ள காக்கை புகன்றதந்தச் செய்தியெல்லாம்.
அன்னமிது கேட்டு மகிழ்ந்துரைக்கும:-"ஆங் காணும்!

என்ற கவிதையின் வழி மன்னன் எவ்வாறு அறம் புரிய வேண்டும் என்பதையும், அறம் என்ற ஒன்று மனிதர்களுக்கு மட்டுமல்ல அது அஃறிணைக்கும் உரியது என்பதையும் புதுக்கவிதையின் நாயகன் பாரதி இங்கு எடுத்துரைக்கின்றார். இந்த இடத்தில் கம்பராமாயணத்தில் வாலிவதைப் படலம் நமக்கு சற்று நினைவுக்கு வருகிறது. வாலி இராமனிடம் மறைந்திருந்து ஏன் அம்பு தொடுத்தாய் என்று கேட்ட வினாவிற்கு, இராமன் தந்த பதிலை ஏற்காத வாலி அறமெனப்படுவது மனிதர்களுக்குத்தான் உள்ளது அஃறிணைக்குக் கிடையாது என்று எடுத்துரைத்தபோது, இராமன் அறமெனப்படுவது அஃறிணைக்கும் உண்டு என்பதைக் கூறியவற்றை இங்கு நினைவு கூறலாம்.

நட்பென்பது தாய்மையின் மறு உருவம் என்பதை இக்கால இளைஞர்கள் நிரூபித்துக் கொண்டிருக்கின்றனர். இது இக்காலத்துக்கு மட்டுமல்ல எக்காலத்துக்கும் பொருந்தும் என்பதை நம் சங்க இலக்கியமும் நமக்கு எடுத்துரைக்கின்றது. இவ்வாறு நட்பு அக்காலத்துக்கும் இக்காலத்துக்கும் உரியது என நாம் எடுத்துரைக்கின்ற வேளையில் நட்பெனப்படுவது அஃறிணைக்கும் உரியது என்பதையும். மனித வாழ்வில் நம் தலைமை சிறப்பாக அமைந்தால் நம்முடைய வாழ்வு சிறப்பாக அமையும். தலைவன் என்பவன் தராசு போல விளங்க வேண்டும். தன் மக்களுக்குத் தேவையான அனைத்து விடயங்களையும் செய்து அவர்களை துன்பமில்லாமல் வாழ வைக்க வேண்டும். அப்படிச் செய்பவனே சிறந்த தலைவன் என்பதையும் கூறியுள்ளார்.

முடிவுரை

ஒருவன் அறத்தோடு இருந்தால் அந்த அறம் அவனை எக்காலத்திலும் வாழவைக்கும் என்ற செய்தியைப் பல இடங்களில் பரவலாகப் பார்க்கின்றோம். அவ்வாறு ஒருவர் மற்றவருக்குச் செய்யும் தீங்கு தவறு என்று உணர்ந்து கொண்டால் இந்த உலகம் சிறப்படையும் என்பதையும் முண்டாசுக் கவிஞன் பாரதி காலைப்பொழுது என்ற கவிதையின் மூலம் எடுத்துரைக்கின்றார்.

துணைநூல் பட்டியல்

1. பாரதியார் கவிதைகள் – வானவில் பிரசுரம் - சென்னை
2. திருக்குறள் - பரிமேலழகர் உரை - சாரதா பதிப்பகம் - இராப்பேட்டை - சென்னை
3. கம்பராமாயணம் - இராமவதாரம் - கிட்கிந்தா காண்டம் - கம்பன் அறநிலை- நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,டிசம்பர் 2012.

45. பாரதியாரின் தொழிலியல்பும் உழைப்பின் மகத்துவமும்

திருமதி அ.ரம்யா
உதவிப் பேராசிரியர்
நாச்சியப்ப சுவாமிகள் கலை, அறிவியல் கல்லூரி
கோவிலூர்.

முன்னுரை

மனித வாழ்வியல் உணர்வுகளைச் சுருக்கமாகவும், தெளிவாகவும் உள்ளத்து உள்ளதை உரைப்பது கவிதையாகும். கவிதைகளின் மரபு என்ற வேர்பார்த்து புதுக்கவிதை மலர் பறித்தவர் மகாகவி பாரதியார். மக்கள் உணர்வுகளையும் தன் உணர்வாக்கி உணர்வுவயப்படுத்தியவர். எனக்குத் தொழில் கவிதை. நாட்டிற்குழைத்தல், இமைப் பொழுதும் சோராது இருத்தல் என்பதாகும். அவ்வாறு தொழிலுக்கும் உழைப்புக்கும் முக்கியத்துவம் கொடுத்தவர். சுப்பிரமணிய பாரதியார் தமிழ்க் கவிதைகளின் வழியே சமூக விழிப்புணர்வு, மனித சமத்துவக்கோட்பாடு, அரசியல், பொருளாதாரம் மற்றும் நவீன வாழ்வியல் கருத்துகள் ஆகியவற்றைப் புரட்சிகரமாகக் கூறியுள்ளார். அக்கவிதைகளில் தொழிலுக்கும் உழைப்புக்கும் தனிச்சிறப்பு உண்டு என்று பாடியுள்ளார். அவற்றில் தொழிலின் சிறப்புகளை மக்கள் வாழ்வியலோடு ஒப்பிட்டு இக்கட்டுரையில் காண்போம்.

தொழிலின் முக்கியத்துவம்

பாரதியார் தொழிலாளர்களைச் சமூகத்தின் அடித்தளமாகக் கூறினார். அவர்களின் உழைப்பினால் நாடு முன்னேறும் என்பதையும் தொழிலைத் தெய்வமாகத் தன் பாடல் வரிகளில் உணர்த்துகின்றார். இரும்பை உருக்கிப் பயனுள்ள பொருளாக மாற்றுபவரும், தொழில் நுட்ப இயந்திரங்களை உருவாக்குபவர்களும். இயற்கையான கரும்பிலிருந்து சாறு பிழிந்து தேவையான உணவுப் பொருட்களைத் தயாரிப்பவரும், கடலில் மூழ்கி முத்து போன்ற அரிய பொருட்களைத் தேடி எடுக்கும் மனிதர்கள் அனைவரும் வீரர்களே என்று மனித உழைப்பின் மகத்துவத்தைச் சுட்டிக் காட்டுவதை,

இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே
யந்திரங்கள் வகுத்திடு வீரே!

என்று பாடல் வரிகள் உணர்த்தும். உழைக்கும் மனிதன் தனது வியர்வையைச் சிந்தி பூமியில் பல தொழில்களைச் செய்கின்றான். அவர்களது உழைப்பின் ஒலி ஒரு இசையைப் போல உள்ளது. அந்த இசையே பிரம்மதேவனின் கலை என்று தொழிலாளியைக் கடவுளுக்கு இணையானவராகக காட்டுவதை,

அரும்பும் வேர்வை உதிர்த்தும் புவிமேல்
ஆயிரந் தொழில் செய்திடு வீரே!

என்னும் வரிகள் உணர்த்தும்.

மண்ணைத் தோண்டிக் குடங்கள் செய்வதும் மரங்களை வெட்டி வீடு கட்டுவதும் தொழிலாளியின் கைவினைகள் என்றும், வேளாண்மை செய்து காய்கனிகள், தானியங்கள் பயிரிட்டு உணவளிப்பதும் தொழிலாளியின் சிறப்பு என்பதை,

மண்ணெ டுத்துக் குடங்கள் செய்வீரே!
மரத்தை வெட்டி மனைசெய்கு வீரே!

என்னும் வரிகள் வழி உணர்த்துகிறார்.

தொழிலாளர்கள் தேவர்கள்

வேளாண்மைப் பண்ணை, பசு வளர்ப்பு மூலம் பால், நெய், எண்ணெய் தயாரிப்புப் பற்றியும் இழைகளை நூற்று நல் ஆடைகளை உருவாக்குபவரின் சிறப்புகளைப் போற்றுவதோடு இமயம் போன்ற கடுமையான பனி மலைகளிலும் நம்மைக் காத்து நிற்கும் வீரர்களை, விண்ணிலிருந்து நம் வாழ்வைக் காக்கும் தேவர்களைப் போல மண்ணுலகில் நம் இன்னுயிரைக் காக்கும் தேவர்களாகப் பாரதி போற்றுவதை,

எண்ணெய், பால் நெய் கொணர்ந்திடு வீரே!
இலையை நூற்று நல் லாடைசெய் வீரே!

என்னும் கவிதை வரிகள் புலப்படுத்துகின்றன.

கலைஞர்களின் உழைப்பையும் அவர்களின் இயல், இசை, நாடகம் மற்றும் நாட்டியக் கலையையும் மேலும் ஆராய்ச்சியாளர்கள், சிந்தனையாளர்களின் பணியையும் நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் பணிகளாகப் பாரதியார் கருதுவதை,

பாட்டும் செய்யுளும் கோத்திடு வீரே!
பாரத நாட்டியக் கூத்திடு வீரே!

என்னும் கவிதை வரிகள் உணர்த்துகின்றன.

தொழிலாளர்களின் தெய்வங்கள்

தொழிலாளிகள் மற்றும் உழைப்பாளிகள் தான் நாட்டிற்கு இன்பங்கள், வளங்கள், ஒளி, சக்தி என அனைத்தையும் நல்குகின்றார்கள். அவர்களின் கண்கள் மின்சுடர் போல பொலிவுடன் இருக்கும். தொழிலாளர்களைத் தெய்வமாகக் கருதிச் சிறப்பிக்கும் வகையில்,

நாட்டி லேயறம் கூட்டிவைப் பீரே!
நாடும் இன்பங்கள் ஊட்டிவைப் பீரே!

என்று குறிப்பிடுகின்றார்

முடிவுரை

உழைப்பாளிகளின் வியர்வையில் நாட்டின் வளம், வளர்ச்சி அடங்கியுள்ளது. உழைப்பில்லையேல் உணவில்லை என்பது போல தொழிலாளர்களின் பங்களிப்பு சமூகத்திற்கு மிகவும் இன்றியமையாதது. தொழில்களை வகைப்படுத்தி அனைத்து தொழில்களுக்கும் சிறப்பளித்துப் பாடியுள்ளார் பாரதியார். உழைப்பையும், அறிவையும் ஒரே தரத்தில் வைத்துப் பார்ப்பது இக்கவிதையின் சிறப்பம்சம். இந்தக் கவிதையானது முழுமையாக உழைக்கும் மக்களின் பெருமை, தொழிலின் புனிதம் மேலும் மனிதனின் உயர்வு உழைப்பில் தான் உள்ளது என்ற தூய்மையான சிந்தனையைச் சுமக்கின்றது. தொழிலாளர்களின் பங்களிப்பை உணர்ந்து மதிப்பதற்கான பொறுப்பு நம்மிடம் உள்ளது. பாரதியார் காட்டிய வழியில் நாம் நடந்தால் மட்டுமே ஒரு சமத்துவமான சமூகத்தை உருவாக்க முடியும்.

46. பாரதி கண்ட கம்பன்

முனைவர் அ.சங்கர்தாஸ்

தமிழ்த்துறைத் தலைவர்
நாச்சியப்ப சுவாமிகள் கலை, அறிவியல் கல்லூரி
கோவிலூர்.

முன்னுரை

பாரதி யுகம் போற்றும் மகாகவி. பாரதி பாடாத வாழ்வியல் கூறுகள், உணர்வுநிலைகள் எதுவும் இல்லை என்றே கூறலாம். பாரதப் பண்பாட்டு உணர்வு, நாட்டுப்பற்று அனைத்தையும் பொதுமை நோக்குடன் பாடியவன் பாரதி. மேலும், பழந்தமிழ்ப் புலவர்களையும் பாரதி பாராட்டத் தவறவில்லை. அந்த வகையில் கம்பர் குறித்த பாரதியின் பார்வையைப் பதிவு செய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

கம்பன் புகழ் பாடிய பாரதி

தமிழ் இலக்கியத்தில் புகழ்பெற்ற புலவர்களாகக் கம்பன், வள்ளுவன், இளங்கோவடிகள் ஆகிய மூவரையும் குறிப்பிடுகிறார் பாரதியார். அம்மூவரில் தமிழகத்திற்கு இளங்கோவடிகளையும், இந்திய நாட்டிற்குக் கம்ப நாடனையும், உலகத்திற்குத் திருவள்ளுவரையும் குறிப்பிடுகின்றார். மாபெரும் இதிகாசம் கண்ட கம்பனைப் பாரதி பெருமிதத்துடன்,

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல்
வள்ளுவர் போல் இளங்கோவைப் போல்"

என்று பாடுகின்றார். இப்பாடலில் புலவரில் முதன்மையாகக் கம்பரை அமைத்து வியந்து குறிப்பிட்டுரைப்பது எண்ணுதற்குரியது. தமிழின் அருமை பெருமைகளனைத்தையும் தமிழர்களுக்கு எடுத்துக்காட்டுவதற்கும், வளர்ப்பதற்குமுரிய வழிவகைகளையும் பற்றிக் கவிதைகளில் எடுத்துரைப்பதைக் காணமுடிகிறது.

கம்பன் பிறந்த தமிழ்நாடு

மகாகவி செந்தமிழ் நாட்டின் வளத்தினையும், பெருமைகளையும் எடுத்துக் கூறுகின்ற பொழுது கம்பனைத் தம் மனதில் பெருமிடம் தந்து புலவனைப் பாராட்டி நாட்டினோடு ஒப்பிட்டு,

"கல்வி சிறந்த தமிழ்நாடு
புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு"

என்று குறிப்பிடுகின்றார். இதனில் தமிழ்நாட்டின் கல்விப் பெருமையினை முதலில் குறிப்பிடுகிறார். பின்பு எவ்வாறு சிறந்து விளங்குகிறது என்ற வினா எழுப்பாத வகையில் "புகழ்க் கம்பன் பிறந்த தமிழ்நாடு" என்று குறிப்பிடுகிறார். கல்வி சிறந்த தமிழ்நாடு என்பதற்குக் கம்பனின் கல்விக் கவிப்புலமையே காரணம் என்பதை அழகாக எடுத்துரைப்பதை உணரமுடிகிறது.

கம்பன் என்றொரு மானிடன்

தமிழ்க் கவிஞர்கள் அனைவருமே தம்முடைய வாழ்க்கையைப் பற்றி எதுவும் பெரிதாகக் குறிப்பிடவில்லை. பொதுவான கருத்துகளை மட்டும் கூறியிருக்கிறார்கள் என்பதனைக் காணமுடிகிறது. அஃது ஒரு பெருங்குறையாகக் கருத இடமுண்டு. அக்குறையை நீக்கி நிறைவு செய்யும் வகையில் அதிலும் ஒரு முன்னோடியாக விளங்கிய பாரதி தாமே தன்னுடைய வாழ்க்கைக் குறிப்புகளைச் சுயசரிதை என்னும் தலைப்பில் கவிதையாகத் தந்தவர். அதன் கண் ஆங்கிலப் பயிற்சி என்னும் தலைப்பில் வரும் பகுதியில் கம்பரைப் பற்றி,

"கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும்"

என்று குறிப்பிடுகின்றார். வாழ்க்கையின் வாழ்வியலை எக்காலத்திற்கும் எடுத்துக்கூறும் கவிஞர் தான் உலகில் உயர்நிலை பெறுவார்கள். அப்பேர்ப்பட்ட மனிதன்தான் "மானுடன்" என்ற பெயரைப் பெறுவான். அவ்வாறான வாழ்வியல் கவி மானுடன் கூறிய கருத்தின்

உண்மையை அழுத்தமாகவும். திருத்தமாகவும், எல்லோருக்கும் விளங்கும் வண்ணம் அதனை உணர்த்தும் பொருட்டுக் கம்பன் என்றொரு மானுடன் வாழ்ந்ததும் என்று குறிப்பிட்டுப் பாரதி பாடியிருப்பது கம்பரைப் பற்றி அதிகமாகச் சிந்திக்க வைக்கிறது என்பதை அறியமுடிகிறது.

கம்பனைக் குறிகளாய்க் காட்டுதல்

பாரதி தன் உணர்வின் மூலமாகக் கவிதை பாடக்கூடியவன். நமக்குத் தொழில் கவிதை, நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராது இருத்தல் என்ற கொள்கை உடையவன். தமிழன் என்று ஓர் இனமுண்டு தனியே அவர்க்கோர் குணம் உண்டு. தமிழ்மக்களைப் பற்றிய தம் சிந்தனைகளை வெளியிடும் தமது கவிதை ஒன்றில் பாரதியார்,

"எல்லையொன்று இன்மை எனும் பொருள் அதனைக்
கம்பன் குறிகளாற் காட்டிட முயலும் "

என்று தனது கவிதை வரிகளில் குறிப்பிடுகிறார். கம்பர் தனது இராமகாதையின் வாயிலாகச் சொல்லின் அளவும் பொருளின் வரம்பும் கடந்து அப்பாற்பட்டு நிற்கும் எல்லையற்ற பரம்பொருளின் இயல்புகளை, எல்லையற்ற சொல்லும் பொருளுமாகிய குறிகளால் தம் கவிதைகளில் காட்டிட முயற்சிக்கும் அழகினைப் பாரதியார் வியந்து பாராட்டி மகிழ்வதைக் காணமுடிகிறது.

கம்பர் மதம்

பரதியார் சிறந்த கவிஞர் மட்டுமல்ல, அவர் மிகச் சிறந்த தமிழ் உரைநடை ஆசிரியருமாவார். தமிழில் அவர் அழகிய இனிய அரிய பல கட்டுரைகள் வரைந்திருக்கின்றார். அவைகளுள்ளே, 'இடையில் நமக்கு நேர்ந்த கேடு' எனும் தலைப்பில் எழுதிய கட்டுரையில் தமிழகத்தில் தமிழ்க் கவிதைகளின் சுவையும், மகிழ்வும், தரமும் குறைந்து வர நேர்ந்தமை குறித்து வருந்தி எழுதியிருக்கிறரார். நமது கவிதையிலே ஆனந்தம் குறையத் தொடங்கியது, ருசி குறைந்து உள்ளது. கரடுமுரடான கல்லும் முள்ளும் போன்ற பாதை நம் கவிகளுக்கு நல்ல பாதையாகத் தோன்றலாயிற்று. கவிராயர் 'கண்' என்பதைச் 'சக்கு' என்று சொல்லத் தொடங்கினார். ரசம் குறைந்தது. சக்கை அதிகப்பட்டது, உண்மை குறைந்தது. பின்னால் திறமைகள் அதிகப்பட்டன என்பதை,

"சவியுறத் தெளிந்து தண்ணென்று
ஒழுக்கமும் தழுவிச் சான்றோர்.."

என்று கம்பன் பாடியிருக்கின்றான். இதனால் குளிர்ந்த நடையையுடையதாகி மேலோர் கவிதையைப் போலக் கிடந்தது கோதாவரி நதி என்று கம்பன் வருணனை செய்கின்றான். எனவே, கவிதைகளில் ஒளி, தெளிவு, குளிர்ந்த நடை மூன்றும் இருக்க வேண்டும் என்பது கம்பனுடைய மதமாகும். இதுவே நியாயமான கொள்கை என்பதாகும். இவ்வுரைநடைப் பகுதியால் பாரதியார் தாம் ஒரு கவிஞர் என்ற முறையில் கவிதை இலக்கணம் பற்றித் தமக்குள் கருதியருந்த கருத்துகளை விளக்குவதற்கு ஒரு 'மேல்வரிச்சட்டம்' போல கம்பர் பெருமானின் கவிதையினையே மேற்கோளாக எடுத்துக் காட்டி விளக்கியிருத்தல் வழி பாரதியார் கம்பரை எவ்வாறெல்லாம் மதித்துப் போற்றி வந்தார் என்பதை உணர இயலும்.

முடிவுரை

இக்கட்டுரையின் வழி கம்பனைக் கற்றுத் தேர்ந்த பாரதி, கம்பனின் புலமைச் சிறப்பை, கவி ஆளுமையை நன்கு உணர்ந்தவர் என்பதும் அதனால்தான் கிடைக்கும் வாய்ப்புகளிலெல்லாம் கம்பனின் புகழ் பாடப் பாரதி தவறவில்லை என்பதும் புலனாகிறது. கம்பனின் புகழ் பாடிய பாரதியின் புகழும் இவ்வுலகம் உள்ளளவும் நிலைத்து நிற்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

47. பாரதியார் படைப்புகளில் பெண்ணியச் சிந்தனைகள்

முனைவர் ஆ.நிர்மலா

உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
வி.எல்.பி.ஜானகியம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கோவைப்புதூர்

முன்னுரை

சங்ககாலம் தொடங்கி இருபதாம் நூற்றாண்டுவரை பெண்களின் வாழ்க்கை ஒரே முறையில் அமைந்துள்ளது. ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்கின்ற ஒரு கூட்டமைப்பே சமுதாயமாகும். குழந்தை பிறந்து வளரும் காலங்களில் சமூகம் பலவழிகளில் பலகாரணங்களால் ஆணையும் பெண்ணையும் வேறுபடுத்துகிறது. விளையாடும் விளையாட்டு, பேசும் பேச்சு, உடுத்தும் உடை, முதலானவற்றிலிருந்து ஆணுக்கும் பெண்ணுக்கும் தனித்தனி நியதிகள் பின்பற்றப்படுகின்றன. பெண் என்ற காரணத்தால் பல உரிமைகள் மறுக்கப்பட்டது. அந்தந்தக் காலக்கட்டங்களில் அரசியல் மற்றும் மதத் தாக்கங்களின் காரணமாகப் பெண்களின் நிலையில் சிற்சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளனவே தவிர பெரியமாற்றம் எதுவும் ஏற்படவில்லை. அப்படிப்பட்ட நிலையில் பாரதியார் காலம் பெண்ணடிமை மிகுந்திருந்த காலமாகும். பெண்கள் கல்வியின்றி மூடப்பழக்கங்களில் சிறைப்பட்டு சிந்திக்கும் திறனின்றி, தனித்து இயங்கும் ஆற்றல் இல்லாமல் இல்லறச் சிறையில் கற்பு என்ற சமூக விலங்குகளால் பூட்டப்பட்டு சமையலறையில் முடங்கிக் கிடந்த காலமாகும்.

இத்தகைய காலக்கட்டத்தில் பாரதியார் தம் ஆயுதமாகிய கவிதையின் மூலமாகவும், பிற படைப்புகளின் மூலமாகவும் பெண்ணடிமையை நீக்க முற்பட்ட நிலைப்பாடுகளை இக்கட்டுரை எடுத்தியம்புகிறது.

பெண் விடுதலை

ஆணாதிக்க சமுதாயத்தில் அடிமைபட்டுக் கிடந்த பெண்ணினம், அவ்வடிமைத் தளத்திலிருந்து விடுபட்டு, அரசியல், சமூகப் பொருளாதார நிலைகளில் மேம்பட்டு விளங்க வேண்டும் என்பதுதான் பெண் விடுதலையாகும். பாரதியாரின் பாடல்களில் விடுதலை உணர்வே அதிகமாகக் காணப்படுகிறது. பெண் விடுதலை என்பது பெண்களின் உரிமைகளை எடுத்துக் கூறுவதாகும். பெண் விடுதலை பெறும்போதுதான் சமூகத்திற்கும், நாட்டிற்கும் பயனுள்ள ஒன்றாக அமைகிறது. பாரதியார் வாழ்ந்த காலத்தில் பெண்கள் அடிமைகளாக வாழ்ந்தனர். இந்தப் பெண்ணடிமை நிலையினைக் கண்டு பாரதியார்.

“மாதர் தம்மை இழிவுசெய்யும்
மடமையைக் கொளுத்துவோம் (சுதந்திரம் :3)

என்று கூறுகிறார். பாரத சமுதாயம் முழுவதிலும் நிலவிவருகின்ற பெண்ணடிமை நிலைமாறி ஆணும், பெண்ணும் சரிநிகர் சமமாக வாழவேண்டும் என வலியுறுத்துகின்றார். பாரதியார் விடுதலையைப் பற்றிபாடும்போது ஆணும், பெண்ணும் சமூகத்தில் விடுதலை பெற்றிருத்தல் வேண்டும் என்னும் நோக்கில்

“காட்டிலுள்ள பறவைகள் போல்வாழ்வோ மம்மா”
(பாரதி அறுபத்தாறு : 48)

என்று பாடியுள்ளார். பறவைகளைப் போன்று தடைகளற்றுச் சுற்றித் திரிதல் வேண்டும் என முழுமையான விடுதலையைக் கூறியுள்ளார். குடும்பத்தில் பெண்ணுக்குரிய உரிமைகள் அனைத்தையும் பெற்று வாழ்வதன் தேவையை,

“ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்..” (புதுமைப் பெண் : 4)

என்னும் வரிகளில் விடுதலை என்பது அன்பின் அடிப்படையில் அறத்தின் அடிப்படையில் கிடைக்கவேண்டிய ஒன்று என அறிவுறுத்துகின்றார்.

பெண் கல்வி

பாரதியார் பெண்கல்வி குறித்து தம் கவிதைகளில் சிறந்த முறையில் கூறியுள்ளார். வறுமை, தீண்டாமை, பெண்ணடிமைநிலை போன்றவற்றை மாற்றுவதற்கும் கல்வியே அடிப்படையாக இருக்கமுடியும் என்பதை அவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

"பெண்ணுக்குள் ஞானத்தை வைத்தான் - புவி
பேணி வளர்த்திடும் ஈசன்" (முரசு :9)

என்ற கவிதை வரிகள் வாயிலாக பெண்களின் அறிவாற்றலைப் பற்றி எடுத்துரைக்கிறார் பாரதி. ஏட்டையும், எழுதுகோலினையும் தொடுவது பெண் குலத்திற்கு ஆகாது என்னும் எண்ணத்தில் மூழ்கியிருந்த சமயத்தில், பாரதி புதுமைப் பெண்ணைப் படைத்திருக்கிறார். இதனை,

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்" (புதுமைப் பெண் :6)

என்ற வரிகளில் புதுமைப் பெண்ணானவள் நேர்கொண்ட பார்வை கொண்டவளாகவும், உலகத்தில் யாருக்கும் அஞ்சாதவளாகவும், கல்வியிலும், பண்பிலும், அழகிலும் சிறந்தவளாகவும் இருக்கும் பெண் எந்நிலையிலும் மாறுபடாதவளாய் இருப்பாள். பெண்கள் கல்விநிலையில் உயர்ந்து, விரும்பும் தொழில் செய்துவாழும் உரிமை பெறவேண்டும் என்பதும் பாரதியின் கனவாக இருந்தது. இதனை ,"பட்டங்கள் ஆள்வதும் ,சட்டங்கள்செய்வதும் " என்ற வரிகளில் பாரதியார் புதுமைப் பெண்ணைச் சிறந்தமுறையில் புவிக்கு அறிமுகப்படுத்துகிறார். மேலும், மூடபழக்கவழக்கங்கள் நிறைந்த இந்நாட்டில் பெண்கள் பகுத்தறிவாளர்களாகச் சிந்தனையாளராகத் திகழ வேண்டுமென பாரதியார் கூறுகிறார்.."போற்றி போற்றியோர் நாலாயிரம் போற்றி! நின் " (புதுமைப் பெண் :1) என்ற வரிகள் உவமையின் வழியாகப் புதுமைப் பெண்ணின் செயல்பாடுகளைப் படம்பிடித்துக் காட்டுகிறது. பிறப்பிடம் சக்தியாக இருந்தாலும், தோற்றத்தில் அழகாக இருக்கிறது. அதன் பயன்கள் எண்ணிலடங்காதவை. அது இறை வழிபாட்டிற்குரிய மலராகவும், மக்கள் வாழ்வில் இரண்டறக் கலந்துவிட்ட மலராகவும் காணப்படுகிறது. இத்தகையவளே புதுமைப் பெண் என்று கூறியுள்ளார்.

பெண் சக்தி

பாரதியார் பெண்ணைப் பாடும் போது பல இடங்களில் அவளைத் தெய்வமாகிய சக்தியாகவே கூறியுள்ளார்.

"காதல செயுமனைவியே சக்தி, கண்டீர்"
(பாரதிஅறுபத்தாறு :50)

என்ற வரிகளின் மூலம் மனைவியினால் மட்டுமே ஒருவன் உயர்வினை எய்தமுடியும். கடவுள் நிலைபெறமுடியும். பெண்மை தமக்கு இழுக்குநேரும் போதெல்லாம் பெருகும் வெள்ளமாய், குமுறும் எரிமலையாய், சக்திவடிவாய் கிளம்புவதாகப் பாரதியார் கூறியுள்ளார். இதனை,

"ஆக்கந்தானாவாள், அழிவுநிலையாவாள்,.."
(பாஞ்சாலிசபதம் :55)

என்று கூறுகிறார். மேலும், உலகத்துத் தீமைகள் ஒழிப்பவள் மாசக்தி என்றால், இல்லத் தீமையை அழித்து ஒழிப்பவள் தாய் என்னும் சக்தி என்பதை,

"தாய்க்குமேலிங்கேயோர் தெய்வமுண்டோ"(பாரதிஅறுபத்தாறு :47) என்றும்,"சக்தியருளா லன்றோ பிறந்தோம் பார் மேல்"(பாரதிஅறுபத்தாறு :9) என்றும் பெண்ணின் பெருமையைப் பேசுகிறார்.

கற்பு

கற்பு என்ற கோட்பாட்டை பெண்ணிற்கு மட்டும் வைத்து ஆண்களை சுதந்திரமாகத் தவறுசெய்யுமாறு கடவுள் படைத்துவிட்டதாக நம்பியிருக்கும் ஆண்களுக்கு,

"கற்புநிலை யென்றுசொல்லவந் தாரிரு
கட்சிக்கும்அஃது பொதுவில் வைப்போம்"
(பெண்கள் விடுதலைக்கும்மி :5)

கற்பு என்பது பெண்ணுக்கு மட்டும் உரியதன்று. ஆண், பெண் இருவருக்கும் இருக்க வேண்டிய ஒன்றே ஆகும் என்று கண்டிக்கிறார். மேலும் பெண்களைக் கற்பு பேணும் பொருட்டு வீட்டிற்குள் அடைத்து வைக்கும் மூடப்பழக்கத்தைக் கண்டித்துள்ளார். பெண்கள் வீட்டை விட்டு வெளியே வருவதால் கற்பு போய்விடாது என்று உணர்த்தும் அவர், கற்புடைய பெண்களால் இல்லம் உயர்வதுடன், நாடும் உயரும் என்பதை"மாதர் தம்கற்பின் புகழினிலே உயர்நாடு" (பாரதநாடு :3) என்ற அடியின் மூலம் வலியுறுத்தியுள்ளார்.

ஆணும் பெண்ணும் சமம்

ஆணும், பெண்ணும் சரிநிகர் சமானம் என்ற கொள்கை பாரதியின் உயர்ந்த கொள்கையாகும். 'ஆணுக்குப் பெண் இளைப்பில்லை' என்றும், ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானம் என்றும் கூறியுள்ளார். அதை

"வல்லசகுனிக்கும் மாண்பிழந்த நாயகர்தாம்"
(பாஞ்சாலிசபதம் :48)

என்று சீறும் பெண்ணாகத் திரௌபதியைக் காட்டுகிறார். இதன்மூலம் ஆணுக்குப் பெண்களைச் சமமாக உணர்த்தியுள்ளார்.

புதுமைப் பெண்ணின் கடமைகள்

ஏட்டையே பெண்கள் தொடுவது தீமையென்று எண்ணியிருந்த காலக்கட்டத்தில் புதுமைப் பெண்களின் கடமைகளாகப் பாரதியார் கூறியுள்ளவை,

"வேதம் படைக்கவும், நீதிகள் செய்யவும்
வேண்டிவந்தோ மென்று கும்மியடி
(பெண்கள் விடுதலைக் கும்மி : 7,8)

என்று விடுதலைக் கும்மியடித்து மகிழ்ந்து பாடுவதைக் காண்கிறோம்.

முடிவுரை

பாரதியாரின் பெண்விடுதலை,பெண்கல்வி குறித்த கவிதைகளில் சமுதாயத்தில் பெண்கள் முன்னேற்றம் பெற்று, ஆணுக்குப் பெண் சரிநிகர் சமானமாக வாழவேண்டுமானால் பெண்கள் கல்வியறிவு பெறவேண்டும் என்பதைச் சுட்டிக் காட்டியுள்ளார்.

48. தொல்காப்பியன், வள்ளுவன், பாரதி , பாரதிதாசன் நோக்கில் - காணி நிலம்



முனைவர் ஹ. அல்தாஜ் பேகம்

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை -ஆய்வு மையம்
ஸ்ரீ பராசக்தி மகளிர் கல்லூரி, குற்றாலம்

முன்னுரை

உலக வரலாற்றில் தமிழகத்தில் தான் ஒரு எழுத்தாளரின் படைப்புகளுக்கான பதிப்புரிமை அரசாங்கத்தால் தரப்பட்டு பின்பு பொதுவுடைமை யாக்கப்பட்டது. பெரும் தலைவர்களின் படைப்புகளுக்குக் கிடைக்காத பெருமை பாரதிக்குக் கிடைத்திருக்கின்றது. காணி நிலம் வேண்டும்!" என்பது எளிய கோரிக்கையல்ல, ஒரு சமூக நீதிக்கான முழக்கம். தொல்காப்பியன், வள்ளுவன், பாரதியார், பாரதி தாசன், ஆகியோர், ஒவ்வொருவரும் தம் காலத்தில் நிலம் மற்றும் வாழ்வாதார உரிமையைப் பற்றிய தத்துவங்களை வெளிப்படுத்தியுள்ளனர். இந்தக் கட்டுரையில் அவர்கள் நிலம் பற்றியப் பார்வைகளைச் சுருக்கமாக ஆய்வதே இக் கட்டுரையின் நோக்கம் ஆகும்.

பொருளுரை

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் பாரதி. இயற்பெயர் சுப்பிரமணியன். இவர் இளமை முதலே சிறப்பாகக் கவிபாடும் புலமை பெற்றவர். தன் கவிதைத் திறத்தால் விடுதலை உணர்வை மேலோங்கச் செய்தவர். எட்டயபுரமன்னரால் பாரதி என்னும் பட்டம் பெற்று சிறப்பிக்கப்பட்டவர். மண் உரிமைக்காகவும் பெண் உரிமைக்காகவும் பாடுபட்டு நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும் மிக்க பாடல்கள் பல படைத்தவர். கண்ணன் பாட்டு, குயில் பாட்டு பாஞ்சாலி சபதம் போன்ற பல நூல்களை இயற்றியுள்ளார். 'இன்பம் அது துன்பத்தின் ஜரிகைக் கரை தானே'. ஆம்.

பாரதியின் வாழ்க்கையும் துன்பமாகத் தான் மலர்ந்தது.
அந்த மகாகவி சுதந்திர விளக்கை ஏற்ற வேண்டி
தன் வாழ்நாட்களை வத்திக்குச்சி ஆக்கி கிழித்து போட்டான்
விழிக்காத வேட்டுச் சத்தம் கேட்டும் விழிக்காத தமிழன்
அவன் பாட்டுச் சத்தம் கேட்டதும்
படுக்கையைச் சுருட்டி பல் விளக்க எழுந்தான், அல்லவா.
மகாகவி பாரதி தான் வழிபடும் தெய்வமாக பராசக்தியிடம் காணி நிலம் வேண்டும் என்று அவர் விருப்பத்தைப் பட்டியலிடுகிறார். பாரதிக்குக் காணி நிலம் வேண்டுமாம், ஏன் தெரியுமா? அவன் மனிதனாய் வாழ ஆசைப்பட்டான். அவன் கேட்கும் காணி நிலத்தில் பேராசை இல்லை பெருமை இல்லை . யாரையும் கெடுத்து வாழும் நோக்கம் இல்லை. அவனுக்கு வேண்டியது மகிழ்ச்சி மட்டுமே என்பதை உணர்த்துவதாய்க் காணி நிலம் காட்சிப்படுத்துகிறது எனலாம்.

காணி நிலம்

பாரதியார் குறிப்பிடும் காணி நிலத்தில் காணி என்னும் சொல் ஒரு காணி இரண்டு காணி என்று நில அளவையைக் குறிப்பிடுவது அல்ல. காணி என்ற சொல்லுக்கு உரிமை என்று பொருள். நிலத்தைப் பெறும் ஆசை மனிதர்கள் பலருக்கு இருப்பது இயல்பான ஒன்று. ஏனெனில் உண்ண உணவு ,உடுக்க உடை, இருக்க இடம் மூன்றும் மனிதனின் அடிப்படை வசதிகள் எனலாம்.

- ஒரு காணி நிலம் என்பது 1.32 ஏக்கருக்குச் சமம். இது தோராயமாக 132 சென்ட் நிலத்திற்குச் சமமாகும் எனலாம். காணி நிலம் வேண்டும் என்பது

ஒரு குறிப்பிட்ட அளவு நிலம் வேண்டும், அதாவது சிறிது நிலம் வேண்டும் என்பதாகும்.

பாரதி கூறும் காணி நிலம்

சுப்பிரமணிய பாரதி – "எல்லோருக்கும் வீடு வேண்டும்" என்கிறார். இதற்காக அவர் காணி நிலம் கேட்கிறார். "எல்லோரும் வீட்டில் வாழ வேண்டும், ஏழையர் என்ற நிலை நீங்க வேண்டும்..." என்கிறார். பாரதி "காணி நிலம் வேண்டும்" என நேரடியாகச் சொல்லவில்லை; ஆனால் வீடு என்பது உரிமை, அதன் தனி வாழ்விடம் பற்றி அவர்பெரிதும் வலியுறுத்தினார். அவர் எல்லோருக்கும் வீடு கிடைக்கவேண்டும் என்று பாடியதை, காணி நிலம் உரிமையாக வேண்டும் என்ற கோணத்தில் பார்க்கலாம். மேலும் பாரதி, தான் விரும்பும் வீட்டில் நிம்மதி நிலவ தான் வழிபடும் தெய்வமான பராசக்தியிடம் தான் விரும்பியவற்றைக் கேட்டுப் பட்டியலிடுகிறார்.

“ஜாதி மதம் எனும் பாவுகளைத் தழல் விழியால் செரிந்து எரிக்கும்...”
“தோற்றத் தொழிலையே உயர்வாகக் கொண்டு
எல்லோரும் சமமாம் உலகம் வருக!”
என்று ஜாதிக் குப்பைகளைத் தன் நெருப்பு விழிகளால் எரிக்கிறார்
இந்த அடி மூலம் பாரதி எல்லா மனிதர்களும் சமமான உரிமையுடன் வாழவேண்டும் என்பதைக் கூறுகிறார் – இதில் நில உரிமையும் அடங்கும்.
எங்கள் நாட்டில் காணி நிலம் எளிய ஜனங்களுக்கு வேண்டும்!"
இந்த அடி வழியாக, நிலம் சிலர் கையில் சுரண்டலாகச் செல்வதைக் கடுமையாக எதிர்த்துப், பொதுமக்களுக்கு நில உரிமை வழங்க வேண்டும் என்பதே பாரதியின் நோக்கம்.

பாரதிதாசன் – "காணி நிலம் வேண்டும்"

பாரதி தாசனும் பாரதியின் பாதையில் நடந்தும், மேலோங்கிச் சமூக சமத்துவத்திற்கு வலியுறுத்தினார். அவர் நிலம் பற்றிய பாடலில்:
"விவசாயி தான் தேசத்தின் முதுகெலும்பு;
நிலம் அவனுக்கே உரிமை!" - என்றார். பாரதி தாசனின் பார்வையில், நிலம் உழைப்பவருக்கே உரிமை என்ற அடிப்படையில் சமத்துவம் ஒலிக்கிறது.
"காணி நிலம் வேண்டும், காணி நிலம் வேண்டும்
வெண்மணல் பூண்ட எங்கள் நாடு!" எனப் பாரதிதாசன் வரையறுக்கும் காணி நிலப் பாடல் புரட்சி மிக்க வரிகளை குறிப்பாக உரிமை வரிகளை உள்ளடக்கியது எனலாம்.
இது மிகவும் நேர்மையான கோரிக்கையாகப் பதிவாகிறது. பாரதிதாசன் காணி நிலம் ஏழைகளுக்குரிய உரிமை எனக் கூறுகிறார். இவரது கவிதை சமுதாய நீதி, மக்களுக்கான உரிமை, சுய உரிமை ஆகியவற்றை வலியுறுத்துகிறது.
நம்மாழ்வாரைப் போல் நிலமெலாம் உண்டா!
“நிலம் எனக்கு உரிமை, யாருக்கோ அல்ல!” என்கிறார்.
(சொத்துரிமையை நியாயமாக மக்களிடம் கொண்டுவர வேண்டும் என்பதைக் கூறும் வரிகள்.)
இதன் மூலம்“ பாரதிதாசன் நிலம் மக்களுக்குச் சொந்தமாக இருக்க வேண்டும்” என்ற சமூகநீதியைக் கூறுகிறார்.

திருவள்ளுவர் – திருக்குறள்

வள்ளுவர் காணி நிலத்தை கடினமாக உழைத்து உழவு வாழ்க்கை வாழும் உலகத்தாருக்கு உரிமையாகும் எனக் காட்டுகிறார்.

"உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅ∴தாற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து."

வள்ளுவர், நிலம் உழவருக்கே உரியதாக இருக்க வேண்டும் என்று கூறுகிறார். உழவோர் இல்லாமல் உலகம் இயங்காது அவர்கள் அனைவரும் உலகின் ஆதாரமான தூண்களாக உள்ளனர் என்பது வள்ளுவன் கருத்து.

"தொல்வரவும் தோன்றாத் துயரமும் துன்பமும்
இல்வரவும் காணின் உழவு. குறள் எண்: 1033

உழைப்பவர்களுக்கு நில உரிமை இருக்க வேண்டும் என்பதையும், விவசாயத்தின் முக்கியத்துவத்தையும் வள்ளுவர் கூறுகிறார். திருக்குறளில், பல குறள்களில் விவசாயம், நிலத்தின் பயன்கள் குறித்து கூறப்படுகின்றன:

"உழுவார் உலகத்தார்க்கு அண்ணியர் மற்றை
எழுவார் நீரது ஒத்து."

அதாவது, உழைக்கும் விவசாயிகளால் தான் உலகம் வாழ்கிறது; நிலத்தில் உழைப்பவரே உயர்ந்தவர்.

தொல்காப்பியர் – பொருளதிகாரம்

"நிலம் என்பது அரசின் உரிமையினில் இருந்தாலும், மக்களின் வாழ்வுக்கு அடிப்படையானது." என்கிறார். புறத் திணைகள், வாழ்வியல் வரையறைகள்: தொல்காப்பியம் தமிழிலக்கியத்தின் பழமையான இலக்கண நூலாகும். இதில், நிலம் புறத் திணைகள் எனும் பிரிவில் ஐந்தாக வகுக்கப்படுகிறது: குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை.

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
- தொல்காப்பியம்-பொருளதிகாரம்-அகத்திணை இயல்-பாடல் எண்:5

என தொல்காப்பியர் நிலத்தை வைத்துத் தெய்வங்களை வகைப்படுத்துகிறார்.

இவற்றில், மருத நிலம் விவசாயத்திற்கு உகந்ததாகக் கூறப்படுகிறது. இது பாரம்பரியமாக விவசாய சமூகத்தின் நில உரிமையைக் குறிக்கிறது. இங்கு நிலம் என்பது இயற்கையுடன் கூடிய வாழ்வியல் சூழலாகவும் காணப்படுகிறது. 'தமிழில் தோன்றியுள்ள பல்வேறு இலக்கியங்கள் சமயத்தின் அடிப்படையிலேயே வளர்ந்து வந்துள்ளன.சமயத்தை நீக்கி விட்டால் மொழி என்னும் மாளிகை பொலிவிழந்து நிற்கக் காணலாம் என்பர். தொல்காப்பியன் நேரடியாகக் காணி நிலம் வேண்டும் எனக் கூறவில்லை; ஆனால் நிலம் சமூக வாழ்க்கையின் அடிப்படை, அரசியல் மற்றும் பொருளாதார அமைப்பின் அடிப்படை எனவும் கூறப்படுகிறது. இது பாரதிதாசனின் கோணத்துடன் ஒத்துப்போகிறது எனலாம்.

முடிவுரை:

காணி நிலம் வேண்டும்" என்பது ஒரு பகிர்ந்த உணர்வாகத் தமிழ் இலக்கியத்தில் பலராலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. பாரதி, பாரதிதாசன் ஆகியோர் சமூக நியாயத்தின் பேரில் வலியுறுத்த, வள்ளுவர் உழைப்பின் அடிப்படையில் கூறுகிறார். தொல்காப்பியர் வழியாக நிலத்தின் அரசியல்,சமூகத்தைப், புரிந்து கொள்ளலாம். தொல்காப்பியர் நேரடியாக "நில உரிமை" பற்றி பாடல் வடிவில் குறிப்பிடவில்லை. ஆனால், முதன்மை உரிமை, வாழ்வுரிமைப் பற்றிய சான்றுகள், புறநானூறு, அகநானூறு, நாலடியார் போன்ற சங்க இலக்கியங்களிலும் காணலாம். பாரதியாரின் கண்டிப்பும், பாரதி தாசனின் சமூக விழிப்பும், வள்ளுவனின் அறநெறியும், தொல்காப்பியரின் பண்பாட்டுப் பார்வையும் – அனைத்தும் நிலம் என்பது வெறும் சொத்து அல்ல, அது மனித வாழ்வின் அடித்தளமே தொல்காப்பியரின் பண்பாட்டுப் பார்வையும் – அனைத்தும் நிலம் என்பது வெறும் சொத்து அல்ல, அது மனித வாழ்வின் அடித்தளமே என்பதைக் காட்டுகிறது. இன்று நில உரிமை மீதான கோரிக்கைகள் தொடர்ந்து எழுகின்றன. இந்நிலையில், பழந்தமிழ் அறிஞர்களின் பார்வை சமூக நீதியை நிலைநிறுத்தக்கூடிய வழிகாட்டியாக அமைகிறது.

ஆய்விற்குத் துணை நின்ற நூல்கள்:

1.கழக தமிழ் அகராதி, கழக வெளியீடு, சென்னை.
2.சங்க இலக்கியம் பத்துப்பாட்டு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
3.திருக்குறள், பரிமேலழகர் உரை, கிளாசிக் பப்ளிகேஷன்ஸ், சென்னை.
4. ஜெயம்.அ. சந்திரலேகா வைத்தியநாதன், தமிழ் இலக்கிய வரலாறு, ஜனகா பதிப்பகம், சென்னை, 2011.
5. ஜீவா. த. (பதி. ஆ.இ) மகாகவி பாரதியார் கவிதைகள், படித்துறை புத்தக அறக்கட்டளை, திருப்பத்தூர்

49. பாரதியாரின் படைப்புலகம்

மா. பெத்தாயி

உதவிப்பேராசிரியர்
சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர்

முன்னுரை

பாரதியாரின் படைப்புலகம் என்றால் சுப்பிரமணிய பாரதியாரின் எழுத்துக்கள் மற்றும் அவரது படைப்புகள் அனைத்தையும் குறிக்கும். எனவே கவிதைகள் கட்டுரைகள் பாடல்கள் மற்றும் இதர படைப்புகளை உள்ளடக்கியது.அவரின் படைப்புகளில் தேசிய உணர்வு, சமூகசீர்திருத்தம், பெண்ணுரிமை போன்றகருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை உள்ளடக்கியது. பாரதியார் ஒரு புகழ் பெற்ற தமிழ்க் கவிஞர். இந்திய விடுதலைப் போராட்ட வீரர். இவர் உரைநடைக்கு ஒரு முன்னோடியாகத் திகழ்ந்தார். அவர் மக்களிடையே தேசிய உணர்வைப் பரப்பினார். அதேபோல் பெண் விடுதலை, சாதி மறுப்புப் போன்ற கருத்துக்களையும் வலியுறுத்தினார்,அவற்றை இக் கட்டுரையில் காணலாம்.

பாரதியாரின் பிறப்பு

பாரதியார் 1882 ஆம் ஆண்டு டிசம்பர் 11ஆம் தேதி திருநெல்வேலி மாவட்டம் எட்டயபுரத்தில் சின்னச்சாமி ஐயர் மற்றும் லட்சுமி அம்மாள் ஆகியோருக்கு மகனாகப் பிறந்தார். அவரது இயற்பெயர் சுப்பிரமணியன் ஆகும். தனது இளம் வயதிலேயே கவி பாடும் திறன் பெற்றவர். எட்டயபுரம் சமஸ்தானப் புலவர்கள் பாராட்டி பாரதி என்ற பட்டம் வழங்கினர்.

பாரதியாரின் கவிதைகள்

பாரதியார் பல தேசியக் கவிதைகளையும், பெண்ணியக் கவிதைகளையும், நாட்டு விடுதலைக்கு உரமேற்றும் வகையில் விடுதலைக் கவிதைகளையும், கண்ணன் பாட்டு, குயில் பாட்டு பாஞ்சாலி சபதம் போன்ற காவியத்தையும் எழுதி இருப்பதைக் காணலாம். "நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும் நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும்" இந்தக் கவிதையின் அடிகள் ஒவ்வொன்றும் பெண்ணிய விடுதலை பெறுவதற்கான குறிக்கோளைக் கொண்டவை. அவரது காலத்தில் பெண்கள் அடிமைகளாக எந்த உரிமையுமின்றி நடத்தப் பட்டார்கள். அதன் காரணமாகவே அன்றைய பெண்கள் தம்மை எப்படி மாற்றிக் கொள்ள வேண்டும் என்று எடுத்துக் கூறும் வகையில் இப் பாடலை எழுதினார். "**அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே**". மனிதர்கள் வாழும் நிலையில் எவருக்கும் அஞ்சாமல் உண்மையுடன் வாழ வேண்டும் என்ற கருத்தை இப் பாடலடிகள் உணர்த்துகின்றன. **"அக்கினி குஞ்சொன்று கண்டேன்..".**

எண்ணத்தில் தோன்றும் எரிதலின் சிறுபொறியை மனதில் உறைந்திருக்கும் சிறுமை எனும் மரப் பொந்தில் அந்தச் சிறு பொறியின் சக்தியால் மனதில் சிறுமைகள் மடிந்தது மட்டுமல்லாமல், அச்சம் மடமை துன்பம் பொய் முதலிய தீமைகள் அனைத்தையும் கொண்ட மனம் என்னும் காடே ஒட்டுமொத்தமாக எரிந்தது, பெருமைகள் சிதைந்தழிந்த நெஞ்சம் நற்குணங்கள் பொழிந்து தெளிவுற்றது, இந்நிகழ்வு உணர்த்தும் உண்மை யாதெனின் வாழ்வில் அல்லவை தேய்ந்து அறம் பெருக வைக்க பலன் அளிக்காத ஆயிரம் செயல்கள் செய்வதைக் காட்டிலும் செம்மைப் பட்ட சக்தி வாய்ந்த ஒரே ஒரு எண்ணம் மட்டும் போதும் தீமைகள் எல்லாம் மாய்ந்து துயர் தீரும். எழுச்சிமிக்க எண்ணத்தின் சக்தியின் சிறியது பெரியது என்ற பாகுபாடு இல்லை ஒரே ஒரு எண்ணத்தையோ சொல்லையோ செயலையோ கொண்டு பெரியதொரு மாற்றத்தை தோற்றுவிக்கும் ஆற்றல் மனிதனுக்கு உண்டு. இந்தப் பாடல்கள் ஒவ்வொரு மனிதனும் ஆன்ம ஒலிக்கடலில் ஒரு பகுதியாக அக்கினி குஞ்சே என்றும் அளவிட முடியாத

அவனது ஆற்றலால் இந்த உலகத்தையே மாற்றி விடலாம் என்று பறைசாற்றுகிறது. எனவே சோதி மிக்க சுடர் கவிதை மூலம் வெளிக்காட்டுகிறார் பாரதியார். **தீர்த்தக் கரைதனிலே-தெற்கு மூலையிலே** என்று தன் காதலி கண்ணம்மாவிற்குஉள்ளம் உருகத் தன் காதலை வெளிப்படுத்திக் கழித்த கவிஞன் பாரதி.

பாரதியாரின் கட்டுரைகள்

தமிழுக்குத் தொண்டாற்றியவர்கள் பலர். அவர்களில் பாரதியார் தனக்கென்று தனியிடம் அமைத்துள்ளார். யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம் என்று தமிழை வியந்து போற்றுகிறார். பாரதியார் பண்போடும் பணிவோடும் பகுக்கப்பட்ட பட்டறிவோடும் பெண்ணியம் போற்றுகிறார். பகுத்தறிவினை பாட்டுத் திறத்தாலே இவ்வையகத்திற்குப் பாடம் சொன்னவர்."முறுக்கு மீசையும் நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையும் எளிமையான தோற்றமும் கொண்ட பாரதியார் காலம்" கற்றறியா பாமரருக்கும் நற்கருத்துக்களைத் தன் இலகு நடைக் கவிதைகளால் கொண்டு போய்ச் சேர்த்தக் கவிஞர் ஆவார். தமிழ்ப் பற்றும் தேசப்பற்றும் கொண்ட ஒரு ஒப்பற்ற கவிஞனின் வரலாறு, வாழ்க்கை முறை, தமிழ்ப் பணி, சமூகப் பணி, பெண் விடுதலைக் கருத்துக்கள் போன்றவை கட்டுரையில் அமைந்துள்ளன.

பெண் விடுதலைப் பாடல்கள்

பாரதி வாழ்ந்த காலப் பகுதியில் ஆணாதிக்கம் மேலோங்கி பெண்கள் மீதான அடக்குமுறை அதிகமாகக் காணப்படுகிறது. பெண்கள் கல்வி கற்கக் கூடாது, ஆண்களுக்கு இணையாக வேலை பார்க்கக் கூடாது, சிறு வயது திருமணம், சீதனக்கொடுமைகள் இவற்றுக்கு எதிராக பாரதி குரல் கொடுத்தார்." ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமை என்று எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார் என்று பெண்கள் விடுதலை பற்றியும் மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்" என்று பாடியவர். பெண்கள் சுதந்திரமாக வாழ வேண்டும், கல்வி கற்க வேண்டும், ஆண்களுக்கு இணையாக வேலை செய்ய வேண்டும் இது மட்டும் அல்லாமல் விரும்பியவர்களை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற கருத்தையும் முன் வைத்தார். "வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போம் என்ற விந்தை மனிதர் தலைக்கவிழ்ந்தார்" என்ற வரிகள் மூலமாக வெளிப்படுத்துகின்றார். இதுவே பிற்காலத்தில் பாரிய சமூக மாற்றத்தையும் பெண்கள் சுதந்திரம் அடைய வேண்டும் என்ற விதை பாரதியாரால் போடப்பட்டதாகும்.

முடிவுரை

புதிய இந்தியாவைப் படைப்போம் என்ற நூலில் சுவாமி விவேகானந்தர் உபதேசித்த 'மன்னுயிர் தன்னுயிர்' போல் நினைத்து அன்பு செய்யுங்கள் எல்லோருமே பிரம்மம் என்று சொல்லப்படும் அந்த எல்லையற்ற பரம்பொருளின் பல பாகங்களை என்பதே உணர்ந்து கொள்ளுங்கள் என்பதற்கு ஏற்ற விளக்கமாக வாழ்ந்தவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார். தீண்டாமை தொடர்பான தனது பணிகளை சுவாமி விவேகானந்தரின் அருள்மொழிகளோடு இணைத்து நினைவு கூர்ந்து சுதேசமித்திரன் நாளிதழில் ஜூன் 9 1970 இல் பாரதியார் இப்படி எழுதினார். எந்த சாதியாக இருந்தாலும் அவனுக்கு ஒரு பூணூல் போட்டு காயத்ரி மந்திரம் கற்பித்துக் கொடுத்து விட வேண்டும். பிறகு அவன் பிரம்மனாகவே கருதப்பட வேண்டும். இதுதான் விவேகானந்தர் சொல்லிய உபாயம் இது நல்லதும் கூட. எனவே பாரதி இயற்றிய பாடல்கள் கவிதைகள் தமிழ் இலக்கியம், இசை அன்றாட வாழ்வின் பயன்பாடாக இன்றும் கருதப்பட்டு வருகிறது என்பதை நாம் அனைவராலும் அறிந்து கொள்ள முடிகிறது.

50. பாரதியின் பாடல்களில்மெய்ப்பொருள் உண்மைகள்

திருமதி அம்புஜம் பத்மநாபன்

புதுச்சேரி

மகாகவி பாரதியார் பாடியப் பாடல்கள் உணர்ச்சிப் பெருக்கோடு அமைந்த போதிலும் ஆங்காங்கே வாழ்வியல் உண்மைகளையும் புலப்படுத்துகின்றன. குறிப்பாக மெய்ப்பொருள் உண்மைகளை ஆங்காங்கே அவரது பாடல்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. அவற்றில் சைவசித்தாந்தக் கருத்துக்களும் வெளிப்பட்டு நிற்கின்றன. அவற்றுள் வெளிப்படும் சைவசித்தாந்தக் கருத்துக்கள் சிலவற்றை ஆய்வுநோக்கில் எடுத்துக் காட்டி வெளிப்டுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சக்திப் பாடல்களில் வெளிப்படும் சைவசித்தாந்தம்

யாதுமாகி நின்றாய்- எனக் காளியைக் கூறும் பாரதியார் இங்கே சக்தியே அனைத்துமாகி நிற்கிறாள் என்பதைத் தோத்திரப்பாடல்களில் இடம்பெறும் சக்தி என்னும் தலைப்பில் கூறுகிறார். **துன்பம் இலாத நிலையே சக்தி- உள்ளத்து ஒளிரும் உயர்வே சக்தி** என இவ்வாறு காளியே அனைத்துமாகி நிற்கிறாள் என்று கூறுகிறார். சைவ சித்தாந்தத்தில் சிவன் நிலைச்சக்தியாகவும் (Potential Energy) சக்தி இயங்கு சக்தியாகவும் (Kinetic Energy) கூறப்படுவதுண்டு. இங்கு மாணிக்கவாசகரின் சிந்தனையை எண்ணிப்பார்க்கலாம். மாணிக்கவாசகர் பாடிய திருவாசகம் 51 பதிகங்களையும் 658 பாடல்களையும் கொண்டது. அதன் தொடக்கமாக அமைந்த முதற்பதிகம் சிவபுராணம் ஆகும். சிவபுராணத்தின் முதல் சொல் - நமச்சிவாய வாழ்க - என்பதாகும். நிலைச்சக்தியாகிய சிவனை எடுத்த எடுப்பில் வாழ்த்திய மாணிக்கவாசகர் இயங்கு சக்தியாகிய சக்தியின் அருளால்தான் தமக்கு முக்தி கிடைத்தது என்பதை **செம்மை நலம் அறியாத சிதடரொடும் திரிவேனை** என இறுதிப் பதிகத்தில் கூறுவார். தனக்குக் கிடைத்த இறை அனுபவத்தை, அருளை அம்மையாகிய சக்தி மூலமே இறைவன் வழங்கினார் எனக் கூறி இறுதியில் நிலைச்சக்தியும் இயங்கு சக்தியும் இணைந்தே தனக்கு அருளை வழங்கினர் என்பதை எடுத்துக் கூறுகிறார். அவ்வாறு கூறி சிவசக்தியாகவே இருவரையும் இணைத்து இறுதிப்பாடலாகிய 658 ஆம் பாடலை மாணிக்கவாசகர்நிறைவு செய்கிறார் எனக் கருதலாம்.

சங்கு

சங்கு என்ற தலைப்பில் பாடும் பாரதி, **செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலாம் என்றே எண்ணியிருப்பார்..** என்று பாடுகிறார். இந்தப்பாடல் கூறும் கருத்துக்கள் இன்றைய உலகியலையும் உலக நிலையாமையை உணர்ந்து துறந்தார் நிலையையும் குறிப்பிடுகின்றன. உண்ணும் போது எச்சிற் கையால் காக்கை ஓட்டாதவனை வள்ளுவர் - ஈர்ங்கை விதிராக் கயவர் என்கிறார்(குறள்-1077) ஒருபோதும் வாழ்வதை அறியா அவர் செத்தபோது தமக்குச் சிவ உலகமோ அல்லது வைகுந்தமோ கிடைக்கும் என நம்பி இருப்பார். அந்தக் கயவர்களைச் சாடும் பாரதியார் பித்த மனிதர்கள் எனச் சாடுகிறார். உண்மையான துறவிகள் **பேய்போல் திரிந்து, பிணம்போல் கிடந்து, இட்ட பிச்சையெல்லாம்** .. என இப்படித்தான் இருப்பர் என்கிறார் பட்டினத்தார். பாரதியார் பட்டினத்தார் கருத்தை உள்வாங்கி இவ்வாறு சொன்னார் என்றுநாம் எண்ணலாம்.

அணுக்களாய்ச் சூக்குமமாய்

வெட்டவெளியாய் அறிவாய் வேறு பல சக்திகளைக் கொட்டும் முகிலாய் என்கிறார் பாரதியார். இறைவனே எல்லாமாகி நிற்கிறான் என்பது சைவ சித்தாந்தம். இதையே பாரதி இப்பாடலில் எடுத்துக் கூறுகிறார். சைவசித்தாந்தத்தின் இலக்கியங்களாகத் திகழும் திருமுறைகள் இந்த உண்மையைத் தெளிவாக எடுத்துக் கூறுகின்றன.நாவுக்கரசர் கூறும்போது அரியானை------ எல்லாம் பிறவா நாளே-என்கிறார். (ஆறாம் திரு(முறை)என்கிறார். -வானாகி மண்ணாகி வளியாகி ---- என்சொல்லி வாழ்த்துவனே-என்பது திருவாசகம். அணுவுக் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய் என்பார் ஔவை.

எல்லாம் மாயை

உலகே மாயம் என்பதும் உலகில் தோன்றி மறையும் பொருட்கள் அனைத்தும் மாயை என்பதும் சைவ சித்தாந்தம். -நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே நீங்கள் எல்லாம், சொற்பனம்தானோ பல தோற்ற மயக்கங்களோ- என்கிறார் பாரதியார்.மனைவி மக்கள் வாழ்க்கை எல்லாமே ஒருகாலத்தில் கனவாகப்போய்விடும் என்ற நிலையாமையைக் கூறும் பட்டினத்தார். -மையாடு கண்ணியும்------ கனவாய்ப் பழங்கதையாய் மெல்லவே போனதுவே- என்பார். பற்றுதல் இல்லாத பாவி எமன் வந்து ----- உன்கூட வருமோ மயானம் மட்டும் கண்டாய் என்கிறார் இரெட்டியப்பட்டி சுவாமிகள்.

அன்பே மானுடம்- உயிர்களிடத்தில் அன்புசெய்தல்

எல்லா உயிர்களிடத்தும் அன்பு செய்தல் என்பது சைவசித்தாந்தக் கொள்கையாகும். **மானுடர் உழாவிடினும் வித்து நடாவிடினும்** - உங்களுக்குத் தொழில் இங்கே அன்பு செய்தல் கண்டீர்- என்றார் பாரதியார். சைவசித்தாந்தம் அன்பையும் சிவத்தையும் ஒன்றாகவே கருதுகிறது. அன்பு சிவமிரண் டென்பர் அறிவிலார்--- அன்பே சிவமாய் அமர்ந்திருப் பாரே- என்பது திருமந்திரம். குழந்தைப் பருவத்திலேயே அன்பு பூணவேண்டும் எனத்தொடங்கும் பாரதியார் -உயிர்களிடத்தில் அன்பு வேணும் தெய்வம் உண்மை என்று தான் அறிதல் வேணும் - பல்வகை(2 16/1) என்றும் அன்பில் சிறந்த தவம் இல்லை அன்புடையார் (தோத்திர:1 37/3) அன்பினால் முத்தி என்றான் புத்தன் அந்நாள் (சுயசரிதை:2 38/1) அன்பினை கைக்கொள் என்பான் துன்பம் அத்தனையும் அப்பொழுது தீர்ந்திடும் என்பான் (கண்ணன்:3 10/2) அன்பினை கைக்கொள்ளடா இதை அவனிக்கு இங்கு ஓதிடடா (பிற்சேர்க்கை:14 21/1) அன்பு சிவம் உலக துயர் யாவையும் அன்பினில் போகும் என்றே இங்கு (தேசீய:8 10/1) என அன்பின் படிநிலைகளைப் பலவாறு சொல்கிறார். - அன்பினைப் பெறுவா யாகில் அதர்மங்கள் அனைத்தும் நீங்கி துன்பங்கள் தவிர்ந்து போகும் துயரமிங் குண்டோ சொல்வாய்- என்பார் இரெட்டியப்பட்டி சுவாமிகள்.

சென்றது இனி மீளாது

சென்றது இனி மீளாது மூடரே --- கவலை எனும் குழியில் விழ்ந்து குமையாதீர் என்பது பாரதியின் கூற்று. தோன்றியவை மறைந்தவை தோன்றும் ., எவையும் நிலையானதல்ல என்பதே சைவசித்தாந்தம். இதையே பட்டினத்தார்- பிறந்தன இறக்கும்; இறந்தன பிறக்கும்; தோன்றின மறையும்; மறைந்தன தோன்றும்- என்று கூறுவார்.

மனம்

மனத்தின் தன்மையைக் கூறும் அப்பர் -மனம் எனும் தோணி பற்றி - என்பார்.- பாழான என்மனம்-, கொள்ளித்தேள் கொட்டிக் குதிக்கின்ற பேய்க்குரங்காய்க் கள்ளமனம்- என்றெல்லாம் தாயுமானார் கூறுவார்.- ஆசைக் கயிற்றில் ஆடும் பம்பரம் - என்று மனத்தின் நிலையைப் பட்டினத்தார் காட்டுவார். பாரதியார் மனம் எனும் பெண்ணே வாழி நீ கேளாய் ஒன்றையேப் பற்றி ஊசலாடுவாய்–உன்தனக்கின்பம் ஓங்கிடச் செய்வேன்- என்ற பாடலில் சைவசித்தாந்தம் கூறும் மனத்தின் பேயாட்டத்தை விளக்குகிறார். மனம் எனும் பெண்ணே வாழி நீ கேளாய்,ஒன்றையே பற்றி ஊசலாடுவாய் ,அடுத்ததை நோக்கி அடுத்தடுத்து உலவுவாய்,நன்றையே கொள் எனில் சோர்ந்து கை நழுவுவாய்,விட்டுவிடு என்றதை விடாது போய் விழுவாய்,தொட்டதை மீளமீளவும் தொடுவாய்,புதியது காணில் புலன் அழிந்திடுவாய்,புதியது விரும்புவாய் புதியதை அஞ்சுவாய்,-----இழிபொருள் காணில் விரைந்து அதில் இசைவாய்- என மனத்தின் பல்வேறு கோணல் குணங்களைப் பாரதியார் விளக்கிக் காட்டுவார்.

நிலையாமை

உலகம்நிலையற்றது, இறைவன் ஒருவனே நிலையானவன் என்பது சைவசித்தாந்தம்.

-பாங்கரும் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லியநெறித்தே - (தொல்- பொரு-புறத்-23) என்பார் தொல்காப்பியர்.
மன்னா உலகம் (புறம்-165) என்பது புறநானூறு.
நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறிவாண்மை கடை (திரு-331) என்பார் வள்ளுவர்.

இவற்றையெல்லாம் நன்கு படித்தவர் பாரதி. நிலையிலாதன செல்வமும் மாண்பும் நித்தம் தேடி வருந்தல் இலாமே (பாஞ்சாலி:1 99/3) நானும் ஓர் கனவோ இந்த ஞாலமும் பொய்தானோ (வேதாந்த:12 2/4) போனது எல்லாம் கனவினைப் போல் புதைந்து அழிந்தே போனதனால் (வேதாந்த:12 2/3) சிதைவற்று அழியும் பொருள்களில் சேர்ப்பையோ (தேசீய:24 1/13) மங்கி ஒர் நாளில் அழிவதாம் நங்கள் வாழ்க்கை இதனைக் கடந்ததோ (பாஞ்சாலி:1 139/4)தோன்றி அழிவது வாழ்க்கைதான் இங்கு துன்பத்தொடு இன்பம் வெறுமையாம் இவை - (பாஞ்சாலி:1 140/1)தோன்றி அழிவது வாழ்க்கை இதில் துன்பத்தோடு இன்பம் வெறுமை என்று ஓதும் (பிற்சேர்க்கை:8 23/1) எனப் பலவாறு வாழ்வின் நிலையாமையை ஆங்காங்கே எடுத்துக் கூறுவார்.

இறைவனே எல்லாம்

இறைவன் ஒருவனே எங்கும் இருப்பவன் (Omnipresence) எல்லாம் அறிந்தவன் (Omniscience) எல்லாம் வல்லவன்(Omnipotent) என்பது சைவசித்தாந்தம். தாயுமானார் இறைவனின் இத்தன்மைகளை வெகுசிறப்பாக விளக்குகிறார். அங்கு இங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய் ஆனந்த பூர்த்தி ஆகி (தாயு-1) என்பது அவர்தம் முதற்பாடல். கம்பன் படைத்த இராமகாதையில் யுத்தகாண்டத்தில் வான்மீகி சொல்லாத ஒரு புது படலத்தைக் கம்பன் படைக்கிறான். அதுவே இரணியன் வதைப்படலம். ஆகும். தானே கடவுள் என்று கூறும் இரணியனை மறுத்து அவன் மகன் பிரகலாதன் இறைவன் ஒருவனே கடவுள் மற்றையோர் கடவுளர் ஆகார் எனும்போது- உன்கடவுளை உன்னால் காட்ட முடியுமா எனக்கேட்கிறான் . அவ்வாறு இரணியன் கேட்கும்போது இரணியன் - இதோ இங்கே இருக்கின்ற தூணில் உன்னிறைவன் வெளிப்படுவானா என்று கேட்கிறான். அதற்கு விடையிருக்கும் பிரகலாதன். சாணிலும் உளன் ஓர் தன்மை அணுவினைச் சத கூறு இட்ட (யுத்1:61 3 124/3) எனக்கூறுகிறான். இறைவன் எங்கும் இருப்பவன் எனப் பிரகலாதன் கூறுவதைத்தான் பாரதியார் மிக அழகாகஇவ்வாறு கூறுகிறார். சொல்லடா ஹரி என்ற கடவுள் எங்கே சொல் என்று ஹிரணியன்தான் உறுமிக் கேட்க நல்லதொரு மகன் சொல்வான் தூணில் உள்ளான் நாராயணன் துரும்பில் உள்ளான் என்றான் வல்ல பெரும் கடவுள் இலா அணு ஒன்று இல்லை மஹாசக்தி இல்லாத வஸ்து இல்லை அல்லல் இல்லை அல்லல் இல்லை அல்லல் இல்லை அனைத்துமே தெய்வம் என்றால் அல்லல் உண்டோ(சுயசரிதை(2-15-1) என்பது பாரதியின் கூற்று. பாரதியின் இப்பாடலில் இறைவன் எங்கும் இருப்பவன் எல்லாம் அறிந்தவன் எல்லாம் வல்லவன் என்ற சைவசித்ததாந்தக் கருத்து வெளிப்படுகிறது.

நிறைவாக

சைவசித்தாந்தம் கூறும் மெய்ப்பொருள் உண்மைகளை உணர்ந்தவர் பாரதியார். தொல்காப்பியர் தொடங்கி தாயுமானவர் வரை அனைவரும் சைவசித்தாந்த உண்மைகளை வாய்த்த இடங்கிளில் எல்லாம் தெளிவாகச் சொல்லிச் சென்றனர். வாழையடி வாழையென வந்த மரபில் வந்த பாரதியும் அம்மெய்ப்பொருள் உண்மைகளை உள்வாங்கி ஆங்காங்கே எடுத்துச் சொல்லிச் சென்றார். இக்கட்டுரை பாரதி எடுத்துச்சொன்ன அந்த உண்மைகளை ஓரளவில் எடுத்துச்சொல்ல முயன்றுள்ளது.

பார்வைநூல்கள்

1.தொல்காப்பியம் 2.புறநானூறு 3.திருக்குறள் 4.அப்பர்தேவாரம் 5. திருவாசகம் 6.திருமந்திரம் 7. பட்டினத்தார் பாடல்கள் 8.தாயுமனார் பாடல்கள் 9. இரெட்டியப்பட்டி சுவாமிபாடல்கள் 10.பாரதியார் பாடல்கள்

51. பாரதியின் பாரதமாதா திருப்பள்ளியெழுச்சி



முனைவர்.கு.திலகவதி

ஆங்கில பட்டதாரி ஆசிரியர்

அ.பெ.மே.நி.பள்ளி, தொண்டாமுத்தூர்,

கோயம்புத்தூர்

முன்னுரை:

ஒரு செயலின் தொடக்கம் நன்கு அமையுமானால் அச்செயல் இடையூறு இல்லாமல் இனிது நிறைவு எய்தும் என்பது பொதுவான ஒரு நம்பிக்கை. அதுபோல ஒரு நாளின் தொடக்கமும் நன்கு அமையப்பெறுமானால் அந்நாளில் நிகழப்போகும் எல்லா நிகழ்ச்சிகளும் இன்பமாகவே அமையும் என்று நம்முடைய பழந்தமிழ் மக்கள் கருதினர். பொழுது புலர்ந்தவுடன் இன்னவற்றைப் பார்க்க வேண்டும் இன்னவற்றைக் கேட்க வேண்டும் இன்னவற்றைப் பார்க்கவும், கேட்கவும் கூடாது என்று சிலவற்றை வகுத்து வைத்திருந்தனர். அத்தகைய எண்ணங்களுக்கு வடிவம் கொடுக்கும் நிலையில் எழுந்தது பள்ளி எழுச்சிப் பாடல்கள்.பாரதியார் மகாகவி,தேர்ந்த இசைஞானம் கொண்டவர்.பாரதிப் பாடிய பள்ளியெழுச்சி மிகவும் சிறப்பு வாய்ந்தது.அடியார்கள் இறைவன் மேல் பள்ளிஎழுச்சிப் பாட பாரதி பாரதத் தாய்க்கு பள்ளிஎழுச்சிப் பாடியுள்ளார். அன்றைய காலகட்டத்தின் தேவைக்கேற்பப் பாடப்பட்ட பாரதியின் பாரதமாதா திருப்பள்ளிஎழுச்சியை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

இசைப்புலவன் பாரதி:

"ஆசை தரும் கோடி அதிசயங்கள் வைத்ததிலே.." என்று இசையைக் கொண்டாடியவர் பாரதி. பாரதி தன்னுடைய ஒவ்வொருப் பாடல்களையும் ராகம், தாளம் வகையோடு செய்திருப்பார். காரணம் அவருக்கு இருந்த இசைப்புலமை. எட்டயபுரத்தில் அவர் இருந்தபோது சமஸ்தானத்தின் இசைப் புலவராக பணியாற்றிய சுப்ரம தீட்சிதருடன் பழகி இசை குறித்து நுட்பங்களை நன்கு தெரிந்து கொண்டார்.. புதுச்சேரியில் தங்கி இருந்தபோது மேல் நாட்டு சங்கீதத்தையும் பாரதி கற்றுத் தேர்ந்தார். பல மொழிகள் கற்ற பாரதி **யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்** என்று குறிப்பிட்டதைப் போல பல இசை வடிவங்களைக் கற்றிருந்தாலும் கூட தமிழிசை தான் பாரதியாரின் நெஞ்சுக்கு நெருக்கமாக இருந்தது. தமிழ் இசையையையே அவர் மிகவும் விரும்பினார். அவருடைய பாடல்கள் பெரும்பாலும் பண் என்னும் தமிழிசைப் பெயராலேயே அமைந்திருக்கும்.தமிழிசைக்கு அவர் செய்த பங்களிப்புகளில் இருந்து அவர் தமிழிசை மீது எந்த அளவிற்கு மதிப்பு கொண்டிருந்தார் என்பதை அறிய இயலும். குறிப்பாக சிந்து என்பது மிகவும் எளிதான சாதாரணமான மெட்டாகும். சிந்து மெட்டில் பாரதியார் இயற்றிய பாடல்கள் அனைவரையும் கவரும் வகையில் அமைந்திருக்கும். "எளிய பதங்கள், எளிய நடை எளிதில் அறிந்து கொள்ளக்கூடிய சந்தம் பொது ஜனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினை உடைய காவியம் ஒன்று தற்காலத்தில் செய்து தருவோம் நமது தாய் மொழிக்கு புதிய உயர் தருவோன் ஆகின்றார்" என்று **பாஞ்சாலி சபதத்தின்** முகவுரையில் பாரதி குறிப்பிடுகிறார். பாரதியின் **குயில் பாட்டு** பாரதி இசைக்குக் கொடுத்த மிகப்பெரிய அங்கீகாரம் என்றுக் குறிப்பிடலாம் குயிலின் காதல் கதை என்ற தலைப்பிலே 28 ஆம் வரியிலிருந்து 44 ஆம் வரிவரை 14 வகையான ஓசைகளைப் பட்டியலிடுவார் பாரதி.

"கானப்பறவை கலகலவெனும் ஓசையிலும்.."

ஸ்வரமும் தாளமும்:

ஸ்வரங்கள் இசைக்குத் தாயாக இருந்தால் தாளம் இசைக்குத் தந்தையாக இருக்கும். தாளமும் ஸ்வரமும் ஒன்று சேர்ந்து ஒலித்தால் தான் அது செவிக்கு இனிமை பயக்கும். **"பருந்தொடுன் நிழல் சென்றன்ன இயல் இசைப் பயன் துய்ப்பாரும்"** என்கிறார் கவிச்சக்கரவர்த்தி கம்பர். பாடல் இசை பருந்துடன் நிழல் போல இருக்க வேண்டும் என்கிறார் கம்பர். "நண்ணும் பாட்டினொடு தாளம் மிக நன்றாய் உளத்தழுத்தல் வேண்டும் -பல பண்ணில் கோடி வகை இன்பம் நான் பாடத் திற நடைதல் வேண்டும்" என்பது **கம்பன் கூற்று.** "மண்ணுலகத்து நல்லோசைகள் காற்றிலும் வானவன் கொண்டு வந்தான். பண்ணிசைத்த ஒலிகள் அனைத்தையும் பாடி மகிழ்ந்திடுவோம் உலகெங்கும் ஓசை ஒலிகள் நிறைந்து இருக்கின்றன. அவற்றை இசைத்துப் பாடி மகிழ்வோம்" என்கிறார் பாரதி. என்றும் கவிதையிலே நிலையான இன்பம் அடைந்தேன் என்கிறார் பாரதி. **"பன்னு சுதி நீ எனக்கு பாட்டின் இனிமை நான் உனக்கு இன்னிசை பாட்டினிலே யாதும் பரவசமாய்"** என்று இசையிலே ஆழ்ந்து போய் அதன் இன்பத்தை எல்லாம் நமக்கு அளித்து சுகம் காண்கின்றார்.

பள்ளியெழுச்சி :

பள்ளி என்பதற்கு படுக்கை என்று பொருள் அது ஆகுபெயராய் உறக்கத்தை உணர்த்தி வரும். எழுச்சி என்பதற்கு எழுப்புதல் என்று பொருள் அதாவது உறக்கத்தில் இருந்து எழுப்புதல் என்று பொருள்படும். பள்ளியெழுச்சியைக் குறித்து தொல்காப்பிய புறத்திணை இயல் **துயிலெடை நிலை** என்று பெயர் சூட்டி பேசுகிறது பாடாண் திணையைப் பற்றி விளக்கும் நூற்பாவில் **"தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச் சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்"** (தொல்-புறத்-36) என்றுக் குறிப்பிடுகிறார் தொல்காப்பியர். புறப்பொருள் வெண்பா மாலையில் ஐயனாரிதனார், "அடுதிறல் மன்னரை யருளிய வெழுகெனத் தொடுகழன் மன்னனைத் துயிலெடுப் பின்று (புறப்பொருள் வெண்பாமாலை பாடாண் -9) எனக் கொழுக்கூறி அதற்கு விளக்கமாக **"அளந்த திறையா ரகலிடத்து மன்னர்..."** என்ற வெண்பாவையும் குறிப்பிடுகிறார். புறநானூறு போன்ற சங்கப் பாடல்களிலும், சிலப்பதிகாரத்திலும் பள்ளியெழுச்சி பற்றியக் குறிப்புகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. **"ஞாலங் காவலர் கடைத்தலைக் காலைத் தோன்றினும் நோகோ யானே"(புறம் -225), "அன்ன மென்னடை நன்னீர்ப் பொய்கை... " (சிலம்-IV- 72- 79)** என்று சிலம்பின் அடிகளும் நற்காலையில் பள்ளியெழுச்சி அக்காலத்தில் பாடப்பட்டுள்ளது என்பதை உணர்த்துகின்றன. இது போன்ற பள்ளிஎழுச்சிப் பற்றியக் கருத்துக்கள் முக்கால இலக்கியங்களில் ஆங்காங்கே காணப்படுகின்றன. இருப்பினும் இத்தொகுதிக்குத் **திருப்பள்ளி எழுச்சி** என்று முதன் முதலில் பெயர் சூட்டிய பெருமை வான்கலந்த **மாணிக்கவாசகருக்கே** உரியது. அவருக்கு பிறகு தான் பல புலவர்கள் அவரை அடியொற்றி பள்ளியெழுச்சிப் பாடல்களைப் பாடினர். சைவத்தில் மாணிக்கவாசகரும் வைணவத்தில் தொண்டரடிப் பொடியாழ்வாரும் திருப்பள்ளி எழுச்சி இயற்றி பக்தி இலக்கியத்தில் புது எழுச்சியை உண்டாக்கினர்.முருகன் திருப்பள்ளிஎழுச்சியை திருப்போரூர், சிதம்பரசுவாமிகளும், அருட்பெருஞ்சோதி திருப்பள்ளி எழுச்சியை வள்ளலாரும் இயற்றினர்.

பாரதமாதா பள்ளிஎழுச்சி:

அடிமைத் தலையில் சிக்கித் தவித்த பாரத அன்னையை துயிலெழுப்பும் வகையில் அமைந்ததுதான் பாரதியாரின் பாரத மாதா திருப்பள்ளி எழுச்சி. பாரதியின் திருப்பள்ளி எழுச்சி அடிமை மோகத்தைத் தகர்த்திட எழ வேண்டிய உணர்ச்சி வேகத்தை உயிரோட்டமாய் உரக்கச் சொல்வதாக அமைந்திருக்கும்.

பள்ளிஎழுச்சி பாடிய கதை:

பாட்டுத் திறத்தாலே இவ்வையத்தைப் பாலித்திட வேண்டும் என்ற பாரதி பள்ளியெழுச்சிப் பாடியக் கதை மிக சுவாரசியமானது. பாரதியின் உள்ளத்தில் உதித்த பாடல்கள் உருவான சந்தர்ப்பங்கள் மிகவும் அருமையானவை. இவை தோன்றிய காரணங்களை பாரதியாருடன் இருந்து பாரதி மேல் கொண்டிருந்த பக்தியால் அவரிடம் அன்பைப் பெற்று அவருடனே இருந்த **ஸ்ரீ குவளை கண்ணன்** அவர்கள் 1938 ஹிந்துஸ்தான் பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் இவ்வாறு குறிப்பிடுகிறார். குவளைக்கண்ணன் அவர்கள் ஒருமுறை பாரதியாரை இந்த ஊரில் ஒரு நல்ல மடு இருக்கிறது அங்கு சென்று குளித்து வரலாம் என்று கேட்கிறார். பாரதியாரும் மிக்க மகிழ்ச்சியுடன் அங்கு செல்வதற்கு ஒத்துக்கொண்டு கிளம்புகிறார். போகும் வழியில் நஞ்சை வயல்களும் தென்னந்தோப்புகளும் அவற்றின் செழுமையும் பாரதியை மிகவும் உந்தித் தள்ளின. குயில் பாட்டுக்கு அடிப்படையான கருத்துக்கள் இந்தக் காட்சிகளில் தான் உதயமாகியது என்று குவளைக்கண்ணன் குறிப்பிடுகிறார். அன்று குளியலை முடித்து விட்டு வீட்டிற்கு திரும்பினர். இரண்டு நாட்கள் இப்படியே போயிற்று. மூன்றாவது நாள் பாரதி வீட்டிற்கு அவரால் போக இயலவில்லை. இயற்கைக்காட்சிகளில் மனதை பறிகொடுத்திருந்த பாரதி தானே வந்து குவளைக் கண்ணனின் வீட்டின் கதவைத் தட்டுகிறார். குவளைக்கண்ணன் "அம்மா இவர்தான் பாரதி" என்று தன் தாயிடம் அறிமுகப்படுத்துகிறார். கதவைத் திறந்து உள்ளே அழைத்து உட்கார சொன்னப் பிறகு "பையா பாரதி பாரதி என்று சொல்கிறாயே அவரை சுப்ரபாதம் சொல்லச் சொல்லு பாப்போம்" என்றார். அதற்கு பாரதி "சுப்ரபாதம் என்றால் என்ன?" என்று கேட்கிறார்.உடனே தாயார் **"சுப்ரபாதம் என்றால் என்ன என்று தெரியவில்லை இவ்வளவுதானா உன் பாரதி"** என்று கேட்டுவிட்டு உள்ளே சென்று விட்டார். பாரதிக்கு மனதில் நிம்மதி இல்லை. மடுவிற்கு செல்லும் வழியில் குவளைக் கண்ணனிடம் சுப்ரபாதத்திற்கு பொருள் கேட்டுக் கொண்டே வந்தார். சமஸ்கிருதத்தில் சுப்ரபாதம் தமிழில் திருப்பள்ளி எழுச்சி என்று குவளைக் கண்ணன் குறிப்பிட திருப்பள்ளி எழுச்சியில் ஒரு பாட்டு சொல்ல கேட்கிறார். குவளைக் கண்ணன் சொல்ல அதைக் கேட்டு அடுத்த நாள் பாரத மாதாவின் திருப்பள்ளி எழுச்சியை இயற்றி குவளைக் கண்ணனின் தாயாரிடம் பாடிக் காட்டினார்.

பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி:

பாரதியாரின் பாரதமாதா திருப்பள்ளி எழுச்சிப் பாடல் பாரத தேசத்தை துயில் எழுப்பி அதன் விடுதலைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் பாடுபட மக்களை அழைக்கும் பாடலாக அமைந்துள்ளது. இப்பாடலில் பாரதியார் பாரத மாதாவை மட்டும் எழுப்பவில்லை பாரத மக்களையும் விழித்தெழுந்து நாட்டின் வளர்ச்சிக்காக உழைக்குமாறுக் கேட்டுக்கொள்கிறார். **"பொழுது புலர்ந்தது யாம் செய்த தவத்தால்"** என்று தொடங்கும் முதல் பாடலில் பாரத மாதாவை எழுப்பும்போது மக்கள் செய்த புண்ணியத்தால்தான் விடியற்காலை எழுந்துள்ளது என்று பொருள் விளங்குமாறு குறிப்பிடுகிறார். இருள் நீங்கி ஒளி பரவி,அறிவாகிய சூரியன் உதித்து, அறியாமை என்னும் இருளின் கூட்டங்கள் நீங்கிவிட்டன.**நீ எழுந்தருள் தாயே**! என்று அழைக்கின்றனர் பாரத மக்கள். சுதந்திரப் போராட்டத்தின் தொடக்கத்தைக் குறிப்பதாக வெள்ளி சங்கு முழங்குவது போல சுதந்திரத்திற்கான குரல் எங்கும் ஒலிக்கிறது என்று குறிப்பிடுகிறார். **"வீதியெல்லாம் அணு குற்றனர் மாதர்!"** என்ற வரிகளில் பெண்கள் வீதிகளில் ஆண்களோடு சேர்ந்து சுதந்திரப் போராட்டத்தில் கலந்து கொள்ள வருகிறார்கள் என்று அன்னையின் சிறப்பை **"அள்ளிய தெள்ளமு தன்னை எம் அன்னை! ஆருயிரே! பள்ளி எழுந்தருளாயே** என்னும் வரிகளில் எங்கள் அன்னையே நீ எங்களை ஆளும் அமுதமாக இருக்கிறாய் பள்ளி எழுந்து வாருங்கள் என்று அன்னையை அழைத்து தமிழை அமுதமாக்கி வழங்கி இருப்பார் பாரதி.

பாடலின் முக்கியத்துவம்:

பாரதியார், பாரத தேசத்தை ஒரு பெண்ணாக உருவகித்து, அவளை எழுப்புவதாக இந்தப் பாடலைப் பாடியுள்ளார்.பாரத மாதாவின் உறக்கம், அடிமைத்தனத்தையும், அறியாமையையும் குறிக்கிறது.அவள் விழித்தெழுந்து, சுதந்திர காற்றை சுவாசிக்க வேண்டும் என்பதே பாரதியாரின் விருப்பம்.இந்தப் பாடல், பாரத மக்களின் உள்ளத்தில் விடுதலை வேட்கையைத் தூண்டும் ஒரு புரட்சிகரமான பாடலாகக் கருதப்படுகிறது. அரக்கர்களை அழிக்கும் அன்னை சக்தியைப் போல சுதந்திரப் போரில் எதிரிகளை அழிக்க வெகுண்டு புறப்படு என்று பாரதமாதாவைக் கூவி அழைக்கிறார் பாரதி. **"மதலையர் எழுப்பவும் தாய்துயில் வாயோ:..".** குழந்தைகள் எழுப்பியும் நீ உறங்குவாயா? இந்த உலகத்தைப் பெற்றவளாகிய நீ இதை உணரவில்லையா? மழலை மொழியில் பேசும் குழந்தைகளுக்கு இரங்காதவள் நீயோ? என்று அடுக்கடுக்காகக் கேள்விகளை எழுப்பி அவள் அவ்வாறு இல்லை என்று குழந்தைகளின் குரலுக்கு செவிசாய்ப்பவளே பாரத அன்னை என்று உ?ணர்த்துகிறார் பாரதி. **ஆருயிரே, இன்னுயிரே, ஈன்றவளே**,என்றெல்லாம் கொஞ்சி அழைக்கும் பாரதி, **"கோ மகளே! பெரும் பாரதர்க்கரச": பேரரசியே!** என்று இந்தியநாட்டின் அரசியாக பாரதமாதாவை அழைத்து அவளுக்கிருக்கும் பொறுப்பினைச் சுட்டிக்காட்டுகிறார்.

முடிவுரை:

பாரத நாட்டுக்கே இந்த நாட்டின் பெயருக்கே ஒரு தனி ஆற்றல் உள்ளதை இப்படி உணர்த்தியவர் பாரதி. **"பாரத தேசமென்று பெயர் சொல்லுவர்"** "தொன்று நிகழ்ந்தது அனைத்தும் உணர்ந்திடு" என்னும் வரிகளில் குழந்தைகளுக்கு தாய்நாட்டைப் போற்றும் பண்பு தானாக வந்திடும்.!. நம் மக்கள் வீறுபெற, அன்னிய சக்திகள் நம்மீது மீண்டும் ஆளுமை செலுத்தாமல் இருக்க, பாரதியின் இப்பாடல்கள் வழிவகை செய்தன. இவற்றை அடியொற்றி பாரதமாத திருப்பள்ளி எழுச்சியில் அன்னையை எழுப்பும் குழந்தையாக விடுதலையின் அவசியத்தை வலியுறுத்தும் வகையில் இயற்றிய இப்பாடல்கள் சிறப்பு வாய்ந்தவை. இன்றைய சூழலுக்கும் இப்பாடல்கள் பொருந்திப் போவது பாரதியின் படைப்பாற்றலுக்கும் தொலைநோக்குப் பார்வைக்குமான சான்று.

துணைநூற்பட்டியல்:

1.உதயம்,கி.வா.ஜகந்நாதன், (தொகுப்பாசிரியர்),அல்லயன்ஸ் கம்பனி,மயிலாப்பூர்,1947.
2.கம்பராமாயணம்,கம்பர்,மணிவாசகர் பதிப்பகம்,2018
3.தொல்காப்பியம்,தொல்காப்பியர்,இளம்பூரனார் உரை,கௌரா பதிப்பகக் குழுமம்,2017
4.புறப்பொருள் வெண்பாமாலை,ஐய்யனாரிதனார்,புலியூர் கேசிகன் உரை,சாரதா பதிப்பகம்,2009
5.சிலப்பதிகாரம்,இளங்கோவடிகள்,உரையாசிரியர்,ந.மு.வேங்கடசாமி நாட்டார்,கௌரா பதிப்பகம்,2009
6.பாரதியார் கவிதைகள்,சுப்பிரமணிய பாரதியார்,திருமகள் நிலையம்,2021

52. பன்முகப் படைப்பாளி பாரதி (தீ)



பா. சுகுணா எம்.ஏ பி.எ.

ஆசிரியை, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,விராலியூர்,
கோவை மாவட்டம்

முன்னுரை

பாரதி (தீ) பாரதி ஒரு கவிஞர், எழுத்தாளர், பத்திரிக்கையாளர், விடுதலை வீரர், சமூக சீர்திருத்த வாதி என பன்முகத் திறன் கொண்ட தமிழ் மொழிப் பற்றாளர். "*சுப்பிரமணிய பாரதி. மகாகவி பாரதி என்ற சிறப்பு பட்டம் பெற்ற இவர் ஒரு மகத்தான கவியும் ஆவார். **"இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும். மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமை இல்லை.**"என்ற கருத்தினை வலியுறுத்தி நவீன தமிழ்க் கவிஞர்களின் முன்னோடியாகத் திகழ்ந்தவர். **"இந்தியாவிலேயே முதன் முதலாக நாட்டுடைமை ஆக்கப்பட்ட இலக்கியம் பாரதியாருடையதாகும்.** பல மொழிகளிலும் புலமை பெற்ற பாரதி தமிழ் மொழியின் மீது தீராத பற்று கொண்டிருந்தார். இவரது படைப்புகள் அரசியல் சமூகம் மற்றும் ஆன்மீகக் கருப்பொருள்களை உள்ளடக்கியதாக விளங்கின. பாரதி இயற்றியப் பாடல்கள் மற்றும் கவிதைகள் தமிழில் இலக்கியம், இசை என அன்றாட வாழ்க்கையில் பெருவாரியாக பயன்பாட்டில் உள்ளதை எண்ணிப் பெருமிதம் கொள்வோம்.

மகாகவியின் சிறப்புகள் :

பாரதி தனது பதினோராம் வயதில் எட்டயபுரம் சமஸ்தான புலவர்கள் சபையில் "பாரதி" என்ற சிறப்புப் பட்டத்தை பெற்றார். சேதுபதி பள்ளியில் தமிழ்ப் பண்டிதராகவும், அதன் பின்னர் சுதேசமித்திரன் பத்திரிக்கையில் உதவி ஆசிரியராகவும் பணியாற்றினார். "இந்தியா" வார பத்திரிகையின் பொறுப்பாசிரியர் ஆகவும், "பால பாரதா" எனும் ஆங்கில பத்திரிக்கையும் தொடங்கி நடத்தி வந்தார். அவரது முதல் கவிதை நூல் சுதேச கீதங்கள் (1908 இல்) வெளியாகியது.1918 முதல் 1920 வரையான காலகட்டத்தில் கடையத்தில் வசித்து வந்தார். அது சமயம் அவர் நூற்றுக்கணக்கான சிறு கவிதைகளோடு **"கண்ணன் பாட்டு, குயில் பாட்டு**, பாஞ்சாலி சபதம் ஆகிய தொடர் கவிதைகளையும் எழுதியுள்ளார். தமிழ் மொழியின் மீது கொண்ட அதீதப் பற்றினால் "சின்ன சங்கரன் கதை, ஞானரதம், சந்திரிகையின் கதைப் போன்ற குறுங்கதைகளையும் மிகச் சிறப்பாக எழுதியுள்ளார்.தாகூரின் சிறுகதைகளைத் தமிழில் மொழிபெயர்த்தும் வழங்கியுள்ளார் பாரதி.

இலக்கியப் பணி

பாரதி தம் தாய்மொழி தமிழில் மீது அளவற்ற பற்றுக் கொண்டவர். பன்மொழிப் புலமை பெற்ற பாவலரான **இவர் "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்"**என அனைத்து மொழிகளிலும் தமிழ் மொழியே சிறப்புப் பெற்றது என்பதை தனது கவிதைகளின் மூலம் வெளிப்படுத்தி பெருமிதம் கொண்டுள்ளார். சமஸ்கிருதம், வங்காளம், இந்தி, பிரான்சியம் ஆங்கிலம் போன்ற பன்மொழி தனிப் புலமை பெற்றவர் பாரதி. அம் மொழிகளில் உள்ள தனிச்சிறப்பு மிக்க படைப்புகளை தமிழ் மொழியில் மொழியாக்கம் செய்தவர் பாரதி. மேலும் அவர் பழந்தமிழ் காவியங்களின் மீது தனி ஈடுபாடு கொண்டிருந்தார். அழகியல் உணர்வும், தத்துவ சிந்தனைகளும் ஒருங்கே அமையப்பெற்ற தனித்திறன் மிக்கவர் பாரதி. தேசிய கவி என்ற முறையிலும்

உலகம் தழுவிய சிந்தனைகளை அழகியலுடனும், உண்மையுடனும் கவி இயற்றியதினாலும் இவர் உலகின் சிறந்த கவிஞர்களுடன் ஒப்பிடப்படும் சிறப்புப் பெற்றவராக இன்றளவும் விளங்குகின்றார். அண்மைக்காலத் தமிழில் தன்னிகரற்ற "கவியேறு" என்று இவர் பலராலும் போற்றப்படுகின்றார்.

தேசியக்கவி

"வந்தே மாதரம் என்போம்.." விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்தினால் பாரதி "தேசிய கவி" யாகப் போற்றப்படுகின்றார். **"மண்ணும் இமயமலை எங்கள் மலையே.."** என்ற சீரிய வரிகளைப் படைத்த தொலைநோக்குச் சிந்தனையாளர் எங்கள் பாரதி. தன்னுடைய தாய் நாட்டை நினைத்துப் பெருமை கொண்டதோடு மட்டுமன்றி அதன் எதிர்காலம் எவ்வாறு இருக்க வேண்டும் என்றும் கூர்நோக்குப் பார்வையும் தொலைநோக்கு சிந்தனையும் கொண்டு தனது வரிகளை வெளிப்படுத்தியவர் நம் பாரதி. **"பள்ளித்தலம னைத்தும் கோயில் செய்குவோம்"** என்றதுடன் "வங்கத்தில் ஓடிவரும் நீரின் வகையால் மையத்து நாடுகளில் பயிர் செய்யும் நதிநீர் இணைப்புத் திட்டத்தை விடுதலைக்கு முன்பே கனவு கண்ட முற்போக்குச் சிந்தனையாளர் பாரதி. சிறு பிள்ளைகள் முதல் முதியவர் வரை அனைவருக்கும் உதவும் ஒரு அறிவுசார் புதுக்கவிதை இவரது சிறந்த படைப்பான "பாப்பா பாட்டு" ம் ஒன்றாகும்.

பெண்ணுரிமைப் போராளி

"பெண் அடிமை தீர்வு மட்டும் பேசும் இத்திருநாட்டில் மண்ணடிமை தீருதல் முயற்கொம்பே" எனப் பெண்ணுரிமையை வலியுறுத்தி பெண்மையின் அடிமைத்தனத்தை அகற்றிட தனது எழுச்சிமிகு எண்ணங்களை எழுத்தினிலே படைத்திட்டார். **"போற்றி போற்றி ஓராயிரம் போற்றி நின் பொன்னடிக்கு பல்லாயிரம் போற்றி கான்"** என்ற பாரதி **பெண்மை வாழ்கவென கூத்திடுவோமடா"** என்றார். பெண்களின் கல்வி அறிவிற்காகச் சட்டங்களைச் செய்திடவும் கனவு கண்ட எங்கள் பாரதி. **"*சாதம் படைக்க மட்டுமல்லாது தெய்வச்சாதிகள் படைக்கவும் பெண்கள் தகுதி படைத்தவர்கள் என முழக்கமிட்டார் பாரதி(தீ)**

முடிவுரை

மகாகவியின் நீங்கா நினைவுகள். தமிழ்நாடு அரசு மகாகவி பாரதியாரின் நினைவினைப் போற்றும் வகையில் பாரதியார் நினைவுச் சின்னங்களாக எட்டயபுரத்தில் அவர் வாழ்ந்த இல்லம்,சென்னை திருவல்லிக்கேணியில் அவர் வாழ்ந்த இல்லம், புதுவையில் அவர் வாழ்ந்த இல்லம் ஆகிய இல்லங்களை பாரதியின் நினைவு பொக்கிஷங்களாக இன்றளவும் பேணிப் பாதுகாத்து வருகின்றன. இவர் பிறந்த ஊரான எட்டயபுரத்தில் மகளிர்க்கான பல் தொழில்நுட்பக் கல்லூரியும் பாரதி மணிமண்டபமும் இதன் மைய மண்டபத்தில் மகாகவி பாரதியின் ஏழு அடி உயர சிலையும் அமைக்கப்பட்டு நீங்கா நினைவுச் சின்னங்களாக அனைவரும் கண்டு இன்புற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

மகாகவியின் சிறப்பு பெயர்கள்

உலகக் கவி, அமரகவி, தமிழ்க்கவி, வரகவி, மக்கள் கவிஞர், முன்னறிப்புலவன், விடுதலைக் கவி, புதுக்கவிதை முன்னோடி, பைந்தமிழ்த் தேர்ப்பாகன், சிந்துக்குத் தந்தை, நீடு துயில் நீக்கப் பாடி வந்த நிலா, காடு கமழும் கற்பூரச் சொற்கோ, தற்கால

இலக்கியத்தின் விடிவெள்ளி போன்ற எண்ணற்ற சிறப்புப் பெயர்களை சூடி பார் போற்றும் பைந்தமிழ் பாவலராக விளங்கியவர் பாரதி. அவர்தம் பாடலுக்கு தாமே மெட்டு அமைத்து மேலும் மெருகூட்டியவர் பாரதி. முதன் முதலில் தமிழில் கருத்து படங்கள் வெளியிட்டவரும் பாரதியே. "புவியனைத்தும் போற்றத் தமிழ் மொழியைப் புகழில் ஏற்ற கவியரசன் இல்லை என்ற குறை தன்னால் தீர்ந்தது என்றும் **"தனக்குத் தொழில் கவிதை! நாட்டுக்கு உழைத்தல்! இமைப் பொழுதும் சோராதிருத்தல்!"** என்று தனது எழுத்துப் பணியை எண்ணிப் பெருமிதம் கொண்டிருந்தவர் பாரதி.

நமக்கு கிடைத்த இலக்கியங்கள்

இதிகாசங்கள் முதல் அமரகவி பாரதி படைத்த அனைத்து விதமான படைப்புகளும் அதன் பொருளும் புதியது தான் என்கின்றார் பாரதி. படித்தவர்களுக்கு மட்டுமே விளங்கும்! விளங்க வேண்டும் என்று எழுதப்பட்ட கவிதைகளை அனைவருக்குமானதாக மாற்றி வைத்துப் பெருமை மகாகவி பாரதியையே சாரும். நாம் வாழ்வில் அன்றாடம் கடைபிடிக்க வேண்டியவற்றையே மந்திரச் சொற்களாகவும் தனது கவிதைகளின் வைர வரிகளாகவும் வடித்துச் சென்றிருக்கிறார் மகாகவி பாரதி. நாம் அதன் வழி வாழ்வதின் பொருட்டும், அவரது சிறந்த படைப்புகளை பாதுகாத்து, நம் வாழ்விலும் நமக்கு அடுத்து வரும் சந்ததியினருக்கும் அளித்து **"மொழிச் சொற்கள் பொதுவுடமை அழிய விட்டால் அது மடமை அருந்தமிழை அள்ளிப் பருகி அறம் வளர்த்தல் நம் கடமை!!"** நாம் என்றென்றும் பாரதியை நினைவோம்!

மேற்கோள் நூல்கள்

1.மகாகவி பாரதியின் தேசிய கீதங்கள் (இந்தியா வார இதழ் 1905-பாரதி பிரசுரம்)
2.பாரதியார் கவிதைகள்,பாரதியார்,திருமகள் நிலையம்,2019,சென்னை.
3.பாஞ்சாலி சபதம் -பாரதியார்,பாரதி பிரசுராலயம்.(1921),சென்னை.

53. மனத்தை உழுத மகா(ன்)கவி



தேவமனோகரி.S

தமிழ் பட்டதாரி ஆசிரியர்,
தி பி எஸ் பிபி மில்லேனியம் பள்ளி,
சோமையம்பாளையம்,கோயம்புத்தூர்

முன்னுரை

நிலத்தை உழுதால் நெல்மணிகள், நவதானியங்கள் கிடைக்கும். மனதை உழுதால் சிந்தனை முத்துக்கள், கவிதைக் சொத்துக்கள் விளையும். அவை உழுபவனுக்கும் அவனைச் சார்ந்தவர்களுக்கும் மட்டுமின்றி இக்காலத்தவருக்கும், எந்நாட்டவர்க்கும், இவ்வுலகில் இருப்பவர்களுக்கும் பயன்படும். ஏற்றமிகு சிந்தனைப் பேழைகளாக ஒளிரும். நிலத்தை உழுவதைப் பிறரும் பார்க்கலாம். உழுபவனுக்கும் அவனைச் சார்ந்தவருக்கும் அதன் வளர்ச்சியும் மலர்ச்சியும் புலப்படும். மனத்தை உழுவதைப் பார்க்க முடியாது. ஆனால் சிந்தனைகளின் வளத்தையும், நலத்தையும் ஊகித்து உணர முடியும். அகப்பொருளான மனத்தை உழுது மாட்சிமிகு கருத்துகளையும், நீதிநெறி முறைகளையும் உலகுக்கு உணர்த்துவது தான் மகத்தான செயல்; அத்தகைய செயற்கரிய செயல்களைச் செய்த சான்றோர்களைத்தான் மனத்தை உழுத மகான் என மானுடம் சொல்கிறது. மனத்தை உழுத மகான்களில் மணிமுடியாகத் திகழ்பவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்!

காலத்தின் கட்டாயத்தால் விடுதலை இயக்கப் பாடல்களை மிகுதியாகப் பாடிய பாரதியார், காலங்கடந்து நிற்கும்-பொதுமைச் சிந்தனைகளைப் புலப்படுத்தும் புதுமைப் பாடல்களை - புரட்சிப் பாடல்களை எழுச்சியோடு பாடியுள்ளார். அவற்றை, அனைவரும் நாளும் பின்பற்றி நடந்தால் தாம் உயர்வதோடு, தம்மைச் சார்ந்தாரையும் உய்வித்து, நாட்டையும் முன்னேற்றலாம்; ஈமுதாய விழிப்புணர்வும் பொறுப்புணர்வும் மேலோங்கும்; தனிமனித மேம்பாடும் பொதுநல வளர்ச்சியும் ஏற்படும். மரபுக்கும் புதுமைக்கும் பாலங்கட்டிய பாரதி மானிடம் போற்றும் மகத்தான சிந்தனைகளை வழங்கியுள்ளார். அவற்றுள் சிலவற்றை விளக்குவதே இக்கட்டுரை நோக்கமாகும்.

மனத்தை உழுத மகானின் மணிமொழிகள்

அறிவைப் பெறு

விலங்கினின்று மனிதனை வேறுபடுத்திக் காட்டுவதே ஆறாம் அறிவான பகுத்தறிவு. மனிதன் தன்னை அழிவிலிருந்து காப்பாற்றிக் கொண்ட சிறந்ததொரு ஆயுதமாகப் பயன்படுத்துவது அறிவு. உலகிலுள்ள அனைத்தையும் அடைவதற்கு அரியதோர் கருவி அறிவு. பின்னர் நிகழவிருப்பதை முன்னரே அறியச் செய்யும் ஆற்றல் மிகும் சாதனம் அறிவு – என அறிவின் பயன்களை அடுக்கி உரைக்கிறார் திருவள்ளுவர்,

" அறிவு அகற்றக் காக்கும் கருவி செருவார்க்கும்
உள்ளழிக்க லாகா அரண் " (குறள் – 421)
" அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர் " (குறள் – 430)
" அறிவு உடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர் " (குறள் -427)

அறிவின் ஆற்றலையும், அதற்கு உரமூட்டி ஒளி கொடுக்க வல்லது கல்வி என்பதை நன்குணர்ந்த பாரதியார் கல்வியின் இன்றியமையாமையைப் பல பாடல்களில் பாடியுள்ளார். கல்வியை இளமைப் பருவம் முதல் கற்றல் வேண்டும். அப்போதுதான் அது பசுமரத்தாணி போலப் பதியும். தினமும் காலை நேரத்தில் படிப்பது சாலச்சிறந்தது. உரைநடை மட்டுமின்றி இசையுடன் கற்பது ஏற்றம் உடைத்து என்கிறார். இதை விளக்க நினைத்த கவிஞர்

" காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு".

இவ்வாறு பாப்பாவுக்குச் சொல்கிறார். விளையாட்டுக் கல்வி உடலுக்கு உறுதியையும் மனதிற்கு துணிவையும் தரவல்லது. ஒவ்வொரு நாளும் தவறாமல் படிப்பு, பாட்டு, விளையாட்டு என மூன்றிலும் பயிற்சி பெற்றால் அறிவு, பல்துறையில் வளர்ந்தோங்கும். பயமற்ற கல்வியைப் பெற வேண்டும். அதற்கு கல்வி பயில்வோரும், கல்வி கற்பிப்போரும் பண்பின் நிலைக்களமாகத் திகழ வேண்டும். அப்போது தான் ஏற்படும் ஐயங்களை தீர்த்துக் கொள்ள முடியும். ஏன்? எப்படி? என்ன ? எப்போது? எங்கே? யார்? என்ற ஆறு வினாக்களுக்கு விடை பெற முடியும். அதற்கு அறிவைத் தெய்வமாக இவ்வாறு

" திருவளர் வாழ்க்கை, கீர்த்தி, தீரம், நல்லறிவு, வீரம் ..."

வழிபட வேண்டும் என்கிறார் கவிஞர்.

ஆற்றலை வளர்

மனிதன் நிறைந்த அறிவைப் பெற்றால் மட்டுமே போதாது; பெற்ற அறிவை பல்துறைத் திறமைகளை வளர்க்க பயன்படுத்துதல் வேண்டும். எந்தத் துறையில் திறமையிருக்கிறதோ அந்தத் துறையில் முழுக் கவனம் செலுத்தி உழைக்க வேண்டும். உழைப்பே உயர்வின் வித்து. உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ? பாடுபடுபவர்களுக்கே இந்தப் பாருலகம் சொந்தமாகும். நம் ஆற்றலை எப்படி வளர்த்துக் கொள்ள வேண்டும் என்பதைப் பட்டியல் இடுகிறார் மகாகவி.

" இரும்பைக் காய்ச்சி உருக்கிடு வீரே!
யந்திரங்கள் வகுத்திடு வீரே!"

ஏதேனும் ஒரு தொழிலில் வல்லுநராகத் திகழ்ந்து அதில் வெற்றி பெறுபவரே ஆற்றல் நிறைந்தவர்களாகத் திகழ்வார்கள். உடல் உழைப்பிலும் உள மகிழ்ச்சியிலும் சிறந்து வையத்துள் வாழ்பவரே நம் கண் முன் வாழும் தெய்வமாகக் கருதப்படுவர் என்பதைத் தெளிவுபடுத்துகிறார் பாட்டுக்கொரு புலவர் பாரதியார். இதனை

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்" (குறள் – 50)

என்னும் திருக்குறள் வலியுறுத்துகிறது.

இல்லறம் பேண்

அறிவைப் பெற கல்வி கற்று, அதன் பயனால் ஆற்றலை வளர்த்துத் தொழிலில் ஈடுபட்ட பின் ஒருவன் வாழ்க்கைத் துணையை நாடுகிறான். அந்த வாழ்க்கைத் துணையுடன் பெருமதிப்புக் கொண்டு இல்லறம் பேணுகிறான். பின்னர் மகப்பேறு பெற்று பிள்ளைகளை வளர்த்து சமுதாயம் தழைக்கச் செய்கிறான். இது காலச்சக்கரமாகவே சுழல்கிறது.

"காலம் என்பது கறங்குபோல் சுழன்று"- (மனோன்:வரி 94-96)

அத்தகைய இல்லறத்தினை நல்லறமாக்கும் நாயகன் - நாயகி இருவரும் உயர்வு தாழ்வின்றிச் சமமெனக் கருதி கருத்தொருமித்தவராய் மனம் பொருந்திய மணம் புரிய வேண்டும். இதையே

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவிலோங்கி இவ்வையகம் தழைக்குமாம் "

என்று எடுத்துரைக்கிறார் பாரதி.

பெண்ணறத்தினை ஆண் மக்கள் போற்ற வேண்டும். கற்பு பெண்களுக்கு மட்டுமன்று ஆண்களுக்கும் தான் என்பதை

" கண்ணைக் காக்கும் இரண்டிமை போலவே
காதலின்பத்தைக் காத்திடு வோமடா !"

இவ்வரிகளில் அகழாகப் பதிய வைக்கிறார். பாரதியின் பாடல் வரிகளில் இல்லறத்தின் இரு கண்களாக ஆண் பெண் இருவரையும் போற்றுகின்றன. அவர்தம் நல்லுறவை வலியுறுத்துகின்றன. இல்லறத்தின் வாயிலாய் நாட்டுக்கு ஆற்ற வேண்டிய பணிகளையும் உணர்த்துகின்றன.

உடலினை உறுதி கொள்

அறிவைப் பெற்று, ஆற்றலை வளர்த்து, இல்லறம் பேணி, உறுதியோடு உயர்ந்து, கடமை ஆற்றி, ஒற்றுமை ஒழுகி, நாட்டை உயர்த்தி, நானிலம் போற்ற வாழ்வதற்கு ஒவ்வொருவரும் உடலைப் பேணி பாதுகாத்தல் வேண்டும்.

"உடம்பார் அழியில் உயிரார் அழிவர்;
திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவு மாட்டார்:" (திருமந்திரம்)

என்று திருமூலர் பாடியுள்ளார். இதனை நன்குணர்ந்த பாரதியார், புதிய ஆத்திசூடியில் "உடலினை உறுதி செய் " என வேண்டுகோள் விடுக்கிறார். உடலை உறுதி செய்ய "உண் மிக விரும்பு " என தொடர்ந்து வலியுறுத்திக் கூறுகிறார். உடல் வலிமைக்கு உரமிடுவது மனவலிமை தான். உடற்பயிற்சி செய்யும் போது உடலின் தசைகளும் எலும்புகளும் நரம்புகளும் நல்ல வடிவத்தையும் இயக்கங்களையும் பெறுகின்றன. "உடம்பு நாடிகளுக்கு வசப்பட்டது. நாடிகள் மனத்தின் வசமாகும். ஆகையால் மன உறுதி, நம்பிக்கை, உற்சாகம் முதலிய குணங்கள் பிரதானமாகக் கொள்ளத்தகும்"

கடமை ஆற்று

உலகில் மானுடப் பிறவி எடுத்தது முதல் அது நிறைவுறும் வரையில் வெவ்வேறு பருவங்களில் அதனதற்கேற்ற கடமைகளைச் செய்வதில் தவறிவிடக் கூடாது. இதையே வள்ளுவர்,

"தந்தை மகற்காற்று நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்" (குறள் - 67)
" மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனும் சொல் " (குறள் – 70)

தந்தையின் கடமையும் மகனின் கடமையும் எடுத்துரைப்பது போல பாரதி பாப்பா பாட்டில் குழந்தைகளின் கடமையை விளக்குகிறார்.

'சோம்பல் மிகக் கெடுதி பாப்பா! - தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா ! "

என்று பாடி தாய் சொல்லைத் தட்டக்கூடாது என்கிறார்.

" ஈன்று புறந்தருதல் என் தலைக் கடனே;
சான்றோன் ஆக்குதல் தந்தைக்குக் கடனே; "(புறம் -312)

பாரத நாட்டுக் குடிமகன் ஒவ்வொருவரும் தன்னையும் தன் குடும்பத்தையும் பாதுகாத்து முன்னேறுவதோடு நாடு நலம்பெறப் பொதுப் பணிகளில் ஈடுபடும் கடமையையும் மேற்கொள்ள வேண்டுமென்று இவ்வாறு அழைக்கிறார் பாரதியார்,

"பாரத பூமி பழம் பெரும் பூமி;
நீரதன் புதல்வர்; இந் நினை வகற்றாதீர்! "

ஒற்றுமை ஒழுகு

கூடி வாழ்ந்தால் கோடி நன்மை: தனிமரம் தோப்பாகாது; எனவே சாதி மதம் மாநிலம் நாடு மொழி என்ற பிரிவினைகளை நீக்கி அனைவரும் நண்பர்களே, ஒரே குடும்பத்தைச் சார்ந்தோரே என்ற ஒற்றுமை உணர்வு வேரூன்ற வேண்டும். " யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனார் கருத்துப் படி ஒற்றுமையை வளர்க்கப் பாடுபட வேண்டும்.

"ஒன்று பட்டால் உண்டு வாழ்வு! நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே "

நாட்டு ஒருமைப்பாடு வளர ஒற்றுமை முரசு கொட்டினார் பாட்டுக்கொருப் புலவன் பாரதி.

"நிகரென்று கொட்டு முரசே!- இந்த
நீணிலம் வாழ்பவரெல்லாம்; "

ஒற்றுமை வளர்ப்பதற்குகந்த அன்பைப் பெருக்க வேண்டும்; பொறுமையை மிகுந்தவர் வேண்டும்; தன்னலம் குறைத்துப் பொதுநலம் பெருக்க வேண்டும்; தியாக உணர்வு வேரூன்ற வேண்டும்; இவற்றைச் செய்தால் ஒற்றுமை குடும்பத்தில் தோன்றி சமுதாயத்தில் தொடர்ந்து, நாட்டில் படர்ந்து, நானிலம் போற்றும் வகையில் மலர்ந்து மணம் பரப்பும்.

நாட்டை உயர்த்து

தனிமனிதனால் நாட்டை உயர்த்த முடியாது. ஆனால் ஒவ்வொரு மனிதனும் தத்தம் பணியைத் தவறாது செய்தாலே நாடு தானாக உயர்ந்து விடும். பெற்ற தாயைப் பேணுவதில்

எத்தகைய அக்கறை செலுத்துகிறோமோ அந்த அளவிற்கு நாட்டைக் காப்பதிலும் இருக்க வேண்டும்.

"பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நன்றவ வானினும் நனிசிறந் தனவே "

ஒருவன் தொழில் செய்து தன் குடும்பத்தைக் காப்பாற்றி குடும்பத்தில் உள்ளோரை மகிழ்வாக வைத்திருப்பது போல், தொண்டு செய்து நாட்டு நலத்திற்கு வளத்திற்கும் அரண் சேர்க்க வேண்டும்.

"நமக்கு தொழில் கவிதை, நாட்டிற் குழைத்தல்
இமைப் பொழுதுஞ் சேரா திருத்தல்"

என்பது பாரதியின் வேண்டுகோள். நாட்டு நலத்திற்கு உழைப்பதே பிறவியின் பயன். அதற்குரிய அறிவையும், ஆற்றலையும், உடல் வலிமையும் பெற வேண்டும் என்கிறார் கவிஞர்.

"சொல்லடி சிவசக்தி! - எனைச்
சுடர்மிகும் அறிவுடன் படைத்து விட்டாய் "

அவ்வாறாயின் நாட்டிற்குப் பயன்படும் வகையில் எப்படி வாழ்வது?

பாமரனுக்கு எழுத்து அறிவித்தல், படித்த இளைஞர்களை நல்வழிப்படுத்தி திறமைக்கேற்ற பணிகளைப் பெற பயிற்சி தருதல், அரசின் திட்டங்களைக் கிராம மக்கள் அறியச் செய்தல், தனிமனித வளர்ச்சியோடு நாட்டு வளர்ச்சிக்கும் பாடுபடுதல். இவற்றிற்காக,

" மந்திரம் கற்போம் வினைத் தந்திரம் கற்போம் ,
வானையளப்போம் கடல் மீனை அளப்போம்; "

நானிலம் போற்ற வாழ்

மகாகவி பாரதியார் ஆழமாகச் சிந்தித்துப் பாடிய பாடல்கள், கட்டுரைகள் மூலம் அறியும் மணிமொழிகளான அறிவைப் பெற்று, ஆற்றலை வளர்த்து, இல்லறம் பேணி, இறை உணர்வு கொண்டு, உடலை உறுதிசெய்து. உறுதியோடு உயர்ந்து, கடமை ஆற்றி ஒற்றுமையில் ஒழுகி, நாட்டை உயர்த்தப் பாடுபடும் ஒவ்வொருவரும் நானிலம் போற்ற வாழ்வார்கள் எனில் மிகையன்றே!

மனத்தை உழுத மகான் பாரதியாரின் மணிமொழிகள் பல கோணங்களில் பாங்குடன் பகிரப்பட்டன. இந்த மாநிலம் பயனுறுவதற்காக அந்த மாகவி வழங்கியுள்ள சிந்தனை முத்துக்கள் எண்ணிலடங்கா! அந்த முத்துக்களை எடுத்துக் கோர்த்து மாலையாக்கி ஒவ்வொரு இந்தியனும் அணிய வேண்டும். அது அணிந்தவனை உயர்த்துவதோடு அவனுடைய நாட்டையும் உயர்த்தி உய்விக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

மேற்கோள் நூல்கள்

1. திருக்குறள், திருவள்ளுவர் - வானதி பதிப்பகம் 1976
2. பாரதியார் கவிதைகள், பாரதியார் - ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ் 1990
3. மனோன்மணியம், பேராசிரியர் சுந்தரம் பிள்ளை , 1876
4. திருமூலரின் திருமந்திரம் வர்த்தமானன் பதிப்பகம் 1996
5. புறநானூறு, பாடியவர் - பொன்முடியார், சாரதா பதிப்பகம், 2010

54. குயில் - பாரதியின் காதலி



முனைவர் அன்பழகி ஸ்ரீதர்

கணினித்துறை, சென்னை

முன்னுரை:

"பாட்டுக்கொரு புலவன்" என்று கவிமணி தேசிய விநாயகம் பிள்ளையால் பாராட்டப் பெற்ற மகாகவி பாரதியார், கவிஞர் மட்டுமல்ல உயர்ந்த நோக்கங்கள், நல்லப் பண்புகள், ஆகச்சிறந்த செயல்கள் எல்லாம் செழித்தோங்கப் பாடிய மிகச்சிறந்த கவிஞர். அவர் பாடியப் பாடல்களுள் உணர்ச்சி செல்வமும், கற்பனை மெருகும், காதல் மயக்கமும் இழைத்து விளங்கும். இதற்குச் சான்று அவர் எழுதிய குயில் பாட்டு. பாரதி 1921ல் அமரர் ஆனார். அவரது குயில்பாட்டு 1923 இல் அச்சேறியது. இந்தப் பாட்டுக்கு பாரதியார் தந்த தலைப்பு "குயில்" என்பதே. பாரதியின் குயில் கையெழுத்துப் பதிவில் எழுதப்பட்ட காலம் 1914 ஆம் ஆண்டு அல்லது 1915ஆம் ஆண்டு என்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. இந்த ஆய்வறிக்கையின் முக்கிய நோக்கம் குயில் பாட்டுப் பற்றிய விரிவான ஆய்வை முன் வைப்பதாகும். கற்பனையில் கனிந்த அழகான உருக்கமான வெளிப்படையான பொருளைக் கொண்ட ஒரு குயில் பற்றிய கதை. இந்த கதை வேதாந்தமாக விரித்துரைக்கவும் இடம் தருகின்றது.

குயில் பாட்டு:

கடல் அலை எழுப்பும் ஓசை கவிஞருக்கு வேத பொருளை உரைக்கிறதாம். கடல் அலைகள் மட்டுமா செய்தியை சொல்கிறது. இல்லை இல்லை குக்குக்கு வென்று குயில் பாடும் பாட்டில் தொக்க பொருள் எல்லாம் தோன்றுகிறது அவரது சிந்தைக்கு அந்தப் பொருளை அவனுக்கு உரைத்திடுவேன் என்று குயில் பாட்டை பாடுகிறார். புதுவையில் முத்தியாலுப் பேட்டை என்றதொரு பகுதி நகரின் மேற்கே உள்ளது. இங்கு கிருஷ்ணசாமி செட்டியார் என்பவருக்கு ஒரு தோப்பு இருந்தது. மரங்கள் அடர்ந்து செழித்த அங்கு முழு எழில் கோலமிட்டு இருந்தது. அந்தத் தோப்பிற்குச் சென்ற பாரதியார் அதன் இயற்கை அழகில் மயங்கினார். அங்குத் தொடர்ந்து குயில் கூவுவதைக் கேட்டார். குயில் பாட்டு உடனே பாரதியாரிடம் தோன்றி விட்டது. பாரதி பலப் பல பரிணாமங்களை கொண்ட ஒரு ஆளுமையாக உருவெடுத்தார். அதாவது கவிஞர், சுதந்திரப் போராட்ட வீரர், சீர்திருத்தவாதி, தத்துவ ஞானி, பக்தி மற்றும் வேதாந்தி. இவரது முக்கிய கவிதைப் படைப்புகளான பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு மற்றும் குயில் பாட்டு ஆகியவை.

பாட்டின் பின்புலம்:

காலை இளம் பருதி வீசும் கதிர்களிலே நடைபெறும் விந்தையெல்லாம் என்று தொடங்கும் பாடலில் கவிஞர் தனது கற்பனையில் சித்திரம் வரைந்து காட்டுகிறார். அதன் ஒரு துளி இதோ.

"காலை யிளம்பரிதி வீசுங் கதிர்களிலே
நீலக் கடலோர் நெருப்பெதிரே சேர்மணிபோல்"

பாரதியாரின் புதுவையில் பயணித்த வா. ரா. என்ற பெயர் பெற்ற வா. ராமசாமி ஐயங்கார் கூறுவதாவது. முத்தையாளர் பேட்டை கிருஷ்ணசாமி செட்டியாரின் தோட்டத்திலே நோக்கி நோக்கி களியாட்டம் ஆடுவார் பாரதியார். அவருடைய ஆனந்தம் வருஷ தாரையாக பெருக்கடையும். உன்மத்தனை போல சில சமயங்களில் அவர் ஆகி விடுவார், குரலிலே ஸரிக –

க - கா மா, காலிலே தாளம், கைகள் கொட்டி முழங்கும். உடல் முழுவதும் அபிநயம் தான். குழந்தை பிறந்தவுடன் சோர்ந்து நித்திரையில் ஆழ்ந்து விடும் தாய்மார்களைப் போல கவிதை பிறந்தவுடன் பாரதியார் சோர்ந்து போய் மண் தரையில் படுத்துக்கொள்வார். மகாகவி பாரதியாருக்கு இவ்வாறுதான் குயில் பாட்டு தோன்றியது உண்மையிலேயே இது ஒரு கனவு மயக்கத்தில் உண்டாகும் மிகை பேச்சுப்போல கவிக்கு அருள் வந்த வேலையில் மெய்மறந்து கொட்டிய கற்பனை என்கிறார் கு ப ராஜகோபாலன்(கண்ணன் என் கவி).

குயிலின் கதை பிறந்த கதை:

குயில் பாட்டு துன்பமும் ஏமாற்றமும் நிறைந்த வாழ்க்கையினை விளக்குவதாகவும், கனவிலே மிதப்பதற்கு பாரதிக்குக் கிடைத்த ஒரு தோணியாகவும் அமைந்துள்ளது. ஆரம்பகால கவிதைகளில் வேதாந்தம் பற்றிய சிந்தனைகள் அதிகமாக எழுதியது இல்லை. ஆனால் பாரதி புதுச்சேரிக்குச் சென்ற பிறகு அங்கு யோகியான அரவிந்தர் மற்றும் குள்ளச்சாமி கோவிந்தசாமி என்ற சித்தர்களின் நட்புறவு ஏற்பட்ட உறவிற்குப் பிறகு தத்துவ கவிதைகளை எழுதத் தொடங்கினார்.

குயிலின் **காதல் :**

மாஞ்சோலையில் வேடன் வராத ஒரு நன்னாளில் ஆச்சார்யமான முறையில் குயில் ஒன்று கூவியது. **"காதல் காதல் காதல், காதல் போயின் காதல் போயின்"** என்ற துள்ளல் இசையுடன் பாடியது குயில் துள்ளும் இன்பமும் வெறியும் துயரம் கலந்த குரலில் குயில் பாடியது கேட்டான் பாரதி. **"கூடல் கூடல் கூடல், கூடிப் பின்னே குமரன் போயின்"** என்ற குயிலின் சோக கீதம் பாரதியின் நெஞ்சை வாடச் செய்தது. தன் கவி திறமையில் அந்த குயிலுக்கு ஆறுதலாக குயிலே "உன் துயரம் யாது?" என்று அந்த ஒற்றைக் குயிலின் சோகத்திற்கு மறந்துவிட்டான் பாரதி. **"பேடே! திரவியமே! பேரின்பப் பாட்டுடையாய்!"** என்று குயிலின் குறை அறிய முற்பட்டான் பாரதி. மனிதர்களின் மொழியெல்லாம் அறியும் பேரும் பெற்றது அந்தப் பெட்டைக் குயில். அவனிடம் "என் நெஞ்சை பறிகொடுத்தேன். காதல் வேண்டி கரைகின்றேன். இல்லையேல் சாதல் வேண்டி தவிக்கின்றேன்" என்றது அந்தப் பெண் குயில். அந்த மானிடன் ஒருவேளை நம் பாரதி தானோ குயிலின் காதல் கதையைக் கேட்டவுடன் அதன் மீது அடங்காத காதல் பிறந்து விட்டது பாரதிக்கு.

குயிலின் வேண்டுதல்:

தன் காதலனை நோக்கி "ஐயனே! காதல் வழிதான் கரடு முரடானது என்பர், அது நம் வாழ்வில் முழு உணர்வோடு விளையாடி திளைக்கின்றது. உங்களோடு பேசி அளவலாவுகின்ற இன்பத்திற்கும் இப்பொழுது இடையூறும் மூன்று விட்டது. தாங்கள் அன்போடு அடுத்த நான்காம் நாள் இங்கு வருதல் வேண்டும். மறவாதீர்! என்னுடைய சிந்தையைப் பறித்துக் கொண்டு செல்கின்றீர். குறித்த நாளில் வராவிட்டிலோ, குறு வடிவக் குயில் இக்குழு வடிவ குயிலின் ஆவி தெரியாது அறிந்திடுவீர். நான்காம் நாள் என்பதனை மறந்து விடாதீர். இந்நாட்கள் நான்கையும் பத்து யுகம் போல நான் கழிப்பேன். சென்று வருவீர். என் சிந்தையை எடுத்துக்கொண்டு செல்கின்றீர் என்பதை மீண்டும் மீண்டும் உரைக்கின்றேன். மறவாதீர், சென்று வாருங்கள்" என்று தேற்ற முடியாத பெரும் துயரத்தோடு அவனை வழி அனுப்பி வைக்கிறது அந்த மாயக்குயில்

கவிஞரின் காதல்:

நாளொன்று போவதற்கு நான் பட்ட பாடலை அனைத்தும் தாளம் படுமோ தரிப்படுமோ யார் படுவார்? அங்கு மறுநாள் விடிந்தவுடன் நீ தானே காண வந்தேன் என்று கூடி காதலியைப் பிரிந்த துயர் வறுத்த மறுநாளே சோலைக்கும் செல்கின்றார். இரவு முழுவதும் தூங்காமல் காமன்வன் அம்பு நுனிகள் கவிஞரின் மனதை அமிழ்திருக்க சிந்தை பொறுக்காது காதல் மோகத்தில் மூழ்கிப் போனார் கவிஞர். கரை கடந்த

வேட்கையுடன் செய்வதறியாது கால்கள் நோக சென்ற இடங்களில் எல்லாம் யாரைக் கண்டோம் என்பது கூட அறியாமல் பார்க்கும் இடமெல்லாம் பச்சை பசேல் என்று மரங்கள் தென்பட தன் உள்ளத்தின் வேட்கையை விந்தை என நினைத்து சோலைக்குச் சென்று பார்த்தார் கவிஞர்.

குயிலும் குரங்கும்:

தன் காதலி குயிலோடு தனித்து விளையாட களித்து இன்புற வேண்டும் என்ற கவிஞனின் இச்சையை உணர்ந்தனப் போல சோலையில் உள்ள பறவைகள் எல்லாம் எங்கோ பறந்து போய்விட்டன. அந்த சிறுக் குயிலைக் காண ஆவலோடு ஒவ்வொரு மரமாகப் பார்த்துக் கொண்டே வருகிறான் கவிஞர். அன்று அவன் கண்ட மரக்கிளையில் குயில் அது காணாமல் போகவே கவிஞனின் மனம் துடிக்கிறது. அவன் மனம் கசக்கும் படி ஒரு காட்சியை அவன் கண்கள் காண்கின்றான். அந்த நீலக்குயில் இன்று ஒரு குரங்கிடம் அதே காதல் மொழியை அதே பொருளுடன் குரங்கு மொழியில் பேசிக்கொண்டிருக்கிறது. இந்தக் காட்சியை கண்டதும் கவிஞனின் உள்ளம் பதைபதைக்கின்றது, உடல் சோர்கின்றது, விழி மயங்குகின்றது, மீண்டும் இல்லம் நோக்கி திரும்புகிறான் தன்னுடைய உணர்வை இழந்து விழுந்து விடுகிறான்.

குயிலும் காளையும்:

மூன்றாம் நாள் காலையும் கவிஞன் அந்த சோலையில் வந்து நிற்கின்றான். அந்த நீசக்குயில் நீண்டக் கதை ஒன்றை சொல்லிக் கொண்டிருக்கிறது. கீழே ஒரு கிழட்டுக்காளை ஒன்று அந்த குயில் சொல்லும் காதல் பேச்சை கேட்டுக் கொண்டிருக்கிறது. அதைக் கண்டு கவிஞன் உள்ளம் ரணமாகி சினமென்னும் தீ, பொறாமை என்னும் காற்று வீசி மேலும் கொழுந்து விட்டறிய செய்கிறது. இந்தக் குயில் பேசும் மாயக் காதலை முற்றிலும் கேட்டுவிட்டு பின்னர் அந்தக் குயிலைக் கொல்லுதலே நல்ல சூழ்ச்சி என்று எண்ணுகிறான் கவிஞன். மறைந்து நின்று அந்த உரையாடலையும் கேட்கிறான். குயில் அந்தக் கிழக் காளையைப் பார்த்து சொல்கிறது. **"ஈனப் பறவை முதுகின்மிசை ஏறிவிட்டால்"** இவ்வார்த்தைகளைக் கேட்டு அதிர்ச்சியுறுகிறான் கவிஞன். குயில் மீது காதல் கொண்ட கவிஞன் வீணிலே அந்தக் குயிலைத் தேடி உற்ற பயன் ஏதுமில்லை வருதே வீடு வந்து சேருகின்றான் ஆனால் அவன் உள்ளமும் ஓராயிரம் எண்ணங்களை எண்ணுகிறது. இந்த குரங்கும் காளையும் தன் காதலுக்கு முற்றிலும் எதிரிகளாக வந்ததை எண்ணி எண்ணி வருந்துகிறான் கவிஞன்.

நான்காம் நாள்:

குயில் நான்காவது நாள் கவிஞனை சோலைக்கு வரச் சொன்ன அன்று, தன் உள்ளம் சோர்ந்து, செய்வதறியாமல் தன் வீட்டின் மாடத்திலேயே ஏக்கமாய் இருந்தான் கவிஞன். வானத்திலேயே ஒரு கரும் பறவை வருவதனை தன் கண்களால் நோக்குகின்றான். அதனைத் தொடர்ந்து அம்மாஞ் சோலையிலே அந்த குயில் போன திசையிலே போய் நிற்கிறான். மீண்டும் அதே காதர் பாடலை பாடியது நீசக்குயில். **"நீசக் குயிலே, நிலையறியாப் பொய்ம்மையே,"**35 கவிஞனின் இந்த வார்த்தைகளைக் கேட்ட குயிலின் கண்களிலே கண்ணீர் ஆராய் பெருகி ஓடுகிறது. **"தேவனே! என்னருமைச் செல்வமே! என்னுயிரே!"** கவிஞனை நோக்கி என் உயிரே என்னை விட்டு போவதன் முன்னால் நான் சொல்லுவதனை அருள் கூர்ந்து கேட்க வேண்டும் என்று வேதனையோடு குயில் தன்னுடைய முந்தைய பிறப்பின் ரகசியத்தை சொல்கிறது. ஒரு நாள் பொதியமலையின் அருகே உள்ள ஒரு சோலையில் ஆழ்ந்த சிந்தனையோடு நான் அமர்ந்திருந்தேன் அவ்வேலையிலே அங்கு ஒரு முனிவர் வந்தார். அவருடைய திருவடிகளில் விழுந்து வணங்கினேன். அவர் என்னை வாழ்த்தி ஆசி கூறினார். அதன் பின் என் உள்ளத்திலே விடை கிடைக்காமல் இந்த ஒரு வினாவுக்கு அவரிடம் விடை தேடினேன். வேதம் முனிவரே மற்ற குயில்களைப் போல் இன்றி என் மனம் மானுடரைப் போல் எண்ணுகிறது. அவர்கள் பேசும் மொழி எனக்குப் புரிகிறது. இதன் காரணம் என்ன? இதன்

உண்மையை எனக்கு விளக்கி அருள வேண்டும். என்று வணங்கி கேட்டேன். அதற்கான விடையை முனிவர் இவ்வாறு கூறிச் சென்றார்.

சேர நாட்டின் மலைச்சாரலில் பிறந்த சின்னக் குயில் எனும் பெண் தன் மாமன் மகன் மாடர்ன் என்பவனையும் தனக்காக மனம் நிச்சயிக்கப்பட்ட நெட்டை குரங்கன் என்பவனையும் புறக்கணித்துவிட்டு பொழுது தோறும் மலைச்சாரலுக்கு வரும் சேர இளவரசன்பால் மையல் கொள்கிறாள். மாடனும் குரங்கனும் சேர இளவலை வெட்டி மாய்த்து விடுகின்றனர். மறுபிறப்பில் குயிலியைச் சந்திப்பதாகக் கூறி இளவரசன் விழி மூடுகின்றான். மறுபிறப்பிலும் காதலைச் சேர முடியாதவாறு மாடனும் குரங்கும் இடையூறு செய்கின்றனர். குயிலியை குயிலாக மாற்றி விடுகின்றனர் இந்தக் கதையை பொதிகை மலை முனிவர் குயிலியிடம் கூறிவிட்டு அதன் சாபம் தொண்டை நாட்டு மாஞ்சோலையில் தீரும் என்றும் கூறுகின்றார். செயல்களையும் உணர்ந்து தெளிகிறான். குயிலை முத்தமிடுகிறான் குயில் மறைந்து அங்கே கொள்ளை வனப்புடைய பெண் நிற்கிறாள் அப்பெண்ணை தழுவி முத்தமிட்டு மோக மயக்கத்தில் ஆழ்ந்திருக்கும் பொழுது பெண், சோலை ஆகிய எல்லாம் மறைந்துவிட கவிஞன் சுவடி எழுதுகோல் பத்திரிக்கை பழம் பாய் ஆகியவை சூழ்ந்த தன் விட்டில் இருப்பதை காண்கிறான்.

‘ .....விழிதிறந்து பார்க்கையிலே
சூழ்ந்திருக்கும் பண்டைச் சுவடி, எழுதுகோல்,
பத்திரிகைக் கூட்டம், பழம்பாய்-வரிசை யெல்லாம்” 260

இப்படியாக கவிக்குயில் பாரதியின் குயில் பாட்டு முடிகிறது. இதனை வெறும் கதையாக எடுத்துக்கொள்ளாமல், இதன் மூலம் அறிய உள்ள வேதாந்தக் கருத்துக்களை சொல்ல விரும்புகிறார் என்று அறியலாம்.

55. பாரதியின் கட்டுரைகள் ஓர் ஆய்வு



நா.அருணா எம்.எஸ்.சி.பி.எட்

இடைநிலை ஆசிரியர்
ஊ.ஒ.ந.நி.பள்ளி, போத்தாபுரம்,கிருஷ்ணகிரி

முன்னுரை

சுப்பிரமணிய பாரதி (பாரதி) தமிழின் நவீனக்கவிஞர்களில் முன்னணியானவர். கவிதைகளின் மூலம் மட்டுமல்லாது, அவர் கட்டுரைகள் வழியாகவும் சமூக மாற்றத்திற்கு, தேசிய விழிப்புணர்விற்கு முக்கிய பங்களிப்பு செய்தார். அரசியல், சமுதாயப்பிரச்சனைகள், பெண்களின் விடுதலை, கல்வி மற்றும் கலாச்சார விவாதங்கள் என்பனவற்றை அவர் எளிதானச் சொற்களால் தெளிவாகவும் தீவிரமாகவும் முன்வைத்தார். இந்த ஆய்வுக் கட்டுரை, பாரதியின் கட்டுரைகளின் முக்கிய கருப்பொருட்கள், மொழிநடை, தாக்கம் மற்றும் வரலாற்று – சமூகப் பின்னணிகளை ஆராய்வதையே நோக்கமாகக் கொண்டுள்ளது.

பாரதியின் கட்டுரைகள்

பாரதியின் கட்டுரைகள், அவை எழுதப்பட்ட காலம் மற்றும் பத்திரிகைக் கருத்தரங்குகள் ஆகியவற்றின் சூழலில் படிக்கப்பட வேண்டும். அவை நேரடியாகவே வாசகரை எச்சரிக்கவும், ஊக்குவிக்கவும், செயல்படும்படி தூண்டவும் இயல்பாக இருந்தது. இக்கட்டுரைகள் நமது சிந்தனையில் இன்று கூட புதிய சவால்களையும் சிந்தனையும் தூண்டும் தன்மையைக் கொண்டிருக்கின்றன. பாரதியின் கட்டுரைகள் பல்வேறு தலைப்புகளில் அமைந்துள்ளன. அவை தத்துவம், சமூகம், அரசியல், ஆன்மீகம் எனப் பல துறைகளில் அவரது சிந்தனைகளை வெளிப்படுத்துகின்றன. உதாரணமாக, **"தத்துவம்" என்னும் தலைப்பில், யாரைத் தொழுவது?, இனி, பாரத தேசத்தில் ஒவ்வொருவனும், மூடபக்தி செய்வதற்குரிய தியானம்** போன்ற கட்டுரைகள் உள்ளன. மேலும், **"காமதேனு", "உண்மை", "ஓம் சக்தி", "மாதர்"** போன்றத் தலைப்புகளிலும் கட்டுரைகள் உள்ளன.

சமூகச் சீர்திருத்தக் கட்டுரைகள்

பாரதியின் சமூகப் பண்பு மிகுந்த கட்டுரைகள் சாதி, இனம், பெண்கள் உரிமைகள் மற்றும் பணியாளர் நலன் போன்ற சமூக இயல்புகளுக்கு எதிராக முன் வந்தன. அவர் பெண்கள் கல்வியின் அவசியத்தை பல கட்டுரைகளில் வலியுறுத்திப், பெண்கள் சமூக முன்னேற்றத்தில் சமமாய்ப் பங்கேற்க வேண்டும் என்பதில் அதிரடி ஆதரவை வெளிப்படுத்தினார். பாரதியின் பார்வையில், பெண்களின் விடுதலை என்பது தேசிய விடுதலையின் ஒரு அடிப்படைப் பகுதி ஆகும்.

சாதி ஒழிப்பு தொடர்பான கட்டுரைகள்

சாதி ஒழிப்பு தொடர்பான கட்டுரைகளில் அவர் சாதிப் பிரிவினையை மனித ஒற்றுமைக்கு எதிரானதாக்கு என்று வெளிப்படுத்தினார். பொது நலன், கல்வியின் சமயோசனை மற்றும் தொழிலாளர்களின் உரிமைகள் பற்றிய அவசியமான அறிவுரைகள் அவர் பல கட்டுரைகளில் வழங்கியுள்ளன. தொழிலாளர், விவசாயி மற்றும் ஏழை நிலையைச் சார்ந்தவர்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தும் வகையில் போதுமான சமூக நடவடிக்கைகள் தேவை என்றும் அவர் கோரினார்.

கலாச்சார மற்றும் ஆன்மிகப் பிரிவுகள்

பாரதி சமயம் மற்றும் பாரம்பரிய மதிப்புகளை ஒரே நேரத்தில் கௌரவமும் விமர்சனமும் செய்து அணுகியவர். அவர் பாரம்பரியங்களை புனருஜீவிக்கவும், அதில் உள்ள நல்ல பண்புகளை எடுத்துக்கொள்ளவும் வலியுறுத்தினார்; அதேசமயம் காணப்படும் தாழ்மையான, மனிதநீதி குறைவான பழங்கால நெறிமுறைகளை அவர் எதிர்த்தார். அவர் எழுதிய ஆன்மிகக் கட்டுரைகள் அனைத்துலக சகோதரத்துவம் மற்றும் மனித நேயம் என்ற கருத்துக்களை முன்வைத்தன. மரபு மற்றும் நவீனத்திற்கிடையே ஒரு சமநிலையை அமைப்பதே அவரது கலாச்சாரக் கோட்பாடு. நான்-நம் மனப்பான்மையை வெளிப்படுத்தும் வகையில் பாரதி ஆன்மிகம் பற்றியும் சமூகப் பொறுப்புகளின் தொடர்பைப் பற்றி எழுதியுள்ளார்.

கல்வியும் அறிவியல் நோக்கமும்

பாரதி கல்வியை தனிநபர் மற்றும் தேச முன்னேற்றத்தின் அடித்தளமாகக் கருதினார். அவர் மொழிஅறிவு மட்டும் அல்லாமல், அறிவியல் முறைபாடு மற்றும் நவீன கல்வியின் தேவையினை வலியுறுத்தினார். கல்வி எல்லோருக்கும் திறந்ததாகவே இருக்க வேண்டும் என்றார்; சிறுபான்மையினரும், ஏழையும், பெண்களும் கல்வியால் சுயமுன்னேற்றம் அடைய வேண்டும் என்பதை அவர் நிலைநிறுத்தினார்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சிக் கட்டுரைகள்

அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சி குறித்து அவர் எழுதிய கட்டுரைகள், அந்தக் காலத்தில் புதிய எண்ணங்களைக் கொண்டிருந்தது. நாடிழக்கும் பழக்கவழக்கங்களை மாற்றி, தொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் நவீன பயிற்சி வழங்கி நாடு தன்னிலை பெற வேண்டும் என்பதே அவரது சாரம்சமாக இருந்தது.

மொழிநடை, தாக்கம் மற்றும் விமர்சனங்கள்

பாரதியின் மொழிநடை எளிமை, நேர்மை மற்றும் தீவிர உணர்ச்சியால் நிரம்பியது. பொது மக்களிடையே அணுகக்கூடியவாறு தமிழை அவர் பயன்படுத்தினார்; அவை தேசப்பாசம், சமூக நன்மை மற்றும் நீதியை உடனடியாகக் காட்டும் வகையில் இருந்தன. அவருடைய கட்டுரைகள் ஒரு சிலருக்கு எழுச்சியைத் தூண்டின; மற்றொரு பக்கம் சில விமர்சகர்கள், அவரது அவதானம் கூடுவதாகவும் அதில் சில பொது பொதுமேலாக்கம் இருக்கும் என்றும் கூறியுள்ளனர். பாரதியின் கட்டுரைகள் சுதந்திரப் போராட்டத்திற்கு எண்ணற்ற இளைஞர்கள் மற்றும் பொதுமக்களை ஈர்த்தன. இது மட்டுமின்றி, தமிழ் எழுத்து மொழிக்கான புதுப்பெருஞ்சோதனை மற்றும் சமூக சிந்தனையில் மாற்றுப் பரிமாணங்கள் தொடர்ந்தன. விமர்சனமாகக் கூறப்படுவது எனில், அவரது எழுத்து சிலசமயம் அதிக ஆவேசம் கொண்டு வரும்போதும், சில விடயங்களை எல்லாம் மிகவும் எளிமைப்படுத்தியோரும், இயல்பாகச் சொல்லப்பட்டுள்ளது.

முடிவுரை:

பாரதியின் கட்டுரைகள் கல்வி, சமுதாயப் பண்பு, தேசிய உணர்வு மற்றும் கலாச்சாரப் பூர்வீகங்கள் ஆகியவற்றின் கூட்டு காரணமாக நமது கருத்துக் களஞ்சியத்தில் முக்கிய இடம் வகிக்கின்றன. காலம் மாறினாலும், அவரது அலசல்களும் அதன் நோக்கங்களும் பொருந்தும் தன்மையைக் காட்டுகின்றன. இன்றைய சமூக சவால்களை எதிர்கொள்ளும் பொழுதில், பாரதியின் கட்டுரைகள் வலுவான எண்ணங்களையும், செயல்திறனை ஊக்கமளிக்கும் வழிகாட்டலையும் வழங்குகின்றன. ஆகையால், அவருடைய கட்டுரைகளை நவீனப் பார்வையால் மீண்டும் ஆராய்ந்து, அவற்றில் உள்ள பயனுள்ள கருத்துக்களை இன்றைய சமூக சூழ்நிலையில் செயல்படுத்தவேண்டும்.

மேற்கோள்கள்

1. சுப்பிரமணிய பாரதி, 'பாரதியின் கட்டுரைகள் தொகுப்பு' (சோதனை பதிப்புகள்).
2. பாலசுப்பிரமணியன், எம்., 'பாரதியின் சிந்தனைகள்' (ஆய்வு எழுத்துகள்).
3. ராமசாமி, எஸ்., 'பாரதி - ஒரு ஆய்வு' (கலைப்பதி பதிப்பகம்).
4. வித்யா மற்றும் பிற, 'பாரதியின் இலக்கியப் பணிகள்' (கட்டுரை தொகுப்பு மற்றும் விமர்சனங்கள்).

56. மகாகவி பாரதியாரின் கவிதைகளில் உயிர் பற்றிய கருத்தாக்கங்கள்

ஆய்வாளர்

ச. தனலெட்சுமி

முனைவர் பட்ட ஆய்வாளர் (முழுநேரம்)

பதிவு எண் : R-20162883

வித்யா கிரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காரைக்குடி.

நெறியாளர்

முனைவர் ச. சேதுகல்பனா

உதவிப்பேராசிரியர்

தமிழ்த்துறைத் தலைவர்

வித்யா கிரி கலை மற்றும் அறிவியல் கல்லூரி, காரைக்குடி.

முன்னுரை

மகாகவி பாரதியார் இருபதாம் நூற்றாண்டின் இணையற்றப் படைப்பாளர்களுள் ஒருவர். கவிஞர், கட்டுரையாளர், இதழியலாளர், கதையாளர், மொழிபெயர்ப்பாளர், அரசியலாளர், சொற்பொழிவாளர், சமூகச் செயற்பாட்டாளர் உள்ளிட்டப் பன்முகங்களைக் கொண்டவர். இந்திய விடுதலைக் களத்தில் மகாகவி பாரதியாரின் பாக்கள் எழுச்சியைத் தூண்டும் திறன் பெற்றவை. மண்ணும் மண்ணுயிர்களும் நலமும் வளமும் பெற்று வாழ்ந்திட சிந்தித்த மகாகவியின் பாக்களில் உயிர் எனும் சொல்லாடலும் உயிர் பற்றிய சிந்தனைகளும் விரவிக் காணப்பெறுகின்றன. அவற்றைத் தொகுத்தளிக்குமாறு இவ்வாய்வு அமைகின்றது.

உயிர்

உயிர் என்பது ஒரு பரந்த மற்றும் சிக்கலான கருத்தியலாகும். இது உயிரியல், தத்துவம் மற்றும் அன்றாட வாழ்க்கையில் பன்முகப் பொருளில் கையாளப் பெறுகின்றது. உயிருள்ள பொருட்களில் காணப்படும் இயல்பு அல்லது பண்பு உயிர் எனக் கருதப் பெறுகின்றது. கண்களுக்குப் புலப்படாத உயிர், உயிரினங்கள் வாழவும், வளரவும், இனப்பெருக்கம் செய்யவும், சுற்றுச்சூழலுக்கு ஏற்பத் தகவமைத்துக் கொள்ளவும் உதவுகிறது. சுருங்கச் சொன்னால், உயிர் என்பது உயிரினங்களின் வாழ்வியல் ஆதாரமாக அமைகின்றது. உயிரைப் பற்றி வரையறுப்பதில் அறிவியலாளருக்கும் மெய்யியலாளருக்கும் முரணான தன்மை காணப்பெறுகின்றது. உடலியங்கியலுள் தன்நிலைப்பாடு, ஒருங்கமைவு, வளர்சிதை மாற்றம், வளர்ச்சி, தகவமைதல், தூண்டலுக்குத்தக துலங்குதல், இனப்பெருக்கம் உள்ளிட்ட செயல்பாடுகளில் உயிரின் இடையீடு காணப்பெறுகின்றது.

படைப்பாளர்கள் சமூகத்தின் அங்கம் ஆதலால் சமூக உயிரிகள் குறித்தப் பதிவுகள் எல்லா காலத்திலும் படைப்பாளர்களிடம் காணப்பெறுகின்றது. மகாகவி பாரதியாரும் உயிரைக் குறித்தக் கருத்தியல்களைத் தம் படைப்புகளெங்கும் விரவலாகப் பதிவு செய்துள்ளார். அவற்றுள் **பாரதியாரின் காட்சி** எனும் வசனகவிதையை ஆய்வு எல்லையாகக் கொண்டு இவ்வாய்வு அமைகின்றது.

காட்சி

வசனகவிதை என்பது உரைநடை வடிவத்தில் எழுதப்பட்டக் கவிதையாகும். இது யாப்பியலின் இலக்கண வரம்புகளுக்கு உட்படாதது. தமிழிலக்கியத் தளத்திற்கு வசனகவிதையை அறிமுகப்படுத்தியவர் மகாகவி பாரதியார். காட்சி, சக்தி, காற்று, கடல், ஜகச்சித்திரம், விடுதலை உள்ளிட்டவை பாரதியின் வசனகவிதை ஆற்றலின் வெளிப்பாடாகும். அவற்றுள் காட்சி எனும் வசனகவிதை இரண்டு கிளைகளைக் கொண்டு

அமைகின்றது. முதல் கிளையான இன்பம் உலகம் முழுமையும் இன்பக்களஞ்சியமாக விளங்குவதைப் பதிவு செய்கின்றது. இரண்டாவது கிளையான புகழ் ஞாயிறு எனும் உட்தலைப்பைக் கொண்டு அமைகின்றது. பாரதிக்கு ஞாயிற்றின் மீதிருந்த பற்றுதல் இக்கவி வழி புலப்படுகின்றது.

உயிர் நன்று

உலகிலுள்ள இயற்கை மற்றும் செயற்கைப் பொருட்களை இனியது என மனமுவந்து வாழ்த்துகின்றார் பாரதியார். வான், காற்று, தீ, நீர், நிலம், ஞாயிறு, திங்கள், விண்மீன்கள், மழை, மின்னல், இடி, கடல், மலை, காடு, ஆறு, உலோகம், மரம், செடி, கொடி, மலர், காய், கனி உள்ளிட்ட அனைத்தையும் இனிது என வாழ்த்துகின்றார். மேலும், பறவைகள், ஊர்வன, விலங்குகள், நீர் வாழ்வன, மனிதர்கள் உள்ளிட்ட உயிரினங்களை இனிது எனப் போற்றுகின்றார். பாலினப் பாகுபாடு மிகுந்திருந்த பாரதி வாழ்ந்த காலச் சமூகத்தின் நிலைப்பாட்டை சீரமைக்கும் வகையில் ஆண் நன்று, பெண் இனிது எனக் குறிப்பிடுகின்றார். உயிரினங்களின் வாழ்நிலைப் படிநிலையாகிய குழந்தைப் பருவம், இளமைப் பருவம், முதுமைப் பருவம் உள்ளிட்ட மூன்றையும் இனிது எனப் போற்றுகின்றார். இந்நல்லவைகளோடு உயிர் நன்று, சாதல் இனிது எனும் கருத்தியலைக் கட்டமைக்கின்றார். விழிகளுக்குப் புலப்படாது உடல் உறுப்புகளுள் ஒன்றாக அமையாது உணர்வால் மட்டுமே நுகரக்கூடிய உயிரை நன்று எனும் முடிவுக்கு வரும் பாரதியின் சிந்தனை ஆய்வுக்குரியது. உயிர் இனங்களுள் நல்லவை அல்லவை எனும் பாகுபாடு அவற்றின் செயலால் விளைவது. பிறக்கும் உயிர்கள் அனைத்தும் நன்றே எனும் மறைபொருளை,

> **மனிதர் மகிவும் இனியர்.**
> **ஆண் நன்று. பெண் இனிது.**
> **(மகாகவி பாரதியார் கவிதைகள், மூலமும் உரையும், ப. 578)**

எனும் வரிகள் வழி அறியமுடிகின்றது.

உயிர் சுவையுடையது

உயிரினங்களால் சுவைக்கத்தக்கவற்றை அறுசுவைகளாக வகைமைப் படுத்துகின்றனர். இனிப்பு, புளிப்பு, கார்ப்பு, கசப்பு, உவர்ப்பு, துவர்ப்பு எனும் ஆறு சுவைகளும் உணவின் வாயிலாக நுகரத்தக்கவை. உணர்வின் வாயிலாக நுகரத்தக்க சுவை குறித்தவற்றை வரையறைக்கு உட்படுத்த இயலவில்லை. நுகர்வோரின் விருப்பம் மற்றும் சூழல் சார்ந்து உணர்வின் சுவை மாறுபடுகின்றது. பொதுதன்மையற்ற உணர்வின் சுவையை உயிருக்கு உரிய சுவையாக மகாகவி பாரதியார் குறிப்பிடுகின்றார். இதனை,

> **உடல் நன்று. புலன்கள் மிகவும் இனியன.**
> **உயிர் சுவை உடையது. (மகாகவி பாரதியார் கவிதைகள், மூலமும் உரையும், ப. 578)**

எனும் வரிகள் உணர்த்துகின்றன.

உயிர் தெய்வம்

உயிரைத் தெய்வமாக வணங்கும் பான்மை, உயிர்களுக்குள் புதைந்து கிடக்கும் பூரணத்துவத்தை அறிந்துகொண்டதன் வெளிப்பாடாக அமைகின்றது. தத்துவத்தில் அகம் பிரம்மாஸ்மி எனும் நிலைப்பாடு நான் கடவுள் எனும் மனநிலையைக் குறிக்கின்றது. ஒருவர் தன்னுள் மறைந்திருக்கும் தெய்வத்தை உணர்ந்தால் பிற உயிர்களுக்குள் காணலாகும் தெய்வத்தையும் அறிய இயலும். எல்லா உயிர்களையும் தனக்கு இணையான தெய்வ நிலையில் வைத்து அணுகிடும் மீஉயர்வுச் சிந்தனையை மகாகவி பாரதியாரின் உயிர் தெய்வம் எனும் கோட்பாடு அளிக்கின்றது.

உயிர்ப் பொதுமை

எல்லா உயிர்களையும் ஒப்ப நோக்குகின்ற பொதுமைச் சிந்தனை பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் எனும் கருத்தியலின் விரிவாகும். ஓரறிவு உயிரி தொடங்கி ஆறறிவு உயிரி வரை அனைத்தையும் ஒன்றெனக் கொள்ளும் பொதுமை உணர்வு ஓங்கினால் எல்லா உயிரிடத்தும் அன்பு பாராட்ட இயலும். இதனால் உலகெங்கும் இன்பம் விளையும். இதனை,

எல்லா உயிரும் இன்ப மெய்துக.
எல்லா உடலும் நோய் தீர்க.
(மகாகவி பாரதியார் கவிதைகள், மூலமும் உரையும், ப. 579)

எனும் அடிகள் உணர்த்துகின்றன. எல்லா உயிரும் இன்பமெய்திட எல்லா உயிருக்கும் எல்லாம் கிடைத்திட உயிர்ப் பொதுமைச் சிந்தனை அடிப்படையாகும்.

உயிரின் தோழன்

இயற்கையும் உயிரும் இயைந்து பயணிப்பது. இயற்கையோடு இயைந்த வாழ்க்கையே முழுமை பெறுகின்றது. குறிப்பாக, ஐம்பெரும் பூதங்கள் என வகைமைப்படுத்தப்படுகின்ற நிலம், நீர், காற்று, ஆகாயம், நெருப்பு ஆகியவற்றோடு உடலும் உயிரும் நெருங்கியத் தொடர்புடையவை. உடலின் இயங்கியலுக்கு இயற்கையின் சக்தி ஆக்கத்தை அளிக்கின்றது. இதனை உணர்ந்த பாரதி, தம் பாடல் எங்கும் இக்கருத்தைப் பதிவு செய்கின்றார். ஞாயிற்றை புகழ்கின்ற இடத்திலே,

உயிர் தருகின்றாய், உடல் தருகின்றாய்
வளர்க்கின்றாய், மாய்க்கின்றாய்
(மகாகவி பாரதியார் கவிதைகள், மூலமும் உரையும், ப. 581)

என வளர்சிதை மாற்றத்தின் அங்கமாக இயற்கையைப் பதிவு செய்கின்றார். மேலும், ஞாயிறு உயிர் தருகின்றாள், ஊக்கம் தருகின்றாள் எனப் போற்றுகின்றார். உலகியலில் தன்னோடு இயைந்து பயணிக்கிற ஐம்பெரும் பூதத்துள் நெருப்பை உயிரின் தோழனாக பாரதி பாவிக்கிறார்.

தீயே, நீ எமது உயிரின் தோழன்.
உன்னை வாழ்த்துகின்றோம்! (மகாகவி பாரதியார் கவிதைகள், மூலமும் உரையும், ப. 584)

எனும் பா வரி இதனைப் புலப்படுத்துகின்றது.

முடிவுரை

உடலின் இயங்கியலுக்கு அடிப்படைக் காரணியான உயிர் உறுப்பல்லாத வடிவமில்லாத கூறாகும். மெய்யியல் மற்றும் தத்துவவியல் உயிரைச் சக்தியின் வடிவமாகச் சுட்டுகின்றது. அறிவியல் உயிரை ஆற்றலின் வடிவமெனக் காட்டுகின்றது. எவ்வித வரையறைகளுக்கும் உட்படாத உயிர் இன்றும் ஆய்வுக்குரிய பேசு பொருளாக உள்ளது. எல்லா உயிரிகளுக்குள்ளும் காணலாகும் உயிர் குறித்த மகாகவி பாரதியாரின் கருத்தியல், உயிர் நன்று, உயிர் சுவையுடையது, உயிர் தெய்வம், உயிர்ப் பொதுமை, உயிரின் தோழன் எனும் தலைப்புகளின் கீழ் ஆய்வுக்குட்படுத்தப் பெற்றுள்ளது. இதன் வாயிலாக எல்லா உயிர்களையும் தெய்வத்திற்கு இணையாகக் கருதுதல், எல்லா உயிர்களையும் ஒன்றெனக் கருதுதல், எல்லா உயிர்களும் இன்பமெய்துதல் எனும் பொதுவுடைமைச் சிந்தனை பாரதியிடம் விஞ்சிக் காணப்பெறுதல் புலனாகின்றது. பொருளாதாரப் பொதுவுடைமைச் சிந்தனைக்கு இணையாக பாரதியிடம் உயிர்ப் பொதுமைச் சிந்தனை மேலோங்கிக் காணப்பெற்றுள்ளது என்பது இவ்வாய்வின் வழி பெறப்பட்ட முடிவாகும்.

57. பாரதியின் இசைஞானம்



ஆர் விமலா மோகன்

எம்.ஏ தமிழ் இலக்கியம்
கர்நாடக இசை கலைஞர்
கோயமுத்தூர்- 641046.

முன்னுரை

அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது, அதனினும் ஒருவன் கவிஞனாகப் பிறக்கிறான் என்றால் அது எத்தனையோ நூற்றாண்டுக்கு ஒருமுறை தான் நிகழும். கம்பனுக்குப் பின் தமிழ் மக்கள் உள்ளத்திலே நிலைத்து நின்று வரும் கவிஞர் சுப்பிரமணிய பாரதியார். இவரை நாம் தேசியக்கவி, புதுமைக்கவி பாரதி என்று பல்வேறு பெயர்களால் அழைத்துக் கொண்டாடி வருகிறோம். பாரதியார் இளமையிலேயே கவி பாடக்கூடிய திறமை பெற்றவர். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஒரு சிறந்த கவிஞர் மட்டுமல்லாமல், ஆழமான இசை ஞானம் கொண்டவராகவும் திகழ்ந்தார். பற்பல சோதனைகளைத் தாண்டி வெற்றிபெற்று புலவர்கள் வியந்து அளித்த பட்டம் தான் பாரதி.

பாரதியின் இசைப் புலமையை எப்படிச் சொல்வது? எப்படிப் பாராட்டுவது என்றே தெரியவில்லை. பாரதியார் கர்நாடக இசை, ஹிந்துஸ்தானி இசை, மற்றும் நாட்டுப்புற இசை எனப் பல வகை இசைகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார்.தேசிய கீதங்கள், பாரதமாதாவின் திருப்பள்ளிஎழுச்சி, முருகன்பாட்டு, குயில்பாட்டு, வள்ளிப்பாட்டு, நவராத்திரி பாட்டு, கண்ணன் பாட்டு என்று பல பாடல்களை எழுதி உள்ளார். அதுவும் கண்ணனைத் தோழனாக, தாயாக, தந்தையாக, குழந்தையாக, சீடனாக, காதலனாக எழுதிய அவர், கண்ணம்மாவைக் காதலியாக, குலதெய்வமாக எழுதி வியப்பில் வாழ்த்தியவர்.

பாரதியின் இசைஞானம்

பாரதியின் இசைஞானத்தைப் பற்றி எழுதிக் கொண்டே போகலாம், வந்தே மாதரம் என்ற தேசிய கீதத்தைப் பற்றி எழுதும் போதும் 'ஜாதி மதங்கள் பாரோம், வேதியராயினும், வேறு குலத்தவராயினும் ஒன்றே என்று பாடினார். நாதநமக்கிரியை என்னும் ராகத்தில் பாடியுள்ளார். நாதநமக்கிரியை ராகம் 15வது மேளகர்த்தா ராகம். அக்னி என்று அழைக்கப்படும் மாயாமாளவகௌள ராகத்தில் பிறந்தது. கருணைச்சுவையை உடைய ராகம். மாலையில் பாடக்கூடிய ராகம். இசை நாடகங்களில் அதிகமாகப் பயன்படுத்தப்படும். இதிலிருந்தே தெரிகிறது அவருடைய இசைஞானம். அதே போல நாட்டுவணக்கத்தில் 'எந்தையும் தாயும் மகிழ்ந்துகுலாவி அன்னையர் தோன்றி மழலையோடு மகிழ்ந்த இந்த நாட்டைப் பற்றியும், உயர்ந்து வளர்ந்த கோயில்களைப் பற்றியும் அழகான காம்போதி ராகத்தில் பாடி இருக்கிறார். இந்த ராகத்தின் பெருமையைச் சொல்லிக்கொண்டே போகலாம். சிருங்காரம், நகைச்சுவை, காருண்யம் மற்றும் அற்புத ரசங்களைப் பிரதானமாகக் கொண்ட ராகமாகும்.

அடுத்து நம் பாரத தேசத்தைப் பற்றி அற்புதமாகப் பாடியிருக்கிறார். அன்றே பாடினான் பாரதி, நம் பாரத தேசமென்று பெயர் சொல்லுவார், மிடிபயங்கொல்லுவார் என்று பாடினார். நம் தேசத்தின் பெருமையை அவரைப்போல இனி யாராலும் பாட முடியாது. நம் நாட்டிற்கு என்னென்ன வளங்கள் தேவையோ அத்தனையும் பாடிவிட்டார் புன்னகவராளி என்ற ராகத்தில் பாடியுள்ளார் இந்த ராகம் 39 ஆவது மேளகர்த்த ராகமான ஜலவரளிக்குரியது. இந்த ராகம் பயங்கர ரசத்தை வெளிப்படுத்துவதும் பாம்புகளுடன் தொடர்பு படுத்தப்படுவதாகவும்

கருதப்படுகிறது. மண்ணும் இமயமலை எங்கள் மலையே எங்கள் இமயமலையைப் போல எங்குமே இல்லை என்று அற்புதமாகப் பூபாளம் என்ற ராகத்தில் பாடி இருக்கிறார். கர்நாடக இசையில் ஒரு முக்கியமான ராகம் ஆகும். பொதுவாக இது காலையில் பாடும் ராகம். பூபாளராகத்தைப் பண்டைய தமிழ்பண்னான 'புறநீர்மை' என்பதன் திரிபு என்று கருதப்படுகிறது. இந்த ராகம் அமைதி, சாந்தம், பக்தியை வெளிப்படுத்துகிறது.

விடுதலை என்ற தலைப்பில் பறையரும், புலையரும், மறவரும், குறவரும் எல்லோரும் ஒன்றே ஏழை என்றும் அடிமை என்றும் எவனும் இல்லை ஜாதியில் மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையை கொளுத்தி, ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமம் என்று அன்றே பாடினான் பாரதி. இந்த விடுதலையை பிலஹரி என்ற ராகத்தில் அழகாக ஸ்வரப்படுத்தி இருக்கிறார். பிலஹரி ராகமானது 29 மேளகர்த்தாவாகிய சங்கராபரணத்தின் ஜன்யம். இந்த ராகம் வீரரசத்தை பிரதானமாகக் கொண்டது. மனச்சோர்வை நீக்கக் கூடிய ராகம். விடுதலை, விடுதலை, விடுதலை என்ற பாடலை பிலஹரி ராகத்தில் அன்றே வீரரசத்தோடு பாடியிருக்கிறார். இவருடைய பாடலும், பாடலுக்கு உகந்த ராகத்தையும் படிக்கும் பொழுது நமக்கு மிகுந்த வியப்பைத் தருகிறது.

சுதந்திரப்பள்ளு என்ற தலைப்பிலே ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று நம் சுதந்திரத்தைப் பற்றி களிப்போடு பாடியிருக்கிறார் நம் பாரதி. அதுவும் வராளி என்ற ராகத்திலே அழகாகப் பாடியிருக்கிறார். இதில் தெரிகிறது அவருடைய இசைஞானம். இந்த வராளி ராகமானது 39வது மேளகர்த்தா ராகம். ஜாலவராளியின் ஜன்யமாகும். இந்த ராகம் தனித்தன்மை வாய்ந்த ராகம் . இந்த ராகம் அனைத்து நேரங்களிலும் பாடக்கூடிய ராகம். காக்கைச் சிறகினிலே நந்தலாலா-நின்றன் கரியநிறந் தோன்றதையே நந்தலாலா அழகான இந்தப் பாடலுக்கு யதுகுலகாம்போதி என்ற ராகத்திலே இசை அமைத்து இருக்கிறார். இது பண்டைய தமிழிசைப் பண்களில் செவ்வழி என்ற பெயருடன் அழைக்கப்படுகிறது. இந்த ராகம் மிகவும் பிரபலமான ராகமாகும். நவராத்திரி என்ற தலைப்பிலே சரஸ்வதிகாதல் - ஸரஸ்வதிமனோஹரி என்ற ராகத்திலும், லட்சுமி காதல் என்ற தலைப்பில் (ஸ்ரீ ராகத்திலும்), காளிகாதல் என்ற தலைப்பில் புன்னகவராளி என்ற ராகத்திலும் இன்னும் அடுக்கிக் கொண்டே போகலாம் அவ்வளவு சிறப்பாக ராகங்களை எடுத்தும் காட்டியுள்ளார்

முடிவுரை

மகாகவி பாரதியின் கவிதைகள் மகிழ்ச்சியையும், எழுச்சியையும் ஏற்படுத்தக் கூடியவை. பாட்டுக்கொரு புலவன் பாரதி என்றால் மிகையாகாது. வாழ்வின் ஒவ்வொரு அம்சத்தையும் தீர்க்கமாக ஆராய்ந்து கவிதைகளை உணர்ச்சியோடும் இசைஞானத்தோடும் நமக்கு அளித்த பாரதியாரின் பெருமையை இங்கே அளவிட முடியாது. உலக மகாகவிகளில் ஒருவராகிய மகாகவி பாரதியாரின் பெருமையைப் போற்றுவோம். குழந்தைகளுக்கு அவற்றைப் பற்றி நிறையச் சொல்லிக் கொடுப்போம். நம் பாரதியை நமக்குத் தந்த இந்த பாரத நாட்டைப் போற்றிக் கொண்டாடுவோம்.

58. பாரதியின் கவிதைகளில் சீர்திருத்தக் கருத்துக்கள்



கோ.தனம்,

எம். ஏ, எம். ஏ, எம்.ஃபில், பி.எட்.

பட்டதாரி ஆங்கில ஆசிரியை

அரசு உயர்நிலைப்பள்ளி தேவராயபுரம்

முன்னுரை

புதுக்கவிதைகளின் தந்தையாகவும், நவீன இலக்கியத்தின் திறவுகோலாகவும் போற்றப்படுபவர் பாரதி,எதனையும் வித்தியாசமாகப் பார்ப்பது தான் கவிஞரின் இயல்பு. ஆனால் பாரதியோ அதனையும் கடந்து தன் கவிதையில் கண்ட வித்தியாசத்தை எல்லாம் வாழ்ந்து காட்டியவர் அதனால் தான் என்னவோ அவரைப் பலரும் அக்காலத்தில் பைத்தியமாகக் கூட நினைத்திருக்கின்றனர்,ஆனால் கவிஞர் ஆனவன் இவை அனைத்தையும் கடந்து சாதாரண மக்கள் யாரும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத உலகில் வாழ்பவர்கள்.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல், வள்ளுவர் போல், இளங்கோவைப் போல் பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை "பாரதி

இதே வரிசையில் வைத்துப் போற்றுதற்கான அத்துணை தகுதிகளும் பாரதி இடத்திலும் உண்டு. பாரதியாருக்குச் சொல்லும்,செயலும் வேறு வேறு அல்ல. தன் கவிதையில் சொல்வதைச் செய்து காட்டியவர். பொதுவாகக் கவிஞர்களிடத்தில் வித்யா கர்வம் இருக்கும். ஆனால் பாரதி இடத்தில் அதிகமாக நெஞ்சுரம் இருந்தது. பாரதியார் தனது சொற்களிலும், எழுத்துக்களில் மட்டும் அல்ல, தனது வாழ்க்கையிலும் தன்னுடைய அசாத்திய நெஞ்சுரத்தைக் காட்டியவர்.

நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படும் நமது பாரதி, கவிதைகளில் முற்போக்கான மற்றும் சீர்திருத்தவாத லட்சியத்தை வெளிப்படுத்துபவர். உதாரணமாகப் பாஞ்சாலி சபதத்தில் இந்திய விடுதலைப் போராட்டத்தையே பாரதப்போராகவும், பாஞ்சாலியைப் பாரத மாதாவாகவும், உருவகப்படுத்தி இருப்பார். பொதுவாக இக்கவிதையைப் பார்ப்பவர்களுக்கு இந்தக் கவிதை மகாபாரதக் கதை போன்று இருக்கும், ஆனால் இக்கவிதையைப் படிப்பவர்கள் மட்டுமே பாரதியின் உள்நோக்கத்தை அறிவர். ஏனெனில் வியாசரின் மகாபாரதத்தைத் தழுவி பாரதி இதை எழுதி இருந்தாலும், பாரதி இந்தக் கவிதையை ஒரு பெண்ணுரிமைக் காப்பியமாக எழுதி இருப்பார்.

மேலும் கண்ணன் பாட்டில் கண்ணனைப் பலவிதமாக உறவு நிலைகளில் பாவித்துக் கவிதை எழுதி இருப்பார். பொதுவாக மரபுக் கவிதைகளில் கண்ணனைக் கடவுளாக மட்டுமே பாவித்துக் கவிஞர்கள் கவிதைகளை எழுதி வந்தனர். ஆனால் பாரதியோ, கண்ணனைத் தோழனாகத்,தாயாக, தந்தையாக, சேவகனாக மற்றும் காதலனாக நினைத்துப் பாடியிருப்பார்.

பாஞ்சாலி சபதம்

தமிழனுக்கு நாட்டுப்பற்று ஊட்ட வேண்டிய தேவையை அடிப்படையாக்கியும், பெண்ணடிமை தீர்ந்தாலே நாடு விடுதலை அடையும் எனும் கருத்தினை வலியுறுத்தியுமே பாரதி,பாஞ்சாலி சபதத்தை உருவாக்கியுள்ளார்.பல நாட்டு அரசர்கள் அமர்ந்திருக்கும் அவையில் ஒரு பெண் தனக்கு ஏற்பட்ட அவமானத்தைத் துடைக்க வேண்டி "இன்னது செய்யாமல், இன்னது நடக்காமல்" அவிழ்க்கப்பட்ட என் கூந்தலை முடிக்க மாட்டேன் என்று சபதம் செய்கிறாள். இக்காப்பியத்தில் பீமன், அர்ஜுனன் ஆகியோரின் சபதம் இடம்பெற்று இருந்தும் அதனை விடுத்து விழுந்து கிடக்கும் பெண் சமூகத்திலிருந்து சபதம் மேற்கொள்ளும் ஒரு குரலாகப் பாஞ்சாலியின் சபதத்தை அமைத்திருப்பது மிகவும் சிறப்பானதாகிறது.

"படிமிசை இசையுறவே - நடை பயின்றிடும் தெய்வீக மலர் கொடியைக்
கடிக்கமழ் மின்னுருவை - ஒரு கழனியக் கனவினைக் காதலினை
வடிவறு பேரழகை - இன்ப வளத்தினைச் சூதனி பணயம் என்றே"

என வரும் பாடலில் பாரதி காப்பியத்தின் தலைமை மாந்தர் பாஞ்சாலியைக் குறிப்பிடுகிறார். பாரதப் போரின் முக்கிய பாத்திரப்படைப்புகளான துரியோதனன், துச்சாதனன் ஆகிய இருவரின் உயிரிழப்புகளும் பாஞ்சாலி சபதத்தில் முக்கியப் பங்கு வகிக்கிறது. ஒரு பெண் மூலமாக அதனைச் சாதித்துக் காட்டுகிற புது மரபினைக் கையாண்டு உள்ளார் பாரதியார். மண்ணாசையை அடிப்படையாகக் கொண்டு கதை பின்னப்பட்டிருந்தாலும் பாஞ்சாலி துகிலுரியப்படும் காட்சியை பாரதியார் தேசியத்தின் கோபமாகக் காட்டி பாஞ்சாலி சபதம் எனப் பெயர் வைத்துள்ளார்.

பாஞ்சாலி சபதத்தின்மொழி நடை

பாரதியார் இந்தக் கவிதையை எளிமையான மொழி நடையில் எழுதியுள்ளார். சந்தம் மற்றும் தாளத்துடன் இந்தக் கவிதை இருப்பதால் அவை இசையோடு பாடுவதற்கு ஏற்றவையாக உள்ளது. உதாரணமாக, "தருமத்தின் வாழ்வுதனைச் சூது கவ்வும், தருமம் மறுபடி வெல்லும்" என்ற பிரபலமான பாடல் வரிகள் பாரதியாரின், எளிமையான மொழி நடைக்கும் ஆழமான கருத்திற்கும் ஒரு சிறந்த உதாரணமாகும்.

கண்ணன் பாட்டு

கண்ணன் பாட்டு பாரதியாரின் பக்தி இலக்கியத்தின் முக்கிய படைப்புகளில் ஒன்றாகும். இது கண்ணனைப் பற்றிய புதிய பார்வையையும், பக்தியின் பல்வேறு பரிமாணங்களையும் வெளிப்படுத்துகிறது. இதில் கண்ணனைத் தோழனாகவும், சேவகன் ஆகவும், காதலனாகவும், தாயாகவும், தந்தையாகவும், குலதெய்வமாகவும் 23 கோணங்களில் பாடியுள்ளார். கண்ணன் மீது பாரதியார் கொண்ட பக்தியையும், அன்பையும் இந்தப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இதனைக் கீழ்வரும் பாடல் வரிகள் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம்.

"நண்பனாய் மந்திரியாய, நல்ல ஆசிரியனுமாய், பண்பிலே தெய்வமாய் பார்வையிலே சேவகனாய்."- கண்ணன் பாட்டு

கண்ணன் பாட்டு பக்திப் பாடல்கள் மட்டுமின்றி தத்துவார்த்த கருத்துக்களையும், சமூக நோக்கங்களையும் உள்ளடக்கியது. பாரதியார் சமத்துவம், பெண் விடுதலை போன்ற கருத்துக்களை வலியுறுத்தியுள்ளார். கண்ணனை வைணவ சமய வழியாக அணுகும் அணுகுமுறை பாரதியிடம் இல்லை. இதனை பக்தி இலக்கியத்தின் ஒரு வளர்ச்சி என்றும்,

இறைவனைக் கோயிலில் இருந்து வீட்டுக்குக் கொண்டு போய்விடும் நோக்கம் எனவும் கூறலாம். தமிழ் இலக்கிய வரலாற்றின் 20 நூற்றாண்டு இலக்கியங்களில் கடவுளை இன்னும் நெருக்கமான முறையில் நோக்குகின்றார். இந்த உரிமையை பாரதியாருக்கு யார் கொடுத்தது? நாட்டின் சமூகத்தின் கதியற்ற நிலை, பிணி தீர்ப்பதற்குரிய நெருக்கமான ஆள் இல்லாத சூழல் ஆகியன பாரதியாருக்கு இந்த நோக்கு நிலையை வழங்கி இருக்கிறது. வழிபடு பொருளாக இல்லாமல் கடவுளைப் பயன்படும் பொருளாகப் பாரதியார் மாற்றுகின்றார். இன்னும் சோறும் பருகும் நீரும் தின்னும் வெற்றிலையும் எங்கள் கண்ணன் என்று நம்மாழ்வார் கூறியதை இங்கு நாம் ஒப்பு நோக்கலாம்.ஆனால் பக்தி இலக்கிய பாரம்பரியம் கூற முடியாத வகையில், **" நாலு குலங்கள் அமைத்தான் -அதை நாசமுள்ள புரிந்தனர் மூட மனிதர் சீலம் அறிவு கருமம்- இவை சிறந்தவர் குலத்தினில் சிறந்தவராம்"** என்று கண்ணனின் குலப் பகுப்பைக் கூறுவதைக் காணலாம்

"மாடு கன்று மேய்த்திடுவேன்: மக்களை நான் காத்திடுவேன் வீடு பெருக்கி விளக்கேற்றி வைத்திடுவேன் சொன்னபடி கேட்டேன்: துணிமணிகள் காத்திடுவேன்" என்று கூறும் அளவு இறங்கி வரக் காண்கிறோம். சங்கு சக்கரங்கள் ஏந்திய திருமாலின் அவதாரத்தின் கையில் வீடு பெருக்கி வைக்கும் துடைப்பத்தைக் கொடுத்துத் தமக்கு சேவகன் ஆக்கிக் கொள்ளும் உரிமை பாரதிக்கு வைத்திருக்கிறார். **"கண்ணனை நான் ஆட்கொண்டேன்! கண்கொண்டேன்"** என்று கூறுகிறார் இங்கு தெய்வம் ஆட்கொள்வது போய் தெய்வத்தை இவர் ஆட்கொள்வது தொடங்கிவிட்டது என்ன இது கண்ணனை வேலைக்காரன் ஆக்கி ஆட்கொண்டதாகப் பாரதி கூறிவிட்டாரே, அவதாரப் பெருமையை போய்விட்டதே என்று யாரும் எண்ணத் தேவையில்லை,இதோ கண்ணனை குழந்தையாக்கி தோளிலே ஏற்றிக்கொள்கிறார். மரபு வழியிலான பிள்ளை தமிழ் நூற் பகுதிகளைக் கண்ணம்மா என் குழந்தை வென்று விடுகிறது .

"ஓடி வருகையிலே - கண்ணம்மா உள்ளம் குளிருதடி! ஆடி திரிதல் கண்டால்-உன்னை போய் ஆவி தழுவுதடி" இவ்வாறாகப் பாடல்களில் வரும் உணர்ச்சிகள் படிப்போரைக் கவரும் வகையில் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பாரதியாரின் நாட்டுப்பற்று கண்ணன் பாட்டில் கண்ணனை தேசத்தின் அடையாளமாகப் பாடுவதில் வெளிப்படுகிறது. வழக்கமான பக்தி இலக்கியங்களில் இருந்து மாறுபட்டு கண்ணனை பல்வேறு கோணங்களில் அணுகியிருப்பது பாரதியின் தனித்துவம். பெண்கள் முன்னேற்றம் மற்றும் பல சமூகக் கருத்துகளைக் கூறி இருப்பது பாரதியின் சமூக சீர்திருத்த நோக்கத்தைக் காட்டுகிறது.

கண்ணன் பாட்டு மொழி நடை

பாரதியாரின் மொழி எளிமையானது அன்றாட வாழ்வில் பயன்படுத்தப்படும் வார்த்தைகளை உள்ளடக்கியது இதனால் அனைவரும் எளிதில் புரிந்து கொள்ள முடியும். இயற்கை மற்றும் மனித வாழ்க்கையில் இருந்து பெறப்பட்ட உவமைகளைப் பயன்படுத்தி கண்ணனின் குணாதிசயங்களை வைத்துள்ளார். பாடல்கள் சந்தம் மற்றும் இசைக்காக அமைக்கப்பட்டிருக்கிறது.

குயில் பாட்டு

குயில் பாட்டு. இது பாரதியின் முக்கியமான படைப்புகளில் ஒன்று. வழக்கத்திற்கு மாறான காதல், குயிலிருக்கும், குரங்கிற்கும் இடையேயானது. பொதுவாகத் தலைவனுக்கும் தலைவிக்கும் ஏற்படுகின்ற காதல் அல்லது மனிதனுக்கும் இயற்கைக்கும் ஏற்படுகின்ற காதல் மட்டுமே கருப்பொருளாக இருக்கும். அந்தக் காலக். கவிதைகளில் ,

நம்முடைய பாரதியோ?புது கவிஞனாயிற்றே, ஒரு குயிலுக்கும், குரங்கிற்கும் இடையே காதல் வந்ததாகச் சொல்லி இந்தக் கவிதையில் கூற வேண்டிய கருத்தை படிப்பவர்களுக்குச் சொல்லி இருப்பார். இந்தக் கவிதையானது காதல், ஏமாற்றம்,ஆன்மீகம் மற்றும் இயற்கையின் அழகைக் கருப்பொருளாகக் கொண்டது.இயற்கை அழகோடு ஒன்றி இந்தப் பாடலைப் பாடி இருப்பார் பாரதியார் . இது பட்டப்பகலில்

"பாவலர்க்கு தோன்றுவதாம் நெட்டைக் கனவின் விளைச்சல் உண்மையிலேயே இது ஒரு கனவு, மது மயக்கத்தில் உண்டாகும் மிகை பேச்சுப்போல கவிக்கு அருள் வந்த வேலையில் மெய் மறந்து கொட்டிய கற்பனை"என்று குயில் பாட்டு பற்றி **எழுத்தாளர் கு. ப ராஜகோபாலன்** கூறியுள்ளார். உண்மைதான் இப்பாடலில் குயில், குரங்கு,காளை, கவிஞன் என இவர்களுடன் ஏற்படும் தொடர்புகளை அழகாகவும், கவிஞனுக்குக் குயில் மேல் ஏற்படும் காதல் பின்பு குயிலின் சோகக் கதையைக் கேட்ட பிறகு அதன் மேல் எழும் பாசம் எனப் பல விஷயங்களை அழகாகக் கூறி குயில் பெண்ணாகி மறைந்து போனதும் அதைத் தேடிச் செல்லும் கவிஞனின் நிலைமை என விளக்கி இறுதியில் இவை யாவும் கவிஞனின் கனவில் தோன்றிய விஷயங்களாகச் சொல்லிப் பாடலை முடித்து இருப்பார். நம் வாழ்க்கையில் அழகாய்த் தோன்றும் அனைத்தும் கற்பனையே என்ற வாழ்க்கைத் தத்துவத்தையும் குயிலின் குரலால் ஏற்படும் ஈர்ப்பு கவிஞனை எந்த அளவு வாழ்க்கையில் மாற்றுகிறது என்றும் குயில் மறைந்து போனதும் கவிஞன் அதைப் பின்பற்றிச் செல்வதையும் வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பல ஆன்மீகக் கருத்துக்களை பாரதி விளக்குகிறார்.

முதல் பாடலிலேயே குயிலின் காதலைக் கீழ் வருமாறு வர்ணிக்கிறார் **" காதல் காதல் காதல் காதல் போயின் காதல் போயின் சாதல் சாதல் சாதல் " (குயில் பாட்டு-1)**குயிலின் கதை முடிந்த பிறகு குயில் பாட்டின் இறுதியில் கவிஞர் மூன்று அடிகளில் ஒரு வினா வை எழுப்புகின்றார். **“ஆன்ற தமிழ் புலவீர்! கற்பனையே ஆனாலும் வேதாந்தமாக விரித்து பொருள் உரைக்க யாதானும் சற்றே இடம் இருந்தால் கூறீரோ!"** இவ்வரிகளை வைத்து இப்பாட்டு வேதாந்த உள்ளுறை உடையது என்றும் சைவ சித்தாந்த உள்ளுறை அமைந்திருப்பதாகவும் விவாதங்கள் நிகழ்ந்தன. குயில், மாடு,குரங்கு என்பவற்றை குறியீடுகளாகக் கருதும் நிலையில் இப்பாட்டு ஒரு தத்துவ உள்ளுறை உடையது என்று விளக்கப்படுகிறது.அனைத்துக் கவிதைகளிலும் பின்பற்றியுள்ளது போல் பாரதி இந்தப் பாடலிலும் எளிமையான மொழி நடையையே பயன்படுத்தியுள்ளார் மேலும் இதில் உள்ள சந்தம் பாடல்களுக்கு ஏற்றவாறு அமைந்துள்ளது.

முடிவுரை

எழுத்துக்களாலும், சீரிய கருத்துகளாலும் மக்களிடையே புரட்சிகரக் கருத்துக்களை விதைத்தவர் பாரதி. எழுதுகோலால் எதையும் மாற்ற முடியும் என்று நிரூபித்துக் காட்டியுள்ளார். அவருடைய அத்தனை கவிதைகளும் காலம் தாண்டியும் விளைவுகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன. தமிழ் மொழியின் இனிமை,பெருமை மற்றும் சிறப்பு பற்றி உலக அறியச் செய்து புரட்சிக்கவி என்று பட்டத்துடன் விளங்குகிறார். பாரதியார் எழுதிய கட்டுரைகள், சமூகம், கலை,தத்துவம், அரசியல் என பல வகைகளில் தொகுக்கப்பட்டுள்ளன. பாரதியாரின் இந்தக் கருத்துக்களை இக்கட்டுரை வழி காணலாயிற்று.

துணைநூற்பட்டியல்:

1.பாரதியார் கவிதைகள்,பாரதியார்,திருமகள் நிலையம்,2019,சென்னை.

2.பாஞ்சாலி சபதம் -பாரதியார்,பாரதி பிரசுராலயம்.(1921),சென்னை.

59. பாரதியின் விடுதலை வேட்கைப் பாடல்கள்-ஓர் ஆய்வு



க. லலிதா காயத்ரி. எம்.ஏ.,பி.எட்.,எம்.பில்

பட்டதாரி ஆசிரியை (ஆங்கிலம்)
சூலூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி,
சுப்பராயன் புதூர், கோவை

முன்னுரை

சுப்பிரமணிய பாரதியார், தனது பாடல்கள் மூலம் இந்திய மக்களை ஒருங்கிணைத்து, விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு புதிய பாதையை அமைத்துக் கொடுத்தார். அவரது பாடல்கள், இன்றும் கூட, தேசபக்தியையும், நாட்டுப்பற்றையும், ஒற்றுமையையும் மக்களிடையே ஊக்குவிக்கின்றன. எனவே, பாரதியாரின் சுதந்திரப் பாடல்கள், இந்திய வரலாற்றில் ஒரு முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன.பாரதியார், ஒரு சிறந்த கவிஞர் மற்றும் விடுதலைப் போராட்ட வீரர் ஆவார். அவரது பாடல்கள், இந்திய சுதந்திரப் போராட்டத்திற்கு ஒரு புதிய திசையைத் தந்ததுடன், சமூக சீர்திருத்தத்திற்கான விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. பாரதியாரின் பாடல்கள், தலைமுறை தலைமுறையாக மக்களால் போற்றப்பட்டு, கொண்டாடப்படும் ஒரு பொக்கிஷமாகத் திகழ்கிறது.அவருடைய விடுதலை வேட்கைப் பாடல்களை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

பாரதியாரின் சுதந்திரப் பாடல்கள்

பாரதியாரின் சுதந்திரப் பாடல்கள், இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஒரு முக்கிய பங்கைக் கொண்டிருந்தன. அவரது பாடல்கள், சுதந்திர வேட்கையை மக்களிடையே தூண்டுவதற்கும், தேசபக்தியை வளர்ப்பதற்கும், சமூக சீர்திருத்தத்தை ஊக்குவிப்பதற்கும் முக்கிய கருவியாக அமைந்தன. சுதந்திரப் போராட்ட காலங்களில், மக்களின் மனதில் தேசபக்தியை ஊட்டியதுடன், சமூக சீர்திருத்தத்திற்கான விழிப்புணர்வையும் ஏற்படுத்தியது. பாரதியாரின் பாடல்கள், எளிமையான மொழியில், அனைவரும் புரிந்து கொள்ளும் வகையில் அமைந்திருந்தது, இது அவரது பாடல்கள் மக்களிடையே பரவலாகச் சென்றடையக் காரணமாக இருந்தது.

சுதந்திரப் போராட்டத்தில் பாரதியாரின் பங்கு

பாரதியார், இந்திய சுதந்திரப் போராட்டத்தின் முக்கிய தலைவர்களில் ஒருவராகக் கருதப்படுகிறார். அவரது பாடல்கள், மக்களை ஆங்கிலேய ஆட்சியில் இருந்து விடுதலை அடையத் தூண்டியது. "என்று தணியும் இந்த சுதந்திர தாகம்" போன்ற பாடல்கள், விடுதலைக்கான ஏக்கத்தை வெளிப்படுத்துகின்றன. மேலும், "சாதிகள் இல்லையடி பாப்பா" போன்ற பாடல்கள், சமூகத்தில் நிலவிய சாதிய ஏற்றத்தாழ்வுகளை எதிர்த்துப் போராட மக்களை ஊக்குவித்தன. பாரதியாரின் பாடல்கள், வெறும் அரசியல் கருத்துக்களை மட்டும் வெளிப்படுத்தவில்லை, மாறாக, சமூக சீர்திருத்தத்திற்கான கருவியாகவும் திகழ்ந்தது. அவரது பாடல்கள், பெண்களின் முன்னேற்றம், கல்வி, மற்றும் சமத்துவம் போன்ற கருத்துக்களை வலியுறுத்தியது. "சின்னஞ்சிறு கிளியே கண்ணம்மா" போன்ற பாடல்கள், பெண்களின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றன.

பாரதியாரின் பாடல்களின் தாக்கம்

பாரதியாரின் பாடல்கள், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு ஒரு உந்துசக்தியாக இருந்தது. அவரது பாடல்கள், மக்களை ஒன்றுதிரட்டி, ஆங்கிலேயருக்கு எதிரான போராட்டத்தை வலுப்படுத்தியது. அவரது பாடல்கள், இன்றும் மக்களால் போற்றப்படுகின்றன, மேலும், சுதந்திரப் போராட்டத்தின் ஒரு முக்கிய அங்கமாகக் கருதப்படுகிறது. பாரத நாட்டின் விடுதலையைப் பற்றிப் பாடிய கவிஞர்களுள் பாரதியார் முதன்மையானவர். தூங்கிக் கிடந்த பாரதத்தைத் தம் உணர்ச்சிகரமான பாட்டுகளால், தட்டி எழுப்பிய பெருமை பாரதிக்கு உண்டு' என்பார்கள். வேறு பலரும் விடுதலை இயக்கத்தைப் பற்றிப் பாடினர். ஆனால் பாரதி, நாட்டின் ஒற்றுமை, அதனால் ஏற்படும் பலன், விடுதலை பெற வேண்டியதன் தேவை ஆகியவற்றையும் பாடினார். அத்துடன், இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னரே தீர்க்க தரிசனமாக **"ஆடுவோமே பள்ளுப் பாடுவோமே" (சுதந்திரப்**

பள்ளு - பல்லவி) என்று விடுதலை பெற்றுவிட்டதாகக் கனவு கண்டு ஆனந்தக் கூத்தாடினார் அமரகவி பாரதியார்.

விடுதலை வேட்கை

இந்தியா, ஆங்கிலேயராகிய அந்நியரிடம் இருந்து விடுதலை அடைய வேண்டும் என்பது பாரதியாரின் தணியாத ஆசை. அதற்காக, இந்திய மக்களை எந்த வகையில் எல்லாம் விழிப்புணர்ச்சி அடையச் செய்ய வேண்டுமோ, அந்த வகையில் எல்லாம் உணர்ச்சிகரமான பல விடுதலை இயக்கப் பாடல்களைப் பாடினார். முதலில், விடுதலை என்ற உணர்வு எந்தவகையில் இந்திய மக்களின் உள்ளத்தில் வேரூன்றி இருந்தது என்பதைத் தம் பாடல்களில் வெளிப்படுத்துகிறார். இந்திய மக்களுக்கு வேண்டியது விடுதலையே அன்றி வேறொன்றும் இல்லை என்பதனை, வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர் (சுதந்திரப் பெருமை - 1) என்ற பாடலில் குறிப்பிடுகிறார். கிடைப்பதற்கு அரிய அமுதத்தை உண்ண விரும்புவோருக்கு அறிவை மங்கச் செய்யும் கள்ளைக் கொடுத்தால் உண்பார்களா? விடுதலை வேட்கை உடைய இந்தியர்கள், விடுதலையைத் தவிர, வேறு எதற்கும் உடன்பட மாட்டார்கள் என்பதை மிகவும் தெளிவாகத் தெரிவிக்கிறார். ஏன் என்றால், விடுதலை வேட்கை எனும் இந்தப் பயிரைத் தண்ணீரை விட்டு வளர்க்கவில்லை; தியாகிகளின் கண்ணீரை விட்டே வளர்த்தோம். தண்ணீர் விட்டோ வளர்த்தோம்? சர்வேசா! (சுதந்திரப் பயிர் - 1) எனவே, விடுதலையைப் பற்றிய எங்கள் தாகம் என்றைக்கும் தணியாது. எங்கள் சுதந்திர தாகம் என்றைக்கு அடங்கும்? என்றைக்கு என் பாரதத் தாய் அடிமை விலங்குகளைத் தகர்த்து எறிந்து விடுதலை பெறுவாள்? - என்று ஏங்கிக் கொண்டிருக்கிறோம். இதனை, **"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?"** (சுதந்திர தாகம்-1)என்ற பாடலின் மூலம் சிறப்பாக வெளிப்படுத்துகிறார் பாரதியார்.

விடுதலை ! விடுதலை !

இந்தியா விடுதலை பெறுவதற்கு முன்னரே விடுதலையைப் பற்றிக் கனவு கண்டார் மகாகவி பாரதியார், விடுதலையைப் பற்றிய உணர்வுகளை வெளிப்படுத்தினார். இந்த உணர்வுகளினால் உந்தப்பட்டிருந்த, இந்திய மக்கள், விடுதலை பெற்றால், எத்தகைய உணர்ச்சியைப் பெறுவார்கள்? என்பதைத் தம் கற்பனை மூலம் மிகச் சிறப்பாகப் பாடுகிறார். இந்திய மக்களே தங்களுக்குள் சாதி, சமய, இன வேறுபாட்டால் ஒருவருக்கொருவர் அடிமையாய் இருந்தனர். இந்த வழக்கத்தில் இருந்தும் விடுதலை பெறவேண்டுமென்று பாடுகிறார். விடுதலை பெற்றபின், சுதந்திர இந்தியா எத்தகைய மாற்றத்தைப் பெற வேண்டுமென்று அவர் கண்ட கனவையும் வெளிப்படுத்துகிறார். சுதந்திரத்தைத் தேவியாக உருவகித்து, எத்தனைத் துயரமடைந்தாலும் உன்னைத் தொழ மறக்கமாட்டேன் என அவர் பாடுவது இந்தியா சுதந்திரம் அடைந்தே தீரும் என அவர் திண்ணமாக நம்பியதைக் காட்டுகிறது. அவருடைய விடுதலை வேட்கை அவ்வாறு எண்ணத் தூண்டுகிறது..

முடிவுரை

பாரதியாரின் எழுத்துக்கள், இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு ஒரு முக்கிய உத்வேகமாக அமைந்தது. அவரது கவிதைகள் மற்றும் கட்டுரைகள், தேசபக்தி மற்றும் விடுதலைக்கான வேட்கையை மக்களிடையே ஆழமாக விதைத்தன. குறிப்பாகப், பெண் விடுதலை, சாதி மறுப்பு போன்ற சமூக சீர்திருத்தக் கருத்துக்களை அவர் வலியுறுத்தியது குறிப்பிடத்தக்கது.. அவர் ஒரு தேசியக் கவிஞர் மட்டுமல்ல, சமூக சீர்திருத்தவாதியும் ஆவார்.அவரது எழுத்துக்கள் மூலம் இந்திய விடுதலைக்கான தாகம் மற்றும் சமூக சீர்திருத்தத்திற்கான வேட்கையை மக்களிடையே தூண்டி,. தேசிய உணர்வை ஊட்டியதுடன், பெண் விடுதலை, சாதி மறுப்பு போன்ற கருத்துக்களையும் வலியுறுத்தினார். அவரது படைப்புகள் இந்திய விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு உந்துசக்தியாக அமைந்ததை இக்கட்டுரை வழி காணலாயிற்று.

துணைநூற்பட்டியல்:

1.பாரதியார் கவிதைகள்,பாரதியார்,மக்கள் பதிப்பு,பாரதியார்,கவிதா பப்ளிகேசன்ஸ்,20

60. பாரதியின் சக்திப்பாடல்கள் ஓர் ஆய்வு



து.சுமதி,எம்.ஏ.,பி.எட்
தமிழாசிரியர், அ.பெ.மே.நி.பள்ளி
தொண்டாமுத்தூர், கோவை

முன்னுரை

பாரதியாரின் சக்தி பாடல்கள், அவரை ஒரு பக்தி கவிஞராகவும் சித்தரிக்கின்றன. அவர் இயற்றிய சக்திப் பாடல்கள் மூலம், பராசக்தியை வழிபடும் பக்தி உணர்வை வெளிப்படுத்துகிறார். அவரது பாடல்களில், சக்தி தேவியின் பல்வேறு அம்சங்களையும், வழிபாட்டு முறைகளையும், பக்தியையும் காணமுடிகிறது. இவை பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்துப், பெண் விடுதலைக்காகப் பாடிய பாடல்கள் ஆகும். அவர் பார்வையில், பெண் என்பவள் வெறும் போகப் பொருள் அல்ல, அவள் ஒரு தெய்வம் என்பதை வலியுறுத்தினார். அவரது பாடல்கள், பெண்களை அறிவாளிகளாகவும், தைரியசாலிகளாகவும், சமூகத்தில் சம உரிமை கொண்டவர்களாகவும் சித்தரித்தன.

பாரதியின் பெண் கடவுள்கள் பாடல்கள்:

பெண்கள் விடுதலை

பாரதியின் பாடல்களில் பெண் விடுதலைக்கான குரல் ஓங்கி ஒலித்தது. பெண்கள் கல்வி கற்க வேண்டும், சமூகத்தில் சம உரிமை பெற வேண்டும், தங்கள் விதியைத் தாங்களே நிர்ணயிக்க வேண்டும் என்று அவர் விரும்பினார்.

பெண்கள் அறிவு

பெண்களின் அறிவாற்றலை பாரதியார் பெரிதும் மதித்தார். "பெண்கள் அறிவை வளர்த்தால் வையகம் பேதமை யற்றிடுங் காணீர்" என்று அவர் பாடியது பெண்களின் அறிவாற்றலின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.

பெண்கள் தெய்வம்

பாரதி, பெண்களை வெறும் இல்லத்தரசிகளாகவோ அல்லது போகப் பொருளாகவோ பார்க்கவில்லை. அவர்கள் அறிவும் ஆற்றலும் கொண்ட தெய்வங்கள் என்று அவர் கருதினார். "மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வமென்றால் மனையாளும் தெய்வமன்றோ?" என்று அவர் கேட்டது பெண்களின் தெய்வீகத் தன்மையை உணர்த்துகிறது. பாரதியார், பெண் தெய்வங்களை வழிபடுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். அவர் பார்வதி, லட்சுமி, சரஸ்வதி போன்ற பெண் தெய்வங்களைப் போற்றிப் பாடியுள்ளார். "காளி" போன்ற பெண் தெய்வங்களை வழிபடுவதன் மூலம், பெண்கள் தங்கள் வலிமையையும், ஆற்றலையும் உணர முடியும் என்று அவர் நம்பினார்.

பெண்கள் சக்தி

பாரதியின் பாடல்களில், பெண்கள் சக்தி வாய்ந்தவர்களாகவும், வீரசாலிகளாகவும் காட்டப்பட்டுள்ளனர். அவர்கள் தங்கள் உரிமைகளுக்காகப் போராடவும், சமூகத்தை மாற்றியமைக்கவும் முடியும் என்பதை அவர் நம்பினார்.

பெண்கள் சமூகம்

பாரதி, பெண்களை ஆண்களுக்கு சமமாக நடத்தப்பட வேண்டும் என்று விரும்பினார். பெண்களின் முன்னேற்றமே சமூகத்தின் முன்னேற்றம் என்று அவர் நம்பினார்.

பாரதியின் பாடல்கள், பெண்களின் உரிமைகளைப் பற்றியும், அவர்களின் ஆற்றலைப் பற்றியும், சமூகத்தில் அவர்கள் வகிக்கும் முக்கியத்துவத்தைப் பற்றியும் பேசுகின்றன. அவரது பாடல்கள், பெண்களைத் தங்களைத் தாங்களே உணர்ந்து, தங்கள் விதியைத்

தாங்களே நிர்ணயித்துக் கொள்ள ஊக்குவிக்கின்றன. பாரதியின் பெண் கடவுள்கள் பாடல்கள், பெண்ணடிமைத்தனத்திற்கு எதிரான ஒரு போராட்டமாகவும், பெண் விடுதலைக்கான ஒரு குரலாகவும் அமைந்தன. அவரது பாடல்கள், இன்றும் பெண்களின் முன்னேற்றத்திற்கும், சமூக மாற்றத்திற்கும் உத்வேகம் அளிக்கின்றன.

பாரதியார், சக்தி வழிபாட்டில் தீவிர பக்தி கொண்டவர். அவர், "ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம்" என்று சக்தியை வணங்கியுள்ளார். அவரது பாடல்களில், சக்தி தேவியின் அருள், வலிமை, கருணை, மற்றும் உலகைக் காக்கும் திறன் ஆகியவை போற்றப்படுகின்றன. மேலும், பாரதியார், தனது பாடல்களில், சக்தி தேவியைப் பெண் தெய்வமாகப் பாவித்து, பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்தார்.

பராசக்தி வழிபாடு

பாரதியார், பராசக்தி தேவியை வழிபடுவதை, ஒரு உன்னத வழிபாடாகக் கருதியுள்ளார். அவரது பாடல்கள், பராசக்தி தேவியின் பல்வேறு பெயர்களையும், வடிவங்களையும், அருளையும் போற்றுகின்றன.

பெண்ணுரிமை

பாரதியார், சக்தி தேவியைப் பெண்ணாகப் பாவித்துப், பெண்களின் பெருமையையும், வலிமையையும் வெளிப்படுத்தினார். அவரது பாடல்கள், பெண்களின் முன்னேற்றத்திற்கும், உரிமைகளுக்கும் ஆதரவாக அமைந்தன.

பாரதியார், பெண்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, சம உரிமையுடன் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். இதற்காக அவர் பல பாடல்களை இயற்றியுள்ளார். "பெண்கள் விடுதலைக் கும்மி" போன்ற பாடல்கள் பெண்களின் உரிமைகளைப் பற்றியும், அவர்களை உற்சாகப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளன.

பெண்மையின் பெருமை

பாரதியார், பெண்களின் பெருமையையும், அவர்களின் பங்களிப்பையும் போற்றினார். தாய்மை, மனைவி போன்ற உறவுகளில் பெண்களின் முக்கியத்துவத்தை அவர் பாடல்களில் வெளிப்படுத்தியுள்ளார். உதாரணமாக, “தாயின் மணிக்கொடி” பாடலில், தாய்மையின் சிறப்பையும், “மனைவி” பாடலில் மனைவியின் பெருமையையும் பாடியுள்ளார்.

மனம் பெண்

பாரதியார், மனதைப் பெண்ணாக உருவகித்து, அது ஒரு பெண் போலவே செயல்படுகிறது என்று கூறியுள்ளார். **"மனமெனும் பெண்ணே வாழி நீ கேளாய்"** என்று மனதை விளித்துப் பாடியுள்ளார்.

பாரதியின் பெண் விடுதலைச் சிந்தனைகள்

பெண் கல்வி

பாரதியார், பெண்கல்வியின் அவசியத்தை வலியுறுத்தினார். பெண்கள் கல்வி கற்றால் தான், சமூகம் முன்னேறும் என்று நம்பினார்.

சமூக சீர்திருத்தம்

பாரதியார், பெண்களின் முன்னேற்றத்திற்காகச் சமூக சீர்திருத்தங்களைச் செய்ய வேண்டும் என்று கூறினார். சிறுவயது திருமணம், பலதார மணம் போன்றவற்றை அவர் எதிர்த்தார்.

பெண்கள் அதிகாரம்

பாரதியார், பெண்களை ஆண்களுக்குச் சமமாக நடத்த வேண்டும் என்றும், அவர்களுக்கு அதிகாரம் வழங்கப்பட வேண்டும் என்றும் கூறினார்.

பக்தி

பாரதியாரின் சக்தி பாடல்களில், பக்திப் பாய்ச்சல் நிறைந்திருக்கிறது. அவர், சக்தி தேவியின் மீது ஆழ்ந்த பக்தி கொண்டிருந்தார்.

தேசபக்தி

பாரதியார், தனது சக்தி பாடல்களில், தேசபக்தியையும் வெளிப்படுத்தியுள்ளார்.

சில சக்தி பாடல்கள்:

"ஓம் சக்தி, ஓம் சக்தி, ஓம்", "நல்லதோர் வீணை செய்தே...", "யாமிருக்க பயமேன்"

"சக்தி திருப்புகழ்"

பாரதியாரின் சக்தி பாடல்கள், அவரது பக்தி, பெண்ணுரிமை, தேசபக்தி ஆகியவற்றை வெளிப்படுத்தும் ஒரு சிறந்த சான்றாகும்.

ஆற்றங்கரையினில், தனியானதோர் மண்டபத்தில் தென்றல் காற்றை நுகர்ந்து கொண்டிருந்த வேளையில், அந்தக் கலைவாணி அவருக்குக் "கன்னிக் கவிதை'யைக் கொண்டுவந்து தந்திருக்கிறாள். அப்பொழுதிலிருந்தே (சிறுவனாக) பாரதியார்

கன்னிக் கவிதை பல எழுதியுள்ளார். கலைவாணியின் மீது அவருக்குக் காதல் வளர வளர... பித்துப் பிடித்தவர்போல்,

"அவளிடை வைத்த நினைவை யல்லால் - பிற '

என்கிறார். மேலும், கலைவாணியையும் (வாணி), இலக்குமியையும் (ஸ்ரீதேவி), பராசக்தியையும் (பார்வதி) காதல் களிகூர்ந்து இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞான சக்தி ஆகிய (மூன்றும் ஒன்றாகிய மூர்த்தி) முப்பெருந் தேவியரை "நவராத்திரிப் பாட்டு' என்கிற தலைப்பில் பாடிப் பரவியுள்ளது குறிப்பிடத்தக்கது. பாஞ்சாலி சபதத்திலும் (கலை)வாணிக்கும், பராசக்திக்கும் வணக்கம் செலுத்தி, (கலை)வாணியையும் வேண்டுகிறார். **"மூன்றும் ஒன்றாகிய மூர்த்தி'யின் முதல் பாடலில் பராசக்தியைப் பாடி, முப்பெரும் சக்தியாக விளங்கும் வாணியையும், ஸ்ரீதேவியையும், பார்வதியையும் முறையே (நான்கு பாடல்களில்) போற்றியுள்ளார்.**

மகாகவி காளிதாஸர் போல மகாகவி பாரதியாரிடமும் **"சக்தி வழிபாடே'** சிறந்தோங்கி, மேலோங்கி இருந்ததை அவருடைய சக்தி, காளி, பராசக்தி, கலைமகள் வழிபாட்டுப் பாடல்கள் அனைத்தும் வெளிப்படுத்துகின்றன.

"திருமகள் துதி'யில், "நித்தமுனை வேண்டி மனம்/ நினைப்பதெல்லாம் நீயாய்ப் / பித்தனைப் போல் வாழ்வதிலே பெருமையுண்டோ?' - என்று கேட்டவர், சக்திப் பித்தனாகவே மாறினார்.பாரதியார், பெண்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, சம உரிமையுடன் நடத்தப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். இதற்காக அவர் பல பாடல்களை இயற்றியுள்ளார். "பெண்கள் விடுதலைக் கும்மி" போன்ற பாடல்கள் பெண்களின் உரிமைகளைப் பற்றியும், அவர்களை உற்சாகப்படுத்தும் வகையிலும் அமைந்துள்ளன.

முடிவுரை

பாரதியின் பாடல்கள் பெண் விடுதலை மற்றும் பெண்மையின் பெருமையைப் போற்றும் வகையில் அமைந்துள்ளன. அவர் பெண் தெய்வங்களை வழிபடுவதன் மூலம், பெண்களின் ஆற்றலையும், வலிமையையும் வெளிப்படுத்தினார். அவரது பாடல்கள் இன்றும் பெண்களை ஊக்குவிப்பதாகவும், அவர்களின் முன்னேற்றத்திற்கு வழி காட்டுவதாகவும் அமைந்துள்ளன.பாரதியின் சக்திப் பாடல்கள் வழி அவர் பெண்களின் முன்னேற்றத்தில் எவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தார் என்பதை இக்கட்டுரை வழி அறியலாயிற்று.

துணைநூற்பட்டியல்:

1.பாரதியாரும் பெண்களும்,முனைவர்.அரங்க.மல்லிகா,தமிழ் இ/ணையக் கல்விக் கழகம்.8.8.2017
2. 1.பாரதியார் கவிதைகள்,பாரதியார்,திருமகள் நிலையம்,2019,சென்ன

61. பாரதியாரின் இலக்கியத்தில் சமூக மாற்றம் மற்றும் புரட்சி



கங்கா காயத்ரி

தமிழ் மொழியின் மதிக்கத்தக்க புதுமைப் பித்தனான சுப்பிரமணிய பாரதியார், தனது எழுத்துக்களாலும் கவிதைகளாலும், தமிழ்ச் சமூகத்தின் மரபு பெயர்க்க முடியாத பழைய சுவர்களைக் குலுக்கும் பெரும் பணி ஆற்றினார். சாதி, மத, இனத்தால் கட்டுண்ட பழமைவாத அசைவுகளை அவர் எதிர்த்து, அவற்றை ஒழித்து விட்டு, சமூக சமத்துவம், பெண் விடுதலை, தேசிய உணர்வு ஆகிய மூன்று தூண்கள்மேல் ஒரு புதிய சமூகக் கட்டடத்தை எழுப்ப வேண்டும் என முழக்கமிட்டார். அவரது ஒவ்வொரு சொல்லிலும், ஒவ்வொரு பாடல் வரியிலும், விழித்தெழச் செய்யும் தீவிரமும், மாற்றத்தை உருவாக்கும் உறுதியும் பிளந்து பொங்கின. அவை பாடல்கள் மட்டுமல்ல; சமூகம் செழுமையும் சமத்துவமும் பெறவேண்டிய பாதையைச் சுட்டிக் காட்டும் சுடரொளிகளாக அமைந்தன.

1. சமூக சமத்துவம் மற்றும் சாதி ஒழிப்பு

பாரதியாரின் கவிதைச் சிந்தனையின் முதன்மை நோக்கு – சாதி மறுப்பு. மனிதனை நரகத்திற்குள் தள்ளிய சமூகப் பாகுபாடுகள் அனைத்தையும் அவர் அசைவின்றி எதிர்த்தார். அதற்குச் சான்று, இன்று நம்மை இன்னும் தொற்றும் அந்த வீரமான வரிகள்: “சாதிகளை ஒழிப்போம், சமதர்மம் பிறப்போம்”. எல்லா இனப் பேதங்களும், சாதி வேறுபாடுகளும் ஒரே நாளில் அழிந்து, மனிதன் ஒருவனே உலகம் என்பதே நிலைநாட்டப்பட வேண்டும் – இதுவே அவரது கனவு. இந்த எளிய ஆனால் கடுமையான உண்மையை பாரதியார் கவிதையில் பதிந்ததைத் தொடர்ந்து, தமிழ்ச் சமூகத்தின் கட்டுப்பட்ட சிந்தனையில் ஒரு பிளவு ஏற்பட்டது. முன்பு பேசக் கூட அஞ்சப்பட்ட சாதிப் பிரிவினைகள் குறித்து மக்கள் திறந்த மனதுடன் கேள்வி எழுப்பத் தொடங்கினர். அவரது வார்த்தைகள் வெறும் கவிதைச்சொற்களாக இல்லாமல், விடுதலை என்ற தீபத்தை ஏற்றிய நெருப்புக்கிண்ணங்கள். மக்கள் ஒன்றிணைந்து சுதந்திரப்போராட்டத்தில் ஈடுபட வேண்டிய அவசியத்தை அவர் மொழியில் மட்டுமின்றி மனங்களில் பதித்தார்.

2. பெண்கள் விடுதலை – சுயமரியாதை மற்றும் கல்வி உரிமை

அந்தக் காலத்தில், பெண்களின் கல்வி, சுயமரியாதை, சமூகப் பங்கேற்பு ஆகியவற்றைக் கடுமையாகக் கட்டுப்படுத்திய பழைய மனப்பான்மைகள் நிலவியிருந்தன. பெண்ணின் பங்கு வீட்டு வாசலுக்குள் மட்டுப்படுத்தப்பட்டிருந்த அந்தச் சூழலில், பாரதியார் இடிமுழக்கம் போல எழுந்து, பெண்கள் முன்னேற்றத்திற்கான வலிமையான குரலாக மாறினார். அவர் உறுதியாக கூறினார்—

"புதுமைப் பெண் பிறக்க வேண்டும்"
"மகளிர் கல்வி பெற வேண்டும்"
"பெண் விடுதலையே சமூகத்தின் அடித்தளம்"

இந்தச் சொற்கள் வெறும் எண்ணப் பிரகடனங்களல்ல; பெண்களை அடிமைத்தன பாசங்களில் இருந்து விடுவிக்க, அவர்களின் அறிவுத்திறனை மலரச் செய்து, சமூகத்தின் முன்னேற்றத்தை விரைவுபடுத்தும் தீக்குச்சிகள். கல்வி பெண் ஒருவரின் வாழ்வை மட்டுமல்ல; ஒரு தேசத்தின் வாழ்வையும் மாற்றும் என்ற உண்மையை அவர் பாடல்களில் உரக்கச் சொன்னார்.

3. தேசிய உணர்வு மற்றும் விடுதலைக்கான உற்சாகம்

பாரதியாரின் படைப்புகளில் இன்னொரு ஓரங்கட்டி எரிந்த தீ – தேசிய உணர்வு. அவர் கவிதைகள், கட்டுரைகள் மக்கள் மனங்களில் சுதந்திரத்தின் கனவையும் அதற்காய் போராட வேண்டிய கடமையையும் பதித்து விட்டன. "வந்தே மாதரம்!". இந்த அழைப்புச் சொல், மக்களின் இரத்தத்தில் தேசப்பற்று ஓடச் செய்தது. பாரதியாரின் குரலில் ஒலித்த ஒவ்வொரு தேசியப் பாடலும், உந்தி எழுப்பும் போர்க்குழலாக இருந்தது. இந்தியாவின் பல பகுதிகளிலும் அவர் விதைத்த இந்த தேசிய உணர்ச்சி இன்று வரை பெருமையாகச் செழித்து நிற்கிறது.

4. இயற்கை காதல் மற்றும் ஆன்மிகம்

பாரதியாரின் கவிதைகளில் இயற்கை ஓர் உயிருள்ள பாத்திரம் போலப் பேசுகிறது. மென்மையான குயில் கூவும் சத்தம், புது மலரின் மணம், மழைத்துளியின் மலர்ச்சியம் – அனைத்தும் அவரது பாடல்களில் ஓவியம்போல் விரிகின்றன. “குயில் பாடல்கள்”, “சின்னஞ்சிறு கிளியே” போன்ற படைப்புகள், குழந்தைகள் மட்டுமல்ல, பெரியோரும் இயற்கையை மீண்டும் காதலிக்கச் செய்யும் ஆற்றல் கொண்டவை. அதே சமயம், பாரதியார் ஆன்மிகச் சிந்தனைகளிலும் ஆழ்ந்திருந்தார். “பகவத் கீதையின் தமிழாக்கம்” போன்ற படைப்புகள், வாழ்க்கையின் உயர்ந்த உண்மைகளை மக்களின் மனதில் விதைத்து, ஆன்மிக விழிப்புணர்வைத் தூண்டின.

5. குழந்தைகள் பாடல்கள் – அன்பும் எளிமையும்

பாரதியாரின் குழந்தைப் பாடல்கள், குழந்தைகளின் மனதுக்கேற்ப, விளையாட்டுடன் கலந்த அறிவுத் தெளிவையும், நல்லொழுக்க விதைகளையும் விதைக்கின்றன. "ஓடி விளையாடு பாப்பா". என்பது ஒரு பாடல் மட்டுமல்ல – சுதந்திரமும், பாதுகாப்பும், ஆரோக்கியமும் குழந்தை வாழ்க்கையில் சம அளவில் அவசியம் என்பதைப் போதிக்கும் ஒரு தத்துவம். சுதந்திரம், பாதுகாப்புடன் சேர்ந்திருக்கும்போதே தனது அர்த்தத்தைப் பெறும் என்பதை இந்தப் பாடல் மென்மையாகக் கற்பிக்கிறது. “உன்னைத்தான் காதலிக்கிறேன்...” போன்ற பாடல்கள் அன்பின் தூய்மையான மணத்தை குழந்தைகளின் நெஞ்சில் பரப்புகின்றன. பரிவு, பாசம், நம்பிக்கை ஆகிய பண்புகளை வளர்க்கும் விதத்தில் இவை காலமெல்லாம் புதிதாய் நிற்கின்றன. மேலும், பாரதியார் படைத்த குழந்தைப் பாடல்களில் இயற்கையின் நிறங்கள், காட்சிகள், உயிர்மைகள் அனைத்தும் சொற்களின் வழியாக உயிர்கொண்ட ஓவியங்களாகத் தெரிகின்றன. அவை குழந்தைகளை இயற்கையை நேசிக்கவும், உலகைப் புன்னகையுடன் எதிர்கொள்ளவும் துணைபுரிகின்றன.

6. பாடல்களின் மொழி பயன்முறை மற்றும் பாணி

பாரதியாரின் மொழி ஒளிவூட்டும், வலுவான மற்றும் நேர்மையானது. அவர் தேர்ந்தெடுத்த சொற்கள் மற்றும் அமைப்பு கவிதைகளுக்கு ஆழமான தாக்கத்தையும் உணர்வுத்தன்மையையும் தருகிறது. பழமையான செம்மொழியின் அழகையும், புத்திசாலித்தனமான புதுமைகளையும் அவர் இணைத்து சிறந்த உரை வடிவங்களை உருவாக்கினார். அவருடைய மொழி நட்பு, தெளிவு கொண்டது; அதனால், பொதுமக்கள் எளிதில் புரிந்து கொள்ள முடிந்தது. தேசியக் கவிதைகளில் உள்ள உற்சாகமும் தீவிரமும் சமூகத்திற்கு உயிரும் ஆற்றலும் கொடுத்தது. சமுதாய வேறுபாடுகள், அடிமைத்தனம் போன்ற சமூகப் பிரச்சனைகள் குறித்து அவர் தீவிரமான விமர்சனமும், மாற்றத்துக்கான உறுதியான கேள்விகளும் எழுப்பினார். இதனால், பாரதியாரின் மொழி மற்றும் பாணி தமிழ் இலக்கியத்தில் புதிய உற்சாகத்தையும் சமூக மாற்றத்தையும் கொண்டு வந்த முக்கிய காரணிகளாக அமைந்துள்ளன.

7. தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதை வரிகள் மற்றும் அவர்களின் விளக்கம்

அச்சமில்லை அச்சமில்லை

"அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே" என்ற பண்டாரப் பாட்டு, மகாகவியின் தைரியத்தின் உச்சத்தை வெளிப்படுத்தும் ஒரு வீரகாவியமாகும். இச்சகத்துளோரெலாம் எதிர்த்து நின்றாலும், துச்சமாக எண்ணி தூறு செய்தாலும், பிச்சை வாங்கி உண்ணும் வாழ்க்கை பெற்றாலும், இச்சை கொண்ட பொருளெலாம் இழந்தாலும் அச்சமில்லை என்ற அவரின் உறுதியான நிலைப்பாடு, வாழ்க்கையின் அனைத்து சவால்களையும் துணிவுடன் எதிர்கொள்ளும் மனப்பான்மையை வெளிப்படுத்துகிறது. பாடலின் இரண்டாம் பகுதியில் நண்பர்கள் ஊட்டும் நச்சு, பச்சையூனியைந்த வேற்படைகள் மற்றும் உச்சிமீது வானிடிந்து வீழும் அபாயங்கள் போன்ற உயிருக்கு ஆபத்தான சூழல்களிலும் அச்சமில்லை என்ற பாரதியின் வீரவரிகள், மனித வாழ்வில் நேரிடும் அனைத்து சோதனைகளுக்கும் எதிராக நிற்கும் அசைக்க முடியாத மனோபலத்தை சித்தரிக்கின்றன. இன்றும் பள்ளிக் குழந்தைகளின் அச்சத்தைப் போக்கும் வயத்தகு பாடலாக இது விளங்குகிறது.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை:

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால் செம்மை மாதர் திறம்புவதில்லையாம்" என்ற இந்த அமர வரிகள், புதுமைப் பெண்ணின் இலட்சிய குணாதிசயங்களை வரையறுக்கும் பாரதியின் பெண்ணியக் கண்ணோட்டத்தை பிரதிபலிக்கிறது. மகாகவியின் பார்வையில் இனி வரும் யுகத்தின் பெண், நிமிர்ந்த தலையுடனும் நேர்மையான பார்வையுடனும், எவருக்கும் அடிமைப்படாத தன்னம்பிக்கையுடனும் விளங்க வேண்டும் என்ற அவரின் புரட்சிகர சிந்தனை இங்கு வெளிப்படுகிறது.

"அமிழ்ந்து பேரிருளாம் அறியாமையில் அவலமெய்திக் கலையின்றி வாழ்வதை உமிழ்ந்து தள்ளுதல் பெண்ணறம் ஆகுமாம்" என்று அவர் தொடர்ந்து கூறுவதன் மூலம், கல்வியின்மை மற்றும் அறியாமையை அகற்றுவதே உண்மையான பெண்ணின் கடமை என்ற நவீன சிந்தனையை முன்வைக்கிறார். இந்த வரிகள் சமூகத்தில் பெண்களின் நிலையை உயர்த்துவதற்கான அவரின் முற்போக்கான சிந்தனையின் உச்சத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன, அத்துடன் அவர் காலத்திற்கே முன்னோடியாக இருந்த பெண் விடுதலை சித்தாந்தத்தின் அடிப்படையை அமைக்கின்றன.

"மலையைப் பார்த்து வியந்து விடாதே மனிதா! நீயே அதைப் போல் வானளாவ முடியும்!" என்ற பாரதியின் தன்னம்பிக்கை நிறைந்த வரிகள், மனிதனின் உள்ளார்ந்த சக்தியை உணர்த்தும் மற்றொரு அற்புதமான படைப்பாகும். இயற்கையின் உன்னத அழகைக் கண்டு வியப்படையும் மனித மனத்திற்கு, தான் அந்த உயரத்தை எட்ட முடியும் என்ற நம்பிக்கையை ஊட்டும் இந்த வரிகள், சாதனையின் எல்லைகளை மனிதனே நிர்ணயிக்கிறான் என்ற பாரதியின் தத்துவத்தை வெளிப்படுத்துகின்றன. "கடலைப் பார்த்து அலையைக் கண்டு நடுங்கிப் போகாதே - நீயும் அதைப் போல் அசைக்க முடியாதவன் ஆகலாம்" என்ற அடுத்த வரிகளில், இயற்கையின் வலிமையான சக்திகளுடன் தன்னை ஒப்பிட்டுக் கொள்ளும் மனிதனின் உள்ளார்ந்த திறமையை வெளிச்சத்திற்கு கொண்டு வருகிறார்.

சுயமரியாதை மற்றும் தன்னம்பிக்கையின் இந்தப் பாடல் வரிகள், மானுட ஜாதியின் மேன்மையை உணர்த்தும் பாரதியின் மனிதநேய அணுகுமுறையைப் பிரதிபலிக்கிறது. "சிலையைப் பார்த்து ஜடம் என்று சொல்லாதே - அதுவும் உன்னைப் போல் உயிர் பெற்று விளங்கலாம்" என்ற வரிகளின் வழியாக, மனித விடுதலையின் இலட்சியத்தை கலையின் மூலமாகவும் அவர் வெளிப்படுத்துகிறார். இந்தப் படைப்பு சமகால தமிழ் இலக்கிய உலகில் மனித மாண்பின் உச்சத்தைக் கொண்டாடும் ஒரு தனித்துவமான சாதனையாக நிலைத்து நிற்கிறது.

பிச்சைப்பாட்டு - வாழ்வியல் தத்துவம்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற கணியன் பூங்குன்றனாரின் சிந்தனையோட்டத்தில் பயணிக்கும் பாரதியின் "பிச்சைப்பாட்டில்", "பிச்சை எதிர்பார்க்கும் உயிர் பிறந்ததோ இந்த மண்ணில்? இச்சகமே நமக்குள்ளது" என்ற வரிகள் உலகம் முழுவதையும் தன்னுடையதாக உணரும் உன்னதமான மனப்பான்மையை வெளிப்படுத்துகின்றன. சுயமரியாதையின் இன்னொரு பரிமாணத்தை இந்தப் பாடல் காட்டுகிறது - வறுமையிலும் கூட தலைநிமிர்ந்து வாழும் மனிதனின் உள்ளார்ந்த செல்வத்தை உணர்த்துவதன் மூலம்.

முடிவுரை - நிரந்தர உத்வேகத்தின் சரித்திரம்

பாரதியாரின் சுயமரியாதை நிறைந்த வரிகள், இலக்கிய சொல்லாட்சிகளாக மட்டும் அல்லாமல், தமிழ் இனத்தின் உள்ளார்ந்த வீரத்தையும் தன்னம்பிக்கையையும் ஒளிரச் செய்யும் உயிருள்ள சக்திகளாகத் திகழ்கின்றன. "அச்சமில்லை" முதல் "நிமிர்ந்த நன்னடை" வரையிலான அவரின் ஒவ்வொரு வரியும், மனித மாண்பின் உச்சத்தை எட்டுவதற்கான பாதை வரைபடமாக அமைந்துள்ளது. இந்தக் கவிதைகள் தனிமனித வளர்ச்சியிலிருந்து சமூக மாற்றம் வரை பரந்த பரிமாணங்களில் செயல்படும் மாற்றுச் சக்திகளாக விளங்குகின்றன.

நூற்றாண்டுகளைக் கடந்தும் இவ்வரிகளின் பொருண்மை குறையாமல் இருப்பது, பாரதியின் கண்ணோட்டத்தில் உள்ள கால வெளியைத் தாண்டிய உன்னதத்தின் அடையாளமாகும். அவரின் "மலையைப் பார்த்து வியந்து விடாதே" போன்ற வரிகள் இன்றைய இளைஞர்களுக்கு சுயநம்பிக்கையின் அடிப்படைத் தத்துவங்களை வழங்குவதோடு, எதிர்கால சந்ததியினருக்கும் முன்னேற்றத்தின் திசையைக் காட்டும் விளக்கம் போன்று செயல்படுகின்றன. இவ்வாறு பாரதியாரின் சுயமரியாதை வரிகள், தமிழ் மொழியின் பெருமையையும் மனித குலத்தின் நேர்மையையும் ஒருசேர பிரகாசிக்கச் செய்யும் நித்திய ஜோதிகளாக ஒளிர்ந்து கொண்டிருக்கின்றன.

62. பாஞ்சாலிசபதத்தில் சொல் நயம்

திருமதி இரா. பிரமிளா

உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை,
வி.எல்.பி.ஜானகியம்மாள் கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
கோவைப்புதூர்

தமிழ் காப்பியங்கள் என்னும் இலக்கிய வகை மிகப் பழமையானதாகும். அவை பழைய இலக்கிய விதிகளைக் கொண்டு படைக்கப்பட்டவை பெருங்காப்பியங்கள் ,சிறுகாப்பியங்கள் என்று பாகுபடுத்தப்பட்டு அவற்றிற்குரிய இலக்கண வரையறைகளையும் தந்துள்ளனர். ஒரு கவிஞன் தான் பெறும் உணர்ச்சியையே மற்றவரும் அடைவதற்கு ஏற்ற இலக்கிய வடிவத்தில் அமைப்பதில் கவனத்துடன் செயல்படுவான். இலக்கியம் காலத்திற்குக் காலம் மாற்றம் பெற்று வரும் என்ற உண்மை தெளிவாகின்றது. அவ்வகையில் பழமையான காப்பிய இலக்கியங்கள் வேறுபடுகின்றன. மொழியமைப்பில், மொழிப் பயன்பாட்டில், இலக்கியத்தை வடிவமைக்கும் விதத்தில் வேறுபடுகின்றன. தற்காலத்தில் படைக்கப்படுகின்ற நீண்ட கவிதைத் தொடர்களை அதாவது நெடுங்கவிதைகளில் அமைக்கப்படுபவற்றைத் தற்காலத்தில் காவியங்கள் என்று அழைக்கின்றனர்.

பாரதியின் இந்த வசன கவிதைகள் எனப்படுகின்ற நீண்ட கதை வடிவில் அமைந்த நெடுங்கவிதைகளே தற்காலத்தில் காவியங்கள் என்னும் உயர்வைப் பெற்றன. தமிழில் புதுமையான வடிவத்தில் காவியத்தைப் படைப்பதில் முதன்மையானவர் மகாகவி பாரதியார். நீண்ட கவிதைத் தொடர்களில் ஒரு நெடுங்கதைப் பொருளை வைத்து கவிதையை எளிமையாகப், புதுமையாக அனைவருக்கும் புரியக்கூடிய வகையில் படைக்கப்படுவதே இக்காவியங்கள். மகாகவி பாரதியார் படைத்த பாஞ்சாலி சபதத்தைத் தொடர்ந்து குயில் பாட்டு, கண்ணன் பாட்டு போன்ற நெடுங்கவிதைப் போக்கில் பாடப்பட்ட காவியங்களும் படைக்கப்பட்டுள்ளன.

பாஞ்சாலி சபதம்

நவீன இலக்கியங்களுக்கு பாரதியின் மேலைநாட்டு இலக்கியப் பயிற்சியே காரணமாக அமைந்துள்ளது. நவீன காவியங்களுக்குப் பாரதியின் பாஞ்சாலி சபதமே காரணமாக இருந்துள்ளது. எளிமையான சொற்களைக் கொண்டு எளிமையான நடையில் தாய்மொழிக்குப் புதிய உயிர் தரும் முயற்சியிலே ஒப்பற்றதொரு காவியத்தைப் படைத்துத் தந்த பாரதி, தான் எந்த அளவுக்கு வியாசரைப் பின்பற்றிச் சென்றுள்ளார் என்பதை பாஞ்சாலி சபதத்தை படிக்கும்போது உணர முடிகின்றது. பாஞ்சாலி சபதத்திற்கு மூலமாக வியாசபாரதம் அமைந்ததெனினும், தனித்தன்மை கொண்ட மேதையாகிய பாரதியின் கவித்திறனால் முதல் நூலெனவே கருதக்கூடிய அளவிற்கு பெருஞ்சிறப்புடையதாக இந்நூல் அமைந்திருக்கின்றது.

பாரதி பாஞ்சாலி சபதத்தில் பயன்படுத்தியுள்ள மொழிக் கூறுகள் மொழி வளர்ச்சியையும் சமுதாய வளர்ச்சியையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றன. பாஞ்சாலி சபதம் தேசியச் சிக்கலை எடுத்துக் கூறுகிறது. ஒரு சமுதாயத்தின் செயல்பாட்டையும் ஒரு நாட்டின் அன்றாட செயல்பாட்டையும் மொழி பிரதிபலிக்கின்றது. ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு மொழி பல்வேறு வகையில் உதவி வருகிறது. ஒரு சமுதாயத்தின் வளர்ச்சி நாட்டு வளர்ச்சியோடு இணைந்ததாகும். மொழி என்பது அமைப்பின் அடிப்படையில் அது சார்ந்துள்ள சமுதாயத்தோடும், நாட்டோடும் இரண்டறக் கலந்ததாகும்.

பாரதி ஒரு தேசியவாதி. தேசியம் என்ற கோட்பாட்டினை மிகத் தெளிவாக உணர்ந்து அதற்கேற்ப மொழிப்பயன்பாடு பற்றிய தமது கருத்துக்களை தெளிவாகவும், ஆணித்தரமாகவும், ஆக்கப்பூர்வமாகவும் சொல்லிச் சென்றுள்ள தீர்க்கதரிசி. மொழியானது இனம், மதம் போன்றவற்றையெல்லாம் கடந்து தனித்தன்மை கொண்டு விளங்குவது ஆகும். எனவே மொழியின் பயன்பாடு சமுதாயத்தையும், நாட்டையும் சார்ந்தே அமையும் என்பது தெளிவாகின்றது.

பாஞ்சாலி சபதம் எழுதப்பட்ட காலகட்டத்தில் நம் பாரத நாடு அந்நியர் கையில் அடிமைப்பட்டுக் கிடந்தது. பாரதி வாழ்ந்த காலத்தில் அவரின் சிந்தனையும், சொல்லும், செயலும் சுதந்திர தேவியையே சுற்றி வந்தது. அதனால் தான்,

இதந்தரு மனையின் நீங்கி இடர்மிகு சிறைப்பட்டாலும்
பதந்திர இரண்டும் மாறி பழிமிகுந்து இழிவுற்றாலும்

என்று அவர் அன்றே பாடினார்.

பாஞ்சாலி யார்? என்பதைப் பாரதியே ஓரிடத்தில் மறைமுகமாகக் குறிப்பிடுகிறார். துச்சாதனன் துகிலுரியத் துகிலுரிய கண்ணபிரான் திருவருளால் புதிது புதிதாய் வண்ண வண்ணப் பொற் சேலைகள் வளர்ந்தன வளர்ந்தன வளர்ந்தனவாம். சேலைகளை இழுத்து இழுத்துக் கையும் சோர்ந்தான். மெய்யும் சோர்ந்தான். துச்சாதனன் இறுதியில் வீழ்ந்தான் அப்போது பாரதி,

தேவகர்கள் பூச்சொரிந்தார் - ஓம்
ஜெய ஜெய பாரத சக்தி என்றே

என்று பாடுகிறார்.

தேவர்கள் பூச்சொரிந்தது பாஞ்சாலிக்கு. அனைவருக்கும் மூத்தவரான விட்டுமரே எழுந்து நின்று அவளைக் கைகூப்பித் தொழுகிறார். பாரத நாட்டின் அடிமை நிலையைப் பாரதி பாஞ்சாலி சபதத்தின் பல இடங்களில் உணர்த்தியுள்ளார்.

போச்சுது! போச்சுது பாரத நாடு!
போச்சுது நல்லறம்! போச்சுது வேதம்

என்ற வரிகள் பாரத நாடு அன்னியர் கையில் சிக்கிவிட்டதைக் குறிப்பிடுகின்றன.

பாஞ்சாலி சபதத்தில் சொல்வளம், இலக்கிய இலக்கண வளம், மொழிப் பயன்பாட்டில் மொழி வழக்குகளை எளிதாகப் பயன்படுத்தக்கூடிய நிலை ஆகியவை சிறப்பாக அமைந்துள்ளன. ஒரு மொழியின் வளர்ச்சிக்கு மேற்கண்ட அனைத்து மொழிக்கூறுகளும் அவசியமாகின்றது. இம்மொழிக்கூறுகளைப் பாஞ்சாலி சபதம் நிறைவாகக் கையாண்டுள்ளது.

சொல் வளம்

பாஞ்சாலி சபதத்தில் பாரதி பயன்படுத்தியுள்ள இலக்கிய வழக்குச் சொற்களையும், பேச்சு வழக்குச் சொற்களையும், பிறமொழிச் சொற்களையும் குறித்து விளக்குவது. இக்கட்டுரைக்குப் பயனுடையதாக அமையும் என்பதால், பாஞ்சாலி சபதத்தில் சொல்வளம் குறித்து இங்கு வரையப்பட்டுள்ளது. மொழியில் எடுத்தாளப்படும் வலிமையான கூறுகள் சொற்களே ஆகும்.. எளிதில் மாற்றத்திற்கு உள்ளாவதும் சொற்களேயாகும். இத்தகைய ஆற்றல் மிகுந்த சொற்களைப் பாரதி அதன் தன்மையறிந்து பயன்படுத்தியுள்ளார்.

அக்னிக் குஞ்சொன்று கண்டேன் - அதை
அங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்

இலக்கிய வழக்குச் சொற்கள்

அன்றாடம் மக்கள் பேசும் பேச்சுவழக்குச் சொற்கள் அல்லாமல் இலக்கிய வழக்குச் சொற்களையும் அதிகமாகக் கையாண்டுள்ளார். (ஞானம் உவகை ஆணவம்)

அடை சொற்கள்

மகாகவி பாரதி பல அடைச் சொற்களைத் தமது கவிதைப் படைப்புகளில் கையாண்டுள்ளார். சொல்லவந்த பொருளின் பண்பைக் குறிக்கப் பயன்படுத்தப்படுபவை.

காவியங்களில் இடம்பெறும் பாத்திரங்களின் பண்பு நலன்களைப் பிரதிபலிப்பதில் மகாகவி பாரதி பயன்படுத்தியுள்ள அடைச் சொற்களே சிறப்பிடம் பெறுகின்றன.

அருள் அற்ற சகுனி
தீய சகுனி
கள்ளச் சகுனி.

பேச்சு வழக்கு சொற்கள்

பேசும்போதே பயன்படுத்தும் சில ஒலிக் குறிப்புகளையும் பயன்படுத்தியுள்ளார்.

கக்கக்க வென்று கனைத்தே
தக்குதக்கென்றே அவர் குதித்தாடுவார்

போன்ற தொடர்கள் அன்றாடப் பேச்சு வழக்கில் பயன்படுத்தக்கூடியவை.

அவையில் துரியோதனனும் அவனைச் சார்ந்தவர்களும் முறையில்லாமல் பேசும்போதும் நடந்து கொள்ளும்போதும் பாஞ்சாலி துணிவுடன் தந்த மறுமொழி பாரதியின் சொல்லாட்சிக்கு தக்க சான்றாகும்.

பேயரசு செய்தால் பிணந்தின்னும் சாத்திரங்கள்
மாய மூணராத மன்னவனைச் சூதாட
வற்புறுத்திக் கேட்டதுதான் வஞ்சனையோ? நேர்மையோ?
முற்படவே சூழ்ந்து முடித்ததொரு செய்கை யன்றோ? – 6

என்று துணிவுடன் தந்த மறுமொழியும் பாஞ்சாலி என்னும் பாத்திரத்தின் வழி வெளிப்படும் சொல் வல்லமைக்குச் சான்றாக அமைகின்றது.

முடிவுரை

தமிழில் புதுமையான வடிவத்தில் காவியத்தைப் படைத்து நவீனக் காவியங்களுக்கு அடித்தளமிட்டவர் பாரதி என்பதை இந்தக் கட்டுரையின் மூலம் விளக்கியுள்ளது. பாஞ்சாலி சபதத்தில் எளிய இனிய பேச்சு வழக்குச் சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன என்பதையும் விளக்கிக் காட்டியுள்ளது .

சான்றெண் விளக்கம்

1. பாரதியார் கவிதைகள் பக்கம் 48
2. பாரதியார் கவிதைகள் பக்கம் 337
3. பாரதியார் கவிதைகள் பக்கம் 364
4. பாரதியார் கவிதைகள் பக்கம் 48
5. பாரதியார் கவிதைகள் பக்கம் 321
6. பாரதியார் கவிதைகள் பக்கம் 413

63. கவிஞரும் சிறுகதையும்

முனைவர் நா. தீபா சரவணன்

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
குமரகுரு பன்முகக்கலை அறிவியல் கல்லூரி, கோவை.

'பாட்டுக்கொரு புலவன் பாரதியடா!' எனக் கவிமணி மட்டுமல்லாது உலகமே வியக்கும் வண்ணம் கவி ஆற்றல் வாய்ந்தவர் பாரதியார். இதழாசிரியர், விடுதலைப்போராட்ட வீரர், சமூக சீர்திருத்தவாதி எனப் பன்முகத்தன்மைகொண்ட மகாகவி பாரதியார் சிறுகதை உலகிலும் தூணாக விளங்குகிறார். எட்டையபுரத்தில் பிறந்த முண்டாசுக்கவியின் பெற்றோர் சின்னசாமி ஐயர், இலக்குமி அம்மாள். பெண் விடுதலை, சுதந்திர உணர்வு, நாட்டு முன்னேற்றம், விடுதலை எழுச்சி எனப் பல பொருண்மைகளில் வேரூன்றிய அவரது படைப்புகளில் கண்ணன் பாட்டு, பாஞ்சாலி சபதம், குயில்பாட்டு போன்றவை புகழ்பெற்றவையாகும். புதுக்கவிதைகளைத் தமிழ் இலக்கியத்தில் எடுத்துரைத்த பெருமை பாரதியாருக்கே உடையதாகும். பழந்தமிழ் காவியங்களில் ஈடுபாடு கொண்டதோடு தேசிய கவி என்ற வகையில் உலகு தழுவிய சிந்தனைகளை உண்மையுடனும் அழகியலுடனும் தனது படைப்புகளில் எடுத்தியம்பிய சிறந்த கவிஞராகவே இவர் காணப்பட்டார். தெய்வம் மானுடம் என்ற பரிமாணத்தை மாற்றி,கடவுளாகிய கண்ணனை, தோழனாகவும், சீடனாகவும், காதலனாகவும், குருவாகவும், காதலியாகவும் எனப்பல்வேறு பரிமாணங்களில் கண்டவர் பாரதி. கண்ணன் பாட்டு என்ற தலைப்பில் அமைந்த பாடல்கள் இறைவனுக்கும், மனித உயிருக்கும் இடையே உள்ளத் தொடர்பினை விளக்கும் தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டவை. கவிஞராக மட்டுமல்லாது, சிறந்த மொழிபெயர்ப்பாளர், விடுதலை வீரர், சிறுகதைஆசிரியர், என பன்முகத்தன்மைகொண்டவராகத் திகழ்ந்தவர் பாரதி. நிலத்தைக்கிழித்துக்கொண்டு வெளிப்படும் நீரூற்றைப்போன்று மனித உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து துள்ளிப்பொங்கி எழும் உணர்ச்சிகளின் வடிவமே கவிதை. எளிமை, புலக்கவர்ச்சி, உணர்ச்சி, இவையே கவிதையின் உருவம் என்பது ஆங்கிலக்கவிஞர் மில்டனின் கருத்து. நீரூற்றைக் கவிதையில் மட்டுமல்ல சிறுகதைகளிலும் கண்டவர் பாரதி.

சிறுகதையின் இலக்கணம்

புதினம், குறும்புதினம் ஆகியவற்றிலிருந்து அதன் செறிவாலும் அழுத்தத்தாலும் வேறுபட்டு விளங்கும். உரைநடையாலாகிய புனைகதைகளையே இக்காலத்தில் சிறுகதை என்று சுட்டுகின்றனர். “சிறுகதையின் தொடக்கமும் முடிவும் குதிரைப்பந்தயம் போன்று விறுவிறுப்பாகவும் சுவையாகவும் விரைவாகவும் அமைய வேண்டும்” என்கிறார் செட்ஜ்விக் என்ற ஆங்கில ஆசிரியர் (ஜெயம், தமிழ் இலக்கிய வரலாறு, ப.319). சிறுகதைகளில் நீண்ட வருணனைகளுக்கோ, நிகழ்ச்சிகளுக்கோ, நிறைய கதாபாத்திரங்களுக்கோ வாய்ப்பில்லை. சுருக்கமாக, அதே வேளை ஒரு நிகழ்ச்சியைச் சுவையுடையதாக சொல்லக்கூடியதாகவும் இருக்கவேண்டும். இதிலிருந்து சிறுமுறைமை தவறினாலும் அது புதினம் என்ற நிலையை அடைந்து விடும். “எளிய பதங்கள், எளிய நடை, எளிதில் அறிந்து கொள்ளக் கூடிய சந்தம்; பொதுசனங்கள் விரும்பும் மெட்டு இவற்றினையுடைய காவியமொன்று தற்காலத்திலே செய்து தருவோன் நமது தாய்மொழிக்குப் புதிய உயிர்தருவோனாகின்றான். ஓரிரண்டு வருடத்து நூற்பழக்கமுள்ள தமிழ் மக்களெல்லோருக்கும் நன்கு பொருள் விளங்கும்படி எழுதுவதுடன் காவியத்துக்குள்ள நயங்கள் குறைவுபடாமலும் நடத்தல் வேண்டும். கடந்த கால இலக்கியங்களையும் நிகழ்கால இலக்கியங்களையும் கருத்திற்கொண்டு எதிர்கால இலக்கியத்திற்கு வகுக்கப்பட்ட இலக்கிய நெறி எனலாம். இக்கருத்துகள் காவியத்திற்கு மட்டுமல்ல பாரதியின் சிறுகதைகளுக்கும் பொருந்தும்.

பாரதியின் சிறுகதை உலகம்

உலக இலக்கியங்களின் உன்னதப்படைப்புகளையெல்லாம் உற்று நோக்கி வந்த பாரதி தமிழ்மொழியில் சிறுகதைத்துறை சிற்றடி வைத்து நடந்த சிறுபருவத்திலேயே சாதனைகள் பல புரிந்திருக்கின்றார். கவித்துவத்தையும் புதுமைச்சிந்தனைகளையும் குழைத்து உரைநடையில் அவர் தீட்டிய கதைச்செல்வங்கள் கவின் சிற்பங்கள். எந்தக் கருத்தை எப்படிச் சொன்னால் பாமரமக்கள் இரசிப்பார்கள் என்ற கலை நுட்பத்தை மகாகவி அறிந்து, அதற்கேற்பத் தமது கதைகளைக் கவியாற்றலுடன் புனைந்துள்ளார் என்பதை அவருடைய கதைகளைப் படிப்போர் உணர்வர். அவை உள்ளத்திலே தமிழ்ச் சக்தியை நிலை நிறுத்திக் கொண்டு நேரான தமிழ் நடையில் எழுதப்பட்ட கதைகள். பாரதியின் சிறுகதைகளின் அமைப்பு முறையை மூன்று வகைகளாகப் பகுக்கலாம். கதையைக் கூறிவிட்டு இறுதியில் நீதியை அறிவுறுத்தும் கதைகள் நீதிக்கதைகள் ஆகும். நகைச்சுவையை அடிப்படையாகக் கொண்டு அமைபவை நகைச்சுவைக் கதைகள். கருத்துகளை உருவங்களாகக் கொண்டு அமைந்தவை உருவகக் கதைகள் ஆகும். அருமை, எளிமை, அழகு, தெளிவு, உணர்ச்சி, வேகம், உயிரோட்டம், புரட்சி, புதுமை, ஆகிய பண்புகள் அவருடைய கவிதைகளில் மட்டுமல்ல சிறுகதைகளிலும் காணலாம். அவர் எழுதிய சிறுகதைகளில் சில கதைகளின் ஆய்வாக இக்கட்டுரை அமைகிறது.

குதிரைக்கொம்பு

பாரதியார் எழுதிய கதைகள் ஒவ்வொருவகையில் தனிச்சிறப்பு உடையவை. அறிவு விளக்கம் தருவதையே தமது நோக்கமாகக் கொண்டவை. அவர் வெறும் பொழுது போக்கிற்கென்று எழுதவில்லை. நீதியும் தர்மமும் நிலைப்பதற்கென்றே பல கதைகளை எழுதியுள்ளார். பாரதியாரின் குதிரைக்கொம்பு கதை, இராமாயணத்தை வேறு கோணத்தில் சிந்திக்கச்செய்கிறது. இதிகாசங்களை அறியாதோர் இக்கதையை வாசித்தால் புரியாது. மூல இராமாயணக்கதையை அறியும் ஆவலைத்தூண்டுவதாக உள்ளது இக்கதை. பொதுவாக அரிய ஒரு செயலை, செய்யமுடியாத ஒரு காரியத்தை, அடைய முடியாத அடைவுகளைக் குதிரைக்கொம்பு என்பது வழக்கம். குதிரைக்கு சும்மாவா கொம்பில்லை என்பதும் வழக்கத்தில் உள்ளது. இக்கதையில் குதிரைக்குக் கொம்பு இருந்ததாகவும் நாளடைவில் கொம்பில்லாமல் போனதாகவும் கூறப்படுகிறது. இராமாயணத்தில் இராவணன் சீதையைக் கடத்திக்கொண்டு செல்வதே நாமறிந்த இராமாயணம். ஆனால் இங்கு இராமாயணத்தில் இராமன் திருமணம் செய்துகொள்வதற்காக சீதையைக் கடத்திக்கொண்டு வருகிறார். விருப்பமில்லாத சீதை மீண்டும் மிதிலைக்கேப் போகவேண்டும் என்று விரும்புகிறார். சூர்ப்பனகை சீதையை மிதிலைக்கு அனுப்பும்பொருட்டு இராவணனிடத்து அனுப்பிவைக்கிறாள். இராமன் சூர்ப்பனகையிடம் தன்னை திருமணம் செய்துகொள்ளுமாறு கேட்கிறான். சுக்ரீவனுடைய படைகள் அனுமன் உதவியால் இராவணனைத்தாக்கப் படையுடன் வருகின்றனர். உடன் இராமரும் இலக்குவணனும் வருகின்றனர். இதையறிந்த இராவணன் தன்னை எதிர்க்க வந்த மனிதப்படைகளைப்பார்த்து இவ்வளவு படைகளா என்று நகைக்கிறான். அந்த சத்தத்தில் சூரியனுடைய குதிரைகள் ஏழும் கீழே விழுந்து கொம்புகள் உடைந்தன. சூரியன் இராவணன் பாதத்தில் விழுந்து மன்றாடி கேட்டுக்கொள்ள இராவணன் பிரம்மனிடம் வரம்வேண்டி சூரிய குதிரைகளுக்கு ஏற்பட்ட அவமானத்தைப்போக்க இனிமேல் எந்தக் குதிரைகளுக்கும் கொம்பு இருக்கக் கூடாது என வேண்டிக்கொள்கிறார். அன்றுமுதல் பிரம்மன் குதிரைகளுக்கு கொம்பில்லாமல் படைத்துவருகிறார் என முடிகிறது இக்கதை. கடவுளாக மதிக்கப்படும் இராமரையும், தமிழ்மரபிற்குச் சான்றாக விளங்கும் இராமாயணத்தையும் வேறு கோணங்களில் கற்பனைசெய்து சிறுகதைவழியாக எடுத்தியம்பக்கூடிய பேராற்றலும், துணிவும் பாரதிக்கு மட்டுமே உரிய தனித்துவம்.

மிளகாய்ப்பழச் சாமியார்

'வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டிவைப்போமென்ற விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்' என்றும், 'பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினிலே பெண்கள் நடத்தவந்தார்' எனவும் பெண்கள் விடுதலைக்காகவும், பெண்கல்விக்காகவும் கவிதை வாயிலாகக் குரல்கொடுத்த பாரதி சிறுகதை வாயிலாகவும் பெண்விடுதலைக்காகக் குரல் கொடுக்கிறார். இக்கதை பெண்சாமியார் ஒருவர் பாரதியிடம் உதவிகேட்டு நிற்பதாகவும், அதைச் செய்து தருவதாக பாரதி ஒப்புக்கொள்வதுமாக அமைகிறது. இந்த சாமியாருடையத் தோற்றம் குறித்துக் குறிப்பிடுகையில் இவள் காவி வஸ்திரமும் சடாமுடியும் தரிக்கின்றாள் என்கிறார். மிளகாய்ப்பழச்சாமியார் எனப்பெயர் பெற்றதற்கான காரணமாகப் பாரதியார் கூறுவது 'திருகார்த்திகையன்று பிரதி வருடம் அடியார்கள் சேர்ந்து இவளுக்கு மிளகாய்ப்பழத்தை அரைத்து உடம்பெல்லாம் தேய்த்து ஸ்நானம் செய்விக்கிறார்கள் எனக்குறிப்பிடுகிறார். இந்நிகழ்வு தற்போது பொள்ளாச்சி மாசாணியம்மன் கோயிலில் நடைபெறும் அம்மனுக்கு மிளகாய் அரைத்துப்பூசுவதை நினைவுபடுத்துகின்றது. அந்த சாமியார் பாரதியிடம் ஒரு வேண்டுகோள் வைக்கிறார். இந்தியாவில் மட்டும்தான் பெண்ணுக்கு உரிய அங்கீகாரம் இல்லை என்பதனைக் கடுமையாகக் கூறுகின்றார். பெண்கள் துணி துவைத்து, வீடுகாத்து, தெய்வ வழிபாடு செய்தும் குழந்தைகளைப்பாதுகாத்தும் வருகின்றனர். ஆனால் ஆண்கள் அவர்களை தாழ்வுபடுத்திப் பார்க்கின்றனர்.

இதனை பாரதியாரும் அந்தப்பெண் சாமியாரின் வாயிலாக உலக முழுமைக்கும் நான் சொல்லுகிறேன். ஆண் பெண்ணுக்கு நடத்தும் அநியாயம் சொல்லுக்கடங்காது அதை ஏட்டில் எழுதியவர் இல்லை. அதை மன்றிலே பேசியவர் யாருமில்லை. பறையனுக்குப் பார்ப்பானும், கறுப்பு மனுஷனுக்கு வெள்ளை மனுஷனும் நியாயம் செய்யவேண்டும் என்று சொல்கிறீர்கள். பெண்ணுக்கு ஆண் நியாயம் செய்வது அதையெல்லாம் விட முக்கியமென்று நான் சொல்லுகிறேன்." சாதியும் மதமும் கடந்து பெண் விடுதலை மிக இன்றியமையாத ஒன்று. அது நிகழந்திட வேண்டும் என்கின்றார். பறையன் பார்ப்பன் என்ற சாதி இழிவுகளும் வெள்ளை கறுப்பு என்ற நிற வேறுபாடுகளைக்காட்டிலும் பெண் விடுதலை உடனடித் தேவையாக இருந்துள்ளது என்பதனை மேற்கண்ட கூற்றின் வழி உய்த்துணரலாம். மேலும் இக்கதையில் கணவனை இழந்த விதவைப்பெண் இங்கு கடவுளாக வழிபடப்படுகிறாள். விதவைகளை ஒதுக்கிவைக்கும் சமுதாயமாக இருந்த காலகட்டங்களில் ஒரு விதவையை கடவுளாக வழிபட எண்ணுவது பாரதியின் புரட்சியே. ஆண் செய்யும் தவறுகளுக்கு இந்த உலகம் இன்றுவரை வேறொரு விதி விலக்கினைக் கொண்டியங்குகின்றது. ஆனால் பெண்ணுக்கு அப்படியில்லை. பெண் தவறிழைத்தால் கொடுந் தண்டனைகள் பெற்றுத் தீரவேண்டும். இதனைக் குறிப்பிடும் பாரதி "விபசாரிக்குத் தண்டனை இகலோக நகரம். ஆண்மக்கள் விபசாரம் பண்ணுவதற்கு சரியான தண்டனையைக் காணோம்" என்று சுட்டுகிறார். ஒரு பெண் கடவுளாக வழிபடப்படினும் ஒட்டுமொத்தப் பெண்களின் எதிர்பார்ப்பையும் அப்பெண் சாமியார் வழி வெளிப்படுத்தியுள்ளார்.

இருள்

கதைக்கொத்து என்னும் தொகுதியில் அமைந்த கதைகளுள் இருள் என்னும் சிறுகதை திடசித்தனின் வலிமையை உணர்த்துகிறது. உறுதியான உள்ளத்தை திடசித்தன் என்னும் அரசனாக உருவகித்துக் கதை தொடர்கிறது. திடசித்தன் உறங்கும் பொழுது அவன் பகைவர்களால் ஒரு மலைச்சாரல் குகைக்குள்ளே கொணர்ந்து அடைக்கப்படுகிறான். அந்தக் குகையில் அவன்பட்ட இன்னல்களையும், இறுதியில் அவற்றையெல்லாம் கடந்து அவன்வெற்றி பெற்ற வகையையும் கதை விளக்கிக் கூறுகிறது. செயல்களுக்கும், அவற்றை செய்தற்குரிய முயற்சிக்கும் அடிப்படைக்காரணமாக விளங்குவது, எதற்கும் அஞ்சாத, உறுதியுள்ள நெஞ்சு; அதனைக் கொண்டு உலகில் எத்தகைய துன்பத்தையும் கடந்து வெற்றிபெறலாம் என்னும் உண்மையை மிகச் சிறந்த முறையில், இருள் என்னும் அளவில் சிறிய இவ்வுருவகக் கதையாக அமைத்திருக்கிறார் பாரதி. பாரதியார் எழுதியுள்ள பலகதைகளில் இம்மூன்று கதைகள், மூன்று பரிமாணங்களை உணர்த்துகின்றன.

குதிரைக்கொம்பு கதையில் நாம் இன்று புனிதங்களாகக் கருதப்படும் இதிகாசங்களை வேறொரு கோணத்தில் பார்க்கிறார். இப்பார்வை திறனாய்விற்கு அடிப்படை ஊற்றை விதைக்கிறது. மிளகாய்ப்பழச்சாமியார் கதையில் மூடநம்பிக்கைகளால் கடவுள் படும் துன்பம் குறித்தும் கடவுளே ஓர் எல்லையை மீறும்போதும் மனிதர்களிடம் உதவி கேட்பதாகவும் படைத்திருக்கிறார். கடவுளாக இருந்தாலும் ஆணாதிக்க சமுதாயத்தில் பெண்களுக்கு மதிப்பில்லை என்று வருந்துவதாகப் படைத்திருக்கிறார். இருள் என்ற கதையில் அரசனாக இருந்தாலும் தன்னைத்தான் காப்பாற்றத் தெரிந்திருக்கவேண்டும் என்பதை உணர்த்தியிருக்கிறார். அவ்வகையில் கடவுள், அரசர், இதிகாசம் இவை மூன்றினுடையவும் வெவ்வேறு கோணங்கள் வெளிப்படும்விதம் கதைகள் புனையப்பட்டுள்ளன. இது பாரதியின் பரந்துபட்ட புலமைத்திறனை வெளிப்படுத்தி நிற்கிறது.

இதேபோலவே 'சிறுகதை' எனும் தலைப்பில் அமைந்த கதையில் கணவன் மனைவியின் அன்பை அழகுற விளக்கும் இவர் மேன்மக்கள் பிறருக்காகவும் வாழ்வர் என்பதை சிறப்புற எடுத்தியம்புகிறார். சிறுகதை என்பது தலைப்பிற்கேற்றவாறு அழகான சிறுகதையாகவும், வடிவ அழகுடனும் விளங்குகிறது. 'யானைக்கால் உதை' என்ற கதையில் சிறுவர்கள் யானைக்கால் உள்ள ஒருவரிடம் உதை வாங்க பயந்து ஓடுவதும், உதை வாங்கின பிறகு அந்த உதை மெதுமெதுவென்று இருப்பதாகவும் உணர்கின்றனர். இதை வாழ்வியல் தத்துவத்தோடு ஒப்பிட்டு நாமும் நம் வாழ்வில் சில விஷயங்களை இப்படித்தான் வெளியில் தொலைவிலிருந்து பார்த்து பயந்து விடுகிறோம் ஆனால் உண்மையில் அப்படி இருக்காது என கதை வழி தத்துவத்தையும் வெளிக்கொணர்கிறார். பாரதியின் சிறுகதைகள் சிறுகதை இலக்கணங்களுக்குட்பட்டு வடிவமைப்பிலும், கருத்துச் செறிவிலும், நடையிலும் முன்னுதாரணமாக விளங்குகின்றன.

முடிவுரை

பாரதியார் தாம் எடுத்துக்கொண்ட பொருளை மக்கள் உள்ளத்தில் ஊடுருவிப் பாய்ந்து தொழிற்படும் முறையில் கதைகள் மூலம் உணர்த்துகிறார். அது மட்டுமல்ல - பாரதியார் பாமரமக்களின் உள்ளத்து எழுச்சி களையும், உணர்ச்சிகளையும் தம் கதைகளிலே எதிரொலிக்கவும் செய்கிறார். பாரதியார் எழுதிய கதைகள் அனைத்தும் ஒவ்வொரு வகையில் தனிச் சிறப்பு கொண்டவை. அறிவு விளக்கம் தருவதையே தமது நோக்கமாகக் கொண்டிருந்தார் மகாகவி. அவர் வெறும் பொழுதைப் போக்குவதற்காகக் கதைகள் எழுதவில்லை. நீதியும் தர்மமும் நிலைப்பதற்கென்றே பல கதைகளை எழுதியுள்ளார்.

பார்வை நூல்கள்

1. பாரதியார் கவிதைகள்
2. https://ta.wikisource.org/wiki/%E0%AE%AA%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%A4%E0%AE%B
3. இலக்கிய உலகம்- முனைவர் அ . ஆனந்தநடராசன்

64. பாரதியாரின் கதைகள்

அ. அழகையா

மதுரை

தமிழுக்கு புதுரத்தம் பாய்ச்சி அதன் மூலம் புரட்சியை ஓங்க வைத்தவன் பாரதி. அவன் ஒரு ஞானச்சூரியன். உலகை உய்விக்க வந்த பகலவன். தன் எழுத்து மூலம் பாரத கண்டத்தை உயிர்ப்பித்தவன். உறங்கும் மாந்தர்களை தன் பாட்டால் கருத்தால் உசுப்பிவிட்டவன். பெண்களை ஆணுக்கு நிகர் என்றோதி பெண் விடுதலைக் கருத்துக்களை ஆர்ப்பரிக்க விட்டான் அவன். ஜாதி ஒழிப்பில் தீவிரம் காட்டிய பாரதி அதை செய்தும் காட்டினான். ஆதிதிராவிட மக்களை அழைத்து வந்து வீட்டின் நடுக் கூடத்தில் அமர வைத்து பூநூல் போட்டவன் அவன். தேசம் சுதந்திரம் அடைந்திட இவனது பாடல்களும் எழுத்துக்களும் பேருதவி புரிந்தன.

அப்படிப்பட்ட பாரதி கவிதைகள் அதிகம் எழுதி ஆன்ம பலத்தை பெருக்கிக் கொண்டான். வேதாந்தங்கள், வேற்று மதச் சிறப்புகளையெல்லாம் அறிந்திருந்தான். அன்றியும் இவன் கட்டுரை மற்றும் கதைகளையும் எழுதி உள்ளான். சில கவிதைகளில் உள்ள கருத்தை பிரித்துச் சொல்ல கட்டுரையாக்கி உள்ளான். கதைகளில் கருத்தும் வரலாறும் கற்பனை வளமும் பொங்கிப் பிரவகிக்கின்றன. இங்கு அவரின் இரு கதைகளை ஆய்வு செய்து கட்டுரையாக சமர்ப்பிக்கிறேன். (எழுதிய கதைகள் மொத்தம் 42)

குதிரைக் கொம்பு

இக்கதை ராமாயணத்தை நாம் அறிந்திராத வகையில் வேறு ஒரு புதிய கோணத்தில் எழுதியிருக்கிறார். இதில் அவரது கற்பனை வளமும் ஆழ்ந்த சிந்தையும் நுணுக்கமும் பெண்களின் வீரமும், தன்மானமும், பண்பும் பளிச்சிடுகின்றன. சிந்து தேச அரசன் ஒருவனுக்கு குதிரைக்கு ஏன் கொம்பில்லை என்ற சந்தேகம் திடீரென முளைத்தது. அரசவைக்கு சன்மானம் வேண்டி வந்திருந்து வக்ரமுக சாஸ்திரி என்பான் அதற்கு பதில் சொல்ல சம்மதித்தான். இலங்கையை அவ்வமயம் ஆண்டு கொண்டிருந்த ராவணன் என்பான் குதிரைகளுக்குக் கொம்பு வைக்க வேண்டாம் என பிரம்ம தேவனிடம் சொல்ல, அவரும் அவன் சொன்ன பிறகு குதிரைகளுக்குக் கொம்பின்றி படைக்கலானார். அதற்கு முன்பு வரை குதிரைகள் கொம்புடன்தான் படைக்கப்பட்டிருந்தன. இதைக் கேட்ட அரசன் அதற்கான பூர்வ கதையைச் சொல்லக் கோரினான். அது சொல்லப்பட்டது. இலங்கையை ஆண்ட ராவணனது ஆட்சியில் சகலமும் செழித்துக் கிடந்தன. மழை குறைவின்றிப் பெய்து பிராமணர்களால் வேதங்கள் ஒரு எழுத்துக் கூட குறையாது ஓதப்பட்டன. எல்லா வர்ணத்தாரும் தத்தம் கடமையை வழுவாது நிறைவேற்றி வந்தனர். எல்லா ஜீவர்களும் புண்யாத்மாக்களாகவும் தர்மிஷ்டராகவும் இருந்து இகத்தில் அனைத்து இன்பத்தையும் அனுபவித்து பின் சிவன் நிழலை அடைந்தனர்.

அப்போது அயோத்தியில் தசரத மன்னனின் மகனான ராமன் மூத்தவன் பரதனுக்குப் பட்டம் கட்டியதை எதிர்த்து தனக்கே பட்டம் கட்ட வேண்டுமென கலகம் செய்தான். இதனால் கோபங் கொண்ட தசரதன் ராமனையும் லஷ்மணனையும் நாட்டை விட்டுத் துரத்தினான். அவர்கள் மிதிலை சென்று மன்னன் ஜனகனிடம் சரணடைந்தனர். அபயம் அளித்த அரசன் அங்கு அவர்கள் தாமசிக்க அனுமதி அளித்தான். சீதையின் அழகில் மோகங் கொண்ட ராமன் அவளைத் திருட்டுத்தனமாகக் கவர்ந்து கொண்டு தண்டகாரண்யம் சென்றான். அங்கு ராமலஷ்மணன் முனிவர்களை இம்சித்தனர் யாகங்களை அழித்தனர். அப்போது அங்கு கோலோச்சி வந்த சூர்ப்பணகை ராமலஷ்மணர்களைக் கட்டி அரசவைக்கு கொண்டு வரச் செய்தாள். சிறுபிள்ளைகளாய் நீங்கள் இருப்பதால் மன்னிக்கிறேன் என்று அரண்மனையில் விருந்தளித்து உபசரித்தாள். தனியாக சூர்ப்பணகையிடம் பேசிய சீதை அவளிடம் ராமன் தன்னை வலுக்கட்டாயமாக இங்கு தூக்கி வந்து விட்டதாகவும் தன்னை மீண்டும் மிதிலைக்குச் சென்று தந்தையுடன் வசிக்க ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும் கோரினாள். சூர்ப்பணகையும் இவளை ராவணனிடம் அனுப்பி மிதிலையில் அவளைக் கொண்டு விடும்படியும் சொல்லி அனுப்பினாள். ராவணன் அனுப்ப உகந்த நாள் இல்லை எனக் கூறி சீதையை இரண்டு வருடம் அங்கேயே தங்கிப் போகும்படி ஆணையிட்டான்.

இதை அறிந்த லஷ்மணன் சூர்ப்பணகையிடம் இப்படிச் செய்யலாமா என்றான். கோபங் கொண்ட அவள் லஷ்மணனின் இரண்டு காதுகளையும் இரண்டு கால் கட்டை விரல்களையும்

நறுக்கிவிட்டாள். இராமன் இவள்மேல் மோகங்கொண்டு என்னை மணம் செய்துகொள் என்றான். அதற்கு சூர்ப்பணகை சம்மதம் தரவில்லை. ராமன் சீதையை ராவணனிடமிருந்து மீட்க வேண்டி கிஷ்கிந்தா நகர் சென்றான். அங்கு சுக்ரீவன் ராவணனைக் கொல்ல படைதிரட்டிக் கொண்டிருந்தான். அதில் போய் ராமலஷ்மணன் இணைந்தனர். சுக்ரீவன் படை தோற்றது. ராமன் குறைந்த சேனைகளுடன் இலங்கையில் மறைந்திருந்தான். இதை அறிந்த ராவணன் நம் நாட்டிற்கு மனித சேனை வருவதா என கர்ஜித்தான். அந்த ஒலியைக் கேட்டு ஆதிசேஷன் செவிடானான். சூர்ய மண்டலம் தரை மேல் வீழ்ந்தது. ராமனது படையை அழித்த ராவணன் ராஜ குமாரர்களான ராமலஷ்மணனை தனது ஆட்கள் மூலம் அயோத்திக்கு அனுப்பி வைத்தான். சீதையும் மிதிலை போய்ச்சேர்ந்தாள். சூரியன் கீழே விழும்போது அதன் குதிரைகளுக்கு கொம்பு முறிந்து போயிற்று. சூரியன் ராவணன் காலில் விழுந்து என் குதிரைகள் சாகாவரம் பெற்றவை. இவற்றின் கொம்புகள் முறிந்ததால் உலகோர் என்னை ஏளனம் செய்வர். நான் என் செய்வேன் என அழுது புலம்பினான். அதனால் சூரியன் மேல் கருணை கொண்டு ராவணன் பிரம்மனிடம் இனி படைக்கும் குதிரைகட்கு, கொம்பில்லாமல் இருக்கட்டும் என்றானாம்.(பக். 3.4.8) என்னே, பாரதியின் கற்பனை வளம்!

சின்னச் சங்கரன் கதை

இக்கதையில் சின்னச்சங்கரன் கதாநாயகன். அவன் பிஞ்சிலே பழுத்தவன். தாய் இவனுக்கு 3 வயதிருக்கும் போதே மரணித்தாள். தகப்பன் சுப்ரமணிய அய்யர். இவர் 2ம் திருமணம் செய்து கொண்டு விட்டார். படித்தும் அரசு வேலைக்குப் போகாமல் வியாபாரங்கள் செய்து சிறிய தொகை சேமிப்பில் வைத்துள்ளார். ஜமீன் ராமசாமி கவுண்டரின் உற்ற நண்பர். சங்கரனின் தாத்தா பாட்டி அவனைச் செல்லமாக வளர்த்தனர். இங்கிலீஸ் பள்ளியில் படிக்கும் சங்கரனுக்குக் கவி இயற்றும் புலமையும் சேர்ந்து கொண்டது. 12, 13 வயதிலேயே தமிழ்ப் புலவனாகி விட்டான். கவுண்டனூரில் எந்தப் பொருளும் செழிப்பாகக் கிடைக்கவில்லை. ஆனால் புலவர்களுக்கு மட்டும் குறைவில்லை. சங்கரன் பல நூல்கள் காவியங்கள் படித்திருந்தான். மன்மத விகாரத்தைப் புகழ்ந்து பேசியிருக்கும் நூல்கள் அங்கு ஏராளம். கூளப்ப நாயக்கன் காதல், செலுவூர்க்கோவை, பிச்சித்தேவன் உலாமடல் ஆகியவை சங்கரனைக் கவர்ந்த நூல்கள். இவை சிருங்கார ரஸம் மிக்கவை. இவன் குள்ளமாய் இருந்ததினால் இவனைப் பள்ளியில் பிள்ளைகள் சின்னச்சங்கரன் என அழைத்தனர்.

இந்தக் கவுண்டனூர் அல்லது கவுண்டபுரம் கீர்த்தி பெற்று விளங்கிய காலத்தில் இதை ராமசாமி கவுண்டர் ஆட்சி செய்து வந்தார். வெளியூர் ஜனங்கள் இவரை ஜமீன்தார் என அழைத்தனர். மகாராஜா என்றும் பட்டம். இவரது குணாதிசயங்கள் மற்றும் நடவடிக்கைகள் வேடிக்கையாக படைக்கப்பட்டிருக்கின்றன. அதை என்னவென்று கீழ்க்கண்ட வரிகளில் காணலாம். அவர் 50 வயதுக்காரர். கருநிறம், நரைமீசை, குழிந்த கண்கள் பொடியினால் அலங்கரிக்கப்பட்ட மூக்கு. காவிப் பற்கள். குற்றுயிர் உதடு. ஆபரணச் செவிகள். பூதாகரமான உடல். பிள்ளையார் வயிறு. பட்டு ஜரிகை வேஷ்டி.விரல் நிறைய மோதிரங்கள். இப்படித்தான் அவர் தோற்றம் அமைந்திருக்கும். இவரது தினசரி காரியங்கள் பின்வருமாறு :

காலை எட்டரை மணிக்கு எழுந்திருக்கும் அவர் ஒன்பது மணிக்குச் சாப்பிட உட்காருவார். பழையதிற்கு தொட்டுக் கொள்ள அரண்மனைக் கறிகள் போதாதென்று பிறவீடுகளிலிருந்தும் கறிகளை வரவழைத்துச் சாப்பிடுவார். சாப்பாடு முடிந்தவுடன் சபாமண்டபம் வந்து சாய்வு நாற்காலியில் அமருவார். ஒருவன் கால்களைப் பிடித்துக் கொண்டிருப்பான். உத்யோகஸ்தர் எவரேனும் வந்து எதிரமர்ந்து புரளி, கோள் வார்த்தை பேசிக் கொண்டிருப்பர். சில சமயம் வெளியிலிருந்து கொண்டு வரப்படும் சேவலுக்கும் அரண்மனைச் சேவலுக்கும் சண்டை விட்டுப் பார்ப்பார். பகல் ஒன்றரை மணிக்கு ஸ்நானம் வெந்நீரில் தொடங்கும். தலையில் ஜலம் ஊற்ற உடம்பு தேய்க்க தலா இரண்டு பேர் இருப்பர். தலை துவட்ட ஒருவன் உண்டு. பின் பூஜை நடக்கும். பூஜா காலத்தில் பாகவதர்கள் வந்து பாடுவார்கள். சங்கீதத்திலும் சாஹித்தியத்திலும் இவர் புலி. பூஜை முடிந்தவுடன் போஜனம். ஒவ்வோர் வீட்டிலிருந்தும் ஒவ்வொரு வகையான கறிகள் வரவழைக்கப்படும். மொத்தத்தில் இவர் போஜனப் பிரியன் போஜனத்திற்குப் பின் நித்திரை குறட்டையுடன்! ஐந்து மணிக்கு எழுந்தவுடன் கொஞ்சம் பலகாரம் சாப்பிடுவார் பின் ஐரோப்பிய உடை தரித்து கச்சேரிக்குச் செல்வார். அங்கே விண்ணப்பங்களை மக்களிடம் பெற்று அவற்றில் கையொப்பமிடுவார்.

சாயங்காலம் கச்சேரி முடிந்தவுடன் குதிரை வண்டியில் ஊரைச் சுற்றி சவாரி செய்வார். அரண்மனைக்குத் திரும்பியவுடன் ஐரோப்பிய உடையை நான்கு பேர் கழற்றுவார்கள். சாய்வு

நாற்காலியில் அமர்ந்து ஊர் வம்பு பேசுவார். வெற்றிலை புகையிலை லேகியம் இவரை மயக்கும் வரை இவர் அங்கிருப்பார். அதாவது பத்து மணி வரை. பின் அந்தப்புறம் சென்று 32 கவளம் சாப்பிட்டு விட்டு நித்திரைக்குச் செல்வார். குதிரைச்சவாரி செய்யும்போது மிகவும் கவனமாக இருப்பார். ஏனெனில் ருஷிய தேசத்தில் ஒரு குதிரைப் பந்தயத்தில் ஒருவன் வேலி தாண்டி விழுந்து உயிரிழந்தான் என்ற செய்தி சுதேச மித்திரனில் வெளிவந்துள்ளது என இவரிடம் யாரோ சொல்லியிருக்கிறார்கள். (இச்செய்தி பாரதியார் எவ்வாறு உலக நடப்பில் ஆர்வமிக்கவராயிருந்திருக்கிறார் என்பதைப் புலப்படுத்துகிறது)

இப்படிச் சென்று கொண்டிருந்த ஒரு நாளில் புலவர்களுடன் ஜமீன் அமர்ந்திருந்த வேளையில் முத்திருளப்பக் கவுண்டர் (அடப்பை தூக்கும் தொழில் செய்பவன், முத்தமிழ்ப் புலவர்களில் சிறந்தவர்களில் ஒருவன்) ஜமீன்தாரிடம், சுப்பிரமணி அய்யர் மகன் சங்கரன் தங்கள் மீது யமகம் பாடியிருக்கிறான். அதை தங்கள் சமூகத்தில் அரங்கேற்றம் செய்ய வேண்டும் என என்னை நச்சரிக்கிறான். தாங்கள் அதற்கு எனக்காக ஒப்புதலளிக்க வேணும் என்றான். மகா ராஜாவும் ஒப்புதலளித்தார். மறுநாள் ஐந்து மணிக்கு பள்ளியிலிருந்து நேராக ஜமீன் வீட்டிற்கு சங்கரன் வந்துவிட்டான். ஜமீன் சொன்னவுடன் தன் பாட்டை சங்கரன் வாசித்தான். வாய் குளறினான். உடல் வியர்த்தது. முத்திருளன் அவனுக்குத் தைரியம் சொன்னான். அவன் பாடிய பாட்டு பின்வருமாறு : "கவுண்டுவுண்ட தென்மாரன்கணை / பொழிய மிகச் சோர்ந்து கண்ணீராற்றிற் / கவுண்டவுண்ட மார்பினளாய் மகளுன்னை / நினைந்து மனங்கரையா நின்றாள் / கவுண்டவுண்ட சீதையினை / மாலையிட்ட பெருமானே கவுண்டனூரிற் / கவுண்டவுண்ட ராமசாமித் துரையே / விரைவினிற்கலவி செய்யே". இப்பாட்டிற்கு முத்திருளனே பொருள் கூறினான். இப்பாடலும் சங்கரனின் புகழும் ராஜ்யம் முழவதிலும் பரவியது.

பின் பாரதி சங்கரனின் காதல் விவகாரத்தைச் சொல்கிறார். முத்திருளனுக்கு ஒரு மகள் உண்டு. அவளைப் பாரதி எப்படி வருணிக்கிறார் .பாருங்களேன் : 'மைக் கருப்பு, பெரிய கண்கள் வெட்டுகிற புருவம் அதிக ஸ்தூலமில்லாமலும் ஏணி போலவுமில்லாமல் லேசாக உருண்டு நடுத்தர உயரம் ஒழுங்காக அமைந்த சரீரம் படபடப்பான பேச்சு, கலீர் சிரிப்பு. ஜாதிமல்லி பூவைத்துக் கொள்வதிலே விருப்பமுடையவள் உடலெங்கும் பல்வகை நகைகள். பெயர் மட்டும் நயமாக இல்லாமல்இருளாயி எனச் சூட்டப்பட்டிருந்தது. இவள் மேல் சங்கரனுக்குக் காதல் பிறந்து விட்டது. பரிபூரண மோகம் ஏற்பட்டு விட்டது. முத்திருளனின் தந்தை கண்ணற்றவன். ஆனால் ராமாயணத்தில் புலி. யார் என்ன சந்தேகம் கேட்டாலும் நிவர்த்தி செய்வான். அவன் சங்கர் இருளாயி காதலை அங்கீகரித்தான். சங்கர் காதல் செடி பூத்துக் குலுங்கியது. இருளாயி சம்பந்தமாக சுமார் 2000 கவிகளை சங்கரன் இயற்றிவிட்டான். இப்படி இருக்கையில் இவர்களின் சுகத்திற்கிடையூறு செய்யும்படியான செய்தி ஒன்று வந்ததென பாரதியார் திகிலூட்டும் கதையை இத்துடன் முடித்து விட்டார். இக்கதை மூலம் பாரதியின் கற்பனைத்திறன், புலமை உலக அறிவு ஆகியவை பரந்து பட்டவை என்பது கண்கூடன்றோ!

முடிவுரை (ஆய்வாளர் கருத்து)

நானறிந்த வகையில் பாரதியார் 42 கதைகளைச் சிறிதும் பெரிதுமாய் யாத்துள்ளார். அவற்றில் இரு கதைகளை மட்டும் நான் ஆய்வுக்கு உட்படுத்தி உள்ளேன்.

1. குதிரைக் கொம்பு, இக்கதையில் பெண்களை வீரமிக்க, கருணைமிக்க பண்பாடு கொண்ட விட்டுக்கடங்கின பெண்ணாகப் பாரதி படைத்துள்ளார். இவரது இந்தப் பார்வை மூலம் ஒரு பெண்ணாய் பிறந்தவள் எப்படி துணிச்சலுடன் ஆணுக்கு நிகராக இருக்க வேண்டுமென்பதைச் சொல்லிச் செல்கின்றார்.

சூர்ப்பணகையை லஷ்மணன் எதிர்த்து நின்றபோது அவனிடம் பயம் கொள்ளாது அவனது காதுகளை வெட்டுவதோடு கால்கட்டை விரல்களையும் அவள் வெட்டி விடுகிறாள்.

அதே சமயம் அவளது மனம் கருணை கொண்டது. எப்படியெனில் ராம லஷ்மணன் ரிஷிகளைக் காட்டில் இம்சை செய்த போதிலும் அவர்களைக் கண்டித்து மன்னித்து அரண்மனையில் தங்கிக் கொள்ள அனுமதிக்கிறாள். மேலும், சீதையை அவள் கேட்டபடி மிதிலைக்கு அவளை அனுப்பி வைக்க ஏற்பாடு செய்கிறாள். சீதையும் தான் முறையற்ற வழியில் ராமனுடன் காடு சென்றதால் தன் தந்தையிடம் சென்று வசிப்பதே சாலச் சிறந்தது என்றெண்ணி சூர்ப்பணகையிடம் அதற்காகக் கோரிக்கை வைக்கிறாள். இதிலிருந்து அவள்

தந்தைக்குக் கட்டுப்பட்டு பண்பாடு காக்கிறாள் என அறியலாம். எனவே, பாரதி பெண்களைப் படைத்த பாரத்திரங்களை படைத்தவிதம் பாராட்டுக்குரியது. தற்காலச் சூழலில் சூர்ப்பணகை போல் வீரமிக்கவளாய் பெண்கள் இருந்துவிட்டால் பாலியல் வன்கொடுமை நிகழாதல்லவா? அதே சமயம் ராமன் தன்னை விரும்பியபோது சூர்ப்பணகை அதைச் சட்டை செய்யவில்லை. எனவே கற்புடை மாதர் தம்மை பாரதி போற்றுதல் கண்கூடு.

2. சின்னச்சங்கரன், ' சின்னச் சங்கரன் உருவத்தில் சற்று குள்ளமாயிருந்ததால் தன் பள்ளித் தோழர்களால் கேலிக்குரியவனாகிறான். உருவங்கண்டு எள்ளாமை வேண்டும் என்ற குறள் ஈண்டு நினைவு கூறற்பாலது. இக்கதையில் வரும் கதாநாயகன் கவி இயற்றுவதில் இளமையிலேயே சூரனாகத் திகழ்கிறான். (இங்கு நாம் இளவயது பாரதியை நினைவு கூரலாம். ஏனெனில் அவரும் தன் பத்துப் பனிரண்டு வயதிலேயே கவிதை எழுதினார்). இக்கதை மூலம் பாரதி தமிழின் சிறப்பையும் அதன் உயர்வையும் வெளிப்படுத்துகிறார். ராமசாமிக் கவுண்டர் பாத்திரம் தமிழ் மீது மிகுந்த பற்றுக் கொண்டவராய்ப் படைக்கப்பட்டுள்ளது. அவரது அரட்டைக் கச்சேரியில் பாகவதர்களையும் பாட்டுக்கார்ர்களையும் தமிழைப் பாட வைத்து ரசிக்கிறார். முத்திருளப்பன் என்ற அவரது உற்ற நண்பர் கவி புனைவதிலும் தமிழ்க் கவிதை பாடுவதிலும் வல்லவனாக உள்ளதால் கவுண்டர் அவனை மிகவும் நேசிக்கிறார். இதனாலேயே அவன் சொல் கேட்டு சின்னச் சங்கரனை அவர் குறித்து இயற்றிய பாடலை அவையில் அரங்கேற்ற அனுமதிக்கிறார்.

ஒரு கட்டத்தில் முத்திருளப்பன் அவையோரைப் பார்த்து வடமொழியில்தான் வேதம் உளதென்று நீர் ஒருவேளை சொல்லலாம். அது எங்கள் தேவாரம் திருவாசகத்திற்கு ஈடாகுமா? என்கிறான். இதை நோக்கின் பாரதி வடமொழியை விடத் தமிழ் சிறந்த மொழி என நிலைநிறுத்துவதைக் காணலாம். (பக். 276 – பாரதியின் கதைகள்) மேலும், அவையில் தமிழ் மொழிக்கு நேரானதோர் மொழி இல்லை. அதிலும் வடமொழி நமது தமிழ்மொழிக்குச் சிறிதேனும் நிகராகமாட்டா. தமிழ் கற்றோர் அனைத்தும் கற்றோர் என்றும் சொல்லப்படுகிறது. எனவே பாரதி தமிழின் உயர்வையும் சிறப்பையும் தன் கதைகள் மூலமும் சொல்லியுள்ளார் என்பது புலப்படுகிறது. எனவே தமிழ் கூறும் நல்லுலகம் பாரதிக்கு என்றும் கடமைப்பட்டுள்ளது. அவர் அறியாத மொழியில்லை எனினும் தமிழ்போல் எதுவுமில்லை என்பதைத் தன் பாட்டான 'யாமறிந்த மொழிகளிலே தமிழ்போல் இனிதாவதாக எங்கும் காணோம் என்பதைத் திட்டவட்டமாகக் கூறி உள்ளார். காதலையும் காதலியையும் வருணிக்கத் தமிழில் நல்லநல்ல வார்த்தைகள் உள்ளன. அவற்றை எல்லாம் பாரதி மூலம் நாம் அறியலாம். இக்கதையில் வரும் சங்கரனின் காதலி இருளாயியின் அழகை வர்ணிப்பதில் அதை நாம் காணலாம். (பக். 284). பெண் வீரம், மானம், தமிழர் பண்பாடு, தமிழ் மொழியைச் சிறப்பு செய்தது எனப் பாரதி தமிழ்நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் செய்த தொண்டு என்றும் நிலைத்து நிற்கும்.

65. பாரதி எனும் சித்தன்



சு.ஐஸ்வர்யா

முனைவர் பட்ட ஆய்வாளர்
தவத்திரு சாந்தலிங்க அடிகளார் கலை அறிவியல் தமிழ்க் கல்லூரி

ஆய்வுச் சுருக்கம்

பார்போற்றும் பாவலராய், பாரத நாட்டின் தவப் புதல்வராய், புது யுகக் கவிஞராய் எண்ணற்ற பாடல்களை இயற்றி மக்களின் மனதில் நீங்காத இடம்பிடித்தவர் பாரதியார். புரட்சிக்கவிஞராய், தேசிய விடுதலைப் போராளியாய் வேதாந்தவாதியாய் இயற்கைக் கவிஞராய் பலபல வகையாக அவரை இனங்காட்டிய அவரது பாடல்கள் அவரை சித்தனாகவும் படம் பிடித்துக் காட்டுகிறது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச் சொற்கள்: சித்தர் , தியானம் , ஞானிகள் ,ஆன்மீகம், பக்தி

முன்னுரை

பாரத மக்களிடையே சித்தர் நிலையில் வாழ்ந்த பாரதி யாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்ற நிலையில்

"எல்லாரும் அமரநிலை எய்தும் நன்முறையை"

என்று கூறிய பாரதி , எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தாரப்பா நானும் வந்தேன் ஒரு சித்தர் இந்த நாட்டில் என்று கூறினார். அனைவரும் தாம் பெற்ற சீவன் முக்தி நிலையைப் பெற்று மெய்யுணர்தலை அடைய வேண்டும் என்ற பரந்த தன்னலமற்ற சிந்தையராய்ச் சித்தர்களைப் போன்றே முயன்றார்.

சித்தர்கள்

சித்தர் என்ற சொல் சித்தியில் இருந்து வந்தது. அறிவியல் சாதனைகளிலும் முழுமையுற்ற நிலைதான் சித்தி. சித்தி பெற்றவர் சித்தர். இவர்களைச் சமய, சமுதாயத்தின் ஆன்மீகப் புரட்சியாளர்கள் என்றும் அறிவியலின் முன்னோடிகள் என்றும் கூறுவர். உலக மக்கள் அனைவர்க்கும் பொதுவானவர்கள். அவர்கள் எங்கும் எப்போதும் தோன்றி மக்கள் இன்புற்று வாழ நல்வழி காட்டுபவர்கள். ஆன்மீக நேய ஒருமைப்பாட்டை எம்மதமும் சம்மதம் என்ற சமரச சன்மார்க்கத்தை வளர்ப்பவர்கள்.

பாரதியினுள் சித்தன்

இந்த உலகில் உயர்ந்த இடத்தைப் பிடித்த இனம் மனித இனம். இவ்வுயர்ந்த நிலையில் பிறந்த மனிதன் புலன்கள் வழியாகவும் ,மனத்தின் வழியாகவும் , செயல்படுகின்ற தன்மையினைப் பெற்று விளங்குகிறான். புலன்களையும், மனதையும் அடக்கி ஆளும் உணரும் மெய்யுணர்வும் பெற்ற ஒருவரை சித்தர் என்று கூறலாம். ஆன்மீக ஞானமும், தம்மை உணரும் மெய்யுணர்வும் பெற்ற ஒருவரை சித்தர் என்று கூறலாம். மக்களுக்காகவும் மண்ணுயிர்களுக்காகவும், உலகில் நடனமாடி தெய்வக்காட்சி பெற்றவர்கள் சித்தர்கள். பொதுவாக சித்தர்கள் என்ற சொல்லிற்கு இறைத்தன்மை அடைந்தவர்கள், உலகியலைத் துறந்தவர்கள், உளஇயல் அறிந்தவர்கள் மனத்தின் ஆற்றலை ஒருமுகப்படுத்தித் தம்முளே இறைவனைக் கண்டு அவனோடு ஒன்று கலந்தவர்கள் என்றெல்லாம் பொருள் கொள்ளலாம். மனித சாதியில் பேதமில்லை, இறைவன் இருவர் இல்லை நல்லதை நினைப்போம், நமக்கு

பயமென்பதேயில்லை என்ற வாழ்வியல் உண்மையை உரக்க உறைத்தவன் பாரதி என்பதால் அவரும் ஒரு சித்தரே.

"செத்தவர் தம்மை எழுப்பித் தருகுன்ற சித்தர் பிறந்த தமிழ் நாடு"

என்று தன் தாய்த்திரு நாடான தமிழ்நாட்டைச் சிறப்பித்துப் பாடுவார் பாரதி. பாவேந்தர்களில் தானும் ஒரு சித்தன் என்று தன்னையும் சிறப்பித்துக் கொள்வான். சித்தர்கள் கூறிய அறிவுரையினால் தான் பாரதி பித்தம் தெளிந்து சிறந்த சித்தனானான். ஆதலால் மகா சக்தியிடம்

"பந்தந்தை நீக்கிவிடு – அல்லால்.."
தெளிந்த சிந்தையை வேண்டுகிறார்.

மகான்கள், ஞானியர் பிறர் நிலையில் இருந்து வேண்டுவதுபோல் பாரதியும் வேண்டுகிறார்.

"இந்திரியங்களை வென்று விட்டேன்"

என்று கூறும் பாரதி, பிறர் நிலையில் நின்று, திண்ணிய நெஞ்சம், தெளிந்த நல்லறிவு, போக்கு வரவு இல்லாத தெளிவு அதன்வழி ஞானம், அசைவில்லா ஆனந்தம் அசைவறு மதி, நசையறு மனம் கேட்கிறார்.

"அறிவிலே தெளிவு நெஞ்சிலே உறுதி.." என வேண்டும் பாரதி.

ஆன்மீகச் சிந்தனை

ஆன்மீகக் கல்வி பெறாது வெறும் ஏட்டுக் கல்வியால் உயர்ந்த பயன் ஒன்றுமில்லை என்று சொன்ன பாரதி "கடவுள் ஒருவரே", அவரை ரிஷிகள் பல பெயர்களால் அழைக்கின்றனர் என்ற ரிக்வேத உண்மையை மாணவர்களின் மனதில் ஆழப் பதியுமாறு செய்வதுடன், இதர தெய்வங்களைப் பழித்தல், பகைத்தல் போன்ற செயல்களைக் கட்டோடு விட்டுவிடும் படியான போதனைகள் அமைய வேண்டும் எனக் கூறினார். ஆன்மீகக் கல்வி தராத அறிவை,

"பலகற்றும் பலகேட்டும் – எங்கள் முத்து.." (தோத்திரப்பாடல்கள் -39)

எனக் குறிப்பிடுகின்றார். ஆன்மீகக் கல்வியைப் பற்றி விவேகானந்தர் கூறும் பொழுது, "ஒழுக்கமளிப்பது, மனோவலிமையைத் தருவது, புத்தியை விசாலப்படுத்தி ஒருவனைத் தன்வலிமை கொண்டு நிற்கச் செய்வதுமான இத்தகைய கல்வி நமக்கு அவசியம்" எனக் கூறுகிறார்.

பாரதியின் இறைக்கோட்பாடு

மனிதனின் முயற்சி, செயல், ஊக்கம் மற்றும் பலம் எல்லாம் தளர்ந்து குறைந்து போகும்போது இறைவனையே சரணாகதி அடைகிறான். இதைப் பாரதி மறுக்கவில்லை. சிவன். முருகன், சக்தி, விநாயகர், திருமால், சக்தி, இயேசு, அல்லா என்று அனைத்து தெய்வங்களையும் பாடிவிட்டு இறைவன் ஒன்றே என்பதை உணருங்கள் என்கிறான். அந்த உணர்வோடு இறைநம்பிக்கை கொள்ளுங்கள். சித்தம் தெளியும் , செயல்கள் செம்மையுறும், பிணி, மனக்கவலை நீங்கும், அறிவு தெளிந்திடும், சோம்பல் அழியும், உள இன்பங்களைப் பெற்றுப் புகழ்பட வாழ முடியும் என்று பக்தியின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

ஒவ்வொரு மனிதனுக்கும் இறைபக்தி அவசியம்,அவரவர் உணர்வின்படி இறைவனுக்கு உருவம் கொடுத்துப் பெயர் வைத்து வணங்கினாலும் இறைவன் ஒருவனே என்பதை உணர்ந்தால் தான் மக்களிடம் ஒற்றுமையும் சமாதானமும் நட்புறவும் உருவாகும் என்பதையும்

"தெய்வம் பலபல சொல்லிப் பகைத்

தீயை வளர்ப்பவர் மூடர்"

என்ற கருத்தை மக்கள் மனதில் பதிய வைப்பதே பாரதியின் நோக்கம். இதுவே சித்தர்களின் வேதம்.

தியானம்

பாரதியார் தியானத்தின் பெருமையை மிகத் தெளிவாகக் குறிப்பிடுகின்றார். ஒருவனிடம் அவ்வப்போது தோன்றி மறைந்த எண்ணங்கள் தியானம் ஆகாது. அதே சமயம் மனதினுள் மற்ற கவலைகளையும் எண்ணங்களையும் எரித்துவிடும் சோதியாய் விளங்கும் பெரிய விருப்பத்தையே தியானமென்று கூறுகிறோம். இதைத்தான் பாரதி "தன்னை மறந்த இலயம்" எனக் குறிப்பிடுகின்றார். உள்ளத்தில் இவ்வித அக்கினியொன்று வைத்துக்கொண்டிருப்போமேயானால் உலகப்பொருள்கள் எல்லாம் நமது உள்ளம் நினைத்ததற்கு இணங்கும் எனக் குறிப்பிடுகிறார். அக்கினிக்குஞ்சு என்று ஞானிகளைக் குறிப்பிடுகிறார். அப்பாடல்,

"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன்"

என அமைகிறது.

முடிவுரை

"எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தார்கள்" என்று பாரதி தன்னைச் சித்தன் என்று அவரே கூறுகிறார். அறிவிலே தெளிவு, நெஞ்சிலே உறுதி, அகத்திலே அன்பு, உயர்ந்த சிந்தனை என்றும் சிறந்தது என்பது போலக் காலத்தால் அழியாத சாதிமத பேத இனங்களைக் கடந்த பொக்கிஷ குவியல் பாரதியின் படைப்புகள். தான் வாழும் சமுதாயத்தின் நிறைகுறைகளை கவனித்துப் பார்த்து அதன் தாக்கத்தால் தான் உணர்ந்ததைக் கவிதையாக வெளிப்படுத்துபவன் படைப்பாளி. மனிதநேயம் மிக்கவர்களாகச் சமுதாயத்தின் மீது அக்கறை கொண்டவர்களாக முற்போக்கு சிந்தனையுடன் போரிடும் போராளிகளில் பாரதியும் ஒருவன்.ஆன்மீகநெறி உயர்வு தாழ்வற்ற சமுதாயம் இவைகளை மக்களிடம் உருவாக்குவதே எனது தலையாய கடமை எனக் கருதியவன் பாரதி.

துணைநூற்பட்டியல்

1. விஜய பாரதி, மகாகவி பாரதி- ஒரு திறனாய்வு, வானதி பதிப்பகம்
2. இளமதி ஜானகிராமன்.க, சித்தர்களும் சமூகப் பார்வையும், குறிஞ்சி பதிப்பகம்
3. விவேகானந்தர், பக்தியோகம், ஸ்ரீ ராமகிருஷ்ணமடம்
4. பாரதியார், பாரதியார் கவிதைகள், பாரதிபதிப்பகம்

66. பாரதியின் படைப்புலகில் சமூக வழக்கின் எதிரொலி



V. S. பாலநேத்திரம் Ph.D.
மிச்சிகன், அமெரிக்கா

ஆய்வுச் சுருக்கம்

பாரதி, தான் பிறந்த ஏழ்மை, தன் மேல் புகுத்தப்பட்ட குழந்தைத் திருமணம், மொழிகளில் மட்டும் நாட்டம் கொண்ட தன் படிப்பு இவைகளுக்கு நடுவில் இறைவன் தனக்குத் தந்த நல்லதோர் அறிவு, நாட்டு விடுதலையில் அளவிட முடியாத நாட்டம், பெண்கள் நிலையை மேம்படுத்தலில் ஆர்வம் என்று சூழ்நிலை தந்த அனைத்தையும் ஏற்றுக் கொண்டு, தன் இலக்கியப் படைப்புகள் மூலம் சமூக மாற்றங்களுக்கு ஊக்கம் தந்துள்ளார். நூறு வருடங்களுக்கும் மேலாக அவை இன்னும் உந்துதல் தரும் பின்னணியில் அமைந்த அவர் வாழ்க்கைப் பின்னூட்டங்களில் சில அவரின் படைப்பின் பின்னணியாக அமைந்ததை ஆராய்வதே இக்கட்டுரை.

முன்னுரை

பாரதி, தன் அறிவுக் கூர்மையையும், தமிழ் ஆர்வத்தையும் உணர்ந்திருந்தார். கொழுந்து விட்டெரிந்த விடுதலை உணர்வு மக்களிடம் பரவிய ஒன்றாக இருந்தது. இந்த மூன்றையும் இணைத்துத் தன் பங்கை அளிக்க முனைந்தார். நரிக்குறவர் முதல் சாமானியர் வழக்கில் உள்ள பாடல்களை அறிந்து அந்த சந்தத்தில் தன்னுடைய பாடல்களை மக்களுக்குப் புரியும் எளிய தமிழில் தந்தார். நேர்மையான கருத்தாக அவை இருக்க, தன் வாழ்க்கையின் பின்னணியில் ஊன்றி அமைத்துத் தானும் அவ்வாறே வாழ்ந்து காட்டினார். இவற்றை சில சான்றுகள் மூலம் சற்றே ஆராய்ந்து பார்க்கலாம்.

கவித்துவம்

நமக்குக் கிடைத்திருக்கும் பாரதியாரின் பாடல்களில் காலவரிசையில் முதலாவதாக இருப்பது, அவர் 24.1.1897இல் தன்னுடைய 15-ஆவது வயதில் எழுதிய பாடல் (நூல்1 ப.2-9). மன்னர் எட்டப்ப நாயக்கரிடம், தனக்குக் கல்வி உதவித் தொகை கோரி விண்ணப்பத்தைக் கவிதையாகவே எழுதியிருந்தார். தமிழ் மொழியின் பெருமை, தமிழ் கற்றவர்களின் அவல நிலை, ஆங்கிலம் கற்றவர்களின் மேலாண்மை போன்றவற்றைச் சுட்டிக்காட்டி தன்னுடைய முதல் பாடலிலேயே, அழகுக் கவிதையில் வாதிட்டிருந்தார். இந்தப் பாடலிலேயே, தன்னலத்துடன், பொதுநலத்துக்கும் சேர்த்து வாதிட்டார், பாரதி.

சமூக உணர்வு

பாரதியின் பதினான்கு வயதில், ஏழு வயதான செல்லம்மாளுக்குத் திருமணம் செய்து வைத்த அவர் தந்தை, கூடவே மற்றிரண்டு குழந்தைத் திருமணங்களையும் செய்துவைத்தார். அதைச் சாடி உள்ளம் வெதும்பிப் பாடல்கள் எழுதினார். பாரதி. பின்னாளில், தன் மகளுக்கு வயதாகிக் கொண்டு வந்தும் பாரதியார் திருமணம் செய்யாமல் அலட்சியமாக இருப்பதைப் பலமுறை சாடி பாரதியின் மனைவி சொன்னதையும், மக்கள் இன்னும் திருந்தவில்லையே என்று பாரதி அங்கலாய்த்ததையும் அழகாக யதுகிரி அம்மாள் தன் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார் (நூல்2).

வாழ்க்கைத் துயர்

ஐந்து வயதில் தாயை இழந்த பாரதி, தன் பதினைந்து வயதில் தந்தையை இழந்தபோது, உள்ளம் கலங்கி எழுதிய வரிகள் இதோ: "கனவு" தொகுப்பில் பாடல் 46 (நூல்3, ப.249)

"தந்தை போயினன் பாழுமிடி சூழ்ந்தது
தரணி மீதினில் அஞ்சலென் பாரிலர்"

அதிலிருந்து மீண்டு பின்னாளில், "உச்சிமீது வானிடிந்து வீழுகின்ற போதிலும் அச்சமில்லை" என்று நமக்கு ஊக்கம் கொடுத்தவரும் பாரதியே! மக்களிடம் காதல் உணர்வு வேண்டும் என்று நம்பி அதற்குத் தானே முன்னுதாரணமாகவும் திகழ்ந்தார். திருமணமாகி

எட்டயபுரத்தில் தன் மனைவி செல்லம்மாளுடன் கைகோர்த்து வீதியிலே மகிழ்ச்சியாகச் செல்வாராம் பாரதியார். மனைவியிடம்,

"தேடக் கிடைக்காத சொர்ணமே - உயிர்ச்
சித்திரமே மட அன்னமே"

என்று பாடினாராம் (பாரதியின் பேத்தி பொதிகை நேர்முகம்). ஆண்கள் தம் மனைவிமார்களை மதித்து நடத்த வேண்டும் என்று

"மண்ணுக்குள் எவ்வுயிரும் தெய்வ மென்றால்
மனையாளும் தெய்வமன்றோ? மதிகெட் டீரே"

என்று பாரதி 66 தொகுப்பில் பாடி வைத்தார். பாரதி எளிதில் சினம் கொள்வார். ஆனால் கோபம் தணிந்தவுடன், வருந்தித் தன் மனையாள் முதற்கொண்டு, கோபப்பட்டவரிடம் மன்னிப்பு கேட்கும் குணமும் கொண்டவராம்.

காதல்

சக்ரவர்த்தினியில் 1906 ஜூலை இதழில் சொல்கிறார் (நூல்1 ப.236): "காதல் என்ற ஸ்திரமற்ற சந்திரனொன்றில்லா விட்டால் உலக வாழ்க்கையாகிற இரவு எத்தனை பயங்கரமானதாகவும், வீணாகவும் இருக்குமென்பதை அறியாதாரில்லை". அதே கட்டுரையில், கற்புடைமையைப் பற்றி: "பெண்களுக்குக் கற்புநிலை எத்தனை அவசியமோ, அத்தனை ஆண்களுக்கு அவசியமில்லையென்று நினைப்பதைப்போல மூடத்தனம் வேறு கிடையாது" என்கிறார். இது என்னவொரு நியாமான வாதம்! காதலின் மாண்பைத் தன் சுயசரிதையில் இவ்வாறு பாடுகிறார்:

"காதலிலே இன்பமெய்திக் களித்து நின்றால்
கனமான மன்னவர்போர் எண்ணுவாரோ?"

இப்போது போர்மயமாக இருக்கும் இவ்வுலகில், இந்த அறிவுறுத்தல் எவ்வளவு பொருத்தமான ஒன்று! வறுமையை விரட்ட அவ்வப்போது அவசரமாக பாரதியார் எழுதிய அற்புதமான பாடல்கள் அதிகம். சென்னையில் உள்ள சங்கத்தினர் நடத்திய போட்டியில் கலந்துகொண்டு அவர் எழுதிய பாடல்தான் "செந்தமிழ் நாடெனும் போதினிலே". ஆனால் அதற்கு மூன்றாம் பரிசுதான் கொடுத்ததாக யதுகிரி அம்மாள் தன் நூலில் குறிப்பிடுகிறார். யதுகிரியின் பெற்றோர் தங்களுடைய இரண்டு வயதுக் குழந்தையை இழந்த வேளையில், பாரதி என்ன ஆறுதல் சொல்லியும், குழந்தையின் பெற்றோரின் சோகம் குறையாத போது, சங்கடத்தில் எழுத ஆரம்பித்த பாடல் தான் "நல்லதோர் வீணை செய்தே" பாடல். பிறகு அதையே தன்னைக் குறித்த பாடலாக மாற்றி வெளியிட்டாராம். வீட்டுக்கு நெல்குத்த வந்தவள் போட்ட "ஹும் ஹும்" என்ற ஓசை, பாரதிக்கு "வேண்டும், வேண்டும்" என்று பராசக்தியை வரம் வேண்டும் ஓசையாக ஒலித்ததாம். அந்த சத்தத்திலே எழுதிய பாடல் தான் "மனதில் உறுதி வேண்டும்" பாடல். ஆனால் அதே சமயத்தில், எந்த இடைஞ்சலையும் பாராமல், 40 நாள் மௌன விரதம் இருந்து ஒரு கவிதைத் தொகுப்பை முடித்தாராம். அந்த பாடல்கள்தான், "பாரதி 66" என்கிற தொகுப்பில் வெளிவந்துள்ளது.

முடிவுரை

நல்லதோர் வீணை செய்து நலங்கெட வறுமையில் இறைவன் எரிந்தாலும், சங்கு சுட்டாலும் வெண்மை தரும், கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே என்பதுபோல், தன் சுடர்மிகும் அறிவின் துணை கொண்டு, தம் திறமைகள் வழியே அடிமை நாட்டிலும் கூட காலத்தால் அழியாத படைப்பைத் தந்து, மக்களை மேம்படுத்த உதவ முடியும் என்று காட்டிய மகாகவி சுப்பிரமணிய பாரதியார் நம்மில் பலருக்கு ஒரு சிறந்த முன்னோடி. வாழ்க அவர் புகழ்! வளர்க அவர் கண்ட கனவு!

துணை நூற்பட்டியல்

1. "கால வரிசைப் படுத்தப்பட்ட பாரதி படைப்புகள்" சீனி விசுவநாதன் (பதிப்பு மற்றும் வெளியீடு)
2 "பாரதி நினைவுகள்" யதுகிரி அம்மாள், அமுத நிலையம் லிமிடெட்
3. "பாரதியார் கவிதைகள்" வானதி பதிப்பகம்
4. "மகாகவி பாரதி வரலாறு" சீனி விசுவநாதன் (பதிப்பு மற்றும் வெளியீ

67. இதழியலில் தடம் பதித்த பாரதி



ராஜி வாஞ்சி
ஹூஸ்டன், அமெரிக்கா

முன்னுரை

'பாட்டுக்கொருப் புலவன் பாரதியடா அவன் பாட்டைக் கேட்டு கிறுகிறுத்துப் போனேனடா' என்ற தேசிய கவிமணி விநாயகம் பிள்ளையின் வரிகள் பாரதிக்கொரு முகவரியாய் நிலைத்து நின்றாலும், பாரதி என்ற பன்முகத்திறன் கொண்ட மாமனிதன், அந்த மகாகவி நாட்டுப்பற்று நாயகன், தேசியக்கவி, புத்தாக்கச் சிந்தனை பலவற்றை கவியுலகக் கதவுகளுக்கு கொண்டு வந்தவன் என்பது உலகறிந்த உண்மை. பாரதியின் இதழியல் என்பது உலகம் அதிகம் அறியாதவொன்று. தான் காலடி எடுத்து வைத்த ஒவ்வொரு துறையிலும் எடுத்துக்காட்டாக, கவிதை என்றால் அதன் உச்சமான காவியம் வரை சென்றடைதல், நாட்டுப்பற்று என்றால் ஆடுவோமே நாம் கொண்டாடுவோமே என்று அதை நாம் அடைந்து விட்டோம் என்று எண்ணும்படி நேர்மறையாக உணரச்செய்தல் என்பதுதான் அவனின் அளவீடுகள். அவ்வாறு, அம்மேதை தமிழ் இதழியல் உலகிலும் பல புதுமைகளுக்கு முன்னோடியாகவும், புத்தாக்கச் சிந்தனைகளை இந்த தமிழ் கூறும் நல்லுலகிற்கு தந்து சென்றுள்ளான் என்பதை அதன் அகல, நீள பரிமாணங்களுடன் பார்க்க எடுத்துக் கொள்ளும் முயற்சியாகத்தான் இந்த கட்டுரையை முன்மொழிய விரும்புகிறேன்.

இதழியலின் தொடக்கக் காலம்

உலகின் பல பண்டைய நாகரிகங்களில் இதழியல் வெவ்வேறு வடிவங்களில் இருந்துள்ளன. பழந்தமிழகத்தில் வள்ளுவன், ஓலைநாயகம் போன்றோர் செய்திப் பரிமாற்றத்தில் ஈடுபட்டனர். பண்டைய கிரேக்கத்தில் கிறிஸ்துவுக்கு முன்னர் அரசாங்க செய்தி தொகுப்புகள் தோன்றின. இந்த முறை சீனாவிலும் இருந்து 1911 வரை தொடர்ந்தது. 1605ல் ஜெர்மனில் முதல் முறையாக பொதுமக்களுக்கு செய்தித்தாள் வெளியானது; பின்னர் பிரெஞ்சு, இத்தாலி, ஆங்கில மொழிகளிலும் வந்தது. இந்திய இதழியலில் வங்காளமும் மகாராஷ்டிராவும் முதன்மையாகத் திகழ்ந்தன.

தமிழ் இதழியல் தோற்றம்

1831ல் வெளியான "தமிழ் மேகசின்" முதலாவது தமிழ் இதழாகக் கருதப்படுகிறது. ஆனால் தமிழ் இதழியலைப் பார்க்கும்போது, இந்தியாவைத் தவிர இலங்கை போன்ற உலகத் தமிழ்ப் பகுதிகளையும் உள்ளடக்க வேண்டிய தேவை உள்ளது. தொடக்கத்தில் தமிழ் இதழ்கள் சமயப் பரப்புரைக்காகவே பயன்படுத்தப்பட்டன. முதலில் கிறிஸ்தவ மதமும், பின்னர் பிற மதங்களும் தங்களது கொள்கைகளைப் பிரசாரம் செய்தன. அக்காலகட்டத்தில் தமிழ் இதழ்களில் அரசியல், சமூகப் பிரச்சனைகள் பேசப்படவில்லை. ஆனால், 1800களில் வங்காளப் பத்திரிகைகள் ஆங்கில ஆட்சி மீது நையாண்டி செய்ததால், "சுதேச மொழி பத்திரிகை அடக்குமுறைச் சட்டம்" கொண்டு வரப்பட்டது. இது சென்னை மாகாணத்தில் அமல்படுத்தப்படவில்லை.

இத்தகைய தமிழ் இதழியல் சூழலில், 1882ஆம் ஆண்டு அரசியல் மற்றும் சமூக விழிப்புணர்வை உருவாக்க 'சுதேசமித்திரன்' தொடங்கப்பட்டது. இது மற்ற தமிழ் இதழ்களுக்கு வழிகாட்டியாக அமைந்தது. 1904ல் பாரதியார் துணை ஆசிரியராக சேர்ந்து தனது இதழியல் பயணத்தைத் தொடங்கினார். பாரதியார், தன் முழுநீள இதழியல் பயணத்திற்கு முன்னரே, அவரின், "தனிமை இரக்கம்" என்ற முதல் கவிதை வெளியானது, எட்டையபுர அரசரை பற்றிய விமர்சனக் கட்டுரை, சுதேசமித்திரன் ஆசிரியர் ஜி. சுப்பிரமணிய ஐயர் ஆங்கிலத்தில் நடத்திய,"மெட்ராஸ் ஸ்டாண்டர்ட்" ஆங்கில இதழுக்காக எழுதியவை போன்ற தகவல்களை பாரதியின் சகோதரர் சி.விசுவநாதன் அவர்களின் வழியாக அறிய முடிகிறது.

சுதேசமித்திரனில் பாரதி

சுதேசமித்திரனில் மெய்ப்புத் திருத்தம், செய்தி மொழிபெயர்ப்பென போன்ற பணிகளே தரப்பட்டன. காசியில் பெற்ற ஆங்கிலப்புலமையால், அரசாங்க அறிக்கைகளும், ராய்ட்டர் செய்திகளும் பாரதியின் விரல் நுனியில் தயார் நிலையில் துடித்துக் கொண்டிருந்தன. வைசிராஸ் கர்சன் பிரபு வங்காளத்தை இரண்டாகக் துண்டாடிய போது, தோன்றிய எதிர்ப்பலை தென்னாட்டிலும் பரவியது. கனல் கங்குகளைக் கொட்டத் துடித்த பாரதியின் பேனாவை மடக்கி முறித்தது, சுதேசமித்திரன். அரசியல் நிலவரங்களை வெளிப்படையாக எழுத முடியாத சூழலால், பாரதியெனும் புயல், சுதேசமித்திரனைக் கடந்து 'சக்கரவர்த்தினி ' என்ற மகளிர் பத்திரிக்கையின் ஆசிரியப் பொறுப்பில் நிலை கொண்டது.

சக்கரவர்த்தினி சகாப்தம்

"தமிழ்நாட்டு மாதர்களின் மேம்பாட்டை நோக்கமாகக் கொண்டு வெளியிடப்படும் மாதாந்திர இதழ் " என்ற பொருள்படும் குறிப்புடன் வெளியானது 'சக்கரவர்த்தினி'. "உடன்கட்டை, வரதட்சணை கொடுமை, பால்ய விவாகம், கைம்பெண் கொடுமை முதலியவற்றைக் கண்டித்தும், பெண் கல்வி, பெண்ணுரிமை குறித்தும் பாரதி ஆழ்ந்த கட்டுரைகளால் 'சக்கரவர்த்தினி' இதழ் செம்மையானது", என்று முனைவர் பா. இறையரசன் அவர்களின் ஆய்வு நூலொன்று எடுத்தியம்புகிறது. "அவர் "பாரத குமாரிகள்" என்ற பகுதியில் பெண்களுக்காக எழுதிய கட்டுரைகள் கருத்தாழம் மிக்கது எனவும், பாரதத் தாயின் துக்கங்களையும், அதற்கான காரணங்களையும் எழுதியிருப்பது நேர்த்தியானது " என்று அன்றைய பர்மாவிலிருந்து வெளியான 'சுதேச பரிபாலினி "என்ற தமிழ் நாளேடு மதிப்புரை வழங்கியுள்ளது. இருப்பினும், ஓராண்டு காலத்தில் பாரதி 'இந்தியா' இதழை நோக்கி நகர வேண்டியிருந்தது.

இந்தியாவில் பாரதி

'இந்தியா' இதழ் ஒரு தேசிய இதழாகப் பரிணமித்தது. இந்திய விடுதலைப் போர் நாளுக்கு நாள் தீவிரமடைந்து வந்த காலகட்டமது. பாரதியின் உணர்ச்சிமிக்க கட்டுரைகளோ, வங்கக் கலவரங்கள், அரசியல் அலைக்கழிப்புகள், விடுதலைப் போராட்ட இயக்கங்கள் குறித்து வெளி வந்த வண்ணமிருந்தன. அத்துடன், தேசியக் கல்வி, நாட்டின் ஒருமைப்பாடு, கலை, கலாச்சாரம், இலக்கியம், கைத்தொழில், வேளாண்மை பற்றிய கட்டுரைகள் எனப் பல்வேறு தகவல்களின் களஞ்சியமாகக் காணப்பட்டது. குறிப்பாக, ருஷ்யப் புரட்சி செய்திகளும் அவ்வப்போது இடம் பெறத் தவறியதில்லை.

அரசியல் கேலிச் சித்திரம்

இந்தியா இதழின் மகுடமாக அரசியல் கேலிச் சித்திரங்கள் அமைந்தன. தென்னாட்டுப் பத்திரிக்கைகளில் முதன்முதலில் அரசியல் கேலிச் சித்திரங்களை அறிமுகப்படுத்திய பெருமை இந்தியா இதழையே சேரும். அவை சமூகத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தின. ஆங்கில ஏகாதிபத்தியத்தை அலறச் செய்தன. அதன் அடிவருடிகளை அதிர்ச்சி அலைகளால் ஆழ்த்தின. நாட்டுப்பற்றைக் காட்டுத்தீயாய் வளர்த்தன. இந்த கேலிச் சித்திரங்கள் தான் தன்னை பாரதி பரிவாரத்திற்குள் இழுத்து வந்தது என்கிறார் பாவேந்தர் பாரதிதாசன். " தமிழ் இதழ்களில் "கேலிச்சித்திரங்கள்" என்னும் தனி ஆய்வு வந்தால், அதில் பாரதியாரின் பங்களிப்பு ஒரு வரலாற்றுச் சாதனையாக விளங்கும். அதிலும், ' அரசியல் கேலிச் சித்திரம்' பாரதியிடமிருந்தே தொடங்கியது என்னும் வரலாற்று உண்மையும் வெளிப்படும் " என்கிறார் பாரதி ஆய்வாளர்களில் ஒருவரான பெ.சு மணி அவர்கள்.

பாரதியின் 'பால பாரதா'

இந்தியாவின் இணை இதழாக ஆங்கிலத்தில் வெளி வந்த'பால பாரதா', "எழுமின், விழிமின், குறிக்கோளை அடையும் வரை நில்லாது உழைமின்" என்ற விவேகானந்தரின் பொன்மொழிகளை தலைப்பு வாக்கியமாகக் கொண்டு வெளி வந்து கொண்டிருந்தது. சுவாமி விவேகானத்தினரின் சீரிய உரைகளைத் தொடர்ந்து அச்சிலேற்றி வந்தது. அவரின் சிஷ்யையாக ஐரிஷ் நாட்டிலிருந்து வந்த சிஸ்டர் நிவேதிதாவின் பங்களிப்பும், பக்கபலமும் 'பால பாரதா' வின் வெளியீடுகளில் சிறப்பான பங்காற்றின. ஆய்வாளர் திரு. ரா.அ. பத்மநாபன் தன்னுடைய ஆங்கிலக் குறிப்பொன்றில், பாரதியின் தரமான படைப்புகளாலும், பரந்து பட்ட விஷயங்களை வெளியிட்ட விதத்திலும் பலரும்

பாராட்டும்படி அமைந்த.' பால பாரதா ' பாரதியின் ஆங்கில இதழியல் திறனை வெளிப்படுத்தக்கூடிய வலுவான சான்றாக அமையும் என்கிறார்.

பாரதியின் மனிதநேயமும் அறமும்

வங்கப்பிரிவினைக்குப் பிறகு கர்சன் பிரபு என்ற பெயரே மக்களிடையே அதீத வெறுப்பை ஏற்படுத்தியது. அவரது மனைவியின் மரணத்தை "தெய்வத்தின் தண்டனை" என விமர்சித்த வங்க இதழைப் பாரதி வன்மையாகக் கண்டித்து பதில் கட்டுரை எழுதினார். தனக்கு பேருதவி செய்த உற்ற நண்பரொருவர், ஆங்கில அரசளித்த நீதிபதி பதவியை ஏற்றதை எதிர்த்து, பாரதி 'விஜயா' இதழில் பொறி பறக்கக் கடுமையாக விமர்சித்தார். மனிதநேயம் அறம் என்ற மாண்புகளுக்கு பாரதிக்கு நிகர் பாரதிதான் என்பதற்கு இந்நிகழ்வுகளே சிறந்த சான்றாகும்.

பத்திரிக்கை சுதந்திரம்

பத்திரிக்கை சுதந்திரம் குறித்து பாரதியின் நிலைப்பாடு மிக வலிமையாக இருந்தது. லாகூரிலிருந்து வெளியான பத்திரிக்கை அடக்குமுறைக்கு ஆளானதை 'இந்தியா' இதழ் வன்மையாகக் கண்டித்தது. பத்திரிக்கைகள் மீது அடக்குமுறை மக்களின் அதிருப்தியை உருவாக்குமென பாரதி உறுதியாகக் கருதினார். 1908 ஆம் ஆண்டு காலனி அரசு அரசியல், நாட்டுப்பற்றுச் செய்திகளை வெளியிடும் இதழ்கள் மீது அடக்குமுறையை தொடங்கியிருந்த நேரம். இந்தியா இதழ் மட்டும் தப்புமா என்ன? அதுவும், "என்று தணியும் இந்த சுதந்திர தாகம் ? என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம் ?" எனச் சுதந்திர தாகத்தை வெளியிட்ட 'இந்தியா' இதழ் அடக்குமுறைக்குள் அகப்பட்டது.

புதுச்சேரியில் பிறந்த இந்தியா

இந்தியா இதழ் சென்னை மாகாணத்தில் தடை செய்யப்பட்டதையடுத்து, பாரதி புதுச்சேரிக்கு பல்வேறு இடர்களுக்கிடையே இடம் பெயர்ந்தார். அங்கிருந்து இந்தியா மீண்டும் வெளிவந்தது. அக்காலகட்டத்தில், அண்ணல் காந்தியடிகள் தென்னாப்பிரிக்கா மண்ணில் இந்தியர்களின் விடுதலைக்காக பாடுபட்டு வந்தார். காந்தியடிகளின் தென்னாப்பிரிக்கா போராட்டக் கட்டுரைகளால் இந்தியாவின் பக்கங்கள் கொதித்துக் கனன்றன. சென்னை பதிப்பாக வெளிவந்த இந்தியாவை விட, புதுச்சேரி பதிப்பு வேகமும் வீரியமுமாய் வெளி வந்தன. அரசியல் கேலிச் சித்திரங்கள் உச்சத்தை அடைந்தன. அரசாங்கம் புதுச்சேரியிலும் தடை செய்ய முயன்று இறுதியில் வெற்றியும் பெற்றது.

தடை மேல் தடை

இந்தியா மற்றும் சூரியோதயம் இதழ்கள் பொருளாதார நெருக்கடிக்கு ஆளாகி, நொடித்துப் போயின. இந்தியாவும், விஜயாவும் தீவிரவாத இதழ்களென ஆங்கிலேய அரசால் தடை செய்யப்பட்டன. இதன் விளைவாக, பாரதி சந்தித்த வறுமையைப் பற்றி, அவரை இதழியல் குருவாகக் கொண்ட வ.ரா. மிகவும் வருந்திக் குறிப்பிட்டுள்ளார். 1910 ஆம் ஆண்டுவாக்கில், புதுச்சேரியில் வெளியாகி சென்னைக்கு வந்த "கர்மயோகி", மற்றும் "தர்மம்" இதழ்களும் தீவிரவாத இதழ்களெனத் தடை செய்யப்பட்டன. அரசியல், இலக்கியம், சமூகம், பெண்கள் முன்னேற்றம் உள்ளிட்ட பல துறைகளில் எழுதிய பாரதி, இதழின் வடிவமைப்பு, முன் அட்டைப் படம், மேற்கோள்கள் உள்ளிட்ட அனைத்திலும் நுட்பமாகச் செயல்பட்டதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

முடிவுரை

'பொது நோக்குடைய இதழியல் துறை ஓர் ஆற்றல் மிக்க கருவியாகும். அதன் மூலம்தான் இன்றைய சமுதாயம் அதனுடைய வழிகளை வகுத்துக் கொண்டும் மாற்றிக் கொண்டும் தெளிவாக வரையறுக்கப் பெற்ற வளரும் மனிதநலன் என்னும் இலட்சியத்தை நோக்கி நடைபயில்கின்றது' என்கிறார் அமெரிக்க இதழியல் பேராசிரியரான ஹெரால்டு பெஞ்சமின். இத்தகைய இதழியல் துறையில் தனி முத்திரை பதித்த பாரதியின் மனதிற்குள், "அமிர்தம்" என்ற இதழை சொந்தமாகத் தொடங்க வேண்டுமென்ற அவா மனதிற்குள் இருந்தது. பொருளாதாரச் சூழலும் இடம் தரவில்லை, காலமும் காத்திருக்க விரும்பவில்லை போலும். சென்னை வந்து சுதேசமித்திரனில் இணைந்து ஓராண்டுக்குள் நம்மை விட்டு காற்றில் கலந்து விட்டான் கவிராஜன். என்றும் பாரதியே தமிழ் இதழியலுக்கு தந்தை என்ற போற்றுதலுக்குரியவர் என்ற கருத்தினை அனைவரும் ஏற்றுக் கொள்வர்.

68. பாரதி எனும் சாரதி



வித்யாலஷ்மி டி.

கலி∴போர்னியா, அமெரிக்கா

நீடுதுயில் நீக்கப் பாடிவந்த நிலா
காடுகமழும் கற்பூரச் சொற்கோ

என்று பாவேந்தர் பாரதிதாசனால் புகழப்பட்ட மஹாகவி பாரதி ஓராயிரம் வருடங்கள் ஓய்ந்து கிடந்தபின் வாராது வந்த மாமணி என்றே சொல்லலாம். தமிழ் என்ற கவின்மிகு தேரை செலுத்தும் சாரதியாக பற்பலப் பரிமாணங்களில் பாரதி எப்படி முன்னோடியாக விளங்கினார் என்பதை தமிழறிந்த நாம் அனைவருமே அறிந்து கொள்ள வேண்டும்.

வாழ்த்து

சங்க இலக்கியங்களிலும், தமிழ்க் காப்பியங்களிலும் முதலில் இயற்கையையோ அல்லது ஆண் தெய்வங்களையோ மட்டுமே வாழ்த்திப் பாடும் மரபு தான் இருந்தது.

திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!

என்றும், ஞாயிறையும் மாமழையையும் பூம்புகாரையும் வாழ்த்திப் பாடித் தொடங்கினார் சிலப்பதிகாரத்தைப் படைத்த இளங்கோவடிகள்.

உலகம் யாவையும் தாம் உள ஆக்கலும்

என்று தொடங்கினார் கவிச் சக்கரவர்த்தி கம்பர். ஏன், உலகப் பொது மறையான திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரும்

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு

என்று தானே தொடங்கினார். அந்தக் காப்பியக் கால மரபை உடைத்து, காலச் சித்தராக பாரதி தன் குறுங்காப்பியமான பாஞ்சாலி சபதத்தில்

வெள்ளைக் கமலத்திலே அவள் வீற்றிருப்பாள்
புகழ் ஏற்றிருப்பாள் !

என சரஸ்வதி வணக்கத்தைப் பாடி, கலைமகளைச் சிறப்பித்து ஒரு புது மரபுக்கு வழிகாட்டியிருக்கிறார். `கவிழாத கவிதை நிறுவனம் பாரதி!` என ஈரோடு தமிழன்பன் வரிகள் நூறு விழுக்காடு உண்மையான கருத்து என்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும்.

குறுங்கவிதை

குட்டிக் கவிதைகளை `ஹைக்கூ ` என்கிறோமே, அது ஜப்பானிய மொழிச் சொல். தமிழில் அழகாக துளிப்பா எனலாம். அந்தத் துளிப்பா கவிதைகளின் முன் மாதிரி, வழிகாட்டி பாரதி தான். இந்தத் தகவல் பலருக்கும் ஆச்சரியமாய் இருக்கும். ஆனால் தமிழர்கள் அனைவரும் அறிந்து மகிழ வேண்டிய தகவல். பாரதியார் மழையைப் பற்றி எழுதிய அழகான துளிப்பா அதுவும் சில சொற்களில் -

`கோடித் தந்திகளை உடைய இசைக்கருவி!`

இந்த நான்கு சொற்களைப் படிக்கும் போதே நமக்கு மழையில் நனைந்த மகிழ்ச்சி கிட்டுகின்றது. துளிப்பா என்ற புதுமையின் புரவலன் பாரதி. அது மட்டுமல்ல, மாளிகையில் மட்டும் உழன்ற கவிதையை மண் குடிசையில் கூட உழலச் செய்த மஹாகவி பாரதி நிச்சயம் தமிழின் சாரதி தான். மேட்டுக் குடிகளுக்கு மட்டுமான கவிதைகளை சாதாரணக் குடிகளும் கேட்டுப் , படித்து, இன்புற வழி செய்தவன் அல்லவா?

கதைக்குள் கதை

பல திரைப்படங்களில் ஒரு கதைக்குள் மற்றொரு கதை வரும். முக்கிய கதையின் ஒரு கதாபாத்திரம் உப கதையின் உள்ளே வரும். இந்த உத்தியை வைத்து பல திரைப்படங்கள் வெளி வந்து பார்ப்பவர்களை வியக்க வைத்துள்ளன. திரையில் மட்டுமல்ல, இலக்கியத்தில் சிறுகதைகளிலும் இந்த முறை பல எழுத்தாளர்களால் கையாளப்பட்டு இருக்கிறது. ஆனால் இப்படிக் கதைக்குள் கதையை அறிமுகப்படுத்திய கதாநாயகன் பாரதி தான். இவருடைய நவதந்திரக்கதை இந்த உத்தியில் எழுதப்பட்டது தான். . இதில் ஒன்பது கதைகளிலும் கதைக்குள் கதையாக இணைந்து படிப்பவர்களுக்கு ஆர்வத்தையும்,உற்சாகத்தையும் ஊட்டும். ஒரு கதையின் பாத்திரம் மற்றதில் வந்து திடீர் திருப்பத்தை ஏற்படுத்தும். பிற்கால எழுத்தாளர்களுக்கு வழிகாட்டியாக கதைக்குள் கதை என்ற புதுமையை தமிழில் முதலில் புகுத்திய சிந்தனைச் சிற்பி மஹாகவி பாரதி தான். இந்தக் கண்ணோட்டத்திலும் பாரதி தமிழ்த் தேரின் சாரதி ஆகிறார்.

கேலிச் சித்திரங்கள்

இந்தியா - பத்திரிகையின் ஆசிரியராக நியமிக்கப்பட்டபோது, பாரதி கட்டுரை, தலையங்கம் மற்றும் விமர்சனம் எழுதுவதோடு நிறுத்தி விடவில்லை. காட்டாற்று வெள்ளத்தை யாரேனும் நிறுத்தி விட முடியுமா? முதன்முதலாக கேலிச்சித்திரங்களையும் அவரே இந்தியா பத்திரிகையில் வரைந்தார். இன்றைய இளைய தலைமுறைக்கு கார்ட்டூன் என்று குறிப்பிட்டால் கேலிச் சித்திரங்கள் என்னவென்று புரிந்துவிடும். இதோ அவர் வரைந்த சில கேலிச் சித்திரங்கள் -

1. பிரிட்டிஷ் கப்பல்கள் இந்தியர்களிடம் தானியங்களைப் பறித்துக் கொண்டு - இங்கிலாந்து நாட்டுக்கு ஏற்றிச் செல்வது போல ஒரு சித்திரம்
2. இந்திய மக்களுக்கு அடிமைத்தனத்திலிருந்து விடுதலை வேண்டும் - ஊனமற்ற ஞான பூமி வேண்டும் என கிருஷ்ணரிடம் வேண்டுவது போல ஒரு சித்திரம்
3. பாரத மாதா கட்டுண்டு இருப்பது போல ஒன்று
4. `வந்தேமாதரம்` என்ற சொற்களோடு அன்றைய இந்தியக் கொடியை ஏந்திய இந்தியக் கப்பலில் ஏறி கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. கம்பீரமாகப் பயணம் செய்வது போல் ஒன்று

இந்தியா பத்திரிகையில் வந்த இந்தக் கேலிச் சித்திரங்கள் மக்களின் மனதில் பதிந்தன. எப்போதுமே காட்சி வடிவில் பார்ப்பவை நினைவில் மறவாமல் நின்று நிலை பெறும். இன்று உலக அளவில் கேலிச் சித்திரத்தில் முதன்மை பெற்று புகழுடன் விளங்கும் வால்ட் டிஸ்னி அமைப்பின் நிறுவனர் வால்ட் டிஸ்னி கூட பாரதியின் அதே கால கட்டத்தில் தான் கேலிச் சித்திரங்களை வரையத் தொடங்கினார். சகல கலா வல்லவரான பாரதி அன்று கேலிச்சித்திரங்களை வரைந்தது நம் பைந்தமிழுக்குப் புதிது. இந்த பரிமாணத்திலும் பாரதி நம் செந்தமிழின் சாரதி என்பதை நிரூபிக்கிறான்.

புதிய சொல்லாக்கம்

எந்த ஒரு மொழிக்கும் வளர்ச்சியைத் தருவது புதிய சொற்களின் ஆக்கமும் சேர்க்கையும் தான். பாட்டுக்கு ஒரு புலவன் பாரதி. செறிவான ஆழமான புதிய தமிழ்ச் சொற்களைப் பயன்படுத்துவதில் முன்னோடி. எடுத்துக்காட்டாக நிற்பதுவே நடப்பதுவே ஏன்ற பாடலைக் குறிப்பிட்டுச் சொல்லலாம்.

‘வானகமே, இளவெயிலே ,மரச்செறிவே நீங்களெல்லாம்..’

இந்தப் பாடலில் காட்சிப் பிழை என்ற சொல்லாடலை முதலில் பயன்படுத்திய பெருமை பாரதியையே சேரும். காட்சிப் பிழை என்ற சொல் அத்வைத தத்துவத்தையே உள்ளடக்கிய சொல்லாக மிளிருகிறது.

`சொல்புதிது பொருள்புதிது சுவைபுதிது'

என்ற அவருடைய வரிகளே அவரை தமிழின் சாரதி என நிலைநாட்டும் சத்தியமான வரிகள்.

புதிய நடை

பழைய இலக்கண சட்டங்களையெல்லாம் தகர்த்து எரிந்து விட்டு அவர் எழுதிய புதிய நடை - வசனக் கவிதை ! நாம் அனைவருமே படித்து மகிழ வேண்டிய ஒரு இலக்கியம். வசனக் கவிதை இப்படித் தொடங்குகிறது-

இவ்வுலகம் இனியது, இதிலுள்ள வான் இனிமை

இதில் பாரதி சொல்லியிருக்கும் வரிசை முறை மிகச் சிறப்பு. உலகம்,வான்,காற்று மற்ற பஞ்ச பூதங்கள், சூரியன்,சந்திரன், விண்மீன்கள்,மழை, மின்னல், இடி,கடல், மலை, காடு,ஆறுகள் என அறிவுப் பூர்வமாகவும், அறிவியல் பூர்வமாகவும் அனைவரும் ஏற்றுக் கொள்ளும் வண்ணம் பாடியதைப் பாராட்டச் சொற்கள் போதாது. இந்தப் பாடலும் இனிது, வரிசையும் இனிது. வசனக் கவிதை முழுவதும் இயற்கையின் வண்ணங்களை எண்ணமாக்கி வடித்துள்ளார். சுற்றுச் சூழல் மீது பற்று கொண்ட யாவரும், இல்லை இயற்கையை நேசிக்கும் அனைவருமே வசனக் கவிதையை படித்து இயற்கையைப் போற்ற வேண்டும். புதுமைப் புலவன் பாரதியின் வசனக் கவிதை பிற்கால எழுத்தாளர்களுக்குப் பாதை அமைத்ததால், பாரதி தமிழின் சாரதி தான்.

புதுமைப் பெண்

வங்காளம் சென்ற போது,சகோதரி நிவேதிதாவை சந்தித்தார் பாரதி. தங்களின் மனைவியை அழைத்து வராதது ஏன் என்று நிவேதிதா அவர்கள் வினவ, அப்படி ஒரு வழக்கம் இல்லை என பாரதி பதில் சொன்னார். பின்னர் நிவேதிதா கேட்ட ஒரு வினா பாரதியின் கண்ணோட்டத்தையே மாற்றியது. பெண் விடுதலையை ஏற்காமல் எப்படி மண் விடுதலையை கேட்க முடியும்-என்பதே மாற்றத்தை ஏற்படுத்திய வினா. அதன் பின் பெண் விடுதலை குறித்து ஆழமாகச் சிந்தித்து புதுமைப் பெண்ணைப் படைத்து, பெண் முன்னேற்றத் தீவிரவாதி ஆனார். செம்மை மாதர், உதய கன்னி, புதுமைப்பெண், இளைய நங்கை, வீரப்பெண், பெண்மை தெய்வம் - இவை அனைத்துமே பாரதி பெண்களுக்கு சூட்டிய அடைமொழிகள்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்

என புதுமைப் பெண்களுக்குப் புதிய இலக்கணம் வகுத்தார். அது மட்டுமல்ல, இரு பாலருக்கும் கற்பு பொதுவானது என யாருமே சொல்லத் துணியாத கருத்தைத் துணிச்சலோடு பாடினார்.

கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு

அவை தான் சமுதாய மாற்றத்திற்கு வித்திட்ட பாரதி என்ற சாரதியின் வைர வரிகள்!

நம் வீடுகளில் தாத்தா -பாட்டியின் கருப்பு வெள்ளை புகைப்படங்கள் இருக்கும். எல்லாப் பழைய படங்களிலும் தாத்தா தான் நாற்காலியில் அமர்ந்திருப்பார். பாட்டி நின்று கொண்டு தான் இருப்பார். ஆனால் பாரதி வீட்டுப் புகைப்படத்தில் அவர் நின்று கொண்டிருக்க,அவருடைய மனைவி செல்லம்மா உட்கார்ந்திருக்கிறார். இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன் இப்படிப் பட்ட புகைப்படம் நிச்சயம் புதுமையின் வித்து மற்றும் புதுமைக்கான முன்னோடி. அதிலும் பாரதி சாரதி தான்.

எழுச்சிமிகு சிந்தனைகளின் ஏகலைவனாய், பழமைக்கும் புதுமைக்கும் பாலம் அமைத்தவன் எட்டைய புரத்துக் கொட்டும் முரசு பாரதி. முதன்முதலில் நாட்டுடைமை ஆக்கப்பட்ட இலக்கியம் நம் பெருமைக்குரிய பாரதியினது தான். இறந்த பின்னும் ,அதிலும் முன்னோடியாகி,சாகா வரம் பெற்று மிளிர்கிறான் பாரதி. `பாரதி பாரினில் ஆச்சரியம்!` - என்றார் சுத்தானந்த பாரதி. தமிழ்த் தேரின் சாரதி பாரதி நிச்சயம் ஆச்சரியம் தான்!

பாரதி போற்றுதும்! பாரதி போற்றுது

69. பாரதியார் கவிதைகளில் மனித சமத்துவம்



செந்தில்குமார் பழனிசாமி

மிச்சிகன், அமெரிக்கா

ஆய்வுச் சுருக்கம்

பாரதியார், தமிழ் இலக்கியத்தில் மனித சமத்துவத்தை வலியுறுத்திய மகாகவியாக விளங்குகிறார். அவர் ஒரு கவிஞர் மட்டுமல்ல, ஒரு சுதந்திரப் போராளி, சமூகச் சீர்திருத்தவாதி, அதேசமயம் ஒரு மனிதநேயவாதி. அறம், அன்பு, உரிமை, கல்வி, வேலை, சமூகம் போன்ற அனைத்திலும் 'ஒப்புமை' என்ற சிந்தனையை வளர்த்தவர். அவர் வாழ்ந்த காலத்தில் சாதி, மதம், பாலினம் ஆகியவை மனிதர்களை வேறுபடுத்தும் கருவிகளாக இருந்தன. ஆனால் பாரதியார் தனது கவிதைகள் மூலமாக இந்த எல்லைகளை உடைத்து, மனிதன் மனிதனாகவே இருக்கவேண்டும் என்பதை வலியுறுத்தினார். இந்த ஆய்வுக் கட்டுரை, பாரதியாரின் தேர்ந்தெடுக்கப்பட்ட கவிதைகளை ஆராய்ந்து, அவற்றில் மனித சமத்துவத்தின் பல்வேறு பரிமாணங்களை வெளிப்படுத்துகிறது.

சாதி ஒழிப்பு

பாரதியார் மனித சமத்துவக் கொள்கையில் முதன்மையாக எடுத்துரைத்தது சாதி ஒழிப்பு. அவருக்குக் கீழ்த்தர ஜாதிகள், உயர்தர ஜாதிகள் என்ற பாகுபாடுகள் இல்லை. அதற்கான சான்றுகளை அவரது கவிதைகளில் காணலாம்

"சாதி இரண்டொழிய வேறில்லை யென்றே.." (பாரத தேசம்)

மனிதர்களின் ஒற்றுமையை வலியுறுத்துகிறார். ஜாதி, மதம், அல்லது வேறு எந்தப் பாகுபாடும் மனிதர்களைப் பிரிக்கக் கூடாது என்று கூறுகிறார். அனைவரும் ஒரே தாயின் பிள்ளைகள், ஒருவருக்கொருவர் சகோதரர்கள் என்று உணர வேண்டும் என்கிறார்

"ஆயிரம் உண்டிங்கு ஜாதி - எனில்.." (வந்தே மாதரம்)

பெண்கள் மற்றும் ஆண்கள் சமத்துவம்

பாலின சமத்துவம் என்பது பாரதியாரின் கவிதைகளில் முக்கியமான பகுதியாக உள்ளது. அவர் பெண்களை உரிமை உடையவர்களாகவே காண வேண்டும் என்று வலியுறுத்தினார். ஆணும் பெண்ணும் சமமாக நடத்தப்படும்போது, அவர்களின் திறமைகள் முழுமையாகப் பயன்படுத்தப்படும், இதனால் சமூகத்தில் அறிவு வளர்ச்சியடைந்து, உலகம் முழுவதும் செழிப்பும் முன்னேற்றமும் ஏற்படும் என்கிறார்.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்.." (புதுமைப் பெண்)

பெண்களின் தர்மத்தை ஆண்குலத்தார் வீரத்தோடு போற்றினால், வேறு எந்த தாழ்வும் ஏற்படாது என்கிறார். பெண்களின் சிறப்பையும், அவர்களின் தர்மத்தை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் பாரதியார் குறிப்பிடுகிறார்.

"பெண்ண றத்தினை ஆண்மக்கள் வீரந்தான்.." (பெண்கள் வாழ்க)

பொருளாதார சமத்துவம்

பொருளாதாரச் சமத்துவம் என்பது செல்வம், வளம், வேலைவாய்ப்பு, வாழ்வாதாரம் ஆகியவை ஒரு சிலரிடம் மட்டும் குவியாமல், அனைவருக்கும் சமமாக வழங்கப்பட வேண்டுமென்ற சமூகக் கொள்கையாகும். பாரதியார் இதனை மிக வலிமையாகத் தனது பல கவிதைகளில் வலியுறுத்தியுள்ளார். உணவு, உடை, இடம் ஆகிய மூல தேவைகளும் அனைத்துப் பேருக்கும் சமமாகக் கிடைக்க வேண்டும். ஒருவருக்கு உணவு இல்லாத நிலை

இருக்கக்கூடாது.பொருளாதாரச் சமத்துவத்தையும், மனிதநேய அரசியல் ஒழுங்கையும் வலியுறுத்துகிறார்.

"இனியொரு விதிசெய் வோம் - அதை.." (பாரத சமுதாயம்)

பாரதியார் பொருளாதாரப் பாகுபாடுகளை மறுத்து, அனைவரும் சமமான மதிப்பு உடையவர்கள் என்கிறார்.ஒவ்வொரு குடிமகனும் நாட்டின் உரிமையாளர், ஆள்பவர் என்று பாரதியார் உயர்த்திக் காட்டுகிறார்.

"எல்லாரும் ஓர்நிறை எல்லோரும் ஓர்விலை.." (பாரத சமுதாயம்)

மத சமத்துவம்

எல்லா மதங்களும் ஒரே கடவுளைத்தான் வணங்குகின்றன என்று கூறி, அனைத்து மதங்களும் ஒரே உண்மையான தெய்வத்தை நோக்கியவை என்று கூறுகிறார். மதங்களால் பிரிவினை ஏற்படுத்தாமல், அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும் என்று அவர் விரும்புகிறார். இது அவரது உலகளாவிய மனிதநேய பார்வையைப் பிரதிபலிக்கிறது.

"தீயினைக் கும்பிடும் பார்ப்பார், - நித்தம்.." (முரசு)

தேசிய இன ஒற்றுமை

மனித சமத்துவக் கொள்கை, பாரதியாரின் தேசிய கண்ணோட்டத்திலும் பிரதிபலிக்கிறது. இந்தியா என்பது மக்கள், மதம், மொழி, சாதி ஆகிய எல்லைகளைத் தாண்டிய பன்மை கொண்ட நாடு.பாரதியார் ஒற்றுமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறார். அறிவு, கல்வி, பணம், திறமை இவை இருந்தாலும், ஒற்றுமை இல்லாத சமுதாயம் நழுவிவிடும் என்பதை அவர் எச்சரிக்கிறார். இந்தியாவின் விடுதலைக்குப் பிந்தைய சமூகக் கட்டமைப்புகளுக்கும், இன்றைய சமூகத்திற்கும் பொருந்தும்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு – நம்மில்.." (வந்தே மாதரம்)

முடிவுரை

மகாகவி பாரதியார் எழுதிய ஒவ்வொரு கவிதையும் மனிதர்களிடையே உள்ள பிரிவுகளை அகற்றும் நோக்கத்துடன் இருந்தது. சாதி, மதம், பாலினம், தொழில், மொழி ஆகியவற்றைத் தாண்டிய ஒரு சமத்துவ உலகத்தைக் கற்பனை செய்கின்றன. இன்றைய உலகில், சமத்துவம் என்பது மனித உரிமைகளின் அடிப்படைக் கோரிக்கையாக உள்ளது. பாரதியாரின் கவிதைகள், இந்தக் கோரிக்கைக்கு இன்னும் உயிர்ப்புடன் உள்ளன. உலகமயமாக்கல் மற்றும் பன்முகத்தன்மை கொண்ட சமூகங்களில், அவரது கவிதைகள் மக்களை ஒருங்கிணைப்பதற்கு ஒரு வழிகாட்டியாக உள்ளது. எனவே பாரதியாரின் கவிதைகளை மீண்டும் மீண்டும் வாசித்து, அவற்றை வாழ்வை பண்படுத்தப் பயன்படுத்த வேண்டும்.

70. பாரதியாரின் இதழியல் புதுமைகள்



Dr.மேனகா நரேஷ், PT

நியூஜெர்சி, அமெரிக்கா

முன்னுரை

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் ஒரு கவிஞர், எழுத்தாளர், விடுதலைப் போராட்ட வீரர் மட்டுமல்லாமல் ஒரு சிறந்த இதழாளராகவும் திகழ்ந்தவர். பாரதியார் 'நமக்குத் தொழில் கவிதை' என்கிறார். ஆனாலும், பத்திரிகையாளர் என்ற ஆற்றல் அவரிடம் கவிதை எழுதுவதற்கு இணையாகவே அமைந்திருந்தது. அவரது இதழியல் பணி சுதந்திர வேட்கையைத் தூண்டியதுடன், சமூகச் சீர்திருத்தங்களுக்கும் ஒரு தூண்டுகோலாக அமைந்தது. பாரதியின் இதழியல் பங்களிப்புத் தமிழ் வளர்ச்சிக்கும், இந்தியச் சுதந்திரத்திற்கும் உறுதுணையாக அமைந்தது. இந்தக் கட்டுரையில், பாரதியாரின் இதழியல் சாதனைகள், சுதேசமித்திரன், சக்கரவர்த்தினி, இந்தியா இதழ்களில் பாரதியார் செய்த குறிப்பிடத்தக்க புதுமைகள் மற்றும் அவை ஏற்படுத்திய தாக்கங்கள் ஆகியவை ஆராயப்படும்.

பத்திரிகைத் துறையில் பாரதியார் செய்தக் குறிப்பிடத்தக்க சாதனைகள்

தமிழ்ப் பத்திரிகை உலகில் முதன்முதலில் கேலிச்சித்திரங்களை அறிமுகப்படுத்திய பெருமை பாரதியாரையே சாரும். பத்திரிக்கை சந்தாவில் புதுமையான முயற்சியாக வாசகர் வருமானத்திற்கு ஏற்பத் தொகையை நிர்ணயித்தார். பத்திரிக்கையுடன் இலவச இணைப்பாகச் சிறிய புத்தகம் வழங்குவதை அறிமுகம் செய்தார். பத்திரிக்கைகளில் நேரடியாகப் பணியாற்றியது மட்டுமின்றி, மற்ற இதழ்களுக்கும் தன் படைப்புகளை அனுப்பி வைத்தார். விவேகபானு, சர்வஜன மித்திரன், ஞானபானு, காமன்வீல், நியூ இண்டியா போன்ற பத்திரிகைகளில் இவரது படைப்புகள் வெளிவந்தன. புனைப்பெயர்களை அதிகம் பயன்படுத்தியவர் அவர் -சக்திதாசன், காளிதாசன், ஷெல்லிதாசன், சாவித்திரி, உத்தம தேசாபிமானி, நித்திய தீரர் ஆகியவை அவருடைய புனைப்பெயர்கள். செய்திப் பத்திரிகையில் வாசகர்களின் ஆர்வத்தைக் கூட்ட கதை, கவிதைகளை வெளியிட்டார். வாசகர்களை விவாதங்களிலும் பங்கேற்க வைத்தார்.

முதன் முறையாகப் பத்திரிக்கையில் தமிழ் மாதம், ஆண்டுக் குறித்தவர் பாரதியார் (இந்தியா,விஜயா). பத்திரிக்கையில் தமிழ் எண்களைப் பயன்படுத்தியவர் பாரதியார் என்பதும் குறிப்பிடத்தக்கது (விஜயா). மேலும், பழைய பத்திரிகைகளில் வெளிவந்த விஷயங்களைத் தொகுத்து நல்ல வசனநூல்களை உருவாக்கலாம் என்று பத்திரிகை உலகிற்கு வழிகாட்டினார். செய்தி அனுப்புவோருக்குப் பணம் தரும் முறையைச் செயல்படுத்தினார். ஐம்பதுக்கும் மேற்பட்ட பிறமொழிப் பத்திரிகைகள் பற்றியும், பிறமொழி பத்திரிகை ஆசிரியர்கள் குறித்தும் தன்னுடைய பத்திரிகைகளில் எழுதினார். பெண்களின் முன்னேற்றத்திற்கு முக்கியத்துவம் அளித்துப் பாலின சமத்துவத்திற்கு வித்திட்டார்.

சுதேசமித்திரன்

மதுரை சேதுபதி உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றிய பாரதியின் திறமைகளைக் கவனித்த ஜி. சுப்பிரமணிய அய்யர், அவரைச் சென்னை நகரத்தில் தன் சொந்த பத்திரிகையான 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் பணியமர்த்தினார். மாதம் நாற்பது ரூபாய் சம்பளம் அவருக்கு வழங்கப்பட்டது.

சுதேசமித்திரனில் பாரதியார் செய்த முக்கியப் புதுமைகள்

1. தந்தி மூலம் வரும் செய்திகளையும், ஆங்கில இதழ்களில் வரும் செய்திகளையும், ஆங்கிலச் சொற்பொழிவுகளையும் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார்.

2. பத்திரிகையின் அச்சுப்பிழைகளைத் திருத்தும் பணியையும் மேற்கொண்டார்.
3. வார இதழாக இருந்த சுதேசமித்திரன் பத்திரிகையை, நாளிதழாகப் பெரிதாக்கி வெளியிட்டார்.
4. தேசிய உணர்வைத் தூண்டும் செய்திகளையும், கட்டுரைகளையும் வெளியிட்டார்.
5. ஆங்கிலேய ஆட்சியை விமர்சிக்கும் செய்திகளையும், கட்டுரைகளையும் துணிச்சலுடன் வெளியிட்டார்.
6. 1906 ஆம் ஆண்டுப் பிப்ரவரி மாதம் 13 ஆம் தேதியன்று, கவிஞர்களை ஒன்றிணைக்கும் முயற்சியாகத் தேசபக்திப் பாடல்களை எழுதியனுப்ப அறிக்கை ஒன்றை 'சுதேசமித்திரன்' பத்திரிகையில் வெளியிட்டார் பாரதியார். இவ்வாறு எழுதி அனுப்பப்படும் கவிதைகளைத் தொகுத்து நூலாக வெளியிட வேண்டுமென்ற ஆசை அவருக்கு இருந்தது. ஆனால் அவர் ஆசை நிறைவேறவில்லை.
7.

சுதேசமித்திரன் பத்திரிகையில் கதைகள், கவிதைகள், கட்டுரைகள் , தலையங்கங்கள் எழுதும் வாய்ப்பு அவருக்கு வழங்கப்படவில்லை. சுமார் இரண்டரை ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, ஜி. சுப்பிரமணிய அய்யரின் அனுமதியுடன் அவர் அந்தப் பத்திரிகையிலிருந்து விலகினார்.

சக்கரவர்த்தினி

'சுதேசமித்திர'னில் பணியாற்றிக் கொண்டிருந்தபோதே 1905-ல் ஆகஸ்ட் மாதம் தொடங்கப்பட்ட "சக்கரவர்த்தினி" எனும் பத்திரிகையின் ஆசிரியர் பொறுப்பைப் பாரதியார் ஏற்றார். இங்கிலாந்தின் மாட்சிமை பொருந்திய மகாராணி விக்டோரியாவின் பெயரால் அவருடைய ஆட்சியின் பொன்விழாவை முன்னிட்டு, பி.வைத்தியநாதய்யர் என்பவரால் "சக்கரவர்த்தினி" தொடங்கப்பட்டது என்பது தெரிகிறது. இந்த இதழின் ஆண்டுச் சந்தா ரூ.2 என்றும் தனியிதழ் 3 அணா என்றும் இருந்தது.

“சக்கரவர்த்தினி” இதழில் பாரதியார் செய்த புதுமைகள்

1. இந்தப் பத்திரிகையில் பாரதியார் குழந்தைத் திருமணம், சதி, வரதட்சணைக் கொடுமை, கைம்பெண் கொடுமை, பெண் கல்வி ஆகிய நடைமுறைகளைப் பற்றி வலியுறுத்தி எழுதியிருக்கிறார்.
2. பெண்கள் கடைப்பிடிக்க வேண்டிய மத ரீதியான சடங்குகள், நோன்புகள் போன்றவற்றைப் பற்றிய குறிப்புகள் அடங்கிய இதழ்கள் வெளியாகிக்கொண்டிருந்த காலகட்டத்தில், பெண்கல்வி ,பெண்விடுதலை போன்றவற்றுக்கு இடமளிக்கும் ஓர் இதழாக “சக்கரவர்த்தினி” விளங்கியது.
3. இந்த இதழில் பங்கிம் சந்திர சாட்டர்ஜி எழுதிய “வந்தே மாதரம்“ வங்கமொழிப் பாடலை தமிழில் மொழிபெயரத்து வெளியிட்டார் பாரதியார்.
4. "பெண்மை யறிவோங்கப் பீடுயரும் பெண்மைதான் ஒண்மையுற வோங்கும் உலகு"- எனும் குறள் சக்கரவர்த்தினி பத்திரிகையின் நோக்கமாக வெளிவந்தது. இது பாரதியார் எழுதியதாகக் கருதப்படுகிறது.

இலட்சியவாத நோக்கத்துடன் பெண்கல்வி, பெண்களின் சமூக இடம், அவர்களின் சிந்தனைச் சுதந்திரம் ஆகியவற்றை வலியுறுத்தும் இதழாக வெளிவந்த “சக்ரவர்த்தினி” தமிழ் பத்திரிக்கை உலகில் முன்னோடி இதழ் என்பதில் ஐயமில்லை . பெண்கள் முன்னேற்றத்தை வலியுறுத்தி வெளியான இதழாக “சக்கரவர்த்தினி” திகழ்கிறது.

இந்தியா

மே 9, 1906 அன்று சென்னையில் மண்டயம் திருமலாச்சாரியார் என்பவரால் தொடங்கப்பட்ட வார இதழ் “இந்தியா”. செப்டம்பர் 1906-ல் பாரதியார் இந்தியா இதழில் பணியாற்ற வந்தார். பாரதியார் இந்தியா இதழின் பொறுப்பை ஏற்றதும் பத்திரிகையில் பல புதுமைகள் ஏற்பட்டன. இந்தப் பத்திரிகையில் பாரதியார் முக்கியப் பொறுப்புகளை ஏற்றுக்கொண்டிருந்தாலும், பத்திரிகையில் ஆசிரியர் என்று மண்டையம் திருமலாச்சாரியாரின் உறவினர் சீனிவாசன் என்பவர் பெயர்தான் கொடுக்கப் பட்டிருந்தது. சென்னையில் இருந்து வெளிவந்த இந்த இதழ் ஆங்கில அரசின் தடை உத்தரவின்

காரணமாகப் பாண்டிசேரிக்கு மாற்றப்பட்டது. "இந்தியா"பாண்டிசேரியில் இருந்து 1908 முதல் 1910 வரை வெளிவந்தது. 'இந்தியா' இதழின் ஓராண்டு சந்தா ரூ.3, ஆறு மாத சந்தா ரூ.1 அணா 12. இந்தப் பத்திரிகையின் குறிக்கோளாக "சுதந்திரம்", "சமத்துவம்", "சகோதரத்துவம்" என்ற வார்த்தைகளைத் தாங்கி வெளிவந்தது.

"இந்தியா" இதழில் பாரதியார் செய்த புதுமைகள்

1. வார இதழாக வெளிவந்த "இந்தியா" பத்திரிகையை நாளிதழ் அளவில் பெரிதாக்கி வெளியிட்டது ஒரு புதுமையான முயற்சியாகும். இது அரசியலிலும், பத்திரிகைத் துறையிலும் பாரதியாரின் செல்வாக்கை அதிகரித்தது.
2. "இந்தியா" பத்திரிகையின் முதல் பக்கத்தில், ஓவியர்களைக் கொண்டு அரசியல் கேலிச்சித்திரத்தை வெளியிட்டது பாரதியார் செய்த புதுமை. செய்திகள், கட்டுரைகள் மற்றும் தலையங்கங்களுடன் சேர்த்து, இந்தக் கேலிச் சித்திரமும் முக்கிய இடம் பெற்றது.
3. அரசியல் பிரசாரத்தின் ஒரு கருவியாகக் கேலிச் சித்திரங்களைப் பயன்படுத்திய முதல் பத்திரிகையாகவும் "இந்தியா" விளங்குகிறது. இதழின் தலைப்புக்கு கீழே, ஒரு கேலிச் சித்திரம் மற்றும் அதனை விளக்கும் சுருக்கமான விளக்கமும் இடம் பெற்றிருக்கும். இது அக்காலகட்டத்தில் ஒரு புதுமையான அணுகுமுறையாகும்.
4. 'இந்தியா' இதழில் இலக்கியம், கைத்தொழில், ராஜரீகம், வர்த்தமானங்கள், இந்தியாவில் குழப்பம் போன்ற தலைப்புகளின் கீழ் பல்வேறு பிரிவுகளை அவர் அமைத்தார்.
5. அரசியல் இதழாக இருந்தாலும், உழவுத் தொழில், அறிவியல், கல்வி, பெண்கள் தொடர்பான செய்திகள், தல வரலாறுகள் மற்றும் சமயக் கருத்துகள் உள்ளிட்ட பல்வேறு உள்ளடக்கங்களுடன் 'இந்தியா' இதழை அவர் வெளியிட்டார்.

முடிவுரை

இக்கட்டுரையின் வாயிலாகப் பாரதியார் ஒரு சிறந்த கவிஞர் மட்டுமல்ல, சிறந்த இதழாளராகவும் திகழ்ந்தார் என்பதை நாம் உணரலாம். அவர் பல்வேறு இதழ்களில் பணியாற்றியதுடன், இதழியல் துறையில் பல புதுமைகளையும், சாதனைகளையும் படைத்துள்ளார். தனது கருத்துக்களைச் சுதந்திரமாக வெளிப்படுத்தி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார். அவரது இதழியல் பணிகள், இந்திய தேசிய இயக்கத்திற்கும், தமிழ் மொழி வளர்ச்சிக்கும் ஒரு முக்கியப் பங்களிப்பாக அமைந்தது. பாரதியாரின் இதழியல் பங்களிப்புகள், அக்காலச் சமூகத்தில் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியதுடன், பத்திரிகைத் துறையில் ஒரு புதிய பாணியை அறிமுகப்படுத்தியது எனலாம்.

துணைநூற் பட்டியல்

1. தமிழகம் தந்த மகாகவி, தொகுப்பாசிரியர்,சீனி.விசுவநாதன்.
2. மகாகவி பாரதியார் வாழ்க்கை வரலாறு, எம்.ஏ.பழனியப்பன்.
3. பாரதி 100 (நூற்றாண்டு நினைவேந்தல் பதிப்பு 1921 - 2021)" , உலகநாயகி பழனி.
4. பாரதி தமிழ், பெ.தூரன்

இணையதளங்கள்

1. https://www.tamilvu.org/library/nationalized/pdf/61-pe.thuran/272-bhaarathiththamizh.pdf
2. https://en-m-wikipedia-org.translate.goog/wiki/Subramania_Bharati?
3. https://www.tamildigitallibrary.in/admin/assets/book/

71. யாமறிந்த பாரதியார்



சுபாதேவி, ஓமன்

முன்னுரை

உயிர்களின் நலம் பொருட்டு வாழ்ந்தவன். தனி ஒரு ஆளாக ஆளுமையில் சிறந்து விளங்கியவன். எண்ணத்தாலும் எழுத்தாலும் சிரஞ்சீவியாக என்றும் கம்பீர நடை போடுகிறான். பாரதம் என்றால் இந்தியா. பாரதி என்றால் இந்தியன். தேசத்தை உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்தவனுக்கு இப்பெயர் சாலப் பொருத்தம். நம் பாரதி சிறந்த பாடகர். தான் எழுதிய பாடலுக்கு தானே மெட்டமைத்து பாடுபவர். கலைமகளுக்கு மற்றொரு பெயர் பாரதி. இவன் ஆண் வடிவிலான சரஸ்வதி.

பரம்பொருளை எளிதாக்கியவன்

நம் முன்னோர்கள் அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகியாகவே பராசக்தியைக் கண்டார்கள். நம் பாரதி சக்தியைத் தனக்குள் ஒருத்தியாகவும், தனக்கு நிகராகவும், பாவித்தான். காளி என்றால் இன்றும் பய உணர்வு ஏற்படுகிறது ஆனால் பாரதியார் 'ஹே காளி' என்று அழைத்து நான் விரும்பியதை காளி தருவாள் என்று உரைப்பான் 'காணி நிலம் வேண்டும்' என்ற பாடலில் பராசக்தியைத் தன் வீட்டுக்குக் காவலுற வேண்டும் என்றான். நல்லதோர் வீணை பாடலில் சொல்லடி சிவசக்தி என்று பக்தியை எளிதாக்கியவன்.

உலகத்தில் உள்ள அனைவருக்கும் உயர்ந்த புருஷன் கண்ணன் ஆகையால் அவனைப் புருசோத்தமன் என்று அழைப்பார். ஜெகன்நாததனே தோழனாக, பெற்றோராக, குருவாக, காதலனாக, குழந்தையாகப் பாடுவது இயல்பு. நம் பாரதி கண்ணன் என் சேவகன் என்ற பாடலில் 'பண்டைக்காலத்துப் பைத்தியத்தில் ஒன்றெனவே கண்டு மிகவும் களிப்புடனே நானவனை ஆளாகக் கொண்டு விட்டேன்' இந்த வரியில் கவிராஜன் நம்மை வியப்படையச் செய்கிறான். பாரதியின் கவிதைக்குப் பின்பு தான் பரம்பொருளை நம் வீட்டுப் பிள்ளையாக எண்ணிக் கண்ணனை கண்ணம்மா என்றும் வாடா கண்ணா என்றும் பராசக்தியை அவள், இவள் என்றும் உரிமையோடு நாம் ஒருமையில் அழைக்கின்றோம்.

பாரதி / மகாத்மா

காந்தியடிகள் அரிச்சந்திரன் நாடகத்தைப் பார்த்த பின் தனக்கு இக்கதை வாய்மையின் முக்கியத்துவத்தை உணர்த்தியதாகவும் இனி சத்தியத்தைக் கடைப்பிடித்து வாழ்வேன் என மன உறுதி பூண்டார். பாரதி காசியில் இருக்கும் போது அரிச்சந்திரா என்பவரின் நாடகப் பாடலில் அயல்நாட்டுக்குப் போ, பெண்களுக்கு கல்வி கொடு, உலகத்தை அளந்து பார் என்ற பாடல் வரிகள் செவியில் ஒலித்துக்கொண்டே இருந்தது இதன் தாக்கம் தான் பாரதியைப் பெண்ணியம் பற்றி மேலும் சிந்திக்க வைத்தது. குஜராத்தில் பிறந்த காந்தி வெளிநாடு சென்று சட்டம் பயின்று கோட்டு அணிந்து பழக்கப்பட்டவர். தமிழ்நாட்டுக்கு சுற்றுப்பயணம் வரும்போது நிறைய ஏழைகள் மேல்சட்டை இல்லாமல் இருப்பது கண்டு இனி தானும் மேலாடை அணியப் போவதில்லை என்ற மன உறுதியுடன் செயல்பட்டார்.

தெற்கே பிறந்த பாரதி காசி சென்றவன் திறந்த மார்பும் பூணூலோடும் இருந்தவன் பூணூல் அறுத்து கம்பீரமான மீசையும் வைத்து பஞ்சகச்சத்திற்கு கருப்பு கோட்டு போட்டு புதிய மரபைப் பழக்கப்படுத்திக் கொண்டார். இந்தியாவில் நீதிமன்றங்களில் மகாத்மா காந்தி படங்களை வைப்பது நீதி, சமாதானம், அஹிம்சை மற்றும் ஒழுக்கம் ஆகியவற்றை நினைவூட்டும் வகையிலும், சட்டம் படித்தவர்களுக்கு முன் உதாரணமாகத் திகழ்ந்தவரும்,

தேசத்தந்தையின் உருவப்படம் ரூபாய் நோட்டுகளில் இருப்பது நமக்கு மிகவும் பெருமைக்குரியது.

நம் மகாகவி பாரதி ஒரே நேரத்தில் சுதேசமித்திரன், சக்கரவர்த்தினி, இந்தியா, பாலபாரதா, விஜயா, சூரியோதயம், இந்தியா, தர்மம், கர்மயோகி என பல பத்திரிகைகளில் பணிபுரிந்தவர். பல படைப்புக்களை விவேகபானு, சர்வஜன மித்திரன், ஞானபானு, காமன்வீல், நியூ இந்தியா ஆகிய பத்திரிகைகளுக்குப் புனைப்பெயர்கள் மூலமும் அனுப்பி இருந்தார். பத்திரிக்கை சந்தாக்களை ஜமீன்தார் என்றால் இரண்டு ரூபாய், அரசு ஊழியர் என்றால் ஒன்றரை ரூபாய், மாணவர்கள் என்றால் 25 பைசா என்ற வேறுபாட்டுடன் நிர்ணயித்தவர். அனைவரும் பத்திரிக்கை படிக்க வேண்டும் என்பதற்காகப் பத்திரிக்கையுடன் இலவசமாக சிறு புத்தகம் இணைப்பாக வழங்குவது, கேலிச் சித்திரம் அறிமுகப்படுத்துவது எனப் பத்திரிக்கையில் பல புரட்சி செய்தவன். நாட்டின் விடுதலைக்காக எழுத்துக்களால் தேச விரோதிகளை நடுங்கச் செய்தவன் மேலும் பைபிள், குரான் போன்ற பல நூல்களை சிறப்பாக மொழி பெயர்த்துள்ளார். நாடகம் சிறுகதைகள் எழுதியுள்ளான். நாவலாசிரியரான நம் பாரதி உருவப்படம் அத்தனை பத்திரிகை அலுவலகத்தில் கட்டாயமாக்கப்பட வேண்டும்.

பாரதி/ விவேகானந்தர்

பாரதத்தாயின் பெருமைக்குரிய இருவர் இவர்கள் தலையில் முண்டாசு உடுத்தும் விதம் உடையில் நேர்த்தி, நிமிர்ந்த நன்னடை, பன்மொழிப் புலமையும் பெற்றவர்கள் இருவருமே வறுமையின் பிடியிலும் சுயநலமற்று பல்லுயிர்கள் இன்புற்று வாழவும் மக்களுக்கு தேசப்பற்றும் ஞானமும் பக்தியும் கொடு என்று பராசக்தியிடம் கேட்டனர். விவேகானந்தரின் சீடர் நிவேதிதா. பாரதிக்குள் மாற்றம் ஏற்படுத்திய மதிப்புக்குரிய ஞானகுரு நிவேதிதா. பிறமொழி வழிக் கல்வி சாவை விட மேலானது என்றார். ஜாதி, மதத் தீண்டாமைக்கு எதிரான இவர்களை காலம் 39 வருடம் மட்டுமே வாழ அனுமதித்தது.

புதுவை காட்டிய ஞானம்

பாரதியை கண்டுபிடித்துத் தருபவர்களுக்குப் பரிசு தருவதாக பிரிட்டிஷ் அரசு அறிவித்தது. ஆகையால் தமிழ்நாட்டில் இருந்து 1908 ஆம் ஆண்டு பிரெஞ்சு ஆதிக்கம் செலுத்திய பாண்டிச்சேரிக்கு அகதியாக புலம் பெயர்ந்தவன். தன் சொந்த நாட்டில் பாதுகாப்பைப் பெற முடியாமல் தப்பித்து புதுவையிலும் தலைமறைவாக இருந்து கொண்டு பல காவியப் படைப்புகளைத் தந்தார். ஞானத் தேடல்களும் நல்ல நட்புகளையும் தந்தது புதுவை. ஐந்து வயதில் தாயையும், 16 வயதில் தந்தையையும் இழந்த பாரதிக்குக் குவளைக் கண்ணன் மூலம் கோவிந்தன் ஞானி என்பவர் பாரதி வீட்டிற்கே வந்து பெற்றோர்களின் உருவம் காட்டினார். கதிர்வேல் சுவாமி பாரதிக்குப் பாப்பம்மாள் கோவிலில் தங்கி மூச்சை மேல் எழுப்பு என்று மூச்சுப் பயிற்சி தந்தார். அரவிந்தர் ஆசிரமத்தில் பாரதி தங்கியிருக்கும் காலத்தில் தியானம் கற்றுக் கொண்டார். சித்தாந்த சுவாமி,குள்ளச்சாமி என சித்தர்களுடன் பழகும் வாய்ப்பு புதுவை தந்தது.

புரியாத புதிரவன்

பாரதி சாதிகள் இல்லையடி பாப்பா என்று பாடியவர். காக்கையும் குருவியும் எங்கள் ஜாதி என்று சொல்லியவன் சொன்னதோடு மட்டுமல்லாமல் புதுச்சேரியில் 1916 நள வருடம் கார்த்திகை மாதம் புதன் இரவு இறந்த பறவைகளை தேடித்தேடி ஒன்று சேர்த்து நண்பர்களோடு தென்னை மரத்தடியில் குழித்தோண்டி புதைத்து ஈமச் சடங்கு செய்தும் காட்டினார். பாரதி பூணூலைத் தானும் அணியவில்லை. பூணூல் அணிந்த ராஜாராம் மோகன்ராயை தாழ்வாகப் பேசியவன். கனகலிங்கத்திற்கு முறைப்படி பூணூல் அணிவித்து உபதேசம் செய்து அழகு பார்த்தார். தோத்திரப் பாடல்கள், கண்ணன் பாட்டு என உருகி உருகிப் பாடியவன். பாஞ்சாலி சபதத்தில் பாரதி பீமனாகவே மாறி எரிதழல் கொண்டு அண்ணன் கையை எரித்திடுவோம் என்று உணர்ச்சி பொங்கப் பேசியவன் மகாபாரதக் கதை பொய் என்றான்.

மேலை நாட்டுக் கவிஞர்களின் கவிதைகளும் அறிஞர்களின் கருத்துக்களையும் ஏற்றுக் கொண்டவன் ஆங்கிலேய ஆசிரியர்கள் சீ இங் (சீனா) டால்ஸ் பிய (ரஷ்யா) தோரோ (அமெரிக்கா) கார்லைல், பைரன்(அமெரிக்கா) வால்ட்விட்மன்,கீட்ஸீம் மற்றும் ஷேக்ஸ்பியர் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டு இவர்களைப் போற்றுகிறான். ஷெல்லியின் நூல்களைப் படித்து அவர் மேல் கொண்ட பற்றின் காரணத்தால் தன் பெயரையே செல்லிதாசன் என்று மாற்றிக் கொண்டான் பாரதி. இறுதிக் காலத்தில் மருந்து உண்ண மறுத்தவன் ஆங்கிலேயனை என் நாட்டில் மட்டுமில்லை ஆங்கில மருந்தை என் உடம்பில் கூட அனுமதிக்க மாட்டேன் என்றான்.

சிந்தூர் புரட்சி

பாரத நாடு எல்லா நாடுகளுக்கும் ஒரு திலகம் போல் ஒரு அடையாளச் சின்னமாக ஒரு தலைசிறந்த நாடாகத் திகழ்கிறது என்று நாட்டின் பெருமையையும் சிறப்பையையும் எடுத்துரைக்கிறார் ஆகையால் பாரத நாடு பாருக்கெல்லாம் திலகம் என்று பாடினான். பாரதியார் தனது இந்தியா இதழை சிவப்பு வண்ணத் தாளில் வெளியிட்டார். இந்தியாவை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்றும் விடுதலைக்காக எங்கள் இந்தியர்கள் சிந்தும் ரத்தத்தின் நிறம் சிவப்பு என்பதை ஆங்கிலேயர்கள் உணர வேண்டும் என்பதற்காக குங்கும வர்ணத்தில் அச்சிட்டு அன்றே சித்தூர் புரட்சி செய்தவர். ஆங்கிலேயர்களே எதிர்ப்பதன் பொருட்டு தன் நெற்றியிலே சிவப்புதிலகம் இட்டுக்கொண்டார்.

பாரதி வாக்கு பலிதம்

யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்நாட்டில் என்று பாரதி சுயசரிதையில் கூறுகிறான். கவிஞர்களுக்கு தமிழ் அருளப்பட்டுள்ளது. அவர்களின் வாக்கு பலிதம் ஆகும். பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என்ற வரிக்கு ஏற்ப இன்றைய சூழல் உள்ளது. உலகத்தில் உள்ள உயிர் அனைத்திலும் தன்னை மற்றும் தன்னில் காண்பதே ஆன்மீக கிருஷ்ணசாமி ரெட்டியார் பாரதியை சித்தர் என்றார். பங்காரு பக்தர் மகன் மனோவியாதி அவன் நெஞ்சில் கை வைத்து வலிமையற்ற தோளினாய் போ போ மார்பினை ஒடுங்கினாய் போ போ என்று சொல்லிக் கொண்டே இருந்தவர் மூன்று மாதம் பின் அவன் சித்தம் சரியாகி தெளிந்து விட்டான்.

முடிவுரை

பாரதியின் பாடல்கள் 1916 இல் அன்னிபெசண்ட் நடத்திய நியூ இந்தியா இதழில் அயர்லாந்தைச் சேர்ந்த ஜேம்ஸ் ஹெச் கஸின்ஸ் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். பாரதியார் வேண்டுகோளுக்கிணங்க முதன் முதலில் பாரதியார் பாடல்களை பாடியவர் கிருஷ்ணசாமி ஐயர். 'எங்கெங்கு காணினும் சக்தியடா' என்ற பாடல். 1947 இல் நாம் இருவர் என்ற திரைப்படத்தில் பாரதியாரின் பாடல்கள் இடம்பெற்றன. பாரதி மறைவுக்குப் பின் பாரதியாரின் பாடல்கள் நாட்டுடைமையாக்கப்பட வேண்டும் என்று பாரதி விடுதலைக்கழகம் ஒன்று அமைக்கப்பட்டு பல பேர் போராடி அன்று முதலமைச்சராக இருந்த ஓமந்தூரார் இப்பாடல்கள் தேசத்திற்குரியன் என்று செல்லம்மாவிடமும் பாரதியின் மகள்கள் இரண்டு பேரிடமும் ஒப்புதல் கடிதம் பெற்று தலா ஐந்தாயிரம் என்று 15,000 கொடுத்து பாரதியார் பாடல்கள் நாட்டுடைமையாக்கப்பட்டது.

72. பாரதியின் பெண்ணியம்



இரா. உமாராமலிங்கம்
மிசிசிபி, அமெரிக்கா

முன்னுரை

தொடக்க காலத்தில் மனிதகுலம் தாய்வழிச் சமூகமாகவே இருந்துள்ளது. பல்வேறு சமூகமாற்றத்தால் உலகெங்கிலும் பெண் கொடுமைகளுக்கு ஆட்பட்டாள். சடங்குகள் சம்பிரதாயங்கள் என்று நம்நாட்டிலும் பெண் கொடுமைகள் தலை விரித்தே ஆடின. தாய்நாட்டிற்கும் தாய்மார்களுக்கும் வரமாகத் தோன்றினார் முண்டாசுகவி நம் முப்பாட்டன் பாரதி. தன் எழுத்து அம்புகள் தொடுத்து அவர் விடுத்த போராட்டங்கள் எத்தனை எத்தனை! அதற்குள் பெண்களுக்கான அவரது அன்பு அறிவுரைகளை, அறியாமை போக்கும் அனல்கக்கும் கவிதைகளைப் பற்றி இங்கு பார்ப்போம்.

பெண் தெய்வங்கள்

முதலில் அவர் வணங்குவதில் பெண் தெய்வங்களையே வணங்குகிறார். காணிநிலம் வேண்டுமென்று பராசக்தியிடம் கேட்கிறார்

நல்லதோர் வீணை செய்தே - அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?

என சிவசக்தியிடம் கேட்கிறார் சரஸ்வதிக்கு வாழ்த்து பாடி பாஞ்சாலி சபதம் எழுதுகிறார்.

பெண் பிள்ளைக்கு வீரம்

அடுத்து அவர் ஓடிவிளையாடு தம்பி என்று எழுதவில்லை. "ஓடி விளையாடு பாப்பா" பாடலில் ஒரு பெண் குழந்தை எப்படி வளர வேண்டும் என்பதை தன் ஆழமான கருத்துகளால் தெளிவான வார்த்தைகளிட்டு எளிமையாகவும் உணர்த்தி இருக்கிறார். பறவைகள் விலங்குகளிடம் அன்பு காட்டச் சொல்லும் அவர் தாய், தாய்நாடு, தாய்மொழி, தெய்வம் என்று பேசினாலும்

பாதகஞ் செய்பவரைக் கண்டால் – நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா

என்று கொதிக்கிறார். பெண் குழந்தைகள் வீரத்தோடு இருக்க வேண்டியதின் அவசியத்தினை அன்றே எழுதி இருக்கிறார்.

ஆண் பெண் சமத்துவம்

ஆணும் பெண்ணும் சமம் என்பதை அவர் பல பாடல்களில் வன்மையாகச் சொல்கிறார்.

ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவி லோங்கி இவ்வையம் தழைக்குமாம்

என்ற பாடலில் அவரின் சமத்துவத்தைப் பறைசாற்றும் ஆவேசம் தெரிகிறது. அச்சமும் நாணமும் நாய்களுக்குத் தான் வேண்டும். தெளிந்த ஞானமும், வீரமும் பெண்களின் குணமென்று எழுதியுள்ளார்.

பெண் கல்வி

கவிஞர்களுக்கே உரியதுதான் கற்பனை வளம். இவரின் கற்பனை திறனோ அளவில்லாதது. அப்படி ஒரு கனவாகத்தான் இந்தக் கும்மிப் பாட்டு பிறந்திருக்கும். அப்பாடலில் இப்படி எழுதுகிறார்.

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி யிருந்தவர் மாய்ந்து விட்டார்;

பெண்களுக்கெதிரான எத்தனையோ சீர்கேடுகள் அந்நாளில் நிலவியது என்றாலும் மகாகவி பாரதியின் மனதில் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது பெண்கள் கல்வி பெறமுடியாமல் இருந்த சூழலே. அதனால்தான் அவருடைய கட்டுரைகள் கவிதைகள் பெண்ணின் அறிவாற்றலை மீண்டும் மீண்டும் பேசுகின்றன. மேலும் அதே பாடலில் அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்

பட்டங்கள் ஆள்வதுஞ் சட்டங்கள் செய்வதும்
பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்;

என்று கும்மி அடிப்பதுப் போல ஆணாதிக்கச் சமூகத்துக்குக் குட்டு வைக்கிறார்.

பெண்விடுதலை

அவர் தமிழ்நாட்டு நாகரீகம் கட்டுரையில் எழுதுகிறார் “ஔவையாரைப் போல் கவிதையும் சாஸ்திரமும் செய்யக்கூடிய ஓர் ஆண்மகன் இங்கு பிறந்திருக்கானா? ஏன் பிறக்கவில்லை? இதனின்றும் ஆண்மக்கள் இயற்கையிலே பெண்களை காட்டிலும் அறிவு திறமையில் குறைந்தவர்களென்று விளங்குகிறதன்றோ?” என்று கேட்கிறார். இப்படி எழுதுவதற்கு எத்தனை பரந்த மனம் வேண்டும். அதனால்தான் பாரதி என்றும் நிலைத்து நிற்கிறார். அவர் பதிவிரதை என்ற கட்டுரையில் ஆண்களை யோக்கியர்களே இல்லை என்று சாடுகிறார். மாதர் என்ற புத்தகத்தில் பெண் விடுதலை பற்றி அவர் எழுதாத கருத்துகள் என்ன இருக்க முடியும்? பெண்விடுதலை என்ற தலைப்பில் அவர் எழுதிய கவிதை வரிகள் இன்றைக்கும் பொருந்துகிறதே!

விடுதலைக்கு மகளிரெல் லோரும்
வேட்கை கொண்டனம்; வெல்லுவம்

முடிவுரை

ஆணாதிக்கத்திற்கு எதிராகக் குரல் கொடுத்த ஆண்களை வரலாறு அடையாளப் படுத்திக் கொண்டேதான் இருக்கிறது. அவர்களுள் தமிழகத்தில் முதன்மையானவராகவும் பெண்ணின் பெருமைகளை உரிமைகளை உரக்கக் கூறிய பெருமை மகாகவி பாரதிக்கே உண்டு. நாற்பதைத் தொடுவதற்குள் எத்தனை எத்தனை படைப்புகள்! ஒருவேளை அவர் இன்னுமொரு நாற்பது வயதுகள் வாழ்ந்திருந்தால் அவரின் சாட்டையடி இந்த தலைமுறையினரையும் மாற்றியிருக்குமோ என்ற நப்பாசை எனக்கு! இருந்தாலும் வள்ளுவனைப் போல் இவரின் புகழும் இப்பூமி உள்ளவரை நிலைக்கட்டும்!

73. பாரதியாரின் படைப்புலகம்



முனைவர் சிவகாமசுந்தரி நாகமணி
சென்னை

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டில் தமிழகத்தில் தீந்தமிழில், தீஞ்சுவைக் கவிதைகளால் மக்களின் உள்ளத்திலே நாட்டுப் பற்றையும், மொழிப் பற்றையும் ஒருங்கே எழுப்பி, அவர் பாட்டுத் திறத்தாலே இவ்வுலகைப் பாலித்திடல் வேண்டும் என்னும் வேட்கை கொண்டு, கவி மழை பொழிந்த அமரகவி பாரதியாரின் படைப்புலகம் என்ற தலைப்பில் என் கட்டுரையைச் சமர்ப்பிக்கின்றேன்.

கண்ணம்மா என் குழந்தை

என்னதான் பெண்ணுரிமை என்று பேசப்பட்டாலும், எழுதப் பட்டாலும் ,இன்று வரை நடைமுறையில், தம் மனைவி முன்னேறினால், அவள் புகழ் பெற்றால் அவளைப் பாராட்டி மகிழும் குணம் உள்ள ஆடவரை விரல் விட்டு எண்ணி விடலாம். தாரம் தன்னை விட உயர்வது தாளாமல், தாழ்வு மனப்பான்மையால் குமைந்து, அவளைக் கொடுமை செய்து, சொல்லொணா துயருக்கு அவளை ஆட்படுத்தி, அதனாலேயே மணவிலக்கு வரை சென்ற இணையர் ஏராளம்! இன்னும் சிலர், மற்றவர் அவளைப் புகழ்ந்தாலோ, இல்லை பணியிடத்தில் பெரும் உயர்வுகள் பெற்றாலோ, அவளை அவதூறாகப் பேசித் தமது ஐய நெருப்புக்கு அவளை ஆளாக்கி விடும் அவலமும் நிகழ்கிறது. ஆனால் பாரதியின் படைப்பைப் பாருங்கள்! "சின்னஞ்சிறு கிளியே", என்று தொடங்கும் பாடலில் காதலியைக் குழந்தையாக நினைத்துப் பாடியிருப்பார். "உச்சி தனை முகர்ந்தால் கருவம் ஓங்கி வளருதடி.." என்ற வரிகள் பாரதியின் பரந்து பட்ட மனதைப் படம் பிடித்துக் காட்டுகின்றன அல்லவா?

எனக்குத் தெரிந்த ஒரு குடும்பத்தில் , கணவனை விட அதிகம் படித்ததாலேயே, ஒரு பெண்ணை, குடும்ப விழாக்களின் அழைப்பிதழ்களில் அவள் பெயருடன் வாங்கிய முதுகலை மற்றும் முனைவர் பட்டத்தைப் போட அனுமதி வழங்கப் படவில்லை. ஆனால் கணவர் பெயர் மட்டும் அவர் வாங்கிய இளங்கலைப் பட்டத்துடன் இடம் பெற்றதைக் காண முடிந்தது. "துணையை மற்றவர் புகழக் கூடாது. புகழும் வண்ணம் அவளை வாழ விடக்கூடாது", என்று சிந்திக்கும் ஆண் வர்க்கம் பாரதியிடமிருந்து பாடம் கற்க வேண்டும். வீழ்வேனென்று நினைத்தாயோ? "ஏதோ பிறந்தோம்? ஏதோ வாழ்ந்தோம்?" என்று குறிக்கோளின்றி வாழ்வோரைச் சாடுகின்றது பாரதியின் படைப்புலகம்! புவியன்னைக்குச் சுமையாக, இலக்கின்றி வாழாமல், குறிக்கோள் ஒன்றை ஏற்று, அதில் மனம் முழுவதையும் குவித்து, அதை அரிதின் முயன்று அடைந்து, ஒளி விடும் நிலவாக ஊரார் மெச்ச வாழ வேண்டும். சராசரி மனிதராக, தினம் தின்று, உறங்கி, புறம் கூறுவதில் வாழ்வை முடித்து வாழ்பவரைக் காய்கிறார். "தேடிச் சோறு நிதந் தின்று - பல...." “மற்ற வேடிக்கை மனிதரைப் போல, நரை கூடி, வயோதிகத்தின் வசமாகி, பின் கூற்றுக்கு இரையாகி, வீழ்வேனென்று நினைத்தாயோ?“ என்று கொக்கரிக்கிறார். எவ்வளவு உத்வேகத்தையும், உற்சாகத்தையும் இவ்வரிகள் தர வல்லன.

ஞானச்செருக்கு

பெண்களை நம்மால் இன்று காண முடிகிறதுதானே! நல்ல அழகும், திறனும் கொண்ட அவர்கள் தம்மை வெறும் வெளித் தோற்றத்திற்காக மட்டும் மதிக்காமல், அறிவுக்காக மட்டுமே மதிக்கப்படுவதை விழையும் தகைமையையும் அறிகிறோம்தானே! கடந்த வருடம் புதுச்சேரியில் நடை பெற்ற துளிப்பா மாநாட்டில் எழுபது கவிஞர்களின் நூல்களுடன் என் நூலும் வெளி வந்தது. அப்போது கவித் தோழியருடன் பாரதியார் வாழ்ந்த வீட்டைப் பார்க்கச் சென்றிருந்தோம். அங்கு அவரது குடும்பப் புகைப் படங்கள் வைக்கப் பட்டிருந்தன. அவற்றுள்

ஒன்றாக இருந்த ஒரு படம் என் சிந்தையைக் கவர்ந்தது. நீங்கள் தாத்தா பாட்டி காலப் படங்களைப் பார்த்திருக்கலாம். அதில் பெண்கள் நின்றபடி இருக்க, ஆண்கள் நாற்காலியில் கால் மேல் கால் போட்டு அமர்ந்திருப்பர்.

புகைப் படத்தில் கூட, தனக்குச் சமமாக மனைவியை அமர விடாத அந்த ஆணாதிக்கக் காலத்தில், தம் மனைவி செல்லம்மா அம்மையார் அமர்ந்திருக்க, பாரதி நின்றிருக்கும் புகைப்படத்தை எடுக்க வைத்திருக்கிறார் என்றால் அவர் பெண்மையை எவ்வளவு போற்றினார், நேசித்தார் என்பது நன்கு விளங்கும் .கணவன் நிற்க, தான் அமர்வதா? என்ற தயக்கமும், கூச்சமும் செல்லம்மா முகத்தில் முகாமிட்டிருக்க, அந்த கருப்பு, வெள்ளை புகைப் படமே ஒரு கவிதையாக ஒளிர்ந்ததைக் காண முடிந்தது. இது மட்டுமில்லாமல், "நான் ஆண் பிள்ளை. ஆயிரம் தவறு செய்வேன். நீ யார் எனைக் கேட்பது?' என்று தவறு செய்யும் ஆண் வர்க்கம் கொக்கரிப்பதையும், தான் செய்யும் தவறுகளை நியாயப் படுத்துவதையும் இக்காலத்திலும் பார்க்க முடிகிறது. நிலைமை இப்படி இருக்க, பெண்ணடிமைத்தனம் மிகுந்த அக்காலத்திலேயே, "கற்பு நிலை என்று சொல்ல வந்தார். அதை இரு கட்சிக்கும் பொதுவாக வைப்போமடி", என்று பாடிய துணிவையையும், வல்லமையையும் பாராட்டாமல் இருக்க முடியவில்லை .

நல்லதோர் வீணை

பாரதியின் படைப்புலகம் மிக நேர்த்தியானது .அவர் படைப்புலகத்தில் முளைத்த அடுத்த முத்து, "நல்லதோர் வீணை செய்தே அதை நலம் கெடப் புழுதியில் எறிவதுண்டோ?" என்ற அழகிய, புகழ் பெற்ற வரிகளைப் பாருங்கள். அது உடல் நலமாக இருக்கட்டும், நல்ல வாழ்க்கையாக இருக்கட்டும், நல்ல துணையாக இருக்கட்டும், நல்ல நட்புகளாக இருக்கட்டும், சிறந்த உறவுகளாய் இருக்கட்டும், ஏன் தனக்குக் கடவுள் கொடுத்த தனித் திறமையாகவே இருக்கட்டுமே! எதையுமே மனிதன் அதன் அருமையை அறிந்து பேணிப் பாதுகாப்பதில்லை. யாருக்கும் கிடைக்காத நல்ல உடல் நலனை, ஒவ்வாத உணவுகளை உண்டு, உடற்பயிற்சி இல்லாத வாழ்க்கை வாழ்ந்து, வாதை செய்யும் போதைப் பழக்கத்துக்கு அடிமையாகி, முறையற்ற வாழ்க்கை வாழ்ந்து தம் உடல் நலனைக் கெடுத்துக் கொள்வோர் எத்தனை பேர்? சரியான நேரத்தில் உண்ணாமலும், அளவுக்கு அதிகமான அலை பேசி, இணையப் புழக்கத்தால் தூக்கத்தைக் கெடுத்துக்கொண்டு வாழ்வோர் எத்தனை பேர் ?

நல்ல துணை நலமாக அமைந்தும், எட்டாத கனிக்காகக் கொட்டாவி விடுவது போல், புற அழகை உண்மையென்று புன்மையாக எண்ணி , தனக்குக் கிடைத்த துணையுடன் வாழ்வைத் துய்க்காமல், நடைமுறைக்கு ஒவ்வாத சில வாழ்க்கையை ஒழுக்கமற்று வாழ்ந்து, நல்ல பெயரையும் கெடுத்து வாழ்பவர் எத்தனை பேர்? தமது முன்கோபத்தாலும், அழுக்காறு மற்றும் அகந்தையாலும் தமக்குக் கிடைத்த அருமை நட்புக்களையும், உறவுகளையும் இழந்து, தனிமையில் உழல்பவர் எத்தனை பேர்? எனக்குத் தெரிந்த ஒரு எழுத்தாளர் இருக்கிறார். மிக நேர்த்தியான கதைகளை தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தந்தவர். தம்மை ஒரு இலக்கியவாதி என்று அவர் ஒருபோதும் காண்பித்துக் கொண்டதில்லை. ஆனால் நன்றாக வெகுவான மக்கள் இரசிக்கும் வகையில் எழுதி வந்த அவர், பெரிய பிரபலங்களுடன் நட்பாக இருந்து வந்தவர். அவர்களைப் பேட்டி எடுத்து அதை நூலாக்கவே, அது மிகப் பெரிய வரவேற்பு பெற்றது. அத்தகு புகழ் பெற்றோருடன் சந்திப்பு நிகழ்ச்சிகள் நிறைய நடத்தி, அதனால் நிறையப் புகழ் அவருக்குக் கிடைத்தாலும் , அவர் எழுதுவது குறைந்து போனது.

முடிவுரை

என்ன இல்லை பாரதியிடம்? அவர் கவிதைகளில் உண்மைக் காதலைக் கைகொட்டி வாழ்த்தும் பாங்குண்டு.காக்கை குருவி எங்கள் ஜாதியென்ற சிற்றுயிரைச் சிறப்பித்துப் பாடும் பாங்குண்டு. உணவில்லா தனி ஒருவனுக்காக செகத்தினை அழிக்கும் உத்வேகமுண்டு. நாட்டை, மக்களை, மொழியை நேசிக்கும் விழுமியங்களுண்டு. அதனாலேயே அவர் படைப்புலகம் அலாதியானது எனலாம்.

74. பாரதி எனும் சித்தன்



கல்பனா சுரேன்

தமிழ் ஆர்வலர், தமிழால் இணைவோம்
அமெரிக்கா

பக்தி, வீரம், காதல், நாட்டுப்பற்று என்று பாரதியின் பாடல்களில் அவனுடைய பன்முகங்களைப் பார்த்திருப்போம். பாரதியை ஒரு சித்தனாய் நாம் பார்த்தது அரிது. அவனை ஒரு சித்தனாய்ப் பார்ப்பது பேரானந்தம்.
தான் ஒரு சித்தன் என்று **'பாரதி அறுபத்தாறு'** எனும் பாடலில் அவனே சொல்கிறான்.

'எனக்கு முன்னே சித்தர் பலர் இருந்தா ரப்பா!
யானும் வந்தேன் ஒரு சித்தன் இந்த நாட்டில்.'

சித்தன் என்பவன் உண்மையை உரைப்பவன். தனக்குள் அனைத்தையும், அனைத்திற்குள் தன்னையும் காண்பவன். அப்படியே வாழ்ந்தான் பாரதி.

'காக்கை குருவி எங்கள் ஜாதி-நீள்
கடலும் மலையும் எங்கள் கூட்டம்;
நோக்குந் திசையெலாம் நாமன்றி வேறில்லை;
நோக்க நோக்கக் களியாட்டம்'

என்று பாடினான்.

காக்கை, குருவி, கடல், மலை என அனைத்தையும் தமதாக்கிக் கொண்டான். நோக்கும் திசைகளில் இருந்த அனைத்திலும் அவனையே கண்டான். களியாட்டம் கொண்டான்.

சித்தன் என்பவன் தன் கோபத்தைக் காப்பவன். பாரதி அதைத்தான் **'ரௌத்திரம் பழகு'** என்றான்.

"தன்னைத்தான் காக்கின் சினங்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்"
என்று வள்ளுவனைப் படித்திருந்த பாரதி ஏன் **'ரௌத்திரம் பழகு'** என்று சொல்லவேண்டும்? நம்மைக் கோபப்பட சொல்கிறானா பாரதி? இந்தக் கேள்வி எழுவது இயல்பு.

'பழகு', 'பழகிக்கொள்', 'பழக்கப்படுத்து' என்ற சொற்களுக்கு இன்னொரு பொருள் 'பணி' அல்லது 'பணியவை' என்பது.

நாய்க்கு பயந்த நாம் நாய் வளர்க்கும் வீட்டிற்குப் போகும் போது பயந்தால், அந்த வீட்டு ஆட்கள் நம்மைப் பார்த்து, 'பயப்படாம வாங்க இது பழகுன நாய்தான் ஒன்னும் செய்யாது' என்று சொல்வதைக் கேட்டிருப்போம். அது போல் ரௌத்திரம் பழகு என்பது 'கோபத்தைப் பணியவை' என்பதுதான். ஒரு நாய்குட்டியைப் பழக்குவதைப்போல் கோபத்தைப் பழக்கி வைத்திருக்கவேண்டும். நம் கோபத்தின் பிடியில் இருந்து நாம் பலியாகாமல் கோபத்தை நம் பிடியில் வைத்து கொள்வதுதான் ரௌத்திரம் பழகு.

'சித்திரமும் கைப் பழக்கம்' என்றாள் ஔவை. ஓவியம் வரைந்து நம் கைப் பழக பழக அந்தக் கலையை நம் வசப்படுத்திக்கொள்ளலாம். பின் அது நம் எண்ணத்திற்கு ஏற்ப வளைந்து கொடுக்கும். அது போல் தான் நம் கோபமும். அதைப் பழக்கி நம் வசப்படுத்திக்கொள்ளவேண்டும். இது புரியாமல், பாரதி சொன்னான் என்று கோபப்பட்டுக்கொண்டிருக்கிறோம் நாம்.

'குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயும் காத்தல் அரிது'

என்பது நீத்தார் பெருமை அதிகாரத்தில் துறந்தார் பற்றிய வள்ளுவன் வாக்கு. இதன் நீட்சிதான் பாரதியின் 'ரௌத்திரம் பழகு'. இதைச் சொன்ன நம் பாரதி ஒரு சித்தன்.

ஒரு சித்தன் என்பவன் அனைத்திலிருந்தும் விடுதலையாகி நிற்பவன்.

'விட்டு விடுதலை யாகிநிற் பாயிந்தச்
சிட்டுக் குருவியைப் போலே.'

தான் அடைந்த விடுதலையை நாமும் பெறவேண்டும் என்று நமக்காகப் பாடிய பாரதி ஒரு மாபெரும் சித்தனே.

'அக்கினி குஞ்சொன்று கண்டேன்
அதை அங்கொரு காட்டிலொர் பொந்திடை வைத்தேன்!
வெந்து தணிந்தது காடு
தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?'

இவ்வரிகளுக்கு நம் ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான பொருள் புலப்படும். அதில் தவறு ஒன்றும் இல்லை. பாரதியை ஒரு சித்தனாய்ப் பார்க்கும்போது நமக்குக் கிடைக்கும் பொருள் வேறு.

இந்தப் பிரபஞ்சம் முழுதும் பரந்திருக்கும் இறைத்தன்மை ஒரு சிறிய வடிவில் நம்முள்ளும் இருக்கு என்பதைக் கண்டவர் சொன்னதுண்டு. வெளியில் இருப்பது பெரும் தீ என்றால் நம்முள் இருப்பது சிறிய தீ. அக்கினி குஞ்சு இது. இதை உள்சென்று அங்கிருக்கும் பொந்துக்குள் கண்டான் பாரதி. வெந்து தணிந்ததாம் காடு.

காடு, கான், காள், காளி, கருப்பு, காரிருள் என்ற அனைத்தும் இருளைக் குறிக்கும். நமக்குள் இருக்கும் இருள் நம் அறியாமை.

அறியாமை என்பது இருள், ஞானம் என்பது ஒளி. நம் அறியாமை என்னும் இருள் சூழ்ந்த காட்டை அழிக்க நமக்குள் இருக்கும் அக்கினி குஞ்சு போதும். இருள் நீங்கி அறிவு பெற நாம் இறைத்தன்மையை வெளிநோக்கியே தேடிக்கொண்டிருக்கிறோம். அது நமக்குள்ளும் இருக்கிறது.

பெரும் தீப்பந்தம் காட்டை அழிக்கும். இருந்தாலும் காட்டை அழிக்க சிறு தீப்பொறியே போதும். தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றும் உண்டோ?

இந்த அக்கினிக் குஞ்சை கண்டான் பாரதி. ஞானத்தைப் பெற்ற பாரதி ஆனந்த கூத்தாடினான்.

'தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்! தக தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்!'

75. பாரதியாரின் கவிதைகளும் திருக்குறளும்



திருமதி சசி ஆனந்த்

மகாகவி மகத்தான கவி - சுப்பிரமணிய பாரதியாரின் கவிதைகள் மிகச் சிறப்பானவை. சின்னசாமி சுப்ரமணியம் என்ற இயற்பெயரைக் கொண்ட பாரதியார், சுப்பையா, சுப்பிரமணிய பாரதி, , தேசிய கவி, புதுமைக்கவி, மகாகவி என்று பல்வேறு பெயர்களாலும் பட்டங்களாலும் தமிழர்களால் கொண்டாடப்பட்டு வருகிறார். மேலும் மகாகவி சுப்பிரமணிய பாரதியார் உலகளாவிய தளங்களில் உள்ள உலக மகாகவி என்ற பீடத்தில் எவருடைய உதவியும் இன்றி எவருடைய சிபாரிசையும் கோராமல் ஏறி உட்கார்ந்து கொள்கிறார். இந்த வகையில் நமது நாயகன் உலக மகாகவி என்ற பாராட்டைப் பெறுகிறார். சுப்பிரமணிய பாரதியார் 1882-ம் ஆண்டு டிசம்பர் மாதம் பதினோராம் நாளில் எட்டயபுரம் திருநெல்வேலி மாவட்டத்தில் சின்னசாமி ஐயருக்கும் இலக்குமி அம்மாளுக்கும் மகனாகப் பிறந்தார். செல்லம்மாள் என்னும் மகத்தான பெண்மணியை வாழ்க்கைத் துணையாக அடைந்து, தங்கம்மாள், சகுந்தலா என்ற இரு மகள்களையும் பெற்றார். பாரதியார் தன் ஐந்தாம் வயதிலேயே தனது தாயாரை இழந்தார். ஏழாவது வயதிலேயே அவர் கவிதைகள் எழுதத் தொடங்கினார். அவருக்குப் பதினோரு வயதானபோது அவரது கவிபாடும் ஆற்றலை வியந்து பாராட்டி 'பாரதி' என்ற பட்டத்தை வழங்கினார் எட்டயபுரம் மன்னர்.

'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனிதாவதெங்கும் காணோம்'

என்று சொல்லும்போது அவர் பல மொழிகளிலும் புலமை வாய்ந்தவரென்று தெரிகிறது. தன் தாய்மொழி தமிழிலும், இந்தி, சமஸ்கிருதம், ஆங்கிலம், பெங்காலி, ஹச் போன்ற மொழிகளிலும் அவர் புலமை பெற்றிருந்தார். சான்றோர்களின் மனங்கள் ஒரே மாதிரியாகச் சிந்திக்கும் என்று ஒரு வழக்கு உண்டு. திருவள்ளுவருக்கும் பாரதியாருக்கும் இடையே இரண்டாயிரம் ஆண்டுகள் நீண்ட இடைவெளி இருக்கிறது. இவ்வளவு நீண்ட இடைவெளி இருந்தும் இந்த இருவரது பார்வைகளுக்கிடையில் பல ஒற்றுமைகள் இருப்பதை நம்மால் காண முடிகிறது. இங்கே பாரதியும் திருவள்ளுவரும் ஒரே மாதிரியாகச் சிந்திப்பதைப் பல எடுத்துக்காட்டுகளில் காணலாம். பாரதியாரின் கவிதைகளும் திருக்குறளும் தமிழ் இலக்கியத்தின் முக்கிய அடையாளங்களாக விளங்குகின்றன. இருவருமே தமிழ் மொழியின் வளர்ச்சிக்கும் தமிழர்கள் முன்னேற்றத்திற்கும் அவரவர் காலத்தில் பெரும் பங்காற்றியுள்ளனர். இருவருடைய கவிதைகளுமே மனிதனுடைய மேம்பாட்டைப் பேசும் வாழ்வியல் நூல்களாகத் திகழ்கின்றன.

தமிழ் இலக்கிய மறை நூல், உலக மறைநூல் எனப் போற்றப்படும் திருக்குறள், அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால்(காமத்துப்பால்) என முப்பால் ஆக பிரிக்கப்பட்டுள்ளது போலவே, பாரதியின் கவிதைகளும் இந்த மூன்று பரப்புகளிலும் செயல்பட்டுள்ளன. உலக வாழ்க்கை பற்றியும் அரசியல் குறித்தும் உளவியல் சார்ந்த கருத்துக்களையும் பாரதியார் மிகவும் தெளிவாகவும் நுட்பமாகவும் அதே சமயம் விரிவாகவும் ஆராய்ந்துள்ளார். அவருடைய கண்ணன் பாட்டுக்களில் உறவுத் தளங்களின் உளவியல் நுணுக்கங்களை ஆழமாக அவதானித்துள்ளார்.

'பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பெனும்
திண்மை யுண்டாகப் பெறின்' (குறள் 54)

'ஒருமை மகளிரே போலப் பெருமையும்
தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு' (குறள் 974)

என்று அறத்துப்பாலில் திருவள்ளுவர் சொல்வது போலவே பாரதி, ஆணுக்கும் பெண்ணுக்கும் கற்பு உரித்தானது என்பதை,

'கற்பு நிலையென்று சொல்ல வந்தார்
இரு கட்சிக்கும் அஃதைப் பொதுவில் வைப்போம்'

என்று 'விடுதலைக் கும்மி' பாடலில் சொல்லியுள்ளார்.

'உறங்குவது போலும் சாக்காடு உறங்கி
விழிப்பது போலும் பிறப்பு' (குறள் 339)

என்று வள்ளுவர் சொல்வதை,

பாரதி தன் வாழ்வில் சந்தித்த வறுமையின் காரணத்தினால்,

'செவிக்குண வில்லாத போழ்து சிறிது
வயிற்றுக்கும் ஈயப் படும்' (குறள்412)

என்ற வள்ளுவர் வாக்கை, வயிற்றுக்கு உணவில்லாத போது, செவியைக் கொண்டு காலந்தள்ள வேண்டும் என்று மாற்றிவிடலாம் என்று தோன்றுகிறது என்கிறார்.

'இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்' (குறள் 314)

என்று பழிவாங்கும் மனோபாவத்தைக் கைவிடும்படி திருவள்ளுவர் சொல்லும் அதே கருத்தை,

'பகைவனுக் கருள்வாய் - நன்நெஞ்சே
பகைவனுக் கருள்வாய்'

என்று பாரதி முற்றோதல் செய்தல் நம் நெஞ்சங்களில் ஒலிக்கிறது.

'சொல்வது தெளிந்து சொல்', என்கிறார்.

'உள்ளுவ தெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினும் தள்ளாமை நீர்த்து' (குறள் 596)

ஒன்று கிடைக்காவிட்டாலும் அதை உயர்வாக எண்ணுவது உயர்வு என்கிறார் வள்ளுவர். புதிய ஆத்திசூடியில் 'எண்ணுவது உயர்வு' என்று அறிவுறுத்துகிறார் பாரதியார்.

'அருமை உடைத்துஎன்று அசாவாமை வேண்டும்
பெருமை முயற்சி தரும்' (குறள் 611)

இச்செயலை நம்மால் செய்யமுடியாது என்று தளர்ச்சி கொள்ளாமல் இருக்கவேண்டும். இடைவிடாத முயற்சியானது அதனைச் செய்து முடிக்கும் வல்லமையைத் தரும். இதையே,

'அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே'

என்று நினைத்ததை முடித்தே தீருவோம் என உறுதிபடக் கூறுகிறார் பாரதி.

'வினைத்திட்பம் என்பது ஒருவன் மனத்திட்பம்
மற்றைய எல்லாம் பிற' (குறள் 661)

ஒரு செயலில் வெற்றி பெற முதலில் வேண்டியது மனஉறுதி. மற்ற உறுதி எல்லாம் துணை நிற்பது என்று வள்ளுவரும் பாரதியும் ஒருங்கே உரைக்கின்றனர்.

'மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்' (குறள் 969)

என்று வீர சுதந்திரம் என்னும் பாடலில் மானத்தினை எடுத்துரைக்கின்றார் பாரதியார். உயிரை விட மானமே பெரிது என்று வள்ளுவர், பாரதியார் இருவருமே வலியுறுத்துகின்றனர்.

'பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான்' (குறள் 972)

'சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்', என்கிறார் பாரதி

ஒருவன் பிறப்பால் சிறப்படைவது என்பதில்லை, அவன் செய்யும் தொழிலால் சிறப்பு அடைகிறார் என்பதே இருவரும் கூறும் உண்மை.

'இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றி யான்' (குறள் 1062)

'தனி ஒருவனுக்கு உணவில்லை எனில்
ஜெகத்தினை அழித்திடுவோம்,'

உணவினை இரந்து ஒருவன் கேட்பானேயானால் அந்த உலகத்தினை அழித்திடுவோம் என ஆவேசத்துடன் சாடுகிறார் பாரதியார்.

வள்ளுவரின் இன்பத்துப்பால் சார்ந்த குறள்களைப் பாரதியாரின் கண்ணன் பாட்டுகளுடன் ஒப்பு நோக்கி ஆராய்ந்தால் பெரும் வெளிச்சத்தைத் தரக்கூடும். ஆண் பெண் உறவின் சிக்கல்களையும் அதன் நுட்பங்களையும் அதன் பல மடிப்புகளையும் அடுக்குகளையும் இருவரும் தேர்ந்த கூர்மையோடு உசாவி உள்ளனர். பிரிவாற்றாமை தொடர்பான உணர்ச்சிகளைப் பற்றிப் பேசும்போது,

இருநோக்கு இவளுண்கண் உள்ளது ஒருநோக்கு
நோய்நோக்கொன் றந்நோய் மருந்து (குறள் 1091)

என்று திருவள்ளுவர் வடிக்கும் சித்திரத்துக்கு ஒப்பாகப் பாரதியார் காட்டுவதைப் பார்க்கலாம்.

'தீர்த்தக் கரையினிலே... '

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு' (குறள்1)

என்று திருவள்ளுவர் இறைவனை இயற்கையாகக் கண்டார். பாரதியார் இதையே பரசிவ வெள்ளம் என்னும் கவிதையில்,

"காவித் துணிவேண்டா
கற்றைச் சடைவேண்டா"

என்று மனோபாவமே தெய்வநிலை எய்துவதற்குப் போதுமென்கிறார்.

தன்னிடம் உலகத்தையும் உலகத்திடம் தன்னையும் எவன் காண்கிறானோ அவனே கண்ணுடையவன். உன்னுடைய ஆத்மாவும் உலகத்தினுடைய ஆத்மாவும் ஒன்றே. நீ, நான், முதலை, ஆமை, கருடன், கழுகு, எல்லோரும் ஒரே உயிர். அந்த உயிரே தெய்வம். ஆத்மாவின் ஒருமை தெரிந்தவனே ஞானி என்று சொல்லும் பாரதியார்,

'துன்பமில்லா நிலையே சக்தி
தூக்கமில்லாக் கண்விழிப்பே சக்தி' என்றும்

மிருக நிலையிலிருந்து மனிதரைத் தெய்வ நிலைக்குக் கொண்டு சேர்க்கும் நிலையே மறை. ஏதோ உலகத்தில் பிறந்தோம், தெய்வம் விட்டதே வழி என்று ஆற்றின் மீது மிதந்துசெல்லும் கட்டையைப் போல உலகவாழ்க்கை வெள்ளத்தில் மிதந்து செல்லவேண்டும். அங்கே முற்றிலும் பராதீனனாய் எவன் ஈஸ்வரன்மீது சகல பாரத்தையும் போட்டுவிட்டு நடக்கிறானோ அவனுக்குத் தெய்வத் தன்மை உண்டாகும். இதில் சந்தேகமில்லை. சமத்துவமே தர்மம் அன்பே இன்பம் தரும்.

76. பாரதி என்றொரு பாட்டன்



சாந்தி சந்திரசேகர்

முன்னுரை

"முப்பாட்டன் பாரதியென் மூதாதை எனும்போது
மூச்சுக்குள் பரவுதொரு செருக்கு.."

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார். கடலின் துளியை நக்கிப் பார்த்துக் கடலைக் குடித்ததாய்ப் பெருமைப் பட்டுக் கொள்ள முடியுமா?. ஆனால் பாரதி, வ.உ.சி போன்ற முப்பாட்டன்களின் வழிவந்த தமிழ்ப் பரம்பரையாய் நின்று, அவர்கள் சிறப்பை அடுத்த தலைமுறைக்குச் சான்றாக்கும் சிற்றுரையை உங்களோடு பகிர ஆவல் மிகுகிறேன்.

இலக்கியத் திறனாய்வு ஏன்?

எதற்காக ஒரு படைப்பாளியின் படைப்புகள் திறனாய்வு செய்யப்பட வேண்டும்? என்ற கேள்வி எழுகிற போது, அதற்கான பதிலையும் கண்டறிய கடமைப்பட்டவர்கள் ஆகிறோம். இலக்கியத்தின் பண்பும் பயனும் அழகு உணர்ச்சியும், நுகர்வும் மட்டுமல்ல. அது ஒரு பண்பாட்டுப் பயணம். சமூக உணர்வும், சமூகம் பற்றிய நிலைப்பாடும் இலக்கிய உருவாக்கத்தில் பெரும் பங்காற்றுகின்றன. இலக்கியப் படைப்பு குறித்த முழுமையை வெளிக் கொணர்வது இலக்கியத் திறனாய்வு. படைப்புக்கும் வாசகனுக்குமான உறவுப் பாலமாக அது திகழ்கிறது. திறனாய்வுகளே படைப்பை வெளிச்சமிட்டுக் காட்டுபவை. இவை அதிகரித்தால் இலக்கிய வாசிப்பும் பெருகும்.

படைப்பு என்பது

பல்லாயிரம் ஆண்டுகால அறிவு மரபின் விளைச்சல் தான் படைப்புகள். இயற்கை, சுற்றுச்சூழல், மரபு, வரலாறு, ஒழுக்கம், கடவுள், அரசு, அதிகாரம், வாழும் முறைகள், நாகரிக வளர்ச்சி ஆகியவற்றின் ஒட்டுமொத்தமான எதிரொலிப்பு அல்லது எடுத்துரைக்கும் அமைப்பே படைப்பாக்கமாகும்.

படைப்பு எப்போது இலக்கியம் ஆகும்?

"ஒரு படைப்பை எது இலக்கியமாக்குகிறதோ அதுவே அந்தப் படைப்பின் இலக்கியத்துவம்" என்கிறார் 'ரோமன் யாக்கப்சன்'
இலக்கியத்தை அதன் சமூகப் பெருமதிப்புடன் கற்கும் போது தான் அதன் தன்மையை உணர முடியும். 'மனிதன்' ஒரு மகத்தான சொல் என்ற மாக்ஸிம் கார்கியும், 'மனிதன் மகா சல்லிப் பயல்' என்ற ஜீ. நாகராஜனையும் புரிந்து கொள்ள முடியும். இலக்கியக் கல்வி என்பது சமூகக் கல்வியாகும். படைப்பை முழுமையாகக் கற்கும் போது அதன் மையம், விளிம்பு எது என்பது விளங்கும். அதன் இலக்கியத்துவத்தைக் கட்டவிழ்க்க உதவுவதே திறனாய்வுகள் எனலாம்.

பாரதி என்னும் சாரதி

எட்டயபுரம் தந்த மகாகவி சுப்பிரமணிய பாரதி ஒரு எழுத்தாளர், கவிஞர், பத்திரிகையாளர். சுதந்திரப் போராட்டத்திலும், தமிழ் இலக்கியத்திலும் அவரின் பங்களிப்பு முக்கியமானது. புதுச்சாத்திரங்கள் கூறியது மட்டுமல்ல, வாழ்ந்து காட்டியவர். சரித்திரமாக மாறி நின்றவர். அவர் எழுதிய "பாப்பா பாட்டு" ஒன்று போதும், அவரின் சமூக அக்கறை, உயிர் நேசம், மாந்தநேயம், வருங்காலத் தலைமுறைக்கு நல்ல செய்திகளைக் கற்பிக்க

வேண்டும் அல்லது கடத்த வேண்டும் என்ற இதய தாகம், இயற்கை ஆர்வம், தாய்மொழிப் பற்று, தாய்நாடு போற்றுதல், நீசரை சங்கரிக்கும் ரௌத்திரம், கலைகளின் மீதுள்ள ஈடுபாடு, சொன்னதை வாழ்ந்து காட்டும் நெஞ்சுறுதி என்று அவரின் பன்முகச் சிறப்புகள் புலப்படும் களமாக அது உள்ளது. அந்தப் பாடலின் ஒவ்வொரு வரியும் குறளில் எந்த அதிகாரங்களோடு ஒத்துப் போகிறது என்று சிறு ஆய்வை உங்கள் பார்வைக்கு சமர்ப்பிக்கிறேன்.

'ஓடி விளையாடு பாப்பா நீ ஓய்ந்திருக்கலாகாது பாப்பா'
இந்த வரிகள் 'மடியின்மை' அதிகாரத்தின் 61-வது குறளுக்குச் சான்றாக உள்ளது.

'கூடி விளையாடு பாப்பா ஒரு குழந்தையை வையாதே பாப்பா
இந்த வரிகள் 'சுற்றம் தழால்' என்னும் 53 வது அதிகாரத்தின் 525 வது குறளுக்குச் சான்றாகிறது.

"சின்னஞ்சிறு குருவி போலே நீ திரிந்து பறந்து வா பாப்பா"
நம்மைச் சுற்றி இயங்கும் பறவைகளையும், விலங்குகளையும் நாம் கவனிக்க வேண்டும். அவற்றை நாம் நேசிக்க வேண்டும். அதன் நன்மைகளையும், பயன்களையும் அனுபவிக்கும் நாம் அவற்றை அன்போடு கூட இணைத்து வாழ வேண்டும், என்ற சிறப்பான கருத்தை எடுத்துச் சொல்லும் விதமாக கிட்டத்தட்ட 16 அடிகளை ஒதுக்கி இருக்கிறார். இந்த அடிகள் 'அருளுடைமை' அதிகாரத்தில் 244 வது குறளான 'உயிர்களிடத்தில் அருளுடையவனுக்கு உயிருக்கு அஞ்சி வாழ்கிற நிலைமை இல்லை' என்ற பொருளை எடுத்துச் சொல்வதாக உள்ளது. **"காலை எழுந்தவுடன் படிப்பு பின்பு.."** இந்த நான்கு அடிகளும் கல்வி எனும் அதிகாரத்தில் 392 வது குறளின் பொருளை முன்மொழிகிறது. **"பொய் சொல்லக்கூடாது பாப்பா" என்றும் "புறம் சொல்லலாகாது பாப்பா"** என்ற அடிகள் 'புறங்கூறாமை' என்னும் அதிகாரத்தின் 192 வது குறளின் பொருளை அழுத்தமாகச் சொல்லித் தருகிறது.

"பாதகம் செய்பவரைக் கண்டால் நாம் பயம் கொள்ளலாகாது பாப்பா" என்ற இந்த நான்கு வரிகளும் 'வினை செயல்வகை' என்ற அதிகாரத்தில் 674 வது குறளான ஒரு செயலையும், பகையையும் முடிக்காமல் வைப்பது தவறான செயல் என்று கூறும் கருத்தை வலியுறுத்துகிறது. **"துன்பம் நெருங்கி வந்த போதும் நாம் சோர்ந்து விடலாகாது பாப்பா"** இந்த நான்கு அடிகளும் 'வினைத்திட்பம்' என்னும் அதிகாரத்தின் 668 வது குறளான மனம் கலங்காமல், சோர்வு இல்லாமல், காலம் கடத்தாமல் ஒரு செயலைச் செய்து முடிக்க வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்துகிறது.

"தேம்பி அழும் குழந்தை நொண்டி நீ திடங்கொண்டு போராடு பாப்பா" என்ற வரிகளில் 'இடுக்கண் அழியாமை' (துன்பத்துக்குத் துவளாமை) என்ற அதிகாரத்தில் 622 ஆவது குறளான வெள்ளம் போன்ற துன்பமும் அறிவுடையவன் மன உறுதியால் நீங்கும் என்ற கருத்தை வழிமொழிகிறார். **"உயிர்களிடத்தில் அன்பு வேணும் தெய்வம் உண்மை என்று தான் அறிதல் வேண்டும்"** என்ற வரிகளில் 'அன்புடைமை' அதிகாரத்தின் 75 ஆவது குறளின் கருத்தை வலியுறுத்துகிறார். அதுமட்டுமல்லாமல் வளரும் பிள்ளைகளுக்குத் தாய்நாட்டின் சிறப்பைப் பற்றிக் கூறும் விதமாக, அதை அவர்கள் மனதில் பதிய வைக்கும் விதமாகத் **"தமிழ்த் திரு நாடு தன்னைப் பெற்ற எங்கள் தாயென்று கும்பிடடி பாப்பா அமிழ்தின் இனியதடி பாப்பா நம் ஆன்றோர்கள் தேசமடி பாப்பா"** என்று ஓங்கிப் பாடுகிறார்.

"வடக்கில் இமயமலை பாப்பா தெற்கில் வாழும் குமரிமுனை பாப்பா" என்று தேசத்தின் எல்லைகளையும் சொல்லிக் காட்டுகிறார். அது மட்டுமல்ல, **"சொல்லில் உயர்வு தமிழ் சொல்லே அதைத் தொழுது படித்திடடி பாப்பா"** என்று மொழிகளில் எல்லாம் உயர்ந்த தமிழ் மொழியை நீ தொழுது வணங்கிப் படிக்க வேண்டும் என்று அறிவுறுத்துகிறார். குல வேறுபாடுகள் மிகுந்திருந்த அந்தக் காலத்தில், துணிச்சலாக, அதை வேரறுக்க வேண்டும் என்று எண்ணியவராக, **"சாதிகள் இல்லையடி பாப்பா குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்"**. இத்தகைய பண்பு நலன்கள் இல்லாதவர்களே கீழ்ந்த ஜாதியை உடையவர்கள் என்று அழுத்தமாகச் சொல்கிறார். **"வைரம் உடைய நெஞ்சு**

வேணும் இது வாழும் முறைமையடி பாப்பா" என்று முத்தாய்ப்பாகச் சொல்லி வைரம் போன்ற உறுதியான மனமுடையவர்களாய் நாம் வாழ்க்கையை எதிர் கொள்ள வேண்டும். இதுதான் நாம் வாழும் முறை என்று வளரும் குழந்தைகளுக்குத் தேவையான அத்தனை கருத்துகளையும் ஒரு தாயைப் போல சொல்லிச் செல்கிறார்.

முடிவுரை

அன்புப் பெற்றோரே, 'ரெயின் ரெயின் கோ அவே', 'டுவிங்கிள் டுவிங்கிள் லிட்டில் ஸ்டார்", போன்றவை சொல்லிக் கொடுக்கும் வேளையில் நம் பாட்டன் பாரதியின் 'ஓடி விளையாடு பாப்பா' பாடலையும் சேர்த்து வாரமிருமுறையாவது பாடச் சொல்லி மகிழுங்கள். அது அவர்களின் மனநிலையிலும் வளர்ச்சியிலும் மிகப்பெரிய மாற்றத்தையும் தாக்கத்தையும் ஏற்படுத்தும் என்பதில் எள்ளளவும் ஐயம் இல்லை. உலகப் பொதுமறைத் தகுதி பெற்ற திருக்குறள் கண்ட தமிழ் மொழியும், அறங்கூறும் காவியங்களும், அன்பையும், அகிம்சையையும் கூறிய மூத்தோர்களையும் கொண்ட இந்த நாடும் பண்பாடும் நமக்குப் பெருமிதத்தைத் தருமானால் அதை நம் தலைமுறைக்கு எடுத்துச் சொல்லித் தரும் இத்தகைய பாடல்களையும் படைப்புகளையும் நாம் நம் தலைமுறைக்குக் கற்றுத்தருவது தலையாய கடமையாகும். அதுவே நம் தலைமுறைக்கு நாம் தரும் ஆரோக்கியமான ஊட்டம் என்று கூறி நிறைவு செய்கிறேன்.

77. பாரதியின் சிறுகதைகள் வழி சமூக ஏற்றத்தாழ்வுகள்

சின்னச்செல்வம் ச.
முனைவர் பட்ட ஆய்வாளர்
கலசலிங்கம் பல்கலைக்கழகம்
கிருஷ்ணன் கோவில்

முன்னுரை

இந்த உலகில் பல்வேறு சிந்தனைகள், கண்டுபிடிப்புகள் இலக்கிய உலகில் தினம் தோறும் நிகழ்ந்தும் புதிய புதிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன. தன்னை இலக்கிய உலகில், நிலைநாட்டி வரும் எழுத்தாளர்களில், நவீன இலக்கியவாதிகளில் பாரதியும் குறிப்பிடத்தக்கவர். இந்த பூமி ஆனது ஒரு பக்கம் நீராலும் மற்றொரு பக்கம் நிலத்தாலும் நிரம்பி இருப்பது போல, மனிதர்களின் மனதில் ஏற்றத்தாழ்வுகள் இருந்த வண்ணமே உள்ளன. அதைப் பாரதி தனது கதைகளில் பொருத்திக் காட்டி உள்ளார். அந்த வகையில், பாரதியின் சிறுகதைகள் வழி சமூக ஏற்றத்தாழ்வுகள் என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சிறுகதையின் முன்னோடி பாரதி

நாம் எல்லாம் சிறுகதையின் முன்னோடி வ.வே.சு. ஐயர் எனவும் அவர் எழுதிய குளத்தங்கரை அரசமரம் சொன்ன கதையே முதல் சிறுகதை எனவும் நினைக்கின்றோம்; அதுவே உண்மையும் ஆகும். ஆனால், நான் ஏன் சிறுகதையின் முன்னோடி பாரதி என்று சொல்கிறேன் என்றால், அவர் முதன் முதலில் எழுதிய 'துளசி பாசிஸ்' எனும் சிறுகதையே தமிழில் வெளியான முதல் சிறுகதை ஆகும். ஆனால் வ.வே.சு. ஐயர் எழுதிய சிறுகதை, சிறுகதைக்கான இலக்கண அமைப்பைத் தழுவியதே அந்தக் கதை முதன்மையாக இருப்பதற்குக் காரணம்.

நான் ஆய்விற்கு எடுத்துக் கொண்ட சிறுகதைகள்

1. சந்திரிகையின் கதை, 2. ஆறில் ஒரு பங்கு, 3. வைசாக்தன் என்ற பண்டாரத்தின் கதை, 4. புதிய கோணங்கி, 5. வண்ணான் தொழில்.

பாரதி சிறுகதைகளில் சமூகச் சித்திரம்

பாரதியார் கவிதைகள், சிறுகதைகள் என அனைத்து துறைகளிலும் தனது புலமையைப் புகுத்தியவர். விடுதலைத் தீ, பெண்ணடிமை, சமூக எற்றத்தாழ்வுகள் ஆகியவை களைவதற்கான' முயற்சியைத் தனது எழுத்துக்களின் மூலம் வெளிப்படுத்திக்கொண்டே இருப்பார். அதிலும் பாரதியின் சிறுகதைகளில் வரும் சமூகச் சித்திரங்கள் மிகவும் புகழ் பெற்றது. அதில் ஒரு சில கதாபாத்திரங்களை ஆய்விற்கு உட்படுத்துவோம்.

சந்திரிகையின் கதையில் வரும், தொழுநோயாளியாகிய மகாலிங்கம் ஐயரும், அவரின் விதவைத் தங்கை விசாலாட்சியும் நம் அண்டை விட்டார் போல காட்சி தருகின்றனர். இன்றைய சூழலில் எப்படி ஒரு மருமணமாகாதவருக்கு இன்னல்கள் வருமோ, அதுபோலவே இவளுக்கு வரும் இன்னல்களை எல்லாம் எதிர்கொண்டு எதிர்நீச்சல் போட்டு வருகிறாள். இதே போல் *ஆறில் ஒரு பங்கு* கதையிலும் வரும் மீனம்மாள். மிக நேர்த்தியாக வீணை மீட்டக் கூடிய, அதே சமயம் உழைப்பிற்கு ஏற்ற ஊதியம் கிடைக்காத பெண். இவளின் திறமைக்கு ஏற்ற ஊதியம் இல்லை அதுவே உண்மையான கலைஞர்களின் நிலையும். இது ஒரு பக்கம் இருக்க, *வைசாக்தன் என்ற பண்டாரத்தின் கதையில்* பித்துப் பிடித்தவனாக வருபவனிடம் கூட நம் மக்கள் எந்த ஊர், என்ன மதம் என்று கேட்கின்றனர். ஆனால் அவனோ இறுதியில் செல்வம் மற்றும் உழைப்பு இரண்டும் சேர்ந்ததுதான் எங்கள் தெய்வம் என்று புத்தி பாராட்டுகிறான்.

மேலும் இன்று நம்மால் மறக்கப்பட்ட கைவிடப்பட்ட குடுகுடுப்பைக்காரர்கள். அவர்களும் இந்நாட்டின் மனிதசமூகத்தினர்தான். ஆனால், நாம் அவர்களை மனிதனாகக் கூடப் பார்ப்பது இல்லை. நாயைப் போல் பார்க்கின்றோம். நமது உடை வெளுக்க உழைக்கும் வண்ணான் தொழில் புரிவோரை அருவருப்பாகவும் பார்க்கின்றோம். அவர்கள் மீது தாக்குதலும் நடத்துகின்றோம். சரியான பணம் கொடுப்பதும் இல்லை. நாம் மட்டும் சமூக ஏற்றத்தாழ்வு பார்ப்பதை மட்டும் கைவிடவே இல்லை. அதை ஒரு கொள்கையாகவே கடைப்பிடித்துக் கொண்டு வருகின்றோம். காரணம் அவை நம்மிடையே திணிக்கப்பட்டு விட்டன. ஆண்டாண்டு காலமாய் இவை தொடர்கின்றன.. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைப்பது நம் கடமையாகும்.

சமூக ஏற்றத்தாழ்வில் பாரதி எடுத்துக்காட்டும் கவனம்

வேதபுரத்து குள்ளச்சாமி வண்ணான் தொழில் செய்து வருபவன். அவன் பேசினால் பைத்தியக்காரன் பேசுவது போல இருக்கும் என எல்லோரும் கூறுவார்கள். இதை பாரதி எப்படி எடுத்துக்காட்டுகிறார் என்றால் வண்ணான் தொழில் என்ற தலைப்பில் கதை எழுதி இருப்பார். அவர்களின் நிலைமையையும் விரிவாகவும் எடுத்துக்காட்டியும் இருப்பார். அவரிடம் ஒருவர் வண்ணான் என்றால் என்ன பொருள் என்று கேட்கின்றார். அதற்கு அவர் நாங்கள் சிவனைச் சுமந்து செல்பவர்கள் எனப் பொருள் கூறி இருக்கின்றார். ஆனால் இன்றைய ஏற்றத்தாழ்வு நிறைந்த உலகில் அதை யாரும் ஏற்பதில்லை என்பதே நிதர்சனமான உண்மை.

நாம் இன்றும் ஏற்றத்தாழ்வுடன் வாழ்கின்றோம் பார்க்கின்றோம். மேல்சாதி - கீழ்சாதி, அரசு ஊழியர் - தனியார் ஊழியர் - கூலித்தொழிலாளி, ஆண் - பெண், முதலாளி - தொழிலாளி இவ்வாறு நமக்குள்ளேயே வேறுபாடுகளை விதைத்தும் ஏற்றத்தாழ்வு எனும் செடியினையும் அறுவடை செய்து கொண்டும் வருகின்றோம். ஆனால், யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று பெருமைப்படுத்தியும், பெருமைப்பட்டும், பேசிக் கொண்டும், வாழ்ந்து கொண்டும் வருகின்றோம்.

இன்றைய ஏற்றத்தாழ்வு பாரதி ஒப்பீடு

எப்படி நாமெல்லாம் இன்றைய சூழலில் சாதியை, ஏற்றத்தாழ்வினைச் சுமந்து கொண்டே செல்கின்றோமோ; அதுபோலவே நாம் அதை அனுபவித்துக் கொண்டும் வருகிறோம். பெண்ணடிமை, கற்பழிப்பு, கீழ் சமூகத்தைச் சார்ந்தவர்க்கு மட்டும் தண்டனை, பணத்திற்கு ஜனநாயகம் பணிவிடை புரியும் நிலை, இதற்கு உதாரணமாக, பாரதிதாசன் எழுதிய புரட்சிக்கவி காவியத்தில் வரும் அமுதவல்லி உதாரண் என்ற இருவரும் காதல்புரிந்தனர். ஆனால் தண்டனை மட்டும் உதாரணனுக்கு. காரணம் அவன் ஒரு கவிஞன். அமுதவல்லியோ மன்னன் மகள். மன்னன் மகளுக்கு எப்படித் தண்டனை கொடுக்க முடியும் என்று உதாரணைக் கொலைக் களத்திற்கு அழைத்து வரச் சொல்கின்றார் அரசர். அவனை வெட்டும்படி கட்டளையிடுகிறார். இந்த புரட்சிக்கவி காவியத்திலும் ஏற்றத்தாழ்வுகள் உலாவி வருவதை நாம் காணலாம். சமத்துவ விழிப்புணர்வு, சாதியின்மை, ஏற்றத்தாழ்வில்லா வாழ்வு. இதையே பாரதி இன்றையச் சமூகத்தில் எதிர்பார்த்ததும் அவரின் நோக்கமும் ஆகும். அவரின் மனதைத் தாக்கியதும் என் மனதைத் தாக்கியதும் இதுதான்.

முடிவுரை

"ஒன்றுண்டு மானிட சாதி- பயின்று
உண்மை கண்டவர் இன்பம் அடைவர்"

இந்தப்பாடல் பாரதி ஆய்வுகள் எனும் நூலில் இடம்பெற்று உள்ளது. இதைப் படித்தும் ஏற்றத்தாழ்வுகள் குறைந்தபாடில்லை.

"சாதிகள் இல்லையடி பாப்பா- இருப்பினும்
உயர் சஞ்சலம் ஏனடி பாப்பா"

சாதிகள் இல்லை, மதம் இல்லை, ஏற்றத்தாழ்வுகள் இந்த சமூகத்தில் இல்லவே இல்லை என்று கல்வி நிலையங்களில் எல்லாம் பாடம் நடத்துகின்றார்களே! ஆனால், சாதிச் சான்றிதழ்

மட்டும் கேட்கின்றார்களே இது என்ன நியாமடி பாப்பா; சமத்துவச் சான்று இன்னும் கொண்டு வரவில்லையே பாப்பா என்று கல்வி நிலையங்களில் இவ்வாறு பாடம் நடத்தினால் நன்றாக இருக்கும். இவற்றையெல்லாம் நாம் மாற்ற வேண்டுமென்றால் சமத்துவச் சிந்தனையை உருவாக்க சிந்தித்துக் கொண்டு இருக்க வேண்டும். சமூக ஏற்றத்தாழ்வு என்னும் வேரினைக் களைய வேண்டும்; அதை வேரோடு கிள்ளி எறிய வேண்டும். ஆனால் நாம் அதைச் செய்யாமல் வீணாகச் சிந்தித்துக் கொண்டுள்ளோம். ஆனால் பாரதி இன்று நாம் சிந்தித்த இந்தச் சிந்தனையை முன்பே அவன் சிந்தித்து விட்டுச் சென்றுவிட்டான். நாம் அவன் சிந்தனையின் வழி உலகை மாற்றுவோம் வாருங்கள்.

அடிக்குறிப்புகள்

1. பாரதியார் கதைகள், பக், 167-168. பூம்புகார் பதிப்பகம்.
2. தினமலர் செய்தித்தாள், பேராசிரியர் ய. மணிகண்டன், ப, 4. ஒருபக்கக் கட்டுரை. பாரதி சிறுகதை பற்றி.
3. பாரதியல் ஆய்வுகள், ப, 227. க. கைலாசபதி

துணைநூற்பட்டியல்

1. பாரதியார் கதைகள், பூம்புகார் பதிப்பகம், நாதன் கம்பெனி, 109, மன்னர்சாமி கோவில் தெரு, சென்னை-600013.
2. பாரதி ஆய்வுகள், க. கைலாசபதி, காலச்சுவடு பதிப்பகம், திருநெல்வேலி.
3. புரட்சிக் கவி மூலமும் உரையும், பாரதிதாசன், ஆசிரியர் - கமலா முருகன், பாரி நிலையம், பிராட்வே, சென்னை.

78. பாரதியாரின் பெண்ணியச் சிந்தனைகள்



முனைவர் அ.இந்துமதி
இணைப்பேராசிரியர்
தமிழ்த்துறை
சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி,
சரவணம்பட்டி, கோயமுத்தூர்

முன்னுரை

பாட்டுக்கொரு புலவன் பாரதி பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு என்று இந்திய நாட்டைப் பெருமைப்படுத்தியவர். நாட்டு விடுதலைக்காகவும், சமுதாயச் சீர்கேடுகளைக் களையவும், மூடநம்பிக்கைகளை அழிக்கவும் பாடுபட்டவர். பெண்களின் அடிமை நிலையைக் கண்டு மனம் வருந்தி பெண்கள் அனைத்து உரிமைகளையும் பெற்று சமுதாயத்தில் ஆண்களுக்கு இணையாக இருக்க வேண்டும் என்ற விருப்பம் கொண்டு தனது பெண்கள் குறித்தான சிந்தனைகளைத் தமது கவிதைகள், கதைகள், கட்டுரைகள் வாயிலாக வெளிப்படுத்தி உள்ளவனவற்றைப் பற்றி எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

காலம் காலமாக ஏதேனும் ஒரு வகையில் பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டும் பலவிதமான இன்னல்களுக்கும் உள்ளாகி வருவதைக் காண்கின்றோம். பாரதி வாழ்ந்த காலத்தில் குழந்தைத் திருமணம், வரதட்சணை, கணவனாலும் அவனது குடும்பத்தினராலும் ஏற்படும் பிரச்சனைகள், கணவனை இழந்த பெண்கள் படும் துன்பங்கள் போன்றவை நிகழ்ந்தன. இவற்றைக் களைய மக்களுக்கு விழிப்புணர்வு ஊட்ட வேண்டும் என்று கருதிய பாரதியார் பெண்களைக் குறித்து பலவிதமான கருத்துக்களை எடுத்துரைக்கின்றார்.

ஆண் பெண் சமத்துவம்

ஆண்களும் பெண்களும் சமத்துவம் பெற வேண்டும் என்று விரும்பிய பாரதியார் பெண்கள் பகுத்தறிவும் சிந்தனையும் மிக்கவர்கள் அவர்களை அற்பப் பொருளாகக் கருதிய சமுதாயம் உயராது என்பதால் தையலை உயர்வு செய் என்றார்.

"ஆணும் பெண்ணும் ஸமானம். யாரும் யாரையும் அடிமையாக நடத்தினால் நாளை நம்மையேனும் நம்முடைய மக்களையேனும் பிறர் அடிமையாக நடத்துவார்கள்."

(பாரதியார், பாரதியார் கட்டுரைகள் ப.170)

என்ற வரிகளின் மூலம் பெண்களை இழிவு படுத்தி ஆண்கள் தனக்குத் தானே இழிவை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என்று அறிவுறுத்துகின்றார் பாரதியார்.

மேலும் ஆணும் பெண்ணும் புறத்தோற்றத்தாலும் மனப் போக்குகளாலும் உயர்வு தாழ்வு எண்ணக்கூடாது என்பதை,

"ஸ்த்ரீகளுக்கு ஜீவன் உண்டு, மனம் உண்டு, புத்தி உண்டு ஐந்துபுலன்கள் உண்டு. அவர்கள் செத்த பாத்திரங்களல்லர் உயிர் உள்ள செடி, கொடிகளை போலவுமல்லர் சாதாரணமாக ஆண்மாதிரியாகவே தான். புறவுறுப்புகளில் மாறுதல். ஆத்மா ஒரே மாதிரி"

(பாரதியார், பாரதியார் கட்டுரைகள் ப.152)

என்று ஆண்களை உயர்வாகவும், பெண்களை அடிமைகளாகவும், தாழ்வாகவும் எண்ணக்கூடாது என்கிறார். பெண்கள் அடிமைத்தனத்தைக் களைந்து உயர வேண்டுமெனில் அறிவில் சிறக்க வேண்டும் என்ற பாரதி,

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்
அறிவில் ஓங்கி இவ்வையம் தழைக்குமாம்.." என்றும்

நாணமும் அச்சமும் நாய்களுக்குத்தான் தேவை, பெண்களுக்கு அவை அவசியம் இல்லை. மெய்யறிவும், உயர்வான அறங்களும், தைரியமும், தன்னம்பிக்கையும், சுதந்திரமுமே பெண்களுக்கு வேண்டிய பண்புகள் என்பதை,

"நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்.."

(பாரதியார், பாரதியார் கவிதைகள் ப.161)

என்ற வரிகளின் மூலம் எடுத்துரைப்பது புலனாகின்றது.

பெண் கல்வி

ஆண்களோடு பெண்களும் சமத்துவம் பெற வேண்டுமெனில் பெண்களுக்குக் கல்வி அவசியம் என்பதை வலியுறுத்தியவர் பாரதி. கல்வி என்பது மனித சமுதாயத்தை வளப்படுத்தும் வல்லமை படைத்தது. தனி மனித வாழ்வுக்கு மட்டுமல்ல குடும்ப வாழ்விற்கும் கல்வி அவசியமானதாகும். குடும்பத்தை வளமாக்குபவள் பெண். அவளின் அறிவு மேம்பட்டால் இல்லறம் நல்லறமாகும். பெண்கள் நன்னிலை அடைந்தால் நாடு மேலும் முன்னேறும் என்பதை உணர்ந்த பாரதியார்,

"பெண்களறிவை வளர்த்தால்-வையம்
பேதைமை அற்றிடும் காணீர் "

என்றும்

"பெண்மை யறிவுயரப் பீடு ஓங்கும் பெண்மை தான்
ஒண்மையுற ஓங்கும் உலகு"

(பாரதியார், பாரதியார் கவிதைகள் ப.161)

என்றும் உரைத்தார்.

புத்தகத்தைப் பெண்கள் தீண்டுதலே பாவம் என்று எண்ணியவர்கள் ஒழிந்து விட்டனர் என்றும், பெண்களை வீட்டினிலே அடைத்து சிறைப்படுத்துவோர் இன்று அவமானத்தால் தலைகுனிந்தார் என்பதையும்,

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்.."

(பாரதியார், பாரதியார் கவிதைகள் ப.163)

ஆட்சி அதிகாரங்களைக் கையாளவும், சட்டங்களை இயற்றவும் அறிவில் ஆண்களுக்குப் பெண்கள் தாழ்ந்தவர்கள் இல்லை என்பதை,

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்.."

(பாரதியார், பாரதியார் கவிதைகள் ப.164)

என்ற வரிகள் எடுத்துரைக்கின்றன.

கற்புநிலை

கற்பு என்று சொல்லப்படுவது பெண்ணைச் சார்ந்ததாகவே காலம் காலமாகப் பார்க்கப்படுகிறது. "உயிரினும் நாணம் சிறந்தது, ஞானத்தைக் காட்டிலும் செயிர்தீர் கற்பே சிறந்தது" என்று நமக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனாலும் ஆணுக்கென்று ஒரு நெறியும் பெண்ணுக்கென்று ஒரு நெறியுமே இன்று வரையிலும் பின்பற்றப்படுகின்றது. ஆனால் இதனைத் துணிந்து கண்டித்தவர் பாரதியார். ஆணுக்கும் பெண்ணுக்கும் பொதுவானது கற்பு என்று குறிப்பிடுபவர், "கற்பு நிலை என்று சொல்ல வந்தார் இரு.." என்கின்றார்.

(பாரதியார், பாரதியார் கவிதைகள் ப.264)

திருமணத்தில் பெண்கள் சுயமாக முடிவெடுக்க இயலாததை வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம் என்றும் மாடுகளைத் தொழுவத்தில் கட்டிப் போடுவதைப் போல் பெண்களையும் மாடுகளைப் போன்றே எண்ணுவதையும் கண்டிக்கின்றார் பாரதியார். இதனை,

"மாட்டை அடித்து வசக்கி தொழுவினில்.."

(பாரதியார்,பாரதியார் கவிதைகள் ப.164)

என்று பெண்களின் விடுதலையைப் பற்றியும் அவர்கள் அடைய வேண்டிய சிறப்புகளைப் பற்றியும் நமது கவிதைகள் மூலம் பாரதியார் எடுத்துரைப்பது அறியலாகின்றது. மேலும் தமது கட்டுரையில் ”பெண்கள் பதிவிரதைகளாக இருக்க வேண்டும் என்றே எல்லோரும் விரும்புகிறார்கள். ஆனால் ஆண்கள் ஒழுக்கமானவர்களாக இல்லை. பதிவிரதை இல்லை என்று ஒரு பெண்ணை வதைத்து துன்புறுத்தி தாழ்வுபடுத்தி அவமானப்படுத்துகின்றார்கள். ஆண் பிள்ளைகள் ஒழுக்கம் தவறினால் பெண்கள் எப்படி பதிவிரதைகளாக இருக்க முடியும்? என்று கேள்வி எழுப்பும் பாரதியார் மிளகாய் பழச்சாமியார் என்ற கதையிலும் பெண் சாமியாரின் வாயிலாகவே இதனை உணர்த்துகின்றார்.

மூடநம்பிக்கை

பெண்களுக்கு இழைக்கப்படும் கொடுமைகளில் ஒன்று பெண்களைத் தெய்வமாகவும் அவதாரமாகவும் கருதும் மூடநம்பிக்கை ஆகும். 20 வயதில் விதவையான ஒரு பெண்ணை முத்துப்பேட்டை தெலுங்கு நெசவுத் தொழிலாளர்கள் அங்காளியம்மனின் அவதாரமாகக் கருதி அவளை வணங்குவதையும், அவள் மனம் விடுதலையை நாடி முறையிடுவதாகவும் மிளகாய் பழச்சாமியார் என்ற கதையில் பதிவு செய்துள்ளார் பாரதியார்.

பெண்ணுரிமை

பெண்கள் அனைத்து உரிமைகளையும் பெற வேண்டும் என்று விரும்பும் பாரதியார் சுயாட்சி இயக்கத்தைத் தோற்றுவித்த அண்ணி பெசன்ட் அம்மையாரைப் போன்று தமிழ்ப் பெண்களும் அரசியலில் ஈடுபட வேண்டும் என்று விரும்புவதோடு பெண்கள் சுயமாக தொழில் செய்ய வேண்டும் என்றும் கைத்தொழில் வியாபாரம் போன்றவற்றைச் செய்ய வேண்டும் என்பதையும்,

”இங்ஙனம் நமது பெண்களுக்கு ஆரம்பப்படிகள் காட்டினோமானால் பிறகு அவர்கள் தனது முயற்சியிலே பரிபூரண விடுதலை நிலைமையை எட்டி மனுஷ்ய ஜாதியைக் காப்பாற்றுவார்கள். அப்போது தான் நமது தேசத்துப் பூர்வீகரிஷி பத்தினிகள் இருந்த ஸ்திதிக்கு நமது ஸ்திரீ கள் வர இடமுண்டாகும்.” என்று கூறுகின்றார் பாரதியார் .

(பாரதியார், பாரதியார் கட்டுரைகள் ப.111)

“தமிழுக்கு சுயராஜ்யம் கிடைத்தால் அப்போது பெண்களுக்கும் ராஜாங்க உரிமைகளிலே அவசியம் பங்கு கொடுக்க வேண்டும். சென்ற வருஷத்து காங்கிரசபைக்கு தலைமை வகித்தவர் மிசஸ் அன்னிபெசன்டு என்ற ஆங்கிலேயே ஸ்திரீ என்பதை மறந்து போகக்கூடாது” என்று எடுத்துரைக்கின்றார் பாரதியார்.

(பாரதியார், பாரதியார் கட்டுரைகள் ப.111)

நிறைவுரை

பெண்கள் அன்பு, அறிவு, பொறுமை, அடக்கம், தாய்மை போன்ற நற்பண்புகளுடன் விளங்குபவர்கள். ஆண் பெண் சமத்துவம், உரிமைகள், நிறைந்த கல்வி ஆகியவை பெற்ற புதுமைப் பெண்களாகப் பெண்கள் திகழ வேண்டும் என்று அன்று பாரதி கண்ட கனவு இன்று சாத்தியமாகியுள்ளது, பாரதி கண்ட கனவு இன்று பலித்து விட்டது என்றே கூறலாம். இதற்கு அடித்தளமாக அமைந்தவை பாரதியின் எழுத்தாளுமையும் சீரிய சிந்தனையுமே! அவரது படைப்புகள் நூற்றாண்டு கடந்தும் முன்னோடிப் படைப்புகளாகத் திகழ்கின்றன. அவற்றுள் குறிப்பாக, பாரதியின் பெண்ணியச் சிந்தனைகள் இன்றளவும் போற்றத்தக்கவைகளாக அமைந்திருப்பது இக்கட்டுரையின் மூலம் புலனாகின்றது.

துணை நின்றவை

1. பாரதியார் கவிதைகள், முதற்பதிப்பு, சீதை பதிப்பகம், செப்டம்பர் 2010
2. சி சுப்பிரமணிய பாரதியார் கதைகள், கதைக்கொத்து, தமிழ் இலக்கிய மின் தொகுப்புத் திட்டம்
3. பாரதியார் கட்டுரைகள், முதற்பதிப்பு, பழனியப்பா பிரதர்ஸ் வெளியீடு, 2022

79. பல்சமய நோக்கில் பாரதியின் பக்தி

முனைவர் ச.தனலெட்சுமி
உதவிப்பேராசிரியர், தமிழ் உயராய்வு மையம்
தி ஸ்டாண்டர்டு ∴பயர் ஒர்க்ஸ் இராஜரத்தினம்
மகளிர் கல்லூரி(தன்னாட்சி) சிவகாசி.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியத்தில் தனது கவிதைத் திறத்தால் ஒப்பற்ற கவிஞராகத் திகழ்ந்தவர் பாரதியார். பாரதி இயல்பாகவே பக்தியாகிய கொடியில் மலர்ந்த பூவாவார். அவர் விளைந்த மண் உண்ட காற்று அனைத்தும் பக்தி மணம் வீசக்கூடியது. இறைவனால் பெண்ணுருவாகக் காணும்போது பராசக்தியையும், ஆண் உருவாகக் காணும்போது கண்ணனையும் வழிபடுவார் பாரதி. இறைவனை நாயகனாகவும் உயிர் துணை நாயகியாகவும் காட்டும் பக்திப் பாடல்கள் தமிழ் மொழியில் வெகுவாகக் காணப்படுகின்றன. ஆழ்வார் பாடல்களில் இறைவனைப் பலவாறாகக் கண்டு பரவசம் அடைந்ததை பாரதி அறிந்து தன் கண்;ணன் பாட்டில் அவற்றின் தாக்கத்தை இடம் பெறச்செய்திருக்கிறான். தெய்வப் பாடல்கள் என்ற பகுப்பில் ஏறக்குறைய நூறு பாடல்கள் பாடியுள்ளார். பாரதியின் பக்தி நிலையினை பல்சமய நோக்கில் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பக்தி

பக்தி என்ற சொல்லுக்கு வின்ஸ்லோ அகராதி விசுவாசம் வழிபாடு அன்பு பற்றுறுதி அன்புப் பிணைப்பு சமய சட்டங்களுக்கு ஏற்ப வாழ்தல் இறை இயல் கோட்பாட்டுடன் இயைந்த வாழ்க்கை மிக மேலான நல்லொழுக்கம் என்று பொருள் தரும். இறைவன் மீது கொண்ட அன்பு. கைம்மாறு கருதாமல் அன்பு செய்வதைப் பக்தி எனக் கொள்கிறோம். இறைவன்பால் பக்தி இருநிலையில் மேற்கொள்ளப்படுகிறது. ஒன்று அன்பு உணர்ச்சி வசப்படும். மற்றொன்று அறிவு உணர்வு வசப்படும். இறைவனிடம் வழிபடும் பக்தன் முதல்நிலையில் கைம்மாறு கருதியே விண்ணப்பம் செய்கின்றான். இதனை “எண்ணிய முடிதல் வேண்டும்.... நசித்திடல் வேண்டும் என்கிறார் பாரதி. மகாசக்திக்கு விண்ணப்பம் செய்யும் பாரதி உலகியலில் ஈடுபட்ட உயிர் தான் நினைத்த காரியம் கைகூட வேண்டும். எனக்கும் தெளிந்த அறிவும் திண்ணிய மனஉறுதியும் வேண்டும். இவ்வுயிர் செய்த பாவம் எல்லாம் உன் கருணையால் கரைந்து போகவேண்டும் என இறைவனிடம் கோரிக்கை வைப்பதாக அமைகின்றது. பக்தியின் பயன் பற்றிக் கூறவந்த பாரதியார்.

“பக்தியினாலே - இந்தப்
பாரினில் எய்திடும் மேன்மைகள் கோடி”

எனத் தொடங்கிப் பாடுகிறார். சித்தம் தெளியும். செய்கையனைத்திலும் செம்மை பிறந்திடும் வித்தைகள் சேரும். நல்ல வீரர் உறவு கிடைக்கும் என்று பற்பல பயன்களைப் பலபடப் பேசிச் செல்கின்றார் இறையடியார்கள். இறையனுபவம் மிகுந்தவர்களாய்த் தங்களது பக்தி அனுபவத்தை உறவுத் தொடர்களில் வெளிப்படுத்தியிருப்பதைக் காணமுடிகின்றன.

பரம்பொருள் ஒன்று

பலவேறு வடிவமைத்து வணங்கினாலும் பல்வேறு மதங்கள் பல்வேறு பெயரிட்டு அழைத்தாலும் பரம்பொருள் ஒன்றே. எவர் எந்த மார்;க்கத்தைப் பின் பற்றினாலும் இறுதியில் அடைவது அந்த எல்லையற்ற பரம்பொருளைத்தான் பரம்பொருள் என்பது உயிருள்ள உயிரற்ற அனைத்திலும் நிறைந்து உலகம் முழுவதும் ஊடுருவி நிற்கிறது. இத்தகைய பரம்பொருளைத் தாயுமானவர், “அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமாய்” என்றும் “பார்க்குமிட மெங்கும் ஒரு நீக்கமற” என்றும் பேசுகிறார். இவ்வகையில் ‘பரம்பொருள் ஒன்று நாமதன் மக்கள்’ என்று பாரதி வலியுறுத்துகிறார்.

விநாயகர் துதி

விநாயகர் நான்மணிமாலையில் நாற்பது பாடல்கள் விநாயகர் மேல் பாடுகின்றார். “வானமுண்டு மாரியுண்டு’ என்று அழகியல் நோக்கில் பாடுகிறார். “விரைந்துன் திருவுளம் மென்மீது’ என்று விநாயகரை வேண்டும் பாரதியார் பலவிடங்களில் அவரோடு சக்தியையும் புகழ்ந்து பாடுகிறார்.

முருகன் துதி

முருகன் மேல் ஆறு பாடல்களைப் பாடியுள்ளார் பாரதி. 'வருவாய் மயில் மீதினிலே வடிவேலுடனே வருவாய் என்று பாடும் பாரதியார் முருகனது வீரதீரச் செயல்களையும் நிரலாகப் பாடிச் சென்றுள்ளார். வேடர் மகளை விரும்பித் தவவேடம் புனைந்து திரிந்தமை மறையோடு தெரிந்த முதல்வன் குரு என்றிட மெய்ப்புகழ் எய்தியமை முதலியன செய்திகளைப் புகழ்வார். முருகன்மேல் காதல் கொண்ட பெண்கிளியைத் தூதனுப்பிய பாடல் ஒன்றும், வள்ளிமேல் காதல் கொண்ட முருகனைப் பாடியும் 'வேலவா' என விளித்தும் கூப்பிடுகின்றார். 'வில்லினை யொத்த புருவம் வளைத்தனை..' என்னும் பாடலின் வழி அறியலாம்.

இலட்சுமி தேவி

இலட்சுமியின் புகழை மண்ணிலும் விண்ணிலும் கடலிலும் வேள்வியிலும் மதியிலும் புதுமையிலும் பண்ணிலும் பாட்டிலும்

'நண்ணிய தேவிதனை - எங்கள்
நாவிலும் மனத்திலும் நாட்டிடுவோம்'

எனப் புகழ்கின்றார் பாரதி. மேலும்

'மாதர் தீங்குரற் பாட்டி லிருப்பாள்
மக்கள் பேசும் மழலையில் உள்ளாள்'

என்று சரஸ்வதியின் புகழையும் அழகியல் நோக்கில் பாடி இருப்பதை இப்பாடல் வழி அறியமுடிகிறது.

சக்தி வழிபாடு

இயற்கையில் மறைந்தும் வெளிப்பட்டும் கிடக்கும் பேராற்றலை உணர்த்தும் ஒரு குறியீடாகச் 'சக்தி'யைக் கொண்டுள்ளார். பாரதியாரின் பாடல்களில் சக்தி வழிபாடே மேலோங்கி நிற்பதைக் காணலாம். சமயப் பாடல்களில் எண்ணிக்கையில் மிகுந்து காணப்படுபவை சக்திமீது பாடியுள்ள பாடல்களாகும். பாரதியாரின் விருப்பக் கடவுளாகச் சக்தி விளங்குகிறது. சக்தி வழிபாட்டினை விளக்கிக் கட்டுரைகளும் வரைந்துள்ளார். 'விக்கிரமாதித்த மன்னர் மகாகாளியை வழிபாடு செய்து பெருமை கொண்டதையும் 'பவானி' என்னும் பெயரில் காளிதேவியை வணங்கியதையும் கட்டுரைகளில் குறிப்பிட்டுள்ளார். 'சக்திதாசன்' 'காளிதாசன்' என்னும் புனைபெயர்களை அவர் கொண்டிருந்தமையும் அவரது இல்லத்தில் நடைபெற்ற சமயச் சடங்குகளில் சக்தி வழிபாடே முதன்மையாக அமைந்திருந்தமையும், சக்திக் கடவுளின் மிது அவர் கொண்டிருந்த ஈடுபாட்டினைப் புலப்படுத்துகிறது. "வாழ்வு பெருக்கும் மதியே சக்தி" என்று சக்தியின் ஆற்றலை வியந்து பாராட்டுவார். கனியிலே சுவையும், காற்றிலே இயக்கமும் கலந்தாற்போல அனைத்திலும் கலந்த சக்தியிடம் பல பொருள் வேண்டிப் பாடுகின்றார் பாரதி. காணி நிலம் வேண்டும் எனத் தொடங்கி, "காட்டு வெளியினிலே - அம்மா நின்றான்" வேணும், 'வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே' என்றும் வேண்டுகின்றார். சக்தியிடம் தன் மனம் ஈடுபட வேண்டிப் பாடும் பாரதி "ஓம் சக்தி சக்தி என்று சொல்லு கெட்ட சஞ்சலங்கள் யாவினையும் கொல்லு சக்தி சக்தி சக்தி என்று சொல்லி அவள் சந்தியிலே தொழுது நில்லு' என்பார். பராசக்திக்கு அவர் ஆட்பட்டு நின்ற நிலையை அவரது வசன கவிதை ஒன்று பின்வருமாறு உணர்த்துகின்றது.

'பராசக்தியின் பொருட்டு இவ்வுடல் கட்டினேன்'

என்று பராசக்தியை அவர் தம் வயமாக்கிக் கொண்டபின் ஏற்பட்ட அகத்தூண்டுதல் நிலையைக் காணமுடிகிறது.

'எண்ணத்திருக்கும் எரியே சக்தி'
'செய்யுங் கவிதை பராசக்தியாலே செய்யப்படுங்காண்'
'பாட்டினிலே சொல்லுவதும் அவன் சொல்லாகும்!'

இவை போன்ற பாடல் அடிகள் பாரதியாரின் பக்தியினை உணர்த்துகின்றன என்பதை விட அவரது உள்ளத்தில் நின்று கவிதை படைக்கத் தூண்டிய ஆற்றல் ஒன்று என்பதைக் காண அறியலாம். 'பாரதி 66' என்னும் கவிதைப் பகுதியில் பராசக்திக்கும் தமக்கும் உள்ள தொடர்பினையும் பராசக்தியின் இயல்புகளையும் பற்றி விளக்குகிறார் பாரதியார்.

காளிதேவி

காளியினை ஐந்து பாடல்களில் பாடுகிறார். காளியின் 'ஊழிக்கூத்தினை' ஒலி நயம்படப் பாடும் புலவர். 'நான் விரும்பின காளி தருவாள்' என்று நம்பிக்கையுடன் பாடினார். உலகத்து நாயகியாம் முத்துமாரி அம்மனைச் சரண் புகுந்து மனம் வெளுக்க வழிகேட்டுப் பாடுகின்றார். 'நம்பினோர் கெடுவதில்லை நான்கு மறை தீர்ப்பு..' என்று தேசமுத்து மாரியம்மையைத் துதிக்கின்றதை அறியலாம்.

கண்ணன் பற்றிய பாடல்கள்

பாரதியாரின் பக்தி உணர்வினை உணர்த்தும் மற்றொரு கருவி கண்ணன் மீது அவர் பாடல்கள். இப்பாடல்களை இரு வகையாகப் பிரிக்கலாம். 'தோத்திரப் பாடல்கள்' என்னும் தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள பாடல்களில் காணப்படும் கண்ணன் பற்றிய பன்னிரண்டு பாடல்கள் ஒருவகை. 'கண்ணன் பாட்டு' என்னும் தலைப்பில் அமைந்துள்ள இருபத்து மூன்று பாடல்கள் மற்றொரு வகை. இவ்விரு வகைப் பாடல்களும் அவரது பக்தி அணுகுமுறையை உணர்த்துகின்றன. கண்ணன் பாட்டில் கண்ணனைத் தோழனாக- தாயாக- தந்தையாக- சேவகனாக- அரசனாக- சீடனாக- குருவாக- குழந்தையாக- விளையாட்டுப் பிள்ளையாக- காதலனாக- காதலியாக- ஆண்டானாக- குலதெய்வமாகப் பாவித்துப் பாடியுள்ளார். கண்ணனைத் தாயாகப் பாடுகையில் கவிஞர் சேயின் உணர்வினைப் பெற்றுள்ளார். சேவனாகப் பாடுகையில் அவர் ஆண்டாவனாகவும், குருவாகப் பாடுகையில் சீடனாகவும் தம் உணர்வினை மாற்றி அமைத்துக் கொண்டுள்ளார். இவ்வாறே ஒவ்வொரு பாடலிலும் ஒவ்வொரு வகையாகத் தம்மைப் மாற்றிக் காண்பித்திருக்கிறார் பாரதி.

கண்ணன் துதி

சக்தியைப் பாடுதல் போலவே கண்ணன் மேலும் தன் கருத்தை ஊன்றினார். 'கரும்பெரும் மேகங்கள் காணின் கண்ணனென்றே பறக்கும்'[1] என்ற நம்மாழ்வார் பாசுர அடி பாரதியிடம் 'காக்கைச் சிறகினிலே நந்தலாலா' என வருகிறது. 'அறியுஞ் செந்தீயைக் தழுவி அச்சுதன்'[2]
என்றே மெய் சேரும் என்ற ஆழ்வார் வாக்கு. 'தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா' என்று பாடுகிறார். பார்க்கும் மரங்களின் பச்சை நிறத்திலும் கேட்கும் மொழியின் கீதத்திலும் இறைவனைக் காணும் நிலை போற்றத்தக்கது. இயற்கையுடன் இயைந்தது இறைவன்' என்பதை விவரிக்கும் பொருட்டு இப்பாடலைத் தந்துள்ளார். பல்வேறு நிலைகளில் இறைவனைப் பாடிய போதிலும் இறைவனை அகப்பொருள் மரபுமுறையில் நாயக நாயகி முறையில் பாடுவதே பாரதியாருக்கு இயல்பாகவும் விருப்பமானதாகவும் உள்ளதைக் காணலாம். சரியன் சந்திரன் நட்சத்திரம் மேகம் உயிரினங்கள் எல்லாம் இயற்கையோடு இயைந்த தெய்வங்கள். எல்லா இடத்திலும் நீக்கமற நிறைந்து இருக்கிறான். இறைவன் என்பதை எடுத்தியம்புகின்றார் தேசியக்கவி பாரதியார்.

கண்ணன் என் தாய்

இறைவனின் தாய்மை உணர்வைப் பக்திக் கவிஞர்கள் பல படிநிலைகளில் வைத்துப் பாடுவார்கள். அவ்வழியில் கண்ணனைத் தாயாகக் கொண்டு பாடுகிறார். தாயின் இயற்கை அன்பினை வெளிப்படுத்தித் தாயின் இயல்புகளை இயற்கைத் தாயாக உருவகித்துக் கூறுகின்றார். 'வானத்து மீன்கள் உண்டு - சிறு..' கடல் மலை பூமி வானம் நீர் நெருப்பு என்ற எல்லாவற்றையும் தாயாக இங்கு உருவகித்துப் பங்கேற்க வைத்துத் 'தாய்' என்ற உறவு முறையுடன் வெளியிடுகிறார். கண்ணனுக்குரிய தாயானவள் குழந்தையைப் பேணி வளர்ப்பதிலுள்ள உலகியல் நுட்பங்கள் அகிலக்காட்சி பொம்மை விளையாட்டு முதலானவற்றைக் கூறி இருந்த தாய் தமக்குக் கொடுத்தவற்றைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். பக்குவம் பெற்ற குழந்தைக்குக் கூறுவது போல் பாடல்களை இத்தாய் அமைத்துக் கூறுவதில் பக்திச் சிறப்பு விளங்குகிறது.

'சாத்திரம் கோடி வைத்தான்- அவை ' என்றும்
'வேண்டிய கொடுத்திடுவாள்- அவை '

என்றும் தாயை இயன்ற இடத்திதெல்லாம் போற்றுவதையும் கண்ணாகிய தாய் தன் குழந்தைகளின் நலத்தை எப்போதும் நாடுவதையும் காணலாம்.

தந்தை

கண்ணனைத் தந்தையாகக் கண்ட சமயச் சான்றோர்களைப் போன்று பாரதி தானும் கண்ணனைத் தந்தையாகக் கண்டு மகிழ்ந்தார். பாரதியின் பார்வையில் கண்ணன் தந்தையாக மிகப் பெரிய ஆற்றலோடு விளங்குகிறார் என்பதை 'நாவு துணிகுவதில்லை - உண்மை' என்பதில் இறைவன் ஏழைமக்களைத் தோழமை கொள்வதற்காகவும் செல்வம் நிறைந்தவர் தம்மைக் கண்டு சீறி விழுவதாகவும் உள்ள பக்தி மரபு புலனாகிறது. 'நன்னுஆழ்கால் நல்லவாக் காண்பவர் அன்று'[3] வள்ளுவரது கூற்றிற்கிணங்க பாரதியின் கண்ணனும் இன்பத்தை இனிமையென்றும் துன்பத்தை இனிமையில்லை என்றும் எண்ணுவதில்லை என்ற நிலையினைக் காட்டியுள்ளார். கண்ணனை இளமைக் காலத்தில் காட்டி அவன் உயிர்களிடத்தில் கொள்ளும் முறையைச் சொல்லி இன்பத்தை எண்ணுபவர்களுக்கு தந்தையாக உள்ளான் என்கிறார்.

குழந்தை

குழந்தையாகப் பார்க்கும் பொழுது கண்ணனைக் கண்ணம்மாவாக உருவகப்படுத்தியுள்ளான். சின்னஞ்சிறு கிளியாக ஓடி ஆடி அன்னையின் களிப்பிற்கு ஆளாடும் கண்ணம்மாவை பிள்ளைக் கனியமுதே - கண்ணம்மா! என்று பாடுகிறார். பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தையாக்கி தம்மைத் தாயாக வைத்துப் பாடிய பாசுரங்கள் பாரதியை மிகவும் ஈர்த்துள்ளன. கண்ணன் மீதுள்ள தாய்ப்பாசத்தை 'தத்தம் மக்கள் அழுது சென்றால்" என்றும் (பெரியாழ் திரு. 22.3) 'முல்லைக் சிரிப்பாலே – எனது' என்று பலவாறாகக் கூறிப் பாரதி நமது மனக்காட்சியில் கண்ணனைக் குழந்தையாகத் தவழவிடுகிறான்.

விளையாட்டுப் பிள்ளை

கண்ணனை விளையாட்டுப் பிள்ளையாக குறிப்பிடும் போது 'தின்னப் பழங்கொண்டு தருவான்...' என்றும் கண்ணன் செய்யும் குறும்புகளைக் கூறுவதோடு அவன் எல்லோருக்கும் நல்லவன் போலே நடிப்பான் என்றும் பிள்ளைகள் செய்யும் குறும்பை வெளிப்படுத்துகிறார்.

பிறசமயக் கடவுளர்

பாரதியார் பிறசமயக் கடவுளரையும் வாழ்த்திப் பாடக் காண்கிறோம். யேசுகிறிஸ்து அல்லா ஆகியோர் அருட்செயலையும் போற்றுகின்றார். அனைத்துக் கடவுளையும் வாழ்த்திப் பரவும் பாரதியின் உள்ளம் எல்லாக் கடவுளையும் ஒருவரெனக் காண்கின்றது.

'தீயினைக் கும்பிடும் பார்ப்பார் - நித்தம்
திக்கை வணங்கும் துருக்கர்'

என்று சர்வமய சமரத்தைப் பாடுகின்றார். "யாமறிந்த மதங்கள் பல உளவாம் அன்றே யாவினுக்கும் உட்புதைந்த கருத்திங்கு கொன்றே' என்றும் அவர் கூறுவார். பல கடவுளரைப் பாடிய பாரதியார் பக்குவப்பட்ட உள்ளத்துடன் இறைவினைத் தொழுதார் என்பதை அறியமுடிகிறது.

தொகுப்புரை

இயற்கையை இறைவனாகக் கண்ட மனிதன் இறைமை உணர்வுடன் இயற்கையை கவிதையாகப் பாடியுள்ளான். உலகம் உயிர் சமுதாயம் எனப் பொது நலன் சார்ந்தே பாரதியின் இறைநிலை அமைகிறது. எல்லாத் தெய்வ வடிவங்களும் ஓர் இறையின் அம்சம் என்று கூறியதை உணரமுடிகிறது. உண்மையான பக்தியே அமிர்தம் என்றும் கூறுகிறார். எல்லா உறவு நிலைகளிலும் இறைவனைக் காணும்போது அன்புமிக்க பக்குவப்பட்ட மேலான சமுதாயத்தைக் காணமுடியும் என்பதை கண்ணன் பாட்டு உணர்த்துகிறது. தளராத இறை நம்பிக்கையைக் கடைப்பிடித்த பாரதிக்கு பிறமதத்தின் மீது வேறுபாட்டுணர்வும் இல்லாமல் இருப்பது அக்கவிஞனின் உயர்ந்த மனத்தை வெளிப்படுத்துகிறது. பக்தியின் வாயிலாக மக்கள் பல நன்மைகள் பெற வேண்டும் என்னும் உணர்வினால் தம் பாடல்களின் மூலம் பக்தியின் சிறப்பை உணர்த்தி மக்களை நல்வழிப்படுத்தும் நன்னெறியை உரைக்கின்றார் பாரதியார் என்பதை அறிய முடிகிறது.

குறிப்புகள்

1. திருவாய். மொழி - ப. – 449, திருவாய் மொழி - ப. – 4.4.2, திருக்குறள் - 379

80. பாரதியின் பார்வைத் தணலில் மொழி



திருமதி க. சாந்தி சொக்கலிங்கம்
தலைமையாசிரியை (பணி நிறைவு)
கோவை

"எட்டையபுரத்துப் பட்டயக் கவிஞன்
இட்டமாய்க் கவிதை கொட்டித் தந்தவன்
பாட்டுப் பாடி பட்டயம் பெற்ற
நாட்டுப் புலவன் நாயகன் பாரதி"

அவன், "மூடுபனி வார்த்தைகளால் முடங்கிடாத முண்டாசுப் புலவோன்". நம் பாரத நாட்டின் விடுதலைக்குச் சூடேற்றி, சொரணை ஏற்றி, நம் தடந்தோள்களில் நெஞ்சுரம் ஊட்டியவன்! தன் பாட்டுத் திறத்தாலே இவ்வையகத்தைப் பாலித்திடச் செய்தவன். பாரதியார் தோன்றி வாழ்ந்த காலம் நம் தேசம் அந்நியர் ஆட்சியில், அடிமை இருட்டில் அடங்கிக் கிடந்த காலம். நம் மக்கள் பொருளாதாரச் சுரண்டல்களுக்கு இரையான காலம். சமுதாயம் சாதி, சமய வேறுபாடுகளால் பின்னிக் கிடந்து, சிறுமைப்பட்டிருந்த காலம். அப்போது, மதுரைக்கு நேர்கிழக்கே, மழை பெய்யாக் கானலில் காலதேவன் கையேந்தி நிற்க, பூமித்தாய் மடிப்பிச்சை கேட்டு அழுத காரணத்தால் பருவ மழையாய்ப் பந்தலிட்டு வந்தவன் பாரதி. பாரதியின் கவிதைகளில் மொழி மிக உன்னத நிலையை உச்சத்தை அடைந்திருந்தது.

"**சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது, சொல் புதிது சோதி மிக்க நவகவிதை எந்நாளும் அழியாத மாக்கவிதை**!" என்பது கவிதையைப் பற்றிய அவரது விளக்கங்கள்! கவிதை, சிறுகாப்பியம், சிறுகதை, புதினம், கட்டுரை எனப் பல வண்ணத்தாலும், வடிவத்தாலும் வளமானவை அவர் தம் படைப்புகள். ஒரு மனிதனுள் மொழி என்னும் குருதி ஆன்மாவிற்குள் பயணப்படும் பொழுது, புதிய எண்ணங்கள் ஓடும், வளர்ச்சியோ திக்குகளைத் தேடும். அந்நிய மொழி ஏற்படுத்தாத உணர்வையும், தாக்கத்தையும் அவனுக்குள் தாய்மொழி ஏற்படுத்திவிடும். புகழ்ச்சி ஆயினும், இகழ்ச்சி ஆயினும் ஒரு மனிதனுக்குள் உடனடி மாற்றத்தை ஏற்படுத்தும் இரசாயனக் கலவை மொழியே ஆகும். ஏனெனில் தாய்மொழி உயிரிலும், உணர்விலும் கலந்த ஒன்றாகும்.

பாரதிக்குத் தாய்மொழியாம் தமிழ்மொழி, இனிமையைக் கூட்டியது. அவர் காலத்திற்கு ஏற்ப சுதந்திர உணர்வைத் தட்டி எழுப்பியது. சோம்பித் திரியும் மாந்தர்களை எண்ணி, வார்த்தைகளாலே சூடு வைத்தது, புதியதோர் உலகத்தை எண்ணிப் பார்த்தது. அதில் சரிநிகர் சமானமாய் சுதந்திரம் கொண்ட பெண்கள் உலகில் வலம் வரக் கண்டார் பாரதி. அறிவியல் வளரா அக்காலத்தில் கூடத் தமிழ்மொழி அவர் தம் சிந்தையில் பல்வேறு கருத்துகளைக், கண்டுபிடிப்புகளை உருவாக்கியது. ஆம். மொழி தர்க்கங்களின் ஆணிவேர்! அது சுயசிந்தனையை மூட்டி விடும் போது எண்ணற்ற அறிவியல் விந்தைகளை அவருக்குள் கூட்டியது. இவ்வுணர்வே அவரை ஒரு கவிஞனாக அன்றி ஆராய்ச்சியாளராக மாற்றியிருக்கிறது. அவர் கனவு மெய்ப்படும் இவ்வேளையில் அவர் இருந்திருந்தால் நிலவைக் கூறு போட்டுப் பார்த்திருப்பார். மின்னணுவியல் தாக்கத்தில் இன்னுமொரு நிலவைச் சமைத்திருப்பார்.

பாரதியாரின் மொழிப்புலமை பற்றிப் பேசும் போது அவர் ஐந்து மொழிகளில் விற்பன்னராக இருந்தாலும், தாய் மொழியாம் தமிழிலே தன் புரட்சிக் கருத்துக்களைத் தமிழகத்தின் வீதிகளில் களமாடச் செய்தார். பத்திரிக்கைத் துறையில் அவர் தடம் பதித்தது, அவர் தம் புதுமையான எண்ணங்களைக் கருத்துக்களை தமிழகத்தில் பரப்ப வழி செய்தது. நன்னூலின் சூத்திரம் போல, எந்தக் காலத்திலும், புதுமை வேகப் புயல் கொண்டு ஒரு சமுதாயத்தை அடுத்த நிலைக்கு உயர்த்திச் சென்றது. பாரதியாரே அதை முன்னின்று வழி நடத்திச் சென்றார். புதியதோர் உலகம் காணத் தன் தீந்தமிழில், தீப்பொறி வார்த்தைகளால் தமிழர் மனங்களில் ஒளியூட்டிச் சென்றார் என்றால் அது மிகையன்று. விடுதலை வேள்வியில் முனங்கிக் கொண்டிருந்த தமிழர் தம் உள்ளங்களில், பாரதியாரின்

தமிழ், சாட்டையடியாய் விழுந்தது! அதே நேரத்தில் மொழியின் ஆர்வம் அவருக்குப் பல மொழிகளிலும் பாடல் புனையும் ஆர்வத்தைத் தந்தது.

கவிதை உள்ளத்திலிருக்கும் போது, எந்த மொழியிலும் புல்லாங்குழல் இசைக்கும் வல்லமை பாரதிக்கு இருந்தது. மணிப்பிரவாள நடை ஏற்றுக் கொள்ளப்பட்ட அந்தக் காலத்தில் "பூலோக குமாரி அம்ருதநாரி ஆலோக சிருங்காரி" என்றெல்லாம் வடமொழிச் சொற்களைக் குழைத்துப் பாடியபோது, ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம் பராசக்தி ஓம்சக்தி ஓம்சக்தி ஓம் என்று பாடிய போது இருந்த அதே துளிர்ப்பு அங்கேயும் இருந்தது. ஆங்கிலப் புலவர்களை அவன் வாசித்தான். அவர்களின் இயற்கைப் புனைவுகளை நேசித்தான். காக்கை குருவி எங்கள் சாதி என்று சுவாசித்தான். தாய்மொழியால் கால் பதித்துக் கொண்டு, தன் எண்ணக் கரங்களால் பல்வேறு மொழிகளை ஆராய்ந்த போது, பேறிஞர் அண்ணாவின் "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணமுண்டு" என்பதை அவர் நேரடியாய்ச் சுவைத்தார்.

“மொழி கடந்தது இசை" என்பார்கள். ஆயின் பாரதிக்குப் பல்வேறு மொழிகளே இசையாயின. அந்நிய மொழிகளின் மூலம் அவர் உலக வரலாற்றைப் படித்தபோது, எண்ணங்கள் விரிவடைய, தமிழ் மொழியிலும் அதே கருத்துகள் உருவாகின. ஒரு கூட்டுப் பறவையாக அவன் தமிழ் மொழியை மட்டும் அடைகாக்கவில்லை. பூனைக்குட்டிகள் போல பல்வேறு மொழிகளைப் படம் பிடித்தான். அந்த மொழிகளில் இலக்கியங்களின் சுவையைக் கரம் பிடித்தான். அவற்றைத் தன் தாய்மொழியாம் தமிழில் கவிதைகளாக்கி தமிழன்னைக்குப் புகழாரம் சூட்டினான். அவரின் எழுத்துகள் தமிழர் இல்லங்களில் படையெடுத்த போது, புதிய எண்ணங்கள் அனைத்து இல்லங்களிலும் முகிழ்த்தன.

மூடப் பழக்க வழக்கங்களில் மூழ்கிக் கிடந்தவர்களுக்கு அவருடைய அறிவியல் எண்ணங்கள் ஆணியடித்த போது, அவர்களைப் பிடித்த பிசாசுகள் காணாமலேயே போய் விட்டன. "ரௌத்திரம் பழகு" என்று தமிழ் உள்ளங்களுக்குப் புதிய வேதம் படைத்த போது, அன்பே சிவம் என்று அடியார்களாய் இருந்த மக்கட்கு கோபமும் வாழ்க்கைக்குத் தேவை என்பதை அவரின் தமிழ்ப் பார்வை உணர்த்தியது. முத்தமிழ் வித்தகரான பாரதி இதழ்களில் எழுதி எழுதி இயற்றமிழ் வளர்த்தார். நெஞ்சில் உருவெடுத்த கவிதைகளால் இசைத்தமிழில் பயணித்தார். நவரசங்களிலும் பாடல்கள் எழுதி, பாரதி தன் உள்ளுணர்வை வெளிப்படுத்தினார். பாஞ்சாலி சபதத்தின் மூலம் நாடகத் தமிழையும் அவர் நயமாய் நமக்கு உரைத்தார். அன்றைய கால கட்டத்தில், பாரதியின் தமிழ், பல புதுமைகளைக் புகுத்தியது. அறிவியலைப் புதுப்பித்தது.

பெண் விடுதலையை முன்னிறுத்தி, புதிய சமுதாயத்தை நம் கண் முன்னே விரித்தது. உலக நிகழ்வுகளைப் புரிய வைத்தது. சுதந்திர தாகத்தை முடுக்கி விட்டது. பாரதியின் பாடல்களைக் கவிஞர்கள் வரிசைப்படுத்திய போது, அவரின் தோத்திரப் பாடல்களே முன்னணியில் நின்றன. அவரின் இறைப்பற்று ஆன்மீகப் பாதையில் பயணித்து பாரதத்திற்குப் புதிய வாழ்வைப் புகட்டியது. பெண் விடுதலையைப் பாடியது மட்டுமின்றி, வாழ்ந்தும் காட்டியவர் பாரதி. மனைவியின் தோள் பற்றி வீதிகளில் பெருமையுடன் நடந்து சென்றார். ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்று பெண்ணுக்குச் சம உரிமை அளித்தார் பாரதி. பாரதியின் மொழி ஆளுமை இந்திய சுதந்திர வரலாற்றில், தமிழக மக்களின் ஒருமித்த சுதந்திர வேட்கைக்கு ஆகுதியாய் அமைந்தது. தேவாரம் பாடிய மூவரைப் பார்த்த தமிழகம், பாரதி, சுப்பிரமண்ய சிவா, வ.உ.சி எனச் சுதந்திரத் தீ வளர்த்த மூவரைப் பார்த்தது. கருவிலே திருவுடையவராகப் பாரதியார் இருந்த போது, அவர் தம் மொழி, தமிழரின் மனங்களில் எண்ணற்ற கருத்துக்களை விதையாக ஊன்றிச் சென்றது.

பாரதியின் வார்த்தைகள், அமெரிக்காவின் ஸ்டெல்த் விமானம் போல தமிழகத்திற்குள் வந்து சென்றன. விடுதலை உணர்வை அணையாமல் அடை காத்தன. அவரின் பாடல்கள் மெல்லிய காற்றாய் இயற்கையின் அழகை மனதிற்குள் வருடின. தீப்பொறி பறக்கும் அவரின் ரௌத்திர எழுத்துகள் வரிக்கு வரி பெண் விடுதலையைத் தமிழரின் காதுகளில் சூடாய் ஏற்றின. பாரதிக்கு இளமைப் பருவத்திலேயே கவியார்வம்

அதிகம். உள்ளத்திலிருந்த அந்தக் கவியுணர்வு மொழி தாண்டி கவிதைகளைப் படிக்க வைத்தது. ரசிக்க வைத்தது.

காசியில் இருந்த போது சமஸ்கிருத மொழியறிவும் அவருக்குக் கிட்டியது. உள்ளக் கருவாய் தமிழிருக்க, கற்ற மொழி தன்னை பாடச் சொல்லியது. பாரதி தன் வசனக் கவிதைகளில் தன்னையும் பயன்படுத்திக் கொள்ள அது கெஞ்சியது. பாரதிக்கு வார்த்தைகள் அருவியாய்க் கொட்ட, தமிழும் சமஸ்கிருதமும் கலந்து பாடல்களாயின. அதற்கு அவர் வாழ்ந்திருந்த காலமும் ஒரு காரணமாகும். மொழி அறிவு, இயற்கையாய் சிந்தனைகளைப் பாரதியின் மனதில் எழுப்பிய போது, பாரதம் சுதந்திரம் அடைந்து விட்டதாய் நினைத்து மகிழ்கின்றார். தாய்நாட்டை நேசிப்பதற்கு முதற்படி தாய்மொழியை நேசிப்பதுதான் என்று வழிகாட்டியவர் அவர்.

அவர் தம் மொழி விதைத்த கருத்துகள், நெஞ்சில் உரமுடன் ஆன்மீகப் பலத்துடன் அசுர வேகத்தில் மின்னலைப் போல் பயணித்தன. மொழியின் வார்த்தைகள் கொத்துக் குண்டு (Cluster Bomb) போல ஒன்றாய் வலம் வந்து, தமிழ் மனங்களுக்குள் பலவாய் விழுந்து உணர்வூட்டின. பாரதியின் வார்த்தைகள் உதட்டிலிருந்து வெளிப்படாது, கண்களிலிருந்து அனலாய்த் தெறித்தன. அந்த வெப்பத்தில், தமிழரின் அடிமை மனங்கள் கருகிப் போயின. அங்கு சுதந்திர எண்ணங்கள் வேகமாய்த் துளிர் விட்டன. பரங்கியரைக் காவு செய்ய வேகமாய்த் தழைத்தன.

இன்று தமிழ் பல நாடுகளில் நுழைந்து, கண்டங்கள் கடந்து, பேச்சிலும் வலையிலும் வளர்ந்து வருகிறது. தன் ஒரு சில வார்த்தைகளாலேயே பாரதியை இன்றும் ஞாபகப் படுத்தி வாழ்வை நெறிப்படுத்துகிறது. அவரின் நினைவுகளை நெஞ்சில் இருந்து கொண்டுவர அச்சமின்மை, பெண் விடுதலை, ஆன்மீக வாழ்வு, அறிவியல் தெளிவு என, வார்த்தைகள் நீண்டு கொண்டே போகும். சந்ததிகள் பல தொடர்ந்தாலும், தமிழ் அந்த மாக்கவிஞனை நினைந்து கொண்டே வாழும். காலம் கடந்து சந்ததி கடந்து இன்றும் பயணிக்கும் அம்மொழி உலகம் உள்ளளவும் அவர் புகழை நின்று பேசும். பாரதியின் மொழி, மக்கட்கு உணர்வூட்டியது! அறிவியல் சிந்தனைகளுக்கு உயிரூட்டியது! ஆங்கிலேயருக்குப் பயம் காட்டியது! இளைஞர்களுக்கு வாழும் வழி காட்டியது! தேச பக்தியையும், தெய்வ பக்தியையும் நெஞ்சிருக்கச் செய்தது!

81. பாரதியின் பார்வையில் பெண்



முனைவர் ஈ.சரவணக்குமார்
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
பிபிஜி கலை மற்றும் அறிவியல் கல்லூரி
கோவை

முன்னுரை

இருபதாம் நூற்றாண்டின் ஈடு இணையற்றக் கவிஞராகப் படைப்புலகில் வலம் வந்தவர் பாரதியார். மகாகவி, புதுமைக் கவி, தேசிய கவி, மானுட கவி என்றெல்லாம் அழைத்தாலும் பெண்ணியக் கவி என்று அழைத்திருந்தால் மனம் சற்று மகிழ்ந்திருக்கும். ஏனென்றால் ஆணாகப் பிறந்து பெண்மையைப் பெருமளவில் போற்றியவர் இவரே. பெண் உரிமையை நிலைநாட்ட இடிமுழங்கும் ஓசையினைப் போன்று விடுதலைக் கும்மி அடித்தவர். பெண்கள் இவ்வுலகில் எவ்விதப் பிரச்சனைகளுக்குள்ளும் ஆட்படாமல் பாதுகாத்தவர். இவ்வாறான பல்வேறு முகங்களைப் பெற்ற பாரதியின் பெண்ணியச் சிந்தனைகள் சிலவற்றை இக்கட்டுரையில் காணலாம்.

ஆய்வுச்சுருக்கம்

பெண்கள் ஆண்களின் பிடியில் இருந்து வெளிவர பாதை அமைக்க வேண்டும். அவர்கள் எந்த விதச் சார்பும் இல்லாமல் தனித்தியங்க வேண்டும் என்று பாரதியார் பாடல்களில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள் தெளிவாக விவரிக்கப்பட்டுள்ளது.

நோக்கம்

பாட்டுக்கொரு புலவன் பாரதி புரட்சிகரமான சிந்தனைகளைக் கொண்டவர். பழங்காலத்தில் ஆணுக்கு நிகராகப் பெண்களும் அனைத்து வேலைகளையும் செய்துள்ளனர். ஏன் சங்க இலக்கியங்களில் கூட எண்ணற்ற பெண்பாற் புலவர்கள் காணப்படுவது கவனத்திற்குரியது. ஆனால் தற்காலங்களிலும் பெண்கள் அடக்குமுறைக்கு ஆட்படுகின்றனர். அவற்றைத் தீர்ப்பதற்கான செயல்பாடுகளை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வுக் கட்டுரை நகர்கின்றது.

திறவுச்சொற்கள்

பெண்ணியம் - ஆணாதிக்கம் - பெண் அடக்குமுறை - பெண் விடுதலை - பெண் கல்வி.

பெண்ணடிமைத்தனம்

பண்டையகாலம் தொட்டு இன்று வரை பெண்கள் ஆண்களின் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டுள்ளனர். பெண்ணடிமைக்கு உகந்த காரணியாக அமைவது, ஆணாதிக்க மிகுந்த குடும்பத்தில் மனைவியைக் கட்டுப்படுத்த எண்ணிய ஆடவர்களால் தோன்றியதுதான் பெண்ணடிமை ஆகும். இதனை,

> **"பெண்டாட்டி தனையடிமைப் படுத்த வேண்டிப்**
> **பெண் குலத்தை முழுதடிமைப் படுத்தலாமா"**
> (பாரதியார் அறுபத்தாறு பாடல் - 45)

எனும் அடிகள் பெண் குலத்தை அடிமைப்படுத்தும் ஆண்களைச் சாடும் வகையில் அமைந்துள்ளது. ஆண்கள் தனது மனைவியை மட்டும் அடிமைப்படுத்தவில்லை. இதனைப் பார்த்துப் பின்வரும் தலைமுறையினரும், இனி திருமணமாகும் ஆண்கள், பெண்களை மிகுதியாகக் கட்டுப்படுத்துகின்றனர். அதன் மூலம் பின்வரும் சமூகமே ஆணாதிக்கச்

சமூகமாக மாறுவதைக் கண்டித்து, அதற்கான தீர்வானது தற்கால மனிதர்களிடமே உள்ளது எனும் கருத்தை ஆழமாகப் படம் பிடித்துப் பாரதியார் காட்டுகிறார்.

ஆணின் பார்வையில் பெண்

பெண் என்பவள் ஆணின் போகப் பொருளாகவும், கவர்ச்சிப் பொருளாகவும் உடல் ரீதியாகத் துன்பப்படுத்தியும், இழிவுபடுத்தியும் வந்துள்ளதை,

"காதலினால் மானுடர்க்கு கலவி உண்டாகும்.."
(பாரதியார் அறுபத்தாறு பாடல் - 49)

எனும் அடிகள் மூலம் பாரதியார் தெளிவுபடுத்துகிறார். காதல் என்று பாரதி குறிப்பிடுவது அன்புப் பரிமாற்றத்தைத் தான். ஆனால் பெரும்பாலான மக்கள் காதலுக்கும் காமத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை அறிந்து கொள்ளாமல் உள்ளனர். இது புரிந்தாலே போதும் பெண்களின் வாழ்வில் ஒளி வெள்ளம் தானே தோன்றும் என்பதில் ஐயம் இல்லை. மேலும் பெண்களின் மூலம் துய்க்கும் இன்பத்திற்காக மட்டும் பெண்களைத் திருமணம் செய்து கொண்டு அவர்களது சிறகுகளைக் களைந்து விடுகின்றனர். அவர்கள் உயரப் பறக்க வேண்டும் என்ற எண்ணக் கனவுகள் உதிர்ந்து விடுகின்றன. இதனை,

"பாதி நடுக் கலவியிலே காதல் பேசிப்.."
(பாரதியார் அறுபத்தாறு பாடல் - 53)

எனும் அடிகள் மூலம் பாரதியார் விவரிக்கின்றார். காலை முழுவதும் உழைத்துக் களைத்து வரும் கணவன் வீட்டிற்கு வந்து அன்பு மனைவியின் குளிர்ச்சி பொருந்திய முகத்தைப் பார்த்தால் நாள் முழுவதும் அவன் பட்ட துன்பங்கள் எல்லாம் பறந்து விடும் என்று மகாகவி குறிப்பிடுகின்றார்.

பாரதியாரின் பெண் விடுதலைக் குரல்

பாரதி படைத்துக் காட்டிய பாஞ்சாலியானவள் தன்னை பந்தயப் பொருளாக வைத்த தருமனை எதிர்த்துப் பேசுவதோடு மட்டுமல்லாமல் தன்னை அவமானப்படுத்திய துரியோதனன் துச்சாதனன் ஆகியோரின் உடல் குருதியால் சீவி மயிறு முடிப்பேன் எனக் கூறுவதன் மூலம் பாஞ்சாலிக்குள் பாரதி இறங்கி முதல் பெண் குரலே போர்க் குரலாக முழங்குவதை,

"இது பொறுப்பதில்லை - தம்பி
எரிதழல் கொண்டுவா.." - (பாரதியார், பாஞ்சாலி சபதம் பக்கம் - 44)

எனும் வரிகள் மூலம் புரிந்து கொள்ள முடிகின்றது. மேலும் பெண் விடுதலையைப் பெண் மட்டுமல்லாது ஆணும் போற்றியதால் தான் சுதந்திரமான வாழ்க்கையை அவள் பெற்றாள் என்ற கருத்தை வீமனின் கூற்று மூலமாக அறிந்து கொள்ள முடிகின்றது. ஒருவனுக்கு ஒருத்தி என்பதுதான் பழந்தமிழர் கோட்பாடு ஆகும். இதில் ஆணுக்கு ஒழுக்கம் தேவை இல்லை. பெண்ணுக்கு மட்டுமே கற்பொழுக்கம் வேண்டும் என்று அடக்கி வைத்துக் கொண்டிருந்த சமூகத்தில் புயலெனப் புகுந்தார் பாரதி. இதனை,

"கற்பு நிலை யென்று சொல்ல வந்தால் இரு கட்சிக்கும்" (பெண்கள் விடுதலைக்கும்மி, 5)

எனும் வரிகள் மூலம் தெரிந்து கொள்ள முடிகின்றது. கற்புநிலை என்பது பெண்ணுக்கு மட்டும் அல்லாமல் ஆணுக்கும் அது அவசியமே என்ற பாரதியாரின் கூற்றானது உணர்த்துகின்றது. இவ்வுலகில் உதிர்த்த அதிசயமே என்பதற்குப் பாரதியார் தான் உதாரணம் என்பதற்கு எந்தவித ஐயமும் இல்லை.

இருபதாம் நூற்றாண்டில் தோன்றிய கவிஞர்கள் எல்லாம் அரசன் பல்வேறு பெண்களை மணப்பதைப் பெருமையாகத் தன் கவிதைகளில் படைத்தபோது பாரதியோ, ஒருவனுக்கு ஒருத்தி எனும் கொள்கையிலும் பெண் சுதந்திரக் கோட்பாட்டை மையமாக வைத்துக் கொண்டும் தனது முழுச் செயல்பாட்டை வழங்கியுள்ளார்.

பெண் கல்வி

பெண் என்பவள் தனியாகச் சிந்தித்துச் சுயமாக முடிவெடுத்துச் செயல்பட்டால் அந்த நாடு விழிப்புணர்வு பெற்ற நாடாக இருக்கும் என்று பாரதியார் சுட்டுகிறார். கற்பு நாணம் என்று வீட்டிற்குள் முடங்கிக் கிடந்த பெண்களிடம் ஊக்கத்தை வழங்கி வீறு கொண்டு எழத்தூண்டினார். இதனை,

"கண்கள் இரண்டில் ஒன்றைக் குத்தி" - (பாரதியார் கட்டுரைகள், பக். 156)

என்னும் வரிகள் மூலம் பாரதியார் வெளிப்படுத்துகின்றார். மேலும் பெண்கள் கல்வி அறிவு பெற்றவர்களாக இருந்தால் மட்டுமே அவர்களால் தனித்துவமாகச் சிந்தித்துச் செயல்பட முடியும் என்று பாரதியார் குறிப்பிடுகின்றார்.

பன்முகச் சிந்தனைகளுக்கு ஒட்டு மொத்தச் சொந்தக்காரர் பாரதி என்றால் அது மிகை ஆகாது. அவருடைய கவிதை, கதை, கட்டுரைகள் போன்றவற்றில் பெண் உரிமைக்கான பங்கானது மிகுதியாக இடம் பெற்றுள்ளது. நாட்டில் என்னதான் பெண் பிள்ளைகளைப் பெற்றாலும் பல்வேறு கிராமங்களில் இன்னும் இந்நிலை மாறவில்லை. பெண் குழந்தை பிறந்தால் கூட அது பெற்றோர்களால் வெறுக்கத்தக்க நிலையினைக் காண முடிகின்றது. ஆணாகப் பிறந்து விட்டால் நாட்டின் அனைத்து புறமும் செல்வதற்கான அனுமதியினை இயற்கையிலேயே பெற்று விடுகிறான். ஆனால் பெண் என்பவள் இரவு முழுவதும் வீட்டுக்கு வரவில்லை என்றால் அடுத்த நாள் காலை அவளைப் பார்க்கும் கோணமே வேறு விதமாக இருக்கும். இந்நிலைமை மாறவேண்டும் என்று பாரதி குறிப்பிடுவது,

"மாதர் தம்மை இழிவு செய்யும்.." - (பாரதியார், புதிய ஆத்திசூடி ப - 40)

என்ற அடிகள் மூலம் உணர முடிகின்றது. பெண் என்றால் தாய், தமக்கை, தங்கை, மனைவி, மகள், மருமகள், பேத்தி. சமுதாயத்தின் சரிபாதி, இதை பாரதி மிக வலுவாக வலியுறுத்திப் பாடியுள்ளார். இன்று நாட்டின் பல பகுதிகளிலும் பெண்கள் அடிமையிலும் அடிமைகளாக இருக்கிறார்கள். அதில் சில மாற்றங்கள் அண்மைக் காலத்தில் ஏற்பட்டிருந்த போதிலும் இன்னும் மிகுதியான மாற்றங்கள் ஏற்பட வேண்டும். பெண்கள் நிலையை உயர்த்த வேண்டும். பெண்கள் படிக்க வேண்டும். அனைத்துத் துறைகளிலும் ஈடுபட வேண்டும், ஆண்களுக்கு நிகராக அனைத்துப் பணிகளிலும் சிறகு விரிக்க வேண்டும். ஆண்களும் பெண்களும் சமமாக நின்று நாட்டின் முன்னேற்றத்திற்குப் பாடுபட வேண்டும். இது பாரதியின் கோட்பாடாகும். "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் வைய வாழ்வு தன்னில் எந்த வகையினும் நமக்குள்ளே தாதர் என்ற நிலைமை மாறி ஆண்களோடு பெண்களும் சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே" என்று விடுதலைப்பாட்டில் பெண்களின் விடுதலையைப் பற்றி பாடத் தொடங்குகிறார்.

முடிவுரை

ஆணாகப் பிறந்தாலும் பெண்களின் விடுதலைக்கு அயராது பாடுபட்டவர் பாரதியார். விழிப்புணர்வு இல்லாமல் கிடந்த மக்களிடம் பாடல்கள் மூலம் அறிவுணர்வைப் புகுத்தினார். பெண்களை அடக்குமுறை காட்டியது எல்லாம் அந்தக் காலம். அது மாறிவிட்டது இனி அவர்களை யாராலும் தடுக்க முடியாது என்று முழங்கியவர் இவரே. இவ்வுலகில் பிறந்த உயிருக்கு முழு உரிமை உண்டு யாரும் யாரையும் அடக்க முடியாது. தாலி என்று ஒன்றைக் கட்டிவிட்டு, அவள் இறக்கும் வரையிலும் தனக்கு அடிமையாகத் தான் வாழ வேண்டும் என்ற கருத்தை அடியோடு ஏற்க மறுத்தவர் பாரதியார். ஆண் பெண் சரிநிகர் சமானம் என்ற கொள்கையில் உறுதியாக இருந்தவர் என்ற கருத்தும் புலனாகின்றது. இனி வரும் தலைமுறையினராவது ஆண், பெண் என்ற பாகுபாடு பாராமல் ஒன்றிணைந்து செயல்பட்டால் நாட்டின் வளமும், குடும்பத்தின் மகிழ்ச்சியும் பெருகும்.

82. பாரதியின் சமயக் கொள்கைகளும் கோட்பாடுகளும்



கு. மோகன லட்சுமி

பதிவு எண்: CRE/TAM22PNOV288/2022
முனைவர் பட்ட ஆய்வாளர்
கருப்பண்ண மாரியப்பன் கல்லூரி
செட்டியார் பாளையம், முத்தூர்

நெறியாளர்: முனைவர் எஸ்.நிரஞ்சனா தேவி
உதவிப் பேராசிரியர்
கருப்பண்ண மாரியப்பன் கல்லூரி,
செட்டியார் பாளையம், முத்தூர்.

ஆய்வுச்சுருக்கம்

மகாகவி என்று போற்றப்படும் பாரதியார் சமுதாயச் சீர்த்திருத்தச் செயல்வீரர், புரட்சிக் கருத்துகளுக்கு வித்திட்ட முன்னோடி. சமயக் கொள்கையில் மறுமலர்ச்சி ஏற்படச் செய்வதில் பாரதியின் பங்கு அளவிடற்கரியது. காலத்தின் தேவைக்கு ஏற்பப் புதுப்பொருளோடு, நாளைய பாரதத்தின் கனவை நனவாக்கிட பாரதியின் சமயக்கொள்கை உறுதுணை புரியும் என்பதில் கருத்து வேறுபாடில்லை. 'ஒன்று படும்பொருள் நாம் அதன்மக்கள் என்ற சமயப்பற்றோடு', சமுதாய ஒருமைப்பாட்டை இணைத்து தம் கவிதைகள் ஊடாக மொழிந்தவர். பாரதியின் சமயக் கொள்கைகளையும் கோட்பாடுகளையும் ஆராய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்

சமயம், சமயநெறி, சமயப்பொறை, சமயக் கொள்கைகள், கோட்பாடுகள்.

முன்னுரை

பாரதியார் தம் உள்ளத்தில் முகிழ்ந்த கருத்துக்களைக் கண்டதோடும் கேட்டதோடும் நிறுத்தி விடாமல் மற்றவர்கள் சிந்திக்கும்படி, உணர்வு கொள்ளும்படி, ஆழமாகவும், அழுத்தமாகவும் தம் படைப்புகளில் உணர்த்தியவர். பாரதியார் பாரதத்தைப் பற்றியும் தமிழகத்தைப் பற்றியும் மேன்மையுடன் பாடி, கவித்திறத்தால் உயர்த்த எண்ணி மேற்கொண்ட முயற்சிகளே இவரைத் தேசியக்கவி என அறிவித்தது. இவருடைய குரல் வான் ஒலிபோல் மக்கள் சிந்தையில் பாய்ந்து பதிந்ததையும் நாடறியும். நாட்டுப்பற்று, தமிழ்நாட்டு உணர்வு, தேச நலன்கள், நாட்டின் விடுதலை உணர்வு, தேசிய ஒற்றுமை, தேசிய ஒருமைப்பாடு, தேசத்தின் நிலைப்பாடு போன்றவற்றை எல்லாம் வெளிப்படுத்தும் கவிதைகளைத் தந்தவர். தேசமே அடிமைப்பட்டுக் கிடக்கிறது. தமிழ்நாட்டு மக்களோ அறியாமையிலும், வறுமையிலும் தீவிர மூடப்பழக்கவழக்கங்களிலும் ஆழ்ந்து கிடக்கின்றமையை இவரின் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. இந்த நாட்டிலே உள்ள மக்கள் பல்வேறு சமயங்களைப் பின்பற்றுபவர்களாக இருந்ததன் காரணமாக, இந்தச் சமயங்களிடத்தே காணப்படும் வேற்றுமைகளைக் களையக் கவிதைகள் புனைந்தவர்.

சமயநெறி

பன்முகத்தன்மை கொண்ட இந்தியாவில் மக்கள் பல்வேறு நிலைகளில் வேறுபட்டு நிற்கின்றனர். இதனால் ஒற்றுமை குலையும் என்று கருதிய பாரதியார் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானதொரு சமயநெறியைக் காட்டுகின்றார். எச்சமயத்திற்கும் பொதுவான கருத்து உள்ளது. அதனை மக்கள் ஏற்று நடந்தால் சமயச் சண்டைகள் ஏற்பட வாய்ப்பில்லை.

"ஈரமிலா நெஞ்சுடையார் சிவனைக்காணார்"

எனத் தம் சமயநெறியான சமயப் பொதுமையை பதிவு செய்துள்ளதனை அறியமுடிகின்றது.

சமயப்பொறை

புதிய ஆத்திசூடி என்ற தலைப்பிட்டப் பாடலில்,

"ஆத்திசூடி, யிளம்பிறை யணிந்து, "

மனிதர்கள் அவரவர் சமய தெய்வங்களை வணங்கினாலும் அனைவருக்கும் பரம்பொருள் ஒன்றே என்ற கருத்தமைந்த பாடலைப் பாடிச் சமயப்பொறையினைப் பதிவு செய்துள்ளார் பாரதி.

ஓரிறைக்கொள்கை

மதத்தின் காரணமாகவும், தெய்வத்தின் காரணமாகவும், தமக்குள் சண்டையிட்டுக்கொண்டு வாழும் மக்களிடையே ஒற்றுமையை வளர்க்க முயற்சிக்கிறார் பாரதி. இதனை,

"யாரும் பணிந்திடும் தெய்வம் - பொருள் "

என ஓரிறைக் கொள்கையை வலியுறுத்தும் பாரதி, இக்கொள்கை மூலம் நாட்டில் ஒற்றுமை பிறக்கும் என நம்பியதை அறியமுடிகிறது.

எல்லாப் பொருள்களிலும் தெய்வத்தின் வடிவம்

திங்களில், கடல் திரையில், காற்றில், சூரியனில், சரஸ்வதி உறைந்திருப்பதைக் கண்டு சுவைக்கிறார். பொன்னில், மணியில், பூவில், விளக்கில், கன்னியர் புன்னகையில், காட்டில், சோலையில் எனப்பல்லிடப் பதுமையாக இலக்குமி வீற்றிருப்பதைப் பாடுகிறார். "யாதுமாகி நின்றாய்" என காளியைத் துதிக்கிறார். "அன்பு வடிவமாகி நிற்பவள் காளி" என எளியோர்க்கு உணர்த்தும் வகையில் காவடிச்சிந்து பாடுகிறார்.

"காக்கைச் சிறகினிலே நந்தலாலா - நின்றன் "

என்று கண்ணனைப் போற்றும் போதும், இயற்கையே தெய்வமாக அவர் முன் காட்சி தருகிறது. மரங்களின் பச்சை நிறத்தோற்றத்தில், கேட்கும் ஒலிகளில், தீயின் வெம்மையில் கண்ணன் உள்ளதாகப் பாரதி பாடுகிறார். பாரதியோ மரங்களின் பச்சை நிறத்தில் பச்சைமாலைக் (திருமால்) காண்கிறார். சமூகம் சாதி வேறுபாடுகளால் வேறுபட்டு நின்ற பாரதியின் காலந்தன்னில் கருமை நிறம் இழிந்தது. அது தாழ்குடிக்கு உரியது என்ற தவறான எண்ணம் மக்கள் உள்ளங்களில் வேரூன்றிய போது, காக்கை சிறகின் கருமை நிறத்தில் கருமைநிறக் கண்ணனைக் காண்கிறார். காலத்திற்கேற்பக் கருத்து இலட்சியங்களைக் கைக்கொள்ளும் பாரதியின் புதுமை ஆற்றலை இங்கே புலப்படுத்தப்படுகிறது.

அறிவே தெய்வம்

அறியாமையில் மூழ்கிக் கிடக்கும் மனிதர்கள் அறிவைப் பெற்றுவிட்டால் தெய்வநிலையை எளிதில் கண்டுகொள்ளலாம் என்கிறார். ஆகவே, அறிவைத் தெய்வமாகக் காணும் போக்குப் பாரதியிடம் இருந்தது என்பதை,

"ஆயிரந் தெய்வங்கள் உண்டெடன்று தேடி"

என்று அறிவே தெய்வம் என்பதை அறிந்து கொள்வீர்! எனப் பாரதி அறிவு தெய்வத்தைக் காட்டுகிறார்.

புராணப் புரட்டுகள்

புராணங்கள் கதைகள் வாயிலாகவும் மக்களுக்கு நீதி நெறிகளை, நல்லொழுக்க முறைகளை, உயர்ந்த பண்புகளைப் புகட்டவே முதலில் படைக்கப்பட்டன. ஆனால், நாளடைவில் பொய்யும், புனைவும் பொருத்தி, நம்பமுடியாத செயல்களும் புகுத்தப்பட்டு திரிபுபட்டன. எனவே, உண்மையைப் பகுத்தறிவு கண்கொண்டு பார்த்தல் வேண்டும் என்பதை,

"உண்மையின் பேர் தெய்வம் என்போம் - அன்றி " என்கிறார்.

ஒன்றே குலம் ஒருவனே தேவன்

அனைத்துச் சமயங்களும் வலியுறுத்தும் பரம்பொருள் ஒன்றே என்பதை,

"தீயினைக் கும்பிடும் பார்ப்பர் - நித்தம் "

என்று அனைத்துப் பெயராலும் விளங்கும் தெய்வம் ஒன்றே எனப்புலப்படுத்தி சமயப் பொறையினை வலியுறுத்துகிறார்.

பாரதியின் சமயப்புரட்சி

பாரதி இந்து மதத்திலே பற்றுக்கொண்டிருந்ததாலும் சர்வசமய சமரசம் பாடியவர். மக்கள் வணங்கும் உருவங்களில் எல்லாம் இறைவனைப் பாடிய பாரதி வேதாந்தப் பாடல்களில்,

"ஒன்று பிரமமுளதுண்மை ய∴துன் "

என்று அறிவும் உணர்வும், அழகுமே தெய்வம் என்று பாடி சமயப்புரட்சி செய்கிறார். பக்தியிலும், இறைவனுக்குத் தன்னைச் சமர்ப்பிப்பதிலும் பாரதிக்கு நம்பிக்கை உண்டு. மேலும், சமயத்திலே பாரபட்சம் இருக்கக்கூடாது என்ற கொள்கையும் உடையவர். எம்மதமும் சம்மதமே என்பதே பாரதியின் சமயக் கொள்கை.

சாதி - சமய நோக்கு

பாரதியார் எல்லாச் சமயங்களுக்கும் பொதுவானதொரு சமயநெறியைக் காட்டுகின்றார். எச்சமயத்திலும் பொதுவான கருத்து உள்ளது. அதனை மக்கள் ஏற்று நடந்தால் சமயச் சண்டைகள் ஏற்பட வாய்ப்பில்லை என்னும் கருத்துபட மொழிகிறார் பாரதி. நாட்டு மக்கள் நலம் பெற்று வாழ்வதற்காகப் பாடல் பல பாடிய அவருடைய நெஞ்சம், நாட்டு விடுதலையை மட்டும் பாடி அமையவில்லை. நாட்டு மக்களின் நல்வாழ்வுக்கு இடையூறாக இருந்து வந்த பலவகைக் கொடுமைகளையும் எதிர்த்துச் சாடியது. சாதி வேறுபாட்டைத் தாக்கிப் பாடினார். மூடநம்பிக்கைகளை எதிர்த்து முழங்கினார். குழந்தைகளுக்கு ஊக்கம் ஊட்டிப் பாடினார். பெண்களை அடிமைப்படுத்தும் கொடுமையை எதிர்த்துப் போரிட்டார். தாய்மொழியைப் புறக்கணித்துவிட்டு ஆங்கிலத்திற்கே மதிப்புக் கொடுத்து வந்த அந்நியக் கல்வி முறையைத் தாக்கினார். இவ்வாறு அவர் சமுதாய நன்மைக்கானப் பாடல்கள் பலவற்றைப் பாடினார். அவை இன்றும் உணர்ச்சி மிகுந்த கவிதையாகப் பாடிப் போற்றப்படுகின்றன.

"சாதிகள் இல்லையடி பாப்பா - குலத் "என்றார் பாரதி.
"சாதி நூறு சொல்லுவாய் போ போ போ "

என்று சாடுகிறார் பாரதி! அதாவது, குறைபாடுகள் உடைய பழைய சமுதாயத்தைப் போ போ போ என்று பழிக்கிறார் பாரதி. பாரதி பல பெயர்களாலே முழு முதற்பொருளான இறைவனைப் பாடியுள்ளார். விநாயகர் மீது "நான்மணிமாலை" என்னும் தலைப்பில் நாற்பது பாடல்கள் பாடியுள்ளார். வேறு பாடல்களும் இடைஇடையே விநாயகரைப் பற்றிக் குறித்துள்ளார். முருகனை, இராமனை, கோவிந்தனை, திருமகளை, கலைமகளைப் பாடியுள்ளார். பரம்பொருளைச் சக்தியென்றும், காளியென்றும் ஏறத்தாழ இருபத்தைந்துக்கு மேற்பட்ட பாடல்களில் பாடியுள்ளார். கண்ணனையும், கண்ணம்மாவாகவும் முப்பதுக்கு மேற்பட்ட பாடல்களைப் பாடியுள்ளார். பல பாடல்களின் ஊடேயும் இத்தெய்வங்களைப் பற்றிச் சில பாடல்களில் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளாரேயன்றித் தனியாக ஒரு பாடலும் பாடியதாகத் தெரியவில்லை. இது வியப்புக்குரியதே என்பர். ஞாயிறு, திங்கள், தீ, கடல், பிற இயற்கைகளையும், வேள்வியினையும் பாடியுள்ளார். வேதகால ரிஷிகளின் மீதும் அவர்கள் செய்த வேள்வி மீதும் மிகுந்த ஈடுபாடு கொண்டு, போற்றியுள்ளார். பாரதியார், இந்து சமயக் கடவுளரையன்றிப் புத்தரையும் சில பாடல்களின் குறித்துள்ளார். பௌத்தக் கொள்கைகளை விமர்சனம் செய்துள்ளார். இயேசு நாதரைப் பற்றி மூன்று பாடல்களும், அல்லா மீது இரண்டு பாடல்களும் பாடியுள்ளார். இவையன்றி கட்டுரைகள், வசனங்கள் ஆகியவற்றிலும் பல தெய்வங்களைப் பற்றியும், அருளாளர்கள் பலரைப்பற்றியும், இயற்கைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளார். இவ்வளவு தெய்வங்கள் பற்றி பாடிய பாரதியார்,

"செத்த பிறகு சிவலோகம் வைகுந்தம் "

மனிதன் இருந்தபோது உண்மைக்கு மாறாக நடந்துகொள்வான். ஆனால் இறக்கும்போது மட்டும் சிவலோக பதவியையும், வைகுந்த பதவியையும் அடையலாம் என்பவர்களை பித்துப் பிடித்த மனிதர் என்று சாடுகிறார்.

முடிவுரை

பல்வேறு பக்திப் பாடல்களையும், தோத்திரப் பாடல்களையும் பாரதி படைத்திருப்பினும் அவருடைய படைப்புகளின் மைய இழையாக ஊடுருவியிருப்பது அத்வைதக் கருத்துக்களேயாகும். அன்பு நெறியாகிய ஆன்மிக நெறியினையும், சர்வ சமய சமரசத்தினையும் வலியுறுத்தியவர் பாரதி. வேதக் கருத்துக்களைப் பழம் பெருஞ்செல்வமாகப் போற்றும் அதே வேளையில், காலப்போக்கில் புகுந்துவிட்ட கருத்துக்களையும் சாடி ஒதுக்குகின்றார் பாரதி. அனைத்து உயிர்களும் நாம் வழிபடும் தெய்வத்தின் வடிவங்களே என்பதை உணர வேண்டும் என்கிறார். பாரதியார் எச்சமயமும் சம்மதம் என்னும் சமரசக் கொள்கை உடையவராயினும், அல்லாவையும், கிறித்தவர் வழிபடும் ஏசுவையும் பாடியவர். பாரதி தெய்வபக்தியோடு தேச பக்தியை வளர்த்தவர் எனவும் இவ்வாய்வின் மூலம் அறியமுடிகிறது.

83. இதழில் புதுமையைப் புகுத்திய பாரதி

முனைவர் வ.மீனாட்சி

உதவிப் பேராசிரியர், (தமிழ்)
அறிவியல் மற்றும் மனிதநேயத் துறை
கற்பகம் தொழில்நுட்பக் கல்லூரி
கோயம்புத்தூர்

முண்டாசுக் கவிஞனாம் பாரதியார், கால்பதிக்காத இலக்கியத் துறைகளே இல்லை என்று கூறலாம். படைப்புலகத்திற்கு என்று தன்னை அர்ப்பணித்தவர். கவிதை, கதை, கட்டுரை, புதினம் என இக்கால இலக்கியங்கள் அனைத்திற்கும் தனது பங்கைக் கொடுத்துள்ளார். இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றுப் பாரதியெனப் பட்டம் பெற்றவர். எட்டயபுரம் ஜமீனில் கவிஞனாக இருந்தவர். ஜமீனில் தான் பணிபுரிந்த வேலையை விட்டு விலகிய பின்பு வேறு பணிக்குச் செல்லலாமென எண்ணியபோது மதுரையில் தமிழ்ப் பேராசிரியராக இருந்த கோபாலகிருஷ்ணய்யர் என்பவரின் உதவியால் மதுரை சேதுபதி உயர்நிலைப்பள்ளியில் தமிழாசிரியராகச் சேர்ந்தார். அவருடைய கவிஞர் உள்ளமும் திறமையும் அவரை அங்கிருந்து சென்னைக்கு அழைத்து வந்து பத்திரிகைப் பணியில் அமர்த்தியது எனலாம். பத்திரிகையில் இதுவரை இல்லாத பலவிதப் புதுமைகளையும் நவீனத்துவத்தையும் அறிமுகப்படுத்தித் தனக்கு என்று ஒரு வழியை உருவாக்கிக் கொண்டார். அவர் புகுத்திய புதுமையைப் பற்றி ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழாசிரியரிலிருந்து இதழாசிரியர்

காசியிலிருந்து எட்டயபுரத்துக்குத் திரும்பிய பிறகு எட்டயபுர மன்னருக்குத் தினமும் பத்திரிகைகளைப் படித்து, அதில் உள்ள செய்திகளைப் படித்துச் சொல்லும் வேலை பார்த்து விட்டு, மதுரை, சேதுபதி பள்ளியில் தற்காலிகமாக மூன்று மாதங்கள் வேலை பார்த்து, அந்த வேலையும் முடிவுக்கு வந்தபோதுதான் அவருடைய 22ஆம் வயதில் சென்னையில் சுதேசமித்திரன் பத்திரிகையில் உதவி ஆசிரியர் வேலை கிடைத்தது.

தமிழாசிரியராக இருந்த பாரதியார் அங்கிருந்து சென்னை வந்ததற்கான காரணமாக மூன்றினை முனைவர் பா.இறையரசன் தனது "இதழாளர் பாரதி" எனும் நூலில் கூறுகிறார். முதலாவதாகச் "சுதேசமித்திரன்" இதழின் நிறுவனரான சுப்பிரமணிய அய்யரின் அறிமுகம் தான் பாரதியைச் சென்னைக்கு வரவைத்தது. காரணம் பாரதியின் திறமையும் அறிவாற்றலும் கண்டு சென்னைக்கு வருமாறு தன்னுடனேயே அழைத்து வந்து பத்திரிகைப் பணியில் அமர்த்தினார்.

இரண்டாவது பாரதியார் தனது உறவினரான இலட்சுமண அய்யர் என்பவர் சென்னை சைதாப்பேட்டையில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியொன்றில் முதல்வராக இருந்ததால் அவருக்கு ஒரு கடிதம் எழுதி தனக்குச் சென்னையில் ஒரு வேலைக்கு ஏற்பாடு செய்து தருமாறு வேண்ட, அவருடைய முயற்சியால் 'சுதேசமித்திர'னில் சேர்ந்தார் எனும் செய்தி மற்றொன்று.

மூன்றாவது காரணம், மதுரை சேதுபதி பள்ளியில் பாரதியாருடன் பணியாற்றிய அய்யாசாமி என்னும் ஆசிரியர் "இந்து" பத்திரிகையில் செய்தியாளராக இருந்த தனது மாமா மூலம் சுதேசமித்திரனில் வேலை வாங்குவதற்கு உதவினார் என்றும் மூன்று விதமான காரணங்களைக் கூறுகிறார். ஆனால் இவ்வாறு பல காரணங்கள் இருந்தாலும் பாரதியைச் சென்னைக்கு அழைத்துச் சென்றவர் சுப்பிரமணிய ஐயர் என்பவர் தான் என்னும் செய்தி தான் பரவலாக அனைவருக்கும் தெரிந்த செய்தியாகப் பேசப்பட்டு வருகிறது என்கிறார்.

பாரதியார் புகுத்திய புதுமை

தொடக்கக் காலத் தமிழ் இதழியலில் பல புதிய உத்திகளைத் திறம்படக் கையாண்டவர் பாரதியார். இதழியலில் முன்னோடியாகவும், வழிகாட்டியாகவும் இன்றளவும் விளங்குகிறார். சுதேசமித்திரன், சக்ரவர்த்தினி, இந்தியா, விஜயா, கர்மயோகி, சூரியோதயம், தர்மம் ஆகிய இதழ்களிலும் பாலபாரதா, 'ஆர் யங் இந்தியா' என்னும் ஆங்கில இதழிலும் பாரதி பணியாற்றினார். இதழின் உள்ளடக்கம், தலைப்பிடும் முறை,

விவாதக் கட்டுரைகள், கேலிச்சித்திரங்கள், சந்தாமுறை, வித்தியாசமான புனைபெயர்கள் எனப் பலவற்றில் தனது புதுமைகளைப் புகுத்தியவர் பாரதியார்.

சுதேசமித்திரன் தான் தமிழகத்தின் முதல் தமிழ் நாளிதழ் மற்றும் அரசியல் இதழுமாகும். இதன் ஆசிரியராக இருந்தவர் தான் ஜி.சுப்பிரமணிய அய்யர் ஆவார். இவரிடம் பாரதியார் பத்திரிகைக்குத் தேவையான அனைத்துப் பயிற்சிகளையும் பெற்றார். பின்னர் தான் சுதேசமித்திரனின் ஆசிரியராகப் பொறுப்பேற்றார். அவர் அதன்பின் பணியாற்றிய இதழ்கள் அனைத்திலும் பல புதுமைகளைச் செய்தார்.

வார இதழிலிருந்து நாளிதழும் நூலும்

பாரதி தான் பணியாற்றிய இந்தியா இதழானது ஆரம்பக் காலகட்டத்தில் வார இதழாக வெளிவந்தது. அதனைப் பெரிய அளவில் நாளிதழாக மாற்றம் செய்தார். இதனைப் போன்றே விஜயா இதழிலும் மாற்றம் செய்தார். சூர்யோதயம், கர்மயோகி போன்ற இதழ்களை நூல் அமைப்பில் வெளிவரச் செய்தார்.

இதழின் உள்ளே

இந்தியா இதழானது அரசியல் தொடர்பான இதழ் என்றாலும் அதனுள் இலக்கியப் பகுதி, கைத்தொழில் பகுதி, உழவுத் தொழில், அறிவியல், கல்வி, பெண் கல்வி, தல வரலாறு, சமயக் கருத்துகள் எனப் பல தலைப்புகளில் அனைத்து மக்களும் அவ்விதழைப் படித்துப் பயன்பெறும் வகையில் வடிவமைத்து வெளியிட்டார். கிடைத்த செய்திகளைப் பிரித்துப் பம்பாய், கல்கத்தா, லாகூர், சென்னை என்னும் தலைப்புகளில் வெளியிட்டார். மேலும் ராய்ட்டர் செய்தி நிறுவனம் அனுப்பிய செய்திகளை ராய்ட்டர் என்னும் தலைப்பில் தமிழில் மொழிபெயர்த்து வெளியிட்டார். சக்ரவர்த்தினி என்னும் இதழில் ஆங்கில மாதமும் ஆண்டும் குறிப்பிட்டு வெளியிட்டார். அதன்பின்னர் இந்தியா, விஜயா போன்ற இதழ்களில் தமிழ் மாதமும் ஆண்டும் நாளும் குறித்து அவற்றுடன் ஆங்கில மாதமும் ஆண்டும் சேர்த்து வெளியிட்டுள்ளார். இதன்மூலம் இதழியல் துறையில் முதன்முதலாக நாள், ஆண்டு, மாதம் ஆகியவற்றைக் குறிப்பிட்டவர் என்ற பெருமைக்குரியவர் ஆகிறார். மேலும் பக்க எண்களைத் தமிழ் எண்களாகக் கொடுத்தவரும் இவரே. இதழியலில் தமிழ் எண்களைப் பயன்படுத்தியவர் என்ற பெருமையும் இவரையே சாரும்.

தலைப்பு

இன்றைய நாளிதழ்களில் டமால் டுமில் என எதுகை மோனையுடன் தமிழ் அல்லாத சொற்களைப் பயன்படுத்துகின்றனர். ஆனால் பாரதியார் காலத்தில் தலைப்பு வைக்கும் முறை என்பது பெரிதாக வளர்ச்சி பெறாத நிலையில் இருந்தது. ஆனாலும் சிறு பத்தி செய்தியாக இருந்தாலும் அதற்கென்று தலைப்பு இருக்க வேண்டும் என்று விரும்பினார். செய்தியின் அளவைவிடத் தலைப்பிற்குப் பெரிய எழுத்துகளைப் பயன்படுத்தினார். தலைப்பு வைப்பதற்கு "மகுடமிடல்" என்று கூறியுள்ளார். ஆங்கிலத்தில் தலைப்பு இருந்தால் அதற்குக் கீழேயே தமிழில் தலைப்பைக் கூறும் வழக்கமும் அவரிடம் இருந்துள்ளது. செய்திதாளின் தலைப்பு, தமிழில் தான் இருக்க வேண்டும் என்பதைத் திரு.வி.க விற்கு முன்பே நடைமுறைப்படுத்தியவர் பாரதியார்.

சந்தா

இதழ்கள் தொடர்ந்து நம் இல்லம் தேடி வரச் சந்தா தொகை செலுத்தும் முறை இன்று போல் அன்றும் இருந்துள்ளது. ஆனால் பெரிய வேலை செய்வோர்கள் தான் பத்திரிகை வாங்கினார்கள். ஆனரல் குறைந்த ஊதியத்தைப் பெறுவோரால் வாங்க முடியாத சூழல் ஏற்படுவதை அறிந்து அதற்கான தீர்வையும் தனது இதழ்களில் கொண்டு வந்தார். மாதம் 200 ரூபாய்க்குக் குறைவாக வருமானம் உடையவர்களுக்கு ஆண்டு சந்தா 3 ரூபாயாகவும் 200 ரூபாய்க்கு அதிகமாக வருமான உடையவர்களுக்கு ஆண்டு சந்தா 10 ரூபாயாகவும் அரசாங்கத்தில் வேலை செய்வோருக்கு, ஜமீன்தார்களுக்கு, ராஜாக்களுக்கு ஆண்டு சந்தா 30 ரூபாயாகவும் சந்தா தொகையை நிர்ணயித்தார். மாணவர்களுக்கென்று மிகக் குறைந்த விலையில் தனது பத்திரிகைகளை வழங்கினார்.

விவாதங்கள்

தனது இதழ்களில் பாரதியார் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதனுள் 'மாதந்தோறும் நமது பத்திரிகையில் பெண்களுக்கென்று ஏதேனுமோர் தகவல் குறித்து மாறுபட்ட அபிப்பிராயங் கொண்ட இருவர்களால் ஒவ்வொரு செய்தியும் எழுதப்படும். ஒரே தகவல்களை மக்களுக்குள் எத்தனை மாறுபாடான அபிப்பிராயம் வைத்துக் கொண்டிருந்தால் சாத்தியமென்பதை எடுத்து விளக்கும் பொருட்டு ஒரு விவாதத்தின் இரு கட்சிகளையும் கேட்டு நியாயத்தைக் கண்டுபிடிக்கும் வழக்கம் நமது மாதர்களுக்குள்ளே பலப்படும் பொருட்டும் இம்முறை அனுசரிக்கப்படுகிறது' என்று சக்ரவர்த்தினி இதழில் குறிப்பிட்டுள்ளார்.

கேலிச்சித்திரங்கள்

பாரதியாருக்கு முன் சமூக சீர்திருத்தம் தொடர்பான கார்ட்டூன்கள் எனப்படும் கேலிச்சித்திரங்கள் வெளிவந்துள்ளன. ஆனால் அரசியல் பிரச்சாரக் கருத்துப்படம், சுயப்படைப்புகளாகப் பாரதியாரிடம் இருந்தே தொடங்கியது என்பது வரலாற்று உண்மை. கருத்துப் படம் (கார்ட்டூன்) என்பது கேலிச் சித்திரம், அங்கத ஓவியம், அரசியல் வகைக் கேலிச் சித்திரம், ஏளன ஓவியம், வேடிக்கை ஓவியம் என்றும் வழங்கப்படும். அவற்றைப் பாரதி தமது பத்திரிகையில் அமைக்கும் போது, ஓவியரிடம் இப்படி இருக்க வேண்டுமெனக் கூறி தமது முகத்திலும் அபிநயங்களிலும் காண்பித்து விடுவதுண்டு. ஓவியரின் மனதில் அந்தப் பாவனைகள் நன்கு பதிந்துவிடும். அவ்விதமே சித்திரமும் தயாராகும். கேலிச் சித்திரங்களின் முன்னோடி என்ற பெருமை பாரதியையே சாரும். விளம்பரம் என்பது கருத்துக்களைப் பரப்பும் கருவி என்றும், இதழியல் மக்கள் தொடர்புக்கு உரிய வாயில் என்றும் பாரதி நன்கு அறிந்திருந்தார். அதிக அளவில் விளம்பரங்களை இதழ்களில் வெளியிட்டார். எளிய நடையில் எழுத விரும்பிய பாரதி மிகவும் புதிய சொற்களைப் பயன்படுத்தினால் மக்களுக்குப் புரியாமல் போகும் என்பதால் பழைய சொற்களுக்குப் புதிய பொருளை ஏற்றியும், பழைய சொற்களை இணைத்துப் புதிய சொற்களை உருவாக்கியும் வழங்கியுள்ளார்.

புனைப்பெயர்கள்

'எமக்குத் தொழில் கவிதை' என்று தன்னுடைய தொழிலைப் பற்றிப் பிரகடனப்படுத்திக் கொண்ட பாரதி இதழியல் துறைக்குள் வந்தது தற்செயலாகத்தான். அவர் தனது பெயரை, மிகப் பொதுவாக எழுதும்போது மட்டுமே வெளிப்படையாகக் காட்டிக் கொண்டுள்ளார். பிற இடங்களில் தம்மை காட்டிக் கொள்ளாமல் புனைபெயர்களையே மிகுதியாகப் பயன்படுத்திக் கொண்டார். அவரது புனைபெயர்களாவன, சக்திதாசன், காளிதாசன், ஷெல்லிதாசன், சாவித்திரி, உத்தம தேசாபிமானி, நித்திய தீரர் போன்றவை யாகும். அரசியல் சூழலில் தம்மை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பாத பாரதி புனைபெயர்களைப் பயன்படுத்தினார். மேலும் வெள்ளைக்காரர்களைத் துண்டுத் துண்டாக வெட்டிக் கங்கையாற்றில் எறிய வேண்டும் என்று ஸ்வர்ணவங்கம் என்ற இரகசியச் சங்கம் வெளியிட்ட துண்டு விளம்பரத்தை ஆங்கில இதழ் எடுத்து வெளியிட, அதனைத் தம் இதழில் அப்படியே வெளியிட்டு இறுதியாக, "ஆங்கிலேயருக்கு எதிரான கருத்துக்களைப் பற்றிப் பிற இதழ்களில் வந்தவற்றைத் தான் எடுத்து வெளியிட்டுள்ளேன்" என்ற வகையில் சட்ட நுணுக்கத்தோடு பாரதி கூறியுள்ளது குறிப்பிடத்தக்கது.

சுதந்திரத் தாகமும் புதுமைப் பெண்களும்

காங்கிரஸ் மகா சபையின் முக்கியப் பொறுப்பிலும் சுப்பிரமணிய ஐயர் இருந்ததால் - சுதந்திர உணர்வு தகதகக்கிற அடுப்பின் பக்கத்திலிருந்து அந்த வெப்பத்தை உள் வாங்குகிற அனுபவம் பாரதிக்கு ஏற்பட்டது. அதனாலேயே 'நவீன நாகரீகத்தில் ஒன்றாகிய பத்திரிகைத் தொழில்' என்று சுதேசமித்திரனில் எழுதுகிற அளவுக்கு இதழியல் மீது பாரதிக்கு ஆர்வம் ஏற்பட்டது. ஆரம்பத்தில் ஆங்கிலத்திலிருந்த செய்திகளைத் தமிழில் மொழிபெயர்ப்பதில்தான் பாரதியின் இதழியல் பணி தொடங்கியது. பிறப்பும், வளர்ப்பும் புகுத்தியிருந்த கற்பிதங்களைக் கால மாற்றத்திற்கேற்பக் களைய பாரதி தயங்கவில்லை. பெண்களை வெளியில் அழைத்துச் செல்வதை அப்போதைய சம்பிரதாய மரபுகள் தடுப்பதை நிவேதிதா சுட்டிக் காட்டியதும், பெண்களுக்கேயான 'சக்ரவர்த்தினி' பத்திரிகையின் ஆசிரியராகி புதுமைப் பெண்ணுக்கான இலக்கணங்களை அடையாளப்படுத்தினார்.

நிறைவாக

கண் பார்வை மங்கிய நிலையிலும் காலனியாதிக்கத்திற்கு எதிரான குரலைத் தமிழில் எழுப்பிய ஜி.சுப்பிரமணிய அய்யரின் வழிகாட்டுதலின் கீழ் அவர் பணியாற்றியது பாரதியின் வாழ்க்கையில் முக்கியமான திருப்பம். மற்றத்தொழில்கள் வேலைகளைவிட, இதழியல் துறைக்குள் அவர் நுழைந்தது அவரைப் பல விதத்தில் செழுமைப்படுத்தியது. காலத்திலிருந்து துண்டித்துக் கொள்ளாமல் காலத்திற்கு ஏற்ப அவரைப் புதுப்பித்துக் கொள்ள வைத்தது. தொடக்கத்திலும் இறுதியிலும் பணியாற்றிய சுதேசமித்திரனில் பாரதி உருவாக்கிய நடைச்சித்திரமும் எளிய தமிழ் நடையும், இந்தியா இதழில் காட்டிய அரசியல் விழிப்புணர்ச்சியும் தமிழ்நாட்டில் பல இதழ்கள், இதழாளர்கள், இதழாசிரியர்கள் உருவாகக் காரணமானது. எண்ணற்ற இதழாளர்களுக்கு வழிகாட்டியாகவும், இதழியல் உத்திகளுக்கு முன்னோடியாகவும் பாரதி விளங்குகிறார். ஆனால், பாரதி வாழ்ந்த காலத்தில் இதழியல் மதிப்பீடுகள் இந்த அளவுக்குச் சரிவைச் சந்திக்கவில்லை. அந்தக் காலகட்டப் பத்திரிகைகளின் இலக்கு வேறு; செயல்பாடுகள் வேறு என்பதை அறியமுடிகின்றது.

84. பாட்டுக்கோர் பாரதி

ந.சித்ரா எம்.ஏ.,பி.எட்.,

இடைநிலை ஆசிரியர், அ.பெ.மே.நி.பள்ளி
தொண்டாமுத்தூர், கோவை

முன்னுரை

தமிழில் பிறந்த கவிஞர்கள் பலர் இருக்கிறார்கள். ஆனால் பாட்டு என்ற சொல்லைச் சமூகம் முழுவதும் பறையடிக்கச் செய்தவர் ஒரே ஒருவர் - மகாகவி சுப்பிரமணிய பாரதியார். இசையின் ஆழமும், கவிதையின் களமும், உணர்வின் வெப்பமும் கொண்ட பாட்டு எனும் வடிவத்தில் தனது முழு சிந்தனையையும் சொற்களையும் அவர் பாய்ச்சினார். எனவேதான், "பாட்டுக்கோர் பாரதி" எனும் அழகிய பட்டம் அவருக்கு ஏற்புடையது. தமிழ்த் தேசத்தின் மாபெரும் கவிஞராகத் திகழ்ந்த சுப்பிரமணிய பாரதியார், தனது கவிதைகளில் கற்பனை, சமூக நியாயம், ஆன்மிகம், அறிவியல், சமத்துவம், தேசிய உணர்வு ஆகியவற்றைப் பிணைத்துப் பேசியவர். இவரது எழுத்துப் படைப்புகளில் “குயில் பாட்டு" என்பது ஒரு தனிச்சிறப்புடைய புனைவுக் கவிதை. இதில் குயில் என்னும் பறவை வாயிலாக ஒரு புதிய சமூக விழிப்பை உருவாக்க முயல்கிறார். இது பாரதியின் சிந்தனையின் உச்சக் கட்டத்தை வெளிப்படுத்தும் படைப்பு.

பாட்டில் பிறந்த புரட்சி

பாரதியார் தனது எழுத்துக்களைப் பாடல்களாக உருவாக்கினார். எளிய மக்களும், குழந்தைகளும், சாதாரணப் பெண்களும் அதை எளிதில் பாட முடியும் என்ற நோக்கத்துடன், அவரது கவிதைகள் சுருக்கமாக, திருப்பங்கள் உடையதாக,உணர்ச்சி மேலோட்டமற்றது, மற்றும் இசை நயத்தை உடையதாக இருந்தன. "அச்சமில்லை அச்சமில்லை", "நின்னைச் சரணடைந்தேன்", "வந்தே மாதரம்", "தேடிய தேடியதொரு தேவியை" போன்ற பாட்டுகள் மக்கள் மனதில் பதிந்தவை.

பாட்டு - பாரதியின் மொழி

பாரதியார் பேசும் மொழி தான் பாட்டு.அவர் எந்த விஷயத்தைப் பற்றியும் எழுதினாலும் -அது ஒரு பாடலாக வெளிவரும்.

துறைபாடல் உதாரணம்

தேசியம்: வந்தே மாதரம்","என்னைப் பதித்த மொழி தமிழே" பெண்ணியம் "பெண்ணை உயர்த்துவோம்","பாப்பா - ஜாதிகள் இல்லையடி"
இயற்கை: "கண்ணனுக்குப் புன்னகை","பொன் விளை நிலம்"
அன்பு/பாசம்: "தொண்டர் பாட்டு","கன்னிப் பெண்ணைப் போற்றி"
மனோதத்துவம்: "எழுவோம் எளியரோடு இணைந்து","சத்தியும் பாவமும்"

பாட்டு வழியாகச் சமூகவியல்

பாரதி பாட்டின் வழியே தான் சமூக மாற்றத்தைக் கொண்டு வந்தார். எதையும் நேரடியாகக் கூறவில்லை. பாடல் வழியாக, மக்களது மனதில் நினைவு பதியும் வகையில் கூறினார். "ஜாதிகள் இல்லையடி பாப்பா" - குழந்தையின் வாயிலாகச் சமத்துவத்தைப் போதித்தார். "நமக்கு இன்பம் எங்கு" - என வாழ்வியல் கேள்வியை எழுப்பினார்.

பாட்டின் இசை, இலக்கணம், பாவனை

பாரதியின் பாட்டு இளம்பெண்கள் பாடக் கூடிய ராகங்களில் அமைந்தது. தாளம், ஏதாவது விருப்ப ராகம் இல்லையெனில், எளிய ராகங்களில் இருந்தது. தனிச்சொற்கள், மெய்ப்பாடுகள், ஒலி அமைப்புகள் இசையாக இருந்தது. "நான் பாடிய பாட்டுக்கு வாத்தியங்கள் தேவையில்லை; என் உள்ளத்தின் வாத்தியமே போதும்." என்கிறார் பாரதியார்.

பாட்டில் வாழ்ந்த பாரதி

அவர் வாழ்க்கையின் கடைசி வரை -பாடல்களை உருவாக்கினார். "குயில் பாட்டு", "பஞ்சாலி சபதம்", "புத்தர் காப்பியம்" - எல்லாம் பாடல்களே. அதனால்தான், அவர் கவி மட்டும் இல்லை - பாட்டுக்கோர் பாவலர் என்பதையும் தாண்டிப் பாடி வாழ்ந்தவர்.

காவியப் போக்கு மற்றும் அமைப்பு

"குயில் பாட்டு" என்பது ஒரு நீண்ட கவிதைத் தொடர். இது ஒரு நவீன இலக்கியக் காவியப் பாணியில் எழுதப்பட்டுள்ளது. கதையின் மையக் களமாக ஒரு குயில், மனிதன் மற்றும் அவரது உள்ளத் தேடல் அமைகிறது. குயில் இங்கு ஒரு தத்துவக் குருவாக உருவாகிறது. கதையமைப்பில் ஒரு புனைவு வடிவம் இருந்தாலும் அதனுள் பாரதியின் யதார்த்த சிந்தனைகள் ஆழமாக நிறைந்துள்ளன.

புனைவுப் படிமங்கள் மற்றும் பொருளடக்கம்

குயில் - ஒரு அறிவுடைமைச் சின்னம்

பறவை என்ற இயற்கை உருவம், பாரதியாரின் கற்பனையில் மெய்ஞ்ஞானத்தின் தூதராக மாறுகிறது. குயிலின் குரல் "பாடும் குயிலாக" பரிணமிக்கிறது; அதன் பாடல் சமூக சீர்திருத்தத்திற்கான ஓர் அழைப்பு.

மனிதன் - தேடலின் நாயகர்

மனிதன் இந்தக் குயிலின் குரலில் ஈர்க்கப்பட்டு, தனது வாழ்வின் அர்த்தத்தைக் கண்டடைய முயல்கிறான்.அவனது பயணம் ஆன்மிக, சமூக, அறிவியல் மற்றும் மனப்பார்வைக் கூறுகளைக் கொண்டது.

சமூக மாற்றத்தின் தேடல்

பாரதி காணும் சமுதாயம் அந்நிய ஆதிக்கத்தால் சிதைந்தது. குயிலின் வாயிலாகக் கூறப்படும் பாடல்கள், சுதந்திரம், சமத்துவம், கல்வி, தொழில், அறிவியல் முன்னேற்றம் ஆகியவற்றைப் பேசுகின்றன.

பாரதியின் சிந்தனைகளின் வெளிப்பாடு

தேசிய உணர்வு

"நமதே இந்த தேசம், நமதே இந்த மண்
நம்மில் எவரும் அடிமை அல்ல"

இந்தக் கவிதை, தமிழரின் மன அடிமைத்தனத்திற்கு எதிரான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கத்துடன் எழுதப்பட்டுள்ளது. குயிலின் பாடல்கள் இந்திய சுதந்திரத்தை அடைய வேண்டிய அவசியத்தைக் கூறுகின்றன.

பெண்ணியம் மற்றும் சமத்துவம்

"பெண் பிள்ளைகளும் கல்வி பயில வேண்டும்
வேலைவாய்ப்பும், உரிமையும் பெற வேண்டும்"

இங்கே பாரதி, குயிலின் வாயிலாகப் பெண்களின் முன்னேற்றம் பற்றிய தனது எண்ணங்களை வலியுறுத்துகிறார்.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

"விண்ணைப் பறக்கும் வானூர்தி,
மின்னல் போல் ஓடும் எண்ணம்"

இது பாரதியின் அறிவியல் முனைப்பையும் வெளிப்படுத்துகிறது. அவர் கற்பனை உலகத்தை அறிவியல் சாத்தியங்களுடன் இணைத்து உள்ளார்.

இலக்கிய நுணுக்கங்கள்

மொழியின் இசைத்தன்மை: கவிதையின் ஒவ்வொரு வரியிலும் உள்திறன் மற்றும் வெளித்திறனுடைய ஓசை அமைந்துள்ளது. ஆணை, ஒத்திசை, இடைச்சொல், திரிபு ஆகியவை பயன்படுத்தப்பட்டு, கவிதை இசைமிக்கதாக உள்ளது.

காப்பிய வழக்குகள்

குயிலுடன் பேசும் மனிதன், ஒரு தீர்க்கதரிசி போல மாறுகிறார். இந்தக் கவிதை ஒரு புதிய யுகத்திற்கு அழைக்கும் சங்கீதம்.

கற்பனை உலகம் மற்றும் உண்மைச் சிந்தனை

பாரதியார் தனது கற்பனையின் வழியாகச் சமூக உண்மைகளை எளிய சித்திரங்களாக உருவாக்குகிறார்.

இனிய ஒப்பீடு

குயில் பாட்டு குயிலின் வழி (பிரான்சு கவிஞன் லாமார்டீனின் பாணி); பறவையின் குரல் -ஆன்மிக ஞானத்தின் குரல்; இயற்கையின் அழகுக்குரிய இசை -மனிதன் மாற்றத்துக்கான ஏவுகோல்பெற்று இயங்குபவன் இயற்கை ஒலியில் இன்பம் காண்பவன்; நோக்கம்-சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தல்; அழகியல் -அனுபவம்

முடிவுரை

"பாட்டுக்கோர் பாரதி" என்பது ஒரு கலைச்சொல்லல்ல; அது ஒரு உண்மை வாழ்க்கை நெறி. பாடலைச் சமர்ப்பிக்கவே பிறந்தவர் போல வாழ்ந்த மகாகவி பாரதியார், இன்றும் தனது பாடல்களில் உயிரோடு இருக்கிறார். "பாட்டு எனும் புனித வழி - பாரதியின் உயிரணு!". பாரதியின் "குயில் பாட்டு" என்பது ஒரு கவிஞனின் கனவுகளை வெளிப்படுத்தும் காவிய உணர்வுடனும், ஒரு சீர்திருத்தவாதியின் போராட்டங்களை வெளிப்படுத்தும் சமூக விழிப்புணர்வுடனும் நிரம்பிய ஒரு பிரத்யேகக் கவிதை. இது தமிழ் இலக்கியத்தில் ஒரு மைல்கல்லாக விளங்குகிறது."குயிலே நீ பாடும் வரை குரலே நம் தெய்வமாகும்". இந்த அடிகள் பாரதியின் மொழிக்குரிய மதிப்பையும், அவருடைய உள்ளக் கனவுகளையும் பிரதிபலிக்கின்றன.

துணைநூற்பட்டியல்

1. பாரதியார் கவிதைகள்,பாரதியார்,திருமகள் நிலையம்,சென்னை.
2. பாரதியார் நூல்கள் ஒரு திறனாய்வு,ம.ப.பெரியசாமித் தூரன்,வானதி பதிப்பகம்,சென்னை.

85. பாரதியின் சிந்தனைச் சிறகுகள்



தகைசால் கவிஞன் அரிமா

முனைவர் ச.அய்யர்

அரசுப் பள்ளி பட்டதாரி ஆசிரியர்; (பணி நிறைவு)
திருநகர்,மதுரை.

தோற்றுவாய்

பாரதி தமிழ்நாட்டிற்குக் கிடைத்த பொக்கிசம். பாரதியின் சிந்தனை உலகளாவிய சிந்தனை. அவர் வறுமையில் வாடினாலும், அவருடைய கவிதைகள், எண்ணங்கள், சிந்தனைகள் ஒருபோதும் வாடியதில்லை. அவர் மூளையை உறங்கவிடாமல் வேலை கொடுத்துக்கொண்டு சுறுசுறுப்பாக வைத்துக் கொள்வதால், அவரும் சுறுசுறுப்பாகத் தன்னையும் வைத்துக்கொண்டார். மூளையைத் துருப்பிடிக்க விடாமல், புதுப்பித்துக் கொண்டிருப்பார். அவ்வாறு புதுப்பித்துக் கொண்டிருப்பதால், பாட்டுகள், கவிதைகள், பெண் விடுதலை, சமுதாயம், கல்வி, பாப்பாப்பாட்டு, தேசம் விடுதலை போன்ற எண்ணற்ற சிந்தனைச் சிறகுகள் மூளைக்குள் முளைத்தன, சிறகுகள் முளைத்தப் பறவையாக வானில் பறக்கின்றார். அவ்வாறு வந்த சிந்தனைச் சிறகுகள் சிலவற்றை இக்கட்டுரை ஆராய்கிறது.

பாரத தேசம்

"பாரத தேசமென்று பெயர் சொல்லு வார் - மிடி"

"இந்திய நாடு" என்ற பெயரை உச்சரிக்கும் போதே வறுமை பற்றிய அச்சத்தை ஒழிப்பர். துன்பமாகிய எதிரியை வெற்றி கொள்வர் என்று பாரத தேசத்தை பற்றிப் பெருமையுடன் எடுத்துரைக்கிறார். **"வெள்ளிப் பனிமலையின் மீதுலவு வோம்; அடி"** -பாரதி

வெள்ளியை உருக்கி வார்த்தது போல பணிபடர்ந்திருக்கும் இமயமலையின் மீது உலவச் செல்லுவோம். கிழக்கு மற்றும் மேற்குத் திசையில் உள்ள கடற்பரப்பு முழுவதும் மரக்கலங்களைச் செலுத்துவோம். கல்விக் கூடங்களை அனைத்தும் ஆலயம் என மதித்துக் கற்போம். **"எங்கள் இந்திய நாடு"** என்று பெருமையோடு கூறி, வீரத்தின் அறிகுறியாகப் புயங்களை உயர்த்தித் தட்டி ஆடுவோம். **"சிந்து நதியின்மிசை நிலவினிலே"** -பாரதி. சந்திரனுடைய ஒளிமிக்க இரவுப்பொழுதில் சிந்து நதியின் மீது சேர நாட்டைச் சேர்ந்த இளங்குமரிகளுடன் இனிமைமிக்க தெலுங்கு மொழியில் பாட்டுப்பாடி, படகோட்டி மகிழ்வோடு பொழுது போக்குவோம்; என்று சிந்து நதியின் அழகை வர்ணிக்கிறார்.

செந்தமிழ் நாடு

"செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்"
- செந்தமிழ்

"செந்தமிழ் நாடு" என்னும் பெயரை உச்சரிக்கும் போதே மகிழ்வாகிய தேன் எங்களுடைய காதில் வந்து பாய்ந்து ஓடுகிறது. எங்களுடைய தந்தைமார் நாடு இது என்ற உரையைக் கேட்கும் போதே எங்களுடைய உணர்வில் ஆற்றல் தோன்றுகிறது என்று நம் தமிழ்நாட்டின் பெருமையாக எடுத்துரைக்கின்றார்.

"கல்வி சிறந்த தமிழ்நாடு - புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு - நல்ல"
- செந்தமிழ்

கல்வி கேள்விகளில் மேன்மை பெற்ற தமிழ்நாடு; கல்வியில் பெரியவன் கம்பன் பிறந்த புகழ் பெற்ற தமிழ்நாடு; பல்வேறு வகையான நன்மை தரும் அறிவுக்கலைகளின்

அறிவு மணத்தை உலகெங்கும் பரப்பும் தமிழ்நாடு என்று தமிழ்நாடு அறிவில் கல்வியில் சிறந்ததென்றும், தமிழ்நாட்டின் மேன்மையை அழகாக எடுத்துரைக்கிறார்.

தமிழ்

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்;"

நாங்கள் கற்றறிந்த மொழிகளில் தமிழ்மொழி போல இனிமையான மொழியை வேறு எங்கும் பார்க்கவில்லை. அறிவில்லாதவராக, மிருகங்களாக, உலகில் உள்ள மக்கள் அனைவரும் இழித்துரைக்கும்படி உயர் தன்மை அழிந்து, நாம் தமிழ் மக்கள் என்ற பெயரோடு இங்கே வாழ்வது நல்லதல்ல. தேன் போன்ற இனிமையான நமது தமிழ் மொழியின் புகழை உலகம் எங்கும் பரப்பும் படியான வழிமுறைகளை மேற்கொள்ள வேண்டும் என்று தமிழ் மொழியின் சிறப்புகளை எடுத்துரைக்கிறார்.

விடுதலை

"ஏழை யென்றும் அடிமை யென்றும்
எவனும் இல்லை, ஜாதியில்.." - விடுதலை

ஜாதி அடிப்படையில் வறியவன் யாரும் கிடையாது. யாருக்கும் கீழானவன் என்றும் யாரும் கிடையாது. கீழாக மாந்தர் என்று எவரும் நமது பாரத தேசத்தில் இல்லை. மனமகிழ்ச்சியோடு, கல்வியறிவும், செல்வமும் பெற்று அனைவரும் சேர்ந்து வாழ்வோம். இங்குள்ள மக்கள் அனைவரும் ஒருவருக்கு ஒருவர் சமமாக வாழ்வோம்.

"மாதர் தன்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்;" - விடுதலை

பெண்களைத் தாழ்மையானவர்களாக நடத்துகின்ற அறியாமையைத் தீயிட்டு எரிப்போம். இந்த உலக வாழ்விலே எந்த வகையிலும் நமக்குள்ளே ஆணுக்குப் பெண் அடிமை என்ற நிலைமை இல்லாமல் ஆடவரும், மகளிரும் ஒருவருக்கு ஒருவர் சமமானவர்களாக இந்த நாட்டில் வாழ்வோம்.

மனதில் உறுதி வேண்டும்

மனதில் உறுதி வேண்டும்;
வாக்கினி லேயினிமை வேண்டும்;

திடமான நெஞ்சம் தேவை. இதமான பேச்சு தேவை. உயர்வான எண்ணங்கள் தேவை. அருகிலே வந்த செல்வம் கைவசமாக வேண்டும். காண்கின்ற இலட்சிய கனவுகள் நிஜமாதல் அவசியம். அதுவும் விரைவாக கிடைத்தல் அவசியம். பொருட்செல்வமும், சுகமும் தேவை. உலகத்தில் கீர்த்தியை அடைய வேண்டும்.

வயிற்றுக்குச் சோறிட வேண்டும்-இங்கு
வாழும் மனிதருக் கெல்லாம்;

இப்பூமியில் வாழுகின்ற மாந்தர் அனைவருக்கும் பசியாற உணவளிக்க வேண்டும். பின்னர் பல்துறைக் கல்வியறிவினை கொடுத்துப் பயிற்சி பெற வைத்து, இந்த உலகத்தை மேலோங்கச் செய்ய வேண்டும்.

நிறைவாக

எட்டயபுரத்துப் பட்டயக் கவிஞனின் படைப்புகள் அனைத்தும் தேன். பாரதியை ஒரு கூண்டிற்குள் அடைத்து விட முடியாது; அவன் உலகளாவிய சிந்தனைச் சிறகுக் கவி. அவருடைய பாடல்களைப் படித்து, சுவைத்து மக்கள் பயன்பட வேண்டும்.

86. பாரதி தன் நெஞ்சிற்கு உரைத்தவை



முனைவர் மு. செண்பகவள்ளி

கௌரவ விரிவுரையாளர்,
இராணிமேரி கல்லூரி, சென்னை.

முன்னுரை

நம் இலக்கண இலக்கியங்களில் தலைவன் கூற்றுகளில் தலைவன் தோழிக்கும், தலைவிக்கும், பாகனுக்கும், பாங்கனுக்கும் உரைப்பனவாகப் பல நிகழ்வுகள் உள்ளன. அவ்வகையில் தலைவன் கூற்றுகளில் வினைமேற்கொள்ளும் தலைவன் தன் நெஞ்சிற்குக் கூறுவதாகப் பல பாடல்கள் அமைந்துள்ளன. அப்பாடல்களில் தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் செல்கையில் தன் மனம் போக மறுக்கும் இடங்களிலும், பொருள் தேடி விட்டு மீண்டு வருகையில் தலைவியைத் தேடி விரைந்து செல்லத் தன் மனதை விரைவுப்படுத்துவதாகவும் அக்கூற்றுரைகள் இருக்கும். இவற்றில் இருந்து முற்றிலும் வேறுபட்டு புதுமைக் கவிஞன் பாரதி மனிதர்களில் குழந்தைகள், பெண்கள், இளைஞர்கள் எனப் பலருக்கும் பலவித கருத்துக்களைத் தன் கவிதைகளில் அவர்கள் மேனிலை எய்துவதற்குக் கூறியுள்ளார். எனினும் தனக்கும், தன் நெஞ்சிற்கு உரைப்பனவாகவும் பல இடங்களில், பல நற்கருத்துக்களைக் கூறியுள்ளார். அவற்றை ஆய்வதாக இக்கட்டுரை அமையும்.

பாரதி பிறருக்கு உரைத்தவை

பாரதி ஆண்கள், பெண்கள், இளைஞர்கள் எனப் பலருக்கும் அவர்கள் தன் நிலையிலிருந்து மேனிலை அடைய பல நற்கருத்துக்களைக் கூறியுள்ளார். அவற்றில் குழந்தைகள் பற்றிக் குறிப்பிடுகையில் ஆண் குழந்தைகளை விடப் பெண் குழந்தைகளுக்கு அறிவுரைகளை மிகுதியாகக் கூறுகின்றார்.

குழந்தைகளுக்கும், பெண்களுக்கும் உரைத்தவை

பெண் குழந்தைகளை நல்வழிப்படுத்த, அவர்கள் தினமும் கைக்கொள்ள வேண்டிய நற்பழக்கங்களைப் பாப்பா என விளித்துக் கூறி குழந்தைகளுக்கு உரைப்பது போலவே, “ஓடி விளையாடு, ஓரிடத்தில் ஓய்வாக அமர்ந்திருக்காதே, காலையில் எழுந்ததும் நூல்களைப் படிக்கும் பழக்கத்தையும் மாலை ஆனதும் விளையாடும் பழக்கத்தையும் நீ உனக்குரிய வழக்கங்களாக கைக்கொள்ள வேண்டும்” (பாரதியார் கவிதைகள். ப - 220) எனக் கூறுகின்றார்.

பெண்களுக்கென - பெண்கள் ஆண்களால் அடிமைப்பட்டு வீட்டிற்குள் அடைந்திருந்த காலக் கட்டத்தில் பெண்களுக்கு விழிப்புணர்வை ஊட்டப் பாரதி, “பட்டங்களால் நாடு, வீடு என இரண்டையும ஆள்வதையும், பிறர் சட்டங்களுக்கு ஆளாகாமல் தாம் சட்டங்கள் இயற்றுவதையுமே குறிக்கோளாகக் கொண்டு பெண்கள் இவ்வுலகில் பிறந்து வந்தோம் என்றும்,

“எட்டும அறிவினில் ஆணுக் கிங்கேபெண்” (பாரதியார் கவிதைகள். ப - 230)

எனப் பெண்களை நாடு குலுங்கும்படிக் கைக்கொட்டிக் கும்மியடித்து உரைத்துக் கூறு என்றும் கூறுகின்றார். பாரதியின் இக்கூற்றில் இருந்து பெண்கள் படிப்பறிவும், விடுதலையும் பெற வேண்டும் என்ற பாரதியின் நல்லெண்ணம் வெளிப்படுகின்றது.

மனிதனுக்கும், காலனுக்கும் உரைத்தவை

எல்லோருக்கும் உணவு, உடை, இருப்பிடம் என அடிப்படைத்தேவைகள் அனைத்தும் கிடைக்கவேண்டும் என இயல்பாகவே எண்ணங்கொண்டவர் பாரதி. அப்படியிருக்க நம் நாட்டில் பணக்காரன் உணவைப் பசிக்காமலேயே உண்ணும்

நிலையையும், நன்கு பசித்தும் ஒரு வேளை கூட, ஒரு கைப்பிடிக் கூட உண்ண உணவில்லாமல் வறுமையில் ஏழை தவிக்கும் நிலையையும் அன்றே உணர்ந்த பாரதி,

"தனியொருவனுக் குணவிலை யெனில்" (பாரதியார் கவிதைகள். ப - 107)

என சக மனிதர்களைப் பார்த்து தன் கருத்தைக் கட்டளைக் கூற்றாக உரைக்கின்றார். தன்னைக் கொன்று உயிரற்றவனாகத் தன்னை இந்நாட்டின் நன்மைக்காகச் செயல்பட விடாது செய்யக் காத்திருக்கும் கூற்றுவனுக்கூடப் பாரதி காலனே என் அருகினில் என்னைக் கொல்லும் எண்ணத்துடன் வருவாயோ, வாடா வா, உன்னை என் காலால் எட்டி மிதித்து என்னைக் கொல்ல விடாது உன்னை விரட்டுகின்றேன் என வீரமாக எமனிடம் உரைக்கின்றார்.

இயல்பாக உரைத்தல்

வீணாக எந்நேரமும், எப்பொழுதும், எந்நிகழ்விற்கும் கவலைப்பட்டுக் கொண்டிருக்கும் தன் நெஞ்சைப் பார்த்து ஒரு நண்பனுக்கு ஒரு தீமையைச் செய்யாதே என உரைப்பதைப் போல, **"ஏழை நெஞ்சே வாழி! நேர்மையுடன் வாழி!"** (பாரதியார் கவிதைகள். ப - 111) என உரைக்கின்றார். இதில், இவ்வுலகில் கவலைகள் என்பது நிரந்தரமில்லை. வாழ்க்கையில் நன்மையும், தீமையும் மாறிமாறி வருவது உலக இயல்பு. கவலைப் படுவதால் நமது உடல்நலனே கெடும். மன அமைதி கிடைக்காது என்பதை உணர்ந்துதான் பாரதி தன் மனதிற்கு ஏற்றவாறு இயல்பாகக் கூறியுள்ளார்.

ஒப்பந்தம் இட்டுரைத்தல்

ஒரு குழந்தை மற்றொரு குழந்தையிடம் அக்குழந்தை வைத்திருக்கும் தின்பண்டங்களிலோ, விளையாட்டுப் பொருட்களிலோ ஒன்றைத் தான் பெறுவதற்கு தான் வைத்துள்ள அப்பொருளை உனக்குத் தருகின்றேன், அதற்குப் பதிலாக நீ வைத்துள்ள அப்பொருளை எனக்குக் கொடு எனப் பேச்சில் ஒப்பந்தம் செய்து கொள்வது குழந்தைகளின் இயல்பு. அதைப்போலப் பாரதி ஓரிடத்தில் தன் நெஞ்சிடம், நான் எல்லோருக்கும் நல்லவனாகவும், வல்லவனாகவும், அன்பானவனாகவும், இனியவனாகவும் வாழ விரும்புகின்றேன். ஆதலால் நான் இத்தகையத் தன்மையுடையவனாக வாழ்வதற்கு மனமே, **"நின்னா லியன்ற துணைபுரி வாயேல்"** (பாரதியார் கவிதைகள். ப - 103) எனச் சிறு குழந்தைத் தனமாகத் தன் மனதிடம் கவிதைகளில் ஒப்பந்தம் செய்துள்ளார்.

தன் நெஞ்சிற்குக் கட்டளையிட்டுரைத்தல்

பாரதி சில இடங்களில் தன் மனதைச் சினப்பட்டுக் கூறுவது போலக் கட்டளையிட்டுத் திட்டுகின்றார். பயத்தால் ஏதும் நன்மைகள் விளையப் போவதில்லை. மனிதனின் உள்ளமும், உடலும் பாதிக்கப்படும் தீமையே உண்டாகும் என்பதை நன்குணர்ந்த பாரதியும் "வானிலிருந்து இடி உன்முன் வந்து விழுந்தாலும் பயத்தால் நீ நடுங்கித் தவிக்காதே" எனத் தன் நெஞ்சிற்குக் கட்டளையிடுகின்றார். மேலும் ஓரிடத்தில், **"நமக்குத் தொழில்கவிதை, நாட்டிற் குழைத்தல்"** (பாரதியார் கவிதைகள். ப- 107) என்றவாறு கட்டளையிட்டுக் கூறுகின்றார்.

தந்தை போன்று வாக்குறுதி அளித்தல்:

"தந்தை மகற்குஆற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்". (திருக்குறள் - 67)

என ஒரு தந்தையின் கடமையைத் திருவள்ளுவர் அழகாகச் சுட்டிக் காட்டுவார். இவ்வள்ளுவரின் வழியில் நின்று பாரதி தன் நெஞ்சிற்குத் தான் ஒரு தந்தை போல இருந்து அதனை எப்பொழுதும் இன்பமடையுமாறே வைப்பேன் என உறுதி கூறுகின்றார். மேலும் தன் நெஞ்சிற்கு அளித்த இவ்வாக்குறுதியை நிறைவேற்றத் தன் கவிதையில் **"தீயிடைக் குதிப்பேன் கடலுள் வீழ்வேன்"** (பாரதியார் கவிதைகள். ப - 110) என்றவாறு ஒரு தந்தையின் மனங்கொண்டு வாக்குறுதி கொடுக்கின்றார்

சமாதானமாகச் சில உரைத்தல்

பாரதி சில இடங்களில் தன் நெஞ்சிடம் சினப்பட்டுக் கூறினாலும், பல இடங்களில் தன் நெஞ்சை உலக இயல்பைக் கடவுளின் தன்மையை எடுத்துக் கூறி சமாதானம் செய்யவே முயல்கின்றார். அவ்வாறு சமாதானம் செய்ய முயன்ற அவர் நெஞ்சே உனக்கு என்ன வேண்டும். உனக்கு வேண்டிய பொருட்கள் எல்லாம்,

"வான முண்டு மாரி யுண்டு
ஞாயிறும் காற்றும் நல்ல நீரும்"

(பாரதியார் கவிதை. ப - 107)

என்ற கவிதையில் வாழ்வதற்கு இவ்வுலகில் பல வழிகள் உண்டு. பிறகு ஏன் வாழ்வதற்குச் சலிப்படைகிறாய் என வினவி பதிலையும் அவரே உறைக்கின்றார். மேலும் தன் நெஞ்சிடம் நான் உன்னிடம் கோடிக் கோடி முறை கவலைப்படாதே எனக் கூறிவிட்டேன். ஏனெனில் அன்னை பராசக்தியே இவ்வுலகை இயக்குபவள். அவளது அருளாலே இங்கு அனைத்துச் செயலும் நிகழ்கின்றது. ஆதலால் நன்மை, தீமை என எது நிகழ்ந்தாலும் கவலைப்பட்டுச் சலிப்படையாதே எனவும், கணபதியின் அருள் உனக்கிருக்க அச்சப்படாதே எனவும் சமாதானம் கூறுவது போலக் கடவுள்களின் மீதான அவரது அதீத பக்தித் திறத்தை நம் நெஞ்சிடம் நாமும் கைக்கொள்ளக் கூறுகின்றார்.

அறிவுறுத்திக் கூறுதல்

செவியறிவுறுத்தல் என்ற ஒரு துறை புற இலக்கியங்களில் உண்டு. அத்துறை மூலம் புலவர்கள் தீமை செய்யும் மன்னனை அவன் தீமையை அவனுக்குணர்த்த அவன் செவியில் படும்படிச் சில நற்கருத்துக்களைக் கூறி அவனை நன்மையில் நிலைநிறுத்தச் செயல்படுவர். அதுபோலப் பாரதியும் "மனமே தவம்செய், தியானம் செய், தினமும் தவம் செய். அவ்வாறு தினமும் நீ தவம் செய்வதால் உனது மனது ஒருமுகப்படும். உன் மனதை ஒருமுகப்படுத்தி நீ செய்ய வேண்டிய உயர்ந்த செயல்களின் மேல் உன் மனதைச் செலுத்துவதனால் நீ அடைய விரும்பிய குறிக்கோள்களை எல்லாம் விரைவில் அடையலாம்" (பாரதியார் கவிதைகள். ப - 111) எனத் தன் செவியில் பட்டுத் தன் மனதிற்குச் செல்லும், மனது அதனை நிறைவேற்றும் என அறிவுறுத்தித் தன் மனத்திடம் கூறுகின்றார்.

முடிவுரை

உலகம் வகுத்த நல்வழியில் சென்ற பாரதி அந்நல்வழியில் சென்றாலும், இன்னும் நல்லதைத் தன் மனம் ஏற்றுக்கொண்டு செயல்பட வேண்டும் எனத் தன் நெஞ்சுக்குரைத்த அனைத்து உரைகளும் ஒரு ஆசிரியன் நிலையிலிருந்து மாணவராகிய நமக்கு உரைத்து நம்மை நல்வழிப்படுத்த நமது நெஞ்சிற்கு உரைத்த நல்லுரைகளே என்பதனை இக்கட்டுரை நன்கு தெளிவுபடுத்தியுள்ளது.

87. எண்ணிய முடிதல் வேண்டும்



முனைவர் திருமதி.இரா.நாகேஸ்வரி
மேனாள் முதல்வர்
சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி
பள்ளத்தூர்

முன்னுரை

மனதில் உறுதி வேண்டும்,
வாக்கினிலே இனிமை வேண்டும்;
பாரதியார்

எண்ணங்களுக்கு வலிமை உண்டு. அதனால்தான், "எண்ணம் போல் வாழ்வு" என்றும் "எதை நினைக்கிறோமோ அதுவாக ஆகிறாய்" என்பதும் இந்தப் பிரபஞ்ச வாழ்வில் வலிமை வாய்ந்ததாகக் கருதபடுகிறது. பாரதியார் என்று அழைக்கப்படும் சுப்ரமணிய பாரதி, 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இந்தியாவில் வாழ்ந்த தமிழ்க் கவிஞர், எழுத்தாளர் மற்றும் பத்திரிகையாளர். தமிழ் மொழியின் மிகச்சிறந்த கவிஞர்.மேலும் இவர் "மகாகவி பாரதி" என்றும் பாராட்டபடுகிறார். பாரதியார் கவிதைகள் மற்றும் பாடல்கள் நல்ல கொள்கைகளைப் பிரதிபலித்தன. பாரதியாரின் படைப்புகள் இவரது சமகாலத்தவர்களிடமும், பிற்காலத்தவர்களிடமும் நல்ல வரவேற்பைப் பெற்றது.மேலும் இவரது படைப்புகள் தமிழ் இலக்கியம் மற்றும் கலாச்சாரத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

எண்ணமே வாழ்வு என்பது சாதாரணமானது அல்ல. பிறப்பு முதல் இறப்பு வரை ஒருவனின் எண்ணத்தைப் பொறுத்தே வாழ்வு அமைகிறது என்கிறார் பாரதியார். எண்ணங்களே மனிதனை இயக்குகிறது. மறுப்பதற்கு யாருமுண்டோ? புரட்சிக்கவி சுப்பிரமணிய பாரதியார் ஔவையார் எழுதிய ஆத்திசூடி போலவே புதிய ஆத்திசூடி என்னும் தலைப்பில் நன்னெறி சொல்லும் 110 ஓரடிப் பாடல்களையும் பாடியுள்ளார். பாரதியாரின் ஓரடிப் பாடல்கள் புரட்சி எண்ணம் கொண்டவை. ஔவையாரின் ஓரடிப் பாடல்கள் அமைதி எண்ணம் கொண்டவை. இரண்டும் எழுத்து வரிசையில் அடுக்கப்பட்டுள்ளன. பாரதி கவிதைகளின் தனிச்சிறப்புகளில் அவர் இயற்றிய புதிய ஆத்தி சூடியும் ஒன்றாகும். ஒருவருடைய இயற்கை அறிவை வளர்ப்பதற்கு அவனுடைய கல்வி அறிவு துணை செய்கிறது. எனவே எல்லா வகையிலும் அறிவை வளர்க்க வேண்டும். சிந்தனையை விரிவுபடுத்த வேண்டும். எண்ணுவதை உயர்த்த வேண்டும். நல்லனவற்றை உயர்வானவற்றைப் பற்றியே எண்ண வேண்டும்.

சிந்திக்க வேண்டும் என்பதற்காக: "எண்ணுவ துயர்வு" என்று பாரதி எடுத்துக்காட்டுகிறார்.இந்த வரிகள் மூலம், பாரதியார் ஒருவரது எண்ணங்கள், செயல்கள், மற்றும் மனப்பான்மைகள் எல்லாமே உயர்வாக இருக்க வேண்டும் என்கிறார். இதை உணர்ந்த பாரதி மனிதகுலம் மேன்மையடையவும், இன்புற்று சமத்துவத்துடன் வாழவும், உயர்வான எண்ணங்கள் கொண்ட சிந்தனை இருக்க வேண்டும் என்று கூறுகிறார். பாரதியாரின் புதிய ஆத்திசூடியிலிருந்து "எண்ணுவது உயர்வு" பற்றிய சிந்தனைகளைக் கட்டுரையாளர் இக்கட்டுரையின் மூலம் தெளிவுபடுத்தியுள்ளார். நல் எண்ணம் அவசியம் ஏன்? "நீ உன்னை வலிமை வாய்ந்தவன் என்று எண்ணினால் வலிமை படைத்தவனாகவே ஆகிறாய்" என்றார் வீரத்துறவி விவேகானந்தர். எண்ணங்கள் அழகானால் நம் வாழ்க்கையும் அழகாக மாறும் என்ற கூற்றிற்கிணங்க நல்ல எண்ணங்களே நம் வாழ்வை சிறப்பாகக் கொண்டு செல்வதற்கான வழியாகும். அந்த வகையில் நாம் எண்ணும் எண்ணங்கள் நேர்மறையாக இருத்தல் வேண்டும். பாரதி ஒரு சிறந்த எழுத்தாளர் மற்றும் இவரது வாழ்நாளில் ஒரு பெரிய படைப்பை உருவாக்கினார். பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு, வந்தே மாதரம், பாரதி அர்த்தத்தின் வளர்ச்சி, தேசபக்திப் பாடல்கள், ஞானப்பாடல்கள், கண்ணன் பாட்டு, தனிப்பாடல்கள் ஆகியவை இவரது மிகவும் பிரபலமான படைப்புகளில் சில.

பாரதியாரின் சமூகப்பணிகள்

தமிழுக்குப் பங்களித்த பலருக்கு மத்தியில் பாரதியார் ஒரு தனி இடத்தை தனக்கென உருவாக்கிக் கொண்டவர். பெண்ணியம் போற்றும் மதிநுட்பத்தை அறத்தோடும் அடக்கத்தோடும் வளர்த்து, பாடலின் மூலம் இந்த அறம் ஊட்டப்பட வேண்டும்" என்று உற்சாகத்துடன் பாடியவர். மகாகவி பாரதியார்.நிமிர்ந்த நடையும், முறுக்கு மீசையும், நிமிர்ந்த பார்வையும், எளிமையான தோற்றமும் கொண்ட பாரதியார், காலங்காலமாக கவிதையின் பாரம்பரிய முறையை மாற்றி, புதிய கவிதைகளைப் பிறப்பித்த பாரதியார்.பழங்கால மூடநம்பிக்கைகள், சாதிய ஒடுக்குமுறைகள், பெண்களுக்கு எதிரான வன்முறைகள் மற்றும் தீண்டாமைக்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த பாரதி, ஒடுக்குமுறை அமைப்புகளைத் தன் வார்த்தைகளால் உடைத்தார். எளிய கவிதைகளால் படிக்காத பாமர மக்களுக்கு நல்ல வார்த்தைகளை கொண்டு சென்ற கவிஞர் பாரதியார். 'புண்ணியம் செய்தவருக்கு பூவும் நீரும் உண்டு,' என்கிறார் திருமூலர். இறைவனுக்கு நீரால் திருமுழுக்கு செய்து பூவால் வழிபாடு செய்யும் வாய்ப்பு புண்ணியம் செய்தவருக்கு மட்டுமே கிடைக்கும். புண்ணியம் என்றால் என்ன?

மனதால் நல்லதை நினைப்பது,
வாயால் நல்லதை பேசுவது,
நல்ல செயல்களை செய்வது.
பிறருக்கு முடிந்த உதவியை செய்வதும் புண்ணியமே.

முகம் மனிதனுக்கு முக்கியமானது. மனசு அதைவிட முக்கியமானது. இதைப்பற்றி காஞ்சி மகா பெரியவர் சொல்லியிருக்கிறார்.கண்ணாடியில் பார்த்தால் நம் முகம் தெரிகிறது. கண்ணாடி அழுக்காக இருந்தால் முகம் தெரியுமா.? துடைத்துவிட்டு பார்த்தால் தான் தெரியும் துடைத்த கண்ணாடியாக இருந்தாலும் அது ஆடிக் கொண்டிருந்தால் பிம்பம் தெரியாது அதுவும் ஆடிக்கொண்டே இருக்கும். மனமும் கண்ணாடி போல தான். தீய எண்ணம் வளர்ந்து விட்டால் மனம் அழுக்காகி விடும். நல்ல எண்ணம் இருந்தால் மனம் சுத்தமாகிவிடும். மனதை அலைபாய விடாமல் நல்ல செயல்களில் ஈடுபடுத்தினால் ஓரிடத்தில் நிலையாக இருக்கும்.

பல ஆண்டாக புழங்கிய பித்தளைச் செம்பு கிணற்றடியில் கிடக்கிறது என்றால் அதைச் சுத்தப்படுத்த எத்தனை முறை தேய்க்கிறோம். நாம் எந்த அளவுக்குத் தேய்கிறோமோ அந்த அளவுக்குச் செம்பு பளபளப்பாகும், சுத்தமாகும். இத்தனை காலம் எத்தனையோ கெட்ட செயல்களைச் செய்து மனத்தை அழுக்காக்கி விட்டோம் அதைப் போக்க வேண்டுமானால்,நல்ல செயல்களில் ஈடுபட வேண்டும்.இப்படிச் செய்தால் மனம் சுத்தமாகும் ஒழுக்கம். மனதில் குடி கொள்ளும். சரி சொம்பு சுத்தமாகிவிட்டது என்றால் எல்லாம் சரியாகிவிடுமா தொடர்ந்து தேய்க்காவிட்டால் அது அழுக்காகி விடும் அதுபோல்தான் நல்ல செயல்களின் மூலம் மனதை சுத்தப்படுத்திக் கொண்டே இருக்க வேண்டும்.

நமது வாழ்க்கையானது வெற்றியை நோக்கிச் செல்ல வேண்டுமானால் நமது உள்ளத்தில் நல்ல எண்ணங்களை விதைக்க வேண்டும். அந்த வகையில் நாம் எண்ணுகின்ற எண்ணங்கள் மட்டுமே செயல்களாகச்ர செயல்களில் வெளிப்படுகின்றன. நாம் எண்ணும் எண்ணங்கள் எப்போதும் சிறப்பாக அமைய வேண்டும் அப்பொழுதுதான் நம் வாழ்வும் சிறப்பாக மாறும் . நம்முடைய மனத்தில் பல்வேறு வகையான எண்ணங்கள் அவ்வப்போது தோன்றி மறையும் அந்த வகையில் நல்ல எண்ணங்களை எண்ணுவதன் மூலமே நமது வாழ்க்கை சிறந்ததாக அமையும். அதாவது நமது எண்ணமே நமது வாழ்க்கையைத் தீர்மானிக்கின்றது. நாம் வாழ்வில் வெற்றி அடையவும், பல சாதனைகளைப் படைக்கவும் நல்ல எண்ணங்களை நாம் எண்ண வேண்டும் என்பது கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகிறது. நாம் எண்ணும் நல்ல எண்ணங்களே நேர்மறையில் சிந்தனைக்கு வழிவகிக்கிறது. அந்த வகையில் நாம் நேர்மறையாக சிந்திக்கும் போது நமது வாழ்க்கை மிக அழகாக மாறுகின்றது. அதாவது எதிர்மறையாக நினைக்காமல் நல்லதே நடக்கும், அனைத்தும் சரியாக நடக்கும் என்று நேர்மறையாக நாம் சிந்தித்தோம் என்றால் நமது வாழ்வு வளம் பெறும் மேலும் தேவையற்ற எண்ணங்களைத் தவிர்த்து அனைத்திலும் நம்பிக்கையான நேர் மறை எண்ணங்களை எண்ணுவதே நம்முடைய வாழ்வின் உயர்வுக்கு மிக அவசியமாகிறது.

மனம் எனும் கற்பகத்தரு

காட்டு வழியாக ஒரு மனிதன் சென்று கொண்டிருந்த பொழுது அவனுக்கு தாகமெடுக்கிறது, தள்ளாடிச் சென்று கொண்டிருக்கும் பொழுது ஒரு மர நிழலில் இளைப்பாறுவதற்காக ஒரு மரத்தின் கீழ் சென்று அமர்கிறான். களைப்பின் காரணமாக அவன் அந்த மரத்தடியிலேயே உறங்கி விடுகிறான். அப்பொழுது குளிர்ந்த காற்று வீசுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் குளிர்ந்த நீர் கிடைத்தால் நமக்கு தாகம் தனியுமே என அவன் எண்ணுகிறான். அவன் முன்னாள் குளிர்ந்த நீர் தோன்றுகிறது உடனே தண்ணீரைக் குடித்துவிட்டு பின்னர் பசியின் காரணமாக நல்ல தண்ணி குடித்து விட்டோம், பலகாரம் கிடைத்தால் நன்றாக இருக்குமே என்று எண்ணினான். சுவையான பலகாரங்களும் கிடைத்தன. அத்தனையும் சாப்பிட்டு விட்டான். இதற்குக் காரணம் என்னவென்று சிந்திக்கிறீர்களா? அவன் கேட்டதைக் கொடுக்கும் கற்பக மரத்தின் கீழ் இருந்ததால்தான் அவன் கேட்டவுடன் தாகம் தீர்ந்தது, பலகாரம் கிடைத்தது. திடீரென அவனுக்கு அச்சம் ஏற்பட்டது, காட்டில் உள்ள புலி வந்து என்னைக் கொன்று விடுமோ என்று பயம்தான். இதன் காரணமாக இவன் முன்னால் புலி தோன்றி இவனை அடித்துக்கொன்றது. இதன் மூலம் நாம் என்ன தெரிந்து கொள்கிறோம் என்றால் கற்பக மரமானது நமது மனதைத்தான் சுட்டி நிற்கின்றது. அந்த வகையில் நம் மனமானது நாம் விரும்புவற்றை வழங்கும் ஆற்றல் உடையது. நல்லதை நினைத்தால் நல்லதே நடக்கும் நல்ல எண்ணங்களை மனதில் விதைப்பதன் மூலமே வாழ்வில் உயரமுடியும் என்பதே இந்த கதையின் மூலமாக நாம் அறிந்து கொள்கிறோம்.

நாம் மகிழ்வாக வாழ்வதற்கு நல்ல எண்ணங்களை எண்ணுவது முக்கியம். அந்த வகையில் நல்ல எண்ணங்களை வளர்ப்பதற்கான வழிகளாக மகிழ்ச்சியாக இருக்க வேண்டும், உயர்வு தாழ்வு மனப்பான்மையை இல்லாமல் ஒழிக்க வேண்டும், வெற்றியைப் பற்றி எண்ணுதல் வேண்டும், தோல்வி கண்டு துவண்டு விடாமல் தோல்வி கற்றுத் தந்த பாடத்தின் மூலமாக வெற்றியை நோக்கிச் செல்ல வேண்டும். நம்பிக்கை என நேர்மறையாகச் சிந்திப்பதின் மூலமாகவே நல்ல எண்ணங்களானவை நம் மனதில் தோன்றும்.

எண்ணங்கள் நம் வாழ்க்கையில் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்துவதை உணர்ந்து அதற்கானப் பொறுப்பை நாம் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். எப்பொழுதும் திறந்த மனதுடன் புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ள வேண்டும். அவை நம்முடைய சிந்தனையில் கூர்மையாக்கி செழுமைப்படுத்தவும், வாழ்வில் ஏற்படும் சிக்கலான சூழ்நிலைகளையும் எளிதாக சமாளிக்க நமக்கு உதவுகிறது. உணர்ச்சிபூர்வமான எண்ணங்களிலிருந்து விடுபட்டு அறிவுபூர்வமான எண்ணங்களுக்கு நம் மனதில் உயிர்ப்பு தரவேண்டும். வெறும் உணர்ச்சி மட்டுமே நமக்கு எதையும் சாதிக்க உதவாது அறிவோடு கூடிய உணர்ச்சிகள் மட்டுமே பகுத்தறிவுக்கு வழிவகுக்கும். சரியான முடிவுகளை எடுக்க உதவும் இதை நமது அனுபவம் மட்டுமே நமக்கு உணர்த்தும். ஒருவர் படிப்படியாகத்தான் தனது வாழ்க்கையை மாற்றிக் கொள்ள முடியும் நம்முடைய எதிர்மறை எண்ணங்களை மாற்றுவதில் கவனம் செலுத்திப் பொறுமையுடன் முயற்சி செய்தால் நம்மால் புத்திசாலியாகவும் வெற்றியாளராகவும் வலம் வர முடியும். நமது எண்ணங்களே நமது மகிழ்ச்சி, வெற்றி, தோல்வி அனைத்தையும் நிர்ணயிக்கின்றன. "இதுவும் கடந்து போகும்" என்பது எவ்வளவு உண்மையோ அதே அளவு உண்மை நம் "எண்ணம் போல் வாழ்க்கை" என்பதும். நல்ல எண்ணங்களே நமது வாழ்வின் அடித்தளம் ஆகும். எனவே, நல்ல எண்ணங்களை வளர்த்துக் கொள்வோம்.நமது ஆழ்மனதின் சிந்தனைகள் எப்போதும் நல்லவனாகவும், உயர்ந்தவையாகவும் இருக்க முயற்சிக்க வேண்டும். அதுவே மிகவும் சக்தி வாய்ந்தது. அதனால் நாம் அவற்றை மிகவும் கவனமாக தேர்ந்தெடுக்க வேண்டும் நேர்மறையான சிந்தனை மகிழ்ச்சியான நிறைவான வாழ்க்கைக்கு வழிவகுக்கும் என்பதை எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும் அதைத்தான் வள்ளுவர் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளதாக இருக்க வேண்டும் என்றார்.

"உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் மற்றது
தள்ளினினும் தள்ளாமை நீர்த்து"

என்ற வள்ளுவரின் வாக்குப்படி, எண்ணுவ தெல்லாம் உயர்வானதாகவே இருக்க வேண்டும்.சாதகமான சூழ்நிலையில் உயர்வான எண்ணங்களை நினைப்பது பெரிய விஷயமல்ல. பாதகமான சூழ்நிலையிலும் அதே எண்ணங்களோடு இருப்பவர்கள்தான் வெற்றியைத் தனதாக்கிக் கொள்கிறார்கள். "எண்ணமே வாழ்க்கை" என்பது அனுபவ உண்மை. எண்ணங்களே செயலைத் தீர்மானிக்கின்றன.

முடிவுரை

எண்ணத்திற்கு அதிக சக்தி உண்டு. நல்லதே நினைப்போம் , நல்லதே நடக்கும், எண்ணம் போல் வாழ்க்கை. நம் எண்ணங்களில் விஞ்சிய சக்தி புதைந்து கிடக்கிறது. நாம் நல்ல எண்ணங்களை வலுப்படுத்தினால் அது மாபெரும் சக்தியாகப் பரிணமித்து நல்ல வழியைக் காட்டும். நம்முடைய வாழ்க்கையை உருவாக்கும் கருவி நம் மனதில் உதிக்கும் எண்ணங்கள்தான். நம்முடைய நிகழ்கால எண்ணங்கள் வருங்கால வாழ்வை உருவாக்குகின்றன. ஒவ்வொரு எழுத்தும் இணைந்திருந்தால்தான் ஒருவார்த்தை உருவாகும். நல்ல செயல் இருந்தால் உனக்குள் நம்பிக்கை பிறக்கும். நம்பிக்கையோடு நீ நடந்தால் வெற்றி நிச்சயமாகும். இவரது அர்ப்பணிப்பு பலருக்கு உத்வேகமாக உள்ளது. இந்தியாவின் தலைசிறந்த இலக்கியவாதிகளில் ஒருவராகவும் உண்மையான தேசிய வீரராகவும் இவர் எப்போதும் நினைவுகூரப்படுவார்.பாரதியாரின் வாழ்க்கையும் பணியும் மாற்றத்தைத் தூண்டுவதற்கும் சுதந்திரம், சமத்துவம் மற்றும் நீதி ஆகிய இலட்சியங்களை மேம்படுத்துவதற்கும் வார்த்தைகளின் சக்திக்குச் சான்றாக நிற்கிறது.

88. பாரதியின் பெண்ணியம்



சுதா கிருஷ்ணமூர்த்தி
கணிதம் பட்டதாரி
காப்பீட்டு முகவர் (இந்திய ஆயுள் காப்பீட்டு நிறுவனம்)
குரல் கலைஞர்,கோயம்பத்தூர்

முன்னுரை:

இன்றைய உலகில் பெருகிவரும் கருத்தோட்டங்களில் பெண்ணியமும் ஒன்று. பெண்களை அழுத்தி வைத்திருக்கும் சமூகக் கட்டுப்பாடுகளும் கருத்துப் போக்கும் மாறவேண்டும் என்னும் எண்ணத்தோடு பேசுவதும் எழுதுவதும் போராடுவதும் பெண்ணியக் கொள்கைகளாக ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இன்றைய இத்தகைய கருத்துகளுக்கு முன்னோடியாக விளங்கியவர் பாரதியார்.பாரதியின் படைப்புகளும்,படைப்பின் பாத்திரங்களும் பெண்ணின் பெருமையை பறைசாற்றுகின்றன.பாரதியின் பெண்ணியக் கருத்துகளை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

பெண்ணியம்

பெண்ணியம் என்பது உலகளாவியது. பெண்ணியத்தைக் குறிக்கும் feminism என்ற ஆங்கிலச்சொல் 'femina' என்ற இலத்தின் சொல்லிலிருந்து மருவி வந்ததாகும். 'femino' என்ற சொல்லுக்குப் பெண்ணின் குணாதிசியங்கள் என்பது பொருளாகும். இச்சொல் முதலில் பெண்ணின் பாலியல் குணாதிசியங்களைக் குறிப்பிடவே வழங்கப்பட்டது. பின்பே, பெண்களின் உரிமைகளைப் பேசுவதற்கு எடுத்தாளப்பட்டது என்றும் பெண்கள் மீதான அனைத்து ஒடுக்குமுறை வடிங்களையும் இனங்கண்டு, அவற்றை நீக்குவதற்கான வழிமுறைகளைப் பற்றி அறிவு ரீதியாகச் சிந்தித்து செயல்படுவதும் ஆகும்..

ஆணின் பார்வையில் பெண்ணியம்

பெண்ணியம் செல்வாக்குப் பெற்றுள்ள நிலையில் பெண்ணின் உணர்வுகளைப் பெண்களாலேயே . திறம்படப் படைக்க இயலும் என்ற கருத்து வலுப்பட்டு வருகிறது. தமிழகத்தில் தொடக்ககாலப் பெண்ணியவாதிகள் பலரும் ஆண்களாகவே இருந்துள்ள நிலையில் பாரதி அதில் முதலிடம் பெறுகிறார்.

பாரதியாரின் பெண்ணியம்

.பாரதியாரின் பெண்ணியம் என்பது பெண்களின் முன்னேற்றம் மற்றும் சம உரிமைக்காக அவர் கொண்டிருந்த தீவிரமான கருத்துக்களைக் குறிக்கிறது. அவர் பெண்களின் கல்வி, வேலைவாய்ப்பு, மற்றும் சமூக பங்களிப்பு ஆகியவற்றில் மிகுந்த அக்கறை காட்டினார். அவரது படைப்புகளில், குறிப்பாகக் கவிதைகளில், பெண்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, சமத்துவமான நிலையை அடையச் செய்ய வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தினார்.

பாரதியின் பெண்ணியக் கருத்துக்கள்

பெண்களின் கல்வி:

பாரதி பெண்கல்வியை மிகவும் வலியுறுத்தினார். பெண்களுக்கும் ஆண்களைப் போலவே கல்வி கற்க உரிமை உண்டு என்று நம்பினார். அவர் எழுதிய பல கவிதைகளில், பெண்களின் கல்விக்கான முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார்.

சம உரிமை

பெண்களும் ஆண்களும் சமம் என்றும், சமூகத்தில் சமமான உரிமைகளைப் பெற வேண்டும் என்றும் அவர் கருதினார். பெண்களை வீட்டு வேலைகளுக்கு மட்டுப்படுத்தாமல், சமூகத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பங்கு கொள்ள ஊக்குவித்தார்.

விடுதலை

பாரதி பெண்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தார். சமூகத்தில் நிலவிய மூடநம்பிக்கைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலிருந்து பெண்களை விடுவிக்க விரும்பினார். இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஆண்கள் அதிகமாகப் பங்கெடுத்துக் கொண்டனர். அந்தக் காலக் கட்டத்தில் பெண்கள் வீட்டில் இருந்து வந்தனர். இதனால் பெண்கள் அடிமைகளாக இருந்து வந்தனர் என்று உணர்ந்து கொள்ள முடிகிறது. பெண்கள் அடிமைகளாக இருப்பதற்குப் பெண்களுக்கு என வரையறுக்கப்பட்ட ஒழுக்கநெறியும் ஒரு காரணமாகும்.அதனை உடைக்கவே பாரதி பல பாடல்களை இயற்றினார்.

பெண்ணின் ஆற்றல்

பெண்களால் எதையும் சாதிக்க முடியும் என்ற நம்பிக்கையைப் பாரதி கொண்டிருந்தார். பெண்கள் தைரியமாகவும், உறுதியாகவும் இருக்க வேண்டும் என்று விரும்பினார்.

பாரதியின் படைப்புகளில் பெண்ணியம்

பாரதியின் படைப்புகளில், குறிப்பாகக் கவிதைகளில், பெண்ணியம் குறித்த அவரது கருத்துக்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாகப், "புதியமாதவி" என்ற கவிதை பெண்களின் கல்வி மற்றும் முன்னேற்றத்திற்கான அவரது பார்வையை பிரதிபலிக்கிறது. "பெண்கள் விடுதலை" என்ற கவிதை பெண்களின் சமூக விடுதலையை வலியுறுத்துகிறது.

ஆணும் பெண்ணும் நிகர்:

கற்பு என்பது ஆணுக்கும் வேண்டற்பாலது என்ற சிந்தனையை முதன்முதலில் பாரதியார் எடுத்துரைப்பதன் மூலம் ஆணும் பெண்ணும் சமம் என்ற பெண்ணியச் சிந்தனையை அவர் முன் வைத்ததாகக் கருதலாம். பாரதியின் பெண், ஆண்களுக்கு நிகரானவள். உரிமை மிக்கவள். பெருமை மிக்கவள். வையகத்தைப் புதுமையுறச் செய்பவள், கலியை அழிப்பவள், உலக நுட்பம் தேர்பவள், காதலன் ஒருவனைக் கைப்பிடிப்பவள். அவனுக்குத் தோள் கொடுத்துத் துணையாக நிற்பவள்.

"ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால்.."

பாரதியாரின் புதுமைப்பெண் அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு ஆகிய பெண்மைக் குணங்களைத் தவிர்ப்பவள். அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு? என்ற வினாவிற்கு விடையாக, "பட்டங்கள் ஆளவும் சட்டங்கள் செய்யவும்" விரும்புபவர்கள் என்கிறார். பாரதியின் சிந்தனைகளைப் பார்க்கும்போது, பாரதியிடம் பெண்ணடிமை குறித்த வலுவான மறுப்புணர்வு இருந்திருக்கிறது என உணர்ந்துகொள்ள முடிகிறது. பெண்கள் மீதான சமூகத்தளைகள் களைந்தெறியப்பட வேண்டும் என்ற வேட்கை பாரதியாரிடம் அதிகமாக இருந்தது என்பதைப் பெண்கள் விடுதலைக் கும்மி என்ற பாடல் மூலம் அறிந்து கொள்ளலாம்.

"புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும்.."

என்று புதுமைப் பெண்ணிற்கு இலக்கணம் வகுக்கிறார் பாரதி.

பாரதியாரின் காலச்சூழலைப் பொறுத்தவரையில் அவருடைய பெண் பற்றிய சிந்தனை என்பது முரண்பட்டதாகவே இருக்கிறது. அதாவது அன்றையக் காலக்கட்டத்தில் பெண்கள் வீட்டிற்குள் அடக்கப் பட்டிருந்தனர் என்பதை உணர்ந்ததால்தான் அதனை எதிர்த்துக் குரல் கொடுக்கவேண்டிய கட்டாயம் அவருக்கு நேர்ந்துள்ளது. அதனால் அவர் புதுமைப்பெண் எப்படி இருக்கவேண்டும் எனப் பட்டியலிடுகிறார். ஆனால் அடிப்படையில் அவர் ஓர் இந்துவாக இருப்பதால் பெண்ணைத் தெய்வமாகக் காணுதல், தெய்வத்தைப் பெண்ணாகக் காணுதல், புதுமைப் பெண்ணைக் காண விரும்புதல், பெண்ணின் அழகைப் போற்றுதல் ஆகியன இவரது பெண் வருணனைக்கான அடித்தளங்களாக அமைந்துள்ளன. இவற்றின் மூலம் பாரதியார் இந்திய மரபு சார்ந்த பெண்ணைப் படைப்பதில் ஆர்வம் காட்டியுள்ளதை உணர்ந்துகொள்ள முடிகிறது.

சமுதாயம் குறித்த புதிய தேடல் என்பது பெண்ணின் பரிமாணத்தை உள்ளடக்கியது. பெண் மதிக்கப்படும் பொழுது சமூகம் மிளிரும். ஏனென்றால் ஒரு சமூகத்தின் இயக்கத்திற்குப் பெண்ணின் பங்களிப்பும் அவசியமாகிறது. பெண்ணைப் புறம் தள்ளி எந்த வளர்ச்சியும் கிடையாது. பெண் இயற்கையானவள். இயற்கை எப்படிச் சமூகத்திற்குப் பயன்படுகிறதோ அதைப் போலப் பெண்ணும் சமூகத்திற்குப் பயன்படுகிறாள். அதனால்தான் பெண்ணும் இயற்கையும் ஒன்று எனக் கூறுகின்றார்.பெண் அறிவை வளர்த்துக் கொள்ளும்போது சமூகம் வளர்ச்சிப் பாதை நோக்கி நகரும் என்பதில் உறுதியாக இருக்கிறார் பாரதியார்.

"பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்.." (முரசு-10)
என்று பாரதி கூறுவதை இங்கே நினைவுபடுத்திக் கொள்வோம்.

கடவுள் வாழ்த்து

காப்பிய இலக்கிய வடிவம் கடவுள் வாழ்த்துக்கு முதலிடம் தந்தது. காப்பிய காலத் தொடக்கத்தில் இயற்கையையும் வாழ்த்திப் பாடும் வாழ்த்து மரபு இருந்தது. பாரதி சரஸ்வதி, பராசக்தி முதலான பெண்தெய்வங்களை முன்நிறுத்திக் கடவுள் வாழ்த்து அமைத்தள்ளார். கடவுள் வாழ்த்துப் பகுதியில் அவர்,

"ஐவர்...பூவை, திரெளபதி புகழ்க்கதையை

மாணியல் தமிழ்ப்பாட்டால் - நான்

வகுத்திடக் கலைமகள் வாழ்த்துகவே""4

"ஈங்குனைச் சரணென் றெய்தினேன்; என்னை

இருங்கலைப் புலவனாக் குதியே""5

என்று பெண் தெய்வங்களைப் புகழ்ந்துரைத்துள்ளார்.

பெண்மைக்குண்டான இழிவு

பெண்கள் அரசாண்ட நிலைமாறி பாரதியின் காலகட்டத்தில் பெண்கள் வீட்டைவிட்டும் அகலாதநிலை ஏற்பட்டது. இதனைக் கண்டித்த பாரதி,

"வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற

விந்தை மனிதர் தலைகவிழ்ந்தார்"

என்று ஆணாதிக்கவாதிகளைக் கண்டித்துப் பெண்களை ஊக்குவித்தார். வியாசர் காவியத்தைத் தழுவி பாஞ்சாலிசபதம் இயற்றப்பட்டதால் பெண்குறித்த வருணனைகள் பல இடங்களில் காணப்படுகின்றன. பெண்களைத் தானமாக அளிக்கும் இழிநிலையை பாரதியார் இக்காப்பியத்தில் வன்மையாகக் கண்டித்துள்ளார். பாண்டவர்கள் இந்திரபிரஸ்த நகரை அமைத்து வேள்வி செய்கையில், அவர்களுக்கு மன்னர்கள் பலர் பெண்களைத் தானமாக வழங்கியனர். அதனைக் கண்டித்துப் பாரதியார்,

"சேயிழை மடவா ரும் - பரித்.."

"கண்ணைப் பறிக்கும் அழகுடை யாரிள மங்கையர் - பல.."

என்று துரியோதனன் வழி உரைக்கிறார். பாரதியார் பெண்களின் விடுதலைக்காக மிகவும் குரல் கொடுத்தார். அடிமைத்தனத்தில் இருந்து விடுபட்டு, சுதந்திரமாக வாழவும், கல்வி கற்கவும், சமூகத்தில் சமமாக நடத்தப்படவும் விரும்பினார்.

முடிவுரை

பாரதியாரின் பெண்ணியக் கருத்துக்கள் அக்காலகட்டத்தில் புரட்சிகரமானவையாகக் கருதப்பட்டன. பாரதி பெண்களைச் சமூதாயத்தில் முன்னேற்றி, அவர்களின் உரிமைகளை நிலைநாட்ட விரும்பினார், அதற்காக அவர் தன் வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார்.பாரதியின் பாடல்களில் பெண் விடுதலை பற்றிய கருத்துக்கள் ஆழமாகப் பதிவாகியுள்ளன. பெண்களுக்கான சம உரிமைகளை வலியுறுத்தினார். பாரதியின் பெண் விடுதலைப் பாடல்கள், சமூகத்தில் நிலவிய பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்து, பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், சம உரிமைகளுக்காகவும் அவர் கொண்டிருந்த அக்கறையை வெளிப்படுத்துகின்றன. அவரது படைப்புகள் இன்றும் பெண்ணுரிமைக்காகப் போராடும் அனைவருக்கும் ஒரு உத்வேகமாக இருக்கின்றன.

89. பாரதியின் வாழ்வில் சுவையான நிகழ்வுகள்



இராஜேஸ்வரி பால முருகன்
கீழடி தமிழால் இணைவோம் சங்கம்
மதுரை

முன்னுரை

நம் அனைவராலும் மகாகவி என போற்றப்படும் பாரதியாரை முன்னொரு காலத்தில் மகாகவி என ஏற்றுக் கொள்ளச் சிலர் தயங்கினார்கள். மகாகவியா? யார் சொன்னது.அவருக்கு அந்தத் தகுதி உண்டாஇப்படிக் கேள்வி எழுப்பியவர்கள் பலருண்டுதமிழகத்தில். அவர்களில் இதழாசிரியர், குறுங்கதை நெடுங்கதை, சரித்திரக் கதை எனப் பல் வேறு பட்ட தளங்களில் பயணித்த மிகப் பெரும் எழுத்தாளுமை கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூட முதலில் ஏற்றுக் கொள்ளத் தயங்கினார். அவருக்கும் முற்போக்கு எண்ணம் கொண்ட எழுத்தாளர் வ. ரா என்றழைக்கப் பட்ட வ. ராமசாமிக்கும் இடையில் இதழ்களில் நடந்த கருத்து மோதல்கள் குறித்தும்.பின்னர் தவிர்க்க முடியாத சான்றுகளால் ஏற்றுக் கொண்டு அவருக்கு மணி மண்டபமும் சிலையும் எட்டையபுரத்தில் அமைக்க முன் நின்று மக்களின் நிதிப் பங்களிப்போடு அம் மகாகவிக்கு மிகப் பெரிய விழா எடுத்துச் சிறப்பித்ததும் அதே கல்கிதான். இந்தக் கருத்துப் போரைப் பற்றியும், பாரதி பல ஆளுமைகளுடன் கலந்து வாழ்ந்த நாட்களைப் பற்றியும், அவரின் வாழ்வில் நடந்த பல சுவையான நிகழ்வுகள்பற்றியும் இவ்வாய்வின் வழிக் காண்போம்.

பாரதி மகா கவியா கருத்துப் போர்

காரைக்குடியில் ஒரு சமயம் பிரசங்கம் செய்தபோது, ஆங்கிலத்தில் கவிசிரேஷ்டர்கள் எனக் கருதப்படும் ஷெல்லியைப் படித்திருக்கிறேன்,ஷேக்ஸ்பியரைப் படித்திருக்கிறேன்,இந்தியாவில் நோபல் பரிசுபெற்ற கவிரவீந்திரநாத்டாகூரின் காவியங்களைப் படித்திருக்கிறேன். ஆனால் இவர்களுடைய புத்தகங்கள் யாவும் சேர்ந்தால் கூட பாரதியாரின் ஒரு வரிக்குச் சமமாகாது என்று வா. ரா. பேசியிருக்கிறார். அதற்குக் கல்கி கிருஷ்ணமூர்த்தி அவர்கள், பாரதியைப் போற்றுவதில் நான் யாருக்கும் பின் வாங்கியவன் அல்ல. ஆனால் தேசாபிமானமும், பாஷாபிமானமும் பகுத்தறிவை மறைத்துவிட இடம் கொடுக்கக் கூடாது. பாரதியை ஷெல்லியுடன் ஒப்பிடலாம். ஆனால் ஷேக்ஸ்பியருடனும் டாகூருடனும் ஒப்பிடுதல் கூடச் சரியல்ல.

ஷேக்ஸ்பியர், டாகூர் முதலியவர்களிடம் எனக்குப் பக்தி உண்டு. நான் பிறந்து வளரந்த ஜில்லாவில் ஓடும் காவேரி நதியிடம் எனக்கிருக்கும் பிரியம் அளவில் அடங்காதது. ஆனால் அந்தப் பிரியம என்னுடைய திருஷ்டியை மறைத்து விடுவதில்லை. காவேரி கங்கையைவிடப் பெரியது என்று ஒரு நாளும் சொல்லமாட்டேன். இங்கே பாரதியைவிட தாகூர் பெரியகவி என்பதைக் கூறுகிறார். இப்படி வ. ரா., கல்கி இடையில் பாரதி குறித்துக் கருத்துப் போர் இதழ்களின் மூலம் நடைபெற்றிருக்கிறது. (பாரதியும் இலக்கியவிமர்சனமும், புனைபெயர்:ராகி, இதழ்: எழுத்து, நாள்: நவம்பர் 1959 கருத்து: பாரதி மகாகவி கருத்துப்போர்)

காந்தியடிகளுடன் பாரதி

சென்னையில் நடக்கவிருந்த பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வந்திருந்த காந்தியைச் சந்திப்பதற்காக பாரதியார் வந்திருந்தார்.வ.ரா காந்தியடிகள் தங்கி இருந்த வீட்டில் வாசலில் காவலாக நின்று கொண்டிருந்தார்.பாரதியாரைக் கண்டதும் அனுமதி பெற்ற பின்பு தான் காந்தியைச் சென்று பார்க்க வேண்டும் என்று வ.ரா கூறியதை சற்றும் பொருட்படுத்தாமல் முண்டாசுக் கவிஞர் முறுக்கு மீசை பாரதி புயலென உள்ளே சென்றார். காந்தியடிகள் அருகிலே ராஜாஜி மற்றும் சத்தியமூர்த்தி அவர்கள் நின்று கொண்டிருந்தனர். ஆனால் முண்டாசுக் கவிஞன் பாரதி காந்தி அவர்களின் இருக்கையிலே அருகிலேயே அமர்ந்தார். மேலும் அவர் காந்தியை நோக்கி மிஸ்டர் காந்தி! நான் கடற்கரையிலே ஒரு பொதுக் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்துள்ளேன். அதில் தாங்கள் கலந்து கொள்ள முடியுமா?என்று வினவினார். காந்தியடிகள் தனக்கு வேறு நிகழ்ச்சி இருப்பதன் காரணமாகத் தன்னால் கலந்து கொள்ள இயலாது என்று கூறினார். இந்த பதிலைக் கேட்டதும் பாரதியார் வேறு எதுவும் எதிர்பார்க்காமல் அந்த இடத்தில் இருந்து மின்னலைப்போல சென்றுவிட்டார்.மின்னல் போல் வீரத்துடன் தயக்கமின்றி வந்து சென்ற பாரதியைப் பற்றி விசாரித்தார். கவி என்றும் சுதந்திரப் போராளி என்றும் கூறினர். அவருடைய வீரத்தையும், பாவணையையும், வைத்து இவர் போற்றப்பட வேண்டியவர்,பாதுகாக்கப்பட வேண்டியவர் என்று காந்தி வியந்து கூறினார். சுதந்திரத்திற்காகப் பாடுபடக்கூடிய காந்தியின் சிந்தனைகள் பாரதியினுடைய சிந்தனைகளை விட வெவ்வேறாக இருந்த போதிலும் அவர்களுடைய நட்பு என்னும் பலம் பெருகியது. பாரதியார் காந்தியடிகளை நினைத்து எழுதிய,

வாழ்க நீ எம்மான், இந்த வையத்து நாட்டி லெல்லாம்
தாழ்வுற்று வறுமை மிஞ்சி விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்ற தாமோர் பாரத தேசந் தன்னை
வாழ்விக்க வந்த காந்தி மஹாத்மா! நீ வாழ்க! வாழ்க!

விடுதலைப் போராட்டத்தில் திலகரின் வழி நின்ற பாரதி, காந்தியடிகளைச் சந்தித்தபின்பு காந்தியடிகளின் வாயிலாகவே நாட்டு விடுதலை கிடைக்கும் என்று நம்பினார்.பாரதத்தைக் காக்க காந்தியடிகளால் மட்டுமே முடியும் என்ற அவரின் நம்பிக்கையின் வெளிப்பாடே இப் பாடல்.

பாரதியும் வ. உ. சியும்

எட்டயபுரத்தில் வாழ்ந்து வந்த காலத்திலேயே வ.உ.சி.யும் பாரதியாரும் நல்ல நட்புறவோடு வாழ்ந்து வந்தனர். பாரதியாரின் பாடல்களைக் கேட்டு அதன் தாக்கத்தினாலே வ.உ.சிக்கு சுதந்திரப்பற்று மிகவும் அதிகமானதாகக் கூறப்படுகிறது. பாரதியைச் சந்தித்தபோது தான் அரசியல் தெளிவும் கொள்கை உறுதியும் புத்துணர்ச்சியும் பிறந்ததாகக் கூறியுள்ளார். பிரான்ஸ்,இத்தாலி போன்ற உலக நாடுகளில் நடைபெற்ற போராட்டம் குறித்தும் இன்னும் இது போன்ற கிளர்ச்சிகள் பற்றி வெளிவந்திருந்த ஆங்கிலக்கவிதைகள் குறித்தும் பாரதி, வ.உ.சிக்கு உணர்ச்சிகரமாக எடுத்துக் கூறியுள்ளார். இவர்களின் உறவின் .நெருக்கம் மாமனார்,மருமகன் என்று முறை வைத்து தங்களுக்குள் அழைத்துக் கொள்ளும் அளவுற்கு நெருக்கமாக இருந்தது. பாரதியும் வ.உ.சி.யும் சென்னை ஜனசங்கம் என்ற தேசாபிமான சங்கத்தை அமைத்தனர். சூரத்தில் 1907-ம் ஆண்டு நடைபெற்ற 23 வது காங்கிரஸ் மாநாட்டில் தமிழகத்தின் பிரதிநிதிகளாக கலந்து கொண்டதோடு அம்மா நாட்டின் நிகழ்வுகளில் பெரும் பங்களிப்பைச் செலுத்தியவர்கள் பாரதியும்,வ.உ.சி.யும்

வ.உ.சி. தூத்துக்குடியில் சுதேசிக்கப்பல் கம்பெனியை நிறுவி வெள்ளையனுக்கு எதிராக இரண்டு சுதேசிக்கப்பல்களை ஓட விட்டது, அங்குள்ள கோரல் மில்

தொழிலாளர்களின் கோரிக்கைகளை முன்வைத்து போராடியது,விபின்சந்திரபாலர் விடுதலை நாளைக் கொண்டாடியது போன்ற புரட்சிகர வடிவங்களில் விடுதலைப் போராட்டத்தைத் தலைமையேற்று நடத்திச் சென்றபோது பாரதி இந்தியா இதழில் இந்த வரலாற்று நிகழ்வுகளையெல்லாம் வரி தவறாமல் பதிவு செய்தார். இந்த சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டு தனது இதழ் மூலம் தமிழகத்தில் ஒரு புத்தெழுச்சியையே உருவாக்கினார் பாரதி. வ.உ.சி.,சிவா ஆகியோரை ஆங்கிலேய அரசு அடக்கிவிட வேண்டும்மென்ற நோக்கில் பல்லாண்டு காலம் சிறை தண்டனை அளித்த போது வெகுண்டெழுந்தார் பாரதி. 1908-ம் ஆண்டு இந்தியா இதழில் மனம் பதைபதைக்க நெகிழ்ந்து போய் எழுதியுள்ளார் பாரதி. பாரதி புதுச்சேரியில் இருந்த காலங்களில் அவரை சந்திப்பதற்கென்றே புதுச்சேரிக்குச் சென்று அவருடன் தங்கியிருந்து தன்னுடைய தோழமையை வெளிப்படுத்தியவர் வ.உ.சி. 1936-ல் வ.உ.சி மரணப்படுக்கையில் இருக்கும் வேலையில் காங்கிரஸ் தொண்டர் சிவகுருநாதனை அழைத்து பாரதி பாடலை பாடப் பணித்தார். "என்று தனியும் இந்த சுதந்திர தாகம்' என்ற பாடலை உருக்கம் கலந்த எழுச்சியோடு சிவகுருநாதன் பாட அதைக் கேட்டுக் கொண்டே வ.உ.சி என் உயிர் பிரிந்தது.

பாரதியின் காணி நிலக் கனவு நனவானது

பாரதி தமக்கெனக் கண்ட கனவில், "காணி நிலம் வேண்டும், அந்தக் காணி நிலத்தினிலே ஒர் மாளிகை கட்டித்தர வேண்டும்" என்றார்.கவியின் கனவைத் தமிழ் மக்கள் என்று நனவாக்கி விட்டனர்.காணி நிலத்திலே ஒரு கவின் பெறு மாளிகை கட்டித் தந்து விட்டார்கள்! பாரதி பிறந்த ஊரில் அவருக்கு நினைவு மண்டபம் கட்ட தமிழ் மக்கள் போட்டி போட்டு பணம் அனுப்பியதையும் விழா நடக்க பல வகையில் துணை புரிந்த சோமயாஜூலுவைப் பாராட்டுகிறார் கல்கி.

பாரதியிடம் பெண்ணியத் தாக்கம்

1906-ம் ஆண்டில் நடந்த காசி காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்ட பாரதியார், கல்கட்டா அருகே டம்டம் என்ற இடத்தில் விவேகானந்தரின் சிஷ்யையான நிவேதிதா தேவியைச் சந்தித்தார். அப்போது அவர்,தங்களுடைய மனைவியைக் காசிக் காங்கிரசுக்கு அழைத்து வரவில்லையா? என்று வினவினார்.அதற்கு பாரதியார் பெண்களை நாங்கள் பொது மாநாட்டில் கலந்து கொள்ள விரும்புவதில்லை என்று கூறினார். அதைக் கேட்டு கொதித்தெழுந்த நிவேதிதாதேவி இவ்வளவு எழுச்சியையும், போராட்டங்களையும், எழுத்துக்களையும், படைப்புகளையும் தங்களுக்குள் திறமையாக வைத்துக் கொண்ட தாங்கள் பெண்களைப் பற்றிய எண்ணத்தை இன்னும் மாற்றிக் கொள்ள வேண்டும் என்று கூறினார். இதனைக் கேட்ட பாரதியார் பெண்கள் சுதந்திரத்தை பற்றி மேலும் தீவிரமான கருத்துக்களைத் தன்னுடைய படைப்பில் படைத்தார். இதுவே பாரதியின் சிந்தனையில் பெண்ணிய சுதந்திரத்தைப் பற்றிப் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த உதவியது..

பாரதியின்**தமிழ்ப்பற்று**

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்" என்றும் "யாமறிந்த புலவரிலே கம்பனனைப்போல் வள்ளுவனைப்போல் இளங்கோவைப்போல் பூமிதனில் யாங்கனுமே பிறந்ததில்லை" என்று தழிழின் மீதும் தமிழ்ப் புலவர்களின் மேலும் அளவு கடந்த பற்று வைத்திருந்தவர் பாரதி.அப்படிப் பட்ட பாரதியாரோடு முதல் சந்திப்பில் ஆங்கிலத்தில் உரையாடிவிட்டார் வ.ரா. சினங் கொண்ட பாரதி தம் அருகில் இருந்த பாலு என்ற நண்பரை விளித்து, வந்தவர் உனக்கு இணையாக

ஆங்கிலத்தில் உரையாடுகிறார் அவரிடம் நீ பேசு, எனக்கு வேலை இல்லை என உரக்கக் கத்திவிட்டார். ஒரு தமிழன் மற்றொரு தமிழனோடு இன்னும் எவ்வளவு காலம் ஆங்கிலத்திலேயே பேச வேண்டும் என்று வருத்தமுடன் பாரதி கேட்க வ.ராவுக்கு அழுகை வந்துவிட்டது. அதன்பின்பு பாரதியைச் சந்திக்கும் போதெல்லாம் வ. ரா தமிழில் மட்டுமே பேசினார். பாரதி வா. ரா நட்பு வளர்ந்தது.பாரதியின் தமிழ் உணர்வைக் காட்டும் இந்நிகழ்ச்சி தமிழ் இனம் முழுமைக்கும் பாடமாக அமையும். (வ.ரா படைப்புகளில் சமுதாய சீர்திருத்த சிந்தனைகள். முனைவர் ச.இராமமூர்த்தி யாதவர் கல்லூரி மதுரை).

பாரதியை ஆதரித்தவர்கள்

சுதேசமித்திரன் காரியாலத்தார் அவரையும் அவர் கவிதைகளையும் போற்றியவர். அவருக்கு வேலை கொடுத்து அவர் கவிதைகளை வெளியிட்டு சன்மானமும் கொடுத்தார். வை.சு.சண்முகம் செட்டியார் தம் இல்லத்தில் பல நாட்கள் பாரதியை விருந்தாளியாக வைத்திருந்தார்.புதுச்சேரியில் பாரதிக்குத் துணையாகப் பாதுகாப்பாக இருந்தவர் பாவேந்தர் பாரதிதாசன்.

திரை இசையில் பாரதியார்

பாரதியின் பாடல்கள் எவ்வளவு தான் நூல் வடிவம் பெற்றிருந்தாலும், பாமரமக்களிடம் பல பாரதி பாடல்களைக் கொண்டு சேர்த்தது திரையுலகமே. திரை இசைப் பாடல்களில் பாரதியின் வரிகளை நாம் கேட்டு மகிழ்வதற்கு முக்கியமான காரணம் ஏ.வி.எம் மெய்யப்ப செட்டியார் அவர்கள். ரூபாய் பத்தாயிரம் கொடுத்து பாரதியுடைய பாடல்களை வாங்கியவர்.தன்னுடைய படத்தில்தான் பாரதி பாடலை முதன் முதலில் பாடவைத்தார்.மெய்யப்ப செட்டியார் அவர்கள் அன்றைய தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க பாரதியாரின் கவிதைகளை நாட்டுக்கு அர்ப்பணித்தார். பாரதியாரின் பாடல்கள் பல்வேறு திரைப்படங்களில் இடம்பெற இதுவே ஒரு காரணமாக அமையப்பெற்றது.

முடிவுரை

பாரதி தமிழுக்குக் கிடைத்த மிகப் பெரிய தங்கச் சுரங்கம். அவரது எழுத்துக்கள் சாதி சமய வெறியால் புரையோடிப் போயிருந்த தமிழச் சமுதாயத்தை மாற்றியமைத்தது. பாரதியின் வாழ்வை ஆய்ந்து பார்க்கையிலே இன்றைய சமுதாய வளர்ச்சிக்கு அவரது எழுத்துக்கள் எத்துனை இன்றியமையாதது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.அதில் ஒரு சில துளிகளை நினைவு படுத்த இவ்வாய்வு உதவியது.

பார்வை நூல்கள்:

1. கல்கி அமுதம். டாக்டர் கலா தாக்கர்.
2. பாரதி காலமும் கருத்தும் தொ. மு .சி. ரகுநாதன்

90. பாரதியின் வசன கவிதையில் காற்றின் பரிமாணங்கள்



இராஜி ராமச்சந்திரன்

அட்லாண்டா, வட அமெரிக்கா

முன்னுரை

மகாகவி சுப்பிரமணிய பாரதியார், இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடியாகத் திகழ்ந்தவர். பாரதியாரின் படைப்புலகம், நாட்டுப்பற்று, மொழிப்பற்று, சமூக சீர்திருத்தம், பெண் விடுதலை, இயற்கை, தத்துவம், தோத்திரம், குழந்தைப் பாடல்கள், வசன கவிதைகள் எனப் பலதரப்பட்ட வகைமைகளை உள்ளடக்கியது. அவற்றுள் வசன கவிதைகள் தனித்துவம் வாய்ந்தவை. இக்கட்டுரையில், 'காற்று' என்ற கவிதையில் அதன் பல்வேறு பரிமாணங்களைப் பாரதியார் எவ்வாறு கையாண்டுள்ளார் என்பதை விரிவாக ஆராயலாம்.

வசன கவிதை - ஓர் அறிமுகம்

வசன கவிதை (prose poetry, free verse) என்பது உரைநடைக்கும் கவிதைக்கும் இடைப்பட்ட ஓர் இலக்கிய வடிவம். இதில் மரபிலக்கண விதிகள் பின்பற்றப்படாமல், உரைநடை வடிவில் எழுதப்பட்டிருக்கும். இருப்பினும், இதில் கவிதைக்குரிய கற்பனை, உணர்ச்சி, படிமங்கள், ஒலிகள் ஆகியவை நிறைந்திருக்கும்.

அமெரிக்கக் கவிஞர் வால்ட் விட்மன் (Walt Whitman) தமது 'புற்களின் இதழ்கள்' (Leaves of Grass) என்ற படைப்பின் மூலம் இவ்வடிவத்தைப் பரவலாக்கியவர். பிரெஞ்சு இலக்கியத்தில், சார்லஸ் போதலேர் (Charles Baudelaire) போன்றவர்களும் இதைப் பயன்படுத்தியுள்ளனர். பாரதியார் இவ்வடிவத்தைத் தமிழ் இலக்கியத்திற்கு அறிமுகப்படுத்தி, தமது நவீன எண்ணங்களை எளிமையாக மக்களிடம் கொண்டு சேர்த்துள்ளார்.

பந்தல் கயிறுகளின் அசைவில் தத்துவம்

"ஒரு வீட்டு மேடையிலே ஒரு பந்தல். ஓலைப் பந்தல், தென்னோலை" என்று தொடங்கும் 'காற்று' கவிதை, ஒரு கதை வாசிப்பதைப் போன்ற உணர்வை ஏற்படுத்துகிறது. பந்தலில் தொங்கும் துண்டுக் கயிறுகளை, "கந்தன் - வள்ளியம்மை" என்ற கணவன், மனைவியாக உருவகம் உருவகித்து, அவற்றின் ஊசலாட்டத்தை மனிதர்களின் மகிழ்ச்சி, சண்டை, இணக்கம் எனப் பல்வேறு உணர்வுகளுக்கு இணையாகக் காட்சிப்படுத்துகிறார்.

இதமான உரையாடலுக்குப் பின் உறங்கிப் போன கயிறுகளின் உயிரற்ற நிலையை, காற்றுத் தேவன் தோன்றி, "நான் ப்ராணசக்தி. என்னுடனே உறவு கொண்ட உடல் இயங்கும். என்னுறவில்லாதது சவம். நான் ப்ராணன். என்னாலேதான் அச்சிறு கயிறு உயிர்த்திருந்தது. சுகம்பெற்றது. சிறிது களைப்பெய்தியவுடனே அதை உறங்க -- இறக்க -- விட்டு விட்டேன். துயிலும் சாவுதான். சாவும் துயிலே. நான் விளங்குமிடத்தே அவ்விரண்டும் இல்லை. மாலையில் வந்து ஊதுவேன். அது மறுபடி பிழைத்துவிடும். நான் விழிக்கச் செய்கிறேன். அசையச் செய்கிறேன். நான் சக்திகுமாரன், என்னை வணங்கி வாழ்க." என்று விளக்குகிறான். "காற்றே, போற்றி. நீயே உயிர்களைப் பிறப்பிக்கும் கடவுள்" என்ற வேத வாக்கியத்தைக் கவிதையின் இறுதியில் பயன்படுத்துவதன் மூலம், "இயற்கையின் இயக்கமே கடவுள்" என்ற தத்துவத்தைப் பாரதி நிலைநிறுத்துகிறார்.

அழித்தலும் ஆக்கலும் ஒன்றே!

"நடுக்கடல், தனிக்கப்பல்" என்ற கவிதை, தொடக்கத்தில் புயல் காற்றினால் கப்பல்கள் மூழ்குவதையும், உயிர்கள் பலியாவதையும் ஒரு பெருஞ்சினம் கொண்ட ஆற்றலாக விவரிக்கிறது. பிற்பகுதியில், "காற்றே பந்தல் கயிறுகளை அசைக்கின்றான். அவற்றில் உயிர் பெய்கிறான். காற்றே நீரில் சூறாவளி காட்டி, வானத்தில் மின்னேற்றி, நீரை நெருப்பாக்கி, நெருப்பை நீராக்கி, நீரைத் தூளாக்கித் தூளை நீராக்கிச் சண்டமாருதம் செய்கின்றான். காற்றே யுகமுடிவு செய்கின்றான். காற்றே காக்கின்றான்.அவன் நம்மைக் காத்திடுக." என்று கூறுவது முலம், "அழிப்பதும் ஆக்கலும் ஒரே ஆற்றலின் செயல்கள்" என்ற தத்துவத்தைப் பாரதி விளக்குகிறார்.

வாழ்வின் நிலையாமை

"மணல், மணல், மணல், பல யோஜனை தூரம்" என்ற கவிதை, பாலைவனத்தில் பயணம் செய்யும் வணிகக் கூட்டம், திடீரென வீசும் புயலால் ஒரு நொடியில் மணலில் புதைந்து அழிவது, மனித வாழ்வு எவ்வளவு நிலையற்றது என்பதை உணர்த்துகிறது. காற்று கொடியது என்றாலும், அதனை வாழ்த்துவோம் என்று பாரதி கூறுவதன் மூலம், அழிவையும் வாழ்வின் ஒரு பகுதியாக ஏற்றுக்கொள்ளும் மனப்பக்குவத்தை வலியுறுத்துகிறார்..

சுற்றுச்சூழல் பாதுகாப்பு

"காற்றே வா, மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தை மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா. இலைகளின் மீதும், நீரலைகளின் மீதும் உராய்ந்து, மிகுந்த ப்ராண-ரஸத்தை எங்களுக்குக் கொண்டுகொடு" என்று பாரதி வேண்டுகிறார். நோயற்ற வாழ்வுக்குத் தூய்மையான காற்றே அடிப்படை என்பதை உணர்த்தும் அவர், "ஊர்க்காற்றை மனிதர் பகைவனாக்கிவிடுகின்றனர்" என்று அன்றே சுற்றுச்சூழல் சீர்கேட்டைப் பற்றிக் குறிப்பிடுகிறார்.

"காற்றுத் தேவனை வணங்குவோம். அவன் வரும் வழியிலே சேறு தங்கலாகாது" என்று தொடங்கி, சாலைகளைச் சுத்தம் செய்வது, சோலைகள் அமைப்பது, நறுமணப் பொருட்களைக் கொளுத்துவது எனத் தூய்மையான சூழலை உருவாக்குவதற்கான நடைமுறை வழிகளைக் குறிப்பிடுகிறார்.

"மழை பெய்கிறது, ஊர் முழுதும் ஈரமாகிவிட்டது." என்று தொடங்கும் கவிதையில் மழைக் காலத்தில் தமிழர்களின் அவல நிலையை, "எருமைகளைப் போல எப்போதும் ஈரத்திலேயே நிற்கிறார்கள்" என்று எடுத்துக் காட்டுகிறார். நோய்வாய்ப்பட்டு மக்கள் இறப்பதை, "விதிவசம்" என்று கூறும் மூடர்களிடம், நோய்களுக்குக் காரணம் உண்மையான சாத்திரங்களை வளர்க்காமல், மூடநம்பிக்கைகளில் மூழ்கியிருப்பதால் ஏற்படும் அறியாமையே என்று கூறுகிறார். "குளிர்ந்த காற்றையா விஷமென்று நினைக்கிறாய்? அது அமிழ்தம், நீ ஈரமில்லாத வீடுகளில் நல்ல உடைகளுடன் குடியிருப்பாயானால் காற்று நன்று." என்கிறார்.

இக்கவிதைகள், காற்றை மனித வாழ்வின் ஆதாரமாகக் கருதி, அதனைப் பாதுகாத்து வணங்க வேண்டும் என்ற சுற்றுச்சூழல் விழிப்புணர்வை வலியுறுத்துகின்றன.

வலிமையுற வாழ்வோம்

"காற்றே வா, மெதுவாக வா." என்ற கவிதையின் தொடக்கத்தில், சன்னலை உடைப்பது, புத்தகங்களைக் கீழே தள்ளுவது எனக் காற்றின் அழிக்கும் தன்மை விவரிக்கப்படுகிறது. குறிப்பாக, நொய்ந்த எதையும் அது நொறுக்கிவிடும் என்று பாரதி கூறுகிறார். இதற்குத் தீர்வாக, "மானிடரே வாருங்கள்" என்று அழைக்கும் பாரதி, நம் வீடுகளையும், உடலையும், உள்ளத்தையும் உறுதியாக்கிக் கொள்ள அறிவுறுத்துகிறார். "இங்ஙனம் செய்தால், காற்று நமக்குத் தோழனாகிவிடுவான். காற்று மெலிய தீயை அவித்துவிடுவான். வலிய தீயை

வளர்ப்பான்" என்று கூறுவதன் மூலம், நாம் வலிமையுடனும் உறுதியுடனும் இருந்தால், எந்த ஒரு தீய சக்தியும் நம்மை அழிக்க முடியாது என்பதைப் பாரதியார் உணர்த்துகிறார்.

அறிவியல் பார்வை

பாரதியார், "காக்கை பறந்து செல்கிறது" என்ற கவிதையில், காக்கை பறப்பதற்குக் காரணமான 'வாயு' என்பது கண்ணுக்குத் தெரியாத பூதத் தூள்களால் ஆனது என்று குறிப்பிடுகிறார். பனிக்கட்டி நீராகவும், நீர் வாயுவாகவும், தங்கம் உருகித் திரவமாகவும், பின்னர் வாயுவாகவும் மாறுவது எனப் பருப்பொருள் நிலைகளை விளக்குகிறார்.

"அணு -- அதனிலும் சிறிய அணு -- அதனிலும் சிறிது" என்று அணுவின் நுண்ணிய தன்மையையும், "மஹத் -- அதனிலும் பெரிய மஹத்" என்று பேரண்டத்தின் எல்லையற்ற தன்மையையும் குறிப்பிடுகிறார். இந்த அறிவியல் சிந்தனைகள், பாரதியாரின் பரந்துபட்ட அறிவைப் பறைசாற்றுகின்றன.

முடிவுரை

பாரதியாரின் 'காற்று' என்ற வசன கவிதை, வெறும் காற்றைப் பற்றி மட்டும் பேசவில்லை. அது காற்றின் அசைவில் வாழ்க்கைத் தத்துவங்களையும், அழித்தலும் ஆக்கலும் ஒன்றே என்ற ஆழ்ந்த கருத்துகளையும், வாழ்வின் நிலையாமையையும், சுற்றுச்சூழல் பாதுகாப்பின் தேவையையும், மனிதர்கள் வலிமையுடன் வாழ வேண்டும் என்ற வாழ்வியல் பாடத்தையும் கற்றுத் தருகிறது. அத்துடன், அறிவியல் மற்றும் ஆன்மிகக் கருத்துகளையும் இணைத்து, ஒரு கவிதையில் பல பரிமாணங்களை வெளிப்படுத்த முடியும் என்பதையும் பாரதியார் நிறுவியுள்ளார். இக் கவிதையின் மூலமாக, அவர் நமக்கு விட்டுச் சென்றிருக்கும் எண்ணங்கள் எதிர்காலத் தலைமுறைக்கு வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

91. பாரதியின் பன்முகத்தன்மை



வே.சண்முகதேவி
எம்.ஏ.(த)., எம்.ஏ.(வ)., எம்.ஏ.(ம.உ).,
எம் ஏ.(பொ.அ)., எம்.ஃபில்., பிஎட்.,
சிஎல்ஐஎஸ்.,டிஎ.ஃப்எல்.
ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி, கோவை

முன்னுரை:

"எட்டயபுரத்தின் எழில்மிகு வாரிசு" மகாகவி, முண்டாசையும் முறுக்கு மீசையையும் அடையாளமாக்கி பாட்டாலே பாரதத்தின் விடுதலைக்கு வித்திட்டவர். பாரதி யார்? கவிஞனா, அறிஞனா, பன்மொழியறிந்த புலவனா, விடுதலைக்கு வித்திட்ட வீரனா? பாப்பா பாட்டாலே கல்வி சொன்ன ஆசிரியனா? காளியின் பக்தனா? வாரிக் கொடுக்கும் வள்ளலா? இவையனைத்தையும் சற்றே ஆராய்ந்தால் யாவுமாகி ஞாலத்தில் பெயர் நிலைக்கப் பெற்றவன் என்றே சொல்ல வேண்டும். பாரதி கூண்டுக் கிளியாக இல்லாது சுற்றித் திரியும் பட்டாம் பூச்சியாக வலம் வந்தவர். வண்ணச் சிறகுகளில் பல்வேறு திறன்களைச் சுமந்து வையம் பேச வாழ்ந்தவர். அவரைப் பற்றிய இக்கட்டுரை அவரது நினைவுகளை அசை போட வைத்து திறனை நமக்குள் உயிர்த்தெழச் செய்யும்.

பாரதி ஓர் அறிமுகம் :

பாரதிக்கு அறிமுகம் தேவையா? பூக்கடைக்கு விளம்பரம் தேவையா? என்பது போல் அல்லவா இருக்கிறது. இருப்பினும் கட்டுரையின் மையம் பாரதி என்பதால் அவரைப் பற்றி சற்றே வாசிப்போம். திருநெல்வேலி மாவட்டத்தில் பிறந்த இவர் திருநெல்வேலியிலும் வாரணாசியிலும் பயின்றார். இவருடைய தந்தைக்கு ஆங்கிலமும் கணிதமும் கற்று பாரதி ஒரு பொறியாளராக வரவேண்டும் என்ற விருப்பமே இருந்தது. ஆனால் இவ்வையம் பெற்ற பெறும் பேறு தமிழன்னை கரம் பற்ற தன்னுடைய பதினொன்றாம் வயதிலேயே கவிபுனையும் ஆற்றலை வெளிப்படுத்தினார். சுப்பிரமணியன் பாரதியாக மாறுகிறார். பாரதி என்றால் சரசுவதியின் அனுக்கிரகம் பெற்றவர் என்று பொருள். நாட்கள் கழிகிறது. பாரதிக்குப் பதினைந்து வயதாகும் போது செல்லம்மாவை மணக்கிறார். மரபுக் கவிதை போற்றப்பட்டு, மரபுப்பா எழுதுபவர்கள் மட்டுமே இலக்கியவாதிகளாகப் போற்றப்பட்ட காலத்தில் புதுக்கவிதையால் புரியாதவர்களுக்கும் புரியும் எளிய வடிவில் கவிப் புரட்சி செய்தவர் பாரதி.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே" (நன்னூல்)

புதுக்கவிதைகள் எப்படித் தோன்றின? அவசியம் என்ன? புதுக்கவிதை எப்படி இருக்க வேண்டும். சற்றே ஆராய்வோம். மரபுக் கட்டுகளை உடைத்து கவிஞன் சொல்ல இந்த கருத்துக்களை எளிமையான சொற்களால் உரைப்பதே புதுக்கவிதை.

"இலக்கணச் செங்கோல்
யாப்புச் சிம்மாசனம்
எதுகைப் பல்லக்கு
தனிமொழிச் சேனை
பண்டித பவனி
இவை எதுவுமில்லாத
கருத்துக்கள் தம்மைத் தாமே
ஆளக் கற்றுக் கொண்ட புதிய

மக்களாட்சி முறையே புதுக்கவிதை" - மு. மேத்தா
புதுக் கவிதை புத்துயிர் பெற பாரதியின் பங்கு இன்றியமையாதது.

பாரதியும் குழந்தைப்பாடலும் :

தன் பாடல் வரிகளூடே பாப்பாவிற்குப் பல பாடங்கள் சொன்னவர் பாரதி.

"சாதிகள் இல்லையடி பாப்பா! - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!"

குலத்தினாலே வரக் கூடிய உயர்வும், தாழ்வும் பற்றிப் பேசுவது பாவமான செயல். சாதிகள் இல்லை என்று இளம் வயதிலேயே பிஞ்சுகளின் மனத்தில் பசுமரத்தாணியாகப் பதிய வைத்தவர் பாரதி.

"சோம்பல் மிகக் கெடுதி பாப்பா- தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!"

வாழ்க்கை என்பது போர்க்களம். போராட்டங்களைச் சந்திக்கும் போது துவண்டு போகாதே. திடம் கொண்டு நீ போராடு என்று ஊக்கத்தைத் தந்தவர் பாரதி. அறிவுரைகளைக் கூட அழகாகவும் அன்பாகவும் தருவதில் பாரதிக்கு நிகர் பாரதி தான்.

"அறிவுரை அழகாகும்
துயரம் துணிவாகும்
இடர் இன்பமாகும்
பயம் பாதுகாவலாகும்
பாரதியின் வரிகளால். "

பாரதியும் இளைஞர்களும் :

இந்திய நாட்டின் மக்கள் தொகையில் 50 % மேல் இளைஞர்களே! இளைஞர்களின் இதயத்துடிப்பில் இந்தியா வளர்ச்சியடையும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. தங்களது எழுச்சி மிகு எண்ணங்களால் இந்திய நாட்டை ஏற்றம் அடையச் செய்பவர்கள் இளைஞர்கள். அதனால் தான் பாரதி, இளைய பாரதத்தினாய் வா வா எனப் பாடியுள்ளார். முகநூலில் முகம் மறைத்து புலனத்தில் புலம் பெயர்ந்த இளைஞர்களைக் குறை கூறிக் கொண்டிருக் சமூகம் எழுச்சிமிக்க இளைஞர்களை ஏனோ மறந்து விடுகிறது. இளைஞர்களை பாரதி மறந்து விடுவாரா? இளைஞர்களின் பிரகாசமான வாழ்க்கைக்கு வழிநத்தும் வெளிச்சமாக பாரதியின் வரிகள் விளங்குகின்றன. இளைஞர்கள் தைரியுமாகவும் தன்னம்பிக்கையுடனும் இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துகின்றன. இளைஞர்கள் தங்கள் நாட்டின் மீது அன்புடனும் பற்றுடனும் இருக்க வேண்டும் என்பதையும் சமூகத்தில் நல்ல மாற்றங்களைக் கொண்டு வர வேண்டும் என்பதையும் எடுத்துரைக்கின்றன.

"ஆடுவோமே பள்ளு பாடுவோமே"

என்று சுதந்திரப் பள்ளுபாடியவர் பாரதி. இளைஞர்களுக்கென்று தனிப்பாடல் இல்லாவிட்டாலும் பாரதியின் பாடல்களில் இளைஞர்களுக்கான வரிகள் அதிகம் உள்ளன.

"பயமென்னும் பேய்தனை யடித்தோம்" (ஜய பேரிகை)
"தரணியிலே பெருமை வேண்டும்"

கவனம் இருந்தால் காரியத்தில் உறுதியும் தானாகவே வந்து சேரும்.

பாரதியும் பாவையரும் :

பெண்ணியம் பேசப்படாத காலத்தில் பாரதி பேசிய பெண்ணியம் புரட்சியை ஏற்படுத்தி பெண்களிடத்தே ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியது. பெண்களை உயர்ந்த இடத்திற்குக்கொண்டு செல்ல வேண்டும் என்று பாரதி விரும்பினார். பெண்கள் அறிவை வளர்த்துக் கொள்ளும் போது சமூகம் வளர்ச்சிப் பாதை நோக்கி நகரும் என்பதில் உறுதியாக இருக்கிறார் பாரதியார்.

"பெண்கள் அறிவை வளர்த்தால் வையம்"
பேதமை அற்றிடுங்காணீர் (முரசு 10) என்ற வரிகள் பெண்களைப் பற்றிய பாரதியின் உயர்வான சிந்தனை தெளிவாகும். தனது பாஞ்சாலி சபதத்தில் குறிப்பிடும் போது கூட முகவுரையில், எனது சித்திரம் வியாசர் பாரதக் கருத்தைத் தழுவியது. பெரும்பான்மையாக, இந்நூல் வியாச பாரதத்தின் மொழி பெயர்ப்பென்றே கருதிவிடலாம். கற்பனையில் எனது சொந்தச் சரக்கென்று எதுவும் இல்லை தமிழ்நடைக்கு மாத்திரமே நான் பொறுப்பாளி" என்று உரைக்கிறார்.

(பாரதியார், பாஞ்சாமி சபதம்: (முகவுரை ப.எ)

பெண்களைப் புகழ்ந்து பாடும் இவர் பெண் தெய்வங்களையும் வாழ்த்திப்பாடுகிறார். இதில் சிறப்பு என்ன வென்றால் ஆண் தெய்வங்களைப் பாடிய பாடல்களே வாழ்த்துப் பாடலாக வைக்கப்பட்டிருந்த காலகட்டத்தில் வாழ்த்துப் பாடலிலேயே புரட்சி செய்தவர் பாரதியார்.

"....... .... ஐவர்
பூவை, திரௌபதி
புகழ்க் கதையை
மாணியல் தமிழ்ப்பாட்டால்- நான்
வகுத்திடக் கலைமகள் வாழ்த்துகவே!"

(பாரதியார் பாஞ்சாலி சபதம் ப-9)

புகையிலை விரிச்சாப் போச்சு, பெண்கள் சிரிச்சாப் போச்சு என்ற சொல்லாடல் வழக்கத்தில் உண்டு. இதையும் பாரதி கண்டிக்கிறார். நம்முடன் இருக்கும் யாரவது ஒருவர் அறியாது கீழே விழுந்தால் கூட நம்மையறியாமல் சிரிப்பு வந்து விடுகிறது. சாதாரணமாகச் சிரிப்பது கூட குற்றமாகப் கருதப்பட்டது. துரியோதனன் தவறி விழுந்த போது சிரித்த பாஞ்சாலியின் இயல்பு போருக்கு வித்திட்டது இந்தச் சிரிப்பிற்காகத் தான் பாஞ்சாலிமையும் பாண்டவர்களையும் பழிவாங்கத் துடிக்கிறான் துரியோதனன்,

"......... அந்த
ஏந்திழையாளும் எனைச் சிரித்
தாளிதை எண்ணுவாய் ...." (பாரதியின் பாஞ்சாலி சபதம் ப.எ. 34)

".........வாள்விழி மாதரும் நம்மையே - கய
மக்களென் றெண்ணி நகைத்திட்டார்"

(பாரதியின் பாஞ்சாலி சபதம் ப.எ 41)

ஒரு பெண் தன்னை உணரும் போது தான் அவளுள் புரட்சி வெடிக்கிறது. தன்னுடைய இழி நிலை அவளுள் புரட்சியை வெடிக்கச் செய்கிறது. சபையோரும் சமூகமும் சுற்றி இருந்தாலும் உதவி செய்ய யாருமின்றித் தவிக்கும் போது கேள்வி கேட்டும் நிலையிலிருந்தும், விளக்கம் தரும் நிலையிலிருந்தும் சபதம் எடுக்கும் நிலைக்கு மாறுகிறாள். இந்தச் சூழ்நிலைக்கு வந்த போது தான் பாஞ்சாலி தன் கூந்தலைப் பற்றி இழுத்த துச்சாதனனையும் அதற்குக் காரணமான துரியோதனனையும் அதற்குக் காரணமான துரியோதனனையும்

"....... ஆணை யுரைத்தேன்
பாவி துச்சாதனன் செந்நீர்- அந்த.."

(பாரதியின் பாஞ்சாலி சபதம் ப. எ 175)

என்று சபதம் ஏற்கிறாள். இன்றைய பெண்கள் ஓரளவாவது விடுதலை பெற்றிருக்கிறார்கள் என்றால் அதற்கு பாரதியின் வரிகளே கலங்கரை விளக்காக வழிகாட்டியுள்ளது.

பாரதி என்னும் புரட்சித் தீ :

'பா'ரதம் செலுத்தி பாரதத்தை சுதந்திரத் தேரில் பவனிவரச் செய்தவர் பாரதி. ரஷ்யாவின் புரட்சித் தாக்கம் இவரது பாடல்களில் வெளிப்பட்டது. தன்னுடைய கவிதைகளில் கூட ஷெல்லியின் தாக்கத்தை அதிகம் வெளிப்படுத்தியுள்ளார். வெள்ளையர்கள் அடக்குமுறையை மட்டும் நம்பியிராமல் இந்தியர்களின் பலவீனங்களைப் பயன்படுத்தியே பிரித்தாளும் சூழ்ச்சியைக் கடைபிடித்தனர். சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் என்ற முப்பெரும் கோஷங்களைத் தலைப்புப் பக்கத்தை தாங்கி, சென்னையிலிருந்து வெளிவரத் தொடங்கிய பாரதியின் அரசியல் வாரப்பத்திரிக்கையான இந்தியா 1906 சூன் மாதம் முதல் செப்டம்பர் மாதம் வரை வெளிவந்த இதழ்கள் சிலவற்றில் பிறசெய்திகளோடு ரஷ்யப் புரட்சி பற்றியும் கூறியுள்ளார். இந்தப் புரட்சி தந்த உந்துதலின் விளைவாக 1907 இது தான் எழுதிய சுதந்திரப் பள்ளு பாடலில்

"எல்லோரும் சமமென்பது உறுதியாச்சு!.."

என்று கூறியுள்ளார்.

பாரதி பார தீ யானார் பாரினில்.

முடிவுரை :

இலக்கியவாதியாக, புரட்சியாளராக பன்முகத் திறனோடு வலம் வந்த பாரதி சுதந்திரக் கருத்துகளைக் கூறியதற்காக வெள்ளையர்களால் பல முறை பாதிப்புக்குள்ளானார், பல்வேறு கட்டுப் பாடுகள் இவர் மீது திணிக்கப்பட்ட போதும் 1920 ஆம் ஆண்டு பொது மன்னிப்பு ஆணை வழங்கப்பட்டது. பாரதி எரிந்து சாம்பலாகவில்லை. மாறாக மற்றொரு சுடரை ஏற்றியது. பாரதி ஏற்றிய தீபமே இன்று ஒளி தந்து கொண்டிருக்கிறது. பாரதி என்னும் பன்முகம் அகங்களை அழகாக்கியது. அழகான அகங்களே அவனியை அழகாக்கிக் கொண்டிருக்கின்றன.

துணைநூற்பட்டியல்

1. பாஞ்சாலி சபதம் - பாரதியார், ஸ்ரீ லங்கா பதிப்பகம், யாழ்ப்பாணம்
2. பாரதியும் யுகப் புரட்சியும் நிவேதிதா பதிப்பகம் அசோக் நகர், சென்னை
3. பாரதியார் கவிதைகள் - பாரதியார், காலச்சுவடு பதிப்பகம்,669 கே.பி சாலை,நாகர்கோவில்

92. பாரதியின் பரசிவ வெள்ளம்



வ .ஜோ. தாமரைச்செல்வி

விரிவுரையாளர்

DIET ,பெருந்துறை,ஈரோடு மாவட்டம்

பாரதி.... பாரதி... பாரதி.... தீ.... தீயாக நமக்குள் தீர்க்கமானவன். தீர்க்கதரிசியானவன். சித்தனானவன். முக்தியானவன். முழுமையானவன். இப்படியாகப் பல பரிமாணங்களை நமக்குள் புகுத்திப் புகுத்திப் பாரதி படைத்த படைப்புகள் எல்லாம் உலகினரின் உள்ளத்தையும் உயிரையும் ஊடுருவியது என்றால் மிகையாகாது. அன்பையும் பண்பையும் வேட்கையையும் விளையாட்டையும் தாகத்தையும் தவிப்பையும் வீரத்தையும் விவேகத்தையும் விந்தையையும் விதைத்து மனிதனில் மனிதத்தை மலரச் செய்தது. ஞானத்தையும் ஆன்மீகத்தையும் அடிநாதமாகக் கொண்டு உலக இயக்கத்தையும் ஆதியையும் அந்தத்தையும் அண்டத்தையும் பேரண்டத்தையும் அணுவையும் அணுவின் துகள்களையும் இறையின் தன்மையாக நமக்குள் நிறுத்தி "பற்றற்றான்தாளைப் பற்றுக" என பரசிவ வெள்ளத்தில் நம்மைப் பயணிக்க வைத்து இறைஞான அமுதத்தை அள்ளித்தந்து இறைத்தன்மையில் நம்மை உறைய , உணர , உழல விட்டவர் பாரதி.

. பாரதியின் படைப்புலகம்

பாரதியின் படைப்புலகம் எத்தனை.. எத்தனை.. புதுமையானது தெரியுமா? தீக்குள் நந்தலாலா பாடி, தேன் தமிழில் மூச்செடுத்து, அக்னிக் குஞ்சில் , கொஞ்சும் தெலுங்கில், குயிலின் உறவில், கண்ணனின் நட்பில் , கண்ணம்மாவின் காதலில், சுட்டும் விழியில், நிற்பதில் நடப்பதில், பேரிகை கொட்டலில் , நொண்டிச் சிந்தில் , கீர்த்தனையில் இப்படிச் சொல்லிச் சொல்லி மாளாது படைப்பின் எண்ணிக்கையை. இப்படைப்புகளைக் கடந்து இறைஞான பரவெளியில் பரசிவ வெள்ளத்தில் நம்மைப் பயணிக்க வைத்து சமரசத்தையும் சமத்துவத்தையும் அறிவியலையும் அன்பையும் பொறுமையையும் இறைத்தன்மையையும் ஒன்றுடன் ஒன்று ஊடாடி.. ஊடாடி.. உயிர் நாடியாக்கி உணர்வால் மனதால் இறைத்தன்மையைக் கவிகளின் வரிகளின் வழியே நம்மை உணர வைத்தவர் பாரதி.

பரசிவ வெள்ளம் - விளக்கம்

பரசிவ வெள்ளம் பாடல் 24 கண்ணிகளைக் கொண்டது. இப்பாடலைப் பாரதி 1915இல் எழுதியதாகவும் பாடல் தென்னாப்பிரிக்காவில் இருந்து வெளியாகும் ஒரு பத்திரிகையில் வெளிவந்ததாகவும் கருதப்படுகிறது. எனக்கு முன்னே சித்தர்பலர் இருந்தாரப்பா! என, வீறு கொண்டு எழுந்து விடுதலைக் கவிகள் பாடிய பாரதி இங்கே இப்பாடலின் வழியே தன்னை ஞானக்கவியாகப் பித்தனாகச் சித்தனாகக் கூத்தனாக இறைஞானியாக இன்னமுதக்கவியாகத் தன்னை வடிவமைத்துக் கொண்டார்.

பரசிவ வெள்ளம் - பொருள்

பரம்-வெளி, சிவ-கடவுள் (இறைத்தன்மை) , வெள்ளம்-நீரின் மிகுதி அல்லது உண்மை தன்மை
பரசிவ வெள்ளம்-வெட்டவெளியில் இருக்கும் கடவுள் அல்லது உண்மைத் தன்மை

இவ்வாறு தலைப்பை உற்று நோக்கி உற்று நோக்கி சற்று சிந்தித்தால் நம்மைச் சுற்றி, நம்மில், நமக்கு வெளியே இருக்கும் வெட்டவெளி பரம்பொருள் எனப் பொருள்படும். அப்பொருளை உள்ளத்தில் உணர்ந்து கரைந்து கரைந்து அனுபவித்து ஞானத்தில் நயம் காண, பரசிவ வெள்ளத்தில் மூழ்க, நீந்த, நீந்த, இறைத் தன்மையை உணர நம்மைக் கவிதை புனைவு வழி அழைத்துச் செல்கிறார் பாரதி. இவ்வாறு, பரசிவ வெள்ளத்தில் பயணிக்கிறது நம் கட்டுரையும்..

உள்ளும் புறமும்

உள்ளும் புறமுமாய் உள்ளதெலாந் தானாகும்... (1)

விளக்கம்–பிரபஞ்சத்தின் உள்ளேயும் வெளியேயும் இருக்கின்ற அனைத்திலும் உண்மையான மறைபொருள் உண்டு. மறைநூல் ஓதியோர் அதனைத் தெய்வம் என அழைப்பர். பிரபஞ்ச வெளியில் இருக்கும் அண்டம், பேரண்டம், வெட்டவெளி, ஐம்பூதங்கள், சுழல் மையங்கள் அவைகளில் உலாவும் ஜீவராசிகள் இவை அனைத்துமே பரிணாம வளர்ச்சியின் பிரதிகள் என அறிவியல் விதிகள் ஆராய.. இறை உண்டா...? இல்லையா....? என்ற குழப்பத்தில் நம் மனம் உழல்வதைத் தடுத்து உன் உள்ளம் உனக்கு உள்ளும் வெளியுமாக உள்ளது எனவும் உயிருள்ள உயிரற்ற சகல ஜீவராசிகளையும் இறைத்தன்மை வெள்ளமென அனைத்துக் கொள்ளும். உண்மையான பொருளே தெய்வம் . அப்பா.... நீ எங்கும் தேடி அலையாதே.... என்று நமக்கு நம்மையே.... நமக்குள் இருக்கும் இறைத்தன்மையை எளிமையாக உணர்த்துகிறார் பாரதி.

காணுவன கருதுவன

காணுவன நெஞ்சிற் கருதுவன உட்கருத்தைப்... **(2)**

விளக்கம்: நாம் கண்ணில் காணும் பொருட்கள், மனக்கண்ணில் நினைக்கின்றவைகள், நாம் நமக்கெனச் சேர்த்து வைக்கும் அனைத்தும் உண்மை எனப்படும் தெய்வத்திலே இருந்து தான் பிறக்கிறது. அறிவியல் சார்ந்து உயிர்களின் பிறப்பு நீரிலே அமைகிறது என்பார் அறிவியலார் .ஒருசெல் உயிரினம் முதல் பல செல் உயிர்கள் என கோடிகோடி ஜீவராசிகளையும் தானாகி தனதாக்கிக் கொண்டும் உயிர்பித்தும் உலாவித்தும் வருவது இவ்வெட்டவெளியே.... நாம் கண்ணில் காணுவதாகிய பிரபஞ்சத்தில் உள்ள அனைத்துப் பொருள்களிலும் மனதால் மற்றும் கற்பனையால் நினைக்கின்ற அனைத்திலும் நமக்கென நாம் உண்டாக்குவதிலும் நிறைந்திருப்பது பரசிவ வெள்ளமாகிய.. வெட்ட வெளியாகிய இறைத்தன்மையே என்றும் அதுவே நம்மை உயிர்ப்பிக்க வைப்பதாகவும் விளக்குகிறார் பாரதி

எல்லை இல்லை

எல்லைபிரி வற்றதுவாய் யாதெனுமோர் பற்றிலதாய்... **(3)**

விளக்கம்: இறைமைக்கு எல்லை என்பது இல்லை. இறைமைக்கு எதன்மீதும் பற்று இல்லை. அறிஞர்கள் இறைவன் இருக்கின்றானா? இல்லையா? என்று சந்தேகம் கொள்ளக்கூடிய வகையில் இறைவன் இருக்கிறான். காற்றாற்று வெள்ளத்திற்குக் கரையோ எல்லையோ இல்லை. தன்னைச் சார்ந்த அனைத்துப் பொருள்களையும் தன்னோடு அணைத்துச் சேர்த்துத் தன்னோடு தன்மயமாக்கும் தன்மை கொண்டது. பரசிவ வெள்ளமாகிய இறைத்தன்மைக்கும் எல்லை இல்லை . இறைத்தன்மைக்கு எதன் மீதும் பற்றும் இல்லை. தன்னோடு ஒன்றிய உயிர்களைத் தன்மயமாக்கிக் கொள்ளும். அவ்வகையில் பரசிவ வெளியில், வெட்ட வெளியில் யாதுமாகி நிற்கிறது இறை என்று "யாதுமாகி நின்றாய் காளி எங்கும் நீ நிறைந்தாய்", உணர்வின் வழி உணர்ந்து உணர்ந்து உணர்த்துகிறார் பாரதியார்.

கொட்டும் முகிலாய் அணுவாய்

வெட்டவெளி யாயறிவாய் வேறு பல சக்திகளைக்... **(4)**

விளக்கம்: இறைவன் வெட்டவெளியாக இருக்கிறார். வேறு பல சக்திகளைக் கொட்டுகிற மழைமுகிலாய் இருக்கிறார். வெட்ட வெளியில் பிரபஞ்சத்தில் அணுக்களின் கூட்டம் அண்டமாகப் பேரண்டமாக வியாபித்திருக்கிறது .பிரபஞ்ச சக்தியானது உலகின் நகர்வுக்கும் அசைவுக்கும் காரணமாக அமைகிறது . மாற்றமோ அசைவோ அணுவின் கூட்டிலும் அணுவின் பிரிப்பிலுமே பிரபஞ்ச பெருவெளியில் வெட்டவெளியில் நடைபெறுகிறது என்பது அறிவில் உணர்த்தும் செய்தி. இறையோ பிரபஞ்சமாக வெட்ட வெளியாக ஆதியாக அந்தமுமாக கொட்டும் மழையையும் ஆறையும் உணவையும் மண் சக்தியையும் (உழவையும்) ஒலியையும் ஒளியையும் நமக்கு படைக்கிறது. இவை அணுக்களின் கூட்டுப் பிரிப்பாகிய இயற்கை என்னும் இறைத்தன்மையே ஆகும் பரசிவ வெள்ளமயக்கிய இறையே நம்மைக் காக்கிறது... சக்தி தருகிறது என அறிவியல் உணர் அறிஞராகக் கொட்டும் முகிலணுக்களின் கூட்டையும் பிரிப்பையும் உணர்த்துகிறார் பாரதியார்

உருவமும் அருவமும்

தூல வணுக்களாய்ச் சூக்கு மமாய்ச சூக்குமத்திற்... **(5)**

விளக்கம்: கண்ணுக்குத் தெரிகின்ற பொருளாய் அதாவது உருவமாய், கண்ணுக்குத்தெரியாத அருவமாய், அந்தக் கண்ணுக்குத் தெரியாத சூட்சமத்திற்கு மிகவும் பொருந்தியதாய், அதன் தன்மை எல்லாம் பொருந்தியதாய் உள்ளவன் இறைவன். தூலம் கண்ணில் படுபவை. சூக்குமம் மறைபொருளாக இருப்பவை. ஆக கண்ணில் படுபவையாகவும் நுண்ணியதுமாவும் உயிர்களும் பொருள்களும் இயங்கி வருகிறது. இப் பிரபஞ்சத்தில் ஒன்றுமற்ற இருள்வழித் தன்மையில் உறைந்து நிற்பதாய் ஆழமாய் ஆழத்தின் ஆழமாய் அகண்ட வெளியாய் அண்டமாய் பேரண்டமாய் இருள் சூழ்ந்த வெளியான பிரபஞ்சம் கோடி கோடி ஜீவராசிகளைத் தன்னுள் கொண்டது என அறிவியல் கூறுகிறது. அறிவியல் சித்தரோ அணுவின் கூட்டத்தில் நுண்ணியதாய் தோற்றம் கொள்ளும் தூசுகளும் துகள்களும் சூழ இயங்கும் இப்பிரபஞ்சம் இறைத்தன்மையைக் கொண்ட உருவமாகவும், அருவமாகவும் இல்லாமலும் ஏதுமற்றதாகவும் நிறைந்து புரிதலுக்கு அப்பாற்பட்ட தூலமாகவும் சூக்குமமாகவும் நிற்கிறது எனப் புரிதலுக்கு உட்படுத்துகிறார் பாரதி.

மாற்றமே மாற்றத்தின் விதி

தன்மையொன் றிலாததுவாய்த் தானே ஒருபொருளாய்த் ...**(6)**

விளக்கம்: தனக்கென ஒரு நிரந்தரமான தன்மை ஒன்றினைக் கொள்ளாதவன். தானே ஒரு பொருளாய் இருப்பவன் அவன். பல குணங்களை உடையவனாய் இருப்பவன். பல பொருட்களாய் இருப்பவன் இறைவன். இன்று இருப்பது நாளை இல்லை. நாளை இருப்பது இன்று இருப்பதில்லை. மாற்றமே மாற்றத்தின் விதி என்று கூறப்படும் நிலையில் மலைகள் மடுக்களாகவும் கண்டங்கள் கடல்களாகவும் உருண்டு உருண்டு நெளிந்து வழுக்கிச் செல்லும் கல் கூழா ங்கல்லாக மாறுவதும் பிரபஞ்ச வழியில் நாளும் நாளும் பரிணாமப்பிடியில் பங்கு வகிக்கிறது. ஒரு தன்மை தன்மையற்றதாக மாறி மற்றொரு தன்மையாக வெளிப்படுகிறது. இப்பேரண்டப் பெருவழியில் இறை தனக்கென ஒரு நிரந்தரத் தன்மையைக் கொள்ளாமல் தானே அதுவாய் அதுவே தானாய் பொருளாய் குணமாய் மனமாய் மறைப்பொருளாய் வித்தாய் விருட்சமாய் தன்னைத்தானே மாற்றி அமைக்கும் குணம் கொண்டவனாக விளங்குகிறது என பாரதியார் நமக்கு விளக்குகிறார்.

எங்குமாய் எல்லாமுமாய்

எங்குமுளான் யாவும்வலான் யாவுமறி வானெனவே ... **(7)**

விளக்கம்: எல்லா இடத்திலும் இருப்பவன். எந்த ஒரு செயலையும் செய்ய வல்லவன். எல்லாவற்றையும் அறிந்துள்ளவன். இந்த உலகத்தில் உள்ள பல மதங்களும் இதனையே சொல்லுகின்றன. ஐம்பூதங்களும் இணைந்து கலந்து உருவான பிரபஞ்சத்தில் காற்றும் ஒளியும் எங்கும் நிரவி பரவி அனைத்திற்கும் மூலமாக உள்ளது. ஐம்பூதங்களும் நிரம்பி எல்லா இடங்களிலும் எல்லா நிலைகளிலும் கலந்து மறைந்து உறைந்து இதுவே அதுவாய் அதுவே இதுவாய் என நீக்கமற நிறைந்து கிடக்கிறது. எங்கெங்கு காணினும் சக்தியடா, ஏழு கடல் அவள் வண்ணமடா என ஞானத்தின் சக்தியைப் பேரண்ட சக்தியைப் பிரபஞ்ச சக்தியை எங்கெங்கும் எல்லாவிடத்திலும் நிறைத்துக் காணுகிறார் பாரதியார்.

காண் பொருளாய் காட்சியாய்

காண்பார்தங் காட்சியாய்க் காண்பாராய்க் காண்பொருளாய் ...**(9)**

விளக்கம்: காண்பவர்கள் காண்கின்ற காட்சியாய், காண்கின்றவர்களாய், அவர்கள் காணுகின்ற பொருளாய் சிறப்புடையவனாய் இருக்கின்ற அந்த இறைவனை எப்படி வகுத்துச் சொல்வது? ஐம்பூதங்கள் நாம் காணும் காட்சிப் பொருளாகி நாம் எண்ணியவாரும் எண்ணியவாங்கும் நம்மை வழி நடத்துகிறது. இயற்கையுமாய் இன்பமுமாய் அமுதமாய் பரசிவ வெளியான பிரபஞ்ச வழி நமக்கு அனைத்துமாய் இருப்பது போல காண்பவர்கள் காணும் காட்சியாகவும் காணும் பொருளாகவும் காணுகின்றவர்களாகவும் எல்லாமுமாகி வடிவமுமாகி பின்னை அணுக்கூட்டமாகி தன்னைத் தனதாக்கிக் கொண்ட இறைத்தன்மையை எவ்வாறு வரையறுப்பது வகுத்துச் சொல்வது என்று வகை காணாது தவிக்கிறார் பாரதியார்.

வேண்டியது வேண்டாதது

வேண்டுவ வெலாம் பெறுவார் வேண்டா ரெதனையுமற்…**(13)**

விளக்கம்: இறைவனை உணர்ந்தவர்கள் வேண்டியது, வேண்டாதது அனைத்தையும் பெறுவர். இவ்வுலகில் வாழும் மற்றையோர் அவரை ஈசர் எனப் புகழ்வர். உலகோர் வேண்டுவது போல பிரபஞ்சம் தன்னை படைத்தும் காத்தும் கொள்ளும். வேண்டாத அனைத்தையும் அழித்தும் மாற்றியும் கொள்ளுவது பிரபஞ்ச நியதி அதுபோல இறைத்தன்மையை, பரசிவத்தை உணர்ந்தவர்கள் தன் வேண்டுவதை மட்டுமல்லாமல் வேண்டாத தவத்தையும் பெறுவார்கள் . ஆக இறைத்தன்மையை சிக்கெனப் பற்றியவர்களுக்கு அனைத்தும் கைவரப்படும் என்றும் பரசிவப் பொருளைக் கண்டவர்கள் பெருவாழ்வு வாழ்வார்கள் என்றும் பாரதி கூறுகிறார்

ஈர்ப்பும் விலகலும்

ஒன்றுமே வேண்டா துலகனைத்தும் ஆடுவர்காண்;.. **(14)**

விளக்கம் – இப்பொருளுடன் (அதாவது இறைவனுடன்) எந்நாளும் காந்தம் போல இணைந்தவர் எல்லவற்றையும் துறந்து, இந்த உலகத்தையே ஆளுவர். துருவங்கள் எல்லாம் காந்த ஈர்ப்பின் காரணமாக உன்னுடன் ஒன்று இணைந்து உலகை ஆளுவது போலவும் கட்டி ஒரு சக்திக்குள் அடக்குவது போலவும் சக்தியின் மிகுதி காரணமாக அதற்குள் ஏற்படும் மாற்றங்களை மாற்றங்களின் மூலம் நடக்கும் விளைவுகளைப் போலவும் இப்பிரபஞ்சம் தன்னை மாற்றி அமைத்துக் கொண்டே இருக்கிறது. இறைவனுடன் என்றும் காந்தம் போல தன்னை இணைத்துப் பிணைத்து உருக் கொண்டவர்கள் உலகப்பற்றிலிருந்து தன்னை முழுமையாக விடுவித்துக் கொண்டு இறைத்தன்மையுடன் இணைந்து இரண்டு கலந்து இன்பம் எய்துவார்கள். அவ்வாறு இன்பம் எய்துபவர்கள் இப்பிரபஞ்ச பரவெளியில் தன்னுடன் இறையையும் இணைத்துக் கொள்கிறார்கள் என்று கூறுகிறார் பாரதி.

இவ்வாறாக வழிகள், மார்க்கங்கள் இது இறை.. இறை.. என்று சொல்வது எல்லாம் இயற்கைப் பேரறிவு . இந்த இயற்கைப் பேரறிவு நம்மைப் படைத்துக் , காத்து, அழித்து, புதுப்பித்து வெட்ட வெளி அண்டத்துடன் இணைந்து இருப்பது இறைத் தன்மையே என்பதை உணர வைக்கிறது. பிரபஞ்சம்.. அண்டம்.. பேரண்ட சக்தியானது சகல உயிரினங்களின் பரிணாமம் அனைத்துமே வெட்ட வெளியாக உள்ள பரசிவ வெளியில் ஊடாடி ஊராடி உயிர்ப்பித்து வந்தவை. உயிரற்ற உயிருள்ள .. அசையும் அசையா .. புலப்படும் புலப்படாத அனைத்து பொருள்களிலுமே ஒரே தன்மை . அதுவே இறைத்தன்மை. உலகை நீர் ஆளுவது போல தன்னுள் அடக்கித் தானாக உரு மாறுவது போல பரசிவ வெள்ளம் நம்மைப் படைத்து அழித்து காத்து புதுப்பித்து தன்மையமாகி தானாகி அமுத வெள்ளமாக ஆனந்தத்தில் நம்மை நீள வைக்கிறது. கவிஞர் தனது புனைவுத்தன்மையால் அனைத்து மக்களையும், அனைத்து உயிர்களையும் சமமாக நடத்துதல் 'இறைநிலை' என்றும் கூறி இறைத்தன்மையையும் இயற்கை சார்ந்த அறிவியலையும் அழகாக எடுத்தியம்புவதில் எல்லை காண்கிறார்.

துணை நின்ற நூல்கள்:

1. Balasubramanian Kvb Kamala Murali Nagalak Divakaran Nallaswamy Rajarathinam

2.https://pamarankaruthu.com/wpcontent/uploads/2022/12

3. https://www.tamilvu.org/slet/l9100/l9100pd1.jsp?bookid=145&pno=95

4. http://www.banukumar.in/ebooks/Arivaethan_Theivam.pdf

5. https://www.noolaham.net/project/47/4691/4691.pdf

93. நான் வியந்த பாரதி



சொர்ண தீபா வெள்ளைச்சாமி

திருவள்ளுவர் தமிழ்ச்சங்கத் தலைவர்
நியூசெர்சி, அமெரிக்கா

மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தமிழ் உலகிற்கு அளித்த பங்களிப்பு அளவிட முடியாதது. அவரது படைப்புகள் ஒரு பெரும் படைப்புலகமாகத் (படைப்புலகம்) திகழ்கின்றன.

அவரது கவிதைகளில் தேசப்பற்று, சுதந்திரக் கனவு, சமத்துவம், பெண்மையின் மேன்மை, குழந்தைச் சிநேகம், இயற்கை, அறிவியல் சிந்தனை, ஆன்மிகம் ஆகியவை எல்லாம் இடம் பெற்றுள்ளன. அவர் எழுதிய ஒவ்வொரு பாடலும் மனிதனை விழிப்புணர்வோடு வாழச் செய்யும் விதமாக இருக்கிறது.

பாரதியாரின் பாடல்கள் அடிமைத்தனத்தில் இருந்து விடுபட வேண்டும் என்ற தீவிர ஆசையை விதைத்தன. “சுதந்திரம்”, “சமத்துவம்”, “சுயமரியாதை” ஆகிய எண்ணங்களை மக்களிடையே பரப்பியது. மேலும், பெண்களை உயர்ந்த நிலைக்கு கொண்டு செல்ல வேண்டும் என்பதையும் குழந்தைகள் கல்வி பெற வேண்டும் என்பதையும் வலியுறுத்தினார்.

அவரது கவிதைகள் வெறும் இலக்கியப் பொக்கிஷமாக மட்டும் இல்லாமல், சமூக மாற்றத்துக்கான கருவியாகவும், மக்களின் இதயங்களில் தீ மூட்டும் ஊக்கமாகவும் விளங்குகின்றன.

பாரதியாரின் படைப்புலகம் தமிழின் பெருமை; அது ஒவ்வொருவரின் வாழ்வுக்கும் சுதந்திரம், துணிவு, முன்னேற்றம் ஆகியவற்றை விதைக்கும் உயிர்ப்புக் களஞ்சியம்.

பாரதியார் பெண்களுக்குச் சொல்ல வந்த கருத்து மிகப் பெரிய புரட்சிகரமானது. அவர் காலத்தில் பெண்கள் கல்வியிலிருந்து, சுதந்திரத்திலிருந்து, சமூக உரிமைகளிலிருந்து விலக்கப்பட்டிருந்தார்கள். இதற்கு எதிராகவே பாரதியார் வலுவான குரல் கொடுத்தார்.

பாரதியார் பெண்களுக்குச் சொல்ல வந்த முக்கியமான கருத்துக்கள்:

1. பெண்கள் கல்வி பெற வேண்டும்
   - “பெண் படிக்கக் கூடாது” என்ற பழமையான எண்ணத்தை முறியடித்து, பெண்களுக்கு கல்வி அவசியம் என்று வலியுறுத்தினார்.
   - கல்வியில்லாமல் சமூக முன்னேற்றமே முடியாது என்று கூறினார்.
2. சமத்துவம்
   - பெண்ணும் ஆணும் சமம், சம உரிமைகள் வேண்டும் என்றார்.
   - பெண்களை அடிமைபோல் நடத்தும் சமுதாயத்தை கடுமையாக எதிர்த்தார்.
3. சுயமரியாதை
   - பெண்கள் அடக்குமுறைக்கு ஆளாகாமல் தன்னம்பிக்கையோடு வாழ வேண்டும் என்று கூறினார்.
   - “பெண்கள் சுதந்திரம் பெறாமல் நாடு முன்னேற்றம் அடையாது” என்றார்.
4. பெண்களின் பலம்
   - பெண்களை அவர் “சக்தி”, “தெய்வம்”, “அன்னை” என உயர்த்திப் புகழ்ந்தார்.

- ஒரு பெண் நல்லவளாக இருந்தால் தான் குடும்பம், சமூகம், தேசம் எல்லாம் நன்றாக இருக்கும் எனச் சொன்னார்.

5. பெண்களின் பங்கு

- அவர்கள் சமையலறையில் மட்டுமல்ல, கல்வி, சமூக, அரசியல், வேலை வாய்ப்பு எல்லா துறைகளிலும் பங்குபெற வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார்.

பாரதியார் சொல்ல வந்தது – பெண்கள் கல்வி கற்று, சுதந்திரமாகவும், சமத்துவத்தோடும், தன்னம்பிக்கையோடும் வாழ வேண்டும்; அப்போதுதான் குடும்பமும் தேசமும் உயர்வு பெறும். “பெண்ணினப் பாடல்கள்” மற்றும் “குயில்பாட்டு” போன்ற படைப்புகளின் மூலம் பாரதியார், பெண்கள் கல்வி கற்று, சமத்துவம் பெற்று, தன்னம்பிக்கை உடையவர்களாக, சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதைக் கூறினார்.

பாரதியார் பெண்களைப் பற்றி எழுதிய முக்கியமான படைப்புகள்

1. “பெண்ணினப் பாடல்கள்”
   - இதில் பாரதியார் பெண்களின் மேன்மை, கல்வி, சமத்துவம், சுதந்திரம் போன்றவற்றை பாடியுள்ளார்.
   - பெண்கள் சமையலறையில் மட்டும் அல்லாது, உலகின் அனைத்து துறைகளிலும் பங்குபெற வேண்டும் என்பதே முக்கியக் கருத்து.
2. “குயில்பாட்டு”
   - குயிலின் உருவில் பெண்ணின் சுதந்திரக் குரலைக் காட்டினார்.
   - பெண்கள் பந்தங்களிலிருந்து விடுபட்டு சுதந்திரமாக வாழ வேண்டும் என்ற செய்தி இதில் உள்ளது.
3. “சகோதரி” (கவிதைத் தொகுப்புகள்)
   - பெண்கள் சகோதரியாக, தாயாக, துணைவியாக, சமூகத்தில் உயர்ந்த இடம் பெற வேண்டும் என்பதைக் கூறினார்.
4. சில “சமூகக் கட்டுரைகள்” (India, Vijaya, Balabharathi என்ற இதழ்களில் எழுதியவை)
   - இதில் பெண்கள் கல்வி, திருமண சுதந்திரம், விதவைகள் மறுமணம், பெண்களின் உரிமைகள் போன்ற சிந்தனைகளை வெளிப்படுத்தினார்.

94. பாரதியின் விநாயகர் நான்மணி மாலையும் பாரதியும்



முனைவர். கே இரா. கமலாமுருகன்
இணைப்பேராசிரியர்
உயர் தமிழாய்வு மையம் இராணிமேரி கல்லூரி, சென்னை

உலகில் புதுமைக் கவிஞனாய் தன்னை நிலைநிறுத்தி புத்தம் புதிய சிந்தனைகளையும் வழிமுறைகளையும் வேறெங்கும் காணவியலா சிறப்புடன் கூடிய செய்திகளையும் உலகினர் ஏற்றுப் போற்றும் வகையில் பல்வகையான பாடல்களைத் தந்து பாரில் புகழ் கொண்ட கவிஞன். அவரது சிறப்பான கவிதைகளில் விநாயகர் நான்மணி மாலையில் பாரதியினை அடையாளம் காணும் வகையில் அமைந்துள்ள சிந்தனைகளை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகின்றது.

விநாயகர் நான்மணி மாலை

மகாகவி பாரதி மிகச்சிறந்த பக்திமனம் உடையவராகத் திகழ்ந்துள்ளார். அதற்குக் காரணம் அவர் பிறந்து வளர்ந்த குலமாகவும் இருக்கலாம். அவ்வகையில் ஒரு கவிஞனாகத் தம்மை அடையாளப் படுத்திக் கொண்ட பல்வேறு நிலைகளில் பலவாறான தெய்வங்களைப் புகழ்ந்தும், வேண்டியும் பல பாடல்களைப் பாடியுள்ளார். அவற்றுள் ஒன்று நம்முடைய முழுமுதற் கடவுளாகப் போற்றப்படும் விநாயகரைத் துதித்து எழுதிய "விநாயகர் நான்மணி மாலை" ஆகும். இந்நூலின் சிறப்பு பல்வேறு தெய்வங்களைப் புகழ்ந்து போற்றி வணங்கி பாரதியார் பாடல்கள் இயற்றியிருந்தாலும் அவை ஒரு சில பக்கங்களில் அமைந்த தனிப்பாடல்களாக அமைந்துள்ளன. ஆனால் இந்நூல் மட்டுமே நான்மணிமாலை என்பதனை நூல் அமைப்புகளை ஒட்டிய வரையறைக்குரிய 40 பாடல்களுடன் அமைந்துள்ளது. அதிலும் பல்வேறு பாவகைகள் காரணமாகப் பாடல்களில் வேறுபாடு அமைந்துள்ளதையும் நாம் இங்கு காணமுடிகிறது. இந்நூல் அச்சில் 1928 இல் வெளிவந்தது. மேலும் இந்நூல் வெளிவந்த சூழலையும் இந்நூலின் நாயகனான விநாயகர் புதுவை மணக்குள விநாயகராக இருக்க வேண்டும் என்றும் சில சிந்தனைகள் உள்ளன. 3.8.1918 - இல் பாரதியார் தம்பி விசுநாத அய்யருக்கு எழுதிய மடல் ஒன்றில் "திரு. வீ.ராமஸ்வாமி அய்யங்கார் என் விநாயகர் ஸ்தோத்திரம் கவிதையினை அச்சு பதிப்பு செய்வதாக வாங்கிக்கொண்டு சென்றார். இதுவரை ஏதும் பதிவில்லை. இதனை வேகமாகச் செய்து புத்தகங்களை எனக்கு அனுப்பச் சொல்" என்று எழுதியுள்ளார். எனவே இந்த விநாயகர் ஸ்தோத்திரம் என்ற நூல் இந்த நான்மணி மாலையாக இருக்கும் என எண்ண இடமுண்டாகிறது. அவ்வாறே நூலினுள்ளே,

"மணக்குள விநாயகர் வான்மறைத் தலைவர்" (வி.நா.மா.8) என்றும், **"விண்டுரை செய்குவன் கேளாய் புதுவை விநாயகனே.."** (வி.நா.மா.30) என்றும் பலவாறு சுட்டுகின்றதனைக் காண முடிகின்றது. மேலும், **"வாழ்க புதுவை மணக்குளத்து"** (வி.நா.மா.35) என்றும் வாழ்த்துகின்றார். இவை அனைத்தும் பாரதி புதுவையில் தஞ்சமடைந்த காலத்தில் தனை ஈர்த்த புதுவை மணக்குள விநாயகனை முன்னிருத்தியே இந்நூல் பாடப்பட்டதனை சான்று பகர்கின்றன.

விநாயகர் நான்மணிமாலையும் பாரதியும்

பாரதியின் பாடல்கள் என்ற பெருமையினைக் கடந்து பாரதியின் இந்த விநாயகர் நான்மணி மாலை என்ற நூல் பாரதியின் அடிப்படை சிந்தனைகளான சமுதாய நோக்கினை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளமையினைக் காணமுடிகின்றது. சர்வசமய சமரச நோக்கம் பல இடங்களில் பகிரப்பட்டுள்ளது. எனவே தான் இந்நூலைப்பற்றி ம.பொ.சி அவர்கள் பாரதியாரின் பாதையிலே என்ற நூலினில் "இவர் சமரச விநாயகர், சர்வமத விநாயகர்! தேசிய விநாயகர்! ஆன்ம விடுதலைக்கேயன்றி தேச விடுதலைக்கும் வரங்கொடுக்கும் தேசபக்த விநாயகர்" என்று சுட்டிக் காட்டுகின்றார்.

ஒன்றானவன்

இதற்கான காரணங்களைத் தேடுகின்றபோது, பலவகை உருவங்களை உடையவர்களாய் கடவுளர் இருந்தாலும் ஆறுகள் பலவாயினும் கடல் ஒன்று என்னும் தத்துவத்தினை உணர்த்தும் வகையில், **"விநாயக தேவனாய், வேலுடைக் குஒனாய்.."** (வி.நா.மா.8) என்று தொடரும் பாடலடிகளில் "எல்லா மதமும் என் மதமே, எதுவும் எனக்குச் சம்மதமே" என்ற கவியரசரின் குரலையும் கேட்க முடிகிறது.

உழைப்பே கடவுள்

"செய்யும் தொழிலே தெய்வம்" என்பது நாம் கேட்டுப் பழகிய சொல்லாகும். அவ்வகையில் பாரதியார் விநாயகர் நான்மணி மாலையின் பாடல்களில் பல இடங்களில் உழைப்பே தெய்வம் என்றும், தெய்வம் எதனைத் தரவேண்டும்? எது தவம்? என்பதானப் பல செய்திகளைப் பதிவு செய்துள்ளார். **"செய்யும் தொழிலே தெய்வம்காண்"** (வி.நா.மா.3) என்று கூறுவதுடன் **"நமக்குத் தொழில் கவிதை நாட்டிற்கு உழைத்தல், இமைப்பொழுதும் சோராதிருத்தல்"** என்ற பாரதியின் தாரக மந்திரம் உழைப்பு.

பக்தி செய்யும்முறை

"உள்ளத்தில் உள்ளானடி அதனை நீ உணர வேண்டுமடி" என்று திரு.வி.காவும், **"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்"** என்று திருமூலரும் எடுத்துரைத்திடினும் நம் பாரதநாட்டில் குறிப்பாகத் தமிழகத்தில் பெரும்பாலும் உருவ வழிபாடுகளே உள்ளன. எனினும் வழிபாட்டு முறைகளில் எதுபக்தி? எவ்வாறு வழிபட வேண்டும்? எதனை வேண்ட வேண்டும் என்ற பல சிந்தனைகள் உள்ளன. அவ்வகையில் பாரதியார் தம் விநாயகர் நான்மணி மாலையில் பல விளக்கங்களை எடுத்துரைக்கின்றார். **"கவலையற்று இருத்தலே முக்தி"** (வி.நா.மா.36) என்றும், **"அன்பிற் சிறந்த தவமில்லை"** (வி.நா.மா.37) என்றும், **"அகண்ட வெளிக்கண் அன்பினையே.."** (வி.நா.மா.36) என்றும் எடுத்துரைப்பதோடு இயற்கையேத் தெய்வம் என்ற தொல் தமிழர் சூழலையும் மறவாது, **"தாயாய்த் தந்தையாய் சக்தியும் சிவனுமாய்.."** (வி.நா.மா.20) என்ற பாடலடிகளில் எல்லாவற்றிலும் நிறைந்த இறைவன் இயற்கையின் வடிவமாய்த் திகழும் இறைவன் என்று கூறுவதன் மூலம் சமரச சன்மார்க்க நெறி ஓங்கச் செய்கின்றது. எவ்வாறு சக்தியினை அடைய இயலும் எது வித்தாகும் என்று கூறும்போதும் உழைப்பே பக்தி, முக்தியாகும் என்பதனை இவற்றின் வித்தாகும் என்று கூறுவதனை, **"பக்தி யுடையார் காரியத்திற்.."** (வி.நா.மா.27) என்று வேண்டுகிறார்.

தன்னையே உணர்தலும் உணர்த்தலும்

பாரதியின் விநாயகர் நான்மணி மாலையில் பல பாரதியின் தன்னை உணர்ந்த ஞானத் தெளிவினையும் தான் விரும்பிய சமுதாயப் போக்கினையும் உயர்த்தும் வகையில் வெளிப்படுகின்றன. பாரதி எல்லா உயிர்களையும் சமமாகக் கருதி நேசிக்க வேண்டும் என்பதனை வள்ளலாரின், **"எத்துணையும் போத முறாது"** என்பதனை, **"மண்மீதுள்ள மக்கள் பறவைகள்.."** (வி.நா.மா.32) என்றும், **"அன்பிற் சிறந்த தவமில்லை"** (வி.நா.மா.37) என்றும், **"துயிலாது இங்கு நிச்சலும் வாழ்ந்து நிலைபெற்று ஓங்கலாம்.."** (வி.நா.மா.4) என்றும், "**கடமையாவன தன்னைக்கட்டுதல்..**" (வி.நா.மா.8) என்றும், **"எனக்கு வேண்டும் வரங்களை.."** (வி.நா.மா.7) என்றும் வேண்டுகிறார். எல்லோரும் வேண்டுவதும் இதைத்தானே. மேலும் பாரதி தான் அடைந்த துயர நிலையினைக் கடந்த மனநிலையான, **"அச்சமில்லை அமுங்குத லில்லை.."** (வி.நா.மா.24) என்ற திட மனநிலையினை யாவரும் பெற உணர்த்துகின்றார்.

நிறைவுரை

பாரதி சொல் அல்ல, பெயர் அல்ல, அவர் வாழ்வின் வழிகாட்டி. புதுமையின் முன்னோடி - அவரது நான்மணிமாலை விநாயகரை முன்னிருத்திப் பாடப்பட்டிருப்பினும் அவரது வாழ்வைப் பிரதிபலிக்கும் செய்திகளும், நமக்கு வழிகாட்டும் செயல்களும் சமதர்ம சமுதாயத்திற்கான நெறிமுறைகளும் இணைந்த பொதுப் பெட்டகமாகவேத் திகழ்கிறது. கற்போம்! கற்பிப்போம்!

95. பாரதியாரின் குயில் பாட்டில் நிலையாமை



அர.கலைவாணி
முதுகலைத் தமிழாசிரியர்
அவிலா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி
வெங்கிட்டாபுரம், கோயம்புத்தூர்

முன்னுரை

முண்டாசுக் கவியின் முத்துக்களில் ஒன்று குயில்பாட்டு. இது தோன்றிய விதமே வித்தியாசமானது, வற்றாத நதி போல இலக்கிய இன்பம் தரும் படைப்பு. கவிஞருக்கு இதனைப் படைக்கும் போது கற்பனைத் திறம் மடை திறந்த வெள்ளம் போல பாய்கிறது. குயில்பாட்டில் நிலையாமையை உணர்த்தும் பகுதிகளும் இடம்பெற்றுள்ளன.

குயில் பாட்டின் கதைச் சுருக்கம்

புதுவை நகரின் மேற்கில் ஒரு மாஞ்சோலை. அங்கு வேடர்வராத ஒரு நாள் இதமான காலைப் பொழுதில் விந்தைக் குரலொன்று, அனைத்து உயிர்களையும் மயக்கும் குரலில் இனிமையாகப் பாடியது. காதல் காதல் காதல், காதல் போயின் காதல் போயின், சாதல் சாதல் சாதல் இதைக் கவிஞன் கேட்கிறான். குயிலை நோக்கி உன் துயரம் யாது? என வினவுகிறான். குயில் கவிஞரிடம், நான் மனிதர்களின் மொழியெல்லாம் அறியும் பேறு பெற்றுள்ளேன். நும் பாட்டில் நெஞ்சைப் பறிகொடுத்தேன். மேலும் "காதலை வேண்டிக் கரைகின்றேன், இல்லை; சாதலை வேண்டித் தவிக்கிறேன்" யெனில் என்றது அந்தப் பெண்குயில்.

கவிஞருக்கும் அந்தப் பெண் குயிலின் மீது மிகுந்த காதல் பிறந்த அந்த நேரத்தில் மற்ற பறவைகளெல்லாம் சோலைக்கு வந்துவிட்டன.. காதலுக்குரிய தனிமை இல்லாததால் கவிஞனைக் குயில் நான்காம் நாள் மறவாமல் வரக்கூறி மறைந்து விடுகிறது. காதலியைப் பிரிந்த துயரினால் கவிஞன் உறங்கவில்லை. மறுநாளே சோலைக்குச் செல்கிறார். அங்கு குயில் ஒரு குரங்குடன் காதல் மொழி பேசிக் கொண்டிருந்தது. காதல், காதல், காதல்-----" என்று பாடிக் குரங்கைப் பாராட்டிக் கொண்டிருந்தது. இதைக் கண்ட கவிஞர் சினம் மிகக் கொண்டு வாளை உருவி குரங்கின் மீது வீச, குரங்கு தாவிக் குதித்து ஓடியது. பெண் குயில் மற்ற பறவைகளுடன் பறந்து சென்றது. மூன்றாம் நாள் கவிஞர் சோலைக்குச் செல்ல, அங்கு அந்தப் பெண்குயில் கிழக்காளை மாடு ஒன்றோடு அதே காதல் காதல், காதல் என்று காதல் மொழி பேசிக் கொண்டிருந்து. கவிஞனுக்குச் சினத்தீ மூள வாளை எடுத்துக் காளை மீது வீச காளை ஓட குயிலும் மறைந்தது. நான்காம் நாள் சோலையில் பெண் குயிலைக் கண்ட கவிஞர் வஞ்சகப் பொய்மையைக் கூறுகிறார். குயில் கண்ணீர் சிந்தி தன் முற்பிறவிக் கதையைக் கூறுகிறது.

முற்பிறவிக் கதை

சேர நாட்டைச் சேர்ந்த சின்னக் குயிலி தன் மாமன் மகனான மாடனையும், தனக்கு நிச்சயிக்கப்பட்ட நெட்டைக் குரங்கன் என்பவனையும் புறக்கணித்து, சேர இளவரசன் பால் மைய கொள்கிறாள். மாடனும் குரங்கனும் சேர இளவரசனை வெட்டி வீழ்த்துகின்றனர். இளவரசனோ மறுபிறப்பில் குயிலியிடம் சந்திப்பதாகக் கூறிக் கண் மூடுகிறான். மறுபிறவியிலும் சேர முடியாது. இடையூறு ஏற்படுகிறது. இந்தக் கதையைப் பொதிகை மலைமுனிவர் குயிலிடம் கூறிவிட்டு இந்தச் சாபம் தொண்டை நாட்டு மாஞ்சோலையில் தீரும் என்று கூறுகிறார். கவிஞர் குயிலின் பழம் பிறப்பையும் மாடன், குரங்கனின் மாயச் செயல்களையும் உணர்ந்து தெளிகிறார். குயிலை முத்தமிடுகின்றார். குயில் மறைந்து அங்கே கொள்ளை வனப்புடைய பெண் நிற்கிறாள். அப்பெண்ணைத் தழுவி முத்தமிட்டு மோகப் பெருமயக்கில் ஆழ்ந்திருக்கும் போது பெண், சோலை எல்லாம் மறைந்து விட கவிஞர் எழுதுகோல், சுவடி, பத்திரிகை, பழம்பாய் ஆகியவை சூழ்ந்த தன் வீட்டில் இருப்பதைக் கண்டார். குயிலின் கதை முடிந்த பிறகு குயில் பாட்டின் இறுதியில் கவிஞர் மூன்றடிகளில் ஒரு வினாவை எழுப்புகின்றார். ஆன்ற தமிழ்ப் புலவீர்! கற்பனையே ஆனாலும்.. குயில் பாட்டு இறுதி அடிகள் என்று கற்போரிடமே விட்டுவிட்டார் ஆசிரியர்.

நிலையாமை பற்றிய குறிப்புகள்

இது ஒரு கனவு மாயை என்று அடிக்கடி ஆசிரியர் குறிப்பிடுகிறார். உலக வாழ்க்கை நிலையற்றது என்பதைக் குறிக்கிறது. இவ்வுலகில் நாம் அனுபவிக்கும் இன்பங்கள், செல்வங்கள், உறவுகள் என அனைத்துமே நிலையானவை அல்ல. அனைத்துமே மாறக்கூடியது. நிலையாமை என்பது எதுவும் நிலையில்லாத தன்மை அல்லது உறுதியற்ற தன்மையைக் குறிக்கிறின்றது.

வேதாந்தக் குறியீடு

குயில் - இயற்கை; குரங்கு, மாடு – மாயை; வாள் - அறிவு (ஞானம்); சைவ சித்தாந்தம்; காதல் - மாயை; மாடன் - ஆணவம்; குரங்கு – கன்மம்; குயில்- பசு; இளவரசன் - பதி (பாரதியார் வரலாறும் கவிதையும் பக்-110) என்பதன் மூலம் நிலையாமையை மையப்படுத்தியே ஆசிரியர் கதாப்பாத்திரங்களை உருவகப்படுத்தியிருக்கிறார்.

இலக்கியங்களில் நிலையாமை:

அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை (குறள் 36)

கடைசிக் காலத்தில் அறம் செய்வோம் என்று இருக்காமல் நாள்தோறும் அறம் செய்தல் வேண்டும். அவ்வாறு செய்தல் இறக்குங் காலத்தில், உயிருக்கு அழியாத துணையாக இருக்கும்.

நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமைஉடைத்திவ்வுலகு(குறள் 336)

நேற்று இருந்தவன் ஒருவன் இன்று இல்லாமல் இறந்து போனான் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம் (மு.வ.உரை). இதைவிட நிலையாமையை யாராலும் கூற முடியாது

முடிவுரை

நிலையாமையின் அடிப்படைக் கருத்தாக அறம் விரைத்து இயற்றப்பட வேண்டும். நிலையாமையைப் பற்றிய அறிவு ஒருவனுக்கு இருந்தால் அவனை ஈகை குணம் கொண்டவனாக மாற்றுவதும் அறவழிப்படுத்தலும் எளிதாகும். செல்வம், அழகு, இளமை, உறவுகள் என்ற உலகப் பொருள்களின் மீதுள்ள பற்று நிலையற்றது என்பதையும் உண்மையான இன்பம் இறைவனடியை விடாமல் பற்றும் போதே கிடைக்கும் என்பதையும் இதன் மூலம் அறியமுடிகிறது.

துணை நூற்பட்டியல்

1. பாரதியார் கவிதைகள்.திருமகள் நிலையம் 2021
2. பாரதியார் வரலாறும் கவிதையும்-ப.மீ.சுந்தரம்
ஓரியன்ட் லாங்மன்ஸ் லிமிடெட் 1954
3. பாரதியார் பெண்மணியம் - கவிஞர் மணிமொழி.சுகமதி பிரசுரம் 1999

96. பாரதியின் பக்திப் பாடல்களும் பெண்ணியமும்



ர.சத்தியபிரபாதேவி

பட்டதாரி ஆசிரியை
தொ. ஊ.ஒ .ந.நி .பள்ளி
ஆறுமுகக்கவுண்டனூர்
கோவை

முன்னுரை

பெண்கள் அவர்தம் வீட்டிற்கு வேர் போன்றவர்கள்.ஆனால் அவர்களுக்கு ஏற்படும் இன்னல்களை இன்றளவும் தடுக்கப் போராடிக்கொண்டிருக்கிறோம் . மிகவும் பிற்போக்கு சிந்தனை நிறைந்த பழையகாலத்தில் பெண்களின் நிலை மிகவும் பரிதாபத்திற்குரியதாக இருந்தது . அந்த நிலையை மாற்றப் போராடிய விடுதலை வீரர்களில் பாரதியாரின் பங்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. பெண்தெய்வத்தை சக்தியாக உருவகப்படுத்தி பெண்களுக்குப் பெரும் நம்பிக்கையைக் கொடுத்தார். அவரின் பக்திப் பாடல்களில் பெண்ணியம் எவ்வாறு பேசப்பட்டுள்ளது என்பதை அறிந்துக்கொள்ளலாம்.

பாரதியும் பக்தியும்

காக்கைச் சிறகினிலே நந்த லாலா ! நின்றன்
கரியநிறந் தோன்று தையே , நந்த லாலா !

இப்பாடல் எங்கும் எதிலும் இறைவன் நிறைந்திருக்கிறான் என்பதை விளக்கும் விதமாக அமைந்த பாடல். சாமானியனும் புரிந்துகொள்ளும் வகையில் எளிய நடையில் அமைந்துள்ளது. .பாரதியார் பக்திப் பாடல்கள், எளிமையான நடையிலும், ஆழ்ந்த கருத்தோடும் அமைந்திருக்கும்.பக்திப் பாடல்கள் அவரது கவிதைகளில் ஒரு முக்கியப் பகுதியாகும். அவை இறைவனைப் போற்றியும், அவனது அருளை வேண்டியும் பாடப்பட்டவை. அவற்றில், கண்ணன் மீது பாடப்பட்ட பாடல்கள் மிகவும் பிரபலமானவை. பாரதியார் பக்திப் பாடல்கள், எளிமையான நடையிலும், ஆழ்ந்த கருத்தோடும் அமைந்திருக்கும். பாரதியாரின் பக்திப் பாடல்களில், கண்ணன் பாட்டு, விநாயகர் நான்மணி மாலை, தோத்திரப் பாடல்கள் போன்றவை குறிப்பிடத்தக்கவை.

பாரதியும் கண்ணனும்

கண்ணன் பாட்டில், கண்ணனைக் குழந்தையாகவும், நண்பனாகவும், காதலனாகவும், தெய்வமாகவும் பாவித்துப் பாரதியார் பாடியுள்ளார். கண்ணன் மீதான பக்தி, பாசம், காதல் ஆகிய உணர்ச்சிகளை இந்தப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. நமது ராமாயணம், மகாபாரதம் என்ற இருபெரும் இதிகாசங்களில் போற்றப்படும் கடவுளர் இருவர். ஒருவர் ராமர், இன்னொருவர் கிருஷ்ணர். ராமனையோ கண்ணனையோ இருவரில் யாரை வேண்டுமானாலும் பாரதி போற்றலாம். கொண்டாடலாம். பாரதியின் மனம் ராமனை விடவும் கூடுதலாகக் கண்ணன்பால்
ஈர்ப்புக் கொண்டது.அதற்கு இரண்டு காரணங்கள்உண்டு என்கிறார்கள். ஒன்று பாரதி தேச விடுதலையை விரும்பிய கவி. அவரே சுதந்திரத் தியாகி. தன் நாட்டுக்கு விடுதலை வேண்டும் என விரும்பிய பாரதியைப் பாண்டவர்களுக்குச் சொந்தமான நாட்டை அவர்களுடன் இணைந்து போரிட்டு அவர்களுக்கு வாங்கிக் கொடுத்த கண்ணனே கவர்ந்தான். எனவே தான் பாரதி, ராமன் பாட்டு எழுதாமல் கண்ணன் பாட்டு எழுதினார். இசை நாட்டம் கொண்ட அவரை ராமன் கவராமல், கண்ணன் கவர்ந்ததில் வியப்பில்லையே? கண்ணன் கையில்தானே புல்லாங்குழல் இருக்கிறது?

புல்லாங்குழல் கொண்டு வருவான் அமுது - எனப் பாடி மகிழ்ந்தவர் அல்லவா பாரதி?

பாரதியின் பக்தியும் பெண்ணியமும்

எண்ணு மெண்ணங்கள் யாவினும் வெற்றி
எங்கும் வெற்றி இதனினும் வெற்றி

இக்கவிதையில் தனது வெற்றியை நல்கியவள் காளி எனவும் அவளைத் தாயாக உருவகப்படுத்திப் பாடியுள்ளார் .இவர் தனது பக்திப் பாடல்களில் சக்தி என்ற வார்த்தையில் சக்தீ என்ற உச்சரிப்பைப் பயன்படுத்தி சக்தி என்பவள் பெண் என்றும் அவள் நெருப்பைப் போன்றவள் ,அவள் தீயவற்றை அழிக்கும் தன்மை கொண்டவள் என்றும் பெண்மையைப் போற்றும் வகையில் பாடியுள்ளார் மகாகவி பாரதியாரின் பராசக்தி பாடல்கள், பெண் தெய்வ வழிபாட்டின் ஒரு பகுதியாகும். பாரதியார் சக்தி, காளி, தேச முத்துமாரி, கோமதி, கலைமகள், திருமகள் போன்ற பல தெய்வ வடிவங்களைப் போற்றியுள்ளார். அவர் பராசக்தியை வீரமும், அழிக்கும் திறனும் கொண்ட, சிவபெருமானுக்கு இணையான சக்தியாகப் பாடியுள்ளார். இப்பாடல்கள், பராசக்தியைப் போற்றி வணங்கும் ஒரு பெண்ணியக் குரலாகவும் அமைந்துள்ளன, மேலும் பெண் விடுதலை, தேச விடுதலை, மற்றும் சமூக சீர்திருத்தம் போன்ற கருத்துக்களையும் உணர்த்துகின்றன.

பராசக்தி பாடல்களின் மையக்கருத்துக்கள்

பாரதியார், பராசக்தியை ஆன்மிக சக்தியாகவும், பெண்மையின் வடிவமாகவும் கண்டார். பெண் தெய்வம், அன்பு, தியாகம், வீரம், மற்றும் தாய்மை போன்ற பல்வேறு பண்புகளின் அடையாளமாகப் பார்க்கப்பட்டது.

பெண் விடுதலை

பராசக்தி பாடல்கள், பெண்களின் ஆற்றல், சக்தி, மற்றும் உரிமைகளை வலியுறுத்துகின்றன. பெண் விடுதலை, சமூகம், மற்றும் குடும்ப வாழ்க்கையில் பெண்களின் பங்கு ஆகியவற்றை அவர் போற்றுகிறார்.

தேசபக்தி மற்றும் விடுதலைப் பாடல்களிலும் பெண்களுக்கு முக்கியத்துவம்

பாரதியாரின் பராசக்திப் பாடல்களில், தேசபக்தியும், தேசிய உணர்வும் இணைந்தன. பராசக்தி, தாய் நாட்டின் அடையாளமாகவும், தேச விடுதலையின் சின்னமாகவும் குறிப்பிடப்படுகிறது. இதன் மூலம் பெண்களுக்கு அவர் கொடுத்த முக்கியத்துவம் வெளிப்படுகிறது.

சில முக்கிய பராசக்தி பாடல்கள்

சுட்டும் விழிச் சுடர் தான்:

இந்த பாடல், பராசக்தியின் வீரத்தைப் போற்றி, தேசத்தின் வலிமையையும், எதிர்காலத்தையும் குறிக்கிறது. இதில், பாரதியார் பராசக்தியை தாய்நாட்டின் சக்தியாகவும், மக்களை வழிநடத்தும் சக்தியாகவும் சித்தரிக்கிறார்.

காளி: யாதுமாகி நின்றாய் - காளி ! எங்கும் நீ நிறைந்தாய் ,

தீது நன்மை யெல்லாம் - காளி ! தெய்வ லீலை யன்றோ?

காளி வடிவில் பராசக்தியின் ஆற்றலை விளக்கும் பாடல் இது. அநீதியை அழித்து, நீதி மற்றும் நல்லதை நிலைநாட்டும் சக்தியாகக் காளி குறிப்பிடப்படுகிறார்.

சக்தி திருப்புகழ்

சக்தீசக்தீ சக்தீ சக்தீ சக்தீ சக்தீ என்றோது;
சக்திசக்தி சக்தீ என்பார் -சாகர் என்றே நின்றோது ,

சக்தி திருப்புகழ் பாடல் பராசக்தியின் பெருமைகளை, பக்தியை வெளிப்படுத்தும் வகையில் பாடல் வடிவத்தில் விவரிக்கிறது. இது பராசக்தியை வணங்கும் ஒரு பக்தனின் இதயத்தை பிரதிபலிக்கிறது. இத்தகைய பாடல்கள் மூலம், பாரதியார், பராசக்தியின் மூலம், மக்களின் மன உறுதியை வளர்த்து, பெண்களின் உரிமைகளை மீட்டெடுக்க, தேசவிடுதலையைத் தூண்ட, மற்றும் ஆன்மிக மேம்பாட்டை அடைய வலியுறுத்தினார்

ஆன்மிகத்தில் பகுத்தறிவு

மகாகவி பாரதியார், சமூகம் சார்ந்த அவரின் பல்வேறு உயர்ந்த கோட்பாடுகளுக்காக எல்லோராலும் கொண்டாடப்படுகிறார். அவரின் அத்தனை கோட்பாடுகளுக்கும் அடிநாதமாக இருந்தது அவரது ஆன்மிகம்தான். சரியான ஆன்மிகம் எது என்பதைச் சிந்தித்து தம் மனத்தில் உறுதி செய்துகொண்டு அதன்வழி வாழ்ந்தவர் அவர். ரஷ்யப் புரட்சியைப் பற்றிக் கவிதை புனைந்தபோது கூட `ஆகா என்றெழுந்தது பார் யுகப்புரட்சி` என வியந்ததோடு, அந்தப் புரட்சிக்குக் காரணம் `மாகாளி பராசக்தி அங்கே கடைக்கண் வைத்ததுதான்` என்கிறார்.

நமது ஆன்மிகத்தில் காலப்போக்கில் சிற்சில கசடுகள் சேர்ந்தன. தூய ஆன்மிகத்தில் இல்லாத பொய்யான கசடுகள் அவை. அனைத்து உயிர்களும் பிரம்மத்தின் வடிவமே எனக் கண்ட மிக உயர்ந்த வேத நெறி, நடைமுறையில் உயர்வு தாழ்வு கற்பிக்கும் ஜாதி நெறியாகக் கீழிறங்கியபோது எழுந்ததுதான் தீண்டாமை என்ற கொடுமை. . நம்மிடையே நேர்ந்த இன்னொரு தகாத போக்கு, பெண்கல்வி மறுப்பு. கலைவாணி என்ற பெண் தெய்வத்தைக் கல்விக் கடவுளாக்கிக் கும்பிடுவது நம் ஆன்மிகம். பெண்ணைக் கல்விக் கடவுளாக்கிய நாம் பெண்ணுக்குக் கல்வியை மறுக்கலாமா? வேத காலத்திலும் சங்க காலத்திலும் பெண்கள் கல்வியில் உயர்ந்து விளங்கியதை வரலாறு பேசுகிறது. ஆனால் பிற்பட்ட காலங்களில் பெண்ணுக்குக் கல்வி உரிமை மறுக்கப்பட்டது. நியாயமற்ற இந்தச் செயலைக் கண்டித்தது பாரதியின் கவிமனம்.

கண்கள் இரண்டினில் ஒன்றைக் குத்திக் - எனக் கவிதையில் முழங்கினார் அவர். மாபெரும் ஆன்மிகவாதியும் விவேகானந்தரின் சிஷ்யையுமான சகோதரி நிவேதிதையை அவர் சந்தித்தபின், அவரது பெண்ணியச் சிந்தனைகள் உத்வேகம் கொண்டன. `மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம்' என எழுதியது அவரது பேனா. அரவிந்தரும் பாரதியும், வ.வே.சு. ஐயரும், அமுதன் என்ற அடியவரும் இணைந்து ஆன்மிகச் சாதனைகளைப் பழகினார்கள். பாரதிக்கு ஆன்மிகச் சீடர்கள் இருந்தார்கள். பாரதி குண்டலினி யோகத்தில் தேர்ச்சி பெற்றிருந்தார். பாரதி ஆன்மிகம், இலக்கியம் இரண்டிலும் நாட்டம் கொண்டிருந்தார். பாரதி தமிழ் இலக்கியவாதியாகவும் விளங்கினார். பாரதியைப் பெரிதும் இலக்கியவாதியாக மட்டுமே பலரும் நினைக்கிறார்கள். ஆனால் ஸ்ரீஅரவிந்தருக்கு இணையான ஆன்மிகவாதி மகாகவி பாரதி என்பதை பாரதியின் வாழ்க்கை நிகழ்வுகளும் அவரது கவிதைகளும் நமக்கு உணர்த்துகின்றன. பாரதியின் ஆன்மிகக் கோட்பாடு மத நல்லிணக்கத்தோடு கூடியது. `ஆத்திசூடி இளம்பிறை அணிந்து' என்ற பாடலில்,

'மகமது நபிக்கு மறையருள் புரிந்தோன்
ஏசுவின் தந்தை எனப்பல மதத்தினர்
உருவத்தாலே உணர்ந்துணராது
பலவகையாகப் பரவிடு பரம்பொருள் ஒன்றே'

என அவர் தெளிவுபட அறிவிப்பதைக் காணலாம். மகாகவி பாரதியார், சமூகம் சார்ந்த அவரின் பல்வேறு உயர்ந்த கோட்பாடுகளுக்காக எல்லோராலும் கொண்டாடப்படுகிறார். அவரின் அத்தனை கோட்பாடுகளுக்கும் அடிநாதமாக இருந்தது அவரது ஆன்மிகம்தான். சரியான

ஆன்மிகம் எது என்பதைச் சிந்தித்து தம் மனத்தில் உறுதி செய்துகொண்டு அதன்வழி வாழ்ந்தவர் அவர். மகாகவி பாரதி, ஆழ்வார்களுக்கு இணையான, வணங்கத் தக்க ஆன்மிகவாதி என்பதை நமக்குப் புலப்படுத்திக் கொண்டிருக்கிறது, சென்னை மத்திய கைலாஸ் ஆலயத்தில் ஆராதிக்கப்படும் அவரது சிலை.

முடிவுரை

மகாகவி பாரதி ஆன்மிகவாதியே ஆயினும், பழையது என்ற ஒரே காரணத்திற்காக எதையும் போற்றாமல், ஒவ்வொன்றிலும் தம் ஞான ஒளியைப் பாய்ச்சி, எதுசரி எது தவறு என்பதைக் கண்டுணர்ந்து எழுதினார். நல்லதோர் வீணைசெய்தே - இப்பாடலில் அவரது ஆன்மிகம் கலந்த ஞானம் நன்கு வெளிப்படுகிறது. அதனால்தான் அவர் கடைப்பிடித்த ஆன்மிக நெறி இன்றளவும் போற்றத் தக்கதாகவும் ஏற்கத் தக்கதாகவும் இருக்கிறது. பாட்டுக்கொரு புலவன் பாரதியாம், அவரின் பாடல்கள் பேசும் பெண்ணியத்தை பின்பற்றி நடப்போம் .பெண்ணியம் காப்போம்.

துணைநூற்பட்டியல் :

* பாரதியார் கவிதைகள்

97. பாரதியின் ஆன்மிகச் சிந்தனை



செல்வி. இலக்கியவாணி நாகராஜன்
உதவிப் பேராசிரியர்
ஸ்ரீ இராமலிங்க சௌடாம்பிகை கல்லூரி
கோவை

இயங்குகின்ற ஆற்றலைக் கொண்டது உலகம். அது தானாகவே இயங்குகின்றதா? இயக்கப்படுகின்றதா? என்பதற்குரிய சிந்தனை தொடர்ந்து வருகின்ற ஒரு ஐயப்பாட்டிற்குரிய வினாவாகவே இன்று வரை நிலவி வருகிறது. ஐம்பூதங்களால் சூழப்பட்ட இந்த உலகம் அறிவியலால் இயங்குகிறதா இறையாற்றலால் இயங்குகிறதா என்ற கருத்துக்கள் தொடர்ந்து வருகின்றன. பல்வேறு பெயர்களிலும் உருவங்களிலும் இறையாற்றல் மக்களிடையே வலியுறுத்தப்பட்டும் வருகிறது. சமயமாக, மதமாக, குலமாக இறைப் பற்றிய சிந்தனைகள் பல முரண்பாடுகளை சமூகத்தில் ஏற்படுத்தி வருகிறது. இந்த இடர்பாடுகளுக்குப் பாரதி என்ற கவிஞனும் விதிவிலக்கல்ல. தன்னால் இயன்றவரை இறைச் சிந்தனையைப்பற்றிய தெளிவைத் தனது மனதோடு விவாதித்த செய்திகளைத் தனது எழுத்துக்களின் வாயிலாகப் பதிவிட்டுள்ளார்.இந்தப் பதிவுகள் நமக்குள் இருக்கும் ஐயங்களுக்கும் தீர்வளித்து நமக்குள் ஆன்மிகச் சிந்தனையை உருவாக்கும் என்ற நோக்கத்தைக் கொண்டது இக்கட்டுரை.

பரம்பொருள் ஒன்றே

ஆன்மிகத்தைப் போற்றும் தாயுமானவர் அங்கிங் எண்ணாதபடி எங்கும் பிரகாசமாய் ஆனந்தப் பூர்த்தியாகி அருளோடு நிறைந்தது என்றும் பார்க்கும் இடம் எங்கும் ஒரு நீக்கமற நிறைகின்ற பரிபூரண ஆனந்தம் என்றும் பரம்பொருளைப் பேசுகிறார். பல்வேறு வடிவமைத்து வழங்கினாலும் பல்வேறு மதங்கள் பல்வேறு பெயரிட்டு அழைத்தாலும் எந்த மார்க்கத்தைப் பின்பற்றினாலும் நாம் கடைசியில் ஒன்றை உணர்ந்து கொள்ள வேண்டும். நாம் அடையப் போகின்ற ஒன்று எல்லையற்ற பரம்பொருளைத்தான் என்ற சிந்தனை நமது பாரதியிடம் இருந்ததை "ஒன்று பரம்பொருள் நாமதன் மக்கள் " என்று அவர் வலியுறுத்துவதிலிருந்து அறியலாம்.

தன்னுள் கடவுளைத் தேடுதல்

எங்கும் நிறைந்துள்ள பரம்பொருளைத் தன்னுள் தேடுவது ஆன்மிகமாகும் . உலகில் உள்ள அனைத்து உயிர்களிலும் கடவுள் உண்டு என்பதை நாம் ஆன்மாவால் அறிந்து கொண்டு நம்முள்ளும் இறைவன் இருக்கிறார் என்பதை அறிவதே ஆன்மிகம் ஆகும். திருமூலர் இதனையே,

"தன்னை அறியத் தனக்கொரு கேடில்லை
தன்னை அறியாமல் தானே கெடுகின்றான்
தன்னை அறியும் அறிவை அறிந்தபின்
தன்னையே அர்ச்சிக்கத் தானிருந் தானே"

(திரு.355)

என்கிறார். பாரதியும் எங்கும் நிறைந்த பரம்பொருள் தன் நெஞ்சில் இருந்து தன்னை வழிப்படுத்துவதாகக் கூறுகிறார் "தெய்வம் நீ என உணர்" என்கிறார்.

பாரதியின் ஆன்மிகப் பயணம்

"உள்ளமே பெருங்கோவில் ஊனுடம்பே ஆலயம்" என்ற திருமூலரின் வாக்கினைப் போல, 1906 ஆம் ஆண்டு செப்டம்பர் 17ஆம் தேதி 'சுதேசமித்திரனில் வெளிவந்த 'யான்' என்ற கவிதையில் இவரது ஆன்மிகப் பயணத்தைத் தொடங்குவதைக் காணலாம். 'ஆயிரம் கோடி அறிஞர்கள் பற்பல , ஆயிர யுகங்கள் ஆராய்ந்தறிகிலா யான உடை இயற்கை யானோ அறிவன்! மீன் உணர்ந்திடுங் கொல் வியன் கடல் பெருமை! .....அதனை இவ்வூன் எனக் கொள்வர் உயிரிலார் சிலரே! பிரமமே யான் எனப் பேசுவர் பேசுக! பிரமமே யான் எனப் பேசினர் பெரியோர்', பிரம்மமே "யான்" என்பதைப் பேசுவார் பேசுக என விட்டுவிட்டார். இவ்வாறு தொடங்குகிறது இவர் ஆன்மிகப் பயணம். 1914 - இல்

பாடிய உயிர்பெற்ற தமிழர் பாட்டு வரியாக எல்லையில்லாப் பொருள் ஒன்றுதான். இயல்பு அறிவாகி இருப்பது ஒன்று உண்டு. நீயும் அதனுடையத் தோற்றம் எனப் பாடுகிறார்.

"உண்மை என்பதுதான் தெய்வம், உண்மைகளை வேதங்கள் என்பன அவருடைய கருத்துக்கள். உண்மை நெறியை வேதநெறி எனப் பாட வேண்டும் எவை எவை உண்மைகளோ அவை தெய்வத்தின் அம்சங்கள் கிளைகள்; எவை எவை உண்மையின் நெறிகளோ அவை எல்லாம் வேதநெறிகளாகும் என்ற கருத்தியல் பாரதியாருக்கு 1914இல் ஏற்பட்டிருந்தது. இதே 1914 இல் 'மாதா மணிவாசகம்' நூலில் பரசிவ வெள்ளம் என்ற கவிதை வெளிவந்தது. அது பிரபஞ்சமயமான பரசிவ வெள்ளத்தை விவரித்தபடி தொடங்குகிறது. உள்ளும், புறமும் உள்ளதெல்லாம் தானாகியபடி வெள்ளம் ஒன்றுண்டு. அது தெய்வம் எல்லா மதங்களும் இதனையே சாற்றுகின்றன. எங்கும் உள்ள ஈச வெள்ளம் பாரதியாருள்ளும் நிரம்பியுள்ளது. இப்போது எதுவும் மாயை, கற்பனை, தோற்றம், சாயல், பொய் அல்ல. எல்லாமுமே உண்மை இங்குள்ள எல்லாவற்றின் படி பாதை நெறி என்பன எல்லாமே வேத நெறியாகும். சரி உண்மையென எதைக் கொள்வது. பாரதியாரின் பொய்யோ மெய்யோ கவிதையில் இந்த வரிகள் துணை புரிகின்றன. காண்பதுவே உண்மை கண்டாய் காண்பதெல்லாம் உறுதி இல்லை. காண்பது சத்தியம். இந்தக் காட்சி நித்தியமாம் சுற்றி சூழ்ந்துள்ளவைகள் எல்லாம் கண்முன்னே உள்ளன. காண்பதும் உண்மை. காட்சியும் உண்மை. காணப்படுவனவும் உண்மை. இந்த உண்மை காட்சிகளின்படி பாதை இயக்கம் நெறி நித்தியமும் ஆகும். இவைகளில் இருந்தே ஆன்மிகம் உருவாகியுள்ளது" என்று முனைவர் கி.முப்பால் மணி உரைப்பது பாரதியின் ஆன்மிகப் பாதை நீட்சியை எண்ணதக்கது.

பாரதியின் படைப்புகளில் ஆன்மிகச் சிந்தனை

"முக்தியென்றொரு நிலை சமைத்தாய் - அங்கு"

என்ற வரிகளில் பக்தி நிலை என்பது ஆன்மிகத்தை அடையும் நிலை என்பதை உணர்த்தியுள்ளார். நம் சிந்தனையால் ஆத்மார்த்த வழிபாடு செய்யும்பொழுது தான் இத்தகைய ஆன்மிகம் பிறக்கும் என்பது இந்த வரிகளால் அறிய முடியும்.

" உண்மைகள் தெய்வங்கள் என்போம் மற்றும்
ஓதிடும் தெய்வங்கள் பொய்யென கண்டோம்"

என்று அறிவுறுத்தியதோடு மட்டும் இல்லாமல் "ஆயிரம் தெய்வங்கள் உண்டு என்று சொல்லும் அறிவிலிகாள்" என்றும் சாடுகின்றார். ஆன்மிகத்தை உணர்ந்த பாரதி தெய்வங்கள் பலவல்ல ஒன்றே என்பதை உணர்ந்தவராகத், 'தெய்வம் பலப்பல சொல்லி பகைத் தீயை வளர்ப்பவர் மூடர். பாருக்குள்ளே தெய்வம் ஒன்று இதில் பற்பல சண்டைகள் வேண்டாம்' என்கிறார். ஆன்மிகத்தை உணர்ந்த இவர் மக்களிடையே நிலவும் மூடநம்பிக்கைகளையும் கடிந்து சாடுகிறார். சாத்திரங்களையே எதிர்த்து ஆன்மிகத்தை வளர்க்கும் விதமாகச் 'சாத்திரங்கள் வேண்டாம் சதுர்மறைகள் ஏதுமில்லை, தோத்திரங்கள் இல்லை உளம் தொட்டு நின்றால் போதுமடா' என்கிறார். மனிதனின் மகத்தான சக்தியாய் அவனை வழிநடத்துவது அவனது மனமே. அவன் மனம் செம்மையாகச் செயல்பட்டால் அவன் தன்னை அறிந்தவனாய் ஆன்மிகத்தை உணர்ந்து தன் ஆன்ம நிலையை அறிவான் இக்கருத்தை வலியுறுத்தும் "மனமென்னும் மாடு அடக்கில் தாண்டவகோனே முத்திவாய்த் தென்னோடா தாண்டவகோனே " என்று பாடும் இடைக்காட்டு சித்தரைப் போல பாரதியும்,

" பேயாய் உழலும் சிறுமனமே
பேணாயென் சொல் இன்றுமுதல்.."

என மனமே நீயாக ஒன்றும் செய்யாதே நான் உன் தலைவன் நான் சொல்வதைக் கேள் என்று மனதை அடக்கும் நிலையையும் தன் படைப்பில் பாடியுள்ளார்.

முடிவுரை

இன்பத்தை அடைய வேண்டுமானால் அதற்கு தானாகிற நம் கதவைத் திறந்து அன்பு வடிவமாக நிற்பதே உபாயம் என்பது பாரதியின் படைப்புகளின் வழியாக அறியும் ஆன்மிகச் சிந்தனையாக எண்ணலாம்.

பார்வை நூல்கள்

1. பாரதியார் கவிதைகள் - சுவாமிமலை பதிப்பகம், சென்னை
2. மகாகவி பாரதியார் கருத்தியல் வளம் - பாரதியார் நூலரங்கம், பாரதியார் பல்கலைக்கழகம்
3. பாரதி இலக்கியம் பன்முக ஆய்வு - பதிப்புத்துறை பாரதியார் பல்கலைக்கழகம்

98. தரணிக்கு எடுத்தியம்பும் பாரதியின் மந்திரம்



நெல்லை க. சோமசுந்தரி

ஆய்வியல் நிறைஞர்
சென்னை

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் மகாகவி பாரதியாரின் படைப்புலகம் குறித்த நம் பார்வை என்பது இந்த அண்டப் பெருவெளியில், பால்வெளி குறித்த ஆராய்ச்சியின் முடிவிலி போன்றே அவரது பாடல்களை ஆய்வுசெய்யும் போதெல்லாம், அது முற்றுப்பெறாத ஓவியத்தின் வண்ணத்தில் சுழன்றாடும் தூரிகையின் நீட்சிப் புள்ளியாகவே நம்மிடம் பிரதிபலிக்கிறது. பாரதியை நாம் எந்தக் கோணத்தில் எடுத்து, எத்தனை முறை படித்தாலும் புதியதாகவே பரிணமிக்கிறான். அப்படிப்பட்ட கவிஞனின் படைப்புலகத்தில், அவரின் பாடல்களில் அடி நாதமாக எடுத்துக் கொண்ட மந்திரச் சொல்லைத் தான் ஆய்வுக் கட்டுரையின் நோக்கமாக இங்கு நாம் எடுத்தாள இருக்கிறோம் .

நம் தாய் மொழியான தமிழ் மொழியானது, ஏறத்தாழ இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட தொன்மையானது. அக்காலம் தொட்டே நம் தமிழ் மொழியில் 'பல இலக்கியங்கள்' இயற்றப்பட்டிருந்தாலும், தமிழ் மொழியின் சிறப்புக்குரிய முதல் இலக்கியக் காப்பியமாக இன்று வரையிலும் போற்றப்படுவது சிலப்பதிகாரம். அப்படிப்பட்ட சிறப்புப் பெற்ற சிலப்பதிகார பாடலில் கவிதை நடை, சந்த நயம், ஒலி நயம், ஒப்புமை மற்றும் அக்கால கட்டத்தின் வாழ்வியல் முறை போன்றவை சிறப்பாக எடுத்தாளப்பட்டிருக்கும். சிலப்பதிகார கால கட்டத்திலிருந்து ஏறத்தாழ ஆயிரம் வருடங்களுக்குப் பிறகு நம் தமிழ் மொழிக்குக் கிடைத்த பொக்கிஷங்களில் ஒன்று கவிச்சக்கரவர்த்தி இயற்றிய கம்பராமாயணம். "கம்பர் வீட்டுக் கட்டுத்தறியும் கவி பாடும்" எனும் கூற்றுக் கேட்ப, கம்பர் எழுதிய பாடல்களில் சொல் நயம், பொருள் நயம், கற்பனை வளம் எனத் தமிழ் மொழியின் ஆழத்தைச் சொல்லோவியமாய் பதித்துச் சுவை மிகுந்த காப்பியமாய் மாற்றி மெருகேற்றித் தந்த பெருமை கம்பருக்கு உண்டு.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல்"

எனும் பாரதியின் வரிகளிலிருந்து சிலப்பதிகாரம் மற்றும் கம்பராமாயணத்தின் சிறப்பினை நம்மால் உணர முடியும். திருக்குறள் வாழ்விற்குத் தேவையான அறநெறி சார்ந்த வாழ்வியல் கருத்துக்களைக் கூறிய உலகப் பொதுமறை என்பது அனைவரும் அறிந்த ஒன்றாகும். இளங்கோவடிகளுக்குப் பின் கம்பர் ,அதற்குப்பின் ஏறத்தாழ ஆயிரம் வருடங்கள் கழித்து நம் தமிழ் மொழிக்குக் கிடைத்த ஒரு மணிமகுடம் யார் என்றால் எட்டயபுரம் பெற்றெடுத்த நம் "யுக கவிஞன் சுப்பிரமணிய பாரதி" ஆவார். நம் தமிழ் மொழியில் இலக்கணக்கட்டுகளைத் தகர்த்து எவரும் படித்து உணரும் விதமாகத் தன் கவிதைகளில் புதுமையைப் புகுத்தி "புதுக்கவிதை" எனும் அத்தியாயத்தைத் தொடங்கி இலக்கிய உலகில் புது நடையைத் தந்து புது ரத்தம் பாய்ச்சிய நவீனக் கவிஞர் ஆவார் . . பல நூற்றாண்டுகள் கடந்த பின்னும் இன்றும் நம் நாட்டில் போற்றப்படுகின்ற இளங்கோவடிகள் மற்றும் கம்பனுக்கு இணையான மகாகவிஞரான பாரதி வாழ்ந்த நூற்றாண்டில் நாமும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம் என்பதே நம் அனைவருக்கும் மிகப்பெரிய பெருமையாக உள்ளது .

இங்கு நம் அனைவருக்கும் தெரிந்தது "பாரதி ஒரு தேசிய கவிஞன்". மேலும், அவரை சிறப்பு சேர்க்கும் வகையில் நாம் அவரை யுக கவிஞனாக அறிந்து வைத்திருக்கிறோம். "ஒரு யுக கவிஞன் என்ற அடையாளத்தைப் பெற்றிருக்கும் பாரதி இறந்தகாலக் காட்சி தெளிவும், நிகழ்கால முரண்பாடுகளின் சாரமும் அறிந்தவன் என்பதால் எதிர்காலத்தை உணர்ந்து கணிக்கக் கூடிய தீர்க்கதரிசியாகவே தான்" அவனது பாடல்களில் வெளிப்படுகிறான். மேலும்

அவரை தேசியம், பெண்மை, விடுதலைப் புரட்சி என்ற ஒரு கூட்டுக்குள் நம்மால் அடைக்க இயலாது. அவரின் அனைத்துப் பாடல்களின் அடிநாதமானது இந்தத் தரணியைக் கருத்தில் கொண்டே பாடப்பட்டுள்ளது. அவரை ஒரு மொழி சார்ந்து, பூகோள பரப்பினைக் கொண்டு ஒரு சிறிய வட்டத்திற்குள் சுருக்கி விட்டால் நாம் பாரதியைப் படித்திருப்போமே ஒழிய அவரை முற்றிலும் உணர்ந்தவராக மாட்டோம். அப்படிப்பட்ட மகாகவிஞனின் பாடல் வரி ஒன்றைப் பாருங்கள்.

"அன்பு தன்னில் செலுத்திடும் வையம்"

இவ்வரியில், பாரதி அன்புதனில் செலுத்திடும் "தேசம்" என்று சொல்லவில்லை "வையம்" என்றே சொல்கிறார். இந்த ஒற்றை வரியின் மூலம் அவருடைய பரந்து விரிந்த உலகளாவிய சிந்தனையை நம்மால் உணர முடியும். அவரின் எந்த வகையான கவிதைகளை எடுத்துப் பார்த்தாலும் அதனின் உள்ளார்ந்த மறைபொருளின் அடிநாதமானது "அன்பு" ஒன்றையே பிரதிபலிக்கிறது. இந்த நானிலம் பயனுற மற்றும் ஒரு இடத்தில்,தன் பாடல் வரிகளில் அன்பினை இவ்வாறு குறிப்பிடுகிறார் .

"அன்பென்று கொட்டு முரசே, - அதில்.."

"அன்பு" என்ற ஒற்றைச் சொல்லில் மக்கள் அத்தனை பேரும் நிகராம். வையம் பயனுற "அன்பு" மட்டுமே என முரசு கொட்டி அறிவிக்கிறான் பாரதி. பாரதி வாழ்ந்த காலகட்டத்தில் சமூகத்தில் சாதி, மதம், சமயம், மொழி இன பேதங்கள் எனச் சூது நிறைந்து காணப்பட்டது. அன்றைய சமூகச் சூழலில் கூட பாரதி அனைத்து சமுதாய மக்களையும் ஏற்றத்தாழ்வின்றி, சமமாய் இருக்க வேண்டுமெனில் "அன்பு" எனும் மகத்தான ஆயுதத்தால் மட்டுமே முடியும் என உறுதியாக எண்ணினார். அதனையே,

'முப்பது கோடி முகமுடை யாளுயிர்.."

முப்பது கோடி முகமுடைய அத்தனை மக்களிடமும் மொழி, இன, பேதம் இன்றி அனைவருடைய சிந்தனையும் ஒன்றாக இருக்கும் என்றால், அங்கே! அன்பைத் தவிர வேற என்ன இருக்க முடியும்? "அன்பு ஒன்றுதானே அனைவரையும் ஒற்றைச் சிந்தனையில் வைக்கும் என மேலே குறிப்பிட்ட வரிகளின் மூலம் நமக்கு உணர்த்துகிறார். இப்புவியை நாம் உற்று நோக்கினால், அனைத்து ஜீவராசிகளிடமும் எவ்வித பேதமின்றி பொதுவாக இருக்கக்கூடிய, ஒன்று அன்பு என்ற ஒரு உணர்வு மட்டும்தான். அவன் மானிட சமூகத்தையே சமூகம் என்று குறிப்பிட்டதன் நோக்கம் என்ன? இவ்வுலகில் எல்லா உயிர்களும் சமம் என்பதே அவனின் தார்மீகக் கோட்பாடு. அப்படி யோசித்ததால் தான், பேதங்கள் நிறைந்து காணப்பட்ட அன்றைய சமூகமானது அவரை கிறுக்கன் என்று கூறியது. ஆம்! அவர் கிறுக்கன் தான் உண்மையில் பிறப்பின் மகத்துவம் அறிந்த "ஞானகிறுக்கன்". அன்று! நாம் தான் பாரதியைச் சரியாக உள்வாங்கி உணரவில்லை.என்பதே உண்மை .

விடுதலைப் பாடலில் மானுடங்களைப் பார்த்து,

உங்களுக்குத் தொழிலிங்கே அன்பு செய்தல் கண்டீர்!

என்று கூறுகிறார். அவருடைய அத்தனை பாடல்களில் அடிநாதமாக வெளிப்படுவது அன்பு என்ற ஒற்றைக் கோட்பாடு தான். இதனையே பாரதியும் ஒரு இடத்தில்,

"அன்புசிவம் உலகத்துயர் யாவையும்"

உலக துயர்க்குக் காரணம் என்று எதைக் குறிப்பிடுகிறார்? ஆசை, கோபம், பகை, சூது, பொறாமை, வஞ்சம் இவை அனைத்துமே உலகத்துயர் அனைத்திற்கும் காரணியாக விளங்குகிறது. இவை எக்காலத்திற்கும் பொருந்தும். இதற்கு, "அன்பு" என்ற ஒற்றைச் சொல் உலக துயர் அனைத்தையுமே போக்க வல்லது என்று புத்தன் கூறிய மொழியே எங்களின் அன்னை மொழியென்று எவ்வளவு அழகாக உணர்ந்து வெளிப்படுத்தி இருக்கிறார். புத்தரை எல்லோருக்கும் ஒரு துறவியாகவும், இவ்வுலக துன்பங்களை, நீக்க வந்த கடவுளின் தூதுவனாகவும், நமக்குத் தெரியும். நாம் கவனித்துப் பார்த்தால், புத்தர் போதி மரத்தடியில் ஞானம் பெற்று, ஞான யோகியாக வாழ்ந்தவர். நம் பாரதியோ, உலக வாழ்விலிருந்து கொண்டு இந்த மானுட சமூகம் வெவ்வேறு நிலைகளில் படும் துன்பங்களைக் களைவதற்கு வழி தேடிக் கண்டறிந்து தம் பாடல்களில் வெளிப்படுத்தியவர். இருவருக்கும் பாதைகள் வேறாக இருந்தாலும் அன்பு என்ற ஒற்றைச் சொல்லில் புத்தரின் சிந்தனையும் பாரதியின் சிந்தனையும் ஒரே நேர் கோட்டில் தான் பயணிக்கின்றன. பெரியவர்களுக்கு மட்டுமின்றி குழந்தைகளுக்கும் அவர்கள் புரியும் மொழியிலேயே பாப்பா பாட்டில் "அன்பின் உயர்நிலையை" கீழே உள்ள வரிகளில்

"அன்பு மிகுந்த தெய்வ முண்டு - துன்பம்"

என்கிறார். அன்பு ஒன்றே அனைத்தையும் மாற்றும் வல்லமை கொண்டது. நம்மிடையே உண்மை அன்பு இருந்தால், ஆசை, கோபம், பொறாமை, வஞ்சகம், சூழ்ச்சி அனைத்தும் நீங்கி அன்பின் வடிவாய் என்றும் நிலைத்திருப்போம். இப்பாடலில் பாரதி "உண்மைதான் தெய்வம்" என்பதை அறிதல் வேண்டும் என்ற உயர்ந்த சிந்தனையைப் பதிவு செய்கிறார். உண்மை என்பது "மெய் " அதுவே தெய்வம். இப்போது, மெய்யான அன்பே தெய்வம் என்பதே நம்மால் உணர முடிகிறது அல்லவா? எல்லா உயிர்களிடத்திலும் அன்பு செலுத்த வேண்டும். அந்நிலையே, ஒவ்வொரு உயிர்களின் பிறப்பின் நோக்கம் என்பதையும் தெளிவுபடுத்துகிறார். சரி! இதைப் பாப்பாவிடம் ஏன் சொல்கிறார்? என்ற கேள்வி நம்மிடம் எழும். சிறுவயதில் குழந்தைகளிடம் தான் எவ்வித பேதமும் இருக்காது. அது வழிவகையாகத் தொடர வேண்டும்.

சிறு குழந்தையின் மனதில் விதைக்கும் நல்ல விதை தான் விருட்சமாய் அடுத்த சந்ததியினருக்குக் கொண்டு செல்லப்படும் என்பதைக் கருத்தில் கொண்டே குழந்தைகளுக்காகப் பாப்பா பாட்டு ஒன்றில் அன்பினை மையப்படுத்தியே அறிவுரை வழங்குகிறார். இவர் மனித ஜீவராசிகளுக்கு மட்டுமின்றி, உயர்திணை, அஃறிணை வேறுபாடு இன்றி இப்புவியில் வாழும் அனைத்து உயிர்களையும் அன்பு செய்தல் வேண்டும் என்பதை "காக்கை குருவியெங்கள் ஜாதி - நீள்" என்கிறார். இல்லையெனில் மிகுந்த ஏழ்மை நிலையிலும் குருவிக்குத் தானியங்களைக் கொடுத்துவிட்டுச் சிரிக்கும் நேசிப்பாளானாய் பாரதியால் இருந்திருக்க முடியுமா? மற்றும் ஒரு இடத்தில் கிளிப்பாட்டில்... "துன்ப நினைவுகளும் சோர்வும் பயமுமெல்லாம்" வாழ்வில் எதிர்கொள்ளும் துன்பங்களும், இழப்புகளும், சோர்வுகளும் பயமெல்லாம் ஒரே ஒருவர் உண்மையாக நம்மிடம் அன்பு செலுத்தும் போது அவை அனைத்தும் அழிந்துவிடும். "அன்புக்கு அழிவில்லை காண்" என்ற ஆணித்தரமாகக் குறிப்பிடுகிறார். இன்றைய காலகட்டத்தில் தரணியெங்கும் காணப்படும் அனைத்து இன்னல்களுக்கும் அடிப்படைக் காரணமே உண்மையான அன்பும், அக்கறையும் இல்லாததால் தான் என்பதை நாம் உணர்ந்து கொண்டாலே இவ்வையம் செழிக்கும்.

இதைத்தான் நாம் பாரதியும் பாடல்கள் அனைத்திலும் வெவ்வேறு பரிமாணங்களில் வெளிப்படுத்துகிறார். பாரதி தம் வாழ்வில் எந்தக் கருத்துக் கோட்பாடுகளைத் தம் கவிதைகளில் வெளிப்படுத்தி இருக்கிறாரோ அதனையே எந்தச் சூழ்நிலையிலும் சிறிதும் பிறழாமல் தன்னிலை மாறாமல் அப்படியே தன் வாழ்க்கையில் கடைப்பிடித்து இருக்கிறார் என்று நம்மால் அறுதியிட்டுக் கூற முடியும். அவ்வாறு வாழ்வதற்கு மனத்திண்மையும் உறுதியும் வேண்டும் அதனால் தான் அவரால் தன்னிலை மாறாமல், பிறர் நிலை கண்டு தன்னை வருத்தி பிறருக்கு உதவி செய்ய முடிந்தது. இது எப்பொழுது சாத்தியப்படுமெனில், எவர் ஒருவரிடம் அன்பு மிகுதியாகும் போது தன்னலம் குன்றினாலும், தன்னைப் பற்றி சிறிதும் எண்ணாமல் மற்றவர்கள் துன்பத்தைப் போக்க வேண்டும் என்ற எண்ணம் மிகுதியாக இருக்கும். இதைத்தான் நாம் பாரதியின் வாழ்வில் பல்வேறு கால கட்டங்களில் பல்வேறு

சூழல்களில் வெளிப்படுவதை அவரின் பாடல்களின் வழியாகக் காண முடியும். அவரின் அபரிமிதமான அன்பின் நிலையானது தீவிர நிலையை அடைந்தபோது கண்ணன் பாட்டில் இவ்வாறு குறிப்பிடுகிறார். "தீக்குள் விரலை வைத்தால் நந்தலாலா -நின்னைத்" தீக்குள் விரலை வைத்தால் இன்பமாக இருக்குமா? வைக்க முடியுமா ? என்ற கேள்வி நம் மனதில் தோன்றுவது இயல்பாகத் தான் உள்ளது. இதனையே திருநாவுக்கரசரைச் சுண்ணாம்புக் கலவையில் இட்டுத் துன்புறுத்திய போது

"மாசில் வீணையும் மாலை மதியமும்"

மாசில்லாத வீணையும், மாலை நிலவும், இளவேனிக் காலத்தில், வீசுகின்ற தென்றலும், ஒலிக்கும் வண்டுகள் மொய்க்கும், குளிர்ச்சியான பொய்கை போன்று ஈசன் திருவடி நிழல் தனக்கு இன்பம் பயப்பதாக இருந்தது எனத் தேவாரப் பதிகத்தில் குறிப்பிடுகிறார். பக்தியின் மூலம் திருநாவுக்கரசர் ஏற்பட்ட அன்பின் ஞான நிலையே ,பாரதிக்கும் அன்பின் உயிர் நிலையாக" அவரின் ஒவ்வொரு பாடல்களிலும் மனித மனதின் நிலை இருக்க வேண்டும் எனத் தரணிக்கு மந்திரமாக எடுத்தியம்புகிறார். இன்று பாரதி படைப்புலகம் குறித்து நாம் பேசுவதோடும், எழுதுவதோடும் நின்றுவிடாமல் பாரதி உள்வாங்கிய, அந்த அன்பினை நாமும் உள்வாங்கி அவரின் வழியில் இந்த தரணிக்கு, அன்பினை முதல் மந்திரமாக எடுத்து ஓதுவோம். இந்த மானுட சமூகத்தின் ஒவ்வொரு அங்கத்தினரும் அன்பு எனும் ஒற்றை கோட்பாட்டைப் பின்பற்றினாலே, இன்று நாம் எதிர் கொள்ளக்கூடிய வாழ்வியல் துன்பங்கள் அனைத்திற்கும் ஒற்றைத் தீர்வாக அது அமையும். அதனை அங்ஙனமே, அவரின் வழியிலேயே பின்பற்றுவோம் என்று கூறி இந்தக் கட்டுரையை அன்பென்று கொட்டும் முரசே! எனும் பாரதியின் வரிகளிலேயே உயிர்களுக்குள் அன்பினை உயிர் மூச்சாகக் கடத்துவோம் எனத் தீர்க்கமாக உறுதி எடுப்போம்.

துணை நூற்பட்டியல்

1. பாரதியார் கவிதைகள், உமா பதிப்பகம், மண்ணடி ,சென்னை
2. ஐந்தாம் திருமுறை(தேவாரம்), பன்னிரு திருமுறை மையம், கற்பகம் பல்கலைக்கழகம், கோவை

99. பாரதியின் முற்போக்கு கல்விச் சிந்தனைகள்



பா.மகேஸ்வரி

M.A., B.Ed., M Phil.,PGDCA.,DGT
இடைநிலை ஆசிரியர், அரசு மேல்நிலைப்பள்ளி,
குனியமுத்தூர், கோவை

முன்னுரை

கல்வியைப் போற்றும் நல்லோர் மரபில் வந்தவர் தேசியக் கவி சுப்பிரமணிய பாரதியார்.பாரதி அதிகக் கல்வித் தகுதியைப் பெற்றிருந்ததுடன் பல மொழிகளிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். கல்வி குறித்தும், கல்வியில் மொழியின் பங்கு குறித்தும் இன்றைக்கும் பொருந்தக்கூடிய பல தீர்க்கமான பார்வைகளையும், தொலைநோக்கு சிந்தனைகளையும் தனது கவிதைகளிலும், கட்டுரைகளிலும் அவர் வெளிப்படுத்தி இருக்கிறார்." தேடு கல்வி " என்று கூறுவதை ஆழ்ந்து உணர்வோம். " ஓது பல் பல நூல் வகை "என்று ஆணையிடுவதையும் சிந்திப்போம்.

மனிதனை மனிதனாக்கும் கல்வி

"Intelligence plus character that is the goal of true education"- Martin Luther King ஒரு மனிதனை மனிதனாக மாற்றுவது கல்வி மட்டுமே .அறிவோடு சேர்ந்து நல்ல பண்புகளையும் வளர்ப்பது சிறந்த கல்வியின் நோக்கமாகும் .கல்வி கல்- ஆய்வு செய் என்ற வேர்ச்சொல்லில் இருந்து வருகிறது. தகுந்த சூழ்நிலையை உருவாக்கி மனிதர்களின் உள்ளார்ந்த தகுதிகளை வெளிக்கொண்டு வருதல் ஆகும் .கல்வியின் சிறப்பு யாதெனில் யாரிடம் கற்கிறோமோ அவரே ஆசிரியர் ,போதிப்பவர் எல்லாம் ஆசிரியர் ஆகிவிட மாட்டார் என்ற பொன் மொழியின் வடிவாகும்.வாழ்வில் வெகு முக்கியமாகக் கற்றுக்கொள்ள வேண்டிய செய்தி எவ்வாறு வாழ்வது என்பதாகும்.

அறியாமை இருளை அகற்றும் கல்வி

"எம்மை உலகத்தும் யாம் காணோங் கல்வி போல் மம்மரறுக்கும் மருந்து" நாலடியார்.
கற்றவர் புகழை இம்மையிலும், மறுமையிலும் வாழச் செய்வது கல்வியே. கல்வியைப் போல அறியாமை என்னும் நோயைப் போக்கக்கூடிய மருந்து இவ்வுலகில் வேறு எதுவும் இல்லை என்று நாலடியார் குறிப்பிடுகிறது.

பாரதியின் கல்விக் கனவு

எழுத்து, படிப்பு ,கணக்கு ,புவியியல், சமூகவியல், பொருளாதாரம். வணிகம். அறிவியல் .கல்வி. தொழில் கல்வி .உடற்கல்வி என ஒரு மாணவனின் முழுமையான வளர்ச்சிக்கு த்தேவையான அனைத்தையும் உள்ளடக்கியதாகப் பாரதி முன்மொழிந்த கல்வித் திட்டம் இருந்தது, பாரதி தேசபக்தி ,சாதி எதிர்ப்பு .ஆண் பெண் சமத்துவம் ,நவீன தமிழ் மொழி வளர்ச்சி ஆகிய தளங்களில் பங்களிப்பு ஆற்றியுள்ளார். இவற்றோடு கல்வியின் முக்கியத்துவத்தையும் எப்படிப்பட்ட கல்வி கற்பிக்கப்பட வேண்டும் என்பது குறித்தும் அவர் வெளிப்படுத்திய கருத்துக்கள் பாரதியின் பன்முக ஆளுமையை வியந்து போற்றுவதற்கான இன்னும் ஒரு காரணத்தைத் தருகின்றன .

கல்வி-பெண்களின் அணிகலன்

கல்வி எல்லோருக்கும், ஆம் பெண்களுக்கும் சரிநிகர் வாய்ப்புக் கொடுக்கக் கட்டளையிடுகிறார் எம் பாரதி." எட்டு மறைவினில் ஆணுக்கு இங்கே பெண்

இளைப்பில்லை காண்" என்று பாடுவதே -இப்பாடலை இப்போது நாம் நினைவுக்குக் கொண்டு வருவோம் .கல்வி மூலமே அடிமட்ட மக்களும் ,பெண்களும் உயர்நிலை எய்துவர் என்று நினைத்தான் பாரதி. அடிமைப்பட்ட மக்களை அரியணையில் அமர வைக்கும் தகுதியைக் கொடுப்பது கல்வி மட்டுமே .கல்வி மூலமே உயர்வு காண முடியும் என்பதே இதனுடைய சாராம்சம்.**கல்வியின் உயர்ந்த நோக்கம் அறிவு அல்ல செயல் - ஹெர்பர்ட் ஸ்பென்சர்** என்பவரின் கருத்து."குஞ்சு அழகும் கொடுந்தணை கோட்டழகு"- நாலடியார்பாடல் ஒரு மனிதனுக்கு அழகு என்று சொன்னால் அது கல்வியறிவே என்று எடுத்துரைக்கிறது.

பாரதியும் திருக்குறளும்

தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக் கற்றனைத் தூறும் அறிவு"- மணல் பாங்கான இடத்தில் தோண்டத் தோண்ட நீர் சுரக்கும் ,அதுபோல மக்கள் நூல்களைக் கற்க கற்க அவர்தம் அறிவு வளரும் என்று திருக்குறள் கூறுகிறது .பாரதி கல்விக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுத்தாரோ அதனை இரண்டே வரிகளில் திருவள்ளுவர் கூறிவிட்டுச் சென்று விட்டார் .கல்வி என்பது மற்ற எல்லாச் செல்வங்களையும் விட மேலானது .மற்ற செல்வங்கள் எல்லாம் அழிந்து விடலாம் ,ஆனால் நாம் கற்ற கல்வி ஒருபோதும் அழியவே அழியாது .இதுவே கல்வியின் சிறப்பு. பாரதியின் கருத்தைத் திருக்குறள் ஆங்கே எடுத்தாளுகின்றது. தமிழ் மறையாம் திருக்குறளில் கல்விக்குத் தான் நான்கு அதிகாரங்கள் .40 குறட்பாக்கள் கொடுக்கப்பட்டுள்ளது.இதுவே கல்விக்குத் தரும் மிக சிறப்பு ஆகும்.

பெண் கல்வி- ஞானப்பெண் ஒப்பீடு (வேதாகமம்)

பெண்கள் இயற்கையிலேயே அழகும், அறிவும் ஒருங்கே அமையப்பெற்றவர்கள். இறைவனின் திருவடியாளர்களாக ஆசீர்வாதம் பெற்றவர்களே பெண்கள். பெண்கள் ஞானம் நிரம்பப் பெற்றவர்கள் என்பதை நாம் அறிவோம். அவ்வாறான பெண்கள் தொடர்ச்சியான தேடுதல், கற்றல் மற்றும் பிரார்த்தனை செய்தல் போன்ற செயல்களால் தம்மை அழகாகவும், முழுமையாகவும் ஞானப்பெண்களாக மாற்றிக் கொள்கின்றனர். அப்படிப்பட்ட ஒரு ஞானப் பெண் வேதாகமத்தில் மோசேயின் தமக்கையான மிரியாம் ஆவார் .நன்மை, தீமை என்று பகுத்தறியும் ஞானத்தை, மற்றவர்களை தெளிவாகப் புரிந்து கொள்ளச் செய்யும் ஞானத்தை ,சரியான இடத்தில் சரியான வார்த்தைகளைப் பேசும் ஞானத்தையும் அவர் பெற்றிருந்தார். அவ்வாறான ஞானத்தைச் சிறந்த கல்வி மட்டுமே தர முடியும். "ஞானம் தன்னை உடையவர்களுக்கு ஜீவனை தரும் இதுவே அறிவின் மேன்மை" -(பிரசங்கி7:12). உங்கள் அன்பு அறிவிலும் ஆழத்திலும் பெருக வேண்டும். ஞானம் தன்னை உடையவர்களைப் பாதுகாக்கும். வேதாகமத்தில் கல்வியறிவு பெற்றவர்கள் எவ்வாறு ஞானத்துடன் நடந்து கொண்டார்கள் என்பதை மேற்கண்ட வசனங்கள் மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். எல்லாவற்றிற்கும் மேலாக "கல்வி கற்றவர்கள் கல்வி கல்லாதோர்க்கு கடன் பட்டவர் கண் திறக்கவே தாழ்மை சற்குணமும் தயை காருண்யமும் தழைப்பதல்லோ தகுந்த கல்வி" (கீர்த்தனை 333) இப்பாடலில் கல்வி கற்றவர்களின் தலையாயக் கடமை கல்லாதவரின் அறிவுக்கண்ணை திறப்பதே என்று கூறுகிறது. முறையாகக் கல்வி பயின்றோர் தாழ்மை குணமும் ,பிறரிடம் காருண்யமும் ,பரிவும் கொண்டிருப்பர் என்று கிறிஸ்தவ கீர்த்தனைகளில் பாடப்பட்டுள்ளதன் மூலம் பாரதியின் கல்வியின் முக்கியத்துவம் வேதாகமத்தில் ஞானம் என்ற சொல்லின் அடிப்படையில் பல இடங்களில் கூறப்பட்டுள்ளதை நாம் காணலாம்.

பாரதியின் கல்வி சிந்தனை-ஒப்பாய்வு

விரிந்த மனத்தை உருவாக்குவதும், விடுதலையின் அவசியத்தை உணர்த்துவதும் ஆத்மாவின் பயிற்சியை வளர்க்கக்கூடியதும் கல்வியாகும். அறம், பொருள், இன்பம், வீடு பேறு கொடுப்பதோடு இம்மண்ணில் வாழும் வரை கல்வியே அவர்களுக்குச் சிறந்த துணையாய் விளங்குகிறது என்பதை ஆணித்தரமாகப் பாரதி பல கோணங்களில் எடுத்துரைத்துள்ளார். கல்விக்காகப் பல முற்போக்குக் கருத்துக்களைச் சொன்னவர் அனைவருக்கும் கல்வி, பெண் கல்வி, தொழில் கல்வி ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்தினார். கல்வியை ஒரு கருவியாகப் பயன்படுத்தி மக்களை மேம்படுத்தவும், சமூக

மாற்றத்தை ஏற்படுத்தவும் விரும்பினார். தன்னுடைய கல்விச் சிந்தனைகளைத் ,தனது படைப்புகளான கட்டுரைகள், கவிதைகள் .சிறுகதைகள் போன்றவற்றில் எடுத்துரைத்துள்ளார். தாய் மொழியின முக்கியத்துவத்தைப் பல இடங்களில் மேற்கோள் காட்டியதை நாம் அறிவோம்.

முடிவுரை

தேசியக் கல்வி தமிழ் மொழியை மையமாகக் கொண்டது என்பதைப் பல இடங்களில் கூறியுள்ளார் பாரதி ."**ஞானத்தை கண்டடைகிற மனுஷனும், புத்தியை சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள்" (நீதிமொழிகள் 3:13) "புத்திமானுடைய மனம் அறிவை தேடும் ,மூடரின் வாயோ மதியீனத்தை மேயும்"-(நீதிமொழிகள் 15 :14)** போன்ற வேதாகம வரிகள் கல்வி அறிவு பெற்றவர்கள் எவ்வாறு ஞானத்துடன் நடந்து கொள்கிறார்கள் என்பதைத் தெளிவாகக் கூறுகிறது. சமுதாயத்தில் பல மாற்றங்களை ஏற்படுத்த வேண்டிய முக்கியப் பொறுப்பில் கல்வி என்பது உள்ளது .கல்வியில் பல திருத்தங்களை அமைப்பதன் மூலம் சமுதாயத்தை உயர்நிலைக்குக் கொண்டு செல்லலாம் பாரதியின் கனவை நாமும் நனவாக்கலாம்.

துணைநூற்பட்டியல்:

1. பைபிள்
2. பாரதியார் கவிதைகள் பாரதியார்,வானதி பதிப்பகம்,2017

100. பாரதியாரின் சொல்லோவியங்கள்



சு.கவிதா

எம்.ஏ.,எம்.ஏ.,பி.எட்

ஆசிரியர், அ.பெ.மே.நி.பள்ளி

தொண்டாமுத்தூர், கோவை

முன்னுரை

பாரதியார் தமிழருக்குக் கிடைத்த மிகப்பெரிய பொக்கிஷம். கவிதை உலகத்தில் கருவூலம்.தமிழுக்குப் புது ரத்தம் தந்த கவிஞன். இவர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த எட்டயபுரத்தில் சாதாரண குடும்பத்தில் 1882ல் டிசம்பர் 11 இல் பிறந்தார். இவர் எழுதிய கவிதைகள் சொற்சுவை பொருட்சுவை பொதிந்தது. இவர் தம் கவிதையில் சொற்களை அழகாகச் சொல் ஓவியங்களாக வரைந்துள்ளார். இயற்கை என்பது மரம் செடி கொடி மலர் மங்கை சூரியன், சந்திரன் நிலா நீர் காற்று கடல் நதி என பலவற்றை உள்ளடக்கிய ஒரு மாபெரும் உலகம். இயற்கை என்றாலே அழகின் உருவம். இயற்கையைப் பின்னணியாகக் கொண்டு ஒரு கவிதை உருவாகும் போது அவை மேலும் அழகு பெறுகிறது. ஒரு கவிஞனால் இயற்கை சொல் ஓவியம் ஆகிறது. அதனால் ஓர் பாமரனும் அதை ரசிக்க முடிகிறது. பாரதியின் பாடலில் நான் கண்ட சில சொல்லோவியங்கள்.

பாரத தேசம்

பாரத தேசப் பாடலில் அவர் பாரத நாட்டைப் பற்றியும் அதன் ஒருமைப்பாட்டைப் பற்றியும் அழகாக வர்ணித்துள்ளார் இந்தப் பாடலில் பாரத தேசத்தின் இயற்கை வளங்கள் கலாச்சாரப் பெருமைகள் சொல் ஓவியங்களாகத் தீட்டி உள்ளார்.

"வெள்ளிப் பனி மலையின் மீதுலாவுவோம் - அடி"

இப்பாடலில் இமயமலையின் அழகையும் குளிர்ச்சியையும் அதன் மீது உழவும் பெருமையையும் குறிப்பிடுகிறார். மேலும் இந்தியாவின் கடல் சார்ந்த ஆற்றலையும் கடல் போக்குவரத்தில் தமிழருக்கு இருக்கும் ஆர்வம் அவர்களின் திறமைகளையும் வெளிப்படுத்தி உள்ளார்.

"சிங்களத் தீவினுக்கோர் பாலம் அமைப்போம்"

இதன் மூலம் கங்கை நதியின் உயர்வையும் அதன் பலத்தையும் அதன் மூலம் இந்திய விவசாய நிலங்கள் செழிப்படைவதையும் விளக்கியுள்ளார்.

கண்ணன் பாட்டு

பாரதியின் கண்ணன் பாட்டு ஒரு அற்புதமான கவிதைத் தொகுப்பு. இதில் கண்ணனின் பல்வேறு பரிணாமங்களைக் கவிஞர் நமக்கு அறிமுகப்படுத்துகிறார். ஒவ்வொரு வரியிலும் கண்ணனின் மீதான பக்தி அன்பு பாசம் ஆகியவை வெளிப்படுகின்றன

"கோபத்திலே யொரு சொல்லிற் சிரித்து குலுங்கிட செய்திடுவான்"

இப்பாடலில் தோழனாகக் கண்ணன் எப்பொழுதும் உடனிருக்கும் ஒருவனாகச் சித்தரிக்கப்படுகிறான் அவனது தோழமையின் இனிமையும் ஆறுதலும் அருமையும் அழகாக வர்ணிக்கப்படுகிறது. எனக்கு வரும் தீமைகளை சுடர் தீபத்திலே விழும் பூச்சிகளைப் போல விலக்கிடுவான் எனக் கூறும் இடத்தில் அவன் சொல்லாட்சி அற்புதமாக அமைந்துள்ளது எனலாம்.இதே போல் கண்ணன் என் தாய் பாட்டில்,

"நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும் நேர்பட வைத்தாங்கே"

வானத்து மீன்கள் உண்டு சிறு மணிகளைப் போல் மின்னி நிறைந்திருக்கும் ஞானத்தைக் கணக்கிடவே மனம் நாடி மிக முயல்களிலும் கூடுவதில்லை. கானத்து மலைகள் உண்டு.எந்தக் காலம் ஓரிடம் விட்டு நகர்வதில்லை.வானத்திலே இருக்கும் ஒரு மொழியுரை யாது விளையாட வாருங்காண்)இந்தப் பாடலில் அன்னை அன்னமூட்ட அழைக்கும் விளையாட்டுப் பொருள்களாக இயற்கையைக் காட்சிப்படுத்தியுள்ளார்.

காணி நிலம் வேண்டும் காணி நிலம் வேண்டும் இப்பாடலில் நிலம் வீடு மற்றும் இயற்கைக் கூறுகளை அழகாகச் சித்தரித்துள்ளார். ஒரு காணி அளவு நிலம் வேண்டும் எனத் தொடங்கி அந்த நிலத்தில் ஒரு மாளிகை கட்ட வேண்டும் என்ற ஏக்கத்தை வெளிப்படுத்துகிறார். மாளிகையும் தூண்களுடன் அழகான மாடங்களுடன் தூய நிறத்தில் இருக்க வேண்டும். மாளிகைக்கு அருகில் நல்ல நீரை கொண்ட கிணறு இருக்க வேண்டும். தென்னை மரங்கள் இருக்க வேண்டும். அவை கீற்றும் இளநீரும் தர வேண்டும் முத்துப்போல நில ஒலி வீச வேண்டும் என்ற நிலவின் அழகை அழகாக விவரிக்கிறார் இவை அனைத்தும் பாரதியாரின் கற்பனையில் தீட்டப்பட்ட அழகான சொல்லோவியங்கள் இப்பாடல் மூலம் அவர் இயற்கையோடு இணைந்த ஒரு வாழ்க்கையை அவர் வாழ விரும்பியதை அறியலாம்.

பாரதியாரின் சுயசரிதை

பாரதியார் அவரது சுயசரிதையில் அவரது வாழ்க்கை அனுபவங்களை விவரிக்கும் போது சொற்களை மிக நேர்த்தியாக கையாண்டு உள்ளார் அது வெறும் வாழ்க்கை நிகழ்வுகளின் தொகுப்பாக இல்லாமல் ஒரு காலகட்டத்தின் சித்திரமாகவும் விளங்குகிறது பாரதியார் ஒரு கவிஞர் என்பதால் அவரது சுயசரிதையை எழுதிய பாணியும் கவித்துவமாக உள்ளது எனலாம்.அவர் வார்த்தைகளைத் தேர்ந்தெடுத்து பயன்படுத்திதும் உருவங்களைப் பயன்படுத்தியதும் படிப்பவர்களுக்கு ஒரு விதமான எழுச்சியை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

“ஆண்டோர் பத்தினில் ஆடியும் ஓடியும்”

எனத் தொடங்கும் முன்னுரை பாடலில் பிள்ளைப் பருவ ஏக்கத்தினை அழகாக வர்ணிக்கிறார் அதே பகுதியில் பிள்ளைக் காதல் பாடலில்

“கானகத்தில் இரண்டு பறவைகள் காதலனலுற்றது போலவும் அங்ஙனே”

என பிள்ளைப் பருவக் காதலை மிக அழகாக வர்ணித்துள்ளார்.இவருடைய சுயசரிதை ஒரு புத்தகத்தைப் படிப்பது போல இல்லாமல் அந்தக் காலத்தில் வாழ்ந்த ஒருவரைச் சந்திப்பது போலவும் அந்த நிகழ்வுகளை நேரில் பார்த்தது போல உணர்வுகளைத் தருவதாகவும் அமைகிறது. பாரதியார் இயற்கையை ரசித்துப் பாடிய கவிஞர். அவரை இயற்கைக் கவிஞர் என்று சொல்லலாம். அவரது பாடல்களில் இயற்கை மீதான அன்பு வெளிப்படும்.

இயற்கை மீதான ஆர்வம்

பாரதியார் இயற்கையை மிகவும் நேசித்தார், அதைப் பற்றிய பாடல்கள் பல எழுதியுள்ளார். அவருடைய பாடல்களில் மலை, ஆறு, கடல், சூரியன், நிலவு போன்ற இயற்கை காட்சிகள் அழகாக வர்ணிக்கப்பட்டுள்ளன.

உணர்ச்சிகளின் வெளிப்பாடு

இயற்கையை வர்ணிக்கும்போது, அவர் வெறும் காட்சிகளை மட்டும் சொல்லாமல், அந்த இயற்கை தரும் உணர்ச்சிகளையும் வெளிப்படுத்தியுள்ளார். உதாரணமாக, "காலைப் பொழுதினிலே" பாடலில் சூரிய உதயத்தின் அழகையும், அந்த நேரத்தில் ஏற்படும் உணர்வுகளையும் அழகாகக் கூறியுள்ளார்.

சமூகப் பார்வையும் இயற்கையும்

பாரதியார் சமூகச் சீர்திருத்தவாதியாகவும் திகழ்ந்தார். அவர் இயற்கையைப் பற்றிய பாடல்கள் மூலம் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும் முயன்றார்.

'புதிய ஆத்திச்சூடி'யில் இயற்கை

'புதிய ஆத்திச்சூடி'யில் கூட, "இயற்கையை நேசி" என்று வலியுறுத்தியுள்ளார். இதன் மூலம் இயற்கையின் முக்கியத்துவத்தை அவர் உணர்ந்துள்ளார் என்பதை அறியலாம்.

இயற்கை மற்றும் மனித உறவு

இயற்கையைப் பற்றிய பாடல்கள் மூலம், மனிதனுக்கும் இயற்கைக்குமான உறவையும், இயற்கையைப் பேணிக்காக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

'காக்கை சிறகினிலே' பாடல்

'காக்கை சிறகினிலே' பாடலில், காக்கையின் கருப்பு நிறத்தை அழகாக வருணித்து, அதிலும் ஒரு அழகைக் கண்டடைவதை எடுத்துக்காட்டுகிறார்.

காக்கைச் சிறகினிலே நந்தலாலா-நின்றன்

பாரதியாரின் பாடல்கள் மூலம், இயற்கையை நேசிப்பதும், அதைப் போற்றுவதும் எவ்வளவு முக்கியம் என்பதை நாம் உணரலாம்.

முடிவுரை

கவிஞர்கள் சாதாரண மக்கள் யாரும் எண்ணிக் கூடப் பார்க்க முடியாத உலகத்தில் வாழ்பவர்கள். இவர்களுக்கு புற வாழ்க்கையில் அக்கறை கிடையாது. பாரதியாரின் அகத்தில் பெரிய சிம்மாசனம் அமைத்து ஆட்சி செய்தவர்கள் இவர்கள் எனப் பாரதியார் போற்றினார்கள்(யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவரைப் போல் இளங்கோவை போல் பூமி தன்னில் யாங்கேணுமே பிறந்ததில்லை) இந்த வரிகளில் வைத்துப் போற்றுவதற்கான அத்தனை தகுதிகளையும் கொண்டவர் பாரதியார். இவரை என் இதய சிம்மாசனத்தில் வைத்து நானும் போற்றித் துதிக்கிறேன்.

துணைநூற்பட்டியல்:

1. பாரதியார் கவிதைகள் பாரதியார்,வானதி பதிப்பகம்,2017

101. பாரதியின் கதைகள் – ஓர் ஆய்வு



பி.பிரேமா

எம்.ஏ.,பி.எட்.,
பட்டதாரி ஆசிரியர்
பொம்மண்ணன்பாளையம், கோவை

முன்னுரை

மகாகவி சுப்பிரமணிய பாரதி தமிழ்மொழியின் பெரும் செல்வாக்குடைய கவிஞர் மட்டுமல்லாமல், கதைகளின் மூலம் சமூக விழிப்புணர்வையும், சிந்தனை மாற்றத்தையும் ஏற்படுத்தியவர். அவரது கதைகள் சுதந்திரம், சமத்துவம், பெண்மையின் வலிமை போன்ற கருத்துகளைப் பிரதிபலிக்கின்றன. பாரதியாரின் "நவதந்திரக் கதைகள்" முன்னுரையில், கதைகளின் நோக்கத்தையும், அவற்றின் மூலம் சொல்லப்படும் செய்தியையும் பாரதியார் விளக்குகிறார். கதைகள் மூலம் நகைச்சுவை, படிப்பினை மற்றும் செய்திகளை வழங்குவதே இதன் முக்கிய நோக்கமாக இருக்கிறது என்று குறிப்பிடுகிறார்.பாரதியின் கதைகளில் உள்ள கருத்துகளை ஆராய்வதாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

பாரதியின் கதைகளின் பின்னணி

பாரதியின் கதைகள் அவரது காலத்தின் சமூக நிலையைப் பிரதிபலிக்கும் வகையில் அமைந்துள்ளன. அவர் வாழ்ந்த காலத்தில் இந்தியா பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்தது. சமூக அநீதிகள், சாதி வேறுபாடு, பெண்கள் கல்வி குறைபாடு போன்றவை நிலவின. இந்தச் சூழலில், அவரது கதைகள் சமூக சீர்திருத்த எண்ணங்களை விதைத்தன.

பாரதியின் கதைககளின் முக்கிய அம்சங்கள்

சமூகப் பார்வை

பாரதியின் கதைகளில் காணப்படும் சமூக சீர்திருத்தம், தேசபக்தி, பெண் விடுதலை போன்ற கருத்துக்கள் பற்றிய ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக, அவரது கதைகளில் காணப்படும் சாதி மறுப்பு, பெண் விடுதலை மற்றும் பாலின சமத்துவம் குறித்த கருத்துக்கள் ஆராயப்படுகின்றன.

கதை சொல்லும் முறை

பாரதியாரின் கதை சொல்லும் பாணி, உரைநடை மற்றும் வசனகவிதை ஆகியவற்றில் உள்ள புதுமைகள், அவரது கதைகளில் காணப்படும் கதை மாந்தர்களின் சித்தரிப்பு ஆகியவற்றைப் பற்றிய ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. அவரது கதைகளில் காணப்படும் சம்பவங்களை உள்ளவாறே குறிக்கிறதேயன்றி உணர்வு நிலையைக் காட்டுவனவாக இல்லை என்று பிற்கால ஐரோப்பிய இலக்கணங்களைக் கொண்டு விமர்சகர்கள் அளவிட முயற்சித்திருக்கிறார்கள்.

மொழிநடை

பாரதியின் கதைகளில் காணப்படும் மொழிநடை, உவமைகள், உருவகங்கள் மற்றும் அவரது தனித்துவமான நடை ஆகியவை பற்றிய ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. பாரதியின் மொழிநடை குறித்த தனி ஆய்வு நூல்களும் வெளிவந்துள்ளன.

பத்திரிகை தொடர்பு

பாரதியார் பல்வேறு இதழ்களில் எழுதிய கட்டுரைகள் மற்றும் கதைகளின் தொகுப்பு பற்றிய ஆய்வுகள் உள்ளன. சுதேசமித்திரன், சக்கரவர்த்தினி, இந்தியா போன்ற இதழ்களில் அவர் பணியாற்றியுள்ளார்.

கருத்துப்பட உருவாக்கம்

பாரதியார் கருத்துப்படங்களை உருவாக்கிய விதம், அது அவரது படைப்புகளில் ஏற்படுத்திய தாக்கம் பற்றிய ஆய்வுகள் செய்யப்பட்டுள்ளன. பாரதியின் கதைகள் மூலம் தமிழ் இலக்கியத்தின் வளர்ச்சி, சமூக சீர்திருத்தத்திற்கான கருத்துக்கள், மற்றும் அரசியல் விழிப்புணர்வு ஆகியவற்றைப் பற்றிய புரிதலை அதிகரிக்க உதவுகிறது. பாரதியின் மொழிநடை மற்றும் கதை சொல்லும் உத்திகளைப் பற்றி அறிந்து கொள்வதன் மூலம்,

தமிழ் இலக்கியத்தின் வளமையை உணர முடியும்.பாரதியாரின் படைப்புகள் மூலம் சமூகம் மற்றும் அரசியல் பற்றிய விழிப்புணர்வு மற்றும் புரிதலை மேம்படுத்த முடியும். பாரதியின் கதைகள் எளிமையான, நேரடியான மொழியில் எழுதப்பட்டன. அவரது பாணி மக்களுக்கு எளிதில் புரியும் விதமாக இருந்தது. இது அவருடைய கதைகளை காலத்துக்கு ஏற்றவாறு இன்னும் புதிதாக வைத்திருக்கிறது. பாரதியின் கதைகள் பெண்களின் கல்வி, சுதந்திரம், சுயநிறைவு போன்ற விஷயங்களை வலியுறுத்தின. அவர் பெண்களை வெறும் இல்லத்தரசிகள் அல்ல, சமூக முன்னேற்றத்தில் முக்கிய பங்கு வகிப்பவர்கள் எனக் காட்டினார். 'புதுமைப்பெண்' போன்ற கதைகள் இதற்கு சிறந்த உதாரணம்.

தேசிய உணர்வு

பாரதியின் கதைகள் தேசிய சுதந்திர போராட்டத்தின் தீவிர உணர்வுகளை மக்களிடம் கொண்டு சென்றன. அவர் எழுதிய கதைகள் இந்தியா சுதந்திரம் பெற வேண்டிய அவசியத்தை மக்களுக்குப் புரிய வைத்தன. இவை இளைஞர்களை போராட்டத்திற்கு ஊக்குவித்தன.

பாரதியின் கதைகளின் தாக்கம்

பாரதியின் கதைகள் தமிழ்ச் சமூகத்தில் நீண்டகால தாக்கத்தை ஏற்படுத்தின. பெண்கள் கல்வி மற்றும் சமூக சுதந்திரம் ஆகிய கருத்துகள் பரவுவதற்கு இவரது படைப்புகள் காரணமாகின. இன்றும் அவருடைய கதைகள் பள்ளிகளில், கல்லூரிகளில் படிக்கப்படுகின்றன.

குள்ளச்சாமி கதை

மகாகவி பாரதி 'சும்மா' என்ற தலைப்பில் ஒரு கதை எழுதியிருக்கிறார். அதற்கு இரண்டு அத்தியாயங்கள். கதையிலே மூன்றே பாத்திரங்கள். கவிஞர், வேணு முதலி, குள்ளச்சாமி. இந்தச் சாமியார் மூலமாகத் தத்துவக் கருத்துக்களைப் புது வெள்ளம்போல் பொழிகிறார் கவிஞர். அங்கு துள்ளும் திரைகளும், நுரைகளும், சுழிப்புகளும், வண்ண மீன்களும் - அதன் அழகை எழுத்தில் வடித்துவிட இயலாது. இந்தக் குள்ளச்சாமி உண்மையிலேயே ஒரு ஜீவன் முக்தர். இது உண்மை என்று மகான் அரவிந்தரும் உறுதிப் படுத்துகிறார். அவருடைய தலை சிறிதாக இருக்கும். அதனால் மாங்கொட்டை சாமி என்று பாரதி அவரை விளிப்பார். அந்தச் சாமியாரிடம் அவருக்கு அளவற்ற ஈடுபாடு. அவருக்கு என்ன வயது என்று யாரும் கூறமுடியாது. மூன்று தலைமுறையினர் அவரைத் தரிசித்திருக்கிறார்கள். எல்லோர் முன்பும் ஒரே உருவம், தோற்றம். "காயகற்பம் செய்து விட்டான்; அவன் வாழ்நாளைக் கணக்கிட்டு வயதுரைப்பார் யாரும் இல்லை" என்பது கவிஞர் வாக்கு. இந்தச் சாமிக்கும் பாரதியிடம் மிகுந்த ஈர்ப்பு. அவரைத் தேடிச்சென்று உரையாடுவார், பாடச் சொல்லிக் கேட்பார். வாடாமல்லிகை என்று கவிஞரைப் பாராட்டுவார். பாரதி இந்தச் சித்தரைப் பற்றிக் கூறியதில் பொய்யே இல்லை என்று அவருடன் பழகிய குஞ்சிதபாதம் என்பவர் எழுதுகிறார். இவர் புதுவைக் கல்லூரி பேராசிரியர், சுவாமிநாத தீட்சிதரின் மகன். **"பாசத்தை அறுத்து விட்டான், பயத்தைச் சுட்டான்"** என்று கவிஞர் இந்தச் சித்தரைப் புகழ்கிறார். அவரிடமிருந்து இத்தகைய பாராட்டைப் பெறுவது எளிதல்ல என்பதை எல்லோரும் அறிவர். "சும்மாயிரு" என்ற மந்திரத்தைச் சைகை மூலமாகத் தாயுமானவருக்குக் கொடுத்தவர் மௌன குரு தேசிகர். இந்த ஒரே சொல் தாயுமானவரைப் படாத பாடுபடுத்தியிருக்கிறது.

அரிய வெண்பா:

பாரதியின் குள்ளச்சாமி தாயுமானவரின் அபூர்வமான வெண்பா ஒன்றைக் கூறுகிறது. தாயுமானவர் வெண்பா பாடியிருக்கிற விவரமே அபூர்வம். **"சும்மா இருக்கச் சுகம் உதயமாகுமே"** வேணுமுதலி அறிவு வாதி. அவர் குள்ளச்சாமியைச் சீண்டுகிறார். குள்ளச்சாமியின் வாய்மூலம் சீறுகிறார் பாரதி. 'அநாவசியக் கேள்விகள் கேட்காதே. நான் சொல்லுவதைக் கவனி. ஹிந்து தேசத்தினுடைய ஜீவனை, யுக யுகாந்தரங்களாய் அழியாதபடி பாதுகாத்து வருவோர் இந்த யோகிகளே; சாமி சிரிக்கிறது. ஹா, ஹா, ஹா 'பலவிதமான லேகியங்களைத் தின்று தலைக்கு நூறு, நூற்றைம்பது பெண்டாட்டிகளை வைத்துக்கொண்டு தடுமாறி, நாள் தவறாமல் ஒருவருக்கொருவர் நாய்களைப்போல் அடித்துக் கொண்டு, இமயமலைக்கு வடபுறத்திலிருந்து அன்னியர் வந்த உடனே, எல்லோரும் ஈரச்சுவர் போல இடிந்து விழுந்து ராஜ்யத்தை (ஈரச்சுவர் உதாரணத்தைப்

புழக்கத்திற்குக் கொண்டு வந்தவரே பாரதி) அன்னியர் வசமாகத் தந்த உங்கள் ராஜாக்களுடைய வலிமையினால் பிழைத்திருக்கிறது என்றா நினைக்கிறாய்? போது (பொழுது) விடிந்தால் எவன் செத்துப்போவான், ஸபண்டீகரணம் (இறந்தவர்களுக்குச் செய்யப்படும் 12-ம் நாள் காரியம்) பிராமணார்த்த போஜனங்கள் (ஆண்டுதோறும் இறந்தவர்களுக்குச் செய்யும் சிரார்த்தத்தின் போது உணவு அளித்தல்) என்று சுற்றிக் கொண்டு வேத மந்திரங்களைப் பொருள் தெரியாமல் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருந்த உங்கள் பிராமணர்களால் இந்தத் தேசம் சாகாவரம் பெற்று வாழ்கிறதென்று நினைக்கிறாயா? அடா! வேணுமுதலி, கேள். ஹிந்துஸ்தானத்து மகா யோகிகளின் மகிமையால் இந்தத் தேசம் இன்றும் பிழைத்திருக்கிறது! இனி இந்த மண்ணுலகம் பிழைத்திருக்கவும் செய்யும்! இந்தக் கருத்தை வலியுறுத்துவதற்காகவே இப்படி 'சும்மா' என்ற கதையை எழுதியிருக்கிறார் பாரதி. இவரின் ஒவ்வொரு கதைகளிலும் இது போன்ற பல சிந்தனைகள் அடங்கியிருப்பதை நாம் காணவியலும்.

முடிவுரை

பாரதியாரின் கதைகள் இன்றும் பொருத்தமானவையாக உள்ளன. ஏனெனில், அவர் எழுப்பிய கேள்விகள் மற்றும் பிரச்சனைகள் இன்னும் சமூகத்தில் நிலவுகின்றன. அவரது கதைகள் வாசிப்பாளர்களை சிந்திக்கவும், சமூக மாற்றத்திற்கான ஒரு கருவியாக இருக்கவும் ஊக்குவிக்கின்றன.பாரதியின் கதைகள் காலத்தால் அழியாதவை. அவை சமூக சீர்திருத்தம், தேசிய உணர்வு, பெண்மையின் முன்னேற்றம் ஆகியவற்றை வலியுறுத்துகின்றன. அவரது எழுத்துக்கள் இன்று கூட மக்களை சிந்திக்க வைக்கும் சக்தி கொண்டவை.

துணைநூற்பட்டியல்:

1. பாரதியார் கதைகள்,சுப்பிரமணி பாரதியார்,கோரல் பப்பிளிகேசன்ஸ்,2018.
2. காலந்தோறும் பாரதி,ஜி.இ.பச்சையப்பன்,பொருள் புதிது,24.10.2022.

102. பாரதியின் படைப்பில் பெண்கள்



சங்குபாண்டி

முன்னுரை

பாரதி வாழ்ந்த காலம் மிகக் குறுகிய காலமாகும். அச்சு மற்றும் வெளியீட்டு வசதிகள் குறைந்த நிலையில் இருந்த அந்தக் காலத்தில் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் எழுத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம் ஆகிய பலவற்றைத் தடை செய்து காலடியில் மிதித்து வந்த காலத்திலேயே அவரது படைப்புகள் வெளியிடப்பட்டிருப்பதை அறியும்போது மேலும் நமக்கு வியப்பு ஏற்படுத்துகிறது. பாரதியாரின் பல்வகைப் பாடல்களில் சமூகம் என்னும் பிரிவில் புதுமைப்பெண் பெண்மை வாழ்க, பெண்கள் விடுதலைக்கும்மி, பெண் விடுதலை என பெண்களின் முன்னேற்றத்திற்காகவும் அக்காலகட்டத்தில் அறைக்குள்ளேயே அடங்கிக் கிடந்த பெண்களை வெளியுலகைக் காணச் செய்யவும் பெண்கள் மீதான மூடநம்பிக்கைகளையும் உடைத்தெறிந்து பெண்களுடைய சுதந்திரத்திற்காகப் பாரதி பல படைப்புகள் படைத்துள்ளார். இதனையே புதுமைப் பெண்ணும் புரட்சிப் பெண்ணும் கண்ட பாரதி என்னும் ஆய்வு நோக்கில் ஆய்வுக் கட்டுரையானது பயணிக்கிறது.

பாரதியும் பெண்கள் கும்மியும் :

இந்திய நாடானது ஆங்கிலேயரிடம் அடிமைப்பட்டுக் கிடந்த காலத்தில் பெண்களும் அடிமைப்பட்டுத் தான் இருந்தனர்.இந்த நிலை மாற வேண்டும் என்று எண்ணிய பாரதி பெண் விடுதலையே நமது நாட்டின் விடுதலை, இந்த மனிதர்களுடைய விடுதலை, பெண்களின் விடுதலை தான் என்ற கருத்தினைக் கொண்டு இந்தப் பாடலைப் பாடியுள்ளார்

"கும்மியடி! தமிழ் நாடு முழுவதும் "
- பாரதியார் கவிதைகள், த: பெண் விடுதலை கும்மி (1)

இப்பாடல் கும்மி வகைப் பாடல் ஆகும். பாரதிக்கு அடிமை என்னும் இருள் நீங்கப் பெண் விடுதலை மிகவும் அவசியம் என்று எண்ணுகிறார். எனவே பெண்களின் விடுதலைக்காகப் பெண்களுடைய கும்மி விளையாட்டினை மனதில் கொண்டு பெண் அடிமை என்னும் விலங்கினை உடைப்பதற்காகக் கும்மியடி பெண்ணே கும்மியடி என்கிறார் பாரதியார். இந்தப் பாடல் முழுவதும் பெண் விடுதலையைப் பற்றியே பாடப்பட்டிருக்கும். கும்மி அடித்தல் என்பது பெண்கள் பொழுதுபோக்கிற்காக ஏதேனும் ஒரு கருத்தினைக் கொண்டு விளையாடும் ஒரு வகை விளையாட்டாகும்.

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென் "
- பாரதியார் கவிதைகள், த: பெண் விடுதலை கும்மி (2)

என்னும் பாடல் வரியால் கும்மி விளையாட்டின் மூலம் சமூகத்தில் பெண்கள் எப்படி இருக்கிறார்கள், பெண்கள் எத்தகைய சக்தி படைத்தவர்கள், என்பதை எடுத்துக் கூறுகின்றார் புரட்சிப் பெண் கண்ட பாரதியார்.

"மாட்டையடித்து வசக்கி தொழுவினில் "
- பாரதியார் கவிதைகள், த: பெண் விடுதலை கும்மி (3)

எனப் பெண்களின் மீதான அடக்குமுறை மற்றும் ஒடுக்கு முறை ஆகியவற்றை ஒழித்து விட வேண்டும் என்ற தனது வேட்கையை இங்குக் கவிதையாக்கி உள்ளார் புதுமைப்பெண் கண்ட பாரதியார். பெண்ணுரிமை பாரதியாருடைய உயிர்நாடியாகும். இவ்வுரிமையைப் பாரதியார் பல கோணங்களில் பேசுகிறார். மக்கள் சமுதாயத்தில் ஆணும் பெண்ணும் இரு கண்களை ஒத்தவர்கள் என்பதே இவருடைய கூற்றாகும். பெண்களுக்கு விடுதலை எண்ணம் ஏற்படுத்த வேண்டும் என்றால்,

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார், இரு "

- பாரதியார் கவிதைகள், த: பெண் விடுதலை கும்மி (5,6)

என்று ஆணும் பெண்ணும் இங்கு ஒன்றுதான். பெண்கள் ஆண்களுக்கு நிகரானவர்கள். பெண்கள் இவர்களுக்கு இளைத்தவர்கள் இல்லை என்று உணர வேண்டும் எனப் பாரதி பெண்களைப் பாரினில் பறை சாற்றுகின்றார்.

இவ்வாறாகப் பாரதியார் தனது முற்போக்குச் சிந்தனையால் பெண் விடுதலை கும்மியின் மூலம் பெண்கள் விடுதலை பெற்றதாகத் தனது சொற்கள் கொண்டு கவி பாடுகிறார்.

பெண் விடுதலை

பெண்களின் விடுதலைக்காகப் பெண்களின் அறியாமையைப் போக்குவதற்கு இருக்கும் அனைத்து வழிகளையும் பாரதி ஏற்படுத்தினார்.

"விடுத லைக்கு மகளிரெல் லோரும்"

- பாரதியார் கவிதைகள்,த: பெண் விடுதலை (1)

என்ற இப்பெண் விடுதலைப் பாடல் வழி பெண்களுக்குச் சுதந்திரம் ஏற்படுத்த வேண்டும் என்றால் அவர்களின் தற்போதைய கற்பு,அடக்கம், ஒழுக்கம் ஆகியவற்றை விட வேண்டும் என்பது அர்த்தம் இல்லை எனவும், தேசபக்தி, சுதந்திரம், அஞ்சாமை ஆகியவற்றைப் பயிற்றுவிக்க வேண்டும் என்கிறார் பாரதியார்.

"திடம னத்தின் மதுக்கிண்ண மீது"

- பாரதியார் கவிதைகள், த: பெண் விடுதலை (1)

என்று பெண் விடுதலைக்காகச் சூளுரையாகப் பாடுகிறார்.

பெண்களுக்கு அவர்களின் பெருமையை எடுத்துக் கூறி உணரச்செய்து பெண்களுக்குத் தன்னம்பிக்கையினை ஏற்படுத்துகிறார்.

"விலகி வீட்டிலொர் பொந்தில் வளர்வதை"

- பாரதியார் கவிதைகள், த: புதுமைப் பெண் (8)

இப்பாடல் வழி அடிமை எண்ணம் உடைய பிள்ளை பிறக்காது என்றும் தாய் அடிமையாக இருந்தால் அடிமைப் பிள்ளைகள் தான் பிறக்கும் எனக் கூறுவதன் மூலம் பெண் அடிமை தீர வழி கூறுவதோடு நாம் விடுதலையை அடைய அடிப்படையை சரி செய்ய வேண்டும் என்று வழி கூறுகின்றார்.

"அறிவு கொண்ட மனித உயிர்களை"

- பாரதியார் கவிதைகள், த: புதுமைப் பெண் (3)

பெண்கள் விடுதலை அடைய பெண்களுக்குப் போராடும் மன உறுதியும், நம்பிக்கையும், சுதந்திரமும் வேண்டும் எனக் கூறும் பாரதியார் அதனைப் பெண்கள் அடைய எவ்வகையில் செயல்பட வேண்டும் யாரைப் பின்பற்ற வேண்டும் என்பதையும் கூறுகின்றார்.

பெண்கள் விடுதலை அடைய பெண் தொழிற்சுதந்திரம், சொத்துரிமை, திருமண உரிமை, விதவை மறுமண உரிமை, மணவிலக்கு ஆகியவை சட்டரீதியாகப் பெறப்பட வேண்டும். தேவதாசி முறை, சதி ஒழிக்கப்பட வேண்டும் எனவும் இதனை,

"இடையி லேபட்ட கீழ்நிலை கண்டீர்"

- பாரதியார் கவிதைகள், த: பெண் விடுதலை (1)

என்ற தனது படைப்பின் வழி பாரதியார் உரைக்கின்றார்.

நம் மக்கள் சாதாரணமான ஒருவர் அறிவுரை கூறினால் கேட்பதைவிட ஒரு சாமியார் சொன்னால் மிகவும் மதிப்பார்கள் என்பதற்காகப் பாரதியார் "மிளகாய் பழச்சாமியார்" என்ற தலைப்பிலான கதையில் மிளகாய்ப் பழச்சாமியார் என்று அழைக்கப்பட்ட ஒரு பெண் துறவி பெண் விடுதலை இயக்கத்தைத் தலைமை ஏற்று நடத்தத் தன்னை தேர்ந்தெடுத்ததைக் குறிப்பிட்டுப் பெண்களின் நிலையையும் தற்போது உலகில் நிகழ்ந்து வரும் மாற்றங்களையும் கூறுவதாக அமைத்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றார். மேலும் அதில் கருப்பு மனிதனுக்கு வெள்ளை மனிதனும், பறையனுக்கு பார்ப்பானும் என நியாயம் செய்வதைக் காட்டிலும் பெண்ணுக்கு ஆண் நியாயம் செய்வதே முக்கியம் எனக் கூறுவதாகக் குறிப்பிட்டுள்ளார். - (சீனி.விசுவநாதன், கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள், தொகுதி - 9, மாடல் ஹவுஸ் லேன் சென்னை 2007, பக்கம் 419 - 422).

“பெண் விடுதலை” என்னும் கட்டுரையில் பாரதியார் பிற நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை கிடைத்துள்ளது என்பதைக் கூறி பெண்கள் முன்னேற ஆரம்பித்துள்ளதையும் அதிலும் வேதவல்லிக்கு அவர் கணவன் கொடுத்துள்ள சுதந்திரத்தையும் குறிப்பிட்டுப் பெண்களுக்கு ஆண்கள் சுதந்திரம் தந்ததை நன்முறையில் காண்கின்றார். பெண் ஆணை விடத் திறமைசாலி என்றும் காங்கிரஸ் கட்சி இங்கிலாந்துக்குப் பேச்சுவார்த்தைக்காகப் பெண்களை அழைத்துச் சென்றால் உடனே சுதந்திரம் கிடைக்கும் என பெண்களின் வலிமையினை ஆண்கள் கூறும் விதமாய் அமைத்து பெண் விடுதலை தர வேண்டியதன் முக்கியத்துவத்தை வேதவள்ளியம்மையினால் வலியுறுத்துகின்றார்.- (சீனி.விசுவநாதன், கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதி படைப்புகள், தொகுதி - 9, மாடல் ஹவுஸ் லேன் சென்னை 2007, பக்கம் 230 – 235).

பெண்மை வாழ்க

“பெண்மை வாழ்கவென்று கூத்திடு வோமடா!”

பாரதியார் கவிதைகள், த: பெண்மை வாழ்க (1,2)

இந்த வைர வரிகளை பாரதியார் பெண்மை வாழ்க என்ற கவிதைப் பக்கத்தில் தருகிறார். கவிதைத் தொடக்கமே பெண்மை வாழ்கவென்று கூத்திடுவோமடா என்கிறார். இதில் தாய் மனைவி போன்ற பெண்களின் உன்னத நிலையை எடுத்துரைக்கின்றார். அதாவது இது நேரடியாக ஆண்களுக்கு பெண்களைப் பற்றி உணர்த்த வேண்டும் என்பதற்காக எழுதப்பட்ட பாடல் ஆகும்.

முடிவுரை

பெண்கள் நமது நாட்டின் கண்களாகப் போற்றக்கூடியவர்கள். தாயாய், சகோதரியாய், தோழியாய், காதலியாய், மனைவியாய் பல உன்னத ஸ்தானங்களை உடையவள் ஆவாள். இப்பேற்பட்ட பெண்களை அக்காலத்தில் பல மூட நம்பிக்கைகளாலும், கட்டுப்பாடுகளாலும் தேவதாசி முறை, சதி உடன்கட்டை ஏறுதல் என அடிமைப்படுத்தி வைத்திருந்தனர். ஆனால் அதனை உடைத்தெறிந்து பெண்கள் நாட்டில் முன்னேற வேண்டும் சாதனை படைக்க வேண்டும் என பெண்களின் சக்தியை உணர்ந்து பாரதி பெண்களின் முன்னேற்றத்திற்காகப் பல படைப்புகளைப் படித்துள்ளார். இதன் விளைவாகவே பல போராட்டங்களுக்குப் பின்னர் பாரதி கண்ட புரட்சிப் பெண்களாய் புதுமைப் பெண்களாய்ப் பல துறைகளில் இன்றும் வளர்ச்சியடைந்து வலம் வந்து கொண்டுள்ளனர் பெண்கள்.

103. பாரதியின் வீர உணர்வுகள்



முனைவர் பா. பாரதி

காரைக்குடி

முன்னுரை

மகாகவி சுப்பிரமணிய பாரதி என்ற பெயர் இந்திய எழுத்துலகில் மட்டுமல்லாது தேசிய இயக்கத்திலும் பொன்னேட்டில் சித்திரமாகப் பதிந்துள்ளது. 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழகம் மட்டும் அல்லாமல் முழு இந்தியாவிற்கும் அவரது கவிதைகள் ஒரு தீப்பொறிக் கனலாக இருந்தன. அவர் எழுதிய வீரச் செந்தமிழ்ப் பாடல்கள் இன்றளவும் இளைஞர்களுக்கு வீர உணர்ச்சிகளை வளர்ப்பதாக உள்ளன.

விடுதலை வீரர் பாரதி

பாரதி ஒருவரைக் கவிஞராக மட்டும் பார்க்க இயலாது. அவர் தன் பாட்டடியால் சாட்டையடி கொடுத்து சுதந்திரப் போராட்டத்தில் தீவிரமாக ஈடுபட்டவர். சிறப்பான செய்தியாளர், பத்திரிகையாசிரியர், சமூக சீர்திருத்தவாதி எனப் பல முகங்கள் அவருக்குண்டு. ஆனால், இதற்கெல்லாம் அடிப்படையாக இருந்தது அவரது வீர உணர்வு தான். பாரதியார் இந்தியாவை அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்ற கனவுடன் வாழ்ந்தார். அவரின் கவிதைகள் மக்களை விழித்தெழச் செய்தது. "வந்தே மாதரம்", "நாம் சுதந்திரம் பெற்றே ஆக வேண்டும்" என்ற வீர முழக்கங்கள், ஒவ்வொரு இந்தியரின் நெஞ்சிலும் நம்பிக்கையை ஏற்றி வைத்தன.

அவர் கவிதைகள் மட்டும் எழுதவில்லை; பத்திரிகைகள் மூலம் அந்நிய ஆட்சியைக் கடுமையாக விமர்சித்து, மக்கள் உரிமை, கல்வி, சமத்துவம் ஆகியவை பற்றியும் தெளிவாகப் பேசியவர். இதனால் அவர் பலமுறை கைது செய்யப்பட்டார், ஆபத்துகளை எதிர்கொண்டார். ஆனாலும் அவர் மனம் ஓரளவும் குலையவில்லை .அவர் உண்மையான வீரர்! பாரதியார் பெண்களின் விடுதலையையும், சாதி மறுப்பையும் வலியுறுத்தினார். "புதுமைப் பெண்", "சாதி வேறுபாடில்லை", "அனைவரும் சகோதரர்கள்" எனச் சமூக சமத்துவத்தை மக்களிடம் பரப்பியவர்.

அந்நியருக்கு எதிராய் வீர உணர்வு

பாரதி தன் காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியை எதிர்த்துக் கவிதைகளும் கட்டுரைகளும் எழுதினார். அந்நியருக்கு எதிரான அவரது வீர உணர்வு இந்திய மக்களின் மனதில் விடுதலைக்கான தீவிர ஆசையை ஊட்டியது. “என்னைப் பிடிக்க வேண்டும் என்றால் பிடிக்கட்டும்; என் கருத்தை அடக்க முடியாது” என்ற அவனது மனநிலை அவரது வீர உணர்வுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். சிறைப்பிடிப்பு, தடை என்ற வார்த்தைகள் பாரதிக்குப் பொருட்டல்ல. பாரதியாரின் கவிதைகளிலும் உரைகளிலும் பாசம், சுதந்திரம், சாதி மீதான வெறுப்பு, அடிமைத்தனம் குறித்த கண்டனம் ஆகியவை தெளிவாக வெளிப்படுகின்றன. அந்நிய ஆட்சியாளர்கள் இந்திய நிலத்தில் மக்களை அடிமைப்படுத்த முயன்ற போது, பாரதி வீரராய்நின்று எதிர்த்து எழுந்தார். பாரதியின் வரிகள் எப்போதும் தூண்டுதலும், சிந்தனையும், துணிவும் கொண்டவை: அவரது கவிதைகள் அந்நியர்களை எதிர்த்து உருக்கமான போராட்ட உணர்வை ஊட்டின. பாரதி எழுதிய பல கவிதைகள் இளைஞர்களை நெஞ்சுருக வைக்கும் வகையில் இருந்தன. “வெள்ளைக்காரன் நம்மை ஆளக் கூடாது” என்ற எண்ணத்தை ஒவ்வொரு தமிழரின் மனத்திலும் ஊன்றி விட்டவர்.

‘வீரத் தமிழன்’ என்ற கனவு

பாரதி அடிக்கடி தமிழ் மக்களை வீரத்துடன் இருக்கத் தூண்டுதல் செய்து கவிதைகள் படைத்தார் .அவர் கனவில் பார்த்த தமிழன் அழகு, அறிவு, ஆன்மிகம் மட்டுமல்லாது ஒரு வீரசிங்கம் போலவும் இருக்க வேண்டும் என்று கூறினார். "எங்கள் தேசத்து வீரர்" என்ற கவிதையில் இத்தகைய வீரத் தமிழனை அவர் வர்ணித்தார். பாரதியார் சுதந்திர இந்தியாவுக்காக மட்டுமல்ல, தமிழரின் வீரம், துணிவு, அறிவு, ஒற்றுமை ஆகியவற்றிற்காகவும் தொடர்ந்து போராடியவர். அவர் கனவு கண்ட "வீரத் தமிழன்" என்பது வனப்புமிக்க உடற்கட்டையுடைய ஒருவரை மட்டும் குறிக்கவில்லை. அது மனதில் துணிவும், சமுதாய நலனுக்கான உறுதியும் கொண்ட ஒரு தமிழரைக் குறிக்கும். பாரதியார் எழுதிய கவிதைகளில், தமிழரின் வீரசிந்தனை பெருமையாகப் புகழப்படுகின்றது.

அவர் விரும்பிய தமிழன் கல்வியிலும், தொழிலிலும் முன்னோடியாக இருக்க வேண்டும். பெண்களுக்கு உரிமை தரும் மனப்பான்மையும், அனைவருக்கும் சம உரிமை வேண்டுமென்பதும் ஒரு வீரத் தமிழனின் அடையாளம். பாரதியார் கனவு கண்ட தமிழன்,

- பயமற்றவனாக இருக்க வேண்டும்
- உண்மை பேசும் ஒளி மனம் கொண்டவனாக இருக்க வேண்டும்
- சமூக நீதி காக்கும் பொறுப்புணர்வுடையவனாக இருக்க வேண்டும்

சிறுவர்களுக்கு ஊட்டிய வீரத்துணிவு

மகாகவி சுப்பிரமணிய பாரதி சிறு பிள்ளைகளுக்கும் வீர உணர்வை ஊட்ட நினைத்தார். அவரது குழந்தைகள் பாடல்களில் கூட இதைப் பார்க்கலாம். "பாப்பாபாடல்கள்" என்று அழைக்கப்படும் பாடல்கள் குழந்தைகள் நெஞ்சிலும் போர்மனத்தை வளர்த்தன. பாரதியார் ஒரு சிறந்த கவிஞரும், சுதந்திரப் போராளியும் மட்டுமல்லாது, எதிர்காலத் தலைமுறையை உருவாக்கும் பொறுப்புள்ள சிந்தனையாளராகவும் இருந்தார். அவர் சிறுவர்களை அன்புடன் நேசித்தார். அவர்கள் மீது நம்பிக்கையுடன், *"இவர்கள் தான் புதிய இந்தியாவின் தூண்கள்"* என்றார். எனவே, அவர் எழுதிய பல கவிதைகள் மற்றும் உரைகள் சிறுவர்களில் வீரத் துணிவை, தன்னம்பிக்கையையும், நேச உணர்வையும் ஊட்டுவதை நோக்கமாகக் கொண்டன. பாரதியார் குழந்தைகளைப் பயமின்றி செயல்பட வைக்க வேண்டும் எனக் கருதினார். "பயமற்று நிற்பவர் தான் மாபெரும் மனிதர்" என்று வலியுறுத்தினார். அவர் எழுதும் வரிகள் குழந்தைகளின் மனதில் துணிவை விதைக்கும் விதமாகக் கவிதைகளை எழுதிக், கல்வி, சுதந்திரம், சமத்துவம் போன்ற உயரிய பண்புகளை குழந்தைகளுக்கு எளிமையாக எடுத்துச் சொன்னார்.

மங்கையர் வாழ்வில் வீர உணர்வு

பாரதி பெண்களையும் வீரமிகு வாழ்வுக்கு அழைத்தார். அவர் பெண்களை வீட்டுச் சுவருக்குள் அடைத்துப்போட விரும்பவில்லை. "புதுமைப்பெண்" என்னும் கவிதையில் வீரப் பெண்ணின் உருவத்தை அவர் கட்டமைத்தார். இங்கே அவர் பெண்களையும் தேசிய சுதந்திரப் போராட்டத்தில் வீராங்கனைகளாகப் பங்கேற்கச் சொன்னார். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் பெண்களின் வாழ்க்கையைப் பற்றிச் சொல்வதில் மிகவும் முன்னோடியாக இருந்தவர். அவரது காலத்தில் பெண்கள் சமுதாயத்தில் இரண்டாம் நிலைபோலக் கருதப்பட்டனர். ஆனால் பாரதி இதைச் சவாலாக எடுத்துக் கொண்டு, பெண்கள் ஆண்களுக்குச் சமமாகவும், சில நேரங்களில் மேலாகவும் இருக்க முடியும் என்று உறுதியுடன் தெரிவித்தார்.

"பெண் என்பவள் பாவமயமானவள் அல்ல, பாயும் புலி போலத் துணிவு கொண்டவள்" என்ற அவரது எண்ணம் மங்கையரின் வீர உணர்வை வெளிப்படுத்தும். அவரது கவிதைகளில் *புதுமைப் பெண், வீரத் தமிழச்சி, சுதந்திரத் தேவி* ஆகிய உருவங்கள் பெண்களின் நவீன சிந்தனை, துணிவு, அறிவு, சமத்துவ உணர்வைப் பிரதிபலிக்கின்றன.

வீர உணர்ச்சிகளின் ஊற்று

மகாகவி சுப்பிரமணிய பாரதியார், தமிழ் மொழிக்கும், இந்திய விடுதலைக்குமாக வாழ்ந்த ஒரு தீப ஒளி. அவர் ஒரு சிறந்த கவிஞர் மட்டுமல்ல; ஒரு வீரப்போர், சுதந்திரச் சிந்தனையாளர், சமூக முன்னோடியும் கூட. அவரது எழுத்துகள் வெறும் கற்பனைகள் அல்ல, உண்மையான வீர உணர்ச்சிகளின் ஊற்று. பாரதி சொந்த வாழ்க்கையிலும் வீரமிகு மனிதர். தனது கருத்துக்கு ஆயிரம் தடைகள் வந்தாலும் அதைத் தெளிவாகச் சொல்லிக் கொண்டே இருந்தார். இதுவும் அவரின் வீர உணர்வின் வெளிப்பாடு தான். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் தமிழரின் வெற்றி, சுதந்திரம், மற்றும் வீரத்திற்கான உணர்ச்சிகளின் ஊற்றாக விளங்கியவர். தமிழர் மட்டுமல்ல, இந்திய மக்கள் முழுவதற்குமான விடுதலைக்கான பெரும் போராட்டத்தில் அவர் மனங்களைக் கவர்ந்த வீரப் பாடல்களை எழுதியவர். அவரது கவிதைகள் உயிருள்ள தீபமாகி, ஒவ்வொரு தமிழனின் நெஞ்சையும் வெப்பமூட்டின.

பாரதியின் மனதில் வீர உணர்வு உயிர் ஓடும் சக்தி போன்றது. அது தீயைப் போலப் பரவும் தீ என்று அல்ல; ஒளியைப் போல் பரவக் கூடியது. இதன் மூலம் மக்கள் பயப்படாமல், விடுதலைக்காகத் துணிந்து போராடும் உந்துதல் கிடைத்தது. பாரதியார் வீர உணர்ச்சியின் ஊற்றாக இருந்து, வீரத்துணிவை வழங்கினார். அவரது எழுத்துகள் தமிழரின் மனதில் தொடர்ந்தும் உயிர் ஊட்டும் பிரகாசம் ஆகும். நம்முள் உள்ள வீர உணர்வைத் தொடர்ந்து வளர்க்கும் பொறுப்பும், கடமையும் நமக்கே உள்ளது.

நாளைய தலைமுறைக்கு பாரதியின் வீர உணர்வு

இன்றைய இளம் தலைமுறையும் பாரதியின் வீர உணர்வைப் பின்பற்றி, நிலைத்துள்ள எதிரிகளை எதிர்த்து வெல்ல வேண்டும். சமூக அநீதிகள், அவலங்கள், பின்தங்கிய நிலைகள் போன்றவை இன்றும் நம்மை வாட்டுகின்றன. இவற்றுக்கு எதிரான போராட்டத்திற்கு பாரதியின் வீரக் கவிதைகள் இன்னும் உயிர் கொடுக்கின்றன. மகாகவி பாரதி தமிழரின் உளரீதியான விழிப்புணர்வையும், தேசிய உணர்வையும் உருவாக்கிய ஒரு துடிப்பான கவி. அவரது கவிதைகள் எப்போதும் வீர உணர்வைத் தூண்டும் புயலாகவே இருந்தன. "இந்தியா என்பதே என் ஜாதி" என்றும், "துணிவும் விசுவாசமும் தான் எனது உயிர்" என்று கூக்குரல் எழுப்பிய வீரப் புலி!

பாரதி எழுதிய “வாழ்க இந்தியா” என்ற வரி ஒரு முழக்கம் மட்டுமல்ல; அது ஒரு தலைமுறைக்கு ஊக்கமும் தைரியமும் அளிக்கும் நம்பிக்கையின் ஒலி. “நாங்கள் தமிழர், நாங்கள் வெல்லுவோம்” என்ற உற்சாக நம்பிக்கை அவரது வரிகளில் தொடர்ந்து வெளிப்படுகிறது. அவரிடம் இருந்த தன்னம்பிக்கை, சமூக சீர்திருத்த நம்பிக்கை, பெண்கள் உரிமை மீது வைத்த உறுதி போன்றவை அனைத்தும் ஒரு வீர மனப்பான்மையின் வெளிப்பாடே. பாரதி போலத் துணிந்து பேசும் எண்ணங்கள், எதையும் பயமின்றி எதிர்கொள்ளும் மனநிலைகள் நாளைய தலைமுறைக்கு அவசியம். அவரது கவிதைகள், எழுத்துக்கள் வீரத்தை வலியுறுத்தும் உன்னத உணர்வுகளால் நிரம்பியவை.நாளைய தலைமுறை பெரிதும் சவால்களை எதிர்கொள்கின்றது. தொழில்நுட்ப மாற்றங்கள், பண்பாட்டுச் சிக்கல்கள், சூழல் பிரச்சனைகள் போன்றவை அவர்களைப் புதிய நெறிகளுக்குக் கூட்டுகின்றன. இவர்கள் இந்தப் பாதையில் செல்வதற்கு பாரதியின் வீர கவிதைகளும், அவரது விடுதலை எண்ணங்களும் பேரொளியாக இருக்கின்றன.

கவிதைகள் அல்ல கனல்

மகாகவி பாரதி எழுதியது வெறும் கவிதைகள் அல்ல, அது வீரத் தீச்சங்குகளே. அவரது வரிகளும், வார்த்தைகளும் இன்னும் போராட்டங்களை, மாற்றங்களை, முன்னேற்றங்களைத் தூண்டுகின்றன. அந்த வீர உணர்வுகளை நாமும் ஏந்திக் கொண்டு, ஒரு புத்துணர்ச்சி கொண்டு வாழ்க்கையில் முன்னேறுவோம். இன்று அவரது வீர உணர்வின் மாபெரும் வெளிப்பாடுகளை நம் நாடும் மொழியும் பெருமையாக எடுத்துக் காட்டுகின்றன. எனவே, பாரதியின் வீர உணர்வுகள் என்றும் நிலைத்திருக்கும்.

104. பாரதி பாடல்களில் வெளிப்படும் பண்டைத் தமிழர் வாழ்வியல் நெறிகள்

பொறிஞர் தொல்காப்பியன் பத்மநாபன்
எம்.பி.ஏ., பி.டெக்., தோகா, கத்தார்(நாடு)

பண்டைத் தமிழர் தங்கள் அகவாழ்விலும் புறவாழ்விலும் பல்வேறு வாழ்வியல் விழுமியங்களை(Moral values) மேற்கொண்டே வாழ்ந்தனர் என்பதைத் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள் திருக்குறள் முதலான நூல்கள் தெரிவிக்கின்றன. இன்றைய கீழடி அகழ்வாய்வின் மூலமும் இந்த உண்மைகள் நன்கு தெரிய வருகின்றன. வாழையடி வாழையென வந்த தமிழர் நேற்றும் இன்றும் நாளையும் இந்த வாழ்வியல் விழுமியங்களை மேற்கொண்டே வாழ்ந்தனர், வாழ்கின்றனர், வாழ்வர். மரபுக் கவிஞராக விளங்கிய பாரதியார் ஒரு விடுதலைக் கவிஞர் மட்டுமல்லர். தமிழர் மேற்கொள்ளும் வாழ்வியல் நெறிகளையும் தமது பாடல்களில் பரவலாக எடுத்துக் கூறியிருக்கிறார். பண்டைத் தமிழர்தம் இந்த வாழ்வியல் விழுமியங்கள் பாரதி பாடல்களில் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை வெளிப்படுத்துவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழர் தமது வாழ்வில் காதலைக் களவு என்றும் மணவாழ்வைக் கற்பென்றும் பகுத்தனர். மனித வாழ்வில் எல்லோர்க்கும் காதல் ஏற்படும். காதல் மிக மெல்லியது. உள்ளத்தில் மலர்ந்த காதல், கண்கள் வழியே வெளிப்படும். இதனைத் தொல்காப்பியர்,

ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப (தொல்.பொரு.கள.1) என்றும்

"நாட்டம் இரண்டும் அறிவு உடம் படுத்தற்குக்

கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்" (தொல். பொரு.கள.5) என்றும் கூறுவார். காதல் இல்லாமல் மானுடம் இல்லை. மனிதனாகத் தோன்றியவர் கொள்ளும் காதல் நிறையலாம், நிறையாமலும் போகலாம். எது எப்படியாயினும் காதல் என்ற உணர்வு இல்லாத மனிதன் இருக்க இயலாது. இதையே தொல்காப்பியர் எல்லா உயிர்க்குமானது காமம் என்பதை,

எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது

தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும் (தொல்.பொரு.பொருளி.29)

என்பார். இந்தக் காதலின் மேன்மையை உணர்ந்தவர் பாரதி . அதனால்தான் பாரதியார் -ஆதலினால் காதல் செய்வீர் உலகத்தீரே அஃது அன்றோ இவ் வுலகத் தலைமை இன்பம் (சுயசரிதை:2 49/3)என்றும்,- காதல் செய்தும் பெறும் பல இன்பம் கள்ளில் இன்பம் கலைகளில் இன்பம் (தனி:14 7/2) காதல் இன்பத்தால் கடவுள்நிலை பெற்றேன்

(வசனகவிதை:6 5/5)காதல் காதல் காதல் (குயில்:2 0/1) காதல் போயின் காதல் போயின் சாதல் சாதல் சாதல் (குயில்:2 0/1,2) எனவும் காதலைப் பற்றிப் பலபடப் பேசுகிறார்.

கற்பு வாழ்க்கை

கற்பென்ற சொல்லுக்கு இலக்கணம் காணும் பாரதியார்,

-குலத்து மாதர்க்குக் கற்பு இயல்பு ஆகுமாம் கொடுமை செய்தும் அறிவை அழித்தும் - (பல்வகை:4 5/3) என்றும் கற்பு நிலை என்று சொல்லவந்தால் இரு கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம் - (பல்வகை:6 5/1) எனவும் ஆண் எல்லாம் கற்பைவிட்டுத் தவறு செய்தால் அப்போது பெண்மையும் கற்பு அழிந்திடாதோ - (சுயசரிதை:2 56/1-) என்றும் கூறுகிறார். கற்பென்பது பெண்மையின் இலக்கணம் என்றாலும் கற்புநிலை எனவந்தால், அது இருவர்க்கும் பொதுமையானது என்ற புரட்சிக்கருத்தைத் தமிழர் வாழ்வில் புகுத்தியவர் பாரதி. ஆண்கள் கற்புநிலை தவறியபின் பெண்மையின் கற்பை அவர்கள் குறைகூற இயலாது என்பது பாரதியின் கொள்கையாகும்.

சங்ககாலம் காட்டும் கற்பு என்பது பெண்களுக்கே உரியதாய் இருந்தது.

நிலைஇய கற்பினாள் நீ நீப்பின் வாழாதாள் - (கலி. 2/13) வட_மீன் போல் தொழுது ஏத்த வயங்கிய கற்பினாள் தட மென் தோள் பிரியாமை பொருள் ஆயின் அல்லதை (கலி. 2/21,22) வறன் ஓடின் வையகத்து வான் தரும் கற்பினாள் நிறன் ஓடி பசப்பு ஊர்தல் உண்டு என (கலி. 16/20,21) என்றெல்லாம் கற்பைப் பெண்களுக்கே கற்பித்த காலமாகச் சங்ககாலம் விளங்கியது. மேலும் மறு இல் கற்பின் வாள்_நுதல் கணவன் (திரு. 6)முல்லை சான்ற கற்பின் மெல் இயல் (சிறு. 30)சிறு_மீன் புரையும் கற்பின் நறு நுதல் (பெரும். 303)மாசு இல் கற்பின் மடவோள் குழவி (நற். 15/7)முல்லை சான்ற கற்பின் மெல் இயல் குறுமகள் உறைவின் ஊரே (நற். 142/10,11) எழுதா கற்பின் நின் சொல்லுள்ளும் (குறு. 156/5)கடவுள் கற்பின் அவன் எதிர் பேணி (குறு. 252/4) எனப் பெண்கள் மட்டுமே கற்புநிலைக்குரியவர் எனச் சங்ககாலம் கூறுவதைப் பாரதியார் ஏற்றுக் கொள்ளவில்லை. கற்பென்பதைப் பாரதி இருவர்க்கும் பொதுவில் வைத்தார்.

கல்வி

கல்வியின் சிறப்பைப் பெருமையை உணர்ந்தவர் தமிழர். பண்டைய தமிழர் கல்வியின் சிறப்பைக் கூறுகின்ற புறநானூறு,

உற்றுழி உதவியும் உறு பொருள் கொடுத்தும்

பிற்றை நிலை முனியாது கற்றல் நன்றே

-----கீழ்ப் பால் ஒருவன் கற்பின் மேல் பால் ஒருவனும் அவன்-கண் படுமே (183)

என்கிறது. சங்ககால மன்னன் பாடிய பாடல் இதுவாகும்.

பாரதியாரும் கல்வியின் சிறப்பைப் பலவாறு கூறுகிறார்.

தேடு கல்வி இலாதது ஓர் ஊரைத் தீயினுக்கு இரையாக மடுத்தல் (தோத்திர:62 6/3)காணும் பற்பல நாட்டிடை எல்லாம் கல்வித் தேவியின் ஒளி மிகுந்து ஓங்க - தோத்திர(62 7/4) பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும் - பல்வகை (3 30/2) கல்வி வளரும் பல காரியம் கையுறும் வீரியம் ஓங்கிடும் (வேதாந்த:15 5/1) எனப் பல்வேறு கருத்துக்களைப் பாரதி கூறுகிறார். ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் எல்லாவற்றிக்கும் மேலானது என்பதைக் கூறும் பாரதியார் இவ்வாறு கூறுகிறார்.

அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல் ஆலயம் பதினாயிரம் நாட்டல்

பின்னர் உள்ள தருமங்கள் யாவும் பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்

அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கு ஓர் ஏழைக்கு எழுத்து அறிவித்தல் (தோத்திர:62 9/2) என்பது அவர்தம் கூற்றாகும்.

ஈகை-கொடை

புறநானூறு ஈகைப்பற்றிப் பேசும்போது

ஈ என இரத்தல் இழிந்தன்று அதன்எதிர்- ஈயேன் என்றல் அதனினும் இழிந்தன்று- கொள் எனக் கொடுத்தல் உயர்ந்தன்று அதன்எதிர்- கொள்ளேன் என்றல் அதனினும் உயர்ந்தன்று (204) என்கிறது. ஈகையின் பெருமையக் கூறும் அதேநேரத்தில் ஈவதை ஏற்றுக்கொள்ளாத நிலை உடையவரும் சங்ககாலமாந்தர் ஆவர் என்பதை இப்புறப்பாடல் சுட்டுகிறது.

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது

ஊதியம் இல்லை உயிர்க்கு (குறள். 231) என்பது வள்ளுவம்.

பாரதியார் ஒருவர்க்கு அடுத்தவர் கொடுப்பதே திறனாகும் என்ற நோக்கில் -ஈகைத் திறன் - என்கிறார்.

மானஉணர்ச்சி

வள்ளுவர் கூறிய மானம் என்ற சொல்லுக்கு விளக்கம் அளிக்கும் பரிமேலழகர் - தன்னிலை தாழாமையும் தெய்வத்தால் தாழ்வு வந்துழி உயிர் வாழாமையுமாம் - என்பர் தமிழர் தன்னிலையில் தாழ நேருமானால் உடனே உயிர்விட்டுவிடுவர் என்பதை மெய்ப்பித்தவன் சேரமான் கணைக்கால் இரும்பொறை. சிறையில் அடைக்கப்பட்ட அவனுக்கு நீர்வேட்கை எடுக்கிறது. காவலரை அருந்த நீர் கேட்கிறான். காவலர் சிறிது தாழ்த்தி நீரைத் தருகின்றனர். மானமறவனாகிய அவன் அந்நீரை மறுத்து உடனே உயிர் விடுகிறான். அவன்கூற்றாக அமைவது இப்புறப்பாடல்.

குழவி இறப்பினும் ஊன் தடி பிறப்பினும்

ஆள் அன்று என்று வாளின் தப்பார் (புறம் -74) .இப்பாடலை எழுதிவைத்து அடுத்த கணமே உயிரை விட்டுவிடுகிறான் சேரமன்னன்.

பண்டைத்தமிழரின் இந்த மானமிக்க வாழ்க்கையைத்தான் தமிழர் வாழவேண்டும் என்று விரும்பியவர் பாரதியார்.

மானமே பெரிது என மதிப்பவர் இரு-மின் - (தேசிய:32 1/93) என்றும் மானமற்று விலங்குகள் ஒப்ப மண்ணில் வாழ்வதை வாழ்வு எனலாமோ (தோத்திர:62 8/3) எனவும் மானம் சிறிது என்று எண்ணி வாழ்வு பெரிது என்று எண்ணும் (தேசீய:40 12/1) என்றும்மானம் வீரியம் ஆண்மை நல் நேர்மை வண்மை யாவும் வழங்குற செய்வேன் - (தோத்திர:37 2/3) மானம் போற்று (பல்வகை:1 2/76) என்றும் மானத்தின் மேன்மையை இன்றியமையாமையை மகாகவி எடுத்துக் கூறுகிறார். பிறப்பது ஒருமுறை ., இறப்பதும் ஒரே முறை ., பிறப்பிற்கும் இறப்பிற்கும் நடுவில் வாழும் இந்த வாழ்க்கையில் இந்த உண்மையை அறிந்தவர் யாரும் மானம் துறந்தும் அறத்தை மறந்தும் வாழமாட்டார்கள்.

அவ்வாறு வாழ்வது சுகமென நினைப்பவர் மனிதரே அல்லர் என்கிறார் பாரதியார்.இதையே பாரதிக்கு முன்சொன்ன வள்ளுவன் வேறுவகையில் கூறினான்,

மயிர் நீப்பின் வாழா கவரிமா அன்னார்

உயிர் நீப்பர் மானம் வரின் (குறள். 97:9) என்பது குறள். பாரதியார் இக்குறளை உள்வாங்கிப் பின்வருமாறு கூறுகிறார்.

பிறந்தவர் யாவரும் இறப்பது உறுதி எனும் பெற்றியை அறிந்தாரேல் மானம் துறந்து அறம் மறந்தும் பின் உயிர்கொண்டு வாழ்வது சுகம் என்று மதிப்பாரோ (தேசீய:26 3/1,2) எனக் கூறுவார்.

மெய்ப்பொருள் உண்மைகள்

கணியன் பூங்குன்றன் தான் பாடிய ஒரே புறப்பாடலால் உலகத்தில் அவன் தன்முத்திரையைப் பதித்துச் சென்றான்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்

தீதும் நன்றும் பிறர் தர வாரா (புறம்-192) எனப்பாடிய இந்தப்பாடல் வாழ்வியல் மெய்ப்பொருள்களை உணர்த்தியிருக்கிறது.

பாரதியார் இப்பாடலைப் படித்ததன் தாக்கமாகப் பல்வேறு இடங்களில் இவற்றின் வெளிப்பாடாகப் பின்வருமாறு பாடிச் செல்கிறார்.

ஏவல்கள் செய்பவர் மக்கள் இவர் யாவரும் ஓர் குலம் அன்றோ (பல்வகை:3 6/1)இன்பங்கள் யாவும் பெருகும் இங்கு யாவரும் ஒன்று என்று கொண்டால் - (பல்வகை:3 20/2) யாவரையும் மதித்து வாழ் (பல்வகை:1 2/87) நன்றும் தீதும் நீ - (வசனகவிதை:1 7/7)உயிர் நன்று சாதல் இனிது (வசனகவிதை:1 1/18)தோன்றி அழிவது வாழ்க்கைதான் இங்கு துன்பத்தொடு இன்பம் வெறுமையாம் இவை - (பாஞ்சாலி:1 140/1)எல்லாரும் ஓர் குலம் எல்லாரும் ஓர் இனம் எல்லாரும் இந்திய மக்கள் எல்லாரும் ஓர் நிறை எல்லோரும் ஓர் விலை எல்லாரும் இந் நாட்டு மன்னர் நாம் எல்லாரும் இந் நாட்டு மன்னர் ஆம் எல்லாரும் இந் நாட்டு மன்னர் வாழ்க(- தேசீய:17 4/2) எனப் பலவாறு கூறுகிறார்

நிறைவாக

சங்கத் தமிழர் வாழ்ந்த நெறியான வாழ்க்கை நெறிகளைச் சங்கப்பாடல்கள் தெரிவிக்கின்றன. அந்த வீரமும் காதலும் நிறைந்த வாழ்வியல் நெறிகளையே இன்றைய தமிழர் மேற்கொள்ளவேண்டும் என்பதையே பாரதியார் தமது பாடல்களில் வெளிப் படுத்தியருக்கிறார் . சான்றோர் ஒன்றாகவே சிந்திப்பர்(Great men think alike) என்பதற்கேற்ப சங்கத் தமிழர் சொன்ன வாழ்வியல் நெறிகளையே பாரதியார் இன்றைய தமிழர்க்கும் எடுத்துக் கூறினார். இவற்றையே இக்கட்டுரை எடுத்துரைக்கிறது.

பார்வைநூல்கள்

1. சங்கஇலக்கியம். 2. பாரதியார் பாடல்கள்.

105. காலத்தை வென்ற பாரதி

சித்ரா மண்டல்

தமிழ் ஆர்வலர்

முன்னுரை

முழுமையை நாடி முதற்பொருளைத் தேடித் தேடி இறக்கை விரித்து சிகரம் தொட்டவன் **பாரதி.** உண்மை எனும் ஒளியை உள்ளத்தில் வைத்து தன் விரிந்த பார்வையால் உலகைப் புதுப்பித்தவன் **பாரதி.** தன் நா நயத்தால், நாணயத்தால் [நேர்மையால்] காலத்தை வென்ற காப்பியங்கள் படைத்தவன் **பாரதி.** தங்களது மதத்தை மட்டுமே துதித்து கவி பாடியோர் பலருண்டு. ஆனால் அனைத்து மதக் கடவுளரையும் துதி பாடி **சமத்துவதை மதத்திலும்** கொணர்ந்தவன் **பாரதி**.

பாரதியின் சொற்திறமை

தன் சொற்திறமையால் மொழி வளத்தால் கவி பலப் பாடி பெரும் பொருள் ஈட்டிப் பயனடைந்தோர் கூட்டத்தின் நடுவே, மொழி கொண்டு சீர் மிகு கண்ணோட்டத்தால் காலத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் மா பெரும் கவிகளைப் படைத்து மகாகவியாக ஒளிர்கிறார் **பாரதி மகான்.** பல நூறு ஆண்டுகளாகத் தமிழ்த்தாயின் ஆற்றல், ஆன்மீகக் காப்பியங்களாக, நீதி போதனைப் பொக்கிஷங்களாக, கலை பண்பாட்டு சித்திரங்களாக, நாட்டுப்புறப் பாடல்களாக, போர்ப்பரணிகளாக, காதல் வீரம் நிறைந்த கவிகளாக வெளிப்பட்டன. இதனைத் தகர்த்தெறிந்து, சிதைந்து கிடந்த சமூகத்தை தூக்கி நிறுத்தும் உன்னதக் **கவி ராஜனை** வரமாகப் பெற்றெடுத்தாள் தமிழன்னை. வெள்ளி மணியோசை சுப்ரமணியாகப் பிறந்து, பாரதத் தாயின் தவப் புதல்வனாக **பாரதியாக பாவின் ரதியாக** மிளிர்கிறான். இந்த ஞானபானுவைப் பற்றி எழுதவோ பேசவோ சற்றும் திறமை இல்லாத நான், காதாரக் கேட்ட அறிஞர் உரைகளிலிருந்தும், கட்டுரை திரட்டுகளில் இருந்தும் மணமிக்க பூக்களை எடுத்து மாலையாக்கி **உலக மகா கவிஞன்** மலரடி வைத்து வணங்குகிறேன்.

தெய்வப்புலவர் பாரதி

சிலவருடங்களுக்கு முன் நான் பணிபுரிந்த நிறுவனத்தில் **women empowerment** என்ற தலைப்பில் பேசும் வாய்ப்பு கிட்டியது. **தெய்வப் புலவர் வள்ளுவரை** அடி பணிந்தேன். அவரது சுண்டு விரல் நீண்டது. விரல் முடிவில் முடிவில்லா புகழ் கோமான் கவிக்கோன் பாரதி நின்றிருந்தார். நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வை, திமிர்ந்த ஞானச் செருக்கு, அதனால் உதித்த அஞ்சாமை, அவலமெய்திக் கலையின்றி இருளில் வாழும் வாழ்க்கை நிலையை உமிழ்ந்து தள்ளுதல் **பெண் அறம்** என்கிற ஞானத்தைத் தட்டி எழுப்பி, பெண்மையை, பெண்ணிய வெளிச்சத்தை உலகிற்கு உணர்த்தியது பாரதியின் இடியோசை.

பட்டங்கள் ஆள்வதும், சட்டங்கள் செய்வதும், வேதங்கள் படிக்கவும் நீதிகள் புகல்வதும், சாதம் படைக்கவும், தெய்வ ஜாதிகள் சமைக்கவும் வல்லவர் பெண்கள் என்று பெண் விடுதலையை, பெண் கல்வியின் முக்கியத்துவத்தை முரசு கொட்டி ஊருக்கு உரைத்தவர் பாரதி. இங்கு தான் பாரதி ஒரு சித்தன், அற்புதமான தீர்க்கதரிசி என்பது புரிந்து வியந்தேன். ரஷ்ய அதிபர் **திரு.லெனின்** பாரதியின் பெண் விடுதலை கவிதைகள் படித்தவரா? பின் அதன் மேல் ஈர்ப்பு கொண்டவரா? அதனால் தான் **1917** ரஷ்ய புரட்சியில் பெண்கள் ஆற்றிய சிறந்த பணிக்காக அவர்களைக் கௌரவித்து **1922 மார்ச் 8 மகளிர் தினமாக** அறிவித்தாரா? குறிப்புகள் எதுவுமில்லை. ஆனால் நண்பர் திரு எம் பி தி ஆச்சார்யா அவர்கள் மூலமாக அனைத்து செய்திகளையும் அலசி ஆராய்ந்து தனது கட்டுரையாக வெளியிட்டார்.

பன்மொழிப் புலவன்

உலக அரசியலைக் கூர்ந்து கவனிக்கும் தலை சிறந்த பத்திரிகையாளன். சர்வாதிகாரி திசார் {TZAR} அரசனைப் பற்றி தனது பத்திரிகையில் 'காக்கா பார்லியமென்ட்' என்ற நகைச்சுவைக் கவிதைகளை எழுதினார். சில நாட்களில் ரஷ்யா புரட்சி வெடித்து கம்யூனிஸ்ட் விளாடிமிர் லெனின் பதவி ஏற்றார். லெனின் அவர்களை புகழ்ந்து பாடிய முதல் அயல் நாட்டு கவிஞன் நமது பாரதி. ஆனால் **லெனின்** அரசியலிலும் நம்பிக்கை இல்லாதவராய் இந்த ஆட்சியும் நெடுநாள் நிற்காது பிளவுபடும் என்று எழுதினார். கவிதை உயிர் பெற்றது. கொடுங்கோலன் அழிந்தான். பொதுவுடைமை மலர்ந்தது. ஆனாலும் மக்களின் மனப்போக்கினால் ussr உடைந்தது. சாகா வரம் பெற்ற கவிதை வரிகள். பின்னரும் பாரதி எழுதினான்...

பாரத சமுதாயம் வாழ்கவே

பொது உடமை ஒப்பில்லாத சமுதாயம் உலகிற்கோர் புதுமை. மனிதர் உணவை மனிதர் பறிக்கும் அவல நிலை இனியுண்டோ? தனியொருவனுக்கு உணவில்லை எனில் ஜகத்தினை அழித்திடுவோம். எல்லாரும் இந்நாட்டு மன்னர். ஜெய ஜெய பாரத சமுதாயம் வாழ்கவே என்று வீதி தோறும் முழங்கினார். பாவத்தை, புண்ணியத்தால் வெல்ல முடியும். சமத்துவத்தை முதன்மை படுத்தி சாதிகள் இல்லை, அனைவரும் ஓரினம் , மேலோர் கீழோர் பாகுபாடு இல்லை. திறமை கொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும் தேர்ந்த கல்வி ஞானம் எய்தி வாழ்வோம், ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை, இழிவு கொண்ட மனிதரென்பது இந்தியாவில் இல்லையே என்று எங்கும் வீர கர்ஜனை செய்தார்.

அந்நியர் ஆட்சி ஒழிந்து சுதந்திர பாரதத்தில் பொதுவுடமை ஆட்சி மலர வேண்டும். விரைவில் கனவு நனவானது. மன்னராட்சி மறைந்து மக்களாட்சி மலர்ந்தது. கவியின் வரிகளில் பெரும்பாலானவை உயிர் பெற்றன. சத்தியமான முத்து வரிகள். ஓடி விளையாடு பாப்பா எனும் பாட்டில் ஜாதிகள் இல்லையடி பாப்பா உயர்வு தாழ்ச்சி கொளல் பாவம் என்றும் வையத்தில் உயர்ந்த தமிழ்ச் சொல்லை தொழுது படித்திடு பாப்பா என்றும் நம் பண்பாட்டைத் தோய்த்து வலிமை மிக்க சமுதாய நெறி முறைகளை பாட்டாகப் புனைந்த நேர்த்தி சொல்லொண்ணாச் சிறப்பு வாய்ந்தது.

முடிவுரை

பராசக்தி காளியை வழிபாட்டு தெய்வமாகப் பாராமல், மரணம் வரை வழித் துணையாகக் கொண்டு, சொல்லடி சிவ சக்தி! எனைச் சுடர் மிகும் அறிவுடன் படைத்து விட்டாய்! வல்லமை தாராயோ இந்த மாநிலம் பயனுற வாழ்வதற்கே என்று சமூக நீதியையே தன் உயிர் மூச்சாகக் கொண்டு வாழ்ந்த பா வேந்தனின் வைர வரிகள் சூரிய சந்திரர் வலம் வரும் வரை பிரகாசிக்கும். காலத்தை வென்றும் நிற்கக்கூடிய பாரதி எனும் **அமர ஜோதியை அகிலம் போற்றும் ஜோதியாக** உயர்த்துவது நம் கடமை என்று கூறி அனைவரையும் வணங்கி மகிழ்கிறேன்.

106. பாரதியின் சிறுகதைகள் வழி விழிப்புணர்வு ஓர் ஆய்வு

சரண்யா

அலகார் தோட்டத் தமிழ்ப்பள்ளி, மலேசியா

பாரதி தமிழின் முன்னோடியும், கவிஞரும், சிந்தனையாளரும் மட்டுமல்லாது சமூக நலனுக்காக எழுதிய எழுத்தாளருமாவார். சுப்பிரமணிய பாரதி எனும் மகாகவி பாரதியார், தமிழ் இலக்கியத்தின் ஒளிவிளக்காக விளங்கியவர். கவிதை, கட்டுரை, பாடல் எனப் பன்முகத் திறமையுடன் திகழ்ந்த அவரின் எழுத்துக்களில் சிறுகதைகளும் குறிப்பிடத்தக்கவை. இக்கதைகள், சமூக மாற்றத்திற்கான விழிப்புணர்வை ஏற்படுத்தும் சக்தியுள்ளவை. பாரதியின் சிறுகதைகள், நேர்த்தியான மொழி, ஆழமான கருத்து, விழிப்புணர்வூட்டும் கருத்து மற்றும் சமூகச் சிந்தனையுடன் கூடியவை என்பதே அவற்றின் தனிச் சிறப்பு. மேலும், பாரதியின் சிறுகதைகளின் முக்கிய நோக்கம், சமூகத்தில் நிலவும் அநீதிகளைச் சுட்டிக்காட்டி மாற்றத்தை ஏற்படுத்துவதாகும். மகாகவி சுப்பிரமணிய பாரதியார் எழுதிய சிறுகதைகள் எண்ணிக்கையில் மிகக் குறைவாக இருந்தாலும், அவை அனைத்தும் சமூக விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. பாரதி தமிழ் இலக்கியத்தில் சிறுகதையைச் சிந்தனையின் கருவியாகப் பயன்படுத்தியவர். அவ்வகையில் அவரது "சின்ன அண்ணாச்சி" என்னும் சிறுகதையில், குழந்தைகளின் கல்வி, சமூகச் சமத்துவம், மக்களின் உரிமைகள் ஆகியவற்றைப் பற்றி நம்மைச் சிந்திக்கவைக்கும் விழிப்புணர்வுக் கருத்துகள் அடங்கியுள்ளது. இக்கதையில் ஒரு சிறு வயது குழந்தைத் தனது குடும்பத்திற்காகக் கடுமையாக உழைக்கும் காட்சியும், அவன் பள்ளிக்குப் போகாமல் வேலை செய்வது இயல்பானதாகவும் காணப்படுகிறது. பாரதி அவனது நிலையைப் பார்த்து பரிதாபப்படுகிறார். அந்தக் குழந்தையின் நேர்மை, உழைப்பு, நியாயத்தைப் பற்றிய புரிதல் பாரதிக்கு வியப்பையும் வருத்தத்தையும் உண்டாக்குகிறது.

கதையின் மையக்கரு குழந்தைகள் பள்ளிக்குப் போகாமல் வேலை செய்வது. பாரதி குழந்தையின் நிலையை விவரிக்கும் போது, அது ஒரு சமூகக் குறைபாடாகவே கூறுகிறார். இதன் மூலம், குழந்தைகளுக்குக் கல்வி மிகவும் அவசியம் என்பதையும், அவர்கள் சிறுவயதிலேயே வேலை செய்வது என்பது மனித உரிமைக்கு எதிரானது என்பதையும் புரியவைக்கிறார். கல்வி, பணம், சமூக அந்தஸ்து இன்றி ஒருவரின் மனிதத் தன்மையை மதிக்க வேண்டும் என்பதே இந்தக் கதையின் வழி பாரதி கூறும் முக்கியமான விழிப்புணர்வு கருத்தாகும். சின்ன அண்ணாச்சியின் நேர்மையும் கடமை உணர்வும் படித்தவர்களுக்குக் கூட ஒரு பாடமாக அமைகிறது. இது உழைப்பின் பெருமை மற்றும் நேர்மையின் மதிப்பு ஆகியவற்றை உணர்த்துகிறது. பாரதி, கதையின் வழியாக, இந்தக் குழந்தையின் நிலையை மாற்ற வேண்டும், இந்தச் சமுதாயத்தில் மாற்றம் தேவை எனும் வலியுறுத்தலைச் செய்கிறார். இது வாசகரை சிந்திக்க வைக்கும் முக்கியமான விழிப்புணர்வாகும். இந்தக் கதையின் மூலம் குழந்தை உரிமைகள், சமத்துவம், நேர்மை, கல்வி ஆகியவை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துகிறார். இது இன்றும் பயன்படும் ஓர் அருமையான சமூகக் கருத்துக்களை உணர்த்தும் படைப்பாகும். பாரதி போல் ஒரு கவிஞன் சிறுகதையில் கூட இவ்வளவு ஆழமான சமூகவியல் பார்வையைக் கொண்டுவரலாம் என்பதற்குச் சிறந்த உதாரணம் 'சின்ன அண்ணாச்சி'.

அடுத்ததாக, "கண்ணன் பாட்டி" என்னும் கதையில், ஒரு முதிய பெண்ணைக் காட்டுவதன் மூலம், வயதானவர்களின் உணர்வுகளுக்கும் மதிப்புள்ளது என்பதை வலியுறுத்துகிறார். இக்கதை ஒரு மனோதத்துவ ரீதியான கதையாகவும், சமூக உணர்வை வளர்க்கும் கதையாகவும் விளங்குகிறது. கண்ணன் என்ற சிறுவனையும் அவனை வளர்க்கும் பாட்டியையும் பற்றிய சிறுகதை இது. பாட்டி, மிகவும் அன்புடன், ஆன்மீக உணர்வோடு, ஒழுக்கத்தோடு வளர்க்கும் ஒருத்தி. அவளது அன்பும், ஒழுக்கத்தையும் கொண்டுப்போவது தான் கதையின் மையம். ஆனால் அதற்குள், சமூக நடைமுறைகள், பழங்கால நம்பிக்கைகள் மற்றும் பெண்களின் நிலை பற்றிய கருத்துகளும் வெளிப்படுகின்றன. பாட்டி கல்வி படிக்காதவளாக இருந்தாலும், வாழ்க்கை அனுபவத்தின்

அடிப்படையில் உயர்ந்த அறிவும், நியாயமான சிந்தனையும் கொண்டவளாகச் சித்தரிக்கப்படுகிறாள். இது "பெண்கள் கல்வியறிவின்றி வீண்" என்ற பாரம்பரிய எண்ணத்தை எதிர்த்துப் பேசும் கருத்தாகும்.

கண்ணன் பாட்டி மரபை மதிக்கிறாள், ஆனாலும் அவள் நியாயத்திற்கு மாறாத மரபுகளையே ஏற்கிறாள். இது பாரதி வலியுறுத்தும் "மாற்றம் தேவை" என்ற கருத்தின் ஒரு பிரதிபலிப்பு. மூடநம்பிக்கையைப் பின்பற்றாமல், அறிவின் அடிப்படையில் வாழ வேண்டும் என்பதையே பாட்டியின் நடத்தை நமக்குச் சொல்லுகிறது. பாட்டியின் செயல்கள், கண்ணனிடம் காட்டும் அக்கறை, அன்பு அனைத்தும் மனித நேயத்தின் சிறந்த எடுத்துக்காட்டுகள். இன்று பல குடும்பங்களில் காணப்படும் அக்கறையற்ற தன்மையை மாற்ற ஒரு வழிகாட்டுதலாக இச்சிறுகதை அமைகிறது. பாட்டி கண்ணனுக்கு நன்னடத்தை, நல்ல பழக்கங்கள் ஆகியவற்றைக் கற்றுத் தருகிறாள். இது பெற்றோர்கள் மற்றும் மூத்தோர் ஒரு குழந்தையின் வாழ்க்கையில் எவ்வளவு முக்கியமான பங்கு வகிக்கிறார்கள் என்பதை உணர்த்துகிறது. "கண்ணன் பாட்டி" சிறுகதை ஓர் எளிய கிராமத்து பாட்டியின் வாழ்வினூடாக நமக்கு உயர்ந்த வாழ்க்கைமுறை, மனித நேயம், சமூக நியாயம் போன்றவற்றை எடுத்துரைக்கும் ஓர் அருமையான படைப்பு. பாரதி தனது நவீன சிந்தனைகளைக் சிறுகதை வடிவில் கூறி, வாசகருக்குள் விழிப்புணர்வு ஏற்படுத்துகிறார். இக்கதை, மரபும் அறிவும் இணைந்து செல்ல வேண்டும் எனும் பாரதியின் எண்ணத்தை வெளிப்படுத்தும் சான்றாகும். எனவே, "கண்ணன் பாட்டி" என்பது ஒரு கதை மட்டுமல்ல; அது சமூக விழிப்புணர்வுகளின் ஒளியளிக்கும் விளக்காகும்.

."சொக்கன்" என்பது ஒரு கிராமத்து இளைஞன். அவன் எளிமையானவன், நியாயத்தைப் பேசும் ஆளாகவும், சூழ்நிலையைப் புரிந்து வாழ்க்கையைப் பார்த்துக் கொள்பவனாகவும் சித்தரிக்கப்படுகிறான். அவன் கூறும் கதைகள் என்பது உண்மையான அனுபவங்களின் தொகுப்பாகவே அமைகின்றன. அவன் கதைகளின் பின்னணியில் வாழ்கையில் ஏற்பட்ட சிரமங்கள், மக்கள் நிலைமை, அதிகாரத்தின் கொடுமை, மற்றும் வாழ்க்கைப் போக்கு குறித்து அவன் கொண்டுள்ள பார்வைகள் வெளிப்படுகின்றன. சொக்கன் பேசும் ஒவ்வொரு கதையிலும் ஒரு வாழ்க்கை நிஜம் மறைந்துள்ளது. அது மூலமாக, கிராமத்து மக்களின் நிம்மதியற்ற வாழ்க்கை, அவர்களின் அன்றாடப் போராட்டங்கள் போன்றவை நம்மைச் சிந்திக்க வைக்கின்றன. இதனூடாகப் பாரதி, உண்மையான வாழ்க்கையை எழுதும் எழுத்தாளராகவே தெரிகிறார்.

சொக்கன் சிந்தனை என்பது நேர்மையை அடிப்படையாகக் கொண்டது. அவன் தன் வாழ்க்கையில் சந்திக்கும் சிக்கல்களை நேர்மையுடன் எதிர்கொள்கிறான். அவன் கதைகளில் வரும் ஒவ்வொரு முடிவும் ஒரு நியாயத்தின் பிரதிபலிப்பாக இருக்கின்றது. இது வாசகருக்கு உண்மை நேர்மை வாழ்வில் முக்கியம் என்பதைக் கூறுகிறது. சொக்கன் சில கதைகளில் அதிகாரிகள், செல்வந்தர்கள் செய்யும் அநீதிகளைச் சொல்கிறான். அவன் விமர்சனம் நேராகவும் துணிவுடனும் அமைகின்றது. இதனால், சமூகத்திலுள்ள அதிகாரத் தவறுகளும், தர்ம சாசன மீறல்களும் அம்பலமாகின்றன.

"சொக்கன் கதைகள்" என்பது ஒரு மனிதன் மூலம் பலரது வாழ்க்கையை வெளிப்படுத்தும் ஒரு சமூகக் கண்ணாடி. பாரதி, சொக்கன் கதைகளை ஒரு கற்பனைக்கதையாய் மட்டும் அல்லாது, நம்மை விழித்துக்கொள்ள வைக்கும் சமூக உரையாடலாகக் கொடுத்துள்ளார். அவரது மொழியும், பார்வையும், சமூக உணர்வும் இந்தக் கதையில் முழுமையாகப் பிரதிபலிக்கின்றன. எனவே, "சொக்கன் கதைகள்" என்பது வாழ்வின் உண்மை நிலைகளையும், மாற்றத்துக்கான தேவை பற்றிய விழிப்புணர்வையும் கூறும் முக்கியமான சிறுகதையாகத் திகழ்கிறது. பாரதியின் சிறுகதைகள் நேர்மையான வாழ்க்கை, சுதந்திரம், தன்னம்பிக்கை, அறிவியல் புரிதல் போன்றவற்றையும் ஊக்குவிக்கின்றன. அவரது எழுத்துக்கள் வழியாக மக்களுக்கு உணர்வு சார்ந்த எழுச்சி, சமத்துவச் சிந்தனை மற்றும் சமூக நீதியை வலியுறுத்தும் விழிப்புணர்வு விதைக்கப்பட்டுள்ளது. பாரதியின் சிறுகதைகள் வெறும் பொழுதுபோக்கு அல்ல; அவை மக்களின் மனங்களில் மாற்றத்தைக் கொண்டு வரக்கூடிய உன்னதமான கருவிகள். இக்கதைகள், வாசகனை விழித்தெழச் செய்பவை, சிந்திக்கச் செய்பவை, செயல்படத் தூண்டுபவை. அவர் எழுதியது ஒரு காலத்தின் குரல் மட்டுமல்ல; எல்லாக் காலங்களிலும் பொருந்தக்கூடிய விழிப்புணர்வு தீபம் எனலாம்.

107. பாரதியின் பன்முகத்திறன்



கவிஞர் அமிர்தா தமிழரசன்
தேனி

முன்னுரை

"பாட்டுக்கொரு புலவன் பாரதியடா- அவன்
பாட்டைப் பண்ணோடொருவன் பாடினானடா- அதைக்
கேட்டுக் கிறுகிறுத்துப் போனேனடா- அந்தக்
கிறுக்கில் உளறுமொழி பொறுப்பாயடா"

என்றார் கவிமணி தேசிக விநாயகம். பாட்டுக்கு ஒரு புலவன் என்றால் அது நம் பாரதியே. கவிஞன் , எழுத்தாளர், இதழாசிரியர், விடுதலைப் போராட்ட வீரர், சமூக சீர்திருத்தவாதி எனப் பன்முகத்திறனோடு அறியப்படும் பாரதியார் பற்றி இக்கட்டுரையில் காண்போம். இவர் நடத்திய பத்திரிகைகளான இந்தியா, விஜயா, பாலபாரதம் போன்றவை பாரதியின் படைப்பாற்றலை வெளிப்படுத்தும் ஆவனமாக விளங்கின . இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடமை ஆக்கப்பட்ட இலக்கியம் பாரதியாருடையதாகும்.

மகாகவி எனும் புனைப்பெயர்

"கவிதை எழுதுபவன் கவியன்று, கவிதையை வாழ்க்கையாக
உடையோன், வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன், அவனே கவி"
என்கிறார் பாரதி.

நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடியான பாரதி மகாகவி என்ற புனைப்பெயரால் அறியப்படுகிறார். பாரதி தனது படைப்புக்களில் பெரும்பாலும் எளிமையான சொற்களைப் பயன்படுத்தினார். இலக்கணச் சட்டங்களைத் தகர்த்தெறிந்த பாரதி, புதுக்கவிதையென அறியப்படும், பாமரரும் கேட்டுணரும் வசனக் கவிதையைத் தமிழக்குத் தந்தார். தனது எழுத்துகளில் நொண்டிச் சிந்து என்ற நடையைப் பயன்படுத்தினார்.

தாய்மொழிப்பற்று

"யாமறிந்த மொழிகளே தமிழ்மொழிபோல்
இனிதாவது எங்கும் காணோம்" என்கிறார் பாரதி.

பாரதி தமிழ், ஆங்கிலம், பிரெஞ்சு, சமசுகிருதம், தெலுங்கு, இந்தி போன்ற பல மொழிகளில் தேர்ச்சி பெற்றிருந்தார். தமக்குத் தெரிந்த பிற மொழிகளுடன் தமிழ் மொழியையும் ஒப்பிட்டுத் தமிழ் மொழியின் இனிமையையும், சிறப்பையும் வியந்து கவிபுனைந்துள்ளார்.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்
பரவும் வகை செய்தல் வேண்டும்" என்கிறார் பாரதி.

பத்திரிகைகளில் பக்க எண்களைக் குறிப்பிட தமிழ் எண்களையும், தமிழ்தேதி, தமிழ் மாதம் மற்றும் தமிழ் வருடம் அச்சிட்டு வெளியிட்ட முதல் பத்திரிக்கையாளர் பாரதி ஆவார்.

தாய்நாட்டுப்பற்று

"பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு" என்றும்
"வாழிய செந்தமிழ், வாழ்க நற்றமிழர்
வாழிய பாரத மணித்திருநாடு" என்கிறார் பாரதி.

பாரதி மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று கொண்டு மாபெரும் ஆளுமையுடன் கவிதை படைத்துள்ளார்.

தேசியக் கவியாம் நம் விடுதலைக்கவி

"ஆடுவோமே – பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட் டோமென்று"

என்றும்

"எங்கும் சுதந்திர மென்பதே பேச்சு- நம்
எல்லோரும் சமமென்ப துறுதியாச்சு"

என்கிறார் பாரதி.

சுதந்திரப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்தால் பாரதி தேசியக்கவி என்று போற்றப்படுகிறார்.

நதிநீர் இணைப்பின் முன்னோடி

"வங்கத்தி லோடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளிற் பயிர் செய்குவோம்" என்கிறார் பாரதி.

வடக்கே உள்ள மிகுதியான நதிநீரின் மூலமாக மையத்து நாடுகளில் வேளாண்மை செய்வோம் என நதிநீர் இணைப்பு பற்றிப் பாடிய முதன்மைக் கவி நம் பாரதி ஆவார்.

இறைவன் ஒருவனே என்றுரைத்த சமயநல்லிணக்கவாதி

பாரதி தனது புதிய ஆத்திச்சூடியில் பரம்பொருள் ஒன்றே என்பதைக் கடவுள் வாழ்த்துப் பாடலில் கூறியுள்ளார்.

"ஆத்திசூடி இளம்பிற யணிந்து
....
பலவகையாகப் பரவிடும் பரம்பொருள்
ஒன்றே, அதனியல் ஒளியுறுமறிவோம்
அதனிலை கண்டார் அல்லலை அகற்றினார்
அதனருள் வாழ்த்தி அமர வாழ்வெய்துவோம்" - பாரதி.

இப்பாடலில் சைவ, வைணவ, கிறித்துவ, இசுலாமிய சமயக் கடவுள்கள் அனைவரையும் குறிப்பிட்டு இவ்வனைத்து சமயங்களிலும் கூறப்படும் மூலக்கருத்து ஒன்றே, அது அறிவு மட்டும் தான், அந்த அறிவைக் கண்டவர்களுக்கு துன்பமில்லை என்றும், அறிவே தெய்வம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பகுத்தறிவு பாசூடிய பகலவன்

"பாருக்கு பகலவனே நாளும் விளக்காகும்
பாரதியின் பகுத்தறிவு மானுடத்திற்கு விளக்காகும் "
ஆம்..
"காலங்கள் கோடிகளைக் கடந்தாலும் பாரதியின் பகுத்தறிவே
காசினியில் ஆதிக்கமாய் காலத்தோடு ஒத்துப்போகும்"

தனது எழுத்துகளாலும், கவிதைகளாலும் பகுத்தறிவைப் பாருக்கு ஊட்டியவன் நம் பாரதி.

அன்பு நிறைய உடையோர் மேலோர்

“நீதி உயர்ந்த மதி கல்வி
அன்பு நிறைய உடையவர்கள் மேலோர்”

ஓடி விளையாடு பாப்பா என்ற பாடலில் பாரதி குழந்தைகள் மனதில் நல்லொழுக்கங்களையும், அறிவையும் விதைக்க விரும்புகிறார். உயர்ந்த குணம், அறிவு, கல்வி மற்றும் அன்பு ஆகிய நான்கும் மனிதனை மேன்மையடைச் செய்யும் என்பதை வலியுறுத்துகிறார்.

சாதிப் பிரிவுகளை சாடிய சமத்துவவாதி.

“சாதி இரண்டொழிய வேறில்லையென்றே
தமிழ்மகள் சொல்லிய சொல் அமிழ்தமென்போம்
நீதிநெறினின்று பிறர்க்குதவும்
நேர்மையர் மேலவர், கீழவர் மற்றோர்”

இரண்டு மட்டுமே சாதி என்றும், பிறர்க்கு உதவும் நேர்மையாளன் மேலானவன் என்றும், மற்றவர் கீழவர் என்றும் கூறியுள்ளார்.

புதிய ஆத்திசூடியின் பொன்னான அறிவுரைகள்

“பெரிதினும் பெரிது கேள்” “ஏறுபோல் நட”
“நெற்றி சுருக்கிடேல்” “கீழோர்க்கு அஞ்சேல்”
“ஓய்தலொழி” “சீறுவோர்ச் சீறு”

சுருங்கச் சொல்லி விளங்க வைக்கும் வள்ளுவன் போல் தனது புதிய ஆத்திசூடியில் சுருக்கமாகவும், கருத்தாழமாகவும் அறிவுரைகள் அள்ளிக் கொடுத்துள்ளார் தேசியகவி பாரதி.

பாரதியின் மகத்தான படைப்புகள்

“என் எழுத்தும் தெய்வம், என் எழுதுகோலும் தெய்வம்”

என்றும்

“எமக்குத்தொழில் கவிதை,
நாட்டிற்கு உழைத்தல்,
இமைப்பொழுதும் சோராதிருத்தல்” - பாரதி

இந்திய விடுதலைப் போராட்டத்தையே பாரதப் போராகவும், பாஞ்சாலியைப் பாரத மாதாவாகவும் உருவகப்படுத்தி மகாகவி படைத்த படைப்புதான் பாஞ்சாலி சபதம் ஆகும். குயில்பாட்டு, கண்ணன்பாட்டு, பாப்பா பாட்டு, புதிய ஆத்திசூடி, விநாயகர் நான்மணிமாலை ஆகியன மிகவும் உன்னதப் படைப்புகள் ஆகும். பாரதி பதஞ்சலியின் யோகசூத்திரம் மற்றும் பகவக்கீதை ஆகியவற்றை தமிழ்மொழிக்கு மொழிபெயர்த்தார். பல தேசிய கீதங்கள், விடுதலைப் பாடல்கள், தோத்திரப் பாடல்கள், ஞானப்பாடல்கள் மற்றும் கதைகள் ஆகியவற்றை எழுதியுள்ளார். உருசியப் புரட்சி மற்றும் பிரெஞ்சுப் புரட்சி பற்றியும் எழுதியுள்ளார்.

கேலிச்சித்திரம் மூலம் கருத்துக்களைக் கூறுதல்

“ஒரு படம் ஆயிரம் சொற்களுக்கு இணையானது”

என்பது சீனப்பழமொழி.

பாரதி தமிழில் கேலிச்சித்திரங்களைப் பயன்படுத்திய முன்னோடியாகக் கருதப்படுகிறார். ஆங்கில ஆட்சியின் குறைகளை இந்தியா இதழில் கேலிச்சித்திரங்கள் மூலம் வெளிப்படுத்தினார். அவரது கேலிச்சித்திரங்கள் விகடசித்திரம் என்றும் கருத்துப்படம் என்றும் அழைக்கப்படுகிறது.

விருதுகளில் உயிர்த்திருக்கும் விடுதலைக்கவி (சுப்பிரமணிய பாரதி விருது)

1982-ல் கோயம்புத்தூரில் பாரதியார் பல்கலைக்கழகம் நிறுவப்பட்டது. 1987ஆம் ஆண்டு முதல் எழுத்தாளர்களுக்கான உயர்ந்த தேசிய விருதான சுப்பிரமணிய பாரதி விருது வழங்கப்படுகிறது. இந்திய அரசின் மனித வள மேம்பாட்டு அமைச்சகத்தால் இலக்கியத்தில் சிறந்த படைப்புக்களை எழுதுபவர்களுக்கு ஆண்டுதோறும் இந்த விருது வழங்கப்படுகிறது. இவரது பெயரில் பல பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் நடத்தப்படுகின்றன. கோயம்புத்தூரிலும், புதுதில்லியிலும் சாலைக்கு பாரதியார் சாலை எனப் பெயரிடப்பட்டுள்ளது திருவல்லிக்கேணியில் பாரதி வாழ்ந்த வீடு தமிழ்நாடு அரசால் வாங்கப்பட்டு, புதுப்பிக்கப்பட்டு பாரதி இல்லம் எனப் பெயரிடப்பட்டுள்ளது.

முடிவுரை

"நான் விழ்வேனென்று நினைத்தாயோ?"

என்ற அழகிய வரிகளுக்கேற்ப இறவாது வாழ்ந்து கொண்டிருக்கும் கவிஞன் பாரதி. பல திரைப்படத் தலைப்புகள் இவரது கவிதையிலிருந்து எடுக்கப்பட்டவை. பாரதி எழுதிய பல கவிதைகள் பல்வேறு தமிழ்த் திரைப்படங்களில் பாடல்களாக பயன்படுத்தப்படுகின்றன. இவற்றை தொகுத்து நோக்கும்போது பன்முகத்திறனோடு பாரினில் அவதரித்த கவிஞர்களுள் பாரதியே முதல்வன் என்பதை அறியலாம்.

"விசும்பின்துளியே மண்ணுயிர்களுக்கு உயிர்
விடுதலைக்கவி பாரதியின் பாக்களே மானுடத்திற்கு உயிர்"

108. பாரதியும் பாஞ்சாலியும்: ஓர் ஆழமான பெண்ணியப் பார்வை



சிந்துஜா கணேஷ்
இல்லினாய்ஸ், அமெரிக்கா.

முன்னுரை

காலம் அதன் சுழற்சியில் எத்தனையோ மாற்றங்களை நிகழ்த்தலாம், ஆனால் சில குரல்கள் காலத்தின் எல்லைகளைக் கடந்து நிற்கும். மகாகவி சுப்பிரமணிய பாரதி அத்தகைய ஒரு குரலுக்குச் சொந்தக்காரர். அவர் வெறும் கவிஞரல்ல, ஒரு சமூகத்தின் ஆழமான அசைவுகளைத் தன் கவிதைகளில் தீர்க்கதரிசனமாய்ப் பதிவு செய்தவர். பாரதி, தேசிய உணர்வின் தூண்டுகோலாக, சமூகத்தின் தேக்கநிலைக்கு எதிரான புரட்சியாக, பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்து முழங்கிய ஒரு நவீன முனிவராக விளங்கினார். அவரது படைப்புகளில், 'பாஞ்சாலி சபதம்' ஒரு தனித்துவமான காவியம். அது வெறும் மகாபாரதக் கதை மறுஉருவாக்கமல்ல; அது அடிமைப்பட்ட தேசத்தின் ஆன்மாவைத் தட்டியெழுப்பவும், ஒடுக்கப்பட்ட பெண்மையின் குரலுக்குச் செவிமடுக்கவும் எழுதப்பட்ட ஒரு தேசிய ஆவணம்.

இந்த நூலில் பாரதி பாஞ்சாலியின் துயரத்தை ஒரு சமூகத்தின் பிரதிபலிப்பாக, அவளது கோபத்தை ஒரு புரட்சியின் தொடக்கப்புள்ளியாக, அவளது சபதத்தை விடுதலையின் பிரகடனமாகப் படைத்தார். இந்தக் கட்டுரை, 'பாஞ்சாலி சபத'த்தை ஒரு விரிவான பெண்ணியப் பார்வையுடன் அணுகுகிறது. பாரதி, பாஞ்சாலியை ஒரு கதைக் கதாபாத்திரமாக மட்டும் அல்லாமல், தனியுரிமை, தன்மானம், நீதி ஆகியவற்றிற்காகப் போராடும் ஒரு நவீனப் பெண்ணின் குறியீடாக எவ்வாறு உருவாக்கினார் என்பதைப் பற்றி ஆழமாக அலசுகிறது. பாஞ்சாலியின் ஒவ்வொரு கேள்வியும், ஒவ்வொரு துயரமும், ஒவ்வொரு சபதமும், பாரதியின் பெண்ணியச் சிந்தனைகளின் வெளிப்பாடுகளாக எவ்வாறு அமைகின்றன என்பதை இந்தப் பார்வை ஆராய்கிறது.

பாஞ்சாலி: விழித்தெழும் பெண்மையின் படிமம்

பாரதியின் 'பாஞ்சாலி' வெறும் இதிகாசப் பாத்திரம் அல்ல; அவள் அடிமைத்தளையிலிருந்து விடுபடத் துடிக்கும் பாரதத்தின் உணர்வு வடிவம். அதே சமயம், அவள் நூற்றாண்டு காலமாகக் குடும்பம், சமூகம் எனப் பல நிலைகளில் ஒடுக்கப்பட்ட பெண்களின் ஒருங்கிணைந்த குரலாகவும் இருக்கிறாள். 'பாஞ்சாலி சபத'த்தின் மையக் கதாபாத்திரமாக அவள் அமையும்போது, அவளது துயரம் தனிப்பட்ட அவமானமாக மட்டும் பார்க்கப்படவில்லை.

பாரதி அதனைப் பெண்ணின் மீதான சமூகத்தின் ஒட்டுமொத்த வன்முறையாகப் பதிவு செய்தார். சூதாட்டத்தில் பாண்டவர்கள் அவளைப் பணயம் வைக்கிறார்கள் என்பது, ஒரு பெண்ணை உடைமையாகக் கருதும் சமூக மனநிலையின் வெளிப்பாடு. இந்தச் சமூகச் சூழலில், பாஞ்சாலி தன் உரிமைக்காகவும், தன்மானத்திற்காகவும் போராடுகிறாள். பாரதப் பண்பாடு என்பது குடும்பம், மதம், சமூகக் கட்டுப்பாடு போன்றவற்றில் பெண்களுக்குப் பல நியதிகளை வகுத்திருந்தது. ஆனால், பாரதியின் பாஞ்சாலி இந்தக் கட்டுப்பாடுகளைத் தன் அறிவாற்றலாலும் துணிவாலும் உடைக்கிறாள்.

அவளது வீரம், வெறும் போர் வீரனின் வீரமல்ல; அது அறம் சார்ந்த, அறிவு சார்ந்த ஒரு போராட்டம். அவள் கூந்தலை அவிழ்த்து, "அடங்காக் கோபக் கனலெரிந்த" நிலையில், சபதத்தை மேற்கொள்ளும்போது, அவள் தன்னுடைய தனிப்பட்ட துயரத்திலிருந்து விடுபட்டு, ஒரு சமூக மாற்றத்திற்கான வித்தாக மாறுகிறாள். பாரதி, அவளது உருவத்தின் மூலமாக, பெண் வெறுமனே அன்பு செலுத்தும் தாய் அல்லது பணிந்துபோகும் மனைவி

மட்டுமல்ல, அநீதிக்கு எதிராகப் போர்க்குரல் கொடுக்கும் ஒரு சக்தி என்பதைத் தெளிவாக உணர்த்தினார்.

அறம் சார்ந்த கேள்விகளின் அனல்

'பாஞ்சாலி சபத'த்தின் மிக முக்கியமான காட்சி, பாஞ்சாலி தர்மசபையில் எழுப்பிய கேள்விகள். அது வெறும் உணர்ச்சிவசப்பட்ட பெண்ணின் கூக்குரல் அல்ல; அது, நூற்றாண்டுகால சமூக அமைப்பை, அதன் அறநெறிகளை, அதன் நீதித் தர்மத்தை நேருக்கு நேர் கேள்வி கேட்ட ஒரு தத்துவப் போர். சூதாட்டத்தில் தன்னைத் தான் பணயம் வைக்கலாமா? எனத் தருமனிடம் அவள் கேட்டபோது, அது ஒரு சட்டபூர்வமான சந்தேகமாக மட்டும் இல்லை.

மாறாக, அது பெண்ணுக்கு ஒரு தனிப்பட்ட அடையாளமும், சுயமரியாதையும் உண்டு என்பதற்கான ஆணித்தரமான வாதம். பாஞ்சாலியின் இந்தக் கேள்விக்குச் சபையில் உள்ள பெரியோர்களால் பதில் சொல்ல முடியவில்லை. பீஷ்மரும், துரோணரும் மௌனம் சாதித்தனர். இந்த மௌனம், அவர்களின் தனிப்பட்ட கோழைத்தனத்தை மட்டும் சுட்டவில்லை; அது நீதியைத் தீர்ப்பளிப்பவர்களாகக் கருதப்பட்டோரின் அறம் சார்ந்த தோல்வியையும், ஆண் ஆதிக்கச் சமூகத்தின் தார்மீகச் சரிவையும் வெளிப்படுத்தியது. ஒரு பெண், தன் அறிவால், சட்டபூர்வமாக அவர்களை மௌனிக்கச் செய்தாள்.

- "தாசனாக்கப்பட்டபின் தருமன் தன்னை என்னை எப்படிப் பணயம் வைக்க முடியும்?"
- "ஒருவர் தன்னை இழந்துவிட்ட பிறகு, தன்னுடைய உடைமையல்லாத ஒன்றைப் பணயம் வைப்பது எந்த அறத்தின் கீழ் வரும்?"

இந்தக் கேள்விகள், ஒரு பெண்ணை வெறும் உடைமையாகக் கருதிய சமூகத்தின் அஸ்திவாரத்தையே அசைத்துப் பார்த்தன. பாரதி, பாஞ்சாலியின் இந்தக் கேள்விகள் வழியாக, பெண்களுக்குச் சொத்துரிமை, சுயமரியாதை, உரிமைகள் போன்ற எண்ணற்ற நவீனச் சிந்தனைகளை விதைத்தார். பாஞ்சாலியின் துணிச்சல், அவளின் நியாய உணர்வு, பாரதியின் கனவுப் பெண்ணின் இலக்கணத்தை முழுமையாகப் பிரதிபலித்தன.

தேசியப் பிரகடனம் மற்றும் தனிப்பட்ட கோபம்

பாஞ்சாலியின் சபதம், தனிப்பட்ட பழிவாங்கும் உணர்வால் மட்டும் தூண்டப்பட்டது அல்ல; அதில் ஆழமான தேசிய உணர்வும், பெண்மையின் சுயமரியாதைக்கான தாகமும் கலந்திருந்தன. அந்நியர் பிடியில் சிக்கித் தவித்த பாரதத் தாயின் அவமானமாக அவளது துயரத்தைப் பாரதி கண்டார்.

- **துரியோதனன் மற்றும் துச்சாதனன்**: இவர்கள் அந்நிய ஆட்சியின் கொடுங்கோன்மைக்கும், அடக்குமுறைக்கும் குறியீடுகளாகக் காட்டப்படுகிறார்கள்.
- **பாண்டவர்கள்**: இவர்கள், ஒடுக்குமுறைக்கு எதிராகப் போராடத் தயங்கிய, செயலில்லாத இந்தியர்களின் பிரதிநிதிகள்.
- **பாஞ்சாலியின் கூந்தல்**: இது, ஒரு பெண்ணின் தன்மானத்துக்கும், நாட்டின் பாரம்பரியத்துக்கும் அடையாளமாகப் பார்க்கப்படுகிறது. அது கலைக்கப்பட்டபோது, நாடும் தன் சுயமரியாதையை இழந்ததாகப் பாரதி உருவகப்படுத்தினார்.

பாஞ்சாலியின் "சபத முடிக்கும் வரை, சிகை முடிப்பதில்லை" என்ற முழக்கம், அந்நிய ஆட்சியின் விலங்கை உடைத்து, சுயராஜ்யம் பெறும்வரை ஓயமாட்டோம் என்ற தேசிய உறுதிமொழியாக ஒலித்தது. அவளது கோபம், வெறும் தனிப்பட்ட கோபமல்ல; அது ஒரு தேசத்தின் மொத்த உணர்ச்சியின் குமுறல். அந்தக் கோபத்தின் அனல், பாரத சுதந்திரப் போராட்டத்தின் நெருப்பாக மாறியது.

அவளது சபதம் பெண்ணின் தனிப்பட்ட உணர்வுக்கும் சமூகத்தின் கோபத்திற்கும் பாலமாக அமைந்தது. அது பழிவாங்கும் வேட்கை என்ற தனிமனித உணர்விலிருந்து தொடங்கி, தர்மத்தையும் நீதியையும் நிலைநாட்ட வேண்டும் என்ற ஒரு சமூகப்

பொறுப்புக்கு உயர்ந்தது. இது பாரதி, தனிப்பட்ட உணர்வுகளைக் கூட தேசிய நலனுடன் இணைக்கும் தன் அரிய ஆற்றலை வெளிப்படுத்திய ஒரு தருணம்.

மௌனத்தின் மர்மமும் அதிகாரத்தின் தோல்வியும்

பாஞ்சாலி துகிலுரியப்படும்போது, அவையில் இருந்த அத்தனைப் பெரியோர்களும் மௌனம் காக்கின்றனர். இந்த மௌனம் வெறும் கோழைத்தனம் மட்டும் அல்ல; அது அதிகாரம், சாதி, பாலினம் போன்ற சமூகக் கட்டமைப்புகளின் சிக்கலான செயல்பாடுகளின் ஒரு வெளிப்பாடு.

- **துச்சாதனனின் செயல்:** இது அதிகாரத்தின் ஒரு குறியீடு. ஒரு பெண்ணின் உடல், ஒரு சமூகத்தின் கட்டுப்பாடு, அதிகாரத்தின் பலம் ஆகியவற்றின் மீது நிகழ்த்தப்படும் வன்முறை இது.
- **பீஷ்மரின் மௌனம்:** பீஷ்மர் அறநெறிகளை அறிந்தவர். ஆனால், அவர் "அரசனுக்குப் பணிந்து நடப்பேன்" என்ற சபதத்தால் கட்டுண்டிருக்கிறார். இந்த மௌனம், தர்மம் அதிகாரத்திற்குப் பணியும்போது ஏற்படும் விளைவுகளைப் பிரதிபலிக்கிறது.
- **துரோணரின் மௌனம்:** துரோணர் தனது அரச விசுவாசத்தால் கட்டுண்டிருக்கிறார். இந்தக் கட்டுப்பாடு, நியாயத்தைத் தன் வாயால் பேச அவர் மறுக்கக் காரணமாகிறது.

இந்தக் காட்சிகள், சமூகத்தின் ஆணிவேராகக் கருதப்பட்ட தர்மம், அதிகாரத்தின் முன் எவ்வளவு பலவீனமானது என்பதைப் பாரதி வெளிச்சம் போட்டுக் காட்டுகிறார். இந்த மௌனத்தை உடைத்து, நியாயத்திற்கான குரல் கொடுத்தவள் பாஞ்சாலி. அவள் தன் உடல் பலத்தால் அல்ல, தன் தார்மீக உறுதிப்பாட்டாலும், அறிவாற்றலாலும் அந்த அவையின் மௌனத்தைக் கேள்விக்குள்ளாக்கினாள்.

இன்றும் ஒலிக்கின்ற குரல்

பாரதியின் 'பாஞ்சாலி சபதம்' நூறு ஆண்டுகளைக் கடந்தும் இன்றும் அதன் முக்கியத்துவத்தை இழக்கவில்லை. பாஞ்சாலியின் குரல், இன்று பணி செய்யும் இடங்களில், குடும்பங்களில், பொதுவெளியில் பெண்கள் எதிர்கொள்ளும் பல்வேறு வடிவங்களில் உள்ள அடக்குமுறைகளுக்கு எதிராக ஒலிக்கிறது. அவளது கேள்விகள், இன்றும்கூட 'உரிமை' என்ற கருப்பொருளை மையமாகக் கொண்டு விவாதிக்கப்படுகின்றன.

பாஞ்சாலி சபதம், பெண் விடுதலைக்கான ஒரு போராட்டக் களமாக, பெண்களின் உணர்வுகளை ஆழமாகப் பதிவு செய்த ஓர் இலக்கியப் படைப்பாக இன்றும் போற்றப்படுகிறது. அது, பெண்ணின் தன்மானம், அவளது தனிப்பட்ட உரிமை, சமூகத்தில் அவளுக்கான இடம் போன்ற பல நவீனச் சிந்தனைகளை உள்ளடக்கியது. இந்தச் சிந்தனைகள் பாரதியாரால் அந்தக் காலத்திலேயே விதைக்கப்பட்டதால், அவர் ஒரு தொலைநோக்குப் பெண்ணியவாதியாகப் போற்றப்படுகிறார்.

நிறைவுரை

பாஞ்சாலியின் ஓர் உணர்ச்சிப் பெருக்கின் வெளிப்பாடு மட்டுமல்ல; அது காலத்தை வென்ற ஒரு சத்தியம், அநீதிக்கு எதிரான ஒரு போராட்டக் களத்தின் பிரகடனம். அது ஒவ்வொரு பெண்ணுக்கும் அவளது உரிமைகளுக்காகவும், தன்மானத்திற்காகவும் போராடத் துணிவு அளிக்கிறது. பாரதி தனது காவியத்தின் மூலம் பாஞ்சாலியை ஒரு தெய்வமாகவோ, வெறும் கதாநாயகியாகவோ உருவாக்கவில்லை; மாறாக, அவளை ஒரு நிஜப் பெண்ணாக, உணர்வுள்ள, துணிவுள்ள, அறிவுள்ள ஒரு போராளியாகப் படைத்து, அவளின் குரலை அழியாத ஒரு பாடலாக மாற்றினார்.

109. பாரதி எனும் பாரதத் தீ



வசீகரன்
சென்னை, தமிழ்நாடு

முன்னுரை

இவன் எட்டயபுரத்து நெட்டை மனிதன், இருமாப்பு கொண்ட விந்தைக் கவிஞன். மனிதகுலத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் நிச்சயம் உடலில் ஒரு திமிர் பிடித்திருக்கும், ஆனால் பாரதியையோ அந்தத் திமிருக்கே பிடித்திருக்கும். இவரின் முறுக்கிய மீசையின் வளைவுகள் இரண்டில் பலமான ஊஞ்சல்கள் இரண்டு. ஆம், ஒன்றில் பெண்களின் நம்பிக்கையும், மற்றொன்றில் சமத்துவத்தின் தும்பிக்கையும் அமர்ந்து ஆடுது கம்பீரமாக. அப்படிப்பட்ட பாரதி எனும் தீயைப் பற்றி பார்ப்போம்.

பாரதி

நீ பூணூல் அணிந்த சூத்திரன்
மனிதகுலத் தீண்டாமையை அடித்து நொறுக்கிய எந்திரன்
உன்னை அடக்கி ஆளக் காத்திருந்தது
உனது முண்டாசைக் குறிவைத்த ஏகப்பட்ட குண்டாசுகள்
அவர்களுக்குத் தெரியாது நீ சிறைக் கம்பியையே நெம்பி விடுதலைக் கனையை அவன் மீது எய்வாயென...

கவிஞனே,
உனது கருவிழி தானே
பல புரட்சிகளின் கலங்கரை விளக்கம்
உனது தீ விழிச் சுவாலைதானே
அக்ரஹாரத்தில் நம் சூத்திரர் நடத்திய விடியலின் யாகம்
அக்ரகாரத்தில் அவதாரம் எடுத்த சூத்திரன் நீ
ஆனாலும் அரிதாரம் பூசிய ஆளுமை நிறைந்த ஆத்திகன் நீ

கவிஞனே,
காணி நிலம் கேட்ட உனக்கு
தர மறுத்துப் போ நீ என்றது
அன்றைய சமூகம்

ஆனால் இன்றோ பசுஞ்சோலை எங்கும் உன் கவிதைக்குப் பாமாலையோடு புரட்சி வாளைக் கையில் ஏந்தி வா வா எனக் காத்திருக்கும் அதே சமூகம். ஆம் அது நீ வணங்கிய பராசக்தி அருளா என எனக்குத் தெரியவில்லை. காரணம் இதுவரை நான் 'பாரா சக்தி' என்பதால் எனக்குப் புரியவில்லை.

கொக்கரித்துக் கொக்கரித்து, தோள் உயர்த்தி வாளெடுத்து வந்தவர்கள் மத்தியில் நீ, தமிழ் நூலெடுத்து கால் நடந்து, கவி பாடிப் பகைவனுக்குச் சூளுரைத்த சூத்திரதாரி. சாஸ்திரம் படித்த நீ உனது கோத்திரம் உடைத்துப் பெண் விடுதலைக்காக ரௌத்திரம் படைத்தாய்.

பாரதத்..தீ

நீ சமத்துவத் தீயை மூட்டி விட்டாய்
அதில் தீண்டாமைப் பேயைச் சுட்டு விட்டாய்
நீ காக்கையை அழைத்து வெள்ளை அடிப்பாய்
குருவிகளின் பசியை நீ கொள்ளை அடிப்பாய்
அடிமைச் சங்கிலி அறுத்த அயோத்திதாசர் நீ
மீசையை முறுக்குவதிலோ
அந்த ரெட்டைமலை சீனிவாசன் நீ

பாரதி
பார் அதில் மிளிருது விடுதலைத் தீ

உனது பசியைக் கொஞ்சம் எனக்கும் தா
நான் அதில் படுத்துறங்கி பக்குவமாகின்றேன்

உனது திமிரைக் கொஞ்சம் எனக்குத் தா
அதில் நான் முகம் பார்த்து மீசை முறுக்குவேன்

உன் வறுமையையாவது எனக்குத் தா
என் வயிற்றுக்குக் கொஞ்சம் பாடம் எடுப்பேன்

முடிவுரை

காலமே, உன்னால் கொடுக்க முடியாத நிம்மதியை அந்த ஐந்தறிவு ஜீவன்தானே அவனுக்குக் கொடுத்தது. எல்லோருக்கும் காலன் எருமை மீது வருவான், என் பாரதிக்கோ காலன் யானை மீது அல்லவா வந்தான். எட்டயபுரமே, உன் வயிற்றில் பிறந்த என் பாரதியை நீ என்ன பாடு படுத்தித் துரத்தினாய். ஒன்று சொல்கின்றேன் கேள், அவன் பெயர்தான் இன்று உன் தலையை அலங்கரிக்கும் மணிமகுடம். அதனால்தான் வரலாற்றிலும் உனக்கும் அழிக்கமுடியாத ஓர் இடம். உன்மீது அவன் பதித்துவிட்டுப் போயிருக்கின்றான் தங்கத்தால் ஆன தடம். அதனால்தான் உன்னைத் தேரெனக் கட்டி இழுக்கின்றோம் யாம் கௌரவமாக வடம்.

110. பாரதியின் படைப்புகளில் மரபின் சுவடுகள் இலக்கியம் சமூகம் ஆன்மிகம்

பா.முருகன்

II - எம். ஏ, கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி
கோயம்புத்தூர்

முன்னுரை

பாரதியார் நவீன தமிழ் இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவராகக் கருதப்படுகிறார். இவர் மகாகவி (மகத்தான கவிஞர்) என்ற புனைப்பெயரைக் கொண்டு அறியப்படுகிறார். பாரதி தம்முடைய பாடல்களை இயற்ற பெரும்பாலும் எளிமையான சொற்களையே பயன்படுத்தினார்.

புதுக்கவிதையின் முன்னோடி

இலக்கணச் சட்டங்களைத் தகர்த்து எறிந்த பாரதி புதுக்கவிதை எனப் புகழப்படும் படிப்பறிவு இல்லாத ஏழை எளியவரும் கேட்டு உணர்ந்து கொள்ளும் வகையில் வசனக்கவிதையைத் தமிழுக்குத் தந்தார். இவர் தனது கவிதைகளில் புதுமையான யோசனைகளையும், நுட்பங்களையும் வெளிப்படுத்தினார். பாரதியார் தனது பெரும்பாலான படைப்புகளில் முற்போக்கான சீர்திருத்த இலட்சியத்தைப் பரப்பினார். பாரதியார் பல இந்து தெய்வப் பாடல்களைப் பாடினார். அரவிந்தர், பால கங்காதரத் திலகர் மற்றும் சுவாமி விவேகானந்தர் போன்ற இந்திய தேசிய தலைவர்களின் உரைகளையும் மொழி பெயர்த்தார். தம் தாய்மொழி தமிழின் மீது உள்ள அளவு கடந்த அன்பு கொண்ட இவர் "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவ தெங்கும் காணோம்" எனக் கவி பாடினார். அந்த வகையில் பாரதி தேசபக்திப் பாடல்கள் மூலம் நாட்டு மக்களுக்கு சுதந்திர உணர்வை ஊட்டினார்.சுதந்திரப் பள்ளு என்ற தலைப்பிலும்,தோத்திரப் பாடல்கள் என்ற பெயரில் தமிழ்க் கடவுளாக விளங்கும் முருகப் பெருமானை பாட்டுடைத் தலைவனாகக் கண்டு முருகக் கடவுள் மீது கிளித்தூது என்ற தலைப்பில் பாமாலையை பாரதி படைத்துள்ளார்.

சுதந்திரப் பள்ளு (பள்ளர் களியாட்டம்)

"ஆடுவோமே - பள்ளுப் பாடுவோமே"

உழவின் சிறப்பு

"உழவுக்குந் தொழிலுக்கும் வந்தனைசெய்வோம்-வீணில்
உண்டுகளித் திருப்போரை நிந்தனை செய்வோம்"

உழவுத் தொழிலைப் போற்றுவோம். அதைப் போன்ற இதர வேலைகளையும் போற்றுவோம். எந்த வேலையும் செய்யாமல் வீணாக உணவருந்தி சுகமாக இருப்பவர்களை ஏளனம் செய்து தூற்றுவோம். எந்த வேலையும் செய்யாமல் வீணாகப் பொழுதைப் போக்குபவர்களுக்குப் பாடுபட்டு உடல் இளைத்துப் போக மாட்டோம்.

வெற்றிக் களிப்பு

"நாமிருக்கும் நாடுநம தென்பதறிந்தோம் - இது
நமக்கே உரிமையாம் என்பதறிந்தோம்"

நாம் வாழ்கின்ற தேசம் நம்முடைய தேசம் என்பதை உணர்ந்து கொண்டோம். இனி இந்த தேசம் நமக்கு மட்டுமே சொந்தமானது என்பதனையும் புரிந்து கொண்டோம். மேன்மை பொருந்திய இந்த பூமியில் இனிமேல் யாருக்கும் சேவகம் (அடிமை) செய்ய மாட்டோம். எங்கும் தீர்க்கமாக நிறைந்திருக்கின்ற (பரிபூரணன்) இறைவனுக்கு மட்டுமே தொண்டுகள் செய்து வாழ்க்கை நடத்துவோம்

முருகக் கடவுள்மீது கிளித் தூது

(தம்மை நாயகியாகவும், முருகப் பெருமானை நாயகனாகவும் பாவித்துப் பாடிய பாடல்)

"சொல்ல வல்லாயோ? - கிளியே சொல்ல நீ வல்லாயோ?"

தற்காலத்தில் சிதம்பரம் என்று அழைக்கப்படும் தில்லையம்பதியில் சிற்சபையில் நர்த்தனம் புரிகின்ற தேவர்களுக்கெல்லாம் தேவனாகிய (அமரர்பிரான்) சிவபெருமானின் அருமை மைந்தனிடம், இவ்விடத்து வருகை புரிந்து கூடி உறவாடிக் களித்திருக்க வேண்டும் என்று கிளியே நீ தூது செல்வாயா! அல்லி மலர்கள் பூத்துக் கிடக்கும் தடாகத்தின் கரையில் அன்றொரு நாள் மாலைப் பொழுது வேளையிலே அவ்விடத்தில் ஒரு முல்லைக் கொடியின்பால் (பக்கத்தில் அவன் என்னோடு) செய்த சரச விளையாடல்களை முழுமையாகத் தன் நினைவில் இருந்து நீக்கிவிட அவன் அறிந்து கொள்வது ஏனோ என்று கேட்டு, கிளியே தூது சொல்வாயா?

விடுதலை வெண்பா (பராசக்தியின் பெருமை)

"சக்தி பதமே சரணென்று நாம்புகுந்து.."

அன்னை பராசக்தியின் திருவடிகளையே (பதம்) அடைக்கலமாக நாம் சேர்ந்து பக்தியோடு பாடல்கள் பல பாடி வீடு பேற்று நிலையை அடைவோமாக! அதனால் கவலைகளில் இருந்தும் நோயிலிருந்தும் விடுபட்டு தெய்வீக செல்வத்தைப் (பொறி) பெறுவோம்.

வேலின் பெருமைகள்

ஏழைகளாக (வறிஞர்) இப்புவியில் பிறந்து காலம் தள்ளிக் கொண்டிருப்பவர்களே! வெற்றியும் (வெல்), சிறப்பும் மிக்க வைர(வயிர) வேலானது, உங்கள் சிந்தனையில் (அறிவில்) தோன்றி இந்த உலகில் (அவனி) அது நேரிலும் வெளிப்படும். உங்கள் இலட்சியத்தை அடைந்து (குறிகண்டு) செல்வ வளங்கள் எல்லாம் கிடைக்கப்பெற்று மேன்மை பெறுவதற்கான வல்லமையை (சக்தி) அந்த வேல் வழங்கும். "வேலைப் பணிந்தால் விடுதலையாம்; வேல்முருகன்.." வேலை வழங்கினால் விடுதலை என்கிற முத்தி கிட்டும். வேலை ஏந்திய அந்தக் கடவுளின் திருவடிகளைத் தொழுதால் கவலைகள் மறைந்து போகும்(போம்). மேன்மையான விவேகத்தை (மேலறிவு) இயல்பாக அடைந்து, சக்தி சக்தி என்று இடைவிடாமல் ஓதிக்கொண்டிருந்தால் அதுவே பேரானந்தம் ஆகும். முருகப்பெருமான் அழகிய பச்சை நிற மயிலின் மீது ஏறிவரும் வீரன் ஆவான். அவன் எழிற்கோலம் கொண்டவன். இளைஞன் (கௌமாரன்). உருவான ஒளி பொருந்திய திடமான பன்னிரண்டு தோள்களின் (புயம்) வலிமையுடையவன். அவனுடைய திருவடியை வணங்குகின்ற சுப்பிரமணிய பாரதியாராகிய எனக்கு அருள் தன்மையும் அழகும் நிரம்பி வழிகின்ற தமிழ் மொழியில் புலமையை உண்டு பண்ணக் கூடியவனும் தன் அடியார்களுக்கு எளிதில் கிட்டக்கூடியவனாகிய அழகன். நம் இதயத்தை அழகானதாக மாற்றும் திருவண்ணாமலை என்னும் ஊரில் எழுந்தருளி இருப்பவன்.

ஞானப் பாடல்கள்

"மதியுண்டு செல்வங்கள் சேர்க்கும் - தெய்வ.." (ஜய)

அறிவு(மதி). நம் அனைவரிடத்திலும் இருக்கிறது. அது நமக்குச் செல்வ வளங்களைக் கொண்டு வந்து சேர்க்கும். தெய்வ பலம் (வலி) நம்மிடம் இருக்கிறது. அது தீமைகளை எல்லாம் போக்கும். நல்ல வினைப் பயன்(விதி) உண்டு. இது செய்கின்ற தொழில்களுக்கு எல்லாம் தக்க பலன் கிடைக்கச் செய்யும் மனக்குறை ஏதுமில்லை. கவலை (விசனம்) என்னும் சமுத்திரத்தை வற்ற வைப்பதற்கு முருகப்பெருமானுடைய திருக்கரத்தில் கணை (வேலாயுதம்) இருக்கிறது ஆதலால் வெற்றி நிச்சயம் அச்சப்படத் தேவையில்லை.

முடிவுரை

மேற்கண்ட பாடல்களில் பள்ளு, தூது ஆகிய சிற்றிலக்கியங்களின் மரபுகளைப் பின்பற்றி சுதந்திரப் பள்ளு, முருகக் கடவுள்மீது கிளித் தூது ஆகிய பாடல்களை இயற்றியுள்ளார். பா வகைகளில் ஒன்றான வெண்பாவின் இலக்கணம் பெற்று அமைகின்ற வகையில் விடுதலை வெண்பா பாடல்களை ஏற்றியுள்ளார். ஆன்மிக நிலையை அடைவதற்கு தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமானை வைத்து ஞானப் பாடல்களைப் பாடியுள்ளார். அதுமட்டுமின்றி காளி சிவ ஸ்தலங்களில் புண்ணிய ஸ்தலமாக விளங்குகின்ற திருவண்ணாமலை, சிதம்பரத்தையும் குறிப்பிட்டுள்ளார். சுதந்திரப்பள்ளுப் பாடல்களில் உழவர்களான பள்ளர் சமூக மக்களையும் உழவுத்தொழிலையும் முதன்மைப்படுத்திக் காட்டியுள்ளார். பாரதியார் தனது படைப்புகளில் தெய்வங்கள் பலவற்றைக் குறிப்பிட்டுப் பாடி இருந்தாலும் முருகப் பெருமானையே ஞானத்தின் கடவுளாகக் குறிப்பிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

111. பாரதியாரின் படைப்புலகம் ஒரு ஆய்வு



சீ.யக்ஸிதா

அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப் பள்ளி கும்பகோணம்.

முன்னுரை

மகாகவி சுப்ரமணிய பாரதியார்–இந்தப் பெயர் தமிழ் இலக்கியத்தில் ஒரு விடுதலைப் புயல்! அவரது படைப்புலகம் கவிதைகள், உரைநடைகள், மொழிபெயர்ப்புகள், மற்றும் தன்வரலாற்று எழுத்துகளை உள்ளடக்கி, தமிழர்களின் இதயத்தில் தேசபக்தி, பக்தி, சமூக மாற்றம் ஆகியவற்றைப் பற்ற வைத்தது. 12ஆம் வகுப்பு மாணவனாக, பாரதியின் எளிய மொழியும், உணர்ச்சி ததும்பும் எழுத்தும் என்னை ஆட்கொண்டன. இந்தக் கட்டுரை பாரதியின் முக்கிய படைப்புகளான பாஞ்சாலி சபதம், கண்ணன் பாட்டு, சமூக சீர்திருத்த உரைநடைகள், மற்றும் அவரது குறைவாக அறியப்பட்ட படைப்புகளை ஆராய்கிறது. இவற்றின் உள்ளடக்கம், விமர்சனங்கள், மற்றும் சுவாரசியமான விவரங்களை வெளிப்படுத்தி, பாரதியின் படைப்புலகத்தின் மகத்துவத்தை எடுத்துரைப்பது இதன் நோக்கம்.

பாரதியின் படைப்புகளின் கண்ணோட்டம்

பாரதியின் படைப்புலகம் ஒரு மலையைப் போல உயர்ந்து, கடலைப் போல ஆழமானது. அவரது கவிதைகள் (கவிதை) தேசபக்தி (பாரத நாடு), பக்தி (கண்ணன் பாட்டு), தத்துவம், இயற்கை அழகு ஆகியவற்றைப் பாடுகின்றன. பாஞ்சாலி சபதம், குயில் பாட்டு போன்றவை அவரது கவிதைத் திறனை வெளிப்படுத்துகின்றன. அவரது உரைநடைகள் (உரைநடை), சுதேசமித்திரன், இந்தியா இதழ்களில் வெளியாகி, சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, தேசியவாதம் ஆகியவற்றை வலியுறுத்தின. மேலும், பகவத் கீதை மொழிபெயர்ப்பு, கடிதங்கள், மற்றும் தன்வரலாற்று துணுக்குகள் அவரது பன்முகத் திறனை காட்டுகின்றன. இவை பாரதியை தமிழ் இலக்கியத்தின் மகாகவியாக உயர்த்தின.

பாஞ்சாலி சபதம்: புரட்சியின் குரல்

பாஞ்சாலி சபதம் மகாபாரதத்தில் பாஞ்சாலி (திரௌபதி) அவமானப்படுத்தப்பட்டு, பழிவாங்க உறுதியெடுக்கும் கதையை மையமாகக் கொண்ட காவியக் கவிதை. இதில் பாஞ்சாலி அடிமைப்படுத்தப்பட்ட இந்தியாவையும், கௌரவர்கள் ஆங்கிலேய ஆட்சியையும் உருவகப்படுத்துகின்றனர். "விடுதலை! விடுதலை! பாஞ்சாலிக்கு விடுதலை!" எனும் வரிகள் மக்களை உற்சாகப்படுத்தின. இதன் எளிய மொழி, நொண்டி சிந்து மெட்டு, மற்றும் வெண்பா பாணி பொதுமக்களை ஈர்த்தன.

விமர்சனங்கள்:

தமிழ் இலக்கிய அறிஞர் வை.மு.கோதைநாயகி இதை "தமிழ் காவிய இலக்கியத்தில் ஒரு திருப்புமுனை" எனப் புகழ்ந்தார். சு. வெங்கடேசன் (தமிழ் பல்கலைக்கழகம்) இதை "புரட்சிகர உணர்வின் கவிதை" எனக் குறிப்பிட்டார். சிலர் இரண்டாம் பாகத்தின் தீவிரம் முதல் பாகத்தை விட குறைவு என விமர்சித்தாலும், இதன் பெண்ணியக் கருத்துக்கள்-பாஞ்சாலியின் வலிமை-நவீன பெண் விடுதலை இயக்கங்களுக்கு முன்னோடியாக அமைந்தன.

சுவாரசியமான விவரங்கள் :

- புதுச்சேரியில் நாடுகடத்தப்பட்டபோது (1908-1918) எழுதப்பட்ட இது, பாரதியின் தேசபக்தி உணர்வை வெளிப்படுத்துகிறது.
- பாஞ்சாலியை ஒரு வலிமையான பெண்ணாக சித்தரித்து, பெண்ணியத்தை முன்னிறுத்தியது முதல் முறையாகும்.
- இந்தக் கவிதை விடுதலைப் போராட்டத்தில் பாடப்பட்டு, மக்களை ஒன்றிணைத்தது.

கண்ணன் பாட்டு: இதயத்தின் இனிமை

கண்ணன் பாட்டு கிருஷ்ணனை காதலன், நண்பன், வழிகாட்டி, தெய்வம் என பல பரிமாணங்களில் சித்தரிக்கும் கவிதைத் தொகுப்பு. "கண்ணம்மா, என் கண்ணம்மா, கவி பாடும் காதல் கண்ணம்மா" போன்ற வரிகள் இதயத்தைத் தொடுகின்றன. இவை பக்தியையும், மனித உணர்வுகளையும் இணைத்து, எளிய மக்களையும் ஈர்க்கின்றன.

விமர்சனங்கள் :

கவிஞர் பத்மதேவன் (பாரதியார் கவிதைகள்: மூலமும் உரையும்) இதை "தமிழ் பக்தி இலக்கியத்தில் புதிய மைல்கல்" எனப் பாராட்டினார். சிலர் இதை பாஞ்சாலி சபத த்துடன் ஒப்பிடும்போது குறைவான புரட்சிகரமாகக் கருதினர், ஆனால் இதன் உணர்ச்சி ஆழம் மற்றும் இசைத்தன்மை பரவலாகப் பாராட்டப்பட்டன.

சுவாரசியமான விவரங்கள் :

- பாரதி தனது மனைவி செல்லம்மாளை "கண்ணம்மா"வாக கற்பனை செய்து எழுதியதாகக் கூறப்படுகிறது, இது அவரது தனிப்பட்ட உணர்வுகளை வெளிப்படுத்துகிறது.
- இந்தக் கவிதைகள் கர்நாடக இசைக்கு ஏற்றவாறு எழுதப்பட்டு, இன்றும் பாடப்படுகின்றன.
- இவை பாரதியின் ஆன்மிக மற்றும் உணர்ச்சி பயணத்தை பிரதிபலிக்கின்றன.

சமூக சீர்திருத்த உரைநடைகள்: மாற்றத்தின் விதைகள்

பாரதி சுதேசமித்திரன் மற்றும் இந்தியா இதழ்களில் எழுதிய உரைநடைகள் சமூக சீர்திருத்தத்தை முன்னிறுத்தின. "பெண்கள் கல்வி கற்க வேண்டும், வாக்குரிமை பெற வேண்டும்" என வாதிட்டார். சாதி ஒழிப்பு, குழந்தைத் திருமண எதிர்ப்பு, தேசியவாதம் ஆகியவற்றை எளிய மொழியில் வலியுறுத்தினார்.

விமர்சனங்கள் :

தமிழ் பல்கலைக்கழக ஆய்வுகள் இவற்றை "சமூக மறுமலர்ச்சியின் அடித்தளம்" எனக் குறிப்பிடுகின்றன. சிலர் இவை கவிதைகளைப் போல பரவலாகப் படிக்கப்படவில்லை எனக் கூறினாலும், இவை பாரதியின் சமூக சிந்தனையை வெளிப்படுத்துகின்றன.

சுவாரசியமான விவரங்கள் :

- பாரதி பெண் விடுதலைக்கு ஆதரவாக எழுதிய முதல் தமிழ் எழுத்தாளர்களில் ஒருவர்.
- இவரது கட்டுரைகள் ஆங்கிலேயர்களுக்கு எதிராக இருந்ததால், 1908இல் கைது செய்யப்பட்டார்.
- இந்தியா இதழில் வெளியான இவை புதுச்சேரியில் இருந்து மக்களை சென்றடைந்தன.

குறைவாக அறியப்பட்ட படைப்புகள்: மறைந்திருக்கும் பொக்கிஷங்கள்

பாரதியின் குயில் பாட்டு ஒரு குறியீட்டு கவிதை, இதில் குயில் இயற்கையையும், மனித ஆன்மாவையும் பிரதிபலிக்கிறது. இதன் கற்பனை வளமும், இயற்கை சித்தரிப்பும் தனித்துவமானவை. அவரது பகவத் கீதை மொழிபெயர்ப்பு தமிழின் இலக்கிய அழகைப் பேணி, ஆன்மிகத்தை எளிமையாக்கியது. மேலும், அவரது கடிதங்கள் மற்றும் தன்வரலாற்று துணுக்குகள், புதுச்சேரி நாடுகடத்தல் காலத்தில் எழுதப்பட்டவை, அவரது தனிப்பட்ட போராட்டங்களை வெளிப்படுத்துகின்றன. இவை குறைவாகப் பேசப்பட்டாலும், பாரதியின் பன்முகத் திறனை நிரூபிக்கின்றன.

விமர்சனங்கள் :

குயில் பாட்டு வை அறிஞர் க.நா. சுப்பிரமணியம் "கவித்துவத்தின் உச்சம்" எனப் பாராட்டினார், ஆனால் இது பாஞ்சாலி சபத த்தைப் போல பரவலாக அறியப்படவில்லை. மொழிபெயர்ப்புகள் பாரதியின் மொழித்திறனை வெளிப்படுத்தினாலும், அவை கவிதைகளுக்கு நிழலில் உள்ளன.

சுவாரசியமான விவரங்கள் :

- குயில் பாட்டு இயற்கையுடனான பாரதியின் ஆழமான தொடர்பை காட்டுகிறது.
- பகவத் கீதை மொழிபெயர்ப்பு தமிழ் மக்களுக்கு ஆன்மிகத்தை எளிதாக்கியது.

- அவரது கடிதங்கள் தனிப்பட்ட வாழ்க்கையின் வலிகளை வெளிப்படுத்துகின்றன, இது அவரை மனிதநேயமுள்ளவராக காட்டுகிறது.

பாரதியின் மொழி மற்றும் பாணி புதுமைகள்

பாரதி தமிழ் இலக்கியத்தை புரட்சிகரமாக மாற்றினார். அவர் எளிய மொழியைப் பயன்படுத்தி, இலக்கியத்தை மக்களுக்கு அணுகத்தக்கதாக்கினார். பாஞ்சாலி சபத த்தில் வெண்பா , கலிப்பா மரபுகளை புதுமையாக்கினார். கண்ணன் பாட்டு வில் பக்தி இலக்கியத்தை உணர்ச்சி மயமாக்கினார். அவரது உரைநடைகள் சிக்கலான கருத்துக்களை எளிமையாக விளக்கின. பகவத் கீதை மொழிபெயர்ப்பில், சமஸ்கிருதத்தின் ஆழத்தை தமிழில் பேணினார். இவை தமிழ் மொழியை நவீனப்படுத்தி, பொதுமக்களுக்கு இலக்கியத்தை கொண்டு சென்றன.

கலாச்சார மற்றும் வரலாற்று தாக்கம்

பாரதியின் படைப்புகள் இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு உந்துதலாக அமைந்தன. பாஞ்சாலி சபதம் மக்களை ஒன்றிணைத்து, "சுதந்திரம்" எனும் கோஷத்தை எழுப்பியது. அவரது பெண்ணியக் கருத்துக்கள்–பாஞ்சாலியின் வலிமையான பாத்திரம், பெண் கல்வி பற்றிய கட்டுரைகள்–நவீன பெண் விடுதலை இயக்கங்களுக்கு வித்திட்டன. தமிழ் மொழியை எளிமையாக்கி, இலக்கியத்தை மக்களுக்கு கொண்டு சென்றார். இன்று, மகாகவி பாரதியார் கவிதைகள் தொகுப்பு பள்ளிகளில் பயிற்றுவிக்கப்பட்டு, கலாச்சார நிகழ்ச்சிகளில் பாடப்படுகிறது. புதுச்சேரி நாடுகடத்தல் காலத்தில் (1908-1918) எழுதப்பட்ட படைப்புகள் தமிழகத்தையும் இந்தியாவையும் இணைத்தன.

முடிவுரை

பாரதியாரின் படைப்புலகம் ஒரு ஒளிரும் நட்சத்திரம்–தமிழ் இலக்கியத்தையும், சமூகத்தையும் ஒளிரச் செய்கிறது. பாஞ்சாலி சபதம் புரட்சியைத் தூண்டியது, கண்ணன் பாட்டு இதயங்களைத் தொட்டது, உரைநடைகள் மாற்றத்தை விதைத்தன, குயில் பாட்டு மற்றும் மொழிபெயர்ப்புகள் அவரது பன்முகத் திறனை வெளிப்படுத்தின. 12ஆம் வகுப்பு மாணவனாக, பாரதியின் எழுத்துகள் எனக்கு உத்வேகமளிக்கின்றன. அவரது வார்த்தைகள் இன்றும் நம் இதயங்களில் விடுதலை, அன்பு, சிந்தனை ஆகியவற்றை பற்ற வைக்கின்றன. பாரதியின் படைப்புலகம் தமிழின் பெருமை, இந்தியாவின் புரட்சி, மனிதநேயத்தின் குரல்!

112. பாரதியின் பன்முகப் படைப்புகள்



மாணவி. மு. சூடாமணி
புஷ்பலதா வித்யா மந்திர், திருநெல்வேலி

முன்னுரை

உலக வரலாற்றில் தமிழகத்தில் மட்டுமே ஒரு எழுத்தாளரின் படைப்புகளுக்கான பதிப்புரிமை அரசாங்கத்தால் வாங்கப்பட்டு பிறகு பொதுவுடைமை ஆக்கப்பட்டுள்ளது. காந்தி, நேரு, தாகூர் உட்பட யாருடைய படைப்புகளுக்கும் கிடைக்காத இந்தத் தனிப்பெருமை சுப்பிரமணிய பாரதிக்கு மட்டுமே கிடைத்துள்ளது.

பாரதியாரின் பன்முக ஆளுமை

பாரதி என்றாலே கவிதை. என்றென்றும் வாழும் பெயர். ஆனால் அவரது ஆங்கிலக் கவிதைகள், உரைநடைகள் ,பத்திரிகைப் பணி பற்றிய ஆராய்ச்சி இன்னும் பெருமளவில் நம் கவனத்திற்கு வரவில்லை. தமிழில் அவரது பங்களிப்புகள் அனைவராலும் அறியப்பட்டவை. ஆனால் ஆங்கிலத்திலும் பாரதி எழுதிய கவிதைகளும் கட்டுரைகளும், அவரது பன்முகத் திறமையை வெளிப்படுத்தும் ஆவணங்களாக உள்ளன,பாரதியின் படைப்புலகத்தைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

பத்திரிகையாளர்

பத்திரிகைத் துறையில் புரட்சியை ஏற்படுத்த பாரதி மேற்கொண்ட புதுமையான முன்னேற்றங்கள்..

1. தமிழ்ப் பத்திரிகை உலகில் முதன் முதலில் கார்ட்டுன்களை அறிமுகப்படுத்தியவர் பாரதி. "இந்தியா' (1905) பத்திரிகைக்கே அந்தப் பெருமை சேரும்.

2. பத்திரிகை சந்தாவில் புதுமையை அறிமுகப்படுத்தினார். வாசகர்களின் வருமானத்துக்கு ஏற்றவாறு சந்தா விகிதம் நிர்ணயித்த பாரதியை இன்றும்கூட யாரும் எட்ட முடியாது

3. பத்திரிகையுடன் இலவச இணைப்பாக சிறுபுத்தகம் வழங்குவதை அறிமுகப்படுத்தினார்.

4. செய்திப் பத்திரிகையில் வாசகரின் ஆர்வத்தைக் கூட்ட கதை, கவிதைகளை வெளியிட்டார். வாசகர்களை விவாதத்திலும் பங்கேற்கச் செய்தார்.

5. முதன் முதலில் தமிழ்ப் பத்திரிகையில் தமிழ் ஆண்டு, மாதம் குறித்தவர் ("இந்தியா', "விஜயா')

6. செய்தி அனுப்புவோருக்கு பணம் தரும் முறையை நூறு ஆண்டுகளுக்கு முன்பே செயல்படுத்தினார்.

7. மகாத்மா காந்தி இந்தியாவில் அறியப்படுவதற்கு முன்னரே 1909 ல் "காந்திபசு" என்ற கருத்துப் படத்தை "இந்தியா" வில் வெளியிட்டார்.

8. தமிழுக்குப் பொதுவுடைமை என்ற புதிய சொல்லை வழங்கினார்.

9. தமிழின் பழம்பெருமையைப் பேசியபடியே ஆங்கில மோகத்தில் விழ்வதால் அன்னைத் தமிழ் அவலத்தில் விழும் நிலையை எடுத்துக்கூறி அன்றே எச்சரித்தவர் பாரதி. அதேசமயம் கிணற்றுத் தவளையாக இல்லாமல் ஆங்கிலம், இந்தி, சம்ஸ்க்ருத மொழிகளையும் அறிந்து அதனை தனது இதழியல் பணிக்கு பயன்படுத்தியவர் பாரதி

பத்திரிகை ஊடகங்களில் பாரதி எடுத்த முக்கிய நடவடிக்கைகள் குறித்த விழிப்புணர்வை இந்த வகையான கட்டுரைகள் மற்றும் சொற்பொழிவுகள் மூலம் தமிழ்ச் சமூகத்திற்குப் பரப்ப வேண்டும்.

ஆங்கிலக் கவிதை

மகாகவி பாரதியார் தமிழில் கவிதை, கட்டுரைகள் எழுதியுள்ளது எல்லோரும் அறிந்தது. ஆனால், அவர் ஆங்கிலத்திலும் கவிதை, கட்டுரைகள் எழுதினார் என்பது பலருக்கும் தெரியாது. அவருக்கு ஆங்கிலத்தில் நல்ல மொழி அறிவு உள்ளது, அவரது கவிதைகள் மற்றும் கட்டுரைகள் படிக்கும்போது நாம் புரிந்து கொள்ள முடியும். அக்னி முதலிய பாடல்கள், மொழிபெயர்ப்புகள், கட்டுரைகள்" என்ற தலைப்பில் பாரதியின் ஆங்கிலப் படைப்புகள் தொகுக்கப்பட்டு, 1937-ஆம் ஆண்டு வெளிவந்துள்ளது. "மனம் இருந்தால் மார்க்கம் உண்டு. ஆனால், இறைவா! மனம் உண்டாவதற்கு என்ன வழி?" என்று கேட்கிறார் பாரதி, தமிழில் இல்லை, தெளிவான ஆங்கில நடையில்! பாரதியின் ஆங்கில நடை எளிமையாகவும் அழகாகவும் இருக்கிறது.

தமிழின் தனிச்சிறப்பு பற்றித் தமது கருத்துகளை விளக்கிப் பல கட்டுரைகளை எழுதப் போவதாக பாரதியே அறிவித்திருக்கிறார். ஆனால், நமது துரதிருஷ்டம், அந்தக் கட்டுரைகள் வெளிவராமலேயே போயின.அவரது ஆங்கில நடை எளிமையாகவும் நகைச்சுவையுடனும் அமைகிறது. எழுத்தின் அழகு மற்றும் தெளிவு பாரதியின் ஆங்கிலக் கவிதைகளிலும் வெளிப்படுகிறது. "கண்ணம்மா என் காதலி" என்னும் தமிழ்ப் பாடலை ஆங்கிலத்தில்,

Thou to me the flowing light
And I to thee discerning Sight ;
Honied blossom thou to me,
Bee enchanted I to thee ;
O Heavenly Lamp with Shining ray,
O Krishna, Love, O nectar-Spray
With falt'ring tongue and words that pant
Thy glories here, I strive to Chant.

என மொழி பெயர்த்திருப்பது, அவரது மொழிப் புலமைக்கும் இலக்கிய நுண்ணறிவுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

பாரதி உரைநடை

பாரதி காலத்தில் தமிழில் உரைநடை இலக்கியம் ஆரம்ப நிலையில் இருந்தது. இன்று தமிழ் உரைநடைக்கு பாரதி செய்த இலக்கியப் பணி மகத்தானது. அவர் உரைநடைக்கு ஒரு இலக்கணமே வகுத்தார்.

“புவி அனைத்தும் போற்றிட வான்புகழ் படைத்து
தமிழ் மொழியைப் புகழில் ஏற்றும்”

தன்னைப் பற்றி தன்னம்பிக்கை மேலோங்கும் குரலில் உரைத்த குரல் ஒன்றே போதும் பாரதி பற்றிய அறிமுகத்திற்கு. பாரதியாரின் உரைநடை எல்லாவற்றையுமே வாசிக்கலாம். தெள்ளத் தெளிந்த மொழிநடையில் கருத்துகளைத் தர்க்க பூர்வமாக அவர் எழுதிச் செல்லும் அழகு அபாரமானது. பாரதி ஆய்வாளர் சீனி விசுவநாதன் அவர்கள் தொகுத்த 'கால வரிசைப்படுத்தப்பட்ட பாரதியின் படைப்புகள்' என்ற பதினெட்டுத் தொகுதிகளில் பாரதியின் உரைநடை அனைத்தையும் காணலாம். ஆண்கள் யாவரும் பெண்களிடம் அச்சத்தை ஏற்படுத்தாது அன்பினால் அனைத்தையும் சாதிக்கலாம் என்று கூறிச்செல்கிறார். அச்சம்,

என்றும் ஒரு குடும்பத்திற்குள் அன்பை விளைவிக்காது. அன்புடைமையே ஒருவருக்கு வாழ்வியல் நல் மதிப்புகளை வழங்கும் என்றும் ‘உரைநடைப்பகுதியில் எடுத்துரைக்கின்றார்.

"மாயை பொய்யென முற்றிலும் கண்டனன். மற்றுமிந்த பிரமத்தினியல்பினை ஆய நல்லருள் பெற்றிலன். தன்னுடை அறிவினுக்கு புலப்படலின்றியே தேய மீதெவரோ சொலுஞ் சொல்லினைச் செம்மையென்று மனத்திடை கொள்வதாம் தீய பக்தியியற்கை வாய்ந்திலேன். சிறுது காலம் பொறுத்தினுங் காண்பமே". மாயை பொய்யெனக் கூறும் பாரதி, 'பிரமத்தின் இயல்பினை அறிய இன்னும் அருள் பெறவில்லை' என்று கூறும் பாரதி, 'அறிவிற்குப் புலப்படாத எவற்றையும் நம்பும் தன்மையில்லாத பாரதி, அத்தகைய அறிவு நிலையினை அடையும் வரை பொறுப்பேன் என்கின்றான்.

முடிவுரை

பாரதி உண்மையிலேயே ஒரு அபூர்வமான மனிதன். மனித சமுதாயத்தைப் பாதிக்கும் அனைத்துப் பிரச்சினைகள் பற்றியும் அவன் தன் கவனத்தைத் திருப்பியிருக்கின்றான். இயற்கை, சமுதாயம், அரசியல், தத்துவம், பெண்விடுதலை, வறுமை, மக்கள் விடுதலையென்று ..அவன் "மை" படாத துறையென்று எதுவுமேயில்லை. பெண்களின் கல்விக்காக அவனது படைப்புகள் குரல் கொடுக்கின்றன. 'கற்பை'ப் பற்றி வலியுறுத்தும் போது அதனை ஆண்-பெண் இருவருக்கும்மே பொதுவாக வைக்கும் பாரதியின் படைப்புகளைக் கொண்டாடுவது என்பது தமிழுக்கும், நாட்டுக்கும் பெரும் பேறு. தான் இறந்தாலும் தன் கனவுகள் அனைத்தையும் நம்மிடமே விட்டுச் சென்றார் அந்தத் தீர்க்க தரிசி.

113. பாரதியின் கனவுகள் நனவாகியுள்ளதா

ஆதிலெமு (ஆ.முத்துக்கிருட்டினன்)
சின்ன நொளம்பூர்,சென்னை

முன்னுரை

கவிஞர்கள் கனவு உலகின் கதாநாயகர்கள். தங்கள் கனவுகள் நிறைவேறும் எனும் நம்பிக்கை கொண்டவர்கள். வீடும்,நாடும் வளங்காண வேண்டும் என்ற நற்சிந்தனை கொண்டவர்கள். தங்களின் உள்ளக்கிடக்கையின் வடிகாலாகக் கவிதையை வடித்தார்கள். இன்றும் வடிக்கிறார்கள். என்றும் எழுதுவார்கள். சமூகப் பார்வையில் கவிதை படைக்கும் பாவலர்களின் முன்னேத்தியாகப் பாரதி உள்ளார் என்பதைப் "பாட்டுக்கு ஒரு புலவர் பாரதி" என்ற வரிகளே வலுவூட்டுகிறது.

விடுதலைப் பள்ளு

கற்பனைக் குழந்தையே கவிதை. இக் குழந்தை வளர்ந்து நிலைத்து நிற்கிறது என்பதை அறியக் காலமே ஆய்வுக் களம். பாரதி வாழ்ந்து மறைந்த காலம் முழுவதும் நாடு அடிமைப்பட்டுக் கிடந்தது. ஆயினும் "ஆடுவோமே பள்ளு பாடுவோமே ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று" நாடு அடிமைத்தளையை உடைத்து எறிந்து விட்டது போல் புளகாங்கிதம் அடைகின்றார் முண்டாசுக் கவிஞர்.

எதிர்பார்ப்பு

விடுதலை பெற்ற நாட்டில் மக்களின் வாழ்க்கை எப்படி இருக்கும் என்பதையும் கற்பனை உலகில் துய்த்து எழுதிய கவிதை வரிகள், "திறமை கொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும், தேர்ந்த கல்வி ஞானம் எய்தி வாழ்வம் இந்த நாட்டிலே..." நாட்டின் சொத்தின் பெரும்பகுதி ஒரு சிலரிடம் மட்டுமே. நாட்டின் வளங்கள் பெரும்பான்மை மக்களிடம் இல்லை. பாரதி விரும்பிய பொருளாதாரச் சமநிலைக் கனவும் கலைந்துள்ளது.

சாபமிடல்

பதினான்கு வயதிலேயே ஏழு வயதுச் சிறுமி செல்லம்மாவை, பால்ய மணம் புரிந்த பாரதிதான் வளர்ந்த பின், "பாலருந்தும் மழலையர் தம்மையே கோலமாக, மணத்திடைக் கூட்டும் இப்பாதகர்கள்" மீசைக்கவியே உமது இக்கனவு நிஜமாகியுள்ளது. இருப்பினும் நூறு விழுக்காடு வெற்றியெனச் சொல்ல முடியாதவாறு சொற்ப,தன்னல,ஆன்மீக அறிவிலிக் கூட்டம் வழி மறிக்கிறது.

கல்வி

ஆள்வோர் செய்ய வேண்டியது யாதெனக் கவிஞர், "வீதிதோறும் இரண்டொரு பள்ளி, நாடு முற்றிலும் உள்ளவூர்கள்" என்று பாடிய பாவலர்.. கல்விக் கூடம் இல்லாத ஊரைத் தேடிக் கண்டறிந்து தீயிட்டுக் கொளுத்திடச் சொன்னாயே இந்தியத் திருநாட்டில் கல்வி வணிக மயமாகுமெனக் கனவு கண்டிருந்தால் இப்படிச் சாபமிடுவாயா?

ஆள்வோரின் அலட்சியம்

விடுதலை பெற்ற பின் வங்கியில் கடன் வாங்கிப் பயிலும் நிலை வருமெனும் தொலைநோக்குச் சிந்தனையுடன் "அன்னச் சத்திரம் ஆயிரம் வைத்தல், ஆலயம் பதினாயிரம் நாட்டல்" ஆள்வோர் கட்டணமில்லாக் கல்வி வழங்கிப் புண்ணியம் தேடுமாறு கூறினாய். ஆள்வோருக்குப் புண்ணியம் தேவையில்லை போலும். அதனால்தான் கல்விக்கான நிதி ஒதுக்கீடு வருகிறது நாட்டின் மொத்த வருவாயில் 6% இன்றுவரை இல்லவே இல்லை.

தமிழர் தொலைத்த பெருந்தன்மை

காதலும்,வீரமும் தமிழ்ச் சமூகத்தின் அடையாளங்கள். காதல் கொண்டு வீட்டை விட்டு வெளியேறியவர்களை ஓடிப்போனவர்கள் என ஆதித்தமிழர் புறம் பேசவில்லை. உடன்போக்கு எனப் பெருமிதம் கொண்டவர்கள் தமிழர்கள். இப் பெருமிதத்தைத்தான்

"காத லொருவனைக் கைப்பிடித்தே அவன்
காரியம் யாவினும் கைகொடுத்து .."

கும்மி அடித்துக் குதூகலம் காண்கிறார். பாவம் பாரதி, ஆணவக் கொலைகள் சாதிக் கௌரவம் காக்கும் கருவியாகப் படித்த சமூகம் கையாளும் என நினைத்து இருந்தால், "படிப்பு வளருது பாவம் தொலையுது "என்று பாடியிருப்பாரா?

கற்பு நெறி

"கற்பு நிலையென்று சொல்லவந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்..."

இப் பொதுமை விதி ஏற்று எந்த ஆண்மகனும் தன் கற்பு நெறி பிறழ்வுக்காகத் தன்னுயிர் நீத்ததாக வரலாற்றில் பதிவில்லை.

சாதிகள் இல்லையா?

"சாதிகள் இல்லையடி பாப்பா" சொன்னது பாப்பாவுக்குத் தானே எங்களுக்கு இல்லையே என அனர்த்தப்படுத்திக் கொண்டு "ஆண்ட பரம்பரை, ஆணவ சாதியென" சாதிக்கு ஒரு தலைவனைக் கண்டு கொண்டு குருபூஜை கொண்டாடி மக்களுக்கு அச்சமூட்டி அகமகிழ்கின்றன அனைத்துத் தமிழ்ச் சாதிகளும். சாதி வெறியும், மத வெறுப்புணர்வும் இல்லாது உம் பாரதப் புதல்வர்கள் கூடி வாழ "சாதி மதங்களைப் பாரோம்; உயர்சன்மம் இத்தேசத்தில் எய்தியராயின் வேதியராயினும் ஒன்றே வேறு குலத்திராயினும் ஒன்றே" பாடியதும் காற்றில் கரைந்த கனவுகளில் ஒன்றே.

பெண்ணின் பெருமை

"எட்டும் அறிவினில் ஆணுக்குப் பெண் இளைப்பில்லை காண்" என்றாய், உச்ச நீதிமன்றம் உரைத்தாலும் கோயிலுக்குள் பெண்ணை அனுமதிக்க முடியாது ஐயப்பன் தீட்டாகிவிடுவார் எனும் ஆன்மீக அறியாமை களைய மருந்துதேடுவோம். மகளிருக்குக் கல்வி மறுக்கப்பட்ட காலத்தே குதூகலமாய் "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும், பாரினிற் பெண்கள் நடத்த வந்தோம்" கும்மி அடித்த பாவலரே, நாடாளுமன்றத்தில் மகளிருக்கு 33% ஒதுக்கீடு சட்டம் கிடப்பிலிருந்து உயிர்ப்பித்தெழுந்தால் உமது கும்மிக் கனவு மெய்ப்படும்.. தமிழ் மொழிக்கு மரியாதை. "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்". இந்தியாவில் முதன்முதலில் தமிழ்மொழிக்குச் "செம்மொழி" மகுடம் சூட்டிய போது மெய்யானது. ஆயினும் உயர்நீதிமன்றத்தில் வழக்காடு மொழியாக, வானூர்தியில் அறிவிப்பு மொழியாக,கோவில்களின் பூசை மொழியாக இன்றளவும் இல்லை.

தமிழ்நாட்டைப் போற்றுதல்

"செந்தமிழ் நாடெனும் போதினிலே இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே"

பாடிக் களித்தாய். ஆனால் இந்த அரசியல் சித்து விளையாட்டில் தமிழ் நாடு என்ற பெயரே சிலருக்குக் கசக்கிறது, தமிழ் நாட்டின் வரலாற்றுப் புதைவுகளை உலகத்திற்கு உரக்கச் சொல்ல அதிகாரம் பெற்றவர் தயங்குவதற்குக் காரணம் அச்சமா? அறியாமையா? காலம் பதில் சொல்லட்டும்.

நிறைவுரை

இந்தியத் திருநாட்டில் ஆள்வோரும், ஆளப்படும் மக்களும்

"எண்ணிய முடிதல் வேண்டும் - நல்லவே எண்ணல் வேண்டும்
திண்ணிய நெஞ்சம் வேண்டும் - தெளிந்த நல்லறிவு வேண்டும்"

பாரதியின் இந்த வேண்டுதல்களை ஏற்று இந்தியர்கள் வாழும் காலத்தே முண்டாசுக் கவிஞரின் கனவுகள் நிச்சயம் மெய்ப்படும்.

114. தமிழ் திரையிசைப் பாடல்களில் பாரதியின் ஆளுமை

முனைவர் ப.கணேஷ்வடிவேல்
உதவிப்பேராசிரியர் - தமிழாய்வுத்துறை
ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி(த)
திருவானைக்கோவில், திருச்சிராப்பள்ளி

முன்னுரை

பாரதி என்னும் மூன்றெழுத்து முண்டாசு கவிஞன். இந்த உலகையும் உயிர்களையும் ரசித்து வாழ்ந்துள்ளான். பாரதியின் பாடல்களில் பல்வேறு நிலைகளை காணமுடிகிறது. சுதந்திரற்காக மட்டும் பாடவில்லை. அதையும் கடந்து சமூக அவலங்களைக் கூறு போட்டு காட்டியுள்ளான். இயற்கையோடு இணைந்த வாழ்வை சங்ககால மக்கள் வாழ்ந்துள்ளனர். அவற்றை மீட்டுருவாக்கம் செய்யும் வகையில், தன்னுடைய பெரும்பான்மையான பாடல்களில் இயற்கையை எவ்வாறு நேசிக்க வேண்டும் என்பதை கற்றுத்தரும் நல் ஆசானகவும் விளங்கினான். சாதி சமயப் பூசல்களை சாடும் பாரதி, பல்வேறு பாடல்களில் சமர்தர்ம சமுதாயத்தை உருவாக்க விரும்புவதை காணமுடிகிறது.

இவ்வாறாக புதிய உலகை படைக்க விரும்பும் நவீன சிற்பியாக விளங்கும் பாரதி, பெண்ணடிமைத்தனத்தை எதிர்த்து புரட்சிகுரல் எழுப்பியுள்ளான். இவரின் பாடல் வரிகள் மற்றும் கருத்துக்களால் ஈர்க்கப்பட்ட தமிழ் திரைத்துறையினர், தாங்கள் சொல்ல வந்த கருத்துக்களை நேரடியாக சொன்னால், அவை மக்கள் மனதில் பதியாது என்று கருதினர். ஆகையால் தங்களுடைய படத்தின் உயிரோட்டத்திற்கும், திருப்புமுனைக்கும் பாரதியார் பாடல்களே அவர்களுக்கு வாழ்வளிக்கும் பொக்கிஷமாக காணப்பட்டது. எனவே திரைத்துறையினர் தங்களுடைய திரையிசைப் பாடல்களில் இடம்பெறும் பாரதியார் பாடல்களை எந்தெந்த சூழலில், எப்பொருண்மையில் கையாண்டுள்ளனர் என்று ஆராய முற்படுவது மட்டுமின்றி, அப்பாடல்கள் மூலம் மக்களுக்கு சொல்லும் கருத்துக்களைப் பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாக அமைகிறது.

பகுத்தறிவில்லா பாமரர்கள்

பாரதி தனது பாடல்களில் அறியாமையை போக்குவதற்கும், பகுத்தறிவு சிந்தனையை உருவாக்கவும், பல்வேறு கவிதைகளையும், பாடல்களையும் எழுதியுள்ளார். அவற்றில் சிவாஜி கணேசன் நடித்த பராசக்தியில் மனிதர்களின் நிலையை பாரதியார் பாடல் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளனர்.

"நெஞ்சு பொறுக்கு திலையே - இந்த"
(பா-க-பாரத நாடு-ப-33- பராசக்தி)

என்ற பாடலில் பாமர மக்கள் எவற்றையும் ஆராய்ந்து பார்க்காமல் எல்லாவற்றிற்கும் பயந்து சாகின்றனர். இவர்கள் மனதில் உறுதியான எண்ணங்கள் இல்லை. அதனால் எதைக் கண்டும், யாரைக் கண்டும் பயந்து வாழும் வாழ்க்கையை தொடர்ச்சியாக கொண்டுள்ளனர். இவர்களை நினைத்து விட்டால் நெஞ்சு பொறுக்கவில்லை என்று கொதித்து எழுகிறார் பாரதி.

சமூக அவலம்

நாட்டில் நடக்கும் அவலங்களையும், சமூகத்தில் நடைபெறும் வித்தியாசமான நிகழ்வுகளின் அடிப்படையிலுமே திரைப்படங்கள் எடுக்கப்படுகின்றன. அவ்வாறு எடுக்கப்படும் திரைப்படங்களின் கதை அமைப்புக்கு கேற்றவாறு பாடல்கள் அமைக்கப்படுகின்றன. மக்களிடம் எளிதில் சென்றடைவதோடு மட்டுமின்றி, மனதில் பதியவும் பாரதி பாடல்கள் நமக்கு உறுதுணையான உள்ளன. இதனை,

"நல்லதோர் வீணை செய்தே - அதை"

என்ற பாடலானது கள்வனின் காதலி, வறுமையின் நிறம் சிகப்பு, பாரதி போன்ற படங்களில் இடம் பெற்றுள்ளது. ஒவ்வொரு படத்திற்கும், அதற்கான கதையமைப்புக்கு ஏற்றவாறு பாடல்கள் அமைகின்றன. இன்றைய காலகட்டத்தில் இளைஞர்கள் செல்லும் தவறான பாதையைச் சுட்டிக் காட்டும் சூட்சமப் பாடலாக இதை அமைத்துக்கொள்ளலாம். பாரதி திரைப்படத்தில் இடம் பெறும் மற்றொரு பாடலான,

"அக்கினிக் குஞ்சொன்று கண்டேன் - அதை"

என்கிறார். பாரதி இப்பாடலைப் பாடுவதற்கான காரணம் இளைஞர்கள். இந்த நாட்டின் தூண்கள் அவர்கள். அக்கினி பொறியாக கணைந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களை நாம் எந்த இடத்தில் வைக்கிறோமோ, அதற்கான பலாபலன்களை இச்சமூகம் அனுபவிக்கிறது. இதனை பறைசாற்றும் விதமாக பாரதி திரைப்படத்தில் கனகலிங்கம் என்னும் தாழ்த்தப்பட்ட இளைஞனுக்கு பூணூல் அணிவித்து சமூகத்தில் மாற்றத்தைக் கொண்டு வர முயல்கிறார். இந்த இடத்தில் வயதான ஒருவருக்கு அணிவிக்காது இளைஞர் என்னும் நெருப்பு கங்கை ஊதியுள்ளதை திரைப்படம் நமக்கு உணர்த்துகிறது.

இயற்கையில் கலந்த பாரதி

பாரதியார் தனது வாழ்க்கையை இயற்கையோடு இணைந்த வாழ்க்கையாக வாழ்ந்துள்ளார். அவர் மிகுந்த இரக்ககுணம் வாய்ந்தவர். ஒரு நாள் சுமைதூக்கும் வண்டி மாட்டிற்கு தான் உணவிற்காக வாங்கி வந்த கீரையைக் கொடுத்துள்ளார். வீட்டில் வந்தமரும் சிட்டுக்குருவிற்கும், காக்கைக்கும் மதிய உணவிற்காக வைத்திருந்த அரிசியை வாரி இறைத்து அவைகள் பசியாருவதை பார்த்து மகிழ்ந்துள்ளனர். இவை போன்ற பல்வேறு சூழ்நிலையில் இயற்கையோடு இரண்டற கலந்த நிலையை அவருடைய வாழ்விலும், பாடலிலும் மெய்ப்பித்துள்ளதை நம்மால் காணமுடிகிறது. இதனை,

"நிற்பதுவே நடப்பதுவே, பறப்பதுவோ, நீங்களெல்லாம்"

என்று பாரதி படத்தில் இடம்பெறும் பாடலில், உலகத்திலுள்ள இயற்கை எல்லாம் பொய்யா?, மெய்யா என்று வினவுகிறார். மேலும் அவற்றைக் காண்பதற்கான சக்தி ஒன்று உள்ளதாகவும் அதுவே இயற்கை என்னும் உண்மைக் காட்சி என்றும் எடுத்துரைக்கிறார். மற்றொரு பாடலில் கண்ணனை இயற்கை வடிவில் வணங்குகிறார். இதனை,

" காக்கைச் சிறகினிலே நந்த லாலா! - நின்றன்"

என்ற பாடலானது ஏழாவது மனிதன் மற்றும் திருமால் பெருமை போன்ற படங்களில் இடம் பெற்றுள்ளது. இப்பாடலில் கண்ணபிரானை காதலிக்கும் பாரதி. அவனுடைய உருவம் எங்கும் இயற்கையின் வடிவத்தில் காட்சியளிப்பதாக போற்றிப்பாடுகிறார்.

கண்ணன் மீது காதல்

பாரதியார் கண்ணன் மீதும், கண்ணம்மா மீதும் அளவுகடந்த காதல் கொண்டிருந்தார். இதனை அவருடைய பல பாடல்கள் வாயிலாக உணர முடிகிறது. இதனை,

"தீராத விளையாட்டுப் பிள்ளை - கண்ணன்"

என்ற பாடலானது வேதாள உலகம் என்னும் திரைப்படத்தில் இடம் பெற்றுள்ளது. இங்கு கண்ணனின் விளையாட்டுகளையும், அவன் செய்யும் குறும்புகளையும் மிக அழகாக பட்டியல் இட்டு காட்டிச் செல்வதிலிருந்து, அவர் கண்ணன் மீது கொண்டுள்ள பக்தியை உய்த்துணரமுடிகிறது. இதே போன்று மணமகள் என்னும் திரைப்படத்தில்

"சின்னஞ் சிறுகிளியே - கண்ணம்மா!"

என்ற பாடலில் பராசக்தியை கண்ணம்மாவாக பாவித்து தன் துன்பம் தீர்க்கவந்த சின்னஞ்சிறுகிளி என்று பாடுகிறார். மற்றொரு படமான கண்ணே கணியமுதே என்னும் படத்தில்,

"நின்னையே ரதியென்று நினைக்கிறேனடி - கண்ணம்மா!"

என்ற பாடலில் கண்ணம்மாவை ரதியாக நினைத்து பார்ப்பது மட்டுமின்றி, அவளின் திருவடியே சரணம் அடைந்தேன் என்றும் பாடியுள்ளார். இறைவன் மீது அளவு கடந்த அன்பும்ம் பாசமும் கொண்டுள்ளதை நம்மால் உய்த்துணரமுடிகிறது.

குழந்தை வளர்ப்பு

பாரதியாரின் வாழ்க்கை வரலாற்றை திருப்பி பார்க்கும் பொழுது, அவர் தனது குழந்தைகளுக்காகப் பல பாடல்களைப் பாடியுள்ளார். அவர் பாடிய பாடல்கள் அனைத்தும் இந்த நாட்டில் உள்ள குழந்தைகளை பெற்றோர்கள் முறையாக வளர்ப்பதற்கான வழிகாட்டி கையேடாக உள்ளதை அவருடைய பாடல் வாயிலாக அறிய முடிகிறது. இதனை,

"ஓடி விளையாடு பாப்பா - நீ"

என்ற பாடல் கப்பலோட்டிய தமிழன் என்னும் படத்தில் இடம் பெற்றுள்ளது. சிறு வயது முதலே குழந்தைகளை எவ்வாறு வளர்க்கவேண்டும், அதற்கான நன்னெறிகள் என்ன என்று இப்பாடல் விளக்குகிறது. இந்த படத்தை மக்கள் பார்க்கும் பொழுது, தங்கள் பிள்ளைகளையும், இவ்வாறு வளர்க்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றுவது திண்ணம்.

சுதந்திர வேட்கை

வாள் பிடித்து போராடிய காலத்தில், எழுது கோலைப் பிடித்து போராடி சுதந்திர தாகத்தைத் தூண்டிவிட்டவர் நம் முண்டாசுகவி. அவரின் வார்த்தைகள் தீர்க்கதரிசனமாக அமைந்துள்ளதை இந்த பாடல் வரிகள் நமக்கு மெய்ப்பிக்கின்றன. இதனை,

"ஆடு வோமே - பள்ளுப் பாடு வோமே"

என்ற பாடலானது நாம் இருவர் என்னும் மிகப் பழைய திரைப்படத்தில் இடம் பெற்றுள்ளது. அக்காலத்தில் மக்களின் மனதில் சுதந்திர வேட்கையை தூண்டிய பாடலாக இது அமைகிறது. இதே போன்று மற்றொரு பாடலான,

"என்று தணியும் இந்தச் சுதந்திர தாகம்?"

என்ற பாடலானது கப்பலோட்டிய தமிழன் என்ற படத்தில் இடம் பெற்றுள்ளதை காணமுடிகிறது.

தன்னம்பிக்கை

பாரதியின் பல பாடல்களில் தன்னம்பிக்கை ஊட்டும் வார்த்தைகள் இடம் பெற்றிருக்கும். இது இளைஞர்களிடமும், மக்களிடமும், ஒற்றுமையையும், தன்னம்பிக்கை ஊட்டும் விதமாக அமைந்துள்ளது. இதனை,

"ஒளிப டைத்த கண்ணினாய் வா வா வா"

என்ற பாடலானது 1956-இல் வெளிவந்த ரங்கோன் ராதா திரைப்படத்தில் இடம் பெற்றுள்ளதை காணமுடிகிறது.

புரட்சி

பெண்களுக்கு உற்சாகத்தையும், உத்வேகத்தையும், வீரத்தையும் ஒரு சேர தரக்கூடிய பாடலாக இது அமைந்துள்ளது.

" மனதிலுறுதி வேண்டும்,
வாக்கினி லேயினிமை வேண்டும்"

என்ற பாடலானது மனதில் உறுதி வேண்டும் என்ற திரைப்படத்தில் பெண் புரட்சி செய்வதாக இடம் பெற்றுள்ளது.

பாரதியின் பொருளாதார சிந்தனை

பாரதி பன்முக ஆற்றலை கொண்டவர் என்பது அவருடைய பாடல் வாயிலாக அறியமுடிகிறது. அவ்வகையில் கப்பலோட்டிய தமிழன் என்னும் படத்தில் இடம் பெறும் பாடலான,

> **"சிந்து நதியின் மிசை நிலவினிலே**
> **சேரநன் னாட்டிளம் பெண்களுடனே"**

என்ற பாடலில் பொருளாதாரத்தை பெருக்கவும், விளைச்சலை அதிகப்படுத்துவதற்கான வழி வகைகளை மிக அழகாக எடுத்துரைப்பதை நம்மால் காணமுடிகிறது.

நிறைவுரை

பாரதி ஓர் தீர்க்கத்தரிசி. பாரதியின் கவிதைகள் எல்லாம் வேதப் பாடல்களாக என்றென்றும் ஒலிக்கின்றன. இவ்வேதப் பாடல்களை பாமர மக்களும் அறிந்து தெரிந்து கொள்ளும் விதமாக ஏட்டில் இருந்ததை வெள்ளித் திரையில் ஏற்றி ஒலிக்கவிட்டனர் திரை பிரம்மாக்கள். இது மக்களின் மனதில் புரட்சியையும், சுதந்திர வேட்கையும், ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் உருவாக்குவது மட்டுமின்றி, சமுதாய அவலங்களை கண்டு சாடி குரல் கொடுக்க கூடிய தைரியத்தையும் பாரதியார் பாடல்கள் நமக்குக் கற்றுத்தருகின்றன. இன்றளவும் இப்பாடல்கள் நம் வாழ்வில் உண்டாகும் துயரங்களையும் வேதனைகளையும் போக்கும் அருமருந்தாக உள்ளதை நம் வாழ்வியல் நிகழ்வாக அன்றாடம் காணமுடிகிறது.

துணை நூற்பட்டியல்

1. பாரதியார் கவிதைகள் - பழனியப்பா பிரதர்ஸ், திருச்சி -2.

115. பாரதியின் ஆக்கத்தில் ஆன்மிகமும் குவாண்டம் அறிவியலும்



திருமதி உமா மனோகரன்
எம்.ஏ.,பி.எட்.,எம்.பில்
தமிழாசிரியர், அ.மே.நி.பள்ளி
தீத்திபாளையம், கோயம்புத்தூர்

முன்னுரை

பாரதியின் கவிதை ஆக்கத்தில் தங்கத்தூவலாய் ஆன்மிகச் சிதறல்களைக் காணலாம். இந்தப் பிரபஞ்சம் பஞ்சபூத சக்திகளால் பின்னப்பட்டிருப்பதை உணர்ந்த பாரதி, அவற்றை ஒவ்வொரு பாடல்களிலும் தூவி அனைவரையும் ஆன்மீகத்துள் நுழைய வழிகாட்டுகிறார். உண்மையான ஆன்மீகம் எது என்பதை அவர் உள்ளத்தில் நன்றாகவே பதித்து வைத்திருந்தார். அதனால் தான் அவர் கவிதைகளில் ஆன்மீக உணர்வு அழகழகாக அமைந்துள்ளது . "அச்சமில்லை அச்சமில்லை அச்சமென்பதில்லையே "என்று பாரதி பாடி, அதன் வழி நடக்கவும் உறுதுணையாய் அமைந்தது அவர் உள்ளத்தின் கண் அமர்ந்த ஆன்மீகமே ஆகும்.

வேதங்களின் சாரத்தைத் தன் கவிதைகளில் கொட்டி இருப்பார் பாரதி. பஞ்சபூத சக்திகளை தன் கவிதைகளில் பல இடங்களில் பல்வேறு விதமாகக் காட்டியுள்ளார். பிரபஞ்ச சக்தியின் உள்முகத் தேடல் ஆன்மிகம் எனலாம். பிரபஞ்ச சக்தியின் வெளிமுகத் தேடல் குவாண்டம் அறிவியல் எனலாம். பாரதி இந்த இரண்டையும் தனது கவிதைகளில் வெளிப்படுத்தி உள்ளார். அறிவியல் வளரும் போது ஆன்மிகமும் வளர வேண்டும். வெறும் அறிவியல் மட்டும் வளர்ந்து கொண்டு இருந்தால் அங்கு அழிவுகள் மட்டுமே பெருகும். நமது புறவுலக செயல்களோடு உள்முகத் தேடல் அதாவது ஆன்மிகம் வளரும் போது ஆக்கபூர்வமான செயல்களுக்கு அது வழிகாட்டியாக அமையும் என்பது திண்ணம்.

குவாண்டம் அறிவியல்

அணுக்கள் மற்றும் அதனுள் அடிப்படை துகள்கள் போன்றவற்றின் இயக்கங்களையும் ஆற்றலையும் விளக்கும் ஒரு துறையே குவாண்டம் அறிவியல். இது சித்தாந்தத்தின் அடிப்படையில் புற அழுத்தத்திற்கு உட்படும் ஒரு துகளின் ஆற்றல் தொடர் எண் மதிப்பை கொண்டிருக்காமல் ஆற்றல் பிந்துக்களாக இருக்கும் என கண்டுபிடிக்கப்பட்டது. இது குவாண்டம் அறிவியல் எனப்பட்டது .இதன் அடிப்படையில் அணு பற்றிய கருத்துக்களில் எல்லா அடிப்படை துகள்களுக்கும் நிறையைக் கொடுப்பது "ஹிக்ஸ் புலம்" என்பதுதான். இது கடவுளின் துகள் என்று அனைத்து விஞ்ஞானிகளும் கூறுகின்றனர். இந்த குவாண்டம் அறிவியலை அக்கால ஞானிகள் ஆன்மீகம் மூலம் கண்டறிய முற்பட்டனர்.புற உலகின் அலைவரிசைகளை மன அலைவரிசைகளோடு தொடர்பு படுத்தி ஆன்மிக அறிவியலைக் கண்டறிந்தார் பாரதி.

பாரதியின் படைப்புகளில் குவாண்டம் அறிவியல்

சித்து அசித்து

பாரதி இதை சித்து அசித்து என்று தன்னுடைய பாடலில் குறிப்பிடுகிறார். சித்து என்றால் இயற்கைக்கு அப்பாற்பட்ட செயல் அல்லது அற்புதமான செயல் என்று பொருள்படும். இது ஆன்மீகப் பயிற்சி மூலம் பெறப்படும் அசாத்தியத் திறமைகளை குறிக்கும். சித்து அசித்து மற்றும் ஈசி துவம் என்பதை வைணவ தத்துவத்தில் உள்ள மூன்று முக்கிய அடிப்படைக் கருத்துகள் எனலாம்.

சித்து ஆன்மா அறிவு அல்லது அறிவாற்றல்

உயிருள்ளவைகள் இதில் அடங்கும் அசித்து என்பது அறிவற்ற பொருள் அறிவும் உணர்வும் இல்லாதது இவ்விரண்டும் சேர்ந்தே பிரபஞ்சம் இயங்குகிறது என்று சைவ சித்தாந்தம் கூறுகிறது இதனை தமது பாடலில் மிக அழகாக எடுத்துரைக்கிறார் பாரதி **எத்தனை கோடி இன்பம் வைத்தாய் எங்கள் இறைவா** பாடல் 36 என்று இறைவனை வேண்டுகிறார்.

எல்லாம் கடவுள் மயம்

தனது கவிதை ஏட்டில் முதலில் கணநாதர் விநாயகரை வணங்கி நான்மணிமாலை பாடி துவங்கியிருப்பதை அவரின் ஆன்மீக எண்ணத்தின் அச்சாணியாகக் கொள்ளலாம் தனது தோத்திரப் பாடல்களில்

ஓம் சக்தி ஓம் சக்தி ஓம் என்று சக்தியினை துதித்த பின்

கணபதிராயன் -அவனிரு என்றும்

வெற்றிவடிவேலன் -அவனுடை என்று முருகனையும் வேண்டுகின்றார்.

தாமரைப்பூவினிலே -சுருதியைத் என்று வாணியை வேண்டுகின்றார்.

பாம்புத் தலை மேலே-நடஞ்செயும் என்று குழலூதும் கண்ணனை வேண்டுகின்றார்.

செல்வத் திருமகளை-திடங்கொண்டு என்று திருமகளை துதி பாடுகின்றார்.

மேலும் இறைபக்தி இருந்தால் நாம் என்னென்ன சாதனைகள் புரிய முடியும் என்பதைப் பட்டியலும் இடுகின்றார் பாரதி.

பக்தியினாலே-இந்தப்
பாரினிலெய்திடும் மேன்மைகள் கேளடீ என்று இறைவனை வேண்டுகிறார்.

பாரதி இந்த தெய்வ சிந்தனையை குழந்தைகளிடம் வெளிப்படுத்த எண்ணுகிறார். பாரதி பாப்பா பாட்டில் தன் ஆன்மிகக் கருத்தைப் புகுத்தியுள்ளார். ஆன்மீகத்தை ஆன்மீகம் என்று தெரியாமலேயே குழந்தைகளின் உள்ளத்தில் புகுத்தி விடுகின்றார் பாரதி எதைச் சொல்ல நினைத்தாலும் அதில் ஆன்மிகத்தை நினைத்தான் என்று கூறுவதில் மிகை இல்லை.

பொய்சொல்லக் கூடாது பாப்பா! - என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா!
தெய்வம் நமக்குத்துணை பாப்பா!

இப்ப பாடல்கள் வாயிலாக குழந்தைகளுக்கு தெய்வீக உணர்வை ஊட்டுகின்றார் பாரதி. முக்தி என்பதை சொல்லிய பாரதி பக்தியையும் குறிப்பிடுகின்றார். பக்தி உடையவர்கள் கருமத்தில் பதறமாட்டார்கள் அதாவது தாங்கள் செய்யும் காரியத்தில், செயலில் மிகுந்த பொறுமையுடன் செயல்படுவார்கள். அதனை **"பக்தி உடையார் காரியத்தில்.."** என்று

பாடுகின்றார். வறுமையும் வாழ்வில் வரும் இன்னல்களும் ஒரு மனிதனைப் பக்குவப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் இறைவனைத் தேடும் மார்க்கத்தைக் காட்டுகின்றன என்றால் அதில் மிகை இல்லை. பாரதியின் ஆன்மிகத் தேடலும் பக்தி மார்க்கமும் அவ்வழியே.

முடிவுரை

மனிதனின் வாழ்க்கையில் இன்பம் துன்பமும் கலந்து வரும் .ஒரு மனிதன் சுகப்படுவது ஒருவனின் நற்செயல் புண்ணியமே.ஒரு மனிதன் துன்பப்படுவது அவனின் பாவமே ஆகும். துன்பங்கள் வரும்போது அவனின் பாவங்கள் குறைகின்றன. அதேபோல் ஒரு மனிதன் மகிழ்ச்சியுடன் வாழும்போது அவன் புண்ணியச் செயல்கள் குறைகின்றன. எனவே மென்மேலும் நற்காரியங்கள் செய்து புண்ணியப் பலனை அதிகரித்துக் கொள்ள வேண்டும். அந்த வகையில் பாரதியின் வாழ்க்கையில் அவர் ஆன்மிகத் தேடலுக்கு உறுதுணையாக இருந்தது அவருடைய துன்பங்களே. எவ்வளவு துன்பங்களுக்கு இடையிலும் அவர் மகிழ்ச்சியோடு வாழ்ந்தார் என்பதே நாம் அவரிடம் கற்றுக்கொள்ள வேண்டிய பண்பாகும். அவருடைய பாடல்களில் இயற்கையை ரசித்த விதமும், கண்ணம்மாவைக் காதலித்த விதமும், கடவுளைப் போற்றிய விதமும், நாட்டுப்பற்றும், சமூக அக்கறையும், எழுச்சியும் போற்றப்பட வேண்டியவை. பாரதியை அவன் பாடல்கள் வழிக் கொண்டாடுவோம். போற்றுவோம்.

துணைநூற்பட்டியல்:

1. குவாண்டம் எனும் கடல் , சிவக்குமார்,kindle edition,Nov.2,2017.
2. கண்டோம் கடவுள் என்னும் துகளை, முனைவர்.த.வி.வெங்கடேஸ்வரன்,பாரதி புத்தகாலயம்,2012
3. பாரதியார் கவிதைகள் பாரதியார்,வானதி பதிப்பகம்,2017

116. பாரதியின் கனவு மெய்ப்பட வேண்டும்



மா. பானு சரஸ்வதி

பட்டதாரி ஆசிரியை, கணிதம்
ச. வா. அரசு மேனிலைப் பள்ளி,
சமத்தூர், பொள்ளாச்சி,கோவை

முன்னுரை

எட்டயபுரத்தின் எரிமலைத் தீதீ....எங்கள் பாரதி.எளிமையின் வடிவமும் இலக்கியச் செருக்கும் ஒருங்கமைந்த உருவம். பாரதியார் ஒரு கவிஞர் மட்டுமல்ல – அவர் ஒரு புரட்சியாளர், பத்திரிகையாளர், சமூக சீர்திருத்தவாதி, பெண்கள் விடுதலைக்காகக் குரல் கொடுத்த முன்னோடி. சுதந்திரம், சமத்துவம், கல்வி, அன்பு, மனிதநேயம் போன்ற கருத்துகளை அவரது பாடல்கள் வலியுறுத்தின.

தமிழ் இலக்கியத்தில், புதுக்கவிதை முறையை அறிமுகப்படுத்தி, பழைய கட்டுப்பாடுகளைக் களைந்து, மக்கள் மனங்களில் விழிப்புணர்வை ஏற்படுத்தினார். "சாதி, மதம், பேதம் இல்லாமல் அனைவரும் சமமாக வாழ வேண்டும்" என்ற அவரது கனவு, இன்று வரை காலத்தால் அழியாத ஒன்று.

இனிய பாரதம் எழுச்சி பெறுக:

**"இனிய பொழில்கள் நெடிய வயல்கள்
எண்ணரும் பெருநாடு"**

நம் பாரதத்தில் நிலவி வரும் சமுதாய பேதம், பெண் கொடுமை, வறுமை, ஏற்றத்தாழ்வு, சாதிக்கொடுமைகள் என அனைத்துத் தீமைகளையும் எதிர்த்து அன்றே கவிதையில் தன் கடுமையைக் காட்டியவர் நம் பாரதி.

சாதிகள் இல்லையடி பாப்பா! - குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!

சாதி முழுமையாக ஒழியாவிட்டாலும்,சிறிதேனும்அழிந்திருப்பின்,நம் முண்டாசுக் கவிஞனின் இப்பாடல் வரிகள் அடுத்த தலைமுறையின் ஏடுகளில் இடம்பெற்றதால் தான். இவ்வரிகள் இன்னும் பல செவிகளில் எட்டவில்லை என்பதற்கு சாட்சி வேங்கை வயல் நீர் தொட்டியும்,திருநெல்வேலியின் ரத்தம் படிந்த இளைய சகோதரனின் கரங்களும்! காக்கை குருவி எங்கள் ஜாதி எனச் சொந்தம் கொண்டாடிய பாசமிகு கவிஞனின் கனவு மெய்பட வேண்டும்.ஒன்று பட்டால் உண்டு வாழ்வு,நம்மில் ஒற்றுமை நீங்கின் நம் அனைவருக்கும் தாழ்வு.

**எல்லோரும் ஓர் குலம்,
எல்லோரும் ஓரினம்,
எல்லோரும் இந்திய மக்கள்.**

என்ன ஒரு பரந்த சிந்தனை அந்த முண்டாசுக் கவிஞனுக்கு,நம் நாட்டின் வளர்சிக்குத் தடையாக இருக்கும் இந்த சாதிக்கொடுமைகள் என்று தணியுமோ?

பெண்ணுரிமை சிந்தனைகள்

"நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும், திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால், செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்"

என்பது பாரதியார் எழுதிய "புதுமைப் பெண்" பாடலில் வரும் வரிகள். இந்தப் பாடல் பெண்களின் துணிவையும், தன்னம்பிக்கையையும், அறிவையும் போற்றுகிறது.

விளக்கம்

- நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வையும்:

நிமிர்ந்து நடப்பதும், நேர்மையான பார்வையும் ஒரு பெண்ணின் தன்னம்பிக்கையையும், துணிவையும் குறிக்கும்.

- நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்:

நிலத்தில் யாருக்கும் அஞ்சாமல், நேர்மையான வழியில் நடப்பது ஒரு பெண்ணின் மன உறுதியைக் குறிக்கும்.

- திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்:

ஞானம், அறிவு ஆகியவை ஒரு பெண்ணிடம் இருந்தால், அவளால் எதையும் சாதிக்க முடியும்.

- செம்மை மாதர் திறம்புவ தில்லையாம்:

இந்தத் தகுதிகளைக் கொண்ட பெண்கள் தவறான வழியில் செல்லமாட்டார்கள்.

சுருக்கமாக: இந்தப் பாடல், பெண்களின் மன உறுதியையும், அறிவையும், தன்னம்பிக்கையையும் போற்றுகிறது. பளுதூக்கிப் புகழ் பெற்ற கர்ணம் மல்லீஸ்வரி,மல்யுத்தம் மெல்லினத்திற்கும் என போரிட்ட மேரி கோம்,தங்க மங்கை உஷா,இறகுப் பந்தில் இலக்கை வென்ற சிந்து,கோர விபத்தில் கால்களை இழந்தும் தன்னம்பிக்கையால் எவெரெஸ்ட் சிகரம் தொட்ட அருணிமா சின்ஹா....இன்னும் இன்னும் உம் புகழ் சொல்லும் சொல்லும். பெண்ணிய சிந்தனைகள் பல பெண்சிங்கங்களை உருவாக்கியது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

வன்கொடுமைகள் வேரறுக்க

பெண்ணின் பெருமைகளைப் பாரம்பரியம் என்போம்,பெண்ணை தெய்வமாக வழிபடுவோம், நதிகளுக்கு பெண்பெயரை வைத்து வணங்குவோம் ,அவர்களுக்கு ஏற்படும் அவலங்களை மறைத்து!

பயந்து பணிந்து மிரண்டது போதும்
இனி தெளிந்து துணிந்து மீண்டெழவேண்டும்

வார்த்தையில் சாட்டையைச் சுழற்றும் வித்தகன் நம் பாரதி.பெண்ணின் குரலாக எப்பொதும் ஒலிக்கும் அவர் கவிதைகள்.இந்தச் செயற்கை நுண்ணறிவுக் காலத்தின் குற்றங்களை அன்றே கணித்து அதற்கு எதிராகத் தன் குரலைப் பதிவு செய்த ஆற்றல்,வியக்கத்தக்கது.

ரௌத்திரம் பழகு

நம்முடைய தோல்வி எங்கே ஒளிந்துள்ளது தெரியுமா? பிரச்சினைகள் வரும் போது அல்ல,பிரச்சினைகளைக் கண்டு நீங்கள் பயந்து விலகும்போது.தவற்றைக் கண்டால் தட்டிக்கேட்க வேண்டுமென்பதை நம் பிள்ளைகளுக்காவது சொல்லிக் கொடுக்க வேண்டும். குறிப்பாகப் பெண் பிள்ளைகளிடத்தில் நம்மைச் சுற்றி நிகழும் அநீதிகளுக்கெதிராக எப்படிச் செயல்பட வேண்டும் என்பதைக் குழந்தைப் பருவத்திலிருந்தே சொல்லிக் கொடுக்க வேண்டும். வெறுமையாக முதல் தகுதி பெறு, நல்லா படி, எது நடந்தாலும் கண்ணைமூடி உட்கார் என்று பேடிகளை வளர்க்காமல்; துணிவாக இரு, தவறைத் தட்டிக்கேள், அச்சம் தவிர் என்று ஆத்திசூடியையும் சொல்லிக் கொடுத்து, அவர்களுக்கு முன் நாம் நடந்துகாட்ட வேண்டும். தவறைத் தட்டிக் கேட்காமல் இருப்பதுதான் தவறு என்பதை உணர்த்த வேண்டும். இப்படியே சொல்லிக் கொண்டிருந்தால் மட்டும் போதாது, மாறாக நாம் நம் அன்றாடச் செயல்களில் அதைக் கடைப்பிடித்துக்காட்ட வேண்டும்.

குட்ட குட்ட குனிவதும்
தட்ட தட்ட தளர்வதும்

இனியாவது ஆட்டு மந்தைகள் போலில்லாமல், முன் நிற்பவன் கேள்வி கேட்காவிடிலும் நாம் தட்டிக் கேட்போம். தவறைத் தட்டிக் கேட்பதுதான் சரி, அதைத்தான் நம் பாரதியும் கூறியுள்ளான் என்பதை நினைவில் கொள்வோம்.

நெஞ்சு பொறுக்குதில்லையே

சாத்திரங்கள் ஒன்று காணார் - பொய்
சாத்திர பேய்கள் சொல்லும் வார்த்தை நம்பியே

ஐந்தறிவு விலங்குகள் கூடத் தன் இனத்தோடு ஒன்றி வாழ்கிறது.ஆறறிவு மனிதன் தான் தன் இனத்திலேயே பாகுபாடு காட்டுகிறான். நிலத்தின் அழுத்ததால் வைரமாக மாறிய கரித்துண்டைப் போல, சமுதாய அவலங்களால் உருவானவை தான் நம் பாரதியின் சிந்தனைகள்.

முடிவுரை

தேடிச் சோறுநிதந் தின்று – பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி – மனம்

தன்னுடய 38 வருட வாழ்கையில் அவருடைய பங்களிப்பு அளவிட முடியாது! எந்த நிலையிலும் மனம் தளராத அஞ்சா நெஞ்சன் அவர். அவர் நமக்கு விட்டுச்சென்றது வெறும் வரிகள் அல்ல வாழ்வியல் முறைகள்.எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் , ஆம்,எனவே நம் நாட்டை வளர்ச்சியின் பாதையில் கொண்டு செல்வதே நம் தலையாய கடமை.

சாதி ஒழிய வேண்டாம்,ஆனால் சமத்துவம் நிச்சயம் வேண்டும்;
பெண்ணுரிமை வேண்டாம்; பெண்ணினம் காத்திடுக;
காணிநிலம் வேண்டாம்; கௌரவம் வேண்டும்;
நிமிர்ந்த நன்னடை வேண்டாம்;நிறையறிவு போதும்;
மனதில் உறுதி வேண்டாம் ; கபடமில்லா மனம் போதும்;
ஓடி விளையாட வேண்டாம் ; வன்புணரா வாழ்வு போதும்;
இவையெல்லாம் எங்கள் கனவுகள்!
இக்குறைந்த பட்ச கனவு மெய்ப்பட வேண்டும்?

துணைநூற்பட்டியல்:

- பாரதியார் கவிதைகள், பாரதியார், திருமகள் நிலையம் பதிப்பு,2007, சென்னை

117. பாரதி தந்த ஹைக்கூ



முனைவர் ஜோ. பிரேமா கிறிஸ்டி
மாநில டாக்டர் இராதாகிருஷ்ணன் விருதாளர்
டி.இ.எல்.சி. மேக்டலின் பெண்கள் மே.நி.பள்ளி
புரசைவாக்கம், சென்னை

முன்னுரை

உள்ளத்துணர்வைத் தாமறிந்த மொழிநடையில் வெளிப்படுத்த வேண்டும் என்ற தூண்டுதல் பெறுவதற்குத் தாம் படித்த கவிதைகள்தான் காரணமாக அமையும். அந்த வகையில் குறுகிய வடிவக் கவிதைகளான ஹைக்கூ கவிதைகள் படிப்பவரையும் படைப்பாளர்களாக்கும் திறன்பெற்றவை. உலகம் முழுவதும் அனைவராலும் விரும்பிப் படிக்கப்படும் ஹைக்கூகளைத் தமிழுக்குத் தந்தவர் மகாகவி பாரதியார் என்பதை எடுத்துரைப்பதாக இக்கட்டுரை அமைகிறது.

செம்புலப் பெயல்நீராய்
என்னுள் நீ! உன்னுள் நான்!
எந்தையும்? நுந்தையும்? - ஜோ.பி.

ஜப்பானிய ஹைக்கூ

உதிர்ந்த இலை
கிளைக்குத் திரும்புகிறது
அடடே! வண்ணத்துப் பூச்சி! - மோரிடேகே

புகழ்பெற்ற இந்த ஜப்பானியக் கவிதை 'ஹைக்கூ' என்று உலகறியும். இன்றளவில் உலகம் முழுவதும் ஹைக்கூ கவிதைகளின் வரவும் பரவலும் இலக்கிய வரலாற்றில் 'ஒரு கவிதைப் புரட்சி' எனுமளவிற்குக் கிளை விரிந்துள்ளது.

ஜப்பானில் வாகா, சோக்கா, டேங்கா, தன்கா, ரென்கா, ஹேக்கூ, ஹைகை, ஹெக்கை, ஹைக்கூ என்ற பெயர்களில் ஜப்பானியக் கவிதை இலக்கியத்தை ஆய்வாளர்கள் வரிசைப்படுத்துகின்றனர். 1860 களில் மசோகா ஷிக்கி என்ற கவிஞரே ஹைக்கூ என்கிற இந்தக் கவிதை வடிவத்தை உருவாக்கினார் என்றும் அறியப்படுகிறது.

ஜப்பானியக் கவிஞர் ஒஸாகி ஹொஸாய், "'ஹைக்கூ' என்பது நேரடியானது, ஒன்றிய கூர்ந்த சுட்டிக்காட்டுகள், அலங்காரங்கள், உவமைகள் என்று எதுவும் தேவையற்றது, அது ஒரு நெத்தியடி போன்று அமைவது" என்கிறார். பாஷோ, பூசன், இஸா, ஷிகி என்ற ஹைக்கூ நால்வரால் ஜப்பானிய ஹைக்கூ ஜப்பானில் செழிந்தோங்கியது.

ஸென் தத்துவம், தாவோயிசம், கன்ஃபூசியம் ஆகியவை ஒன்றி, சொல்விளையாட்டாகத் தொடங்கிய கவிதை வடிவம், இயற்கை, அழகியல், சிற்றுயிர்களைப் போற்றுதல் என்று உள்ளடக்கம் பெற்று ஹைக்கூவாக வளர்ந்தது.

5-7-5 என்ற அசைகளிலும் 3 அடிகள் என்ற வடிவ அமைப்பிலும், முதலிரண்டு அடிகள் ஒரு கருத்தையும் மூன்றாம் அடி அதற்கான விளக்கமாகவோ, முடிவாகவோ, விடையாகவோ அமைந்தும் எழுதப்பட்டதே ஜப்பானிய ஹைக்கூ கவிதைகள்.

"அடடே! என் சின்னக் குடிசை
புதிதாக வேய்ந்தது... ஓகோ!
நீலப்பூக்கள்!" - இஸா

"இந்த அழகிய கிண்ணத்தில்
பூக்களை அடுக்கிவைப்போம்
அரிசிதான் இல்லையே!" - பாஷோ

ஹைக்கூவின் உலகப் பரவல்

ஜப்பானிய ஹைக்கூ கவிதைகள் உலகம் முழுவதும் பல்வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு, அனைவராலும் விரும்பிப் படிக்கப்பட்ட நிலையில் அவரவர் தங்கள் மொழிகளில் 'ஹைக்கூ' எழுதவும் தொடங்கினர். ஹைக்கூவின் குறுகிய வடிவமே இதற்குக் காரணமாக அமைகிறது. தாம் நினைத்த கருத்தை எளிய முறையில் சுருக்கமாக வெளிப்படுத்துவதற்குக் கிடைத்த வரமாகவே உலத்தார் ஹைக்கூவைப் பார்க்கின்றனர். ஆங்கிலம், பிரெஞ்சு உட்பட்ட உலகின் பல்வேறு ஹைக்கூகள் புகழ்பெற்றவை.

"நீரில் மெல்ல
இயங்குவது
இலையா? பூச்சியா?"
-எஸ்ரா பவுண்ட்

"திருவிழா முடிந்து
மரக்குதிரைகள்
அருகருகில்!"
- ரினெ மாப்ளான்

இந்தியாவில் ஹைக்கூ

ஹைக்கூ கவிதைகள் 1916இல் மகாகவி இரவீந்திரநாத் தாகூரால் இந்தியாவிற்கு அறிமுகமானது. ஜப்பானுக்குச் சென்றுவந்த தாகூர் ஹைக்கூவில் கவரப்பட்டு, ஜப்பான் யாத்ரே என்ற தனது நூலில் 17 அசையுடைய ஜப்பானிய மரபுக் கவிதை என்று ஹைக்கூவைப் பற்றி எழுதினார். தொடர்ந்து இன்றைய சூழலில் வடமொழி மற்றும் இந்திய மொழிகள் அனைத்திலும் ஹைக்கூ தன் கிளையைப் பரப்பி வருகிறது.

"உயர்ந்த கட்டை மீது
மழை வளர்ந்திருக்கிறது
பச்சைப் பாசி!" (இந்தி)
-பொயின் இரா.ஜீவன்

"பூவேலை செய்த திரை
அதன் மீது அமரும்
ஒரு பட்டாம்பூச்சி!" (தெலுங்கு)
- நாசர் ரெட்டி

பாரதி தந்த ஹைக்கூ...

"சுவை புதிது, பொருள் புதிது, வளம் புதிது
சொல் புதிது, சோதிமிக்க
நவகவிதை, எந்நாளும் அழியாத
மகாகவிதை"

என்று புதுக்கவிதைக்குப் புதுநீர்ஊற்றி கவிதையிலக்கிய வரலாற்றில் புதுமைக்குப் பாதை அமைத்தார் நம் புதுமைக் கவியான பாரதியார்.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் – கலைச்
செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்"

என்று முழங்கிய தமிழ்நாட்டின் மகாகவி பாரதியார்தான் முதன்முதலில் ஜப்பானியக் ஹைக்கூவைத் தமிழுக்கு அறிமுகம் செய்தார். கவிதையில் புதுமைப் போக்குடன் புதுக்கவிதைகள், சிந்துப்பாக்கள், கேலிச்சித்திரங்கள், மொழிபெயர்ப்பு, வசனகவிதை போன்ற புதிய புதிய தேடல்களில் பயணித்த பாரதியாரின் புதிய முயற்சியான கட்டுரைகள் என்பதில் கிடைத்ததே ஹைக்கூ என்ற கவிதை முத்து. சிந்துக்குத் தந்தையான பாரதி மரபிலும் புதுமை புகுத்திய புரட்சியாளன் என்பதை அவரது கவிதைகள் சொல்கின்றன.

நெஞ்சு பொறுக்குதில்லையே இந்த
நிலைகெட்ட மனிதரை நினைத்துவிட்டால். - நாலடிச்சிந்து

ஷெல்லியின் கவிதைகளால் ஈர்க்கப்பட்ட பாரதி, வசனகவிதைகளை ஷெல்லிதாசன் என்ற பெயரில் எழுதினார். வசனகவிதைகள் புதுக்கவிதைகளில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி வருகிறது என்பது வரலாற்று உண்மை.

"காற்றே வா,
மகரந்தத் தூளைச் சுமந்துகொண்டு, மனத்தை
மயலுறுத்துகின்ற இனிய வாசனையுடன் வா!" - பாரதி

என்றெல்லாம் வசனகவிதை எழுதிய பாரதி,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவல கால வகையினானே"

என்ற நன்னூல் கருத்தினடிப்படையில் மரபிலிருந்து மாறுபட்ட இலக்கிய வகைமைகள் தமிழில் ஏற்கப்பட்டன. அந்த வகையில் தமிழில் ஹைக்கூகள் முதன்முதலில் அடியெடுத்தது பாரதியாரால் என்பது அறியப்பட வேண்டியது.

மார்டன் ரிவ்யு என்ற கல்கத்தா பத்திரிக்கையில் ஹைக்கூ பற்றி ஜப்பானியக் கவிஞர் உயாநே நோகுச்சி எழுதிய கடிதத்தைப் படித்த பாரதியார், 16.10.1916இல் சுதேசமித்திரன் இதழில் "ஜப்பானியக் கவிதை" என்ற தலைப்பில் எழுதிய சிறிய கட்டுரைதான் தமிழ் ஹைக்கூ வரலாற்றில் முதல் பொறியாகும்.

ஜப்பானியக் கவிஞர் நோகுச்சிப் புலவரின் கருத்தான, "சுருங்கச் சொல்லி விளங்க வைப்பது ஜப்பானியக் கவிதையின் விஷேசத் தன்மை" என்பதைப் பாரதியார் தன் கட்டுரையில் குறிப்பிட்டு, தமிழ் கவிதை வரலாற்றில் ஹைக்கூ தனியிடம் பெறுவதற்குக் காரணமாகிறார்.

தன் வீடு தீப்பற்றி எரிந்தது கண்டு ஜப்பானியக் கவிஞர் 'கூஷிசி' எழுதிய ஜப்பானியக் கவிதையை இப்படி மொழிபெயர்த்துத் தருகிறார் பாரதியார்,

"தீப்பட்டெரிந்து
வீழு மலரின்
அமைதி யென்னே!" – ஷோகுசி

புதுமையே புரட்சி!

"விருந்தே தானும் புதுவது புனைந்த
யாப்பின் மேற்றே"

என்ற தொல்காப்பியக் கூற்றுப்படி, புதிய பொருளைப் புதிய வடிவில் சொல்லுவதற்குப் புதுமை என்ற பொருள் இருப்பதால் "புதுமையைக் கொண்டாடுவோம்" என்கிறார் கவிக்கோ அப்துல் ரகுமான். அப்துல் ரகுமானைத் தொடர்ந்து, கவிஞர் அமுதபாரதி, அறிவுமதி, ஈரோடு தமிழன்பன் போன்றோர் தமிழில் புதிய வரவாக ஹைக்கூவைக் கொண்டாடி, ஹைக்கூ கவிதைகளைக் கவிதையிலக்கியத்தில் உயர்ந்த தளத்திற்கு அழைத்துச் சென்றுவிட்டனர். ஆயிரக்கணக்கான ஹைக்கூ கவிஞர்கள் தமிழில் ஹைக்கூ எழுதி, புதுமையே புரட்சி என்று இலக்கியப் புரட்சி நடத்துகின்றனர். இன்று ஹைக்கூ கவிதைகள் இதழ்கள், நாளேடுகள், தனிநூல்கள், ஆய்வு நூல்கள் என்று எல்லாவற்றிலும் எழுதப்பட்டு எண்ணிட முடியாத வளர்ச்சியை எட்டிவிட்டன.

உலக அளவில் ஹைக்கூ கவிதைகள் எழுதப்படுவது என்பது வெறும் எழுத்தாக மட்டும் நிற்காமல் அது ஓர் அமைப்பாக, இயக்கமாக, சங்கமாக, முற்றமாக இயங்கி ஹைக்கூ கவிஞர்களை ஒன்றிணைத்து அந்தந்த நாடுகளில், மாநிலங்களில், மாவட்டங்களில், ஊர்களில், பள்ளிகள் கல்லூரிகளில் ஓர் கட்டமைப்போடு செயல்படுகின்றன. உலக ஹைக்கூ மாநாடுகள் முறையாக நடத்தப்பட்டு ஹைக்கூ கவிதைகள் பரிசுக்கும் விருதுக்கும் தகுதியான இலக்கியவகை என்று கொண்டாடப்படுகின்றன. அந்தமான் உலக ஹைக்கூ மாநாட்டிலும் அப்துல் ரகுமான் நினைவு ஹைக்கூ போட்டியிலும் பரிசு பெற்ற ஹைக்கூகள்

"கால்நடை மருத்துவமனை
வாயிலில்
காயங்களுடன் தெருநாய்!"
- சா.ஏஞ்சலின்

"வாடியது கொக்கு
ஓடியவை எல்லாம்
ஜோடி மீன்கள்!"
- நடா

முடிவுரை

இயற்கை, அழகியல், தத்துவம் போன்றவற்றை வெளிப்படுத்திய ஹைக்கூ கவிதைகள் தற்காலத்தில் சமூகச் சிந்தனைகளை வெளிப்படுத்தும் எளிய வகை கவிதை வடிவாகப் பெருமளவில் எழுதப்படுகின்றன. என்னைப் போன்றோர் முனைவர் பட்டத்திற்கு "ஹைக்கூ கவிதைகளில் சமுதாயச் சிந்தனைகள்" என்ற தலைப்பைத் தேர்வு செய்து, முனைவர் பட்டம் பெறும் அளவிற்கு கருத்துப் புதையல்கள் கொண்ட ஆய்வுக் களமாக ஹைக்கூ கவிதைகள் திகழ்கின்றன.

ஹைக்கூ கவிதைகள் மரபு இலக்கியமல்ல, விடுகதையுமல்ல, சிலேடையுமில்லை, புனைவு இலக்கியமுமல்ல, அது ஓர் உணர்வு இலக்கியம். புதுக்கவிதையின் புதிய வரவு, அதனை எழுதுவதற்கு மொழிப்புலமையோ, ஆழ்ந்த இலக்கண அறிவோ தேவையில்லை. கண்ணில் காணும் காட்சிகளையும் உள்ளத்துணர்வுகளையும் எளிய முறையில் தமக்குத் தெரிந்த மொழிநடையில் மூன்றே அடிகளில் சுருங்கச் சொல்லி ஒரு மின்னல் தாக்கத்தைப் படிப்பவர் மனத்தில் ஏற்படுத்த முடியும் என்பதே ஹைக்கூவின் தனித்தன்மையாகும்.

"வானம் பார்த்த பூமி
கருவேல முட்செடிகளில்
மெல்ல ஊரும் எறும்பு!"
- வதிலைபிரபா

"அடிக்க அடிக்க
அதிரும் பறை
தலைமுறைக் கோபம்!"
- மித்ரா

புதுக்கவிதைக்கு வித்திட்ட பாரதிதான் புதுமைக் கவிதையான ஹைக்கூ கவிதைகளுக்கும் புதுப்பாதை அமைத்திட்டார் என்பதே இந்த ஆய்வின் வழி எடுத்துரைக்கும் கருத்தாகும். பாரதி தந்த "ஹைக்கூ... குக்கூ... குக்கூ..." எனக் கவிதையிலக்கிய வரலாற்றில் இனிமையான கீதமாக ஒலித்துக்கொண்டே இருக்கும்.

"இன்று நான்
காக்கைக்கு விசிறிய அரிசி
பாரதி விதைத்தது!"
- லிங்குசாமி

"இந்தக் காட்டில்
எந்த மூங்கில்
புல்லாங்குழல்!"
- அமுதபாரதி

மூன்றடிகளில் சமுதாயச் சிந்தனைகளை எடுத்துக்காட்டும் குறும்பாக்கள் இன்றளவில் பரவலாக எழுதப்படுவது இங்கு சுட்டப்படுகிறது. பாரெங்கும் பட்டொளி வீசிப் பறக்கும் கவிதைப் பறவையான ஹைக்கூவைத் தமிழுக்குத் தந்த பாரதியால் தமிழ்த்தாய் புத்தணியொன்றை அணிந்து புதுப்பொலிவுடன் திகழ்கிறாள். திரும்பிய திசையெங்கும் தமிழில் ஹைக்கூ கவிதைகள் காதிலும் கருத்திலும் தேனினும் தீஞ்சுவையோடு பாய்கின்றன.

”அதிகாலைத் தேநீர், அன்றைய நாளேடு
பெண்களுக்கும் வாய்த்தால்
சமத்துவம்!“

”தேவாலய உண்டியல் உள்ளே
கையேந்தும் ஏழை வெளியே
எங்கு செல்லும் என் கைப்பணம்!”

\- ஜோ.பி. (குறும்பா)

118. இன்குலாப் கவிதைகளில் பாரதியின் தாக்கம்



பா.ஜமுனா ராணி

பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
பதிவு எண்:19221204022024
தமிழ்த்துறை, ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரிp(தன்னாட்சி),
குற்றாலம்

முன்னுரை

இறைவன் படைப்பில் ஆணும் பெண்ணும் இரு சமமான உயிர்களாவர். இரண்டு உயிரிகளும் மனித சமுதாயத்தை உருவாக்குகின்றன. மானுடத்தின் உயர்ந்த பண்புகளில் ஒன்று மனிதனை மனிதனாக மதிப்பது. ஆனால் ஆண் சமூகம் பெண்ணைச் சம உயிரியாகக் கூட மதிப்பதில்லை. பெண்கள் சந்தித்த வாழ்வியல் போராட்டங்கள் சமுகப் பிரச்சினைகளும் சமூக மறுப்புகளும் பெண்ணியச் சிந்தனைகளாகத் தோன்றக் காரணமாகின்றன. பெண்கள் வாழ்வில் பல்வேறு நிலைகளில் இடர்பாடுகள் நேர்ந்து வருவதை அறிய முடிகிறது. கல்வி, காதல், உரிமையின்மை, வாழ்க்கையில் ஏற்படும் இடர்ப்பாடுகள், வரதட்சிணை சிக்கல், பெண்கற்பு மற்றும் வலியுறுத்தல், விதவை நிலை முதலான சிக்கல் பெண்களுக்கு ஏற்படுகின்றன. பெண்களின் வாழ்வில் காணப்படும் இக்குறைபாடுகளை நீக்குவது சமுதாய மாற்றத்திற்கு உறுதுணையாக அமையும். அவ்வகையில் இன்குலாப்பின் கவிதைகளில் பாரதியின் தாக்கம் எவ்வாறு அமைகின்றது என்பதனை ஆராய்வதாய் கட்டுரை அமைகின்றது.

பெண்ணிய விடுதலைக் கருத்தியல்

உலகம் தோன்றுவதற்கு அடிப்படைக் காரணியாக விளங்கியவள் பெண். அப்பெண்ணானவள் பிறரைச் சார்ந்தே வாழ்கிறாள்.

'பெமினிசம் என்ற சொல்லுக்கு,
1. பெண்ணின் தன்மைகள்
2. சமுகத்திலும் அரசியலிலும் ஆண்களுக்கு நிகரான
உரிமைகளை பெற்றுத் தருவதற்கான கோட்பாடு.
3. பெண்களின் உரிமைக்காகவும் தேவைகளை நிறைவேற்றவும்

என்று முத்துச்சிதம்பரம் கூறிய கருத்தை அடியொற்றி சமூகத்தில் பெண்களில் நிலையினை அறிய முடிகின்றது. தம் எதிர்பார்ப்பு, ஏக்கம், கனவு, கற்பனை, குறிக்கோள், வேட்கை ஆகிய அனைத்தையும் சம விகிதத்தில் கலந்து உருவாக்கிய ஒரு கற்பனை ஓவியமே 'புதுமைப் பெண்'. தமது கற்பனையில் உருவான 'புதுமைப் பெண்'ணுக்குப் பல்வேறு சிறப்புப் பெயர்களையும் அடைமொழிகளையும் அணிவித்து மகிழ்ந்துள்ளார்: 'மாதரசு', 'பெண்மைத் தெய்வம்', 'செம்மை மாதர்', 'உதய கன்னி', 'வீரப் பெண்', 'இளைய நங்கை' என்பன இவ்வகையில் சிறப்பாகக் குறிக்கத்தக்கவை. ஒரு பெண்ணுக்கு இருக்க வேண்டும் எனக் காலங்காலமாகப் பேசப்பட்டு வந்த அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்னும் மரபு வழியான குணங்களை அடியோடு மாற்றி, 'நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்' என்று முற்றிலும் புதுமையான முறையில் பாடியுள்ளார் கவியரசர். மேலும், தாம் கனவு காணும் 'புதுமைப் பெண்'ணின் சொற்களும் செய்கைகளும் எத்தகையனவாய் இருக்கும் என்பதையும் அவர் அழகுறச் சுட்டிக் காட்டியுள்ளார்.

'ஞான நல்லறம்வீர சுதந்திரம்..' (புதுமைப் பெண், செய்யுள் : 4,7,8)

வரிகளின் மூலம் பாரதியார் பெண்களைப் பற்றி போற்றி இருப்பது போலவே இன்குலாப்பும் தம்முடைய கவிதையில் பெண்களைப் பற்றிக் கூறுகிறார். வர்ணாசிரமத்தில் தோய்ந்து கிடக்கும் இந்து மதத்தின் சாதியப் படிநிலைக்குப் பயந்து, அதன் மீது வெறுப்புக் கொண்டு பல்லாயிரக்கணக்கான இந்து தாழ்த்தப்பட்ட மக்கள் இஸ்லாம் நோக்கியும், கிறித்துவம் நோக்கியும் மாறுதலை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் இக்காலத்தில் இன்குலாப்பின் எழுத்துகள் மதவாதிகளைக் கோபம் கொள்ளச் செய்கிறது. இன்குலாப் மிரட்டப்படுகிறார்.

ஷாபானுவை ஆதரித்ததன் மூலம் தான் யாரின் அரசியலைப் பேசுகிறேன் என்பதைத் தெளிவுப்படுத்தினார்.

'உன்னைப் பர்தாவில் புதைக்கும் கைகளை எதிர்த்து....' (ஒ. பு. ப -87)

என்று அவர் இஸ்லாமியப் பெண்களை நோக்கி அறைகூவல் விடுக்கிறார். பெண்கள் அரசாண்ட நிலைமாறி பாரதியின் காலகட்டத்தில் பெண்கள் வீட்டைவிட்டும் அகலாதநிலை ஏற்பட்டது. இதனைக் கண்டித்த பாரதி,

'வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப் போமென்ற..'
(பாரதியார் கவிதைகள், ப - 290.)

என்று ஆணாதிக்கவாதிகளைக் கண்டித்துப் பெண்களை ஊக்குவித்தார்.

இதனையே, மனித சமூகத்திலேயே ஒடுக்கப்பட்ட இனங்களில் பெண்களின் நிலை மாறுபட்டத் தன்மைகளைக் கொண்டதாகும். எல்லா நிலைகளிலும் கீழ்ப்பட்டு உலகின் எல்லா வகை அடக்குமுறைகளுக்கும் ஆட்பட்ட, ஆட்படுகிற பெண்களின் நிலை குறித்த மாற்றுச் சிந்தனை தமிழ்ச் சமூகத்தில் வீரியமாக இயக்கம் கண்டிருந்தாலும் சாதிய, மத, கலாச்சாரக் கட்டுகளை உடைத்து பெண் மீட்சி காண்பதில் பல்வேறு சிக்கல்கள் தொடர்ந்து வருகின்றன.

'சமையல் அறையில் மண்டும் புகையில்
சபம்பிய வேர்வை மலர்க் குலமோ... ' (ஒ.பு.ப. 134)

ஆணாதிக்கத்தை எதிர்த்தல்

பெண் விடுதலை பெற வேண்டுமானால் அவள் விழிப்புணர்வோடு இருக்க வேண்டும். பெண்களை இழிவுப்படுத்துவது அறிவற்ற செயல் அதனை அறவே நீக்க வேண்டும் என்று தம் கவிதையில் வெளிப்படுத்துகிறார் அதனை

'மாதர் தம்மை இழிவு செய்யு
மடமையைக் கொளுத்துவோம்'

என்கிறார்.அதோடுமட்டுமல்லாமல் பெண் என்பவள் குடும்பத்தைக் கவனிப்பது மட்டுமே அவளுடைய செயலாகவும், அறிவாகவும் பார்க்கப்படுகிறாள். இதனைப் போலவே இங்குலாப்பும் தம்முடைய கவிதையில் பதிவு செய்கின்றார். 1974 -இல் விலைவாசி ஏற்றத்தை எதிர்த்துக் குஜராத் பெண்கள் நடத்தியப் போராட்டத்தில் பெற்ற வெற்றியைக் கண்டு உளங்காகிதம் அடைந்து அதனை, அந்த குஜராத் பெண்களின் உணர்வுகளின் வேகத்தை

'கிண்கிணி வளையல் பெண்மணிகள்
பெண்மணிகள் தாம் பிரளய வருகையை....' (ஒ. பு. பெ. பக். 43-44)

என்ற செய்தியினை உள்ள மகிழ்ச்சியோடு, தங்களுக்கு இழைக்கப்பட்ட தடைகளை, தாங்களே தகர்த்தெறிந்த பெண்சிங்கங்களாகக் கிளம்பியுள்ளதைப் பாராட்டியுள்ளார். 'மாதவிடாயும், தாய்மையும் பௌதீக உடலியலின் நிகழ்வுகளேயன்றி சமுதாய பங்கேற்புக்குத் தடைகளல்ல. பெண்கள் பிள்ளைப்பெறும் தொல்லையை அடியோடு நிறுத்தவேண்டும். இதனால் பெண்களும் பிறர் உதவியை நாடியிருப்பதால் ஆண்கள் ஆதிக்கம் ஏற்பட இடம் உண்டாகிவிடுகிறது. பெண்கள் தனித்துப் போராட வேண்டும்' என்ற பெரியாரின் எண்ண ஆசைக்கேற்பவே, கவிஞர் இன்குலாப்பின் செயலாக்கமும் இருக்கிறது. பெரியாரின் வழிநின்று பெண்கள் விடுதலைக்கும். முன்னேற்றத்திற்கும் இன்குலாப் மிகுந்த ஆதரவாளராக விளங்குகிறார்.

கற்பு நிலையில் பெண்கள்

தம்மைப்போன்று பெண் வாழ்வியலின் தத்துவத்தைப் பற்றி பேசுபவர்களையும், எழுதுபவர்களையும் போற்றியவர் இன்குலாப் ஆவார். 'நஸ்ருல் இஸ்லாம்' என்ற கலகக் கவிஞனின் பெண்களைப்பற்றிய அக்கறையுடன் செய்தியையும், ஆணாதிக்க அழுக்குகளை அடித்துச்செல்லும் அவருடைய எழுத்துக்களின் சீற்றத்தையும் தம் பார்வையில் அளந்து, அதன் தாக்கத்தை வெளிப்படுத்திக் காட்டுகிறார். 'நஸ்ருல் இஸ்லாம்' தமது படைப்புகளில் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கும் மக்களின் விடுதலைக்காக பெண்களின் மீதான ஒடுக்குமுறைகளையும் களைய முற்பட்டு, கூலி, உழவன் நிலை. மனித ஏற்றத்தாழ்வுகள், விபச்சாரி, சமத்துவம். பாவம், பெண் போன்ற தலைப்புகளில், மனித நெஞ்சங்களின் நாடித்துடிப்புகளைப் பதிவு செய்துள்ளார்.

இவர் விபச்சாரியைப்பற்றி கூறும் பொழுது

'கற்பில்லாத பெண்ணின் மக்களை
அப்படித்தானே அழைத்தல் வேண்டும்'

என ஆணாதிக்கத்தையும்

'நஸ்ருல் இஸ்லாம்' பெண்ணுக்காக எழுதிய கவிதையில் மூடக்கட்டுகள் போன்ற அனைத்தையும் சாடியுள்ளார். இதனை இன்குலாப் தம் 'ஆனால்' நூலில் விளக்கமாக விளக்கியுள்ளார்.

'பெண்ணே!
இன்று நீ அஞ்சுகிறாய்..'

என்று பதிவு செய்கிறார்.

முடிவுரை

பாரதியார் தமது கவிதைகளிலும் கட்டுரைகளிலும் பெண்ணுரிமைக் கருத்துக்களை அவருக்கே உரித்தான கவியழகோடும். அழுத்தத்தோடும் சிந்தனைகளைத் தூண்டும் அளவிற்குத் தம் பாடல்களை இயற்றியுள்ளார்.பெண் விடுதலை கல்வி, இல்லறம், மறுமணம், என அனைத்திலும் மேன்மையில் சிறந்து உயர்ந்த நிலையை அடைய வேண்டும் என்பது இவரது இலட்சியமாகவே இருந்ததுள்ளதைக் காணமுடிகின்றன. இவர் தம் மனதில் பெண்களைப் பாரதமாதா, சுதந்திரதேவி, தமிழ்த்தாய் எனப் பலவறாக உருவகித்துள்ளார்.பெண்ணியம் குறித்துப் பாரதியார் இயற்றிய படைப்புகளில் பெண்ணியக் கருத்துக்கள் அனைவருக்கும் அறிவிற்குச் சான்றாக விளங்குகின்றன என்பது வெளிப்படையாக விளங்குகின்றது. இதனைப் போலவே இன்குலாப்பும் தம்முடைய கவிதைகளில் பெண்களுக்காகக் குரல் கொடுப்பதனை இக்கட்டுரையின் மூலம் அறிய முடிகின்றது.

119. பாரதியின் கண்ணன் பாட்டு: உறவுகளின் கவியுணர்ச்சி



ஆ. தேவிகா
உதவி பேராசிரியர், இந்தித் துறை
ஏஜேகே கலை அறிவியல் கல்லூரி
கோயமுத்தூர்

ஆய்வுச் சுருக்கம்

"கவிதையே வாழ்க்கையாக உடையோன், வாழ்க்கையே கவிதையாகச் செய்தோன் அவனே கவி" எனும் பாரதியாரின் வரிகள், அவரது வாழ்வும் எழுத்தும் ஒன்றிணைந்திருப்பதைச் சிறப்பாகக் காட்டுகின்றன. அவரது கவிதைகள் தேசியம், காதல், இயற்கை, தமிழ், குழந்தைகள், சமூக சீர்திருத்தம் உள்ளிட்ட பல துறைகளைத் தழுவுகின்றன. "கண்ணன் பாட்டு" எனும் பாடலில், கண்ணனைப் பலவகை உறவுகளில் பாவித்திருக்கும் விதம், பாரதியின் கவிஞர் மனப்பான்மையையும் அவரது ஆன்மீக தரிசனத்தையும் வெளிப்படுத்துகிறது. "பாரதியின் கண்ணன் பாட்டு: உறவுகளின் கவியுணர்ச்சி" கட்டுரை, இந்தப் பல்வகை உறவுகள் வழியே பாரதியின் உணர்வுகளை ஆய்வு செய்கிறது.

முன்னுரை

"பொன்னைக் கொண்டு உரைகல் மீதே "

என்ற பெரியாழ்வாரின் வரிகள், பக்தியின் ஆழ்ந்த அனுபவ நிலையைச் சொல்கின்றது. இதுபோலவே, பாரதியும் தன் கண்ணன் பாட்டில் கண்ணனைத் தந்தை, தாய், தோழன், குழந்தை, காதலன், காதலி, குரு, தெய்வம் எனப் பலவகையான உறவுகளின் வடிவில் பாடியுள்ளார். ஆனால், அவரது பக்தி உணர்வு ஆழ்வார்களினைப் போல் தீவிரமான தத்துவ நிலையை சார்ந்ததல்ல; அது அனுபவமும் உணர்ச்சியும் நிறைந்த கவியுணர்ச்சி ஆகும்.

கண்ணன் பிறப்பு - பெரியாழ்வாரின் அழகான வரிகளில்

"வண்ண மாடங்கள் சூழ் திருக்கோட்டியூர்க்.."

இப்பாடலில், பெரியாழ்வார் கண்ணன் மீது கொண்ட பரவசமான அன்பின் காரணமாக, தன்னை யசோதையாகப் பாவித்து, கண்ணனின் பிறப்பைக் கொண்டாடும் போது நிகழும் காட்சிகளை வர்ணிக்கிறார்.

கண்ணன் பிறப்பு - பாரதியாரின் மகிழ்வான வரிகளில்

"கண்ணன் பிறந்தான் - எங்கள் கண்ணன் பிறந்தான்"

என்பது பாரதியார் எழுதிய பாடல் வரிகள்."கண்ணன் பிறந்தான்" என்ற இப்பாடல், அவரது "கண்ணன் பாட்டு" தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. இதில், கண்ணனின் பிறப்பினையும் அதனால் ஏற்படும் மகிழ்ச்சியையும், அந்த ஆனந்தத்தை எட்டுத் திசைகளிலும் பரப்ப வேண்டியதையும் பாரதியார் உற்சாகமாகப் பதிவுசெய்கிறார்.

நட்பு - வள்ளுவரின் வரிகளில்

"நகுதற் பொருட்டன்று நட்டல், மிகுதிக்கண்"

என்பது திருக்குறளில் வரும் ஒரு பாடல். இதன் பொருள்: நட்பு என்பது வெறும் சிரித்துப் பேசும் மகிழ்வுக்காக அல்ல; நண்பன் தவறு செய்கிறபோது, அதனைத் தட்டிக் கேட்டு அவனைச் சரி செய்யும் நோக்கத்திற்கும் அது அமைந்ததாக இருக்க வேண்டும்.

கண்ணன் - என் தோழன்

"உள்ளத்திலே கருவம்கொண்ட போதினில்"

பாரதியார் தனது பாடல்களில் கண்ணனை ஒரு தோழனாகவும், குருவாகவும், கடவுளாகவும் பாடியுள்ளார். இந்தப் பாடலில், கண்ணன் தன்னை நேசிப்பவர்களிடம் அன்பாக இருப்பான், அதேசமயம் கர்வம் கொண்டால் தண்டிப்பான் என்று கூறுகிறார்.

தாயாக இறைவன் - திருமங்கையாழ்வாரின் பாசுரத்தில் -

"தாய் நினைந்த கன்றே ஒக்க என்னையும்"

என்ற வரிகளில், தாய்-கன்று உறவினை உவமையாகக் காட்டி, தந்தை-மகன் உறவையும் விளக்கப்படுத்தியிருக்கிறார். ஆனால் அதிலும் 'அப்பன்' என்ற சொற்றொடர் தாயையே நினைக்கச் செய்கிறது.

கண்ணன் - என் தாய்

"வேண்டிய கொடுத்திடுவாள், அவை "

என்பது கண்ணனைத் தாய்ப்போல் உருமாற்றி, தாய் தன் குழந்தைக்கு தேவையான அனைத்தையும் விரும்பும் முன் வழங்குகிறாள் போல, கண்ணனும் அன்புடன் விரைவாக எல்லா விருப்பங்களையும் நிறைவேற்றுவான் என்பதை வலியுறுத்துகிறது.

தந்தையாக இறைவன் - ஆழ்வாரின் வரிகளில்

"என் சரண் என் கண்ணன் என்னை ஆளுடை என் அப்பனே"

இங்கு, ஆழ்வார் இறைவனைத் தன் தந்தையாகவும், புகலிடமாகவும், இரக்கமுள்ளவனாகவும், தன்னைப் பெற்றவளாகவும், போற்றத்தக்கவனாகவும், தன்னிகரற்றவனாகவும் பாடுகிறார்.

கண்ணன் - என் தந்தை

வயது முதிர்ந்து விடினும் - எந்தை ;

பாரதியின் கண்ணனாகிய தந்தை வயதானலும் இளமை மாறாதவர், துன்பம், சோர்வு, நோய், பயம் இல்லாதவர். அன்பினால் துன்பத்தைத் துடைத்து விடலாம் என்பவர். யாரையும் பகைப்பதும் இல்லை, எல்லாவற்றையும் அறிந்து நடுநிலையுடன் இருப்பவர் என்றும் கூறப்படுகிறது.

சேவகனாக இறைவன் - வல்லூர் தேவராசபிள்ளையின் வரிகளில்

'வழி நடந்துந் திளைத்தவே இம்மலரடி இரண்டும்?' என்று

கண்ணன் தன்னை காணவரும் குசேலரை அழைத்துச் சென்று அவர் பாதத்தைத் தன் மடி மீது வைத்து "இத்திருவடிகள் பல கல் தொலைவு நடந்து நொந்தனவே" என பகர்ந்து கொண்டே அவற்றை மெல்லெனப் பிடிக்கிறான். குசேலர் துவரைநாதன் செய்யும் உபசாரங்களுக்கு (பெருமானுக்கு) வசப்பட்டு இசைந்து கொடுக்கிறார் என்பதைக் கவிஞர் அழகாகச் சொல்லிக் கண்ணனை நான் ஆட்சிக் கொண்டேன் என்கிறார்.

கண்ணன் - என் சேவகன்

நண்பனாய், மந்திரியாய், நல்ல சிரியனுமாய்,

கவிஞர் கண்ணனை வேலைக்காரனாக அமர்த்திக் கொள்கிறார் என அல்ல, அவர் கண்ணனுக்கு அடிமையாகி, பக்தனாகி விடுகிறார். தனக்குச் செய்யும் தொண்டுகளைக் கவிஞர் தானே கூறுகிறார். முழு மன நிறைவுடனும் எக்களிப்புடனும் பாடுகிறார்."கண்ணனை யாட்கொள்ளக் காரணமும் உள்ளனவே" என்ற வரிகள் நம்மை ஆழமாகச் சிந்திக்க வைக்கின்றன.

அரசனாக இறைவன் - திருமங்கையாழ்வாரின் வரிகளில்

"எம்பிரான் எந்தை என்னுடைச் சுற்றம்.."

கண்ணன் - என் அரசன்

கண்ண னெம்பெரு மானருள் வாழ்கவே

திருமங்கையாழ்வார் கண்ணனைத் தன் அரசனாக நினைத்து, தனக்குச் செய்த நற்செயல்களை எண்ணி மகிழ்கிறார். இந்தப் பாடல் மூலம், கண்ணனின் அருளால் உலகம் நன்மை பெற வேண்டும், கலியுகம் முடிந்து அமைதி நிலவ வேண்டும், நாட்டின் துயரங்கள் நீங்கி புகழ் உயர வேண்டும் என்று கவிஞர் விரும்புவதை அறியலாம்.

கண்ணன் - என் சீடன்

"யானே யாகி என்னலாற் பிறவாய், .."

இப்பாடலில், கண்ணன் கவிஞரிடம் சீடனாக வருகிறார். எல்லாம் வல்ல இறைவன் (மாயக் கண்ணன்) ஆன்மாவிலும், புறத்திலும் தனியாக இருப்பதாகவும், எல்லாம் நீயே என்றும் சொல்லப்படுகிறது. இதன் மூலம், 'அனைத்தும் நீ, அனைத்து பொருளும் நீ' என்ற பரிபாடல் கருத்தையும், 'அவை அவைதோறும்... கரைதெங்கும் பரந்துளன்' என்ற திருவாய்மொழிக் கருத்தையும் ஒட்டி விளக்குகிறது.

யசோதை பாவனையில் கண்ணன்

பெரியாழ்வார் தன்னை யசோதை பிராட்டியாக நினைத்துக் கண்ணனின் சிறு குறும்புகளை ரசிக்கின்றார்.

"உடன் கூடிக் கிண்கிணி ஆரவாரிப்ப "

கண்ணம்மா - என் குழந்தை

இன்ப கதைகள் எல்லாம் - உன்னைப்போல்

பெற்றோருக்கு இன்பம் அளிக்கும் மழலையின் கதைகள் எந்த நூலும் சொல்லவில்லை; குழந்தையைப் போல அன்பைக் காட்டும் தெய்வமும் இல்லை என்பது கவிஞரின் ஆழ்ந்த அனுபவமாகும்.

பெரியாழ்வாரின் விளையாட்டு பிள்ளை

பெரியாழ்வாரின் கண்ணனைப் பற்றி ஆய்ச்சியர் குற்றப்பத்திரிரிகை வாசிக்கிறார்

"வெண்ணெய் விழுங்கி வெறுங்கலத்தை.."

உன் மகன் எங்களுடைய வீட்டில் வந்து, நாங்கள் சேர்த்து வைத்த வெண்ணெயையெல்லாம் விழுங்குகிறான். அவ்வெண்ணெய் இருந்த கலத்தைக் கற்பாறைகளிலே இட்டு உடைத்து "ஓசை நன்றாயிருக்கிறது" என்று கூறுகிறான். இவன் செய்யும் தீமைகளை எங்களால் பொறுக்க முடியவில்லை.

கண்ணன் - என் விளையாட்டு பிள்ளை

தீராத விளையாட்டுப் பிள்ளை-கண்ணன்

தீராத விளையாட்டுப் பிள்ளையாக இருந்தாலும் வீட்டில் தாய், தந்தை, அத்தை அனைவருக்கும் நல்லவன் போல் நடந்து கொள்வான் என்று பாரதியின் கண்ணனைப் பற்றி ஒரு பெண் கூறுகின்றாள்.

கண்ணன் - என் காதலன்

"தேனை மறந்திருக்கும் வண்டும் -ஒளிச்
சிறப்பை மறந்துவிட்ட பூவும்"

ஆசை முகம் மறந்து போச்சே" என்று தொடங்கும் பாடலில், வண்டு தேனையும், பூக்கள் கதிரவன் ஒளியையும், பயிர்கள் மழையையும் மறக்காது. அதுபோல் கண்ணனின் நினைவுகள் மட்டுமே மனதில் நிறைந்திருப்பதாகப் நாயகி பாடுகிறாள்.

கண்ணம்மா - என் காதலி

நல்லவுயிர், நீ யெனக்கு, நாடியடி நானுனக்கு;
செல்வமடி நீ யெனக்கு, சேம நிதி நானுனக்கு;

இந்த பாடலில், பாரதியார் கண்ணம்மாவின் மீது உள்ள ஆழமான காதலும், அவள் அழகு மற்றும் அன்பும் மிக நன்றாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. அவர் அவளை உயிராகவும், செல்வமாகவும், காத்து வைக்கும் கருவூலமாகவும் உருவகப்படுத்திப் பாடியுள்ளார்.

கண்ணன் - என் ஆண்டாள்

துன்பமும் நோயும் மிடிமையுந் தீர்த்துச்

இந்தப் பாடலில், கவிஞர் துன்பம், நோய், வறுமை ஆகியவற்றை நீக்கி, இன்பம் அருளுமாறு கடவுளை வேண்டுகிறார். மேலும், கடவுளின் புகழைப் பாடி, அவரது ஆணைப்படி நடப்பேன் என்றும் கூறுகிறார்.

கண்ணம்மா - என் குலதெய்வம்

உருவாய் அறிவில் ஒளிர்வாய் - கண்ணா !

பாரதியின் இந்த பாடலில், கண்ணனைக் குலதெய்வமாகக் கொண்டு, ஆழமான பக்திப் பாசத்தை வெளிப்படுத்துகிறார். கண்ணன் அறிவாக உருவெடுத்து ஒளிருவதாகவும், உயிரின் அமுதமாகப் பொழிகிறதாகவும், உள்ளத்தில் கருவாக இருந்து வளர்கிறதாகவும், கமலத்துடன் இணைகிறதாகவும் பக்தன் உணர்கிறான். இறுதியில், மனம் முழுவதும் வேட்கையுடன் "வருவாய், வருவாய், வருவாய்-கண்ணா!" என அழைக்கிறார். இது ஆன்மீகமான அழைப்பு; தெய்வத்தை உள்ளத்தில் வரவேற்கும் உன்னதமான கோரிக்கை ஆகும்.

முடிவுரை

பாரதியார் "கண்ணன் பாட்டு" மூலம், இறைவனை நம் அன்பு, அக்கறை கொண்ட உறவுகளுக்குள் கொண்டு வந்து, தெய்வத்தையும் மனிதனையும் ஒரே அகப்பாடலின் இணைப்பாக உருவாக்குகிறார். வாழ்க்கையும் கவிதையும் அலைமோதிய பாரதியின் ஆன்மிகப் பயணத்தில், "கண்ணன் பாட்டு" ஒரு மனதைத் தொட்டு, உணர்வுகளைத் தெளிவுபடுத்தும் சிறந்த உதாரணமாக விளங்குகிறது. இந்த பாடல், பக்தியும் அன்பும் கலந்த உறவுகளின் உணர்ச்சியை உணர்த்தி, இறைவனுடனான நெருங்கிய தொடர்பை வலுப்படுத்துகிறது. "பாரதியின் கண்ணன் பாட்டு: உறவுகளின் கவியுணர்ச்சி" எனும் தலைப்பின் கீழ், இக்கவிதை மனிதன் மற்றும் தெய்வத்தின் இடையேயான அழகான சங்கமமாகும்.

நூல் விபரம்

1. ஆழ்வார்கள் - நாலாயிரம் திவ்ப் பிரபந்தம்
2. கண்ணன் பாட்டு திறன் - பேராசிரியர் டாக்டர் ந. சுப்பு ரெட்டியார்
3. சுப்ரமணி பாரதியார் கவிதைகள்
4. தேவராசபிள்ளை, வல்லூர் - குசேலோபாக்கியனம்

120. குழந்தை வளர்ப்பு கோட்பாடுகள் மற்றும் உளவியல் நோக்குகள்



முனைவர் கா. வினிதா
பிபிஜி கல்வியியல் கல்லூரி
சரவணம்பட்டி,கோயம்புத்தூர்

அறிமுகம்

தமிழ் இலக்கியத்தில் குழந்தைகளுக்காக நேரடியாக எழுதிய பன்முகக் கவிதைகளில் முக்கியமான ஒன்று "ஓடி விளையாடு பாப்பா. மகாகவி பாரதியார், குழந்தையின் வளமான வளர்ச்சிக்கான வழிகாட்டியாக இந்தக் கவிதையை அமைத்துள்ளார். இதனுள் குழந்தையின் உடல், மனம், ஒழுக்கம், சமூக அறிவு, கலாசாரம் ஆகிய அனைத்தும் தழைத்திருக்கின்றன. இக்கட்டுரை, கவிதையில் பதிந்துள்ள உளவியல் கோட்பாடுகளை வெளிச்சமிட்டுக் காட்டும் நோக்குடன் எழுதப்பட்டுள்ளது.

பாரதியின் குழந்தை வளர்ப்பு கோட்பாடுகள் மற்றும் உளவியல் நோக்குகள்

ஓடி விளையாடு பாப்பா-நீ
ஓய்ந்திருக்க லாகாகது பாப்பா!

குழந்தைகள் ஓடுதல், விளையாடுதல் மூலம் தங்களது கைகால் இயக்கங்களை நன்கு பயிற்சி செய்தல் பற்றி எழுதப்பட்டுள்ளது. ஜீன் பியாஜே கூறும் **செயல்பாட்டு நிலை (Sensorimotor stage)** மற்றும் முன்நிலைத்தயார்நிலை (Pre-operational stage) யை இது பிரதிபலிக்கிறது. விளையாட்டு குழந்தைகளின் உடல் நலம் மற்றும் சமூக அனுபவங்களை வளர்க்கும். ஜீன் பியாஜே (Jean Piaget) மற்றும் விகோஸ்கி (Vygotsky) போன்ற உளவியலாளர்கள் விளையாட்டின் மூலம் கற்றல் வளர்கிறது என்பதைக் கூறுகின்றனர்.

சின்னஞ் சிறுகுருவி போலே-நீ
திரிந்து பறந்துவா பாப்பா!

இயற்கையுடன் இணைந்து குழந்தைகள் மன அமைதியையும் மகிழ்ச்சியையும் பெறுகிறார்கள். இது குழந்தைகளில் **அனுபவ அறிவு** மற்றும் **உணர்ச்சி சீர்மை** வளர்க்கும். இது குழந்தையின் நேர்மறை மனப்பாங்கை வளர்க்க உதவும்.

கொத்தித் திரியுமந்தக் கோழி-அதைக்
கூட்டி விளையாடு பாப்பா!

கொத்திக் கொண்டிருக்கும் கோழிகளுடன் சேர்ந்து விளையாடு. எதையாவது திருடும் காகத்தைப் பார்த்தால், அதற்கு இரக்கம் காட்ட வேண்டும். மற்றவர்களின் நிலையை உணர்வது, **மன்னிக்கக்** கூடிய தன்மை, போன்ற பண்புகள் **கொல்பெர்க்** ஒழுக்க வளர்ச்சி நிலைகளில் இடம்பெறுகிறது.

பாலைப் பொழிந்துதரும் பாப்பா-அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா!

பசுக்கள், நாய்கள் போன்ற உயிரினங்களை மதிப்பது, குழந்தையின் பொது விழிப்புணர்வை **(சுற்றுச்சூழல் மனநிலைகள் (Environmental psychology)** வளர்க்கும்.

வண்டி இழுக்கும்நல்ல குதிரை,-நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு..

பிற உயிரினங்களுடன் இணைந்து வாழும் பண்பும், பாசமும் **வளர்க்கப்படும்.** இது சுற்றுச்சூழல் உளவியல் (Environmental Psychology) பகுதியில் வருகிறது.

காலை எழுந்தவுடன் படிப்பு-பின்பு
கனிவு கொடுக்கும்நல்ல பாட்டு

படிப்பு - பாட்டு - விளையாட்டு (**மூன்று முனைப்புகள்**) – அறிவியல், கலை மற்றும் உடல் வளர்ச்சி ஆகிய மூன்றையும் சேர்த்து ஒரு முழுமையான நலனுடன் வளர வழிகாட்டுகிறது. ஹோலிஸ்டிக் வளர்ச்சி **(Holistic development)** கருத்தை இது பிரதிபலிக்கிறது.

பொய்சொல்லக் கூடாது பாப்பா-என்றும்
புறஞ்சொல்ல லாகாது பாப்பா!

நேர்மை, நம்பிக்கை, சமூக ஒழுக்கம் ஆகியவை குழந்தை வளர்ச்சியில் முக்கிய இடம் பெறுகின்றன. **நெறிமுறைகள் மற்றும் ஒழுக்கம்** – நேர்மை, நேர்மையான கருத்துக்கள் மற்றும் சமூக ஒழுக்கம் குறித்து வளர்ச்சி தரும்.

பாதகஞ் செய்பவரைக் கண்டால்-நாம்
பயங்கொள்ள லாகாது பாப்பா!

Resilience எனப்படும் மன உறுதி, தடைகளைச் சமாளிக்கும் ஆற்றல் பற்றிய விழிப்புணர்வை இது உருவாக்குகிறது.

சோம்பல் மிகக்கெடுதி பாப்பா-தாய்
சொன்ன சொல்லைத் தட்டாதே பாப்பா!

தாயின் அறிவுரையை மதிக்கும் பண்பும், சோம்பலை விலக்கி முயற்சியுடன் இருப்பதும் ஒரு நலமான வளர்ச்சிக்குத் தேவையான மனநிலை - **தன்னிலைமை (Self-discipline).**

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற-எங்கள்
தாயென்று கும்பிடடி பாப்பா!

அடையாளம் உணர்வு (Identity development) மற்றும் **சமூக ஒருமைப்பாடு** (Social cohesion) ஆகியவற்றை ஊக்குவிக்கிறது.

சொல்லில் உயர்வுதமிழ்ச் சொல்லே!-அதைத்
தொழுது படித்திடடி பாப்பா!

சுற்றுப்புறத்துடன் தொடர்பு மற்றும் இயற்கையை ரசிப்பது குழந்தையின் மனநிலையைத் தூண்டும். இது குழந்தையின் நேர்மறை மனப்பாங்கை வளர்க்க உதவும். **உணர்ச்சி வளர்ச்சி (Emotional development)** .

வேத முடையதிந்த நாடு,-நல்ல
வீரர் பிறந்ததிந்த நாடு;

மன உறுதி மற்றும் தடைகளை எதிர்கொள்ளும் திறன் – பயங்களை சமாளிக்கும் தன்மை (Resilience), சவால்களை எதிர்கொள்ளும் திறனை வளர்க்கும். இது குழந்தையின் மனப்பக்குவத்தைக் காட்டுகிறது.

சாதிகள் இல்லையடி பாப்பா-குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்;

சமத்துவம் மற்றும் சமூக நீதி – அனைத்து குழந்தைகளும் சமம் என்பதையும், பாகுபாடுகளை ஒழிக்க வேண்டியதையும் குறிப்பிடுகிறது. இது சமூக உளவியலுடன் (Social Psychology) தொடர்புடையது.

உயிர்க ளிடத்தில்அன்பு வேணும்;-தெய்வம்

உயிர்களுக்கு அன்பு கொள்ளும் பழக்கம், அனுதாபம் (Empathy) வளர்ச்சி அடையாளம் ஆகும். இது சமூக உளவியல் (Social Psychology) கோணத்தில் பிறருடன் இணைந்து வாழும் திறனைக் காட்டுகிறது. தெய்வத்தை உண்மையாக அறிதல் என்பது மாரல் டெவலப்மெண்ட் (Moral Development)-இன் முன்னோடி நிலையை குறிக்கிறது. இது கொல்பெர்க் கூறும் post-conventional stage-ஐ பிரதிபலிக்கிறது. “வயிரமுடைய நெஞ்சு” என்பது மன உறுதி (Resilience) மற்றும் தன்னம்பிக்கை (Self-confidence) வளர்ச்சியைக் குறிக்கிறது. இம்மூன்று கூறுகளும் குழந்தையின் முழுமையான நெறிமுறை மற்றும் உணர்ச்சி வளர்ச்சிக்கான அடித்தளமாகும்.

சிறப்பம்சங்கள்

பாரதியாரின் கவிதை, இன்றைய **முழுமையான குழந்தை வளர்ச்சி** (Holistic Child Development) கோட்பாடுகளுடன் நேரடி ஒத்துழைப்பைக் கொண்டுள்ளது. இந்தக் கவிதையைக் கல்வி முறையில் இணைத்தால், குழந்தைகளின் **உணர்ச்சி, சமூக, நெறி, உடல், கலாசார** வளர்ச்சி ஆகிய அனைத்தும் சீராக நடைபெறும்.

முடிவு

ஓடி விளையாடு பாப்பா என்ற கவிதை, தமிழ் இலக்கியத்தின் முத்தான உரை மட்டும் அல்ல, குழந்தை வளர்ச்சிக்கான உளவியல் கல்விக்கான **வழிகாட்டி நூலாக**வும் அமைகிறது. இக்கவிதையில் உள்ள தத்துவங்கள், இன்றைய கல்வி முறையிலும், குழந்தை வளர்ச்சியின் அடிப்படைகளாகப் பயன்படுத்தப்பட வேண்டும். இலக்கியமும் உளவியலும் ஒன்றாகி, முழுமையான மனிதர்களை உருவாக்கும் கல்விக்கு வழிவகுக்கும். ஒரு குழந்தையின் முழுமையான உளவியல் வளர்ச்சிக்குத் தேவையான அடிப்படை குணங்களை – உடல், மனம், நெறிமுறை, சமூக உறவுகள் மற்றும் சுற்றுச்சூழல் உணர்வுகள் – அனைத்தையும் ஒளிக்கதிரென வெளிப்படுத்துகிறது. இக்கவிதை நவீன கல்வி உளவியலின் முக்கியக் கோட்பாடுகளுக்கு (Jean Piaget, Erikson, Kohlberg, etc.) ஒத்த தன்மையைக் கொண்டுள்ளது.

உரையியல் மேற்கோள்கள் (References):

1. பாரதியார், சுப்ரமணியன். *ஓடி விளையாடு பாப்பா!* (கவிதைத் தொகுப்பு)
2. Piaget, J. (1952). *The Origins of Intelligence in Children*
3. Erikson, E. H. (1963). *Childhood and Society*
4. Kohlberg, L. (1981). *The Philosophy of Moral Development*
5. NCERT (2005). *National Curriculum Framework*
6. தமிழ் இலக்கியமும் கல்வியியல் நோக்குகளும் - தமிழ் பல்கலைக்கழகம் வெளியீடு

121. பாரதியின் கவிக்கொடை



கவிஞர். டாக்டர். இரா.உமா பாரதி
மகாகவி பாரதியார் வம்சாவளி

மகாகவி பாரதியைப் பொறுத்தவரை அவரது கவிகள் எல்லாமே நமக்குக் கிடைத்த கொடைகள்தான் என்பேன். ஒவ்வொரு வார்த்தைக்கும் ஓராயிரம் அர்த்தங்கள் தொனிக்கும் வகையில் நாம் உள்ளுணர்வோடு அனுபவிக்கும் விதத்தில் எழுதப் பட்டவை என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. மகாகவியின் கவிதைகள் ஏராளம் இருந்தாலும் இந்தக் கட்டுரையில் நாம் பார்க்கப் போவது ஒரு சிறப்பான பாடல், “மாயையைப் பழித்தல்”.

"உண்மையறிந்தவர் உன்னைக் கணிப்பாரோ", "மாயையே "

இறைவனின் படைப்புகளில் 5 வகை தொழில்கள் உண்டு, படைத்தல், காத்தல், மறைத்தல், அருளல்,அழித்தல் என்று அவற்றை நாம் பார்க்கிறோம். இந்த 5 வகை தொழில்களுக்கும் ஐவகை கடவுளர்கள் இருப்பதாக வேதம் சொல்கிறது. இதில் படைத்தல், காத்தல், அழித்தல், அருளல் இவையெல்லாம் நாம் அறிவோம், மறைத்தல் என்று சொல்கிறோம் இல்லையா? அதைத்தான் "மாயை" என்று இங்கே பாரதி குறிப்பிடுகிறார். மாயைக்கான கடவுளர்கள், மஹேஸ்வரன், மகேஸ்வரி என்று சைவ சமயம் சொல்கிறது.

நம் மனம் என்பது ஒரு குரங்கு. அது இங்கிருப்பது போல் இருக்கும், ஆனால் எங்கெங்கோ சுற்றிச் சுற்றி வரும். அடுத்த நொடியில் அமெரிக்காவிற்குச் சென்றுவிடும் ஆற்றல் மனத்திற்கு உண்டு. நம் மனதிற்கு எல்லாமே நன்றாகத் தெரியும், நன்றாகப் புரியும் என்னவென்றால், இந்த உலகத்தில் தோன்றியவை எல்லாமே ஒரு நாள் இல்லாமல் போய் விடும் என்று. ஆனால் நம் மனம் ஏனோ அதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள மறுக்கிறது என்றுதான் சொல்லவேண்டும். "நாளை என்ன, அடுத்த நிமிடம் கூட நம்மால் உத்திரவாதம் சொல்ல முடியாத ஓர் வாழ்க்கைதானே நமது. இதற்குள் ஏன் இத்தனை பேதங்கள், என்றுதான் கேட்கிறார் மகாகவி. அதையே தன்னுடைய மற்றொரு பாடலிலும் கூட எடுத்துக் கூறுகிறாரே

"காண்பதெல்லாம் மறையுமென்றால் ”

'இந்த வாழ்வு நிலையில்லாதது',. இங்குள்ளவை எல்லாமே அழியும் தன்மையுடையவை என்று உணர்த்தவே இவ்வாறு பாடுகிறார், "உண்மை அறிந்தவர் உன்னைக் கணிப்பாரோ மாயையே" என்று. "மனத்திண்மையுள்ளோரை உன்னால் எதுவுமே செய்ய முடியாது என்று சூளுரைக்கிறாரே. இன்னும் சொல்கிறார் பாருங்கள், “எத்தனை கோடி படைகொண்டு வந்தாலும் மாயையே - நீ” என்றல்லவா பாடுகிறார். இதையே,

“மனதில் சலனமில்லாமல் மதியில் இருளே தோன்றாமல்..”

என்று, மணக்குள விநாயகரிடம் விநாயகர் நான்மணி மாலையில் வேண்டிப் பாடுகிறார். மதியில் இருளே இல்லாமை என்ற நிலை என்ன? நமது சிந்தை தெளிவாக, எதைக் குறித்தும் கலங்காமல் இருக்கிறது என்றுதானே அர்த்தம். மேலும் சொல்வது என்னவென்றால், “சிந்தனை தெளிவாக்கு அல்லால் என்னைச் செத்த உடலாக்கு” என்று. உடல் வேறு, உயிர் வேறு என்பதை அறிவதற்கும், நிலையற்ற வாழ்வில் நிலையியல் எது என்பதை வேறுபடுத்திக் கொள்வதற்கும் காலம் தேவைப்படுகிறது. சிலர் பக்குவத்தினூடாகவும், சிலர் பண்படுத்தலினூடாகவும், சிலர் அனுபவத்தினூடாகவும், சிலர் கல்வியினூடாகவும் இதனைப் புரிந்து கொள்கிறார்கள். விநாயகர் நான்மணி மாலையிலுமே என்ன வேண்டுகிறார் என்று பார்த்தால்,

"தன்னை ஆளும் சமர்த்து எனக்கருள்வாய்" என்றல்லவா கூறுகின்றார். அத்தோடுகூட “கடமையாவன தன்னைக் கட்டுதல்" என்று அழுத்தம் திருத்தமாகக் கூறுகிறார். அவர் மேலும் சொல்வதென்னவென்றால், "சார்ந்துநிற்பாய் எனது உளமே” என்று சலனமுமில்லாத சஞ்சலமுமில்லாத மனம் வேண்டுகிறார்.

"பொய்க்கோ உடலும் பொருளுயிரும் வாட்டுகிறோம்?"

என்று இந்த உலகத்தின் மாயையைத் தம் கவிதைகளில் தூவுகின்றார், வயலில் விதை போலே. இதையேதான்

"சாகத் துணியிற் சமுத்திரமெம்மட்டு மாயையே!" என்று தாம் தெளிவாக சிந்திப்பதைப் போல் எல்லோரும் மனதில் சலனமில்லாத நிலை பெறல் வேண்டும் என்று குறிப்பிடுகிறார். சாகத்துணிந்தவனுக்கு சமுத்திரம் முழங்கால்மட்டு என்று நாம் பாரதியின் வரிகளைத்தான் அடிக்கடி குறிப்படுகிறோம் இல்லையா.

"இருமையழிந்தபின் எங்கிருப்பாய் அற்ப மாயையே – தெளிந்து" இம்மையும், மறுமையும் ஒன்றெென உணர்ந்து தெரிந்த ஒருவரின் வேறுபாடு அழிந்தபின் மாயையால் எப்படி இருக்கமுடியும், ஓடிப் போய்விடுமே" என்று சொல்லி நகையாடுகிறார், மகாகவி. "நீ தரும் இன்பத்தை நேரெனக் கொள்வேனோ மாயையே!.." என்று தாம் மனம் தெளிந்து இவ்வுலகத்தின் அற்ப இன்பங்களுக்கெல்லாம் தான் அப்பாற்பட்டவனேயென்றும், நாயின் அரசாட்சியை சிங்கம் எவ்வாறு ஏற்றுக் கொள்ளாதோ, அதேபோல் தன் மனத்தைத் தானே சிங்கம் போலே ஆள்பவன் என்றும் அற்பமான மாயை தன்னை ஆள விடமாட்டேன் என்பதில் உறுதியாய் இருக்கிறாரே.

"என்னிச்சை கொண்டுனை எற்றிவிடவல்லேன் மாயையே -இனி" என்று சொல்லும் போதே நான் தெளிவானவன், உன்னால் எனக்கு எந்தத் தீங்கும் விளைவிக்க இயலாது மாயையே, என்று மார்தட்டிக் கொள்ளும் கர்வம் மகாகவியின் வரிகளில் தொனிக்கிறது அல்லவா?

"யார்க்கும் குடியல்லேன் யானென்பது ஓர்ந்தனன் மாயையே!
என்னும் வரிகள் நம்மை உணர்ச்சி பூர்வமான நிலைக்கே இட்டுச் செல்கிறது. தனது புதிய ஆத்திசூடியில், "போர்த்தொழில் பழகு" என்கிறார் மகாகவி. போர் என்றால் நம் வீட்டின் பகைவர்கள், நாட்டின் பகைவர்களை மட்டுமே குறிப்பிடவில்லை, நம் மனத்தினுள் இருக்கும் ஆவல், மயக்கம், பேராசை, கோபம், இறுமாப்பு, பொறாமை எனும் 6 உள்முக எதிரிகளையும் சேர்த்துதான் குறிப்பிடுகிறார் அவர். அந்த ஆறு உள்முக எதிரிகளை நான் வென்றுவிட்டேன். என்னை நான் நன்கு உணர்ந்து விட்டேன், என்பதை புதிய ஆத்திசூடியில் "தெய்வம் நீ என்று உணர்" என்கிறார். ஒருவருக்கு தன்னை உணர்தல் எனும் நிலை வந்துவிட்டால் அவர்கள் இந்த உலக மயக்கத்திலிருந்து விடுபட்டு விடுவார்கள் என்பதை இவ்வளவு எளிமையாக மகாகவி பாரதி தவிர வேறு எவராலும் கூற முடியாது. அவர் வழியில் நின்று நாமும் நம்மை உணர்ந்து, இந்தப் பிரபஞ்சத்தின் சக்தியை உணர்ந்து, குறிப்பாக நம்மைச் சுற்றியருப்பவர்களையும் அடுத்த தலைமுறையினரையும் நல்வழிப்படுத்தி நேர்மறையாகவே சிந்தித்து செயல்பட வைப்போம்.

122. பாரதியாரின் படைப்புலகம்



அ.ஹாசினி
ஸ்ரீசண்முகா மெட்ரிக் மேல்நிலை பள்ளி
மன்னார்குடி.

முன்னுரை

எட்டயபுரத்து எரிமலை மகாகவி என்ற பேரொளியில் பாரதியின் படைப்புகளில் பல பரிமாணங்கள் மறைந்துள்ளன. பாரதியின் பார்வை தொலைநோக்கு உடையது. இக்கட்டுரையின் வாயிலாக சிலவற்றை அலசுவோம்.

பாரதியார் அடிமைத்தனத்திலிருந்து நாடு விடுதலை பெறப் பாடியதோடு நிற்கவில்லை. விடுதலைக்குப் பின்னும் மக்கள் சரிநிகர் சமமாக ஒத்த மதிப்புப் பெற வேண்டும் என்பது பாரதி கண்ட கனவு. இன்று வரை கனவாகவே இருக்கிறது. பாரத நாடு, பாரத அன்னை, நவரத்தின மாலை, பாரத தேவியின் திருத்தசாங்கம்,பாரத சமுதாயம், தாயின் மணிக்கொடி போன்ற தலைப்புடைய பாடல்கள் எல்லாம் பாரதியாரின் உரிமைக் கனவை வடித்துக் காட்டுகின்றன.

**"முப்பது கோடி முழமையும் வாழ்வோம் விழில்
முப்பது கோடி முழமையும் வீழ்வோம்"**

என்ற அடிகள் பாரதியார் காட்டும் தேசிய ஒருமைப்பாட்டுக்குச் சரியான விளக்கமாக அமைந்துள்ளது. முப்பது கோடி ஜனங்களின் சங்கம் முழமைக்கும் பொதுவுடமை ஒப்பில்லாத சமுதாயம் உலகத்துக் கொரு ஒரு புதுமை' என்று பாடி பாரத சமுதாயம் உலகத்திற்கு ஒரு புதுமையாக அமைய வேண்டும் என்றார் பாரதி. உலகளாவிய பார்வை கூர்மைப்பட இதழியல் பணியே தூண்டுகோலாக அமைந்தது. இந்தியா, சுதேசமித்திரன் போன்ற இதழ்கள் வாயிலாக நாட்டு விடுதலை குறித்து தலையங்கள், கட்டுரைகளை எழுதினார்.

தம் பெயரையும் தம்மையும் முன்னிலைப் படித்துக் கொள்ள விரும்பும் மனிதர்களுக்கு இடையில் தான் என்ற ஒன்றை ஒழித்தவர் பாரதி. இந்தியா, விஜயா இதழில் முதன் முதலாகக் கருத்துப் படங்களை வெளியிட்டுள்ளார். ஆங்கிலக் கலப்பின்றி தமிழில் பேசுவதை வியப்பாகப் பார்ப்பவர்களுக்கிடையில் தமிழ் இதழ்களில் தமிழ் ஆண்டு, திங்கள், நாள் ஆகியவையை முதல் முதலாகக் குறித்தவர் பாரதி. பாஞ்சாலி சபதம் இந்திய விடுதலைப் போராட்டத்தையே பாரதப்போராகவும், பாஞ்சாலியைப் பாரத மாதாவாகவும் உருவகப்படுத்தி மகாகவி படைத்த படைப்புதான் **பாஞ்சாலி சபதம்.** பெண் விடுதலைக்குப் பாடுபட்ட பாரதி பெண்களுக்காகத் தமது சக்கரவர்த்தினி இதழில் முதல் வெண்பா எழுதியுள்ளார்.

**"பெண்மை அறிவுயரப் பீடோங்கும் பெண்மைதான்
ஒண்மை யுரஓங்கும் உலகு"**

பெண்கள் வீட்டை விட்டு வெளியே வந்து வெளியுலகைக் காணவும், அறிவை வளர்க்கவும் பாதை வகுத்தவர். இன்று மக்களவை, சட்டமன்றம் முதலியவற்றில் பங்கு கொள்ளும் அளவிற்குப் பெண்கள் முன்னேற்றம் அடைந்துள்ளனர்.

**"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த உள்ளோம்"**

என்று பெண்களை ஊக்கமூட்டினார்.

அரசியல் விடுதலை மட்டும் போதாது சமூக விடுதலையும் பெண் விடுதலையும் சேர்ந்ததுதான் இந்த தேச விடுதலை என்று சமூகத்திற்கு உணர்த்தியவன் பாரதி. அதனால்தான் பாரதி தான் படைத்த பாடல்களில் பெண்களை உயர்த்தும் பாடல்களை நிறையக் கொடுத்திருக்கின்றார். அவர் எழுதிய புதிய ஆத்திசூடியில் "தையலை உயர்வு செய்" என்று சமூகத்திற்குப் பாடம் சொல்லி இருப்பார். அது மட்டுமல்லாது மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம் என்று பெண்களை இழிவு செய்யும் சமூகத்தைக் கடுமையாகச் சாடியிருப்பார். புகைப்படத்தில் கூட அக்காலத்தில் பெண்களின் நிலை அடிமைத்தனத்தின் உச்சத்தில் இருப்பதை நாம் கண்டிருக்கின்றோம். அதனை உடைத்தெறிந்தவன் நம் பாரதி.தன் மனைவியை உட்கார வைத்தும் தான் நின்று கொண்டும் படம் எடுத்து உலகிற்கு இருபாலரின் சமநிலையை உணர்த்தியவர்.

" பாதகஞ் செய்பவரைக் கண்டால்
.... முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா"

என்று பாரதி பெண்களுக்குத் துணிவைக் கற்றுக் கொடுத்தார். பெண் விடுதலைக்கு மிக முக்கியமானது அவர்கள் அறியாமையிலிருந்து விடுதலை பெற வேண்டும். அதற்கு அவர்கள் பட்டங்கள் பெறும் இடங்களுக்கும் சட்டங்கள் இயற்றும் இடங்களுக்கும் முன்னேறிச் செல்ல வேண்டும் என்று விரும்பிய புலவன். பெண்கள் பொருள் அற்ற சமுதாயக் கட்டுப்பாடுகளில் இருந்து விடுபட்டு அச்சமின்றி புத்துலகச் சிற்பிகளாய்த் திகழ வேண்டும் என விரும்பியவர் பாரதி.

"நிமிர்ந்த நன்னடை
நேர்கொண்ட பார்வையும்.."

என்று இன்றைய பெண்களைப் புகழ்ந்தார். பெண்கள் வெளியே வந்து பேசுவதைப் பாவம் என்று மகளிரை அடக்கி வைத்த காலத்தில் நமது பாரதி துணிச்சலுடன் விதவைத் திருமணம் பற்றிப் பேசினார். சந்திரிகையின் கதையில் எழுதினார். முதுமைத் திருமணத்தை எதிர்த்துத் தராசு என்ற நூலில் எழுதினார். ஆதியில் இல்லாது பாதியில் வந்து புகுந்த சாதி வேறுபாடுகள் ஒற்றுமைக்கு உலை வைப்பதை உணர்ந்தவர்.

"வேதியராயினும் ஒன்றே அன்றி
வேறுகுலத்தின ராயினும் ஒன்று"

எனக் குல ஒற்றுமை கண்டவர் பாரதியார். மனதில் ஆயிரம் சாதி என்ற வஞ்சகர் வார்த்தையை ஒப்புவது இல்லை என்று சாதியைத் தோற்றுவித்த அரக்கர்களைச் சாடுகின்றார். எதிர் காலத்துப் பிறக்கும் குழந்தைகளாவது சாதி மனப்பான்மையின்றி உயர வேண்டுமென்று எண்ணினார். "சாதிகள் இல்லையடி பாப்பா குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்" எனப் பாடினார்.

முடிவுரை

பாரதியின் படைப்புகள் புதிய உலகத்தைப் படைக்க வழிகாட்டுவதாக அமைந்துள்ளன. அதை நாம் பின்பற்றிப் புதிய பாரதம் படைப்போம். "காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்" என்று பாடிய பாரதியின் கூர்நோக்கும் சிந்தனை வியப்பானது. இத்தகையை விட்டு விலகி வாழக்கூடாது என்று பாரதி காணி நிலம் வேண்டும் பராசக்தியே பாடலில் உணர்த்துகிறார்.

123. பாரதி ஒரு பார்வை



ச.பூசிதா

கார்த்தி வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி
கும்பகோணம்

முன்னுரை

தமிழுக்குத் தொண்டாற்றியவர்கள் பலர். அவர்களில் பாரதியார் தனக்கென்று தனியிடம் அமைத்துள்ளார். "யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவதெங்கும் காணோம்" என்று தமிழை வியந்து போற்றுகிறார் பாரதியார். பண்போடும், பணிவோடும், பகுக்கப்பட்ட பட்டறிவோடும் பெண்ணியம் போற்றுகின்ற பகுத்தறிவினை வளரச் செய்து பாட்டுத் திறத்தாலே இவ்வையகத்தை பாவித்திட வேண்டும் என்று எழுச்சியோடு பாடியவர் மகாகவி பாரதியார். முறுக்கிய மீசையும், நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும் எளிமையான தோற்றம் கொண்ட பாரதியார் காலம் காலமாக இருந்து வந்த செய்யுள் நடைக் கவிதை மரபை மாற்றி புதுக்கவிதைகளுக்கு வித்திட்டவர் யுக பாரதி ஆவார்.

பிறப்பு

இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் சின்னசாமி, லட்சுமி அம்மையாருக்கு 1822 மார்கழி திங்கள் 11 ஆம் நாள் மகனாகப் பிறந்தார். இவரது இயற்பெயர் சுப்பிரமணியம். இவருக்கு ஐந்து வயது இருக்கும் போது இவரது தாயார் காலமானார். இவர் தனது 7 ஆம் வயதிலேயே கவிதை எழுதத் துவங்கிவிட்டார். இவருக்கு 11 வயது இருக்கும் போது இவரது கவி பாடும் ஆற்றல் கண்டு எட்டயபுரம் மன்னர் அவையில் இவருக்கு **பாரதி** என்ற பட்டத்தை வழங்கினார். அன்று முதல் இவரது பெயர் சுப்பிரமணிய பாரதி என்றானது.

வாழ்க்கை

"பெண்களறிவை வளர்த்தால் வையம் பேதமை யற்றிடுங் காணீர்" என்று பாடிய பாரதிக்கு ஏழு வயதுச் சிறுமியான செல்லம்மாளோடு 1897 இல் திருமணம் நடந்தேறியது. அப்போது பாரதிக்கு 14 வயது. அன்றைய சமூகம் இது போன்ற கொடுமைகளைப் பெண்களுக்கு இழைத்து வந்தது. இது போன்ற கொடுமைகளைக் கண்டு பாரதி கொதிக்கலானார். இக் கொடுமைகள் இனியும் நடக்கக் கூடாது என்று போராடினார். 14 வயதில் தன் தந்தையை இழந்த பாரதியார் அதன் பிறகு வறுமையில் வாடித் தவித்தார் பின்பு ஒருவாறு துன்பப்பட்டு காசிக்குச் சென்று அலகாபாத் பல்கலைக்கழகத்தில் சமஸ்கிருதம் மற்றும் ஹிந்தி மொழிகளைக் கற்றுக்கொண்டார். ஆங்கிலம் போன்ற பிற மொழிகளிலும் தேர்ச்சி பெற்றார். தன் வாழ்க்கையில் எல்லாத் துயரங்களையும் பாரதியார் சந்தித்தாலும், தமிழ்ப்பற்றும், தேசப்பற்றும் , சமூக அக்கறையும் அவருக்குத் துளியும் குறைந்ததில்லை.

தமிழ்ப் பணி

பாரதியார் தமிழ் இலக்கியங்களை ஐயம் திரிபுறக் கற்று அவற்றைத் தழுவி அழகான பல கவிதைகளை நமக்குத் தந்துள்ளார். இவை இலகு நடையும், இலக்கிய நயமும், பொருள் செறிவும் உடைய புதுக்கவிதையாகும். தமிழ் இலக்கிய வரலாற்றில் புதுக்கவிதைகளைத் தமிழுக்கு அறிமுகம் செய்த பெருமை பாரதியைச் சாரும். கண்ணன் பாட்டு, குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், பாரதமாதா திருப்பள்ளி எழுச்சி, பெண்கள் விடுதலை, கும்மி போன்ற பல கவிதைகளைப் பாரதியார் தமிழுக்குத் தந்துள்ளார். பகவத் கீதையைத் தமிழில் மொழிபெயர்த்தார். மேலும் எட்டயபுர அரசவையில் அரசவைக் கவிஞராகப் பணிபுரிந்து பல கவிதைகளை இயற்றினார். அதன் பிறகு 1903 இல் இவரின் எழுத்துக்களை அச்சடித்தார்.

மதுரை சேதுபதி பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணிபுரிந்தார். பின்பு சுதந்திரப் போராட்ட வேட்கை மிகுந்த பாரதி பத்திரிக்கை மூலமாக அடிமைப்பட்டுக் கிடந்த சுதேச மக்களை தனது எழுத்துக்கள் மூலமாகக் கிளர்ந்தெழுச் செய்தார். "செப்புமொழி பதினெட்டுடையாள்" போன்ற பாடல்கள் வழியாக சுதந்திர எண்ணத்தை மக்களிடையே விதைத்தார். மேலும் ரா.அ. பத்மநாபன் அவர்கள் பாரதி கடிதங்களைத் தொகுத்து பாரதியின் கடிதங்கள் என்ற பெயரில் நூலாக வெளியிட்டுள்ளார். இந்தப் புத்தகத்தில் பாரதி எழுதிய 23 கடிதங்கள் தொகுக்கப்பட்டுள்ளன இந்த கடிதங்கள் மூலம் பாரதியின் மனித இயல்பையும், அவரது கனவுகளையும் தெரிந்து கொள்ள இது வழிவகை செய்கிறது.

பெண் விடுதலை

பாரதியார், பெண்களின் முன்னேற்றத்திற்கும், விடுதலைக்கும் குரல் கொடுத்தார். பெண்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவித்து, சமூதாயத்தில் ஆண்களுக்கு இணையான உரிமைகளைப் பெற பாடுபட்டார். பாரதியார் பெண்ணுரிமைப் போராட்டங்களில் தீவிரமாக ஈடுபட்டார், மேலும் பெண் விடுதலைக்கான பாடல்களை இயற்றினார். பெண் கல்வி, வேலைவாய்ப்பு போன்றவற்றில் ஆண்களுக்கு இணையான வாய்ப்புகளைப் பெற அவர் பாடுபட்டார்.

பாரதியின் பெண்ணிய சிந்தனைகள், அக்கால சமூகச் சூழலில் ஒரு புரட்சிகரமானவையாகக் கருதப்பட்டன. அவர் தனது எழுத்துக்கள் மூலம் பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தினார், மேலும் பெண் விடுதலைக்கான இயக்கங்களுக்கு ஒரு உத்வேகமாக திகழ்ந்தார்.

முடிவுரை

இவ்வாறாக பாரதியின் படைப்புகள் பல சமுதாய மாற்றங்களைச் செய்தும், செய்ய இருப்பதுமாக இன்றளவும் தொடர்ந்து கொண்டே இருப்பதற்கு அவரின் ஆழமான, அழுத்தமான நாட்டுப்பற்று மற்றும் தமிழ்ப்பற்றுச் சிந்தனையும் மிகுந்து இருப்பதேயாகும். அவர்வழி நின்று நாமும் அறம் செய்வோம்!

124. பாரதியாரின் பார்வையில் பாஞ்சாலி

த. சபரி பிரியா

10-ம் வகுப்பு
எவர்வின் வித்யாஷ்ரம்
சென்னை

முன்னுரை

பாரதியார் – தமிழ்க் கவிதையின் புரட்சிச் சுடரொளி. அவரது எழுத்துக்கள், உணர்வும் உண்மையும் நெய்த ஒளிப்படலம். அவர் சிந்தனையில், பெண்கள் தாழ்ந்தவர்கள் அல்ல; அவர்கள் சக்தியும் சுதந்திரமும் கொண்ட தெய்வங்கள்.

இந்த எண்ணத்தின் நீட்சி தான் பாஞ்சாலி சபதம். மகாபாரதக் கதையின் பாஞ்சாலி பாத்திரம் வழியாக, பாரதியார் தன் காலத்தின் பெண்கள் மீது நடைபெற்ற அநீதிகளைக் கேள்விக்குள்ளாக்கினார். பாஞ்சாலியின் அவமானம், இந்திய மகளிரின் அவமானமாகவே அவர் கருதினார்.

அவளது சாபம், ஒருபக்கத்தில் ஒரு தீர்ப்பு; மறுபக்கத்தில், ஒரு சமூகத்தின் எழுச்சிக்கான முழக்கம். இந்நூல், நம் சிந்தனையைத் தட்டும் சூழுரை; ஒரு பெண்ணின் கண்ணீரில் மூடிய புரட்சி.

1. ஒரு வீரப் பெண்ணின் கண்மூடிய சூழுரை

பாஞ்சாலியைப் பாரதியார் காட்டுவது, பழமைவாதத்தால் சிதைந்த சமூகத்தின் மீது சூழுரை செய்து எழும் ஒரு பெண் உருவமாகத்தான்.

> "சாபமிட்டாள் பாஞ்சாலி, சபை முழுதும் பதைத்ததடி!"

அவளது கோபம், அவளது கண்ணீர், தனக்கு நேர்ந்த துரோகத்தின் எதிரொலி அல்ல, மக்கள் பாவத்தின் எதிரொலி. அவள், அந்த அவமானத்தைத் தனக்கே நடந்ததாக மட்டுமில்லாமல், பெண்கள் சமூகத்திற்கு நடந்தது என்று புரிந்து கொள்கிறாள். அவளின் சபதம், அந்தத் துன்பம் மறுபடியும் எந்த மகளுக்கும் நிகழக்கூடாது என்றெண்ணுகிறார்.

2. பெண்ணுரிமை – சங்கடமே போராளியாகும் தருணம்

பாஞ்சாலி சபதம் என்ற நூலில் பாரதியார் பெண்களின் உரிமையைத் துணிவுடன் பேசுகிறார். அவர் எழுதிய வரிகள்:

> "நாங்கள் பாரதச் சிதம்பரக் கண்ணியச் சக்தி வழி நின்றோம்!"

> "நாங்கள் இளமையராய் நின்றோம்;
> நம் உயிரையே பணயம் வைத்தோம்!"

இது பெண்கள் அடிமைகள் அல்ல, அவர்கள் சம உரிமைக் குடிமக்கள் என்பதை வலியுறுத்தும் உரக்கக் குரல். பெண்கள் தங்கள் உரிமைகளைக் கோரும் போது அது ஒரு பாவமல்ல – அது ஒரு தெய்வீக அறச்செயல் என்பதே பாரதியாரின் தெளிவான பாடம்.

3. சபையில் நடந்தது நீதியோ? இல்லை...!

பாரதியார், துரியோதனனையும், பீஷ்மரையும், துரோணாச்சாரியரையும் கடுமையாக விமர்சிக்கிறார். சபையில் நடந்தது பொய்ம்மறுக்கும் நியாயத் தாக்குதலாக மட்டுமே பார்க்கிறார். பாஞ்சாலியின் அந்த அவமானம், நீதியல்ல — அது அநீதியின் திருவிழா.

> "தானைநாயகரே தக்கதன்று
> தாரவாட்டமே நியாயமன்றோ?"

இந்த வரி வழியாக, பாரதியார் அவமானத்தைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளும் பழமைவாதத் தலைமுறையையே கேள்விக்குள்ளாக்குகிறார். அவரால் கேட்கப்பட்ட இந்தக் கேள்விகள் இன்று கூட சமுதாயத்தில் எதிரொலிக்கின்றன.

4. பாஞ்சாலியின் சபதம் – மக்கள் எழுச்சிக்கான உரக்கக் குரல்

அவளது சபதம் தனிப்பட்டவையல்ல. அவள் கூறும் ஒவ்வொரு வரியும் பாரத நாட்டைத் தட்டிக் கேட்கும் போர்க் குரல்கள்.

"மாநாடு ஒன்று கிளர்த்திடுவாள்
மன்னர் இராசியம் மாறிடுவாள்!"

"தீயவை முறியட்டும்
செல்வமும் தர்மமும் சிறக்கட்டும்!"

இவை ஒரு சாதாரண தேவியின் சபதம் அல்ல. இவை புரட்சி மகளிரின் பேரழைப்பு. நாடு உள்நோக்கி விழிக்கவும், தூக்கத்தில் கிடக்கும் சமுதாய மனங்களும் எழ விழிக்கவும் அவளது சபதம் ஒரு மணி ஒலி.

5. அகிம்சை, தர்மம், மக்கள் நியாயம் – மூன்று கோட்பாடுகள்

பாரதியார், பாஞ்சாலியின் வாயிலாக மூன்று முக்கிய கோட்பாடுகளை ஊட்டுகிறார்:

*அகிம்சை – அவளுடைய சபதம் அப்படியே வன்முறையாகச் செல்வதில்லை. தர்மம் நிலைபெற வேண்டும் என்ற ஆழ்ந்த நம்பிக்கைதான் தழலாக விரிகிறது.

* தர்மம் – அவள் தீர்ப்புக் கோருவது மனிதரிடமில்லை; அதற்கு மேல் இருக்கும் நீதியிடம்தான்.

* மக்கள் நியாயம் – அவள் சாபம் ஒரு தனிநபருக்கே அல்ல, ஒரு சமுதாயத்தின் நலனுக்காகவே.

> "நீதிக்காகவே சபதமிட்டு
> நேர் வழியில் நடந்தாளே!"

6.இன்றும் முடிவடையாத சபதம்

பாரதியார் பாஞ்சாலியின் சபதத்தை “முடிவடைந்த ஒன்று” எனச் சொல்லவில்லை. அந்த சபதம் இன்று வரைக்கும் தொடர்கிறது என்பதே அவரின் உரை.

> "இன்னும் சபதம் முடியவில்லை,
> இன்றும் அது நெஞ்சினிலே!"

அந்தச் சபதம் ஒரு கவிதையின் முடிவாக இல்லாது, ஒவ்வொரு உணர்ச்சிப் பெண்மணியின் சபதமாக இன்றும் வாழ்கிறது. இன்றும் நீதிக்காக ஒவ்வொரு பெண்ணும் அவளாகவே இருக்கிறாள்.

முடிவுரை

பாஞ்சாலி சபதம் — ஒரு பழக்கக்கதை அல்ல. அது இன்று வரைக்கும் தீரப்படாத ஒரு சமூக வாதம். பாரதியார், ஒரு பெண்ணின் வாயிலாக ஒரு நாடு விழித்தெழவேண்டும் என்பதைக் கூறுகிறார். அவர் எழுதிய ஒவ்வொரு வரியிலும் – சபையின் சத்தமும், மக்களின் நீதி உணர்வும் ஒலிக்கின்றன. அந்தண் சபதம், இன்று தமிழில் எழுதப்படுகிற ஒவ்வொரு பெண்ணின் கனவிலும், ஒவ்வொரு சமூகப் போராளியின் குரலிலும் ஒளிந்து கிடக்கிறது.

"இன்னும் சபதம் முடியவில்லை...
இன்றும் அது நம்முள் மூச்செடுக்கும்!"

இன்று நாம் எழுதும் இந்தக் கட்டுரை கூட, பாஞ்சாலியின் சபதத்தின் தொடர்ச்சி.
அதனால் தான் — பாரதியார் வாழ்கிறார். அந்த சபதம் இன்னும் உயிர்வாழ்கிறது.

125. பாரதியாரின் பெண்ணியம்



திருமதி. ஆ.செல்வநாயகம்

எம். எஸ்சி.பிஎட்
பட்டதாரி ஆசிரியை(கணிதம்)
ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி
போளுவாம்பட்டி, தொண்டாமுத்தூர், கோவை

முன்னுரை

"நமக்குத் தொழில் நாட்டுக்கு உழைத்தல்
இமைப்பொழுதும் சோராது இருத்தல்"

என்னும் உயரிய குறிக்கோளுடன் "பீடுடைய பெம்மான் இவனன்றே!" என வையகம் போற்ற வாழ்ந்து காட்டியவர் பாரதியார் (1882-1921). அவர் பெயரை கேட்டாலே உணர்வுகள் புத்துணர்வு பெறும். கவிதைகளைப் படித்தாலே தீப்பறக்கும். அவர் வார்த்தைகளில் தமிழின் புகழ் மணக்கும். "குறுகத் தரித்த குறள் போல்"இம்மண்ணுலகில் வாழ்ந்தது 39 ஆண்டுகளே ஆயினும் யாராலும் துணிந்து கூற முடியாத அரும்பெரும் கருத்துக்களைத் தம் குறுகிய வாழ்நாளில் திறம்பட கூறிச் சென்றவர் மகாகவி பாரதியார். "திறம்பாடி வந்த மறவன்

புதிய அறம் பாடி வந்த அறிஞன்" -புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற கவிஞன் அடிமை இருளை அகற்றத் தோன்றிய 'இளம் ஞாயிறு' 'எல்லோரும் ஓர் நிலை எல்லோரும் ஓர் நிறை' என்று கனவு கண்டவர். 'கமுகொடு நெடிய தென்னை கமழ்கின்ற சந்தனங்கள் சமைக்கின்ற பொதிகை அன்னை' தமிழுக்குத் தந்த தவப்புதல்வன்.காலம் படைத்த சிறந்த கவிஞன். தமிழ்ப் பெண்கள் மனவளத்துடன் வளமான வாழ்வு வாழ,சொல்லும் பொருளும் புதிதாகக் கொண்டு கவிதைகள் பாடிய புலவன் பாரதி.

ஆய்வின் நோக்கம்

"உளி எடுத்த சிற்பியோ சிலை வடிப்பான்;
ஏடெடுத்த கவியோ அனைத்தையும் படைப்பான்
தன் கற்பனை உளிதன்னில்"

எட்டயபுரத்தில் விளைந்த விருட்சம் சக்தி தாசன் 'பாரதியின் பெண்ணியம்' என்ற தலைப்பின் மீதான எனது ஆய்வில் பாரதி கண்ட பெண்களையும் காண விரும்பிய புதுமைப் பெண்களையும் உங்கள் கண் முன் கொண்டுவர முயல்கின்றேன். முன்னேற்றப் பாதையிலே முன்னேறிச் சென்று கொண்டிருக்கும் இன்றைய இளம் மகளிர் பெண்ணியத்தை இன்னும் முழுமையாக சரியான பாதையில் கொண்டு செல்ல என்னுடைய இந்த ஆய்வு உறுதுணையாக அமையும் என்ற நோக்கில் இக்கட்டுரையை உங்களுக்கு சமர்ப்பிக்கின்றேன்.

பெண் விடுதலை

பகுத்தறிவுச் சிந்தனை மிகுந்த 21 ஆம் நூற்றாண்டில் கூட, பெண் விடுதலை என்பது பெண்களைக் குடும்பப் பின்னணியை விட்டு வெளியே வரத் தூண்டுகின்ற கோட்பாடு என்று பெண்களே விமர்சிக்கின்ற சூழ்நிலையில், அதனை சரியாகப் புரிந்து கொண்டு ஏற்றுக்கொள்ளச் செய்ய 19 ஆம் நூற்றாண்டிலேயே அதனைத் தெளிவுறக் கூறிய மகாகவியின் பெண் விடுதலைக் கருத்துக்களை முன்னிலைப்படுத்த வேண்டியது மிகவும் அவசியமாகிறது. பல்வேறு எதிர்ப்புகளுக்கு இடையே தொடர்ந்து தனது கவிதைகளிலும் கட்டுரைகளிலும் பெண் விடுதலையை வலியுறுத்தியவர் பாரதியார்.அத்தோடு அன்றி அதனைத் தன் வாழ்வில், தனது குடும்பத்தில் செயல்படுத்திக் காட்டியவர்.காசியில் தங்கிப் படித்த சமயம் மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் எழுத்துக்களும், விவேகானந்தரின் சிஷ்யை சகோதரி சாரு நிவேதிதா தேவியின் சந்திப்பும் பெண்கள் விடுதலை பற்றிய ஒரு ஆழமான சிந்தனையினை பாரதியாருள் ஏற்படுத்தியது. "பெண்ணடிமை தீருமட்டும் பேசும் இந்த திருநாட்டில் மண்ணடிமை முயற்கொம்பே" என புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தன் கவிதை வரிகளில் பெண் விடுதலைக்கு உரமேற்ற அடித்தளமிட்டவை அவரது ஆசான் பாரதியின் பெண்ணியக் கவிதைகள் என்றால்

அது மிகையாகாது..பெண்களுக்கு அநீதி செய்பவர்கள் அன்னியர்கள் அல்ல, நம் வீட்டு மனிதர்கள் தான்.எனவே பெண்கள் விடுதலை அடைய காந்தியடிகள் கூறும் 'சாத்வீக எதிர்ப்பு முறையை' நாமும் பின்பற்ற வேண்டும் என வலியுறுத்துகிறார்.'பெண் விடுதலைக்குத் தமிழ்ப் பெண்கள் செய்யத்தக்கது யாது?' என்ற கட்டுரையை எழுதி பெண்கள் கூட்டத்தில் தனது மகளைக் கொண்டே படிக்க வைத்தார். பெண் விடுதலை இயக்கத்திற்கு வீர உணர்ச்சி உடைய பெண்கள் வீர உணர்வுடைய மக்களைப் பெற்றுத் தர வேண்டும் என்பதனை 'வீரத்தாய்மார்கள்' மற்றும் 'பழங்கால தமிழ் மாது' ஆகிய தனது கட்டுரைகளில் தெளிவு படுத்தியுள்ளார்.

"பெண்ணுக்கு விடுதலை நீரில்லை
என்றால் பின்னிந்த உலகினிலே வாழ்க்கையில்லை"

பெண்ணுக்கு சுதந்திர வாழ்வு இல்லை என்றால் இந்த உலகில் உயிர்களுக்கு வாழ்வு என்பதே இல்லை என்ற அவரது ஆணித்தரமான கருத்துக்களே இன்றைய காலச் சூழலில் பெண்கள் பட்டங்கள் பல பெற்று சட்டங்கள் ஆளுகின்ற நிலைமையை அடைந்தமைக்கு ஆரம்பப் புள்ளியாய் அமைந்தது என்பதை நம்மால் நன்கு உணர முடிகிறது. "கலிய ழிப்பது பெண்க ளறமடா!" (பெண்மை வாழ்க பா.க ப.எண்200)என்று தனக்கு இழைக்கப்படும் கொடுமைகளையும் தன் மீது திணிக்கப்படும் மூடத்தனங்களையும் அழித்தொழிந்து அறத்தை நிலைநாட்டும் ஆற்றல் இந்தியப் பெண்களுக்கே உரித்தான ஒன்று என்று பெருமிதம் கொள்ளும் பாட்டு புலவன் பாரதி,

"உயிரை காக்கும் சேர்த்திடும் உயிரினும்
இந்த பெண்மை இனிதடா"(பா.க ப.எண் 200)

பாரதப் பெண்கள் ஆரோக்கியமான சமத்துவ சமுதாயத்தை தன்முனைப்போடு உருவாக்கும் ஆற்றலும் வல்லமையும் பெற்றவர்கள் என்று தனது இந்தக் கவிதை வரிகளில் உறுதிப்படக் கூறியுள்ளார்.

பெண் கல்வி

'மீசைக் கவிஞர்' என்றும் 'முண்டாசுக் கவி' என்றும் தமிழ் இலக்கிய உலகம் போற்றும் பாரதியார் பெண்கள் கல்வி அறிவுடன் சமத்துவத்தையும் பெற்றுத் திகழும் நாளே அவர்களுக்கு உண்மையான விடுதலை நாள் என்கிறார். மேலும் அவர்கள் விடுதலையே நாட்டின் மேன்மைக்கு ஆணிவேர் என்பதை

"பெண்கள் அறிவை வளர்த்தால் வையகம் பேதமை ஏற்றிடும் காணீர்"

என்ற வரிகளில் எடுத்து இயம்பியுள்ளார்.அவரது காலத்தில் தமிழகத்தில் பெண்களுக்கு எதிராக எத்தனையோ சமூகச் சீர்கேடுகள் நிலவிய போதிலும் குறிப்பாக அவர்களின் மோசமான கல்வி நிலையே மகாகவியின் மனதில் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. வங்காள உயர்குழு பெண்களை கண்ணுற்ற கவிஞருக்கு பெண் முழுமையான சுதந்திர உணர்வு பெற்று சிறப்புடன் செயல்பட முதன்மையான்து கல்வித் தகுதியே என்ற எண்ணம் வலுப்பெற்று அதனைத் தொடர்ந்து தன் எழுத்துக்களில் வலியுறுத்தி வந்துள்ளார்."அச்சமும் நாணமும் நாய்களுக்கு வேண்டுமாம்" என்றவர் பெண்ணின் அறிவும் அறமுமே வளமான நம் தேசத்தின் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் அவசியம் என்பதை முன்னரே அறிந்த தீர்க்கதரிசி.

"நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யாருக்கும் அஞ்சாத நெறிகளும்
திமிர்ந்த ஞானச் செருக்கும்"(பா.கபுதுமைப்பெண்.ப.எண்199) கொண்ட மாதரை 'செம்மை மாதர்' என்று அழுத்தமாகக் குறிப்பிடும் மகாகவி "அமிழ்ந்து பேரிரு ளாமறி யாமையில் அவல மெய்திக் கவலையின்றி வாழ்வதை உமிழ்ந்து தள்ளுதலே"(பா.க ப.எண்199) பெண்ணுக்கு நல்ல அறமாகும் என்கிறார்.தன் பாடல் வரிகளில் பெண் தனது வாழ்வில் நிலவும் அறியாமைப் பேருருளைக் கல்வியறிவு என்னும் விளக்கினைக் கையில் எடுத்து இருள் போக்கி ஒளிமயமாக்கிக் கொள்ளத் துணிய வேண்டும் என்று ஆழமாகப் பதிவு செய்துள்ளார்.

"எட்டு மறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை காணென்று" கும்மியடியுங்கள் என பெண்களை ஊக்கப்படுத்தியுள்ளார்.

பாரதியின் பெண்ணியம்

"புதுமைப் பெண்ணிவள் சொற்களும் செய்கையும் பொய்ம்மை கொண்ட கலிக்குப் புதிதன்றிச் சதும றைப்படி மாந்தர் இருந்தநாள் தன்னி லேபொதுவான வழக்கமாம்";(புதுமைப் பெண்:பா.க ப.எண்198) என்று நம் தேசத்தில் வாழ்ந்த புராதனப் பெண்களின் வரலாற்றையும் பெருமைகளையும் எடுத்து இயம்பும் மகாகவி, "காத லொருவனைக் கைப்பிடித்தே, அவன்

காரியம் யாவினும் கைகொடுத்து மாத ரறங்கள் பழமையைக் காட்டிலும் மாட்சி பெறச்செய்து வாழ்வமடி!"(பெண் விடுதலைக் கும்மி-பா.க:ப.எண்202)என பெண் எப்பொழுதும் புதுமையை ஏற்பதற்கான துணிவு,பழமையான அறங்களைக் காப்பதற்கான வலிமை,எதனையும் முன்னெடுத்துச் செல்வதில் மிகுந்த ஆற்றல் போன்ற அனைத்துத் தகுதிகளையும் ஒருங்கே பெற்றவள் என்பதை உணர்த்தும் வகையில் தனது வரிகளை வடிவமைத்துள்ளார்

"கற்பு நிலையென்று சொல்ல வந்தார் இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்
துன்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தை தள்ளி மிதித்திடுவோம்"(பா.க-பெண் விடுதலைக்கும்மி ப.எண்201) இன்று பெண்கள் கல்வி பெற்று சாதனை படைத்திடும் வேளையிலும் அவர்களை முற்றிலும் வளர விடாமல் தடுக்கும் களைகளான பாலியல் வன்கொடுமை,வரதட்சணைக்கொடுமை,பாலின பாகுபாடு போன்றவற்றை வேரறுக்க வேண்டும்

."ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவி லோங்கிஇவ் வையம் தழைக்கும்" என்ற நம் கவிஞரின் கூற்றுப்படி ஆணுக்குச் சமமாக பெண்கள் எல்லா நிலைகளிலும் மதிக்கப்பட வேண்டும்.. தலைமுறை மாற்றம் நிகழ்ந்து பெண்களை மரியாதையோடு பார்க்கும் ஆண் குழந்தைகளை வளர்த்தெடுக்க வேண்டும். குழந்தைகள் ஒழுக்கத்தோடு வளர்க்கப்பட வேண்டியது சமூகத்தின் தூய்மைக்கும் வளர்ச்சிக்கும் அவசியம் என்ற கருத்தினை எடுத்துரைக்கும் கவிஞர் 'பெண்மை வாழ்க' என்ற தன் பாடலில் உயிர்களைப் படைக்கும் பராசக்தியின் அம்சமாக பெண்களை காண்கிறார்.

மாற்றத்தின் வினையூக்கி

பாரதி(தீ) எட்டயபுரம் வெடித்தெழுந்த எரிமலையின் தீப்பிழம்பு,தொட்டாலே தீட்டென்று தொடரறுத்துக் கொழுத்திருந்த பட்டாடைப் பகட்டுகளைப் பறக்க விட்ட புயல் காற்று. தன் வாழ்வில் அவர் அனுபவித்த அளவற்ற துயரிலும் வாடவோ, அழியவோ செய்யாத படைப்பாற்றலும் கவித்திறனும் கொண்டவர்.அவரின் கவிதைகள் உயிரற்றதற்குச் சமமாகக் கருதப்பட்ட பெண்ணடிமைச் சமுதாயத்தைத் தட்டி எழுப்பி அதன் முன்னேற்றத்திற்கு இலட்சிய உணர்வோடு வழிகாட்டியது.

"நல்லதோர் வீணை செய்தே அதை

நலங்கெட புழுதியில் எறிவதுண்டோ?"(பா.க-ப.எண்109) என்று பெண்களின் அருமை அறியாதவர்களை எண்ணி சிவசக்தியிடம் முறையிடும் அவர் தனது புதிய ஆத்திசூடியில் "தையலை உயர்வு செய்"(பா.க-ப.எண்190)என்ற வேண்டுகோளையும் வைத்துள்ளார். அவர் தனது கவிதை மற்றும் கட்டுரைகளில் பெண்ணடிமையைச் சாடி அதிலிருந்து விடுபட பெண்களைத் தூண்டியும், பெண்மைக்கு அளிக்கப்பட வேண்டிய முக்கியத்துவத்தை சமூகத்துக்கு உணர்த்தியும் உள்ளார். தனது பாப்பா பாட்டு பாடலில்

"தேம்பி யழுங்குழந்தை நொண்டி-நீ
திடங்கொண்டு போராடு பாப்பா!
வைரம் உடைய நெஞ்சு வேணும்-இது
வாழும் முறைமையடி பாப்பா"(பா.க:ப.எண் 190) என்று பெண் வைரம் போன்ற மன உறுதியுடனும் திடமான நம்பிக்கையுடனும் போராடத் துணிய வேண்டும் என்பதை குழந்தைப் பருவத்திலேயே மனதில் ஆழப் பதிய செய்தல் வேண்டும் என்பதற்காக பாப்பாவுக்கு எழுதிய வரிகளிலேயே இதனை அறிந்து கொள்ள முடிகிறது.

"போற்றி போற்றி!யோராயிரம் போற்றி
நின் பொன்னடிக்குப் பல்லாயிரம் போற்றிகாண்!" (பா.க புதுமைப்பெண் ப.எண்197) என்று போற்றும் கவிஞர் அவர்கள் சாதம் படைக்க மட்டுமல்லாது தெய்வ சத்தி படைக்கவும் தகுதி படைத்தவர்கள் என்பதை"சாதம் படைக்கவும் செய்திடுவோம்;தெய்வச் சாதி படைக்கவும் செய்திடுவோம்"(பா.க பெண் விடுதலைக் கும்மி ப.எண்201) எனப் பெண்களே துணிந்துரைப்பதாக எழுதியுள்ளார்.மென்மையின் சாந்த சொரூபிகளும் அவர்களே வீரத்தின் பராசக்திகளும் அவர்களே என பாரதி தான் கண்ணுற்ற,காண விரும்பிய பெண்ணியத்தை எடுத்து இயம்புகிறார்.

முடிவுரை

எழுச்சிக் கவிஞன் பாரதியின் நாவிலும் எழுத்துக்களிலும் வெடித்துச் சிதறிய அக்கினித் துண்டுகள் தான் இன்றைய காலப் பெண்கள் கல்வி ,தொழில், அரசியல் மற்றும் சமூக சேவைகளில் முன்னேறி வீறுநடை போட்டுக் கொண்டிருப்பதற்கு முழு முதல் காரணம். அவர் அன்று விதைத்த சிந்தனை விதைகள் இன்று வளமான மரங்களாக வளர்ந்திருந்த போதும் நாம்

ஏற்க வேண்டிய உண்மை என்னவெனில் இன்றும் பல பகுதிகளில் பெண்கள் அடக்கி வைக்கப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். ஏராளமான பெண்கள் பாரதியாரின் கனவுகளுக்குள் மட்டுமே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.பெண்களுக்கு எதிரான பெரும்பான்மையான சமூகச் சீர்கேடுகள் அழிக்கப்பட்டு விட்டாலும் பெண் சுதந்திரம் முழுமையான நிலையை அடைய அவருடைய கருத்துக்களில் பெண்ணியவாதிகளுடன் சக மனிதர்கள் அனைவரும் உறுதியுடன் கைகோர்த்து பயணித்தால் மட்டுமே அவர் விரும்பிய இலக்கினை பெண்கள் அடைய முடியும்.

"இலகு சீருடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ்சென்றபுதுமை கொணர்ந்திங்கு"(பா.க புதுமைப்பெண் ப.எண்199)பல்வேறு நாடுகளுக்குச் சென்று பெண்கள் தம் திறமையை வெளிப்படுத்திதங்களை உயர்த்திக் கொள்வதோடு நம் தேசத்தையும் உயர்த்துவார்கள் என்ற நம் மகாகவி பாரதியின் வரிகளுக்கு உயிர் கொடுப்பதற்கான முயற்சியினை முன்னெடுப்போம்! புன்னகையை மட்டுமே அணிகலனாய் அணிந்த பாரதியின் அழகியபாரதப்பெண்கள் சமுதாயத்தை படைப்போம்!

"மாதர் தம்மை இழிவு செய்யும்
மடமையைக் கொளுத்துவோம்!

மேற்கோள் நூல்கள்:-

1. பாரதியார் கவிதைகள்-சுப்பிரமணிய பாரதியார் -திருமகள் நிலையம்
2. (ஏப்ரல் 2015)
3. பெண்ணிய நோக்கில் பாரதி-பேரா.சி.என்.குமாரசாமி
4. பெண்ணியமும் பாரதியும்-அலைகள் வெளியீட்டகம்- வீ.அரசு
5. களஞ்சியம்-மகாகவி பாரதியின் பெண் விடுதலை-முனைவர் ப.மகேஸ்வரி
6. பாரதிதாசன் பாடல்கள் -கனகசுப்புரத்தினம்-பாவை பப்ளிகேஷன்ஸ் (மே 2000).

126. மகாகவி பாரதியாரின் பன்முகப் பரிமாணங்கள்



கவிஞர். இரா. சுமதி எம். ஏ.,

பெரம்பலூர்.

முன்னுரை :

சுப்பிரமணிய பாரதியார் தமிழர்களின் பெருமை. அவரை நாம் "மகாகவி பாரதியார்" என்று மரியாதையுடன் அழைக்கின்றோம். கவிஞராக மட்டுமல்லாமல், சிந்தனையாளராகவும்,புரட்சியாளராகவும்,தேசபக்தராகவும்,பெண்கள் விடுதலைக்காக குரல் கொடுத்த வீரராகவும் அவர் விளங்கினார்.

பிறப்பு மற்றும் கல்வி

பாரதியார் 1882 டிசம்பர் 11ஆம் தேதி திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள எட்டயபுரத்தில் பிறந்தார். சிறு வயதிலிருந்தே அவர் கூர்ந்த அறிவும் கவிதைத் திறனும் கொண்டவராக இருந்தார். பள்ளியில் படிக்கும் போதே கவிதை எழுதும் திறமைக்காக அவர் "பாரதி" என்று அழைக்கப்பட்டார். 11 வயதில் "பாரதி" எனும் பட்டம் வழங்கப்பட்டது.

இலக்கிய சாதனைகள்

பாரதியார் தமிழ்க் கவிதைகளுக்குப் புதிய ஓட்டத்தைத் தந்தவர். பழைய வழக்கமான கவிதை முறைகளிலிருந்து விலகி, எளிமையான ஆனால் ஆழமான பொருள்களைக் கொண்ட பாடல்களை பாடினார். அவரது கவிதைகள் மூன்று வகைகளாகப் பிரிகின்றன .

1.தேசபக்தி பாடல்கள், 'வந்தே மாதரம்', 'ஜெயபாரதம்', 'அச்சமில்லை அச்சமில்லை'

2.சமூக சீர்திருத்தக் கவிதைகள், பெண்கள் முன்னேற்றம், சாதி ஒழிப்பு, கல்வி பற்றிய பாடல்கள்

3.தத்துவப் பாடல்கள்,ஆன்மீகம், மனிதநேயம், ஒற்றுமை பற்றிய பாடல்கள்

தேசபக்தி

பிரிட்டிஷ் ஆட்சியின் அடக்குமுறைக்கு எதிராகக் குரல் கொடுத்த முதல் கவிஞர்களில் ஒருவர் பாரதியார். அவர் எழுதிய தேச பக்திப் பாடல்கள் மக்களின் இருதயத்தில் சுதந்திர தீபத்தை ஏற்றின. "சின்னஞ்சிறு கிளியே" என்ற பாடலிலும் கூட சுதந்திரத்தின் விதை விதைக்கப்பட்டுள்ளது.

பெண்களின் முன்னேற்றம்

பாரதியார் பெண்களைப் 'பெண்மணி' என்று மதித்தார். பெண்களும் கல்வி கற்றுத் திறமையை வெளிப்படுத்த வேண்டும், ஆண்களுக்குச் சமமாக இருக்க வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார். அவர் பாடல் வரிகளில்,

" நீரிலும் நெருப்பிலும் காற்றிலும் அப்பாலவை, பெண்மணி உன் ஆற்றல் அறியேன்", என்று பெண்களின் பெருமையை உயர்த்திப் பாடினார்.

சாதி ஒழிப்பு மற்றும் சமூக சீர்திருத்தம்

பாரதியார் சாதி வேறுபாட்டை வெறுத்தார். மனிதன் ஒருவன் மட்டுமே உயர்ந்தவன். பிறப்பால் யாரும் உயர்ந்தவரோ, தாழ்ந்தவரோ அல்ல.நற்பண்புகளே உயர்வைக் கொடுக்கும் என்றார்.

"சாதிகள் இல்லையடி பாப்பா, குலத்

தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்".

பத்திரிக்கையாளர் பாரதியார்

அவர் 'இந்தியா', 'இந்தியன்', 'விஜயா' போன்ற பத்திரிகைகளில் ஆசிரியராகப் பணியாற்றி, சுதந்திர சிந்தனைகளை மக்களிடம் கொண்டு சென்றார். இதனால் ஆங்கில ஆட்சியாளர்களால் அடக்குமுறைக்கும் துன்பத்திற்கும் ஆளானார்.

கல்வி மற்றும் அறிவியல் சிந்தனை

பாரதியார் கல்வி ஒவ்வொருவருக்கும் தேவை எனக் கருதினார். அறிவியல் முன்னேற்றத்தை ஏற்றுக்கொண்டு, அதனுடன் தமிழின் பெருமையை இணைக்க வேண்டும் என்றார். அவர் புதிய சிந்தனைகளை பயப்படாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மனிதநேயச் சிந்தனை

பாரதியார் உலகம் முழுவதும் மக்கள் சகோதரர்களாக வாழ வேண்டும் என்று எண்ணினார். எல்லா மக்களும் சமம், ஒருவருக்கொருவர் உதவி செய்ய வேண்டும் என்ற கருத்தை அவர் பாடல்களில் வெளிப்படுத்தினார்.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்ற வரிகளால் அவர் தமிழ் மீது கொண்ட அன்பையும் உலக மனித நேயத்தையும் வெளிப்படுத்தினார்.

மொழிப் பற்று

பிறநாட்டு நல்லறிஞர்களின் சாத்திரங்கள் தமிழ்மொழியில் பெயர்த்தல் வேண்டும். இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும். மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள் சொல்வதிலோர் மகிமையில்லை. திறமையான புலமையெனில் வெளிநாட்டோர் அதை வணங்கச் செய்தல் வேண்டும்.

பல்வேறு ஞானிகளின் கூற்று

உலக சமுதாய சேவாசங்கத்தின் தலைவராக வாழ்ந்த தத்தவஞானி வேதாத்திரி மகரிஷி பாரதியாரை" ஞானி"என்று போற்றுகிறார். அவர் தமிழ் மொழியை" உலக பொது மொழி"ஆக்கிட வேண்டும். என்று தன் கவிதையில் குறிப்பிடுகிறார்.

"மலைப்பின்றி எளிதாய் எழுத, கற்க,

மதலைகளும் தெளிவாய் உச்சரிக்க ஏற்ற,

தலைசிறந்த மொழியே எதிர்காலத்தில்

தனித்து நிற்கும் உலகில் ஒரு பொதுமொழியாம், தமிழ்மொழி" என்கிறார்.

உண்மை தெய்வம்

ஒவ்வொரு மனிதனின் அறிவிலும் பரமாத்மா மறைந்து நிற்கிறது என்று விவேகானந்தரும் அன்பு, தர்மம், யோகம்தான் அனைத்திற்கும் அடிப்படையாகும் என்கிறார். சீன ஞானி எமெர்சன், ரஷ்ய ஞானி டால்ஸ்டாய் மற்றும் நம் நாட்டு ஞானிகள் ராமகிருஷ்ண பரமஹம்சர், தாயுமானவர் மேலும் பல ஞானிகள் "ஒளி ஒன்றே" அதன் வடிவங்கள் பல்வேறு தோற்றங்கள் என்று "உண்மை தெய்வம்" என்ற கருத்தை வலியுறுத்துகிறார்கள்.

* காக்கை குருவி எங்கள் ஜாதி

நீள் கடலும் மலையும் எங்கள் கூட்டம்

நோக்க நோக்க களியாட்டம்

நோக்கும் திசையெல்லாம் நாமன்றி வேறில்லை", என்கிறார் பாரதியார்.

முடிவுரை

பாரதியாரின் சிந்தனைகள் இன்று கூட நமக்கு வழிகாட்டியாக உள்ளன. சுதந்திரம், சமத்துவம், பெண்கள் விடுதலை, மனிதநேயம் ஆகியவற்றில் அவர் விதைத்த விதைகள் இன்றும் வேரூன்றி நிற்கின்றன. பாரதியார் வாழ்ந்தார், வாழ்கிறார், என்றும் வாழ்வார், அவரது சிந்தனைகள் காலமெல்லாம் ஒளி வீசும்.

இன்றும் அவர் பாடல்கள் கவிதைகள் பாடும் போது அவர் எங்கள் இதயங்களில் தீபமாய் ஒளி வீசுகின்றார்.. தமிழர்கள் வாழ்வில் பாரதியார் என்றும் அழியாத சுடர்!

வாழ்க பாரதி! வளர்க அவரது புகழ் என்றென்றும்!

கவிஞர். இரா. சுமதி எம். ஏ.,
255பி/24ஹெச், ராஷினி நகர்,வடக்கு மாதவி சாலை,
பெரம்பலூர் (மா. வ) 621212.

127. The Intimate Infinite: Emotional Polyphony and Relational Theology in Bharathiyar's Kannan Paattu



Ms.D.Anuroja
Assistant Professor,
Department of English
Dr. Umayal Ramanathan College for Women, Karaikudi -630003

Abstract

This paper explores the emotional and theological richness of Kannan Paattu by Subramania Bharathiyar, highlighting its revolutionary portrayal of divinity through an emotionally pluralistic lens. Unlike Western poetic traditions that often frame God as distant, patriarchal, or morally absolute, Bharathiyar presents Lord Krishna (Kannan) as an emotionally accessible and relational being-child, lover, servant, guru, friend, and disciple. This relational theology challenges devotional hierarchies and aligns with Advaita philosophy and gender-inclusive spirituality. Through an interdisciplinary lens that incorporates Bhakti aesthetics, comparative literature, and Digital Humanities, the paper argues that Kannan Paattu represents not just devotional poetry but a living emotional archive. It also proposes digital tools for mapping relational roles, encoding emotional registers, and promoting transcultural dialogue, thus reimagining Bharathiyar's poetry for contemporary and global audiences.

Keywords

Bharathiyar, Kannan Paattu, Bhakti Poetry, Relational Theology, Digital Humanities

Introduction

Across world literature, God is often depicted as a distant, judgmental force-particularly in Western traditions where divinity is abstract, patriarchal, and emotionally detached. In contrast, Subramania Bharathiyar's Kannan Paattu offers a revolutionary vision: Krishna as child, lover, disciple, friend, and teacher Rooted in Tamil folk idioms, Vedantic philosophy, and Bhakti traditions, Bharathiyar crafts a divine presence that is intimate, playful, and emotionally accessible. This paper explores how Kannan Paattu transforms devotional hierarchy into relational theology-inviting readers into emotional plurality. Through Digital Humanities, these multifaceted roles can now be mapped, archived, and studied as living expressions of divine love.

I. Western Idealism vs. Bharathiyar's Relational Devotion

Western literary traditions have often conceptualized God as a sovereign, transcendent, and moral lawgiver, situated far above human emotion. In Judeo-Christian theological poetry, God is typically portrayed as omnipotent and distant an entity to be worshipped, obeyed, or feared. For instance, in John Donne's Holy Sonnet XIV, the poet pleads with God to "batter my heart, three-person'd God," emphasizing divine intervention as violent purification of sin (Donne 1224). In such poems, God is a punishing force, not an emotionally reciprocal being. Similarly, Dante's vision in "Paradiso" culminates in a God who is eternal light-perfect, sublime, and utterly inaccessible without moral purification. This abstraction of divinity stands in stark contrast to the emotionally nuanced and pluralistic God Bharathiyar constructs in Kannan Paattu. By contrast, Bharathiyar's Krishna is accessible, relational, and emotionally entangled with the speaker. In "Kannan En Kuzhanthai" (Krishna, My Child), Bharathiyar portrays the divine not as a cosmic ruler but as an innocent child: "You are my dear little baby. / I will feed you rice and curd with my own hands" (Bharati, poem 104).

Here, the poet assumes a maternal role. He cradles, feeds, and protects the divine child. This reverses traditional theological hierarchy "God becomes vulnerable, and the poet becomes caregiver".

Another remarkable inversion appears in "Kannan En Seetan" (Krishna, My Disciple), where Bharathiyar states: "I taught him the Vedas, I led him to truth /My little Krishna listens to me in awe" (Bharati, poem 102). Such a portrayal destabilizes conventional devotional roles. The devotee becomes the guru, and God becomes the eager student. Unlike Western literature, where the divine often exists as an unchallengeable patriarch, Bharathiyar creates a mutual relational space where God and human grow together. Further, in "Kannan En Thozhan" (Krishna, My Friend), the poet recalls playing and laughing with the divine: "He played with me under the neem tree, / Telling me jokes, hiding my things" (Bharati). This Krishna is mischievous and intimate, not austere or inaccessible. He participates in everyday life, engages in games, and behaves like a childhood companion. The power here lies in mutual joy, not divine judgment. This fluidity extends into Bharathiyar's madhurya bhava (romantic devotion). In "Kannan En Kaadhalan-1", he writes: "He pierced my heart with his glance, /Like a worm that burrows into fruit" (Bharati, poem 106). This metaphor, visceral and tender, merges sensuality with spirituality. The divine gaze becomes an erotic wound-intimate and irreversible. Unlike Western portrayals of God that maintain spiritual austerity, Bharathiyar's vision of Krishna incorporates desire and vulnerability as integral to the sacred. Even Sufi poets like Rumi or Hafiz, who blur the boundaries between sacred and sensual, rarely imagine God as a child or disciple. Bharathiyar's Krishna is not a single symbolic figure, but a kaleidoscope of emotional possibilities-teacher and student, ruler and friend, beloved and baby Through this poetic strategy, Bharathiyar dismantles theological absolutism and asserts emotional plurality as the essence of divinity In doing so, Kannan Paattu becomes a revolutionary text. It redefines Bhakti not as submission to an unreachable God but as a celebration of reciprocal emotion, shared play, and spiritual companionship.

II. Emotional Theologies and Relational Roles in Kannan Paattu

Bharathiyar's Kannan Paattu reimagines divinity through emotional plurality. Krishna assumes diverse roles-friend, child, servant, guru, lover, and cosmic consort-transforming Bhakti from a posture of submission into lived emotional intimacy in "Kannan En Thozhan" (Krishna, My Friend), Bharathiyar presents Krishna not as a distant divine warrior but as a mischievous childhood companion: "We played together in the shade of the neem, / He teased me, ran away, and pulled my braid" (Bharati, poem 101). This Krishna embodies sakhya bhava, the mood of divine friendship, but with an intimacy rooted in Tamil domestic life. Unlike the epic Krishna of the Mahabharata, Bharathiyar's Krishna is emotionally equal, humorous, and fully accessible In "Kannan En Kuzhanthai" (Krishna, My Child), the poet reverses devotional hierarchy by becoming a nurturing parent to the divine: "My sweet little Krishna, come sit on my lap, /I'll feed you ghee and honey with my own hand" (Bharati, poem 104). This tender expression of vatsalya bhava challenges theological norms and gender roles, with Bharathiyar adopting a maternal voice to embrace the divine in human form. He further expands this emotional totality in "Kannan En Thaai" and "Kannan En Thandhai," where Krishna is portrayed as both mother and father, collapsing the binary of parental care Radical emotional reversal continues in "Kannan En Seedan" (Krishna, My Disciple), where Krishna becomes a student of the poet: "He carried my books and followed me to school, / He listened as I taught the Vedas aloud" (Bharati, poem 102). This depiction of God as disciple upends hierarchical models of Bhakti and suggests that spiritual wisdom can emerge from intimacy and instruction, not just divine command. It offers a counterpoint to Judeo-Christian portrayals of a remote, omniscient deity.

Yet Bharathiyar also acknowledges traditional devotional modes in "Kannan Enadhu Sarguru" (Krishna, My True Guru), where Krishna becomes the poet's spiritual guide "He who opened the eye of wisdom within me / Is none other than the one I had thought was far away" (Bharati, poem 103). Here Krishna represents jnana bhava, the mood of wisdom, echoing the Upanishadic realization "Tat Tvam Asi" ("That Thou Art"; Chandogya Upanishad 6.8.7), where the divine is recognized as the self within. The emotional and spiritual complexity deepens in the Kaadhalan series. In Kannan En Kaadhalan -1. Bharathiyar explores romantic divine love through a sensual metaphor: "Like the worm that enters fruit, / Your love entered my heart, unseen" (Bharati, poem 106). This is madhurya bhava, where divine longing becomes erotic and the poet's voice shifts to a feminized emotional register. The vulnerability and passion grow sharper in Kannan En Kaadhalan - 5: "I can no longer bear this distance/My eyes burn, my breath falters, my chest aches" (Bharati, poem110). Here, Bhakti is no longer ritual or dogma-it becomes an existential crisis marked by yearning, pain, and divine absence. This emotional theology extends to the Kannamma poems, which focus on Krishna's feminine consort. In "Kannamma En Kaadhali - 6 (Yogam)", Bharathiyar writes: "You are the veena, I am the playing finger. / You are the thread, I am the diamond" (Bharati, poem 117). These lines merge Advaita Vedanta with romantic imagery, expressing non-dualism through physical and emotional interdependence. Bharathiyar continues: "O pure flame of heavenly light! O intoxicating nectar! Kannamma!" (Bharati, poem 117). Here, the beloved is not only intimate but cosmic-both embodied and transcendent. This mystical embodiment is also seen in Kannamma En Kaadhali - 4: "In the crashing waves I saw your face; / In the deep blue sky I saw your face" (Bharati, poem 115). The beloved becomes inseparable from the elements of the universe, suggesting a pantheistic vision where God is not in the heavens but diffused through the sensory world. Through these relational roles, Bharathiyar's Kannan Paattu dissolves the boundary between divine and human, personal and cosmic, masculine and feminine. It redefines Bhakti not as duty but as emotional multivocality-a sacred play of love, intimacy, and transformation.

III. Beyond Bhakti: Bharathiyar's Emotional Theology and Non-Dual Vision

While Kannan Paattu belongs to the Bhakti tradition, Bharathiyar's vision transcends devotional conventions. His Krishna is not a distant god but the inner self, aligning with Advaita Vedanta's non-dualism. In Kannan Enadhu Sarguru, he writes: "He who opened the eye of wisdom within me /Is none other than the one I had thought was far away" (Bharati, poem 104). This moment of inner realization reflects jnana bhakti, a blend of love and knowledge. Krishna is no longer outside; he is the consciousness within. This resonates with "Tat Tvam Asi" or "That Thou Art" (Chandogya Upanishad 6.8.7). Bharathiyar enacts spiritual unity in sensual, embodied terms. In Kannamma En Kaadhali - 6 (Yogam), he writes: "You are the veena, I am the playing finger, You are the thread, I am the diamond" (Bharati, poem 117). Such metaphors merge Advaitic and yogic imagery, portraying divinity as interdependent presence, not abstraction. His language blends music, light, and longing, making the sacred both tangible and transcendent. This vision includes fluid gendered voices. In Kannan En Kuchanthai, he is a mother, in Kaadhalan poems, a yearning beloved. In Kannamma En Kaadhali-4: "The sparkle of your eyes-Kannamma! Are they the sun and moon?" (Bharati, poem 115) By adopting feminized tones, Bharathiyar breaks gender binaries, invoking Ardhanarishvara-like spiritual unity. He also critiques caste and ritualistic mediation. Krishna appears not in temples, but in playful, emotional acts-teaching, teasing, loving Bharathiyar's theology thus fuses Advaita, emotion, equality, and sensuality into a revolutionary spiritual aesthetic.

IV. Digital Devotion and Emotional Archives: Reimagining Kannan Paattu in the Digital Humanities Era

In the age of Digital Humanities (DH), Kannan Paattu offers fertile ground for new modes of reading, preservation, and interpretation. Bharathiyar's emotional theology once grounded in oral performance and print-can now be explored through relational data, sentiment analysis, and gender-inclusive encoding. Tools such as network mapping and relational databases can visualize Krishna's diverse roles-lover, friend, disciple, and guru-tagged across poems like "Kannan En Thozhan" and "Kannan En Kuzhanthai." This digital taxonomy captures the fluid ontologies of Bhakti, offering scholars access to Bharathiyar's poetic universe through visual diagrams and metadata frameworks. Sentiment analysis and NLP-based tools like Voyant or TAPOR can tag emotions like longing, mischief, and surrender. For example, "Kannan En Kaadhalan - 5" is ripe for encoding as a poem of viraha (separation), as the poet laments, "I cannot bear the separation anymore / His absence scorches me like fire" (Bharati, poem 105). Bharathiyar's gender fluidity assuming the maternal voice or Radha's longing can be archived in queer metadata structures. Encoding poems like "Kannamma En Kaadhali-4" allows cross-cultural comparisons with devotional literature by Andal, Rumi, or Hildegard von Bingen. Project Madurai (www.projectmadurai, org) has already laid a digital foundation, but further encoding. annotation, and visualization would allow Kannan Paattu to become a living digital archive one that transforms static texts into emotional landscapes, fostering global dialogue on divinity, identity, and love.

Conclusion

Bharathiyar's Kannan Paattu redefines divinity as a spectrum of emotional relationships-where Krishna is not remote but tender, playful, and radically accessible. By blending Advaita, Bhakti, gender fluidity, and anti-hierarchical vision, Bharathiyar creates a theology rooted in intimacy, not obedience His verses dissolve boundaries between sacred and sensual, human and divine. In the digital era, these poems gain renewed relevance-emotionally tagged, archived, and globally engaged. Ultimately, Kannan Paattu is not just devotional literature; it is a living philosophy of love, inviting us to meet the divine not above us, but within every feeling, role, and relationship we hold dear

Works Cited

Primary Sources

- Bharati, Subramania. Bharati Patalkal. Edited by T. N. Ramachandran, Tamil University, 1989.
- Bharati, Subramania Kannan Paattu. Project Madurai, Oct. 2005,
- www.projectmadurai.org/pm etexts/utf8/pmuni1002.html. Accessed 25 July 2025.

Secondary Sources

- Chandogya Upanishad. Translated by Swami Nikhilananda, Advaita Ashrama, 1992.
- Donne, John. Holy Sonnets. In The Norton Anthology of English Literature, edited by M. H. Abrams, 6th ed., Norton, 1993, pp. 1224-1226.
- Pattanaik, Devdutt. Shikhandi and Other Tales They Don't Tell You. Penguin Books, 2014.
- Rumi. The Essential Rumi. Translated by Coleman Barks, HarperOne, 2004.
- Sethi, Rumya. "Emotional Devotion in the Bhakti Tradition." Journal of South Asian Spiritualities, vol. 4, no. 1, 2020, pp. 55-72.

128. A Resonant Voice for a New Dawn – Bharathiar's Enduring Discourse on Feminism in Tamil Literature





Esakkimuthuraju Lalitha[1] and Dr. Madhubala S[2]

1: Assistant Language Teacher , Gifu , Japan.

2: Head , Dept. of English, Nachiappa Swamigal Arts and Science College , Karaikudi , Tamilnadu

Abstract

The critical focus of this article is Mahakavi Subramania Bharathiyar's deep enthusiasm for feminism and women's empowerment, particularly within his Tamil legacy. It explores how his subtle feminist ideals, rooted in India's struggles, fiercely dedicated his works to empowering women through education, financial freedom, and intellectual participation. Standing as a towering pillar illuminating the paths of women's liberation through his intense passion, Bharathiyar's glorious affirmations that were chanted in households to awaken fearless character in women, still resonate across the Tamil diaspora. This paper ultimately highlights how his works profoundly influenced multitudes, particularly women, igniting contemporary writers.

Keywords: Feminism, women empowerment, liberation, fearless character, contemporary, Bharathiyar

Introduction

From the early 20th century, Subramaniya Bharathiyar (1882-1921), the pioneer of Tamil Literature, weaponized his words to battle for many social reforms. He poured out his literary writings as a journalist and poet. Apart from being a feminist of the late 19th and early 20th centuries, Bharathiyar was a multifaceted nationalist. A nation that was struggling both under British rule and within its inherited ethical nature needed revolutionary voices like Subramaniya Bharathiyar. This multifaceted nationalist delved into different forms of literary expression, from patriotic songs to romantic stories, essays, and articles, which bloomed regardless of censorship and prohibitions.

Numerous studies have been undertaken to analyze Subramania Bharathiyar's legacy, his historical contextualization, assessments of his direct and indirect influences, how his fearless character emerged, and other multidisciplinary methodologies. These studies state his advocacy for women's rights and his meticulously documented stands on societal maladies such as child marriage and the orthodox subjugation of women [1]. Bharathi's rhetorical enthusiasm embraced the art of narrative poems and he indulged in becoming a devotional voice through his poems [2]. Proficient in many languages from a young age, he was profoundly influenced by Bengali literature early on, before delving deeper into his Tamil heritage [3]. Collectively, this paper recognizes the audacity with which

Subramaniya Bharathi challenged the normative structure of his era through his literary potential. However, while prior research [4,5,6,7] identified Bharathi's progressive views, this article attempts to undertake a more granular analysis of how his poetic terminology was constructed to promote his ideas. Moreover, it is intended to critically examine his specific poetic devices and thematic contributions that were made by underlying connections among religion, social revolution, nationalism, and poetry. Bharathi's contribution is not a historical conjecture, but a milestone of Tamil identity and a ceaseless source of revolutionary spirit.

Methodology

This study employs a multidisciplinary approach to dissect Barathi's visions that were embedded in his literary works like "Panchali Sapatham" (Panchali's Vow) [8] and "Pudhumai pen"(New Age Woman) [9]. The core of this methodology integrates textual exegesis of Bharathiyar's Tamil verses to uncover the layered characterization, symbolic decoding of metaphors for anti - colonial resistance and anti- patriarchal revolution, educational focus. Some of his Tamil verses from the poems were amplified to understand Barathi's journalism and his feminist- nationalistic activism that peaked during the period of 1904-1921. His thematic imagery is inspected to understand how he opposed the gendered submission of women during the dark era. By applying feminism's lens as a broad - spectrum on his poems, this study maps how Bharathi framed Draupadhi as the center of focus as a call for change rather than a passive victim.

Bharathiyar's Subversion of Draupadhi as a Symbol of National and Gender Liberation

Barathi's Panchali Sapatham - 1912 transcends adaptation of character 'Draupadhi' - to represent the patriarchalism in Mahabaratham. In this, Barathi's Draupadhi is not a passive victim but rather a strong and defiant woman who confronts the injustice subverting the traditional characterization of women. The poet framed Draupadhi's defiance with oppression on women.

With fire blazing in her eyes, brows arched in anger, she opened her mouth and roared,
"This is not Dharma! This is not Dharma!"

"This is not justice!" epitomizes her moral revolt. Unlike silenced women constrained by domesticity, she condemns her humiliation. This public denunciation interrogates the general autonomy of women, and asserts directly to the dismantling of patriarchal authority. Bharathi reflected this questioning authority to empower the women instead of choosing the silence and highlighted the need of righteousness. The roaring rejection of Draupadhi of false accusation reflects how Bharathi rejected the oppression and silent submission. He used the liberation metaphor "With fire blazing in her eyes" - that shows the rages that flamed beyond anger. Brows arched in anger, she opened her mouth and roared - The arched brows and opened her mouth - are not the just the expressions he used to write about the scenario but to symbolize how a woman must break the orthodox image of women. He fabricated this dissent about how women must stand up against patriarchalism [10]. This is not Dharma - This is not justice - the philosophical rejection is a cry of social evil and the suffering of both women in the society and the country. For Bharathi, this was not just Draupadhi's rage but the entire nation's demand for revolutionary change.

"Even if gamblers gamble deceitfully, and conspirators conspire, will justice be harmed?"

Her unshakeable powerful verse that translates - 'Even if gamblers gamble deceitfully, and conspirators conspire, will justice be harmed?' - Panchali's low tremor voice which was echoed in the assembly that turned her into a vengeful goddess radiates how Bharathi saw the need of questioning authority of women and urged it as a call for action. "Gamblers" - One who deceives - in this context signifies the male society who bets and rules through exploitation of women. "Conspirators" - Traitors - targets the women of society - mother in laws - that backstab their own gender by supporting child marriage, widow sati rituals are criticized by the Poet. These emblematic verses state that "will justice be harmed?'- The justice remains invincible, No Matter What. This acute sense of destiny is used to remind the people that the apparent patriarchal power earned through the wrong way is always temporary and stays illegitimate. Barathi's affirmation taunt implies the definitive victory over the falsehood earned by feminist betrayals.

"Let all assembled here witness!
These hands that touched my hair,
I shall not tie my hair until I drink their blood"

This declaration of Panchali after her humiliation shows uncompromised vengeance holds the translation - Let all assembled here witness! These hands that touched my hair, / I shall not tie (my hair) until I drink their blood. These epic lines by Bharathi are to warn the society that exploits women. Let all assembled here witness - To All the witness of this incident, was symbolized as if the Mother of India was vowing publicly addressing the entire nation and the broad world; assembled - In context, to the elders that were present in the court silently - like the elders and men those were advocating compromise over societal evils - Bharathi shames such conspiracy through Draupadhi's public shaming. "the hands that touched my hair" - the ultimate violations that were carried out on womanhood - he points to the traditional intervention of the nation and condemns the act. I will not settle down until I drink the blood - The subtext vow of Barathi's work serves as a liberation theology from matriarchal vengeance. These displays how the poet subverted the imagery characterization - drink blood - as righteous doing to reclaim the female power that was stolen for centuries. He particularly vowed liberation sacrament through this call. The symbolism of the vow that was layered beneath the words made Bharathi a multivalent poet. The seismic impact that Bharathi created from this vow remains as one of the most radical declarations of Tamil Literature.

Reconceiving of "Women" by Bharathiyar - "Pudhumai Penn"

Pudhumai penn is a single/ long poem that is dedicated entirely to women. His verses describe empowering women through his vision. Bharathiyar demands equality through his words. He intends to ignite the movement for female education as the first step of women release from the bonds. He confronted the confinement of women and exposed the prevailing injustice in the early 20th century.

"With an upright, noble gait, a direct gaze, And ways that fear no one on this earth, With a proud, surging wisdom, The righteous woman will never falter."

This iconic verse from "Pudhumai Penn" highlights four principles of liberation that Bharathiyar emphasizes to challenge the societal domination of men. It underlines how a woman's confidence with sight, spine and brain will become the weapons of her liberation. The "upright gait, direct gaze" shook the Tamil society that was enforced on women to have coy walking and downcast eyes on women. With "fear no one", the poet directly challenges slavery element pushed upon the females of society.

"By holding men and women as equals, this world will flourish, excelling in knowledge and wisdom."

"Equal" was not just a word but was explosive in the early 1900s. Bharathi wanted women to be not just a complementary gender but as absolute equals by shattering the hierarchy. By mentioning "flourish, excelling in knowledge", he predicts the intellectual advancement of women will result in global progress. The algorithm this poetry holds states the civilization improvement when the men and women hold on equal position. The theme of Penn viduthalai is a realization of true human dignity through fundamental prerequisite for women liberation. Bharathiyar viewed 'women' as a primary pillar of progressive nation. He vehemently stated that equal rights for women are a fundamental right. For Bharathiyar, illiteracy was the cause of women's subjugation. Placing education as the primary weapon to abolish the chains that were bonded, he passionately condemned the inequality in providing education based on gender. He powerfully asserted against the social customs and advocated for irrationality such as window remarriage, women rights to choose spouses, child marriage. Active participation in all sectors including law making, science, political governance and much more were in the vision that was articulated by the Bharathi through this poem.

Conclusion

Subramaniya Bharathiyar did not merely write poetry and journals; he constructed the cosmology of Tamil feminism. Through his verses, he transformed the livelihood of women. His works remain an insurrection banner. His progressive vision significantly emancipated the population, directly challenging deeply rooted norms through vivid narrations that advocated for education, independence for women, and courage. Bharathi taught women not just how to reject injustice, but to roar against every patriarchal semiotic. Essentially, Bharathiyar's poetry offered a profound intellectual and emotional basis for feminist perspectives within Tamil culture. He extended his efforts beyond simple support for women's welfare to a holistic view of gender equality, independence, and empowerment, greatly impacting the course of women's rights in the area.

Reference

1. Karthika, K. Feminist Thoughts of Progressive Thinker Bharathi. Int. Res. J. Tamil **2022**, 4, 133-139.

2. Rajan, Rajeswari. (2021). Subramania Bharati and the Rhetoric of Enthusiasm. History of the Present. 11. 152-192.

3. Murugesan, Manivannan. Subramania Bharati and Bengali Literature - A Comparative Study , Bangabidya International Journal of Bengal Studies , 2018 , 10 , 408

5. Sophia, Joseph Jelso. "Influence of Bharathiyar's Poem On Women Empowerment.", 2021 , https://www.scribd.com/document/505698278/Influence-of-Baharathiyar-s-poem-on-women-empowerment

6. Sundara Rajan, Mira T. "Subramanya Bharati's vision of Woman - through the eyes of his great granddaughter." The Hindu , 2017.

7. Pavithra. (2023). Feminism in the poems of Bharathiar. International Journal of Tamil Language and Literary Studies. 2023, 5. 173-186.

8. Prema Nandakumar , Poems of Subramania Bharati , UNESCO , 1997 , 103 -120.

129. Land as Sacred Space: Solitude, Imagination, and Socio-Spiritual Vision in Bharathiyar's Kaani Nilam Vendum and Coleridge's Kubla Khan



Ms.P.Asha
Assistant Professor,
Department of English
Dr.Umayal Ramanathan College for Women, Karaikudi

Abstract

This paper explores the symbolic, spiritual, and socio-political representation of land in Subramania Bharathiyar's Kaani Nilam Vendum and Samuel Taylor Coleridge's Kubla Khan. Drawing on ecocriticism and comparative poetics, the study examines how solitude and communion with nature act as catalysts for poetic creativity and philosophical insight. While Bharathiyar roots land in agrarian justice, divine maternalism, and national identity, Coleridge constructs a mystical geography shaped by the Romantic imagination. The thematic echoes in the works of Seamus Heaney, Rabindranath Tagore, and Walt Whitman further enrich this exploration of land as a universal symbol of memory, identity, and transcendence.

Keywords:

Catalysts, Philosophy, Ecocriticism,Mystical Geography, Romantic Imagination

Introduction

Among the epic heroes who established the Tamil language on this earth, the one who selflessly adorned his mother tongue and Tamil Mother with his poetic garland is the eminent poet of the 20th century—Subramania Bharathiyar, rightfully honoured with the title "Mahakavi." He is the one who built a temple for Tamil through his poetry. The more we relish his verses, the more we are enchanted by the sweetness of the Tamil language embedded in them. He was a master in blending nature with his imagination and expressing it in poetic form with remarkable finesse. Bharathiyar did not merely write in Tamil—he glorified it, worshipped it, and metaphorically built a temple for the language through his verses. His poetry reflects a passionate love for Tamil and seeks to uplift and empower it in every line. Each of his poems overflows with the richness of the Tamil language, leaving readers and listeners captivated by its unique charm. The more one explores his poetry, the more one experiences the beauty, rhythm, and flavour of Tamil. Bharathiyar was a master craftsman in the art of connecting nature with poetic imagination. His verses seamlessly blend natural elements with philosophical thought, reflecting both simplicity and depth. In doing so, he elevated Tamil poetry to new heights and left behind a legacy that continues to inspire generations.

Poetry is the mirror of a poet's inner vision and the collective conscience of a culture. Subramania Bharathiyar, a towering figure in Tamil literature, earned the title "Mahakavi" for the way he breathed soul into Tamil language and nationalism. His poem "Kaani Nilam Vendum" (We Need a Piece of Land) is not merely a cry for land but a spiritual call for equality, dignity, and freedom for all. On the other hand, "Kubla Khan", by the English Romantic poet Samuel Taylor Coleridge, presents an

opium-induced dream vision, a fantastical landscape rich in exoticism, imagination, and mystery. Though both poems differ in context and style, they share a common essence the deep reverence for land, the yearning for an ideal world, and the role of imagination in shaping reality.

Throughout global literature, land has symbolized more than territory it is a metaphor for belonging, spirituality, and the human condition. This paper undertakes a comparative literary study of two iconic poems: Kaani Nilam Vendum by Subramania Bharathiyar and Kubla Khan by Samuel Taylor Coleridge. Despite stark contrasts in tone and purpose Bharathiyar's poem being a revolutionary plea for justice, and Coleridge's a dreamlike vision the two converge in their portrayal of land as sacred space. Bharathiyar, a 20th-century Tamil nationalist poet, intertwines divinity and agrarian rights to demand equality. Coleridge, an English Romantic, constructs a mystical empire in the realm of dreams. This study aims to draw thematic parallels through ecocriticism, Romanticism, and postcolonial thought, while referencing poets like Heaney, Whitman, and Tagore, who similarly portray land as a canvas of cultural and emotional truth.

Bharathiyar's Agrarian Realism in Kaani Nilam Vendum

Among the epic voices of Tamil literature, Subramania Bharathiyar stands as a "Mahakavi" who breathed revolutionary life into poetry through the vernacular. In Kaani Nilam Vendum ("We Need a Piece of Land"), Bharathiyar merges spirituality with political urgency:"We need a piece of land, O Para Sakthi, for all beings who behold Your sacred feet."Here, land is not metaphorical but a concrete necessity for dignity and survival. His invocation of Para Sakthi, the divine feminine, spiritualizes the demand for equity. The earth is depicted as maternal nurturing and just and represents more than territory; it embodies livelihood, love, and liberty. Bharathiyar's diction is accessible, yet spiritually profound, reflecting the lived realities of the oppressed while invoking divine sanction for justice.

Coleridge's Visionary Geography in Kubla Khan

In stark contrast, Samuel Taylor Coleridge's Kubla Khan immerses readers in an opium-induced, dreamlike landscape a synthesis of the mystical, erotic, and sublime:"In Xanadu did Kubla Khan / A stately pleasure-dome decree...""Where Alph, the sacred river, ran / Through caverns measureless to man / Down to a sunless sea."(490). Coleridge's imagined terrain evokes unconscious depths and poetic creativity. The sacred river Alph symbolizes a spiritual force, and the "caverns measureless to man" suggest the mysterious recesses of the mind. The landscape is surreal, not political; its meaning lies in artistic transcendence. His musical, ornate diction amplifies the hypnotic rhythm of a visionary quest, rather than a grounded plea.

Comparative Analysis: Sacredness, Symbolism, and Solitude

Despite cultural, temporal, and thematic differences, both poems sanctify land through solitary communion with nature. Bharathiyar's land is **real and reclaimable**, while Coleridge's is **imagined and ineffable**. Yet both assert land as a **transformative space**: one for justice, the other for imagination.Bharathiyar demands reform through poetic resistance:"To sow and reap with my own hands / And live in peace, honest and free."

Coleridge dreams of poetic ecstasy and creative glory:
"A damsel with a dulcimer / Singing of Mount Abora..."(490-495)
While Bharathiyar's tone is passionate and revolutionary, Coleridge's is hypnotic and mystical. Bharathiyar envisions liberation through land, Coleridge seeks poetic immortality through vision. Both poets channel solitude in nature into an elevated form of creative consciousness.

Nature and Solitude: Catalysts of Creative Awakening in Bharathiyar's Kaani Nilam Vendum and Coleridge's Kubla Khan

Solitude in the lap of nature serves as a timeless muse for human creativity and spiritual introspection. Both Subramania Bharathiyar's Kaani Nilam Vendum and Samuel Taylor Coleridge's Kubla Khan stand as profound literary testaments to the psychological and imaginative enrichment that arise from communion with nature. In Kaani Nilam Vendum, Bharathiyar envisions a just world grounded in natural equity and individual dignity: "I seek a small piece of land, O Mother!,Just a patch of fertile earth is all I ask—,To sow and reap with my own hands,And live in peace, honest and free"(" Kaani Nilam Vendum ParaSakthi")

Here, the poet's solitude becomes a revolutionary space where the natural world is not merely a backdrop but a partner in dreaming a liberated, egalitarian future. The call to Para Sakthi divine feminine energy underscores how isolation in nature empowers spiritual and socio-political insight. Similarly, Coleridge's Kubla Khan, born from an opium-induced reverie, evokes a mystical landscape:"In Xanadu did Kubla Khan / A stately pleasure-dome decree…".Nature here is a double-edged realm sublime, fertile, yet ominous. The "sacred river Alph" and the "caverns measureless to man" symbolize the unconscious depths where creativity stirs. The poet's solitude enables access to these dreamlike visions, revealing the potential of the mind untethered. Both poets illustrate that isolation amidst nature does not breed despair, but channels energy into higher thought. As Bharathiyar grounds his vision in justice and Coleridge in imagination, they show how psychological stillness with nature births creative, revolutionary energy that transcends time and place.

Literary Resonances: Heaney, Tagore, and Whitman

Seamus Heaney's Digging echoes Bharathiyar's transformative labor:
"Between my finger and my thumb / The squat pen rests. / I'll dig with it."
Here, writing becomes a metaphor for resistance and rooted identity much like Bharathiyar's poetry as a political act.
Tagore's Gitanjali spiritualizes land similarly:
"The same stream of life that runs through my veins / Runs through the world and dances in rhythmic measures."
This vision complements Bharathiyar's reverence for divine presence in soil and sweat.
Walt Whitman, in Song of Myself, proclaims:
"I bequeath myself to the dirt to grow from the grass I love..."
His transcendentalism mirrors Coleridge's mystical connection between soul and landscape. All these poets echo the motif of land as sacred metaphysical, emotional, and eternal.

Conclusion

Subramania Bharathiyar and Samuel Taylor Coleridge, though oceans apart in time and tradition, converge in their depiction of land as a spiritual locus. Bharathiyar's Kaani Nilam Vendum is a clarion call for rights, justice, and divinity, while Coleridge's Kubla Khan is a celebration of dream, power, and aesthetic rapture. Their poetic solitude becomes not an escape but an awakening, reflecting the deep-rooted human need for both belonging and transcendence. When viewed alongside Heaney, Tagore, and Whitman, the message resounds clearly: land is not just where we live it is where we imagine, resist, and become.

Works Cited

Bharathiyar, Subramania. Kaani Nilam Vendum. Collected Works of Subramania Bharathi. Chennai: Bharathi Prachuralayam, 2002.

Coleridge, Samuel Taylor. Kubla Khan. In The Norton Anthology of English Literature, edited by Stephen Greenblatt, 9th ed., Vol. 2, W.W. Norton, 2012.

Heaney, Seamus. "Digging." Death of a Naturalist. Faber & Faber, 1966.

Tagore, Rabindranath. Gitanjali: Song Offerings. Translated by the author. Macmillan, 1913.

Whitman, Walt. "Song of Myself." Leaves of Grass. Penguin Classics, 2005.

"Kani Nilam Vendum Parashakthi." Translations of Some Songs of Carnatic Music, 5 Oct. 2011, https://translationsofsomesongsofcarnticmusic.blogspot.com/2011/10/kani-nilam-vendum-parashakthi.html. Accessed 23 July 2025.

130. Revolutionary Ethics and Social Vision in Mahakavi Bharathiyar's Puthiya Aathichudi



Ms. S. Sharmila

Assistant Professor, Department of English,
PPG College of Arts and Science, Coimbatore.

Introduction

Subramania Bharathiyar (1882-1921) was not just a poet but a visionary who redefined Tamil literature and nationalism. Through his fiery words, he gave voice to the unheard challenged caste and gender oppression and sowed seeds of intellectual revolution. One of his most compelling contributions is Puthiya Aathichudi, a series of modern ethical instructions designed to awaken the conscience of society. Inspired by the traditional Aathichudi of Avvaiyar, Bharathiyar's version offers a bold, action-driven blueprint for social justice.

In this paper, I focus on five lines that resonate deeply with our present day society:

1. சமூகத்தில் சமநிலை வேண்டும் (Samoogathil Sama Nilai Vendum-"There must be equality in society")
2. ஊழியின்றி வாழ்க்கை இல்லை (Oozhiyinri Vazhkai Illai - "There is no life without work")
3. சட்டம் உண்மை வேண்டும் (Sattam Unmai Vendum - "Law must be based on truth")
4. உலகின் நன்மை வேண்டும் (Ulagin Nanmai Vendum - "The world must benefit")
5. தனி ஒரு மனிதனுக்கு உணவு இல்லை எனில், ஜகத்தினை அழித்திடுவோம் (Thani Oru Manithanukku Unavu Illai Enil Jagaththinai Azhithiduvom - "If even one man is without food, we will destroy the world")

These lines reflect Bharathiyar's revolutionary love but not the romantic but the radical love for justice, equality and collective good. The following subtopics explore each idea bringing in contemporary relevance.

Equality as a Moral Necessity

The call **"Samoogathil Sama Nilai Vendum"** reflects Bharathiyar's firm belief that a just society cannot exist without equality. In his era, he spoke against caste discrimination, untouchability and the oppression of women's issues that still persist today in subtle and structural forms.

In modern India, despite legal abolishment of caste-based violence and gender inequality remain serious concerns. For instance, Dalit students across universities have reported discrimination and lack of representation. The Hathras incident (2020) where a Dalit woman was brutally assaulted is not an exception but a symptom of systemic imbalance. Bharathiyar's vision demands us not just to recognize inequality but to eradicate it through education, awareness and collective action.

Today, affirmative action policies, gender sensitization and inclusive laws are steps toward his dream but true equality lies beyond policy but it lies in attitude. His line urges us to see each human with dignity, regardless of social standing.

Dignity of Labor in a Consumerist Age

Bharathiyar wrote, **"Oozhiyinri Vazhkai Illai"** it emphasizing that work gives meaning to life. At a time when manual labour was stigmatized in especially within the caste framework. He gave dignity to every form of labour whether it was done by hands, heart or mind.

In today's context, the gig economy, migrant labour crisis and debates on minimum wage make this line especially relevant. During the COVID-19 lockdown, thousands of workers walked home from cities and exposed to hunger and exhaustion. These were not just labourers but they were the invisible backbone of the economy.

The poet's principle reminds us to value all professions of sanitation workers, delivery agents, farmers and not just those in white-collar jobs. He encourages a work culture based on respect and fairness not a hierarchy or privilege.

Law and Truth Must Go Hand in Hand

"Sattam Unmai Vendum" is a bold declaration. Bharathiyar insisted that law is meaningless if it does not serve truth. In colonial India, laws were designed to suppress the people not protect them. Now we still live in late democracy, lawyers, justice, legal loopholes, delays and miscarriages of justice. The Bilkis Bano case where convicts in a gang rape case were released prematurely in 2022, sparked outrage. The distinction between law and moral justice was clear. The words of Bharathiyar are not a technical precision but an entirely based legal system. In his own way, he also tells false stories to endure ethical laws and maintain the truth. According to him, reality and justice are not only legitimate but also ethical.

Collective Welfare Over Individual Greed

In a deeply philosophical sense, **"Ulagin Nanmai Vendum"** extends the idea of revolutionary love to the entire world. Bharathiyar envisioned not just national freedom but universal well-being. This line calls for a compassionate, global consciousness. Climate change, income inequality, war and displacement are not isolated problems but they affect humanity as a whole. When profits come before the planet or when one nation hoards vaccines while another suffers, Bharathiyar's call for global good becomes urgent. The Policies like carbon neutrality, universal healthcare and peace diplomacy reflect this value. It's a moral compass that insists we move from selfish progress to shared progress.

Zero Tolerance for Hunger and Poverty

Perhaps Bharathiyar's most famous and radical line is **"Thani Oru Manithanukku Unavu Illai Enil Jagaththinai Azhithiduvom."** His anger is not symbolic but it is revolutionary. He believed that a society which lets even one person starve has no right to exist. Even in 2025, India reports over 190 million people as undernourished. Food wastage coexists with hunger. Children die of malnutrition while tons of grains rot in storage. Bharathiyar's fury reflects our collective failure. This line teaches that poverty is not natural but it is political and preventable. Food security, universal basic income and ethical governance are necessary steps. More than policy, his words demand empathy and a refusal to normalize hunger. His longing for Truth to Triump and rule is visible to all readers.

Conclusion

Through these five lines of Puthiya Aathichudi, Subramania Bharathiyar offers a blueprint for a humane society and one built on equality, truth, labour, welfare and justice. His ideas were not just poetic but they were revolutionary tools and they still are. In the dominant progress and economic power, its vision was invited to return to our moral roots. He challenges us to see the human behind after every statistic and the injustice behind every silence. This journal studied that every selected line speaks directly with the continuous problem of modern India.

Bharathiyar does not merely belong to the past but he belongs to every moment when truth is questioned and when hunger exists, when law is misused and when love becomes resistance. In that way, Puthiya Aathichudi is not a list, it is a lifelong call to conscience.

Works Cited

- Bharathiyar, Subramania. Puthiya Aathichudi. Tamil Virtual Academy, Government of Tamil Nadu.
- "Hathras Case: Timeline and Developments." The Hindu, 2020.
- India's Migrant Workers Walk Hundreds of Miles to Escape Lockdown." BBC News, 2020, www.bbc.com/news/world-asia-india-52672764.
- "Bilkis Bano Case: Why the Release of Convicts Sparked Nationwide Protest." India Today, Aug. 2022.
- "State of Food Security and Nutrition in the World." FAO, United Nations, 2023.
- "India's Migrant Workers and the COVID Crisis." BBC News, 2020.
- Sundarararajan, S. Bharathi: The Revolutionary. New Century Book House, 2005.

131. KINDRED SPIRITS ACROSS CULTURES: A COMPARATIVE STUDY OF BHARATHI AND SHELLEY

Mrs. D. DEEPIKADEVI

ASSISTANT PROFESSOR & HEAD,
DEPARTMENT OF ENGLISH,
PPG COLLEGE OF ARTS AND SCIENCE,
COIMBATORE – 35.

ABSTRACT:

This paper undertakes a comparative study of two revolutionary poets, Subramania Bharathi, the fiery Tamil nationalist and reformer, and Percy Bysshe Shelley, the English Romantic poet known for his radical ideas and lyrical beauty. Though separated by geography, culture, and language, Bharathi and Shelley shared a passionate belief in liberty, social justice, and the power of the poetic word to transform society. This paper explores thematic parallels such as rebellion, humanism, idealism, and the role of the poet in society. It also contrasts their approaches in style, influence, and context—Bharathi writing during colonial India and Shelley amidst post-Enlightenment Europe. The comparison sheds light on the universal nature of poetic revolution and the shared human longing for truth, freedom, and equality.

Keywords: Freedom, Equality, Truth, Social Injustice and Culture.

INTRODUCTION:

The world of literature is filled with voices that challenge, inspire, and reform societies. Two such voices are Subramania Bharathi (1882–1921) from India and Percy Bysshe Shelley (1792–1822) from England. They stand as torchbearers of poetic revolution. Bharathi wrote in Tamil, expressing the anguish and aspirations of a colonized nation, while Shelley, a key figure of the English Romantic movement, rebelled against political tyranny, organized religion, and social injustice. Despite their differences in time, place, and linguistic tradition, both poets envisioned a freer world and used poetry as a weapon against oppression. This paper compares the themes, style, and influence of Bharathi and Shelley, seeking to understand how their writings intersect and diverge in the broader context of revolutionary literature.

HISTORICAL AND POLITICAL BACKGROUND:

"Achamillai Achamillai" emerged from a time when British colonial rule over India was at its peak. Bharathi wrote to galvanize Indian citizens, especially Tamils, into shaking off the psychological chains of fear. His writing reflects not just a rejection of the British but also of social evils such as caste discrimination and religious orthodoxy. In the starting of the poem, Bharathi states, Achamillai, achamillai, acham enbathu illaye, Icckathulorellam yethirthu nindra podhilum, Bharathi. Shelley's "The Mask of Anarchy" was a response to the Peterloo Massacre in Manchester, where working-class demonstrators demanding political reform were violently attacked. Though Shelley was in Italy at the time, the news deeply disturbed him, leading to this fiery poetic attack on Britain's ruling class,

personified as villains like Murder and Fraud. Both poets react to governmental abuses of power and seek to awaken the conscience of the common people. Shelley states that,

As I lay asleep in Italy
There came a voice from over the Sea,
And with great power it forth led me
To walk in the visions of Poesy .-Shelley

THEMATIC COMPARISON:

In "Achamillai," Bharathi repeats the phrase,

"Achamillai, Achamillai, Acham Enbathu Illaye" (There is no fear, no fear at all) as a spiritual and political anthem. The repetition builds the reader's strength and solidifies the message that fear must be eliminated from the hearts of those who wish to be free. Achamillai, achamillai, acham enbadhu illaye, Ichai konda porulellam izhandhu vitta podhilum, Achamillai, achamillai, acham enbadhu illaye. Bharathi. In "The Mask of Anarchy," Shelley writes, Rise like Lions after slumber, In unvanquishable number. The line directly encouraging the masses to awaken and overthrow their oppressors not through violence but through peaceful, collective civil disobedience.

MORAL AND ETHICAL AWAKENING:

Bharathi emphasizes internal change and courage as the first steps toward societal transformation. He views fear as the enemy of justice, and spiritual fortitude as the ultimate weapon against tyranny. He writes, Kacchanintha kongai maanthar kankal veesu podhilum, Achamillai, achamillai, acham enbadhu illaye. Bharathi. As though, Shelley critiques not only political figures but also the moral decay of an entire governing system. His poem encourages the people to see their suffering clearly and rise against it with moral clarity.

STYLISTIC AND STRUCTURAL COMPARISON:

Bharathi writes in a musical, rhythmic Tamil with powerful, uplifting repetitions. His tone is assertive, and his language evokes gods, nature, and fire to symbolize courage and energy. His Tamil is accessible yet deeply rooted in spiritual metaphor. On the other hand, Shelley uses elevated English and poetic devices like allegory, personification, and satire. The poem is written in quatrains, and the tone shifts from horror to hope by the end. He uses dark imagery (e.g., "God, and King, and Law") to convey oppression.

And he wore a kingly crown;
And in his grasp a sceptre shone;
On his brow this mark I saw--
'I AM GOD, AND KING, AND LAW! - Shelley

SYMBOLISM: In "Achamillai," Bharathi uses symbols like lions, gods, and fire to represent spiritual strength. Fearlessness becomes divine, and patriotism takes on religious dimensions. Uchi meedhu vaan idinthu veezkindra podhilum, Achamillai, achamillai, acham enbadhu illaye -Bharathi. In "The Mask of Anarchy," Shelley uses masks and allegorical characters to depict the corruption of Britain's leaders. "Anarchy" wears a mask representing the Prime Minister, while "Hope" appears at the end, symbolizing a new, just order.

IMPACT AND LEGACY:

"Achamillai" became a motivational slogan during India's freedom struggle and remains deeply influential in Tamil Nadu. It is taught in schools, quoted in speeches, and sung at protests. Bharathi's status as a freedom poet is unmatched in Indian literature. Though Shelley died young and his poem wasn't published until after his death, "The Mask of Anarchy" gained significance over time. Its call for nonviolent resistance inspired leaders such as Mahatma Gandhi and Martin Luther King Jr. Today, the poem is considered a cornerstone of protest poetry in English literature.

CONCLUSION:

Subramania Bharathi's "Achamillai Achamillai" and Percy Bysshe Shelley's "The Mask of Anarchy" transcend their temporal and geographical boundaries to become universal calls for justice and human dignity. Both poets believed in the transformative power of words and the capacity of the people to bring about change. While Bharathi invoked divine inner strength, Shelley appealed to collective civil power. Their poems, rooted in distinct traditions, converge in their vision of a just and fearless world—making them timeless voices of revolution and reform.

WORKS CITED

1. Bharathi, Subramania. Achamillai Achamillai, Selected Poems.
2. Shelley, Percy Bysshe. The Mask of Anarchy, in The Complete Poetical Works.
3. Iyengar, K.R. Srinivasa. Indian Writing in English.
4. Holmes, Richard. Shelley: The Pursuit.
5. Sundararajan, S. Bharathiar: The Poet and the Patriot.
6. Shelley, P.B. A Defence of Poetry.
7. Venkatachalapathy, A.R. Who Owns That Song?

132. The Torch of Learning in Bharathiyar's Educational Ideals in Tamil Poetry

Rathina Priya.D

Assistant Professor,
Department of English
VLB Janakiammal College of Arts and Science,
Kovaipudur, Coimbatore.

Abstract

The revolutionary social reformer and pioneer of Tamil literature, Subramania Bharathiyar, highlighted the transformational potential of education in all of his writings. During a period when caste, gender, and colonial oppression limited access to education, Bharathiyar's writings fearlessly promoted inclusive and universal education. His poetry acted as awakening tools, imploring readers to free themselves from ignorance's bonds. This essay examines Bharathiyar's use of Tamil literature as a vehicle for advancing educational empowerment, especially for women and underrepresented groups, and how his ideas still shape modern educational theory in Tamil society. He established the theoretical groundwork for numerous subsequent reform movements with his emphasis on equality, scientific thinking, and moral growth via education. In today's endeavors to create a just and enlightened society, Bharathiyar's educational principles are still crucial and relevant. **Key words:** revolutionary, transformational, colonial oppression, educational empowerment, equality, scientific thinking, enlightened society.

Introduction

Tamil literature has long served as a powerful vehicle for social change, cultural identity, and intellectual expression. Among its most influential voices is Mahakavi Subramania Bharathiyar (1882–1921), a visionary poet, freedom fighter, and reformist thinker. Bharathiyar's literary legacy goes far beyond poetic beauty—it embodies a bold call for transformation in society, particularly through education. At a time when India was under colonial rule and social inequalities were deeply rooted, Bharathiyar used his pen as a sword to challenge oppression and promote enlightenment. He believed that education was the foundation of individual dignity, societal progress, and national freedom. His works addressed the urgent need for universal, inclusive, and progressive education, especially for women and marginalized communities who were traditionally denied access. Through poems like Pudhiya Aathichudi, Kuyil Paatu. This paper explores how Bharathiyar's literary contributions not only enriched Tamil poetry but also laid the groundwork for educational reform and empowerment in Tamil society.

Education as a tool

Bharathiyar emphasized the power of education as a tool for individual and societal transformation. He envisioned an educated society free from ignorance, caste discrimination, and gender inequality. In his works like "Pudhiya Aathichudi" and "KuyilPaatu", he highlighted the need for universal education, especially for women and the underprivileged. He boldly asserted that both men and women should have equal access to learning, at a time when female education was largely discouraged. His poems advocated modern scientific learning blended with moral and cultural values. Bharathiyar's contribution to Tamil literature goes beyond aesthetics; he made literature a force of reform. Through his powerful verses, he inspired generations to pursue knowledge and fostered a vision of an educated, empowered, and just society.

Universal Education

Tamil literature has been a mirror to the society that produced it since its inception, reflecting its values, struggles, and aspirations. Its most powerful member is Mahakavi Subramania Bharathiyar (1882–1921), who revolutionized Tamil poetry with a dynamic change in its themes of nationalism, equality, and enlightenment. Education, to Bharathiyar, was the very basis of freedom—both individual and national. In a fragmented and colonial India, Bharathiyar envisioned education to be the way to empowerment. His faith rested on the conviction that the country could only grow as long as each citizen, male or female, high caste or low caste, had an access to learning. His writings in Tamil were not merely beautiful but profoundly political and reformist. Bharathiyar was strongly convinced that education should be for all and not be conditioned by social hierarchies. In his work, he challenged the conventional barriers that excluded education for women and lower castes.

"Kalviye Selvama? Veerama? Gunama?—Allathu Ivatrin MuthalIlaadhaama?"
"Is education not the source of wealth, valor, and virtue?"

This quote from his poem indicates that he is sure that education is the source of all human virtues.

Women's Education

Bharathiyar was way ahead of time in promoting women's rights. In his "Pudhumai Penn", he visualizes a new woman who is educated, courageous, and independent. His "Pudhiya Aathichudi" has moral and intellectual teachings equally addressed to girls and boys.

"Pennin Perumai Kalandha Kalviyil"
"(A woman's greatness lies in her education)"

These words reiterated his confidence that the education of women would benefit the whole society.

Scientific and Logical Learning

Bharathiyar also emphasized the need for scientific thinking. He desired Indians to adopt modernity without compromising their culture. His ideals of education encouraged logic, questioning, and a bold attitude towards knowledge.

Literary Works Highlighting Education

Pudhiya Aathichudi is a modern reimagining of the traditional Tamil Aathichudi, written by Bharathiyar to instill moral, intellectual, and social values in children. Each line starts with a Tamil alphabet letter and gives a simple life principle. In Pudhiya Aathichudi, Bharathiyar offers a contemporary ethical framework for children and youth, utilizing the format of the classic Aathichudi while incorporating progressive ideals. The poem opens with "Anjaadhe" (Do not fear), encouraging the reader to cultivate bravery and confront life with confidence. It carries on with "Iraimaiyin vaazh" (Live with dignity), promoting self-esteem and a life of ethical resilience. Another line, "Ethaiyum payindru therika" (Learn everything and comprehend it), encourages curiosity and a desire for knowledge. Bharathiyar similarly features "Ookkaminri ularo?" (Is there anyone lacking motivation?), emphasizing that each person possesses potential and inner strength. "Aiyaminri kodu" (Offer without reluctance) emphasizes self-sacrifice and community duty. With these straightforward yet impactful phrases, Bharathiyar imparts values such as courage, wisdom, fairness, and compassion. His Pudhiya Aathichudi is both a poetic achievement and an effective educational resource that motivates students to develop into self-assured, knowledgeable, and socially aware individuals.

Kuyil Paatu

Kuyil Paatu is a symbolicl poem in which Bharathiyar uses the cuckoo (kuyil) to symbolize a wise, beautiful, and educated woman. It expresses his revolutionary ideas about education and women's liberation.

"Katradhu kattalaiallavo,
Karpathil piravi peridhallavo!"
"Isn't learning a commandment?
Isn't this birth itself noble because of learning?"

Emphasizes learning as a divine duty and purpose of life.

"Paaduvadhe vaazhkai,
Padippadhe nanmai"
"Singing is life,
Learning is virtue"

Shows how education and artistic expression are the essence of life.

"Nallakalvi petru valarginra pengal,
Naattu vaazhvile deepangal"
"Educated women are like lamps,
lighting up the nation's life."

A powerful statement on women's education and its societal impact.

Bharathiyar's enlightened thoughts inspired generations of teachers, writers, and social thinkers. His approach to incorporating educational themes in poetry became a model for socially committed literature. In the post-independence era, his thoughts guided Tamil Nadu's progressive education policies such as mid-day meals, girl child education, and literacy movements.

Conclusion

Bharathiyar's literary contribution is not limited to poetry; it is a vision for a just and enlightened society. By giving utmost importance to education in his works, he laid the intellectual foundation for social reform. His belief that education is the key to freedom, equality, and national progress makes him a timeless beacon in Tamil literature. His words remain relevant today, inspiring movements for education and gender equality across India.

References

1. Bharathiyar, Subramania. PudhiyaAathichudi. Various Editions.
2. Bharathiyar, Subramania. KuyilPaatu. Available in BharathiyarKavithaigal compilations.
3. Kandasamy, P. (2015). Social Reform in Bharathi's Poetry. Chennai: Manivasagar Publishers.
4. Lakshmi, R. (2018). Education and Women Empowerment in Bharathiyar's Literature. International Journal of Tamil Studies, Vol. 3, Issue 2.

133. Bharathiyar's Educational Vision and Its Impact on Commerce and Human Capital



Dr.T.Sangeetha
M.Com., M.Phil., M.Ed., Ph.D
Assistant Professor & Head
Department of BCOM PA
PPG College of Arts& Science, Saravanampatti

Abstract

Subramania Bharathiyar, a revered Tamil poet and visionary thinker, advocated for a transformative educational framework rooted in equality, empowerment, and national development. His ideas went beyond mere literacy, emphasizing the importance of holistic education that includes moral values, scientific temperament, and economic self-reliance. This study explores Bharathiyar's educational philosophy and examines its relevance and impact on contemporary commerce and human capital development in India. By linking his vision to modern educational policies and workforce readiness, the research highlights how Bharathiyar's ideals can contribute to nurturing skilled, ethical, and innovative individuals who drive economic growth. The study also investigates how his emphasis on women's education and social upliftment supports inclusive growth and sustainable development in today's commercial sector. Through a blend of literary analysis and socio-economic evaluation, the paper seeks to revive and reinterpret Bharathiyar's educational contributions in the context of 21st-century human capital formation.

Keywords:

1. Subramania Bharathiyar ; 2. Educational Philosophy; 3. Human Capital Development; 4. Inclusive Education; 5. Women Empowerment

Introduction

Subramania Bharathiyar, one of India's most influential nationalist poets and social reformers, envisioned an India rooted in education, equality, and economic self-sufficiency. Living during a time of colonial rule and social oppression, Bharathiyar strongly believed that true freedom could only be achieved through the empowerment of individuals—especially through education. His poetic works and public speeches championed the need for a progressive, inclusive, and value-based education system that would not only uplift individuals but also strengthen the nation's socio-economic fabric. Bharathiyar's vision of education extended beyond the traditional confines of classroom instruction. He advocated for scientific thinking, rational inquiry, moral courage, and the economic independence of individuals—particularly women and the underprivileged. His ideas, though rooted in the early 20th century, are remarkably aligned with modern concepts of human capital development, where education is seen as a key driver of productivity, innovation, and inclusive commerce. In today's global economy, the growth of commerce and industry heavily depends on the quality of human capital—individuals equipped with knowledge, skills, and ethical values. Bharathiyar's insistence on education for all, especially women and marginalized communities, mirrors current national and international goals for sustainable development, gender equality, and economic empowerment. This study aims to explore Bharathiyar's educational philosophy in depth and analyze its direct and indirect influence on the development of human capital and commerce in India. By linking historical vision with contemporary needs, this research seeks to highlight how Bharathiyar's ideals remain relevant in shaping an equitable and economically vibrant society.

Review of Literature

The educational philosophy of Subramania Bharathiyar has been studied by scholars from various disciplinary perspectives, ranging from literature and philosophy to social reform and development studies. This review synthesizes key academic contributions relevant to Bharathiyar's educational ideals and their relationship to commerce and human capital development.

1. "Pudhumai Penn" (புதுமைப்பெண் – The New Woman)

Meaning & Relevance:

This iconic poem celebrates the empowered, educated woman who is fearless, bold, and self-reliant. Bharathiyar envisioned women as vital contributors to the nation's progress—an early vision of inclusive human capital.

Key Lines

"She will think and act on her own;
She will walk with her head held high;
She will learn and teach all she knows—
The new woman shall be free and wise."

2. "Achamillai Achamillai" (அச்சமில்லை அச்சமில்லை – No Fear Have I)

Meaning & Relevance: This poem is a call for fearless education and moral courage. Bharathiyar believed that a bold and educated citizenry is the backbone of national strength and economic self-reliance.

Key Lines (translated): "No fear have I, none at all, Even if the sky were to fall."

3. "Ennuyir Thozhiyin" (என்னுயிர் தோழியின் – My Beloved Friend)

Meaning & Relevance:

In this poem, Bharathiyar praises educated women and their intellectual brilliance. It supports the idea that women, if given equal educational opportunities, would uplift the entire society.

4. "Jathi Illadha Mathanginile" (ஜாதி இல்லாத மத்தங்கினிலே – In a Caste-Free Society)

Meaning & Relevance:

This poem promotes education without barriers of caste or class. It reflects Bharathiyar's vision for an egalitarian society where access to knowledge is a right, not a privilege—supporting equal participation in commerce and nation-building.

5. "Vaanil Parakkum Meen Pola" (வானில் பறக்கும் மீன் போல)

Meaning & Relevance:

This lesser-known poem reflects on the boundless potential of educated individuals, especially the youth. It aligns with modern concepts of human capital and intellectual empowerment.

1. Bharathiyar's Educational Philosophy

Several literary scholars and historians, including K. Meenakshi Sundaram (2002) and Dr. R. Jeyalakshmi (2011), have analysed Bharathiyar's vision of education as being progressive, egalitarian, and rooted in nationalistic pride. Bharathiyar viewed education as a means to instill confidence,

scientific thinking, and moral clarity. His poetry and prose emphasized the need for universal education, especially for women and the oppressed, as a way to achieve social transformation.

2. Education and Social Empowerment

Anandhi (1998) explored the intersection of Bharathiyar's ideas with feminist thought, highlighting how his advocacy for women's education challenged patriarchal norms and laid the foundation for gender-inclusive development. Scholars such as S. Gopalakrishnan (2015) also observed that Bharathiyar's stress on education for the marginalized classes reflects early human rights thinking, resonating with modern inclusive education models.

3. Human Capital and Economic Development

The relationship between education and economic growth has been extensively studied in development economics. Theodore Schultz (1961) and Gary Becker (1964) introduced the concept of human capital, asserting that investment in education directly contributes to productivity and economic advancement. Bharathiyar's emphasis on skill-building, rational thinking, and national economic participation aligns closely with this concept, although he articulated it in poetic and moral terms.

4. Cultural Influence on Commerce and Ethics

Recent studies, such as Sen and Das (2020), argue that ethical and culturally grounded education plays a significant role in creating responsible business leaders. Bharathiyar's integration of ethics, patriotism, and social responsibility into educational goals positions his vision as a precursor to today's holistic commerce education. His call for self-reliance (Swadeshi) and industrial progress resonates with modern concepts of sustainable entrepreneurship and Atmanirbhar Bharat.

5. Bharathiyar and Modern Educational Policy

Contemporary scholars such as Dr. Uma Maheswari (2019) and K. Vasanth (2021) have drawn parallels between Bharathiyar's vision and the objectives of India's National Education Policy (NEP 2020). Both stress inclusive, interdisciplinary, and skills-based learning for nation-building. This continuity suggests that Bharathiyar's influence persists in shaping the goals of present-day educational reforms.

Results and Discussion

The study's analysis of Bharathiyar's writings, speeches, and their relevance to modern commerce and human capital development yielded the following thematic results:

1. Visionary Emphasis on Inclusive Education

Bharathiyar's call for universal education, especially for women and marginalized communities, emerges as a revolutionary idea for his time. His writings show that he believed education should not be limited by caste, gender, or economic status. This inclusive vision aligns with today's global human capital development goals, such as the UN Sustainable Development Goal 4 (Quality Education). In the context of commerce, this implies a more diversified and skilled workforce contributing to various sectors of the economy.

2. Human Capital as a Tool for National Empowerment

Bharathiyar believed that an educated population would lead to a stronger nation, both morally and economically. His concept mirrors modern human capital theories, where investment in education and skill development is seen as essential for productivity and economic growth. His advocacy for scientific thinking and industrial progress shows his anticipation of a knowledge-based economy. This foresight aligns with modern economic strategies focused on innovation, entrepreneurship, and self-reliance.

3. Commerce Rooted in Ethics and National Pride

Bharathiyar promoted Swadeshi—the idea of supporting local industries and products. This vision supports the idea of ethical commerce rooted in national pride and sustainability. Modern interpretations of this include movements toward local entrepreneurship, fair trade, and ethical business practices, which are considered essential for long-term commercial success. Bharathiyar believed economic activity should uplift the nation, not just generate individual profit.

4. Role of Women in Economic and Educational Growth

One of the most significant findings is Bharathiyar's strong advocacy for women's education. He believed that empowering women through learning would not only uplift families but also strengthen the economy. Today, women's participation in the workforce is a critical measure of human capital efficiency. Bharathiyar's views prefigure modern gender-inclusive business practices and policy frameworks aimed at bridging the gender gap in education and employment.

5. Relevance to Current Educational and Economic Policies

Current policies such as India's National Education Policy 2020, Skill India Mission, and Atmanirbhar Bharat reflect principles Bharathiyar promoted a century ago: inclusivity, skill development, self-reliance, and value-based education. These results suggest that Bharathiyar's educational ideals are not only historically significant but also practically applicable to contemporary educational and economic development strategies.

Review of Literature

1. Maheswari, U. (2022). Bharathiyar's Educational Philosophy and the NEP 2020: A Comparative Study. Journal of Indian Educational Review, 58(3), 121–134.
2. Vasanth, K. (2021). Subramania Bharathi and the Rise of National Educational Thought in Tamil Nadu. Indian Journal of Cultural Studies, 16(2), 87–99.
3. Gopalakrishnan, S. (2020). Poetry as Policy: Bharathiyar's Vision for Inclusive Education. Journal of Modern Indian Literature, 24(1), 45–58.
4. Sen, R., & Das, A. (2020). Ethics in Indian Business: Historical Roots and Modern Practice. Journal of Commerce and Development, 12(4), 210–225.
5. Balasubramanian, V. (2019). Swadeshi Economy and Bharathiyar's Call for Indigenous Industry. Indian Economic Heritage Journal, 10(2), 34–47.
6. Anandhi, S. (2018). Gender, Education and Reform: Bharathiyar's Feminist Legacy. South Asian Women's Studies, 14(3), 66–78.
7. Sundaram, K. M. (2017). Educational Revolution in Colonial India: Bharathiyar and Beyond. Tamil Nadu Historical Quarterly, 29(2), 99–113.
8. Jeyalakshmi, R. (2016). Nationalism and Education in Bharathi's Writings. Indian Literary Perspectives, 18(1), 50–62.
9. Chidambaram, R. (2015). Human Capital Formation in Pre-Independence India: A Philosophical Analysis. Journal of Economic Thought, 33(1), 12–29.
10. Ravi, T. (2014). Educational Values in Bharathiyar's Poetry and Their Relevance Today. Journal of South Indian Studies, 6(2), 143–155.

134. A STUDY ON WOMEN EMPOWERMENT IN BHARATHIYAR`S POETRY AND IT`S INFLUENCE ON INDIAN ENTREPRENEURSHIP



Mrs S. DEEPA

M.Com,M.Phil,B.Ed,

Ph. D Research Scholar in Commerce,

PPG College of Art and Science,

Saravanam Patti, Coimbatore-35

Abstract:

This paper explores the progressive vision of women empowerment as portrayed in the poetry of Subramania Bharathiyar and examines its influence on the evolution of women-led entrepreneurship in India. Bharathiyar, a revolutionary Tamil poet and freedom fighter, envisioned a society where women stood as equals to men—educated, fearless, and economically independent. His powerful verses not only challenged the patriarchal norms of his time but also laid the ideological foundation for future generations. By analyzing key poems that celebrate women's strength and intellect, this study links Bharathiyar's literary influence to the modern entrepreneurial spirit among Indian women. Through qualitative analysis and selected case studies, the paper highlights how Bharathiyar's ideals continue to inspire contemporary women entrepreneurs in breaking social barriers and contributing to India's economic development. The research concludes that literature, when rooted in social reform, can be a powerful catalyst for real-world change.

Keywords:

Bharathiyar; Women Empowerment; Indian Entrepreneurship; Tamil Literature; Social Reform

Introduction:

Subramania Bharathiyar, a visionary poet and social reformer of the early 20th century, emerged as one of the boldest voices advocating for women's rights in India. At a time when women were largely confined to the domestic sphere and denied basic rights such as education and freedom of expression, Bharathiyar dared to imagine a future where women would walk shoulder to shoulder with men—empowered, educated, and independent. His poetry reflected not just literary brilliance but also a deep commitment to social change. This study aims to examine how Bharathiyar's powerful verses on women empowerment continue to resonate in modern India, particularly in the realm of entrepreneurship. As Indian society evolves, more women are stepping into leadership roles, starting businesses, and contributing significantly to the economy. The values Bharathiyar promoted—courage, self-reliance, and equality—mirror the traits seen in today's women entrepreneurs. By analyzing selected poems and tracing their philosophical impact, this paper explores the connection between Bharathiyar's literary legacy and the growing wave of women entrepreneurship in India. Through this lens, we can understand how cultural and literary icons like Bharathiyar have helped shape progressive societal changes that extend beyond literature into real-life empowerment

Review of Literature:

A considerable body of research has explored Subramania Bharathiyar's role as a literary pioneer and social reformer. His works have been widely analysed for their progressive ideas, especially regarding women's rights and empowerment.

Social Reform

1. **Pudhumai Penn – The New Woman**

Theme: This iconic poem describes the image of a modern, bold, and fearless woman—educated, confident, and ready to lead.

Relevance: It aligns directly with the idea of today's women entrepreneurs.

Famous lines:

"நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வை...

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிப்புலமை!" ---

2. Pennin Perumai – The Greatness of Women

Theme: Celebrates the intellectual, spiritual, and emotional strength of women.

Relevance: Encourages respect and recognition of women's roles beyond traditional expectations.

3. Let Us Praise Womanhood

Theme: Bharathiyar speaks of the divine and powerful nature of women.

Relevance: Reinforces the dignity and leadership potential of women in society.

4. Is There Space for Women in Our Nation

Theme: A sharp criticism of the way women were suppressed in society.

Relevance: Sparks thought on gender roles and challenges that are still present in entrepreneurship today.

5. The Daughters of Bharat

Theme: Dreams of Indian women rising with education, bravery, and pride.

Relevance: Reflects the spirit of women breaking boundaries—similar to entrepreneurial journeys.

1. Bharathiyar's Vision of Women Empowerment:

Studies by scholars such as Dr. Prema Nandakumar (2003) and A.S. Gnanasambandan (2012) emphasize Bharathiyar's revolutionary portrayal of women. He envisioned women as fearless, intellectual, and equal partners in society—a vision far ahead of his time. His poems like "Pudhumai Penn" and "Pennin Perumai" highlight his deep respect for women and their potential.

2. Women in Indian Literature:

Literary critics have noted that Bharathiyar's depiction of women broke away from traditional stereotypes. Compared to his contemporaries, Bharathiyar portrayed women as leaders, warriors, and scholars, influencing a shift in Tamil and Indian literature's portrayal of the female identity (S. Ganesan, 2010).

3. Link between Literature and Social Change:

According to sociolinguist Meenakshi Sundaram (2015), literature can act as a catalyst for social reform. Bharathiyar's poetry is often cited as a classic example where literature influenced real-world ideologies, particularly during and after India's freedom movement.

4. Women Entrepreneurship in India:

Recent studies on women entrepreneurship, such as those by Dr. Poonam Sharma (2020) and the Indian Ministry of MSME, highlight the rise of female entrepreneurs in India. These studies indicate that socio-cultural factors, including education, confidence, and role models, greatly influence women's entry into entrepreneurship.

5. Connecting Bharathiyar's Influence to Modern Entrepreneurs:

Though not widely explored, emerging research suggests that cultural icons like Bharathiyar have contributed to shaping modern gender identities. A few case studies (e.g., Tamil Nadu-based entrepreneurs) indicate that Bharathiyar's ideals continue to be a source of inspiration, especially among women educated in Tamil literature and culture.

Results and Discussion:

The analysis of Bharathiyar's poems revealed consistent themes of freedom, self-respect, courage, and education for women. Poems such as "Pudhumai Penn" and "Pennin Perumai" portray women as empowered individuals capable of leading society, working independently, and breaking traditional barriers.

Through interviews and surveys conducted with a sample of women entrepreneurs from Tamil Nadu, especially those with a background in Tamil literature, several insights emerged:

1. **Cultural Inspiration**: Many women acknowledged that Bharathiyar's poems inspired them during their education or personal struggles, reinforcing their belief in gender equality and independence.

2. **Emotional Motivation**: His poetic portrayal of strong, fearless women gave emotional strength to many, encouraging them to pursue non-traditional roles such as business ownership.

3. **Educational Influence**: Those who studied Bharathiyar's works during school or college reported that his verses influenced their self-confidence and leadership mindset.

4. **Modern Relevance**: Despite being written over 100 years ago, Bharathiyar's messages were found to be highly relevant to current discussions on women empowerment and entrepreneurship.

5. **Challenges Remain**: The study also found that while Bharathiyar's ideals continue to inspire, modern women entrepreneurs still face challenges such as lack of funding, gender bias, and social expectations, highlighting the need to translate these empowering ideals into practical policy and support systems.

References:

1. Bharathiyar, S. (1910). Pudhumai Penn [Poem]. In Bharathiyar Kavithaigal. Chennai: Bharathi Puthakalayam.
2. Gnanasambandan, A. S. (2012). Bharathiyin Manitha Urimai Sindhanaigal. Chennai: Alliance Publications.
3. Nandakumar, P. (2003). Bharathi: The Voice of the Subcontinent. New Delhi: Sahitya Akademi.
4. Sundaram, M. (2015). Role of Literature in Social Change: A Study of Bharathiyar's Poems. Journal of Tamil Studies, 42(2), 55–62

135. PORTRAYAL OF SOCIAL HIERARCHY IN BHARATHIYAR'S SHORT STORY AARIL ORU PANGU

Ms.Prabha.M

Ph.D Research Scholar (PT), Department of English,
Dr.N.G.P. Arts and Science College, Kalapatti, Coimbatore

Abstract

"Live in the present and shape the future, do not be casting lingering looks to the distant past for the past has passed away, never gain and return," said by Courageous Bharathiyar. In Subramania Bharathi's short story Aaril Oru Pangu explains a powerful exploration of social hierarchy that reflects his role as a poet, freedom fighter and progressive thinker in early 20th-century India. Bharathiyar not only critiques the existing social order but also showcases his literary talent and reformist spirit. Context and Synopsis Set during the colonial era in India, Aaril Oru Pangu tells the story of a young man who finds himself caught between his personal desires and his dedication to social and national issues. Influenced by reformist movements like the Brahmo Samaj, he grapples with the idea of renouncing personal happiness for the greater good, all while navigating the complexities of love and societal expectations.

Keywords: social hierarchy, freedom, national issues, gender

Introduction

Chinnaswami Subramania Bharati, affectionately known as Bharathiyar was a remarkable Tamil writer, poet, journalist, and a passionate activist for Indian independence and social reformer hailing from Tamil Nadu. Often referred to as "Mahakavi Bharati", he was a pioneer in modern Tamil poetry and is celebrated as one of the most significant literary figures in Tamil history. Aaril Oru Pangu, a compelling short story by Subramania Bharati, explores a vivid picture of a society where the ruling elite takes advantage of the everyday people, leaving them with just a tiny slice of their hard-earned income. The narrative takes a hard look at the unfair tax system and the stark power divide between the wealthy and the less fortunate. It sheds light on the struggles of farmers who work tirelessly yet see little reward, underscoring the urgent need for social and economic fairness.

Bharathiyar's Critique of Social Hierarchy

The title, Aaril Oru Pangu, symbolizes the paltry amount of produce that farmers are left with after they have paid their taxes and other costs. Through striking imagery and relatable characters, the story reveals the grim realities of poverty and inequality. It stands as a powerful critique of the current social structure and a passionate plea for a fairer distribution of wealth and resources. "If a single person has no food, we shall destroy the world." This quote, from his famous poem "Pudhumai Penn," underscores the urgency of addressing hunger and the interconnectedness of human well-being.

Questioning Traditional Authority and Caste

In Aaril Oru Pangu the narration of Bharathiyar dwells skillfully and reveals the rigid caste system and the traditional hierarchies that shaped social interactions in India. The protagonist's connection to the Brahmo Samaj, a movement that championed social equality and rejected caste divisions. It serves as a powerful tool to question the validity of inherited social status. By illustrating the young man's inner turmoil and his ultimate decision to serve society, Bharathiyar emphasizes the importance of breaking free from restrictive caste and class divisions. "Be hungry, be alone, be watchful." While not directly about poverty, this quote suggests that one must be aware and vigilant

against injustice, including the injustice of poverty. It calls for a proactive approach to overcome challenges and inequality.

Gender and Hierarchy

The story also sheds light on the marginalized status of women within the social hierarchy. The female character's experience of getting marriage which was arranged by her father without her full consent, leading to her deep sorrow. It reflects the limited agency women had in traditional society. Bharathiyar's empathetic portrayal of her struggles critiques the patriarchal norms and the objectification of women in the marriage market.

The Role of Personal Experience and Collective Change

Bharathiyar's perspective resonates with wider currents in Indian philosophy, where anubhava (personal experience) transforms into a shared experience that drives social change. The protagonist's journey from personal struggles to collective action embodies Bharathiyar's conviction that individual enlightenment can confront and ultimately alter oppressive social systems. "Upright gait, confident gaze and principles that fear none on earth." This famous line from "Pudhumai Penn" emphasizes the need for self-respect and courage, which are essential for overcoming poverty and oppression.

Hierarchy and Modernity

By placing his characters at the intersection of tradition and modernity, Bharathiyar highlights the conflicts between established social hierarchies and the emerging egalitarian ideals of colonial India. The protagonist's conflict is balancing personal happiness with social responsibility and reflects the broader societal challenge of merging tradition with the aspirations of a fair and modern society. "Long live the Indian society." This call for unity and progress implies that a just and prosperous society is one where poverty is eradicated and everyone thrives.

Literary Technique and Social Commentary

Bharathiyar's work is a masterclass in blending literary technique with social commentary. He adopts a realistic narrative style that dives into the everyday struggles of regular folks, using their experiences to critique the larger social structure. His characters are far from one-dimensional; they are richly developed individuals whose decisions mirror the challenges and opportunities of their era. The story's conclusion, which avoids a neat resolution, encourages readers to ponder the ongoing existence of social hierarchies and the importance of persistent resistance and reform.

Conclusion

In AarilOru Pangu Bharathiyar skillfully illustrates the social hierarchy not as something fixed or divinely sanctioned, but as a human-made system that can be questioned and transformed. Through the trials faced by his characters, he champions a vision of society rooted in equality, personal freedom and collective advancement, making this story a significant literary contribution to the ongoing conversation about social justice in Indian literature.

References:

1. Bharathiyar, Subramania. Ariloru Pangu. Bharathiyar Kathaigal, edited by S. Ramakrishnan, Tamil Puthakalayam, 2010, pp. 45-52.
2. Ramakrishnan, V. Subramania Bharati: Makers of Indian Literature. Sahitya Akademi, 1991.

136. BHARATHI'S THE LANGUAGE OF WIND

RAJAMEENAKSHI. C

Asst., Professor, Department of English,
Nachiappa Swamigal Arts and Science College, Koviloor

Abstract

This paper explores the symbolic and philosophical significance of wind in the poetry of **Mahakavi Subramania Bharathi**, with a specific focus on his famous poem **"Wind"**, translated by **A.K. Ramanujan.** The study links Bharathi's use of wind to both **traditional Indian elements (Panchabhutas)** and **Western literary influences**, especially **P. B. Shelley's "Ode to the West Wind".** The paper also draws connections between Bharathi's depiction of wind and other poets such as **Ted Hughes, Mary Oliver, and Jayanta Mahapatra**, who have all imbued wind with transformative, spiritual, and revolutionary potential. By analyzing Bharathi's metaphorical use of wind, this paper argues that wind serves as a **force of freedom, resilience, and spiritual awakening** in his political and poetic vision.

Keywords

Bharathi, Wind, Shelley, Panchabhutas, Revolution, Spirituality, Freedom, Poetry, Nature, Symbolism

Introduction

Every morning, while riding my two-wheeler to college, I encounter the beauty of the natural world—trees swaying gently, cool breezes brushing against my skin—reminding me of the elemental **power of wind**. This everyday experience resonated deeply when I taught the CBSE **Grade 9 English poem "Wind"**, translated from Tamil by **A.K. Ramanujan**. That poem not only captured the dynamic force of nature but also offered a profound introduction to **Subramania Bharathi, the poet of fire and freedom**. **Inspired by the poem** and the **interest** it generated among students, I felt compelled to explore **Bharathi's vision of wind** as a **symbol of inner strength, revolution, and spiritual life.**

Bharathi's "Wind" (Translated by A.K. Ramanujan)

"Wind, come softly.
Don't break the shutters of the windows.
Don't scatter the papers.
Don't throw down the books on the shelf..."

In this poem, Bharathi presents **wind** not just as a physical phenomenon, but as a **metaphor for life's trials.** The wind punishes the weak but becomes a companion to the strong. He writes:

"Frail crumbling houses, crumbling doors, crumbling rafters...
The wind god winnows and crushes them all."

Bharathi here emphasizes the **need for resilience and inner strength** to withstand the pressures of life, nature, and society. He views the wind as a divine force that tests and purifies.

Influence of Shelley's "Ode to the West Wind"

There is a clear **parallel** between Bharathi's poetic use of wind and **P. B. Shelley's** celebrated Romantic ode. Shelley invokes wind as both **destroyer and preserver, a revolutionary agent and a source of poetic inspiration**.

"Drive my dead thoughts over the universe
Like wither'd leaves to quicken a new birth!"

Just as Shelley pleads for renewal, Bharathi calls on us to **build strong homes and hearts** to withstand the storm. In both poets, wind becomes a **transformative power,** testing weakness and kindling strength.

Themes Shared by Bharathi and Shelley

Power of Nature – Wind as a primal force that cannot be tamed.
Rebirth and Renewal – It clears the old to make way for the new.
Revolution and Change – Both poets use wind to signal social or political awakening.
Poetic Inspiration – Wind carries thoughts and ideas across space and time.

Shelley's line, **"If Winter comes, can Spring be far behind?"**, resonates with Bharathi's belief in inevitable progress and transformation.

Thematic Echoes in Other Poets

Several modern poets also explore the **symbolic resonance of wind**, echoing Bharathi's themes:

1. Ted Hughes – "Wind"

Hughes portrays wind as a relentless elemental force, shaking a house and those inside. Like Bharathi, he explores **human resilience** in the face of **natural aggression.**

"This house has been far out at sea all night..."

2. Mary Oliver – "The Wind"

Oliver treats the wind as a **companion and guide**, a force that stirs thought and inner clarity, echoing Bharathi's idea of wind as **freedom of mind.**

"Every year the wind goes on spring holidays..."

3. Vikram Seth – "The Wind"

In this imagist poem, wind is both **adversary and companion**—embodying life's unpredictability.

4. Jayanta Mahapatra – "Indian Summer"

"Over the soughing of the sombre wind
Priests chant louder than ever..."

Wind here is the background to tradition and ritual—a timeless presence much like in Bharathi's philosophical vision.

5. Tapan Kumar Pradhan – "Wind in the Afternoon"

Wind becomes the **breath of a dry landscape—desolate yet hopeful**—just as Bharathi used it to inspire change amidst chaos.

6. Nikhil Parekh – "As the Wind Blew"

A free-verse meditation that portrays wind as a quiet but powerful **transformer of lives, landscapes, and minds.**

Why Bharathi Gave Special Importance to Wind

Among the **Panchabhutas**—the five classical elements of nature in Indian philosophy: **Earth (Prithvi), Water (Apas), Fire (Agni), Air (Vayu), and Space (Akasha)**—Subramania Bharathi gave **special symbolic prominence** to **wind**. For Bharathi, **wind** was not merely a component of nature but a **dynamic metaphor for strength, freedom, revolution, and spirituality**—all of which were central to both his poetic expression and his vision for an awakened, liberated India.

1. Wind as a Symbol of Strength and Resilience

In his famous poem **Wind**, Bharathi writes:

"...crumbling lives, crumbling hearts —
the wind god winnows and crushes them all."

Wind, in Bharathi's vision, is a **testing force**. It destroys what is weak—fragile structures, faint hearts, and outdated systems. Yet, it **respects strength**—those who are courageous, disciplined, and firm in spirit. He exhorts us to:

"Build strong homes… make the heart steadfast."

Interpretation: The wind serves as a **spiritual and social examiner**—shaking us to our core to test our inner foundation. If we stand strong, the wind becomes our ally.

2. Wind Represents Freedom and Movement

Among all elements, wind is the **freest** — it flows beyond boundaries, cannot be captured, and resists control.

Bharathi, a staunch freedom fighter and **revolutionary thinker**, saw in wind a reflection of his own ideals. Just as wind cannot be confined, Bharathi refused to be bound by:

- Colonial domination
- Caste discrimination
- Religious dogma
- Mental enslavement

He wrote powerfully:

"There must be freedom in our thoughts!"

Just like wind, **ideas and identity must circulate freely,** reaching every corner of society. For Bharathi, wind became the **voice of liberty**—both political and personal.

3. Wind as an Agent of Change and Revolution

Wind shapes weather, spreads fire, moves clouds, and shifts landscapes. For Bharathi, wind became the **poetic embodiment of revolution**—a force that:

- Destroys ignorance and fear
- Spreads awakening and awareness
- Fans the flames of courage and resistance

He called upon the people of India to become like the wind—**restless, fierce, and transformative**

Thus, wind in Bharathi's poetry **symbolizes:**

- Revolutionary thought
- Spiritual rebirth
- National resurgence

4. Wind as a Spiritual Force

In Indian yogic and Vedantic traditions, **air (wind)** is associated with **prana**—the vital life force or breath. Bharathi, deeply influenced by these philosophies, understood wind as:

- The breath that sustains life
- The medium of speech and truth
- A divine link between the physical and spiritual worlds

He emphasized **pranayama** (breath control) as a tool for mental clarity and spiritual strength. To him, truth was carried on the breath, and therefore:

"One who stands by truth will rise above even the heavens!"

Interpretation: Wind, for Bharathi, was not just natural air—it was life itself, intimately connected with **divine power, creative expression, and moral truth.**

Film and Popular Culture Inspired by Bharathi's Wind

The poetic power of Bharathi's wind has influenced many **Tamil film songs,** often reflecting his ideals of **inner strength, struggle, and social transformation**. The **language of wind** continues to **resonate in contemporary music and art**, keeping Bharathi's message alive.

"Kaatru Veliyidai" – where wind becomes a **metaphor for longing, distance, and destiny.**

"Kaatrin Mozhi" – where wind **signifies voice, freedom, and personal identity.**

Conclusion

Through his poem **Wind, Subramania Bharathi** offers more than poetic beauty—he delivers a **philosophy of resilience, a metaphor for revolution, and a spiritual guide**. Just as **Shelley, Hughes, Oliver**, and others have done, Bharathi turns wind into a character of its own—one that challenges, transforms, and uplifts. His vision of **wind as a force that tests the weak and strengthens the strong** remains profoundly relevant in today's world. In our personal, political, and spiritual lives, we must build **"strong homes"** within—and let the wind be our friend.

Works Cited

- Bharathi, Subramania. "Wind." Translated by A. K. Ramanujan. NCERT Class 9 English Textbook.
- Shelley, P. B. "Ode to the West Wind." In Selected Poems and Prose.
- Hughes, Ted. "Wind." In Lupercal, 1957.
- Oliver, Mary. "The Wind." In House of Light, Beacon Press, 1990.

- Pradhan, Tapan Kumar. "Wind in the Afternoon." In Kalahandi.
- Mahapatra, Jayanta. "Indian Summer." In Selected Poems.
- Seth, Vikram. Collected Poems.
- Parekh, Nikhil. "As the Wind Blew." Available online.

- Oswald, Alice. Dart. Faber & Faber, 2002.
- Armitage, Simon. Selected Poems.
- Kaatru Veliyidai. Dir. Mani Ratnam. Madras Talkies, 2017.
- Kaatrin Mozhi. Dir. Radha Mohan. Creative Entertainers, 2018.

137. From Fire to Freedom: Why Bharathi's Spirit of Revolt Matters Today

Ms.D.Preethi Pooja

Department of English, Assistant Professor
Vidhyaa Giri College of Arts and Science, Puduvayal

Abstract: Subramania Bharathi, the Mahakavi of Tamil literature, stands as a timeless voice of revolt, whose fiery words ignited the spirit of freedom and social transformation. His revolutionary writings transcended political resistance, confronting social evils such as caste oppression, gender inequality, and blind orthodoxy. By envisioning a fearless, progressive, and egalitarian society, Bharathi became both a poet of rebellion and a cultural reformer. In the 21st century, his ideals are profoundly relevant as the world continues to battle discrimination, inequality, and the suppression of free thought. Bharathi's call to rise against injustice inspires today's youth to embrace courage, question societal norms, and ignite positive change. This paper examines Bharathi as the voice of revolt, his contributions to social and cultural reform, and the enduring significance of his visionary ideals in shaping a just and liberated modern society.

Keywords: Bharathi, voice of revolt, social reform, cultural revolution, 21st century relevance, freedom and equality.

Subramania Bharathi (1882–1921), fondly hailed as Mahakavi Bharathi, is one of the most luminous figures in Indian literary and nationalist history. His life coincided with the turbulent era of colonial India, a time when the nation witnessed the pain of subjugation and the urgent need for freedom, both political and social. He was a poet of fire, but he was much more than a poet. He was a fearless journalist, an uncompromising social reformer, a passionate revolutionist, and an ardent nationalist. His writings were not mere compositions; they were calls to action, capable of stirring the human spirit to rise against injustice. His journals, essays, and poems became instruments of awakening in both Indian and Tamil literature. The socio-political backdrop of his time was marked by British colonial oppression, rigid caste divisions, and the silencing of progressive thought. Bharathi challenged these societal constraints with his bold words and uncompromising vision. He not only dreamt of a free India but also of a society liberated from superstition, inequality, and fear. By blending the classical richness of Tamil with revolutionary ideals, Bharathi emerged as a beacon of change. His life and works reflect the perfect harmony of art and activism, making him the enduring voice of revolt—a poet whose fire still illuminates the path to freedom, equality, and justice.

Bharathi's voice rose like a clarion call against British colonial rule, fearless and untamed. He refused to bow to oppression, using his pen as a sword to ignite the flames of patriotism. His poetry was not mere ornamentation; it was rebellion in rhythm. In his fiery verses, he proclaimed: "No fear, no fear—there is no word called fear! To live upon this world, we shall never fear!" (Bharathi) Through such lines, Bharathi inspired his countrymen to shed fear and rise against tyranny. He celebrated the spirit of freedom in poems like "Vande Mataram" and urged the people to embrace courage and self-respect. His writings were infused with the fire of nationalism, awakening even the dormant hearts to the dream of liberation. His vision of nationalism was inseparable from his spirit of revolt. To him, true patriotism was not about retreating into isolation or clinging to tradition—it was about challenging injustice, breaking the chains of oppression, and connecting India's struggle with the

struggles of the world. He saw the diversity of human cultures and experiences as the Divine Mother's gift, and he refused to limit India's freedom to narrow self-interest. For Bharati, every cry for liberty—whether in India or across the globe—was his own, and every act of tyranny provoked his poetic defiance.

His revolutionary spirit is evident in his response to world events, especially the Russian Revolution of 1917. In his poem *Pudiya Russia* (*The New Russia*), Bharati hails the uprising as a beacon of hope for humanity. He saw in it the revolt of the oppressed against centuries of absolutism and feudal injustice, a moment that promised the dawn of equality and freedom. "If one breathed, it meant prison; If one spoke, it meant exile. In such a land, righteousness perished and cruelty reigned" (Bharathi). For Bharati, the revolution in Russia was not a distant event; it was part of a global awakening, a fight he embraced in spirit as an extension of India's own battle for justice. Bharathi's role in India's nationalist movement was profound—his literature became the voice of the voiceless, bridging poetry and revolution. By blending lyrical beauty with revolutionary zeal, he transformed Tamil literature into a weapon of resistance, leaving an indelible mark on the freedom struggle. Bharathi's revolt was not confined to political freedom; it was a revolution that shook the very foundations of social and cultural stagnation. He was a fearless critic of the caste system, denouncing the hierarchies that divided humanity. In his vision, a society should be built on equality and dignity for all, where no human is considered inferior by birth. His poems echoed this social awakening with lines such as: "No caste, no creed, no difference of race exists, dear child!" (Bharathi).

Equally revolutionary was Bharathi's voice for women's liberation, a rare and radical stance for his time. He envisioned the Pudhumai Penn—the modern woman—educated, fearless, and empowered to walk alongside men as equals in shaping the nation. In his writings, he celebrated the strength of women as mothers, warriors, and intellectuals, declaring that a nation's true freedom lies in the freedom of its women. He also led a cultural renaissance by blending classical Tamil with modern ideals, creating literature that was bold yet deeply rooted in heritage. His songs and poems dismantled blind orthodoxy, urging society to embrace rationality and progress. Through his words, he ignited a social and cultural revolution that remains a guiding light for a just and enlightened society. "We have been educated to make laws and therefore rule We are equal to men in wisdom; We are in no way unequal to men in knowledge – so Be glad and dance"(Bharathi). Although Bharathi lived more than a century ago, his voice of revolt continues to echo with undiminished power in the 21st century. Modern society, though politically free, still struggles with social inequalities, gender discrimination, intolerance, and the suppression of free thought. In this context, Bharathi's ideals are not mere literary treasures; they are living principles that guide humanity toward justice and progress. His call to fearlessness and self-respect inspires today's youth to question corruption, social injustice, and outdated norms. His vision of gender equality reminds us that true development is incomplete without empowering women. His dream of a casteless, rational, and progressive society challenges us to break free from the invisible chains that still divide modern India.

In an era of global challenges—ranging from cultural erosion to social polarization— Bharathi's words serve as a moral compass. His revolutionary spirit teaches that freedom is not merely political independence, but also the liberation of thought, expression, and social consciousness. By embracing his ideals, the 21st century can find the courage to transform revolts into reform and dreams into reality. His life and works remain a blazing testament to the transformative power of words. He was not only a poet of unmatched genius but also a revolutionary spirit who turned literature into a weapon against oppression. His voice of revolt awakened a nation under colonial chains, his social and cultural

reforms challenged deeprooted inequalities, and his vision of freedom extended beyond politics to the liberation of thought and society. Even in the 21st century, Bharathi's fire continues to burn bright. His call for fearlessness, equality, and self-respect reminds us that the fight against injustice is never over. As long as the world witnesses oppression, discrimination, and the silencing of truth, Bharathi's voice will remain a guiding light. To embrace Bharathi today is to embrace courage over fear, equality over prejudice, and action over silence. His enduring legacy urges us to keep the flame of revolt alive—not with violence, but with ideas, reform, and an unyielding pursuit of justice. In doing so, we honor his vision and ensure that his revolutionary spirit continues to inspire generations to rise from fire to freedom.

Work cited:

Sundharam, D. S. (2016). Subramaniya Bharathiyar. Press Information Bureau.

https://www.thehindu.com/news/national/subramania-bharati-the-eternalrevolutionary/article19670435.ece

Choudhary, L. M. (2016). "Women Empowerment in India: Issues and Challenges". IOSR Journal of Humanities And Social Science (IOSR-JHSS).

2. Human Capital as a Tool for National Empowerment

Bharathiyar believed that an educated population would lead to a stronger nation, both morally and economically. His concept mirrors modern human capital theories, where investment in education and skill development is seen as essential for productivity and economic growth. His advocacy for scientific thinking and industrial progress shows his anticipation of a knowledge-based economy. This foresight aligns with modern economic strategies focused on innovation, entrepreneurship, and self-reliance.

3. Commerce Rooted in Ethics and National Pride

Bharathiyar promoted Swadeshi—the idea of supporting local industries and products. This vision supports the idea of ethical commerce rooted in national pride and sustainability. Modern interpretations of this include movements toward local entrepreneurship, fair trade, and ethical business practices, which are considered essential for long-term commercial success. Bharathiyar believed commercial activity should uplift the nation, not just generate individual profit.

4. Role of Women in Economic and Educational Growth


One of the most significant findings is Bharathiyar's strong advocacy for women's education. He believed that empowering women through learning would not only uplift families but also strengthen the economy. Today, women's participation in the workforce is a critical measure of human capital efficiency. Bharathiyar's views prefigure modern gender-inclusive business practices and policy frameworks aimed at bridging the gender gap in education and employment.

5. Relevance to Current Educational and Economic Policies

Current policies such as India's National Education Policy 2020, Skill India Mission, and Atmanirbhar Bharat reflect principles Bharathiyar promoted a century ago: "inclusivity," skill development, self-reliance, and value-based education. These results suggest that Bharathiyar's educational ideals are not only historically significant but also practically applicable to contemporary educational and economic development strategies.

Review of Literature

1. Maheswari, U. (2022). Bharathiyar's Educational Philosophy and the NEP 2020: A Comparative Study. Journal of Indian Educational Review, 58(3), 121–134.
2. Nagaraj, K. (2021). Subramania Bharathi and the Rise of National Educational Thought in Tamil Nadu. Indian Journal of Cultural Studies, 15(2), 87–99.
3. Gopalakrishnan, R. (2020). Poetry as Policy: Bharathiyar's Vision for Inclusive Education. Journal of Modern Social Literature, 10(1), 45–58.
4. Sen, R., & Das, A. (2020). Ethics in Indian Business: Historical Roots and Modern Practices. Journal of Commerce and Development, 12(4), 210–225.
5. Balasubramanian, V. (2019). Swadeshi Economy and Bharathiyar's Call for Indigenous Industry. Indian Economic Heritage Journal, 8(2), 34–47.
6. Ananthi, S. (2018). Gender, Education and Reform: Bharathiyar's Feminist Legacy. South Asian Women's Studies, 11(1), 56–71.
7. Sundaram, K. M. (2017). Educational Innovation in Colonial India: Bharathiyar and Beyond. Tamil Nadu Education Quarterly, 29(3), 99–113.
8. Jayalakshmi, R. (2016). Nationalism and Economy in Bharathi's Writings. Indian Literary Perspectives, 19(1), 77–92.
9. Chidambaram, S. (2015). Human Capital Formation in Pre-Independence India: A Philosophical Approach. Journal of Economic Thought, 33(2), 12–29.
10. Ravi, T. (2014). Educational Values in Bharathiyar's Poetry and Their Relevance Today. Journal of Tamil Indian Studies, 6(2), 140–152.



யாமறிந்த புலவரிலே
கம்பனைப் போல்
வள்ளுவனைப் போல்
இளங்கோவனைப் போல்
பூமிதனில் யாங்கணுமே
பிறந்ததில்லை - பாரதி

PPG COLLEGE OF ARTS AND SCIENCE

9789334397680

தமிழால் இணைவோம் பதிப்பகம்

(25 ஆண்டு கால வரலாறு)